திருக்குறள் - உரைவளம்

பொருட்பால்

27031

தருமபுர ஆதீனம்

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகள்

கர ஆண்டு வைகாசித்திங்கள்

குருபூஜை விழா அணிமலர்

வெளியீடு எண் 254.

திருக்குறள் - உரைவளம்

பொருட்பால்

ஆவணிமூல நன்னாள் வெளியீடு

9—9—1951.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருக்குறள் - உரைவளம்

பொருட்பால்

தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆணையின் வண்ணம் வெளிவருவது.

1951

வெளியிடுவோர்:

ஆதீனத்திற்குச் சொந்தமான
சீகாழி தேவஸ்தானக் கட்டளைவிசாரணை
வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள்

தொகுப்பாசிரியர்:
வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர்,
தமிழ்த்துறைத் தலைவர்
தருமபுர ஆதீனக் கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரி.

பதிப்பகம்:
ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம்.

இதில் அடங்கியவை

		பக்க எண்,
முகவுரை	...	க
மதிப்புரைகள்	...	கரு
எடுத்தாண்ட நூல்கள்	...	உ0
அதிகார அட்டவணை	...	உஉ
ஆதீனப் பணிகள்	...	உரு
பொருட்பால் - உரைவளம்	...	**1**
குறள் முதற்குறிப்பகராதி	...	1061
குறள் சொல்லகராதி	...	1067
அறத்துப்பாலைப்பற்றியன	...	1094

உ

குருபாதம்

முகவுரை

உலகத்தில் மக்களறிவு மனப்பண்பாட்டினாலேயே உருவாகிறது; உயர்கிறது. மக்கட்பிறப்பைக்காட்டிலும் உயர்ந்த பண்பட்டபிறப்பு இல்லை என்பதை யாவரும் ஒப்புவர். மக்கள் வாழ்வு செம்மையுறுவது அவர்கள்மனம் எல்லாவழியிலும் செபமை யுறுவதைப் பொறுத்தது. மனிதன் அடையும் விருப்புவெறுப்பே மனிதனுடைய ஆக்கத்திற்கும், அழிவிற்கும், வறுமைக்கும், செல்வத்திற்கும், துன்பத்திற்கும், இன்பத்திற்கும் காரணம். அத்தகைய விருப்பு வெறுப்புக்களைத் தக்கவழி செலுத்துவன சிந்தனைநிறைந்த இலக்கியச்செல்வங்கள். உயிர்கள் சார்ந்ததன்வண்ணம் உருவாகும் தன்மையன. ஆதலால் நம்மைக்காட்டிலும் அறிவால் - அநுபவத்தால் - ஆற்றலால் சிறந்த முதியோருடன் அல்லது அவர்கள் அறிவுடன் சாருமாயின் அந்தநிலையைத் தானே எய்தும். முதியோருடன் என்றும் சார்வது முடிவதாகாது. ஆதலால் அவர்கள் அறிவுடன் சார்வது எளிது. அத்தகைய அறிவுக் கருவூலங்களே அவர்கள் எழுதிக்கொடுத்துவைத்த நூல்கள். நூற்சார்பு மேற்பதவி. தன்னறிவைப் பெரிதெனமதிப்பதினும், நூலறிவைப் போற்றுவதே அறிவுடைமை. இயற்கையறிவு விளக்கம் பெறுவதே நூலறிவால்தான்.

நூல்கள், கவிஞன் விளங்க எழுந்தனவும், கருத்தை விளக்க எழுந்தனவும் என இருவகை. கவிஞன் விளங்க எழுந்தன பசிக்கு உணவு, தாகத்திற்குத் தண்ணீர் போல அவ்வக்கால உலகியல் தேவைகட்கு ஒத்தனவாக-தேவைகள் நிறைவெய்தியபின் பயன்படாதனவாக இருப்பன. அத்தகைய நூலை யாக்கித்தந்த கவிஞன் அக்காலத்து மட்டும் மலைவிளக்காக மலிந்து காணப்பெறுகிறான்; பின்னர் மறைவான். அவனைப் பற்றியும் அந்நூலைப் பற்றியும் வளர்ந்த சிந்தனையுங்கூட இல்லாதொழியும். கருத்தை விளக்கஎழுந்த இலக்கியங்களோ காலத்தைவென்று விளங்குவன; எந்தக்காலத்திற்கும், எத்தகைய மக்கட்கும் புத்தம் புதிய கருத்துக்களை வழங்கிக்கொண்டு சாவாமூவாப் பெருவாழ்வோடு விளங்குவன. இத்தகைய இலக்கியங்களே தெய்வ இலக்கியங்கள். இதனை இயற்றியவனே தெய்வப்புலவன். தெய்வப்படைப்பு எதுவுமே தன்பொருட்டு அன்று. தெய்வப்புலவன் படைப்பும் அத்தகையதே. அதனாலேயே அவை அழியா உடம்பையடைந்து, மக்கள் மனப்புலத்தில் வேரூன்றி, அறிவில் வளர்ந்து, அநுபவத்தில் விளைந்து, அழியாப் பயனைத் தருகின்றன. அத்தகைய இலக்கியங்கள் எந்த மொழியிலும் பலவாக இருக்கமுடியாது; ஒன்றிரண்டுதான் இருக்கமுடியும். மக்கள் அனைவரும் தலைவராகிவிட முடியாது. ஒருவர்தான் ஆகமுடியும். சூளைச்செங்கல்லும்

பிடாரியாகிவிட முடியுமா? ஏதாவது ஒன்றுதானே ஆகமுடியும். அருமைக்கு என்றும் பெருமையுண்டு. எளிமை எங்கும்போற்றப்படுமாயினும் அருமைபோல அநுபவிக்கப் பெறுவதில்லை. ஆதலால் ஒரு மொழியிலுள்ள அருமையான இலக்கியங்கள் ஒன்று அல்லது இரண்டுதான், பரவியமொழிகள் பலவற்றிலும் தானும்பரவி அழகுசெய்யும். அதனை அனைவரும் அநுபவிப்பார்கள்.

அவ்வண்ணம் தமிழன்னையிடம் தோன்றி, ஏட்டில் தவழ்ந்து, எங்கும் சென்று, இசைபெற்ற அருமையும் பெருமையும் திருக்குறள் ஒன்றற்கே உரியது என்பதை விருப்பு வெறுப்பில்லா அறிஞர்கள் அனைவரும் ஒப்புவர். எத்தனையோ கண்டங்களாகப் பிரிக்கப்பெற்றுள்ள இந்தப் பரந்த உலகிற்குச் சூரியன் ஒருவனுகவே ஒளிசெய்கிறன். சந்திரன், பூமி போன்றனவோ கதிரவனிடமிருந்து பெற்ற ஒளியையே தாமும் உதவி ஒளிப்பொருளாகக் காட்டிக்கொள்கின்றன. இங்ஙனமே திருக்குறளும் பிற நூல்களும் என்பதில் ஐயமில்லை.

நூற்பெருமை :

ஒரு நூல் மக்கள் வாழ்வில் ஊடுருவிக் கலந்திருக்கின்றதென்றல் படித்த புலவர் உள்ளத்தில்மட்டும் பதியாமல் பாமரர் உள்ளத்திலும் பதிந்து, உரையிலும் தவழ வேண்டும். அதுதான் அனைவராலும் போற்றப்படும் நூலாகும். அங்ஙனமே இந்நூலைப்பற்றி, பண்டிதர் வாயில் ‘பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்’ என்ற பாவின் பகுதி பிறந்தது. பாமரர் வாயிலும் பழமொழியாக ‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’ என்ற தொடர் பிறந்தது.

இருபெரும் புலவர்கள் ஔவையாரும் இடைக்காடரும். அவர்களுக்குள் திருக்குறளைப்பற்றி எழுந்த போட்டிப் பேச்சுக்கள் மிக இனிமை பயப்பன. இடைக்காடர் குறளின் சொற்சுருக்கத்தையும், பொருட்பெருக்கத்தையும் பாராட்டி, ‘கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்’ என்று சொன்னர். இதில் கடுகிற்குள் எழுகடல் அடைக்கப்பட்டும் இடமிகுதியிருத்தலாகாது என்று வள்ளுவர் வேண்டாத சொற்களைத் தறித்து எறிந்தார் என்கிறர். ஔவையார் கடுகு கூடப் பெரியது; அதனைக் காட்டிலும் சிறியது அணு. அதற்குள் எழுகடல் அடக்கப் பெற்றது போலும் இந்நூல் என்கின்றர். இவற்றல் குறளின் செறிவும் பொருளாழமும் உணர்த்தப் பெற்றன. கூலவாணிகன் சாத்தனர் ‘மூவேந்தர்களின் முடிமாலை இந்நூல்’ என்பர். பிற்காலத்து வந்த இலக்கணப் பேரறிஞராகிய இலக்கணக் கொத்து சுவாமிநாததேசிகர் அவர்கள், ‘பல்காற் பழகினும் தெரியாவுளவேல் தொல்காப்பியம், திருவள்ளுவர், கோவையார் மூன்றினும் முழங்கும்’ என்று நுணுக்கங் காணுமிடம் திருக்குறள் என்பர். இவையன்றித் திருக்குறட் சிறப்புப்பாயிரமாகிய திருவள்ளுவமாலையில் பழம்புலவர் பலரும் சுவைத்துச் சொன்ன பகுதிகள் பலவும் ஊன்றி இன்புறத்தக்கன.

பிற்காலப் புலவர்கள் பேச்சு :

பொய்யாமொழிப் புலவர் '[1] திருக்குறளை வாழ்த்திச் சொல்லுதல் கொல்லன் தெருவில் ஊசிவிற்ற கதையாகும்' என்பர். இதனால் தமிழகம் முழுதும் திருக்குறள் நயத்தைத் தெள்ளத்தெளிய உணர்ந்து கிடக்கிறது என்பது அவர் கருத்து.

வேறொருவர் '[2] வள்ளுவனார் வைத்துவிட்டுப்போன புதையல் திருக்குறள். அது எமக்குக் கிடைத்து விட்டது. அதனால் எல்லாப் பொருளையும் உள்ளபடி உணர்ந்தோம்; குறை நீங்கினோம். ஆதலால் எமக்கு இனிப் பிறப்பில்லை; வீடுதான்' என்று விளம்புகிறார்.

மற்றொருவர் '[3] வள்ளுவர் திருவடியிரண்டையும் முக்காலும் எக்காலும் ஏத்துவாம்' என வணக்கமளவில் வாயற்றுப்போகிறார்.

வேறொருவர், '[4] வள்ளுவனே புலவன்; அறிஞன்; எல்லாம். சிவனறியச் சொல்கிறேன். வள்ளுவன் வசனத்தை உள்ளபடி உணரவல்லவன் எவன்!' என வியக்கின்றார். (வள்ளுவன் வசனத்தை உள்ளுபவன் எவனோ அவனே புலவன் அறிஞன் எனவும் பொருள் காண்பர்.)

---

1 குறமுனிவன் கோத்தெடுத்த கொற்சேரி யூசி
உறவிலைக்கு விற்றதனோ டொக்கும் — தெறுகலியைச்
செற்றவேல் மாற திருவள் ளுவனார்வாய்ச்
சொற்றகுமுப் பால்வாழ்த்துச் சொல். —பெருந்தொகை.

2 முப்பாலும் உண்டோம் முலைப்பால் இனிநுகரோம்
அப்பாலுக் கப்பாலும் ஆயினோம் — எப்பொருளும்
உள்ள படியுணர்ந்தோம் ஓதிக் குறைதீர்ந்தோம்
வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து. ,,

3 எப்பாலும் ஏத்துவாம் இன்பம் பொருளறமா
முப்பாலு மாயிரத்து முந்நூற்று முப்பதா
ஓரடி முக்கா லுரைத்ததிரு வள்ளுவனார்
ஈரடி முக்காலு மே. ,,

4 அவனே புலவன் அவனே அறிஞன்
அவனே தமிழை அறிந்தோன் — சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
உள்ளுவ தேவன் உளன். ,,

மற்றவர் "[1]வள்ளுவர் திருவடிக்கு வாழ்த்துக்கூறி, செய்ந்நன்றியைக் காட்டிக் கொள்கிறார்'. மற்றவர் '[2]மாயோன் போல இரண்டடியில் மூவுலகையும் அளக்காமல், ஒன்றேமுக்காலடியால் அளப்பதுகுறள்' என்கிறார். இங்ஙனம் பாராட்டுரைகள் யாவும் பாராட்டமுடியாமல் தவிக்கின்றன. இதிலும் ஒரு அழகு காண்கின்றோம்.

தருமையாதீனத்து வித்துவ சிரோமணி சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள்,

சாதிக்கோர் நீதியாச் சாற்றும் வடமறையின்
பேதத்தா லிவ்வுலகம் பேதுரு(து)- ஓதிப்
புவனமெலா மெய்ந்நெறியில் போகவிடுந் தேவர்
கவனக் குறட்பொருளைக் கொண்டு.

என்பர். மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் 'திருக்குறள் ஒன்று கற்றால் ஒருவனுக்குப் போதும். தமிழையறியலாம். மறுமையடையலாம். யாவர்க்கும் ஒரே நீதி இயற்றியவர் வள்ளுவர்' என்பார்.

சுந்தரம்பிள்ளையவர்கள் 'ஆழ்ந்து அகன்ற அரிய கருத்துக்களைப் பொருத்தமான சொற்களில் சுருக்கமாகக் கூறுவது இந்நூல்'' என்பர்.

அ. மாதவய்யா அவர்கள் 'எவர்க்கும் ஒரு படித்தாய் அறங்களைத் திண்மையுடன் விளக்கவல்லது இந்நூல்' என்பர்.

கா. நமச்சிவாயமுதலியார் அவர்கள் 'திருக்குறள் தமிழ்மொழியிற் பிறந்த ஒரு பொதுமறை. உலகைக் கூறுபடுக்தும்பகுதி அதன்கண் இல்லை. இப்பொதுமறையை மன்பதை பயின்று ஒருமையின்பத்தை நுகர்க' என்கிறார்.

திரு. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் 'திருக்குறள் சமூகத்துறையிலும் அரசியற்றுறையிலும் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவாவிநிற்கும் எதிர்கால இந்தியாவிற்குஇன்றியமையாத ஒழுக்க நூலும், சமயங்கடந்த சமரச நூலுமாயுள்ளது' என்பர்.

---

[1] வாழிமழை ஆனினங்கள் வாழிமறை ஆகமங்கள்
வாழிமனு நீதிமன்னர் மன்பதைகள் — வாழியரோ
தென்னுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்தமுகில்
வள்ளுவர் பாத மலர்.

—பெருந்தொகை.

[2] மாயோன் வடிவம் போல வேள்வியின்
முன்னொரு குறளுரு வாகிப் பின்னது
மூவடி முறைமையிற் செல்லாது தாந்தம்
ஈரடி யியக்க திரம்பா அளவையின்
உலக மூன்று அளந்தன
புலவன் வள்ளுவன் குறள்வெண் பாட்டே.

"

அடியேனது ஆசிரியப் பெருந்தகையாகிய மகாமகோபாத்யாய, உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் எல்லாநாட்டினர், எல்லாமதத்தினர், எல்லாக்கொள்கையினர்க்கும் இன்றியமையாத வாழ்க்கை ஒழுக்கங்களைத் தெளிவாகக் காட்டும் பெருமை வாய்ந்தது திருக்குறளே யென்பார்கள்.

பண்டைத் தமிழரது கடவுட்கொள்கையை நன்கு அறிந்துகொள்வதற்குத் திருக்குறளே தக்க கருவி என்பர் கா. சுப்பிரமணிய பிள்ளை.

“வள்ளுவர் குறள் தமிழின் தனிமுதலறநூலேயாகும் என்பது வெள்ளிடைமலை” என்பர் சோமசுந்தர பாரதியார். இங்ஙனம் இன்னும் பலர் திருக்குறளைப் பற்றிப் போற்றுகின்றனர்.

திரு. R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் “குறள் குறுகிய கட்டுப் பாட்டில் அடங்கியதல்ல. திருக்குறளைப்போற்றுவது புலவருக்கு இலக்கணமுங்கூட. ‘பல்பெருஞ் சமயஞ்சொல்லும் பொருளும்போல் பரந்ததன்றே” என்று எக்களிப்புடன் திருக்குறளைப் பாராட்டலாம். அன்று வள்ளுவர் தந்த பொன்மொழிகள் இன்றும் உண்மை மொழிகளாகவே விளங்குகின்றன. ஏன் உண்மை எக்காலத்தும் மாறுபடாத இயல்பையுடையது” என்பர்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்றாகப் பிரிக்கப்பெற்றுள்ளது. இவற்றுள் அறத்துப்பால் முன்னமே வெளியிடப்பெற்றது. இப்போது வெளிவருவது பொருட்பால். பொருட்பால் என்பது பொருளின் பகுதி எனப் பொருள்படும். பொருள் என்னும் பொதுச்சொல் கருத்துப்பொருளும் காட்சிப்பொருளுமாகிய எல்லாவற்றையும் அடக்கிநிற்பது. இயங்குவ நிற்பன யாவும் இதன்கண் அடங்கும். அறமுதலிய நான்குங்கூட மனிதனடையும் பொருள்கள் எனவே போற்றப்பெறுகின்றன. ஆகவே அறமும் பொருளே. இன்பமும் வீடும் பொருளே. அகமும் புறமுமாகிய அனைத்தும் பொருளே. அறப்பொருளை அறத்துப்பாலினும், பொருட்பொருளைப் பொருட்பாலினும், இன்பப் பொருளைக் காமத்துப்பாலினும் கூறினார்.

பொருளதிகாரம் என்பதற்கு இலக்கணம் கூறவந்த நச்சினார்க்கினியர், ‘பொருளாவன அறம் பொருள் இன்பமும், அவற்றது நிலையின்மையும், அவற்றினாகிய வீடுபேறுமாம். பொருள் எனப் பொதுப்படக் கூறவே அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும், காட்சிப்பொருளும், கருத்துப்பொருளும், அவற்றின்பகுதியாகிய ஐம்பெரும் பூதமும், அவற்றின்பகுதியாகிய இயங்குதிணையும் நிலைத்திணையும் பிறவும் பொருளாம்’ என்பர். ஆகவே பொருட்பால் என்பதற்குச் செல்வத்தின்பகுதி எனவும், அறனும் இன்பமும் ஒழிந்த ஏனைய எல்லாம் பொருள்களின்பகுதி யெனவும் உரைகாண்பர் சில உரையாசிரியர்கள். பிறமொழிகளிலுள்ள பொருணூல்களைப்போல

(அர்த்த சாஸ்திரம், பொருளாதார சாஸ்திரங்கள்) பொருளை நேரே ஆக்க உபாயஞ் சொல்வன பொருள்செயல்வகை, உழவு என்பனவாம். ஏனைய பகுதிகள் வழிவகையாகப் பொருளாக்கத்தை அறிவிப்பன. உதாரணமாகக் கல்வி கல்லாமை என்பன நேரே பொருளையாக்கப் பயன்படுவனவல்ல. பொருளீட்டவும் துய்க்கவும் ஆதாரமான அறிவை அளிப்பன. இங்ஙனமே பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினஞ் சேராமை, காலம் அறிதல், இடன் அறிதல், வலி அறிதல் முதலியன பெற்ற பொருளைப் போற்றும் உபாயங் கூறுவன. ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை போல்வன பொருளை இடையீடுபற்றி நிறுத்தாது மேன்மேலும் முயற்சிப்பதாகிப் பொருளுக்கு உபகாரப்படுவன. உட்பகை, பெரியாரைப்பேணாமை, கள், சூது, வரைவின்மகளிர் முதலியன பொருளுக்குவருந் தீங்கு அறிவிப்பன. இறை, செங்கோன்மை, கொடுங்கோன்மை போல்வன நாட்டின் பொதுச்செல்வநிலையைப் பாதுகாக்கும் அரசன் இயல்பு கூறுமாற்றால் பொருளை வளர்ப்பன. ஏனையவற்றையும் இங்ஙனமே பகுத்து உணர்தல்வேண்டும்.

இங்ஙனம் பார்க்குங்கால் இந்நூற்போக்கு நேரே உபகாரப்படுவனவும் உபாயமாவனவும் ஆக இருவகையான் பொருளியல்பை அறிவிக்கின்றன. இங்ஙனம் வடமொழியில் பொருளியலுணர்த்தும் நூல்கள் அர்த்தசாஸ்திரம் என்பது. அது பொருளும், பொருளின்வகைகளும், அரசர்முதலியவருணமக்கள் பொருளீட்டுமாறும், அழிக்குமாறும், தாயபாகமும், நிலபுல முதலிய சொத்துவகைகளும், அவற்றின் உரிமைபற்றிய வழக்குவகைகளும் அறிவிக்கின்றன. ஆதலால் அவை காலம், தேசம், அரசியல் இவைகளின் மாற்றத்தால் மாறுபட்டு எங்கும் எக்காலத்தும் பயன்படாதனவாய் வரலாற்றுக்குத் துணையாம்அளவில் வழக்கொழிந்தன. சில வழக்கிற்கும் ஒத்துள்ளன. இந்நூற் பொருட்பாலோ முன்னர்க்கூறியவண்ணம் பொதுவகையான் உணர்த்துதலின் என்றும் எங்கும் மங்காத அறிவொளியாக விளங்குகிறது. ஒருபாற்கோடாத நீதிக்கு உலகெங்கும் ஒத்தமதிப்பு இருக்கத்தானேசெய்யும்.

சில கருத்துக்கள் பொருட்பாலுக்கும் சாணக்கிய அர்த்தசாஸ்திரம், காமந்தகம், சுக்கிரநீதி முதலியவற்றிற்கும் ஒத்துள்ளன. ஆதலால் இந்நூல் ஏனைய வடமொழி நூல்களை மொழிபெயர்த்தாக்கப் பெற்றன என்று இதுவரை எந்த அறிவாளியும் கூறவில்லை. கம்பன் கருத்துக்களை ஆங்கிலப் பெருங்கவியாகிய செகப்பிரியரும் சித்திரித்திருக்கிறார். காளிதாசன் கருத்துக்களையும் அவர் நாடகங்களிற் காண்கிறோம். காலம் முன்பின்னாக இருந்தாலும் கருத்தொற்றுமை காரணமாக ஒன்றையொன்று பின்பற்றியது என்றோ வழிநூல் என்றோ சொல்லிவிட முடியுமா? முன்னோர் முடிபொருங்கொத்து, சில இடங்களில் விகற்பங்கூறி, பெரும்பான்மையும் ஒத்து வருவனவே வழிநூல்கள். மொழிபெயர்ப்பு நூல்களோ முழுதும் ஒத்து மொழிமாற்றம் செய்யப்படுவனவே. இங்ஙனமாக ஒன்றிரண்டு ஒத்த கருத்துக்களால் மொழிபெயர்ப்பெனத் துணிந்து கூறிவிட முடியாது என்பதை அறிஞர்கள் ஒப்புவர். உரையாசிரியர்கள் தம்கருத்தை விளக்கப் பிறமொழி நூல்களையும்

மேற்கோள்காட்டிச் செல்வார்களாயின் அது நூலின் முதன்மையைக் குறைப்ப தாகாது. அது உரையாசிரியர்களின் பன்மொழிப்புலமையையும் பற்றுள்ளத்தையும் நாம்அறிய ஏதுவாகின்றது என்பதே துணிபு.

பொருட்பால் இயல்களும் அதிகாரங்களும்:

பரிமேலழகரது உரையின்வண்ணம் பொருட்பால் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்றாகப் பிரிக்கப்பெற்றுள்ளது. திருவள்ளுவமாலையில் போக்கியார்,

அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உருவல் அரணிரண்டொன் றொண்கூழ் - இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்(று)
எண்பொருள் ஏழாம் இவை.

என்ற பாடலால் அரசியல், அமைச்சியல், அரண், கூழ், படை, நட்பு, குடி என ஏழு இயல்களாகத் தாம்கண்டதாகச் சொல்லுகிறார். நுண்பொருண்மாலையிற் கண்ட பாடல்,

அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உரைநா டரண்பொருள் ஒவ்வொன்று - உரைசால்
படையிரண்டு நட்புப் பதினேழ்பன் மூன்று
குடியெழுபான் தொக்கபொருட் கூறு.

என்பது. இந்தப்பாடல் வேறேயாயினும், போக்கியார் கூழ் என்றதனை இப்பாடல் பொருள் என அறிவிக்கின்றது. போக்கியார் பாடல் அரணிரண்டு என்றதை இப் பாடல் நாடு, அரண், ஒவ்வொன்று என்றுபிரித்துச் சொல்லுகிறது, அவ்வளவே மாற்றம். வள்ளுவரும் 'படை குடி கூழ்' என பொருளைக் கூழென வழங்கினமையால் போக்கியார்கண்டது கூழியல் எனவே அவர்காலத்து வழங்கியிருக்கவேண்டும்.

பரிப்பெருமாள் உரைத்தொடக்கத்தில் அரசியலும், அமைச்சியலும், பொருளியலும், நட்பியலும், துன்பவியலும், குடியியலும் என ஆறாகப் பிரித் தமைத்தார். போக்கியார் கூற்றினை எடுத்து, 'படையியலும் அரணியலும் என வகுத்தார் உளராலோவெனின் அவையெல்லாம் ஒருவனால் ஆக்கப்படும் பொருளா கலின் பொருளியல் என அடங்கும். துன்பவியல் என்றது எற்றுக்கு நட்பியலுள் அடங்காதோ எனின், அவை எல்லாம் நட்கப்படாது என்னுங் கருத்தினாற் கூறினார்க ளாயினும் அவற்றினிடைக்கிடந்த பேதைமை புல்லறிவாண்மை என்னும் அதிகாரங் கள் நட்கப்படாததும், நட்கப்படுவதும் அன்றி, ஒருவற்குத் துன்பத்திற்குக் காரணமாம் என்று கூறுதலால் துன்பவியல் என வேண்டுமெனக்' என மறுத்துத் தன்கொள்கை நிறுவுதலும் செய்தார். இதனால் அவர்கொண்டது குடி இயலாம் என்க.

இந்நூலுக்குப் பதின்மர் உரைகள் பதினான்காம் நூற்றாண்டுக்குள் இயற்றப் பெற்றுள்ளன. அந்த உரையாசிரியர்களின் வரலாற்றுக் குறிப்புக்களை எமது அறத்துப்பால் முகவுரைக்கண் குறித்துப் போந்தமையின் இப்போது அவர் உரைகளின் திறத்தைச் சிறிது அமைத்தல் மிக இன்றியமையாதது. ஒருவரைப்பற்றி எந்த வகையிலோ ஒருபற்று உள்ளத்து ஊறிவிடின் ஏனையோரை எல்லா வகையினும் இழித்துக்கூறுதலும், உள்ளபடி ஏற்றங்காணினும் எடுத்துக்கூறாது மறைத்தொழுகலும் மக்களியல்பு. ஆனால், புலவராவார் எங்கே இனிமையிருக்கிறது; கருத்தின் கனிவு காண்கிறது; பொருளாழம் இருக்கிறது என்று ஆராய்ந்து அங்கங்கே பாராட்டுவர். ஏற்ற இடங்களில் எல்லாம் சிறப்புடையது என்பர். பரிமேலழகர் செய்தன எல்லாம் குறை எனக் கூறுவாரும் ஏனைய உரையாசிரியர்கள் உரை செப்பமில்லாதன என்பாரும் சார்பறிவுடையாரேயாவர். அவர்கள் எப்போதும் உண்மையும் உயர்வும் காணார். அவர்கள் உண்மைப்புலவராவதும் இல்லை என்பது துணிபு; ஆதலால், இந்தப்பதிப்பின் பயிற்சியால் உரையாசிரியர் எல்லோரிடத்தும் உள்ள உரைத்திறத்தை உற்று நோக்கல் இன்றியமையாதது.

பரிமேலழகர் உரை;

[1]'உடற்கூற்றுத் தத்துவங்கள் எல்லாவற்றையும் உணர்பவர்களைப்போல, திருக்குறள் தத்துவங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து கூறினார் உலகியலோடு ஒத்த பரிமேலழகர்' எனப் பாராட்டுகின்றார் ஒருவர். [2]மற்றொருவர் வள்ளுவரே மறுபிறவி எடுத்துவந்து தந்நூலுக்குத் தாமே உரைஎழுதினார் என்று சொல்லக்கூடியதாக உரை

---

[1] தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்
உய்விக்கு நூலெல்லாம் உள்ளதெனச் — செய்வித்தான்
தத்துவமெல் லாமுடம்பில் தந்துணர்வார் போலுலகம்
ஒத்தபரி மேலழகன் ஓர்ந்து.
—பெருந்தொகை.

[2] திருந்திய தமிழிற் றெய்வப் புலமை, அருந்திறல் வள்ளுவ னாய்ந்துதன் வாக்கால்
அறம்பொரு ளின்பம் வீடென நான்கின், திறந்தெரிந் துரைத்த செவ்விழுப்பாலுக்
கோருரை யின்றி யொன்பது சென்றும், ஐயுற வாக வையுறு காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க், குள்ளிய பொருளை யுரைத்தன னென்ன
எழுத்து முதல விலக்கண வகையும், வழுத்துவே தாகம வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற், கிதுவே யுரையென் றியாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு நுட்ப வெச்ச, விழுப்பொரு டோன்ற விரித்தினி துரைத்தனன்
வடநூற் றுறையுந் தென்றிசைத் தமிழும், விதிமுறை பயின்ற நெறியறி புலவன்
அன்பரு ளறனைப் புரவுகண் ணோட்டம், நன்றறி வாய்மை நற்றவ முடையோன்
இத்தகை யன்றி யீசன தருளால், உய்த்துணர் வுடையவோ ருண்மை யாளன்
பரிமே லழக னெனப்பெயர் படைத்துத், தரைமே லுதித்த தலைமை யோனே.

வகுத்தார் என்பர். *மற்றொரு பழம்பாடல் திருக்குறளோடொப்பப் பரிமேலழகர் உரையையும் ஒருநூலாகவே மதிக்கின்றது. இந்த உரை பரிமேலழகர் விருத்தியெனச் சில ஏடுகளிற் குறிக்கப்பெறுகின்றன. இவர்கள் இங்ஙனம் கூறுவதற்கு 'இதுவே உரையென்று யாவரும் வியப்பப் பொழிப்பு' அகலத்தொடு நுட்பம் எச்சம், விழுப்பொருள்தோன்ற விரித்தினிதுரைத்தான்' என்ற பழம்பாடற் பகுதியும் துணைபுரிந்திருக்கும்.

இவ்வுரை ஒவ்வொரு குறட்கும் பொழிப்பாகவே அமைந்துள்ளது. ஒரு குறளுக்கும் அடுத்த குறளுக்கும் உள்ள இயைபும் எடுத்துக்காட்டப்பெறுகிறது. இதனால் குறள்முறைவைப்பின் காரணம் விளக்கப்பெறுகின்றது. ஒவ்வொரு சொற்களுக்கும் நயமும், தெளிவும், சொற்சோதனையும் தெரிவிக்கப்பெறுகின்றன. சில சொற்களுக்கு எங்கும் ஒரே விதமான பொருள்காணாமல் இடத்திற்குத் தக்கவாறு காட்டப்படுகிறது. அவற்றுட் சிலவற்றிற்கு இவர் காட்டும் பொருள் வேறெங்கும் காண இயலாததாகக்கூட அமைந்திருப்பது அறிந்து இன்புறுதற்குரியது. பெரும்பாலும் திருக்குறட் காலத்திய இலக்கியவழக்காற்றை ஒட்டிச் சொற்பொருள் காட்டப்பெறுகின்றது. முன்னுரையாசிரியர்கள் கூற்றுக்கள் பொருந்துவதாயின் அமைவுகூறியும், பொருந்தாதாயின் காரணங்காட்டி மறுத்தும், காரணம் வெளிப்படையாகக் காட்ட இயலாதவற்றை வாளாவிடுத்தும் செல்கிறது. இலக்கணமுடிபும், குறிப்பும் மிக நுணுக்கமாகத் தேவையான இடங்களில் தெரிவிக்கப்பெறுகின்றன. ஒத்த வடநூற் கருத்துக்களை ஆங்காங்குக் காட்டிச் செல்கிறது. சிற்சில இடங்களில் கருத்துவிளங்க, கதைப்பகுதிகளையும் எடுத்துக்காட்டிச் செல்கிறது. பொதுவாக முன்னவையாகிய ஒன்பதுரைகட்கும் பிந்தியதாதலானும் இருமொழிப் புலமையும் படைத்த ஆசிரியரால் எழுதப்பெற்றமையானும், இவ்வுரை திட்பமும், நுணுக்கமும் செறிந்த உரைஎன்பது தெளிவு.

மணக்குடவர் உரை:

இதுவும் பொழிப்புரையேயாகும். ஆனால் வழக்காற்றிலுள்ள எளிய சொற்களால், வருவித்துரைக்கும் சொற்றொடர்கள் பெரும்பான்மையும் இல்லாமல் அமைந்திருக்கிறது. குறள்முறைவைப்பில் பெரும்பாலும் பரிமேலழகர் மேற்கொண்ட முறைக்கு முற்றிலுமாறானது. விசேடவுரை மிகுதியுமில்லை. அதிகார விளக்கமும் மிகச் சுருக்கமாகத் தரப்படுகின்றன. பரிமேலழகர் மறுப்பன பெரும்பாலும் இந்த உரையாகவே இருப்பினும், இந்த உரையில் நயப்பாடு இல்லாமல் இல்லை.

---

* வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தஉரை — ஒள்ளியசீர்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்,

முன்னவர் என்றமையாலே மறுக்கப்பெறுகின்றார் என்று எண்ணத்தக்க இடங்களும் உண்டு. இலக்கணக்குறிப்புக்களைக் கலந்து எல்லார்க்கும் எளிதாய்ப் புரியும் தன்மையை இவ்வுரை கெடுத்துவிடவில்லை என்பது இதன் சிறப்பியல்பு. தமிழ்நாட்டுப் பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் மாறுபடாதவகையில் இவ்வுரை செல்லும்.

பழையஉரை :

இது இன்னாரது என்று அறியக்கூடவில்லை. உரைநடை மிக எளியது. எழுதியவர் சைவசமயத்தினராக இருப்பார்போலும். ஆதலால் பெரும்பாலும் எடுத்துக்காட்டப்பெறும் வரலாறுகள் சிவபுராணங்களாகவே உள்ளன. குறளின் சுருக்கக்கருத்துமட்டும் தெரிந்துகொள்ள இந்த உரை பெரிதும் பயன்படும். ஒருவரி இருவரிகளிலேயே உரை முற்றுப்பெற்றுள்ளது.

பரிதியார் உரை :

இவ்வுரையும் சைவசமயச் சார்புடையது. உரைநடை ஏடுஎழுதுவோரால் சிறிது சீர்கேடு அடைந்திருக்கின்றது என்னலாம். ஒத்த கருத்துக்கள் வேறு அதிகாரங்களிற் காணப்பெறுமாயின் அதனோடு இதற்கு வேற்றுமை தோன்ற உரையை வகுத்துச் செல்கிறது. இதனை உரையமைதியிலே காணவேண்டுமேயன்றி உரையாசிரியராக 'இது நுணுக்கம்' என எடுத்துக்காட்டுவதில்லை யென்பது இவ்வுரையாசிரியரின் எளிமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. விதியும், விலக்குமாக அமைந்துள்ள குறள்களின் அடியில் விலக்கைத் தீது என்றும், விதியை நன்று என்றும் குறித்துச் செல்வர்.

பரிப்பெருமாள் உரை :

இவ்வுரை பிண்டப் பொழிப்பாக அமைந்தது. விசேடவுரையில், கருத்துரைத்தலும் சிற்சில இடங்களில் பதசாரம் எழுதுதலும், சில இடங்களில் கண்ணழித்துக் கொண்டுகூட்டிப் பதப்பொருள்விளக்கங் காட்டலும் அமைந்துள்ளன. பெரும்பாலான குறள்களின் விசேடவுரை கருத்துமட்டும் குறித்துசெல்கின்றது. மூலபாடமே சில இடங்களில் மாறியுள்ளன. இவ்வுரையிலும் வடநூற்கருத்துக்கள் சில எடுத்துக் காட்டப்பெறுகின்றன. இவ்வுரை எல்லார்க்கும் இனிது விளங்குந் தன்மையது.

காளிங்கர் உரை :

இவ்வுரையில், சிறந்த மூலபாடங்கள் பல குறிக்கப்பெறுகின்றன. ஜைன சமயக் கருத்துக்கள் இடமிடங்கடோறும் இலங்குகின்றன. ஒரு அதிகாரத்திற்கும் மற்றோரதிகாரத்திற்கும் உள்ள இயைபினைத் தாம் பத்தாவதாகக்கொள்ளும் குறளின்

விசேடவுரையிற் குறிப்பர். சில இடங்களில் இவ்வுரையும் பரிதியார் உரையும் ஒத்துள்ளன. ஒவ்வொரு குறளிலும், வினையை வினவொடு கூட்டி அதற்கு விடையாக எழுவாயை விதந்து எடுத்துக்காட்டுவது இவ்வுரைப்போக்கு. உதாரணமாக 'பிழைத்துணர்ந்தும்' 'அற்றாரைத் தேறுதல்' முதலிய குறள்களை நோக்குக.

இந்தப்பதிப்பு:

சென்ற ஆண்டு வெளிவந்த அறத்துப்பால் உரைவளத்தைப் போன்றே இதிலும், பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, காளிங்கர், பரிப்பெருமாள் உரைகள் முழுதும் முறையே பதிப்பிக்கப்பெற்றுள்ளன. இவையனைத்தும் உரைப்பகுதியாகும். இதற்குமுன் இந்தப்பதிப்பில்மட்டும் சிறப்பாக ஒவ்வோரதிகாரத்தின் குறட் கருத்துக்களனைத்தும் தொகுத்து எழுதப்பெற்றுள்ளன. இதற்குத் தொகுப்புரை என்று பெயர். உரைப்பகுதிக்கு அடுத்த உரைவிளக்கப்பகுதியில் நுண்பொருண்மாலை பதிக்கப்பெற்றுள்ளது. இதனைச் செய்தவர் மாறனலங்கார உரையாசிரியராகிய காரிரத்ன கவிராயர் அவர்கள். இது பரிமேலழகர் உரைக்கு விளக்கமாகும். சிற்சில இடங்களில் ஏனைய உரைக்குறிப்புகளை மறுத்தும், பரிமேலழகர் கருத்துக்களில் விளங்காதவற்றிற்கும் மாறுபட்டனவற்றிற்கும் மெருகிட்டுக் காட்டியும் செல்கின்றது.

இதனையடுத்திருப்பது மேற்கோள்பகுதி. இதில் பழைய உரைநூல்களில் இந்நூல் எதற்காக எங்கு எடுத்தாளப்பெற்றுள்ளது என்பதைச் சந்தர்ப்பத்துடன் விளக்கப்பெற்றுள்ளது. அடுத்ததாகிய ஒப்புமைப்பகுதி சங்ககாலமுதல்பிரபந்தகாலம் வரையிலும், குறள் எங்ஙனம் இடமிடங்கடோறும் வைத்து இழைக்கப்பெற்றுள்ளது என்பதைக் காட்டுவது. அறத்துப்பாலைப்பற்றி மதிப்புரை வழங்கிய இந்து, மித்ரன், கல்கி, ஆனந்தவிகடன், பாரததேவி, தினசரிபோன்ற பத்திரிகைகள் பிற்கால இலக்கியங்களிலிருந்தும், உலகப் பழமொழிகளிலிருந்தும் ஒப்புமைப்பகுதி திரட்டப் பெறுதல் நல்லது என்று எண்ணம் கொடுத்தமையின் அவ்வண்ணமே இதில் திரட்டப் பெற்றுள்ளன.

குறிப்பு என்ற பகுதி அடியேனுடைய சிற்றறிவின் பயிற்சிக்காலத்துச் சேர்த்த சில கருத்துக்களாகும். அடியேன் கல்விபயிலுகின்ற காலத்து 1915ம் ஆண்டில், தில்லைச் செந்தமிழ்க் கழகத்தின் தலைவரும், குமரவேள் மும்மணிக்கோவையாசிரியரும், சிதம்பரம் ஆறுமுகநாவலர் தமிழ்க்கல்லூரிப் பேராசிரியருமாகிய தில்லை நாயக முதலியார் அவர்களிடம் அறத்துப்பாலும், பொருட்பாலும் பாடங் கேட்டேன். அவர்கள் சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்கசுவாமிகளிடத்திலும் தர்க்ககுடார தாலுதாரியாரவர்களிடமும் கேட்ட குறட் குறிப்புகளைக் குறித்துக் கொள்ள உதவினார்கள். நாவலர் தமிழ்க்கல்லூரித் தலைமையாசிரியர் யாழ்ப்பாணத்து

கல்லூர் ம. க. வேற்பிள்ளை ஐயா அவர்களிடமும், மேற்படிக்கல்லூரி மானேஜர் ச. பொன்னம்பலப் பிள்ளையவர்களிடமும் முழுமையும் முறையே பாடங் கேட்கும் வாய்ப்புக்கிட்டியது. அப்போது விளங்கிய விளக்கங்கள் பல. அதன் பின்னர் 1922ம் ஆண்டு ஆசிரியப்பெருந்தகை சு. பொன்னோதுவாமூர்த்திகளிடமும், மகாமகோபாத்யாய ஐயரவர்களிடமும் வித்துவான் தேர்வுக்காகப்பாடங்கேட்கும் புண்ணியம் கிட்டியது. அவர்கள் தந்த குறிப்புகளும் பலவுள்ளன. இங்ஙனம் அரிதிற் சேர்த்த குறிப்புகளில், காகித மடிப்புக்களாலும் மறதியாலும் சென்றனபோக இருந்தனவற்றைத் தொகுத்து ஒவ்வொரு குறளின் அடியிலும் குறித்துள்ளேன். அறத்துப்பால் அச்சிடும்போது அவற்றைக் குறியாமல் விட்டதுண்டு. பின்னர் இந்தக் குறிப்பைக் கண்ணுற்ற அன்பர்களாகிய கும்பகோணம் R. கந்தசாமிமூப்பனார் B.A., B.L., திருச்செந்தூர் திரு. அறம்வளர்த்தநாதபிள்ளை B.A. முதலிய செந்தமிழ்ச் செல்வர்கள் பலர் இதனையும் சேர்த்து வெளியிடுதல் நலம் என்று வற்புறுத்தினார்கள். அதன்மேல் அடியேன் அறிவுவிளக்கம்பெற்றுத் திருந்த இதுவும் வழியாகும் என்று இப்பகுதியில் சேர்த்து வெளியிடலானேன். ஆக, இந்தப் பொருட்பால் பகுதியில் தொகுப்புரையும், பிரபந்தங்கள், பழமொழிகள் இவற்றின் ஒப்புமைப்பகுதிகளும், குறிப்புரையும் சேர்க்கப்பெற்ற சிறந்தபகுதிகள்.

இப்பகுதி தொகுக்கின்ற காலத்தும் ஆராய்கின்றகாலத்தும் தருமபுர ஆதீனத்து இருபத்தைந்தாவது குருமூர்த்திகளாக இப்போது எழுந்தருளி அருளாட்சி செலுத்தும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உசாவி உதவிய அறிவுச் செல்வங்கள் அளப்பில. காஞ்சிப்புராணம், பெரியபுராணம் முதலியவற்றை நன்காராய்ந்து அவற்றில் வந்துள்ள பொருட்பால் குறளொப்புமைகளைத் தொகுத்து அளித்துக் குறித்துக் கொள்ள உதவினார்கள். இங்ஙனம் ஆட்சித் திறத்தோடு இலக்கிய ஞானதானமும் செய்து எந்நேரமும் குறள், பெரியபுராணம், குருஞானசம்பந்தப் பெருமான் நூல்கள், திருமுறைகள் இவற்றில் அரியநுணுகிய கருத்துக்களைக் கொடுத்துக் கொண்டாடும் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குணநலம் அறிவாளிகட்கு நல்விருந்தாகும். பொன்னளித்துப் புலவனை அடிமைப் படுத்த இயலாது. அவனது புலமையை அறிந்து போற்றி அடிமையாக்கலாம் என்பது புறநானூறு போன்ற பழைய சங்க நூல்கள் தரும் வரலாறு. அந்தநிலையில் புலவர்பெருமக்களைப் பிணித்து அருளும் பேராற்றல் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு ஒருதனிச்சிறப்பு. அருங் கலைபோற்றும் ஆற்றலில் அவர்கள் அடியேனுக்கு இடுங்கட்டளையாவது இந்தப் பதிப்பு எவ்வளவு விரிவாயினும் பரவாயில்லை. நல்லமுறையில், எல்லா இலக்கியங் களும் அமைந்த ஒரு பதிப்பாக அமையவேண்டும் என்பதுதான். அச்சிடப் பதினாயிரக் கணக்கான ரூபாய்களை அளிக்கும் அவர்கள் வள்ளன்மை அங்ஙனமிருந்தாலும், அடியேன் அறிவினெல்லையும் உழைப்பின் எல்லையும் இவ்வளவிற் சுருங்கியதாக இருப்பதை உலகம் அறியுந்தோறும் அவர்கள் வள்ளன்மையின் பெருக்கத்தையும் அடியேன் அறிவின்சுருக்கத்தையும் அறிந்து இன்புறும் என்று எண்ணுகிறேன்.

இந்தப்பதிப்பு இவ்வண்ணம் நன்கமைய உதவியாக இருந்தன ஒப்புநோக்கக் கிடைத்த ஏடுகள். அவற்றின் தொகையையும், கிடைத்த விதத்தையும் அறத்துப்பால் முகவுரைக்கண்ணே மொழிந்தேனாயினும், செய்யாமற் செய்த உதவியையுடைய ஏடுதேடித்தந்த இன்றமிழ்ப் பெருமக்களை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

1. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்; பரிதியார் உரை 1
2. ஷ காளிங்கர் ,, 1
3. சோமசுந்தர தேசிகர் வீட்டுப்பிரதி (கையெழுத்து) (A. கல்யாணசுந்தர தேசிகர் மூலம்) பழைய உரை 1
4. சைவ எல்லப்பநாவலர் மாளிகைப் பிரதி பரிமேலழகர் உரை 1
5. தருமபுர ஆதீனத்துப் புத்தகசாலைப்பிரதி ஷ உரை 1

இங்ஙனம் ஏடுகள் அளித்துத் தமிழாக்கத்திற்கு உதவிய அனைவருக்கும் அடியேன் செய்யுங்கைம்மாறு யாதுளது. நன்மை கடலிற் பெரிது என அமைகின்றேன்.

குறிப்புகள் தொகுக்குங்கால் உடனிருந்து தொகுத்துத்தந்த சென்னைப் புலவர் ஸ்ரீநிவாசபிள்ளை அவர்கள் நல்ல தமிழ்ப்புலமையுடையவர்; இடைவிடாத உழைப்பும் ஊக்கமும் உடையவர். அவருக்குத் தமிழன்னை எல்லாநலனும் இனிதளிக்க என வேண்டிக்கொள்ளுகிறேன்.

இந்தப் பதிப்பிற்குவேண்டிய கந்தபுராணக் குறிப்புகளையும், நுண் பொருண் மாலைப்பிரதியொன்றையும், பிற சிலகுறிப்புகளையும் கொடுத்துதவியவர் என்னுடன் பயின்ற நண்பரும், சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியரும் ஆகிய ந. சிவப்பிரகாசதேசிகர் ஆவர் அவர்களுக்கும், இந்தப்பதிப்பு வேலையில் ஈடுபட்டு, அல்லும் பகலும் உடனிருந்து முழுமனத்துடன் ஆய்ந்தும், ஒப்புநோக்கியும் வந்த என் அரும்பெறல் நண்பரும், ஆதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியரும் ஆகிய வித்துவான், M. ஆறுமுகம் அவர்களுக்கும், வித்துவான், V. S. குருசாமிக்கும் எல்லாம்வல்ல சித்தரான சொக்கலிங்கப்பெருமான் நல்லன எல்லாம் நல்குவாராக.

இந்த வெளியீட்டைத் தமது அணிந்துரைகளால் அழகுபடுத்திய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

இந்த உரைவளகுறிப்புக்களைப் பார்த்த பல அச்சக உரிமையாளர்களாகிய செந்தமிழறிஞர்கள் இத்தகையதொரு வெளியீடு மிகத்தேவைதான்; மிக அருமை யானதுதான்; வெளிவந்த பல உரைகளில் சிறந்த திருத்தங்கள் பல காணப்படு கின்றன. இதுவரை வெளிவராத உரைகளும் புதிதாகத் தமிழ்நாட்டுக்குக் கிடைக் கின்றன. ஆனாலும், முப்பாலும் வெளிவரக் குறைந்தது முப்பதினாயிரம் வேண்டுமே; நாங்கள் இந்தமுதலைக்கொண்டு முப்பது பள்ளிப்பாடங்களை வெளியிட்டு மூன்று முப்ப

தாயிரம் ஊதியமாகப் பெற்றுவிடுவோமே! இவ்வளவுபெரியவேலை எங்களால் முடியாது என்று கண்ணோக்கிக் கருத்தறிவித்துப்போயினர். கைசோர எழுதிய அடியேற்குக் கருத்து மழுங்கியது. அந்த நிலையில் அறிவுகண்ட இடமெல்லாம் ஊக்கப்படுத்தி உதவும் செந்தமிழாசாரியப் பெருந்தகை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இந்தநூல் முழுதும் வெளிவந்தருளத் திருவுளம்பாலித்தார்கள். அவர்களுடைய திருவுள்ளக் கிடக்கையும், செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் அருள்நோக்கமும், பாண்டிப் பிராட்டியாகிய அங்கயற்கண்ணித்தாயின் கருணையுமே இவ்வளவு விரிந்தவேலையை முக்காற்பகுதி முடித்துவைத்தது.

இந்த வெளியீடு எண்கலை நிரம்பிய இளமதிபோன்றது. இன்னும் வளர்தற்குவேண்டிய தகுதிகள்பலவும் வாய்ந்தது. உதாரணமாக, வெளிவந்த அறத்துப் பாலுக்கு, இந்தப்பகுதியை ஆராய்கின்றகாலத்துக்கிடைத்த குறிப்புகளும் ஒப்புமைப் பகுதிகளும் பல உள்ளன. இவ்வாறு திருக்குறள் ஆராய்ச்சிகள் மேன்மேலும் வெளிவர இப்பதிப்பு ஒரு அடிப்படையாகும் என்ற துணிவும் சிறிதுடையேன்.

தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த தமிழறியுஞ் சொக்கர் திருவருளில் அடியேனையும் வழிப்படுத்திப் பணிகொண்டருளும் திருவருட் செல்வர்களாகிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் திருவடிகளை மனமொழிமெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

தருமபுரம், 2—9—51.

ச. தண்டபாணி,
தொகுப்பாசிரியன்.

மதிப்புரைகள்

சென்னை அரசாங்க முதலமைச்சர்,

கனம் திரு. P. S. குமாரசுவாமிராஜா அவர்கள்.

சமயநூல்களையும், பழந்தமிழ்க் காவியங்களையும் வெளியிடுவதன்மூலம், பொதுவாகத் தமிழ்நாட்டவர்க்கும் சிறப்பாகச் சமயத்துக்கும் தமிழ்க்கலை வளர்ச்சிக்கும் தருமபுர ஆதீனம் செய்துவரும் சிறந்த பணியை அனைவரும் அறிவர்.

அதனையொட்டி, 'தமிழ்வேதம்' எனப்படும் திருக்குறளுக்கு விரிவுரை எழுதுவித்து "திருக்குறள் உரைவளம்" என்னும்பெயரால் நூல்வடிவமாகவெளியிடும் அதனினும் சிறந்த அறப்பணியை ஆதீனம் மேற்கொண்டது யாவராலும் போற்றற்குரியதாகும். திருக்குறள் முப்பாலில் முதற்பாலான அறத்துப்பாலை முன்னமே வெளியிட்டிருக்கின்றனர். அத்தொகுப்பின் இரண்டாவதான பொருட்பால் நூலுக்கு மதிப்புரை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிட்டியமைகுறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அறம், பொருள், இன்பம் என்னும் இம்மூன்றனுள் "வீடு" கண்டவர் வள்ளுவர்பெருமான். எனவே அவர் குறளை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பாலாக வகுத்தார். இவற்றுள் இரண்டாவதான பொருட்பாலில் அரசியல் நீதியையும், வாழ்க்கை தர்மத்தையும் வகுத்திருக்கிறார். மக்கள் வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டப்படும் நீதிநெறிமுறைகளை இப்பொருட்பால் கூறுகிறது. வள்ளுவர்வகுத்த இவ்வாழ்க்கை நியதிகளைக் கடைப்பிடித்து, பண்புடையவராய் வாழ்ந்துவர மக்கள் தலைப்படின், தற்காலம் நாட்டில் நிலவும் விரும்பத்தகாத சூழ்நிலைகள் மாறி அமரவாழ்வு எய்துவர் என்பதற்கையமில்லை.

தமிழ்மக்கள் இவ் "வேதவாழ்வினைக் கடைப்பிடித்து" நாட்டின் தேசிய வளங்களையும் நலன்களையும் சகலதுறைகளிலும் பெருக்கவல்லராகி, சுதந்திரநாட்டின் நல்ல பிரஜைகளெனத்திகழ்ந்து, புராதன நாகரீகத்தவர் என்னும் பண்டைப்புகழை நிலைநாட்டி வருவார்களென நம்புகிறேன்.

சென்னை,

திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள்.

திருக்குறள் வீட்டு நூல்; நாட்டுநூல்; உலகநூல். இத்தகைய ஒரு நூல் இதுகாறும் யாண்டும் வெளிவந்ததில்லை. இப்பெருநூலுக்குப் பழைய உரைகள் உண்டு. அவற்றுள் ஐந்து, ஒருங்கே திரண்டு இப்பதிப்பில் காட்சி அளிக்கின்றன. காட்சி, கண்ணையும் கருத்தையும் கவர்வது.

நன்முறையில் இப்பதிப்பை வெளியிட்டவர் தருமபுரத்திருமடத்தார். திருமடத்தார் காலத்துக்கேற்ற தொண்டுபுரிதல் மகிழ்ச்சியூட்டுகிறது.

தொகுப்பாசிரியர் முயற்சியும் உழைப்பும் திறனும் பிறவும் போற்றற்குரியன.

வள்ளுவம் வாழ்க ! தமிழ் வெல்க !!

திருக்குற்றாலம்

ரஸிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

தருமபுரம் ஆதீனத்திலிருந்து அறத்துப்பால் ஒரு வருஷத்துக்குமுன் வெளிவந்தது. பொருட்பால் எப்போது வெளிவரப்போகிறது என்று ஆத்திரத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது தமிழ் உலகம். அதுவும் வந்துவிட்டது.

பொருட்பால் சம்பந்தமாகப் பல நூதன கருவிகள் கிடைக்க நேர்ந்தன. அதனால் மிக விரிவாயும் தெளிவு கொடுப்பதாயும் அமைத்திருக்கிறது பொருட்பால்.

ஒரு வருஷத்தில் இவ்வளவையும் சாதித்திருக்கிறார்களே என்று வியக்கவேண்டியிருக்கிறது.

தொகுப்பாசிரியர் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் பல பெயர்பெற்ற ஆசிரியர்கள் உடனிருந்து வியாழ வட்டங்களாகத் திரட்டிய அரிய விளக்கங்களையும் அனுபவங்களையும் இந்தப் பொருட்பால் பகுதியில் சேர்த்து உதவியிருக்கிறார்கள். திருக்குறளுக்கு இதற்குமுன் யாரும் செய்யாத பெரும்பணி கிடைத்திருக்கிறது. தமிழர்களுக்குத் தனி எக்களிப்புக்கொள்ளக் காரணம் இருக்கிறது.

தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பண்டார சந்நிதி அவர்கள் தமிழ்நாட்டுக்கு அளித்துவரும் தர்மங்கள் பலப்பல. அவைகளை விலை உயர்ந்த அச்சாரங்களாக நன்றியுடன் மக்கள் ஏற்று வருகிறார்கள். "திருக்குறள் - உரை வளம்" தனிச்சிறப்புவாய்ந்த நன்கொடை. அடுத்துவரும் நன்கொடைகளையும் எதிர்பார்க்க வேண்டியதுதான். எல்லாம் வல்ல இறைவனதுதிருவருள் வளமாய் இருக்கிறது நமக்கு.

சென்னை,

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், M. A., B. L., M. O. L.

தமிழினைக்கடைந்தெடுத்த புதுவெண்ணெய் திருக்குறள். தமிழாக வளர்ந்த பால் எல்லாம் இங்கு வேறுபாடின்றி இனித்து மணக்கக் காண்கிறோம். இரண்டாயிரம் ஆண்டாகப் புளிக்காது புத்தம் புதிதாக இந்த வெண்ணெய் இந்நாட்டிலும், பிறநாட்டிலும் இனித்து மணக்கிறது. திருவள்ளுவர் செய்த பெருஞ்சித்து இது.

இதனைப் பலபல வடிவில் காலத்திற்கேற்ப நமக்கு ஊட்டிவந்த அருமந்த செவிலித் தாயர் பலர். இந்த ஓர் அற்புதவெண்ணெயில் என்ன என்ன வேற்றுமை காட்டுகிறார்கள்! என்ன என்ன சுவையைச் சுட்டுகிறார்கள்! இவர்களையும் கொண்டோடுகிற உலகம் இவர்களையும் தாண்டி எவ்வளவோ தொலைவு ஓடிவருகிறது. நெஞ்சுலர்ந்து பசியால் வாடும் இந்த உலகக் குழந்தைகட்குப் பச்சை வெண்ணெய் வேண்டும். திருக்குறள் புத்துயிர்தரப் புத்துயிர்பெற்று விளங்குகிறது. திருக்குறளையும் அதன் பல உரைகளையும் கற்றுத் தெளிய இன்றைய தமிழுலகம் அறிவுப்பசி எடுத்து அலைகிறது. தமிழ்நாட்டுப் புயற்காற்றிடையே தோன்றுகிற அமைதிநிலையம் அது.

தமிழும் சிவமும் ஒன்றென்று கருதினர் சைவர். சைவ மடங்கள் சிவம் வளர்க்கவந்து தமிழை வளர்த்தன. அந்தப்பழங்காலை இன்றும் தூர்ப்பார் இல்லை. சோறு கொடுத்துப் பசியாற்றிய தருமை - மருந்துகொடுத்து நோயாற்றிய தருமை - சிவம் கொடுத்துப் பிறவிப்பிணி நீக்கிய தருமை இன்று திருக்குறளின் பலமுகப்பட்ட ஒளிகளாம் உரைகளை ஒருசேர வெளியிட்டுத் தமிழைக்கொடுத்து நம்குறையெல்லாம் ஒருங்குநீக்க முற்பட்டிருக்கிறது. "திருக்குறள் உரைவளம்" இருபதாம் நூற்றாண்டின் தனிப்பெருந் தமிழ் முயற்சி. இதனை இயற்றுவித்துத்தந்த தருமைத் தலைவர் எம்மடிகள் வாழ்க! விருந்தினை ஆக்கிய தொண்டர் வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் அடிகளார் அருளின் தேக்கம்; இந்தத்தேக்கம் வாழ்க! விருந்தினை உலகம் உண்ணவைக்கும் அடிகள் வாழ்க! வாழ்க! வாழ்க! திருக்குறள் உரைவளம் அறமாயமட்டும் வந்ததே என ஏங்கிய உள்ளம் குளிர இன்று பொருளாயும் மிகமிகப் பெரிய விசுவரூபம் எடுத்து வருகிறது. மிகவிரைவில் இன்பமாயும் மலர்ந்து வெல்க! வெல்க! வெல்க!

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்
திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் B. A., B. L.

நீதி நூல் மக்களின் அறிவை நெறிப்படுத்துவது; வாழ்க்கையை வரம்பினுட் படுத்துவது. இவ்வுலகம் கண்ட நீதிநூல்கள் பலப்பல, அவற்றுள்ளே தலைசிறந்தது திருக்குறள். முக்காலத்திற்கும் ஒத்த அறம் பொருள் இன்ப நெறிகளை எடுத்துரைக்கும் அந்நூலுக்குப் பதினைன்காம் நூற்றாண்டுவரை நல்லறிஞர் பதின்மர் உரைகள் எழுதினார்கள். அதற்குப் பிறகு இன்றுவரை பலரும் புதியஉரை காணவேண்டும் என்ற ஆர்வத்தால் பல்வேறு வழிகளில் முயன்றும் வருகிறார்கள். இவ்வளவுக்கும் இடந்தந்து இவ்வளவுக்கும் அப்பாற்பட்டிருப்பது திருக்குறள். இத்தகைய திருக்குறளின் பொருட்பாலுரைவளங் காட்டும் இப்பதிப்பில் ஐவர் உரைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே அச்சான உரைகளிலும் திருத்தமான பகுதிகள் இந்நூலில் சேர்க்கப்பெற்றுள்ளன. பரிமேலழகர் உரைப் பகுதியில் எல்லப்பநாவலர் அவர்கள் ஏட்டுப் பிரதியால் திருத்தமுற்ற பகுதிகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாகும்.

பெரும்புலமைவாய்ந்த இலக்கண உரையாசிரியர்களால் திருக்குறள் எடுத்தாளப் பட்ட இடங்களும் அமைதிகள் முதலியனவும் ஒப்புமைப்பகுதிகளும், பிறகுறிப்புக்களும் சேர்க்கப்பட்டிருப்பது ஆராய்ச்சி செய்வார்க்கு அருந்துணையாகும்.

தமிழ்நாட்டுச் சைவமடங்கள் என்றும் தமிழையும், சைவத்தையும் குறிக்கொண்டு காத்துவருகின்றன என்பது வரலாற்று நூல்களில் கண்ட உண்மை. சற்றேறக் குறையப் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தென்னாட்டுச் சைவமடங்களே மொழியையும் சமயத்தையும் பாதுகாக்கும் அரண்களாக விளங்குகின்றன.

இந்த இருபதாம் நூற்றாண்டிலே தருமபுர ஆதீனம், அறிவியல், ஆராய்ச்சி, இலக்கணம், இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் பல சிறந்த நூல்களை அச்சிட்டு வழங்கி வருகிறது. இருபத்தைந்தாவது மகா சந்நிதானமாகத் தருமையில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தமிழ் அமுதம் அருந்தித் தாம்பெற்ற இன்பத்தைத் தமிழ்நாட்டார் அனைவருக்கும் வாரி வழங்கும் ஞானவள்ளலாகத் திகழ்கிறார்கள். பலப்பல ஆராய்ச்சி நூல்களை அழகான முறையில் அச்சிட்டு அருளத் திருவுள்ளம் கொண்டுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சென்ற ஆண்டு அறத்துப் பாலை வெளியிட்டுத் தமிழருள்ளத்தை அள்ளிக்கொண்டார்கள். அந்நூலைக் கற்ற தமிழ் அன்பர்கள் மனமாரப் போற்றினர். வாயார வாழ்த்தி வருகிறார்கள். இங்ஙனம் பல்லோரும் பாராட்டிய நற்பணியைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்னும் ஆர்வத்தின் பயனாக இப்போது பொருட்பாலும் வளமார்ந்த வடிவத்தில் வெளி வருகின்றது.

இத்துணைச் சிறந்த பணியைப் புலமைசான்ற திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களைக்கொண்டு நல்ல முறையில் நிறைவேற்றி வைத்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடைய நற்புகழ் நீடு வாழ, அருளாட்சி தழைத்து ஓங்க, செந்தமிழ் அன்னை திருவருள் சுரப்பாளாக.

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பு அகராதி.

அகம் - அகநானூறு
அடியார் - அடியார்க்கு நல்லார்
அத் - அத்தியாயம்
அதி - அதிகாரம்
அரும்பத - சிலப்பதிகாரம் அரும்பத வுரை
அறநெறி - அறநெறிச்சாரம்
ஆசாரக் - ஆசாரக்கோவை
ஆசிரிய - ஆசிரியமாலை
ஆத்தி - ஆத்திச்சூடி
இ. கொ - இலக்கணக் கொத்து
இரங் - இரங்கேசவெண்பா
இரும்பல் - இரும்பல்காஞ்சி
இலக்-சூறு - இலக்கண விளக்கச் சூறுவளி
இளம் - இளம்பூரணர்
இன் - இன்னிலை
இன்னா - இன்னாநாற்பது
இனிய - இனியவை நாற்பது
உலக - உலகநீதி
ஏலா - ஏலாதி
கச்சி ஆனந்த - கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டுவிடுதூது
கந்த - கந்தபுராணம்
கம்ப - கம்பராமாயணம்
கம்ப - விருத் - கம்பராமாயண முதற் செய்யுள் சங்கோத்திர விருத்தி
கல்லா - கல்லாடம்
கலி, கலித் - கலித்தொகை
கலிங் - கலிங்கத்துப் பரணி
காஞ்சி - காஞ்சிபுராணம்
கார் - கார்நாற்பது
காரி - காரிரத்ந கவிராயர்
காலிங் - காலிங்கர்
குண்டல - குண்டலகேசி
குண - குணசாகரர்
குணவீர - குணவீரபண்டிதர்
குலசேகரர் - குலசேகராழ்வார் திரு மொழி
குறுந் - குறுந்தொகை
கொன்றை - கொன்றைவேந்தன்
கோடைச் - கோடைச்சுரக்கோவை
சரபேந்திர - சரபேந்திர பூபால குறவஞ்சி
சிலப் - சிலப்பதிகாரம்
சிவ - சிவபோகசாரம்
சிவசிவ - சிவசிவவெண்பா
சிவஞான - சிவஞானமுனிவர்
சிறுபஞ்ச - சிறுபஞ்சமூலம்
சிறுபா - சிறுபாணாற்றுப்படை
சீவக - சீவகசிந்தாமணி
சு - சுலோகம்
சுக்கிர - சுக்கிரநீதி
சுப்பிர - சுப்பிரமணிய தேசிகர்
சுவாமி - சுவாமிநாத தேசிகர்
சூ - சூத்திரம்
சூளா - சூளாமணி
செய் - செய்யுளியல்
சொக்கப்ப - சொக்கப்ப நாவலர்
சொல் - சொல்லதிகாரம்
சோமேசர் - சோமேசர் முதுமொழி வெண்பா.
தக்க-உரை - தக்கயாகப்பரணியுரை
தகடூர் - தகடூர் யாத்திரை.
தஞ்சை - தஞ்சைப் பெருவுடையார் உலா
தண்டி - தண்டியலங்காரம்
தணிகை - தணிகைப்புராணம்
தமிழ் - தமிழ்விடுதூது
தனிப் - தனிப்பாடல் திரட்டு
தா - தாழிசை
திரி - திரிகடுகம்
திரு-உலா - திருக்கைலாய ஞானஉலா.
திருநா - திருநாவுக்கரசர் தேவாரம்

திருத் - திருத்தொண்டர் வெண்பா
திருமந் - திருமந்திரம்
திருமலை - திருமலைவெண்பா
திருமலைக் - திருமலைக்கொழுந்து
வெண்பா
திருமொழி
திருவாய் - திருவாய்மொழி
திருவிளை - திருவிளையாடல்
திருவெங் - திருவெங்கைக்கோவை,
திருவெங்கையுலா
தினகர - தினகரவெண்பா
தெய்வச் - தெய்வச்சிலையார்
தொல் - தொல்காப்பியம்
தொல்-விருத் - தொல்காப்பிய முதற்
சூத்திரவிருத்தி
நச் - நச்சினார்க்கினியர்
நல் - நல்வழி
நள - நளவெண்பா
நற் - நற்றிணை
நன் - நன்னூல், நன்னெறி
நாலடி - நாலடியார்
நான்மணி - நான்மணிக்கடிகை
நீதி - நீதிவெண்பா
நீதிநெறி - நீதிநெறிவிளக்கம்
நீல - நீலகேசி
நுண் - நுண்பொருள்மாலை
நேமி - நேமிநாதம்
பதிற்று - பதிற்றுப்பத்து
பரமத - பரமத திமிரபானு
பரி - பரிபாடல்
பரிப் - பரிப்பெருமாள்
பரிதி - பரிதியார்
பரிமே - பரிமேலழகர்
பழ - பழமொழி
பழ-நா - பழமொழி நானூறு
பழைய - பழைய உரை
பா - பாடல்
பாக - பாகவதம்
பா. வெ - பாரத வெண்பா
பாரதி - பாரதியார்
பிரபு - பிரபுலிங்கலீலை
பிரமோத் - பிரமோத்ரகாண்டம்
பு. வெ - புறப்பொருள்வெண்பாமாலை
புறம் - புறநானூறு
பெரிய - பெரியபுராணம்
பெருங் - பெருங்கதை
பெருந் - பெருந்தேவனார்
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்படை
பேரா - பேராசிரியர்
மணக் - மணக்குடவர்
மணி - மணிமேகலை
மதுரைக் - மதுரைக்காஞ்சி
மயிலை - மயிலைநாதர்
மாற - மாறனலங்காரம்
முத்திநிச் - முத்திநிச்சயப்பேருரை
முதுமொழி - முதுமொழிமேல்வைப்பு
முதுமொழிக் - முதுமொழிக்காஞ்சி
முருகேசர் - முருகேசர் முதுநெறி
வெண்பா
யா-கா - யாப்பருங்கலக்காரிகை
யா-வி - யாப்பருங்கலவிருத்தி
வளையா - வளையாபதி
வாக்கு - வாக்குண்டாம்
விநா - விநாயகபுராணம்
வில்லி - வில்லிபாரதம்
வீர - வீரசோழியம்
வெள்ளி - வெள்ளியம்பலவாணத்
தம்பிரான் சுவாமிகள்.

பொருட்பால்

அதிகார அட்டவணை.

அமைச்சு	408
அரண்	577
அவையஞ்சாமை	548
அவையறிதல்	533
அறிவுடைமை	80
ஆள்வினையுடைமை	379
இகல்	739
இடனறிதல்	191
இடுக்கணழியாமை	394
இரவச்சம்	1025
இரவு	1019
இறைமாட்சி	3
உட்பகை	776
உழவு	988
ஊக்கமுடைமை	350
ஒற்றாடல்	334
கண்ணோட்டம்	320
கயமை	1046
கல்லாமை	46
கல்வி	25
கள்ளுண்ணாமை	832
காலமறிதல்	175
குடிசெயல்வகை	976
குடிமை	875
குற்றங்கடிதல்	96
குறிப்பறிதல்	519
கூடாநட்பு	697
கேள்வி	64
கொடுங்கோன்மை	289
சான்றாண்மை	923
சிற்றினஞ்சேராமை	128
சுற்றந்தழால்	239
சூது	846
செங்கோன்மை	269
சொல்வன்மை	425
தீநட்பு	683
தூது	486
தெரிந்துசெயல்வகை	143
தெரிந்துதெளிதல்	207
தெரிந்துவினையாடல்	225
நட்பாராய்தல்	657
நட்பு	641
நல்குரவு	1004
நன்றியில்செல்வம்	949
நாடு	562
நாணுடைமை	964
பகைத்திறந்தெரிதல்	762
பகைமாட்சி	751
படைச்செருக்கு	625
படைமாட்சி	609
பண்புடைமை	936
பழைமை	670
புல்லறிவாண்மை	724
பெண்வழிச்சேறல்	805
பெரியாரைத்துணைக்கோடல்	112
பெரியாரைப்பிழையாமை	790
பெருமை	908
பேதைமை	711
பொச்சாவாமை	254
பொருள்செயல்வகை	592
மடியின்மை	365
மருந்து	860
மன்னரைச்சேர்ந்தொழுகல்	503
மானம்	892
வரைவின்மகளிர்	818
வலியறிதல்	159
வினைசெயல்வகை	470
வினைத்திட்பம்	455
வினைத்தூய்மை	440
வெருவந்தசெய்யாமை	305

குருபாதம்.

ஆதீனப்பணிகள்

1. தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.

2. சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசை முறைகளைப் பயிற்றுவிப்பது.

3. சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.

4. சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.

5. தலங்கள்தோறும் திருப்பதிகங்கள் உரையுடன் வெளியிடுவது.

6 அறிஞரைக் கொண்டு ஆலயம்தோறும் அறவுரைவழங்குவது.

7. பிரசாரவாகனத்தின்மூலம் தமிழ்நாடெங்கும் சமயம் வளர்ப்பது.

8. ஆங்கிலக்கலாசாலையில் தமிழ்ப்பரிசு அமைப்பது.

9. ஆதீனக்கோயில்தோறும் பண்ணிசைத்தமிழ் வளர்ப்பது.

10. தமிழ்க்கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற்கு அனுப்புவது.

11. வடமொழிக் கல்லூரி நிறுவிச் சிரோமணித் தேர்விற்கனுப்புவது.

12. ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது.

13. நூல் ஆராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது.

14. விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிட்டு வழங்குவது.

15. சமயநூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.

16. ஞானசம்பந்தம் என்னும் மாதப்பத்திரிகை வாயிலாகச் சமய உண்மைகளை அறிவுறுத்துவது.

17. சமயக்கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.

18. தமிழ்ப்பணி சமயப்பணி செய்பவர்க்கு உதவுவது.

19. தமிழ்நாட்டுத் தல வரலாறுகளை எழுதுவித்து வழங்குவது.

20. புத்தகசாலை அமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.

21. நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்னமளிப்பது.

22. பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர்களுக்கு உதவுவது.

23. மாயூரத்தில் தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் இலவச மருத்துவநிலையம் கட்டி, ஏழைகளுக்கு உபகாரம் செய்துவருவது.

24. குடிமக்கட்கு அடிக்கடி எண்ணெய் முழுக்கும் அன்னதானமும் அளித்து வருவது.

25 ஆதீனத்தில் கூட்டுறவுப் பண்டகசாலை ஏற்படுத்தி மக்களுக்கு வசதி செய்து வருவது.

26 காந்தி நிதி, ஹரிஜன பண்டு, அகதிகள் நிவாரணநிதி, காசநோய் ஆஸ்பத்திரி உதவிநிதி முதலிய பற்பல பொது ஸ்தாபனங்கட்குப் பெருந்தொகை அளிப்பது முதலியன.

தெய்வப்புலவர் திருவள்ளுவர்

உ

குருபாதம்

திருக்குறள்

2. பொருட்பால்

அரசியல்

தொடர்புரை :

பரிமேலழகர் :— இனி, இல்லறத்தின்வழிப் படுவனவாய பொருள் இன்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக் கொண்டார். அது தன் துணைக்காரணமாய அரசனீதி கூறவே அடங்கும். அரசனீதியாவது காவலை நடாத்தும் முறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப்படுத்து, மலர்தலை உலகிற்கு [1]உயிரெனச் சிறந்த அரசனது இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

[2]மணக்குடவர்:— பொருட்பாலாவது பொருளின் பகுதி என்று கொள்ளப்படும். பொருள் என்றது மக்களை உடைத்தாகிய நிலம்; பகுதியாவது அந்நிலத்தை ஆளுதற்குரிய அரசரது தன்மையும், அவர் ஆளுதற்குச் செய்யும் திறன்களும், அதற்குத் துணையான அமாத்தியர் இலக்கணமும், அவர் செய்யும் திறன்களும், அவ்விருவரானும் உண்டாக்கப்பட்ட நாடும் அரணும் பொருளும் படையும் ஆகிய இவற்றினது திறன்களும், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றற்கும் துணையாகிய

---

[1]"மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" –புறம். "வீங்குநீர் வேலி வாழ்பவர்க்கு ஆவியாபவர் அரசராதலால்" –சூளாமணி. "மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிர்" –மணிமேகலை. "மன்னுயிர் ஞாலக்கு இன்னுயிர் ஒக்கும் இறை" –பெருங்.

[2]மணக்குடவர் உரையும் பரிப்பெருமாள் உரையும் பெரும்பாலும் ஒன்றாகவே இருப்பதால் ஆங்காங்கு மாறுபட்ட இடங்கள்மட்டும் குறிக்கப்படுகின்றன.

நட்பினது திறன்களும், அவ்வாறு உண்டாகிய பொருட்கும் பொருள் உடையார்க்கும் கேடுவரும் திறன்களும், அந்நிலத்து உண்டான மக்களது இயல்பும், அவர் பொருள் செய்யுமாறும் கூறுதல். இவையெல்லாம் அரசியலும், அமைச்சியலும், பொருளியலும், நட்பியலும், துன்பவியலும், குடியியலும் என அடங்கும். படையியல், அரணியல் என வகுத்தார் உளரால் எனின், அவையெல்லாம் ஒருவனால் ஆக்கப்படும் பொருள் ஆகலின், பொருளியல் என அடங்கும். துன்பவியல் என்றது எற்றுக்கு? அதனையும் நட்பியலுள் அடக்கினார் உளரால் எனின், அவையெல்லாம் நட்கப்படாது என்னும் கருத்தினால் கூறினார்கள் ஆயினும் அவற்றினிடைக் கிடந்த பேதைமை, புல்லறிவாண்மை என்னும் அதிகாரங்கள் நட்கப் படாததும் நட்கப்படுவதும் அன்றி, ஒருவற்குத் துன்பத்திற்குக் காரணம் ஆம் என்று கூறுதலால், துன்பவியல் என வேண்டும் என்க.

இதனுள் இறைமாட்சி முதலாக இடுக்கணழியாமை ஈறுகக்கூறிய அதிகாரம் இருபத்தைந்தும் பெரும்பான்மையும் அரசர்க்கு உரியவாதலின் அரசியல் என்றும், அமைச்சு முதலாக அவையஞ்சாமை ஈறுகக் கூறிய அதிகாரம் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரியவாதலின் அமைச்சியலென்றும், நாடு முதலாகப் படைச்செருக்கு ஈறுகக் கூறிய அதிகாரம் ஐந்தும் பொருட்பகுதியாதலின் பொருளியலென்றும், நட்பு முதலாகக் கூடாநட்பீறுகக் கூறிய அதிகாரம் ஐந்தும் நட்பின் பகுதி யாதலின் நட்பியலென்றும், பேதைமை முதலாக மருந்து ஈறுகக் கூறிய அதிகாரம் பன்னிரண்டும் கேட்டுக்குக் காரணமாதலின் துன்பவியல் என்றும், குடிமை முதலாகக் கயமையீறுகக் கூறிய அதிகாரம் பதின் மூன்றும் மக்களது இயல்பு கூறுதலின் குடியியல் என்றும் ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரம் எழுபதும் ஆறு பகுதியாயிற்று.

அவற்றுள் அரசியலாவது அரசர்செய்யும் திறன் கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினார் எனில், அது கூறிய அதிகாரம் இருபத்தைந்தினும் முற்பட அரசரால் உண்டாக்கவேண்டும் பொருளும், அவர்க்கு இன்றி யமையாத துணையும், காலம் இடம் வலி முதலியன அறிதலும் தெரிந்து தெளிதலும் வினையாடலும் முதலியனவும், செங்கோன்மை முதலிய பிறவும் முறையாக உணர்த்தப்படுகின்றன.

39. இறைமாட்சி

தொகுப்புரை :

[நல்ல மந்திரிகளையும் வளமான நாட்டையும் உறுதியான அரண்களையும் பொருளையும் தக்க படைகளையும் நட்பினரையும் உடையவனே அரசருக்குள் ஏறு ஆவான். அத்தகைய அரசருக்கு அமையவேண்டிய இன்றியமையாத குணங்கள் யாருக்கும் அஞ்சாமையும், கொடையும், அறிவுடைமையும், ஊக்கமுமாம். விரைந்து வினைசெய்யும் வன்மையும் அதற்கேற்ற கல்வியும் ஆண்மையுமாகிய இவைகளும் இத்தகைய அரசர்களை விட்டு என்றும் நீங்காவாம். அறநெறி தவறுதவன் அரசன்; வீரம் தவறுதவன் அரசன்; பாவம் கடிபவன் அரசன். பொருள்தேடும் உபாயங்களைப் பெருக்கி, பொருள்களைத் தக்கவழியில் சேர்த்து, காத்து, நல்வழியில் செலவழிப்பதற்கும் அரசனுக்கு வன்மையிருக்கவேண்டும். மன்னன் மாநிலம் போற்ற வாழவேண்டுமாயின் யாரும் எக்காலத்தும் சென்று கண்டு குறைநிறைகளைச் சொல்லிக் கொள்வதற்கு எளியவனயிருத்தல் வேண்டும். கொடுஞ்சொல் கூறுதல் கூடாது. இன்சொல்லோடு கொடுத்துக் காக்கவல்ல அரசனது கருத்தளவாய் உலகம் முழுவதுமே அமைந்து வாழும்; நீதியோடு ஆளும் அரசனே மக்களுக்குத் தலைவன். இடித்துக்கூறித் திருத்தும் பெரியோர்களின் சொற்களைக் கோபியாது கேட்டு ஆராய்ந்து திருந்தி நடக்கும் அரசனுடைய குடையின்கீழேயே அனைத்துலகமும் கவலையின்றி அசையாது தங்கியிருக்கும். கொடையும், முகமலர்ந்து இனிய சொற்களைப் பேசும் பண்பும், செங்கோலும், குடிகளைப் பாதுகாத்தலும் ஆகிய நான்கு குணங்களையும் உடையவனே அரசருள் குலதெய்வமாக விளங்குவான்.]

அதிகாரப்பொருள் :

பரிமேலழகர்:— அஃதாவது அவன்தன் நற்குண நற்செய்கைகள். [1]உலகபாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின், இறை என்றார். [2]"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்" என்று பெரியாரும் பணித்தார்.

மணக்குடவர்:— இதனுள், இறைமாட்சியாவது இறைவனது உண்மை கூறுதல். இவ்வதிகாரத்துள் உரைக்கின்றபொருள் அரசரை நோக்கிற்றுதலானும், அரசன் மக்களிற் சிறந்தானதலானும் இவ்வதிகாரம், முன் கூறப்பட்டது.

---

[1]எல்லாவுலகங்களும் அரசனின்றி அச்சத்தால் எப்பக்கங்களிலும் சிதறுண்டிருக்குங்கால் அவ்வெல்லாவற்றையும் காத்தற்பொருட்டு, பிரமதேவன் இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன் ஆகிய இவர்களுடைய அழிவில்லாத கூறுகளைக்கொண்டு அரசனைப்படைத்தான் என்று சுக்கிரநீதி (அத். 1. சு. 71, 72) கூறுகிறது. [2]திருவாய், பதிகம். 34, பா, 8.

பரிதியார்:— இறைமாட்சியாவது ராசநீதியைச் சொல்லுதல்.

காளிங்கர்:— இப்பால் பொருட்பகுதிதான் மலிகடல் உலகத்து மக்கட்கெல்லாம் நலிவற நடாத்தல் நன்கெனின் அதூஉம் அவ்வரசர் செய்பொருள் முதலாகக் கொண்டு, மற்று அவர்வழிப் பிறர்பொருள் அமைப்பதன் பொருட்டாக மற்று இவை அனைத்திற்கும் அன்னவர் மாட்சி முறைப்படவேண்டும் முறைமை நோக்கி இறைமாட்சிமை அறிவிக்கின்றது.

381. படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. (க)

உரைப்பகுதி :

பரிமே:— படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் - படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் என்று சொல்லப்பட்ட ஆறு அங்கங்களையும் உடையவன், அரசருள் ஏறு - அரசருள் ஏறுபோல்வான்.

ஈண்டுக் குடி என்றது அதனையுடைய நாட்டினை. கூழ் என்றது அதற்கேதுவாய பொருளை. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும் ஈண்டுச் செய்யுள்நோக்கிப் பிறழவைத்தார்; ஆறும் உடையான் என்றதனால், அவற்றுள் ஒன்றில்வழியும் அரசனீதி செல்லாது என்பது பெற்றும். வடநூலார் இவற்றிற்கு அங்கம் எனப் பெயர் கொடுத்ததூஉம் அது நோக்கி. ஏறு என்பது உபசாரவழக்கு.

இதனால் அரசற்கு அங்கமாவன இவை என்பதூஉம், இவை முற்றும் உடைமையே அவன் வெற்றிக்கு ஏது என்பதூஉம் கூறப்பட்டன.

மணக்:— படையும், குடியும், கூழும், அமைச்சும், நட்பும், அரணும் என்னும் ஆறுபொருளினையும் உடையவன் அரசருள் ஏறு போல்வான் என்றவாறு.

ஈண்டுக் குடியுள் நாடு அடங்கிற்று. இஃது அரசனுக்கு உண்டாகுவன கூறிற்று.

பழையஉரை:— படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், என்று சொல்லப்பட்ட ஆறு அங்கங்களையுமுடையவன் அரசருள் ஏறு போல்வான்.

பரிதி:— இந்த ஆறு செல்வமும் உள்ளவன், அரசர் என்னும் பசுக்களுக்கு ஒரு ரிஷபம் என்றவாறு.

காளிங்:— படையும், குடியும், கூழும், அமைச்சும், நட்பும், அரணும் என்னும் இவ் ஆறு உறுப்பினையும் உடையான் அரசருள் ஏறு என்றவாறு.

இனி, அரசருள் ஏறு எனவே இவ்வுறுப்பு ஆறில் குறைபாடுடையார் அரசரெனப்படுவாராயினும் சிறப்புடையவர் அல்லர் என்பதூஉம், அரசனை உறுப்பாகக் கொண்டு இவ் ஆறினோடும் கூட்டி ராச்சியமெல்லாம் ஒன்றாக்கி வடநூலார் கூறுமவற்றின் சில வேறுபடுத்து மாசனம் முதலாக நாட்டிற்கு இவ்வாறினையும் உறுப்பாக்கிக் கூறினர் என்பதூஉம் கொள்க. இனி இங்குச் சொன்ன இறை முதலாகிய எழுவகைப்பொருளுமே இப் பொருட்பால் நடைப்பொருள் என அறிக.

உரைவிளக்கப்பகுதி :

நுண்பொருண்மாலை:— 'அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பது முறையாயினும் ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழவைத்தது' என்பது அரசியலின்பின் அமைச்சியலும், நாடும், அரணும், பொருளும், படையும், நட்பும் என அதிகாரம் வருதலான் என்க. 'நெடுநீர்' (605) என்பதனுட் பிறழவைத்தல் அவ்வதிகாரம் நோக்கி என்க.

மேற்கோள்பகுதி :

இளம்பூரணர்:— பொருளொடு புணர்ந்த பக்கம் என்றதனுன் அறனும் இன்பமும் அன்றி, ஒழிந்த பொருளொடு பொருந்திய பக்கமும் என்றுரைப்பினும் ஆம். பொருளாவது - நாடும், பொருளும், அரணும், அமைச்சும், நட்பும், படையும் எனக்கூறி இக்குறளை மேற்கோள்காட்டுவர். (தொல். பொருள். 75.)

தெய்வச்சிலையார்:— பெயர்க்குரிமரபின் செவ்வெண் இறுதி தொகை பெற்றுவந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 285.)

நச்சினார்க்கினியர்:— நட்பு அரண் ஆறும் உடையான் என்றாற் போல்வன எல்லாம் ஒருமைப்பொருள் கூறிற்றேனும் பன்மைப்பொருளை உணர்த்தலின் மெய்ந்நிலை மயக்கம் ஆயிற்று என்பர். (தொல். சொல். 449.)

பொருளொடு புணர்ந்த பக்கத்திற்கு மேற்கோள் (தொல். பொருள். 76.)

கணவிரி என்னும் நிரையீற்றியற்சீர் நேர்பசைச்சீரொடு தளைப் பட்டமைக்கு மேற்கோள். (தொல். பொருள். செய். 75.)

சிவஞானமுனிவர்:— செய்யுளின்பம்படச் செய்தற்கண் முறை பிறழவைத்தலும் உண்டு என்பதற்கு மேற்கோள். (இலக். சூறு. பக். 62.)

சுவாமிநாததேசிகர்:— உடையான் அரசருள் ஏறு என்பது கூட்டிப் பிரித்தலுக்கு மேற்கோள். (இ. கொ. 42.)

வருமொழி நோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலை விட்டுப் பன்மைப்பாலை உணர்த்தலின் உயர்திணைச் சாதிஒருமையாயிற்று என்பர் (ஷை. 130.)

யா - வி:— உயிர் மிக்குவந்த செய்யுளுக்கு மேற்கோள். (சூ. 2.)

ஒப்புமைப்பகுதி :

"பத்திமை சான்ற படையும் பலர் தொகினும்
எத்துணையும் அஞ்சா எயிலரணும் - வைத்தமைந்த
எண்ணின் உலவா விழுநிதியும் இம்மூன்றும்
மண்ணாளும் வேந்தர்க் குறுப்பு." —திரி. 100.

"கோலஞ்சி வாழும் குடியும் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும் - வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும் இம்மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்." ஷை 33.

"தாழுஞ்செய லின்றொரு மன்னவன் தாங்க வேண்டுஞ்
சூழும் குடியும் முதலாயின கொள்கைத் தேனும்
சூழும் படைமன்னவன் தோளிணைக் காவ லின்றி
வாழுந்தகைத் தன்றிந்த வையகம் என்று சொன்னார்."
—பெரிய. மூர்த்தி. 28.

"உற்றவூ றஞ்சாப் படையும் உயர்குடியும்
உற்றுலவாப் பைங்கூழும் முன்வருதல் சேமிக்கும்
பெற்றி அமைச்சும் உதவும் பெருந்துணையும்
கொற்ற அரணும் உடையானே கோமானே." —பிரமோத். பத்திரா. 21.

"உரைசெயும் அறத்தினாற்றால் ஒருகுடை நிழற்ற மூன்னீர்த்
தரைமுழு தாளவேண்டின் தகைபெறும் அமைச்சு நாடு
புரையறும் அரணே மிக்க பொருள் படை நட்பென்றாறும்
வரைசெயப் படாத யாக்கை உறுப்பென மதித்துக்கோடி."

—விநா. அரசி. 42.

"படைகுடி கூழமைச்சுப் பகர்ந்திடு நீதி
நட்பரண் இவற்றின் நயந்திடும் சிறப்பினோன்."

—சரபேந்திர 8: 25-26.

"அரசியல் அரசு, அமைச்சு, நட்பு, பொருள், நாடு, மதில், படை என்னும் ஏழு உறுப்புக்களை உடைத்து. அவற்றுள் அரசு தலையாக மதிக்கப்படுவது. அமைச்சு கண்ணாகவும், நட்பு செவியாகவும், பொருள் முகமாகவும், படை மனமாகவும், மதில் கையாகவும், நாடு காலாகவும் இவ்வாறு அரசியல் உறுப்புக்கள் எண்ணப் படுவனவாம்."

—சுக்கிர. அத். 1 சு. 61, 62.

"ஆறும் மூன்றும் அடுக்கா யிருந்தால் அறியாப்பிள்ளையும் அரசாளும்". -பழ.

குறிப்பு:

இவற்றுள் படையும் அமைச்சும் நட்பும் ஆகிய மூன்றும் அரசனைத் தேடிக் கொள்ளத்தக்கன. குடியும் கூழும் தன்முயற்சியானும் நாட்டு வளப்பத்தானும் மழை முதலிய தெய்வத்துணையானும் அமைவன. அரண்களில் மலையும் காடும் கடலும் முதலாயின இயற்கையின் அமைவன. அகழும் மதிலும் முதலாயின இயற்கையின் அமைவனவும் செயற்கையின் ஆக்குவனவுமாகிய இருநிலையும் உடையன. நாடு என்னாது குடியென்றது குடிகளில்லாத நாட்டிற்கு அரசனாக இருந்து பயனின்மையின் இடப்பெயராகிய நாட்டைக் குறியாது நிகழ்பொருளாகிய குடியான் உணர்த்தினார் என்க. 'பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க' என்றாற் போலக் கூழ் என்பது உணவிற்குப் பெயராகலின் பொன்னும் மணியும் முதலாகிய பொருள்களினும் உணவு சிறந்தமையின் பொருள் என்னாது கூழ் என்று பொருளைக்குறித்தார்.

ஆறும் என்னும் முற்றும்மையை யெச்சவும்மையாகக் கொண்டு இயற்கையின் அமைவன ஓர் அரசற்குக் குறையினும் அவன் அரசனாதற்கு இழுக்கில்லையாதலின் அரசருள் ஏறு ஆதற்கு ஆறும் வேண்டும் என்றவாறும். ஆதலால் செயத்தகும் அங்கமுடையார் அரசரும், அவற்றோடு இயற்கையங்கமும் அமைந்தார் அவருள் ஏறுமாவார் என்ற நயம் காண்க.

—தொகுப்பாசிரியர்

382. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு.* (உ)

உரைப்பகுதி:

பரிமே:— வேந்தற்கு இயல்பு - அரசனுக்கு இயல்பாவது, அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை - திண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமும் என்னும் இந்நான்கு குணமும் இடைவிடாது நிற்றல்.

ஊக்கம் வினைசெய்தற்கண் மனவெழுச்சி. இவற்றுள் அறிவு ஆறங்கத்திற்கும் உரித்து; ஈகை படைக்குரித்து; ஏனைய வினைக்குரிய. உயிர்க்குணங்களுள் ஒன்று தோன்ற ஏனைய அடங்கிவரும். அவற்றுள் இவை அடங்கின், அரசற்குக் கெடுவன பலவாமாகலின், இவை எப்பொழுதும் தோன்றி நிற்றல் இயல்பாக வேண்டும் என்பார் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு என்றார்.

மணக்:— அஞ்சாமையும், ஈகையும், அறிவுடைமையும், ஊக்கமுடைமையும் என்னும் இந்நான்கு குணமும் ஒழியாமை வேந்தனுக்கு இயல்பு எ - று.

பரிப்:— இவை நான்கும் இயற்கையாகவேண்டும் என்றது.

பரிதி:— திடபுத்தியும் கொடையும் விசாரமும் அறிவுடைமையும் இந்த நான்கும் உள்ளவன் அரசன் எ - று.

காளிங்:— அஞ்சாமை என்பது தறுகணண்மை. ஈண்டு ஈகை என்பது கீழ்ச்சொன்ன இல்லறத்து இயல்பாகிய கொடைநெறிக்கு அடங்காது தனது பெரும்பொருட்கும் பெருந்தன்மைக்கும் ஏற்குமாறு மற்று அந்தணர் முதலாக, இழிகுலத்தாராகிய புலையர் ஈறாக அனைவர்க்கும் வரம்பறவழங்கும் வண்மை என அறிக. அறிவு என்பது மற்று இத்தகுதியும், அல்லதும் தெரிந்து உணரும் உணர்வு என்றவாறு. ஊக்கம் என்பது உள்ளமானது மேம்படக்கருதும் மேற்கோள் என்றவாறு. எஞ்சாமை என்பது ஒழியாமை என்றது; இவை நான்கும் எஞ்ஞான்றும் இடைவிடாது இருத்தலே அரசருக்கு மரபு என்றவாறு.

---

*'இயல்வு' யா - வி பாடம்.

மேற்கோள்பகுதி:

யா - வி:— 'இயல்வு எனப்பாடங்கொண்டு முற்றுகர ஈற்றன் முடிந்தமைக்கு மேற்கோள் காட்டுவர். (சூ. 57.)

ஒப்புமைப்பகுதி:

"அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்" —குறள் 497.

"அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு" —குறள் 863.

"வினையினஞ் சாமை நிற்றல் வினையருக் களித்தல் செய்யும்
வினையிடை மனமேற் சேறல் விளங்கிய அறிவு .... வேந்தருக்கியல்பு"
—விநா, அரசி. 43.

"அஞ்சிய அரசன் தஞ்சம் ஆகான்." —பழ.

*"தீயோரை யொறுத்தலும், ஈதலும், குடிகளைக் காத்தலும், இராசசூய முதலிய வேட்டலும், அறநெறி பிறழாது பொருளீட்டலும், பிற அரசர்களைத் திறைதரச் செய்தலும், பகைவரைத் தொலைத்தலும், மேன்மேலும் நிலப்பகுதி கோடலும் ஆகிய இவ்வெட்டும், அரசர்க்குரிய தொழில்களாம்."

—சுக்கிரநீதி. அத் 1-சு, 124, 125.

குறிப்பு:

அஞ்சாமையாவது மாற்றார் திறங்கண்டும் அஞ்சாமை. இதனையே 'வினையின் அஞ்சாமைநிற்றல்' என்கின்றது விநாயகபுராணம். ஈகை - படைகட்குக் கொடுத்தல். புகழ்வேண்டிக் கொடுத்தலாகிய கொடையைப் பிற்கூறுவாராதலின் இது படைஞர்க்கு ஊக்கமளிக்கக் கொடுப்பதாயிற்று. இல்லறவியலுள் கூறிய வறியார்க்கு ஈவதாகிய ஈகை, புகழும் புண்ணியமும் வேண்டி ஈவதாதலின் வெற்றியாகிய பயன் கருதி ஈயும் இதனின் வேறாயிற்று. அறிவு - ஆறங்கங்களையும் வைத்து ஆளும் ஆட்சிக்கண்ணும், செய்யும் சூழ்ச்சிக்கண்ணும் நிகழ்வது. நுண்பொருண்மாலையுடையார் கருத்துப்படி 'இந்நான்கும்' என்ற உம்மை எதிரது தழீஇயஎச்சவும்மை.

*இவ்வெட்டுள் தீயோரை யொறுத்தலும் திறைதரச் செய்தலும் பகை அழித்தலும் ஆகிய மூன்றும் அஞ்சாமையிலும், ஈதல் ஈகையிலும், வேட்டலும் அறநெறிப் பொருளீட்டலும் குடிகளைக்காத்தலும் ஆகிய மூன்றும் அறிவிலும், நிலப் பகுதி கோடல் ஊக்கத்திலும் அடங்குமாறு காண்க.

—தொகுப்பாசிரியர்.

383. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் *பவற்கு. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— நிலன் ஆள்பவற்கு - நிலத்தினையாளும் திருவுடையாற்கு, தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா - அக்காரியங்களில் விரைவுடைமையும், அவையறிதற்கு ஏற்ற கல்வியுடைமையும், ஆண்மையுடைமையுமாகிய இம்மூன்று குணமும் ஒருகாலும் நீங்கா.

கல்வியது கூறுபாடு [2]முன்னர்க் கூறப்படும். ஆண்மையாவது ஒன்றனையும் பாராது கடிதிற் செய்வது ஆகலின் அஃது ஈண்டு உபசார வழக்கால் துணிவு எனப்பட்டது. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. இவற்றுள் கல்வி ஆறங்கத்திற்கும் உரித்து; ஏனைய வினைக்கு உரிய. நீங்கா என்பதற்கு மேல் எஞ்சாமைக்கு உரைத்தாங்கு உரைக்க.

மணக்:— மடியின்மையும், கல்வியுடைமையும், ஒருபொருளை ஆராய்ந்து துணிதலுடைமையும் என்று சொல்லப்பட்ட இம்மூன்றும் பூமியை ஆள்பவனுக்கு நீங்காமல் வேண்டும் எ - று.

பரிப்:— இது முதலாகச் செயற்கைக் குணம் கூறுகின்றார். உலகத்துக் குற்றமும் குணமும் ஆராயுங்கால் மயங்ககாணாது உண்மை ஆராய்ந்து துணிதல் ஒருதலையாக நிலனாள்பவர்க்கு வேண்டும் என்பதனானும், அதுதான் கல்வியானல்லது ஆராய்தல் அரிது ஆகலானும், அக்கல்வி மடியின்மையானல்லது வாராது ஆகலானும், சிறப்பு நோக்கி, முற்பட இம்முறையே கூறினர்.

பரிதி:— ஆலசிய புத்தியின்மையும், கல்வியுடைமையும், திடமான புத்தியும் இந்த மூன்று காரியமும் ராசாக்கள் செல்வம் எ - று.

காளிங்:— விரையுங்கருமம் தாழாது இயற்றுகையும், அருமறை முதலாக அறநீதி முடிவாக இங்ஙனம் தாம் கற்கத்தகுமவற்றைக் கற்கும் கல்வியும், தாம் செய்யும் கருமத்து மனத்திட்பமும் இம்மூன்றும் ஒழியாதுசெலுத்துமதுவே மண் ஆளும் வேந்தர்க்கு இயல்பு எ - று.

---

* 'பவர்க்கு' எனவும் பாடம். [2]'கல்வி' அதிகாரத்து விளக்கத்தில் காண்க.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மூற்கவிக்கண் நான்கையும் கூட்டியதால் மூன்றும் என்பது முற்றும்மையாகாது, இறந்தது தழீஇய எச்சவும்மையாயிற்று.

ஒப்புமைப்பகுதி:

"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை." —குறள், 672.

"வல்லே வினையினை முடித்தல் ஆண்மை." —விநா, அரசி, 43.

"தூங்கினவன் கன்று கடாக்கன்று" —பழ.

குறிப்பு:

சென்ற குறளில் 'இயல்பு' (382) என்றதற்கும், இக்குறளில் 'நீங்கா' என்றதற்கும் சிறந்ததோர் நயம் இருத்தல் காண்க. அஞ்சாமை, கொடை, அறிவு, ஊக்கம் முதலியன உயிர்க்குணமாதலை 'அறிவருளாசை அச்சம் மானம்' என்றசூத்திரம் நன்கு விளக்கும். தூங்காமை முதலியன தொழிற்குணமாதலை 'துய்த்தல் துஞ்சல், தொழுதல், அணிதல் உய்த்தலாதி உடலுயிர்த் தொழிற்குணம்' என்ற சூத்திரம் நன்கு விளக்கும். ஆதலால் உயிர்க்குணமாகிய அஞ்சாமை முதலியன வேந்தற்கு இயல்பு என்றும், தொழிற்குணமாகிய தூங்காமை முதலிய மூன்றும் நீங்கா என்றும் ஆசிரியர் கூறினர். மேலும் தொழிற்குணங்கள் மடியானுதல், அறியாமையானுதல் இவனை யறியாமலே இவனைவிட்டு நழுவுமன்றே! அதுவும் ஆகாது என்பார் நீங்கா என்றார். அரசனால் நீக்கப்பெறு என்னுது மூன்றும் நீங்கா எனக் குணங்களை வினைமுதலாக்கிக் கூறினர் அவற்றின் இன்றியமையாமை விளக்க. 'இதை முதலாகச் செயற்கைக்குணம் கூறுகின்றார்' என்று பரிப்பெருமாளும் கூறல் காண்க.

—தொகுப்பாசிரியர்.

384. அறன்இழுக்கா தல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடைய தரசு. (ச)

உரைப்பகுதி :

பரிமே:— அறன் இழுக்காது - தனக்கு ஓதிய அறத்தின் வழுவாது ஒழுகி, அல்லவை நீக்கி - அறனல்லவை தன் நாட்டின்கண்ணும் நிகழாமல் கடிந்து, மறன் இழுக்கா மானம் உடையது அரசு - வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினை உடையான் அரசன்.

அவ்வறமாவது ஓதல் வேட்டல் ஈதல் என்னும் பொதுத்தொழிலினும், படைக்கலம் பயிறல் பல்லுயிரோம்பல் பகைத்திறந்தெறுதல் என்னும் சிறப்புத்தொழிலினும், வழுவாது நிற்றல். [1]"மாண்ட, அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்பதனால் இவ்வறம் பொருட்குக் காரணமாதல் அறிக. அல்லவை கொலை களவு முதலாயின. குற்றமாய மானத்தின் நீக்குதற்கு, மறன் இழுக்கா மானம் என்றார்; அஃதாவது,

[2]"வீறின்மையின் விலங்காம்என மதவேழமும் எறியான்
ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சில்என் றெறியான்
மாறன்மையின் மறம்வாடும்என் றிளையாரையும் எறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான்அயில்உழவன்"

எனவும்,

[3]"அழியுநர் புறக்கொடை அயில்வேல் ஓச்சான்"

எனவும் சொல்லப்படுவது. அரசு அரசனது தன்மை; அஃது உபசார வழக்கால் அவன்றன்மேல் நின்றது.

மணக்:— அறத்தில் தப்பாமல் ஒழுகி, அறம் அல்லாத காம வெகுளியைக் கடிந்து, மறத்தில் தப்பாத மானத்தை உடையவன் அரசன் எ - று.

பரிப்:— மானமும் கடிய வேண்டுதலின் மறத்தில் தப்பாத மானம் வேண்டும் என்றார். இஃது ஒழுக்கமும் நிலைமையும் வேண்டும் என்றது.

பரிதி:— தன்மநீதி குன்றாமல், பாவமான காரியத்தை நீக்கி, வெற்றிப்பாட்டினால் மானமுள்ளவன் அரசன் எ - று.

காளிங்:— அளித்தற்குத் தகுவதாகிய அறநெறிப்பொருளை வழுவாது செய்து, அதற்குத் தகுவதாகிய அறம் அல்லனவற்றையும் கடிந்து, மற்று இதற்கு ஏற்ற மறத்தினையும் வழுவாது ஏனை அறநெறிப் பொருட்கு ஏற்ற மானத்தை உடையவன் யாவன்? மற்று அவனே அரசன் ஆவான் எ - று.

---

[1] புறம், 55. [2] சீவக, 2261. [3] பு - வெ, 55 'வாளோச்சான்' எனவும் பாடம்.

உரைவிளக்கப்பகுதி :

நுண் :— அரசு-அரசனது தன்மை; உரையுள் 'தாழ்வின்மையினை உடையது அரசு' என்னாது 'உடையானரசன்' என உரைத்ததால் உபசார வழக்காய் அவன்மேல் நின்றது. மேல் 'உடையதரசருள் ஏறு' என்னாது, 'உடையான் அரசருள் ஏறு', (381) என்றதால் ஆகுபெயராக்காது உபசார வழக்கு என்றார். இனி, ஒற்றும் வேந்தும் 'குடிமை ஆண்மை' (தொல் சொல், 57) என்னுஞ் சூத்திர விதியால் அஃறிணைக்கண் வந்த உயர்திணைச் சொல். அவை, 'நின்றாங்கிசைத்தல்' (தொல். சொல். 59) என்னும் விதியால் உரையுள் 'வேந்தன் கொடியன்' (551) 'ஒற்றறுவான்' (584) எனவருவன காண்க. இனி, அரசும், அமைச்சும், தூதும் அன்ன.

ஒப்புமைப்பகுதி :

" தேவர் நிலைகடவார் மேலோர் திறம்பிழையார்
நாவின் இரண்டுரையார் நன்கல் லவைபுரியார்
காவன் முறைதிறம்பார் காமச் செயல்பெருக்கார்
பூவலயங் காவல் புரியும் புரவலரே. "

—பிரமோத். பத்திரா. 20.

" வினையின் அஞ்சாமை நிற்றல் வினையருக் களித்தல் செய்யும்
வினையிடை மனமேற்சேறல் விளங்கிய அறிவு வல்லே
வினையினை முடித்தல் ஆண்மை வெங்கோலை யாதிநீக்கல்
வினைவளர் மானம் மற்றும் வேந்தருக்கு இயல்பு மைந்தா. "

—விநா, அரசி, 43.

"வீரங்கெட்டவன் சேரனுவானா?" —பழ.

குறிப்பு:

அறன் மறன் என்பன ஒன்றற்கு ஒன்று மறுதலைச் சொல்லாய் நல்வினை தீவினை என்னும் பொருட்டாதலை ஓர்ந்து, இங்கே கூறிய மறன் அங்ஙன மாகாது வீரம் என்ற பொருளதாதலை உணர்த்த 'அல்லவை நீக்கி' என்றதை இடையிற் பெய்து தீவினைகளைக் களைந்தமை உணர்க. சொல்லில் தளராமையும் ஒழுக்கத்தில் தளராமையும் முதலாக மக்கள் நிலைக்கு ஏற்ப மானம் பலவாயினும் அரசற்குரிய மானம் வீரத்திற்றவறுவழியேசிறந்தது என வற்புறுப்பார் மறனிழுக்கா மானம் என்றார். இழுக்கா மானம் பரிமேலழகர் உரையிற் காட்டப்பெற்ற சிந்தா மணிப் பாடலால் தெளிக.

—தொகுப்பாசிரியர்

385. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— இயற்றலும் - தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேன்மேல் உளவாக்கலும், ஈட்டலும் - அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித் தொகுத்தலும், காத்தலும் - தொகுத்தவற்றைப் பிறர்கொள்ளாமல் காத்தலும், காத்த வகுத்தலும் - காத்தவற்றை அறம்பொருள் இன்பங்களின் பொருட்டு விடுத்தலும், வல்லது அரசு - வல்லவனே அரசன்.

ஈட்டல், காத்தல், வகுத்தல் என்றவற்றிற்கேற்ப இயற்றல் என்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன மணி, பொன், நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன பகைவரை அழித்தலும், திறைகோடலும், தன் நாடு தலையளித்தலும் முதலாயின. பிறர் என்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினாரை. கடவுளர் அந்தணர் வறியோர் என்றிவர்க்கும் புகழிற்கும் கொடுத்தலை அறப்பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்றிவற்றிற்கும், பகையொடு கூடலின் பிரிக்கப்படுவார்க்கும், தன்னிற் பிரிதலின் கூட்டப்படுவார்க்கும் கொடுத்தலைப் பொருட்பொருட்டாகவும், மண்டபம் வாவி செய்குன்று இளமரக்கா முதலிய செய்தற்கும், ஐம்புலன்களான் நுகர்வனவற்றிற்கும் கொடுத்தலை இன்பப்பொருட்டாகவும் கொள்க. இயற்றல் முதலிய தவறுமறச்செய்தல் அரிதாகலின், வல்லது என்றார். இவை நான்குபாட்டானும் மாட்சியே கூறப்பட்டது.

மணக்:— பொருள் வரும் வழி இயற்றலும், அதனை அழியாமல் ஈட்டலும், அதனைச் சோர்வுபடாமல் காத்தலும், காத்த அதனை வேண்டுவனவற்றிற்குப் பகுத்தலும் வல்லவன் அரசனாவான் எ - று.

பகுத்தல் - யானை குதிரை முதலிய படைக்குக் கொடுத்து, அவையிற்றை உண்டாக்குதல். இது பண்டாரம் கூறுமாறு கூறிற்று.

பரிப்:— பகுத்தலாவது யானை, குதிரை, படைக்குக் கொடுத்து அவையிற்றை உண்டாக்குதல், அரண் செய்தல், படைக்கலன்கள் பண்ணுதல் முதலாயினவற்றுக்குக் கொடுத்தல். இவை எல்லாம் பண்டாரம் ஆதலின் ஒருபொருளைப் பலவாக வகுத்தல் என்றார்.

பரிதி:— பொருளைத் தேடுதலும், பொருளை வளர்த்தலும், பொருளைக் காத்தலும், பொருளை வழங்குதலும் வல்லவன் அரசன் எ - று.

காளிங்.— அரசு நெறி வழுவாமல் ஆறில் ஒன்றாகிய அறநெறிப் பொருளும், மற்று இங்ஙனம் வரும் வழி அறிந்து உள ஆக்குதலும், இங்ஙனம் கூடிய பொருளைச் சோர்வு படாமல் தமது ஆணையால் பாது காத்தலும், மற்று இங்ஙனம் காத்த பொருளை அகத்துளார்க்கும் புறத் துளார்க்கும் வகுக்கும் நெறி வழுவாமல் வகுத்தலும் செய்ய வல்லது யாது? மற்று அதுவே அரசு ஆவது எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— இயற்றல் - பொருள்வரும் வழிகளை மேன்மேல் உள வாக்கல். மற்ற மூன்றற்கும் அப்பொருளே செயப்படுபொருளாக வருமாத லால் ஈட்டல், காத்தல், வகுத்தல் என்பவைக்கு ஏற்ப, இயற்றல் என்ப தற்குஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது என்றார். பதவுரையுள் 'அங்ஙனம் வந்தவற்றை' என்றதனால் அறிக. இனிச் செயப்படுபொருள் வருவிப்பது 'சென்றவிடத்தாற் செலவிடா' (422) 'சுழலும் இசைவேண்டி' (777) என்ற குறள் உரைகளிலும் காண்க.

ஒப்புமைப்பகுதி:

" செருவின் ஒட்டலரைக் கொன்று திறைகொண்டு நாடுகாத்துப்
பொருளினை ஈட்டிக் கள்வர் புல்லலர் சுற்றமாதி
பருகுதல் இலாமை காத்துப் பயிலற மாதி மூன்றின்
மருவுற விடுத்துச் செங்கோல் வளர்ப்பது மாட்சியாமே. "

—விநா, அரசி. 45.

குறிப்பு:

இயற்றல் முதலியன ஒன்றற்கொன்று முறையே காரணகாரியத் தொடர் புடையன.

'ஈட்டலுந் துன்பம் ஈட்டிய ஒண்பொருளைக் காத்தலுமாங்கே கடுந்துன்பம்' என்பவாதலின். இயற்றல் முதலிய நான்கும் ஒன்றின் ஒன்று ஆற்றுதற்கரிய ஆதலின் அவற்றை முயன்று முடிப்பவனே அரசன் என்பார் வல்லது என்றார். வல்லது என்றது அவற்றின் அருமையை விளக்கிற்று. அரசு என்ற சொல்லுக்கு ஏற்ப வல்லது என அஃறிணை முடிபு ஏற்றது. —தொகுப்பாசிரியர்.

386. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். (கா)

உரைப்பகுதி:

பரிமே:— காட்சிக்கு எளியன் - *முறை வேண்டினர்க்கும் குறை வேண்டினர்க்கும் காண்டற்கு எளியனாய், கடுஞ்சொல்லன் அல்லனேல் - யாவர்மாட்டும் கடுஞ்சொல்லன் அல்லனுமாயின், மன்னன் நிலம் மீக்கூறும் - அம்மன்னனது நிலத்தை எல்லா நிலங்களினும் உயர்த்துக்கூறும் உலகம்.

முறைவேண்டினர், வலியரால் நலிவெய்தினர். குறைவேண்டினர், வறுமையுற்று இரந்தார். காண்டற்கு எளிமையாவது பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடையனாயிருத்தல். கடுஞ்சொல் கேள்வியினும் வினையினும் கடியவாயசொல். நிலத்தை மீக்கூறும் எனவே, மன்னனை மீக்கூறுதல் சொல்லவேண்டாவாயிற்று. மீக்கூறுதல் இவன் காக்கின்ற நாடு, பசி பிணி பகை முதலிய இன்றி, யாவர்க்கும் பேரின்பம் தருதலின் தேவருலகினும் நன்று என்றல். உலகம் என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது.

மணக்:— காண்கைக்கு எளியனாய்க் கடுஞ்சொல் கூறுதலும் அல்லனாயின், அம்மன்னனை உலகத்தார் உயர்த்துக் கூறுவர் எ - று

இது மன்னன் உலகத்தார்மாட்டு ஒழுகும் திறம் கூறிற்று.

பரிதி:— குடியானபேர் வந்தால் எளிதாகக் காணவும், இன்சொல் சொல்லவும் வல்லவனாகில் அவனை மிகுதியாகச் சொல்லும் வாறு எ-று.

காளிங்:— வேண்டுநர் வேண்டுழிக் காட்சிக்கு எளியனுமாய் மரபுடைய மக்கட்கு இன்சொலாளனும் ஆவானாகின், மற்று அம் மன்னனையே இவ்வுலகத்து வாழ்வார் யாவரும் புகழ்ந்துரைப்பார் எ-று.

ஒப்புமைப்பகுதி:

“ இன்று கண்டாங்குக் காண்குவம் என்றும்
இன்சொல் எண்பதத்தை யாகுமதி பெரும.” —புறம் 40: 8-9.

*‘முறைவேண்டுபொழுதில் பதன் எளியோர்’ - புறம் 35. 15. ‘முறை வேண்டுநர்க்கும் குறைவேண்டுநர்க்கும் வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கருளி’ - பெரும்பாண் - 443, 444.

"அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து" —குறள். 565.

"கனியமுதம் அன்னகரு ணைக்குறையுள் காட்சிக்கு
எளியன்வட சொற்கடல் தமிழ்க்கடல் இகந்தோன்."

—திருவிளை. நடா- அவ. 2.

"* * தங்கள் விழுக்குறை முறை சொல்வார்க்குத்
தடையறக் காட்சி நல்கித் தண்ணிய இன்சொல் காட்டி"

—விநா, அரசி. 44.

* முதுமொழிவெண்பாக்கள்:

"மன்னர்க்குச் சீமை வளம்பெறவென் றுலெளிதோ
செந்நெல்சேர் கோவைத் தினகரா - உன்னைப்போல்" —தினகர. 42.

"இறைஎளிதின் றியார்க்கும் இனியசொல்ல லாலே
மதுரை மதுரைஎன்பார் மாந்தர் - அதுஅன்றோ." —முதுமொழி. 64.

குறிப்பு:

காட்சிக்கெளிமை அஞ்சாது அணுகுதற்கும், கடுஞ்சொல்லின்மை அணுகிய குடிகள் அகலாது மேவுதற்கும் வாய்ப்பாக இருத்தலின் மீக்கூறல் நிகழ்வதாயிற்று. காட்சிக்கினியனாய் இன்சொல்லினனாய அரசனை நிலம் புகழும் என்பதும் ஆம். இவ்வுரையில் "மீக்கூறும்" என்பதற்கு எழுவாய் வருவித்துரைக்கவேண்டாதாயிற்று.

பரிமேலழகர் ஒழிந்த ஏனையாசிரியர்கள் காட்சிக் கெளியனாய் இன்சொல் உடையனாகிய மன்னனை உலகம் புகழும் எனக்கொண்டனர். பரிதியார் காட்சிக்கெளிய அரசனை வானுலகம் புகழும் என்றார். பரிமேலழகர் மட்டும் அத்தகைய அரசனுட்டை உலகம் புகழும் என உரைவகுத்து, நிலம் புகழும் எனவே அரசன்புகழ் கூறவேண்டா தாயிற்று என்றார். புகழ் இகழினைக் கேட்டு, களித்தும் திருந்தியும் நடப்பான் அறிவுடைப் பொருளாகிய அரசனே யாதலின் நிலம் புகழப்படும் எனக்கூறல் ஆராயத்தக்கது.

—தொகுப்பாசிரியர்.

---

*இப்பகுதியில் காட்டப்பெறும் பாடல்கட்கு அவ்வக் குறள்களையே ஈற்றடிகளாக அமைத்து வாசித்துக்கொள்க.

387. இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. (எ)

உரைப்பகுதி :

பரிமே— இன்சொலால் ஈத்து அளிக்க வல்லாற்கு - இனிய சொல்லுடனே ஈதலைச்செய்து அளிக்கவல்ல அரசனுக்கு, இவ்வுலகு தன் சொலால் தான் கண்டனைத்து - இவ்வுலகம் தன் புகழோடு மேவித் தான் கருதிய அளவிற்றும்.

இன்சொல், கேள்வியினும் வினையினும் இனியவாய சொல். ஈதல், வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல். அளித்தல், தன்பரிவாரத்தானும் பகைவரானும் நலிவுபடாமல் காத்தல். இவை அரியவாகலின் வல்லாற்கு என்றும், அவன் மண்முழுதும் ஆளுமாகலின் இவ்வுலகு என்றும் கூறினர். கருதிய அளவிற்றுதல் கருதியபொருளெல்லாம் சுரத்தல்.

மணக்:— இனிய சொல்லோடே கொடுத்துத் தலையளி செய்ய வல்ல அரசனுக்குத் தன் ஏவலாலே இவ்வுலகம் தான் கண்டாற்போலும் தன்வசத்தே கிடக்கும் எ - று.

பரிப்:— தலையளியாவது வரிசை கொடுத்தல். அவ்வரிசை பெற்றவர் அரசனுக்கு நல்லர் ஆதலானே, தாம் இருந்த இடம் எல்லாம் அரசன் இருந்தானாகக் கொண்டு இராச காரியத்தைத் தப்பாமல் செய்வர்; ஆதலால், தான் கண்டால் ஒக்கும் என்றது. இஃது அமாத்தியர்க்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று.

பரிதி:— இன்சொல்லாலே குடியைக் காப்பானாகில் தன்சொல்லினாலே தானே உலகத்தைப் படைத்துத் தானே உலகத்தைக் காத்ததற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— இன்சொல்லாலே குடிகளைக்காப்பாற்றிப் பின் வந்து எய்தும் மக்கள் யாவர்க்கும் கீழ்ச்சொன்ன முறைமையானே இன்சொல்லால் சில வழங்குதலேயுமன்றி மற்றுத் தன் நெஞ்சினாலும் தண்ணளி செய்ய வல்ல அரசர்க்கு இங்ஙனம் சொல்லுகின்ற தனது சொல்நலத்தினாலே தான்படைத்த அத்தன்மைத்து இவ்வுலகு. என்னவே மற்று இவ்வுலகில் வாழ்வார் யாவரும் தன்வசத்து ஒழுகுவர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வான்எனில்
அனைய மன்னற்கு அழிவும்உண் டாங்கொலோ."

—கம்ப. மந்தரை. 18

குறிப்பு:

வாய் வாழைப்பழம் கை கருணைக்கிழங்காக இருந்தால் பயன் படாது ஆதலின் இனிய சொல் மட்டும் போதாது ஈகையும் வேண்டும் என்பதை விளக்கியவாறு. தான்கண்டனைத்து என்றது 'குலாலன் திகிரிவைத்த பசுமட்குரூஉத் திரள் போல' அரசன் எண்ணத்தின்வழி இயங்குவது உலகம் என்பதாம். வல்லார்க்கு என்றது ஈபவர் கொடைச் செருக்கால் - அல்லது கொடையுரிமையால் கொடுஞ்சொல்லும், கொடுஞ்செயலும் உடையராவது மக்களியல்பு அதனையும் மாற்றும் வன்மையுடையாற்கு என்பது விளக்கியவாறு, சொல்லால் என்றது செயலும் மிகை யென்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

388. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறைஎன்று வைக்கப் படும். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— *முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் - தான் முறை செய்து பிறர் நலியாமல் காத்தலையும் செய்யும் அரசன், மக்கட்கு இறை என்று வைக்கப்படும் - பிறப்பான் மகனேயாயினும், செயலான் மக்கட்குக் கடவுள் என்று வேறுவைக்கப்படும்.*

முறை அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறி. பிறர் என்றது மேற்சொல்லியாரை. வேறுவைத்தல் மக்களிற்பிரித்து உயர்த்துவைத்தல்.

மணக்:— *குற்றஞ் செய்தாரை அதற்குச் செய்யும் முறைமை தப்பாமற்செய்து, எல்லாவுயிரையும் காத்தலைச் செய்கின்ற அரசன், மனிதர்க்கு நாயகன் என்று எண்ணப்படுவான் எ - று.*

பரிதி:— *செங்கோல் முறைமைசெய்து உலகங்காக்கும் அரசன் உலகத்தை இரட்சிக்கிற பரமேஸ்வரன் என்று எண்ணப்படும் எ - று.*

காளிங்:— அளித்தலும் செறுத்தலும் ஆகிய செய்தியின் கூறுபாடு அறிந்து, மற்று அவரவர்க்குத் தக்காங்குச் செய்புமுறை வழுவாமல் செய்து, மற்று இங்ஙனம் காத்தலைப் புரியும் மன்னவன் யாவன்? அவன் உலகத்து மக்கள் யாவர்க்கும் இறையவன் என்று முன் வைத்து எண்ணப்படும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும் - அறவோர்க்கு
அடிகளே தெய்வம் அனைவோர்க்கும் தெய்வம்
இலமுகப் பைம்பூண் இறை." —நீதிநெறி. 27.

முதுமொழிவெண்பாக்கள்:

"பெற்றவைக்கென் போலிரண்டு பேரிலொரு வன்பிழைத்தால்
சிற்றவைக்காம் என்ருன் சிவசிவா - உற்ற" —சிவசிவ. 39.

"ஒன்று மறித்தான் உரோணிநாப் பண்சனியை
என்றும் புகாமல் இரங்கேசா - நன்று" —இரங். 39.

"உற்றபுற வும்புரப்பான் ஓங்குசிபி தன்உடலம்
முற்றும்அரிந் தீந்தான் முருகேசா - பற்றும்" —முருகேசர். 39.

குறிப்பு:

முறை செய்தல் - இவர் நண்பர் இவர் பகைவர் என்பன போன்ற வேற்றுமை பாராட்டாது ஒப்பநாடி நீதி வழங்கல். காப்பாற்றுதல் - தன்னால், தன் பரிசனத்தால், பகைவரால், கள்வரால், விலங்கால் தீமை நிகழவொட்டாது பாது காத்தல். இறை - அரசன். ஆகவே பிறப்பால் மன்னனாயினும் மக்கட்கு மன்னனாவது முறையும், காத்தலும் பொருந்தியபோதுதான் என்பது விளக்கியவாறு.

—தொகுப்பாசிரியர்.

389. செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— சொல் செவி கைப்பப் பொறுக்கும் பண்பு உடை வேந்தன் - இடிக்கும் துணையாயினார் சொற்களைத் தன்செவி பொறாதாகவும், விளைவு நோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது, கவிகைக்கீழ் தங்கும் உலகு - குடை நிழற்கண்ணே தங்கும் உலகம்.

செவிகைப்ப என்றதற்கு ஏற்ப இடிக்கும் துணையார் என்பது வருவிக்கப்பட்டது. நாவின் புலத்தைச் செவிமேல் ஏற்றிக் கைப்ப என்றார். பண்புடைமை, விசேட உணர்வினனாதல். அறநீதிகளில் தவறாமையின் மண்முழுதும் தானேயாளும் என்பதாம்.

மணக்:— தன் செவி வெறுக்கும்படியாகப் பிறர்செய்த குற்றங்களைக் கேட்டு வைத்தும், அதனைப் பொறுக்கவல்ல குணமுடைய வேந்தனது குடைக்கீழே உலகு தங்கும் எ - று.

சொற்பொறுக்கும் என்பதற்குப் புரோகிதர் தன்னிடத்துச் சொல்லுஞ் சொற்களைப் பொறுக்கவல்ல என்பாரும் உளர்.

பரிப்:— வேறு ஒரு நிழல் தேடாது என்று ஆயிற்று. இஃது அமாத்தியர் குற்றம் செய்தார் என்று பலரும் சொல்லுங்கால், பலவாற்றானும் பொறுக்க வேண்டும் என்றது.

பரிதி:— பொறுத்தற்கரிய சொல்லைக் குடியானபேர் வாசலிற் பதினெட்டுப் பேர் சொன்னாலும் குற்றம் பாராட்டாமல் பொறுப்பான் குடைநிழலிலே இராச்சியம் அடங்கும் எ - று.

காளிங்:— நெறி அல்ல செய்வோர் ஆகிய மறமக்களும், கொடுங்கோன்மை செய்வோர் ஆகிய மற மன்னரும், தனது செவிகைப்பச் சொல்லுவன எல்லாம் வரையாது பொறுத்து ஒழுகும் மரபுடை மன்னவன் யாவன்? மற்று அவனது குடைநிழற்கீழ்த் தங்கும் இவ்வுலகு. எனவே இவ்வுலகில் வாழும் உயிரெல்லாம் ஒரு வெம்மையுறாது மற்றவன் தண்ணளி நிழற்கீழ் நிலைபெறும் என்பது பொருள் எ - று.

இதனான் மற்று இவனது பொறை முனிவரைப்போலன்று; மற்று எங்ஙனமேலெனின் அப்பொழுதைக்கு விரையாது நின்று அதனை ஓர்ந்துணர்ந்து பின் செறுப்போரைச் செறுத்தும் பொறுப்போரைப் பொறுத்தும் இங்ஙனம் ஒழுகுதலே ஆசிரியர் கருத்து என்றவாறு.

*இனி மற்று அரசியல் பொருளில் சிறந்த செல்வமாவது கல்விச் செல்வம் ஆதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

---

*பத்தாவதாக இக்குறளைக் கொண்டமையின் இவ்வாறு தோற்றுவாய் செய்துள்ளார்.

ஒப்புமைப்பகுதி

" இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்" —குறள். 448.

" வடுவற இடித்துச் சொல்வார் வன்மொழி பொறுத்தல் வேண்டும்"
—விநா, அரசி. 44.

முதுமொழிவெண்பாக்கள்:

" பார்சீதை சீலம் பழித்துரைத்தும் காகுத்தன்
சோர்வுறமுன் சீறிலனே சோமேசா—தேரின்" —சோமேசர். 39,

390. கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி. (10)

உரைப்பகுதி :

பரிமே:— கொடை - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும், அளி - யாவர்க்கும் தலையளி செய்தலும், செங்கோல் - முறைசெய்தலும், குடி ஓம்பல் - தளர்ந்த குடிகளைப் பேணலுமாகிய, நான்கும் உடையான் - இந்நான்கு செயலையும் உடையவன், வேந்தர்க்கு ஒளியாம் - வேந்தர்க்கு எல்லாம் விளக்காம்.

தலையளி - முகமலர்ந்தினிய கூறல். செவ்வியகோல் போறலின், செங்கோல் எனப்பட்டது. குடியோம்பல் என எடுத்துக் கூறினமையால் தளர்ச்சிபெற்றாம்; அஃதாவது ஆறிலொன்றாய பொருள்தன்னையும் வறுமைநீங்கியவழிக் கொள்ளல்வேண்டின் அவ்வாறு கோடலும், இழத்தல் வேண்டின் இழத்தலுமாம். சாதிமுழுதும் விளக்கலின் விளக்கு என்றார். ஒளி ஆகுபெயர். இவை ஐந்துபாட்டானும் மாட்சியும் பயனும் உடன் கூறப்பட்டன.

மணக்:— கொடுத்தலும், தலையளி செய்தலும், செங்கோன்மையும், குடிகளைப் பாதுகாத்தலும் என்று சொல்லப்படுகின்ற இந்நான்கினையும் உடையவன் வேந்தர்க்கெல்லாம் விளக்காம் எ - று.

கொடுத்தல் - தளர்ந்த குடிக்கு விதை ஏர் முதலியன கொடுத்தல்; அளித்தல் - அவரிடத்துக் கொள்ளும் கடமையைத் தளர்ச்சிபார்த்து விட்டு

வைத்துப் பின்பு கோடல்; செங்கோன்மை - கொள்ளும் முறையைக் குறையக்கொள்ளாமை; குடியோம்பல் - தளர்ந்த குடிக்கு இறை கழித்தல். இது குடிக்கு அரசன் செய்யும் திறம் கூறிற்று.

பரிதி:— கொடையும், செங்கோல் நீதியும், குடியைப்பார்த்துக் காத்தலும், கருணையும் இந்த நாலுகாரியமுள்ளவன் இராசசூரியன் எ - று.

காளிங்:— அனைவர்க்கும் பொருள் வழங்கும் கைவணக்கமும், அளிக்கத் தகுவார்மாட்டு நிகழும் தண்ணளியும், அவரவர் குற்றமும் குணமும் தெரிந்து நடாத்தும் செங்கோலும், தனது குடைகிழற்கீழ்வாழும் குடிகளைப் பாதுகாக்கும் குறிக்கோளும் என்று சொல்லப்பட்ட இந் நான்கும் உடையவன் யாவன்? மற்று அவனே அரசர்க்கு எல்லாம் அருக்கன் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— முறை செவ்விய கோல் போறலின் செங்கோல் என உவமையின் பெயர் பொருள் மேல் நின்றது. உவமையாகுபெயர். ஒளி விளக்கு. 'செங்கோன்மையாவது அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை; அம்முறை ஒருபாற்கோடாது செவ்வியகோல் போறலின் செங்கோலெனப்பட்டது. வடநூலாரும் தண்டம் என்றார்'. (அதி. 55. செங்கோன்மை) 'கொடுங்கோன்மையாவது - அம்முறையினது கோணுதற் றன்மை; ஈண்டும் உவமையின்பெயர் பொருள்மேலாயிற்று'. (அதி. 56. கொடுங்கோன்மை.

ஒப்புமைப்பகுதி:

" ஆறிலொன் றறம்என அருளின் அல்லதொன்
றாறுசெய் துலகினுள் உவப்ப தில்லையால்" —சூளா, நகர. 19.

" குடிதளர் வுற்றகாலைக் கொள்பொருள் ஆறில் ஒன்றும்
விடுவது செய்தும் தங்கள் விழுக்குறை முறைசொல் வார்க்குத்
தடையறக் காட்சி நல்கித் தண்ணிய இன்சொல் காட்டி
வடுவற இடித்துச் சொல்வார் வன்மொழி பொறுத்தல் வேண்டும்."
—விநா, அரசி. 44.

குறிப்பு

"உண்ணுன் ஒளிகிறுன்" என்பது போல ஒளி என்றது அகலாது அணு காது தீக்காய்வார் போல யாவரையும் ஒழுகச்செய்யும் அச்சமும் அன்புங்கலந்த

ஒருவகைத் தேசு. ஆகவே இந்நான்கும் உடைய அரசனைப் பகையரசர் செய்யக் கிடந்ததொரு தீமையின்மையால் அவர்கட்கெல்லாம் ஒளியாவான் என்பதாம்.

இந்நான்கு குணங்களும் உடையான் தான் விளங்குமே யன்றி அக்குணம் இல்லாத தன் குலத்தையும் விளக்கும் என்றதாற் போந்த பயன் யாது என்பது ஆராயத்தக்கது.

—தொகுப்பாசிரியர்.

குறள் வைப்புமுறை.

பரிமே:— படை, அஞ்சாமை, தூங்காமை, அறனிழுக்கா, இயற்றலும், காட்சிக், இன்சொலால், முறைசெய்து, செவிகைப்ப, கொடையளி.

மணக்:— படை, அஞ்சாமை, தூங்காமை, அறனிழுக்கா, காட்சிக், இயற்றலும், கொடையளி, இன்சொலால், முறைசெய்து, செவிகைப்ப.

பரிதி:— படை, தூங்காமை, அறனிழுக்கா, கொடையளி, காட்சிக், இன்சொலால், இயற்றலும், செவிகைப்ப, அஞ்சாமை, முறைசெய்து.

காளிங்:— படை, அஞ்சாமை, இயற்றலும், தூங்காமை, காட்சிக், இன்சொலால், முறைசெய்து, அறனிழுக்கா, கொடையளி, செவிகைப்ப.

40. கல்வி.

தொகுப்புரை:

[கற்றற்குரிய நூல்களைக் குற்றமறப் படிக்க; படித்தவண்ணம் ஒழுகுக. எண்ணும் எழுத்துமாகிய இரண்டு கலைகளும் உயிர்களுக்குக் கண்ணும். கற்றவர்களே கண்படைத்தவர்கள்; கல்லாதவர்கள் புண்படைத்தவர்களே. எல்லாரும் மகிழக் கூடியிருந்து நினைந்து நினைந்து வருந்தப் பிரிதலே புலவர்தொழில். செல்வர்முன் வறியவர் நிற்பதுபோலக் கற்றார்முன் அடங்கியிருந்து படித்தவர்களே படித்தவர்கள். அவ்வாறு படிக்காதவர்கள் என்னஇருந்தாலும் கீழ்ப்பட்டவராவர். தோண்டிய அளவாக மணற்கேணியிலே நீர்சுரக்கும்; படித்தஅளவாக மக்களுக்கு அறிவு சுரக்கும். படித்தவர்களுக்கு எல்லா நாடும் ஊரும் சொந்தம்போலவேயாம். அப்படி இருந்தும் ஒருவன் சாகும்வரையில் படிக்காமல் காலம்கழிப்பது ஏன்? ஒருவன் ஒருபிறப்பில் படித்தபடிப்பு வருகிற பிறவிகள் எல்லாவற்றிலும் வந்துசேரும். அறிஞர் கல்வியால் தாம் சிறப்பெய்தி இன்புறுதலைப்போல உலகத்தையும் இன்புறச்செய்து கல்வியை மேன்மேலும் விரும்புவர். அழிவற்ற செல்வம் கல்வியேயாகும். மற்றச் செல்வங்கள் செல்வமல்ல.]

அதிகாரப்பொருள் :

பரிமே:— அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன அறநூலும், நீதிநூலும், யானை குதிரை தேர் படைக்கலமென்ற இவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையன் ஆயக்கால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல்நோக்கி இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார். மேல் 'தூங்காமை கல்வி' எனத் தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின் இஃது இறைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— கல்வியாவது கல்வியாமாறும் அதனானாகிய பயனும் கூறுதல். இது முதலாகப் பொருள்வரவு இயற்றும் திறம் கூறுகின்றார் ஆதலின், அஃது இயற்றுங்கால் கல்வி முந்துறவேண்டும்; அதனால், இது முன் கூறப்பட்டது.

பரிதி:— கல்வியாவது அரசற்கு மனுசாஸ்திரம் மந்திரி சாஸ்திரம் தொண்ணூற்றெட்டாயுதக்கல்வி வேணும் எ - று.

391. கற்க [1]கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (க)

உரைப்பகுதி :

பரிமே:— கற்பவை கசடு அறக் கற்க - ஒருவன் கற்கப்படுநூல்களைப் பழுதறக் கற்க, கற்றபின் அதற்குத் தக நிற்க - அங்ஙனம் கற்றால் அக்கல்விக்குத்தக அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்க.

கற்பவை என்றதனான், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் உணர்த்துவன அன்றிப் பிறபொருள் உணர்த்துவன சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகா என்பது பெற்றாம். கசடறக்கற்றலாவது விபரீத ஐயங்களை நீக்கி, மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல். நிற்றலாவது இல்வாழ்வுழிக் [2]"கருமமும் உள்படாப் போகமும் துவ்வாத், தருமமும் தக்கார்க்கே செய்" தலினும், துறந்துழித் தவத்தான் மெய்யுணர்ந்து அவா அறுத்தலினும் வழுவாமை. சிறப்புடை மகற்காயின் கற்றல்வேண்டும் என்பதூஉம், அவனால் கற்கப்படுநூல்களும், அவற்றைக் கற்குமாறும், கற்றதனாற் பயனும் இதனால் கூறப்பட்டன.

மணக்:— கற்கப்படுவனவற்றைக் குற்றமறக் கற்க; கற்றபின்பு அக்கல்விக்குத் தக ஒழுகுக எ - று.

இது கற்கவும் வேண்டும்; அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும் என்றது.

பரிப்:— கல்வி பலவகைத்து, அவையெல்லாவற்றுள்ளும் கற்கப்படுவனவற்றைக் கற்று அக்கல்வியிற் கூறியவற்றைத் தப்பாமற்செய்க; அது கல்வியாற் பயன் எ - று.

பரிதி:— கல்வியைப் பிழையறக்கற்க; கற்றால் அந்த நெறியிலே நிற்க எ - று.

---

[1] "கசடறக் கற்கின்றதாவது அந்தச்சாஸ்திர அர்த்தம் ஒருவழியாயிருக்க தான் ஒருவழியைச் சொல்லாமல் மெய்யானபொருளை நல்லோரிடத்திலே பலகாலும் கேட்கிறது. நிற்றலாவது சம்சாரத்திலே இருந்தால் நல்ல உத்தியோகங்களைச் செய்து அதன்வழிவந்த பொருளை அறம் பொருளின்பங்களின்வழியே விடுதல்; துறந்தால் மெய்ப்பொருளையுணர்ந்து ஆசையை அறுத்தல். இப்படி நின்றால் பிறவியற்று வீடுபெறும் என்பதாம்"
—கவிராஜபண்டிதர்.

[2] நாலடி, 250.

காளிங்:— *முதற்சொன்ன எண்ணும் எழுத்துமாகிய இவை இரண்டையும் துணை உறுப்பாகக் கொண்டு, தாம் கற்கும் அவற்றை மாசறக்கற்று உணர்க. இங்ஙனம் தெளியக் கற்றபின் கல்விக்குத் தகும் ஒழுக்கத்தின் கண்ணே நிலைநிற்க என்றவாறு.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அதற்கு - அக்கல்விக்கு என்றதனால் கற்பவை பன்மை ஒருமை மயங்காது.

மேற்கோள்பகுதி :

நச்:— நேரும் நிரையும் ஒன்றுது இயற்சீர் வெண்டளை யானதற்கு மேற்கோள். (தொல். பொருள். செய். 56.)

முற்று மோனைக்கு மேற்கோள். (ஷை 92.)

மயிலை:— எழுத்துக்கள் பலவற்றையும் கூட்டித் தொடர்புபடக் கூறுமிடத்தும், தனித்து நின்றாற்போல, தத்தம் வடிவும் அளவும் திரியா என்பதற்கு மேற்கோள். (நன். 126.)

யா - வி:— குற்றெழுத்து மிக்குவந்த செய்யுளுக்கு மேற்கோள். (சூ. 2.)

ஓப்புமைப்பகுதி:

" கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து " நாலடி. 135.

" எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பில் பிறிதில்லை - அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின். " —அறநெறிச். 72.

---

*இவர் இக்குறளை 'எண்ணும் எழுத்தும்' என்ற குறளுக்குப் பின்வைத்தலின் இவ்வாறு உரை எழுதினர்.

" கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப் - பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீள்நெறிச்சென் றார். " —நீதிநெறி. 101.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகஎன்ற - சொற்குள்ளே
எல்லார்க்கும் புத்தி இயம்பிக் கரையேற்ற
வல்லாய் உனக்குரைக்க வல்லேனோ." —தமிழ்; 97. 98.

" ஐயமே திரிபே என்னும் அவையற அறநூல் நீதி
வையமால் யானை பாய்மா வன்படைத் தொழில்நூ லாதி
பையவே கற்றுக் கற்ற பண்பின ரோடு நாளும்
உய்யவே அளவ ளாவி உரைத்தவா நிற்றல் வேண்டும்."
—விநா, அரசி. 46.

" சொல்லிய சொற்கள் கற்றீர் சொற்றஅந் நெறியில் நிற்கும்
நல்லிய லில்லை நம்பால் நவில்தரு மாற்றம் ஒன்று
புல்லிய செயலொன் றாகப் பொருந்துநர் தம்மி லார்க்கும்
பல்லிய மொடுமொ டிக்கும் பரதரே பெரியராவர். "
—பிரபு, வசவண். 41.

முதுமொழிவெண்பாக்கள் :

" அருகர்கழு வேறுதலால் அல்நெறியிட் டீசர்
திருவருளால் வாதவூர் சேரும் - குருநெறியில் " —முதுமொழி. 65.

" பார்க்கவன்பால் கல்வி பயின்றகசன் பார்க்கவன்நோய்
தீர்க்கவரம் பெற்றான் சிவசிவா - ஏற்கநன்று. " —சிவசிவ. 40.

குறிப்பு:

கற்பவையென்றது அவரவர்கள் தொழிலுக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற நூல்களை என்பதாம். அறம் பொருளின்பம் வீடு என்ற பொருள்களன்றிப் பிறவுணர்த்தும் நூல்கள் எவையும் இன்மை உணர்க. "படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்" என்றவாறு நடத்தல் கூடாது என்பது கருத்து.

—தொகுப்பாசிரியர்.

392. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் - அறியாதார் எண் என்று சொல்லுவனவும் மற்றை எழுத்து என்று சொல்லுவனவுமாகிய கலைகள் இரண்டினையும், வாழும் உயிர்க்குக் கண் என்ப - அறிந்தார் சிறப்புடையுயிர்கட்குக் கண் என்று சொல்லுவர்.

எண் என்பது கணிதம். அது கருவியும் செய்கையும் என இரு வகைப்படும்; அவை ஏரம்பமுதலிய நூல்களுட்காண்க. எழுத்தெனவே, அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விருதிறமும், அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின், கண் எனப்பட்டன. அவை கருவியாதல்,

" ஆதி முதலொழிய அல்லா தனஎண்ணி
நீதி வழுவா நிலைமையவான் - மாதே
அறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
திறமாமோ எண்ணிறந்தாற் செப்பு."

" எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் - மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

இவற்றான் அறிக. என்ப என்பவற்றுள், முன்னைய இரண்டும் அஃறிணைப் பன்மைப்பெயர்; பின்னது உயர்திணைப் பன்மைவினை. அறியாதார் அறிந்தார் என்பன வருவிக்கப்பட்டன. சிறப்புடையுயிர் என்றது மக்களுயிருள்ளும் உணர்வுமிகுதி உடையதனை. இதனால் கற்கப்படுநூல் கட்குக் கருவியாவனவும், அவற்றது இன்றியமையாமையும் கூறப்பட்டன.

மணக்:— எண்ணென்று சொல்லப்படுவனவும், மற்றை எழுத்தென்று சொல்லப்படுவனவுமாகிய இவ்விரண்டு பொருளையும் உலகின்கண் வாழும் உயிர்களுக்குக் கண் என்று சொல்லுவர் அறிவோர் எ - று.

பரிப்:— மேற்பொதுப்படக்கூறிய கல்வி பலவற்றுள்ளும் இவை இரண்டும் சிறப்புடைத்து என்று கூறிற்று. உயிர் என்றது மக்களை; இவை அறிவார் மக்கள் ஆதலின்.

பரிதி:— எண்ணாகிய சோதிடமும் எழுத்து முதலாகிய அஞ்சு லட்சணமும் இரண்டு கண்ணும் எ - று.

காளிங்:— எண் என்றது இருமை இன்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக்கொள்வது. எழுத்து என்றது தாம் கற்கும் கல்விக்குத் துணையுறுப்பாகிய எழுத்து என்று ஆயிற்று. மற்று இவ்வாறன்றிக் கணக்கு நிலை ஆகிய சிற்றெண்ணும், பேரெண்ணும், நிறை எண்ணும், நிலவெண்ணும், பிறவும் ஆகிய நுண்குறி எண் என்றும், மற்று இவற்றின் அறிகுறி எழுத்தாய் அடிப்பட வருகின்ற தொகை விரி எழுத்தும் என்றும், இவை இரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு எனலுமாம் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— என்ப-முன்னது அஃறிணைப்பன்மைப்பெயர்; பின்னது உயர்திணைப் பன்மைவினையாகிய முற்றுச்சொல். "ஆதி முதலொழிய" "எழுத்தறியத் தீரும்" என்னும் இரண்டு பாட்டும் காண்க. எழுத்து - எழுத்தும் சொல்லும். 'எழுத்தெனவே அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று' என்றாராதலின் பொருள் அவ்வாறு சிறப்பதல்ல என்க.

மேற்கோள்பகுதி

மயிலை:— எண் என்ப ......உயிர்க்கு; எண்ணென்ப ஏனை எழுத்தென்ப உலகத்துவாழும் உயிர்க்கெல்லாம் கண் என்ப கற்றார் என எஞ்சிய பெயர் கொண்டு முடிதலின் பெயரெச்சம் என்பர். (நன். 359).

என் என்பது சொல்லுதல் என்னும் தொழில் குறித்துப் பெயர் வினைகட்குரிய விகுதிகளுடனே வந்ததற்கு மேற்கோள். (நன். 420)

சிவஞான:— "மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி என்புழி எழுத்து என்றது இயற்றமிழை. அஃது 'எண்ணென்ப ... . உயிர்க்கு' .... என்பவற்றானும் உணர்க". (தொல். விருத். பக். 11.)

சுவாமி:— இதனுள் உயர்திணைச் சாதிப்பன்மையும் அஃறிணைச் சாதிப்பன்மையும் காண்க என்பர். (இ. கொ: 130).

ஒப்புமைப்பகுதி :

" எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர் தாமொழியப்
பண்ணின் இசைமொழி பாடிய வானவர் தாம்பணிவார்
திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான்திரு வேதிகுடி
நண்ண அரிய அமுதினை நாமடைந் தாடுதுமே". —திருநா, திருவேதி. 6.

" அண்ணலும் நூலும் பொருளும் நிகழ்வும் இவை எனலும்
எண்ணினும் ஏனை எழுத்தினும் மிக்காங் கிருந்தவர்முன்
கண்ணினும் அன்றிக் கருத்தினும் வேறெனக் காட்ட லுற்றுப்
பண்ணலம் கொண்டசொல் லாள்அவை பேர்த்தும் பகர்ந்தனளாய். "
—நீல. 679.

" கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சுழல ஓடும் வெய்யவன் என்னும் பேர
எண்ணினுள் தலைக்கண் வைத்த கண்ணடு வில்லை யாயின்
மண்ணினுக் கிருளை நீக்கும் வகைபிறி தில்லை மன்னோ,"
—சூளா, மந்திர. 30.

" கண்ணுங்கால் கண்ணும் கணிதமெழுத் தியாழோடு
எண்ணுங்கால் சாந்தே இலைநறுக்கிட்டு - எண்ணுங்கால்
இட்டஇவை ஐந்தும் அறிவான் இடையாய
சிட்டன்என் றெண்ணப் படும். " —சிறுபஞ்ச. 87.

" எண்ணும்எழுத் தும்கண் ணிவையாய்ந்திந் நூற்பயனைக்
கண்ணுககாண் பார்நற் கதி" —பரமத.

" எண்ணெழுத் திகழேல். " —ஆத்தி. 7.

" எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். " —கொன்றை. 7.

393. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (ந)

உரைப்பகுதி :

பரிமே:— கண் உடையர் என்பவர் கற்றோர் - கண்ணுடையர் என்று உயர்த்துச் சொல்லப்படுவார் கற்றவரே; கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர் - மற்றைக் கல்லாதவர் முகத்தின்கண் இரண்டு புண்ணுடையர், கண்ணிலர்.

தேயம் இடையிட்டவற்றையும், காலம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண்ணுடைமையின் கற்றாரைக் கண்ணுடையர் என்றும், அஃதின்றி நோய் முதலியவற்றான் துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணே உடைமையின் கல்லாதவரைப் புண்ணுடையர் என்றும் கூறினார். மேல் கண் அன்மை உணரநின்ற ஊனக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றான், பொருள்நூல்களையும் கருவிநூல்களையும் கற்றாரது உயர்வும், கல்லாதாரது இழிவும் இதனால் தொகுத்துக் கூறப்பட்டன.

மணக்:— கற்றோர் கண்ணுடையர் என்று சொல்லப்படுவர்; கல்லாதார் முகத்தின்கண்ணே இரண்டு புண்ணுடையர் என்று சொல்லப் படுவர் எ - று.

அறிவு கல்வியின்கண்ணது ஆகலான், அக்கல்வியில்லாதார் கண் புண்ணாயிற்று. இது மேற்கூறியதனையே வலியுறுத்திற்று.

பரிதி:— கல்வியான கண்ணுடைய பேர் கண்ணுள்ளவர்; கல்வி யான கண் இல்லாதார் குருடர் எ - று.

காளிங்:— கண்ணுடையர் என்று எடுத்து ஏத்திச்சொல்லப் படுவார் கற்றவரே. இனிக் கல்லாதார் முகத்து இரண்டு புண்ணுடையார் அல்லது, மற்று யாது ஒன்றினையும் பழுதறக் காண்பதொரு கண்ணு டையர் அல்லர்; மற்று அஃது எப்படியோ எனின், கண் முதலாகிய ஐம்பொறிகளும் தத்தம் பொருள்களைக்காணுமிடத்துக் கல்வியாகிய ஞானக் கண்ணினால் அவற்று உண்மைத் தன்மையையும், அளவிறந்த வீடு ஆகிய நுண்பொருளையும் பழுதறக் காண்பர்; மற்று அஃது இல்லார், புறத்த தாகிய முகத்து இரண்டு நீர்ப்பசையறுது நெகிழ்ந்து, தோலும் தசையும் உடைய புண்கண்ணர் எ - று.

மேற்கோள்பகுதி :

நச்:— கட்டளைப் பொழிப்பு மோனைக்கு மேற்கோள். (தொல். பொருள். செய். 92.)

ஒப்புமைப்பகுதி:

" கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும். " குறள், 575.

" கைப்பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின் கண்ணுமாகும். "
—சீவக. 1595.

" விண்ணுடை யார்புகழ் நூபுர பாதர்வெல் வேனெடுங்கண்
பெண்ணுடை யார்மகிழ் தென்வெங்கை மாநகர்ப் பெண்ணணங்கே
கண்ணுடை யார்கற் றவரேகல் லார்கள் முகத்திரண்டு
புண்ணுடை யாரெனக் கூறிநம் காதலர் போயினரே. "
—திருவெங். 408.

முதுமொழிவெண்பாக்கள் :

" எண்ணும் எழுத்தும்நம் கண்ணென் றியம்பியசொல்
திண்ணமே யாகும் தினகரா - மண்ணின்மேல். " —தினகர. 43.

" விண்களிப்பர் காணு வியன்கயிலே வாழ்வைஅப்பர்
கண்களிப்ப ஐயாற்றில் கண்டுவந்தார் - எண்களிப்பக். " —திருத். 27.

குறிப்பு:

காலங்கடந்த கருத்துக்களையும் கண்டு, கருத்தை வளர்ப்பதால் கண் கண்ணாயிற்று. அதனையிழந்தது புண்ணாயிற்று என்பதாம். புண் நோவுசெய்யும்; அதுபோலக் கல்லார்கண் காணவேண்டிய முறையின்படி-வரம்பின்படி கண்டு கருத்தை வளர்க்காது தவறானவழியிலும் தூண்டி வருத்தம் விளைப்பதால் புண் ஆயிற்று.

—தொகுப்பாசிரியர்.

394. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
– அனைத்தே புலவர் தொழில். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே - யாவரையும் அவர் உவக்குமாறு தலைப்பெய்து 'இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதும்' என நினையுமாறு நீங்குதலாகிய அத்தன்மைத்து, புலவர் தொழில்- கற்றறிந்தாரது தொழில்.

தாம் நல்வழியொழுகல் பிறர்க்கு உறுதிகூறல் என்பன இரண்டும் தொழில் என ஒன்றாயடங்குதலின், அத்தன்மைத்து என்றார். அத்தன்மை அப்பயனைத்தருந்தன்மை. நல்லொழுக்கம் காண்டலானும், தமக்கு மதுரமும்

உறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வு எதிர்வுகளின் இன்பம் பயத்தலானும், கற்றார்மாட்டு எல்லாரும் அன்புடையர் ஆவர் என்பதாம். இதனால் கற்றாரது உயர்வு வகுத்துக் கூறப்பட்டது.

மணக்:— மக்களிருவர் உவக்குமாறு கூடி, அவர் நினைக்குமாறு பிரிதல் போலும் கற்றோர் செய்யுந்தொழில் எ - று.

இஃது இன்பம் நுகரினும், வினை செய்யினும் தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயக்கச் செய்தல் கல்வியாலாம் என்றது.

பரிதி:— நல்லோரும் நல்லோரும் மனப்பூர்ணமாகக் கூடியிருந்து பிரிகிறபோது, ஒருவரை ஒருவர் அனவரதகாலமும் நினைந்திருப்பார்; அதுபோல, கற்கும்போதும் பிரியத்துடனே கற்க; கற்று விட்டால் கற்ற கல்வியை மறவாது அதிகரிக்க எ - று.

காளிங்:— தாம் பிறர் ஒருவருடன் கூடுங்காலம் எல்லாம் தம்மை அவர் பெரிதும் உவக்குமாறு அவரிடத்துக் கூடி, மற்று யாதானும் ஒருவழியால் பிரிய வேண்டிற்று ஆயினும் மற்று அவர் தம்மையே எப்பொழுதும் சிந்திக்குமாறு பிரிதல்; அதுவே கல்வியாற் சிறந்த அறிவினை உடையோர் தொழில் என்றவாறு.

ஒப்புமைப்பகுதி:

" நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். " —வாக்கு. 24.

முதுமொழிவெண்பாக்கள்:

" நாதரருள் சேரனொடு நம்பியா ரூராருமுன்
பேதமறக் கூடிப் பிரிவதுபோல் - தீதின்று " —முதுமொழி. 66.

" சம்பந்தர் நாவரசர் பாற்கண்டோம் சார்ந்துவப்ப -
தம்பிரிவின் உள்ளுவதும் சோமேசா - நம்பி. " —சோமேசர். 40.

" மன்னிஇன்பம் துய்த்தசங்க வாணர்கி ரற்பிரிவை
முன்னிமுன்னிச் சோர்ந்தார் முருகேசா - ந்ன்னர் "
—முருகேசர். 40.

குறிப்பு:

உள்ள - எஞ்ஞான்றும் எண்ணிப்பார்க்கும் அரிய கருத்துக்களை அளவளாவிய காலத்து அறிவித்தமையால், நினைத்துக்கொண்டேயிருக்க என்பதாம்.

பிறர் மனம் நோகாதவாறு பேசுதலும், தவறு செய்யினும் ஏதுக்களானும் எடுத்துக்காட்டானும் திருத்துதலும் உடையவர் கற்றாராதலின் இன்சொல்லால் இடித்துக்கூறினும் உவப்பே உண்டாம் என்பது.

—தொகுப்பாசிரியர்.

395. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் - *"பிற்றைநிலை முனியாது கற்றல் நன்று" ஆதலான், செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறு போலத் தாமும் ஆசிரியர்முன் ஏக்கற்றுநின்றும் கற்றார் தலையாயினர்; கல்லாதவர் கடையரே - அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரேயாவர்.

உடையார் இல்லார் என்பன உலகவழக்கு. ஏக்கறுதல் ஆசையால் தாழ்தல். கடையர் என்றதனான் அதன் மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது. பொய்யாய மானம்நோக்கி மெய்யாய கல்வியிழந்தார் பின் ஒருஞான்றும் அறிவுடையர் ஆகாமையின், கடையரே என்றார். இதனால் கற்றாரது உயர்வும் கல்லாதாரது இழிவும் கூறப்பட்டன.

மணக்:— பொருளுடையார்முன்பு பொருளில்லாதார் நிற்குமாறு போல, அதனைக் காதலித்து நிற்றலுமன்றித் தாழ்ந்து கற்றாரிடத்தாவர் கல்லாதார் எ - று.

இது, எல்லாரினும் கற்றார் தலையாவார் என்றது.

பரிதி:— செல்வர் முன்னே செல்வமில்லாதார் நிற்பது ஒக்கும் கல்வியுடையார்முன் கல்வியில்லாதார் நிற்பது எ - று.

காளிங்:— கற்றார்முன் சென்று கல்லாதார் கற்குமிடத்துச் செல்வம் உடையார்முன் சென்று வறியவர் ஏக்கற்று ஒடுங்கி ஒருபொருளை

*புறம். 183.

விரும்புமாப்போல, விரும்பிக் கற்பவர் கற்றார் ஆவர். மற்றுக் கடையர் என்பது புலைமக்கள் உயர்ந்தோர்முன் ஒன்றினைச் சொல்லக் கூசுமாப் போலக் கல்லாதார் ஆகிய கடுவினையாளரும் கற்றார்முன் சொல்லத் தாமே கூசுவார் என்றவாறு.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— ஏக்கறுதல் - ஆசையால் தாழ்தல். கடையர் என்றதனால் மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது என்றார். இவ்வாறு உரையாத "பிறவிப் பெருங்கடற்"கும் (10.) இவ்வாறு வினவுக.

மேற்கோள்பகுதி :

யா - வி:— ஒருவிகற்பக் குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (சூ. 59)

குண:— ஷை (யா. கா. 24.)

ஒப்புமைப்பகுதி :

" வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே". —புறம். 183 : 8 - 10.

" களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலைத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்". —நாலடி. 133.

" கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும் — இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். " —நீதிநெறி. 16.

முதுமொழிவெண்பாக்கள்:

" கற்றவர்சங் கத்திருந்தார் கண்ணுதலோ டேனையவர்
சற்றும்இரார் என்று தலையாயார் - முற்றும். "

—முதுமொழி. 67.

396. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (சு)

உரைப்பகுதி :

பரிமே:— மணற்கேணி தொட்டனைத்து ஊறும் - மணலின்கட் கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும், மாந்தர்க்கு அறிவு கற்றனைத்து ஊறும் - அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும்.

ஈண்டுக் கேணி என்றது அதன்கண் நீரை. அளவிற்றாக என்றது அதனளவும் செல்ல என்றவாறு. சிறிது கற்ற துணையான் அமையாது மேன்மேல் கற்றல்வேண்டும் என்பதாம். இஃது ஊழ் மாறுகொள்ளாவழியாகலின், மேல் * "உண்மை அறிவே மிகும்" என்றதனோடு மலையாமை அறிக.

மணக்:— அகழ்ந்த அளவு மணற்கேணி நீருண்டாம்; அது போல, மாந்தர்க்குக் கற்ற அளவு அறிவுண்டாம் எ - று.

இஃது அறிவுண்டாம் என்றது.

பரிதி:— ஊற்று எத்தனையாழமுண்டு அத்தனையாழமும் தண்ணீர் ஊறும்; அதுபோலக் கல்விமிடுக்கு எத்தனையுண்டு அத்தனையும் அறிவூறும் எ - று.

காளிங்:— ஒருவன் கல்லுதற்கு முயலும் முயற்சியானது எவ்வளவைத்து மற்று அவ்வளவைத்தாகி வந்து ஊறாநிற்கும் மணற்கேணியின் நீரானது; அதுபோல உலகத்துப் பண்புடையோர்க்குத் தாம் கற்கும் கல்வி முயற்சியானது எவ்வளவைத்து மற்று அவ்வளவைத்தாக வந்து ஊறாநிற்கும் அக்கல்வியின் நிகழும் அறிவும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தொட்டல் - தோண்டல். 'தோட்கப்படாத செவி' துளைக்கப்படாத (418.) ஆதலால், தொட்டலும் தோட்டலும் வேறு.

---

*ஊழ் அதிகாரம் 3-ம் குறள்:

மேற்கோள்பகுதி:

சங்கர:— தொகுத்தல் என்னும் செய்யுள் விகாரத்திற்கு மேற்கோள். தொட்டது கற்றது எனற்பாலன தொட்டு கற்று எனத் தொக்கவாறு காண்க என்பர். (நன். 155)

சுவாமி.— 'அதிமதி நுட்பமோடு அதிகலை கற்பினும் விதியது வசத்தால் விதிவிலக்கு அயர்வர்' என்பதற்கு மேற்கோள். (இ. கொ. 6.)

ஓப்புமைப்பகுதி:

" வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு". —குறள். 595.

"நீரளவே யாகுமாம் நீராம்பல் தாங்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" —வாக்கு. 7.

" இறைக்க ஊறும் மணற்கேணி ஈயப் பெருகும் பெருஞ் செல்வம்" —பழ.

குறிப்பு:

எங்கும் பரந்த நீரைத் தோண்டிவெளிப்படுத்துதல்போல, முன்னைப் பிறவிகளில் முயன்று எய்திய கல்வியறிவு இந்தப்பிறவியில் இயற்கை அறிவாக உயிரோடு ஒன்றியிருக்க, அதனைக் கல்வியான் நன்கு விளக்கவேண்டும். முயற்சி மெய்வருந்தக் கூலிதருவதுபோலக் கற்ற அளவே கல்விமிகும், ஒருமைக்கண் கற்றகல்வி எழுமையுந் தொடருமாதலின், கல்வியான் அறிவுவெளிப்படுவது ஒன்றே ஆவது; அறிவு புதிதன்று என்பதாம். மணற் கேணி என்றமையின், மணலில் தோண்டப்பெற்றகேணி இடிகரையாய் எப்போதும் சிதைந்துகொண்டே இருக்கும். சிதையச் சிதைய நீர் சுரவாது. அதுபோலக் கல்வி கற்றுவிட்டால் மறதிக்கு ஏதுவாம்; அங்ஙனம் மறக்கவிடாமற் பலகாலும் பயிலுதலால் அறிவு சுரக்கச் செய்யவேண்டும் என்பதுமாம்.

—தொகுப்பாசிரியர்.

397. யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— யாதானும் நாடாம் ஊராம் - கற்றவனுக்குத் தன்நாடும் தன் ஊருமேயன்றி யாதானும் ஒருநாடும் நாடாம், யாதானும் ஒருரும் ஊராம், ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு என் - இங்ஙனமாயின் ஒருவன் தான் இறக்குமளவும் கல்லாது கழிகின்றது என்கருதி.

உயிரோடு சேறலின் சாந்துணையும் என்றார். பிறர் நாடுகளும் ஊர்களும் தமபோல் உற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற்கு ஏதுவாகலின் கல்விபோலச் சிறந்தது பிறிதில்லை; அதனையே எப்பொழுதும் செய்க என்பதாம்.

மணக்:— யாதோரிடத்தே செல்லினும் அதுவே தனது நாடும் ஊரும் போலாம்; ஆதலால், ஒருவன் சாந்தனையும் கல்லாது ஒழுகுதல் யாதினைக்கருதி எ - று.

இது கல்வி எல்லாரானும் கைக்கொள்ளப்படும் என்றது.

பரிதி:— எந்தத்தேசமேயானாலும் தன்தேசமேயாம்; மானூராகிய வைகுண்டப்பதம் மறுமைக்காம்; ஆதலால் சாமளவும் கல்வியே பயிலுவான் எ - று

காலிங்:— இங்ஙனம் கற்று உணர்ந்த பெரியோர்க்கு வேறு யாதானும் ஒருநாடும் யாதானும் ஒரூரும் முன்னம் தாம் பயின்ற நிலம் போலத் தமது நாடும் தமது ஊரும் ஆம். அதனால் மக்கட் பண்பு உடையான் ஒருவன் தனது யாக்கை இறந்துபடும் துணையும் கல்லாது ஒழிகின்ற முறைமை என்னமுறைமையாயிருக்கின்றதோ அரசர்க்கும் யாவர்க்கும் எ - று.

மேற்கோள்பகுதி

நச்:— சீர்வகையடிக்கும் 'யாதானு நாடாமால் ஊராமால் யாதோதான்' என்றால் சீர்வகைத் துள்ளலோசையும், 'என்னொருவன்' என்றால் சீர்வகைச் செப்பலோசையும் பிறக்குமாறு இசையொடு சேர்த்தி உணர்க என்பர். (தொல். பொருள். செய். 11.)

'ஈரசை கொண்டு மூவசை புணர்த்தும், சீரியைந்திற்றது சீரெனப் படுமே' என்பதற்கு மேற்கோள். (ஷை. 12)

குறுவெண்பாட்டிற்கு மேற்கோள். (ஷை 159.)

யா - வி:— ஏந்திசைச் செப்பலோசைக்கு மேற்கோள். (சூ. 57.)

ஒப்புமைப்பகுதி:

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" —புறம். 192:1.

"காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" —புறநா. 206:10-13.

" ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆதலினால்
ஆற்றுணா வேண்டுவ தில்" —பழ-நா.

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றஇட மெல்லாம் சிறப்பு" வாக்கு. 26.

முதுமொழிவெண்பாக்கள்

" பாரின்மூ வேந்தர் பரிசிலுத வப்பாடிக்
காரியார் ஆலயங்கள் கட்டினார் - ஓரிடமோ" —திருத், 64.

" கல்விதாழ் வின்றியே கற்றால் வரும்அறிவு
செல்வத்தா லாமே திருமலையா - தொல்லுலகில்" —திருமலை. 2.

குறிப்பு:

'இளமையிற்கல்' என்றமையான் முதுமை யெய்தினோமே என்று கைசோர விடற்க; கற்றற்குரிய காலம் சாந்துணையும் என்றறிவித்தவாறு.

—தொகுப்பாசிரியர்.

398. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— ஒருவற்கு - ஒருவனுக்கு, தான் ஒருமைக்கண் கற்ற கல்வி - தான் ஒருபிறப்பின்கண் கற்ற கல்வி, எழுமையும் ஏமாப்பு உடைத்து - எழுபிறப்பினும் சென்று உதவுதலையுடைத்து.

வினைகள் போல உயிரின்கட்கிடந்து அது புக்குழிப் புகுமாகலின், எழுமையும் ஏமாப்புடைத்து என்றார். எழுமை *மேலே கூறப்பட்டது. உதவுதல் நன்னெறிக்கண் உய்த்தல்.

மணக்:— ஒருவனுக்கு ஒரு பிறப்பிலே கற்ற கல்விதானே எழு பிறப்பினும் ஏமமாதலை உடைத்து எ - று.

கற்ற கல்விதான் என்று கூட்டுக. இது வாசனை தொடர்ந்து நன்னெறிக்கண் உய்க்கும் என்றது.

பரிதி:— ஒருபிறப்பிலே கற்றகல்வி எழுபிறப்புக்கும் உதவும் எ - று.

காளிங்:— ஒரு பிறப்பின்கண் நல்வழிக்கு உரிய கல்விகளைத் தன் நெஞ்சத்து ஒருப்பாட்டுடனே தான் கற்ற கல்வியானது, அங்ஙனம் கற்ற இணையிறந்த இறைவற்கு, இம்மைக்கண் உளதாய நீதிப்பொருளாகிய இன்ப உறுதியே அன்றிப் பின்பு நிகழும் மறுமையாகிய இனிய சேம உறுதியை உடைத்து என்றவாறு.

மேற்கோள்பகுதி:

மயிலை:— செப்பத்தால் பொருள் தரும் வெளிப்படைக்கு மேற்கோள். (நன். 268).

முதுமொழிவெண்பாக்கள் :

“ சிவகீதை முன்கேட்டார் சென்றுசென்று சென்மத்
 தவர்பார்த் தனுக்கருளு மாற்றல் - புவனத்(து). ” —முதுமொழி. 68.

“ மல்லல் வியாகரணம் மாருதிகற் கக்கருதி
 எல்லவன்பின் போந்தான் இரங்கேசா - நல்ல ” —இரங். 40.

குறிப்பு:

கல்வியான் விளையும் பயன் உணர்வாக உயிர்க்குணமாகும் ஆதலின், உயிர் எய்தும் பிறவிகள் தோறும் சென்றுறும் என்பது விளக்கப்பெற்றது.

—தொகுப்பாசிரியர்

* மேல் என்றது 62-ம் குறளுரையினை.

399. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு - தாம் இன்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகம் இன்புறுதலால் அச்சிறப்புநோக்கி, கற்றறிந்தார் காமுறுவர் - கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர்.

தாம் இன்புறுதலாவது நிகழ்வின்கண் சொற்பொருள்களின் சுவை நுகர்வானும், புகழ் பொருள் பூசைபெறுதலானும், எதிர்வின்கண் அறம் வீடு பயத்தலானும், அதனான் இடையறாத இன்பம் எய்துதல். உலகு இன்புறுதலாவது இம்மிக்காரோடு தலைப்பெய்து அறியாதன எல்லாம் அறியப்பெற்றேம் என்றும், *"யாண்டு பலவாக நரையிலம்" ஆயினேம் என்றும் உவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தல் என்றிவற்றால் துன்புறுதலும் பலரையும் பகையாக்கலும் உடைத்து என அறிந்து அதனைக் காமுறாமையின் கற்றறிந்தார் என்றும், கரும்பு அயிறற்குக் கூலி போலத் தாம் இன்புறுதற்கு உலகு இன்புறுதல் பிறவாற்றானின்மையின் அதனையே காமுறுவர் என்றும் கூறினார்.

மணக்:— தாம் இனிதாக நுகர்வதொன்றை உலகத்தார் நுகர்ந்து இன்புறுவாராகக் கண்டால், அதற்கு இன்புறுவர் கற்றறிந்தவர் எ - று.

இஃது அழுக்காறு செய்யாது இன்புறுதல் அறமாதலின் அது, கல்வியானே வரும் என்றது.

பரிதி:— தங்கள் கல்வியைத் தாங்கள் மகிழ்ந்தது போல, உலகம் மகிழ்வதுகண்டு மேன்மேலே கற்பார், கல்வியின் மிக்கார் எ - று.

காளிங்:— தாம் கசடறக் கற்று உணர்ந்த கல்வியானது கொண்டு, எவ்வாற்றானும் தாம் இன்புறுவதல்லது, தமக்கு உளதாய கல்வியைக் குறித்து உலகத்தார் யாவரும் தமது உள்ளத்தால் பெரிதும் இன்புறக் கண்டு பின்னும் மேன்மேலும் அதனையே வற்புறுத்த ஆசைப் படுவர் மாசுஅறக் கற்ற பெரியோர் எ - று.

---

* புறம், 191.

ஒப்புமைப்பகுதி :

" ... ... மாகவிஞர்
தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்என்னும் - மாமகிமை
சேர்ந்ததுஉன் பாலன்றோ. " —தமிழ். 196.

முதுமொழிவெண்பாக்கள்

" இறைவரும் கைவிடார் ஏடவர்பால் சென்ற
பிறருமறிந் தின்பம் பெறலால் - அறிதொறாஉம்."
—முதுமொழி. 69.

குறிப்பு:

இது அரசியலாதலின், கற்றாரின் வறுமைநோக்கி இருக்கும் செல்வரும் அவமதியாக எண்ணுவரன்றோ? அவ்வெண்ணத்தால் தமக்குக் கல்வி வளராமையை உணர்த்த இல்லார்போல் கற்கவேண்டும் என்றார். செல்வமுடைமை பொருளுடைமை என்றிரண்டுமே உடைமையாக மதிக்கப்பெறும் என்பதை நுண்ணிதின் உணர்த்த செல்வர் தாம் எண்ணும் சிந்தனையைக் கற்றார்மேலதாக்கி, கற்றாரிடம் உள்ள செல்வமில்லாமையைத் தம்மேலதாகப் பாவித்து இரந்து பின்னின்று கற்க வேண்டும் என்றருளப்பெற்றது. இதனால் கற்கும் முறை கூறப்பெற்றது.

தாம் கல்வியால் எல்லாச்சிறப்பும் எய்துதல்நோக்கி உலகமுழுதுமே கற்று அங்ஙனம் இன்புறச்செய்து, கற்ற உலகத்தைத் தாமும் விரும்புவர் என்பதாம்.
—தொகுப்பாசிரியர்.

400. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. (௪0)

உரைப்பகுதி :

பரிமே:— ஒருவற்குக் கேடு இல் விழுச்செல்வம் கல்வி - ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி, மற்றையவை மாடு அல்ல - அஃதொழிந்த மணியும் பொன்னும் முதலாயின செல்வமல்ல.

அழிவின்மையாவது தாயத்தார், கள்வர், வலியர், அரசர் என்றிவரால் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையுமாம். சீர்மை, தக்கார் கண்ணே நிற்றல். மணி பொன்

முதலியவற்றிற்கு இவ்விரண்டும் இன்மையின், அவற்றை மாடல்ல என்றார். இவை ஐந்துபாட்டானும் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— ஒருவனுக்குக் கேடில்லாத சீரிய பொருளாவது கல்வி; மற்றவை யெல்லாம் பொருளல்ல எ - று.

இது கல்வி அழியாத செல்வம் என்றது.

பரிதி:— அழியாதசெல்வமாவது கல்வி; அழிஞ்சுபோகிறசெல்வம் செல்வமல்ல எ - று.

காளிங்:— உலகத்துச் சிறந்தார் ஒருவர்க்கு எஞ்ஞான்றும் கேடு படாத விழுமிய செல்வம் யாதோ எனில் சிறந்த நூல்களைக் கற்கும் கல்வியே; அதனால் மற்றைப் பல செல்வமெல்லாம் செல்வம் என்று சொல்லப்படுவன அல்ல எ - று.

மாடு என்பது பொருள். கல்வியால் சிறந்த பெரியோரது பெருந் தன்மை இதுவாகலான் மற்று இதன் பின்னரே கல்லாதாரது நிலைமை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— அப்படி ஒழுகி அரும் பொருள் பெறுக: பொருள் என்னும் பெயர் பொதுவாயினும் கல்விப்பொருளினை மாத்திரம் அங்ஙனம் கூறாது நற்பொருள் .... விழுமியபொருள் முதலாக யாதானும் ஓரடை கொடுத்தே கூறுவர்; 'கேடில் விழுச்செல்வம் கல்வி' எனச் சிறுபான்மை பலஅடையும் கொடுத்துக்கூறுவர்; அக்கருத்து பண்டை நூல்கள் எல்லாவற்றுள்ளும் காண்க என்பர். (இ. கொ. 8.)

ஒப்புமைப்பகுதி:

"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயின் கேடில்லை
மிக்கசிறப்பின் அரசர் செறின் வவ்வார்
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற" —நாலடி. 134.

"மாற்படு புந்தியின் மறுவில் சேதனம்
பாற்படும் உயிர்க்கெலாம் பவத்தின் மாண்பயன்
நூற்படு கல்வியின் நுவல்வ ளத்தினின்
மேற்படு கின்றதில் விழுமி தில்லையே' —கந்த. மாயையுப. 6.

"திருமைகொள் வளனொடு தீதில் கல்வியாம்
இருமையின் ஒன்றினை எய்தி டாதெனின்
அருமைகொள் அவ்வுயிர் அதனி னுற்றவும்
பெருமைய துடையது பேயின் தோற்றமே" —ஷை 7.

" ... . கேடில் விழுச்செல்வம் கல்விஎன்று
பூண்டாய் நீதானே பொருளன்றோ" —தமிழ். 190.

"கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி" —கொன்றை. 22.

குறள் வைப்புமுறை.

பரிமே:— கற்க, எண்ணென்ப, கண்ணுடையர், உவப்பத், உடையார்முன், தொட்டனைத், யாதானும், ஒருமைக்கண், தாமின், கேடில்.

மணக்:— கற்க, எண்ணென்ப, கண்ணுடையர், தொட்டனைத், ஒருமைக்கண், கேடில், யாதானும், உவப்பத், தாமின், உடையார்முன்.

பரிதி:— ஒருமைக்கண், யாதானும், கேடில், கண்ணுடையர், எண்ணென்ப, தொட்டனைத், தாமின், உவப்பத், உடையார்முன், கற்க.

காளிங்:— ஒருமைக்கண், உடையார்முன், கண்ணுடையர், தொட்டனைத், எண்ணென்ப, கற்க, தாமின், உவப்பத், யாதானும், கேடில்.

41. கல்லாமை.

தொகுப்புரை :

[நிரம்பிய நூலின்றிச் சபையேறுதல் கோடின்றிச் சதுரங்கம் ஆடியது போலாம். கல்வியறிவில்லாதவன் பேச விரும்புதல் முலையில்லாப் பெண் இன்பம் விரும்புவது போலாம். படித்தார் பேரவையில் பேசாதிருந்தால் கல்லாதவர்களும் மிக நல்லவராவார்கள். கல்வியறிவில்லாதவன் சொல்வது நுணுகிய கருத்தாயினும் அதனை அறிவுடையார் ஒத்துக்கொள்ளார். கல்லாதான் தகுதி பேசிப்பார்த்தால் வெளியாகிவிடும். பயன்படாக் களர்நிலம்போல ஏதோ இருக்கிறார்கள் என்று எண்ணப்படுவதல்லாமல் கல்லாதவர்கள் பயன்படாதவர்களே. நுட்ப அறிவிலாதான் அழகு மண்பொம்மையின் அழகு போலத்தான். படியாதவனிடமுள்ள செல்வம் நல்லவரடைந்த வறுமையினுந் தீது. குடிப்பிறப்பால் உயர்வில்லை. படிப்பாலேயே பெருமை உண்டாகின்றது. கற்றவர் கல்லாதவர்களிடையுள்ள வேறுபாடு விலங்குக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாடு போன்றதாம்.]

அதிகாரப்பொருள் :

பரிமே:— அஃதாவது கற்றலைச் செய்யாமை; என்றது, அதனினாய இழிபினை. கல்விச்சிறப்பு மேல் விதிமுகத்தால் கூறியதுணையான் முற்றுப் பெறாமை நோக்கி, எதிர்மறைமுகத்தானும் கூறுகின்றது ஆகலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— கல்லாமையாவது கல்வியில்லாமையால் உளதாகும் குற்றம் கூறுதல். மேல் கல்வி வேண்டும் என்றார் அஃது இலாதார்க்கு உளதாகும் குற்றம் என்னை என்றார்க்குக் கூறியது ஆதலான், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— கல்லாமையாவது கல்வியை விடவொண்ணாது எ - று.

401. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (க)

உரைப்பகுதி :

பரிமே:— அரங்கு இன்றி வட்டு ஆடியற்று - அரங்கினை இழையாது வட்டாடினாற்போலும், நிரம்பிய நூல் இன்றிக் கோட்டி கொளல் - தான் நிரம்புதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் அவையின்கண் ஒன்றனைச் சொல்லுதல்.

அரங்கு - வகுத்ததானம். வட்டாடல் - உண்டை உருட்டல். இவை [1] 'கட்டளையன்ன வட்டரங் கிழைத்துக், கல்லாச் சிறுஅர் நெல்லிவட்டாடும்' என்பதனான் அறிக. நிரம்புதல் - அறியவேண்டுவன எல்லாம் அறிதல். கோட்டி என்பது ஈண்டு ஆகுபெயர். [2] 'புல்லா எழுத்திற் பொருளில் வறும் கோட்டி' என்புழிப்போல. சொல்லும் பொருளும் நெறிப்படா என்பதாம்.

மணக்:— கொம்மையின்றி வட்டாடினாற்போலும் நிரம்பியநூல் களைக் கற்றலின்றி வார்த்தைசொல்லுதல் எ - று.

அரங்கு - சூது; வட்டாடுதல் - உருண்டையுருட்டல்; கோட்டி கொளல் - "புல்லா எழுத்திற் பொருளில் வறுங்கோட்டி" என்றாற்போல. இது கல்லாதார் வார்த்தை சொல்லின், அது தப்பும் என்றது.

பரிதி:— சதுரங்கக்கோடு இல்லாமல் சதுரங்கம் ஆடுவோம் என்பதற்கு ஒக்கும் பெரிய கல்வியில்லாதார் ஆஸ்தானத்தைப் பிரியப் படுத்துவோம் என்பது எ - று.

காளிங்:— சூதுக் கருவிக்கு நிலையறிந்து இயற்றிய வரையினாற் சதுரப்பட்ட பலகையின்றி, வட்டுக் கொண்டு சூதாடிய தன்மை போலும்; இவ்வாறு அனைத்து வகைப்பட்ட நெறியினாலும் நிறைவுற்ற நூல்கள் யாதானும் ஒன்றினும் தமக்கு ஒரு முயற்சியின்றி வறிதே இவற்றால் சிறந்த சான்றோருழைச் சென்று தாமும் கல்வி விநோதம் கொள்ளக் கருதுகின்ற கருத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கோட்டிகொளல் - அவையின்கண் ஒன்றைச் சொல்லுதல்.

மேற்கோள்பகுதி :

பெருந்:— விகற்பக்குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (வீர. 114.)

ஒப்புமைப்பகுதி :

" தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் - முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை." —திரி. 38.

---

[1] நற்றிணை. 3. [2] நாலடி. 155.

" கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு - மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே இரா அது
உரைப்பினும் நாய்குரைத் தற்று. " —நாலடி. 254.

குறிப்பு:

ஒருமரம் தோப்பாகாதவாறுபோல, சிலநூற்கல்வியே சிறந்த பேச்சிற்குப் போதுமானதன்று. அவையிற் பேசுதற்கு நிரம்பிய நூலறிவு வேண்டும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்

402. கல்லாதான் சொற்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— கல்லாதான் சொல் காமுறுதல் - கல்வியில்லாதான் ஒருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல், முலைஇரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று - இயல்பாகவே முலையிரண்டும் இல்லாதாள் ஒருத்தி பெண்மையை அவாவினாற்போலும்.

*'இனைத்தென அறிந்த சினை' ஆகலின், தொகையொடு முற்றும்மை கொடுத்தார். சிறிதும் இல்லாதாள் என்பதாம். அவாவிய வழிக் கடைபோகாது, போகினும் நகைவிளைக்கும் என்பதாயிற்று.

மணக்:— கல்வியில்லாதான் சொல்லுதற்கு ஆசைப்படுதல், இரண்டுமுலையுமில்லாதாள் பெண்மைக்குக் காமுற்றாற்போலும் எ - று.

இது தன்னுசையல்லது சொன்னாலும் விரும்புவாரில்லை என்றது.

பரிதி:— கல்லாதான் சொல்லைக் காமுறுதல் தனபாரம் இல்லாத பெண்ணைக் காமுறுதற்கு ஒக்கும் எ - று.

காளிங்;— கற்றிலாதான் மற்று அக்கற்றவர் முன்னர்த் தானும் சிலசொல்லுதலைக் காதலித்தல் எத்தன்மைத்தோ எனின், முலையிரண்டும் முன்னமே தனக்கு இல்லாதாளாகிய பேடியானவள் மற்று அம்முலை வனப்புறாஉம் திருவுடையாட்டியது பெண்மை கொண்டு இன்புறுதற்குத் தானும் காதலித்த அத்தன்மைத்து எ - று.

* தொல். சொல். 33.

உரைவிளக்கப்பகுதி:

நுண்— சொல் - சொல்லுதல்; முதனிலைத்தொழிற்பெயர். 'முலை யிரண்டும்' என்பது, 'இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு, வினைப் படு தொகுதியின் உம்மைவேண்டும்.' (தொல். சொல். 33.) என்னும் சூத்திரவிதிபற்றியது.

மேற்கோள்பகுதி:

யா - வி:— வெண்சீரோடு வேற்றுச்சீர் ஒன்றிய சிறப்பில் வெண்சீர் வெண்டளைக்கு மேற்கோள். (சூ. 18.)

ஒப்புமைப்பகுதி:

" இன்னா, முலையில்லாள் பெண்மை விழைவு. " —இன்னா. 13.

குறிப்பு:

'முலை' என்ற இடக்கர்மொழியை வள்ளுவர் ஆண்ட இரண்டிடங்களில் இது ஒன்று. இழிவுபற்றி விளைந்த சொல் இது. கற்றார் பேசிச் சிறப்பெய்தல் கண்டு கல்லாதார்க்கும், அவையிற்பேச ஆசையெழும். எழினும் பயன் எய்தாது. வருங்குறளிற் 'பெறின்' என்பதும் இக்கருத்தை வலியுறுத்துமாறு காண்க.

இந்தக்குறளுக்கு இருவகையான உரைகள் உள்ளன. ஒன்று படியாதவன் அவையில் பேச விரும்புதல் முலையிரண்டும் இல்லாதவள் பெண்நலத்தை விரும்பினாற் போலும் என்பது. மற்றொன்று படியாதவன் சொல்லைப் பிறர் விரும்புதல் முலை யில்லாத பெண்ணைக் காளையர் விரும்பியது போலாம் என்பது. இவ்விருபொருளின் அமைதியாவன.முலையில்லாள் எனவே பேடியென்பது ஆகாது. அவ்வுறுப்பில்லாளும் பெண்ணாக, நலம்பெற்று, புதல்வர்ப் பெற்று மகிழ்கின்றாள். ஆதலால் முலையிரண்டும் இல்லாதாள் பெண்நலம் விரும்பியது போலாம் என்பது காண்டல் விரோதமாகவும் கூடும்.

கல்லாதானது சொல்லைப் பிறர்காமுறுதல் அமையுமோ எனின், அதினும், அதிகாரம் கல்லாமையதிழிவு கூறுவதாகலானும் அதனைக் கல்லாதார்மேல்வைத்துக் கூறுவது இக்குறளாதலானும், மேற்குறளில் கல்லாதான் ஒட்பம் கழியநன்றாயினும் அறிவுடையார் கொள்ளார் என விதிக்கின்றார் ஆதலானும், அமையாதெனவும் கூடும். கல்லாதான் சொல்லை அவன் செல்வமுதலிய பிறதகுதிநோக்கி அறிவுடையார் கொள்ளார்; பிறர் கொள்வர். ஆதலால், கொள்ளார் அறிவுடையார் என்பத னொடு மாறுகொள்ளாது. அன்றியும், பிற தகுதிகளால் பிறர் கொள்வர்; அதனால் அவரடையும் பயன் சிறிதும் இன்று என்பது விளக்கியது எனல் அமையும்.

—தொகுப்பாசிரியர்.

403. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். (ங)

உரைப்பகுதி :

பரிமே:— கல்லாதவரும் நனி நல்லர் - கல்லாதாரும் மிக நல்லராவர், கற்றார்முன் சொல்லாது இருக்கப்பெறின் - தாமே தம்மை அறிந்து கற்றாரவையின்கண் ஒன்றனையும் சொல்லாதிருத்தல் கூடுமாயின்.

உம்மை இழிவுசிறப்பும்மை. தம்மைத் தாம் அறியாமையின் அது கூடாது என்பார் 'பெறின்' என்றும், கூடின் ஆண்டுத் தம்மை வெளிப்படுத்தாமையானும், பின் கல்வியை விரும்புவராகலானும் நனி நல்லர் என்றும் கூறினார். இவை மூன்றுபாட்டானும் கல்லாதார் அவைக்கண் சொல்லுதற்கு உரியரன்மை கூறப்பட்டது.

மணக்:— கல்லாதவரும் ஓரிடத்து மிகவும் நல்லவராவர்; கற்றவர் முன்பு உரையாடாதிருக்கக் கூடுமாயின் எ - று.

சொல்லாதொழிய அறிவாரில்லையாம் என்றவாறாயிற்று. இது, கல்லாதார்க்கு உபாயம் இது என்றது.

பரிதி:— கல்லாதாரும் மிகவும் நல்லராகுவர்; கல்விமான்கள் முன்னே வாய்திறவாமல் இருப்பாராகில் எ - று.

காளிங்:— கசடற நூல்களைக் கற்றிலாதோரும் அறிவினால் பெரிதும் நல்லர் என்று கொள்ளலாம்; எப்பொழுது எனின், மற்று அக் கசடறக்கற்ற மாசற்றார்முன் தமது நாவுரைநடையைக் காட்டாதிருக்கப் பெறின் எ - று.

நனி என்பது மிகுதி.

மேற்கோள்பகுதி:

நச்:— சீர்வகை ஒரூஉமோனைக்கு மேற்கோள். (தொல். பொருள் செய். 92.)

ஒப்புமைப்பகுதி :

" இன்னா, கல்லாதான் கோட்டி கொளல். " —இன்னா. 29.

" கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றாத்தைவாய் அங்காத்தல் - மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மின் என்பவே மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல்." நீதிநெறி. 23.

முதுமொழிவெண்பாக்கள் :

" புத்தர்மிக வாது புகன்றதுபோய் வாதவூர்
சித்தர்முனே தானார் சிவசிவா - ஒத்தநெறி. —சிவசிவ. 41.

404. கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். (௪)

உரைப்பகுதி

பரிமே:— கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும் - கல்லாதவனது ஒண்மை ஒரோவழி மிக நன்றாயிருப்பினும், அறிவுடையார் கொள்ளார் - அறிவுடையார் அதனை ஒண்மையாகக் கொள்ளார்.

ஒண்மை - அறிவுடைமை. அது நன்றாகாது; ஆயிற்றாயினும் ஏரல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடாகலின், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியார் என்பதாம்.

மணக்:— கல்லாதானது ஒண்மை மிகவும் நன்றாயிருப்பினும் அதனை ஒண்மையாகக் கொள்ளார் அறிவுடையார் எ - று.

ஒண்மை எனினும் அறிவு எனினும் சாமர்த்தியம் எனினும் அமையும். இது கல்லாதார் ஒள்ளியராயினும் மதிக்கப்படார் என்றது.

பரிதி:— கல்லாதவன் வயதால் பெரியவனாகிலும் அறிவுடையார் கொள்ளார்கள் எ - று.

காளிங்:— இடம்படு நூல்களை இனிதாகக் கற்றிலாதானது அறிவு மிகவும் நன்றாயினும் அதனை ஓர் அறிவாகக் கைக்கொள்ளார்; யாரெனில் கல்வியாற் சிறந்த அறிவுடையோர் எ - று.

ஒட்பம் என்பது ஒள்ளிமை.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஒட்பம் - அறிவுடைமை. 'ஏரலெழுத்துப் போல்வது' ஏரல் - நத்து. வடநூலார் குணாக்ஷரம் என்பர். இதனால், *'நீர்மேல் எழுத்து' என்பது பாடமல்லாமையும் கல்லாதானொட்பத்துக்கு உவமையாகாமையும் அறிக.

மேற்கோள்பகுதி :

நச்:— கட்டளை வருக்கமோனைக்கு மேற்கோள். (தொல். பொருள். செய். 94:)

ஓப்புமைப்பகுதி:

" கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார்முன்
சொல்லுங்கால் சோர்வு படுதலால் - நல்லாய்
வினைமுந் துறுத உரையில்லை இல்லைக்
கனமுந் துறுத வினை. —பழ. நா.

" கல்லாதான் கண்ட கழிநுட்பம் காட்டரிதால்
நல்லேம்யாம் என்றொருவன் நன்கு மதித்தலென்
சொல்லால் வணக்கி வெகுண்டடு கிற்பார்க்கும்
சொல்லாக்கால் செல்லுவ தில்." ஷை

" போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொள் நகையினர் வாய்ச்சோா - தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை உடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில்." —நீதிநெறி. 24.

" கல்லாதான் தான்காணும் நுட்பமும்....
நல்லார்கள் கேட்பின் நகை" —சிறுபஞ்ச. 5.

" கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி." —வாக்கு. 14.

" ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம் " —கொன்றை. 91.

*சில பிரதிகளில் இவ்வாறு இருக்கும் போலும்.

முதுமொழிவெண்பாக்கள்:

" ஒருவர் சிறிது ... ... லுமையாகிற்
கருள்வதன்முன் ப . . . , தறிந்து - குருமுகத்தால்"
—முதுமொழி. 70.

குறிப்பு;

இயற்கையறிவு ஒளிதிட்டப் பெறுவது கல்வியான் ஆதலின், கல்லாதாரிடை இயற்கை யறிவான் ஓர்காலத்து வெளிப்பட்ட நுணுக்கமும் சொல்திறம் இன்றி வெளிப்படலின், கற்றூர், குருட்டுப்பூனை விட்டத்திற் பாய்ந்தாற்போல்வதோர் அறிவு என்று அதனைக்கொள்ளார் என்பதாம்.

ஒருமைக்கண் தாம்கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்தாதலின் இப் பிறவியிற் கல்லாதாளுயினும், சென்ற பிறவியின் கல்வியறிவு, ஒட்பமாக வெளிப்படின் அதனைக் கொள்ளார் எனின் முற்சொன்னது பயனில் கூற்ருய்க் கழியுமேயெனின், அற்றன்று. ஊமைத்தசும்பில் நீர் நிறைந்திருந்தாலும் தாகங்கொண்டாரால் குடிக்க முடியாதவாறுபோல, இவன் அறிவு நிரம்பியிருந்தாலும் கல்வியாளுய்ந்து தொகுத்துச் சொல்லுமாற்றல் இன்மையின் கற்ருர் கொள்ளாராயினுர் என்க. ஆதலின் மலைவன்று.
—தொகுப்பாசிரியர்.

405. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். (ஞ)

உரைப்பகுதி:

பரிமே:— கல்லா ஒருவன் தகைமை - நூல்களைக் கல்லாத ஒருவன் யான் அறிவுடையேன் எனத் தன்னை மதிக்கும் மதிப்பு, தலைப்பெய்து சொல்லாடச் சோர்வுபடும் - அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக் கெடும்.

கற்றவன் என்பது வருவிக்கப்பட்டது. யாதானும் ஓர் வார்த்தை சொல்லும் துணையுமே நிற்பது; சொல்லியவழி வழுப்படுதலின், அழிந்து விடும் என்பதாம். இவை இரண்டுபாட்டானும் கல்லாதாரது இயற்கை யறிவின் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— கல்லாத ஒருவனது பெருமை கற்றவன் கிட்டி உரையாட மறையும் எ - று.

இது பெருமையுடையராயினும் மதிக்கப்படார் என்றது.

பரிதி:— கல்லாத ஒருவன் பெருமையெல்லாம் *களறியேறி வார்த்தை சொல்லக்கெடும் எ - று.

காளிங்:— உலகத்துக் கற்றிலா ஒருவன் தனது செல்வத் தகைமையும் பிறவும் கொண்டு என்ன பயன்? மற்றுக் கற்றுவல்ல சான்றோருழைச் சென்று தலைப்பட்டு உரையாடவே அவை அனைத்தும் சோர்வுபடும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார் காணின் இலையாம் - எழுத்தறிவார்
ஆயும் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை." —நன். 21.

முதுமொழிவெண்பாக்கள்:

" ஈசரிடத் தன்பர் என்பவர்பால் புத்தரெலாம்
பேசுமிடத் தூமையாம் பெற்றிமையால் - ஆகமத்தைக்".
—முதுமொழி. 71.

" ஈண்டிவச வேசர்முன்னோர்க் கிடமிழந்தார் வீண்வாதம்
மூண்ட மறையோர் முருகேசா - வேண்டுவன." —முருகேசர். 41.

" உத்தரத்துக் குத்தரங்கள் ஓதறியார் போழுகு
சித்திரத்தோ டொக்குந் திருமலையா - புத்தியினால்" —திருமலை.

குறிப்பு:

கல்லாரும் கற்றாரும் வடிவான் மக்களேயாயினும், சொல்லால் வெளிப்படுவர் என்றவாறு. குயிலும் கருப்பு, காகமும் கருப்பாயினும் வேனிற்காலம் வந்தவிடத்துக் குயில் குயில்தான் காகம் காகம்தான் என்பது ஈண்டு கருதுதற்குரியது.
—தொகுப்பாசிரியர்.

406. உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். (சு)

உரைப்பகுதி:

பரிமே:— கல்லாதவர் - கல்லாதவர், உளர் என்னும் மாத்திரையர் அல்லால் - காணப்படுதலான் இலர் அல்லர்; உளர் என்று சிலர் சொல்லும் அளவினராதல் அன்றி, பயவாக் களர் அனையர் - தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளையாத களர் நிலத்தோடு ஒப்பர்.

* களறியேறுதல் - அரங்கிலேறுதல்.

களர் தானும் பேணற்பாடழிந்து உயிர்கட்கும் உணவு முதலிய உதவாததுபோலத் *தாமும் நன்குமதிக்கற்பாடழிந்து, பிறர்க்கும் அறிவு முதலிய உதவார் என்பதாம். இதனுல் கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது.

மணக்:— உளரென்னும் அளவினையுடையாரல்லது, பயன் படாத களர்நிலத்தை யொப்பர் கல்லாதவர் எ - று.

இது பிறர்க்குப் பயன்படார் என்றது.

பரிதி:— கல்வியில்லாதார் செல்வம் பெற்ருர்களாகில், பெருமை பெறுவர்; அது எப்படி என்ருல் விளைநிலத்தின்முன்னே உவர்நிலம்போல எ - று.

காளிங்:— கல்லாதார் வெறும் பிணம் ஆதலன்றிச் சிறிது உயிரோடு நடைபெறுதலை உடையரென்று சொல்லிக்கொள்ளும் அள வின்றி மற்று வித்தியது ஒன்று விளைதல் சிறப்பில்லாத களர்த்தரையே ஒப்பு; அவர்க்குக் கல்வியினுல் விளையும் மறுமை ஆக்கமும் இல்லை எ - று.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— பயப்பு என்ற உரிச்சொல் பயன் என்னும் பொரு ளில் வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 303)

நச்:— ஷை (தொல். சொல். 307.)

பெருந்:— முதலடி நாற்சீராய், கடையடி முச்சீராய் வந்த குறளுக்கு மேற்கோள். (வீர. 127.)

407. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் - நுண் ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களினும் சென்ற அறிவு இல்லாதவ னுடைய எழுச்சியும் அழகும், மண் மாண் புனை பாவை அற்று - சுதையான் மாட்சிமைப்படப் புனைந்த பாவையுடைய எழுச்சியும் அழகும்போலும்.

அறிவிற்கு மாட்சிமையாவது பொருள்களைக் கடிதிற்காண்டலும் மறவாமையும் முதலாயின. பாவை ஆகுபெயர். [1]'உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிது' ஆகலான் எழில் நலங்களும் ஓர் பயனே எனினும், நூலறிவு இல்வழிச் சிறப்பில என்பதாம். இதனான் அவர் வடிவழகால் பயனின்மை கூறப்பட்டது.

மணக்:— நுண்ணியதாகிய மாட்சிமைப்பட்ட ஆராய்ச்சியுடைய கல்வியில்லாதான் அழகு, மண்ணினாலே நன்றாகச்செய்த பாவையின் அழகினை யொக்கும். எ - று

இஃது அழகியராயினும் மதிக்கப்படார் என்றது.

பரிதி:— நுண்ணிய அறிவில்லாதவன் அழகு, மண்ணினால் பண்ணின பொம்மைக்கு நிகராம் எ - று.

காளிங்:— நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டு [2]எஃகுதலை உடைத்தாயுள்ள ஞானத்தைத் தருவதாகிய நூலினைக் கற்றிலாதான் எழில்நலமானது பலவகைப்பட்ட நிறங்களால் அழகு புனைந்த பாவையைப்போல உறுப்பழகு உண்டு உணர்வழகு இல்லை எ - று.

நுழைதல் என்பது எஃகுதல்: தேறுதல். புலம் என்பது அறிவு.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— எழில் - எழுச்சி. 'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா, கற்பும் ஏரும் [3]எழிலும் என்றா' (தொல். பொருளியல். 53.) என்னும் பொருளியற் சூத்திரத்தில் காண்க. 'இல்லம் இளமை எழில் வனப்பு' (53)என்றார் நாலடியாரிலும்.

மேற்கோள்பகுதி:

மயிலை:— 'நுண்மாண்......அற்று; நுண்ணறிவில்லாதான் எழில் நலம் மண்புனை மாண்பாவை எழில் நலம் எற்று அற்று என வினையும் வினையுள் அடங்கும் வினைக்குறிப்பும் கொண்டு முடிதலின் வினை எச்சம்' என்பர். (நன். 359.)

---

[1]சீவக. 2752. [2]எஃகுதல் - வலியாதல். [3]எழிலாவது வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளரும் என்பது போன்று காட்டுதல்'. -நச்சினார்க்கினியர்.

சிவஞான:— 'மண்மாண் புனை பாவையற்று என்புழி மாட்சிமைப் பட என்று பொருள்பட்டு முதனிலைத் தனிவினைகள் வினையெச்சமாதலும் உண்டு' என்பர். (நன். 351.)

சுவாமி:— ஷை (இ. கொ. 66.)

குறிப்பு:

உடலழகினுக்கும் ஒளிதருவது உயிரழகாகிய கல்வி என்றவாறு.

—தொகுப்பாசிரியர்.

408. *நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே*
கல்லார்கண் பட்ட திரு. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— *நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாது - கற்றார் மாட்டுநின்ற வறுமையினும் இன்னாது, கல்லார்கண் பட்ட திரு - கல்லாதார் மாட்டுநின்ற செல்வம்.*

இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தத்தம் நிலையினன்றி மாறிநிற்றலான் தாம் இடுக்கட்படுதலும் உலகிற்குத் துன்பம் செய்தலும் இரண்டற்கும் ஒக்குமாயினும், திரு கல்லாரைக் கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிற்றலான், வறுமையினும் திரு இன்னாது என்றார். இதனால் அவர் திருவின்குற்றம் கூறப்பட்டது.

மணக்:— *நல்லார்மாட்டு உண்டாகிய வறுமை போல, பிறர்க்கு இன்னாமையைச் செய்யும் கல்லாதார்மாட்டு உண்டாய செல்வம் எ - று.*

இது செல்வம் உண்டாயின், பிறரைத் துன்பமுறுவிப்பர் என்றது.

பரிதி:— *நல்லோரிடத்தில் வறுமை மிடைப்படும்; அதுபோலே மிடைப்படும் கல்லாதாரிடத்தில் செல்வம் எ - று.*

காளிங்:— *கல்வியிற் சிறந்த நல்லறிவாளரிடத்து உளதான வறுமையினும் சால இன்னாதே; கல்வியின் விளங்கு நல்லறிவில்லாதார்*

கைப்பட்ட செல்வமானது. அதுகொண்டு தாம் இனிது நுகர்தலும், தம் சுற்றம் ஓம்பலும், நட்டோர்க்குப் பகுத்தலும், வறியவர்க்கு உதவலும், மற்றும் பிற நல்லறம் செய்தலும் என்னும் இவை முதலிய இனிய பயன் கோடலின்றிச் சிறியதே உண்டு வறிது உயிர்வாழும் தன்மையர் ஆகலான் குற்றங்கள் பலவும் உடையர் எ - று.

மேற்கோள்பகுதி :

மயிலை:— கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபு இடப் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (நன். 301.)

காரி:— உவமையுள் ஒருவகைக்கு மேற்கோள். (மாற. 122.)

சுப்பிர:— தெரிதருதேற்ற உவமைக்கு மேற்கோள். (தண்டி., சூ. 39 உரை.)

ஒப்புமைப்பகுதி:

"மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்
நல்லறி வுடையோர் நல்குரவு
உள்ளுதும் பெருமயாம் உவந்துநனி பெரிதே." —புறம். 197 : 15 - 18.

"எறிநீர்ப் பெருங்கடல் எய்தி இருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை அறியாதார் ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை." —நாலடி. 275.

"சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே - தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மாணிழாய் மோரின்
முதுநெய்தீ தாகலோ இல்." —பழ - நா.

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்டதிருக் கண்டாயே." —தமிழ். 194.

"மெய்ந்நெறி உணர்கிலார் வெறுக்கை பெற்றது
துன்னிய கிளைக்கொரு துன்ப மாதல்போல்." —கந்த.

முதுமொழிவெண்பாக்கள்:

" எள்ளா விளக்கான்பால் ஏற்றக் கலியரில்லாள்
கொள்ளாரே ஏதும் கொடாருலகின் - உள்ளார்தாம்." —திருத். 59.

குறிப்பு:

கல்லார்கட்பட்ட திரு, கல்லாதவனைக் கெடுத்தலோடமையாது பிறர்க்கும் கேடுதருதலைக் காண்க. நல்லார்கட்பட்ட வறுமை, வறுமையிற் செம்மையாக மதிக்கப் பெறும்.

—தொகுப்பாசிரியர்.

409. *மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்*
கற்றார் அனைத்திலர் பாடு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— *கல்லாதார் மேற்பிறந்தார் ஆயினும் - கல்லாதார் உயர்ந்தசாதிக்கண் பிறந்தார் ஆயினும், கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்துப் பாடு இலர் - தாழ்ந்தசாதிக்கண் பிறந்து வைத்தும் கற்றாரது பெருமை யளவிற்றாய பெருமையிலர்.*

உடலோடு ஒழியும் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லும் கல்வியுயர்ச்சி சிறப்புடைத்து என்பதாம். இதனால் அவர் சாதியுயர்ச்சியால் பயனின்மை கூறப்பட்டது.

மணக்:— *கல்வியில்லாதார் உயர்குலத்தில் பிறந்தாராயினும், இழிகுலத்துப் பிறந்தும் கற்றாரோடு ஒத்த பெருமையிலர் எ - று.*

இது குலமுடையராயினும் மதிக்கப்படார் என்றது.

பரிதி:— *மேலான குலத்திலே பிறந்தும் கல்வியில்லாதார்க்குக் கீழான சாதியிலே பிறந்தும் கல்வி உள்ளார்க்குள்ள பெருமையத்தனை இல்லை எ - று.*

காளிங்:— *உலகத்துக் கல்லாதாராகிய மக்கள் உயர்குடிப் பிறந்து ஒள்ளியர் ஆயினும், மற்றுக் கீழ்க்குடிப் பிறந்தும் கற்றாரைப் பால்வதோர் பெருந்தன்மை என்றும் இலர் எ - று.*

ஒப்புமைப்பகுதி:

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயு மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே." —புறம். 183.

"களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினும் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்." நாலடி. 133.

"தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணின் கடைப்பட்டான் என்றிகழார் - காணாய்
அவன்துணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்துணையா நல்ல கொளல்." ௸. 136.

"திரியழல் காணின் தொழுப விறகின்
எரியழல் காணின் இகழ்ப - ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டும் உலகு." —நான்மணி. 64.

"உடல்வயத் தாகும் சாதி உயர்ந்தவர் சாதி தாழ்ந்தோர்
திடமுற உயிரி னோடு செல்லுறும் கல்வி தம்மால்
அடர்தரும் பெருமை எய்தார் ஆதலால் அகக்கண் ணொளித்
தொடர்புறும் கல்வி கல்லாத் தொழிலினை விடவே வேண்டும்."
—விநா, அரசி. 47.

முதுமொழிவெண்பாக்கள் :

"மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலம்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா - உய்த்தறியின்."
—சோமேசர். 41.

'கானத் திருநீல கண்டயாழ்ப் பாணரைப்போல்
ஞானத் தலைவனுக்கு நட்பினரார் - மானத்து.'' —திருத். 88.

410. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

உரைப்பகுதி :

பரிமே:— விலங்கொடு மக்கள் அனையர் - விலங்கோடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர் அத்துணைத் தீமையுடையார், இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் - விளங்கிய நூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர்.

விலங்கு, நூல் சாதிப்பெயர். விளங்குதல் - மேம்படுதல். விலங்கின் மக்கட்கு ஏற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றார்கண்ணே யாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினரல்லர் என்பதாம். மயக்க கிரனிறை. இதனால் அவர் மக்கட்பிறப்பால் பயன் எய்தாமை கூறப்பட்டது.

மணக்:— விலங்குச் சாதியோடும் மக்களோடும் உள்ள வேறுபாடு உடையர்; விளங்கின நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர் எ - று.

இது கல்லாதார் விலங்கு என்றது.

பரிதி:— நாற்கால் சீவனாகிய மிருகத்திற்கும் மனிதற்கும் எத்தனை தூரமுண்டு; அத்தனை தூரமுண்டு கல்லாதாற்கும் கல்வியுள்ளபேர்க்கும் எ - று.

காளிங்:— இவ்வுலகத்துப் பிறந்த விலங்குச் சாதிக்கும் மக்கட்கும் வேற்றுமை போல, விளங்கிய நூல்களைக் கற்றுணர்ந்த சான்றோரோடும் மற்றைக் கல்லாதாரோடும் வேற்றுமை உடைத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— எதிர் நிரல் நிறை. 'சாயலும் நாணும் அவர் கொண்டார். (1183.) என்பதும் அது. நன்மையை ஒத்த தீமை என்றதனால் 'கெடுப்பதூஉம்' (15.) 'இழிவறிந்து உண்பான்' (944.) என்பனவும் அவ்வாறும்.

மேற்கோள்பகுதி:

மயிலை:— எதிர்தொடங்கிப் பொருள்கொள்ளும் எதிர்ப்பெயர் நிரல்நிறைக்கு மேற்கோள். (நன்-413.)

சுவாமி:— 'விலங்கொடு மக்கள் அனையர்' என்பது மூன்றனுருபு ஒப்பலொப்பில் வந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 54.)

யா - வி:— எதிர்நிரல்நிறைக்கு மேற்கோள். (சூ. 95.)

சுப்பிர:— சாதிக்கேற்ற உவமைக்கு மேற்கோள் காட்டி, 'இதில் கல்லாத மாந்தர்சாதிக்கு விவேகமற்ற மிருகசாதியை உவமை கூறியமை காண்க' என்பர். (தண்டி. சூ. 90 உரை.)

ஒப்புமைப்பகுதி:

"திருகு நெஞ்சின் வஞ்ச ராகி இளைஞர் தீமை செய்தகால்
உருகு கின்ற தாதை நீஉ டன்ப டுத்தி ருப்பதோ
மிருக மன்று பறவை யன்றி ரக்க மின்றி மேவுநின்
அருகு வந்த ணைந்த தெங்கள் அறிவி லாமை யாகுமே."

—வில்லி. சூது. 184.

முதுமொழிவெண்பாக்கள்:

"கல்லாரும் நல்லாரே கற்றோர் சபைநடுவே
செல்லா திருக்கின் தினகரா - சொல்லின்." —தினகர. 44.

குறிப்பு:

விலங்கினும் பயன்படுவ உண்டாதலின் நன்மை தீமையைக் கருதிற்றன்று. கற்றவர் கல்லாதவரிடையுள்ள வேறுபாடுகள் விலங்கிற்கும் மக்களுக்கும் உள்ள அவ்வளவு எனக்குறித்தவாறு. மாவும் மாக்களும் ஐயறிவினவாதலின் கற்றார் கல்லார் இவர்களிடையுள்ள வேறுபாடு பகுத்தறிவும், அஃதின்மையுமே என்பது குறிப்பு. கேள்விஞானம் பேரவையில் பேசப் பயன்படாது; தனக்குத் தளர்ச்சி வந்தவிடத்துத் தன்னைத் திருத்திக்கொள்ளப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை.

பரிமே:— *அரங்கின்றி, கல்லாதான்சொல், கல்லாதவரும், கல்லாதானொட்பம், கல்லா ஒருவன், உளரென்னும், நுண்மாண், நல்லார்கண், மேற்பிறந்தார், விலங்கொடு.*

மணக்:— *அரங்கின்றி, உளரென்னும், கல்லாதவரும், கல்லாதானொட்பம், கல்லா ஒருவன், மேற்பிறந்தார், நுண்மாண், கல்லாதான்சொல், நல்லார்கண், விலங்கொடு.*

பரிதி:— *அரங்கின்றி, கல்லாதான்சொல், கல்லாதானொட்பம், கல்லாதவரும், கல்லா ஒருவன், உளரென்னும், நல்லார்கண், நுண்மாண், மேற்பிறந்தார், விலங்கொடு.*

காளிங்:— *அரங்கின்றி, நுண்மாண், கல்லாதானொட்பம், கல்லாதவரும், உளரென்னும், நல்லார்கண், கல்லா ஒருவன், கல்லாதான்சொல், மேற்பிறந்தார், விலங்கொடு.*

42. கேள்வி.

தொகுப்புரை:

[செல்வங்கள் பலவற்றினும் சிறந்த செல்வம் கேள்விச் செல்வம். செவிக்குக் கேள்வியாய உணவில்லாதபோது ஏதோ ஒருசிறிது வயிற்றுக்கும் உணவளிக்கப் பெறும். கேள்வியாகிய செவியுணவு உட்கொள்பவர்கள் புனித உணவாகிய அவியை யருந்தும் தேவரோடு ஒப்பாவார்கள். ஒருவன் படிக்காவிட்டாலும் படித்தவர்கள் சொல்வதைக் கேட்க. அந்தக் கேள்விஞானம் தளர்ந்தகாலத்து ஊன்றுகோல்போல உதவும். வழுக்கு நிலத்தில் ஊன்றுகோல் போல நல்லொழுக்கம் உடையவர்கள் வாய்ச்சொல் தவறுசெய்கின்ற காலத்து அரசற்கு உதவும். எவ்வளவு கொஞ்சமாயிருப் பினும் நல்லவைகளைக் கேட்க. அதுகேட்டவனுக்கு கேட்டஅளவில் நிறைந்த பயனைத் தரும். நுட்பமாக அறிந்து, நிறைந்த அறிவையுடையவர்கள் தவறியுணர்ந்திருந் தாலும் அறியாக்கூற்றைப் பேசமாட்டார்கள். கேள்வியால் தொளைக்கப்படாத செவிகள் கேட்டாலும் கேட்காத தன்மையுடையன. நுணுக்கமான கேள்விஞான முடையவர்கள் அல்லாமல் மற்றவர்கள் பணிந்தமொழியை உடையராதல் இல்லை. செவியுணவு கொள்ளாமல் வாய்ச்சுவை மட்டும் அறிந்த மக்கள் இருந்தால் என்ன? இறந்தால் என்ன?]

அதிகாரப்பொருள் :

பரிமே:— அஃதாவது கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந் தார் கூறக்கேட்டல். கற்றவழி அதனினாய அறிவை வலியுறுத்தலானும், கல்லாதவழியும் அதனை உண்டாக்குதலானும் இது கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது.

மணக்:— கேள்வியாவது கேள்வியாமாறும் அதனானாகிய பய னும் கூறுதல். நூல்களைக் கற்கமாட்டாதார் அவற்றைக் கற்றார் மாட்டுக் கேட்டலும் அறிவுக்குக் காரணமாம் என்பதனால், அதன்பின் இது கூறப் பட்டது.

பரிதி:— கேள்வியாவது கல்வி இல்லாதபோது கேள்விவேணும் எ - று.

411. செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை. (க)

உரைப்பகுதி :

பரிமே:— *செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் - ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான்வரும் செல்வம், அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை - அச்செல்வம் பிறசெல்வங்கள் எல்லாவற்றினும் தலையாகலான்.*

செவியான்வரும் செல்வம், கேள்வியான் 'எல்லாப்பொருளையும் அறிதல். பிறசெல்வங்கள் பொருளான் வருவன. அவை நிலையா ஆகலானும், துன்பவிளைவின ஆகலானும், இது தலையாயிற்று. அவற்றை ஒழித்து இதனையே செய்க என்பது குறிப்பெச்சம்.

*மணக்:— ... ...

பரிப்:— *செல்வத்துள் வைத்துச் செல்வமாவது செவியுணர்வுடைமையாகிய செல்வம். பயன்படுமிடத்து மற்றுள்ள செல்வம் எல்லாவற்றினும் தலையாம் ஆகலான்.*

பரிதி:— *செல்வமாவது செவி, மெய், வாய், கண், மூக்கு, இவற்றுள் செவியான் விளையும் உணர்வு பெரியது. அது எட்டுவகைச் செல்வத்திலும் பெரியது எ - று.*

காளிங்:— *உலகத்துச் செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்த செல்வம் யாதெனின், செவிச்செல்வம்; ஆகலான், ஒருவன் கேட்பனவற்றுள் தனது செவியினூன், மறுமைக்கு ஆக்கம் இனிதுறக் கேட்கும் கேள்வியே தலைச்செல்வம் எ - று.*

மேற்கோள்பகுதி:

சுவாமி:— *பொருத்தமில் புணர்ச்சிக்கு மேற்கோள்காட்டி, 'செல்வத்து ளெல்லாம் தலை' என்ற இடத்து, 'செல்வமெல்லாவற்றுள்' என்று உருபுபொருந்தலே முறை என்பர்.* (இ. கொ: 108.)

* *இவர் உரை கிடைக்கவில்லை.*

முதுமொழிவெண்பாக்கள் :

" சொல்வைத்த சேரன்உலாச் சொல்லக் கயிலையரன்
செல்லத் திருச்செவியில் சேர்ந்ததே - மல்வைத்த". —திருத். 99.

குறிப்பு:

கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை எனக் கல்வி செல்வம் என்ற இரண்டையும் செல்வம் என்ற ஆசிரியர், செல்வத்துட் செல்வம் என்றுராயின் பொருட்செல்வத்தைக் காட்டினும் கேள்விக்குச் சிறப்புக்கூறினர் என்றுமட்டும் கருதலியலாது. இரண்டையுமே கருதினராதல்வேண்டும். ஆதலால் உழைத்தும், பயின்றும், பெறும் பொருட்செல்வம் கல்விச்செல்வம் இரண்டினும், இருந்து எளிதிற் கொள்ளும் செவிச்செல்வம் சிறந்தது என்பது விளக்கியவாறு.

—தொகுப்பாசிரியர்.

412. *செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— செவிக்கு உணவு இல்லாத போழ்து - செவிக்கு உணவாகிய கேள்வியில்லாதபொழுது, வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும் - வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும்.

சுவைமிகுதியும் பிறப்பயத்தலும் உடைய கேள்வியுள்ள பொழுது வெறுக்கப்படுதலான் இல்லாதபோழ்து என்றும், பெரிதாயவழித் தேடல் துன்பமேயன்றி, நோயும் காமமும் பெருகுதலால் சிறிது என்றும், அது தானும் பின்னிருந்து கேட்டற்பொருட்டாகலான் ஈயப்படும் என்றும் கூறினர். ஈதல் வயிற்றது இழிவுதோன்ற நின்றது. இவை இரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— செவிக்கு உணவாகிய கேள்வி இல்லாதபோது வயிற்றுக்கும் சிறிது உணவுகொடுக்கத் தகும் எ - று.

பெருக உண்ணின் கேள்வியை விரும்பாது காமநுகர்ச்சியை விரும்புமாதலான், சிறிது என்றார். இஃது எல்லாக்காலமும் கேட்கவேண்டும் என்றது.

* 'செவிக்குணர்வு' பரிதிபாடம்.

பரிப்:— இஃது ஒருகால் கேட்டுவிட அமையுமே என்று ஐயுற்றூர்க்கு எல்லாக்காலமும் கேட்கவேண்டும் என்பது கூறப்பட்டது.

பரிதி:— செவியிற் கேள்வி இல்லாதபோது சிறிது வயிறுகிய [1]எறும்புக்கும் ஈய விதனப்படும் எ - று.

காளிங்:— செவிக்கு அமுதமாகிய கேள்வி உணவானது சான்றோருழைக் கிடையாத போழ்தின்கண் சிறிதே வயிற்றுக்கும் உணவு அளிக்க அடுக்கும் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்

" பொருட்டுறையுன் பாட்டேநற் பூசைஎன்று ஊரார்க்கு
அருட்டுறையார் அன்புசெய்வா ரானூர் - மருட்டேர்". —திருக். 46.

குறிப்பு:

'மானம் குலம் கல்வி' என்றபாடலில் பசிவந்திடப் பறப்பவற்றுள் கேள்வி இல்லாமை சிந்தித்து இன்புறக்கூடியது காண்க.

—தொகுப்பாசிரியர்.

413. [2]செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— செவியுணவின் கேள்வி உடையார் - செவியுணவாகிய கேள்வியினை உடையார், நிலத்து அவியுணவின் ஆன்றாரோடு ஒப்பர் - நிலத்தின்கண்ணராயினும், அவியுணவினை உடைய தேவரோடு ஒப்பர்.

செவியுணவு செவியான் உண்ணும் உணவு. அல்வழிக்கண் வந்த இன்சாரியையது னகரம் வலிந்து நின்றது. அவியாகிய உணவு தேவர்க்கு வேள்வித்தீயில் கொடுப்பன. அறிவான் நிறைந்தமையான் ஆன்றார் என்றும், துன்பமறியாமையால் தேவரோடு ஒப்பர் என்றும் கூறினர். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

---

[1] 'எறும்புக்கும்' என உருவகித்ததன் கருத்து விளங்கவில்லை.

[2] 'செவியுணர்வின்' பரிதி பாடம்.

மணக்:— செவிக்கு உணவுபோன்ற கேள்வியை உடையவர் நிலத்தின்கண்ணே இருப்பினும், அவியை உணவாகவுடைய தேவரோடு ஒப்பர் எ - று.

இஃது எல்லாராலும் நன்கு மதிக்கப்படுவர் என்றது.

பரிதி:— செவியிற் கேள்வியுள்ளபேர் பூலோகத்திலே இருந்தும் தேவரோடு ஒப்பாவர். அது எப்படி என்றால், தெய்வலோகத்திலே இருந்தும் பூலோகத்திலே அவிப்பாகங் கொள்ளும் முறைமைபோல எ - று.

காளிங்:— இவ்வையகத்துத் தம் செவிக்கு அமுதமாகிய கேள்வியினை உடையார் யாரை ஒப்பார் எனின், அவியுணவினர் ஆகிய அமரரோடு ஒப்பர்; ஈண்டு மக்களில் இவர்க்கு ஓர் நிகர் இல்லை எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— உணவாகிய கேள்வி என்றுரைத்து, 'இன் சாரியை அல் வழிக்கண் வலிந்து நின்றது' என்றார்; கவர்பொருட்பாடுநோக்கி. *'அக்கின்றவாமணி' யும் (திருக்கோவையார். 68.) அது.

ஒப்புமைப்பகுதி :

" மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம். —கொன்றை. 75.

முதுமொழிவெண்பாக்கள் :

" வெய்யமரப் பேருரைத்த வேடனும்வான் மீகிஎனும்
தெய்வமுனி யானன் சிவசிவா - துய்ய." —சிவசிவ. 42.

குறிப்பு:

கேள்வியுடையார் அவியுணவின் ஆன்றோரோடு நிலத்து ஒப்பர் எனக் கூட்டிச் செவியுணவினைப்பெற்ற சிறியோர் அவியுணவினையுடைய ஆன்றோர்க்கு ஒப்பராவரோ எனவும் பொருள்காணலாம். அவி - சோறு. அவியுணவின் ஆன்றோர் என்றது, உணவாற் பெரியோர் என இகழ்ச்சி குறித்து நின்றசொல். ஒப்பர் என்றது ஒலிக்குறிப்பால் ஒப்பாகார்என்பதை விளக்கியவாறு. அவி - சோறுதலை 'அவிச்சுவை யன்றிக் கவிச்சுவை யறியா' என்பதாலும் காண்க.

—தொகுப்பாசிரியர்.

---

*அக்கு இன் தவா மணி எனப்பிரித்து 'இன் அல்வழிச் சாரியை' என்றார் அதன் உரைகாரர்.

414. [1]கற்றிலன் ஆயினும் கேட்க [2]அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை. (௪)

உரைப்பகுதி :

பரிமே:— கற்றிலன் ஆயினும் கேட்க - உறுதி நூல்களைத் தான் கற்றிலனாயினும், அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக்கேட்க, அஃது ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்றாம் துணை - அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சிவந்துழிப் பற்றுக்கோடாந்துணை ஆகலான்.

உம்மை கற்கவேண்டும் என்பதுபட நின்றது. தளர்ச்சி வறுமையானதல் அறிவின்மையானதல் இடுக்கட்பட்டுழி மனந்தளர்தல். அதனைக் கேள்வியினாய அறிவுநீக்குமாகலின், ஊற்றாந்துணை என்றார். ஊன்று என்னும் ஆகுபெயரின் னகரம் திரிந்து நின்றது.

மணக்:— கற்கமாட்டானாயினும் கேட்க; அக்கேள்வி ஒருவன் தளர்ச்சிக்குத் தாங்குவதொரு துணையாம் எ - று.

இது கேள்வி வேண்டும் என்றது.

பரிதி:— கல்லாதபோதும் கேள்வி உண்டாயிருக்க அது வழுக்குத் துறையில் ஊன்றுகோல் போலே உதவும் எ - று.

காளிங்:— இவ்வுலகத்துள் ஒருவன் கற்கும் நெறியினால் கற்கப் பெற்றிலனாயினும், கற்றுணர்ந்த சான்றோருழைச் சென்று வழிப்பட்டுப் பயிலக்கேட்க. மற்று அக்கேள்வியானது அங்ஙனம் கேட்ட ஒப்பிறந்தோனுக்கு நரகினுட் சென்று விழாது மறுமைநெறிச் செல்லுதற்குப் பெரியதோர் உறுதித் துணை எ - று.

ஒற்கம் என்பது நரகம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஒற்கம் - தளர்ச்சி. ஊற்று - ஊன்றுகோல். ஊன்று என்னும் ஆகுபெயர் னகரந் திரிந்தது.

---

[1]'கற்கிலனாயினும்' காளிங்கர் பாடம். [2]'அஃதொருவன்' 'ஒற்கத்திற்கு' மணக்குடவர் பாடம்.

ஒப்புமைப்பகுதி:

" உணற்கினிய இன்னீர் பிறிதுழியில் என்னும்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார் - கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலின் கேட்டலே நன்று'. —பழ - நா.

" கேள்வி முயல் " —ஆத்தி. 39.

முதுமொழிவெண்பாக்கள்:

" ஊனுக்கூன் என்னும் உரைகண் டுவந்தனரே
தூநற்சீர்க் கண்ணப்பர் சோமேசா - ஆனதனால்." —சோமேசர். 42.

குறிப்பு:

இந்தக்குறள், கேள்வியறிவு தனக்குப்பயன்படும் காலம் அறிவிக்கின்றது. கற்றலிற் கேட்டல் சிறந்ததென்பார் - 'கல்லா தான் ஒட்பம் கொள்ளார்'.' கல்லா தான் சொல் காமுற்று சொல்லாதிருக்கப்பெறின்' என்பவற்றால் கூறிய கல்விச்சிறப்போடு முரண்படுமே யெனின், கேள்விஞானமுடையாரது அறிவு பேரவையிற் பேசப் பயன்படாது; ஆனால் தளர்ச்சிவந்தவிடத்துத் தன்னைத் திருத்திக்கொள்ளப் பயன்படும் என்பது விளக்கியவாறு.

—தொகுப்பாசிரியர்.

415. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— இழுக்கல் உடை உழி ஊற்றுக்கோல் அற்று - வழுக்குதலையுடைய சேற்றுநிலத்து இயங்குவார்க்கு ஊன்றுகோல்போல் உதவும், ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் - காவற்சாகாடு உகைப்பார்க்கு ஒழுக்கம் உடையார் வாயிற்சொற்கள்.

அவாய்நிலையான்வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்கப் பட்டது. ஊற்றுகிய கோல்போல் உதவுதல் தளர்ந்துழி அதனை நீக்குதல். கல்வியுடையரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலர் ஆகலின், அவர்வாய்ச் சொல் கேட்கப்படாது என்பது தோன்ற ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் என்றார். வாய் என்பது தீச்சொல் அறியாமையாகிய சிறப்புணர நின்றது. அவற்றைக் கேட்க என்பது குறிப்பெச்சம்.

மணக்:— வழுக்குதல் உண்டான இடத்து உதவும் ஊன்றுகோல் போலும்; ஒழுக்கமுடையார் கூறும் சொற்கள் எ - று.

இது கேட்பது ஒழுக்கமுடையார்மாட்டு என்பது கூறிற்று.

பரிதி:— உலகத்துக்குள் ஓதியுணர்ந்த ஒழுக்கமும் கேள்வியும் உள்ளவன், பேரிழுக்காயிருக்கும் ஓதி உணராதபேர்க்கு, ஊன்றுகோல் ஆதாரமாய்த் திரிகிறபேர்க்குக் கோல் உதவிசெய்தது ஒக்கும். எ - று.

காளிங்:— மற்று யாதானும் ஒருவழித் தமது கால் வழுக்குதல் உடைய இடத்துத் தமது கையகத்து உற்றதோர் ஊன்றுகோல் உதவியது எத்தன்மைத்தோ? அத்தன்மைத்து கல்வி ஒழுக்கத்தையுடைய சான்றோர் வாய்ப்பிறக்கும் சொற்கள் எ - று.

சொல் என்பது கேள்வி.

உரைவிளக்கப்பகுதி:

நுண்;— ஊற்றுகிய கோல் என இருபெயரொட்டாகியது மூன் ஆகுபெயரானதுபற்றி என்க. இயங்குவார்க்கு, காவற்சாகாடு உகைப் பார்க்கு என, அவாய்நிலையான் வந்த உவமையடையால் பொருளடை வருவிக்கப்பட்டது.

மேற்கோள்பகுதி :

வெள்ளி:— 'இழுக்கல்......சொல்' என்பவாகலின் பிறர் 'பலவும்' எனினும் குருபரம்பரையாகவரும் அவிச்சின்ன சம்பிரதாய உபதேசத்தில் நிகழும் அநுபவம் உண்டாயினோர் அவர் சொற்களைக் கொள்ளாமை நியாயமாகலின், அவையிற்றை நீக்குதற்கும், பிறருக்குப் பரம்பரையாக வரும் ஞானோபதேசம் இல்லையாகவும் உண்டானவைபோல் சில கற்பித்துக்கூறலின் அது பொருந்தாமைகாட்டி நிராகரிக்குமாறுபோல ஈண்டுக்கூடாது என்பதற்கும் 'குறிவழி அநுபவம் குருமொழி' என்றது. (முத்திநிச். பக். 7.)

ஒப்புமைப்பகுதி :

" வறுமையான் மடமை தன்னால் வருந்திநெஞ் சழியும்காலை
உறுதிசெய் துணையாம் கற்ற உணர்வினை வளர்க்கும் என்றும்
இறுதியில் லாத இன்பம் ஈட்டுமா தலினால் கற்று
மறுவறு ஒழுக்க முள்ளார் வாய்மொழி கேட்டல் வேண்டும்.

—விநா, அரசி. 48.

" மேன்மக்கள் சொல் கேள்"- —ஆத்தி: 95.

முதுமொழிவெண்பாக்கள்

" கற்றிலனே யாயினும் கேட்க அஃதுஉற்றும்
சிற்றறிவை நீக்கும் தினகரா - முற்றும்." —தினகர. 45.

" ஆலடியாற் பாற்பட்ட அந்தணர்போல் உய்வதற்குச்
சீலம் உடையார்பால் செவிதாழ்க்க - சால." —முதுமொழி. 72.

" பாகவதம் கேட்டும் பரீக்ஷித்து வைகுந்தத்
தேகஉரு வானன் இரங்கேசா - சோக.' —இரங். 42.

குறிப்பு:

சொல்லும் செயலும் வேறுபட்ட போலிக்கல்வியாளர் வாய்ப்பேச்சுப் பயனளியாது. ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்லே ஊன்றுகோல்போல உதவுவது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

416. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (சா)

உரைப்பகுதி :

பரிமே:— எனைத்தானும் நல்லவை கேட்க - ஒருவன் சிறிதாயினும் உறுதிப்பொருள்களைக் கேட்க, அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் - அக்கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெருமையைத்தரும் ஆகலான்.

எனைத்து அனைத்து என்பன கேட்கும்பொருண்மேலும் காலத்தின் மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளிபோல வந்தீண்டி எல்லா அறிவு களையும் உளவாக்கலின், சிறிது என்று இகழற்க என்பதாம்.

மணக்:— எவ்வளவிற்றாயினும் நல்ல நூல்களைக் கேட்க; அக் கேள்வி அவ்வளவிற்றேயாயினும், நிரம்பின பெருமையைத் தரும் எ-று

இஃது எல்லாக்காலமும் கேட்டிலனாயினும், கேட்குங்கால் நல்லது கேட்கவேண்டும் என்றது.

பரிதி:— என்றென்றும் ஏதாயினும் நல்லதே கேட்க; அது, என்றென்றும் பெருமையே தரும் எ - று.

காலிங்:— எவ்வளவைத்தேனும் சிறிது என்று இகழாது சான்றோருழைச் சென்று நல்லவற்றிலே சில கேட்டுக்கொள்க. அது சிறிதே யாயினும் ஒருவர்க்குப் பெரிய உபதேசமாய் முடியும்; ஆகலான் அமைந்த பெருமையவாகிய முத்தியைக் கொடுக்கும் எ - று.

*இனி, மற்று, உலகத்து அரசர்க்கும் பிறர்க்கும் இக்கல்வியும் கேள்வியும் சிறந்த ஞானத்தைப் பயக்கும்; ஆதலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"பல வாய்க்கால் ஆறாய்ப் பெருகும்" பழ.

"சிறுதுளி பெரு வெள்ளம்" ,,

"கண்டது கேட்கப் பண்டிதன் ஆவான்" ,,

முதுமொழிவெண்பாக்கள்

" அத்தனையீ மப்பலியால் அர்ச்சித்து வேந்துரையின்
முத்திபெற்றான் சண்டன் முருகேசா - நத்தி." —முருகேசர். 42.

குறிப்பு:

எனைத்து அனைத்து என்பன கேட்கும்பொருண்மேலும் காலத்துமேலும் நின்றது என்பதை நிரனிறையாகக் கொள்ளின், வினவப்பட்டதொன்று யாது அதனையேகருதிச் செல்வது சுட்டாதலின் எனைத்து என்பது பொருள்மேலதாக, அனைத்து என்ற சுட்டடியாகப் பிறந்த சொல்மட்டும் காலத்தின்மேலதாதல் யாங்ஙனம்? என்ற ஐயம் எழும். எனைத்து அனைத்து என்பன பொருளும் கால முமாகிய இரண்டனையும் உணர்த்திற்று எனின், கேட்டவை சிறுபொழுதில் நன்மை பயப்பதாகச் சிற்றின்பமாக ஒழியும். நற்கேள்வியோ ஆயுள்வரை மனத்துான்றிப் பயன் அளிப்பது. இதனைச், 'சொன்னான் ஒரு சொல்' என்ற ஆன்றோர் மொழிகளிலும் மிகச் சிறிய ஒருசொல்லே கேட்டாரது ஆயுள்பரியந்தம் அநுபவத்திற்குரியதாய்ப் பெருமை தந்தமையைக் குருஞானசம்பந்தர் வரலாறு கொண்டு காண்க.

—தொகுப்பாசிரியர்.

*பத்தாவதாக இக்குறளைக் கொண்டமையின் இவ்வாறு இவர் தோற்றுவாய் செய்துள்ளார்.

417. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— *பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார் - பிறழ உணர்ந்தவழியும், தமக்குப் பேதைமை பயக்கும் சொற்களைச் சொல்லார் - இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர் - பொருள்களைத் தாமும் நுண்ணிதாக ஆராய்ந்து அறிந்து, அதன்மேலும் ஈண்டிய கேள்வியினை உடையார்.*

பிழைப்ப என்பது திரிந்துநின்றது. பேதைமை ஆகுபெயர். ஈண்டுதல் பலவாற்றான் வந்து நிறைதல். பொருள்களின் மெய்ம்மையைத் தாமும் அறிந்து, அறிந்தாரோடு ஒப்பிப்பதுஞ் செய்தார் தாமதகுணத்தான் மயங்கினராயினும், அவ்வாறு அல்லது சொல்லார் என்பதாம். இவை நான்குபாட்டானும் கேட்டார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

மணக்:— *ஒரு பொருளைத் தப்ப உணர்ந்தாலும், அறிவின்மையாயின சொல்லார்; ஆராய்ந்து உணர்ந்து நிரம்பிய கேள்வியையுடையார் எ - று.*

இது கேட்டறிந்தார் அறியாமை சொல்லார் என்றது.

பரிதி:— *பிழைத்தும் பேதைவார்த்தை சொல்லார்; *பதார்த்த கேள்வியுள்ளார் எ - று.*

காளிங்: *இவ்வுலகின்கண் தப்பியும் குறிக்கொண்டும் இருவாற்றானும் பேதைமை நிகழும் சொற்களைச் சொல்வது இலர்; மற்று யாரோ எனின், யாம் சான்றோருழைச் சென்று நல்லன கேட்க வேண்டும் என்று கருதிக் கொண்டு பலநாளும் கேட்டுத் தொக்க தொகைக்கேள்வியை உடையவர் எ - று.*

இழைத்து என்பது எண்ணி.

ஒப்புமைப்பகுதி:

*" இம்மூ வுலகின் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன்றும் முற்ற அறிதலால் - தம்மின்
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல்."* —பு - வெ. 167.

**பதார்த்த கேள்வி - சொற்பொருள் அறிவு.*

குறிப்பு:

தாம் நுண்ணிதாக ஆராய்ந்தாலும் தாமதகுணத்தால் தவறாகவும் உணர நேரும். அதனையும் பெரியோர் வாய்ச்சொற்கேட்டலாகிய கேள்வி தெளிவிக்கும். அதனால் பேதைமை வழக்கு சொல்லார் என்பதாம்.

'அவ்வாறு அல்லது சொல்லார்' என்ற பரிமேலழகர் உரைக்கு அங்ஙனம் மயங்கித் தவறானபேதைமைச் சொல்லைச் சொல்லார் எனப் பொருள்காண்க.

—தொகுப்பாசிரியர்.

418. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— கேட்பினும் கேளாத்தகையவே - தம் புலமாய ஓசை மாத்திரத்தைக் கேட்குமாயினும் செவிடாந் தன்மையவேயாம், கேள்வியால் தோட்கப்படாத செவி - கேள்வியால் துளைக்கப்படாத செவிகள்.

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஓசைமாத்திரத்தான் உறுதி எய்தாமையின் கேளாத்தகையது என்றும், மனத்தின்கண் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலின் கேள்வியைக் கருவியாக்கியும் கூறினர். பழைய துளை துளையன்று என்பதாம்.

மணக்:— ஓசைமாத்திரம் கேட்டனவாயினும், அதுவும் கேளாத செவிபோலும்; நல்லோர் கூறும் சொற்களால் துளைக்கப்படாத செவி எ-று.

இது கேள்வி இல்லாதார் செவிடர் என்றது.

பரிதி:— செவி கேட்டாலும் செவிடு ஒக்கும்; கேள்வியினால் துளையிடாத செவி எ - று.

காளிங்:— இவ்வுலகத்துப் பயின்று வருகின்ற வழக்குச் சொல்லளவே யாண்டும் எப்பொழுதும் கேட்டு வரினும் மற்று எஞ்ஞான்றும் கேளாத்தகைமைப் பாட்டன: யாவை எனின், சான்றோருழைச் சென்று தாம் கேட்கும் கேள்வியாகின்ற கூரிய கடைகோலான் இரண்டாவது துளை யிடப்படாத செவிகள் எ - று.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— கேள்வியால் தோட்கப்படாத செவி என்பதை கேள்வி தோளாதசெவி எனத் தொகுத்தல் கூடாது பொருள் வேறு படுதலான் என்பர். (இ. கொ. 78.)

ஒப்புமைப்பகுதி:

"... .... இரும்பிற் போர்த்த
பழுதெண்ணும் வன்மனத்தார் ஓட்டை மரச்செவியர் கேளார் ...".
—சீவக. 1552.

"எய்கணை விழுத்துளை அன்றே செவித்துளை
மையறு கேள்வி கேளாதோர்க்கே." —இரும்பல்.

முதுமொழிவெண்பாக்கள்:

"கற்றறிவு கொள்ளாதார் காதுகுறும் பித்துளையோ
சிற்றெறும்புக் கூடோ திருமலையா - சொற்றவுரை." —திருமலை.

குறிப்பு:

செவி, கடலொலி, சங்கொலிபோன்ற பூதகாரிய ஒலிகளையும், அன்றுட வழக்குச் சொற்களையும் கேட்டலால் உயிர், உறுதி எய்தாமையின் கேட்டும் கேளாத் தகையவாயின. —தொகுப்பாசிரியர்.

419. நுணங்கிய [1]கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— நுணங்கிய கேள்வியர் அல்லார் - நுண்ணிதாகிய கேள்வியுடையர் அல்லாதார், வணங்கியவாயினர் ஆதல் அரிது - பணிந்த மொழியினை உடையராதல் கூடாது.

கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்விமேல் ஏற்றப் பட்டது. வாய் ஆகுபெயர். பணிந்தமொழி பணிவைப் புலப்படுத்திய மொழி. கேளாதார் உணர்வின்மையால் தம்மை வியந்து கூறுவர் என்பதாம். அல்லால் என்பதூஉம் பாடம்.

---

[1] 'கேள்வியஃதில்லார்' பரிதியார் பாடம்.

மணக்:— நுண்ணிதாகிய கேள்வியை உடையார் அல்லாதார், தாழ்ந்தசொற் கூறும் நாவுடையாராதல் இல்லை எ - று.

இது கேள்வியுடையார், தம்மை வியந்து சொல்லார் என்றது.

பரிதி:— நுண்ணிய கேள்வி இல்லாதாற்கு வணக்கமுள்ள சொல் அரிது எ - று.

காளிங்:— கல்வியாற் சிறந்த சான்றோர் உரைக்கும் நுண்ணியவாகிய கேள்வியை யுடையவரல்லது மற்று ஏனையோர், பலரிடத்தும் தாழ்ந்த சொல்லினராதல் பெரிதும் அரிது எ - று.

நுணங்கிய என்பது நுண்ணிமை.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— 'அல்லாதார்' என்றார் இவ் உரையாசிரியர். நச்சினார்க்கினியர் அல்லால் என வினையெச்சக்குறிப்பாக்கினர். பொருளினுண்மை கேள்விமேல் ஏற்றினர்.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— நுணங்கு என்ற உரிச்சொல் நுண்மை என்னும் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 369.)

நச்:— நுணங்கிய கேள்வியரல்லால் என்பது, அன்றி என்னும் செய்தெனெச்சக்குறிப்பு உணர்த்துவதோர் வாய்பாடு, 'அல்லவாயின்' என்று பொருளாயின், இதன் குறிப்பாம் என்பர். (தொல். சொல். 230.)

குணவீர:— நுணங்கிய கேள்வியவர்: நுணங்கு என்பது நுண்மைப் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (நேமி. 59.)

குறிப்பு:

தம்மின் பிறர் அறிவுடைமை கேள்வியால் புலப்படுதலின் பணிவு விளைகின்றது என்பது கருத்து. வணங்கியவாய்: தம்மை வியந்து தருக்காத வாய்ச்சொல்.

—தொகுப்பாசிரியர்.

420. *செவியிற் சுவைஉணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். (௰)

உரைப்பகுதி :

பரிமே:— செவியின் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள் - செவியான் நுகரப்படும் சுவைகளை உணராத வாயுணர்வினையுடைய மாந்தர், அவியினும் வாழினும் என் - சாவினும் வாழினும் உலகிற்கு வருவது என்னை.

செவியானுகரப்படும் சுவைகளாவன சொற்சுவையும், பொருட்சுவையும். அவற்றுள் சொற்சுவை குணம், அலங்காரம் என இருவகைத்து. பொருட்சுவை காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பது வகைத்து. அவையெல்லாம் ஈண்டு உரைப்பின் பெருகும். வாயுணர்வு என்பது இடைப்பதங்கள் தொக்குநின்ற மூன்றும் வேற்றுமைத்தொகை; அது வாயான் நுகரப்படும் சுவைகளை உணரும் உணர்வு எனவிரியும். அவை கைப்பு, காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என ஆறும். செத்தால் இழப்பதும் வாழ்ந்தால் பெறுவதும் இன்மையின், இரண்டும் ஒக்கும் என்பதாம். வாயுணவின் என்று பாடம் ஓதுவாரும் உளர். இவை மூன்றுபாட்டானும் கேளாதவழிப்படும் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— செவியால் நுகரும் இன்பத்தை அறியாத, வாயால் நுகரும் இன்பத்தையறியும் மாக்கள் செத்தால் வரும் தீமை யாது? வாழ்ந்தால் வரும் நன்மை யாது? உலகத்தார்க்கு எ - று.

இது கேள்வியில்லாதார் பிறர்க்குப் பயன்படார் என்றது.

பரிதி:— செவியின் சுவையாகிய கேள்வியில்லாதார் செத்தால் என்? இருந்தால் என்? எ - று.

காளிங்:— சான்றோரால் தம் செவியிற் சொல்லுவதாகிய கேள்விச் சுவையை நுகர்ந்தறியா மாந்தர் ஆகலான், வெறும் வாயுணவினையே ஓர் உணவாக மதித்திருக்கின்றவர் மாய்ந்தால் வரும் சேதமும், இருந்தால் வரும் இலாபமும் என் உலகோர்க்கு? எ - று.

---

*'செவியிற் சுவையுணரார் வாயுணவின்' காளிங்கர், பரிதியார் பாடம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்— குணவலங்காரம் பத்துஞ் சொற்சுவை. 'வீரம், அச்சம் இழிப்பொடு வியப்புக், காமம் அவலம் உருத்திரம் நகை' சாந்தம்: இவை பொருட்சுவை. கைப்பு, காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு: இவை அறுசுவை.

குறிப்பு:

வயிற்றுக் கீயப்படும் உணவால் விளைந்த வாயுணர்வும் உயிர் நிலைக்க உடல் வளம்பெற்று இருந்து கேட்டுப்பயனெய்துதற்கே ஆதலின் அப்பயனையிழந்த மாக்கள் மடிந்தாலென்ன வாழ்ந்தாலென்ன என்றார். மாக்கள் என்றது வாயுணர்வால் விலங்கோடொத்தல்பற்றி. விலங்காயினும் உழைப்பால் பிறர்க்கு நல்லவகையில் பயன்படும்; இவர்கள் அதுவும் இல்லை யென்பார் அவியினும் வாழினும் என் என்றார்.

பரிமேலழகர் உரையுள், 'சொற்சுவை குணமும் அலங்காரமும் என இரு வகைத்து' எனக்குறிக்கப்பெற்றது. அலங்காரங்களில் யமகம் முதலியன சொல்லணியும், உவமை உருவகமுதலியன பொருளணியுமாதலின் சொற்சுவை என்றது சொல்லான் அறியப்பெறும் தன்மைத்தாதலின் என்னலாம். இவ்விரண்டையும் மேல் கூறும் பொருட்சுவைகள் ஒன்பதனையும் சொல்கருவியாக நின்று உணர்த்துதலின் சொற்சுவையுள் அடக்கலாமே என வினா எழும். அன்றியும் இவ்வொன்பதுமே சுவையணி எனப் பொருளணியுள் கூறப்பட்டிருத்தலும் ஓர்க. அன்றியும் அமைப்பில் உள்ளது குணம் என்றும், சொல்லை யொட்டியது சொல்லணி யென்றும் பொருளை யொட்டியது பொருளணி யென்றும் காவியப்பிரகாசம் பிரதாபருத்திரீயம் முதலிய அணிநூல்கள் கூறுகின்றன. குணம் சொல்லைப்பற்றியே நிற்கும் அழகு என்று ஆனந்தவர்த்தனர் கூறுகிறார். ஆதலால் பொருளணிகள் பொருட்சுவையேயாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள் வைப்புமுறை.

பரிமே:— செல்வத்துள், செவிக்குணவு, செவியுணவின், கற்றில, இழுக்கல், எனைத்தானும், பிழைத்துணர்ந்தும், கேட்பினும், நுணங்கிய, செவியின்.

மணக்:— கற்றில, செவிக்குணவு, எனைத்தானும், இழுக்கல், நுணங்கிய, பிழைத்துணர்ந்தும், செவியுணவின். செல்வத்துள், செவியின், கேட்பினும்.

பரிதி:— கற்றில, எனைத்தானும், செவியுணவின், செல்வத்துள், செவிக் குணவு, நுணங்கிய, பிழைத்துணர்ந்தும், கேட்பினும், செவியின், இழுக்கல்.

காளிங்:— கற்றில, இழுக்கல், கேட்பினும், செல்வத்துள், நுணங்கிய, பிழைத்துணர்ந்தும், செவியின், செவிக்குணவு, செவியுணவின், எனைத்தானும்.

43. அறிவுடைமை.

தொகுப்புரை:

[அறிவு அனைவர்க்குமே இறுதிவாராமற் காக்கும் கருவியாம். அதுவே பகைவர் அழிக்கமுடியாத அரணுமாம். மனத்தைப் போனபோக்கெல்லாம் போக விடாமல் தீமையை விலக்கி நன்னெறியிற் செலுத்துவதே அறிவாம். எதனை யார் சொல்லக்கேட்டாலும் அதன்கண் உள்ள உண்மையை உணரவல்லதே அறிவு. அருமையான பொருளையும் எளிமையாக எல்லார்க்கும் விளங்கச்சொல்லி, பிறர் கூறுவனவற்றுளிருந்தும் நுண்பொருள்களை அறிவதே அறிவு. உலகத்தையே நட்பாக்குவது அறிவு. அங்ஙனம் நட்பாக்கி உலகத்தை நட்புவகையில் பின் விரிவதும் சுருங்குவதும் இன்றி ஒருநிலையனாகவே இருக்கச்செய்வதும் அறிவு. உலகத்தோடு ஒட்டி ஒழுகுவதே அறிவு. அறிவுடையவர்கள் எதனையும் வருமுன்னரே அறியும் ஆற்றலுடையவர்கள். அறிவில்லாதார்கள் அதனை அறிய முடியாதவர்கள். அஞ்சவேண்டிய பழிமுதலானவற்றிற்கு அஞ்சாமை பேதைமை. அங்ஙனம் அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சல் அறிவாளிகள் தொழில். வருமுன்னர்க்காக்கும் அறிவுடையார்க்குத் திடுக்கிடக்கூடிய துன்பம் ஒன்றும் உளதாகாது. அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார் எவ்வளவு பெரிய செல்வமுதலியன உடையாராயினும் இல்லாதவரேயாவார்.]

அதிகாரப்பொருள்;

பரிமே:— அஃதாவது, கல்விகேள்விகளினைய அறிவோடு உண்மையறிவுடையனாதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— அறிவுடைமையாவது, அறிவாவது இன்னது என்பதும், அதனாலாகிய பயனும் கூறுதல். இது கல்வியும் கேள்வியும் உடையராயினும் கேட்டபொருளை உள்ளவாறு உணர்ந்தறிதல் வேண்டுமாகலின் அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— அறிவுடைமையாவது கல்வியினும் கேள்வியினும் பெரிது எ - று.

421. அறிவற்றம் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். (க)

உரைப்பகுதி :

பரிமே:— அறிவு அற்றம் காக்கும் கருவி - அரசர்க்கு அறிவு என்பது இறுதிவாராமல் காக்கும் கருவியாம், செறுவார்க்கு அழிக்கலாகா உள் அரணும் - அதுவேயுமன்றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள் அரணுமாம்.

காத்தல் முன்னறிந்து பரிகரித்தல். உள்அரண் உள்ளாயஅரண்; உள்புக்கு அழிக்கலாகா அரண் என்றுமாம். இதனால் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— ஒருவனுக்குக் குற்றமறைக்கும் கருவியாவது அறிவு; பகைவராலும் உட்புகுந்து அழிக்கலாகா அரணும் அதுதானே எ - று.

இது தனக்குள்ள குற்றத்தை மறைக்கும் என்றும், பிறரால் வரும் தீமையைக் காக்கும் என்றும் அறிவினாலாம் பயன் கூறிற்று.

பரிதி:— அறிவுக்கு ஈனம் வராமல் எப்பொழுதும் அறிவுடைமை யாயிருப்பானாகில் அது சத்துருக்களாலும் அழிக்கப்படாத அரண் எ - று.

காளிங்:— அரசர்க்கு ஆனை குதிரை தேர் காலாள் என்னும் நாற்பெரும் சிறையும் அரண் அன்று; தமக்கு இங்ஙனம் சிறந்த அறிவு யாது? அதுவே தமக்கு ஓர் இடையூறு வரும்வழி பாதுகாக்கும் படையாவது; அதுவும் அன்றிப் பின்னும் பகைவேந்தர்க்கு உள்புக்கு அழித்தல் அரிதாய அரண் ஆவதும் அதுவே எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

“ பிறர்க்குண்டோ இல்லையவர் பேராண்மை குன்ற
மதிக்கண் நுழைமதனை மாய்த்தார் - தமக்கே.” —முதுமொழி. 73.

குறிப்பு:

அறிவு கருவியாகவும், அரணாகவும் பயன்படுகிறது. படையாகிற புறக்கருவி புறப் பகையை வெல்லப் பயன்படும். அறிவுக்கருவி தன்னம்பிக்கையிழத்தலாகிய உட்பகையை ஒழித்து ஊக்கந்தந்து பாதுகாக்கும். அரணைப் பகைவர் எயிற்பாசி, பாசிநிலை முதலிய புறநெறிபற்றிப் பாந்து சென்று அழிப்பர். அறிவரண் உணர்ச்சியாக உயிரோடு ஒன்றியிருப்பதால் பகைவர் பற்றாத நிலையிலும் அழிக்கலாகா நிலையிலும் ள்ளது என்றார். —தொகுப்பாசிரியர்.

422. சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— சென்ற இடத்தால் செல விடா - மனத்தை அது சென்ற புலத்தின்கண் செல்லவிடாது - தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு - அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, தீயதனின் நீக்கி நல்லதன்கண் செலுத்துவது அறிவு.

வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனப் புலம் ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றின்கண் அல்லது செல்லாமையின், இடத்தால் என்றார். விடாது என்பது கடைக்குறைந்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல வேறாக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவு என்றார், அஃது உயிர்க்குணம் ஆகலின்.

மணக்:— உள்ளம் சென்ற இடத்தே உடம்பையும் செல்ல விடாது, தீமையைநீக்கி, நன்மைப்பகுதியிலே செலுத்துவது அறிவாவது எ - று.

இது காமநுகர்ச்சியின்கண் பழியும் பாவமும் பொருட்கேடும் வாராமல் செலுத்துவது அறிவு என்றது.

பரிதி:— ஐம்புலன் சென்ற பாவத்தின் வழியிலே மனத்தை விடாமல் நல்ல வழியிலே செலுத்துவது அறிவு எ - று.

காளிங்:— காற்றினுங் கடிய வேகமுடைமை நெஞ்சிற்கு இயல்பு ஆகலான், அங்ஙனம் அஃது ஓடியவழி ஓட விட்டுக்கொடாது மற்று அதனை ஒழித்து அவ்வுள்ளத்தை நீக்கி நன்மைப் பகுதியிலே வருந்தியும் செலுத்தவல்லது அறிவாவது எ - று.

மேற்கோள்பகுதி :

இளம்:— 'பெருமையும் உரனும் ஆடூஉமேன': இதனானே மேற் சொல்லப்பட்ட தலைமகளது வேட்கைக் குறிப்புக்கண்ட தலைமகன் அந் நிலையே புணர்ச்சியை நினையாது, வரைந்து எய்தும் என்பது பெறுதும். 'சென்ற இடத்தில் .... உய்ப்பதறிவு' என்பவாகலின். (தொல், பொருள். 95)

நச்:— ஷை (தொல். பொருள். 98.)

முதுமொழிவெண்பாக்கள்:

" நன்றறியார் செல்வம் நரிமா துளங்கனியைத்
தின்றறிவ தொக்குந் திருமலையா - வென்றிபெற." —திருமலை.

குறிப்பு:

இடத்தால் - என்பது இடத்தின்கண் எனப்பொருள் தருதலின் உருபு மயக்கம்; காலத்தாற்கொண்டான் என்பதுபோல. மனம் தீநெறிக்கண் தானே செல்லும் அதனைத்தடுக்கவேண்டும் என்பார் 'செலவிடாது' என்றும், நன்னெறிக்கண் அறிவு செலுத்தினுலல்லது தானே செல்லாது என்பார் பிறவினை வாய்ப்பாட்டான் உய்ப்பது என்றும் கூறினர்.

—தொகுப்பாசிரியர்.

423. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் - யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அப்பொருளின் மெய்யாயபயனைக் காணவல்லது அறிவு.

குணங்கள் மூன்றும் மாறிமாறிவருதல் யாவர்க்கும் உண்மையின் உயர்ந்தபொருள் இழிந்தார் வாயினும், இழிந்தபொருள் உயர்ந்தார் வாயினும் உறுதிப்பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் நட்டார் வாயினும் ஒரோவழிக் கேட்கப்படுதலான், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் என்றார். அடுக்குப் பன்மைபற்றி வந்தது. வாய் என்பது அவர் அப்பொருளின்கண் பயிலாமை உணர நின்றது. மெய்யாதல் நிலை பெறுதல். சொல்வாரது இயல்பு நோக்காது அப்பொருளின் பயனைக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வது அறிவு என்பதாம்.

மணக்:— யாதொரு பொருளை யாவர் சிலர் சொல்லக் கேட்பினும், அப்பொருளினது உண்மையை யாராய்வது அறிவாவது எ - று.

இது யாவர் சிலர் நட்டோராயினும் பகைவராயினும் அவர் கூறக் கேட்டவற்றில் தெள்ளியராய் ஆராய்ந்து துணிதல் அறிவு என்றது.

பரிதி:— எந்தப் பொருளாகிலும் யார் வாக்கிலே கேட்டாலும் அந்தப் பொருளை மெய்ப்பொருளாகக் காண்பது அறிவு எ - று.

காளிங்:— யாதானும் ஒருபொருளைக் கீழ்ச்சொன்ன தம்மரபின் உயர்ந்தோர் மாட்டுக் கேட்பினும் கேட்க; மற்று ஏனை இழிந்தோரிடத்துக் கேட்பினும் கேட்க; நாம் கேட்கின்ற பெரும் பொருளின்கண் சிறிதும் குல வேற்றுமை இல்லாமையான், அவர் உரைக்கும் பெரும்பொருளின் உண்மையைத் தெரியக் காண்பதும் மற்று ஏனைய சிறுபொருளை விரும்பாது விடுத்தலுமே அறிவினது இயல்பு எ - று.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— 'அதிமதி நுட்பமோடு அதிகலை கற்பினும் விதியது வசத்தால் விதிவிலக்கு அயர்ப்பார்' என்பதற்கு மேற்கோள். (இ. கொ. 6.)

ஒப்புமைப்பகுதி:

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" —குறள். 355.

" கள்ளி யகிலும் கருங்காக்கைச் சொல்லும்போல்
எள்ளற்க யார்வாயின் நல்லுரையைத் - தெள்ளிதின்
ஆர்க்கும் அருவி மலைநாட நாய்கொண்டால்
பார்ப்பாரும் தின்பர் உடும்பு. —பழ-நா.

" ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரும் உண்டு." —நீதிநெறி. 33.

" இழிந்தவன் உயர்ந்த தொன்றை இயம்பினும் உயர்ந்தோன் வாயின்
இழிந்ததொன் றறினும் உள்ள இயல்பறிந் தோம்பி நீக்கிப்
பொழிந்தெனப் பிறர்தாம் கூறும் புலப்படாப் பொருளும் தெள்ளி
வழிந்தெனத் தெளியக் கேட்போர் மனங்கொளப் புகறல் வேண்டும்."
—விநா. அரசி. 49.

" எவ்வுரை எவர்சொற் றாலும் தன்னறி வேறநோக்கி
அவ்வுரை உண்மை அன்மை அறிபவர் அறிவுளோராம்." —வில்லி.

முதுமொழிவெண்பாக்கள்:

" ஈசனெறி தொண்டர் இயம்புதலும் மெய்ந்நெறிஎன்(று)
ஆசின்று தேவர் அடைந்ததூஉம் - நீதியன்றே." —முதுமொழி - 74.

" பண்டு களிற்றுப் படிமருங்கு வைத்தசெழும்
தண்டமிழை அம்பலவர் தாமகிழ்ந்து - கொண்டமையால்.'' —ஷை 75.

குறிப்பு:

'வாய்' என்பது வேண்டாக் கூற்றுபின் அன்றே! 'அவர் அப்பொருளின்கட் பயிலாமையுணர நின்றது' என்று வேண்டியது முடிக்க வந்ததாகக்கூறலமையும். அங்ஙனம் அன்றி, இடப்பொருளில் வந்தமை கூர்ந்து நோக்குதற்குரியது. வாய் என்பதை வணங்கிய வாயினர் என்புழிப் போல ஆகுபெயராகக் கொண்டு சொல் எனப் பொருள் கொள்ளின் வாய்க்கேட்பின் என்பதற்குச் சொல்லக் கேட்பினும் எனச் செயவெனச்சத்தொடராகப் பொருள் கோடல் சிந்தித்தற்குரியது. ஆதலால் கருத்துப்பொருளாக 'யாவர் யாவர் சொல்லக் கேட்பினும்' எனக் கொண்ட ஆசிரியர்க்கும் யாரிடமாக என இடப்பொருளே தொனிக்கின்றவாறு காண்க. சில பிரதிகளில் 'வாயென்பது..................உணர்கின்றது. மெய்யாதல் நிலைபெறுதல்'. என்றவரையுள்ள சொற்பொருட் குறிப்புக்கள் இல்லாமையும் சிந்திக்க. மற்றொரு பிரதியில் 'யார் யார் வாய் என்பது அவர் அப்பொருளின்கட் பயிலாமையுணர நின்றது' என்று காணப்படுகிறது. இது சிறந்தபாடமாக இருத்தல் சிந்திக்க.

—தொகுப்பாசிரியர்.

424. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. (ச)

உரைப்பகுதி:

பரிமே:— தான் எண்பொருளவாகச் செலச் சொல்லி - தான் சொல்லும் சொற்களை அரியபொருளவாயினும் கேட்பார்க்கு எளியபொருள வாமாறு மனங்கொளச் சொல்லி, பிறர்வாய் நுண் பொருள் காண்பது அறிவு - பிறர்வாய்க்கேட்கும் சொற்களின் நுண்ணிய பொருள் காண அரிதாயினும் அதனைக் காணவல்லது அறிவு.

உடையவன் தொழில் அறிவின்மேல் ஏற்றப்பட்டது. சொல்லு வன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுக என்பார் சொன்மேல்வைத் தும், கேட்பன வழுவினும் இனிது விளங்காவாயினும் பயனைக்கொண் டொழிக என்பார் பொருள்மேல்வைத்தும் கூறினர்.

மணக்:— அறிதற்கரிய பொருளவாகிய சொற்களைத் தெளியப் பொருளாம்படி பிறரிசையச் சொல்லி, பிறர் சொல்லுஞ் சொற்களின் நுண்ணியவாகிய பொருள்களை அவர் சொல்லாமல் தானே காண்பது அறிவாவது எ - று.

இது சொற்பொருள் காண்டல் அறிவு என்றது.

பரிதி:— நல்லோர் செவியும் மனமும் பொருந்த எளிதாகச் சொல்லித் தாம் பெரியோர் வாய்ச்சொற் பொருளைக் காண்பது அறிவு எ - று.

காளிங்:— தாம் சொல்லும் சொல்லின் நுண்மையை மற்று எப்பெற்றியோரும் நெஞ்சினால் தேர்ந்து உணரும் பொருளாகவும் சொல்லி மற்று அதுவேயும் அன்றி, அதனைக் கேட்போர் செவிக்குப் பெரிதும் இனிதாகவும் சொல்லிப் பின்னும் தாம் பிறர் வாய்ச்சொற்களில் தீர்ந்த நுண்ணிய பொருளையும் அங்ஙனம் காண வல்லது யாது? மற்று அதுவே அறிவாவது எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— எண்மை - எளிமை; செல்லச்செல்ல மனம்கொளச் சொல்லல். காண்பவன் அறிவுடையன் என்னுமையால் உடையவன் தொழில் அறிவின் மேல் ஏற்றப்பட்டது.

மேற்கோள்பகுதி:

நச்:— அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கத்தில் ஓதுவித்தலுக்கு மேற்கோள். (தொல். பொருள், 75.)

ஒப்புமைப்பகுதி:

"வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்" —குறள் 646.

"தனக்கு அனுபவமில்லாத பொருளைப்பற்றித் தன் கருத்து இன்னது என்று வெளியிடலாகாது. பிறர் கருத்தை நன்றாக உணர்ந்து அவர் எளிதில் விளங்கிக்கொள்ளுமாறு விடை கூறுதல் வேண்டும்."

—சுக்கிர. அத். 3. சு. 60.

குறிப்பு:

எண்பொருள - எண்ணிப் பார்க்கக்கூடிய அளவிற்கு அரிய பொருளை யுடையனவாகிய சொல் என்பதாம். —தொகுப்பாசிரியர்.

425. உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— உலகம் தழீஇயது ஒட்பம் - உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம். மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு - அந்நட்பின் கண் முன்மலர்தலும் பின்கூம்புதலுமின்றி ஒருநிலையனாவது அறிவாம்.

'தழீஇயது' 'இல்லது' என்பன அவ்வத்தொழின்மேல் நின்றன. உலகம் என்பது ஈண்டு உயர்ந்தோரை. அவரோடு கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்பூப்போல ஒருநிலையே நட்பாயின் எல்லா இன்பமும் எய்துமாகலின், அதனை அறிவு என்றார். காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன. இதனைச் செல்வத்தின் மலர்தலும் நல்குரவில் கூம்பலும் இல்லது என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— ஒருவனுக்கு ஒள்ளிமையாவது உலகத்தோடு பொருந்தினது; அதனை நீர்ப்பூப்போல மலர்தலுங் குவிதலும் இன்றி, ஒரு தன்மையாகச் செலுத்துதல் அறிவு எ - று.

இஃது உயர்ந்தாரோடு நட்புப் பண்ணுதலும் அறிவு என்றது.

பரிதி:— உலகமாகிய பெரியோர்க்குப் பொருந்திய ஒழுக்கத்தில் குறையாமல் ஒருதகைமையாக நிற்பது அறிவு எ - று.

காளிங்:— உலகத்தாருள் முனிவராகிய பெரியோர் மறை முதலிய நூல்கள் பலவற்றானும் தெரிந்துகொண்டதாய ஒட்பம் யாதொன்று, மற்று அதனின் விரிதலும் குவிதலும் என்னும் இரண்டும் இல்லது யாது? மற்று அதுவே அறிவாவது எ - று.

தழீஇயது என்பது பெரியோர் தழுவியது. ஒட்பம் என்பது ஒள்ளிமை.

மேற்கோள்பகுதி:

யா - வி:— காலசைச்சீர் வேண்டாமே நடாத்தும் உபாயம் கண்டாராயினும் இவ்வாறு உரைப்பின் உணர்வினர்க்கன்றி அறிய ஒண்ணாது ஆதலானும், பழைய நூல்வழிநில்லாது தமது மதம்படுத்துச் சொன்னார் என்னும் பாதுகாவலானும், 'உலகம்........அறிவு' என்பவாக

லானும் காக்கைபாடினியார் முதலாகிய ஒருசார் ஆசிரியர் மாப்பெரும் புலவர்தம் மதம்பற்றி நாலசைச்சீர் விரித்தோதினர் இந்நாலுடையார் எனக்கொள்க" (சூ. 95.)

ஒப்புமைப்பகுதி :

"கோட்டுப்பூப் போல மலர்ந்துபின் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி - தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரும் இல்" —நாலடி. 215.

" நலமிக உயர்ந்தோர் தன்மை நண்புறத் தழுவிக் கொள்க
நிலவிய கயத்துப் பூவை நிகர்தரா துயர்ந்த கோட்டின்
அலரென அவர்பால் நிற்க ஆக்கமிக் கடுத்த காலை
மலர்வதும் வறங்கூர் காலைக் கூம்பலும் ஒழிக மைந்தா."
—விநா. அரசி. 51.

குறிப்பு:

ஒட்பம் அறிவு இரண்டும் ஒருபொருளவாயினும் ஒட்பம் - ஒளியும், அறிவு - உணர்வுமாகக் கொள்ளப்படும். மலர்தலும் கூம்பலும் இல்லாது என்றும் ஒருபடித்தான அறிவு உலகந்தழீஇயதாயின் ஒட்பம் என்பதுமாம். உயிரோடு ஒன்றி ஒரு படித்தாயுள்ள அறிவு ஒளியுடையதாதல் உலகத்தையொட்டி நடக்கின்றகாலத்து என்பதை விளக்கியவாறு. இதனையே விளக்கிப் பிற்குறளிற் கூறுதலும் காண்க.
—தொகுப்பாசிரியர்.

426. எவ்வ துறைவ துலகம் உலகத்தோ(டு)
அவ்வ துறைவ தறிவு. (சா)

உரைப்பகுதி :

பரிமே:— உலகம் எவ்வது உறைவது-உலகம் யாதொருவாற்றான் ஒழுகுவதாயிற்று, உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவ்வுலகத் தோடு மேவித் தானும் அவ்வாற்றான் ஒழுகுவது அரசனுக்கு அறிவு.

உலகத்தை எல்லாம் யான் நியமித்தலான் என்னை நியமிப்பார் இல்லையெனக் கருதித் தான் நினைத்தவாறே ஒழுகின் பாவமும் பழியும் ஆகலான், அவ்வாறு ஒழுகுதல் அறிவு அன்று என விலக்கியவாறாயிற்று. இவை ஐந்துபாட்டானும் அதன் இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— யாதொருவாற்றால் ஒழுகுவது உலகம், அதனோடு கூடத் தானும் அவ்வாற்றான் ஒழுகுதல் அறிவாவது எ - று.

அறிவாவது எத்தன்மைத்து என்றார்க்கு, முற்பட உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதல் அறிவு என்றார்.

பரிதி:— பெரியோர் எப்படி நடந்தார் அந்த ஒழுக்கத்திலே நடப்பது அறிவு எ - று.

காளிங்:— இவ்வுலகத்து நீதிப்பொருள் உடையராகிய நாற் பெருங் குலத்தோர் எவ்வகையது ஆகிய நயத்தோடு ஒழுகுவது மற்று அவ் வகையதாகவே என்றும் குறிக்கொண்டு நடப்பதே அறிவாவது எ - று.

உலகம் என்பது உயர்ந்தோர்.

ஒப்புமைப்பகுதி:

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" —குறள். 140.

"எவ்வகை உலகத் துள்ளார் இயல்புடன் ஒழுகு கின்றார்
அவ்வகை ஒழுக்கில் நின்றே அழிவன வருமுன் காத்து."
—விநா. அரசி. 50.

"தேசத்தோ டொத்துவாழ்" —ஆத்தி. 61.

"நாடொப்பன செய்" —ஷை 66.

முதுமொழிவெண்பாக்கள் :

"சனகன் உலகநெறி தாவாத ஞான
தினகரனும் அன்றே சிவசிவா - மனதினுடன்." —சிவசிவ. 43

குறிப்பு:

'ஊரோட ஒக்கஓடு, நாடோட நடுவே ஓடு' என்பதாகலின் உலகத்தோடு ஒட்டி நடப்பதே அறிவு என்றார்.

—தொகுப்பாசிரியர்.

427. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— அறிவுடையார் ஆவது அறிவார் - அறிவுடையராவார் வரக்கடவதனை முன்னறியவல்லார், அறிவிலார் அஃது அறிகல்லாதவர் - அறிவிலராவார் அதனை முன்னறியமாட்டாதார்.

முன்னறிதல் முன்னே எண்ணி அறிதல். அஃதறிகல்லாமை யாவது வந்தாலறிதல். இனி ஆவதறிவார் என்பதற்குத் தமக்கு நன்மை அறிவார் என்றுரைப்பாரும் உளர்.

மணக்:— பிறப்பயக்குமது அறிவார் அறிவுடையாராவர்; அதனை அறியாதவர் அறிவில்லாதவர் ஆவர் எ - று.

இது மேற் சொல்லுவன எல்லாம் தொகுத்துக் கூறிற்று.

பரிதி:— அறிவுடையவர் ஆகும் காரியம் அறிவார்; அறிவில்லாதார் தமக்கான காரியமும் அறியார் எ - று.

காளிங்:— உலகத்து அறிவுடையோர் என்று சொல்லத் தகுவார் யாரோ எனின், கீழ்ச்சொன்னவழி வேற்றுமைகள் எல்லாவற்றுனும் தெரிந்து, தமக்கு இருமை ஆக்கமும் ஆவதனை அறிந்து, ஒழுகுவாரே ஆதலால் அதனை அங்ஙனம் தெரிந்து அறிய வல்லாதார் யாவர்? மற்று அவரே பெரிதும் அறிவிலாதார் எ - று.

மேற்கோள்பகுதி

மயிலை:— அறிவு என்பது உடம்போடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள். (நன். 451.)

முதுமொழிவெண்பாக்கள்

"சீதரனில் பார்த்திபனுர் சேர்ந்தார் அரவுயர்த்தோன்
யாதவரை உற்றுன் இரங்கேசா - ஓதில்." —இரங். 43

" நிறைஉன்னி நீங்கினன்சு சிலன் புயபலன்பின்
முதனூர்கோட் பட்டான் முருகேசா - ஓதில்." —முருகேசர். 43.

குறிப்பு:

'உற்றது கொண்டு மேல்வந்து உறுபொருள் உணருங் கோளார்' என அமைச்சர் மேல் வைத்துக் கம்பர் கூறியதுபோல் அரசரும் ஆவது அறியவேண்டும். வில்லிபுத்தூரரும் 'ஆவது கருதாளுகில் அமைச்சர் சொல் கோளாளுகில் .... சாவது பழுதென்றன்றோ சகத்துளோர் சாற்றுகின்றார்' என்றதும் காண்க.

—தொகுப்பாசிரியர்.

428. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். (அ)

உரைப்பகுதி

பரிமே:— அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம், அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் - அவ் அஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம்.

பாவமும் பழியும் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதிபற்றி அஞ்சுவது என்றார். அஞ்சாமை எண்ணாது செய்து நிற்றல். அஞ்சுதல் எண்ணித் தவிர்தல். அது காரியமன்றென்று இகழப்படாது என்பார் அறிவார்தொழில் என்றார். அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், ஈண்டு அஞ்சவேண்டும் இடம் கூறியவாறு. இவை இரண்டுபாட்டானும் அதனை உடையார் இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— அஞ்சத் தகுவதனை அஞ்சாதொழிதல் ஒருவர்க்கு அறிவின்மை யாகும்; அஞ்சத்தகுவதனை அஞ்சுதல் அறிவுடையார் தொழில் எ - று.

மேல் அஞ்சாமை வேண்டும் என்றாராயினும், ஈண்டு அஞ்ச வேண்டுவனவற்றிற்கு அஞ்சுதல் அறிவு என்றார்.

பரிதி:— பாவத்தின்வழி செல்லப் பயப்படும் அறிவுடைமை ஒருவற்கு ஏதொன்றும் கொடாமல் வஞ்சிக்கும் அறிவில்லாமையின் குணம் எ - று.*

*கருத்து விளங்கவில்லை.

காளிங்:—கீழ்ச்சொன்ன இருவகை மரபின் புறத்தன எல்லாம் பெரிதும் அஞ்சத்தகும் அன்றே: மற்று அதனை அஞ்சாமை பேதைமை எனவே, அதன்கண் சேறலே அறியாமையாவது. இனி அஞ்சத் தகுவ தனைப் பெரிதும் அஞ்சுவது அறிவார் தொழில் எனவே அதனிற் செல்லாது மரபிற் சேறலே அறிவுடையாரது செய்தி எ - று.

மேற்கோள்பகுதி :

சுவாமி :— வருமொழியை நோக்காமலே தனக்குரிய ஒருமைப் பாலைவிட்டு, பன்மைப்பாலையே விளக்குதலால் அஃறிணைச் சாதி ஒருமையாயிற்று என்பர். (இ. கொ. 130.)

ஒப்புமைப்பகுதி:

"தவ்வெனும் பழிபா வங்கள் தபுதிளய் தாமை அஞ்சிச்
செவ்விய நெறியில் நாளும் செலுத்துக பொறிகள் ஐந்தும்
—விநா. அரசி. 50.

முதுமொழிவெண்பாக்கள்:

"அன்றமணர் தீவைப்ப அஞ்சியதென் என்னன்மின்
துன்றியசீர்ச் சம்பந்தர் சோமேசா - நன்றேயாம்." —சோமேசர். 43.

குறிப்பு:

'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்பாருளராயினும், மேலோர்க்கும் அச்சம் வேண்டுமென அதன் எல்லையும் அளவும் இவை என வரையறுக்கப்பெறு கின்றன.

—தொகுப்பாசிரியர்.

429. எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். (கூ)

உரைப்பகுதி

பரிமே:— எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு - வரக்கடவதாகிய அதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு, அதிரவருவது ஓர் நோய் இல்லை - அவர் நடுங்க வருவதொரு துன்பமும் இல்லை.

நோய் என வருகின்றமையின், வாளா எதிரதா என்றார். இதனால், காக்கலாம் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல் அதன் காரணத்தை விலக்குதல். அவர்க்குத் துன்பமின்மை இதனால் கூறப்பட்டது.

மணக்:— துன்பம் வருவதற்கு முன்பே வருமென்று நினைத்துக் காக்கும் அறிவையுடையார்க்கு நடுங்க வருவதொரு துன்பம் இல்லை எ-று.

இது முன்னை வினையால் வருந் துன்பமும் முற்பட்டுக் காக்கின், கடிதாக வாராது என்றது.

பரிதி:— விதனம் என்றறிந்து அந்த விதனம் வராமல் முன்னே பரிகரிப்பாற்கு இல்லையாம்; அது எது? என்னில், தன் மனத்தை வருத்தஞ் செய்கிற விதனம் என்னும் நோய் எ - று.

காளிங்:—மேல்வரும் காரியத்தின் நலமும் தீங்கும் சீர்தூக்கில், நல்லனவற்றின்வழி இடம் படுத்தியும் தீயனவற்றைத் தெறும்வழி நோக்கியும் இங்ஙனம் அவை அவை கருமத்தைப் பெற வந்த இடத்து மயங்குதல் அன்றி, எதிரதாக் காத்து ஒழுகும் அறிவுடையோர்க்கு எஞ்ஞான்றும் இல்லை, தமது உள்ளம் துணுக்குற வருவது ஓர் இடர் எ - று.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— அதிர்வு என்ற உரிச்சொல் நடுக்கம் என்னும் பொருளில் வந்ததற்குமேற்கோள். (தொல் சொல். 313)

நச்:— ஷை (தொல். சொல் 316)

ஒப்புமைப்பகுதி :

"வருவது சொன்னேன் படுவதுபடு" —பழ.

குறிப்பு:

காத்தாலும், "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்" என்பதனால் அதனையுமீறித் துன்பம் நேரின் முன்னமே அறியப்பெற்றமையின் அத்துன்பம் அவ்வளவு கவலை விளைவியாது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

430. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (௪0)

உரைப்பகுதி :

பரிமே:— அறிவுடையார் எல்லாம் உடையார் - அறிவுடையார் பிறிதொன்றும் இலராயினும் எல்லாம் உடையராவர், அறிவிலார் என் உடையரேனும் இலர் - அறிவிலாதார் எல்லாம் உடையராயினும் ஒன்றும் இலராவர்.

செல்வங்கள் எல்லாம் அறிவால் படைக்கவும், காக்கவும் படுதலின் அஃது உடையாரை எல்லாம் உடையார் என்றும், அவை எல்லாம் முன்னே அமைந்து கிடப்பினும் அழியாமல் காத்தற்கும், தெய்வத்தான் அழிந்துழிப் படைத்தற்கும் கருவியுடையர் அன்மையின் அஃது இல்லாதாரை என்னுடையரேனும் இலர் என்றும் கூறினர். என்னும் என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. இதனான் அவரது உடைமையும் ஏனையாரது இன்மையும் கூறப்பட்டன.

மணக்:— அறிவினை யுடையார் யாதொன்றும் இல்லாராயினும், எல்லாமுடையர்; அறிவிலார் எல்லாப் பொருளும் உடையாராயினும் ஒரு பொருளும் இலர் எ - று.

இஃது அறிவுடைமை வேண்டும் என்றது.

பரிதி:— அறிவுடையாற்கு அருமையானது ஒன்று இல்லை; எல்லாப் பதார்த்தமும் உடையர். அறிவில்லாற்கு ஏதுண்டு? ஒன்றுமில்லை. எ - று.

காளிங்:—கற்றும் கேட்டும் கசடு அற்ற அறிவுடையோரை மற்று எல்லாம் உடையரென்று உணரப்படும் ஆகலான் மற்று அங்ஙனம் தெளிந்த அறிவிலாதார் வேறு யாதானும் உடையரேனும் யாதும் இலர் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— 'என்னும்' என் உம்மை செய்யுள்தொடை காரணமாக விகாரத்தால் தொக்கது "எண்ணும், பயன்தூக்காது யார்க்கும் வரையாது" (தண்டி.சூ. 48. மேற்கோள்) என்பதும் இப்பொருட்டு.

மேற்கோள்பகுதி:

தக்க - உரை:— "பொன்மலையுடையவன் மகள் வெள்ளிமலை யுடையவன் மகனைக் கும்பிடுதற்குக் காரணம் வேதவேள்விதப்பாமையும் 'அறிவுடையார் ...... இலர்' என்பதுமே. (தா. 185)

ஒப்புமைப்பகுதி:

" நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" —நாலடி. 251.

"அறிவினால் மாட்சிஒன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனாம் — பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின்" —பழ. நா.

"வித்துவான் தனவான்" —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஓதி யறியுமறி வொன்றுமே போதும்இம
சேதமட்டும் போற்றும் தினகரா—போத." —தினகர. 46.

குறள்வைப்புமுறை.

பரிமே:— அறிவற்றம், சென்ற, எப்பொருள், எண்பொருள, உலகம், எவ்வ, அறிவுடையாராவது, அஞ்சுவது, எதிரதா, அறிவுடையாரெல்லாம்.

மணக்:— அறிவுடையாரெல்லாம், எவ்வ, உலகம், எப்பொருள், எண் பொருள, சென்ற, அஞ்சுவது. அறிவுடையாராவது, அறிவற்றம், எதிரதா.

பரிதி:— அறிவுடையாராவது, உலகம், எவ்வ, எண்பொருள, எப் பொருள், சென்ற, அஞ்சுவது, எதிரதா, அறிவற்றம், அறிவுடையாரெல்லாம்.

காளிங்:— அறிவுடையாரெல்லாம், உலகம், எவ்வ, எப்பொருள், எண் பொருள, அறிவுடையாராவது, அஞ்சுவது, அறிவற்றம், எதிரதா, சென்ற.

44. குற்றங்கடிதல்.

தொகுப்புரை:

[காமம் வெகுளி மயக்கமாகிய முக்குற்றமும் இல்லாமையே மன்னர்க்கு மதிப்புடையசெல்வம். உலோபமும், நன்மையின் நீக்கிய மானமும், எல்லைகடந்த மகிழ்ச்சியும் அரசனுக்குத்துன்பம் செய்வன. தினையளவு குற்றமாயினும் அதனைப் பனையளவாகக்கொண்டு வருந்துவார்கள் பழிக்கு அஞ்சும் அரசர்கள். அரசர்க்கு இறுதிபயப்பது குற்றமேயாதலின் அதனை அரசர் தன்கண் வாராமற்காக்க. எத்தகைய குற்றங்களையும் வருமுன்காவாதான் வாழ்வு தீமுன்வைக்கோற்போர்போலக் கெடும். தன்னிடம் குற்றமே நிகழாதபடிக்காத்து, பிறர்குற்றங்களையும் அறிந்து நீக்கவல்லராகின் அந்த அரசர்க்குக் குற்றம் வாராது. செய்யவேண்டியதைச் செய்யாதவன் செல்வம், உய்யும்வழியின்றி வீணாக அழியும். பொருளாசை யென்கின்ற உலோபகுணம் குற்றங்கள் எல்லாவற்றினும் கொடியது. என்றைக்கும் தற்புகழ்ச்சியாகாது. என்றைக்கும் நன்மை விளைவியாத செயல்களை விரும்பலாகாது. தனக்கு விருப்பமானவற்றைப் பிறர் அறியாமல் பேணினால் பகைவர் வஞ்சனை பழுதாம்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம்எனப்பட்ட குற்றங்களாறனையும் அரசன் தன்கண்நிகழாமல் கடிதல். இவற்றை வடநூலார் பகைவர்க்கம் என்ப. இவை குற்றம் என்று அறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், அதன்பின் வைக்கப்பட்டது.

மணக்:— குற்றங்கடிதலாவது காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் என்னும் ஆறு குற்றமுங் கடிந்து ஒழுகுதல். இஃது அறிவுடையாராயினும் குற்றங் கடிதல் வேண்டுமென்று அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— குற்றங் கடிதலாவது தன்னிடத்தில் அறிவுண்டாகில் குற்றம் வராமல் நடக்கவேணும் எ - று.

431. செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. (க)

உரைப்பகுதி:

பரிமே:— செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் - மதமும் வெகுளியும் காமமுமாகிய குற்றங்களில்லாத அரசரது செல்வம், பெருமித நீர்த்து - மேம்பாட்டு நீர்மையினையுடைத்து.

மதம் செல்வக்களிப்பு. சிறியோர் செயலாகலின், அளவிறந்த காமம் சிறுமை எனப்பட்டது. இவை நீதியல்லன செய்வித்தலான், இவற்றைக் கடிந்தார் செல்வம் நல்வழிப்பாடும் நிலைபேறும் உடைமையின் மதிப்புடைத்து என்பதாம். மிகுதிபற்றி இவை மூற்கூறப்பட்டன.

மணக்:— பிறர்மனை நயத்தலும், வெகுளியும், சிறியார் செய்வன செய்தொழுகுதலும் இல்லாதார்க்கு ஆக்கம் தலையெடுக்கும் நீர்மையுடைத்து எ - று.

பிறர்மனை விரும்புதல் செருக்கினால் வருதலின், செருக்கு என்றார்.

பரிப்:— சினம் குரோதத்தால் வருதல். சிறியார்செய்வன செய்தலாவது காமநுகர்ச்சியும், சூதும், கள்ளும், வேட்டையும் முதலானவற்றின் மிக்கொழுகுதல். இதனை வடநூலார் இந்திரிய சயமின்மை என்பர். இவை பெரியாரால் கடியப் படுதலின் சிறுமை என்றார். இவை மூன்று குற்றமும் இல்லாதார் ஆக்கம் உடையார் என்றதனாலே இவை உடையார்க்குக் கேடு வரும் என்றவாறாயிற்று. பிறர்மனை நயத்தலாற் கெட்டான் இராவணன்; வெகுளியாற் கெட்டான் சனமேசயன். நுகர்ச்சியாற் கெட்டான் சச்சந்தன்.

பரிதி:— கர்வமும் கோபமும் அற்பக்குணமும் இல்லாதார் பெருக்கம் அளவுபடாத பெருமையுடையது எ - று.

காளிங்:— செருக்கு முதலாகச்சொன்ன மூன்றுகுற்றமும் தமக்கு இல்லாதவாறு கடிந்தொழுகுவாரது ஆக்கமானது பெரிய மேம்பாட்டுத் தன்மையினை உடைத்து; எனவே மற்று ஏனை ஆக்கத்தை ஒன்றாகக் கருதார் உயர்ந்தோர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

*"அரசன் காமம், வெகுளி, மோகம், உலோபம், மானம், மதம் என்னும் இவ்வறுவகைக் குற்றங்களையும் களைதல் வேண்டும்; இவை அங்ஙனம் களையப்படின்அவன் இன்பம் நுகர்பவனாவான்."

"காமத்தால் தண்டகன் என்னும் அரசனும், கோபத்தால் சனமேசயனும், உலோபத்தால் அயிலன் என்னும் இராச இருடியும், மோகத்தால் வாதாபி என்னும் அசுரனும், மானத்தால் புலத்திய குமாரனாகிய இராவணனும், மதத்தினால் தம்போற்பவன் என்னும் அரசனும் அழிவெய்தினர்." —சுக்கிரநீதி. அத். 1 சு. 143, 144, 145.

*இதில் 432-ம் குறளின் கருத்தும் விளங்குதல் காண்க.

முதுமொழிவெண்பாக்கள்

"தோன்றி இறைவருள்ளும் தொண்டரெனும் மூர்த்திக்கு
மூன்றுமறைச் செல்வம் முதிருமனு—ஞான்று."

—முதுமொழி 76.

குறிப்பு:

சிறுமை - தன்செல்வநிலைக்கும், பதவிக்கும் ஏற்ற பரந்த நோக்கமில்லாமையுமாம். அத்தகைய அற்பத்தனம் செல்வமுடையவன் மேம்பாட்டினைக்கெடுக்கும்.

—தொகுப்பாசிரியர்.

432. இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— இவறலும் - வேண்டும்வழிப் பொருள் கொடாமையும், மாண்பு இறந்தமானமும் - நன்மையின் நீங்கிய மானமும், மாணா உவகையும் - அளவிறந்தவுவகையும், இறைக்கு ஏதம் - அரசனுக்குக் குற்றம்.

மாட்சியான மானத்தின் நீக்குதற்கு மாண்பிறந்தமானம் என்றார்: அஃதாவது [1] 'அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தைதாய் என்றிவரை' வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும் [2]முதலாயின. அளவிறந்த உவகையாவது கழிகண்ணோட்டம். [3] பிறருஞ் 'சினனே காமம் கழிகண்ணோட்டம்' என்றிவற்றை 'அறந்தெரி திகிரிக்கு வழியடையாகுந் தீது' என்றார். இவை இரண்டு பாட்டானும் குற்றங்களாவன இவை எனக் கூறப்பட்டன.

மணக்:— உலோபமும், நன்மையைக் கடந்த மானமும், நன்மையைத் தாராமகிழ்ச்சியுமாகிய இம்மூன்றும் அரசர்க்குக் குற்றமாம் எ - று.

---

[1] பு. வெ. பாடாண். 33. [2] 'அடிநிழ லரசரை அளிக்குமாய்கதிர் முடிநிழல் முனிவரர் சரணம் மூழ்குமே' என்ற சூளாமணிப் பாடற்கருத்தும் நினைவுகூரத் தக்கது. [3]பதிற்று. பா. 22.

இது பொதுப்படக்கூறுது இறைக்கு என்றமையால் பெரும்பான்மையும் அரசர்க்கே வேண்டும் என்பது கூறிற்று.

பரிப்:— உலோபம் இரண்டுவகைத்து: தனக்கு முறைமை அல்லாத பொருளை விரும்புதலும், உண்டானபொருளை விடாமையும்; அஃதாமாறு பின்பே கூறப்படும். மாண்பு இறந்த மானமாவது தொடங்கின வினை நன்மை பயவாதாயினும் அதனை விடாதொழிதல். இதனாற் கெட்டான் துரியோதனன். மாணு உவகையாவது எளியாரை அடர்க்கையாற் பிறந்ததொரு மகிழ்ச்சியால் வலியார்மாட்டும் செல்லுதல். இதனாற் கெட்டான் வாதாபி.

பரிதி:— குற்றம் என்றது தன் பேரிலே வராமல் அழகு உண்டாக நடப்பானுகில் இறையென்று சொல்லப்பட்ட சிவனும் இவனைப் பிரியமாக மனத்துளே கண்டிருப்பர் எ - று

காளிங்:— பலர்க்கும் உபகரிக்குமதை உபகரியாது உலோபித்தலும், மற்றும் நன்மையின் நீங்கிய நாணக் கேடும், தகாதவற்றைக் காதலித்தலும் என்னும் இவை மூன்றும் குற்றமே வேந்தர்க்கு எ - று.

இவறல் என்பது உலோபித்தல். இறத்தல் என்பது கடத்தல்.

ஒப்புமைப்பகுதி:

"ஈதலில் குறைகாட்டாது அறனறிந்து ஒழுகிய
தீதிலான்" —கலி, 27:1

"அருந்தவர் குரவர் முன்னோர் அந்தணர் உயர்ந்தோர் தம்பால்
திருந்திய வணக்கம் இன்மை செருக்குவேண் டியபக் கத்தும்
பொருந்திய பொருள்கொ டாமை பொங்கிய வெகுளி காமம்
விருந்துசெய் கழிகண் ணோட்டம் இவைஎலாம் விடுக மைந்தா"

—விநா. அரசி. 52.

குறிப்பு:

பொருள் ஈட்டற்கு உலோபகுணம் ஒருவகையான் வேண்டப் படுமாயினும் செலவழிக்கவேண்டிய இடத்தில் செலவழித்தே யாகவேண்டும் என்பது வலியுறுத்தப்பெறுகின்றது.

—தொகுப்பாசிரியர்.

433. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். (ங)

உரைப்பகுதி :

பரிமே:— பழி நாணுவார் - பழியை அஞ்சுவார், *தினைத் துணை யாம் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் - தங்கண் தினையளவாம் குற்றம் வந்ததாயினும் அதனை அவ்வளவாகவன்றிப் பனையினளவாகக் கொள்வர்.

குற்றம் சாதிப்பெயர். தமக்கு ஏலாமையின் சிறிது என்று பொறார், பெரிதாகக் கொண்டு வருந்திப் பின்னும் அது வாராமல் காப்பர் என்பதாம்.

மணக்:— தினையளவு குற்றம்வந்ததாயினும், அதனை அவ்வளவிற்று என்று இகழாது பனையளவாகக் கொள்வார் பழிக்கு நாணுவார் எ - று.

பரிதி:— தினையளவு குற்றம் வரினும், அதனைப்பனையளவு குற்ற மாகக் கண்டுநோவார் சொற்பழியஞ்சும் பெரியோர் எ - று

காளிங்:— குணப்பயன் அறியும் குணமுடையோர் தினையள வாகிய சிறிது குற்றம் ஒருகால் வருவதாயினும், அதனைப் பனையளவாகும் குற்றமாகக் கொள்வர்; குற்றத்துக்கு நாணும் அறிவுடையோர் எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

“ கைஅரிந்தான் மாறன் கதவிடித்த குற்றத்தால்
எய்யும் சிலைக்கை இரங்கேசா — பைய” —இரங். 44.

குறிப்பு:

எரிமுன்னர் வைத்தூறுபோலக் கெடுப்பதொன்று குற்றமாதலின் தினை யளவு குற்றத்தையும் பனையளவாக்கொண்டு நாணுவர் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

*'தினைபனை என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை' - பரிமே - குறள். 104 உரை.

434. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை. (௪)

உரைப்பகுதி :

பரிமே:—அற்றம் தருஉம் பகை குற்றமே - தனக்கு இறுதிபயக்கும் பகை குற்றமே, குற்றமே பொருளாகக் காக்க - ஆகலான், அக்குற்றம் தன்கண் வாராமையே பயனாகக் கொண்டு காக்கவேண்டும்.

இவைபற்றியல்லது பகைவர் அற்றம்தாராமையின் இவையே பகையாவன என்னும் வடநூலார் மதம் பற்றிக் குற்றமே அற்றந்தரூஉம் பகை என்றும், இவற்றது இன்மையே குணங்களது உண்மையாகக் கொண்டென்பார் பொருளாக என்றும் கூறினார். குற்றமே காக்க என்பது 'அரும்பண்பினால் தீமைகாக்க' என்பதுபோல நின்றது.

மணக்:— தமக்குப் பொருளாகக் குற்றம் வராமல் காக்க; அக் குற்றந்தானே இறுதியைத் தரும் பகையும் ஆதலான் எ - று.

இது குற்றம் கடிய வேண்டும் என்றது.

பரிதி:— தன்பேரிலே குற்றம்வராமல் அறிவுடைமையைத் தனம் போல் பாதுகாப்பான்; காவாதபோது தனக்குப் பகையான குற்றம் வரும் எ - று.

காளிங்:— இவ்வுலகத்து அரசருள்ளார் தமக்கு ஒரு குற்றம் நிகழாமல் கருதிப் [பரிகரித்துக் கொள்க: மற்று இதுதானே பொருளாகக் கொண்டு ஒழுகின் அக்குற்றம் தாமே தமக்கு ஆபத்தைத் தருவதாகிய பகை எ - று.

435. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். (௫)

உரைப்பகுதி :

பரிமே:— வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை - குற்றம் வரக் கூடவதாகின்ற முற்காலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ்க்கை, எரிமுன்னர் வைத்தூறுபோலக் கெடும் - அது வந்தால் எரிமுகத்து நின்ற வைக்குவைபோல அழிந்துவிடும்.

குற்றம் என்பது அதிகாரத்தான் வந்தது. முன்னர் என்றதன் ஈற்றது பகுதிப் பொருள்விகுதி. வரும் என்னும் பெயரெச்சம் முன்னர் என்னும் காலப்பெயர் கொண்டது; அதனால் காக்கலாங் காலம் பெறப் பட்டது. குற்றம் சிறிதாயினும் அதனால் பெரிய செல்வம் அழிந்தேவிடும் என்பது உவமையால் பெற்றாம்.

மணக்:— துன்பம் வருவதன்முன், அதற்குத் தக்கது அறிந்து காவல் செய்யாத அரசனது செல்வம், எரிமுன்னர்க்கிடந்த வைத்திரள் போலக்கெடும் எ - று.

இது முந்துறக் காவல்செய்வன செய்யாமையும் குற்றம்என்றது.

பரிதி:— தனக்கு ஒரு விதனம் வருமுன்னே பாதுகாவாதான் வாழ்க்கை, நெருப்பின் முன்னர் வைக்கோற்போர் பட்டது போலவும் தூறுபோலவும் படும் எ - று.

காளிங்:— சிறிதேனும் குற்றமானது வந்து எய்துவதன் முன்னமே உற்றுணர்ந்து தம்பால் வாராமல் பரிகரிக்கமாட்டானது செல்வமானது, மற்று எரி முன்னர்ப்பட்ட வைக்கோற்போர் போலக் கெடும் எ - று.

மேற்கோள்பகுதி:

நச்:— 'முன்' என்னும் வினையெச்சவாய்பாடு இறப்புப் பற்றி வந்ததற்கு வருமுன்னர் என்பது மேற்கோள். (தொல். சொல். 231)

சிவஞான:— 'னகர இறுவாய்': இறுவாய் என்பது வினைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வினைத் தொகை பெயர் கொண்டு முடியாது இடைச்சொல்லைக் கொண்டு முடியுமோ எனின், இடைச்சொல்லெல்லாம் பெயரெனப்படும் என்க எனவிளக்கி 'வரு முன்னர்க் காவாதான் வாழ்க்கை' என்றாற்போல்வனவும் இவ்வாறே கொள்க என்பர். (தொல். விருத். பக். 46.)

ஒப்புமைப்பகுதி:-

"மேல்வரவறியாதோன் தற்காத்தல் பொய்' —முதுமொழிக், 7:5.

"விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்." —திருநா, நமச்சி. 3.

"குற்றம் புரியா திருந்துபிறர் குற்றம் களைக சிறிதேனும்
குற்றம் புரியின் சிற்றெறிவை குவையை யழிக்கு மாறேபோல்
பற்றும் பெருவாழ் வினை அழிக்கும் பகைவர்க் காக்கம் மிகப்பெருக்கும்
முற்றும் பெருநோ யுழப்பிக்கும் முனியா ரானும் முனிவிக்கும்.
—விநா, அரசி. 53.

"வெள்ளம் வருமுன்னே அணைபோடவேண்டும்." —பழ.

"பருத்திப் பொதிக்கு ஒரு நெருப்புப் பொறி." —ஷை

"கடுகத்தனை நெருப்பும் போரைக் கொளுத்திவிடும்." —ஷை

"ஒருகுடம் பாலுக்கு ஒருதுளி பிரை." —ஷை

முதுமொழிவெண்பாக்கள் :

"ஈரைந் தலையான் அணுகியபின் ஏகலுற்றுச்
சூரம் தொலைந்தானே சோமேசா — ஓரின்." —சோமேசர். 44.

"நிந்தித்த தக்கனுர் நின்றுபட்ட பாடெல்லாம்
சிந்தித்தார் பின்பு திருமலையா — அந்தோ." —திருமலை.

குறிப்பு:

எரி சிறிதாயினும் வைக்கோற்போரைச் சாம்பலாக்குதல் போலக் குற்றஞ் சிறிதாயினும் வாழ்க்கை முழுதையும் கெடுத்துவிடும் என்பதாம்.
—தொகுப்பாசிரியர்.

436. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு. (சு)

உரைப்பகுதி :

பரிமே:— தன்குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின் - முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர்குற்றம் காண வல்லனாயின், இறைக்கு ஆகும் குற்றம் என் - அரசனுக்கு ஆகக்கடவ குற்றம் யாது.

அரசனுக்குத் தன்குற்றம் கடியாவழியே பிறர் குற்றம் கடிதல் குற்றமாவது, கடிந்தவழி முறைசெய்தல் ஆம் என்பார், என்குற்றமாகும் என்றார்: எனவே, தன்குற்றம் கடிந்தவனே முறைசெய்தற்கு உரியவன் என்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் அவற்றது கடிதற்பாடு பொது வகையால் கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையால் கூறுப.

மணக்:— தனக்குள்ள குற்றத்தை நீக்கிப் பிறர்மாட்டுள்ள குற்றத்தை ஆராயவல்லனாயின், அரசனுக்கு என்ன குற்றம் உளதாம்? எ - று.

இது தன்மாட்டுள்ள குற்றத்தை நீக்குதலே யன்றிப் பிறர் மாட்டுள்ள குற்றத்தையும் கடிய வேண்டும் என்றது.

பரிதி:— பிறர் குற்றம் போல் தன்குற்றம் பார்ப்பானாகில் அவனுக்குக் குற்றம் உண்டோ? எ - று.

காளிங்:— முன்னம் தனது குற்றமுள்ளன பலவும் தான் அறிந்து நீக்கித் தான் நீதியில் தூயனாய்ப் பின்பு பிறரது குற்றங்களை நோக்கி அக்குற்றங்களை ஒழிப்பதாக நினைக்குமாயின் பின்பு என்னகுற்றம் உளதாகும் அரசர்க்கு எ - று.

ஒப்புமைப்பகுதி:

“ மன்னிய பகைக்குழாம் ஆறும் வையகம்
துன்னிய அரும்பகைத் தொகையும் இன்மையால்
தன்னையும் பிறரையும் காக்கும் என்பதம்
மன்னவன் திறத்தினி மருள வேண்டுமோ.” —சூளா.

“ தங்குற்றம் நீக்கல ராகிப் பிறர்குற்றம்
எங்கேனும் தீர்த்தற் கிடைப்புகுதல் — எங்கும்
வியனுலகின் வெள்ளாடு தன்வளி தீரா(து)
அயல்வளி தீர்த்து விடல் ” —பழ. நா.

“ தன் குற்றம் தனக்குத் தெரியாது.” —பழ.

“ தன் குற்றம் பார்ப்பவர் இங்கு இல்லை.” —ஷை.

“ தன் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.” —ஷை.

“ தன் குற்றமிருக்கப் பிறர்குற்றம் பார்க்கிறதா? ” —ஷை.

“ தன் முதுகு தனக்குத் தெரியாது.” —ஷை.

முதுமொழிவெண்பாக்கள்

" ஆரூர்க் குழக்கன்றுக் கன்றோர் குலக்கன்றைத்
தேரூரு வித்தான் தினகரா — பாரூடு" —தினகர. 47.

" தன்மகனுன் கன்றினுக்கும் தான்மர் திரிக்குமென்றான்
சென்மமன்றோ சென்மம் சிவசிவா - உன்னுங்கால்." சிவசிவ. 44.

குறிப்பு:

தன் குற்றம் தனக்குத் தோன்றாது ஆதலான் அதனை யறிந்து நீக்குபவனே பிறர்குற்றம் கடிதற்குரிய மன்னன் என்பதாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

437. செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— செயற்பால செய்யாது இவறியான் செல்வம் - பொருளால் தனக்குச் செய்து கொள்ளப்படுமவற்றைச் செய்து கொள்ளாது, அதன்கண் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம், உயற்பாலதன்றிக் கெடும் - பின் உளதாம்பான்மைத்தன்றி வறிதே கெடும்.

செயற்பாலவாவன அறம் பொருள் இன்பங்கள். பொருளால் பொருள் செய்தலாவது பெருக்குதல்; அது,

[1]"பொன்னி னாகும் பொருபடை அப்படை
தன்னி னாகும் தரணி தரணியில்
பின்னை யாகும் பெரும்பொருள் அப்பொருள்
துன்னுங் காலைத்துன் னாதன இல்லையே."

என்பதனால் அறிக. அறம் செய்யாமையானும் பொருள் பெருக்காமையானும் உயற்பாலதன்றி என்றும், இன்பப்பயன் கொள்ளாமையின் கெடும் என்றும் கூறினார். [2]உயற்பாலதின்றி என்று பாடம் ஓதுவாரும் உளர்.

---

[1] சீவக. 1923. [2] இப்பாடம் கொண்டவர்கள் பரிப்பெருமாளும் காளிங்கரும்.

மணக்:— பொருளால் தனக்குச்செய்துகொள்ளப்படுமவற்றைச் செய்துகொள்ளாது, அதன்கண் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம், பின் உளதாம் பான்மைத்தன்றி வறிதே கெடும் எ - று.

பரிப்:— செய்யும் முறைமை செய்யாதே ஈட்டுதற்கு விரும்பினவனும், அவனது செல்வமும் உய்யும்பகுதி யின்றிக் கெடும் எ - று.

கெடும் என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக. இது பிறர் பொருளை விரும்பினால் வருங்குற்றம் கூறிற்று. இதனாற் கெட்டான் புரூரவா.

பரிதி:— செய்யும் முறைமை அறிந்து செய்யாதான் செல்வம் தன்னைச் சத்துருக்கள் கெடுக்காமல் தானே கெடும் எ - று.

காளிங்:— தனக்கு எய்திய பொருள் கொண்டு அதனால் செய்தற்பாலனவாகிய நல்வழக்கம் செய்யாத உலோபியினது செல்வமானது கெடுவழிப் பின் ஒருகால் இவனுக்கு உய்தற்பகுதியாம் குறி இன்றிச் செலவறக் கெட்டுவிடும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங்கேளிர் துயர்களையான் - கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்." —நாலடி. 9.

"ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்." —கொன்றை. 4.

முதுமொழிவெண்பாக்கள்:

"தெய்வநிதி யாதிகவர் தீமையின்ம னோசவன்கான்
மொய்வளந்தோற் றேய்ந்தான் முருகேசா – உய்யச்." —முருகேசர். 44.

438. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— பற்றுள்ளம் என்னும் இவறன்மை - பொருளை விடத்தகுமிடத்து விடாது பற்றுதலைச் செய்யும் உள்ளமாகிய உலோபத்தினது தன்மை, எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று - குற்றத் தன்மைகள் எல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவதொன்றன்று, மிக்கது.

இவறலது தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்துத் தான் மேற்பட வல்ல இயல்பு. ஒழிந்தன அது மாட்டாமையின், எற்றுள்ளும் எண்ணப் படுவதொன்றன்று என்றார். எவற்றுள்ளும் என்பது இடைக்குறைந்து நின்றது. இவை இரண்டு பாட்டானும் உலோபத்தின் தீமை கூறப்பட்டது.

மணக்:— கூடின பொருளை விடாமையாகிய உலோபம் யாதொன்றினுள்ளும் எண்ணப்படுவ தொன்றன்று எ - று.

இஃது, உலோபம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் ஒரு பொருளாக மதிக்கப்படாது என்றது.

பரிதி:— குற்றமாவது பொருளை அவாவி அறஞ்செய்யாமை; அந்தக்குற்றம் எந்தவகையான குற்றத்திலும் மேலான குற்றம் எ-று.

காளிங்:— எய்திய செல்வம் யாவர்க்கும் ஈயாது இறுகப் பற்றுதலை நெஞ்சினுல் நினைக்கக்கடவது அன்று என்று, ஈதலுடையவன் தகுதியாகிய நன்மையை மற்று யாதானும் ஒரு நன்மையுள்ளும் வைத்து எண்ணப்படுவதற்கு ஓர் இணையில்லை; ஆகலான் இவறுதல் பெரிதும் குற்றம் என்று பொருள் ஆயிற்று எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— எவற்றுள்ளும் என்பது எற்றுள்ளும் எனச் செய்யுட் டொடையும் அடிப்பாடும் நோக்கி இடைக்குறைந்தது. இவறன்மை-இவறற் றன்மை, 'காதன்மையும்' (507,832) 'வள்ளன்மையும்' அவ்வாறும்.

ஒப்புமைப்பகுதி:

"உண்ணுச் சொத்து மண்ணுய்ப் போகும்" —பழ.

"உண்ணுமல் தின்னுமல் ஊரம்பல மானேனே" —ஷெ.

"பூட்டிப் புசிக்காமல் புதைப்பார், ஈயைப்போல ஈட்டி இழப்பார்" —ஷெ.

குறிப்பு:

உலோபகுணம் பொருள்மேல் வைத்த அளவற்ற ஆசையே என்பது குறிக்கப்பெறுகின்றது. இந்த உலோபம் குற்றங்களையெல்லாங்கடந்த பெரியகுற்றம் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்

439. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— எஞ்ஞான்றும் தன்னை வியவற்க - தான் இறப்ப உயர்ந்த ஞான்றும் மதத்தால் தன்னை நன்கு மதியாதொழிக; நன்றி பயவா வினை நயவற்க - தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாது ஒழிக.

தன்னை வியந்துழி இடமும் காலமும் வலியும் அறியப்படாமையானும், அறனும் பொருளும் இகழப்படுதலானும், எஞ்ஞான்றும் வியவற்க என்றும், கருதியது முடித்தே விடுவல் என்று அறம் பொருள் இன்பங்கள் பயவா வினைகளை நயப்பின் அவற்றால் பாவமும் பழியும் கேடும் வருமாகலின், அவற்றை நயவற்க என்றும் கூறினர். இதனான் மதமானங்களின் தீமை கூறப்பட்டது.

மணக்:— எல்லா நாளும் தன்னைப் பெரியனாக நினைத்து வியவாதொழிக; வியந்தானாயினும், அவ்வியப்பினானே நன்மைபயவாத வினையைச் செய்யாதொழிக எ - று.

செய்யின் கெடும் என்றவாறாயிற்று. இதனை மதம் என்ப. இதனாற் கெட்டான் கார்த்தவீரியார்ச்சுனன்.

பரிதி:— தன்னை வியந்து கொள்ளக் கடவனல்லன்; புண்ணியம் தாராத காரியத்தை விரும்புவான் அல்லன் எ - று.

காளிங்:— வேந்தனானவன் எஞ்ஞான்றும் தன்னைத்தானே பெருமிதம் கருதற்க. மற்று இதுவேயும் அன்றித் தனக்கு இருமைக்கும் நன்மை பயவாக் கருமங்களை எஞ்ஞான்றும் விரும்பாது ஒழிக எ - று

*இனித் தாமே இங்ஙனம் குற்றங்கடிந்து ஒழுகினும், மற்று அக்குற்றமும் தெரிந்துணரும் கற்றுணர்ந்த பெரியோர் இவ்வாறு தமக்குத் துணையாக வேண்டும் என்று உண்டாகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

---

* பத்தாவதாக இக் குறளைக் கொண்டமையின் இவ்வாறு இவர் தோற்றுவாய் செய்துள்ளார்.

ஒப்புமைப்பகுதி:

" அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்" —குறள். 474.

" கற்றனவும் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்தில் தணியாத
பித்தனென் றெள்ளப் படும்." —நாலடி. 340.

" எம்மை அறிந்திலிர் எம்போல்வார் இல்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று — தம்மை
அரியரா நோக்கி அறனறியும் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள். " —ஷை 165.

" தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் - தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை அன்றே நலம்." —நீதிநெறி.19·

" தான் தற்புகழ்தல் தகுதி அன்று " —நன். 52.

" கன்று மினிய பொருள் பலவும் காதல் பகைவர் அறியாமே
நன்று நுகர்க நினைஎன்றும் நன்கு மதித்து வியவற்க
நன்றி பயவா வினையினையும் நண்ணும் மதத்தான் முடியற்க
வென்றி விளங்கப் புகழ்விளங்க விழுப்பம் விளங்க வேண்டிடினே."
—விநா. அரசி. 54.

" தன்னைப் புகழ்வானும் சானோறி நிற்பானும்
பொன்னைப்புதைத்து வைத்துப் போவானும் பேய் " —பழ.

440. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல். (௪0)

உரைப்பகுதி:

பரிமே:—காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் - தான் காதலித்த பொருள்களை அவர் அக்காதலறியாமல் அனுபவிக்க வல்லனாயின், ஏதிலார் நூல் ஏதில - பகைவர் தன்னை வஞ்சித்தற்கு எண்ணும் எண்ணம் பழுதாம்.

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாமலுய்த்தால் வாயிலின்மையின் வஞ்சிக்கப்படான் என்பதாம். காமம் வெகுளி, உவகை என்பன மூற்றக்கடியும் குற்றமன்மையின், இதனால் பெரும்பான்மைத்தாகிய காமம் நுகருமாறுகூறி, ஏனைச் சிறுபான்மைய வற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந்தார்.

மணக்:— காதலிக்கப்பட்ட யாவற்றின்மேலும் செல்லுங் காதலைப் பிறரறியாமல் செலுத்துவானாயின், பகைவர் இவனைக் கொல்லுமாறு சிந்திக்கும் சிந்தனை இவன் மாட்டுச் செல்லாது அயலாம் எ-று.

நூல் என்பது அவர்கற்ற கல்வி.

பரிப்:— நூல் என்பது அவ்வேதிலாரது சித்தம். அதனாலேயே சிந்தித்தலின் நூல் என்றார். இது மேற்கூறிய குற்றமே அன்றி, அறம் பொருள் இன்பத்துக்கு மாறாகாத பொருள்கள்மேற்செல்லும் ஆசையைப் பிறர் அறியின், அதுவே வாயிலாக வஞ்சிப்பர்; ஆதலான், அக்காதலை அடக்காமையும் குற்றமென்று கூறப்பட்டது.

வத்தராயன் யானை பிடிக்கப்போய்ச் சிறைப்பட்டான்.

பரிதி:— தானொன்று விரும்பினதை ஒருவரும் அறியாமல் நடத்துவானாகில் சத்துருக்கள் எண்ணின எண்ணமெல்லாம் கெடும் எ-று.

காளிங்:— பொன்னும், யானையும், நாடும், மற்றும், பிறவும் ஆகிய பொருள்களில் யாவை சிலவற்றைத் தாம் காதலித்தார், அதைத் தானும் பிறர் ஒருவரும் அறியாதபடி, தம் அகத்துள் அடக்கிச் செலுத்தவல்லவராயின், தாம் விரும்பின பொருள் எய்தும்: இதுவும் அன்றிப் புறத்தன வாகியே போம்: யாவை எனின், மற்றுத் தாம் தாற்பரித்த பொருளைத் தலையழித்தற்கு ஏதிலார் எண்ணிய எண்ணங்கள் எ-று.

ஒப்புமைப்பகுதி :

"காய்ந்தெறி கடுங்கற் றன்னைக் கவுட்கொண்ட களிறு போல
ஆய்ந்தறி வுடைய ராகி அருளொடு வெகுளி மாற்றி
வேந்தர்தாம் விழைப எல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்டாய்
நாந்தக உழவர் ஏறே நன்பொரு ளாவ தென்றான்." —சீவக. 2910.

குறிப்பு:

காதல என்பது, அஃறிணைப் பலவின்பாற் பன்மைப்படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயராகக் காதலிக்கப்பட்ட பொருளையே யுணர்த்தும். காதல காதல் என்றவழி அவற்றினிடமாகவுள்ள காதலை எனப் பொருள்காணின் ஆகும் சிறப்புயாது எனின்? விரும்பிய பொருளையின்றி வாழ்க்கையமையாது என்ற இன்றி யமையாத்தன்மையதாகிய காதலை அறியின் பகைவர் அதன்வழியாகச் சதிசெய்யத் தலைப்படுவர் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள் வைப்புமுறை.

பரிமே:— செருக்கும், இவறலும் தினைத்துணை, குற்றமே, வருமுன்னர், தன்குற்றம், செயற்பால, பற்றுள்ளம், வியவற்க, காதல.

மணக்:— குற்றமே, செருக்கும், இவறலும், செயற்பால, பற்றுள்ளம், வியவற்க, காதல, வருமுன்னர், தன்குற்றம், தினைத்துணை.

பரிதி:— செருக்கும், செயற்பால, பற்றுள்ளம், வியவற்க, காதல, வருமுன்னர், தன்குற்றம், குற்றமே, தினைத்துணை, இவறலும்.

காளிங்:— செருக்கும், இவறலும், பற்றுள்ளம், செயற்பால, வருமுன்னர், காதல, தினைத்துணை, குற்றமே, தன்குற்றம், வியவற்க.

45. பெரியாரைத்துணைக்கோடல்

தொகுப்புரை

[அறநெறிகளை அறிந்து அறிவாலும் அனுபவத்தாலும் மூத்த பெரியோர்களின் நட்பை அரசன் வகையறிந்து, ஆராய்ந்து கொள்ளுக. வந்த துன்பத்தையும் போக்கி, மேலும் துன்பம் வராதவண்ணம் காக்கும் தன்மையுடையவர்களைப்போற்றிக் கொள்ளுக. பெரியவர்களைப் போற்றித் தம்மவர்களாக ஆக்கிக் கொள்ளுதல் அருமையான காரியங்கள் பலவற்றிலும் அருமையானது. தம்மைவிடப் பெரியவர்களைத் தம்மவராகச் செய்து கொள்ளுதல் வலிமைகள் எல்லாவற்றிலும் சிறந்த வலிமையாம். தக்கவகையில் ஆய்வுரைகூறும் அறிஞர்களையே அரசன் கண்ணாகக்கொண்டு நடப்பதால் அத்தகைய ஆலோசனை கூறுபவர்களைத் துணையாகக் கொள்ளுக. இங்ஙனம், தக்க சான்றோர்கூட்டத்தில் கலந்தொழுகும் மன்னனைப் பகைவர் ஒன்றும் செய்ய முடியாது. இடித்து இடித்து அறிவுரை வழங்கித் திருத்தும் அறிஞர்களைத் துணைக் கொண்டு ஆளும் அரசர்களை யார்கெடுக்க முடியும்? இடித்துரைக்கும் பெரியார்களைத் துணைக்கொள்ளாத மன்னன் கெடுப்பவரில்லாமலே தானே கெடுவான். முதலில்லாதவர்க்கு இலாபம் இல்லாதவாறுபோல, துன்பத்தும் இன்பத்தும் தாங்கிக்கொள்ளும் தக்கதுணையில்லார்க்கு நிலைத்தவாழ்வு இல்லை. நல்லவர் நட்பை மன்னவன் கைவிடுவது பலரைப் பகைத்துக் கொள்வதிலும் பன்மடங்கு தீமையாம்.]

அதிகாரப்பொருள்;

பரிமே:— அஃதாவது மூவிருகுற்றமும் முறைமையின் கடிதலின் காவற்சாகாடு உகைத்தற்கு உரியனுய அரசன் தீநெறி விலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும். பேரறிவுடையராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத் தெய்வக் குற்றங்கள் வாராமல் காத்தற்கு உரிய அமைச்சர், புரோகிதர்.

மணக்:— பெரியாரைத் துணைக்கோடலாவது தம்மின் முதிர்ந்த அறிவுடையாரைத் தமக்குத் துணையாகக் கொள்ளுதல். அரசன் குற்றமற்றானாயினும், தன்னின் முதிர்ந்த அறிவுடையாரைத் துணையாகக் கொண்டு வினைசெய்ய வேண்டுதலின், இஃது அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— பெரியாரைத் துணைக்கோடலாவது பெரியாரைத் தனக்குத் துணைபெறுதல் எ - று.

441. அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல். (க)

உரைப்பகுதி :

பரிமே:— அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை - அறத்தினது நுண்மையை அறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை, தேர்ந்து திறன் அறிந்து கொளல் - அரசன் அதனது அருமையை ஓர்ந்து, கொள்ளும் திறம் அறிந்து கொள்க.

அறநுண்மை நூலானே அன்றி உய்த்துணர்வானும் அறிய வேண்டுதலின், அறன் அறிந்து என்றார். மூத்தல் - அறிவானும், சீலத்தானும், காலத்தானும் முதிர்தல். அறிவுடையார் - நீதியையும் உலகியலையும் அறிதலை உடையார். திறன் அறிதலாவது நன்குமதித்தல், உயரச்செய்தல், அவர்வழிநிற்றல் என்பன முதலாக அவர் பிணிப்புண்ணும் திறன் அறிந்து செய்தல்.

மணக்:— அறத்தின் பகுதியறிந்து முதிர்ந்த அறிவுடையாரது கேண்மையை அவரவர் செய்தியாகிய திறங்களை அறிந்து, ஆராய்ந்து கொள்க. எ - று.

இது புரோகிதரைக் கூட்டுமாறு கூறிற்று.

பரிதி:— கல்வி கேள்வி அறிந்து தன்மத்தின் வழி நிற்பார் உறவை எந்த வகையினாலும் பண்ணிக் கொள்வார் எ - று.

காளிங்:— இவ்வாறு பெரியோரை இவ்வரசர் தமக்கு துணை கொள்ளும் இடத்துப் பல அறநூல்களாலே அறநெறிகளை அறிந்து, முதிர்ந்த உணர்வுடைய பெரியோரது நட்பின் திறப்பாட்டினை அறிந்து, மற்று இதற்குக் குறைபடாதவாறு *தேர்ந்து கைக்கொள்க எ - று.

ஒப்புமைப்பகுதி:

" நுண்மை அறனும் மிகத்தெளிந்து நூலின் இயல்பும் உலகியல்பும்
வண்மை யுறத்தேற் றிடுமாற்றல் வல்ல ராகி வளர்சீலம்
திண்மை அறிவா யுளின்முதிர்ந்தோர் சேர நன்கு மதித்திடுக
எண்மை புரியாது உயர்ந்திடுக இயம்பும் வழியே நின்றிடுக."

—விநா. அரசி. 55.

* 'தெரிந்து' எனவும் பாடம்.

குறிப்பு:

"அரசனேயாயினும் திறனறிந்து நடவாவழி அறிவுடையார் அகலுவர் என்பதாம். உய்த்துணர்வு - நடைமுறை. நூலறிவு எவ்வளவுதூரம் நடைமுறைக்குப் பயன்படும் என்பதை அறிந்து செலுத்தும் ஆற்றல் நூலறிவோடு உலகில் ஒத்துப் பழகும் அறிவுடையார்க்கே உளதாம் என்றவாறு.

—தொகுப்பாசிரியர்.

442. உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— *உற்ற நோய் நீக்கி - தெய்வத்தானும் மக்களானும் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறு அறிந்து நீக்கி, உறாமை முன் காக்கும் பெற்றியார் - பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன் அறிந்து காக்கவல்ல தன்மையினை உடையாரை, பேணிக் கொளல் - அரசன் அவர் உவப்பன செய்து துணையாகக் கொள்க.*

தெய்வத்தான் வரும் துன்பங்களாவன, மழையினது இன்மை மிகுதிகளானும், காற்று தீ பிணி என்ற இவற்றானும் வருவன. அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச்செய்யும் சாந்திகளான்நீக்கப்படும். மக்களான் வரும் துன்பங்களாவன பகைவர், கள்வர், சுற்றத்தார், வினை செய்வார் என்றிவர்களான் வருவன. அவை சாம பேத தான தண்டங்களாகிய உபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும். முன்காத்தலாவது தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களான் அறிந்து, அச்சாந்திகளாற் காத்தலும்; மக்களான் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம், செயலென்பனவற்றான் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றாற்காத்தலுமாம். ஆகவே புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறாயிற்று. இங்கிதம் - குறிப்பான் நிகழும் உறுப்பின்தொழில். ஆகாரம் - குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன - நன்குமதித்தல் முதலியன. இவ்வ இரண்டு பாட்டானும் பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டும் என்பதூஉம், கொள்ளுமாறும் கூறப்பட்டன.

மணக்:— *அரசர் தமக்குற்ற நோயை விடுவித்துப் பின்பு துன்பமுறாமல் முன்னே காக்கவல்ல தன்மையுடையாரை விரும்பிக் கொள்க எ - று.*

பெற்றியாரென்று பொதுப்படக்கூறினமையால், இது மந்திரிகளைக் கூட்டுமாறு கூறிற்று.

பரிதி:— ஒரு விதனம் வருமுன்னே விதனம் வராமல் காத்து, அப்படிக்கு விதனம் வந்தால் அந்த விதனத்தை நீக்கும் உபாயஞ் செய்யும் பெரியோரைப் பேணிக் கொள்வான் எ - று.

காளிங்:— வேந்தரானவர் தாம் யாதானும் ஒருவழியால் உற்றது ஓர் இடர் உளராயின் மற்று அதனையும் துடைத்துப் பின் ஓர் இடர் உறாதவாறு முன்னுறத் தேர்ந்து காக்கும் தன்மையராகிய பெரியோரைப் பேணித் துணையாகக் கொள்க எ - று.

[1]இனி இங்ஙனம் தமக்குப் பெரியோரைத் துணையாகக் கொண்டோர்க்கும் மற்று இதுவேயுமன்றி, தீவினை உளராகிய சிறியோரைச் சேர்ந்து ஒழுகாமையும் வேண்டுமாகலின் மற்று இதன்பின்னரே அதனை அறிவிக்கிறது மேலை அதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பெற்றி - தன்மை. [2]இங்கிதம் - குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில். ஆகாரம் - குறிப்பின்றி நிகழும் வேறுபாடுகள்.

ஒப்புமைப்பகுதி:

"செயல்வேண்டா நல்லவை செய்விக்கும் தீய
செயல் வேண்டி நிற்பின் விலக்கும் - இகல்வேந்தன்
தன்னை நலிந்து தனக்குறுதி கூறலால்
முன்னின்னு மூத்தார்வாய்ச் சொல்." —பழ-நா.

"மழையின் மிகுதி மழையின்மை வளிதீப் பிணியால் வந்ததுயர்
குழைவில் அமரர் தக்கோரைக் குறித்துச் சாந்தி யாற்கடியா
விழைவில் பகைவர் கள்வர்வினை செய்வார் சுற்றம் இவர்களினும்
பிழையை உபாயம் நான்கானும் பெயர்க்கும் பெரியர் எனுந்துணையே.
—விநா. அரசி. 56.

[1] பத்தாவதாக இக்குறளைக்கொண்டமையின் இவ்வாறு தோற்றுவாய் செய்துள்ளார். [2] இவ்விளக்கம் பரிமேலழகர் உரையினும் காணப்படுகிறது.

"நற்பான் மையினுல் தேவர்களால் நண்ண லாகும் எதிர்வினையை
உற்பா தங்க ளான்அறிந்தே ஒழிப்பர் மனித ரால்வருவ
பொற்பா ரவரிங் கிதம்குணம்ஆ காரம் செயலால் புக்கறிந்து
பிற்பா லுறச்செய் குவர்அதனுல் பெரியோர் துணையே துணையாகும்.
—தை. 57.

"பெரியாரைத் துணைக்கொள்" —ஆத்தி. 83.

முதுமொழிவெண்பாக்கள் :

"பகைசிறிதும் இன்றிப் பறவைகளும் அஞ்ச
இறைவர் துணைவலியான் எய்தும்—முறைமையால்" —முதுமொழி. 77.

"நாரதனுல் சம்வரத நற்றவற்சேர்ந் தேமருத்து
மூரியின்மேம் பட்டான் முருகேசா — பாரதனில்." —முருகேசர். 45.

குறிப்பு:

'உற்றதுகொண்டு மேல்வந்து உறுபொருள் உணருங்கோளார், மற்றது வினையின் வந்ததாயினும் மாற்றலாற்றும் பெற்றியர்' என்ற கம்பர்வாக்கு கருதுதற்குரியது.

—தொகுப்பாசிரியர்.

443. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். (ந)

உரைப்பகுதி

பரிமே:— பெரியாரைப் பேணித் தமராக் கொளல் - அப்பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல், அரியவற்றுள் எல்லாம் அரிது - அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிது.

உலகத்து அரியன எல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு சிறந்தது என்றது, இதனுல் அவையெல்லாம் உளவாதல் நோக்கி.

மணக்:— செய்தற்கரியன எல்லாவற்றினும் அரிதே, தம்மின் முதிர்ந்த அறிவுடையாரை விரும்பித் தமக்குச் சுற்றமாகக் கொள்ளுதல் எ - று.

பெரியாரைக் கொளல் என்பது மந்திரி புரோகிதரைக் கூட்டிக்கொள்கை.

பரிப்:— பெரியார் என்றது மந்திரி புரோகிதரை; அவரைத் தேடிக் கூட்டுதல் அரிது என்றது.

பரிதி:— அரிதான காரியம் ஒருமலையை யெடுத்து ஒரு மலைமேலே வைத்தல். ஒரு கடுகிலே எழுகடலை அடக்கல். இதிலும் பெரியது எது என்னில் பெரியாரைத் துணைக்கோடல் எ - று.

காளிங்:— கீழ்ச்சொன்ன கல்வியும் கேள்வியும் அறிவுடைமையும் குற்றங் கடிதலும் பிறவும் ஆகிய செயற்கரிய எல்லாவற்றுள்ளும் பெரிதும் அரிது; யாதுஎனின், முழுதும் உணர்ந்த பெரியோரை ஓம்பித் தமக்குத் துணையாகக் கோடல் எ - று.

மேற்கோள்பகுதி:

பெருந்:— நவின்றோர்க்கினிமை என்ற தந்திரகுணத்திற்கு மேற்கோள். (வீர. 180.)

ஒப்புமைப்பகுதி:

"பொலந்தார் இராமன் துணையாத்தான் போந்த
இலங்கைக் கிழவற் கிளையான் — இலங்கைக்கே
பேர்ந்திறை யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழீ இயிலார் இல்." —பழ-நா.

முதுமொழிவெண்பாக்கள்:

" ஆடுபல தேடலாம் ஆனமத யானையொன்று
தேடல் அரிதே தினகரா — நாடில்" —தினகர. 48.

" சிந்தா மணிகிடைத்தென் தென்னர்க் கிறையருளால்
வந்தாரைப் போலஎது வாழவைக்கும் — அந்தோ" —முதுமொழி.78.

" எத்திறமும் ஏயர்கோன் நட்பாமா றெண்ணினரே
சுத்தநெறி ஆரூரர் சோமேசா — வைத்த." —சோமேசர். 45.

குறிப்பு:

'உலகத்திற் சிறந்த பொருள்கள் யாவும் அரசற்குரியன' என்னும் நியாயப்படி அரசன் பெற்ற அரிய பொருள்கள் எல்லாவற்றுள்ளும் என்பதாம். பேணுதல் எல்லாரையும் ஒப்பநோக்காது தாமறிந்து பழகுதலும், சிறப்புச் செய்தலும் முதலாயின.

—தொகுப்பாசிரியர்.

444. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு முதலியவற்றால் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர்வழி நின்று ஒழுகுதல், வன்மையுள் எல்லாம் தலை - அரசர்க்கு எல்லாவலியுடைமையினும் தலை.

பொருள், படை, அரண்களாய வலியினும் இத் துணைவலி சிறந்தது என்றது, இவர் அவற்றான் நீக்கப்படாத தெய்வத்துன்பம் முதலியனவும் நீக்குதற்கு உரியராகலின்.

மணக்:— தம்மின் மிக்க அறிவுடையார் தமக்குத் தமராக ஒழுகுதல், வலியானவை எல்லாவற்றினும் தலையானவலிமை, எ - று.

பரிப்:— இவர்கள் உண்டாகவே யானை குதிரை படையினால் உண்டான வலியினும் மிக வலியுடையவனாவன் என்றது.

பரிதி:— செல்வம் கல்வி அறிவு தம்மிலும் பெரியாரைத் தமக்கு உறவாகப் பண்ணிக்கொள்ளுதல் வன்மைக்குள் வன்மை எ - று.

காளிங்:— குலத்தானும் குணத்தானும் கல்வியானும் தம்மின் சிறந்தபெரியோரை இவ்வரசர்க்குத் துணையாகக் கொண்டு ஒழுகுதலே வன்மையுள் எல்லாம் தலைப்பாடுடைய வலியாவது எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

" வன்தொண்டர் சேரனையும் வாவென்றரன் அழைப்பச்
சென்றுதெரி வித்தார் சிவசிவா — என்றென்றும். " —சிவசிவ. 45.

குறிப்பு:

ஐம்பெருஞ்சுற்றத்துள் ஒருவராதலின் 'தமராக' என்றார். அறிவுடையார் இடம் காலம் வலி முதலியன அறிந்து ஏவ இயங்குவன படைமுதலிய வன்மைகள் ஆதலின் பெரியாரைத்துணைக்கொள்ளுதல் வன்மையுள் தலையாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

445. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். (௫)

உரைப்பகுதி :

பரிமே:— சூழ்வார் கண்ணாக ஒழுகலான் - தன்பாரம் அமைச்சரைக் கண்ணாகக்கொண்டு நடத்தலான், மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் - அரசன் அத்தன்மையராய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க.

இரண்டாவது விகாரத்தால் தொக்கது. தானே சூழவல்லனாயினும் அளவிறந்த தொழில்களான் ஆகுலம் எய்தும் அரசன்பாரம் அதுவே தொழிலாய அமைச்சரான் அல்லது இனிது நடவாமைபற்றி, அவரைக் கண்ணாகக் கூறினார். ஆராய்தல் - அமைச்சியலுள் சொல்லப்படும் இலக்கணத்தினர் என்பதனை ஆராய்தல். இவை மூன்றுபாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— அரசன் தன்னைச் சூழ்ச்சியாற்கொல்ல நினைப்பாரைத் தானும் சூழ்ச்சியால் கொல்லவல்லவனாதல்; காரியமெண்ண வல்லார் தனக்குக் கண்ணாக வொழுகலான் எ - று.

பரிப்:— பகைவர் சூழ்ச்சியால் தேற்றாமையால் அவரைத் தோள் வலியாற்கோடல் அரிதாம் ஆகலான் சூழ்வார் கண்ணாக ஒழுக வேண்டும் என்றது.

பரிதி:— தன்னிற் பெரிய பலமான அரசரைத் தான் உறவு கொள்ள வேண்டினால் அவருக்கு இஷ்டமான பேரைத் துணையாகப் பண்ணிக் கொள்வான் எ - று.

காளிங்:— மறைமுதலாக இராச நீதிக்கு அடுத்த முறை நெறியும், நெறி அல்லதும் பிரித்தும் ஆராயினும், பெரியோரைத் தனக்கு அவற்றை விளங்கக் காட்டும் கண்ணாகக் கொண்டு ஒழுகவேண்டுதலான்

உலகத்து மன்னனானவன் இங்ஙனம் அவற்றைப் பழுதறத் தேரும் பெரியோரைத் தான் ஆராய்ந்து கைக்கொள்க எ - று.

மேற்கோள்பகுதி :

பெருங்:— ஏது அலங்காரத்திற்கு மேற்கோள் காட்டி, 'இதனுள் சூழ்வார் கண்ணாக ஒழுகலே பொருளாகச் சூழ்ந்து கொளல் என்று ஏது காட்டிச் சொன்னமையால் ஏது அலங்காரமாயிற்று' என்பர். (வீர.153)

ஒப்புமைப்பகுதி:

" கற்றார் பலரைத்தம் கண்ணாக இல்லாதார்
உற்றிடர்ப் பட்ட பொழுதின்கண் தேற்றம்
மரையா துணைபயிரும் மாமலை நாட
சுரையாழ் நரம்பறுத் தற்று."
—பழ-நா

" கண்போற் காதலின் கழிபே ரமைச்சன் " —பெருங். 2:11: 167.

" உற்றது முடிக்கும் உறுதி நாட்டத்துக்
கற்றுப் பொருள்தெரிந்த கண்போற் காட்சி
அருமதி அமைச்சர் திருமதில் சேரி." —பெருங். 3; 3: 93-95.

" ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்......
கொற்றம் கொள்குறிக் கொற்றவற் கென்பவே " —சீவக. 1921.

" மந்திரக் கிழவர் கண்ணா மக்கள்தன் தாள்க ளாகச்
சுந்தர வயிரத் திண்தோள் தோழராச் செவிகள் ஒற்றா
அந்தர உணர்வு நூலா அச்செனும் உருவு கொண்ட
எந்திரம் இதற்கு வாயாத் தூதுவர் இயற்றப் பட்டார்."
—சூளா. தூது. 136.

" மற்றவன் மனமும் கண்ணும் வாழ்க்கையும் வலியும் சால்பும்
அற்றமில் அரசும் கோலும் ஆபவர் அமைச்சர் அன்றே."
—சூளா. மந்திர. 6.

" வீரக், கழலி னாற்கொரு கவசமும் கண்ணுமாய் நடப்பார். "
—திருவிளை, பன்றி. மந்திரி. 12.

" கற்றறிந்தோ ராதலினால் காவலற்குக் கண்போன்ற
முற்றுணர்ந்த அமைச்சரினும் முதலமைச்ச ராய்த்திகழ்வார்."
—ஷை. வாத. உபதே. 7.

446. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். (சா)

உரைப்பகுதி :

பரிமே:— தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானை - தக்கா ராகிய இனத்தை உடையனாய்த் தானும் அறிந்து ஒழுகவல்ல அரசனை, செற்றார் செயக்கிடந்தது இல் - பகைவர் செய்யக் கிடந்ததொரு துன்பமும் இல்லை.

தக்கார் - அறிவு ஒழுக்கங்களால் தகுதியுடையார். ஒழுகுதல்- அறநீதிகளின் நெறிவழுவாமல் நடத்தல். வஞ்சித்தல், கூடினரைப் பிரித்தல், வேறுபகை விளைத்தல் என்று இவற்றானும், வலியானும், பகைவர் செய்யும் துன்பங்கள் பலதிறத்த ஆயினும், தானும் அறிந்து அறிவார்சொல்லுங்கொண்டு ஒழுகுவான்கண் அவற்றுள் ஒன்றும் வாராது என்பார், செற்றார் செயக்கிடந்தது இல் என்றார்.

மணக்:— தகுதியுடையார் இனத்தானாய்த் தானும் அவரோடு ஒக்க ஒழுக வல்லவனைப் பகைவர் செய்யக் கிடந்ததொருநெறி இல்லை எ - று.

இஃது இவனைப் பகைவரால் வெல்லல் ஒண்ணாது என்றது.

பரிப்:— தகுதியுடையார்க்கு இனவன் ஆதலாவது, தன்னோடு ஒத்த வரிசை அவர்க்கு உண்டாக்குதலும் தன்னைக் கண்டாற்போல அவரை உலகத்தார் மதிக்கப் பண்ணுதலும். ஒக்க ஒழுகுதலாவது, ஒத்த சூழ்ச்சி உடையனாதல். இவனைப் பகைவரால் வெல்ல ஒண்ணாது என்றது.

பரிதி:— தக்கார் மிக்கார் தனக்குத் துணையாகக் கொண்டிருப் பவனைச் சத்துருக்களால் ஒன்றுஞ் செய்யப் போகாது எ - று.

காளிங்:— தமது அறிவுமிகுதியால் தகாதனவற்றுக்கு இடிக்கத் தகும் சான்றோர் இனத்தனாய்க் கொண்டு இங்ஙனம் தான் ஒழுக வல்லவனை வேறு பகைவரால் செய்து முடிப்பக் கிடந்தது யாதும் இல்லை. எ - று

ஒப்புமைப்பகுதி:

" சிறிய ராயினர் சார்பினை விழையன்மின் திறங்கெழு பெரியோராம்
அறிஞ ராயினர் சார்பினை விழைமினோ அலரிதழ் விரிகொன்றை
வெறிந றுந்தொடை எம்பிரான் சார்பினை விழைதலால் உரகங்கள்
மறுவி லாற்றல்சால் கலுழனை வினையின வாழ்ந்தனை யோஎன்ன."
—காஞ்சி. பஞ்ச. 6.

" சான்றோரினத்து இரு" —ஆத்தி. 45.

முதுமொழிவெண்பாக்கள்:

" யோகமுனி ராகவனை உற்றரக்கர் போர்களைந்தே
யாகம் முடித்தான் இரங்கேசா — ஆகையால்." —இரங். 45.

447. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— இடிக்கும் துணையாரை ஆள்வாரை - தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் துணையாந்தன்மையை உடையாரை இவர் நமக்குச் சிறந்தார் என்றாளும் அரசரை, கெடுக்கும் தகைமையவர் யார் - கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்து யாவர்?

தீயன - பாவங்களும் நீதியல்லனவும். துணையாந்தன்மையாவது தமக்கு அவையின்மையும் அரசன்கண் அன்புடைமையும் ஆம்: அத் தன்மையுடையார் நெறியின் நீங்க விடாமையின், அவரை ஆளும் அரசர் ஒருவரானும் கெடுக்கப்படார் என்பதாம். நெருங்கிச் சொல்லும் அளவினேரை என்று உரைப்பாரும் உளர். இவை இரண்டு பாட்டானும் அதன்பயன் கூறப்பட்டது.

மணக்:— குற்றங் கண்டால் கழறுந்தன்மை யுடையாரைத் தமக்குத் தமராகக் கொள்ளவல்லாரைக் கெடுக்குந் தகைமையுடையார் உலகத்து யாவர் எ - று.

இது கேடில்லை என்றது.

பரிதி:— சிரிக்கச் சொல்லிக் கெடுக்காமல் *அடிச்சுப் புத்தி சொல்லுகிறபேர் வார்த்தை கேட்டுத் துணையாகக் கொண்டிருப்பாரை யாராலே கெடுக்கலாம் எ - று.

காளிங்:— மறந்தும், உணர்ந்தும் தகாதன செய்யுமிடத்து நமக்கு இது இயல்பல்ல என்று கழறி நெருக்கும் பெரியோரை ஆள்வாரை மற்று யாரேதான் வந்து கெடுக்கும் தகைமைப்பாட்டினை உடையார்? யாரும் இல்லை எ - று.

ஒப்புமைப்பகுதி:

" கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்தபுல்
ஒல்காவே யாகும் உழவர் உழுபடைக்கு
மெல்லியரே யாயினும் நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாம் செற்றார் சினம்." —நாலடி. 178

448. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் - கழறுதற்கு உரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையின் காவலற்ற அரசன், கெடுப்பார் இலானும் கெடும் - பகையாய்க் கெடுப்பார் இல்லை ஆயினும் தானே கெடும்.

இல்லாத ஏமரா என்பன பெயரெச்ச அடுக்கு. கெடுப்பார் உளர் ஆவர் என்பது தோன்ற, இலானும் என்றார். தானே கெடுதலாவது பாகனில்லாத யானைபோல நெறியல்லா நெறிச் சென்று கெடுதல்.

மணக்:— கழறுவாரை யில்லாத காவலில்லாத அரசன் தன்னைப் பகைவராய் வந்து கெடுப்பார் இல்லையாயினும், தான் வேண்டியவாறு ஒழுகிக் கெடும் எ - று.

பரிதி:— அடிச்சுப் புத்தி சொல்லுகிற பெரியோரையல்லாமல் தன் விபரீத புத்தியினாலே மிகுத்த மன்னவன், கெடுப்பார் இல்லாதபோதும் தானே கெடுவன் எ - று.

---

*'இடித்து' என்றது பழைய உரை

காளிங்:— தனக்குத் தகாதன காரியங்கள் செய்யுமிடத்துக் கழறி நெருக்கும் பெரியோரைத் தனக்கு இல்லாததனால் நல்லுறுதி பெறாத வேந்தன் மற்றுத் தன்னைக் கெடுப்பார் ஈண்டு இல்லை யாயினும் தனது மறவியானும் செல்வச் செருக்கினானும் தானே கெடும் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— 'இல்லாத' 'ஏமரா' என்பன பெயரெச்ச அடுக்கு. 'மூவா முதலா உலகம்' (சீவக. 1.) என்பதும் அது.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— மறையாய் அடுக்கலுக்கு மேற்கோள். (இ. கொ. 120.)

ஒப்புமைப்பகுதி:

"முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப உடுத்துண்ப உண்ணா — இடித்திடித்துக்
கட்டுரை கூறின் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்." —நீதிநெறி. 31.

449. முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— முதல் இலார்க்கு ஊதியம் இல்லை - முதற்பொருள் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லையாம்; மதலையாம் சார்பு இலார்க்கு நிலை இல்லை - அதுபோலத் தம்மைத் தாங்குவதாம் துணை யில்லாத அரசர்க்கு அதனான் வரும் நிலையில்லை.

முதலைப் பெற்றே இலாபம் பெறவேண்டுமாறுபோலத் தாங்கு வாரைப் பெற்றே நிலைபெறவேண்டும் என்பதாம். நிலை - அரசர் பாரத் தோடு சலியாது நிற்றல்.

மணக்:— முதலில்லாதார்க்கு இலாபம் இல்லையானாற்போல, தாங்குதலாகிய சார்பு இல்லாதார்க்கு அரசுநிலைநிற்றல் இல்லை எ - று.

பரிப்:— பெரியாரைத் துணையாகக்கொள்ளாதார்க்கு வரும்குற்றம் கூறுகின்றார் ஆதலின் முற்படப் பொருட்கேடுண்டாம் என்று கூறினார்.

பரிதி:— முதற்பொருள் இல்லாற்கு லாபமில்லாதது போலப் பிள்ளை யில்லாதாற்கு*நிலைமையில்லை எ - று.

காளிங்:— முன்னம் தமக்கு நெஞ்சுறுதியாகிய முதற்பொருள் இல்லாதாற்கு மற்று அஃதடியாகப் பின்பு பொலிந்துவரும் இலாபம் யாதும் இல்லையன்றே; மற்று அதுபோலத் தமது நீதி தளராமல் தாங்கும் தாணுவாகிய சார்வில்லாதார்க்கு நிலை இல்லை எ - று.

மதலை - பாரந்தாங்கிய தூண்.

ஒப்புமைப்பகுதி:

" ஒருவனைப் பற்றி ஓரகத்திரு " —கொன்றை. 10.

முதுமொழிவெண்பாக்கள்:

" தீர்த்தமதி கற்பகம்போல் தீவினைதுன் பஞ்சிறுமை
தீர்த்திடுவா மேலோர் திருமலையா — சேர்த்த. " —திருமலை.

குறிப்பு:

'மதலையாய் மற்றதன் வீழூன்றியாங்கு' அரசு விழாதவண்ணம் தாங்குவது அமைச்சு என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

450. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். (கo)

உரைப்பகுதி:

பரிமே:— , பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்து - தான் தனியனாய் வைத்துப் பலரோடும் பகைகொள்ளுதலின் பதிற்று மடங்கு தீமையுடைத்து, நல்லார் தொடர் கைவிடல் - அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளாது ஒழிதல்.

பலர் பகையாயக்கால் *"மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல், பேதுசெய்து பிளந்திடல்" என்பவை யல்லது ஒருங்கு வினையாக்குறித்துச் செய்தாலும் ஒருவாற்றான் உய்தல்கூடும், நல்லார்தொடர் கைவிட்டால்

*சீவக. 1920.

ஒருவாற்ருனும் உய்தல் கூடாமையின், இது செய்தல் அதனினும் தீது என்பதாம். இவை மூன்றுபாட்டானும் அது செய்யாதவழிப்படும் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— பலரோடு பகைகொண்டால் எவ்வளவு துன்பமுறும்; அதனினும் பத்துமடங்கு துன்பமுறும் பெரியாரைத் துணையாகக் கொள்ளாது ஒழியின் எ - று.

பரிப்:— இஃது இடுக்கண் வரும் என்றது.

பரிதி:— துர்ச்சனர் பதினுபிரம்பேரைப் பகைகொள்வதிலும் பொல்லாது; நல்லோரைக் கைவிடல் எ - று.

காளிங்:— தான் தனியனுயிருந்து அளவிறந்த பலரோடும் பகை கொள்வதனினும் நூறுமடங்கு குற்றத்தை உடைத்து; இங்ஙனம் தெரிந்துணர வல்ல பெரியோரைத் துணையாகப் பெற்றுவைத்தும் அவரது தொடர்ச்சியைத் தாம் கைவிடுதல் எ - று.

ஒப்புமைப்பகுதி

" பெரியாரோடு யாத்த தொடர்விடுதல் இன்ன " —இன்ன. 27.

குறிப்பு:

மதுரைக்காஞ்சிகொண்ட தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனைச் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய ஏழுஅரசர் ஒருங்குகூடிப் பொருதகாலத்தும், மாங்குடிமருதன் போன்ற சிறந்த புலவர்களைத் துணைக்கொண்டமையின் வென்றமையும், பாரியை மூவேந்தரும் முற்றுகையிட்டகாலத்துக் கபிலரால் பறம்புமலை உணவும்நீரும் பெற்று உய்ந்தமையும் கருதுதற்குரியன.

நல்லார்தொடர்கைவிடல் பெரியோர்களைத் தொடர்புடையராகப் பெற்றிருந் தும் அதனைத்தமது அறியாமையான் நீங்குதல்எனவுமாம். நல்லார்நட்புக்கொள்ளாமை பல்லாரோடு பகைகொள்ளும் அளவு தீமையும், இருந்தநட்பையும் விடுதல் பல்லா ரோடு பகைகொள்ளுதலினும் பத்தடுத்த தீமையும் பயக்கும் என்ற நயம்காண்க.

—தொகுப்பாசிரியர்.

குறள் வைப்புமுறை.

பரிமே:— *அறனறிந்து, உற்றநோய், அரியவற்றுள், தம்மின், சூழ்வார்கண், தக்கார், இடிக்கும், இடிப்பாரை, முதலிலார்க்கு, பல்லார்.*

மணக்:— *அரியவற்றுள், உற்றநோய், அறனறிந்து, சூழ்வார்கண், தம்மின், தக்கார், இடிக்கும், பல்லார், முதலிலார்க்கு, இடிப்பாரை.*

பரிதி:— *அரியவற்றுள், தம்மின், தக்கார், முதலிலார்க்கு, அறனறிந்து, இடிக்கும், இடிப்பாரை, சூழ்வார்கண், உற்றநோய், பல்லார்.*

காளிங்:— *அரியவற்றுள், சூழ்வார்கண், அறனறிந்து, தம்மின், இடிக்கும், இடிப்பாரை, தக்கார், பல்லார், முதலிலார்க்கு, உற்றநோய்.*

46. சிற்றினஞ்சேராமை.

தொகுப்புரை:

[பெரியோரியல்பு சிறியர் தொடர்பை அஞ்சி நீக்கும். அதனையே சுற்றமாக் கொள்ளும் சிறியோரியல்பு. நிலத்தின் இயற்கையால் தண்ணீர் நிறமும் சுவையும் மாறுபட்டாற்போல மக்களுக்கு நட்பால் அறிவு திரியும். மக்களுக்கு மனத்தால் உணர்ச்சி உண்டாகும். இத்தகையவன் என்று மதிக்கப்பெறும் தனித்தகுதி இனத் தால் உண்டாகும். அறிவு ஒருவனுக்கு மனத்திலிருப்பதுபோலக் காட்டும். ஆனால், அது அவன் இனத்திலிருந்தே உண்டாகிறது. மனத்தூய்மையும் செயல்தூய்மையு மாகிய இரண்டுமே இனத்தின் தூய்மையால் இயைவன. மனத்தூய்மையுடையார்க்கு நற்புகழ் உண்டாகும். இனத்தூய்மையுடையார்க்கு நன்றாகாத காரியங்களே இல்லை. மனத்தூய்மை நிலை பெற்ற உயிர்க்கு ஆக்கந்தரும்; இனத்தூய்மை எல்லாப் புகழையும் தரும். எவ்வளவுதான் அகத்தூய்மை இருந்தாலும் அதனைக் காக்கும் அரண் இனத்தூய்மையேயாம். மனநலத்தால் மறுமையின்பம் உண்டு. அதுவும் இனநலத்தால் அரண் செய்யப்படின் சிறப்புடையதாகும். நல்ல இனத்தை விடச் சிறந்த துணையில்லை; கெட்ட இனத்தைக் காட்டிலும் துன்பம் தருவது வேறு ஒன்றும் இல்லை.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— *அஃதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது *'நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்போரும்' விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பிற்றாய அதனைப் பொருந்தின் பெரியாரைத் துணைக் கோடல் பயனின்று என்பது உணர்த்தற்கு இஃது அதன்பின் வைக்கப் பட்டது.*

மணக்:— *சிற்றினஞ் சேராமையாவது காமுகரையும், சூதாடி களையும், பெண்டிர் முதலாயினோரையும் சேர்ந்தொழுகினால் வருங்குற்றமும் சேராமையால் வரும் நன்மையும் கூறுதல். பெரியார் துணையாயினும் சிறிய இனத்தாரோடு ஒழுகின், அது தீமை பயக்கும் என்று அதன்பின் இது கூறப்பட்டது.*

---

*புறம். 29: 11.

பரிதி:— சிற்றினம் சேராமையாவது அறிவுக்கீனனுடன் சேராமை எ - று.

451. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். (க)

உரைப்பகுதி :

பரிமே:— பெருமை சிற்றினம் அஞ்சும் - பெரியோரியல்பு சிறிய இனத்தை அஞ்சா நிற்கும்; சிறுமை தான் சுற்றமாச் சூழ்ந்து விடும் - ஏனைய சிறியோர் இயல்பு அது சேர்ந்தபொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணித் துணியும்.

தத்தம் அறிவு திரியுமாறும் அதனால் தமக்கு வரும் துன்பமும் நோக்கலின் அறிவுடையார் அஞ்சுவர் என்றும், அறிவொற்றுமையால் பிறிது நோக்காமையின் அறிவிலாதார் தமக்குச் சுற்றமாகத் துணிவர் என்றும் கூறினர். பொருளின் தொழில்கள் பண்பின்மேல் நின்றன. இதனால் சிறியஇனம் பெரியோர்க்கு ஆகாது என்பது கூறப் பட்டது.

மணக்:— சிற்றினத்தை யஞ்சுவர் பெரியர்; சிறியவர் அதனைச் சுற்றமாகக் கொண்டு விடுவர் எ - று.

இது பெருமை வேண்டுவார் சிற்றினஞ் சேரார் என்றது.

பரிதி:— பெரியோர் சிறுமையுடையார்க்குப் பயப்படுவார், சிறுமை யுடையோர் சிறுமையுடையோரைத் தமக்கு உறவாக்கிக் கொள்ளுவார் எ - று.

காளிங்:— 'தமது நீதிநெறிக்குத் தகாதோராகிய சிற்றினத்தை மருவுதற்கு அஞ்சுவர் பெரியோர்: இனி மற்று அவரோடு ஒருதன்மை யாகிய சிறியோர் தமது இளைஞராக விசாரித்துக் கைக்கொண்டு விடுவார் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பெருமை - பெரியோர் இயல்பு. சிறுமை - சிறியோர் இயல்பு. பெரியோர் அஞ்சுவர் என்னாது, பெருமை அஞ்சும் என்றதனால், பொருளின் தொழில் பண்பின்மேல் நின்றது. 'பணியுமாம்,' (978)

'அற்றமறைக்கும்' (980) என்பனவும் அவ்வாறும். இதற்கு மறுதலை, 'ஆகாறளவிட்டிதாயினும்' (478) என்பதனுள் பொருண்மேல் நின்றது. பண்பின்மேல் நிற்குங்கால், 'ஆகாற்றளவு' என ஒற்றுமிகும்.

ஒப்புமைப்பகுதி:

" நல்வினைக்கு நற்பயனும் தீய வினைக்குத் தீப்பயனும்
இல்லை எனும்வல் இழுதையரும் எள்ளும் விடரும் தூர்த்தர்களும்
சொல்லு நடரும் முதலாகத் தொகுத்த குழுவைச் சேர்ந்தொழுகின்
புல்லும் அறிவைத் திரித்திருமைப் பொருளும் கெடுக்கும் புகழோடே."
—விநா. அரசி. 58.

" மடையனுக்கு மறுமொழி இல்லை " —பழ.

" துர்ச்சனனைக் கண்டால் தூர விலகு " —ஷை

முதுமொழிவெண்பாக்கள்:

" துன்னு சகுனி சொற்கேட் டாவுயர்த்தோன்
என்னபயன் பெற்றான் இரங்கேசா — மன்னிய." —இரங். 46.

குறிப்பு:

உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாதலின், எத்துணைப் பெரிய அறிவுடையாரும் சிற்றினத்தால் அறிவு திரிவர் ஆதலின், அதனைக்கண்டு அஞ்சுவர். மேல் இன்னான் எனப்படும் சொல் இனத்தானும் ஆதலின் தங்கள் பெருமைக்கு இழுக்கு நேருதல் குறித்தும் அஞ்சுவர் என்றுமாம். சூழ்ந்துவிடும் என்பதில் விடு துணிவுப் பொருள் உணர்த்தும் விகுதி.

—தொகுப்பாசிரியர்.

452. நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— நிலத்து இயல்பான் நீர் திரிந்து அற்றாகும் - தான் சேர்ந்த நிலத்தினது இயல்பானே நீர் தன்தன்மை திரிந்து அந்நிலத்தின் தன்மைத்தாம்; மாந்தர்க்கு இனத்தியல்பு அறிவு (திரிந்து) அது ஆகும் - அதுபோல மாந்தர்க்குத் தாம்சேர்ந்த இனத்தினது இயல்பானே அறிவும் தன்தன்மை திரிந்து அவ்வினத்தின் தன்மைத்தாம்.

எடுத்துக்காட்டுவமை. விசும்பின்கண் தன்தன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்தவழி, நிறம் சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போலத் தனிநிலைக்கண் தன்தன்மைத்தாய அறிவு பிறவினத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியும் என இதனால் அதனது காரணம் கூறப்பட்டது.

மணக்:— நிலத்தின் தன்மையால் நீர் தன்தன்மை வேறுபட்டு அந் நிலத்தின் தன்மைத்தாவதுபோல, மக்கட்கு அறிவு இனத்தின் தன்மையதாய் வேறுபடும் எ - று.

பரிப்:— நீர் திரிந்து ஆகும் அற்று என்று கூட்டுக. இது தமது அறிவு திரியும் என்றது.

பரிதி:— நிலத்திற்குத் தக்க குணம் நீர் காட்டினாற்போல, இனத் துக்குத் தக்கதாக அறிவு உண்டாம் எ - று.

காளிங்:— நிலத்தின் நிறம் முதலிய வேறுபாட்டுத் தன்மையால் நீரானது தன் தன்மை வேறுபட்டு, மற்று அந்நில இயல்பினை உடைத்தாம். அதுபோல உலகத்துவாழும் மக்களுக்கும் தத்தம் இனத்தின் தன்மையதாகும் தமது அறிவு எ - று.

ஒப்புமைப்பகுதி :

> " இனத்தியல் பாம்அறி வென்ப துண்மையே
> மனத்துயர் செயும்மயல் மாற்று நீறுதான்
> அனிச்சமெல் அடியினுர் நுதல்அ டுத்தலும்
> பனித்துடல் வெதும்புமால் படுத்த லால்என்பார். "

—பிரபு. மாயைபூசை. 34.

" பையலோடு இணங்கேல் " —ஆத்தி. 85.

" பன்றியொடு கூடினுல் கன்றும் மலம் தின்னும். " —பழ

"சேராரோடு சேராதே சேம்பு புளியிட்டுக் கடையாதே" —ஷை

453. மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானும்
இன்னான் எனப்படும் சொல். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம் - மாந்தர்க்குப் பொதுவுணர்வு தம் மனங்காரணமாக உண்டாம்; இன்னான் எனப்படும் சொல் இனத்தான் ஆம் - இவன் இத்தன்மையனென்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல் இனங்காரணமாக உண்டாம்.

இயற்கையாய புலனுணர்வுமாத்திரத்திற்கு இனம் வேண்டாமையின் அதனை மனத்தான் ஆம் என்றும், செயற்கையாய விசேட உணர்வுபற்றி நல்லன் என்றாகத் தீயன் என்றாக நிகழுஞ்சொற்கு இனம் வேண்டுதலின் அதனை இனத்தானும் என்றும் கூறினர். *உவமையளவை கொள்ளாது, அத்திரிபும் மனத்தானும் என்பாரை நோக்கி, இதனான் அது மறுத்துக் கூறப்பட்டது.

மணக்:— மாந்தர்க்கு அறிவு மனத்தினானே உண்டாம்; ஆயினும், தான் சேர்ந்த இனத்தினால் இனியனல்லன் என்று பிறரால் பழிக்கப்படும் சொல் உண்டாம் எ - று.

இது பிறரால் பழிக்கப்படும் என்றது.

பரிதி:— மனஅழுக்கு அற்றால் அறிவு உண்டாம்; அதுபோலே இனம் நல்லதாகில் இன்னான் என்னும் புகழும் உண்டாம் எ - று.

காளிங்:— தமது மனத்தின் நன்மை எவ்வளவு? மற்று அவ்வளவும் உளதாம் மக்கட்கு அறிவானது: மற்று இதனுடனே மனத்தின் தூய்மை எவ்வளவு மற்று அவ்வளவு நன்மைகளை உடையர் என்னும் புகழ்ச்சியாவராலும் எடுத்து உரைக்கப்படும் எ - று.

ஒப்புமைப்பகுதி :

" மனத்தான் மறுவில ரேனும்தாம் சேர்ந்த
இனத்தான் இகழப் படுவர் — புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால். " —நாலடி. 180

*இது இக்குறள் ஒப்புமைப்பகுதியில் காட்டப்பெறும் நாலடியார் 244, 245ம் பாடல்களை உட்கொண்டெழுதிய மறுப்பு.

" கடல் சார்ந்தும் இன்னீர் பிறக்கும் மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால் — தத்தம்
இனத்தனைய ரல்லர் எறிகடல் தண்சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்." —நாலடி. 245.

" வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம் — ஆங்கே
இனம்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனம்தீயாம் பக்கம் அரிது." —நாலடி. 244.

" முயலவோ வேண்டா முனிவரை யானும்
இயல்பின்னர் என்பது இனத்தால் அறிக
நயலிபனுண் கண்ணாய் கரியரோ வேண்டா
அயலறியா அட்டூணோ இல். —பழ-நா.

' தக்கார் வழிகெடா தாகும் தகாதவர்
உக்க வழியராய் ஒல்குவார் — தக்க
இனத்தினான் ஆகும் பழியும் புகழும்
மனத்தினான் ஆகும் மதி." —சிறுபஞ்ச. 81.

454\. மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்(கு)
இனத்துள தாகும் அறிவு. (௪)

உரைப்பகுதி :

பரிமே:— அறிவு - அவ்விசேடவுணர்வு, ஒருவற்கு மனத்து உளதுபோலக் காட்டி - ஒருவற்கு மனத்தின்கண்ணே உளதாவதுபோலத் தன்னைப் புலப்படுத்தி, இனத்து உளதாகும் - அவன் சேர்ந்த இனத்தின் கண்ணே உளதாம்.

மெய்ம்மை நோக்காமுன் மனத்துளதுபோன்று காட்டியும், பின் நோக்கியவழிப் பயின்ற இனத்து உளதாயும் இருத்தலின், காட்டி என இறந்தகாலத்தால் கூறினார். விசேட உணர்வுதானும் மனத்தின்கண்ணே அன்றே உளதாவது என்பாரை நோக்கி, ஆண்டுப் புலப்படுந் துணையே உள்ளது; அதற்கு மூலம் இனம் என்பது இதனால் கூறப்பட்டது.

மணக்:— ஒருவனுக்கு உண்டாகும் அறிவு முற்பட மனத்துள்ளது போலத் தோன்றிப், பின்பு தான் சேர்ந்த இனத்தினுண்டான அறிவாகும் எ - று.

பரிப்:— மேல் மனத்தினுனே அறிவு உண்டாம் என்றார். அதன் பின் இனத்தினுனே திரியும் என்றார். அது மாறுபட்டாற் போலப்பட்டது நோக்கி இது கூறப்பட்டது. இத்துணையும், சேர்ந்ததனால் வரும் குற்றம் கூறிற்று.

பரிதி:— மனத்துள்ளது அறிவுபோலக் காட்டும்; தான் சேர்ந்த இனத்தின் தொழிலே செய்யும் எ - று.

காளிங்:— ஒருவர்க்கு அறிவு உளதாவது மனத்தின்கண் ஆகலான், மற்று அம்மனத்து உளதாவதுபோலத் தோற்றியும், பின்னும் தாம் மருவிவருவது ஓர் இனத்தினளவே உளதாகும் அறிவானது எ - று.

மேற்கோள்பகுதி:

நச்:— முற்றியலுகரம் அடியிறுதிக்கண் உரியசையாய் நின்ற தற்கு மேற்கோள். (தொல். பொருள். செய். 9.)

455. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் - அவ்விசேடவுணர்வு புலப்படுதற்கு இடனாய மனந்தூயனாதல் தன்மையும் செய்யும் வினைதூயனாதல் தன்மையும் ஆகிய இரண்டும், இனம் தூய்மை தூவா வரும் - ஒருவற்கு இனந்தூயனாதல் தன்மை பற்றுக்கோடாக உளவாம்.

மனந்தூயனாதலாவது விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையின் நீங்குதல். செய்வினை தூயனாதலாவது மொழி மெய்களால் செய்யும் நல்வினையுடையனாதல். தூ என்பது அப்பொருட்டாதல் *"தூவறத் துறந்தாரை" என்பதனானும் அறிக. ஒருவன் இனந்தூயனாகவே, அதனோடு பயிற்சிவயத்தான் மனந்தூயனாய் அதன்கண் விசேடவுணர்வு புலப்பட்டு, அதனால் சொல்லும் செயலும் தூயனாம் என, இதனால் இனத்துள்ளவாமாறு கூறப்பட்டது.

*கலி. 118 : 9.

மணக்:— மனம் நன்றாதலும் செய்வினை நன்றாதலுமாகிய இரண்டும், இனம் நன்றாதலைப் பற்றி வரும், எ - று.

இனிச் சேராமையான் வரும் நன்மை கூறுவார் இவைஇரண்டும் நன்றாம் என்று கூறினார்.

பரிதி:— மனம் தூய்மையும் செய்வினை தூய்மையும் ஆகித் தன் இனத்தைத் தான் பாதுகாப்பானாகில், அதனாலே இந்த இரண்டு காரியமும் வரும் எ - று.

காளிங்:— உலகத்துப் பெரியோர் தமது மனம் தூய்மை உடைத்தாகலும், தம்செய்வினை தூய்மையாகலும் என இவை இரண்டும் தாம் இணங்கும் இனத்தின் தூய்மை காரணமாக வரும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"மிக்குப் பெருகி மிகுபுனல் சேர்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல் — மிக்க
இனநலம் நன்குடைய வாயினும் என்றும்
மனநல ஆகாவாம் கீழ்." —பழ-நா.

குறிப்பு:

மனந்தூயனாதல் 'காமம் வெகுளி கடும்பற்றுள்ளம் மயக்கம்' இவற்றின் நீங்குதலுமாம். எடுத்துக்காட்டிய பழமொழிப்பாட்டிலும் 'இனத்தியல்பதாகும் அறிவு' என்ற குறட்கு மாறாக, கீழோர் மேலோரைச் சேர்ந்தாலும் என்றும் தன்தன்மை திரியார் என்பது விளங்குதல் காண்க. —தொகுப்பாசிரியர்.

456. மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்(கு)
இல்லைநன் றாகா வினை. (௬)

உரைப்பகுதி :

பரிமே:— மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும் - மனம் தூயராயினார்க்கு மக்கட்பேறு நன்றாகும், இனம் தூயார்க்கு நன்று ஆகா வினை இல்லை - இனந்தூயராயினார்க்கு நன்றாகாத வினை யாதும் இல்லை.

காரியங் காரணத்தின் வேறுபடாமையின் எச்சம் நன்றாகும் என்றும், நல்லினத்தோடு எண்ணிச் செய்யப்படுதலின் எல்லாவினையும் நல்லவாம் என்றும் கூறினார்.

மணக்:— மனநல்லார்க்குப் பின்பு நிற்கும் *காணம் முதலான பொருள்கள் நல்லவாம்; இனம் நல்லார்க்கு நன்றாகாததொரு வினையும் இல்லை எ - று.

இது மேலதற்குப் பயன் கூறிற்று.

பரிதி:— மனந்தூயரான பேர்க்குப் புதல்வர் நல்லகுணமுண்டாம்; அதுபோலேதான் நல்லோரைச் சேவை செய்யின் நல்ல குணமுண்டாம் எ - று.

காளிங்:— உலகத்து மனம் தூயார்க்கு மக்கட்பேறு முதலிய நன்மை உளவாம்; மற்று அதனுடன் இனம் தூயார்க்கு நன்றாகாத காரியம் யாதும் இல்லை: எனவே அவர்க்கு எல்லா நன்மையும் உள எ - று.

ஒப்புமைப்பகுதி:

“ யோக்கியவான் பாக்கியம் பிள்ளையிலே தெரியும்.” —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

“ எய்தரிய புண்ணியவான் என்பதுமின் மைந்தரிலும்
செய்தியிலும் கண்டோம் தினகரா — பொய்யோ.” —தினகர. 49.

குறிப்பு:

தாயைப்போல பிள்ளை நூலைப்போல சீலையாதலின் மனந்தூயபெற்றோர்க்குப் பிள்ளையும் தூயதாகும். ‘தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்’ என்பதும் ஒப்புநோக்குக. எச்சம் என்பதற்குப் புகழ் எனப் பொருள் கோடலும் அமையும். மனநலம் அகத்தணியாகப் பிறரால் அறியக் கூடாதது ஒன்றாதலின், எல்லாரும் அறிந்து புகழச்செய்வது இனநலமாய புறவணியாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

457. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— மன் உயிர்க்கு மனநலம் ஆக்கம் (தரும்) - நிலைபெற்ற உயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இனநலம் எல்லாப் புகழும் தரும் - இனத்தது நன்மை அதனோடு எல்லாப் புகழையும் கொடுக்கும்.

* காணம் - பொன்.

மன்னுயிர் என்றது ஈண்டு உயர்திணைமேல் நின்றது. தரும் என்னும் இடவழுவமைதிச்சொல் முன்னும் கூட்டப்பட்டது. உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. மனம் நன்றாதல்தானே அறமாகலின் அதனை ஆக்கந்தரும் என்றும், புகழ் கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலின் இனநலம் எல்லாப்புகழுந்தரும் என்றும் கூறினர். மேல் மனநன்மை இனநன்மைபற்றிவரும் என்பதனை உட்கொண்டு அஃது இயல்பாகவே உடையார்க்கு அவ்வினநன்மை வேண்டா என்பாரை நோக்கி, அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையும் தரும் என அவர்க்கும் இதுவேண்டும் என்பது இவ்விரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

மணக்:— மனநன்மை நிலைபெற்ற உயிர்க்கு ஆக்கமாவது போல, இன நன்மை எல்லாவற்றானும் வரும் புகழினைத் தரும் எ - று.

இஃது எல்லாப் புகழும் தரும் என்றது.

பரிதி:— மனம் நன்றாகில் தீர்க்கமான ஆயுசு உண்டாம்; இன நலம் எல்லாப் புகழுந் தரும் எ - று.

காளிங்:— மனத்தின் தூய்மை உலகத்து மன்னி வருகின்ற உயிர்கட்கு ஆக்கமாகும்; மற்று இனநலம் அதுவேயும் அன்றி, எல்லாப் புகழையும் கொடுக்கும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— *தரும் என்னும் இடவழுவமைதிச் சொல் முன்னும் கூட்டப்பட்டது.

முதுமொழிவெண்பாக்கள் :

“ அறியவசு மோகலைக்கோட் டந்தணனை மாதர்
செறியவசு மானன் சிவசிவா — பிறிதென்” —சிவசிவ. 46.

---

*இவ்விளக்கம் பரிமேலழகர் உரையினும் காணப்படுகிறது.

458. மனநலம் நன்குடையர் ஆயினும் சான்றோர்க்(கு)
இனநலம் ஏமாப் புடைத்து. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— மனநலம் நன்கு உடையராயினும் - மனநன்மையை முன்னை நல்வினையால் தாமே உடையராயினும், சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து - அமைந்தார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலை உடைத்து.

நன்கால் என்னும் மூன்றனுருபு விகாரத்தால் தொக்கது. அந்நல்வினையுள்வழியும் மனநலத்தை வளர்த்துவருதலின், அதற்கு ஏமாப்புடைத்தாயிற்று.

மணக்:— மன நன்மை மிக உடையராயினும், இன நன்மை யுடைமை சான்றோர்க்குக் காவலாதலையுடைத்து எ - று.

இஃது இனம் நன்று அல்லராயின், பிறரால் இகழப்படுவராதலான் இனநலம் இகழ்ச்சி வாராமல் காக்கும் என்றது.

பரிதி:— மனம் நல்லதாகிலும் தன்னுடைய இனம் நல்லினமாக வேணும்; அது எல்லாப்புகழும் தரும் எ - று.

காலிங்:— மனம் தூய்மை மிகவும் உடையர் ஆயினும் சால்புடையோர்க்கு மற்று அதனுடனே இனத்தினது நன்மை உளதானல் தமக்குப் பெரிதும் இம்மை மறுமைக்கு ஏமாப்பு உடைத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— 'நன்குடையர் - நல்வினையால் தாமே உடையர்' என்றமையான், மூன்றுவது செய்யுள்தொடை காரணமாக விகாரத்தால் தொக்கது. மனநலம் செயப்படுபொருளாதலான், நன்கு கருவியாதல் நோக்கி என்க.

குறிப்பு:

நன்கு என்பது பண்பாகுபெயராய் நன்மையாகியவினையைக் காட்டி நன்கால் என மூன்றனுருபு ஏற்றது. பயிர்க்குப் பாதுகாவலாகும் வேலிபோல நல்வினைக்கும் அரணாயிருந்து மனநலத்தை வளரச்செய்தலின் இனநலம் ஏமாப் புடைத்து என்றார்.
—தொகுப்பாசிரியர்.

459. *மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து. (௯)

உரைப்பகுதி :

பரிமே:— மனநலத்தின் மறுமை ஆகும் - ஒருவற்கு மனநன்மை யானே மறுமை இன்பம் உண்டாம்; மற்று அஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து - அதற்கு அச்சிறப்புத்தானும் இனநன்மையான் வலிபெறுதலை உடைத்து.

மனநலத்தின் ஆகும் மறுமை என்றது, மறுமை பயப்பது மன நன்மைதானே பிறிதொன்று அன்று என்னும் மதத்தை உடம்பட்டுக் கூறியவாறு. மற்று - வினைமாற்று. உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. ஒரோவழித் தாமதகுணத்தான் மனநலம் திரியினும் நல்லினம் ஒப்ப நிறுத்தி மறுமைபயப்பிக்குமென நிலைபெறச்செய்யுமாறு கூறப்பட்டது. இவை ஐந்துபாட்டானும் சிற்றினஞ் சேராமையது சிறப்பு நல்லினஞ் சேர்தலாகிய எதிர்மறைமுகத்தால் கூறியவாறு அறிக.

மணக்:— மன நலத்தினாலே மறுமைப் பயன் நன்றாகும், அம்மனத்தின் நன்மையும் இனநன்மையாலே தீத்தொழிலில் செல்லாமல் காவலாதலையுடைத்து.

இது மறுமைக்குத் துணையாம் என்றது.

பரிதி:— மனம் நன்றாகில் வருகிற சென்மம் நல்ல சென்மமாம்; அதுவும் இனத்துக்கு நன்றாகில், அந்த புண்ணியத்தினாலே பெருமை பெறும் எ - று.

காளிங்:— தத்தம் மனத்தினது தூய்மையினாலே உளதாகும் மறுமை. இனமான மற்று அதுதானும் இனத்தினது நன்மையினாலே பெரிதும் சேமத் திட்பம் உடைத்தாம் எ - று.

*'மனநலத்தா னாகும் மறுமை அதுவும்' எனவும் பாடம்.

460. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். (௧0)

உரைப்பகுதி :

பரிமே:— நல்லினத்தின் ஊங்கு துணையும் இல்லை - ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையும் இல்லை; தீயினத்தின் (ஊங்கு) அல்லற் படுப்பதூஉம் இல் - தீய இனத்தின் மிக்க பகையும் இல்லை.

ஐந்தனுருபுகள் உறழ்பொருவின்கண் வந்தன. ஊங்கு என்பது பின்னுங்கூட்டி உம்மை மாற்றி உரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையின் நீக்கித் துயர் உறாமல் காத்தலின் அதனைத் துணை என்றும், தீயினம் அறிவின் நீக்கித் துயர் உறுவித்தலின் அதனைப் பகை என்றும் கூறினார். அல்லற்படுப்பது என்பது ஏதுப்பெயர். இதனால், விதி எதிர்மறைகள் உடன் கூறப்பட்டன.

மணக்:— நல்லினத்தின் மிக்க துணையாயிருப்பதூஉம் இல்லை; தீயினத்தின் மிக்க அல்லற்படுத்துவதூஉம் இல்லை எ - று.

இது சேராமைக்குக் காரணம் கூறிற்று.

பரிதி:— *சற்புருஷர் துணைபோலே சுகம் இல்லை; துற்சனர் சங்காத்தம் போலே துன்பம் இல்லை எ - று.

காளிங்:— உலகத்து ஒருவர் இணங்கும் இனவேற்றுமையான் வரும் புகழும் பழியும் இவையாகலான் நல்லினத்தின் மேலாயிருப்பதொரு துணையும் இல்லை; தீயினத்தின் துன்பம் தரும் பகையும் இல்லை எ-று.

இனி, மற்று இங்ஙனம் பெரியோரைத் துணைக்கோடலும், சிற்றினம் சேராமையும் ஆகிய நன்மைக் கூற்றினது மருவுதல் செய்வுழி அவர் நலமும் தீங்கும் தெரிந்து செய்யவேண்டுதலான் அவ்வகையினை உணர்த்துவான் வேண்டி, மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

---

*'சரீரமுற்றதுணை' என்றது பழையஉரை.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— ஐந்தனுருபு உறழ்வின்கண் வந்தது. ஊங்கு என்பது பின்னுங் கூட்டி அதனிடைநின்ற உம்மை துணையுமில்லை என மாற்றி உரைக்கப்பட்டது.

ஒப்புமைப்பகுதி:

" உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரப் புணருமாம் இன்பம் - புணரின்
தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய்" —நாலடி - 247.

" நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரினவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே - நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் தன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்." —நீதி. 79.

" சீலமுற் றுயர்ந்தவர்ச் சேரின் வீடுறும்
மாலையுற் றறிவிலார் மருங்க டைந்திடின்
வேலையுற் றலைதரும் பென்ன வெம்பவக்
கோலமுற் றிறந்திறந் துழலல் கூடுமால்." —பாக.

" தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே — தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது." —வாக்கு. 9.

" சேராத இடந்தனிலே சேரவேண்டாம்." - உலக. 8.

" துஷ்டனைக் கண்டால் தூரவிலகு " —பழ.

" நல்லிணக்கமல்லது அல்லற் படுத்தும் " —ஷை.

" சேராத இடத்திலே சேர்ந்தால் வாராத துன்பம் வரும் " —ஷை.

முதுமொழிவெண்பாக்கள் :

" குண்டரால் தென்னன் குறைபட்டுக் கண்ணுதலார்
தொண்டரான் மிக்குயர்ந்து தோன்றலால் — எண்திசையும். "
—முதுமொழி. 79.

" அற்கா அமண்மொழிகேட் டல்லனுற்றுன் மாறன் இல்லாள்
சொற்கேட்டு நோய்தீர்ந்தான் சோமேசா - தீற்காக்கும்."

—சோமேசர். 46

" வாக்கசர் சாவகரான் மாழ்கித் தமக்கையான்
மோக்கமிலே பெற்றுர் முருகேசா — பார்க்குங்கால்

—முருகேசர். 46.

" உற்ற சிறியார் உறவினுநல் லோருடனே
செற்றபகை நன்று திருமலையா — கற்றறிந்த." —திருமலே.

குறள்வைப்புமுறை.

பரிமே:— சிற்றினம், நிலத்தியல்பால், மனத்தானும், மனத்துளது, மனந் தூய்மை, மனந்தூயார்க்கு, மனநலம்மன்னுயிர், மனநலம்நன்கு, மனநலத்திருைம், நல்லினத்தின்.

மணக்:— சிற்றினம், நல்லினத்தின், மனத்தானும், நிலத்தியல்பால், மனத்துளது, மனந்தூய்மை, மனந்தூயார்க்கு, மனநலத்திருைம், மனநலம்நன்கு, மனநலம்மன்னுயிர்.

பரிதி:— நல்லினத்தின், நிலத்தியல்பால், மனத்துளது, மனந்தூயார்க்கு, மனநலம்நன்கு, மனந்தூய்மை, மனத்தானும், மனநலம்மன்னுயிர், மனநலத்திருைம், சிற்றினம்.

காளிங்:— சிற்றினம், மனந்தூய்மை, மனநலத்தானுரும், மனந் தூயார்க்கு, மனநலம்நன்கு, மனநலம்மன்னுயிர், மனத்தானும், மனத்துளது, நிலத்தியல்பால், நல்லினத்தின்.

47. தெரிந்துசெயல்வகை.

தொகுப்புரை:

[அரசன் வினை செய்யுங்கால், ஆக்கமும் அழிவும் அவற்றால் பின் விளையும் இலாபமும் ஆகிய இவற்றை ஆராய்ந்து செய்க. ஆராய்ந்து கொள்ளப்பெற்ற சுற்றத்தாரோடு நன்றாக ஆலோசித்து, எண்ணிப்பார்த்து முடிக்கவல்ல அரசர்க்கு அடையமுடியாத பொருள் யாதொன்றுமில்லை. இலாபத்தைக் கருதி முதலிழந்து போகும் வினையை அறிவுடையார் மேற்கொள்ளமாட்டார்கள். தமக்கு இழிவுண்டாதலைக்கருதி, சுற்றத்தோடும் தனித்தும் முடிவுசெய்யாத வினையை அறிவுடையவர்கள் தொடங்கமாட்டார்கள். வினையால் விளையும் பயன்களையெல்லாம் ஆராயாது போர் தொடங்குதல் பகைவர்களை நிலைபெறச் செய்யும் வழியாம். செய்யவேண்டியவற்றைச் செய்யாமையாலும் செய்யக்கூடாதனவற்றைச் செய்தலாலும் கேடு உண்டாகும். காரியங்களை ஆராய்ந்து முடிவுகட்டவேண்டுமேயன்றித் தொடங்கியபின் ஆராய்ந்து கொள்வோம் என்பது பெருங்குற்றம். முடிக்கும் உபாயத்தால் தெரிந்து முயலாத வினை, துணைவர் பலரிருந்து காத்தாலும் குற்றப்படும். நல்லன செய்தாலும், அவரவர்குணம் தெரிந்து செய்யாத இடத்துத் தவறுண்டாகும். தமது நிலைமைக்கு மீறிய உபாயங்களை மேற்கொண்டால் உலகம் பழிக்குமாதலின் உலகம் பழிக்காத உபாயங்களையே தேடிச்செய்யவேண்டும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:—அஃதாவது அரசன் தான்செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத்துணைக்கோடல் பயனுடைத்தாய வழி அவரோடும் செய்யப்படுவது ஆகலின், இது சிற்றினஞ்சேராமையின் பின் வைக்கப்பட்டது.

மணக்:— தெரிந்துசெயல்வகையாவது வினை செய்யுங்கால் அதனை எண்ணிச் செய்யவேண்டும் என்று கூறுதல். அறிவுடையவனுக் குற்றம் கடிந்து, மந்திரி புரோகிதரைத் துணையாகக்கொண்டு, சிற்றினஞ் சேராது ஒழுகும் அரசனும் வினைசெய்யுங்காலத்து முன்பே எண்ணிச் செய்யவேண்டுதலின், அவையிற்றின் பின் இது கூறப்பட்டது.

பரிதி:— தெரிந்து செயல்வகையாவது புண்ணியமும் பாவமும் அறிந்து தனக்கு ஆனகாரியம் செய்வான் எ - று.

461. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். (க)

உரைப்பகுதி:

பரிமே:— அழிவதூஉம் - வினை செய்யுங்கால் அப்பொழுது அதனால் அழிவதனையும், ஆவதூஉம் - அழிந்தால் பின் ஆவதனையும், ஆகி வழிபயக்கும் ஊதியமும் - ஆய் நின்று பிற்பொழுது தரும் ஊதியத்தையும், சூழ்ந்து செயல் - சீர்தூக்கி உறுவதாயின் செய்க.

உறுவதாவது, நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு, எதிர்வினும் அது வளர்ந்து வருதல். அழிவது இன்மையின், எதிர்வின்கண் வரும் ஆக்கத்தை ஊதியம் என்றார்: எனவே அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண், அழிவதும் ஆவதும் தம்முள் ஒத்தாலும் ஒழிதற்பாற்றன்று என்பது பெற்றாம். இரண்டுகாலத்தும் பயனுடைமை தெரிந்து செய்க என்பதாம்.

மணக்:— வினைசெய்து முடித்தற்கு அழியும் பொருளும், அது செய்து முடித்தால் உளதாகும் பொருளும், ஆய்நின்று அப்பொருளினாற் பின்பு உண்டாய்வரும் பயனும் எண்ணிப் பின்பு வினைசெய்யவேண்டும் எ - று.

பரிப்:— வழிபயக்கும் ஊதியமாவது முன்பு நன்றாகத் தோற்றிப் பின்பு தீதாகாத வினை. இது முதலாக எண்ணுமாறு கூறுகின்றார் ஆகலின் முற்பட இவை மூன்றும் எண்ணுதல் வேண்டுமென்பது கூறிற்று.

பரிதி:— ஒருவனால் வருகிற ஆக்கமும் சேதமும் விசாரித்து, தொன்றுதொட்டுவருகிற ஊதியமும் விசாரித்துச் செய்வான் எ - று

காளிங்:— யாவரோடும் யாதானும் ஒரு காரியம் செய்யும் இடத்து ஆவதொன்றாகியும் அழிவதொன்றாகியும் இங்ஙனம் வேறுபட்டிருக்கும். அதனால் அவற்றை ஆராய்ந்து அழிவது விடுத்தும் ஆவது கைக்கொண்டும் செய்யுங்கால், மற்று அதன்பயனுடைமையும் தேர்ந்து பின்பு அக்கருமம் செய்க எ - று.

ஒப்புமைப்பகுதி:

" செய்யும் பொழுதே அழிபொருளில் சிறப்பதொப்ப திரண்டினுள் ஒன்று
உய்ய உதவி வழிபயக்கும் ஒண்மை வினையைத் தேர்ந்துளத்தின்
ஐயம் அகன்ற இனத்தோடும் ஆய்ந்து தனித்தும் புரிந்திடுக. "
—விநா. அரசி. 59.

" செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே — செய்யஒரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல். " —நீதி. 16.

" முடியும் வகை யோசியாமல் முயற்சி கொள்ளாதே. " — பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

" இப்படியி னிற்காலம் எப்படிஎன் றுங்கவியிற்
செப்பியதே செய்க திருமலையா—மெய்ப்பார். " —திருமலை.

462. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்(கு)
அரும்பொருள் யாதொன்றும் இல் (உ)

உரைப்பகுதி:

பரிமே:— தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு - தாம் தெரிந்து கொண்ட இனத்துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்து, பின் தாமேயும் எண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு, அரும்பொருள் யாதொன்றும் இல் - எய்துதற்கு அரிய பொருள் யாதொன்றும் இல்லை.

ஆராயப்படுவன எல்லாம் ஆராய்ந்துபோந்த இனம் என்றும் ஆம். செய்வார்க்கு என்றதனால், வினை என்னும் செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. வினையாவது மேற்சேறல் முதல் வேறலீறாய தொழில். பொருள் கட்கு ஏதுவாய அதனில் தவறாமையின், அரியபொருள்கள் எல்லாம் எளிதின் எய்துவர் என்பதாம். இவை இரண்டுபாட்டானும் செய்யத்தகும் வினையும், அது செய்யுமாறும் கூறப்பட்டன.

மணக்:— அமாத்தியர் பலருள் ஆராய்ந்து கூட்டிக்கொள்ளப் பட்ட மந்திரிகளாகிய இனத்தோடே கூடச் செய்யும் வினையை ஆராய்ந்து

அதனைச் செய்யுமாறு எண்ணிச் செய்யவல்ல அரசர்க்குப் பெறுதற்கு அரிதாயிருப்பதொரு பொருள் யாதொன்றும் இல்லை. எ - று.

பரிப்:— இனம் என்றார் மந்திரிகள் பலர் வேண்டும் என்றற்கு. இஃது எண்ணுதற்கு ஆவாரையும் கூறி, எண்ணிச் செய்யவேண்டும் என்பதும் கூறிற்று.

பரிதி:— விசாரித்தால் பெரியோர்கூட விசாரித்து மேலெண்ணி யாதொன்றும் செய்வார்க்கு அரிதானகாரியம் ஒன்றும் இல்லை எ - று.

காளிங்:— யாதும் ஒருகருமம் செய்யும் இடத்து அதனைத் தெரிந்து செய்யும் திறமையரேனும், மற்று அதனைக் கல்வியால் தெரிந்த நல்லினத்துடனே உசாவிக்கொண்டு, தமது நெஞ்சானும் தெரியத் தேர்ந்து கொண்டு, இங்ஙனம் செய்யும் அரசர்க்கு இனிச் செயற்கு அருமையுடைய பொருள் யாது ஒன்றும் இல்லை; மற்று இவர்க்கு யாவையும் செய்தல் எளிது எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

" வீடணனும் வன்மம் விளம்ப இலங்கைநகர்
ஈடழிந்த தன்றே இரங்கேசா - கூடத் " —இரங். 47.

குறிப்பு:

தெரிந்தஇனம் - வினைசெய்சுற்றமும், சூழ்திறன் சுற்றமும் ஆகிய இருவகை இனத்துள் இன்னவினைக்கு இன்னார் இன்னவகையிற் பயன்படுவார் என ஆராய்ந்து கொள்ளப்பெற்றவர்கள்.

—தொகுப்பாசிரியர்.

463. ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை - மேல் எய்தக்கடவ ஊதியத்தினை நோக்கி முன் எய்துகின்ற முதல்தன்னையும் இழத்தற்கு ஏதுவாய செய்வினையை, அறிவுடையார் ஊக்கார் - அறிவுடையார் மேற்கொள்ளார்.

கருதி என்னும் வினையெச்சம் இழக்கும் என்னும் பெயரெச்ச வினைகொண்டது. எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. ஆக்கமே அன்றி

முதலையும் இழக்கும் வினைகளாவன வலியும் காலமும் இடனும் அறியாது பிறர்மண் கொள்வான்சென்று தம்மண்ணும் இழத்தல் போல்வன. முன் செய்துபோந்த வினையாயினும் என்பார், செய்வினை என்றார்.

மணக்:— தமக்கு ஆக்கம் உண்டாகவேண்டி, முன்பு உண்டான முதலும் இழக்கவரும் வினையைச் செய்ய நினையார் அறிவுடையார் எ - று.

இது பிற்பயவாதவினை செய்யலாகாது என்றது.

பரிதி:— அற்பலாபத்தை எண்ணி முதலைச் சேதம் பண்ணுகிற காரியம் செய்யார் அறிவுடையார் எ - று.

காளிங்:— இங்ஙனம் தெரிந்த அறிவினர் தம்வயின் மேல் ஆவதோர் ஆக்கம் கருதித் தமது பழகிய பொருளும் சிதையுமாறு செய்யும் கருமத்தின்மேல் ஒருப்படார்; யார் எனின் மற்று ஆக்கமும் முதலும் அழிவின்றிச் சிறக்கும் தகுதியை அறியும் அறிவுடையார் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"ஆஅ மெனக்கெளிதென் றன்றுலகம் ஆண்டவன்
மேஎந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்
தோஒ முடைய தொடங்குவார்க் கில்லையே
தாஅம் தரவாரா நோய்." —பழ. நா.

"வாணிகம் ஒன்றும் தேற்றாய் முதலொடும் கேடு வந்தால்
ஊணிகந் திட்டப் பட்ட ஊதிய ஒழுக்கின் நெஞ்சத்து
ஏணிகந்து இலேசு நோக்கி இருமுதல் கெடாமை கொள்வார்
சேணிகந் துய்யப் போகின் செறிதொடி ஒழிய என்றார்." —சீவக. 770.

"வெய்ய ஆக்கம் கருதிமுதல் விளிக்கும் வினையைப் புரியற்க."
—விநா. அரசி. 59.

"தோற்பன தொடங்கேல்" —ஆத்தி. 65.

"வயிற்றுப்பிள்ளையை நம்பி மாடு மேய்க்கிற பிள்ளையைப்
பறிகொடுத்தாற்போல." —பழ.

"அரசனைநம்பி புருஷனைக் கைவிட்டதுபோல." —ஷை

"வானத்துப் புறுவைநம்பி கைப்புறுவை யிழந்தது போல." —ஷை

"கையிற் பறவையை விட்டுக் காட்டுப்பறவைக்குக் கண்ணிவைக்கலாமோ"

முதுமொழிவெண்பாக்கள்:

" சானகியை இச்சித்துத் தன்னுயிரும் போக்கினனே
தூநீர் இலங்கையர்கோன் சோமேசா — ஊனதனுல்' —சோமேசர். 47.

குறிப்பு:

முதலிலார்க்கு ஊதியமில்லையென விதித்தாராதலின் பின் ஆக்கம் வருகின்ற காலத்து இன்றியமையாத முதலை இப்போது இழந்து வானத்துப் புறுவை நம்பிக் கைப்புறுவைக் கைவிடுதல் ஆகாது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

464. தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர். (ச)

உரைப்பகுதி :

பரிமே:— தெளிவு இலதனைத் தொடங்கார் - இனத்தொடும் தனித்தும் ஆராய்ந்து துணிதலில்லாத வினையைத் தொடங்கார், இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் - தமக்கு இளிவரவு என்னும் குற்றம் உண்டாதலை அஞ்சுவார்.

தொடங்கின் இடையின் மடங்கல் ஆகாமையின், தொடங்கார் என்றார். இளிவரவு - அவ்வினையால் பின் அழிவு எய்தியவழி அதன் மேலும் அறிவும் மானமும் இலர் என்று உலகத்தார் இகழும் இகழ்ச்சி. அஃது உண்டாதல் ஒருதலை ஆகலின், தெளிவு உள்வழித் தொடங்குக என்பதாம்.

மணக்:— ஆராய்ந்தறிதல் இல்லாத வினையைச் செய்யத் தொடங்கார், இகழ்ச்சியாகிய குற்றப்பாட்டிற்கு அஞ்சுபவர் எ - று.

பரிப்:— ஒருவினை செய்ய நினைக்கும் காலத்து நின்றநிலை அறிய வேண்டும் என்றது.

பரிதி:— உலகத்துக்குப் பொருந்தாக் காரியம் செய்யார்; உலகத்துக்கு இழிவான காரியம் செய்யப் பயப்படுபவர்கள் எ - று.

காளிங்:— இங்ஙனம் தாமும் சான்றோரும் தம்முள் கூடியாயினும் தனித்தாயினும் தெளிந்து, சிறந்த கருமஞ் செய்யும் அத்துணை அல்லது, மற்றுத் தெளிவில்லதனைச் செய்யத் தொடங்கார். யாரெனின்

மற்று அவர் இது செய்தார் என்று பிறர் கருதல் நமக்கு ஓர் இழிவாம் என்னும் குறைபாட்டை நாணுவார் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"தேற்றம் இல்லாதான் துணிவு இன்னா" —இன்னா. 8.

குறிப்பு:

தெளிவு - இவ்வாறுமுடிந்து இத்தகைய ஊதியம் பயக்கும் என்ற துணிவு. இது பிறப்பது ஐம்பெருஞ் சுற்றத்தோடும் ஆராய்தலாலும், ஆராய்ந்த முடிவுகளைப் பின்னர்த் தனித்து இருந்து தான் சிந்திப்பதாலும் என்க. 'எண்ணித் துணிக கருமம்' என்றதும் இக்கருத்துநோக்கி.

—தொகுப்பாசிரியர்.

465. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— வகை அறச் சூழாது எழுதல் - சென்றால் நிகழும் திறங்களை எல்லாம், முற்ற எண்ணாது, சில எண்ணிய துணையானே அரசன் பகைவர்மேற்செல்லுதல், பகைவரைப் பாத்திப்படுப்பது ஓராறு - அவரை வளருநிலத்திலே நிலைபெறச் செய்வதொரு நெறியாம்.

அத்திறங்களாவன வலி, காலம், இடன் என்றிவற்றால் தனக்கும் பகைவர்க்கும் உளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும் வெல்லுமாறும், அதனால் பெறும் பயனும் முதலாயின. அவற்றுள் சில எஞ்சினும் பகைவர்க்கு இடனும் ஆகலான், முற்றுப்பெற எண்ணவேண்டும் என்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஒழியத்தகும் வினையும், ஒழியாவழிப்படும் இழுக்கும் கூறப்பட்டன.

மணக்:— மேற்சொன்னவகையில் போக்கறச் சூழாதே போர் கருதி எழுதல் பகைஞராகிய விதைதனை நிலத்தின்கண்ணே இடுவதொரு நெறி எ - று.

இது பகைவர்க்கு ஆக்கம் உண்டாம் என்றது.

பரிதி:— ஒரு சத்துருவைச் செயிக்கவேண்டினால் அவனுக்கு அடுத்தபேரைக் கூட்டிக்கொண்டு அவர் துணையாலே இராசகாரியம் காண்பானல்லது சத்துருவை அசைவறத் *தாவிப்பதாம் எ - று.

காளிங்:— உலகத்து வேந்தரானவர் தாம் செய்யும் கருமங்களின் கூறுபாட்டினைச் செலவறத் தேராது தொடங்குதல் யாதாமோ எனின், தம் பகைவராகின்ற வித்தினைப் படாமல் விளைத்தற் பொருட்டுப் பாத்தி கட்டி மற்று அதனுள் விளைவிப்பதோர் நெறி எ - று.

ஒப்புமைப்பகுதி:

" வலியே காலம் வினையிவற்றால் மாற்றான் றனக்கும் உனக்கும் உள
பலவா நிலையும் வினைதொடங்கும் பண்பும் அதற்காம் இடையூறும்
விலகா ததனை விலக்குவதும் வெல்லு மாறும் வென்றதனால்
உலவாப் பயனும் முதலனைத்தும் ஓர்ந்து தெளிந்தே வினைசெய்க."

—விநா. அரசி. 60.

466. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். (சு)

உரைப்பகுதி:

பரிமே:— செய்தக்க அல்ல செயக் கெடும் - அரசன் தன் வினைகளுள் செய்யத்தக்கன அல்லவற்றைச் செய்தலால் கெடும், செய்தக்க செய்யாமையானும் கெடும் - இனி அதனானே அன்றிச் செய்யத் தக்கனவற்றைச் செய்யாமைதன்னானும் கெடும்.

செய்யத்தக்கன அல்லவாவன பெரிய முயற்சியினவும், செய்தால் பயனில்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவும், பின் துயர்விளைப்பனவும் என இவை. செய்யத்தக்கனவாவன அவற்றின் மறுதலையாயின. இச்செய்தல் செய்யாமைகளான் அறிவு ஆண்மை பெருமை என்னும் மூவகை ஆற்றலுள் பொருள் படை என இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனும் ஆகலான், இரண்டும் கேட்டிற்கு ஏதுவாயின. இதனால் செய்வன செய்து, ஒழிவன ஒழிக என இருவகையனவும் உடன் கூறப்பட்டன.

*தாவிப்பது - நிலைபெறுத்துவது.

மணக்:— செய்யத்தகாதனவற்றைச் செய்தலானும் கெடும்; செய்யத்தகுவனவற்றைச் செய்யாமையானும் கெடும் எ - று.

இது மேற்கூறுதன எல்லாம் தொகுத்துக் கூறிற்று.

பரிதி:— உலகத்துக்குச் செய்யவேண்டாத காரியம் செய்யக் கெடும்; உலகத்துக்குச் செய்யவேண்டிய காரியம் செய்யாமலிருந்தாலும் கெடும் எ - று.

காளிங்:— யாதானும் ஒரு காரியம் செய்யத் தொடங்குமிடத்து அரசியல்பிற்கு நீதியல்லது செய்யின் கெடுவர்; மற்று அஃது அன்றி அரசியல்பிற்கு நீதியாம் அவற்றைச் செய்யாமையானும் கெடுவர்; மற்று அதனால் தகாதனவற்றைச் செய்யாமையும், தகுவன செய்தலும் என்னும் இரண்டினாலும் கேடு இன்றிப் பெரிதும் ஆக்கம் எய்தும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— செய்தக்க - செய்யத்தக்க என்றதனால் செய் என் முதனிலையாகாது செயவெனெச்சமாயது. 'பாலொத்த நீற்றம்பலவன்' (238) என்னும் கோவையாருள் 'பிணிவாய்' என்பதும் அது. அறிவு, ஆண்மை, பெருமை என மூவகையாற்றல் காண்க. அவற்றுள், பெருமை - பொருள்படை.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— செய்தக்கவல்ல செயக்கெடும் என்புழி, செய்ய என்று பொருள்பட்டு முதனிலைத் தனிவினைகள் வினையெச்சமாதலும் உண்டு என்பர். (நன். 351.)

சுவாமி:— ௸ (இ. கொ. 66.)

ஒப்புமைப்பகுதி:

"பெரிய முயற்சி வினைபயனைப் பேணு வினையே பயன்சிறிதாம்
அரிய வினையே பின்துயரம் ஆக்கும் வினையே புரிந்தாலும்
பெரிய முயற்சி முதலாகப் பேசும் வினைக்கு மறுதலையாம்
உரிய வினையை விடுத்தாலும் உலவாப் பெருமை ஒழியுமே."

—விநா. அரசி. 61.

467. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— கருமம் எண்ணித் துணிக - செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை எண்ணித் தொடங்குக, துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - தொடங்கி வைத்துப் பின் எண்ணக் கடவம் என்று ஒழிதல் குற்றம் ஆகலான்.

துணிவுபற்றி நிகழ்தலின், துணிவு எனப்பட்டது. சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. உபாயம் என்பது அவாய்நிலையான் வந்தது. அது, கொடுத்தல், இன்சொல்சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என நால்வகைப்படும். இவற்றை வடநூலார் தான சாம பேத தண்டம் என்ப. அவற்றுள் முன்னைய இரண்டும் ஐவகைய; ஏனைய மூவகைய. அவ் வகைகளெல்லாம் ஈண்டு உரைப்பிற்பெருகும். இவ்வுபாயம் எல்லாம் எண்ணாது தொடங்கின் அவ்வினை மாற்றானால் விலக்கப்பட்டு முடியாமையானும், இடையின் ஒழிதல் ஆகாமையானும், அரசன் துயருறுதலின், அவ்வெண்ணாமையை இழுக்கு என்றார். செய்வனவற்றையும் உபாயம் அறிந்தே தொடங்குக என்பதாம்.

மணக்:— ஒருவினை செய்யத் துணிவதன் முன்னே அதனால் வரும் பயனை எண்ணிப் பின்பு செய்யத்துணிக; துணிந்தபின் எண்ணுவோம் என்றல் தப்பாம் ஆதலான் எ - று.

பரிப்:— காரியம் நின்ற நிலை அறிந்தாலும் எண்ணாது துணிதல் ஆகாது என்றது.

பரிதி:— ஏதொருகாரியமும் மேல் எண்ணியெண்ணித் துணிந்து செய்க; காரியத்தைத் தொடங்கினபின்பு விசாரிப்போம் என்பது இழுத்தலான காரியம் எ - று.

காளிங்:— யாதானும் ஒன்றினை ஒருவர் செய்யும் காலத்து மற்று அதனைக் கீழ்ச்சொன்னாங்குச் சூழ்ந்து வாய்ப்பது அறிந்து செய்யத் துணிக. மற்று அவ்வாறு செய்யத் துணிந்தபின் செயற்பாட்டு நிகழ்ச்சிக் கண்ணே புகுந்து நின்று இதனை எண்ணுவேம் என்று நினைக்கின்றது பெரிதும் குற்றம் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— உபாயம் அவாய்நிலை; சாம, பேத, தான, தண்டத்துக்கு வகை காண்க.

மேற்கோள்பகுதி:

மயிலை:— எண்ணித் துணிக கருமம் என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினைஎச்சம் தன்வினை கொண்டதற்கு மேற்கோள். (நன். 343).

சங்கர:— ௸ (நன். 344.)

ஒப்புமைப்பகுதி:

"நண்ணிய கருமமும் எண்ணித் துணி" —கொன்றை. 52.

"கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்." —உலக. 7.

"யாதொரு கருமமேனும் எண்ணியே துணிக என்றும்
காதலில் துணிந்து செய்தால் எண்ணுதல் கடனன் றென்றும்
ஓதுநூல் புலவர் சொன்னார் உமக்குள உணர்வுற் றன்றே
பேதுற அடர்த்தும் பின்னை உருகினீர் பிழைசெய் தீரே."
—வில்லி. சூது. 266.

"பார விசாரத்தைப் பண்ணாதே ஏதொன்றும்
தீர விசாரித்துச் செய்." —சிவ. 131.

குறிப்பு:

வரவரக்கண்டாராய்தல் அரசவினைக்கு ஆகாது என்பதாம்.
—தொகுப்பாசிரியர்.

468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— ஆற்றின் வருந்தா வருத்தம் - முடியும் உபாயத்தால் கருமத்தை முயலாத முயற்சி, பலர் நின்று போற்றினும் பொத்துப்படும் - துணைவர்பலர் நின்று புரைபடாமல் காப்பினும் புரைபடும்.

முடியும் உபாயத்தான் முயறலாவது கொடுத்தலைப் பொருள் நசையாளன்கண்ணும்; இன்சொல்லைச் செப்பமுடையான், மடியாளன், முன்னே பிறரோடு பொருது நொந்தவன் என இவர்கண்ணும்; வேறு படுத்தலைத் துணைப்படையாளன், தன் பகுதியோடு பொருந்தாதான் என இவர்கண்ணும்; ஒறுத்தலை இவற்றின் வாராதவழி இவர்கண்ணும் தேறப் படாத கீழ்மக்கள்கண்ணும் செய்து, வெல்லுமாற்றான் முயறல். புரை படுதல் - கருதிய நன்மையன்றிக் கருதாத தீமைபயத்தல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு.

மணக்:— மேற்கூறிய நெறியினாலே முயலாத பொருள், பலர் நின்று காப்பினும் புரைபடும் எ - று.

இஃது எண்ணிச் செய்யாதது தப்பும் என்றது.

பரிதி:— ஒருகாரியத்தை எடுத்து அந்தக்காரியமே உறுதியாக விசாரிப்பான்; அல்லது காரியம் பழுதானால் பின்பு பலருங்கூடி எடுத்து நாட்டுகிறோம் என்றாலும் காரியம் கூடாது எ - று.

காளிங்:— அரசராவார் தமது நீதியால் முயன்று ஈட்டாத நெடும்பொருளைச் சான்றோர் பலரும் கூடி மற்று இது நன்று என்று கொண்டாடினும் சாலக் குற்றப்படும் எ - று.

பொத்துப்படும் என்பது குற்றப்படும்.

இனி, மற்று இங்ஙனம் தெரிந்து செய்வுழியும் சிறந்த கருமத்தின் கண்ணும் தெவ்வரைத் தெறுவுழியும் அரசர்க்கு வேட்கை செல்லுதல் மரபன்று என்று சொல்லினும், தத்தம் வலியறிந்து இயற்றாக்கால் வாய்ப்பின்று என்பதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பொத்துப்படல் என்பதனை நீட்டல் விகாரமாக்கிப் 'போத்தறார் புல்லறிவினார்' (351,) என்றார் நாலடியாரினும்.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— 'படுசொல் வந்தே வேறுபொருள் பட்டும்' என்பதற்கு மேற்கோள். (இ. கொ. 78.)

ஒப்புமைப்பகுதி :

" வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலால் - ஆங்கு
முடியும் திறத்தால் முயல்கதாம் கூர்அம் (பு)
அடிஇழுப்பின் இல்லை அரண்."

—பழ - நா.

'கொடுத்தல் பொருள்வேட் கையனிடத்தும் குளிர்சொல்செவ்வி யான்மடியன்
அடுத்துப் பிறரோ டமராற்றி அயர்ந்தான் இவர்பால் இனும்வேறு
படுத்தல் துணையாம் படையின்ன பகுதி யொடுசோ ரன்இவர்கள்
இடத்தும் ஒறுத்தல் இவற்றின்வரா இவர்கீழ் மக்க ளிடத்தினுமாம்"

—விநா. அரசி. 62.

469. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு - வேற்று வேந்தர்மாட்டு நன்றான உபாயஞ்செய்தற்கண்ணும் குற்றம் உண்டாம், அவரவர் பண்பு அறிந்து ஆற்றாக்கடை - அவரவர் குணங்களை ஆராய்ந்து அறிந்து அவற்றிற்கு இயையச் செய்யாவிடின்.

நன்றான உபாயமாவது கொடுத்தலும் இன்சொல் சொல்லுதலுமாம். அவை யாவர்கண்ணும் இனியவாதற் சிறப்புடைமையின், உம்மை சிறப்பும்மை. அவற்றை அவரவர் பண்பறிந்து ஆற்றாமையாவது அவற்றிற்கு உரியரல்லாதார்கண்ணே செய்தல். தவறு - அவ்வினை முடியாமை.

மணக்:— நன்மையைச் செய்யுமிடத்தினும் குற்றம் உண்டாம்; அவரவர் குணமறிந்து செய்யாதவிடத்து எ - று.

இதுவும் ஓர் எண்ணம்.

பரிதி:— ஒருவற்குத் தான் நல்லகாரியம் செய்தாலும், குற்றம் உண்டு அவரவர் இயற்கை அறிந்து காரியம் செய்யானாகில் எ - று.

காளிங்:— அந்தணர் முதலிய குடிப்பிறந்தோர்க்கும், பிறர்க்கும் அரசரானவர் தாம் பல நன்மைகளைச் செய்யுமிடத்துக் குற்றம் உண்டாம்: மற்று எப்பொழுது எனின், அவை செய்கின்ற இடத்து மற்று அவரவர் மரபு அறிந்து தக்கார்க்குக் குறிக்கொண்டு நீதியைச் செய்யா இடத்து எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஈதலும்இன் சொல்லும்நலம் என்றுசெய்தா லும்சிலர்க்குத்
தீது வருமே தினகரா - ஆதலினால்" —தினகர. 50.

"ஆய்தொடியார் கண்ணுதல்பால் அன்பின் உமிழ்தலுமே
வாய்மையறி யாதொழுகு மற்றவர்போல் - தூய்மையொடு"
—முதுமொழி. 80.

"பன்மறையோர்க் கானளித்த பாரரசன் கோம்பிஎனும்
சென்மமெடுத் தானே சிவசிவா - உன்னின்மிகு" —சிவசிவ 47.

குறிப்பு:

வேற்றரசர்களில் செல்வத்தகுதி மிகுந்தாரை இனிய சொற்களாலும், செல்வமிருப்புடையவர்களைப் பொன்மிகக் கொடுத்தலாலும் அவரவர்கள் குணப்போக்கின் தன்மையறிந்து மதிப்புத்தந்து வசப்படுத்தல்வேண்டும். பண்பறிந்தாற்றுதல் - அவர்கள் குணம் தெரிந்து கொடுத்தும், அடுத்தும், எடுத்தும், தடுத்தும் பாராட்டுதல்.
—தொகுப்பாசிரியர்

470. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. (௪0)

உரைப்பகுதி:

பரிமே:— தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது - அரசர் வினை முடித்தற்பொருட்டுத் தந்நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வராயின் உலகம் தம்மை இகழாநிற்கும்; எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் - ஆகலான் அஃது இகழா உபாயங்களை நாடிச் செய்க.

தம் என்பது ஆகுபெயர். தந்நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய்வைத்து மெலியார்க்குரிய கொடுத்தல் முதலிய மூன்றனைச் செய்தலும், மெலியராய்வைத்து

வலியார்க்குரிய ஒறுத்தலைச்செய்தலுமாம். இவை இரண்டும் அறிவிலார் செய்வனவாகலின், உலகங்கொள்ளாது என்றார். அஃதெள்ளாதன செய்தலாவது அவற்றைத் தத்தம் வன்மை மென்மைகட்கு ஏற்பச் செய்தல். மேல் இடவகையான் உரிமை கூறிய உபாயங்கட்கு வினைமுதல்வகையான் உரிமை கூறியவாறு. இவை நான்குபாட்டானும் செய்வனவற்றிற்கு உபாயமும் அதனது உரிமையும் கூறப்பட்டன.

மணக்.— முடியுமாயினும் பிறரால் இகழப்படாதனவற்றை எண்ணிச் செய்தல்வேண்டும்; தமக்குத் தகாத செய்தியை உலகத்தார் கொள்ளாராதலான் எ - று.

இது பிறரால் இகழப்படாதன செய்யவேண்டும் என்றது.

பரிதி:— உலகம் இகழாத காரியத்தை விசாரித்துச் செய்க; செய்யானுகில் தன்மனம் கொள்ளாத காரியம் உலகங்கொள்ளாது எ - று.

காளிங்:— அரசரானோர் தாம் யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்துப் பிறர் இகழாதனவாகிய நற்கருமங்களே தம் மனத்தோடு தெரியத் தேர்ந்து செய்யவேண்டும். மற்று இங்ஙனம் செய்யார் மனத்தோடு கொள்ளாதனவற்றைச் செய்ய விரும்புவாராயின், உயர்ந்தோராகிய நல்லினத்தோர் கண்ணுற்றுத் தெரியுமிடத்து அதனைச் சிறிதும் கைக்கொள்ளார் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— 'ஓஒதல் வேண்டும்' (653.) 'புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்' (538.) என்னும் குறள்களில்போல, அல்லீற்று வியங்கோள் முடிபாக, வேண்டும் என்பது ஒரு சொன்னீர்மைத்தாய் முடிந்தது. இனிப் 'பல்லோர் படர்க்கை' (தொல். சொல். 229.) என்னும் சூத்திரத்துள் 'ஓஒதல் வேண்டும்' (653.) என்பதனையும் ஈற்று வியங்கோளாக்கினர் நச்சினார்க்கினியர் என்க.

ஓப்புமைப்பகுதி :

"வலிய ரான காலத்தும் வழங்க லாதி மூன்றனையும்
மெலியா ரிடத்துச் செய்திடவும் மெலிய ரான காலத்தும்
வலியா ரிடத்தின் ஒறுத்தலையும் வருக்கின் வேந்தர்க் கவைமைந்தா
நலிவாம் அதனால் அவரவர்பால் நடத்தும் முறைதேர்ந் தியற்றிடுக"

—வினா. அரசி. 63.

முதுமொழிவெண்பாக்கள்:

" பாண்டவர்செல் வங்கவர்வான் பண்டுதுரி யோதனன்றான்
மூண்டிழிந்தான் மாய்ந்தும் முருகேசா - வேண்டுங்கால்'

—முருகேசர். 47.

குறிப்பு:

அரசர்கள், அளவுகடந்த மானத்தாலும், ஆசையாலும் தமது நிலைமைக்குப் பொருந்தாத உபாயங்களைச் செய்தால் உலகம்பழித்துரையால் அறிவூட்டும்; ஆதலால் உலகம் இகழாத காரியங்களையே இயற்றவேண்டும் என்பது விளக்கியவாறு. கொள்ளாத எள்ளாத என்பன அன்சாரியை பெறாத அஃறிணைப் பன்மை எதிர்மறை வினையாலணையும் பெயர்.

—தொகுப்பாசிரியர்.

குறள் வைப்புமுறை.

பரிமே:— *அழிவதூஉம், தெரிந்த, ஆக்கம், தெளிவில், வகையறச், செய்தக்க, எண்ணித், ஆற்றின், நன்றாற்றல், எள்ளாத.*

மணக்:— *தெரிந்த, தெளிவில், எண்ணித், அழிவதூஉம், ஆக்கம், எள்ளாத, நன்றாற்றல், செய்தக்க, ஆற்றின், வகையறச்.*

பரிதி:— *அழிவதூஉம், தெரிந்த, தெளிவில், எண்ணித், வகையறச், ஆற்றின், ஆக்கம், நன்றாற்றல், எள்ளாத, செய்தக்க,*

காளிங்:— *அழிவதூஉம், எண்ணித், வகையறச், செய்தக்க, தெரிந்த, எள்ளாத, தெளிவில், ஆக்கம், நன்றாதல், ஆற்றின்,*

48. வலியறிதல்.

தொகுப்புரை:

[வினையின்வலிமையையும், தமது வலிமையையும், பகைவன் வலிமையையும், தமக்கும் பகைவர்க்கும் துணையாகக்கூடியவர்கள் வலிமையையும் ஆராய்ந்து வினையைச் செய்க. முடிவையும், வினையையும், அவற்றிற்கேற்ற உபாயத்தையும், அறிந்து, அதிலேயே சிந்தையைச் செலுத்திப் படையெடுக்கும் அரசர்க்கு முடியாததொன்றுமே யில்லை. தமது வலிமையறியாமல், தம்மின் வலியாரோடு சண்டைக்குப்போய் இடையே தோற்ற அரசர்கள் பலர். அயல் அரசர்களோடு கலந்து பழகவும் தெரியாது, தன்வலிமையளவும் அறியாமல், தற்புகழ்ச்சியோடு கூடியிருக்கும் அரசன் விரைவில் அழிவன். அளவிற்கு மீறி மயில்தோகையை ஏற்றினால் வண்டி அச்சுமுறிந்து போகும். நுனிக்கொம்பில் ஏறினவர்கள் மேலும் ஏறினார்களாயின் அவர்கள் உயிருக்கு முடிவாகும். வழிதெரிந்து அளவாகக் கொடுத்தலே பொருளைப் போற்று முறைமையாம். வருவாய் சிறிதாயிருப்பினும் செலவுமிகாமலிருந்தால் குற்றமில்லை. அளவு தெரிந்து வாழாதவன் வாழ்வு இருப்பதுபோலக் காணப்பட்டாலும் இல்லாமற் கெட்டுவிடும். பொருளளவிற்கு மீறி ஒப்புரவு செய்வது செல்வநிலையைச் சீர்குலைக்கும்.

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அவ்வுபாயங்களுள் ஒறுத்தல் குறித்த அரசன் நால்வகை வலியையும் அளந்து அறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— வலியறிதலாவது தனக்குள்ள வலியும் பிறர்க்குள்ள வலியும் அறிதல். செய்யத்தக்க வினையை எண்ணினாலும் அதனைச் செய்து முடிக்குங்கால் வலியறிந்து செய்யவேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— வலியறிதலாவது மாற்றான் சத்துவத்தை அறிய வேண்டும் எ - று.

471. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். (க)

உரைப்பகுதி :

பரிமே:— வினை வலியும் - தான் செய்யக்கருதிய வினைவலியையும், தன்வலியும் - அதனைச்செய்து முடிக்கும் தன்வலியையும், மாற்றான் வலியும் - அதனை விலக்கலுறும் மாற்றான் வலியையும், துணை வலியும் - இருவர்க்கும் துணையாவார் வலியையும், தூக்கிச் செயல் - சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க.

இந்நால்வகை வலியுள் வினைவலி அரண்முற்றலும் கோடலும் முதலிய தொழிலானும், ஏனைய மூவகை ஆற்றலானும் கூறுபடுத்துத் தூக்கப்படும். தன்வலி மிகவின்கண் செய்க என்ற விதியால், தோற்றல் ஒருதலையாய குறைவின்கண்ணும், வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிக என்பது பெற்றாம்.

மணக்:— செய்யும் வினையினது வலியும், தனக்கு உண்டான வலியும், பகைவனது வலியும், தனக்கும் பகைவர்க்கும் துணையாயினார் வலியும் எண்ணிப் பின்பு வினைசெய்க எ - று.

இது வலியறியும் இடம் கூறிற்று.

பரிதி:— நாலுவகை அரணின் சத்துவமும் தன்சத்துவமும், மாற்றார் சத்துவமும்,தனக்குத் துணையானவர்கள் சத்துவமும் விசாரித்துச் செய்க எ - று.

காளிங்:— தான் செய்யும் கருமத்தின் வலியும், தனது வீரப்பாட்டின் வலியும், தனக்கு எதிர்மாற்றான் வலியும், தனக்கு உதவும் படைத் துணைவலியும், மாற்றார்க்கு உதவும் படைத்துணை வலியும், ஆகிய இவை இரண்டினையும் சீர்தூக்கிக் கொள்க. எனவே மற்று இவை மாற்றானினும் தனக்கு மிக உளவாயின் அவனொடு தான் வினைசெய்வானாக. அல்லது நட்பின்கண் பொருந்துவது பொருள் எ - று.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— செய்யுள் விகாரத்தால் சிதைந்ததனை மொழி வருவித்தலாவது 'தூக்கிச் செயல்' என்றவிடத்துச் சீர்தூக்கிச் செயல் என்று வருவித்தாற் போல்வது என்பர். (இ. கொ. 89)

ஒப்புமைப்பகுதி

" தற்றூக்கித் தன்துணையும் தூக்கிப் பயன்றூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார் — அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண்டு யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்." —பழ. நா.

" மாற்றலர் வன்மை யோராய் மற்றவர் படைஞர் தங்கள்
ஆற்றலை உணராய் நின்றன் அரும்பெரும் தலைமை உன்னாய்
போற்றிடும் அமைச்ச ரோடும் புரிவன சூழாய் வாளா
சீற்றமங் கதுமேல் கொண்டு செல்லலும் திறலின் பாற்றே."
—கந்த. அசுரேந். 57.

" வினையின் வலியா திகள்நான்கும் வேறு வேறு சீர்தூக்கி
நினது வலிமிக் குழிவினையை நிகழ்த்து; நிகர்த்த காலத்துப்
புனையும் வென்றி யுறுஇழுக்கும் பொருந்தும் அதனல் அவ்விடத்து
வினையும் தோல்வி யுறுங்குறைந்த விடத்தும் வினையை எண்ணற்க."
—விநா. அரசி. 64.

"தன்பலங் கொண்டு அம்பலம் ஏறவேண்டும்." —பழ.

" ஆழந் தெரியாமல் காலை விடாதே." ஷை

முதுமொழிவெண்பாக்கள் :

"மெய்யுலகில் ஒன்றை விசாரியா மல்பதறிச்
. செய்யில்கூ டாதே தினகரா - பைய." —தினகர. 51.

" நீச உருவம் நிலனுள் திரிசங்கு
தேசிகனல் பெற்றான் சிவசிவா - பேசின்." —சிவசிவ. 48.

"வென்றவனை வென்றானை வென்றவனை வாளரக்கன்
இசென்றுபொர லாமோ திருமலையா - என்றும்" —திருமலை.

குறிப்பு:

வினைவலியானும், மாற்றானுடையவும் அவர்க்குத் துணையாவாருடையவும் வலிமைகளின் மிகுதி குறைவுகளானும், அரண்வலி காலமாற்றம் இவைகளானும் மேற்கொண்டவினை எளிமையும் அருமையும் உடைத்தாதல். தன்வலி என்றது தனக்குத் துணையாம் பிறவும் பிறரும் பிரிந்தகாலத்தும் தனித்து வினைசெய்யும் ஆற்றலுடைமை. மாற்றான்வலி பகைவாது தனித்த ஆற்றல். ஆகவே துணைவலியும்

வினைவலியும் தனக்கும் பகைவர்க்கும் பொதுவாக அரணும் படைக்கலமும் படையும் முதலியவற்றைப் பற்றியன என்பதும், தன்வலி மாற்றான்வலி இரண்டும் தனித்தனி என்பதும் உய்த்துணரத்தக்கன. செயல் - அல்லீற்று வியங்கோள்முற்று.

பரிமேலழகர் உரையில் மூவகையாற்றல் என்றது அறிவு ஆண்மை பெருமை என்ற மூன்றையுமாம். தன்னின் வலிகுறைந்தார்மேல் படையெடுத்தல் வீரத்திற்கு இழுக்காதலானும், அழிகுநர் புறக்கொடை அயில்வாளோச்சாமை வீரர்க்கியல்பாதலானும், படைப்பலமிழந்து நின்ற இராவணனை நோக்கி இராமன் 'இன்று போய் நாளை வா' என்றது 'படைத்துணைகொண்டு வரினும் வருக; எமது வலிநோக்கி வாளா அமையினும் அமைக' என்பது குறிப்பாதலானும் 'தன்வலிமிகுமாயின்' என்ற உரை சிந்தித்தற்குரியது. ஆயினும் இராமன் படைஎடுத்துச்சென்றது இராவணன் வலியைத் தன்னோடொத்ததாக எண்ணியே. ஒத்தாரிடம் சேறல் ஆகுமோ எனின் அறம் வெல்லும் பாவந்தோற்கும் ஆதலால் நீதிக்கட்சியாகிய எமது பகுதிவெல்லும் என்ற துணிவாலென்க. அதுபோலவே ஏனைய அரசர்களும் ஒத்தார்மேலேயே படையெழுதலும், அறம் துணை நின்று வெற்றி விளைத்தலும் மரபு என்பது காண்க. ஆதலால் அறத்துணை கொண்டு வெல்லுதல் ஐயப்படாத ஒப்பின்கண் போர்மேற் செல்லலாம் என்றவாறு.

—தொகுப்பாசிரியர்.

472. ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— ஒல்வது அறிவது அறிந்து-தமக்கியலும் வினையையும் அதற்கு அறியவேண்டுவதாய வலியையும் அறிந்து, அதன்கண் தங்கிச் செல்வார்க்கு - எப்பொழுதும் மனமொழிமெய்களை அதன்கண்வைத்துப் பகைமேற்செல்லும் அரசர்க்கு; செல்லாதது இல்-முடியாதபொருள் இல்லை.

ஒல்வது எனவே வினைவலி முதலாய மூன்றும் அடங்குதலின், ஈண்டு அறிவது என்றது துணைவலியேயாயிற்று. எல்லாப்பொருளும் எய்துவர் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் வலியின்பகுதியும், அஃது அறிந்து மேற்செல்வார் எய்தும் பயனும் கூறப்பட்டன.

மணக்:— தமக்கியலும் வினைக்கு அறிய வேண்டுவதாய திறம் இது என அறிந்து, அதன் பின்பு அவ்வளவிலே நின்று ஒழுகுவாராயின், அவர்க்கு இயலாதது இல்லை எ - று.

இது வலியறிந்தாலும் அமைந்தொழுக வேண்டும் என்றது.

பரிதி:— தன் சத்துவம் அறிந்து மந்திரிவார்த்தைகள் கேட்டு நடப்பானுகில் அவன் நினைத்தகாரியம் முடியாதது இல்லை எ - று.

காளிங்:— உலகத்து வேந்தரானோர் தாம் யாதானும் ஒரு கருமம் செய்யுமிடத்துத் தமக்கு இயல்வது அறிந்து, மற்று அக்கருமநிலை விளங்குமாறு செய்யத் துணிந்தபின் அதனைச் சோரவிடாது அதன் கண்ணே நிலைநின்று மற்று அது முடியுமாறு அங்ஙனம் சென்று முடிப்பார்க்குச் செல்லப்படாதது யாதும் இல்லை எ - று.

ஒல்வது என்பது இயல்வது.

குறிப்பு:

தம்மால் முடியுந் திறத்தையும், துணைவலி முதலியனவற்றையும், அறிந்திருப்பினும், பின்னரும் தவறுதல் கூடாதென்பார் 'அதன்கண் தங்கி' என்றார். அதன்கண் தங்குதலாவது எடுத்த வினையின்மேல் கண்ணுங்கருத்துமாக இருத்தல். 'ஒல்வது அறிவது' என்ற செவ்வெண் ஒல்வதும் அறிவதும் என விரிந்து, அறிந்து என்ற வினையெச்சங்கொண்டு முடிந்தன.

—தொகுப்பாசிரியர்.

473. உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். (ந)

உரைப்பகுதி :

பரிமே:— உடைத் தம் வலி அறியார் - கருத்தாவாதலையுடைய தம் வலியின் அளவறியாதே, ஊக்கத்தின் ஊக்கி - மனவெழுச்சியால் தம்மின்வலியாரோடு வினைசெய்தலைத் தொடங்கி, இடைக்கண் முரிந்தார் பலர் - அடர்த்தலான் அது செய்து முடிக்கப்பெறாது இடையே கெட்ட அரசர் உலகத்துப் பலர்.

உடைய என்பது அவாய்நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மூவகையாற்றலுள்ளும் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின், முரிந்தார் பலர் என்றார். அதனால் தம்வலி அறிந்தே தொடங்குக என்பது எஞ்சிநின்றது.

மணக்:— தம்முடைய வலியறியாது மனமிகுதியாலே வினை செய்யத் தொடங்கி, அது முடிவதன்முன்னே கெட்டார் பலர் எ -று.

இது வலியறியாதார் கெடுவர் என்றது.

பரிதி:— தம்முடைய சத்துவத்தை அறியாமல் இடும்பினாலே ஒருகாரியத்தை எடுத்து எடுத்தகாரியமும் முடிக்க மாட்டாமல் நடுவே கெட்டபேர் பலருண்டு எ - று.

காளிங்:— தமது பொருள் வலியும் துணைவலியும் முதலிய பல வரம்பினைக் கருதாராய் வறிதே ஒரு கருமத்தை நெஞ்சின் ஊக்கத்தானே தாமும் அதன்மேற் சென்று, பின்பு அக்கருமம் முடிக்க மாட்டாது இடையிலே தொடங்கிய கருமத்தை முரிந்து ஒழிந்தார் இவ்வுலகத்து அனேகர் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"சக்கரத்தை ஏற்பன் சலந்தரன்நான் என்றெடுத்துத்
துக்கமுற்று வீடினனே சோமேசா - ஒக்கும்.." —சோமேசர். 48.

"பைதல் எனக்கருதிப் பார்க்கவரா மன்சிலையோ(டு)
எய்துதவம் தோற்றான் இரங்கேசா - வையத்(து)" —இரங். 48.

"வாரிசுதை வவ்வுமுவ ணத்தைஎதிர் வானவர்கள்
மூரிஇழந் தெய்த்தார் முருகேசா - தேரின்." —முருகேசர். 48.

குறிப்பு:

உடைத்தம் என்பதில் தம்முடை என்பது முன்பின்னாக நின்றது எனலாம். வலியறியாத தனி ஊக்கம் தோல்விதரும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

474. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். (ச)

உரைப்பகுதி:

பரிமே:— ஆங்கு அமைந்து ஒழுகான் - அயல்வேந்தரோடு பொருந்தி ஒழுகுவதும் செய்யாது, அளவு அறியான் - தன் வலியளவு அறிவதுஞ்செய்யாது, தன்னை வியந்தான் - தன்னை வியந்து அவரோடு பகைத்த அரசன், விரைந்து கெடும் - விரையக் கெடும்.

காரியத்தைக் காரணமாக உபசரித்து, வியந்தான் என்றார். விரைய என்பது திரிந்து நின்றது. நட்பாய் ஒழுகுதல், வலியறிந்து பகைத்தல் என்னும் இரண்டனுள் ஒன்றன்றே அயல்வேந்தரோடு

செயற்பாலது, இவையன்றித் தான் மெலியனாய்வைத்து அவரோடு பகைகொண்டானுக்கு ஒருபொழுதும் நிலை இன்மையின், விரைந்து கெடும் என்றார். இவை இரண்டுபாட்டானும் தன்வலி அறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

மணக்:— அமைவுடையனாய் ஒழுகுதலும் இன்றித், தன்வலியளவும் அறியாதே தன்னை மதித்தவன் விரைந்து கெடுவான் எ - று.

இது மேற்கூறியவாறு செய்தார் கெடுவர் என்றது.

பரிதி:— மந்திரிகள் புத்திக்குள்ளே அடங்கி ஒழுகாத அரசன் தன் சத்துவமறியால் தன்னை வியந்துகொள்வானாகில் சடுதியிலே கெடுவன் எ - று.

காளிங்:— யாதானும் ஒரு பொருள் முற்றுப்பெற்றது யாங்கு; மற்று ஆங்கு அதற்கு ஏறக் கடவானுமாய் மற்றுத் தன்விதி வரம்பினை உணராதானுமாய் வறிதே தன்னைப் பெரிதும் மேலாகத் தன்னை மதிக்கின்றான்யாவன் மற்று அம்மதிப்புக்குத் தக்காங்கு நடக்க வேண்டினதால் விரைந்து கெடும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" ஒன்னார் அடநின்ற போழ்தின் ஒருமகன்
தன்னை எனைத்தும் வியவற்க - துன்னினர்
நன்மை இலராய் விடினும் நனிபலராம்
பன்மையில் பாடுடைய தில்."

—பழ - நா.

"செந்நெறி நோக்கி அமைந்தாங் கொழுகான் அளவறி கில்லான்
தன்னை வியந்தான் விரைந்து கெடும்எனல் சத்தியம் கண்டாம்
மன்னிய மேரு வரையோ டிகலி வளர்ந்தெழு விந்தம்
முன்னுள தோற்றமும் வீறும் முழுதும் இழந்தது மன்னோ."

—காஞ்சி. தழுவக். 224.

குறிப்பு:

அடங்கி நடவாதவனும், தன்னளவறியாதவனும், தன்னை வியந்து தருக்கியவனும் விரைவிற்கெடுவன் என்பதாம். இவ்வுரையில், அமைந்தாங்கு ஒழுகுதல் புலனடக்கத்தையும், அளவறிதல் ஏனையரோடு ஒத்துப்பழகுதலையும், வியவாமை செருக்கின்மையையும் விளக்கி நின்றன எனவும் ஒருரையுண்டு.

பரிமேலழகர் தன்னை வியத்தலாகிய காரணத்தாலேயே பகை விளைதலின் பகையாகிய காரியத்தை வியந்தான் எனக் காரணமாக உபசரித்தார் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

475. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் (௫)

உரைப்பகுதி :

பரிமே:— பீலி பெய் சாகாடும் அச்சு இறும் - பீலியேற்றிய சகடமும் அச்சுமுறியும், அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் - அப்பீலியை அது பொறுக்கும் அளவன்றி மிகுத்து ஏற்றின்.

உம்மை சாகாட்டது வலிச்சிறப்பேயன்றிப் பீலியது நொய்மைச் சிறப்பும் தோன்ற நின்றது. இறும் என்னும் சினைவினை முதன்மேல் நின்றது. எளியர் என்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனேயாயினும் அவர் தொக்கவழி வலியழியும் என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம்; இதனை நுவலாநுவற்சி என்பாரும், ஒட்டு என்பாரும் உளர். ஒருவன் தொகுவார் பலரோடு பகைகொள்ளற்க என்றமையின், இதனான் மாற்றான் வலியும் அவன் துணைவலியும் அறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

மணக்:— பீலி யேற்றிய சகடமும் அச்சு முறியும்; அப்பீலியை மிகவும் அளவின்றி ஏற்றின் எ - று.

இஃது அரண் மிகுதல் நன்றென்று இருப்பார்க்குப் பகைமிகின் அரண் நில்லாது என்று கூறிற்று.

பரிப்:— எனவே பகைவர் மேலே நெருங்கிச் செல்லினும் அளவு அறியாது செல்லின் கெடும் இடனும் உண்டாம் என்றது.

பரிதி:— நொய்ய பீலியாகிலும் கனமாக ஏற்றினால் வண்டி அச்சு முறியும்: அது போலப் பெலமில்லாதார் பலர் கூடினும் சத்துவமாம். ஆகையால் அரசன் வீரராகாத பேரையும் கனம்பெறக் கூட்டிக் கொள்வான் எ - று.

காளிங்:— உலகத்தின் நொய்யவாக நிகழ்கின்ற பொருள்களின் ஒன்றாய பீலியைப் பண்டமாக உள்ளுச் சொரிந்து வைத்த சகடமும் அது கொண்டு நடக்குமிடத்துத் தனக்கு அச்சு முறிந்து கெடும்:

எப்பொழுது எனின், அப்பண்டம் கொண்டு ஓர் ஒழிவு இன்றி நடக்கும் உரத்துஅளவு அறியாது மற்று அதனைச் சால மிகுத்து உள்ளுறச் சொரிந்து செலுத்தின் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— சினைவினை முதன்மேல் நின்றது. சினைமேல் நிற்கின் சாகாட்டச்சிறும் என ஒற்று மிகும். பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம்; இதனை நுவலாநுவற்சி; ஒட்டு என்பாரும் உளர்.

மேற்கோள்பகுதி:

மயிலை:— 'பீலிபெய்....பெயின்' இது மெலியரும் பலர்தொகின் வலியராகுப எனக் குறித்த பொருள் கொண்டு முடிதலின் குறிப்பெச்சம் என்பர். (நன். 359.)

சங்கர:— ஷை (நன். 360.)

காரி:— கருப்பொருளில் பிறக்கவேண்டும் என்னும் யாப்புற வின்றி புறத்தினும் புறப்புறத்தினும் சென்று செய்யுள் செய்யும் புலவன் முதலாயினோர் கூறும் கூற்றாய்ச் சுட்டு என்னும் உள்ளுறையவாய் நடத்தற்கு மேற்கோள். (மாற. 125.)

நீலகேசிஉரை:— 'பிறன் சுமவான் தான் நடவான்' என்றபாடல் நுவலாநுவற்சி அலங்காரம் எனக்கூறி, இக்குறளை எடுத்து மேற்கோள் காட்டி விளக்குவர். (பா. 307.)

ஓப்புமைப்பகுதி:

"குறைந்த வலிய ராயிடினும் கொற்ற மைந்தர் பலர்கூடின்
நிறைந்த வலிஎன் றுமதனுன் னோரா தொழிக பலரொடுளத்
துறைந்த ஊக்கந் தனைக்கொண்டே உற்ற நினது வலியளவின்
இறந்தும் வினைமேல் நடவற்க இறவா வென்றி வேண்டிடினே."

—விநா. அரசி. 65.

"அடப்பங் கொடியும் திரண்டால் மிடுக்கு" —பழ.

"முண்டனுக்கு இரண்டாள்" —ஷை

"பஞ்சு கயிறானும் பாரந்தாங்கும்" —ஷை

476. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— கொம்பர் நுனி ஏறினர் அஃது இறந்து ஊக்கின் - ஒரு மரக்கோட்டினது நுனிக்கண்ணே ஏறி நின்றார் தம் ஊக்கத்தால் அவ்வளவினைக் கடந்து மேலும் ஏற ஊக்குவராயின், உயிர்க்கு இறுதியாகிவிடும் - அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாய் முடியும்.

நுனிக்கொம்பர் என்பது கடைக்கண் என்பதுபோலப் பின் முன்னாகத் தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை. பன்மை அறிவின்மை பற்றி இழித்தற்கண் வந்தது. இறுதிக்கு ஏதுவாவதனை இறுதி என்றார். பகைமேற்செல்வான் தொடங்கித் தன்னால் செல்லலாமளவும் சென்று நின்றான் பின் அவ்வளவின் நில்லாது மனவெழுச்சியான் மேலும் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினைமுடிவிற்கு ஏதுவாகாது அவன்உயிர்முடிவிற்கு ஏதுவாம் என்னும் பொருள் தோன்றநின்றமையின், இதுவும் மேலை யலங்காரம். அளவறிந்துநிற்றல்வேண்டும் என்றமையின், இதனால் வினை வலி யறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

மணக்:— ஒருமரத்தின் நுனிக்கொம்பு ஏறினவர் தம் அளவு அறிந்துவைத்துப் பின்னும் மேலேறுவராயின், அஃது அவர்தம் உயிர்க்கு இறுதியாகிவிடும் எ - று.

இஃது அரசன் தன்னால் செல்லலாமெல்லையளவும் சென்றால் பின்பு மீளவேண்டும் என்றது. இதுவும் ஒரு வலியறிதல்.

பரிதி:— அடிப்பனையிலே நின்று மரத்தில் பழம் பறியாமல் நுனிக்கொம்பிலே ஏறினார் போல, கெட்டபுத்தியை எண்ணாமல் உறுதி யான காரியத்தை விசாரிக்கில் அக்காரியம் பலிக்கும் எ - று.

காளிங்:— நின்றதோர் பசுமரத்தின் இளந்தழைக் கொம்பின் மேலேபோய் ஏறினார் போல மற்று அதனை அறிந்து பின்னும் உரம் செய்வாராயின் தமது உயிர்க்கு இறுதியாகி விடும் எ - று.

ஊக்கின் என்பது உரம் செய என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஏறினர் என்னும் பன்மை அறிவின்மைபற்றி இழித்தற்கண் வந்தது. 'பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்' (816) என்னும் பன்மை உயர்த்தற்கண் வந்தது.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— நுனிக்கொம்பர் என்பது மரூஉமொழி என்பர். (இ. கொ. 108.) நுனிக்கொம்பர் என்புழி நின்ற பகுபதங்களைக் கொம்பு எனப் பகாப்பதமாகவே பொருள் கொள்வர். (வை. 117.)

காரி:— (475 ம் குறள் காண்க.)

ஒப்புமைப்பகுதி:

"நெடுமரம் நீள்கோட் டுயர்பாய்தல் இன்னா" —இன்னா. 31.

"எல்லை கடந்தால் தொல்லை" —ப.

"உச்சாணிக் கிளையிலே ஏறினால் உயிருக்கு ஆபத்துத்தானே" —வை.

முதுமொழிவெண்பாக்கள்:

"கண்ணுதல்பால் சென்றது காமனுக்கு வென்றியோ
எண்ணமிலான் போலும் எதிர்ந்திறந்தான் - நண்ணி"
—முதுமொழி. 81.

477. ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— ஆற்றின் அளவு அறிந்து ஈக - ஈயும் நெறியானே தமக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப ஈக; அது பொருள்போற்றி வழங்கும் நெறி - அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக் கொண்டு ஒழுகும் நெறியாம்.

ஈயும்நெறி மேல் இறைமாட்சியுள் 'வகுத்தலும் வல்லதரசு' என்புழி உரைத்தாம். எல்லைக்கேற்ப ஈதலாவது, ஒன்றான எல்லையை நான்கு கூறாக்கி, அவற்றுள் இரண்டனைத் தன்செலவாக்கி, ஒன்றனை மேல்

இடர் வந்துழி அது நீக்குதற் பொருட்டு வைப்பாக்கி, நின்ற ஒன்றனை ஈதல். பிறரும் *"வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்" என்றார். பேணிக் கொண்டொழுகுதல் ஒருவரோடு நட்பிலாத அவனைத் தம்மோடு நட்புண்டாக்கிக்கொண்டு ஒழுகுதல். முதலிற் செலவுசுருங்கின் பொருள் ஒருகாலும் நீங்காது என்பதாம்.

மணக்:— பொருளை அளவறிந்து கொடுக்கும் வழியாலே கொடுக்க; பொருளையுண்டாக்கி வழங்கும் நெறி அது ஆதலான் எ - று.

இது பொருளினது வலியறிந்து அதற்குத்தக்க செலவுசெய்ய வேண்டும் என்று கூறிற்று.

பரிதி:— அரசன் இவர்கள் தனக்குதவியாவர் என்று அறிந்து பொருள் கொடானாகில் அப்பொருளும் கெடும்; மனிதரும் கூடார் எ - று.

காளிங்:— பொருள் வரலாற்றினது சிறுமை பெருமை அளவு அறிந்து அதற்குத் தக்காங்கு அரசர் யாவர்க்கும் ஈந்து ஒழுக; மற்று அங்ஙனம் செய்யின், அஃது அப்பொருளினைக் காக்கும்இடம் காத்து வழங்கும்வழி வழங்கும் முறைமையாவது: எனவே யாவரும் தத்தம் பொருள் வரலாற்றுக்குத் தக்காங்குக் காக்குமிடம் காத்தும் ஈயுமிடம் ஈத்தும் சேறலே கடன் எ - று.

இனி, மற்று இங்ஙனம் பொருள்வலியும் துணைவலியும் முதலாக வலியனைத்தும் தேர்ந்து அறிந்தனனாயினும், வேந்தன் மற்று அவை செய்யுமிடத்து, அவையவையிற்றுக்கு ஏற்ற காலம் அறியாக்கால் கருமம் சிதையும் ஆகலின், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"வந்த பொருளில் காற்கூறு வருமே லிடர்நீக் குதற்கமைந்து
மைந்த இருகால் நினக்காக்கி மற்றைக் காலே வழங்கிடுக
சிந்து நெறிகள் அகலாமல் சேரும் நெறிகள் சுருங்கிடினும்
நந்தல் இலதாம் ஒப்பினுமா நாடின் அதிகச் செலவிழுக்காம்."
—விநா. அரசி. 66.

"வளவனாயினும் அளவறிந்தழித் துண்." —கொன்றை. 81.

*திரி. 21.

"வழி தெரியாத கொடை பழி." —பழ.

"அளகேசனானும் அளவறிந்து செலவு செய்யவேண்டும்." —ஷை.

"விளைவதாயினும் அளவறிந்தழி." —ஷை

குறிப்பு

இதனால் ஈதலாகிய அழித்தலும் ஈட்டலுக்கு உபாயமாகும் என்பதும் கூறப்பெற்றது. போற்றி வழங்கு நெறி என்பதற்குப் பாதுகாத்துப் பின்னர் எப்போதும் வழங்கிக்கொண்டேயிருப்பதற்கு ஏற்ற நெறியாம் எனவுமாம்.

—தொகுப்பாசிரியர்.

478. ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— ஆகு ஆறு அளவு இட்டிதாயினும் கேடு இல்லை - அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறியளவு சிறிதாயிற்றாயினும் அதனால் கேடு இல்லையாம், போகு ஆறு அகலாக்கடை - போகின்ற நெறியளவு அதனின் பெருகாதாயின்.

இட்டிது எனவும் அகலாது எனவும் வந்த பண்பின் தொழில்கள் பொருண்மேல் நின்றன. பொருளென்பது அதிகாரத்தான் வருவித்தும், அளவு என்பது பின்னும்கூட்டி உரைக்கப்பட்டன. முதலும் செலவும் தம்முள் ஒப்பினும் கேடில்லை என்பதாம்.

மணக்:— பொருள் வரும்வழியளவு சிறிதாயினும் கேடில்லையாம்; அது போம்வழி பெருகாதாயின் எ - று.

இது முதலுக்குத் தக்க செலவு செய்ய வேண்டும் என்றது.

பரிதி:— ஆதாயவகை அற்பமாயினும் நிருவாகம் பண்ணிக் கொள்ளலாம் செலவு மிகுதியில்லாதபோது எ - று.

காளிங்:— பொருள் தமக்கு உளதாகின்ற வழியினது அளவு பெரிதும் சிறிதேயாயினும், அதனான் வருவதொரு கேடில்லை: என்னை எனின், மற்று அப்பொருள்தான் வினியோகப்படுதலும் பிறர்க்கு உபகரித்தலும் ஆகப் போகிறவழியால் அதனைவிட்டு அகலாதஇடத்துத் தனக்கு வலியாகியது சிறிது பொருளாயினும் அதுவே அமையும் எ - று.

ஒப்புமைப்பகுதி :

" ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு." —நல்வழி. 25.

"தேடா தழிக்கின் பாடா முடியும்." —கொன்றை. 44.

குறிப்பு:

தவிராது செலவழித்தேயாகவேண்டிய காலத்து வரவும் செலவும் ஒப்ப இருப்பினும் கேடில்லை என்பதாம். அக்காலத்தும் வரவிற் செலவு சுருங்கி இருத்தலே முறை என்பது வரையறுத்தவாறு.

—தொகுப்பாசிரியர்.

479. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (௯)

உரைப்பகுதி :

பரிமே:— அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை - தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கு ஏற்ப வாழமாட்டாதான் வாழ்க்கைகள், உளபோல இல்லாகித் தோன்றாக்கெடும் - உள்ளன போலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமும் இன்றிக் கெட்டு விடும்.

அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது அதனில் சுருக்கக் கூடா தாயின் ஒப்பவாயினும் ஈத்தும் துய்த்தும் வாழ்தல். தொடக்கத்தில் கேடு வெளிப்படாமையின், உளபோலத் தோன்றி என்றார். முதலின் செலவு மிக்கால் வரும் ஏதம் கூறியவாறு.

மணக்:— தன்வருவாயளவு அறிந்து வாழாதான் வாழ்க்கைகள் உளபோலத் தோன்றி, அதன்பின் இல்லையாகித் தோன்றாது கெடும் எ-று.

பின்பு ஆக்கம் தோன்றாது என்றவாறு. இது மேற்கூறியவாறு செய்யாதார் கெடுவர் என்றது.

பரிதி:— தன்செல்வம் அறிந்து மேல்வருகிற உதவி அறிந்து செலவழியாதான் செல்வம் சடுதியிலே கெட்டுவிடும் எ - று.

காளிங்:— தமது பொருள் முதலியவற்றின் எல்லையைக் குறிக்கொண்டு எய்தற்குத் தக்காங்கு செய்யாதான் ஒழுக்கமானது முன்னம் சில உளபோலக் காட்டி இல்லையாய் விடும்; மற்று அங்ஙனம் கெடுமிடத்தும் தோற்றம் இல்லவாய்க் கெட்டு விடும் எ - று.

480. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். (௪௦)

உரைப்பகுதி :

பரிமே:— உள வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை - தனக்குள்ள அளவு தூக்காமைக்கேதுவாய ஒப்புரவாண்மையால், வளவரை வல்லைக் கெடும் - ஒருவன் செல்வத்தினெல்லை விரையக்கெடும்.

ஒப்புரவேயாயினும் மிகலாகாது என்றமையான், இதுவும் அது. இவை நான்கு பாட்டானும் மூவகையாற்றலுள் பெருமையின் பகுதியாய பொருள்வலியறிதல் சிறப்பு நோக்கி வகுத்துக்கூறப்பட்டது.

மணக்:— தனக்கு உள்ள அளவை நினையாதே ஒப்புரவு செய்வானது செல்வத்தினளவு விரைவில் கெடும் எ - று.

மேல், முதலுக்குச் செலவு குறையவேண்டும் என்றார்; அவ்வாறு செய்யின் ஒப்புரவு செய்யுமாறு என்னை என்றார்க்கு, இது கூறினார்.

பரிப்:— ஒப்புரவாண்மை என்று ஒப்புரவிற்கே போக்குவாரும் உளர்.

பரிதி:— தனது பொருள் இவ்வளவு என்று அறிந்து அதற்குத் தக்கதாக ஒப்புரவு செய்யாதான் செல்வமும் சடுதியிலே கெடும் எ - று.

காளிங்:— ஒருவன் தனக்கு உள்ள எல்லையைச் சீர் தூக்காத உபகார நடையும், அதற்கு மூலமாகிய செல்வத்து எல்லையும் இரண்டும் வளத்தினது பெருமை இன்றி விரையக் கெடும் எ - று.

வல்லைக்கெடும் என்பது விரையக்கெடும் என்றது.

ஒப்புமைப்பகுதி:

"உடலளவு விரதம் பொருளளவு தானம்' —பழ.

குறிப்பு:

ஒப்புரவாயின் 'தன்னை விற்றுக்கோள் தக்கது உடைத்து' என்றாரன்றே; அவ்விடத்தும் பொருளளவறிந்தே ஒப்புரவுசெய்க என்றவாறும், முற்கூறியதில் பிற்கூறியது வலியுடைத்தாகும் என்னும் நியாயப்படி அறத்தில் கூறியது ஒப்புரவாற்றலின் இன்றியமையாத் தன்மையை வற்புறுக்கும் அளவே. ஈண்டு அவ்வொப்புரவு இடையறாது நடைபெறும் உபாயம் கூறிப் பொருள் வலியறிதலை விளக்கியது.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை.

பரிமே:— *வினைவலி, ஒல்வதறிவது, உடைத்தம், அமைந்தாங்கு, பீலிபெய், நுனிக்கொம்பர், ஆற்றின், ஆகாறு, அளவறிந்து, உளவரை.*

மணக்:— *வினைவலி, உடைத்தம், ஒல்வதறிவது, அமைந்தாங்கு, நுனிக்கொம்பர், பீலிபெய், ஆற்றீன், அளவறிந்து, ஆகாறு, உளவரை.*

பரிதி:— *வினைவலி, உடைத்தம், நுனிக்கொம்பர், அமைந்தாங்கு, பீலிபெய், ஆற்றின், உளவரை, ஆகாறு, அளவறிந்து, ஒல்வதறிவது.*

காளிங்:— *வினைவலி, உடைத்தம், ஒல்வதறிவது, அளவறிந்து, உளவரை, நுனிக்கொம்பர், பீலிபெய், ஆகாறு, அமைந்தாங்கு, ஆற்றின்,*

49. காலமறிதல்.

தொகுப்புரை:

[காக்கை கோட்டானைப் பகலில் வெல்வதுபோலப் பகைவரை வெல்லக் கருதும் வேந்தர்க்கும் காலம் இன்றியமையாதது. காலத்தோடொத்துக் காரியஞ் செய்தல் செல்வத்தை நீங்காமல் கட்டும்கயிறாகும். உபாயங்களோடு காலமறிந்து செய்தால் உலகத்தையே ஆள எண்ணினும் அந்த எண்ணம் கைகூடும். சிறிதும் கலங்காமல் உலகத்தையாள எண்ணுபவர்கள் காலம்பார்த்துக் காத்திருப்பர். வலிமையுடையவன் அடங்கியிருப்பது யாடு முட்டப் பின்னடைவது போலாம். அறிவுடையவர்கள், பகைவர் குற்றங்கண்டவிடத்து உடனே உடம்பெல்லாம் வெயர்த்துச் சினத்தைத் தெரியப்படுத்த மாட்டார்கள். காலம் அறிந்து மனம் புழுங்குவர். பகைவரைக் காலம்வருமளவும் சுமக்க; காலம் வந்ததாயின் தலைகுப்புறத் தள்ளுக. தம்மால் அடையக்கூடாத அருமையான காலங் கூடுமாயின் அக்கணமே செய்யமுடியாத காரியங்களையும் செய்து முடித்துக் கொள்க. கொக்குப் போலக் காலம் பார்த்துக்கொண்டு இருக்க; காலம் வாய்த்தபோது அது குத்துவது போலக் குத்துக.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது வலியான் மிகுதியுடையனாய்ப் பகைமேல் சேறலுற்ற அரசன் அச்செலவிற்கேற்ற காலத்தினை அறிதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— காலமறிதலாவது வினைசெய்தற்காங்காலம் அறிதல். வினைசெய்யுங் காலமும் அறிந்து செய்யவேண்டுதலின், அதன்பின், இது கூறப்பட்டது.

பரிதி:— காலமறிதலாவது காலங்கள் அறியவேணும் எ - று.

481. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (க)

உரைப்பகுதி:

பரிமே:— கூகையைக் காக்கை பகல் வெல்லும் - தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழுதின்கண் வெல்லாநிற்கும், இகல் வெல்லும் வேந்தர்க்குப் பொழுது வேண்டும் - அதுபோல, பகைவரது இகலை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கு ஏற்ற காலம் இன்றியமையாது.

எடுத்துக்காட்டுவமை, காலமல்லாவழி வலியால் பயனில்லை என்பது விளக்கி நின்றது. இனிக் காலமாவது வெம்மையும் குளிர்ச்சியும் தம்முள் ஒத்து, நோய்செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானை வருந்தாது செல்லும் இயல்பினதாம். இதனால் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— இராப்பொழுது வெல்லும் கூகையைக் காக்கை பகற் பொழுது வெல்லும்; ஆதலான், மாறுபாட்டை வெல்லும் அரசர்க்குக் காலம் வேண்டும் எ - று.

இது காலம் அறிதல்வேண்டும் என்றது.

பரிதி:— பகற்காலம் கூகையைக் காக்கைவெல்லும்; இராக்காலம் காக்கையைக் கூகைவெல்லும் அத்தன்மைபோலக் காலமறிந்து செய்யில் வெல்லலாம் எ - று.

காளிங்:— கூகையாகிய புள்ளினை எறியுமிடத்துத் தனக்கு வாய்த்த காலமாகிய பகற்பொழுதின்கண் சென்று அடர்த்து வெல்லும் காக்கையானது. மற்று அங்ஙனமே வெல்லும் காக்கையை எறியு மிடத்துத் தனக்கு வாய்த்த காலமாகிய இருட்பொழுதின்கண் சென்று அடர்த்து வெல்லும் கூகையானது. இனி இவைபோலத் தம்மில் தாம் மாறுபட்டுப் பொரும் மன்னவர்க்கும் தமக்குச் செயமாகிய வாய்ப்புடைக் காலம் அறிந்து அடர்த்தலே இயல்பு எ - று.

அரசர் தாம் செய்வினைக்கு அடுத்த காலம் அறிந்தாலும் வினை இயற்றும் இடத்து இதுவும் இயைய வேண்டுதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

மேற்கோள்பகுதி:

நச்:— 'இடத்தொடு பொழுதுநாடி எவ்வினைக்கண்ணும் அஞ்சார்' வீரத்தையே கருதாமல் காலமும் இடமும் அறிந்து செய்க என்றார்; 'பகல்வெல்லும் கூகையைக்காக்கை'......தேவரும் கூறினர். (சீவக. 1927)

ஒப்புமைப்பகுதி:

"கடத்திடைக் காக்கை ஒன்றே ஆயிரம் கோடி கூகை
இடத்திடை அழுங்கச் சென்றாங் கின்னுயிர் செகுத்த தன்றே."

—சீவக. 1927.

"பாயிரம் கூறிப் படைதொக்கால் என்செய்ப
ஆயிரம் காக்கைக்குஒர் கல்." —பழ. நா.

"வேந்தர், அற்காக்கை கூகையைக்கண்டு அஞ்சினவாம்என அகன்றார்". —கம்ப. கார்முகப். 24.

முதுமொழிவெண்பாக்கள்:

"காலம் கருதிக் கருமம் பதறார்கள்
சீலம் பெரியோர் தினகரா - ஞாலம்." —தினகர. 52.

குறிப்பு:

பஞ்சதந்திரக் கதையுள் மேகவர்ணன் என்னுங்காக்கை தம்மினத்திற்குக் கேடுவிளைத்த அரிமர்த்தனன் என்னும் கோட்டானை அது இருந்த பொந்தினருகிலேயே பகற்காலமுழுதும் தன்னினத்தோடு சுள்ளிகளைக் குவித்துத் தீயிட்டு அழித்த வரலாறு காண்க.

—தொகுப்பாசிரியர்.

482. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— பருவத்தோடு ஒட்ட ஒழுகல் - அரசன் காலத்தோடு பொருந்த வினை செய்து ஒழுகுதல், திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு - ஒருவர்கண்ணும் நில்லாது நீங்கும் செல்வத்தைத் தன்கண் நீங்காமல் பிணிக்கும் கயிறாம்.

காலத்தோடு பொருந்துதல் - காலந்தப்பாமல் செய்தல். தீராமை என்றதனால், தீர்தல்மாலையது என்பது பெற்றாம். வினை வாய்த்து வருதலான், அதனினாகும் செல்வம் எஞ்ஞான்றும் நீங்காது என்பதாம்.

மணக்:— காலத்தோடு பொருந்த ஒழுகுதல், செல்வத்தை நீங்காமல் கட்டுவதொரு கயிறாம் எ - று.

இனிக் காலம் அறிந்ததனால் வரும் பயன் கூறுவார் முற்படச் செல்வம் கெடாது என்றார்.

பரிதி:— தாயம் வருமட்டும் பார்த்திருந்து காலமறிந்து காரியம் கொள்வானாகில், அதுதிருமாதுதன்னைவிட்டுநீங்காமல் கட்டினகயிறு எ - று.

காளிங்:— மற்று இவ்வாறு தாம் தொடங்கும் கருமத்திற்கு ஏற்கும் காலத்தோடு இயைய ஒழுகவே அது தமது செல்வத்தை நீங்காமல் பிணிக்கும் கயிறு ஆம் எ - று.

ஒட்ட என்பது இயைய. தீராமை என்பது ஒழியாமை. ஆர்க்கும் என்பது பிணிக்கும்.

ஒப்புமைப்பகுதி:

"பருவத்தே பயிர்செய்." —ஆத்தி. 22.

"அடிக்கும் காற்றிலேயே எடுத்துத்தூற்றவேண்டும்." —பழ.

"பருவத்தோ டொத்துவாழ்," —ஷை

"நாள்செய்வன நல்லவர் செய்யார்." —ஷை

குறிப்பு:

பரிமேலழகர் 'வினைவாய்த்து வருதலான்' என்றதிலுள்ள வினை, ஆட்சியும் சூழ்ச்சியு மாகிய செயல் என்னும் பொருட்டு. ஊழன்று. அது 'அளந்தனபோகம் அவரவர் ஆற்றான், விளங்காய் திரட்டினாரில்லை களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்' என்றவாறு நியதியாற் கூட்டப்பெற்றதன்றிப் பருவத்தோடு ஒட்ட ஒழுகலாகிய செயலால் இவர்களாக வருவித்துக்கொள்வதன்று ஆதலின்.

—தொகுப்பாசிரியர்.

483. அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின். (௩)

உரைப்பகுதி :

பரிமே: அருவினை என்ப உளவோ - அரசரால் செய்தற்கரிய வினைகள் என்று சொல்லப்படுவன உளவோ, கருவியான் காலம் அறிந்து செயின் - அவற்றை முடித்தற்கு ஏற்ற கருவிகளுடனே செய்தற்காங்காலம் அறிந்து செய்வராயின்.

கருவிகளாவன மூவகையாற்றலும் நால்வகை உபாயங்களுமாம். அவை உளவாய வழியும் காலம் வேண்டும் என்பது அறிவித்தற்குக், கருவியான் என்றார். எல்லாவினையும் எளிதின் முடியும் என்பதாம்.

மணக்:— அரியவினை என்று சொல்லப்படுவன உளவோ? முடிக்கலாங் கருவியோடே கூடக் காலத்தை அறிந்து செய்ய வல்லாராயின் எ - று.

பரிப்:— இது முடியாத வினையில்லை என்றது.

பரிதி:— வெல்லுதற்கரிய வினைஎன்பது இல்லையே; காலமறிந்து காரியம் செய்வானாகில் எ - று.

காளிங்:— வேந்தர்க்குச் செய்தற்கு அரிய கருமங்கள் என்பனவும் சில உளவோ இல்லை. மற்று எப்பொழுது எனின்; தாம் தொடங்குவதோர் கருமம் கடைபோவதற்கு ஏற்கும் உபாயத்துடனே அடுத்த காலத்தைக் குறிக்கொண்டு செய்வாராயின் எ - று.

கருவி என்பது உபாயம்; சாதுரங்கம் என்றுமாம்.

ஒப்புமைப்பகுதி

"காலமறியாதோன் கையுறல் பொய்." —முதுமொழி. 7 : 4

"ஆற்றல் மூன்றும் உபாயங்கள் நான்கும் இடத்தோ டமைந்திடினும்
போற்றி நினக்கு வென்றியுறும் பொழுது தேர்ந்தே வினைபுரிக."
—விநா. அரசி. 67.

முதுமொழிவெண்பாக்கள்:

"போகிருந்த காலம் உணரா துறுமதனன்
தேகம் இழந்தான் சிவசிவா - ஆகி." —சிவசிவ. 49.

குறிப்பு:

வேலையும் படையும் ஒத்துப்போனால் வேண்டிய தெல்லாம் தானேவிளையும் என்பது.

—தொகுப்பாசிரியர்.

484. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தான் செயின். (ச)

உரைப்பகுதி :

பரிமே:— ஞாலம் கருதினும் கைகூடும் - ஒருவன் ஞாலமுழுதும் தானே ஆளக்கருதினானாயினும் அஃது அவன் கையகத்ததாம், காலம் கருதி இடத்தான் செயின் - அதற்குச் செய்யும் வினையைக் காலம் அறிந்து இடத்தோடு பொருந்தச் செய்வானாயின்.

இடத்தான் என்பதற்கு மேல் கருவியான் என்பதற்கு உரைத்தாங்கு உரைக்க. கைகூடாதனவும் கைகூடும் என்பதாம். இவை மூன்று பாட்டானும் காலம் அறிதற்பயன் கூறப்பட்டது.

மணக்:— உலகமெல்லாம் பெறுதற்கு நினைத்தானாயினும் பெறலாம்; காலத்தைக் குறித்து இடனறிந்து செய்வனாயின் எ - று.

இஃது எல்லாப் பொருளும் எய்தும் என்றது.

பரிப்.— இது இனி இடனறிதல் கூறுகின்றாராதலின் இனி அது பின் கூறப்பட்டது.

பரிதி:— பூலோகமெல்லாம் ஆளவேணும் என்றாலும் கைகூடும்; காலமும் இடமும் அறிந்து செய்வானாகில் எ - று.

காளிங்:— வேந்தரானோர் சில நாள் ஆண்டிருத்தலே அன்றி இவ்வுலகம் முழுவதும் ஒருவர்தாமே ஆளக் கருதினும் கைகூடும்: எங்ஙனமோ எனின், தான் செய்யும் காரியத்துக்கு ஏற்ற பருவத்தைக் குறிக்கொண்டிருந்து மற்று அது வந்து எய்திய பொழுது பழுதுபடாமல் பருவத்தின்கண்ணே வினைசெய்யின் எ - று.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— கைகூடும் என்பதை விளக்கவந்தவர் 'கை என்றதூஉம் அவ்வாறு இடைச்சொல்லாய்க் கூடுதலைச் சிறப்பித்து, எளிதில் கூடும் என்னும் பொருள்பட நின்றது எனக் கூறி, 'ஞாலங் கருதினும் கைகூடும்' என்பதை மேற்கோள் காட்டுவர். (கம்ப. விருத். பக். 11.)

ஒப்புமைப்பகுதி:

"இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக் கண்ணும் அஞ்சார்
மடப்பட லின்றிச் சூழும் மதிவல்லார்க் கரிய துண்டே." —சீவக. 1927.

"அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா." —வாக்கு. 5.

"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்." —பழ.

"அடுத்து முயன்றாலும் ஆகுநாள் வரவேணும்." —ஷை

485. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— கலங்காது ஞாலம் கருதுபவர் - தப்பாது ஞாலமெல்லாம் கொள்ளக் கருதும் அரசர், காலம் கருதி இருப்பர் - தம்வலி மிகுமாயினும் அது கருதாது அதற்கு ஏற்ற காலத்தையே கருதி அது வருந்துணையும் பகைமேல் செல்லார்.

தப்பாமை - கருதியவழியே கொள்ளுதல். வலிமிகுதி, காலங்கருதி என்றதனால் பெற்றும். அது கருதாது செல்லின் இருவகைப் பெருமையும் தேய்ந்து வருத்தமும் உறுவராகலின், இருப்பர் என்றார். இருத்தலாவது நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் அறுவகைக்குணங்களுள் மேற்செலவிற்கு மாறாயது. இதனால் காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது.

மணக்:— வினை செய்யுங்காலம் வருமளவும் நினைத்து அசைவின்றி இருப்பார்; ஞாலத்தைக் கொள்ளக் கருதுபவர் எ - று.

பரிப்:— இது காலம் வரவு பார்த்து இருக்குங்கால் பின்பு செய்யும் வினை புலப்படாமல் இருக்க வேண்டும் என்றது.

பரிதி:— காலங்களை அறிந்து இருப்பானாகில் அவன் கலங்காமல் ஞாலமும் ஆளப்பெறுவன் எ - று.

காளிங்:— தாம் செய்யக் கருதிய கருமத்திற்கு அடுத்தகாலம் அப்பொழுது இல்லெனில் மற்று அது வரும்வழி அதனைக் குறிக் கொண்டு அமைந்திருப்பார்: யாரோ எனின், வையம் தமது கையகத் தாய நெறி தளராமல் ஆளக் கருதும் அரசர் எ - று.

மேற்கோள்பகுதி :

மயிலை:— 'காலம்.......கருதுபவர்' கொள்ளுங்காலம் குறித்துக் கலங்காது இருப்பர் ஞாலம்கருதுபவர்........என வினையும் வினையுளடங்கும் வினைக்குறிப்பும் கொண்டு முடிதலின் வினைஎச்சம்' என்பர். (நன். 359.)

ஒப்புமைப்பகுதி:

"சீல மல்லன நீக்கிச்செம் பொற்றுலைத்
தூல மன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
காலம் அல்லது கண்ணும்உண் டாகுமோ." —கம்ப. மந்தரை. 19.

"குறுஞ்சுனையில் களிவண்டு சுழன்றாடும் கான்குயில்கள் குரைநீர்ப் புன்னை, தொறும்பொதுளும் கருங்கொடிதன் குடம்பையில்போய்க் கருஉயிர்த்துச் சுலவி மீண்டு, நறும்பிரச மலர்க்காஞ்சிச் சினையேறி ஒளியி ருந்து நாடிக் காலம், உறுந்துணையும் இனிதுறையும் உலவாத வளங்காட்டி ஓங்கும் ஓர்பால்." —காஞ்சி. திருநாட்டுப். 141.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஆண்டு பதின்மூன் றரவுயர்த்தோன் செயிர்த்தவெல்லாம்
ஈண்டுபொறுத் தாண்டான் இரங்கேசா - வேண்டிய." —இரங். 49.

486. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. (சா)

உரைப்பகுதி:

பரிமே:— ஊக்கம் உடையான் ஒடுக்கம் - வலிமிகுதியுடைய அரசன் பகைமேல் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, பொரு தகர் தாக்கற்குப் பேரும்தகைத்து - பொருதகர் தன்பகைகெடப் பாய்தற் பொருட்டுப் பின்னே கால்வாங்கும் தன்மைத்து.

உவமைக்கண் தாக்கற்கு என்றதனால், பொருளினும் வென்றி யெய்தற்பொருட்டு என்பது கொள்க. இதனால் அவ்விருப்பின் சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— மன மிகுதியுடையவன் கால வரவுபார்த்து ஒடுங்குதல், போரைக் கருதின தகர் வலிபெறத் தாக்குதற்பொருட்டுப் பெயர்ந்தாற் போலும் எ - று.

இது காலம் வருமளவும் பொறுத்தால் வலி மிகும் என்றது.

பரிதி:— விசாரமுள்ளவன் காலம் பார்த்து ஒதுங்கி இருப்பான்; எப்படி என்றால் கிடாயானது பின்வாங்குவது போல எ - று.

காளிங்:— ஒரு கருமம் செய்ய நெஞ்சின்கண் மேற்கோள் உடையனாகிய வேந்தனானவன், மற்று அதற்கு அடுத்த பருவம் வந்து எய்தும் துணையும் மற்று அதன்கண் முயலாது ஒடுங்கியிருக்கின்ற ஒடுக்க மானது எத்தன்மைத்தோ எனின், மேற்கொண்டு நிற்கின்ற போர்க்கிடாய் பொட்டெனத் தலையொடு தலைமுட்டுதற்பொருட்டுச் சிறிது நீங்கிச் செவ்வி பார்த்து நிற்கும் தகைமைத்து எ - று

மேற்கோள்பகுதி :

மயிலை:— ஊக்கம் என்பது உடம்பொடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள். (நன். 451.)

ஒப்புமைப்பகுதி :

“பாடு பெயர்ந்து இடிக்கும் ஏடகம்போல
அகன்றுபெயர்ந் தழிக்கும் அரும்பெறல் சூழ்ச்சி.”
—பெருங். 3:1: 30 - 31.

“ஏற்ற காலம் வருமளவும் எண்ணி யிருக்க அதுமைந்தா
வீற்றுச் சமர்க்குப் பின்வாங்கும் வெற்றித் தகரே யாகுமால்.”
—விநா. அரசி. 67.

“புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்.” —பழ.

“புலி பதுங்கிப் பாயும்.” —ஷை

முதுமொழிவெண்பாக்கள் :

“வீமன் அவை முன்மனையை வேட்டானைக் கண்டுமொரு
தூமொழியே னும்புகலான் சோமேசா - ஆம்என்றே.”
—சோமேசர். 49.

குறிப்பு:

இதனால் மேற்செல்லா திருந்ததும் மடியானன்று என்பது விளக்கியவாறு.
—தொகுப்பாசிரியர்.

487. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்(து)
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— ஒள்ளியவர் - அறிவுடைய அரசர், ஆங்கே பொள்ளெனப் புறம்வேரார் - பகைவர் மிகைசெய்த பொழுதே அவர் அறியப் புறத்து வெகுளார், காலம் பார்த்து உள் வேர்ப்பர் - தாம் அவரை வெல்லுதற்கு ஏற்ற காலத்தினை அறிந்து அது வருந்துணையும் உள்ளே வெகுள்வர்.

பொள்ளென என்பது குறிப்புமொழி. வேரார், வேர்ப்பர் எனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். அறிய வெகுண்டுழித் தம்மைக் காப்பராகலின் புறம்வேரார் என்றும், வெகுளி ஒழிந்துழிப் பின்னும் மிகை செய்யாமல் அடக்குதல் கூடாமையின் உள்வேர்ப்பர் என்றும் கூறினர்.

மணக்:— கதுமென அவ்விடத்தே உடம்பு வேரார்; தமக்குச் செய்யலாங் காலம் வரவுபார்த்து மனம் வேர்ப்பர் ஒள்ளியர் எ - று.

வேர்ப்பு பொறுமையால் வருவதுஒன்று. இது பகைவர் பொறாதவற்றைச் செய்தாலும் காலம் பார்க்கவேண்டும் என்றது.

பரிதி:— சடுதியிலே தம்முடை நினைவைப் புறத்திலே சொல்லார் காலம் பார்த்துக் காரியத்தை மனத்திலே கொண்டிருப்பார் எ - று.

காளிங்:— தாம் செய்யும் கருமம் வாய்க்கும் பருவம் வருங்காலம் தம்மேல் வியர்க்க வினைசெய்ய முயலார்; மற்று என்செய்வர் எனின், அக்காலத்தைக் குறிக்கொண்டு நெஞ்சு புழுங்கி நிற்பார் அறிவுடை அரசர் எ - று.

பொள்ளென என்பது கடிதாக. உள் வேர்ப்பர் என்பது நெஞ்சு புழுங்கி. புறம்வேரார் என்பது உடம்பு வேரார்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பொள்ளென என்பது செயவென்னெச்சவாய்பாடு பெற்ற குறிப்புமொழி. 'கதுமென' (1173) என்பதும் அது. காரணத்தைக் காரியமாக்கி வேர்த்தல் வெகுளியாயிற்று.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— என என்னும் இடைச்சொல் குறிப்பு உணர நின்றதற்கு மேற்கோள். (தொல். சொல். 254.)

மயிலை:— பொள் என்பது குறிப்புப் பொருண்மேல் வந்ததற்கு மேற்கோள். (நன். 420.)

சங்கர:— குறிப்புப் பொருளில் என என்ற இடைச்சொல் வந்ததற்கு மேற்கோள். (நன். 424.)

ஒப்புமைப்பகுதி :

“ மிகைமிக் கியற்றித் திரிந்திடினும் வெல்லும் காலம் வருமளவும்
பகைமை புறத்தில் தோற்றுமல் பகைவர் தம்மைப் பண்போடு
நகைசெய் தமர்போல் சுமந்திடுக நாடுங் காலம் வந்துவிடின்
தகைசெய் வினையை அவ்வளவில் தப்பா வண்ணம் முடித்திடுக.”
—விநா. அரசி. 68.

“யானையைப் போல வஞ்சனை, புலியைப் போலப் போர்.” —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

“ எல்லாம் இமைப்பில் அழிப்பாரும் நீட்டித்தார்
வல்லார் புரமெரிக்க வந்துழியும் - ஒல்லாரைப்.” —முதுமொழி. 82.

குறிப்பு:

இதனுல் அரசர்கட்கு இன்றியமையாத காம்பீர்யம் என்னும் குணம் விளக்கப் பெறுகின்றது. எத்துணைப் பெரியதகுதியுடையராயினும் குலநலமில்லாத கீழோர் சிலர் 'நொய்யரிசி கொதிபொறுக்காததுபோல' கொட்டிக் கவிழ்ப்பரன்றே; அங்ஙனம் அரசனும் இருப்பின் பகைவர் இவன் மனச்சிற்றத்தை அறிந்துகொண்டு தமக்கு அரண்செய்துகொள்வர் ஆதலின் எதனையும் வெளிக்காட்டல் கூடாது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

488. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— செறுநரைக் காணின் சுமக்க - தாம் வெல்லக் கருதிய அரசர் பகைவருக்கு இறுதிக்காலம் வருந்துணையும் அவரைக் கண்டால் பணிக; இறுவரை காணின் தலை கிழக்காம் - பணியவே அக்காலம் வந்து இறும்வழி அவர் தலைகீழின்றி இறுவர்.

பகைமை ஒழியும்வகை மிகவும் தாழ்க என்பார் சுமக்க என்றும், அங்ஙனம் தாழவே அவர் தம்மைக் காத்தல் இகழ்வராகலின் தப்பாமல் கெடுவர் என்பார் அவர்தலைகீழாம் என்றும் கூறினர். தலைமேற்கொண்ட

தொருபொருளைத் தள்ளுங்கால் அது தன் தலைகீழாக விழுமாகலின், அவ் வியல்பு பெறப்பட்டது. இவை இரண்டு பாட்டானும் இருக்கும்வழிப் பகைமை தோன்றாமல் இருக்க என்பது கூறப்பட்டது.

மணக்:— பகைவரைக் கண்டானாயின், தலையினால் சுமக்க; இறுமளவாயின் தலை கீழாய் விடலாம் எ - று.

பரிப்:— பகைவரைக் கண்டு வாளாதே இருப்பது ஆண்மை அல்ல என்று கருத வேண்டா: அவரைக் கண்டால் தலையிலே கொண்டாற் போலத் தாழ்ச்சி செய்து, பின்பு அவர் இகழ்ச்சியாலே தலையினின்று விழவிட்டாற்போல வினை செய்யலாம் என்று கூறப்பட்டது.

பரிதி:— சத்துருக்கள் காலமானால் அவர்களைச் சுமந்து கொள்க; தனக்குக் காலமானால் தலைகீழாகப் போடுக எ - று.

காளிங்:— பகைவரைக் கண்ட பொழுது இறுவரை காணுக்கால் சுமக்க, இறுவரை காணின் கீழாக விடவற்று ஆகும் தலை எ - று.

சுமக்க என்பது பொறுத்தல். கிழக்காம் தலை என்பது கீழ்ப் படுத்தல்.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— சுமத்தல் - பணிதல். கிழக்கு - கீழ்.

மேற்கோள்பகுதி :

மயிலை:— 'செறுநரைக்....தலை'; இது 'கிழக்காந்தலை என்பதன் துணிபு தோன்றுதற்கு ஒழிக்கப்பட்ட அவர் கெடுவர் என்பதைக்கொண்டு முடிதலின் ஒழியிசை எச்சம்' என்பர். (நன். 359.)

குறிப்பு:

இவர் பகைமையொழிந்தார் என்று எண்ணிப் பகைவர் தற்காப்பு நீக்கிக் கொள்கின்றவரையில் ஒருவரை ஒருவர் சுமத்தலைக் காட்டினும் தாழ்விற்கு இறுதி எல்லையின்மையின் சுமக்க என்றார்.

—தொகுப்பாசிரியர்.

489. எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— எய்தற்கு அரியது இயைந்தக்கால் - பகையை வெல்லக் கருதும் அரசர் தம்மால் எய்துதற்கரிய காலம் வந்துகூடியக்கால்; அந்நிலையே செய்தற்கு அரிய செயல் - அது கழிவதற்கு முன்பே அது கூடாவழித் தம்மால் செய்தற்கு அரிய வினைகளைச் செய்க.

ஆற்றல் முதலியவற்ருல் செய்துகொள்ளப்படாமையின் எய்தற கரியது என்றும், அது தானேவந்தியைதல் அரிதாகலின் இயைந்தக்கால் என்றும், இயைந்தவழிப் பின்நில்லாது ஓடுதலின் அந்நிலையே என்றும், அது பெருவழிச் செய்யப்படாமையின் செய்தற்கரிய என்றும் கூறினர். இதனுல் காலம் வந்துழி விரைந்து செய்க என்பது கூறப்பட்டது.

மணக்:— பெறுதற்கு அரிய காலம் வந்தால், அப்பொழுதே தன்னுல் செய்தற்கு அரியவாகிய வினைகளைச் செய்து முடிக்க எ - று.

இது காலம் வந்தால் அரிது என்று நாணுமல் செய்யவேண்டும் என்றது.

பரிதி:— ஒருகாலத்திலுங் கூடாதகாரியம் கூடினுல் ஒருவராலும் செய்துமுடிக்க ஒண்ணுத காரியத்தைச் செய்வான் எ - று.

காளிங்:— தாம் செய்வதோர் கருமத்திற்கு ஏற்குமாறு கிட்டுதற்கு அரிய பருவமானது வந்து கிட்டிய காலத்துப் பின் சென்று கழியாமல் பருவத்தே செய்தற்கு அரியனவற்றைச் செய்து கொள்க எ - று.

மேற்கோள்பகுதி :

யா-வி:— இருவிகற்பத்தால் வந்த ஆசிடை நேரிசை வெண்பாவில் முன்னிரண்டடியாக இக்குறளை அமைத்துக் காட்டுவர். (சூ. 60.)

ஒப்புமைப்பகுதி:

"எய்தற் கரிய இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயலென்று - வையத்(து)
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு."

—யா-வி. சூ. 60. மேற்கோள்.

முதுமொழிவெண்பாக்கள் :

"சிந்துபதி யைத்தந்தை யோடிறுத்தான் செவ்வியுற
முந்திவிச யன்ருன் முருகேசா - நந்தலின்றி." —முருகேசர். 49.

490. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. (௯௰)

உரைப்பகுதி :

பரிமே:— கூம்பும்பருவத்துக் கொக்கு ஒக்க - வினைமேல் செல்லா திருக்குங் காலத்துக் கொக்கு இருக்குமாறுபோல இருக்க, மற்றுச் சீர்த்த இடத்து அதன் குத்து ஒக்க - மற்றைச் செல்லுங்காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறுபோலத் தப்பாமல் செய்து முடிக்க.

மீன்கோடற்கு இருக்கும்வழி அது வந்து எய்துந்துணையும் முன் அறிந்து தப்பாமைப் பொருட்டு உயிரில்லதுபோன்று இருக்குமாகலானும், எய்தியவழிப் பின் தப்புவதற்கு முன்பே விரைந்து குத்தும் ஆகலானும், இருப்பிற்கும் செயலிற்கும் கொக்கு உவமையாயிற்று. கொக்கொக்க என்ருராயினும் அது கூம்புமாறு போலக் கூம்புக என்றும், குத்தொக்க என்ருராயினும் அது குத்துமாறுபோலக் குத்துக என்றும் உரைக்கப் படும், இது தொழிலுவமமாகலின். உவமைமுகத்தால் இருப்பிற்கும் செயலிற்கும் இலக்கணம் கூறியவாருயிற்று.

மணக்:— காலம் பார்த்திருக்குமிடத்துக் கொக்குப் போல ஒடுங்கி இகழ்வின்றி இருக்க; வினை செய்தற்கு வாய்த்தகாலம் வந்தவிடத்து அக்கொக்குக் குத்துமாறுபோலத் தப்பாமல் விரைந்து செய்க எ - று.

இது காலம் வருமளவும் இகழ்ச்சியின்றிக் கொக்கு போல இருத்தல் வேண்டும் என்பதூஉம், காலம் வந்தால் தப்பாமை விரைந்து செய்யவேண்டும் என்பதூஉம் கூறிற்று.

பரிதி:— மடைவாயிற் கொக்குப்போலே தனக்கு தாயமாகிற வேளை வருமளவும் தூங்குக. மீன் தனக்கு நேர்பட்டளவில் கொக்கு குத்தின முறைமைபோலத் தாயமானல் காரியஞ் செயங்கொள்க எ - று.

காளிங்:— தாம் கருதிய கருமம் முடிவதற்கு ஒரு பருவம் வாய்க்கும் அளவும் உள் ஒடுங்கி இருக்கும் குருகின் தன்மைபோலேயும், முடிவதற்கு ஒரு பருவம் வாய்த்த இடத்து மற்று அக்குருகு எறியும் தன்மை போலேயும் காலம் கருதி இருக்கவேண்டும் அரசர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" ஒடுங்கி இருந்தே உன்னியது முடிக்கும்
கொடுங்கால் கொக்கின் கோளின மாகிச்
சாய்ப்பிடமாகப் போர்ப்படை பரப்பி
வலிகெழு வேந்தனை வணக்குதும்." —பெருங். 3 : 17 : 61 - 64.

" அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு." —வாக்கு. 16.

" அக்கொடு வனத்தெதிர் அன்பென் கின்றதுட்
புக்கறி கிலாஒரு புளினன் கூன்புறக்
கொக்கென நாடொறும் கொலை குறித்தவன்
கைக்கொடு மரமொடு கடிது தோன்றினன்." —பிரபு. முனிவரர். 5.

முதுமொழிவெண்பாக்கள்:

' ஞானசம் பந்தரங்கே நண்ணியதால் எண்ணமில்லா
தானிவிளைத் தாரே அமணர்க்கு - மானியார்." —திருத். 84.

" காலத்தி னற்கழுகு கல்லைக் குடைந்துவிடும்
சீலத்தை நோக்காய் திருமலையா - ஞாலத்தில்." —திருமலை.

குறிப்பு:

'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு' என்றது போல, பகைவர்க்குத் துணையாயினாராகிய ஒற்றரும், தூதரும், கூலிப்படைஞரும் வந்தகாலத்துத் தன் பகையை வெளிப்படுத்தி யழித்தலால் ஆற்றலைக் கெடுத்துக் கொள்ளாது இவன் வலியொடுங்கி யிருந்தான் என்று எண்ணிப் பகைவனை வந்த விடத்து அவனைத் தப்பவிடாது கொல்லுக என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை.

பரிமே:— பகல்வெல்லும், பருவத்தோடு, அருவினை, ஞாலம்கருதி, காலம் கருதி, ஊக்கம், பொள்ளென, செறுநரை, எய்தற்கரிய, கொக்கொக்க.

மணக்:— பகல்வெல்லும், காலம்கருதி, ஊக்கம், பொள்ளென, செறுநரை, கொக்கொக்க, எய்தற்கரிய, பருவத்தோடு, அருவினை, ஞாலம்கருதி.

பரிதி:— அருவினை, ஞாலம்கருதி, பகல்வெல்லும், எய்தற்கரிய, பொள்ளென, ஊக்கம், செறுநரை, கொக்கொக்க, பருவத்தோடு, காலம்கருதி.

காளிங்:— அருவினை, பருவத்தோடு, எய்தற்கரிய, காலம்கருதி, ஊக்கம், செறுநரை, ஞாலம்கருதி, பொள்ளென, கொக்கொக்க, பகல்வெல்லும்.

50. இடனறிதல்.

தொகுப்புரை:

[அரசர்கள் முற்றுகையிடுதற்குரிய இடம்பெற்றபின் அல்லது எப்படிப்பட்ட வினையையும் தொடங்கக்கூடாது. பகைவரைச் சிறியர் என்று இகழக்கூடாது. வலிமையும் வேகமும் இருந்தாலும் கோட்டைகள் பல நன்மைகளை விளைவிக்கும். இடந் தெரிந்து தற்காப்போடு வினைசெய்வார்களாயின் வலிமையில்லாதவர்களும் வலிமையுடையவர்களை வெல்வார்கள். வெல்லலாம் என்று மனக்கோட்டைகட்டியிருந்தபகைவர்களும் எண்ணத்தை இழப்பார்கள். நீரில் இருந்தால் முதலை எல்லாவற்றையும் வெல்லும். கரையேறினால் முதலையை எல்லாம் வெல்லும். தேர் கடலில் ஓடாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓடாது. முழுதும் ஆராய்ந்து இடங்கண்டு செய்தால் வெல்வதற்குத் தன்வலியொன்றே போதுமானது. பெரும்படையிருப்பினும் சிறு படையுடைய பகைவனிடத்தில் அகப்பட்டுக்கொண்டால் தனது ஊக்கம் அழியும். பகைவர்க்கு அரணும் ஆற்றலும் இல்லையானாலும் அவர்களது இடத்தில் அவர்களை வெல்லுதல் முடியாது. யார்க்கும் அடங்காத வீரர்களைக் கொம்பில் குத்தி ஏந்தி வருகின்ற ஆண்யானையும் சேற்றில் அகப்பட்டுக்கொள்ளுமானால் சிறு நரியும் கொன்றுவிடும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது வலியும் காலமும் அறிந்து பகைமேற் செல்வான் தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினை அறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— இடனறிதலாவது வினைசெய்யும் இடம் அறிதல். காலம் அறிந்தாலும் இடனறிந்து வினைசெய்ய வேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— இடனறிதலாவது இடனறிய வேணும் எ - மு.

491. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது. (க)

உரைப்பகுதி :

பரிமே:— முற்றும் இடம் கண்டபின் அல்லது - பகைவரை முற்றுதற்காவதோரிடம் பெற்றபின் அல்லது, எவ்வினையும் தொடங்கற்க - அவர்மாட்டு யாதொரு வினையையும் தொடங்காதொழிக, எள்ளற்க - அவரைச் சிறியரென்று இகழாது ஒழிக.

முற்றுதல் - வளைத்தல். அதற்காமிடமாவது வாயில்களானும் நுழைகளானும் அவர் புகலொடு போக்கொழியும்வகை அரணினைச் சூழ்ந்து ஒன்றற்கு ஒன்று துணையாய்த் தம்முள் நலிவிலாத பலபடையிருப்பிற்கும், மதிலும் அகழும் முதலிய அரண்செய்யப்பட்ட அரசிருப்பிற்கும் ஏற்ற நிலக்கிடக்கையும் நீரும் உடையது. அது பெற்றால் இரண்டும் செய்க என்பதாம்.

மணக்:— முடியுமிடங் கண்டாலல்லது, யாதொரு வினையும் தொடங்காது ஒழிக; எளிது என்று இகழாது ஒழிக எ - று.

இஃது இடமறிதல் வேண்டுமென்பது கூறிற்று.

பப்:— பகைவர் இடம் சிறிது என்று இகழலாகாது என்பது கூறிற்று.

பரிதி:— யாதொரு காரியமும் எடுத்துக்கொள்ளக் கடவானல்லன்; எடுத்துக்கொண்டால் காரியம் நிறைவேறுமட்டும் சோரவிடக்கடவானல்லன் எ - று.

காளிங்:— உலகத்து மன்னர்முதலாக மாந்தர் யாவரும் அவையிற்றுக்கு இயைந்த இடம் கண்டபின் அல்லது போர்த்தொழில் முதலாய எல்லாத்தொழிலினும் யாதானும் ஒன்று தொடங்குவது செய்யற்க: மற்று இது நமக்கு எளிது எனக் கொண்டு யாவையும் இகழ்வது செய்யற்க; மற்று அதனால் எவ்வினையும் இடம் குறிக்கொண்டே இயற்றுக எ - று.

இனிப் பெரியாரைத் துணைக்கோடல் தொடங்கி மற்றுவலியறிதல், காலமறிதல், இடனறிதல் காறும் எஞ்சாமல் தெரிந்து பின் ஒன்றினைத் தெரிதலே கடன் என்பதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலே அதிகாரம்.

ஒப்புமைப்பகுதி :

"வெள்ளம்போல் தானை வியந்து விரவாரை
எள்ளி உணர்தல் இயல்பன்று." —பு. வெ. 166.

"வாயில் தூழில் வழக்கமற மதிலை வளைத்தொன் றற்கொன்று
மேய துணையாய்ப் பலபடையும் மெலிவற் றிருப்ப மதில்அகழி
ஏய இயற்றி அரசிருக்கல் ஏற்ற கிடக்கை நிலத்தோடு
பாய புனலும் உடையதுவே பகையை அழிக்கும் இடனாகும்."
—விநா. அரசி. 69.

"இடங் கண்டால் மடத்தைப் பிடிக்கலாம்." —பழ.

"சந்து விட்டால் வந்து விட்டேன்." —ஷை

குறிப்பு:

எள்ளற்க என்பதற்குச் செயப்படுபொருளாகப் பகைவரை என வருவித்துக் கொள்க. அன்றி 'எவ்வினையும்' என்பதை இடைநிலைத்தீபகமாகக்கொண்டு எவ்வினையும் இதாடங்கற்க; எவ்வினையும் எள்ளற்க என இயைக்க; வினையை எள்ளுதலாவது எமக்கு இப்போர் எம்மாத்திரம் என்று இகழுதல்.
—தொகுப்பாசிரியர்.

492. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் - மாறுபாட்டோடு கூடிய வலியினை உடையார்க்கும், அரண் சேர்ந்து ஆம் ஆக்கம் பலவும் தரும் - அரணைச்சேர்ந்தாகின்ற ஆக்கம் பல பயன்களையும் கொடுக்கும்.

மாறுபாடாவது ஞாலம் பொது எனப் பொறா அரசர் மனத்தின் கண் நிகழ்வதாகலானும், வலியுடைமை கூறிய அதனானும், இது பகை மேற்சென்ற அரசர்மேற்றாயிற்று. உம்மை சிறப்பும்மை. அரண் சேராது ஆம் ஆக்கமும் உண்மையின், ஈண்டு ஆக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கம் என்றது அதற்கு ஏதுவாய முற்றினை. அது கொடுக்கும் பயன்களாவன பகைவரால் தமக்கு நலிவின்மையும், தாம் நிலைபெற்று நின்று அவரை நலிதலும் முதலாயின.

மணக்:— பகை கொள்ளும் வலியுடையவர்க்கும் அரணைச் சேர்ந்தாகின்ற ஆக்கம் பலபயனையும் தரும் எ - று.

இது பகைவர் இடம் அறிதலேயன்றித் தமக்கு அமைந்த இடமும் அறிய வேண்டும் என்றது.

பரிதி:— சதுரங்க பலமான தன்படையும் உதவிப்படைக் குறைச்சலும் உண்டாகிலும் இடம் நல்லதாகில் தனக்குக் கைசென்ற இடமானால் *ஆக்கமுண்டாகும் எ - று.

காளிங்:— மாறுபாட்டோடும் பயின்ற வலியினையுடைய மன்னவராயினும், மற்று அவர்க்குத் தாம்பயின்ற நிலமாகிய அரணினையுடைய நிலத்தைப் பொருந்தியதனால் உளதாம் ஆக்கமானது வென்றி முதலிய நன்மைகளையும் கொடுக்கும் எ - று.

முரண் என்பது மாறுபாடு. மொய்ம்பு என்பது வலி.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— முரண் - மாறுபாடு. முரணொடு சேர்ந்தாரை, அரணைச் சேர்ந்து என மூன்றும் இரண்டுமாய உருபு விரிந்தது காண்க.

குறிப்பு:

முரண் - பகைமை. இது ஞாலம் பொது என்னும் சொல் பொருமையால் விளைவது. இதனாலே அரசன் வலிமை வெளிப்படுதலின் முரண்சேர்ந்த மொய்ம்பு என ஒன்றற்கொன்றுள்ள இயைபு விளக்கப்பெற்றது.

—தொகுப்பாசிரியர்.

493. ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின். (ங)

உரைப்பகுதி :

பரிமே:— ஆற்றாரும் ஆற்றி அடுப-வலியரல்லாதாரும் வலியராய் வெல்வர், இடன் அறிந்து போற்றிப் போற்றார்கண் செயின் - அதற்கு ஏற்ற இடத்தினை அறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாட்டு வினை செய்வராயின்.

---

* "வெல்லும்" எனவும் பாடம்.

வினை என்பதூஉம், தம்மை என்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. காத்தல் - பகைவரான் நலிவு வாராமல் அரணானும் படையானும் காத்தல். இவ்வாற்றான் வினை செய்வராயின் மேற் சொல்லிய வலியின்றியும் வெல்வர் என்பதாம்.

மணக்:— வலியில்லாதாரும் வலியுடையராய் வெல்வர்; பகைவர் மாட்டு வினைசெய்யும் இடமறிந்து தம்மைக் காத்து வினை செய்வாராயின் எ - று.

பரிப்:— இது வலியிலாதாரும் வெல்வர் என்றது.

பரிதி:— சேவகமில்லாதாரும் சேவகராவர்; இடமறிந்து சத்துருக்கள் எண்ணமறிந்து செய்யவல்லராயின் எ - று.

காளிங்:— பெரும்படை வேந்தரோடு போர் ஆற்றாத சில படையாளரும் அவரோடு போர் ஆற்றிப் பொருகளத்து அடுவர்; அதுவும் எங்ஙனம் எனின், தமக்குச் சென்று நிலையுள்ள இடத்தை அறிந்து மற்று அப்பகைவரிடத்து உற்றுலும் பெரிதும் குறிக்கொண்டு வினை செய்ய வல்லாராயின் எ - று.

ஆற்றாரும் என்பது வருபகை வேந்தனோடு போர் ஆற்றாதவரும் என்றது.

ஒப்புமைப்பகுதி:

"மாற்றானுக்கு இடம் கொடேல்." —ஆத்தி. 89.

முதுமொழிவெண்பாக்கள்:

"காட்டு முயலும் கதக்கரியைக் கொல்லுமால்
தோட்டலர்நீர்க் கச்சியினுள் சோமேசா - நாட்டியிடின்."

—சோமேசர். 50.

குறிப்பு:

'மேற்சொல்லிய வலி' என்றது முரண்சேர்ந்த மொய்ம்பினை.

—தொகுப்பாசிரியர்.

494. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் (௪)

உரைப்பகுதி :

பரிமே:— இடன் அறிந்து துன்னியார் - தாம் வினைசெய்தற்கு ஏற்ற இடத்தினை அறிந்து சென்ற அரசர், துன்னிச் செயின் - அரணைப் பொருந்திநின்று அதனைச் செய்வாராயின், எண்ணியார் எண்ணம் இழப்பர்- அவரை வெல்வதாக எண்ணி இருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை இழப்பர்.

அரண் என்பது அவாய்நிலையான் வந்தது. எண்ணம் என்றது எண்ணப்பட்ட தம் வெற்றியை. அதனை இழப்பர் என்றார், அவர் வினை செய்யாமல் தம்மைக் காத்தலையின். இதனால் அவர்பகைவர் தோற்பர் என்பதாயிற்று. இவை நான்கு பாட்டானும் பகைவர் அரணின் புறத் திருப்பார் அதற்காமிடம் அறிதல் கூறப்பட்டது.

மணக்:— தன்னைக் கெடுத்தற்கு எண்ணினவர் தங்களெண்ணம் இழப்பர்; வினைசெய்யும் இடமறிந்து நட்டோரானவர் மனம் பொருந்திச் செய்வாராயின் எ - று.

இஃது இடம் அறிந்தாலும் செய்வோர் அமைதியும் வேண்டும் என்றது.

பரிப்:— இனி அமாத்தியர் இலக்கணம் கூறுகின்றார் ஆகலின் இது பின் கூறப்பட்டது.

பரிதி:— எண்ணிய எண்ணம் இழப்பர் மாற்றார் இடம் அறிந்து காரியம் கொள்ளவல்லாராயின் எ - று.

காலிங்.— போர்வினை செய்தற்கு எண்ணிவந்த பகைவரானவர் எண்ணமும் பழுதுபடுவர்: எவ்விடத்து எனின், நமக்கு இடமாவது இது என்று அறிந்து மற்று அதனை விடாது பற்றி நின்றவர்கள் தாமும் அவ்வாறே எண்ணிக்கொண்டு வினைசெய்வாராயின் மற்று அப்பகைவர்க்கு எண்ணமே உள்ளது: இவர்க்கு எண்ணமும் இடமும் இரண்டும் உண்டு எ - று.

இடன் அறிந்து துன்னியார் என்பது இது நமக்கு இடம் என்று அறிந்து பொருந்தி வாழ்வர் என்றது. துன்னி என்பது மற்று அவ்விடத்துக் கூடிநின்று என்றது.

முதுமொழிவெண்பாக்கள்:

"வயத்திரதம் ஏறி வரும்அபிமன் தன்னைச்
செயத்திரதன் கொன்றான் சிவசிவா - முயற்சியுடன்." —சிவசிவ. 50.

"சார்ந்துபறை கீறிச் சராசந்தன் தன்னுடலை
ஈர்ந்துவென்றான் வீமன் இரங்கேசா - தேர்ந்தக்கால்." —இரங். 50.

குறிப்பு:

எண்ணியார் - வெல்வதற்கு ஏற்ற சூழ்ச்சியினைச் செய்தபகைவர். துன்னியார் துன்னி என்பனவற்றிற்கு அறிந்து அரணைப் பொருந்திநின்று எனப் பொருள் காண்பதில், துன்னுதலிரண்டும் செல்லுதல் அடைதல் பொருளிலேயே இருப்பதாலும், துன்னியார் எனவே அதனைக் காரணப்பெயராகப் பொருந்தியவர் என அறுவதித்தலால் ஒருபயனின்மையானும் முற்றுகையிட இடந்தேடி யடைந்த அரசர்கள் நெருங்கியடர்த்தால் எனவும் கொள்ளலாம்.

—தொகுப்பாசிரியர்.

495. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— முதலை நெடும்புனலுள் (பிற) வெல்லும், முதலை ஆழமுடைய நீரின்கண் ஆயின் பிறவற்றையெல்லாம் தாம் வெல்லா நிற்கும், புனலின் நீங்கின் அதனைப் பிற அடும் - அப்புனலின் நீங்குமாயின் அதனைப் பிறவெல்லாம் வெல்லாநிற்கும்.

எனவே, எல்லாரும் தம்நிலத்து வலியர் என்பது கூறப்பட்டது. பிற என்பது முன்னும் கூட்டப்பட்டது. நிலைப்படா நீரின்கண் பிற எல்லாம் நிற்றலாற்றாமையின் அவையெல்லாம் முதலைக்கு எளியவாம், அவை இயங்குதற்குரிய நிலத்தின்கண் அஃது இயங்கலாற்றாமையின் அஃது அவற்றிற்கெல்லாம் எளிதாம் என்றது, மேற்செல்லும் அரசர் பகைவர் நிற்றலாற்றா இடன் அறிந்து செல்வராயின் அவர் தமக்கு எளியராவரன்றித் தாம் நிற்கலாற்றா இடத்துச் செல்வராயின் அவர்க்கு எளியராவர் என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். அவரை அவர் நிற்றலாற்றா இடத்துச் சென்று வெல்க என்பதாம்.

மணக்:— நெடிய நீரின்கண் பலவற்றையும் முதலை வெல்லும்; அஃது அந்நீரினின்று நீங்குமாயின், அதனைப் பிறவெல்லாம் வெல்லும் எ - று.

இது மேலதற்குக் காரணம் கூறிற்று. இவை ஐந்தும் இடமறிய வேண்டும் என்பது கூறின.

பரிதி:— தனக்குப் பலமான நீரிலே முதலைவெல்லும்; அல்லாத நிலத்திலே முதலை தோற்பதுபோலத் தனக்கு வெற்றியான இடம் அறிந்து கொள்க எ - று.

காளிங்:— நெடிய ஆழமுடைய புனல், தனக்குச் சென்ற நிலம் ஆகலின், மற்று அவ்விடத்து யானை புலி மனிதர் மற்றும் அனைத்துப் பகையும் வெல்லும் முதலையானது; மற்று அது தான் பயின்ற நிலம் அல்லாத கரைமீது படின், எறும்பும் அதனை அடும்; ஆகலான், அரசர் முதலாக அனைவர்க்கும் இடம் அறிதல் பெரிதுமன் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— "நெடும்புனல்" "கடலோடா" (495, 496) என்பன மேலையலங்காரம். நெடுந்தேர் - நெடியதேர். (496) நெடும்புனல் - தாழ்ந்த புனல்,(495) நெடுங்கடல் - ஆழம் உடையகடல். (17)

மேற்கோள்பகுதி :

தெய்வச்:— சொல்லெச்சத்திற்கு மேற்கோள் காட்டி, தம்து நிலத்தில் எளியவர் நின்றாலும் பிறாது நிலத்தில் வலியாரும் எளியரர்வர் என்னும் பொருண்மையை இச்சொல்தானே உணர்த்தலின் சொல்லெச்ச மாயிற்று என்பர். (தொல். சொல். 433).

காரி:— (475ம் குறள் பார்க்க.)

ஒப்புமைப்பகுதி:

"வான்சேரின் புள்ளஞ்சா வல்லரில் சுற்றிய
கான்சேரின் மானின் கணம்அஞ்சா - வான்சேர்
சிகர வரைசேரின் தேன்அஞ்சா அஞ்சா
மிகுநீர்க் கயஞ்சேரின் மீன்."

—பா - வெ.

" உளையச் சிலைக்கும் உழுவையும் தான்தன்
அளையிற்றீர்ந் தூரடைந்த தாக - இளிவந்(து)
உயிரிழப்ப தென்றால் உறுமிடநீத் தென்கொல்
செயிருழக்கும் தீங்கு செயல்." —ஷை

"மோட்டும் முதுநீர் முதலைக்கு வலிய துண்டேல்
காட்டுள் நமக்கு வலியாரையும் காண்டும்." —சீவக. 446.

" தன் ஊருக்கு ஆனை மன் ஊருக்குப் பூனை." —பழ.

"முதலை தன் இடத்தில் மலை ஒத்த யானையையும் இழுத்துச் செல்லும்."
—ஷை.

முதுமொழிவெண்பாக்கள்:

" ஓரிடத்தில் ஆற்றல் உடையார் அயலொருவர்
சேரிடத்தில் ஆற்றார் தினகரா - வாரி." —தினகர. 53.

குறிப்பு:

'தன்னூருக்குப் புலி அசலூருக்கு நரி' என்பவாகலின் முதலை நீருள் வெல்லும் என்றார். —தொகுப்பாசிரியர்.

496. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. (சு)

உரைப்பகுதி:

பரிமே:— கால் வல் நெடுந்தேர் கடல் ஓடா - நிலத்தின்கண் ஓடும் கால் வலிய நெடிய தேர்கள் கடலின்கண் ஓடமாட்டா, கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா - இனி அக்கடலின்கண் ஓடும் நாவாய்கள்தாமும் நிலத்தின் கண் ஓடமாட்டா.

கடலோடா என்ற மறுதலையடையான் நிலத்து ஓடும் என்பது வருவிக்கப்பட்டது. கால்வல் நெடுந்தேர் என்பது ஓடுதற்கேற்ற காலும் பெருமையும் உடையவாயினும் என்பதுபட நின்றது. மேற்சென்றார் பகைவரிடங்களை அறிந்து அவற்றிற்கு ஏற்ற கருவிகளான் வினைசெய்க என்பது தோன்றநின்றமையின், இதுவும் மேலை அலங்காரமாயிற்று.

மணக்:— கால் வலிய நெடுந்தேர் கடலின்கண் ஓடாது; கடலின் கண் ஓடும் நாவாயும் நிலத்தின்கண் ஓடாது எ - று.

இஃது இடத்திற்காங் கருவி பண்ணவேண்டும் என்றது.

பரிதி:— கடலோடும் மரக்கலம் நிலத்தில் ஓடாது; நிலத்திலோடும் தேர் கடலில் ஓடாது; அதுபோல இடனறியவேணும் எ - று.

காளிங்:— நிலத்து ஓடுதற்கு உரியனவாகிய கால் உரமுடைய பெருந்தேரானவை தமக்கு நிலமல்லாத கடலுள் ஓடமாட்டா; மற்று அக்கடல்மீது ஓடும் கடுஞ்செலவு உடைய நாவாய்களும் தமக்கு இட மல்லாத தரைமீது ஓடவும் மாட்டா: எனவே அரசர்முதலாக அனைவர்க்கும் தத்தம் இடம் அறிந்து இயற்றுதலே உறுதி உடைத்து எ - று.

மேற்கோள்பகுதி :

மயிலை:— 'கடல்ஓடா......நிலத்து; இது 'இவ்விடம் இவர்க்குச் செல்லும் இவ்விடம் இவர்க்குச் செல்லாது என அவரவர்க்கு ஏற்ற இடன் அறிந்து கருமம் கொள்க எனக் குறித்த பொருள் கொண்டு முடிதலின் குறிப்பெச்சம்' என்பர். (நன். 359.)

சுவாமி:— இது சொல்லினுள் வெளிப்படை; புறப்பொருளில் குறிப்பு என்பர். (இ. கொ. 6.)

பெருந்:— பிறர் கோள் கூறலில் காண்டலுக்கு மேற்கோள். (வீர. 272.)

காரி:— (475 பார்க்க.)

ஒப்புமைப்பகுதி:

"பனிப் பெருக்கில் கப்பல் ஓடுமா." —பழ.

497. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின்-பகையிடத்து வினைசெய்யுந் திறங்களையெல்லாம் ஒழியாதெண்ணி அவற்றை அரசர் இடத்தொடு பொருந்தச் செய்வராயின்; அஞ்சாமை அல்லால் துணை வேண்டா - அச்செயற்குத் தம் திண்மையல்லது பிறிதொரு துணை வேண்டுவது இல்லை.

திண்ணியராய் நின்று செய்து முடித்தலே வேண்டுவதல்லது துணைவேண்டா என்றார், அவ்வினை தவறுதற்கு ஏது இன்மையின். இவை மூன்றுபாட்டானும் வினை செய்தற்காம் இடனறிதல் கூறப்பட்டது.

மணக்:— தப்பாமல் எண்ணி இடத்தோடு பொருந்த வினை செய்ய வல்லராயின், அஞ்சாமையே வேண்டுவ தல்லாமல், வேறு துணையாவாரைத் தேட வேண்டுவது இல்லை எ - று.

இஃது இடனறிந்தால், துணையின்றியும் வெல்வர் என்றது.

பரிதி:— இடமறிந்து காரியங்கொள்ளவல்லவனுகில் அவனுக்குத் துணைவேண்டாம் திடபுத்தியே அமையும் எ - று.

காளிங்:—, இவ்வாறு எண்ணவேண்டும் காரியம் அனைத்தும் ஒன்று ஒழியாமல் எண்ணிக்கொண்டு, பின் தனது இடத்துட்படுத்தி வினைசெய்யின், தம் வீரப்பாடல்லது வேறு படைத்துணை இவர்க்கு வேண்டாம் எனவே, தமது இடமும் தறுகண்மையும் எண்ணமுமே சாலும் எதிர்த்தோரை வெல்லுதற்கு எ - று.

எஞ்சாமை என்பது ஒழியாமை.

ஒப்புமைப்பகுதி:

" தன்னிலத்து முயல் தந்தியினும் வலிது." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"சென்னிஅனீ கத்தைமோ திச்சிதைத்த தோர்கோழி
முன்னுறையூர்க் கானின் முருகேசா - மன்னுலகில்." —முருகேசர். 50.

குறிப்பு:

இடங்கண்ட பிறகும் வினைசெய்யும் வேந்தர்க்கு அஞ்சாமையாகியதுணை வேண்டப்படுவது என்பதாம். வினைசெய்திறங்களில் ஒருசிறிதை எண்ணுதொழியினும் பகைவர் அதனுல் கேடுசூழ்வர் ஆதலின் எஞ்சாமை எண்ணி என்றார்.

—தொகுப்பாசிரியர்.

498. சிறுபடையான் செல்லிடஞ் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— உறுபடையான் - பெரும்படையுடைய அரசன், சிறு படையான் செல் இடம் சேரின் - ஏனைச்சிறுபடையுடையானை அழித்தல் கருதி அவன் புகலிச் சென்று சாருமாயின், ஊக்கம் அழிந்துவிடும் - அவனால் தன் பெருமை அழியும்.

செல்லிடம் - அவனுக்குச் செல்லும் இடம். அழிந்துவிடும் என்பது எழுந்திருக்கும் என்றாற்போல ஒருசொல். ஊக்கத்தினழிவு உடையான் மேல் ஏற்றப்பட்டது. தன்படைப்பெருமை நோக்கி இடம் நோக்காது செல்வானாயின், அஃது அப்படைக்கு ஒருங்கு சென்று வினைசெயலாகாமையானும் பயிற்சியின்மையானும் அப்பெருமையால் பயனின்றித் தான் அழிந்துவிடும் என்பதாம்.

மணக்:— சிறுபடையை யுடையவனுக்கு இயலுமிடத்தே பெரும் படையை யுடையவன் பொருந்துவனாயின், மன மிகுதி கெடும் எ - று.

இஃது இகழ்ந்து செல்லின், வெற்றியில்லையாம் என்றது.

பரிதி:— அற்பப்படை யுடையவனாகிலும் அவனுக்குக் கை சென்றவிடத்திலே மிகுத்தபடை யுடையவன் சென்றாலும் கெடுவன் எ - று.

காளிங்:— உலகத்து ஒரு வேந்தன் சிறுபடையாளனாயினும் மற்றை மிகுபடையாட்சி வேந்தனானவன் மற்று அவனது செலவு பயின்ற இடத்தைத் தான் மதியாது சென்று கிட்டுமாயின் தனது வலி அழிந்து கெட்டுவிடும் எ - று.

ஒப்புமைப்பகுதி :

"எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டவர் அடுதலும் ஒல்லான் ஆண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூ ராங்கண்
தெண்கிணை கறங்கச் சென்றாண்டு அட்டனனே." —புறம். 78 : 7-12.

" மறப்புலி உடலின் மான்கணம் உளவோ
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்." —புறம். 90 : 1, 3.

" உறுபடை மன்னர் தம்மை உடற்றிஒன் றூனு மின்றிச்
சிறுபடை யவர்கள் வென்று செகுப்பவோ என்ன வேண்டா
செறிஎயிற் றுளி வேழப் பேரினஞ் செகுத்த தன்றே
உறுபுலி ஒன்று தானே கலையினம் உடற்றிற் றன்றே." சீவக. 814.

" இலவஞ் சோலையில் இறைமகன் போதர
ஆளி கண்ட ஆனை இனம்போல்
வாளி வல்வில் வயவர் நீங்க." —பெருங். 1 : 56 : 43 - 45.

" பாயும் புலிமுன்னர் புல்வாய்க்குப் போக்கில்." —பழ. நா.

" ஊக்க மிலனு யினும்இடத்தோ டுற்ற வினைசெய் குவனுயின்
ஊக்க முடையார்க் கிடனின்றி யொழியும் ஊக்கம் இலாதவனுக்(கு)
ஊக்க முடையா னயிடினும் உற்ற படையும் பலவேனும்
ஊக்கம் அழிவன் இடத்தோடு முற்று வினைசெய் யாவிடினே."
—விநா. அரசி. 70.

" நாயும் தன் நிலத்துக்கு ராசா." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

" இறையருள் தென்னனிடத் திந்திரன்வந் தன்று
வளையால் எறிபட்ட வாற்றால் - இளையாச்." —முதுமொழி. 83.

" கல்லுவிட நாகம் கருடா சுகம்என்னும்
செல்லுமிடஞ் சேர்ந்தே திருமலையா - வெல்லும்." —திருமலை.

499. சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோ டொட்டல் அரிது. (க)

உரைப்பகுதி :

பரிமே:— சிறை நலனும் சீரும் இலர் எனினும் - அரணழித்தற்கு அருமையும் பெருமையாகிய ஆற்றலும் உடையரல்லராயினும், மாந்தர் உறை நிலத்தோடு ஒட்டல் அரிது - வினைக்குரிய மாந்தரை அவர் உறைநின்ற நிலத்தின்கண் சென்று தாக்குதல் அரிது.

நிலத்தோடு என்பது வேற்றுமைமயக்கம். ஆண்மையுடையாரைச் சிறுமை நோக்கி இருப்பின்கண் சென்று தாக்கின் அவர் அதுவிட்டுப் போதல் துணிவினரன்றிச் சாதல் துணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படை உடையும் என்பதாம்.

மணக்:— அரண் மிகுதியும் பெருமையும் இலராயினும், மாந்தர் உறைநிலத்தின்கண் பொருந்துதல் அரிது எ - று.

இது மாந்தர் உறைவிடத்தின்கண் செல்லுங்கால், அறிந்து செல்ல வேண்டும் என்றது.

பரிதி:— அரணும் படையும் இல்லாத இடமாகிலும் *விசாரவான் இருந்த இடம் கொள்ளப்படாது எ - று.

காளிங்:— மதில் சிறை முதலாகிய நால்வகை வாய்ப்பும், யானை முதலிய படை வாய்ப்பும் இலர் ஆயினும் மற்று அம்மன்னவர் முதலாக மறத்தொழிலாளர் முன் பயின்ற நிலத்துப் பகை வேந்தர்க்குச் சென்று கிட்டுதல் அரிது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"இருக்கும் வளையில் எலியையும் கொல்லமுடியாது." —பழ.

500. காலாழ் களரின் நரியடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு. (௧0)

உரைப்பகுதி:

பரிமே:— கண் அஞ்சா வேலாள் முகத்த களிறு - பாகர்க்கு அடங்காவுமாய் வேலாட்களைக்கோத்த கோட்டவுமாய களிறுகளை, கால் ஆழ் களரின் நரி அடும் - அவை காலாழும் இயல்பிற்றாய சேற்றுநிலத்துப் பட்டுழி நரி கொல்லும்.

முகம் ஆகுபெயர். ஆண்மையும் பெருமையும் உடையாரும் தமக்கு ஏலாநிலத்துச் செல்லின் அவற்றாற் பயனின்றி மிகவும் எளியரால் அழிவர் என்பது தோன்ற நின்றமையின், இதுவும் அவ்வலங்காரம். வேலாழ்

*'சுத்தவீரன்' எனவும் பாடம்.

முகத்த என்று பாடம் ஓதுவாரும் உளர்*; வேற்படை குளித்த முகத்த வாயின் அதுவும் நரியடுதற்கு ஏதுவாய் முடிதலின், அது பாடம் அன்மை அறிக. இவை மூன்றுபாட்டானும் பகைவரைச் சார்தலாகா இடனும் சார்ந்துழிப்படும் இழுக்கும் கூறப்பட்டன.

மணக்:— கண்ணஞ்சாத வேலழுத்தப்பட்ட முகத்தினையுடைய களிற்றைக் கால் விழப்பட்ட களரின்கண் நரி கொல்லவற்றும் எ - று.

பரிதி:— நரிவெல்லுமாப்போல சத்துருவை இடமறிந்து வெல்க எ - று.

காளிங்:— தன் சினம் தணியாத தறுகண்மை பெரிதும் உடைத்தாய் மேலவர் எறியவும் கீழவர் குத்தவும் பிறவும் ஆகிய வேல் அழுந்திய வடு அறாத முகத்தை உடைய கடுங்களிறானது, தனது கால் உள்ளழுந்தும் களரிடம் புக்குக் கொடுந்துயர் உறுமிடத்து, நரி குறுகி மத்தகத்தைக் கவ்விப் பறித்து நுகர்ந்து அதனைப் படுவினை செய்யும்; அதனால் உறுபகை அஞ்சாத் தறுகண் மன்னவராயினும் இடம் அறிய வேண்டும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கண்ணஞ்சாமை - பாகர்க்கு அடங்காமை. கண்ணஞ் சாவுமாய், முகத்தவுமாய என்று உரைத்ததனால், ஆகாரவீறு அகர வீற்றுப் பலவறிசொல்லாயின.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:—சொல்லெச்சத்திற்கு மேற்கோள். (தொல். சொல். 443)

பேரா:— இறுதிக்குற்றுகரம் நிரைபசையானதற்கு மேற்கோள். (தொல். பொருள். 321.)

நச்:— இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக்கண்ணும் அஞ்சார்; வீரத்தையே கருதாமல் காலமும் இடமும் அறிந்துசெய்க என்றார்;........'காலாழ்களரில் நரியடும்' என்று தேவரும் கூறினார். (சீவக. 1928.)

* இது மணக்குடவர்; காளிங்கர் கொண்டபாடம்.

சங்கர:— செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்திற்கு 'வேலாள் முகத்தகளிறு' என்பது மேற்கோள். (நன். 340.)

ஒப்புமைப்பகுதி:

" பாலார் மொழிஉமை பங்காளர் வெங்கையம் பாவைதந்த
மாலாழ் தரும்எனை வெவ்வுரை யானண்ப வாட்டுகின்றாய்
காலாழ் களரின் அமிழ்ந்தவெங் கோட்டுக் களிற்றைஒரு
வேலா லெறிப்வர் போலே இதுஎன் விதிவசமே." —வெங்கைக். 48.

" போன மாமுனி தன்தபோ வனத்தொரு புடையிடை நெடுங்கள்ளிக்
கான மானது புகுந்துபா ரிடங்களும் கழுகினங் களும்துன்றி
யானை யோடிட நரிதூரந் திடுநிலத் தெரிவெயில் கழைமுத்தம்
வானெ லாநெடும் தாரகை போலெழும் மால்வரைப் புறம்சார்ந்தான்"
—வில்லி - நச்சுப்· 12.

" தன்னி லத்தினில் குறுமுயல் தந்தியின் வலிதென்று
இந்நி லத்தினில் பழமொழி அறிதிநீ யிறைவ
வெந்நி லத்தினும் உனக்கெளி தாயினும் இவர்நந்
நன்னி லத்தினில் வரஅமர் தொடங்குதல் நன்றால்." ஷை நிரை. 50.

குறள்வைப்புமுறை.

பரிமே:— தொடங்கற்க, முரண்சேர்ந்த, ஆற்றுரும், எண்ணியார், நெடும்புனலுள், கடலோடா, அஞ்சாமை, சிறுபடையான், சிறைநலனும், காலாழ்.

மணக்:— தொடங்கற்க, சிறுபடையான், காலாழ், சிறைநலனும், நெடும்புனலுள், அஞ்சாமை, ஆற்றுரும், முரண்சேர்ந்த, கடலோடா, எண்ணியார்.

பரிதி:— சிறுபடையான், முரண்சேர்ந்த, சிறைநலனும், நெடும்புனலுள், காலாழ், கடலோடா, அஞ்சாமை, எண்ணியார், ஆற்றுரும், தொடங்கற்க.

காளிங்:— சிறுபடையான், முரண்சேர்ந்த, சிறைநலனும், ஆற்றுரும், நெடும்புனலுள், அஞ்சாமை, எண்ணியார், கடலோடா, காலாழ், தொடங்கற்க.

51. தெரிந்துதெளிதல்.

தொகுப்புரை:

[அரசன் அமைச்சர் முதலாயினாரைத் தேடி அமைத்துக்கொள்ளும்போது அறம், பொருள், இன்பம், உயிரச்சம் என்ற நான்கிலும் அவன் மன இயல்பு எப்படி இருக்கிறது என்று ஆராய்ந்து அமைத்துக்கொள்வான். நற்குடிப்பிறப்பும், குற்றமே யில்லாத வாழ்வும், பழிக்கு அஞ்சும் பண்பும் உடைய ஒருவனையே அரசன் தெளிந்து கொள்வான். அருமையான நூல்களைப் படித்துக் குற்றமற்றவர்களிடத்தும் அறியாமையே இல்லாதிருப்பது அரிது. ஆதலால், குணம் குற்றங்களை ஆராய்ந்து இவ்விரண்டினுள் மிகுதியாக அவனிடம் காணப்படுவது யாதோ அதனைக்கொண்டு அவனை இத்தகையான் என முடிவு செய்க. பெருமைக்கும் சிறுமைக்கும் உரைகல் அவரவர்கள் செயல்களே. யாருமற்றவர்களைத் தெளிதல்கூடாது. அவர்கள் உலகத் தொடர்பில்லாதவர்கள். பழிக்கும் நாணமாட்டார்கள். அன்புகாரணமாகப் பதவிக் கேற்ற அறிவில்லாதவர்களைத் தேர்ந்தெடுத்தல் எல்லாவகையான அறியாமையையும் அளிக்கும். தன்னோடு ஒரு சிறிதும் தொடர்பில்லாதவனைக் குடிப்பிறப்பு முதலிய வற்றான் ஆராயாது தேர்ந்த அரசனுக்குப் பரம்பரையாகப் பழிதொடரும் யாரையும் ஆராயாமல் தெளிதல் கூடாது. தெளிந்த பிறகு அவரிடம் ஐயப்படாதொழிக. அங்ஙனம் ஆராயாமல் தெளிதலும், தெளிந்து பதவியில் நியமிக்கப்பெற்றவனைப் பற்றி ஐயப்படுதலும் நீங்காத்துன்பத்தை விளைவிக்கும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— *அஃதாவது அமைச்சர் முதலாயினாரைப் பிறப்பு குணம் அறிவு என்பவனவற்றையும் செயலையும் காட்சி கருத்து ஆகமம் என்னும் அளவைகளான் ஆராய்ந்து தெளிதல். வலிமுதன் மூன்றும் அறிந்து பகைமேல் செல்வானுக்குத் தானை வினையுற்றுச் செய்தற் பொருட்டும் அறைபோகாமற்பொருட்டும் இது வேண்டுதலின், அவற்றின் பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *தெரிந்து தெளிதலாவது அமாத்தியரை ஆராய்ந்து தெளிதல். காரியம் தப்பாமலெண்ணி, அதற்காரகாலமும் இடனும் அறிந்தாலும், அதுசெய்து முடிக்கும் அம்மாத்தியரையும் எண்ணிக்கொள்ள வேண்டுதலின் அதன்பின் இது கூறப்பட்டது எ - று.*

பரிதி:— *தெரிந்து தெளிதலாவது யாதொரு காரியமும் பதறாமல் விசாரித்துச் செய்யவேண்டும் எ - று.*

501. அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும். (க)

உரைப்பகுதி :

பரிமே:— அறம் பொருள் இன்பம் உயிரச்சம் - அரசனால் தெளியப்படுவான் ஒருவன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான் வரும் அச்சமும் என்னும், நான்கின் திறம் தெரிந்து தேறப்படும் - உபதை நான்கின் திறத்தான் மன இயல்பு ஆராய்ந்தால் பின்பு தெளியப்படும்.

அவற்றுள், அற உபதையாவது-புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோன் அன்மையின் இவனைப் போக்கி அறனும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம், இதுதான் யாவர்க்கும் இயைந்தது, நின் கருத்து என்னை எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது - சேனைத்தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு, அவரால் இவ்வரசன் இவறன்மாலையனாகலின் இவனைப் போக்கிக் கொடையும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம், இதுதான் யாவர்க்கும் இயைந்தது, நின்கருத்து என்னை எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்ப உபதையாவது - தொன்றுதொட்டு உரிமையொடு பயின்றாள் ஒரு தவமுது மகளைவிட்டு, அவளால் உரிமையுள் இன்னாள் நின்னைக்கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்கவேண்டும் என்று என்னை விடுத்தாள் அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமே யன்றிப் பெரும்பொருளும் கைகூடும் எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்ச உபதையாவது -ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவன் இல்லின்கண் அழைப்பித்து, இவர் அறைபோவான் எண்ணற்குக் கூடினர் என்று தான் காவல் செய்து, ஒருவனால் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச்செய்து நமக்கினிய அரசன் ஒருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கும் இயைந்தது நின்கருத்து என்னை எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினும் திரிபிலனாயவழி எதிர்காலத்தும் திரிபிலன் எனக் கருத்தளவையால்தெளியப்படும் என்பதாம்.[1] இவ்வடநூற்பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதியது அறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சம் எனப் பாடம்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்.[2]

---

[1] இவ்வுபதை நான்கும் சாணக்கிய அர்த்தசாஸ்த்திரம் முதற்பகுதி 10ம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன. [2] இது காளிங்கர் கொண்டபாடம்.

மணக்:— அறமும் பொருளும் இன்பமும் உயிரச்சமும் என்னும் நான்கின் கூறுபாட்டினையும் ஆராய்ந்து, பின்பு ஒருவன் அரசனால் தெளியப்படுவான் எ - று.

முன்பு நான்கு பொருளையும் ஆராயவேண்டும் என்றார்; பின்பு தேறப்படும் என்றார்.

பரிப்:— மேற்கூறிய குற்றமும் குணமும் ஆராய்தலே யன்றி அறத்தை வேண்டியாதல், பொருளை வேண்டியாதல், இன்பத்தை வேண்டியாதல், அச்சம் உளதாம் என்றாதல் அரசன்மாட்டுத் தீமையை நினையாமையை ஆராய்ந்து பின்பு அவரைத் தேறப்படும் என்று கூறப்பட்டது.

பரிதி:— தன்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் நாலு காரியமும் விசாரித்து யாதொரு காரியமும் செய்வான் எ - று.

காளிங்:— மறைமுதலாகிய நூல் யாவற்றினும்* சொன்ன அறம் பொருள் இன்பம் வீடு என வகுத்த நால்வகை யாகலின், அவற்றுள் அறமானது பாவம் அனைத்தையும் பற்று அறுப்பது என்றும், இருமை இன்பம் எய்துவிப்பது என்றும், அவற்றுள் பொருளானது பலவகைத் தொழிலினும் பொருள் வருமேனும் தமக்கு அடுத்த தொழிலினாகிய பொருளே குற்றமற்ற நற்பொருள் என்றும், மற்று இனி இன்பமாவது கற்பின் திருந்திய பொற்புடையாட்டி இல்லறத் துணையும் இயல்புடை மக்களும் இருதலையானும் இயைந்த இன்பம் என்றும், மற்றும் இவற்றுள் உயர்ந்த வீடாவது பேதமையுற்ற பிறப்பு இறப்பு என்னும் வஞ்சப் பெருவலைப்பட்டு மயங்காது நிலைபெற நிற்கும் வீடு இது என்றும், இங்ஙனம் இவை நான்கின் திறம் தெரிந்து, பின் தமக்கு அடுத்தது ஒன்றினைத் தலைத்தேறித் தெளிய அடுக்கும் அரசர்க்கு எ - று.

உயிரெச்சம் என்பது முத்தி என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— உபதை - பரிசோதனை. அது வான்மீக ராமாயணத் துக் கச்சித்சருக்கத்துக் காண்க.

---

* 'பலவற்றானும்' எனவும் பாடம்.

ஒப்புமைப்பகுதி:

“பிறப்பும் குணமும் அறிவும்எனப் பேணும் இவையும் செயல்களையும்
சிறக்கும் காட்சி யொடுகருத்தே செயிரில் நூலென் றிவைதம்மால்
நிறுக்கும் அமைச்சர் முதலோரை நின்றா ராய்ந்து தெளிந்திடுக
அறுக்கும் வினையாற் றுதற்பொருட்டும் அறைபோ காமைப்
பொருட்டுமே.” —விநா. அரசி. 71.

“அறவோர் புரோகி தரைவிடுத்திட் டவரால் இந்த அரசன்தான்
அறவோன் அல்லன் இவற்போக்கி அறனோ டுரிமை யுடையானை
உறவே வைத்தற் கெண்ணினமீ தொத்த தெவர்க்கும் நின்கருத்தென்
உறவோ தெனச்சூ ளுறவோடும் ஓர்ந்தே ஒருவன் தனைத்தெளிக.”
—ஷை 72.

“சேனைத் தலைவ னொடுமவனைச் சேர்ந்தா ரையும்விட் டிவ்வரசன்
ஈனப் பொருளா சையன்இவனை இழுக்கிக் கொடையோ டுரிமையுடை
யானைப் புரத்தற் கெண்ணினமீ தமைந்த தெவர்க்கும் நின்கருத்தென்
ஊனப் படாமை உரைத்திஎனச் சூளோ டுரைப்பித் தேதெளிக.”
—ஷை 73.

“தொன்று தொட்ட உரிமையொடு சூழ்ந்த தவமூ தாட்டியைவிட்டு
ஒன்றும் உரிமை தனிலின்னாள் உனைக்கண் டுயங்கி எனைவிடுத்தாள்
சென்றங் கவளைக் கூடுதியேல் சிறந்த பொருளும் கூடும்நினக்கு
என்று தெளியச் சூளுறவோடு இசைப்பித் திதனா லும்தெளிக.”
—ஷை 74.

“ஒருநிமித்த மேலிட்டே ஓரமைச்சால் அவன் மனையில் ஏனையோரை
ஒருமையுற அழைப்பித்திங் கிவர்பிழைப்பக் குழீஇயினரென் றுறுத்திக்
காவல்
ஒருவனிவ் அரசன்நமை ஒறுக்குமுயன் றான்இவனை ஒறுத்து வேறே
ஒருவனைவைப் பதற்கிசைந்தேம் உன்கருத்தென் னெனச்சூளோ
டுரைப்பித் தோர்க. —ஷை 75,

குறிப்பு:

அறம், பொருள், இன்பம், உயிரச்சம் என்ற முறைவைப்பு, அறம்பற்றி யஞ்சுவர் சிலராக, அதனிற் பலர் பொருளுக்காகவும் அதனிற் பெரும்பாலர் இன்பத்திற்காகவும் அனைவரும் உயிருக்காகவும் அஞ்சியும் இருப்பார்களாதலின் முறையே ஒன்றால் தெளிந்தாரை மற்றொன்றால் தெளிக என்பதாம். உயிருக்கும் அஞ்சாதாரே உண்மையான அமைச்சர் என்பதாம். நந்த அரசியலில் பற்றுக்கொண்ட ராட்சசன்

என்னும் மந்திரி நந்தர்கள்மேல் வைத்துள்ள பற்றுள்ளத்தால் நந்தர் இறந்துபட்ட பிறகு தூக்குமாட்டிக்கொள்ளத் துணிந்த நிலையில் சாணக்கியன் அவன் உண்மையை அறிந்து சந்திரகுப்தமௌரியனுக்கு அமைச்சனாக்கிய வரலாறு காண்க'

—தொகுப்பாசிரியர்.

502. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— குடிப் பிறந்து - உயர்ந்த குடியில் பிறந்து, குற்றத்தின் நீங்கி - குற்றங்களினின்று நீங்கி, வடுப்பரியும் நாண் உடையான் கட்டே தெளிவு - நமக்கு வடுவருங்கொல் என்று அஞ்சாநிற்கும் நாணுடையவன் கண்ணதே அரசனது தெளிவு.

குற்றங்களாவன மேல் அரசனுக்குச் சொல்லிய வகையாறும், மடி மறப்பு பிழைப்பு என்றிவைமுதலாயவுமாம். நாண் - இழிதொழில்களில் மனம் செல்லாமை. இவை பெரும்பான்மையும் தக்கோர்வாய்க் கேட்டலாகிய ஆகம அளவையால் தெரிவன. இந்நான்கும் உடையவனையே தெளிக என்பதாம்.

மணக்:— உயர்குடியில் பிறந்து, காமம் வெகுளி முதலான குற்றத்தினின்று நீங்கி, தனக்குவரும்பழியை அறுக்கவல்ல நாணமுடையவன் கண்ணதே அரசனது தெளிவு எ - று.

இதுவும் உடன்பாடென்று கொள்ளப்படும் என்றவாறு

பரிப்:— இது சுக்கிரர் மதம்.

பரிதி:— இல்லறத்தில் செல்வக்குடியிலே பிறந்து குற்றமில்லாத நாணமுடையானிடத்திலே உலகம் தெளிவு பெறும் எ - று.

காளிங்:— மற்று இவ்வுலகத்துத் தாமும் அருங்குடிப் பிறந்த அரசர் ஆகலான் தம்மொடும் அருந்துதற்கு அமைந்தோனாகி நற்குடிப் பிறந்து மறந்தும் ஒரு குற்றம்வரின் அதனை விரைந்து அறுத்தற்கு அமைந்த மானம் உடையோன் யாவன்? மற்று அவன்கண்ணதே தாம் தெரிந்து தெளியும் தெளிவு எ - று.

ஈண்டுப் பரியும் என்பது அறுக்கும் என்றாயிற்று.

மேற்கோள்பகுதி :

சிவஞான:— ஐந்தாம் வேற்றுமை நீக்கப்பொருள் நிலைத்திணை இயங்குதிணை பண்பாதியின் வரும் எனக் கூறி, ஆதி என்றமையால் 'குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி' என வருமெனவும் கொள்க என்பர். (நன். 299.)

சுவாமி: ௸ (இ. கொ. 38)

ஒப்புமைப்பகுதி :

"நல்ல குடியில் பிறந்தாரும் நவையும் மறப்பும் மடிபிழைப்பென்று
அல்ல லுறுக்கும் இவை முதலாம் அனைத்தும் நீக்கிப் பழிக்கஞ்சி
ஒல்லல் உறுநாள் உடையானே ஓர்ந்து தெளியப் படும்மைந்தா
வல்ல கலைதேர்ந்(து) ஆசற்றார் மாட்டும் வெளிறு மருவிடுமே."

—விநா. அரசி. 76.

"குலம் சொல்லும் குணத்தை." —பழ.

குறிப்பு:

குடிப்பிறப்பு-இயற்கைக் குணத்தையும் பாந்த ஞானத்தையும் விளைவிப்பது. குற்றத்தின்நீங்குதல் இனத் தூய்மையானும் கல்வியறிவானும், பழிக்கஞ்சி நாணுதல் மனத்தூய்மையானும் விளைவன ஆதலின் இவற்றால் தெளிய மேற்கூறிய நற்குணங்கள் அனைத்தும் அமைந்திருக்கும் என்பது அறிந்தானும்.

—தொகுப்பாசிரியர்.

503. அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— அரிய கற்று ஆசு அற்றார் கண்ணும் - கற்றற்கு அரிய நூல்களைக் கற்று மேல் சொல்லிய குற்றங்கள் அற்றார்மாட்டும், தெரியுங்கால் வெளிறு இன்மை அரிது - நுண்ணிதாக ஆராயுமிடத்து வெண்மை இல்லாமை அரிது.

வெண்மை - அறியாமை; அஃது அவர்மாட்டு உளதாவது மனத்தது நிலையாமையான் ஒரோவழியாகலின், தெரியுங்கால் என்றார். காட்சி

அளவையால் தெரிந்தால் அதுவுமில்லாதாரே தெளியப்படுவர் என்பது குறிப்பெச்சம். இவ்வளவைகளான் இக்குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையாரைத் தெளிக என்பது இவை மூன்றுபாட்டானும் கூறப் பட்டது.

மணக்:— கற்றற்கரிய நூல்களைக் கற்றுக் குற்றமற்றார்மாட்டும், ஆராயுங்கால் குற்றமின்மை இல்லை எ - று.

பரிப்:— கல்வியுடையார் உள்ளும் புறம்பும் தூயாரைத் தேறலாம் என்பது துரோணாசாரியர் மதம்: அவ்வளவில் தேறலாகாது என்று இது கூறப்பட்டது.

பழைய:— ஞானநூலைக்கற்றுச் செய்யும் கிரமம் குற்றமற்றாரிடத் திலும் விசாரிக்குமிடத்தில் குற்றம் உண்டாம். ஈது அறிந்து பேணி நடப்பான் எ - று.

பரிதி:— நல்ல கல்வி கற்றார் குற்றமற்றார் விசாரித்தால் குற்றப் படுமாகையால் அவர்களைக் குற்றமுடையாரென்று கைவிடுவானல்லன் எ - று.

காலிங்:— இவ்வுலகத்துப் பலரானும் கற்றற்கு அரியனவாகிய திருந்திய நூல்களை நிறையக் கற்று மற்று அதனோடே இருமைக் குற்றமும் நீங்கினார்மாட்டும் பற்றி ஆராயுங்காலத்துக் குற்றமும் இல்லாமைச் சான்றோர் ஆதல் அரிது; எனவே கீழ்ச்சொல்லிய ஆங்கே தெரிந்து தெளிக என்பது பொருள் ஆயிற்று எ - று.

மேற்கோள்பகுதி :

சிவஞான:— சேனாவரையர் கூற்றினை மறுக்கின்ற இடத்து, 'ஒரோ விடங்களில் மயங்கிக் கூறுவர்; அங்ஙனம் ஒரோவழி மயங்குதல் பற்றி அவரை இகழற்க, நச்சினார்க்கினியர் முதலியோர்போல யாம் பிடித்ததே சாதிப்பேம் என்னும் செருக்கால் யாண்டும் மயங்காமையின், மூக்குணங்களும் மாறிமாறி வருதலின் அதுபற்றி எனைத்துணை நுண்ணறி வாளரும் ஒரோவழி மயங்குதல் இயல்பென்க' எனக் கூறி இக்குறளையும் அடுத்த குறளையும் எடுத்துக் காட்டுவர். (தொல். விருத். பக். 46.)

ஓப்புமைப்பகுதி:

"நற்பால கற்றாரும் நாடாது சொல்லுவரால்
இற்பால ரல்லார் இயல்பின்மை நோவதென்
கற்பால் இலங்கருவி நாடமற் றியாரானும்
சொற்சோரா தாரோ இலர்." —பழ - நா.

"வெளிறிலாக் கேள்வியானை வேறுகொண் டிருந்து சொன்னான்."
—சீவக. 200.

"வெளிறிலாக் கேள்வியான் விருப்பொடு எய்தினான்." —ஷை 1617.

குறிப்பு:

அரியகற்றல் - அரசாட்சிக்குரிய போர்நூல், பொருள்நூல், ஆட்சிநூல் முதலியவற்றைக் கற்றல். ஆசறுதல் - அவற்றின்கண் ஐயம் திரிபு நீங்கி அநுபவத்தில் நலங்காணல்.

—தொகுப்பாசிரியர்.

504. குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— குணம் நாடி - குணம் குற்றங்களுள் ஒன்றே உடையார் உலகத்து இன்மையின் ஒருவன் குணங்களை ஆராய்ந்து, குற்றமும் நாடி - ஏனைக் குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகைநாடி - பின் அவ்விரு பகுதியுள்ளும் மிக்கவற்றை ஆராய்ந்து, மிக்க கொளல் - அவனை அம்மிக்க வற்றானே அறிக.

மிகை உடையவற்றை மிகை என்றார். அவையாவன தலைமை யானும் பன்மையானும் உயர்ந்தன. அவற்றான் அறிதலாவது குணம் மிக்க தாயின் வினைக்கு உரியன் என்றும், குற்றம் மிக்கதாயின் அல்லன் என்றும் அறிதல். குணமே உடையார் உலகத்து அரியராகலின், இவ்வகை யாவரையும் தெளிக என்பது இதனால் கூறப்பட்டது.

மணக்:— ஒருவனுக்குள்ள குணத்தையும் ஆராய்ந்து குற்றத்தை யும் ஆராய்ந்து அவற்றுள் மிக்கதனை யறிந்து, அவற்றுள்ளும் தலைமையா னும் பன்மையானும் மிக்கதனைக் கொள்க எ - று.

பரிப்:— இது கௌடிலியர் மதம். காரியம் பல ஆதலின் அது செய்வாரும் பலர் வேண்டும்; ஆதலால், அவரெல்லோரையும் நற்குணத் தாராகத் தேடுதல் அரிது என்பது இதனால் கூறப்பட்டது.

பரிதி:— ஒருவன் செய்த குற்றமும் நன்மையும் சீர்தூக்கிப் பார்த்துஅதில் நற்குணம் தீயகுணம் மிகுதி யாது என்று ஆராய்ந்து அதில் குணத்தைக்கொள்க எ - று.

காளிங்:— ஒருவரைச் சீர்தூக்கிக் கொள்ளும் இடத்து இவர் மாட்டுக் குணம் எத்துணை உள என்றும், குற்றம் எத்துணை உள என்றும் தெரிந்து, மற்று அதன் பின்னர் அவற்றுள் மிகுதலுடையனவற்றைத் தெரிந்து, இதின் குணம் மிக்கனவாயின் தெளிந்து கொள்க: அல்லது குணம் மிகுதி இல்லையாயின் தெளிய வேண்டா எ- று.

மேற்கோள்பகுதி :

சிவஞான:— (முன் குறள் பார்க்க.)

ஒப்புமைப்பகுதி :

"முத்திலும் சொத்தை உண்டு பவழத்திலும் பழுதுண்டு." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஆரார்க்கு நற்குணமும் அல்லாத துர்க்குணமும்
சேரா திராது தினகரா - நேராய்." —தினகர. 54.

505. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (ஞி)

உரைப்பகுதி :

பரிமே:— பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் கட்டளைக்கல் - பிறப்பு குணம் அறிவு என்பனவற்றான் மக்களெய்தும் பெருமைக்கும் மற்றைச் சிறுமைக்கும் உரைகல்லாவது, தத்தம் கருமமே - தாம் தாம் செய்யுங்கருமமே, பிறிது இல்லை.

இஃது ஏகதேச உருவகம். மக்களது பெருமையும் சிறுமையும் தப்பாமல் அறியலுறுவார்க்குப் பிற கருவிகளும் உளவாயினும், முடிந்த கருவி செயல் என்பது தேற்றேகாரத்தால் பெற்றாம். இதனால் குணங் குற்றங்கள் நாடற்குக் கருவி கூறப்பட்டது.

மணக்:— ஒருவனைப் பெரியனாக்குதற்கும் மற்றைச் சிறியனாக்குதற்கும் வேறு தேடவேண்டா; அவரவர் செய்யவல்ல கருமந்தானே அதற்குத்தக ஆக்கும் படிக்கல்லாம் எ - று.

இஃது ஒருவனை ஒருகாரியத்திலே மூற்படவிட்டு, அவன் செய்ய வல்ல அளவுங் கண்டு, பின்னைப் பெரியனாக்க அமையும் என்றது. இது குற்றங்கூறுமை பலவற்றிற்குமுள்ள வேறுபாடென்று கொள்ளப்படும்.

பரிப்:— நாரதர் மதம். இது குற்றம் கூறுமையால் யாவர்க்கும் உடம்பாடு என்று கொள்ளப்படும்.

பரிதி:— இவர் பெரியவர் இவர் சிறியவர் என்னவேண்டாம்; அவரவர் செய்த தொழிலே சொல்லும் எ - று.

காளிங்:— உலகத்துப் பெரியோரது பெருந்தன்மைக்கும் சிறியோரது சிறுதன்மைக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒருவர் தேறி அறிய வேண்டுங்கால் வேறு ஒன்றும் வேண்டுவது இல்லை: மற்று என்னை எனின், அவர் அவர் செய்யும் செய்தி வேற்றுமைதானே அவரது தகுதி மாற்று அறியும் கருவியாகிய உரைகல்லும் நிறை தூக்கிய கட்டளைக் கல்லும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"தருமம் பற்றிய தக்க வர்க்கெலாம்
கருமம் கட்டளை என்றல் கட்டதோ." —கம்ப. அரசியற். 16.

"பெருமை சிறுமை அளந்துகொளப் பேணும் கருவி தத்தமது
கருமம் அதுபோல் பிறகருவி கழியச் சிறந்த வலஅறிக."
—விநா. அரசி. 78.

"பெருமையும் சிறுமையும் தான்தர வருமே." —பழ.

"தத்தம் கருமமே கட்டளைக் கல்." —ஷை.

முதுமொழிவெண்பாக்கள்:

"இறைவர் நிலை காணார் இருவரென்று கண்டால்
பெருமை சிறுமையினிப் பேசேம் - இறையாம்." —முதுமொழி. 84.

"மூவா யிரமுறையோர் மொய்ப்பத் திருநாளைப்
போவார் சிதம்பரத்துட் போயடைந்தார் - ஓவாய்." —திருத். 20.

" அத்தன் பதத்தியற்றும் ஆழி சலந்தரனைச்
சித்ரவதை செய்யும் சிவசிவா - தத்தம்.'' —சிவசிவ. 51.

506. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி. (சா)

உரைப்பகுதி :

பரிமே:— *அற்றாரைத் தேறுதல் ஓம்புக - சுற்றமில்லாதாரைத் தெளிதலை ஒழிக; அவர் மற்றுப் பற்று இலர் - அவர் உலகத்தோடு தொடர்பிலர், பழி நாணார் - ஆகலான் பழிக்கு அஞ்சார்.*

பற்றிலர் என்பதனால் சுற்றம் என்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன ஒழிதற்கும் புகழ்வன செய்தற்கும் ஏதுவாகிய உலகநடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப் படார் என்பதாம்.

மணக்:— ஒழுக்கமற்றாரைத் தேறுதலைத் தவிர்க; அவர் ஓரிடத்துப் பற்றுடையரும் அல்லர்; பழிக்கும் நாணார் ஆதலான் எ - று.

பரிப்:— அரசனோடு ஒத்த மறைந்த குற்றம் உடையாரைத் தேறலாம்; அவர் தம் குற்றம் மறைக்குமாறு போல அவர் குற்றமும் மறைப்பர் ஆதலான் என்பது மகேச்சுரர் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது.

பரிதி:— பொருளும் கிளையும் கல்வியும் அற்றாரை நம்பாதே; ஏன் என்றால் அவர் பற்றும் இலர்; பழிக்கும் நாணார் எ - று.

காளிங்:— உலகத்துச் சிலரோடு நண்பும் நயமும் அற்று ஒழுகுவாரைக் கண்டால் தாமும் அவரைத் தேறுதலைப் பரிகரிக்க: என்னை எனின் தம்மாட்டு அவர் அந்நிலையர் ஆகலான் பாங்கினால் தம்மொடு பரிவிலர்: மற்று அதுவேயும் அன்றிப் பழி அஞ்சுதலும்* இலர் எ - று.

---

*'பழிச்சுதலும்' எனவும் பாடம்.

ஒப்புமைப்பகுதி:

" சுற்ற மிலரா னவர்தம்மைச் சூழேல் பழிபா வமும் நாணார்
பற்று மிலரா குவர்விடுக பண்பார் தருநற் குணங்களே
முற்று முடையா ரிலர்அதனுன் முனியும் குற்றம் குணமிவற்றைத்
தெற்றென் றுணர்ந்து குணமிகுந்த செம்மை யுடையார் தமைத்தெளிக"
—விநா. அரசி. 77.

" அங்கும் இருப்பான் இங்கும் இருப்பான்
ஆக்கின சோத்துக்குப் பங்கும் இருப்பான்." —பழ.

குறிப்பு:

இல்லாமையால் சுற்றத்தை இழந்தாரும், பற்றுதல் காரணமாகத் துறந்து வந்தாரும் யாதானுமொரு காரணம்பற்றி அரசியலில் நுழைவாராயின் அவர்க்கு இடங்கொடுத்தலாகாது என்பதாம். விஸ்வாமித்திர முனிவனுக்கு இடங்கொடுத்த அரிச்சந்திரன்பட்ட அவதி வந்துறும் என்பது.

—தொகுப்பாசிரியர்.

507. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— காதன்மை கந்தா அறிவு அறியார்த் தேறுதல் - அன்புடைமை பற்றுக்கோடாகத் தமக்கு அறியவேண்டுவன அறியாதாரைத்தெளிதல், பேதைமை எல்லாம் தரும் - அரசனுக்கு எல்லா அறியாமையையும் கொடுக்கும்.

தன்னோடு அவரிடைநின்ற அன்புபற்றி அரசன் அறிவிலார்மேல் வினையை வைப்பின், அஃது அவர் அறிவின்மையால் கெடும்; கெட்டால் அவர்க்கு உளதேயன்றி வினைக்கு உரியாரை அறியாமை, மேல்வினைவறியாமை முதலாக அவனுக்கு அறியாமை பலவும் உளவாம் என்பதாம்.

மணக்:— அன்புடைமையே பற்றாக, அறிவுடையாரல்லாதாரைத் தேறுதல் எல்லா அறியாமையும் தரும் எ - று.

அரசர் அன்புடையாரைத் தேறலாம் என்பது பராசரர் மதம். இஃது இவ்வளவினுல் தேறலாகாது என்றது

பரிதி:— வெகுளியை ஆதாரமாக ஒருவரை நம்புவானாகில் அதனாலே அனேகம் விதனம் வரும் எ - று.

காளிங்:— ஒருவரோடு ஒருவர் வைத்த காதலுடைமையே மூலமாக உலகத்து அறிவது அறியாதாரைத் தெளிதல் யாது: மற்று அது தானே ஒருவர்க்கு அனைத்து அறிவுக் கேட்டையும் கொடுக்கும் எ - று.

காதன்மை கந்தா என்பது ஒருவர்மாட்டு ஒருவர் வைத்த காதலுடைமையே மூலமாக என்றது.

ஒப்புமைப்பகுதி:

"சுற்றத்தார் நட்டார் எனச்சென் றொருவரை
அற்றத்தால் தேறார் அறிவுடையார் - கொற்றப்புள்
ஊர்ந்துலகம் தாவிய அண்ணலே யாயினும்
சீர்ந்தது செய்யாதார் இல்." —பழ. நா.

குறிப்பு:

காதன்மை - காதுதலின் தன்மை. காதுதல் - கொல்லுதல். அதன் தன்மையாவது வெகுளி. ஒருவர்மேற்கொண்ட கோபம்காரணமாக அவரைநீக்கி, அப்பதவியில் அறிவிலாதார் ஒருவரைத்தெளிதல் ஏதம்பலவும் தரும் என்பது பரிதியார் கருத்து.

—தொகுப்பாசிரியர்.

508. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— 'பிறனைத் தேரான் தெளிந்தான் - தன்னோடு இயைபுடையனல்லாதானைப் பிறப்பு முதலியவற்றானும் செயலானும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு, வழிமுறை தீரா இடும்பை தரும் - அத்தெளிவு தன்வழிமுறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

இயைபு - தன் குடியொடு தொடர்ந்த மரபு. இதனானே அதுவும் வேண்டும் என்பது பெற்றாம். தெளிதல் அவன்கண்ணே வினையை வைத்தல். அவ்வினை கெடுதலால் தன் குலத்துப் பிறந்தாரும் பகைவர் கைப்பட்டுக் கீழாய் விடுவர் என்பதாம். நான்கனுருபு விகாரத்தால் தொக்கது.

மணக்:— பிறனை ஆராயாதே வழிமுறையென்று தெளிந்தவனுக்கு அத்தெளிவு, தீர்தலில்லாத துன்பம் உண்டாக்கும் எ - று.

இது தன் குலத்திலுள்ளாருள் அமாத்தியராயினார்வழியின் உள்ளாரைத் தேறலாம் என்றது.

பரிப்:— வழிமுறை என்றது தன் வழியின் உள்ளார்க்கு அவன் வழியின் உள்ளார் அமாத்தியராய்ப் போந்த முறைமை. குலத்தின் உள்ளார்க்கு அமாத்தியர் ஆயினார் வழியின் உள்ளாரைத் தேறலாம் என்பது வியாதன் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது.

பரிதி:— ஒருவனிடம் பொல்லாக்குணத்தை விசாரியாமல் நம்புவானாகில், அதனாலே அவன் தலைமுறைதோறும் துன்பம் வரும் எ - று.

காளிங்:— தான் பிறன் ஒருவனோடு மருவுதற்கு முன்னமே அவனது குற்றமும் குணமும் தெரிந்து ஆராயாது வறிதே பிறன் ஒருவனை நமக்கு இவன் துணை என்று நம்புதலைச் செய்தால் அது மற்று அதன்பின் முறையே வேறு ஒன்றானும் தீராத மரபுக் கேட்டைக் கொடுக்கும் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"தேருருமா னந்தனைமுன் தேறிப் பழிபூண்டான்
சூரியசன் மாவென்பான் சோமேசா - தாரணிமேல். —சோமேசர். 51.

"தீதெணுமி ராக்கதனைத் தேர்மித் திரசகன்தான்
மூதரக்க னானான் முருகேசா - ஆதலினால்." —முருகேசர். 51.

குறிப்பு:

ஆட்சியில் உறவின் முறையும் அன்புங்கூடாது என்பதாம். தாட்சண்யம் தலை நாசம்.

—தொகுப்பாசிரியர்.

509. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். (௯)

உரைப்பகுதி :

பரிமே:— யாரையும் தேராது தேறற்க - யாவரையும் ஆராயாது தெளியாது ஒழிக; தேர்ந்தபின் தேறும் பொருள் தேறுக - ஆராய்ந்தபின் தெளியும்பொருள்களை ஐயுறாதொழிக.

தேறற்க என்ற பொதுமையான் ஒருவினைக்கண்ணும் தெளிய லாகாது என்பது பெற்றாம். ஈண்டு தேறுக என்ற தாற்பரியத்தால் ஐயுறவினது விலக்கின் மேல்நின்றது. தேறும்பொருள் என்றது அவரவர் ஆற்றற்கு ஏற்ற வினைகளை. பொருள் ஆகுபெயர்.

மணக்:— யாவரையும் ஆராயாது தெளியாது ஒழிக; ஆராய்ந்த பின்பு அவரால் தேறப்படும் பொருளைத் தேறுக எ - று.

இஃது ஒருபொருளில் தேற்றமுடையாரை எல்லாப் பொருளினும் தெளிக என்றது.

பரிப்:— மேல் நாலு பொருளையும் ஆராய வேண்டும் என்றார்: அந்நாலினும் ஓரோர் பொருளில் தேற முடியாதாரை அவரவர் பொருளிலே தெளிக: எல்லாப் பொருளினும் தெளிக எ - று.

பரிதி:— ஒருவர் செய்யுங் குற்றம் நன்மை விசாரியாமல் நம்பக் கடவானல்லன்; நம்பினபின் சந்தேகம்பண்ணக் கடவானல்லன் எ - று.

காளிங்:— யாதொரு காரியமும் தேர்ந்து செய்யும் இடத்தும் யாரையும் அவரது குணமும் குற்றமும் ஓர்ந்து உணராது தேறுதலைச் செய்யற்க. மற்று அவரைத் தேர்ந்து உணர்ந்த பின்னும் தன்னுடன் பிறந்தார் சுற்றத்தாரேனும் அவர் அவரால் கொள்ளலாகும் கருமம் கொள்க; மற்று ஆகாதன கொள்ளற்க எ - று.

ஒப்புமைப்பகுதி:

"மருவு காத லால்அறியார் மாட்டு வினையை வையற்க
ஒருவர் தமையும் தேராமே ஒருகா லத்தும் தெளியற்க."

—விநா. அரசி. 78.

"நம்பியான் விட்டதே தீர்த்தம்." —பழ.

510. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும் (௧0)

உரைப்பகுதி :

பரிமே:— தேரான் தெளிவும் அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும், தெளிந்தான்கண் ஐயுறவும் - ஆராய்ந்து தெளிந்தவன்மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும், தீரா இடும்பை தரும் - அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

வினை வைத்தபின் ஒரு தவறு காணாதுவைத்து ஐயுறுமாயின், அதனை அவன் அறிந்து இனி இது நில்லாது என்னும் கருத்தான் அவ்வினையை நெகிழ்த்துவிடும்; அதுவேயன்றிப் பகைவரால் எளிதில் பிரிக்கவும்படும்; ஆகலான் தெளிந்தான்கண் ஐயுறவும் ஆகாதாயிற்று. தெளிவிற்கு எல்லை கூறியவாறு. இவை ஐந்துபாட்டானும், தெளியப் படாதார் இவர் என்பதூஉம், அவரைத் தெளிந்தாற்படும் இழுக்கும், தெளிவிற்கு எல்லையும் கூறப்பட்டன.

மணக்:— ஒருவனை ஆராயாது தெளிதலும் தெளிந்து கொள்ளப் பட்டவன் மாட்டுத் தான் ஐயப்படுதலுமாகிய இவ்விரண்டும் நீங்காத துன்பத்தைத் தரும் எ - று.

பரிப்:— முன்பு ஒருவினை செய்து அறியாதாரைத் தேறலாம். அவர்கள் வறியர் ஆதலான் என்பது உத்தவாசாரியார் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது.

பரிதி:— ஒருவனை விசாரியாமல் நம்புதலும் நற்குணத்தானை நம்பின பின்பு சந்தேகப் படுவதும் ஆகிய இரண்டு குணத்தாலும் தனக்கு விசனம் வரும் எ - று.

காளிங்:— முன்னம் ஒருவனை ஒருகால் தேறாய் மற்று அவனை விரைந்து தெளிகின்ற தெளிவும், இனி இவ்வாறு அன்றித் தான் தெரிந்து தெளிந்தான் யாவன் அவன்கண் உளதாம் ஐயுறவும் என்னுங் இவ்விரண்டும் தன்நெஞ்சுள் ஆறா அருந்துயரம் தரும்; எனவே ஒருவரை முன்னுறத் தெரியாது தெளியற்க; பின் ஐயுறுதல் தன்குற்ற மாதலான் இங்ஙனம் தெரிந்து தெளிந்தவர் மாட்டே எஞ்ஞான்றும் செய்யற்க எ - று.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— தொழிற் பெயர்க் கருத்தாவுக்கு மேற்கோள். (இ. கொ. 26.) தொழிற் பெயர் வினைமுதற் பொருளில் வந்ததற்கு மேற்கோள் (ஷை 82.)

ஒப்புமைப்பகுதி:

"அளிந்தார்க ணாயினும் ஆரா யானாகித்
தெளிந்தான் விரைந்து கெடும்." —பழ. நா.

"உறுமக்க ளாக ஒருவரை நாட்டிப்
பெறுமாற்ற மின்றிப் பெயர்த்தே ஒழிதல்
சிறுமைக் கமைந்ததோர் செய்கை அதுவே
குறுமக்கள் காவு நடல்." —ஷை

"ஆருச் சினத்தன் அறிவிலன் மற்றவனை
பாறி ஒழுகல் தலைஎன்ப - ஏறி
வளியால் திரையுலாம் வாங்குநீர்ச் சேர்ப்ப
தெளியானைத் தேறல் அரிது." —ஷை

"தெற்ற ஒருவரைத் தீதுரை கண்டக்கால்
இற்றே அவரைத் தெளியற்க — மற்றவர்
யாவரே வேண்டினும் நன்கொழுகார் கைக்குமே
தேவரே தின்னினும் வேம்பு." —ஷை

"பகையலா தவரைப்பகை யாக்கலும்
நகையில் தீமனத் தாரைநண்பு என்னலும்
முகையின் வேய்ந்ததோர் மொய்ம்மலர்க் கண்ணியாய்
மிகையின் மற்றவை பின்னைவெ துப்புமே." —சூளா. சீய. 75.

"தேர்ந்து தெளியப் பட்டவன்பால் தேர்ந்தே வினையும் தகவிடுக்க
தேர்ந்து தெளியப் பட்டவனைத் தீது காணு தயிரற்க
தேர்ந்து தெளியப் பட்டஅவன் தீர வினையை விடும்அதனைத்
தேர்ந்து பகைவர் பிரித்திடுவர் தோான் தெளிவே போல்கேடாம்."
—விநா. அரசி. 79.

"தேற லார்தமைத் தேறலும் தேறினர்த் தேறலா மையும்என்றும்
மாற லாருடன் மலைதலும் மாறுடன் மருவிவாழ் தலும்முன்னே
ஆற லாதன அரசருக் கென்றுகொண் டாசநீ தியிற்சொன்னார்
கூற லாதன சொல்வதென் செல்வதென் கொடியவன் அருகென்றான்."

—வில்லி - சூது. 72.

'நம்பவைத்துக் கழுத்தறுக்கலாமா' —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"வைது கருமமெல்லா மாரீச னலாக்கன்
செய்து முடித்தான் திருமலையா - கைதவங்கள்." —திருமலை.

"கன்னற் றெளிந்தரசன் காதலனை ஐயமுற்றான்
இன்னற் புரிந்தான் இரங்கேசா - முன்னமே." —இரங். 51.

குறிப்பு:

தெரிந்து தெளிதல் - ஆராய்ந்து இவன் தக்கான் இவன் தகுதியிலான் என்றறிந்த அவ்வளவு. வினையாடல் - வினைகளை அவனிடம் ஒப்புவித்து ஆளுதல்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— அறம்பொருள், குடிப்பிறந்து, அரியகற்று, குணம்நாடி, பெருமைக்கும், அற்றாரை, காதன்மை, தேரான்பிறனை, தேறற்க, தேரான்தெளிவும்.

மணக்:— அரியகற்று, அற்றாரை, காதன்மை, தேரான்பிறனை, பெருமைக்கும், குடிப்பிறந்து, குணம்நாடி, அறம்பொருள், தேறற்க, தேரான்தெளிவும்.

பரிதி:— அறம்பொருள், குடிப்பிறந்து, பெருமைக்கும், அரியகற்று, குணம்நாடி, தேறற்க, காதன்மை, தேரான்பிறனை, தேரான்தெளிவும், அற்றாரை.

காளிங்:— அறம்பொருள், தேரான்பிறனை, தேறற்க, அற்றாரை, பெருமைக்கும், காதன்மை, குணம்நாடி, அரியகற்று, தேரான்தெளிவும், குடிப்பிறந்து.

52. தெரிந்துவினையாடல்.

தொகுப்புரை:

[நன்மையும் தீமையும் ஆராய்ந்து நன்மை மலிந்த செயலையே நாடுபவன் செயலுக்கு உரியவனாக ஆளப்படுவான். வருவாயைப் பெருக்கி, அதனால் நாட்டை வளப்படுத்தி, அதற்குவரும் இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கவல்லவனே வினைசெய வேண்டும். அன்பும், அறிவும், தெளிவும், பேராசையில்லாமையுமாகிய நான்கு குணமு முடையவனிடமே தெளிந்து செயலை ஒப்பிக்க. எப்படி ஆராய்ந்து தெளிந்தாலும் செயலில் வேறுபடும் மக்கள் பலராவர். செய்யுந்திறங்களை ஆராய்ந்து செய்து முடிக்கும் ஆற்றலுடையவனை யல்லாமல் யாரையும் செயலிற் சிறந்தவன் என்று ஏவுதல்கூடாது. செய்பவனையும், செயலையும் ஆராய்ந்து, காலத்தொடு பொருந்த உணர்ந்து, அவனை அதன்கண் ஏவுக. இந்தச் செயலை இவன் இப்போது முடிப்பான் என்பதை ஆராய்ந்தபின்பு அச்செயலை அவனிடமே ஒப்புவிக்க. அங்ஙனம் ஒப்புவித்த பிறகு அச்செயலை அவனுக்கே உரிமையாக்கி அவனை உயர்த்துக. செயலில் விடா முயற்சியோடு உழைப்பவன் செய்யும் முயற்சியைத் தவறாக நினைக்குந் தலைவனைவிட்டுச் செல்வம் நீங்கும். செயல் செய்பவன் கோணாமல் இருந்தால் உலகமும் கோணாது. ஆதலால் அரசன் அவன்செயலை நாடோறும் ஆராய்தல்வேண்டும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அத்தெளியப்பட்டாரை அவர் செய்யவல்ல வினைகளை அறிந்து அவற்றின்கண்ணே ஆளுந்திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— தெரிந்து வினையாடலாவது வினைசெய்வாரால் செய்யப்படும் வினையும் பலவாதலின், அவரால் செய்யப்படும் வினைகளை அறிந்து அவரைவிட்டுச் செய்வித்தல்.

பரிப்:— மேல் வினைசெய்வாரை ஆராய்ந்து கூட்டவேண்டும் என்றார். அவரால் செய்யப்படும் வினையும் ஆராய்ந்து செய்யவேண்டும் என்பதனால் அதன் பின் கூறப்பட்டது.

பரிதி:— தெரிந்து வினையாடலாவது நன்மையும் தீமையும் நாடி அறிவது எ - று.

511. நன்மையும் தீமையும் நாடி *நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். (க)

உரைப்பகுதி :

பரிமே:— நன்மையும் தீமையும் நாடி - அரசன் முதற்கண் ஒரு வினையைத் தன்கண் வைத்தால், அதன்கண் ஆவனவும் ஆகாதனவுமாய செயல்களை ஆராய்ந்தறிந்து, நலம் புரிந்த தன்மையான் - அவற்றுள் ஆவனவற்றையே விரும்பிய இயல்பினையுடையான், ஆளப்படும் - பின் அவனால் சிறந்த வினைகளிலே ஆளப்படும்.

தன்னை உரிமை அறிதற்பொருட்டு அகம்புறங்கட்கு நடுவாயதோர் வினையை அரசன் தன்கண் வைத்தவழி அதன்கண் ஆஞ்செயல்களையே செய்தவன் பின்னும் அவ்வியல்பினனாதல்பற்றி அகமாய வினைக்கண்ணே ஆளப்படுவன் என்பதாயிற்று. புரிந்த என்ற இறந்தகாலத்தான், முன் உரிமையறிதற்பொருட்டுவைத்த வினையாதல் பெற்றாம்.

மணக்:— நன்மையானவற்றையும் தீமையானவற்றையும் ஆய்ந்து தீமையைப் பொருந்தாது நன்மையின்கண்ணே பொருந்தின தன்மையுடையவன் வினைசெய்வானாகச் செய்யப்படும் எ - று.

பரிப்:— இது பெரும்பான்மையும் அற ஆராய்ச்சிக்குக் கடவாரை நோக்கிற்று.

பரிதி:— ஒருவன் நற்குணத்தையும் தீயகுணத்தையும் விசாரித்து இரண்டிலும் பெரிய குணத்தை உளம் கொள்வான் எ - று.

காளிங்:— இவ்வுலகத்து வேந்தர் ஒருவனைக்கொண்டு ஒருவினை ஆட்சிசெய்யுமிடத்துக் கீழ்ச்சொல்லிப்போந்த முறைமையானே அவரது நன்மைக்கூறும் தீமைக்கூறும் தெரிந்து மற்று அவற்றுள் நல்லொழுக்கம் மிக்குவரும் தன்மைக்கண்ணே வினை ஆட்சிசெய்ய அடுக்கும் எ - று.

ஒப்புமைப்பகுதி

'முன்னர்ப் பொதுவா கியவினையின் மூள விடுத்துத் தீதகற்றி
நன்மை புரிந்து வருமாயின் நாடி அவனைச் சிறந்தவினை
தன்னில் விடுக்க சிறந்தவினை சார்ந்து புரிவான் இடைதிரியின்
பின்னர் அவனைப் பொதுவினையில் பெயர்த்துத் தழுவி விட்டிடுக
—விநா. அரசி. 80.

*'நயம் சிறந்த' என்பது காளிங்கர் பாடம்.

"நல்லவும் தீயவும் நாடிப் பிறருரைக்கும்
நல்ல பிறவும் உணர்வாரைக் கட்டுரையின்
வல்லிதின் நாடி வலிப்பதே புல்லத்தைப்
புல்லம் புறம்புல்லு மாறு." பழ. நா.

குறிப்பு:

தெரிந்துதெளிதலின்கண் 'குணம்நாடி, குற்றமும் நாடி, மிகைநாடி, மிக்க கொளல்' என்பதற்கும் இவ்வதிகாரத்து 'நன்மையுந் தீமையும் நாடி' என்பதற்கும் வேற்றுமைதோன்ற, தெரிந்துதெளிதலின்கண் அரசன் வினைசெய்ய நியமிக்கப்படுவானிடமுள்ள குணங் குற்றங்களையும், அவற்றின் மிகுதியையும் ஆராய்ந்து நியமிக்க வேண்டும் என்று கூறியது; ஈண்டு வினைசெய்பவன் அரசன் ஆணையென்று சொன்னபடியே நிறைவேற்றிவிடாமல் ஒப்பித்தசெயலின் நன்மை தீமைகளை ஆராய்ந்து நல்லனவே புரியுந்தன்மையாளனிடம் வினையை ஒப்புவிக்க என்றது.

—தொகுப்பாசிரியர்.

512. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— வாரி பெருக்கி - பொருள்வரு வாயில்களை விரியச்செய்து, வளம்படுத்து - அப்பொருளான் செல்வங்களை வளர்த்து, உற்றவை ஆராய்வான் - அவ்வாயில்கட்கும் பொருட்கும் செல்வங்கட்கும் உற்ற இடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து நீக்கவல்லவன், வினை செய்க-அரசனுக்கு வினைசெய்க.

வாயில்களாவன மேல் இறைமாட்சியுள் 'இயற்றலும்' என்புழி உரைத்தனவும், உழவு பசுக்காவல் வாணிகம் என்னும் வார்த்தையுமாம்.* செல்வங்களாவன ஆண்டுப் பொருளும் இன்பமுமாக உரைக்கப்பட்டன. இடையூறுகளாவன அரசன் வினைசெய்வார், சுற்றத்தார், பகைவர், கள்வர் என்ற இவரான் வரும் நலிவுகள்.

---

* 'வட்டித்தொழில், உழவுத்தொழில், பண்டமாற்று, பசுஓம்பல் முதலியவை வார்த்தையென்று சொல்லப்படும். இவ்வார்த்தையை உடைய நல்லோர்க்கு வாழ்க்கையில் சிறிதும் அச்சமின்று." (சுக்கிரநீதி. அத். 1. சு. 156.)

மணக்:— பொருள் வருவதற்கு இடமானவற்றை முன்பு நின்ற நிலையிற் பெருக்கி, அவ்விடங்களிலுண்டாகும் பயனை முன்புநின்ற நிலையில் உண்டாக்கி, அவ்விடத்துற்ற மிகுதி குறைவுகளை ஆராய வல்லவன் வினைசெய்வானாக எ - று.

பொருள் வருதற்கு இடமாவது நிலம் முதலான இடம்; அதனைப் பெருக்குதல் பொருளும் இன்பமும் உண்டாகச் செய்தல்.

பரிப்;— பொருள் வருவதற்கு இடமானது நிலம் முதலான இடம்; அதனைப் பெருக்குதலாவது காடு கெடுத்து நாடு ஆக்குதல் முதலாயின. வளம் படுத்தலாவது பயிர் ஏற்றுங்கால் வான் பயிர் ஏற்றுவித்தலும் பாழான இடங்களிலே குடியேற்றி ஆயம் பொருள் உண்டாக்குதலும். இது பெரும்பாலும்..............செய்வானை நோக்கிற்று.

பரிதி:— பொருள் தேடித் தேடின பொருளைப் பெருக்கி *வரலாறுபண்ணிக் கூட்டிய பொருள் சேதம்வராமல் காக்கவல்லவன் ராசகாரியம் பார்ப்பான் எ - று.

காளிங்.— பொருள்வருவாயைப் பலவாற்றாலும் பெருக்கி, மற்று அது வளப்படி வருகின்ற பொருள்களையும் சிதறாமல் ஒருவகைப்படுத்தி, இரண்டுக்கும் இடையூறு வந்துற்றகாலத்து மற்று அவ்விடையூறு தலை யழிந்து போமாறு சிந்தித்துத் தெளிய வல்லான் யாவன்? மற்று அவன் செய்க அரசர்க்குக் கருமம் எ . று.

குறிப்பு:

வாரிபெருக்கவழி வரியைப்பெருக்குதலன்று. குடிகளைத் தலையளி செய் தலால் நன்றாகச் செழித்துப் பொருள் பெருகத் தாமே மனம் உவந்தீயச் செய்தல். வாரி பெருக்கி - ஆறு, குளம், கால்வாய்களைப் பெருக்கி, வளம் படுத்து - அதனால் நீர்வளம் பெருகச்செய்து, உற்றவை ஆராய்வான்-நாட்டிற்கு உற்றவையாகிய இன்ப துன்ப ஏதுக்களை ஆராய்பவன், வினைசெய்க - அவ்வினையைச் செய்க எனவுமாம். இன்பமும் நேர்மையற்ற வழியில் நாட்டுக்குச் சேருமாயின் அது பின்பயக்கும் பீழை பெரிது ஆகலின் அவ்வின்பமும் ஆராயத்தக்கது.

—தொகுப்பாசிரியர்.

* "மரல் ஆறு - வருதற்கு உரிய வழி"

513. அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. (ங)

உரைப்பகுதி :

பரிமே:— அன்பு - அரசன்மாட்டு அன்பும், அறிவு - அவனுக்கு ஆவன அறியும் அறிவும், தேற்றம் - அவைசெய்தற்கண் கலங்காமையும், அவாவின்மை - அவற்றான் பொருள் கையுற்றவழி அதன்மேல் அவாவின்மையுமாகிய, இந்நான்கும் உடையான்கட்டே தெளிவு - இந்நான்கு குணங்களையும் நிலைபெறவுடையான்மேலதே வினையை விட்டிருக்கும் தெளிவு.

இந்நான்கும் நன்குடைமை, இவன் செய்கின்ற வினைக்கண் யாதும் ஆராய வேண்டுவது இல்லை என்று அரசன் தெளிதற்கு ஏதுவாகலின், அவனை அதன் பிறப்பிடனாக்கிக் கூறினார். இவை மூன்று பாட்டானும் ஆடற்கு உரியானது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— அன்புடைமையும், அறிவுடைமையும், ஒருபொருளை ஆராய்ந்து துணிவுடைமையும், அவாவின்மையும் என்னும் இந்நான்கு குணங்களையும் நிலைபெற உடையான்மேலதே வினையை விட்டிருக்குந் தெளிவு எ - று.

பரிப்:— இது பெரும்பான்மையும் காரிய ஆராய்ச்சிக்கு அதிபதியை நோக்கிற்று.

பழைய:— அரசன்மேல் அன்புடைமையும், நம்புதலும், அறிவும், ஆசையின்மையும் உடையானை மெய்ப்படும் எ - று.

பரிதி:— அன்புடைமை அறிவுடைமை அவாவின்மை தெளிவுடைமை இந்த நாலுகுணமுடையவனிடத்திலே உறவு பண்ணுவான் எ - று.

காளிங்:— நட்டார் சுற்றத்தார் ஆயினும் ஆக : அன்றிப் பிறரே ஆயினும் ஆக : யாவன் ஒருவன் தன்மாட்டு அன்பும், காரியா காரியங்கள் தேறித் தெளிய வல்ல அறிவும், தனது உயிரும் பொருளும் அவனுழைப் பெரிதும் தேறலாவதோர் தேற்றமும், மற்றும் நெறியல்லனவற்றின் கண்ணே அவாவின்மையும் என்று இங்ஙனம் சொல்லப்பட்ட நான்கும் குறைவின்றிப் பெரிதும் உடையான் மற்று அவன் கண்ணதேயாக; தெளிந்து வினைசெய்யும் திறம் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" ஆளு மரசன் பால்அன்பும் அவனுக் காவ தறியறிவும்
நாளு மவற்றைக் கலங்காமல் நன்று முடிக்கும் உளத்துணிவும்
மூளும் வினைக்குத் தன்கரத்தின் மொய்த்த பொருளின் விழையாத
கோளும் உடையான் புரிவினையில் குற்ற முறாது குணமேயாம்."

விநா. அரசி. 81.

514. எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— எனைவகையான் தேறியக்கண்ணும் - எல்லாவகையானும் ஆராய்ந்து தெளிந்து வினை வைத்தபின்னும், வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர் - அவ்வினையினியல்பானே வேறுபடுமாந்தர் உலகத்துப் பலர்.

கட்டியங்காரன்போல அரச இன்பத்தினை வெஃகி விகாரப்படுவதல்லது, அதனைக்குற்றமென்று ஒழிந்து தம்மியல்பின் நிற்பார் அரியராகலின் வேறாகுமாந்தர் பலர் என்றார். வினைவைப்பதற்கு முன் எல்லாக் குணங்களும் உடையராய் வைத்தபின், விகாரப்படுவாரை இடையாயதொரு வினையைவைத்து அறிந்து ஒழிக்க என்பதாம். இதனான் ஒருவகையால் ஒழிக்கப்படுவார் இவர் என்பது கூறப்பட்டது.

மணக்:— எல்லாவகையினாலும் ஆராய்ந்து தெளிந்தவிடத்திலும் அவர் செய்யும் வினையின் வகையினாலே மனம் வேறுபடும் மாந்தர் உலகத்துப் பலர் எ - று.

இது தெளிந்தேம் என்று இகழலாகாது என்றது.

பரிதி:— நாலுவகையினாலும் ஒருவனை விசாரித்து நம்பினான் அவனிடம் உறவின்முறை யில்லாதவன் வேறுபடும் எ - று.

காளிங்:— உலகத்து அரசர் ஒருவரை எனைத்து வகையானும் தெளிந்த இடத்தும், பின்னும் கரும வகையினால் வேறுபட்டு நிற்கும் மாந்தர் உலகத்துப் பலர் உளர். ஆதலின் அதனால் தாம் பிறர்க்குச் செய்யும் கருமத்தின்கண் வரும் பொருள் முதலாகிய பேறு கண்ட இடத்துத் தமது நெறியினைத் தோராது புரியநிற்கும் புல்லிமை யுடையோரும் உளர். ஆதலால் பெரிதும் தெரிந்து வினை அடைக்கவேண்டும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கட்டியங்காரன் கதையைப் பிரமாணமாக எழுதினமையால், சிந்தாமணி கட்டுக்கதை அன்றென்க. எனைவகை - எவ்வகை என எகரவினுமாத்திரையாய் நின்றது.

முதுமொழிவெண்பாக்கள்:

"வந்தாரு மன்னவனை மந்திரிதான் கொன்றகதை
சிந்தா மணிகாண் திருமலையா - முந்தி." —திருமலை.

"தேசிகனுக் கொண்ட சுரரிறைக்குத் தீங்கிழைத்தான்
தூசார் துவட்டாச்சேய் சோமேசா - பேசில்." —சோமேசர். 52.

"காண்டலின்றிச் சச்சந்தன் கட்டியங்கா ரற்கரசை
மூண்டளித்து மாண்டான் முருகேசா - வேண்டி." —முருகேசர். 52.

குறிப்பு:

பதவி, மனிதன் பண்பை மாற்றிவிடும் என்பதாம். ஆதலால் தொடக்கத்திலே பெரிய வினையில் ஏமாறக் கூடாது என்பது.

—தொகுப்பாசிரியர்.

515. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— அறிந்து ஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் - செய்யும் உபாயங்களை அறிந்து செயலானும் இடையூறுகளானும் வருந்துன்பங்களைப் பொறுத்து முடிவுசெய்ய வல்லானையல்லது, வினைதான் சிறந்தான் என்று ஏவற்பாற்றன்று - வினைதான் இவன் நம்மாட்டு அன்புடையான் என்று பிறனொருவனை ஏவும் இயல்பு உடைத்தன்று.

செய்கிற்பாற்கு என்பது வேற்றுமைமயக்கம். அறிவு ஆற்றல்களான் அல்லது அன்பான் முடியாது என இதனால் வினையினது இயல்பு கூறப்பட்டது.

*மணக்:— ... ...

---

*இவர் உரை கிடைக்கவில்லை.

பரிப்:— வினைதான் உள்பாடு அறிந்து செய்யும் காலத்து உற்ற துன்பத்தையும் பொறுத்துச் செய்ய வல்லாற்கு அல்லது, தமக்குச் சிறந்தான் என்று ஒருவனை ஏவும் பகுதி உடைத்தன்று எ - று.

இது வினையினது இயல்பு கூறிற்று.

பரிதி:— *இராசகாரியத்தை அறிந்தவன் எந்த வகையாலும் நம்புதலாக இருந்தவன் காரியத்தின் விரோதத்தினாலே தீங்குண்டாதலால் உறவின் முறையானவனையே விசாரிப்பான் எ - று.

காளிங்:— மற்று இங்குச் சொன்ன முறையே 'யாம் இவற்கு இது முடிக்குவம்' என்று அறிந்து, மற்று அவ்வினை முடியும் அளவும் ஒழுக நடத்தி, அங்ஙனம் செய்ய வல்லோற்கு அல்லது வறிதே இவன் நமக்குப் பெரிதும் நட்பிற் சிறந்தான் என்று ஒரு வினையை நீ இது செய்வாயாக என்று ஏவுதற்குத் தகாது; அதனால் இவ்வினைக்கு இவன் தூயன் என்று ஏவும் இத்துணை அல்லது சுற்றமும் தொடர்பும் பிறவும் நோக்கி வினைக்கு ஏவுதல் என்றும் தகாது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"தெற்ற அறிவுடையார்க் கல்லால் திறனில்லா
முற்றலை நாடிக் கருமஞ் செயவையார்
கற்றான் றறிந்து கசடற்ற காலையும்
அற்றதன் பாற்றேம்பல் நன்று" —பழ. நா.

குறிப்பு

அரச காரியத்தில் இருப்பார்க்கு 'இவன் பொருள் வாங்கினான், பழிபடுவ செய்தான்' என அடாப்பழியும், குடிகளின் எதிர்ப்பும், அரசன் சினமும் வரக்கூடும். வரினும் உண்மை யொன்றே குறிக்கோளாகக்கொண்டு காலம் வருந்துணையும் எல்லாவற்றையும் பொறுக்கும் வன்மைவேண்டும் என்பார் 'ஆற்றி' என்றும், அங்ஙனம் பொறுத்தலுடையாரும் இத்துணைநேர்மையாயிருந்தும் நமக்கு இந்தப்பழியும், அரச வெறுப்பும் வந்ததேயென்று பின் அவ்வினையைச் செய்ய விரும்பார் தொட்டதைக் கூட விட்டுச்செல்வார் ஆகலின் 'செய்கிற்பாற்கு' என்றும் கூறினார்.

—தொகுப்பாசிரியர்.

---

*இவ்வுரை குறளுக்கு அமையுமாறு அறியக்கூடவில்லை.

516. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)
எய்த உணர்ந்து செயல். (கா)

உரைப்பகுதி :

பரிமே:— செய்வானை நாடி - முதற்கண்ணே செய்வானது இலக்கணத்தை ஆராய்ந்து; வினை நாடி - பின் செய்யப்படும் வினையினது இயல்பை ஆராய்ந்து; காலத்தோடு எய்த உணர்ந்து செயல் - பின் அவனையும் அதனையும் காலத்தோடுபடுத்துப் பொருந்த அறிந்து அவனை அதன்கண் ஆடலைச்செய்க.

செய்வானது இலக்கணமும் வினையினது இயல்பும் மேலே கூறப்பட்டன. காலத்தோடு எய்த உணர்தலாவது இக்காலத்து இவ்விலக்கணம் உடையான் செய்யின் இவ்வியல்பிற்றாயவினை முடியும் என்று கூட்டியுணர்தல்.

மணக்:— வினை செய்வானையும் ஆராய்ந்து, அவ்வினையினது இயல்பையும் ஆராய்ந்து, அது முடியுங் காலத்தோடே பொருந்த அறிந்து பின்பு அவ்வினை அவன் செய்வானாக அமைக்கவேண்டும் எ - று.

பரிப்:— மேல் வினையினது இயல்பு கூறினர். இது செய்விக்குமாறு பொதுவாகக் கூறிற்று.

பரிதி:— ஒருகாரியம் செய்யவல்லவனுமாய் அவன் குணத்தையும் அவன்நடக்கிற நீதியையும் காலாகாலங்களையும் இந்த மூன்று காரியத்தையும் விசாரித்துச் செய்வான் எ - று.

காளிங்:— கீழ்ச்சொன்ன வகையானே வினை செய்யத் தகுந்த வினையும் ஆராய்ந்து, வெல்லும் வினையினது இயல்பும் ஆராய்ந்து மற்று அதனை அதற்கு ஏற்ற காலத்துடன் அடுக்குமாறு குறிக்கொண்டு செய்க அரசர் எ - று.

குறிப்பு:

செய்வானதிலக்கணம் நன்மைதீமைநாடி நலம்புரிந்த தன்மையனாதல், வாரி, பெருகி வளம்படுத்து உற்றவை யாராய்தல், அன்பு, அறிவு, தெளிவு அவாவின்மை ஆகிய நான்கு குணங்களையுடையனாதல் முதலியன. வினையினதியல்பு அறிந்தாற்றிச் செய்தல்.

—தொகுப்பாசிரியர்.

517. இதனை இதனால் *இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
அதனை அவன்கண் விடல். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து - இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்கவல்லன் எனக் கூறுபடுத்து ஆராய்ந்து, அதனை அவன்கண் விடல் - மூன்றுந் தம்முள் இயைந்தவழி அவ்வினையை அவன்கண்ணே விடுக.

கருவி - துணைவரும், பொருளும் முதலாயின. வினைமுதலும் கருவியும் வினையும் தம்முள் இயைதலாவது ஒரொன்றோடு ஏனைய இரண்டற்கும் பொருத்தம் உண்டாதல். விடுதல் - அதற்கு அவனை உரியனாக்குதல்.

மணக்:— இக்கருமத்தினை இக்கருவியாலே இவன் செய்து முடிக்கவல்லவன் என்று ஆராய்ந்து பின்பு அக்கருமத்தினை அவன் கண்ணே விடுக எ - று.

இது பெரும்பான்மையும் சேனாபதியை நோக்கிக் கூறப்பட்டது.

பரிதி:— இந்தக் காரியத்தை இன்ன காரியத்தினாலே இவன் முடிக்கும் என்று அறிந்து அந்தக் காரியத்து அவனையே நாட்டுக எ - று.

காளிங்:— இக்கருமத்தை இதனால் இவன்பற்றி முடிக்கவல்லான் என்று ஆராய்ந்துதெளிந்தபின் மற்று அக்கருமத்தை அவனிடத்து விடுக; எனவே, இனிச் சிறிதும் அல்லவாம எனறு கருதாது ஆங்கு அமைந்து ஒழுக எ - று.

ஒப்புமைப்பகுதி:

“ உற்றான் உறாஅன் எனவேண்டா ஒண்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக - கற்றான்
கிழவன் உரைகேட்கும் கேளான் எனினும்
இழவன் றெருதுண்ட உப்பு ” —பழ. நா.

“ கூரையேறிக் கோழிபிடிக்க மாட்டாத குருக்களா
வானங் கீறி வைகுண்டம் காட்டுவார்.” —பழ.

* ‘இவன் முடிப்பன்’ என்பது காளிங்கர் பாடம்.

"கூலிக்குக் குத்துகிறவனை கேளிக்கை யாடச்சொன்னாற் போல்." —ஷை

முதுமொழிவெண்பாக்கள்:

"ஏற்பதல்ல வேகுருவி இன்கழுத்தி லேபனங்காய்
சேர்ப்பதென்ன கோவைத் தினகரா - நேர்ப்பாய்" —தினகர, 55.

"சல்லியனைத் தேருக்குச் சாரதியாய்க் கொண்டதனால்
எல்லவன்சேய் தோற்றான் இரங்கேசா - சொல்லின்" —இரங். 52.

"ஈசன்குண் டோதரபோ என்றருளும் குன்றுபுரை
சோறுகறி உண்டு தொலைப்பதற்கு - நாடி" —முதுமொழி, 85.

"சதமுகனை ராகவனும் சானகியைக் கொண்டே
சிதையவதை செய்தான் சிவசிவா - இதயத்(து.)" —சிவசிவ. 52.

குறிப்பு:

வேலைக்குத்தக ஆளமர்த்த வேண்டுமேயன்றி, ஆளுக்காக, இருக்கும் வேலையை அளித்து விடக்கூடாது என்பது. அவன்கண் விடலாவது அவ்வினையை நடத்திச் செல்வுழி அரசன் தான் குறுக்கிடாது பின்னிருந்து மறைவாக அதனை ஆராய்ந்து அறிதல். அதில் அவனுக்கு முழுஉரிமையும் இல்லையாயின் வினை கடை போகாது என்பது.

—தொகுப்பாசிரியர்

518. வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— வினைக்கு உரிமை நாடிய பின்றை - ஒருவனை அரசன் தன்வினை செய்தற்கு உரியனாக ஆராய்ந்து துணிந்தால், அவனை அதற்கு உரியனாகச் செயல் - பின் அவனை அதற்கு உரியனுமாறு உயரச்செய்க.

உயரச்செய்தலாவது அதனைத் தானே செய்துமுடிக்கும் ஆற்றல் உடையனாக்குதல். அது செய்யாக்காலும் கெடும் என்பது கருத்து.

மணக்:— இவ்வினைக்கு இவன் உரியவன் என்று ஆராய்ந்த பின்பு அவனை அவ்வினை செய்தற்கு உரியவனாகப் பண்ணுக எ - று.

இஃது, ஒழிந்த காரியங்களின் வினை செய்வாரை ஆக்குமது கூறிற்று.

பரிதி: ஒருவன் ஒருகாரியத்துக்கு வல்லவனாகில் அந்தக்காரியத்துக்கு அவனையே நாட்டுக எ - று.

காளிங்:— வேந்தன் ஒருவனைத் தனது கருமத்திற்கு இனி இவனும் உரியன் என்பதோர் உரிமை ஆராய்ந்து அமைந்த பின்பு யாது செய்யத் தகுவது எனின், மற்று அவனை எவ்வாறு பேணி ஆக்கினால் உரிமையாம் மற்று அவ்வாறு அனைத்தும் ஆக்கிய பின்பு மற்று அதற்கு உரியனாகச் செய்க எ - று.

ஒப்புமைப்பகுதி:

"தெளிந்த வினையில் தெளிந்தவனைச் சிறந்த காலத் தொடும்விடுக்க
விளைந்த அறிவாற் றனும் இலையேன் மிக்க உரிமை நின்பாலே
தளைந்த மனத்தா னாயிடினும் தன்பால் வினையைச் சார்த்தற்க
வளைந்து வினையில் விடுத்தவனை அதற்குத் தகுமா றுரிமைசெய்க."
—விநா. அரசி. 82.

519. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— வினைக்கண் வினை உடையான் கேண்மை-எப்பொழுதும் தன் வினையின்கண்ணே முயறலை உடையான் அவ்வுரிமையால் தனக்குக் கேளாயொழுகுகின்ற தன்மையை, வேறாக நினைப்பானைத் திரு நீங்கும் - அது பொறாதார்சொற்கேட்டு அரசன் மாறுபடக் கருதுமாயின், திருமகள் அவனைவிட்டு நீங்கும்.

கேளாயொழுகுகின்ற தன்மையாவது தான் பிறனாய் நில்லாது கேளிர்செய்யும் உரிமையெல்லாம் செய்து ஒழுகுதல். அவனை அவமதிப்பாகக்கொண்டு செறக்கருதுமாயின் பின் ஒருவரும் உட்பட்டு முயல்வார் இல்லையாம், ஆகவே, தன்செல்வங்கெடும் என்பது கருத்து. இந்நான்கு பாட்டானும் ஆடற்கு உரியானை ஆளுந்திறம் கூறப்பட்டது.

மணக்:— வினையிடத்து வினைசெய்ய வல்லவனது நட்பை வேறுபாடாக நினைக்கும் அரசனைத் திருமகள் நீங்குவள் எ - று.

பரிப்:— இது வினை செய்ய வல்லாரை அருள் பண்ண வேண்டும் என்பதூஉம், அவருடன் மாறுபட ஒழுகின் பொருட்கேடுவரும் என்பதூஉம் கூறிற்று.

பரிதி:— ஒருவன் ஒருகாரியத்துக்கு வல்லவனாகி, அவனை அவ நம்பிக்கை பண்ணுவனாகில் அரசனாகிலும் திருமகளும் விட்டுப்போம் எ-று.

காலிங்:— தனது காரியத்தின்கண் சூழ்ச்சி பெரிதும் உடையோன் யாவன்? அவனது நட்பினை யாதானும் ஒருவாற்றான் வேறுபடக் கருதும் வேந்தனை நீங்கிப் போம் செல்வம்; ஆகலான் அது நோக்கி அவனோடு பெரிதும் நட்புடையான் ஆதல் அரசற்கு இயல்பு எ - று.

ஒப்புமைப்பகுதி:

"வினைக்கண் முயற்சி தவறாது வினையின் கேண்மை வேறாக
நினைக்கு மவன்மற் றவ்வினையின் நீங்கும் பிறரும் அதின்நோரர்."
—விநா. அரசி. 83.

குறிப்பு:

தன்கடமையை யுணர்ந்த வினையாளன் இடைவிடாது முயலும்போது அவனிடம் பொறாமைகொண்டார் சிலர் பேச்சைக் கேட்டுக்கொண்டு அரசன் ஐயப் படுவானாயின் அதனால் வினையுந்தீமை பெரிது என்பதாம். சந்திரகுப்தன் வரலாற்றில் பல்லவராசன் என்பான் தன்மந்திரியாகிய ராட்சஸனை ஐயப்பட்டமையால் மாற்ற ரசரால் வெல்லப்பட்டான் என்ற வரலாறு சிந்திக்க.

—தொகுப்பாசிரியர்.

520. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. (௧௦)

உரைப்பகுதி :

பரிமே:— வினை செய்வான் கோடாமை உலகு கோடாது - வினை செய்வான் கோடாதொழிய உலகம் கோடாது; மன்னன் நாடோறும் நாடுக - ஆதலான் அரசன் அவன்செயலை நாடோறும் ஆராய்க.

அஃது ஒன்றனையும் ஆராயவே அதன்வழித்தாய உலகமெல்லாம் ஆராய்ந்தானும்; அதனால் அவனுரிமை அழியாமல் தன்னுள்ளே ஆராய்ந்து போதுக என்பதாம். இதனான் ஆண்டவழிச் செய்வது கூறப்பட்டது.

மணக்:— வினை செய்வான் கோடாது ஒழிய உலகம் கோடாது செவ்வையிலே நிற்கும்; ஆதலான்; அவன் செயலை மன்னவன் நாடோறும் ஆராயவேண்டும் எ - று.

இது வினைசெய்வார் செயலை நாடோறும் ஆராயவேண்டும் என்றது.

பரிப்.— முறை செய்வான் என்றதனால் அற ஆராய்ச்சி செய்வாரை நோக்கிற்றே ஆயினும் ஏனை அமாத்தியர்...............செய்தல் தொழிலுடையராதலால்.

பரிதி:— இராசகாரியம் பார்க்கவைத்த பேர் நாள்தோறும் செங்கோல் கோடாமை விசாரித்தானாகில் *செங்கோல் கொடுங்கோலாகாமல் நடக்கும் எ - று.

காளிங்:— யாவரையும் கருமத்தின்கண் தெளிதல் அருமைத்தாகலான், தான் தெளிந்தவர்மாட்டும் அவர் தனது வினை செய்யுமிடத்தும் அதனை இகழாது பெரிதும் ஆராய்ந்து போதுக அரசனானவன். அது என்னையோ எனின், இங்ஙனம் ஆராயவே மற்று அவ்வினை செய்வோன் தனது இயல்பினாலும் அச்சத்தாலும் நெறிகோடான்; ஆகலான் கோடாமையாலே அவ்வினைவழி யடிப்பட்டு வருகின்ற உலகம் கோடாது; எனவே உலகத்து மக்கள் அனைவரும் அரசன் சூழ்ச்சி அறிந்து அருநெறிக் கண் நிற்பார் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"முனைக்கும் வினைஞன் கோடாதே முதிர்நீர் உலகம் கோடாது
தனைப்பின் வைகல் தொறும்நாடிச் சாரும் வினையும் நாடுகவே.',
—விநா. அரசி. 83.

குறிப்பு:

ஊரை யெல்லாம் அறிய அரசனால் முடியாது. ஆனால் அமைச்சனை - வினை செய்வார்களை மட்டும் அரசன் நாடோறும் மறைவில் ஆராய்ந்து வரவேண்டும்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை.

பரிமே:— நன்மையும், வாரிபெருக்கி, அன்பறிவு, எனைவகையால், அறிந்தாற்றிச், செய்வானை, இதனை, வினைக்குரிமை, வினைக்கண், நாடோறும்.

மணக்:— அறிந்தாற்றிச், செய்வானை, நன்மையும், அன்பறிவு, வாரிபெருக்கி, வினைக்குரிமை, இதனை, வினைக்கண், எனைவகையால், நாடோறும்.

பரிதி:— நன்மையும், அன்பறிவு, வாரிபெருக்கி, வினைக்குரிமை, செய்வானை, இதனை, வினைக்கண், அறிந்தாற்றிச், எனைவகையால், நாடோறும்.

காளிங்:— நன்மையும், இதனை, வினைக்குரிமை, செய்வானை, அறிந்தாற்றிச், அன்பறிவு, வாரிபெருக்கி, எனைவகையால், நாடோறும், வினைக்கண்.

---

*'உலகு நெறிகெடாது' என்பது பழையவுரை.

53. சுற்றந்தழால்.

தொகுப்புரை:

[செல்வமில்லாத காலத்தும் பழைமையைப்பாராட்டுதல் உறவினரிடத்துள தாவது. அன்பு அற்றுப்போகாத சுற்றம் ஒருவனுக்கு உண்டானால் அது வளருஞ் செல்வத்தைத்தரும். சுற்றத்தாரோடு மனங்கலந்து பழகாதவன் வாழ்க்கை, கரையில்லாக்குளம் நீர் நிறைந்தாற்போலும். பணம்படைத்ததன் பயன் பல சுற்றமும் தன்னைச்சுற்றிக்கொண்டே இருக்க ஒழுகுதல். இன்சொல்லும் ஈகையும் ஒருவனுக்கு இருப்பின் அவன் சுற்றத்தார் பலரால் சூழப்படுவன். மிகுந்த கொடையையும், வெகுளாமையையும் ஒருவன் உடையனாயின் அவனைப்போலச் சுற்றத்தாற் சூழப்பட்டவன் உலகத்து யாரும் இல்லை. காக்கை தன்னினத்தையும் கரைந்து அழைத்துண்ணுதல் போல ஒருவன் செய்வனாயின் அவனுக்குச் செல்வம் பலவும் சேரும். அரசன் பொதுவாகப் பாராமல் தரமறிந்து நோக்குவானாயின் அதனைநோக்கியே வாழுகின்ற மக்கள் பலர். முன் சுற்றமாயிருந்து பிரிந்தார் பின்னும் வந்து சுற்றமாதல், விரும்பாமைக்குஏதுவாகிய பகைமை தன்னிடமில்லாமையானே ஆகும். ஏதாமொரு காரணத்தால் தன்னிடமிருந்து பிரிந்துபோய், பின்னும் வந்து சேர்ந்தவனை அரசன் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அரசன் தன்கிளைஞரைத் தன்னின் நீங்காமல் அணைத்தல். வினைசெய்வாரைக் கூறி ஏனைச்சுற்றம் கூறுகின்றாராகலின் இது தெரிந்து வினையாடலின்பின் வைக்கப்பட்டது,

மணக்:— சுற்றந்தழாலாவது அரசன் தன்கிளைஞரைத் தன்னின் நீங்காமல் அணைத்தல். மேல் அமாத்தியர்மாட்டு அரசன் ஒழுகுந் திறங் கூறினாராதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— சுற்றந்தழாலாவது அரசன் தன் சுற்றத்தைப் பாது காப்பான் எ - று.

521. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. (க)

உரைப்பகுதி :

பரிமே:— பற்று அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் - ஒருவன் செல்வம் தொலைந்து வறியனாயவழியும் விடாது தம்மோடு அவனிடைப் பழைமையை எடுத்துக்கொண்டாடும் இயல்புகள், சுற்றத்தார் மாட்டே உளவாவன.

சிறப்பும்மை வறியனாய்வழிப் பாராட்டப்படாமை விளக்கி நின்றது. பழைமை - பற்றாக்காலத்துத் தமக்குச் செய்த உபகாரம். பிறரெல்லாம் அவன் பற்றற்றபொழுதே தாமும் அவனோடு பற்றறுவர் ஆகலின், ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இதனான் சுற்றத்தது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— பொருளற்ற கண்ணும் பழைமையைக் கொண்டாடி விடாது ஒழுகுதல் சுற்றத்தார்மாட்டே உளவாம் எ-று.

இஃது இல்லாக் காலத்தினும் விடார் என்றது.

பரிதி:— உறவின் முறையாற்கு அரசனிடத்திலே பற்றற்ற இடத்திலும் பழைமை பாராட்டிச் சூழ்ந்திருப்பது சுற்றத்தாரிடத்தில் உண்டு எ - று.

காளிங்:— அரசரானவர் வையம் காவல் பற்றிக்கொண்டு வாழும் காலம் வாழ்தலேயும் அன்றி மற்று அவர் பற்று அற்ற இடத்தும் பழமையை மேற்கொண்டு அவரைக் கைவிடாது நிற்றலும் சுற்றத்தார் மாட்டே உளவாம் எ - று.

ஒப்புமைப்பகுதி:

“ அல்லல் ஒருவர்க் கடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார் — நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்கும் அதுவே
மனைமர மாய மருந்து.” —பழ நா.

“ முன்னின்னா ராயினும் மூடும் இடர்வந்தால்
பின்னின்னா ராகிப் பிரியார் ஒருகுடியார்
பொன்னாச் செயினும் புகாஅர் புனலூர
துன்னினார் அல்லார் பிறர்.” —ஷெ

"காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர் — ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர்." —நாலடி. 113.

"அற்ற குளத்தில் அருநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு." —வாக்கு.

"பழமை பாராட்டினுல்தான்." —பழ.

குறிப்பு:

மரம் பழுத்தால் வௌவாலை வாவென்றழையாவிட்டாலும் வந்து தின்று பழமில்லாக்காலத்துப் பறந்துபோமாறுபோலப் போவார் பலராதலின், அங்ஙனம் இன்றிப் பழைமையைப் பாராட்டுவாரே சுற்றத்தார். பதவிக்காகவும், பணத்திற் காகவும் உறவினர்போலச் சுற்றுவார் பிறர். சுற்றத்தார் எப்பொழுதும் சுற்றி இருப்பவர் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

522. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— விருப்பு அறாச் சுற்றம் இயையின் - அன்பறாத சுற்றம் ஒருவற்கு எய்துமாயின், அருப்பு அறா ஆக்கம் பலவும் தரும் - அஃது அவற்குக் கிளைத்தலறாத செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும்.

உட்பகையின் நீக்குதற்கு விருப்பறாச்சுற்றம் என்றும், தானே வளர்க்கும் ஒருதலையாய செல்வத்தின் நீக்குதற்கு அருப்பறா ஆக்கம் என்றும் விசேடித்தார். தொடை நோக்கி விகாரமாயிற்று. இயையின் என்பது அதன் அருமை விளக்கி நின்றது. ஆக்கம் என்பது ஆகுபெயர். பலவும் என்றது அங்கங்கள் ஆறனையும்நோக்கி. பலர்கூடி வளர்த்தலின் அவை மேன்மேற் கிளைக்கும் என்பது கருத்து.

மணக்:— அன்பறாத சுற்றம் ஓரிடத்துப் பொருந்தி ஒழுகுமாயின் அது கிளைத்தலறாத ஆக்கமாகிய பலவற்றையும் தரும் எ - று.

பரிப்:— பிள்ளைகளை வேறு வேறு இடத்து நிறுத்த வேண்டும் என்பது சில ஆசாரியர் மதம். அதனை மறுத்து மக்களை ஓரிடத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதூஉம், அதனானே குலம் வளரும் என்பதூஉம் கூறிற்று.

பரிதி,— தன்மேலே விருப்பமுள்ள சுற்றமுண்டாகில் கொழுந்து விட்டுப் படருகிற பயிர்போல வருகிற செல்வமாகிய ஆக்கமுண்டாம் எ - று

காளிங்:— தம்மாட்டு உள்ளத்தால் விரும்புதலை அறாச்சுற்றமானது தம் பொருள்கொண்டு நுகரின், மற்று அது மேன்மேலும் வந்து அரும்பித் தோன்றுதலறாத செல்வம் பலவற்றையும் கொடுக்கும்; எனவே, அவர் நுகர்தலின் மறுமைப் பயனும் மற்று ஈண்டு அவரால் ஆகும் ஆக்கமும் பலவுள ஆகலின் இருமைப் பயனின் விரிவாகிய ஆக்கம் பலவும் தமக்கு எய்தும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அருப்பு - அடிப்பாட்டுக்காரணவிகாரம். அரும்பு - முதனிலைத் தொழிற்பெயர்.

ஒப்புமைப்பகுதி:

"ஈரமில்லாதது கிளைநட் பன்று." —முதுமொழிக். 5 : 3.

"பற்றும் வெறுக்கை ஒழிந்துழியும் பழைமை எடுத்துப் பாராட்டும்
சுற்ற மதனைப் பெருங்கொடையால் தூய மொழியால் தழுவனுறின்
அற்றம் அவனுக் கொருகாலும் அணுகா தாக்கம் மிகப்பெருகும்
முற்ற நினைக்கும் பகைவர்தொழில் முற்றா தேம கண்டனே."
—விநா. அரசி. 84.

"நாற்றுக்கு மேல் ஊற்று." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"வில்லுக் கதிபன் விரகினால் ஐவராக்(கு)
இல்லாற்றும் உய்ந்தார் இரங்கேசா - நல்ல." —இரங். 53.

"எய்த்து மகத்திறந்தும் சூரன் இளையோரான்
மொய்த்தவளம் பெற்றான் முருகேசா - மெய்த்த." —முருகேசர். 53.

குறிப்பு:

சுற்றமாயினும் பிறராக்கம் கண்டு பொறாமல் பகைவிளைத்தல் மக்களினத்திற்கே பொதுக்குணமாதலின் 'விருப்பறாச் சுற்றம்' என்றார். பொறாமையானும், பிறர்சொற் கேட்டலானும் விருப்பு நீங்காத சுற்றம் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

523. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— அளவளாவு இல்லாதான் வாழ்க்கை அச்சுற்றத்தோடு நெஞ்சுகலத்தல் இல்லாதவன் வாழ்க்கை, குளவளாக் கோடு இன்றி நீர் நிறைந்தற்று - குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தாற் போலும்.

சுற்றத்தோடு உசாவுதலான் வருவதாகலின், அளவளாவு என்பது ஆகுபெயர். வாழ்க்கை என்றதூஉம் அதற்கு ஏதுவாய செல்வங்களை. நிறைதல் என்னும் இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. சுற்றமில்லாதான் செல்வங்கள் தாங்குவாரின்மையின் புறத்துப் போம் என்பதாம்.

மணக்:— கலக்கப் படுவாரோடு கலப்பின்றி ஒழுகுவானது வாழ்க்கை, குளப்பரப்புக் கரையின்றி நீர் நிறைந்தாற் போலும் எ - று.

இது சுற்றந் தழுவாக்கால் செல்வங் காக்கப்படாது என்றது. இத்துணையும் சுற்றத்தார் எல்லாரோடும் ஒழுகும் திறம் கூறிற்று.

பரிதி;— அளவுக்களவாகச் செலவழியாதான் பெற்றசெல்வம் கட்டுக்கரையும் கொடியும் காவலுமில்லாத குளம் நீர்நிறைந்ததற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— அரசர்க்கு வரம்பாகிய செல்வமானது இவ்வாறு சுற்றம் சூழ்தல்; இவை இன்றித் தனித்துடைய அரசர் வாழ்க்கையானது எத்தன்மைத்தோ எனின் மற்று அது உலகில் குளச் சூழலானது சூழ்ந்து நின்று பாதுகாக்கும் கரைஇன்றி நீர் வந்து நிறைந்த அத்தன்மைத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி

நுண்:— அளவளாவு - மிகுதிக்கண் இரட்டித்தது. 'அன்பு மிகுதியின் அளவளாயவளை' (திருக்கோவை - 165) என்னுங் கொளுவுட் காண்க. குளவரை - குளப்பரப்பு.

ஒப்புமைப்பகுதி :

"தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ." —புறம். 118; 3.

"தன் இனம் தன்னைக் காக்கும் வேலி பயிரைக் காக்கும்." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஆர்வீ டணனோ டளவளா வாதரக்கன்
சோர்விலா வாழ்விழந்தான் சோமேசா - நேரே." —சோமேசர். 53.

குறிப்பு:

கரையில்லாக் குளமும் நீர்நிறையப்போவதில்லை. கலந்து பழகாத வஞ்சக சுற்றத்தாலும் வாழப்போவதில்லை என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

524. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். (ச)

உரைப்பகுதி :

பரிமே:— செல்வம் பெற்றத்தால் பெற்ற பயன் - செல்வம் பெற்ற அதனால் ஒருவன் பெற்ற பயனாவது, சுற்றத்தால் தான் சுற்றப்பட ஒழுகல் - தன் சுற்றத்தால் தான் சூழப்படும்வகை அதனைத் தழீஇ ஒழுகுதல்.

பெற்ற என்பதனுள் அகரமும், அதனான் என்பதனுள் அன்சாரியையும் தொடை நோக்கி விகாரத்தால் தொக்கன. இவ்வொழுக்குப் பகையின்றி அரசாடற்கு ஏதுவாகலின், இதனைச் செல்வத்திற்குப் பயன் என்றார். இவை மூன்றுபாட்டானும் சுற்றந்தழால் செல்வத்திற்கு ஏதுவும் அரணும் பயனுமாம் என்பது கூறப்பட்டது.

மணக்:— சுற்றத்தாராலே சூழப்பட ஒழுகுவது செல்வத்தைப் பெற்றதனால் உண்டான பயன் எ - று.

இது சுற்றஞ்சூழ்ந்து வருவதாக ஒழுகவேண்டும் என்றது.

பரிதி:— தொன்றுதொட்டு வருகிற சுற்றம், தன்னைச் சுற்றியிருக்க வாழ்வதன்றோ செல்வம் பெற்றபயன் எ - று.

காளிங்:— அரசனானவன் தான் பெருஞ் செல்வம் பெற்றதனால் முன்பு பெற்றபயன் யாதோ எனின், அதனை வழங்குமாறு வழங்கி அங்ஙனம் சுற்றத்தால் சூழப்படுமாறு செய்து ஒழுகலே எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்— பெற்றதனால் என்பதனுள் அகரமும், அன் சாரியையும் விகாரத்தால் தொக்கன. பெற்றத்தால் எனத் தகர ஒற்றுமிகல் 'கேழேழ் வரையும் இல்லோன்' (269) என்னுங்கோவையாருள் 'வருட்டி' என்பதும் அது.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— ஆனத்தால் அன்பின் தொழு: ஆனதனால் என்பது ஆனத்தால் எனமரீஇயிற்று; 'பெற்றத்தால் பெற்றபயன்' என் புழிப்போல. (சிவஞான. சூ. 12. அதி. 4.)

ஒப்புமைப்பகுதி:

"கிளைஞர்க் குதவாதான் செல்வமும் ....
உள்ளபோன் றில்லாப் பொருள்." —திரி. 59.

"அக்கம் சுருக்கேல்." —ஆத்தி. 13.

"தொன்மை மறவேல்." —ஷை

"சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்" —கொன்றை. 30.

"செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஊரார்க்குச் சோறிடுவர் உற்றாரை அண்டையிலும்
சேராத தென்ன தினகரா - காரியமோ." —தினகர. 56.

"அத்தர் திருவருளால் அன்றுபடிக் காசுபெற்றார்
பத்தர்கணம் சூழப் பரிந்திட்டார் - இத்தலத்துச்." —முதுமொழி. 86.

"மாரினால் வாழ்விழந்தான் வாளரக்கன் வீடணனைச்
சீறினன் அன்றித் திருமலையா — பேறினர்." —திருமலை.

குறிப்பு:

செல்வத்துப்பயன் சுற்றமுதலிய யாவர்க்குங்கொடுத்துத் தானும் உண்டலாதலானும், தான் தனித்துண்ணத் தொடங்கினால் அழிவன பலவாதலானும் சுற்றத்தார் சூழ ஒழுகுதல் செல்வம் பெற்ற பயனாயிற்று எனினுமாம். 'பகையின்றி அரசாடற்கேதுவாதலின் செல்வத்திற்குப் பயன் என்றார்' என்ற பரிமேலழகர் உரை செல்வமே அங்ஙனம் அரசாளுதலால், மேலும் செல்வத்தைப் பெருக்கவும், காக்கவும் வழிசெய்தலின் அச்செல்வத்திற்கே பயனாயிற்று என்ற கருத்துத்தந்து மிக நுணுகியதாதல் இன்புறத்தக்கது.

—*தொகுப்பாசிரியர்.*

525. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— *கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின்* - ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொல் சொல்லுதலையும் வல்லனாயின், *அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும்* - தம்மில் தொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே சூழப்படும்.

இரண்டும் அளவறிந்து ஆற்றுதல் அரிது என்பது தோன்ற, ஆற்றின் என்றார். தம்மின் தொடர்தலாவது சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் அவற்றான் பிணிப்புண்டு வருதல். இவ்வுபாயங்களை வடநூலார் தானமும் சாமமும் என்ப.

மணக்:— வேண்டும் அளவு கொடுத்தலும் இன்சொற் கூறுதலும் செய்வானாயின் தனக்கு முன்னதாகியும் பின்னாகியும் வருகின்ற சுற்றத்தாராலே சூழப்படுவன் எ - று.

இஃது ஒழுகும் திறம் கூறிற்று.

பரிதி:— பொருள் கொடுத்தலும் இன்சொல்லும் உள்ள அரசர்க்குத் தொன்றுதொட்டு வருகிற உறவின் முறை உண்டாம் எ - று.

காளிங்:— பொருள் வழக்கமும் இன்சொல் வழக்கமும் இவர்க்கு நடத்த வல்லவன் ஆயின் மற்று அவன் பெரிதும் பயின்ற சுற்றத்தினால் சூழப்படும் எ - று.

குறிப்பு.

'நேசனைக் காணுவிடத்து நெஞ்சாரவேதுதித்தல்......வினையாளை வேலை முடிவில் என்பவாகலின், இன்சொல்லும், கொடையும் அளவறிந்து தரமறிந்து செய்தலிலேயே அருமைப்பாடு உள்ளது. அங்ஙனம் அரசன் செய்துவிடுவானாயின் பலவகைச்சுற்றமும் அவனைச்சூழ இருக்கும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

526. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத் தில். (சா)

உரைப்பகுதி :

பரிமே:— பெருங்கொடையான் வெகுளி பேணான் - ஒருவன் மிக்க கொடையை உடையனுமாய் வெகுளியை விரும்பானுமாயின், அவனின் மருங்கு உடையார் மாநிலத்து இல் - அவன்போலக் கிளையுடையார் இவ்வுலகத்து இல்லை.

மிக்ககொடை - ஒன்றானும் வறுமை எய்தாமல் கொடுத்தல். விரும்பாமை இஃது அரசற்கு வேண்டுவதொன்றென்று அளவிறந்து செய்யாமை.

மணக்:— மிகக் கொடுக்க வல்லவனாய்ச் சினத்தையும் விரும்பானாயின் அவனின் துணையுடையார் பெரிய உலகின்கண் இல்லை. எ - று.

இது மேற்கூறிய அளவின்றி இவ்வாறு செய்யின் துணையுடையானும் என்றது.

பரிதி:— கொடையினாலே பெரியவன் கோபமில்லாதவனாகில் அந்த அரசனைப்போலே சுற்றம் இல்லை எ - று.

காளிங்:— உலகத்து வேந்தனானவன் இனமும் வரிசையும் அறிந்து அணைத்தலே அன்றி, மற்றும் யாவரும் வந்து தன்னோடு மருவும் பெருங் கொடையாளனுமாய், பின், சினத்தை விரும்பானுமாம் எனில் இவனைப்போலச் சுற்றம் உடையார் மற்று இனி இடம்படு ஞாலத்து யாவரும் இல்லை எ - று.

பேணான் வெகுளி என்பது சினத்தைக்கொண்டிரான் என்பது. மருங்குடையார் என்பது சுற்றமுடையார் என்பது. மற்று இங்ஙனம்

உலகத்துப் பலரையும் சுற்றமாக மருவும் பண்புடைய வேந்தர்க்குப் பலரையும் இகழ்தல் செய்யாமை இயல்பாகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது.

ஒப்புமைப்பகுதி:

" குற்றம் பார்க்கில் சுற்றமில்லை." —கொன்றை. 18

" கோணிக் கோடி கொடுப்பதினும்
கோணாமல் காணி கொடுப்பது நல்லது." —பழ.

" பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா ரனைமலர்க்கை பணித்து நோக்கிக்
குருகுலத்தார் போரேறே குற்றமது பார்க்குங்கால் சுற்றமில்லை
ஒருகுலத்தில் பிறந்தார்கள் உடன்வாழும் வாழ்வினைப்போல் உறுதியுண்டோ
இருவருக்கும் வசையன்றோ இருநிலம்கா ரணமாக எதிர்ப்ப தென்றான்."
—வில்லி, கிருட். 17.

குறிப்பு:

மருங்கு என்ற இடப்பெயர் மருங்கிருக்கும் சுற்றத்தாரைக் காட்டிற்று; இடவாகுபெயர்.

—தொகுப்பாசிரியர்.

527. *காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
அன்னநீ ரார்க்கே உள. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— *காக்கை கரவா கரைந்து உண்ணும் - காக்கைகள் தமக்கு இரையாயின கண்டவழி மறையாது இனத்தை அழைத்து அதனோடும்கூட உண்ணாநிற்கும்; ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள - சுற்றத்தான் எய்தும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினையுடையார்க்கே உளவாவன.*

அவ்வாக்கங்களாவன பகையின்மையும், பெருஞ்செல்வம் உடைமையும் முதலாயின. எச்சவும்மையான் அறமும் இன்பமுமே அன்றிப் பொருளும் எய்தும் என்பது பெறுதும். அப்பெற்றித்தாய இயல்பு என்றது தாம் நுகர்வன எல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல்.

மணக்:— காக்கை ஓரிரை பெற்றால் அதனை மறையாது தன் சுற்றம் எல்லாவற்றையும் அழைத்து உண்ணும்; அதுபோலச் செல்வம் பெற்றால் அதனைத் தன் சுற்றத்தார் எல்லாரோடும் நுகர்வார்க்கே ஆக்கம் உளதாவது எ - று.

இவை மூன்றும் அன்பமைந்த மக்கட்குச் செய்யும் திறம் கூறின.

பரிப்:— இது மக்கள் பலர் உண்டானால் எல்லார்க்கும் பகுத்து உண்ணக் கொடுக்கவேண்டும் என்றது.

பரிதி:— காக்கை இரைபெற்றால் தானே புசியாமல்இனங் கூட்டிப் புசிப்பதுபோலச் செல்வம் பெற்றால் தானே புசியாமல் இனத்தைக்கூட்டிக் கொள்வான் எ - று.

காளிங்:— காக்கைகளானவை யாதானும் பலி முதலிய இரை பெற்றால் பலவும் அறியாமல் கரந்து ஒழுகாது என் செய்யும் எனின், தம் இனத்தையும் விளித்துக்கொண்டே நுகரும்; அதுபோல் அரசர்க்குச் சுற்றம் ஆகின்ற ஆக்கமும் அத்தன்மையார்க்கே உளவாவது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"காக முறவு கலந்துண்ணக் கண்டீர்." —தாயுமானார்.

குறிப்பு:

பலர்க்கும் கொடுத்துண்ணும் பண்புடையார்க்கே செல்வம் உண்டு என்பதாம். 'சிறியகள் பெறினே எமக்கீயு மன்னே பெரியகள் பெறினே யாம்பாடத் தான் மகிழ்ந்து உண்ணுமன்னே......................' என்ற அதியமான் செயல் ஒப்புநோக்கற்குரியது. —தொகுப்பாசிரியர்.

528. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி *வாழ்வார் பலர். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின் - எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காது அரசன் தத்தம் தகுதிக்கு ஏற்ப நோக்குமாயின், அதுநோக்கி வாழ்வார் பலர் - அச்சிறப்பு நோக்கி அவனைவிடாது வாழும் சுற்றத்தார் பலர்.

*'வாழும் உலகு' என்பது காளிங்கர் பாடம்.

உயர்ந்தார் நீங்குதல் நோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடாதொழுகுதல் நோக்கி வரிசைநோக்கை விதித்தார். இந்நான்கு பாட்டானும் சுற்றந்தழுவும் உபாயம் கூறப்பட்டது.

மணக்:— அரசன் எல்லாரையும் பொதுவாகப் பாராதே ஒருவனைத் தலைமையாலே பார்ப்பானாயின் அப்பார்வை நோக்கி அவனை விடாது வாழுஞ் சுற்றத்தார் பலர் எ - று.

இஃது ஒருவனை இளவரசாக்க வேண்டும் என்றது.

பரிப்:— மக்கள் பலர் உண்டானால் எல்லாரையும் ஒக்கப் பாராது நீதிமான் ஒருவனை இளவரசு ஆக்க வேண்டும் என்றது.

பரிதி:— அரசன் உறவின்முறையரான பதினெட்டுப்பேர் முதலான பேரை, யெல்லாரும் ஒக்கும் என்று விசாரியாமல் தராதர பாவனை யறிந்து பார்ப்பானாகில் அதுநோக்கி அரசனைச் சூழ்ந்து இருப்பார் பலர் எ - று.

காலிங்:— கீழ்ச்சொன்ன முறைமையின் பொதுப்பட அணைத்தலேயும் அன்றிப் பின்னும் பிறர் குலமும் ஒழுக்கமும் குணமும் கல்வியும் முதலிய மேம்பாட்டு வேற்றுமையானும் குறிக்கொண்டு அணைப்பனாயின் மற்று அம்மரபு நோக்கித் தாமும் அங்ஙனம் ஒழுகுவர் உலகத்தோர்; எனவே இதனைப் படிமரபாகக்கொண்டு யாவரும் தம்தம் சுற்றம் ஓம்புவார் எ - று.

ஒப்புமைப்பகுதி

" ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே." —புறம் 121.

முதுமொழிவெண்பாக்கள் :

"சோமாசி மாறனார் சுந்தரரால் யாகமினித்(து)
ஆமா றரனை அழைப்பித்தார் - ஆமாம்." —திருக். 45.

குறிப்பு:

உழுகிற மாட்டுக்கும் ஒருபடி கொள்ளு ஊர் சுற்றுகிற மாட்டுக்கும் ஒரு படி கொள்ளு என்று அரசன் சமநோக்குடையவனுயின் அறிவுடையார் தம் அறிவு அவமதிக்கப்பெறுதல் நோக்கி அகலுவர். வரிசையறிதலோ அரிதாயினும் அதனை அறிந்து செய்யின் அதுவே அறிவுச் சுற்றமும் அகலாது பாதுகாக்கும் வழி என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

529. தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும். (௯)

உரைப்பகுதி:

பரிமே:— தமராகித் தன் துறந்தார் சுற்றம் - முன் தமராய் வைத்துத் தன்னோடு அமராது யாதானும் ஒரு காரணத்தால் தன்னைப் பிரிந்துபோயவர் பின்னும் வந்து சுற்றமாதல், அமராமைக் காரணம் இன்றிவரும் - அவ்வமராமைக்காரணம் தன்மாட்டு இல்லையாகத் தானே உளதாம்.

அமராமைக்காரணமின்றி என்றதனுன், முன் அஃது உண்டாய்த் துறத்தல் பெற்றும். அஃதாவது அரசன் தான் நெறிகெட ஒழுகல் வெறுப்பன செய்தல் என்றிவை முதலியவற்றுன் வருவது. ஆக்கம் வருவிக்கப்பட்டது. இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்குச் செயற்கையான் வந்தநீக்கம் அதனை ஒழிய ஒழியும், ஒழிந்தால் அவர்க்கு அன்புசெய்து கொள்ளவேண்டா, பழைய இயல்பாய் நிற்கும் என்பார் வரும் என்றூர்.

மணக்:— முன்பு தனக்குத் தமராகி வைத்துத் தன்னை விட்டுப் போனவர் பின்புவந்து சுற்றமாதல்; அவர்மாட்டு அமராமைக்குக் காரணம் இன்றி ஒழுக வரும் எ - று.

இது தன்னைவிட்டுப்போன இராஜபுத்திரரைக் கூட்டிக்கொள்ளு மாறு கூறிற்று.

பரிப்:— காரணம் இன்றி ஒழுகுதலாவது அவனுடைய சுற்றத் தோடு மேவி ஒழுகுதலும் அதுபோல்வனவும். இது விட்டுப்போன புத்திரனைக் கூட்டிக் கொள்ளுமாறு கூறிற்று.

பரிதி:— உறவின் முறையான காரியங்கண்டு சேர்த்தலும் காரியங்கண்டு பிரித்தலும் செய்வானாகில் அந்தச்சுற்றம் ஓரிடத்திலும் நிலைபெறுதலின்மை காரணமின்றியே வரும் எ - று.

காளிங்:— குரவர் முதலிய மூத்தோர் யாவர், மற்று இவர் தாம் தகாதன செய்யின் தகாது என்று அடித்தலும், கல்லாது இகழின் கல் லென்று கழறலும் செய்தால் நமக்கு இவை உபதேசம் என்றும் கொள்ளாது செய்யின் மற்று அச்சுற்றத்தாரது பொருந்தாமையால் தம்மைக் கைவிடுதல் காரணம் இன்றி வரும் எ - று.

தமராகி என்பது தமக்கு உரியராகி என்றது, தன் துறந்தார் என்பது தன்னைத் துறந்தார் என்றது. கல்லுதலாவது அடித்துச் சொல்லுதல். அமராமை என்பது பொருந்தாமை,

530. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல். (௧0)

உரைப்பகுதி :

பரிமே:— உழைப் பிரிந்து காரணத்தின் வந்தானை - காரணம் இன்றித் தன்னிடத்து நின்றும் பிரிந்துபோய்ப் பின் காரணத்தான்வந்த சுற்றத்தானை, வேந்தன் இழைத்து இருந்து எண்ணிக் கொளல் - அரசன் அக்காரணத்தைச் செய்துவைத்து ஆராய்ந்து தழீஇக்கொள்க.

வாளா உழைப்பிரிந்து என்றமையின், பிரிதற்குக் காரணமின்மை பெற்றும். வருதற்காரணத்தைச் செய்யாவழிப் பிரிந்துபோய்ப் பகையோடு கூடுமாகலின் இழைத்திருந்து என்றும், அன்பின்றிப் போய்ப் பின்னும் காரணத்தான் வந்தமையின் எண்ணிக்கொளல் என்றும் கூறினார். பிரிந்துபோய சுற்றத்தாருள் தீமைசெய்யப்போய் அதனையொழிய வருவானும், அது செய்யாமற்போய்ப் பின் நன்மை செய்ய வருவானும் தழுவப்படுமாகலின், தழுவுமாறு முறையே இவ்விரண்டுபாட்டானும் கூறப்பட்டது.

மணக்:— தன்னிடத்தினின்று நீங்கி ஒரு காரணத்தால் வந்த வனை அரசன் அக்காரணத்தைச் செய்துவைத்து, பின்பு காரியமானபடி எண்ணி அதற்குத் தக்கபடி கூட்டிக் கொள்ளுக எ - று.

பரிப்:— எண்ணிக் கோடலாவது அவன் வந்த காரணத்தை எண்ணுதலும், ஒருவனாகில் அதற்குத் தக்கவும் பலர் உண்டாகில் அதற்குத் தக்கவும் எண்ணுதலும். இது மீண்டுவந்த இராஜ புத்திரனோடு செய்யும் திறன் கூறிற்று.

பரிதி:— அரசனிடத்திலே பலனுண்டாகில் சூழ்ந்திருந்து, பலனற்றால் கைவிட்டுப்போய் மீண்டுவந்தும் இப்படியேயுள்ள பேரையும் அறிக எ - று.

காளிங்:— தன் முதுகுரவர் மாட்டினின்று நீங்கி மற்று யாதானும் ஒரு காரணத்தினால் தன் மாட்டு வந்தான் ஒருவனை மற்று அம்மன்னனானவன் யாது செய்யற்பாலதோ எனின், அவன் தன்மையைப் பல படியும் ஆராய்ந்து அமைந்து பின்னையும் கடிதின் தேறாது கசடற விசாரித்துத் தகும் எனின் தம் சுற்றத்தோடு ஒக்கத்தழீஇக் கொள்ளினும் கொள்க: அல்ல எனின் அது செய்யாதொழிக எ - று.

உழைப்பிரிந்து என்பது தன் முதுகுரவர் மாட்டினின்று நீங்கி என்றது.

முதுமொழிவெண்பாக்கள் :

" அன்றுதமர் உள்ளம் அறிந்தடைந்த வீடணற்குச்
சென்றுறுதி சொன்னான் சிவசிவா - ஒன்றும்." —சிவசிவ. 53.

குறள்வைப்புமுறை

பரிமே:— பற்றற்ற, விருப்பறா, அளவளா, சுற்றத்தால், கொடுத்தலும், பெருங்கொடை, காக்கை, பொதுநோக்கான், தமராகி, உழைப்பிரிந்து.

மணக்:— சுற்றத்தால், கொடுத்தலும், பெருங்கொடை, பற்றற்ற, அளவளா, விருப்பறா, பொதுநோக்கான், காக்கை, தமராகி, உழைப்பிரிந்து.

பரிதி:— கொடுத்தலும், சுற்றத்தால், விருப்பறா, அளவளா, காக்கை, பொதுநோக்கான், உழைப்பிரிந்து, தமராகி, பற்றற்ற, பெருங்கொடை.

காளிங்:— கொடுத்தலும், சுற்றத்தால், விருப்பறா, அளவளா, பற்றற்ற, தமராகி, உழைப்பிரிந்து, காக்கை, பொதுநோக்கான், பெருங்கொடை.

54. பொச்சாவாமை.

தொகுப்புரை:

[அளவிறந்த மகிழ்ச்சியான் விளையும் மறதி அளவுகடந்த சினத்தினும் தீதாம். அன்றாடங் காய்ச்சும் அளவு வறுமை அறிவைக் கெடுப்பதுபோல மறதி புகழை யழிக்கும். மறதியுடையார்களுக்குப் புகழே இல்லை. அது உலகத்தில் எல்லா நூல்களுக்கும் ஒத்தமுடிபாம். அஞ்சுபவர்களுக்குக் கோட்டையிருந்தும் பயனில்லை. அதுபோல மறதியுடையார்க்குச் செல்வம் முதலிய சிறப்புக்களிருந்தும் பயனில்லை. வருமுன் காவாது மறந்தவன் வந்தபின் தன்பிழைக்காகத் தான்வருந்துவன். என்றும் எவ்விடத்தும் மறவாமை அரசர்க்குப் பொருந்துமாயின் அரசர்க்கு அதனைப் போன்றதொரு நன்மையில்லை. மன்னன் மறவாத மனத்தோடு எதனையும் நன்கு எண்ணிச் செய்வானாயின் அவனால் முடியாதகாரியம் ஒன்றும் இல்லை. அரசர்க்குரியனவாக நூல்கள் புகழ்ந்தனவற்றை மிகக் கவனமாகச் செய்க. அவற்றை மறந்தால் அவனுக்கு எழுபிறப்பினும் நன்மையில்லை. மகிழ்ச்சியால் செருக்கும்போது மறதியால் கெட்டவர்களை எண்ணிப் பார்க்க. மன்னன் மறவாமல் எதனையும் நினையவல்லானாயின் நினைத்தவெல்லாம் நினைத்தபடியே அடைதல் எளிதாம்.]

அதிகாரப்பொருள்:

பரிமே.— அஃதாவது உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றான் மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தல் முதலிய காரியங்களினும் சோர்தலைச் செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாரால் பயனுள்ளது இச்சோர்வில்வழியாகலின், இதுசுற்றந்தழாலின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— பொச்சாவாமையாவது மறவியின்றி ஒழுகுதல். அது தனது சோர்வு பார்த்துப் பிறர் வஞ்சகஞ் செய்யுமிடங்களினும், அறம் பொருள் இன்பங்கள் செய்யவேண்டுமிடங்களினும் மறத்தலின்மை. பொச்சாப்பு எனினும், மறவி எனினும், இகழ்ச்சி எனினும் ஒக்கும்.

பரிப்:— மேல் அமாத்தியர்மாட்டும் சுற்றத்தார்மாட்டும் ஒழுகும் திறன் கூறினார்; அதனால் பயன் உண்டாவது தன்னைத் தான் கடைப்பிடித்து ஒழுகின் என்று அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— பொச்சாவாமையாவது செல்வம் பெற்றோம் என்னும் ஆங்காரத்தினால் அறிவிலனாதல் எ - று.

531. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு. (க)

உரைப்பகுதி :

பரிமே:— சிறந்த உவகை மகிழ்ச்சியிற் சோர்வு - மிக்க உவகைக் களிப்பான் வரும் மறவி, இறந்த வெகுளியின் தீது - அரசனுக்கு அளவிறந்த வெகுளியினும் தீது.

மிக்கவுவகை - பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதம் என்று இவற்றான் வருவது. அளவு - பகைவரை அடர்த்தற்கும் கொடியோரை ஒறுத்தற்கும் வேண்டுவது. இறந்த வெகுளி ஒரோவழிப் பகைவரையும் கொல்லும்; இஃது அன்னதன்றித் தன்னையே கோறலின், அதனினும் தீதாயிற்று.

மணக்:— மிகுத்த வெகுளியினும் தனக்குத் தீமையைச் செய்யும்; மிக்க உவகைக்களிப்பினால் வரும் மறப்பு எ - று.

தனக்குச் சிறந்த உவகை தன்மகிழ்ச்சியால் சோருஞ் சோர்வு என்றும், உய்க்கவேண்டுமவரிடத்து உய்க்கும் உவகை என்றுமாம்.

பரிப்:— இது காமத்தின்கண்ணும் வெகுட்சியின்கண்ணும் கடைப்பிடித்தல் கூறிற்று.

பரிதி:— அறிவு போன கோபத்திலும் பொல்லாது, செல்வம் பெற்றோம் என்னும் பிரியத்தினால் உள்ளம் மறப்பது எ - று.

காளிங்:— அரசராய் உள்ளவர் தமக்கு அடாதவழிச் சினக்கின்ற மிகுசினம் போல மிகவும் தீது என்பது யாதோ எனின், தமது மனச் செருக்கினாலே யாவர் மாட்டும் இன்புற்றிராது மிக்க உவகையைச் சோர விடுக்கின்ற சோர்வு ஈ - று.

ஒப்புமைப்பகுதி:

" பெருமிதம் பெரிய செல்வம் பேரெழில் பெரிய இன்பம்
தருமிகு களிப்பின் மூழ்கித் தங்குறின் ஏம கண்டா
வருமிகு பொச்சாப் பந்தம் மறவியான் நின்னைக் காத்துப்
பொருமிகு பகையை வெல்லும் பொருளெலாம் இழப்ப தாகும்"
—விநா. அரசி. 85.

" தீராக் கோபம் போராய் முடியும் " —பழ

குறிப்பு:

செல்லிடத்துச் சினக்கப்பட்டார் தகுதிக்கு விஞ்சிய வெகுளியும், அல்லிடத்துச் செலுத்திய வெகுளியும் ஆகிய இரண்டுமே இறந்தவெகுளி எனப்பட்டன. இது ஒருகால் பகைவரையும் கொல்லும் என்றது வெகுளி உண்டானபோதே உபாயமறிதற் சிறப்பினதாகிய நுண்ணறிவை மறைத்துச் சேர்ந்தாரைக் கொல்லியாமாதலின். அதனினும் தீது உவகைக் களிப்பால் விளையும் மறதி. களிப்பு மறதி அறிவை மயக்கி ஊக்கத்தையும் கெடுத்தலின் உடையவனையே கொல்லுவதாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

532. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— புகழைப் பொச்சாப்புக் கொல்லும் - ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும், அறிவினை நிச்சநிரப்புக் கொன்றாங்கு - அறிவினை நிச்சநிரப்புக் கெடுக்குமாறுபோல.

நிச்சநிரப்பு - நாடோறும் இரவான் வருந்தித் தன் வயிறு நிறைத்தல். அஃது அறிவுடையான்கண் உண்டாயின் அவற்கு இளிவரவானும் பாவத்தானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன்நன்கு மதிப்பினை அழிக்கும்; அதுபோல மறவியும் புகழுடையான்கண் உண்டாயின் அவற்குத் தற்காவாமையானும் காரியக்கேட்டானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் நன்குமதிப்பினை அழிக்கும் என்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானும் பொச்சாப்பினது குற்றம் கூறப்பட்டது

மணக்:— மறவியாகின்றது புகழைக்கொல்லும்; நாடோறும் இரவால் வருந்தி வயிற்றை நிறைக்கும் ஊண் அறிவைக் கொல்லுமாறு போல எ - று.

இவை மூன்றினும் பொருளின்கண் கடைப்பிடித்தல் கூறினர்.

பரிப்:— புகழ்பட வாழுங்கால் தன் அளவை மறந்து கொடுப்பன் ஆயின் தான் கருதின புகழும் முடியச் செல்லாது அளவிலே நின்று சாம்; இயற்கையாகிய அறிவு நல்குரவினால் சாமாறுபோல என்றவாறாயிற்று.

பரிதி:— பொச்சாப்பாகிய மதம், தன் புகழைக் கொல்லும்; அறிவினை மிடி கொன்றது போல எ - று.

காளிங்:— உலகத்துத் தாம் பிறரை இகழும் இகழ்ச்சியாவது, மற்று அது தம் புகழினைத் தலையழிக்கும்: என்போல எனின், ஒருவரது அறிவுடைமையை சிலர் மாட்டு நாள்தோறும் சென்று இரக்கும் இரப்பானது தலையழித்தாற்போல எ - று.

மேற்கோள்பகுதி :

மயிலை:— பொச்சாப்பு என்பது உடம்பொடு கூடிய உயிர்க் குணம் என்பதற்கு மேற்கோள். (நன். 451.)

ஒப்புமைப்பகுதி:

"என், அறிவுகெட நின்ற நல்கூர் மையே" —புறம். 266 : 13.

முதுமொழிவெண்பாக்கள்:

" இப்புவிமேல் கோயில் இழந்ததய ஞர்மறந்து
செப்புதலால் அன்றோ சிவசிவா — எப்பொழுதும்." —சிவசிவ. 54.

குறிப்பு:

நிரப்பு - வறுமை. குறையாய் நிரப்பிக்கொண்டே யிருக்கவேண்டுதலின் காரணக்குறி. முதனிலைத் தொழிலாகுபெயர். நிச்ச நிரப்பு - நித்திய தரித்திரம். வயிற்றுப்பாட்டைப் பார்க்க அலைபவனுக்கு அறிவு விளக்கங்காண நேரம் ஏது? ஆதலின் நிரப்பு அறிவைக் கெடுக்கும் என்றார். அறிவுடைமையும் பசிவந்திடப் பறக்கும் பத்தனுள் ஒன்றுதல் காண்க.

—தொகுப்பாசிரியர்.

533. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுஉலகத்(து)
எப்பானூ லோர்க்குந் துணிவு. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— பொச்சாப்பார்க்குப் புகழ்மை இல்லை - பொச்சாந்து ஒழுகுவார்க்குப் புகழுடைமை இல்லை, அது உலகத்து எப்பால் நூலோர்க்கும் துணிவு - அவ்வின்மை இந்நீதி நூலுடையார்க்கே அன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது.

அரசர்க்கே அன்றி அறம் முதலிய நான்கினும் முயல்வார் யாவர்க்கும் அவை கைகூடாமையின் புகழில்லை என்பது தோன்ற, எப்பால் நூலோர்க்கும் துணிவு என்றார்.

மணக்:— பொச்சாப்பு உடையார்க்குப் புகழுடைமையில்லையாம்; அஃது உலகத்து வழங்குகின்ற *எவ்வகைப்பட்ட நூலோர்க்குந் துணிவு எ - று.

இது பொச்சாப்பார்க்குப் புகழாகாது என்றது.

பரிதி:— மதப்பட்டால் அறிவில்லாதாற்குப் புகழில்லை; அது எல்லாச்சமயத்தார் சொல்லுஞ் சாத்திரத்திலுங் கேட்க எ - று.

காளிங்:— தத்தம் கோட்பாட்டால் பெறும் பயன் வேறுபடுத்து அமைக்கும் அறுவகைச் சமயத்தோர்க்கும் அவைகடந்த அப்பாலோர்க்கும் பிறரை அவமதிபண்ணி இகழாது ஆற்றல் உடையராதலே தத்தம் பெறுபயனுக்கு உறுதி நெறியென்பது, தாம் கற்ற நூல்களில் பெறுபயன் அறியும் பிற நூல்களினும் இக்குற்றம் நன்று என்பார் யாரும் இல்லை எ - று.

ஒப்புமைப்பகுதி:

“பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரும் மின்னும் மழை.” —கார். 7.

குறிப்பு:

எப்பால் நூலோர் - அறம் பொருள் இன்பம் வீடாகிய நூல்களை யுணர்ந்த பெரியோர்கள். நூலின் துணிவென்னாது நூலோர் துணிவென்றது நூலறிவு மக்கள் வாழ்க்கையோடு பொருந்தும்போது அநுபவமாகவும், அதனை இடைவிடாமற்பயிலும் போது ஊகித்தறியும் நுண்ணறிவாகவும் ஆகிச் சுருதி யுக்தி அநுபவமாகப் பரிணமிப் படுதலின் இம்மூன்று நிலையினையும் உணர்ந்தோர் நூலோர் ஆதலின் என்க. ‘மதிநுட்பம் நூலோடுடையார்க்கு அதிநுட்பம்’ என்றதும் இக்கருத்தை விளக்குமாறு காண்க.
—தொகுப்பாசிரியர்.

534. அச்சம் உடையார்க் கரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— அரண் அச்சம் உடையார்க்கு இல்லை - காடு மலை முதலிய அரண்களுள்ளே நிற்பினும், மனத்தின்கண் அச்சம் உடையார்க்கு அவற்றால்பயனில்லை, ஆங்கு நன்கு பொச்சாப்பு உடையார்க்கு இல்லை-அது போலச் செல்வமெல்லாம் உடையராயினும், மனத்தின்கண் மறவியை உடையார்க்கு அவற்றால் பயனில்லை.

*‘அறுவகைப்பட்ட’ என்பது பரிப்பெருமாள் உரை.

நன்மைக்கு ஏதுவாகலின், நன்கு என்றார். அச்சமுடையார் நின்ற அரண் அழியுமாறுபோல மறவியுடையாருடைய செல்வங்களும் அழியும் என்பதாயிற்று.

மணக்:— அச்சமுடையார்க்கு ஆவதொரு அரணில்லை; அது போலப் பொச்சாப்புடையார்க்கு வருவதொரு நன்மை இல்லை எ - று.

இது பொச்சாப்புடையார்க்குக் காவலில்லை என்றது.

பரிப்:— அச்சம் புகுந்துழி எல்லாம் புகுதும் ஆதலின் அதனைக் காப்பது ஓர் அரண் இல்லை என்றார்; மறந்தார் செய்வதோர் பொருளில்லை ஆதலின் நன்மை இல்லை என்றார்.

பரிதி:— பேடியான பேர்க்கு அரண் இல்லை; அதுபோலப் பொய்யாகியமதம் பெற்றார்க்கு ஆக்கமில்லை எ - று.

காளிங்:— அச்சம் உடைய அரசர்க்குப் புறத்து எல்லாம் அரண் உடையரே ஆயினும், ஒன்றும் இல்லையானவாறு எவ்வண்ணம்: மற்று அவ்வண்ணமே இல்லை; யாது எனின் பிறரை எளியர் என்று அவமதி பண்ணி அவமதிப்பினை அகத்துடையார்க்கு நன்மைகள் ஒன்றும் இல்லை: தீமைகளே எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

" எந்தநெடுஞ் செல்வம் இருந்தாலும் செய்கருமம்
சிந்தைமற வாதே தினகரா—அந்திபகல்" —தினகர. 57.

குறிப்பு:

படைகள் பல சூழக் கோட்டைக்குள் இருந்தாலும் தொடைநடுங்கிக்குத் துணிவுவராது என்பது பழமொழியாதலின் அச்சம் உடையார்க்கு அரண் இல்லை என்றார். அரண் இல்லை என்றது அரண் இருந்தும் அதனாற் பயனில்லை என்றவாறு. அரணிருத்தல் தன்வலி பெருக்கற்கும் மலை குத்திக் கையிளைத்தாற்போல எயிலொடு பொருது மாற்றார்வலி குறைதற்கும், தன் படை துணைப்படைகளைத் திரட்டற்கும் ஆதலின் இவனுக்குத் துணிவின்மையால் ஒன்றும் செய்யாது நடுங்கிக்கொண்டேயிருப்பான் என்பதாம். உத்தரகுமாரன் விசயனோடிருந்தும், வில் அம்பிருந்தும், படையிருந்தும் போர்முனையைப் பார்த்து ஓடிவந்தது அச்சமுடையார்க்கு அரண் இல்லாமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். நன்கு - நன்மை. அது காரியவாகு பெயராக எல்லா நன்மைக்கும் ஏதுவாகிய செல்வத்தின்மேல் நின்றது. 'இறந்தால் போச்சுமூச்சு; மறந்தால் போச்சு காசு' என்பது பழமொழி.

—தொகுப்பாசிரியர்.

535. முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூ றிரங்கி விடும். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— முன்னுறக் காவாது இழுக்கியான் - தன்னால் காக்கப் படும் துன்பங்களை அவை வருதற்கு முன்னே அறிந்து காவாது மறந்திருந் தான், பின் ஊறு தன்பிழை இரங்கிவிடும் - பின் வந்து உற்றகாலத்துக் காக்கலாகாமையின் அப்பிழைப்பினை நினைந்து இரங்கிவிடும்.

காக்கப்படும் துன்பங்களாவன - சோர்வுபார்த்துப் பகைவர் செய்வன. ஊற்றின்கண் என்புழி உருபும் சாரியையும் உடன் தொக்கன. உற்றகாலத்துக் காக்கலாகாமையின், இரங்கிவிடும் என்றார். இவை மூன்று பாட்டானும் பொச்சாப்புடையார்க்கு வரும் ஏதம் கூறப்பட்டது.

மணக்:— * ... ...

பரிப்:— எதிரது ஆகவே பழிவரும் வழியைக் காவாதே அதனை இகழ்ந்து தப்பச் செய்தவன், அத்தப்பினால் வரும் குற்றத்துக்கு இரங்கி விடும் எ - று.

பரிதி:— தனக்கொரு விதனம் வருமுன்னே காவாதான், விதனம் வந்தால் ஒருவிதனம் நூறு விதனமாக இரங்கிவிடும் எ - று.

காலிங்:— யாம் பிறரை அவமதிப்பின், பின்பு எமக்கே பல ராலும் கேடு வந்து எய்தும் என்று முன்கோலித் தேர்ந்து பரிகரியாது பிறரை அவமதி பண்ணினான் யாவன்: மற்று அவன் தன் பழி பின் எண்ணிறந்த பலவாவதும் செய்து மற்றும் துயர் ஆற்றாது பெரிதும் சோதித்துக் கெட்டுவிடும் எ - று.

பின்னூறு என்பது நூறு வகையால் இரக்கத்தைத் தரும் என்றது.

முதுமொழிவெண்பாக்கள்:

" வந்த நெடுமாலை மதியா தமையாலே
சிந்து விழுந்தான் திருமலையா—சந்ததம்" —திருமலை.

---

* இவர் உரை கிடைக்கவில்லை.

" கோடியர் தன் போற்றேன்றக் குன்றிமதர்க் கும்பமுனி
மூடுவெண்ணேய் உற்றுன் முருகேசா—நாடுங்கால்" —முருகேசர். 54.

" மறந்துமறந் தீசன் மலரடியைப் பேண(து)
இறந்திறந்து மா னுமிடர் எய்தும்—அறிந்தறிந்து." —முதுமொழி. 87.

குறிப்பு:

இரங்கிவிடும் என்பது கழிவிரக்கத்தால் தலையெடாது கெடுவன் என்பதாம். இழுக்கியான் என்பதில் இழுக்கு அதிகாரத்தான் மறதியாகிய குற்றத்தைக்காட்டிற்று.

—தொகுப்பாசிரியர்.

536. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுஒப்ப தில். (சா)

உரைப்பகுதி :

பரிமே:— இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் - அரசர்க்கு மறவாமைக்குணம் யாவர்மாட்டும் எக்காலத்தும் ஒழிவின்றி வாய்க்குமாயின்; அது ஒப்பது இல் - அதனை ஒக்கும் நன்மை பிறிது இல்லை.

வினைசெய்வார் சுற்றத்தார் என்னும் தம்பாலார்கண்ணும் ஒப்ப வேண்டுதலின் யார்மாட்டும் என்றும், தாம் பெருகியஞான்றும் சுருங்கிய ஞான்றும் ஒப்பவேண்டுதலின் என்றும் என்றும், எல்லாக்காரியங்களினும் ஒப்பவேண்டுதலின் வழுக்காமை என்றும் கூறினர். வாயின் என்பது முதனிலைத் தொழிற்பெயரடியாகவந்த வினையெச்சம். வாய்த்தல் நேர் படுதல்.

மணக்:— யாவர்மாட்டும் எல்லாநாளும் தப்புச் செய்யாமை தப்பாமல் வாய்க்குமாயின், அதனையொக்க நன்மை பயப்பது பிறிதொன்று இல்லை எ - று.

இது முறைமை செய்யுங்கால் கடைப்பிடித்துச் செய்யவேண்டும் என்றது.

பரிதி:— தான்பிடித்த நெறி குலையாமல் யார்க்கும் ஒரு தன்மை யான குணம் பெற்றால் அது போல ஒருகுணமும் இல்லை எ - று.

காளிங்:— உலகத்து மன்னரானவர் ஒருவர்மாட்டு ஒருவரை இகழாமையாகிய குணம் உளதாயினும் ஒருபடிப்பட்ட நிற்றல் யாவர்க்கும் அரிது: மற்று இங்ஙனம் வழுவாமை வாய்ப்பின் அதனை ஒப்பதோர் நன்மை உலகத்து யாதும் இல்லை எ - று.

இழுக்காமை என்பது வழுக்காமை; இகழாமை என்றுமாம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— "இழுக்காமை............இல்" வாய்க்குமாயின் எனப் பொருள்பட்ட வாயின் என்பது. முதனிலைத் தொழிற்பெயரின் அடியாக வந்த வினையெச்சம். முதனிலைத் தொழிற் சொல்லாய்வந்த வினையெச்சமாகில் வாய்க்கின் என்று இருக்கும். "பூண்பதென்றே கொண்ட" என்னும் (323) கோவையாருள் 'எழில்வாய்' என்பதும் அது.

குறிப்பு:

இழுக்காமை வழுக்காமை வாயின் - மறவாமை நீங்காது வாய்க்குமாயின். ஒப்பது - ஒப்பதாகிய நன்மை. வாயின் - வினைஎச்சம். வாய்: பொருந்து என்னும் பொருள்தரும் பகுதி. வாய்த்து, வாய்க்க, வாய்க்கின் என மூன்றுகாலத்தும் தன்வினை பிறவினை எச்சங்கள் பிறத்தலைக்காண்க, அங்ஙனமாக இது முதனிலைத் தொழிற் பெயரும், வினைப்பகுதியும் சொல்லளவால் பெறும் ஒற்றுமை எனலாம். முதனிலைத் தொழிற்பெயரடியாகப் பிறந்த வினையெச்சம் என்றதன் கருத்து முதனிலைத் தொழிற்பெயர்கள் கூநன்று, நொக்நன்று என (கூவுதல் நன்று நோதல் நன்று) முதனிலை தொழிற்பெயர்கள் பெயரும் வினையுமாப் பிணைந்து நிற்குமேயன்றி வாயின் தோயின் என்றாற் போல எச்ச உருபு ஏற்று வினைஎச்சமாகாது என்க. அங்ஙனம் ஆயின் அது வினைப்பகுதி எனவே கொள்ளப்பெறும். இதனானே பின்னூலாரும் முதனிலைத் தொழிற்பெயரையும் வினைகளோடு இயைக்காது ஒழிந்தார் என்க.

—தொகுப்பாசிரியர்.

537. அரியஎன் றாகாத இல்லைபொச் சாவாக்
கருவியான் போற்றிச் செயின். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— அரிய என்று ஆகாத இல்லை-இவை செய்தற்கு அரியன என்று சொல்லப்பட்டு ஒருவற்கு முடியாத காரியங்களில்லை, பொச்சாவாக் கருவியான் போற்றிச்செயின் - மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப் பெறின்.

பொச்சாவாத என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது. அந்தக்கரணமாகலின் கருவி என்றார். இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியும் உடையார்க்கு எல்லாம் எளிதின் முடியும் என்பதாம். இவை இரண்டுபாட்டானும் பொச்சாவாமையது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— செயற்கு அரியன என்று செய்யலாகாதன இல்லை; மறவாமையாகிய கருவியாலே பாதுகாத்துச் செய்வானாயின் எ - று.

இது வினைசெய்யுங்கால் மறவாமை வேண்டும் என்றது.

பரிதி:— தான் நினைத்தகாரியம் முடிகிறது அருமையில்லை; தன் மனத்தில் மதப்பாடாகிய அறிவின்மை யில்லையாகில் எ - று.

காளிங்:— இவை இவை செய்தற்கு அரியன என்று தம்மால் செயற்படாது இருப்பன யாவும் இல்லை: எப்பொழுது எனின் உலகத்து நல்லோரையும் நல்லனவற்றையும் இகழ்ந்து அவமதி பண்ணுமையாகின்ற இந்தச் சாதனமாகிய உபாயத்தினைக் குறிக்கொண்டு செய்யுங்காலத்து எ - று.

இனி மற்று இவ்வாறு அவரவர் குணத் தன்மைக்குத் தக்காங்கு அளிக்க வல்ல அரசர்க்கல்லது செங்கோலாகிய நீதி நடாத்தும் நெறி யிலக்கணம் நிகழாமையால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

மேற்கோள்பகுதி :

நச்:— கருவிப்பொருள் கொண்டுமுடிந்த பெயரெச்சத்திற்கு மேற்கோள். (தொல். சொல். 136.)

சிவஞா:— பரிமேலழகியார் 'கனங்குழை' என்றதனை ஆகு பெயர் என்றாரால் எனின் அவர் 'பொச்சாவாக் கருவியால் போற்றிச் செயின்' என்பதற்குப் பொச்சாவாமனம் என அந்தக்கரணத்தைக் கருவியாகக் கூறினார். அதனை மறுத்துப் பொச்சாவாமையாகிய கருவி எனத் தாமும் பெயரெச்சச்சூத்திரத்துள் உரைத்தாராகலின் அவர்கூறியன எல்லாம் உடன்பாடு என்பது தமக்கும் கருத்தன்று என்க. (இலக். சூறு. பக். 81.)

குறிப்பு:

பொச்சாவாக்கருவி-மறவாதமனம். ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கருவி (மனம்) என்ற பெயர்கொண்டது. —தொகுப்பாசிரியர்.

538. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா(து)
இகழ்ந்தார்க் கெழுமையும் இல். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்-நீதிநூலுடையார் இவை அரசர்க்கு உரியன என்று உயர்த்துக்கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்க, செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் - அங்ஙனம் செய்யாது மறந்தவர்க்கு எழுமையினும் நன்மை இல்லையாகலான்.

அச்செயல்களாவன மூவகை ஆற்றலும், நால்வகை உபாயமும், ஐவகைத்தொழிலும், அறுவகைக்குணமும் முதலாய செயல்கள். சாதிதருமமாகிய இவற்றின் வழீஇயோர்க்கு உள்ளது நிரயத்துன்பமேயாகலின், எழுமையும் என்றார். எழுமை ஆகுபெயர். இதனால் பொச்சாவாது செய்யவேண்டுவன கூறப்பட்டன.

மணக்:— உயர்ந்தாரால் புகழப்பட்டவையிற்றைக் கடைப்பிடித்துச் செய்தல்வேண்டும்; இவையிற்றைச் செய்யாது இகழ்ந்தவர்க்கு எழுபிறப்பினும் நன்மையில்லையாமாதலான் எ - று.

இஃது அறத்ின்கண் இகழாமற் செய்வது கூறிற்று.

பரிதி:— உலகம் புகழ்ந்த காரியம் தனக்கு வந்தால் அந்தக் காரியத்தைப் போற்றிச்செய்வான்; செய்யானாகில் ஏழுசெனனத்தாலும் கீர்த்தி இல்லை எ - று.

காளிங்:— தொல் கலையும் தொல் சான்றோரும் இவை இவை நல்ல என்று புகழ்ந்தவற்றை நீரும் குறிக்கொண்டு செய்தலை விரும்புமின்: என்னை எனின் இங்ஙனம் செய்யாது அவற்றை இகழ்ந்தவர்க்கு இம்மை ஆக்கமும் அன்றி மறுமை ஆக்கமும் இல்லை எ - று.

எழுமை என்பது மறுமை.

ஒப்புமைப்பகுதி :

“ உற்றிடும் ஆற்றல் மூன்றும் உபாயங்கள் நான்கும் நன்மை
பற்றிய தொழில்கள் ஐந்தும் பண்புறு குணங்கள் ஆறும்
மற்றைய அனைத்தும் கேடாம் வளர்பிறப்பு ஏழன் காறும்
பற்றிடு நன்மை யின்றாம் பாழ்த்தபொச் சாப்புச் சாரின்.”

—விநா. அரசி. 86.

குறிப்பு:

மூவகையாற்றல் - அறிவு, ஆண்மை, பெருமை. நால்வகையுபாயம் - தான சாம பேத தண்டம். ஐவகைத்தொழில் - சிறு முயற்சியினவும், செய்தாற் பயனுள்ளனவும், பயன் பெரிதாயினவும், பயனில் ஐயமில்லாதனவும், பின்பு இன்பம் விளைப்பனவும் என இவை; மேற்சேறல், அரண்முற்றல், கோடல், பொருதல், வேறல் என்ற குறிப்பும் உண்டு. இதில் குறித்த மேற்சேறல் என்பது அறுவகைக் குணத்துள்ளும் ஒன்றாயிருத்தலின் அக்குறிப்பு சிந்திக்கத்தக்கது. அறுவகைக்குணம் - நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்பன. இகழ்ந்தார்க்கு - மறந்தார்க்கு. இது அதிகாரத்தால் பெற்ற பொருள்.

—தொகுப்பாசிரியர்.

539. இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. (௯)

உரைப்பகுதி:

பரிமே:— தம் மகிழ்ச்சியின் தாம் மைந்து உறும் போழ்து - அரசர் தம்மகிழ்ச்சிக்கண் தாம் வலியுறும்பொழுது, இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக - முற்காலத்து அதனாய சோர்வால் கெட்டவர்களை நினைக்க.

காரணங்களோடு அவர்க்கு உளதாய உரிமையை மகிழ்ச்சிமேல் ஏற்றித் தம் மகிழ்ச்சியின் என்றும், இகழ்ச்சியும் கேடும் உடன் தோன்றுமாகலின் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து என்றும் கூறினார். கெட்டாரை உள்ளவே, நாமும் அவ்வாறே கெடுதும் என்று அதன்கண் மைந்துறார் என்பது கருத்து. எண்ணுக என்று பாடம் ஓதுவாரும் உளர்.*

மணக்:— அரசர் குறித்துணரும் உணர்ச்சியின்மையாலே முன்பு கெட்ட அரசரை நினைக்க; தாமும் தம்முடைய மகிழ்ச்சியாலே வலியராயிருக்கும்பொழுது எ - று.

இஃது உண்பவை, உடுப்பவை, பூசுபவை சோதித்துக் கொள்க என்றது.

பரிப்:— இதனால் சொல்லியது வலியாரைப் பகைவர் வெல்லுங்கால் அவரைச் சோர்வு பார்த்துக் களவினால் கொல்வார்: ஆதலால்

* இது 'காளிங்கர்' பாடம்.

தன்வலியை நினையாது பகை உண்டாகும் என்று நினைத்துக் கோயிலும், அந்தப்புரமும், நீர் விளையாட்டு ஆடும் இடமும், இளமரக்காவும், வேட்டையாடும் காடும், உண்பனவும், பூசுமவையும் இகழாது சோதித்துக் கொள்க.

பரிதி— கர்வத்தின் மிகுதியினாலே முன்னாளில் கெட்டாரை எண்ணுக: தாமுஞ் செல்வம் பெற்றோம் என்னும் கர்வத்தினால் ஏதம் பெறும் போழ்து எ - று.

காளிங்:— இவ்வுலகத்து வேந்தருள் முற்காலத்துத் தாம் பிறரை இகழ்ந்து வலி செய்யும் பொழுது......................எ - று.

இதற்குப் பாரதத்தில் நூற்றுவரையும், இராமாயணத்து இராவணனையும், பிறரையும் எண்ணிக்கொள்க. மைந்துறூஉம் போழ்து என்பது வலியினைச் செய்யும்பொழுது என்றது.

மேற்கோள்பகுதி:

நச்:— ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பற்றிவரும் வாய்பாடுகள் உணர்த்தும் சூத்திரத்தில் அன்னபிறவும் என்றதனால் இகழ்ச்சியாற் கெட்டான், மகிழ்ச்சியின்மைந்துற்றான் என்பனபோல்வனவும் கொள்க என்பர். (தொல். சொல். 79.)

ஒப்புமைப்பகுதி:

"மகிழ்ச்சி எய்தி மாற்றோர் இல்லெனும்
இகழ்ச்சி ஏதம் தலைத்தது எனக்கு." —பெருங். 3 : 24 : 164 - 165.

"இகழ்ச்சி யிற்கெடு வார்களை எண்ணுக
மகிழ்ச்சி யுண்மதி மைந்துறும் போதெனப்
புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுள்
திகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மன்னனே" —சூளா. சீயவதை. 56.

"நெகிழ்ச்சியோன் றின்றிச் செய்ய நினைந்தகா ரியத்தில் சென்று
புகழ்ச்சிசெய் முயற்சி செய்யின் பொருள்பய வாமை யில்லை
இகழ்ச்சியிற் கெட்டார் தம்மை எண்ணுதல் செய்வை யாயின்
மகிழ்ச்சியின் மைந்து றுத வண்மைவந் தடுக்கு மைந்தா."
—விநா. அரசி. 87.

முதுமொழிவெண்பாக்கள்:

"முப்புரத்தோர் வேவ உடனிருந்த மூவரே
துப்பினால் கண்டறிந்தார் சோமேசா—எப்பால்" —சோமேசர். 54.

"தண்ணார் சடைமுடியைத் தக்கனிழந் தானரனை
எண்ணாமல் அன்றோ இரங்கேசா—மண்ணோர்." —இரங். 54.

குறிப்பு:

இமவான், தன்மகள் பார்வதியைச் சிவனுக்கு மணம் புரிந்து கொடுக்கின்ற மகிழ்ச்சியால் மைந்துறும்போது தனக்குமுன் இதேபோல மைந்துறுங்காலத்து இகழ்ச்சியால் தன் தலையிழந்து ஆட்டுத்தலைபெற்ற தக்கனை மனத்தில் எண்ணிக் கொண்டே நீர்வார்த்தான் என்ற 'வாசநல்லுதகம் உய்த்தான் மருகனென்றவனை உன்னி' கந்தபுராணப்பகுதி காண்க. மருகன் என்றவன் - சிவனை மருகனென்று எள்ளியவனாகிய தக்கன். இங்ஙனம் உள்ளின் தான் தவறநேராது என்பது கருத்து.

—தொகுப்பாசிரியர்.

540. உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின். (௧௦)

உரைப்பகுதி:

பரிமே:— தான் உள்ளியது எய்தல் எளிது மன் - அரசனுக்குத் தான் எய்த நினைத்தபொருளை அந்நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம், மற்றும் உள்ளியது உள்ளப்பெறின் - பின்னும் அதனையே நினைக்கக் கூடுமாயின்.

அது கூடாது என்பது ஒழிந்து நின்றமையின், மன் ஒழியிசைக் கண் வந்தது. அதனையே நினைத்தலாவது மறவியின்றி அதன்கண்ணே முயறல். இவை இரண்டுபாட்டானும் பொச்சாவாமைக்கு உபாயம் கூறப்பட்டது.

மணக்:— தான் நினைந்த பொருளைப் பெறுதல் எளிது; பின்பும் அதனை மறவாதே நினைக்கக் கூடுமாயின் எ - று.

இனிப் பொருளின்கண் மறவாமை கூறுவார் முற்பட நினைத்த தனை மறவாமை வேண்டும் என்றார்.

பரிதி:— தான் நினைத்தகாரியங் கூடல் எளிது; தான் நினைத்த காரியத்தைப் பல காலும் நினைத்துச் செய்வானாயின் எ - று'

காளிங்:— அரசன் தான் கருதிய நன்மையைக் கருதியாங்குப் பெறுதல் மிகவும் எளிது; எப்பொழுது எனின் இவ்வுலகத்து ஒருவரும் தன்னை அவமதி பண்ணாது மதித்தல் வேண்டித் தான் கருதியிருப்பது பிறர்க்கும் இவ்வாறே கருதப்பெறின் எ - று.

உலகத்தார் செய்யும் வினையின் விளைவு வித்தியது விளைதலோடு ஒக்கும் ஆதலால் பிறர்மாட்டு இகழ்ச்சியின்றி நன்மை கருதுவார்க்கும் வந்து விளைவது நன்மை. எ - று.

குறிப்பு:

நினைத்ததை நினைத்தல் மறதிக்கு மருந்து என்பதாம். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்பது இதனோடு ஒத்திருத்தல் காண்க. இதனை மனத்தில் வைத்தே பரிமேலழகர் 'உள்ளியது எய்தல் எளிது' என்பதற்கு நினைத்ததை எய்தல் எளிது என்றொழியாது நினைத்த பொருளை நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம் என்று உரைவகுத்தார். அங்ஙனமே உள்ளியது உள்ளுதல் உறுதியான எண்ணமுடையராதல். திண்ணியார் என்றதும் இதனை.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை.

பரிமே:— இறந்த, பொச்சாப்பு, பொச்சாப்பார்க்கு, அச்சம், முன்னுறக், இழுக்காமை, அரியஎன்று, புகழ்ந்தவை, இகழ்ச்சியின், உள்ளியது.

மணக்:— பொச்சாப்பார்க்கு, இகழ்ச்சியின், அச்சம், புகழ்ந்தவை, உள்ளியது, அரியஎன்று, பொச்சாப்பு, இழுக்காமை, முன்னுறக், இறந்த.

பரிதி:— இகழ்ச்சியின், இறந்த, அச்சம், முன்னுறக், பொச்சாப்பு, புகழ்ந்தவை, பொச்சாப்பார்க்கு, இழுக்காமை, உள்ளியது, அரியஎன்று.

காளிங்:— பொச்சாப்பு, இகழ்ச்சியின், முன்னுறக், அச்சம், இறந்த, இழுக்காமை, பொச்சாப்பார்க்கு, உள்ளியது, புகழ்ந்தவை, அரியஎன்று.

55. செங்கோன்மை

தொகுப்புரை:

[குடிகள் குற்றஞ்செய்தால் நன்றாக ஆராய்ந்து, யாரிடத்தும் தாட்சணியம் செய்யாமல் நடுவு நிலைமையோடு தெளிந்து செய்வதே செங்கோன்மை. உலகம் மழையைநோக்கி வாழ்வதுபோலக் குடிகள் மன்னவன் செங்கோலை நோக்கி வாழ்கின்றன. வேதத்திற்கும், வேத ஒழுக்கத்திற்கும் அடிப்படை மன்னவன் செங்கோலே. குடிகளைத் தழுவி ஆளும் மன்னவன் அடியை உலகம் தழுவிக்கொண்டு விடாது பற்றி நிற்கும். விதிப்படிச் செங்கோல் செலுத்தும் மன்னவன் நாட்டிலேதான் மழையும் விளைவும் மிகுதி. வேந்தர்க்கு எல்லாம் வெற்றிதருவது வேலன்று; செங்கோலே. அரசன் உலகத்தைக் காக்கிறான். அவனைக் காப்பது நீதிவழுவாச் செங்கோலாட்சி. முறையுங் குறையும் தெரிவித்துக்கொள்ள விரும்பிய குடிகளுக்குக் காட்சிக்கு எளியனாய் அவர்கள் சொல்லிக்கொள்ளும் குறை முறைகளை அமைச்சரோடு ஆராய்ந்து முறை வழங்காத மன்னன் கீழாய்த் தானேகெடுவன். குடிகளுக்குத் தன்னாலும் பிறராலும் துன்பம் வாராமல் பாதுகாத்து அவர்கள் செய்த குற்றத்தையும் கண்டித்துத் திருத்துதல் அரசன் கடமை. அது ஒரு பழியன்று. கொலைகாரர்களை அரசன் தண்டித்தடக்குதல் பயிரைக் களைபிடுங்கிக் காத்ததுபோலாம்.]

அதிகாரப்பொருள்

பரிமே:— அஃதாவது அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறை ஒருபால் கோடாது செவ்விய கோல்போறலின் செங்கோல் எனப்பட்டது. வடநூலாரும் தண்டம் என்றார். அது சோர்வில்லாத அரசனால் செயற்பாலதாகலின், இது பொச்சாவாமையின்பின் வைக்கப் பட்டது.

மணக்:— செங்கோன்மையாவது செவ்விதாகிய முறைசெய்தலுடைமை. குற்றமும் குணமும் தூக்கி ஆராய்தலால் கோல் என்றார்; அது கோடாமையால் செங்கோல் ஆயிற்று. மேல் அமாத்தியர்மாட்டும் சுற்றத்தார்மாட்டும் தன்மாட்டும் செய்யுந் திறம் கூறினார். உலகத்தார்மாட்டும் செய்யுந்திறம் கூறுகின்றாராதலான், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— செங்கோன்மையாவது அரசன் செங்கோல் நீதியைச் சொல்லுதல் எ - று.

541. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. (க)

உரைப்பகுதி:

பரிமே:— ஓர்ந்து - தன்கீழ் வாழ்வார் குற்றம்செய்தால் அக் குற்றத்தை நாடி, யார்மாட்டும் கண்ணோடாது - யாவர்மாட்டும் கண்ணோடாது, இறைபுரிந்து - நடுவுநிலைமையைப் பொருந்தி, தேர்ந்து - அக் குற்றத்திற்குச் சொல்லிய நூலாரோடும் ஆராய்ந்து, செய்வஃதே முறை - அவ்வளவிற்றாகச் செய்வதே முறையாம்.

நடுவுநிற்றல் இறைக்கு இயல்பாகலின் அதனை இறை என்றும், சிறந்தார்கண்ணும் என்பார் யார்மாட்டும் என்றும் கூறினர். இறைமை இறை எனவும், செய்வது செய்வஃது எனவும் நின்றன. இதனால் செங் கோன்மையது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— ஒருவன் செய்த குற்றத்தை ஆராய்ந்து, நட்டோர் என்று கண்ணோடாது, தலைமையைப் பொருந்தி, யாவர்மாட்டும் குற்றத் திற்குத் தக்க தண்டத்தை நூல்முகத்தால் ஆராய்ந்து, அதன்வழியே செய்வது முறை என்று சொல்லப்படும். எ - று.

யாவர்மாட்டும் என்றது தன்சுற்றமாயினும் என்றது.

பரிப்:— இறைபுரிதலாவது சுற்றம் என்று கண்ணோடாத அரசனாயிருத்தல். இது, செங்கோன்மையாவது இத்தன்மைத்து என்று கூறிற்று.

பரிதி:— ஓர்ந்து ஒருவன்பேரில் கண்ணோட்டமற்று எல்லோர்க் கும் ஒருதன்மையாக நடப்பது செங்கோன்மை எ - று.

காளிங்:— வேந்தனானவன் தனக்குத் தகுதியும் தகுதியல்லாமை யும் ஆராய்ந்து யாவர்மாட்டும் காதல் காரணமாகக் கண்ணோட்டம் செய் யாது நெறியினை விசாரித்து அதன்கண் தங்கிச் செய்யும் செய்கை யாது மற்று அதுவே செங்கோலாகிய நீதி எ - று.

ஓர்ந்து என்பது ஆராய்ந்து என்றது. புரிந்து என்பது அதன் கண் தங்கி என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— இறைமை - இறை எனவும், செய்வது - செய்வஃது எனவும் நின்றன. ஈண்டு ஆய்தம் பெறுதற்கு விதியின்மையின் அவ்வாறு உரைத்தார்; செய்யுட்டொடைக் காரண விகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல்" —கலி: 133: 13.

"நீமெய்கண்ட தீமை காணின், ஒப்பநாடி அத்தக ஒறுக்தி" —புறம் 10:3-4

"எங்கண் ணனையர் எனக்கருதின் ஏதமால்
தங்கண்ணே யானும் தகவில கண்டக்கால்
வன்கண்ண னாகி ஒறுக்க ஒறுக்கல்லா
மென்கண்ண னாளான் அரசு." —பழ. நா.

"கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை இல்." —ஷை

"எய்திய குற்றத் தோர்கள் யாவரா யினும்கண் ணோடா(து)
ஐதென நாடி நீதி அறந்தலை பிழையாத் தண்டம்
செய்தலே செங்கோ லாகும்." —விநா. அரசி. 88.

"ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான்." —முதுமொழிக். 10:9.

"பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றும் கொள்ளார் - வெகுளின்மன்
காதன்மை யுண்டே இறைமாண்டார்க்கு ஏதிலரும்
ஆர்வலரும் இல்லை அவர்க்கு" —நீதிநெறி. 47.

முதுமொழிவெண்பாக்கள்:

"இறைமகிழ வேந்தன் இளங்கன்றிற் காக
மகவினையும் தேருரு மாற்றல் - அகலிடத்தில்." முதுமொழி. 88.

"தொழுச்சங்க ரன்சூடாத் தூமலர்மோந் தாள்கை
விழச்சென் றறிந்து விடுத்தார் - கழற்சிங்கர்." —திருக். 69.

குறிப்பு:

யார்மாட்டும் என்பதனை இடைநிலைத் தீபகமாகக்கொண்டு, யார்மாட்டும் ஓர்ந்து, யார்மாட்டும் கண்ணோடாது, யார்மாட்டும் தேர்ந்து எனக் கூட்டிப் பொருள் காணலும் ஒன்று. யார்மாட்டும் ஓர்தலாவது இவர் உடன் பிறந்தார் இவர் உரிமைச் சுற்றத்தார் எனப்பாராது, பகைவர்கண்ணும் ஒரோவழி நன்மையும் சுற்றத்தார் கண்ணும் ஒரோவழி தீமையும் உளவாகலாம் ஆதலின் யார்மாட்டும் ஆராய்தல். யார்மாட்டும் கண்ணோடாமையாவது இவர் அயலார் இவர் நண்பர் இவர் உறவினர் என்று தாட்சண்யம் பாராமல் என்பதாம். இக்கூறிய இவ்விரண்டுமே இறைபுரிதலாம் என்க. யார்மாட்டுந் தேர்தலாவது குடியான், இனத்தான், பணத்தான் இத்தகையர் என ஆராயாது நீதிநூலைக் கற்றோர் எவரிடத்தும் இறைபுரிய எண்ணிய எண்ணத்தை உசாவி அறிதல்.

—தொகுப்பாசிரியர்.

542. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— உலகு எல்லாம் வான் நோக்கி வாழும் - உலகத்து உயிரெல்லாம் மழை உளதாயின் உளவாகா நிற்குமே எனினும், குடி மன்னவன் கோல் நோக்கி வாழும்-குடிகள் அரசன்செங்கோல் உளதாயின் உளவாகா நிற்கும்.

நோக்கிவாழ்தல்-இன்றியமையாமை. வானினாய உணவை வான் என்றும், கோலினாய ஏமத்தைக் கோல் என்றும் கூறினார். அவ்வேமமில் வழி உணவுளதாயினும் குடிகட்கு அதனால் பயனில்லை என்பதாம்.

மணக்:— உலகத்தாரெல்லாம் மழையை நோக்கி இன்புறா நிற்பர்; அது போல, குடிகளும் அரசனது செங்கோன்மையை நோக்கி இன்புறாநிற்பர் எ - று.

பரிப்:— இது முறை செய்தல் குடிமக்கட்கு இன்றியமையாது என்பது கூறிற்று.

பரிதி:— மேகத்தைப் பார்த்த உலகமதுபோல, மன்னவன் செங்கோல் பார்த்து வாழும் குடிகள் எ - று.

காளிங்:— முழை நமக்கு உளது என்று அதனைக் குறிக்கொண்டு அஞ்சாது வாழும் உலகமானது: மற்று இதுபோல மன்னவன் செங்கோல் நமக்கு எளிது என்று அதனைக் குறிக்கொண்டு அஞ்சாது வாழும் குடி மக்களும் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— நோக்கி வாழ்தல் - இன்றியமையாமை. மூன்றன் சூத்திரத்துள் (தொல் - சொல் - 93) நோக்கல்நோக்கம் என்பதும் அது.

மேற்கோள்பகுதி:

சேனு:— "வானோக்கி......குடி" என்புழி வானைநோக்கி வாழும், கோலைநோக்கி வாழும் என இரண்டாவது வருதலேயன்றி, வானன் நோக்கிவாழும், வானின் நோக்கி வாழும், கோலான் நோக்கி வாழும், கோலின் நோக்கிவாழும் என மூன்றுவதும் ஐந்தாவதும் வந்தவாறு கண்டு கொள்க. (தொல். சொல். 93.)

நச்:— வான்நோக்கி வாழும் என்புழி வானை நோக்கி வாழும் எனவிரியும்வழி வானன் ஆய பயனைக் கருதி உயிர்வாழும் எனவும், வானின் ஆய பயனைக் கருதி உயிர்வாழும் எனவும் செயப்படுபொருளும் ஏதுவும் ஒப்பப்பிறந்து நிற்றல் இச்சூத்திரத்திற்குக் கருத்து. இஃது உருபும் பொருளும் மயங்கிற்று. (தொல். சொல். 94.)

சிவஞான:— வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்கும்: "ஈண்டு நோக்கு என்றது மன எழுச்சி விசேடத்தை; 'வானோக்கி வாழும்' என்புழிப்போல." (சிவஞான. சூ. 9. அதி. 3).

ஒப்புமைப்பகுதி :

"வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்றுணரற் பாற்று." —குறள். 11.

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு." —ஷை 20.

" வானம் துளிமாறு பொழுதினில் உலகம்." —கலி. 25 : 28.

"வித்திவா னோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் தாட்குதவாதே." —புறம். 18 : 24 - 26

"கோனோக்கி வாழும் குடியெல்லாம் தாய்முலையின்
பானோக்கிவாழும் குழவிகள் - வானத்
துளிநோக்கிவாழும் உலகம்." —நான்மணி. 28.

"மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை." —ஷை 48.

"வானோக்கி நிற்கும் உலகென்னவும் மன்னவன் செங்
கோல் நோக்கி நிற்கும் குடி என்னவும்." —கந்த. திருநகரப். 62.

"தானோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே." —குலசேகரர், 5 : 3.

"எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்." —ஷை 5 : 7.

"வானோக்கி நிற்கும்பைங் கூழ்போல வும்ஒரு மன்னவன்செங்
கோனோக்கி நிற்கும் குடிபோல வும்தடக் கோட்டிமையத்
தேனோக்கி நிற்கும் எழிலுடை யான்வெங்கைச் செல்வியுனைத்
தானோக்கி நிற்குநல் லாயத்து ளேசென்று சார்ந்தருளே."
—திருவெங்கைக். 41.

குறிப்பு:

உலகிலுள்ள உயிர்கள் யாவும் வானை நோக்கி வாழ்தல்போல, குடிகள் கோலை நோக்கி வாழும் என்பதாம். வானை வெயில் வேண்டியும், மழை வேண்டியும் நோக்குதல்போலக் கோலை ஒன்றுரைத் தெறவும் உவந்தாரையாக்கவும் நோக்குதலாம். இப்பொருளில் இக்குறள் எடுத்துக்காட்டுவமையணி. பரிமேலழகர் கருத்து மழையால் உயிர்கள் உண்டாகும். ஆனாலும் கோலாலேயே குடிகள் இருக்கின்றன என்பதாம். வானின்பய என்றது நீரைமட்டுமன்று; காற்றும் வெப்பமும் ஆகிய எல்லாவற்றையுமே. அங்ஙனமே கோலினும் தண்மையும், வெம்மையும், தானமுமாகிய எல்லாவற்றையும். ஏமம் - பாதுகாவல். காவல் அழிப்பாரையழித்து, ஆக்குவாரையாக்கினால் அல்லது நடவாமையின் கோலில் ஆட்சித்திறம் எல்லாம் அடங்கியிருத்தல் காண்க.

—தொகுப்பாசிரியர்.

543. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். (ந)

உரைப்பகுதி :

பரிமே:— அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது - அந்தணர்க்கு உரித்தாய வேதத்திற்கும் அதனால் சொல்லப்பட்ட அறத்திற்கும் காரணமாய் நிலைபெற்றது, மன்னவன் கோல் - அரசனால் செலுத்தப்படுகின்ற செங்கோல்.

அரசர் வணிகர் என்னும் ஏனையோர்க்கும் உரித்தாயினும் தலைமைபற்றி அந்தணர்நூல் என்றார். *'மாதவர் நோன்பும் மடவார்கற்பும் காவலன் காவல்' அன்றித் தங்காவலான் ஆகலின், ஈண்டு அறம் என்றது அவையொழிந்தவற்றை. வேதமும் அறனும் அநாதியாயினும் செங்கோலின்வழி நடவா ஆகலின், அதனை அவற்றிற்கு ஆதி என்றும், அப்பெற்றியே தனக்காதியாவது பிறிதில்லை என்பார் நின்றது என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டானும் செங்கோலது சிறப்புக் கூறப் பட்டது.

மணக்:— அந்தணர்க்கு உரித்தாகிய வேதத்திற்கும் அதனால் கூறப்பட்ட அறத்திற்கும் முதலாக நின்றது அரசன் செய்யும் முறைமை எ - று.

பரிப்:— ஓதுவாரும் அறம் செய்வாரும் முறை செய்யும் அரசன் நாட்டகத்து உளராவர்: ஆதலான் முதல் ஆயிற்று. இது கல்வியும் அறமும் வளரும் என்றது.

பரிதி:— வேத நெறிக்கும் தன்ம நெறிக்கும் முதலானது அரசன் செங்கோல் எ - று.

காளிங்:— உலகத்து அனைத்து நீதியையும் வழுவற உணர்த்து வது மறைநூல் அன்றே: அதனால் அவ்வருமறையாகிய நூலிற்கும் மற்று அதன்வழி நடைபெற்று வருகின்ற அறமனைத்திற்கும் இவ்வுலகத்து ஆதியாக நிலைபெற்றது யாதோ எனின், வேந்தனானவன் மற்று அவ்வற நெறி கோடாமல் பாதுகாக்கின்ற செங்கோலாகிய நீதி எ - று.

மற்றும் அறநூல் என்று இங்ஙனம் ஒன்று சொல்லாது அந்தணர்நூல் என்றது, அரசர் நெறியாகிய செங்கோலும் நால் வருணத்தார் நடையுள் ஒரு நடை ஆகலானும், அவை யாவையும் பிறவும் துறவு மாகிய அனைத்தினையும் பழுது அற உரைப்பது பார்ப்பார் ஓதியும் ஓது வித்தும் இங்ஙனம் விளங்க நடைபெற்று வருகின்ற வேதம் ஆகலான் எ-று.

மேற்கோள்பகுதி:

சேனா:— கு என்ற நான்காம் வேற்றுமை உருபு தொடர்ந்து அடுக்கி ஒரு முடிக்குஞ்சொல் பெற்றதற்கு மேற்கோள். (தொல். சொல். 102)

நச்:— ஷை (தொல். சொல். 103.)

*மணிமேகலை 22: 208, 209.

கட்டளை மெல்லின எதுகைக்கு மேற்கோள். (தொல். பொருள் செய். 94.)

மயிலை:— நான்காம் வேற்றுமைச் சூத்திரத்தில் 'ஆதி என்ற மிகையால் ஏனை வேற்றுமைகள்போல அளவுபட்ட பொருண்மைத்தன்றி வரும்; அவையும் இதற்கு இது என்பதேபட உரைத்துக்கொள்க' எனக் கூறி இக்குறளையும் மேற்கோள் காட்டுவர். (நன். 297.)

ஒப்புமைப்பகுதி:

"தீயூட்டித் தாம்உண்ணும் செய்தவத்தோர் ஆனினங்கள்
நோயூட்டு காயம்இகழ்ந் தியற்றும் நோன்பினோர்
வேயூட்டு தோளார் விருத்தர்சிறு பாலர்தமைத்
தாயூட்டிப் போற்றுதல்போற் றூர்வேந்தன் காக்குமால்."
—பிரமோத். பத்திராயு. 19.

முதுமொழிவெண்பாக்கள்:

"அந்திவண்ணன் நூலால் அருகர்பிறர் கோள்சிதைய
வந்ததிரு வள்ளுவர்தம் வாய்மொழிகேள் - இந்தநிலத்(து)."
—முதுமொழி. 89.

"பழுதறுசம் பந்தனெதிர் பாழ்சமணர் தாழ
வழுவறுநெல் வேலிவென்ற மாறர் - கழுவிட்டார்." —திருத். 65.

குறிப்பு.

'அந்தணர் என்போர் அறவோர்' என்றாராதலின், தொழில் பற்றிய சாதிப் பாகுபாட்டிற்கெல்லாம் அப்பாற்பட்ட முனிவர் பெருமக்கள் அந்தணர். அந்தணர் நூல் - அவர்களுக்காகச் சொல்லப்பட்டனவும், அவர்களாற் சொல்லப்பட்டனவு மாகிய வேத முதலியன- அறம் - இன்னதைச் செய்தால் நன்மை இன்னதைச் செய்தால் தீமையென வரையறுக்கும் அறநூல்கள். இவை ஆடவர் ஒழுக்கம், மாதர் ஒழுக்கம், இளையர், முதியர், இல்லறத்தார், துறந்தார், மன்னவன், உழவன் முதலான பலருடைய ஒழுக்கவழக்கங்களை வரையறுப்பன. தரும சாஸ்திரம் என்பர் வடநூலார். அந்தணர் நூற்கும் என்றமையின் இனம் பற்றி அறமும் அறநூலேயாதல் தெளிவு. வேதம் ஞானத்தையும் தர்மசாஸ்திரங்கள் (ஒழுக்க நூல்கள்) கடமையையும் உணர்த்தின. இவையிரண்டுமே விதி நூல்கள். இவற்றை மக்கள் கொண்டு செலுத்த வேண்டின், இயக்கும் மன்னன் தேவை. ஆதலின் ஆதியாய் நின்றது எனக் கோலைச் சிறப்பித்தார்.

—தொகுப்பாசிரியர்.

544. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (ஈ)

உரைப்பகுதி:

பரிமே:— குடி தழீஇக் கோல் ஓச்சும் மாநிலமன்னன் அடி - தன் குடிகளையும் அணைத்துச் செங்கோலையும் செலுத்தும் பெருநிலவேந்தனடியை, தழீஇ நிற்கும் உலகு - பொருந்தி விடார் உலகத்தார்.

அணைத்தல் இன்சொல் சொல்லுதலும், தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின. இவ்விரண்டனையும் வழுவாமல் செய்வான் நிலமுழுதும் ஆளுமாகலின் அவனை மாநிலமன்னன் என்றும், அவன் மாட்டு யாவரும் நீங்கா அன்பினராவர் ஆகலின் அடிதழீஇ நிற்கும் உலகு என்றும் கூறினார்.

மணக்:— குடியைப் பொருந்தி முறைமை செலுத்துகின்ற பெரிய நிலமன்னன் அடியைப் பொருந்தி நிற்கும் உலகு எ - று.

இது முறைமை செய்யும் அரசன்கண்ணதாம் உலகு என்றது.

பரிதி;— குடியைப் பரிந்துகாத்துச் செங்கோல் நடத்தும் மன்னனடியைப் பற்றிவிடாது உலகம் எ - று.

காளிங்:— தனது கோற்கீழ் வாழும் குடியாகிய குலமக்களைக் குலையாமல் அணைத்துக்கொண்டு செங்கோல் நடாத்தும் பூபாலனைத் தமது ஆக்கத்திற்கு எல்லாம் அடியாக அடைந்து நிலைபெற்று வாழும் அனைத்து உயிர்களும் எ - று.

அடிதழீஇ என்றது தமது ஆக்க நிலைக்கு அவனே முதலாக நிற்க என்றது.

ஒப்புமைப்பகுதி:

"பொருத்த மழியாத பூந்தண்டார் மன்னர்
அருத்த மடிநிழ லாரை - வருத்தாது
கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றே
வண்டோதா துண்டு விடல்." —பழ. நா.

"குடிகொன் றிறைகொள்ளும் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலும் மாண்பே - குடிஓம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல." —நீதிநெறி. 29.

545. இயல்புளிக் கோலோச்சு மன்னவன் *நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— பெயலும் விளையுளும் தொக்கு - பருவ மழையும் குன்றாத விளைவும் ஒருங்கு கூடி, இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட - நூல்கள் சொல்லிய இயல்பால் செங்கோலைச் செலுத்தும் அரசனது நாட்டின் கண்ணவாம்.

உளி என்பது மூன்றாவதன் பொருள்படுவதோர் இடைச்சொல். வானும் நிலனும் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்கும் என்பதாம்,

மணக்:— மழைபெய்தலும் விளைதலுங்கூட, நூல் சொன்ன இயல்பினானே முறைமை நடத்தவல்ல அரசனது நாட்டகத்தினவாம் எ-று.

இது மேற்கூறிய முறைமைசெய்ய மழையும் விளைவும் உண்டாம் என்றது.

பரிதி:— செங்கோல் நடத்தும் அரசன் தேசத்தில் மழையும் விளைவும் உண்டாம் என்பது எ - று.

காளிங்:— சிறிதும் கோடாமல் குறிக்கொண்டு மரபின்கண்ணே செங்கோல் நடாத்தும் வேந்தனது நாட்டிடத்து உள; யாவை எனின் பருவத்து வந்து உதவும் மழையும் பலவளமாகிய விளைச்சலும் என்னும் இவை முழுவதும் குறைவறக் கூடி எ - று.

மேற்கோள்பகுதி :

நச்:— இயல்புளிக் கோலோச்சு மன்னவன் என்புழி முறைமையிலே செங்கோல் நடாத்தும் என ஏழன்உருபு விரிதலால் உளி என்பது மூன்றன் உருபின் பொருள்பட வந்தது அன்று; பகுதிப்பொருள் விகுதியாய் நின்று தனக்கு ஏற்ற உருபை ஏற்று நின்றது என்பர். (தொல். சொல். 252.)

* 'நாட்டில்' எனவும், 'நாட்டுள்' எனவும் காளிங்கர் பரிப்பெருமாள் பாடங் கொள்வர்.

ஒப்புமைப்பகுதி :

"மழைவளம் சுரக்கு மாறும் வயல்நிலம் விளையு மாறும்
விழையறம் வளரு மாறும் வேதநூல் விளங்கு மாறும்
தழைபொருள் ஈட்டு மாறும் சமரிடை வெல்லு மாறும்
பிழைதப வாழு மாறும் பிறழ்தராக் கோலி னாகும்."—வினா. அரசி. 89.

குறிப்பு:

'தொக்கு நாட்ட' என்றமையான் பிறவிடத்து இல்லை என்பது விளக்கியவாறு.

—தொகுப்பாசிரியர்.

546. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் [1]கோடா தெனின். (சா)

உரைப்பகுதி :

பரிமே:— மன்னவன் வென்றி தருவது வேல் அன்று கோல் - மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக் கொடுப்பது அவன் எறியும் வேலன்று கோல், அதூஉம் கோடாது எனின் - அஃதும் அப்பெற்றித் தாவது தான் கோடாதாயின்.

கோல் செவ்விதாயவழியே வேல் வாய்ப்பது என்பார் வேலன்று என்றார்: [2]"மாண்ட - அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்றார் பிறரும். கோடான் என்பது பாடமாயின் கருவியின் தொழில் வினை முதன்மேல் நின்றதாக உரைக்க,

மணக்:— அரசனுக்கு வெற்றி தருவது அவன் கையிலுள்ள வேலன்று, முறைசெய்தல்; அவன் அதனைக் கோடச்செய்யானாயின் எ - று.

இது செங்கோன்மை செய்ய வெற்றியுண்டாம் என்றது.

பரிதி:— அரசற்கு ஆயுதம் வெற்றி கொடாது; செங்கோல் வெற்றி கொடுக்கும்; ஆதலால் செங்கோல் கைவிடுவானல்லன் எ - று.

---

[1] 'கோடான் எனின்' என்பது மணக்குடவர்பாடம். [2] புறம் 55.

காளிங்:— வேந்தர்க்கு வேலே அன்று வெற்றியைக் கொடுப்பது: மற்று மன்னனானவன் மாபினைக் கெடாமல் நடத்தும் கோலானது வெற்றியைக் கொடுக்கும்: மற்று அது சிறிதும் கோடாதவாறு நடத்துமாயின் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கோடான் என்பது பாடமாயின் கருவியின் தொழில் வினைமேல் நின்றது. இனி, எழுத்தாணி எழுதும் என்பது, வினைமுதலின் தொழில் கருவிமேல் நின்றது. "மரப்பாவை நாணல் உயிர் மருட்டியற்று' (1020) என்பதும் அது.

மேற்கோள்பகுதி :

நச்:— அன்று என்னும் அஃறிணைக்குறிப்புவினைமுற்று குறிப்பு உணர்த்திவருவதற்கு மேற்கோள். (தொல். சொல். 222)

சுவாமி:— வினைமுற்றுப் பெயர் கருவிப்பொருள் பெற்றுவந்ததற்கு 'வேலன்று வென்றிதருவது' என்பது மேற்கோள். (இ. கொ. 83.)

ஒப்புமைப்பகுதி:

" அறம்புரிந்தன் றம்ம அரசிற் பிறத்தல்
துறந்த தொடர்பொடு துன்னிய கேண்மை
சிறந்தார்க்கும் பாடு செயலீயார் தத்தம்
பிறந்தவேல் வென்றிப் பொருட்டு " —தகடூர்.

" அங்கோல் அவிர்தொடி ஆழியான் ஆயினும்
செங்கோலன் அல்லாக்கால் சேர்ந்தாரும் எள்ளுவரால்
வெங்கோன்மை வேந்தர்கள் வேண்டும் சிறிதெனினும்
தண்கோல் எடுக்குமாம் பொய்." —பழ. நா

" பிறங்கும் கோலான் மாறடு கொற்றம் பெறு வேந்தன்."
—திருவிளை. பழியஞ்சின. 18.

முதுமொழிவெண்பாக்கள் :

" மங்காத மங்குறனை மாறன்விலங் கிட்டதவன்
செங்கோன் மகிமை சிவசிவா — எங்கேனும்." —சிவசிவ. 55.

" கண்கொண்டான் பொன்னிக் கரைகட்ட வாரானை
எண்கொண்ட சோழன் இரங்கேசா — மண்கொண்ட," —இரங். 55.

குறிப்பு:

வேல் அச்சத்தால் வென்றி விளைப்பது. கோல் அன்பால் வென்றி விளைப்பது. இவ்விரண்டனுள் அச்சத்தால் விளைந்த வென்றி, பழிதீர்க்கஅற்றநோக்கி யிருப்பதாகலின் நிலைத்த வென்றியாகாது. அன்பால் விளைந்த வென்றியோ பிறரால் தம்மரசற்குத் தீமை வந்துழியும் உயிரையுங் கொடுத்துக் காக்கச்செய்யும். ஆதலால் கோலே வென்றிதரும் என்றார். செங்கோல் ஏற்றவழி ஆட்சிச் செருக்கால் செங்கோல் வளையவுங் கூடுமென்றே அஃதும் ஆகாதென்பார் 'கோடாது எனின்' என்றார் எனவும் ஆம்.

—தொகுப்பாசிரியர்.

547. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— வையகம் எல்லாம் இறை காக்கும் - வையகத்தை எல்லாம் அரசன் காக்கும்; அவனை முறை காக்கும் - அவன்றன்னை அவனது செங்கோலே காக்கும், முட்டாச் செயின் - அதனை முட்ட வந்துழியும் முட்டாமல் செலுத்துவனாயின்.

முட்டாமல் செலுத்தியவாறு மகனை முறைசெய்தான்கண்ணும், தன்கை குறைத்தான்கண்ணும் காண்க. முட்டாது என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது. இவை நான்கு பாட்டானும் அதனைச் செலுத்தினான் எய்தும் பயன் கூறப்பட்டது.

மணக்:— வையகமெல்லாவற்றையும் அரசன்காக்கும்; அவ்வரசனை அவன்றான்செய்யும் முறை காக்கும்; அதனைத் தப்பாமல் செயின் எ - று.

இது தனக்குக் காவலாம் என்றது.

பரிதி:— உலகத்தைச் செங்கோல் முறையாலே அரசன் காப்பானாகில் அரசனை உலகம் காக்கும் எ - று.

காளிங்:— இவ்வையகத்து வாழும் மக்கள் முதலாகிய உயிர்கள் அனைத்தையும் மன்னனானவன் ஒன்றனை ஒன்று நலியாமல் பாதுகாத்து ஒழுகும்; இனி மற்று அம்மன்னவன் தன்னைத்தான் நடாத்துகின்ற செங்கோலாகிய நீதியானது நிறையக் காத்து நிற்கும்: மற்று இதனை இடைமுறியாமல் பரிகரித்துச் செய்யுமாயின் எ - று.

மேற்கோள்பகுதி :

சிவஞான:— காட்டிய கண்ணே தனைக்காணு; 'காணுது என்னும் அவ்விறு தொக்கு நின்றது; 'முறைகாக்கும் முட்டாச்செயின்' என்புழிப்போல." (சிவஞான. சூ. 9. அதி. 2.)

ஒப்புமைப்பகுதி:

"முறைமைமுட் டாது செய்து முழுநிலம் காப்பின் அந்த
இறைவனைச் செங்கோல் காக்கும்." —விநா. அரசி. 92.

"நாடொன்றும் வாழக் கேடொன்றும் இல்லை." —கொன்றை. 49.

"தன்னுயிர் போல மன்னுயிர் காக்க." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"தாரூர்ந்த தோள்வளவன் தன்மகன்மேல் ஆரூரில்
தேரூர்ந்தான் என்ப திருமலையா — பாரூர்." —திருமலை.

"மைந்தனுய்ந்தான் *வற்சமமைச் சோடுமநு நீதிகண்டோன்
முந்தைமுறை தன்னுன் முருகேசா - உந்தும்" —முருகேசர். 55.

குறிப்பு:

உலகத்தைக் காப்பவன் அரசன். அவனைக்காப்பது நீதி. மநுநீதிமன்னனை மகன்மையும், கழற்சிங்கனைக் காதன்மையும், பொற்கைப் பாண்டியனை வேந்தமையும் தடுக்கநின்றும் நீதி வென்றது காண்க. இத்துணையருமையை விளக்கவே 'முட்டாச் செயின்' என்றார்.

—தொகுப்பாசிரியர்.

548. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தால் தானே கெடும். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன்-முறை வேண்டினார்க்கு எளிய செவ்வியை உடையனுய் அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடும் ஆராய்ந்து நின்றவுண்மைக்கொப்ப முறை செய்யாத

*வற்சம் - கன்று.

அரசன், தண்பதத்தான் தானே கெடும் - தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடும்.

எண்பதத்தான் என்னும் முற்றுவினையெச்சமும், ஓரா என்னும் வினையெச்சமும், செய்யா என்னும் பெயரெச்ச எதிர்மறையுள் செய்தல் வினைகொண்டன. தாழ்ந்த பதம் பாவமும் பழியும் எய்தி நிற்குநிலை. *'அல்லவை செய்தாற் கறங்கூற்றம்' ஆகலின், பகைவரின்றியும் கெடும் என்றார். இதனான் முறைசெலுத்தாதானது கேடு கூறப்பட்டது.

மணக்:— எளிய காலத்தோடே நூலாராய்ந்து முறைமை செய்யாத அரசன், தனது தண்பதத்தினானே கெடுப்பாரின்றித் தானே கெடும் எ - று.

எண்பதமாவது வந்தவர் தங்கள் குறையைச் சொல்லுதற்கு எய்துங்காலம்; தண்பதமாவது குறையைச் சொல்லுதற்குத் தாழ்க்குங் காலம்.

பரிப்:— இது காலம் தப்பாமல் கேட்டுச் செய்யவேண்டும் என்பதூஉம், முறை செய்யாக்கால் வரும் குற்றமும் கூறிற்று.

பரிதி:— எளிதாகிய செங்கோல் முறையாலே உலகம் காவாத மன்னவன் தெய்வசகாயத்தினாலே எளிதாகக் கெடுவன் எ - று.

காளிங்:— விசார வழியில் ஆராய்ந்து செங்கோல் நடத்தாத மன்னவன் மற்று இனித் தான் செய்யும் தண்ணிய வழியாலே தானே கெட்டு விடும் எ - று.

எண்பதத்தான் என்பது எண்ணு நெறியால் என்றது. தண் பதத்தான் என்பது தண்ணிய நெறியான் என்றது.

ஒப்புமைப்பகுதி:

"......................எளியசெவ் வியனு மாகான்
குறைவளர் குற்றம் ஓரான் குணத்தொடு முறைசெய் யானை
நிறைதரு பாவந் தேய்க்கும் நெடும்பகை யின்று மேனும்."

—விநா, அரசி. 92.

*நான்மணிக். 85.

குறிப்பு:

எண்பதம்; எளிய செவ்வி என்பது பரிமேலழகர் உரை. ஆராய்ச்சிக்குரிய வழி என்பது காளிங்கர் உரை. இவர்கள் முறையே எள்+பதம் எனவும், எண்+பதம் எனவும் கொண்டனர் போலும், மணக்குடவர், குறையைக்கேட்டு உடனே முறை செய்யாத அரசன் காலதாமதத்தால் கெடுவன் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

549. குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். (௯)

உரைப்பகுதி :

பரிமே:— குடி புறங்காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் - குடிகளைப் பிறர் நலியாமல் காத்துத் தானும் நலியாது பேணி, அவர்மாட்டுக் குற்றம் நிகழின் அதனை ஒறுப்பான் ஒழித்தல், வேந்தன் வடு அன்று தொழில் வேந்தனுக்குப் பழியன்று தொழிலாகலான்.

துன்பஞ்செய்தல், பொருட்கோடல், கோறல் என ஒறுப்பு மூன்று; அவற்றுள் ஈண்டைக்கு எய்துவன முன்னைய என்பது குற்றங்கடிதல் என்பதனால் பெற்றாம். தன்கீழ் வாழ்வாரை ஒறுத்தல் அறனன்மையின் வடுவாம் என்பதனை ஆசங்கித்து, அஃதாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தினீக்கித் தூயராக்குதலும் சாதிதருமம் என்றார்.

மணக்:— குடிகளை நலியாமல் காத்து ஓம்புதற்காகக் குற்றஞ் செய்தாரை ஒறுத்தல் குற்றமன்று; அரசன் தொழில் எ - று.

பரிப்:— ஓம்ப என்று திரிக்க. பிறர்க்கு இன்னா செய்தல் அறம் அல்ல என்றார் ஆகலின், ஈண்டுக் கூறுகின்றது அறம் அல்லவாம் பிற என்று ஐயுற்றார்க்கு இது கூறப்பட்டது.

பரிதி:— குடியை அறுவகைப்பயந் தீர்த்துக் குடியில் உண்டான குற்றமெல்லாம் பார்த்துத் தீர்ப்பது செங்கோல் எ - று.

காளிங்:— தமது அகங்காவல் குடிகட்கே இயல்பானது அதனால் தனது கோல்கீழ் வாழும் குடிமக்களைப் புறங்காவல் காத்து மற்று அப் பாதுகாவற்கு இடையில் சோர்வுவராமல் செலுத்துமிடத்து, குடிமக்கட்குச் சோர்வு முதலிய குற்றம் உளதாயின் அதனைக் கடியுமாறு கடிந்தொழுகுதல் கொடுங்கோன்மை அன்று: அரசர்க்குச் செங்கோன் முறைமை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"இளங்குடி திருத்திய வலம்படு வென்றி. —பதிற்று. 37.

"குடிபுறம் காத்தோம்பும் செங்கோலான்." —கலி. 130:19.

"கொற்றம் கொண்டு குடிபுறங் காத்துச்
செற்ற தெவ்வர் தேஎம்தம தாக்கியும்." —மணி. 23:11-12.

"................கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டானன் றென்றல் வனப்பு." —சிறுபஞ்ச. 9.

"பரிசனம் பகைவர் கள்வர் படர்தரும் உயிர்கள் தாமென்(று)
உரைசெய்ஐந் திடத்தி னாலும் உலகிடை இடையூ றெய்தா
வரிசையில் காத்து நீதி வழக்கினார் தம்மை மொத்திக்
கரிசறப் பொருளும் கோடல் காவலர் தருமம் மைந்தா." -விநா. அரசி. 91

"மாநிலம்கா வலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த் தறங்காப்பான் அல்லனோ." -பெரிய. மநுநீதி. 36.

முதுமொழிவெண்பாக்கள்:

"மைந்தனை னுமல்அச மஞ்சன் தனைவெறுத்தான்
சுந்தரச்செங் கோல்சகரன் சோமேசா —முந்தம்." —சோமேசர். 55.

"ஒலிகுழவி கோட்புலியார் கொன்றார் விரையாக்
கலிகடந்த குற்றம் கடிந்தார் - உலகில்." —திருத். 73.

குறிப்பு:

காத்தோம்பிக் குற்றங்கடிதல் வடுவன்று வேந்தன் தொழில் எனக்கூட்டின் ஓம்புதலும் வடுவாகக் கருதப்பெற்றுப் பின் பரிகரிக்கப்படுகிறது என்று கொள்ள நேரும். அது அங்ஙனம் பரிகரிக்க வேண்டாத, வேந்தன் தொழிலாதலின் ஓம்புதற்காக எனக் காரணப்பொருளில் வந்த வினை எச்சமாகக்கொண்ட மணக்குடவர், பரிப்பெருமாள் உரைகள் உணர்ந்து இன்புறுதற்கு உரியன.

புறங்காத்து ஒருசொல். 'சிறுமை புறங்காத்து' என்புழிப்போல. ஆகவே குடிகளைப் பாதுகாத்து, குற்றம் ஓம்பிக்கடிதல் - குடிகளிடம் ஓரோவழி மறதியானுதல், தவறியாதல் குற்றங்கள் காணப்பெறுமாயின் அதனைப் பரிவால் தண்டித்து நீக்குதல் வேந்தன் தொழில் எனவுமாம். ஓம்பிக் கடிதலாவது "தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொ லாற்றின், வந்திடாவிடின் உறுக்கி வளாரினுல் அடித்துத் தீய, பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடின் பரிவேயாகும், இந்தநீர் முறைமை யன்றோ ஈசனுர் முனிவும் என்றும்" என்றது போலப் பரிவோடு கடிதல்.

—தொகுப்பாசிரியர்.

550. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். (௫௦)

உரைப்பகுதி :

பரிமே:— வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் - அரசன் கொடியவர்களைக் கொலையான் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல், பைங்கூழ் களை கட்டதனொடு நேர் - உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்தலோடு ஒக்கும்.

கொடியவர் என்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில் விழைவார் என்றிவர்முதலாயினரை. இவரை வடநூலார் ஆததாயிகள்* என்ப. இப்பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லாவழிப் புற்களைக்கு அஞ்சா நின்ற பைங்கூழ்போன்று நவிவுடைய எய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதிதருமம் என்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானும் செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தற்குத் தீயார் மாட்டு மூவகை ஒறுப்பும் ஒழியற்பாலவல்ல என்பது கூறப்பட்டது.

மணக்:— கொடுமை செய்தாரைக் கொலையினுனே அரசன் ஒறுத்தல் குற்றமன்று; உழவன் பைங்கூழ் வளர்தற்குக் களை களைந்த தனோடு ஒக்கும் எ - று.

கொடியாராவார் கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார்.

*'இல்லம் முதலியவற்றில் நெருப்பிடுவோரும், நஞ்சிடுவோரும், ஆயுதமுதலிய வற்ருல் கொலை புரிவோரும், பிறர்பொருளை அறவே கவர்வாரும், பிறர் நிலத்தை அபகரிப்பாரும், பிறர்மனை நயப்பாரும் ஆகிய இவ்வறுவரும் ஆததாயிகள் ஆவர்.'

—சுக்கிரநீதி. அத். 3. சூ. 41.

பரிப்:— பிறரைக் கொல்லாதாரைக் கொல்லுதல் நீதி அன்று ஆயினும் கொடியாரைக் கொல்ல வேண்டும் என்றது.

பரிதி:— அரசன் கொலையில் மிகுத்தாரைக் கொல்வது பயிர்க்குக் களைபிடுங்குதல் ஒக்கும் எ - று.

காளிங்:— தகுதி ஆராயாது உலகத்துக் கொலைத் தொழிலினால் சாலக் கொடியராய் உள்ளாரை அரசனானவன் தக்காங்கு செறுத்தல் ஆகிய நீதி யாதினை ஒக்கும் எனின், பசும்பயிர் பாழ்பட நெருக்குவதாகிய களையினைக் கண்டு பறித்து எறிந்த அதனோடு ஒக்கும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— களைகட்டல் - களையைக்களைந்து காத்தல்.

மேற்கோள்பகுதி

நச்:— ஐவகை மரபின் அரசர் பக்கத்தில் தண்டித்தற்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

ஒப்புமைப்பகுதி:

"கருவிநஞ் சாதி தம்மால் காமரார் உயிரைக் கொல்வோர்
வெருவரச் சூறை கொள்வோர் மேவியா றலைப்போர் கள்வர்
உருவளர் பிறனில் வேட்போர் உவர்முத லோரைக் கோறல்
பருவரு பாவம் அன்று பயிர்க்களை களைதல் போலாம்.
—விநா. அரசி. 90.

"நாயகன் நல்லன் நம்மை நனிபயந் தெடுத்து நல்கும்
தாயென இனிது பேணத் தாங்குதி தாங்கு வாரை
ஆயது தன்மை யேனும் அறம்வரம் பிகவா வண்ணம்
தீயன வந்த போது சுடுதியால் தீமை யோரை.
—கம்ப. அரசி. 34.

"நஞ்சம் அன்ன வரைநலிந் தால்அது
வஞ்சம் அன்று மனுவழக் காதலான்
அஞ்சில் ஐம்பதில் ஒன்றறி யாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய்."
—கை. கிட்கிந்தை 5.

"தொகைமை சான்றநங் குரவர்பல் லோர்உயிர் தொலைத்த
பகைஞ ராதலின் அமரரைச் சிறையிடைப் படுத்தேன்
மிகைசெய் தார்களை நாடியே வெந்தொறுத் திடுதல்
தகைமை யேஎன மறமுறை நூல்களும் சாற்றும்."

—கந்த. சூரனமைச். 149.

முதுமொழிவெண்பாக்கள்:

"கள்ளரையும் கொல்லும் கபடரையும் தண்டித்தல்
தெள்ளிமைகாண் கோவைத் தினகரா • உள்ளம்."
—தினகர. 58.

குறிப்பு:

சென்றகுறளில், நன்னிலையினிற்கும் குடிகள் ஒரோவழி தவறியவழித் திருத்துதல் அரசன் தொழிலெனா அறிவிக்கப் பெற்றது. இக்குறளில் எஞ்ஞான்றும் கொடியாரைத் தண்டித்தலும், நற்குடிகளுக்கு அவர்களான் நலிவு வாராமல் பாதுகாத்தலும் அறிவிக்கப்பெறுகின்றன. களை பயிர்களினிடையே விராயிருந்து அவற்றின் வளர்ச்சியைக் கெடுப்பது போலத் தீயோரும் நல்லவர்களிடையே விரவி வேற்றுமை யறியமுடியாமலே தீங்குசெய்வர். அவரைக் களைந்தெறிக என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— ஓர்ந்து, வாநோக்கி, அந்தணர், குடிதழீஇ, இயல்புளி, வேலன்று, இறைகாக்கும், எண்பதத்தான், குடிபுறம், கொலையின்.

மணக்:— ஓர்ந்து, குடிபுறம், கொலையின், வாநோக்கி, குடிதழீஇ, இயல்புளி, அந்தணர், வேலன்று, இறைகாக்கும், எண்பதத்தான்.

பரிதி:— ஓர்ந்து, கொலையின், வேலன்று, அந்தணர், இயல் புளி, வாநோக்கி, குடிபுறம், குடிதழீஇ, இறைகாக்கும், எண்பதத்தான்.

காளிங்:— ஓர்ந்து, இயல்புளி, அந்தணர், கொலையின், வேலன்று, இறைகாக்கும், குடிதழீஇ, எண்பதத்தான், வாநோக்கி, குடிபுறம்.

56. கொடுங்கோன்மை.

தொகுப்புரை:

[குடிகளை வருத்திப் பாவத்தொழிலால் நாடாளும் வேந்தன் கொலைகாரனிற் கொடியன். அரசன் குடிகளை வருத்திப் பொருள்கொள்ளுதல் வேலேந்திய கொள்ளைக்காரன் 'கொடு' என்று வழிபறிப்பதுபோலாம். நாள்தோறும் ஆராய்ந்து நீதிவழங்காத மன்னன் நாடு நாடோறும் அழிந்துகொண்டேவரும். விளைவு கருதாது கொடுங்கோலாட்சி செய்யுமரசன் பொருளையும் குடிகளையும் ஒருசேர இழந்துவிடுவான். குடிகள் வருந்தி யழுத கண்ணீரே அரசசெல்வத்தையும் அராவும் அரமாம். அரசனழியாமல் நிலைபெறுதற்குக் காரணம் அவனது செங்கோலாட்சியேயாம். அது இல்லையானால் அரசனுக்குப் புகழ்ச்சி நிலைக்காது. மழையில்லாமை உலகத்திற்கு எப்படியோ? உயிர்கட்கு மன்னன் கொடுங்கோன்மையும் அப்படியாம். அநீதியான அரசன்கீழ்வாழும் குடிகளுக்கு வறுமையைக்காட்டிலும் செல்வமே துன்பந்தருவதாகும். மன்னவன் நீதி தவறினால் மழைபெய்யாது. அரசன் நீதியுடன் காவாவிடின் பசு பால் குறையும். அந்தணர் கடமை தவறுவர்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அம்முறையினது கோடுதற்றன்மை. ஈண்டும் உவமையின் பெயர் பொருண்மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறாகலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

மணக்:— கொடுங்கோன்மையாவது கொடுங்கோன்மையால் வருங் குற்றங் கூறுதல். அது முறைமை செய்யாமையும், அருள் செய்யாமையும், பிறர் நலியாமற் காவாமையும், முறைகெடச் செய்தலும், குடிகளுக்குத் தண்டனை ஆராயாது செய்தலும், அல்லவை செய்தலும், குடிகளை இரத்தலும் எனப் பலவகைப்படும். இது கூறிய செங்கோன்மையின் மாறுபட்டுவருதலின், அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— கொடுங்கோன்மையாவது கொடிய வசனமும் கொடிய தண்டமும் இரண்டுந் தவிரவேண்டும் எ - று.

551. கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்(டு)
அல்லவை செய்தொழுகும் வேந்து. (க)

உரைப்பகுதி:

பரிமே:— கொலை மேற்கொண்டாரின் கொடிது-பகைமைபற்றிக் கொல்லுதல்தொழிலைத் தம்மேற்கொண்டு ஒழுகுவாரினும் கொடியன், அலை மேற்கொண்டு அல்லவை செய்து ஒழுகும் வேந்து - பொருள் வெஃகிக் குடிகளை அலைத்தல்தொழிலைத் தன்மேற்கொண்டு முறையல்லவற்றைச் செய்தொழுகும் வேந்தன்.

அவர் செய்வது ஒருபொழுதைத் துன்பம், இவன் செய்வது எப்பொழுதும் துன்பமாம் என்பதுபற்றி, அவரினும் கொடியன் என்றார். பான்மயக்குறழ்ச்சி. வேந்து என்பது உயர்திணைப்பொருட்கண் வந்த அஃறிணைச்சொல், அலை கொலையினும் கொடிது என்பதாயிற்று.

மணக்:— கொலைத்தொழிலை மேற்கொண்டவரினும் கொடியன்; அலைத்தல்தொழிலை மேற்கொண்டு நீதியல்லாதன செய்து ஒழுகுகின்ற அரசன் எ - று.

பரிதி:— கொலைத்தொழிற்கு மேலான வேடரினும் கொடியன் குடிகளை மிடைசெய்யும் அரசன் என்றறிக. எப்படி என்றால் வேடன் பறித்துக் கொண்டு விட்டுவிடுவன்; இவன் தண்டங்கொண்டும் பிழைக்கிற வாக்கிலே போகவொட்டாமல் காவல் செய்கையால் எ - று.

காளிங்:— அதனைப் பிறர் நோவுக்கு இரங்காது கொலைத் தொழிலை என்றும் கொண்டொழுகும் கொடுவினையாளரினும் சாலக் கொடிதே; யாது எனின், தன்கோல் கீழ்வாழும் குடிகளை அவர்கள் நோவு அறியாது அலைத்தலை என்றுகொண்டு முறையல்லனவற்றைச் செய்து அங்ஙனம் ஒழுகும் வேந்தனைவன் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கொண்டாரின் கொடிது வேந்து என்றதனால் பன்மையும் ஒருமையும் பால்மயக்கு; உறழ்ச்சி இன்னுருபு-இரண்டிலக்கணமுங்கூட எழுதினர். "அறனழீஇ" (182) என்பதுள்ளும் அது. "குடிப்பிறந்தார் கண் விளங்கும் குற்றம்" (957) என்பதனைப் பால் மாறுபட்டது என்றதனுனும் அறிக. வேந்து என்பது உயர்திணைப்பொருட்கண் வந்த அஃறிணைச் சொல். அரசு அமைச்சு, ஒற்று, தூதும் அது. "குடிமை யாண்மை"

என்னுஞ் (தொல் - சொல் - 57) சூத்திரவிதியால் வேந்து அஃறிணைச்சொல்லாய் "நின்றாங்கிசைத்த லிவணியல்பின்றே" (தொல் - சொல் 59) என்னும் விதியால் கொடியன் என்று உரையிட்டார் போலும். அவர்கருத்து எம்மனோர்க்கு அறிதல் அரிதென்க.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— "கொலை மேற்கொண்டாரின் கொடிதே" என்றவிடத்து, மேல் என்ற இடைச்சொல் தாம் சேர்ந்த வினையைச் சிறப்பித்துப் பொருட்கு உபகாரப் பட்டுவந்தது என்பர். (கம்ப. விருத். பக். 11.)

குறிப்பு:

அல்லவை என எதிர்மறை முகத்தாற் கூறியது, நினைக்கவும் நெஞ்சுநடுங்கும் தீமைகளை நினைத்து நினைத்துச் செய்வார்கள் என்பது கருதி. ஆதலின் இன்னவை என வரைந்துணர்த்தாராயினர். அலை - முதனிலைத் தொழிற்பெயர். அல்லவை செய்யும் வேந்து என்னாது, செய்து ஒழுகும் என்றது இடைவிடாமல் தீமைகளைச் செய்வதே ஒழுக்கமாகக் கொண்டவர்கள் என்பது விளக்க.

—தொகுப்பாசிரியர்.

552. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— வேலொடு நின்றான் - ஆறலைக்குமிடத்துத் தனியே வேல்கொண்டு நின்ற கள்வன், இடு என்றது போலும் - ஆறுசெல்வானை நின்கைப்பொருள்தா என்று வேண்டுதலோடு ஒக்கும், கோலொடு நின்றான் இரவு - ஒறுத்தற்றொழிலோடு நின்ற அரசன் குடிகளைப் பொருள் வேண்டுதல்.

வேலொடு நின்றான் என்றதனால் பிறரொடு நில்லாமையும், இரவு என்றதனால் இறைப்பொருளன்மையும் பெற்றாம். தாராக்கால் ஒறுப்பல் என்னும் குறிப்பினனாகலின், இரவாற்கோடலும் கொடுங்கோன்மையாயிற்று. இவை இரண்டுபாட்டானும் கொடுங்கோன்மையது குற்றம் கூறப்பட்டது.

மணக்:— தனியிடத்தே வேலொடு நின்றவன் கையிலுள்ளன தா என்றல்போலும்; முறைசெய்தலை மேற்கொண்டுநின்றவன் குடிகள் மாட்டு இரத்தல் எ - று.

கோலொடு நிற்றல் - செவ்வைசெய்வாரைப் போன்று நிற்றல். நிச்சயித்த கடமைக்குமேல் வேண்டுகோளாகக் கொள்ளினும், அது வழியிற் பறிப்பதனோடு ஒக்கும் என்றவாறு.

பரிதி:— வேல்கொண்டு நடுக்காட்டிலே பறிக்கிற வேடற்கு ஒக்கும்; கொடுங்கோல் மன்னவன் கொள்ளுகிற கடமை எ - று.

காளிங்:— தான் கைப்பற்றிய மூவிலை வேலொடு நின்றான் ஒரு மூர்க்கன் அதனை ஓங்கி வேலே கடிதின் கொணர்ந்திடு பலி என்றதனை ஒக்கும்: யாது எனின், தான் கைக்கொண்டு செலுத்துகின்ற கொடுங்கோலோடு நின்ற மூர்க்கனாகிய அரசன் மற்று ஒருவனை நீ எமக்கு இத்துணைப் பொருள் தரவேண்டும் என்று இரக்கும் இரவானது எ - று.

மற்றும் தாம் உலகத்துச் சிலர் வேறு பலி வேண்டுதலும், இடு பலி அடுதலும் முறைமை யாகலான், அதுபோல அரசரும், தாம் பெறு கடன் வேண்டுதலும், இடு கடன் இடுதலும் முறைமை யாகலான், இவ்வாறு அன்றி ஒருவன் வந்து வலிதின் அடர்த்தலும், பிறர் அஞ்சி வந்து ஒன்று இடுதலும் போலும் ஆறில் ஒன்றாகிய செங்கோல்நெறி அன்றி அயிதம் கொள்ளும் கொடுங்கோன்மையும் என்பது பொருளாயிற்று என அறிக.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— வேற்றுமையுருபுகள் அல்லாதனவும் வேற்றுமை யுருபுகள்போல் வெளிப்படும் என்பதற்கு 'வேலொடு நின்றான்' என்பது மேற்கோள். (இ. கொ. 19.)

வேலொடு நின்றான் என்றவிடத்து உருபு இடையை, கொண்டு என்னும் வினையாகவே துணிந்தது, (ஷை 122.)

பெருந்:— ஒடு என்னும் பிரத்தியம் வந்ததற்கு மேற்கோள். (வீர. 34.)

ஒப்புமைப்பகுதி:

" அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது
நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வதே
கன்றுவிட் டாக்கறக்கும் போழ்தில் கறவானை
அம்புவிட் டாக்கறக்கு மாறு."
—பழ - நா.

"இன்று கொளற்பால நாளை கொளப்பொருள்
நின்று குறையிரப்ப நேர்படான் - சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்தும் அலன்." —நீதிநெறி. 30.

"ஏடவிழ்பைந் தாரோய் இமையோர் பதம்பெறினும்
நாடு நடுங்க நன்கல் லவை புரியார்
வேடர் பரிவேட்டம் செய்யார்....அரசரே."
—பிரமோத். பத்திராயு22

"உறையில் வாளொடு மாவழங் குறுவனத் தோடி
மறவ னோர்பொருள் தருகென இரத்தலை மானும்
இறைவன் வாழ்குடி தன்னில்ஒன் றொருபொருள் இரத்தல்."
—பிரபு. அக்கமா. துறவு. 22.

"மன்றுபறித் துண்ணேல்." —ஆத்தி. 23

முதுமொழிவெண்பாக்கள் :

"வெய்யகுல மன்னனென்று வேண்டுமென்றால் ஆரும்என்ன
செய்யலாம் கோவைத் தினகரா - கையிலே."
—தினகர. 59.

குறிப்பு:

கோல் பிடித்த மன்னவன், கன்றாட்டவிட்டுப் பால் கொள்வான்போலக் காலம் அறிந்து கொள்ளத்தக்கவன். வேல் பிடித்தவன் கொன்றுகொள்பவன். இவன் செயலை மன்னவன் மேற்கொண்டான் என்பதாம். இதனை அகப்படுத்திக் குமரகுருபரர் கோல் பிடித்தவன் குணத்தை இழந்தமையால் கொடுங்கோலன்வேந்து மல்லன் எனவும், வேலைப் பிடிக்காமலே அவன் குணத்தைமட்டும் கொண்டமையின் வேடனுமல்லன் எனவும் விளக்கிக் கூறினர்.

—தொகுப்பாசிரியர்.

553. நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன் - தன் நாட்டு நிகழும் தீமைகளை நாடோறும் ஆராய்ந்து அதற்கொக்க முறைமையைச் செய்யாத அரசன், நாடொறும் நாடு கெடும் - நாடோறும் நாடு இழக்கும்.

அரசனுக்கு நாடு உறுப்பாகலின், அதன்வினை அவன்மேல் நின்றது. இழத்தல் - பயன்எய்தாமை. மன்னவன் நாடு நாடொறும் கெடும் என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— குற்றமும் குணமும் நாடோறும் ஆராய்ந்து, அதற்குத் தக்கமுறை செய்யாத அரசன்நாடு நாடோறும்கெடும் எ - று.

இது நாடுகெடும் என்றது.

பரிதி:— நாடொறும் குடிகள் செய்கிற கிரமங்களை விசாரித்துச் செங்கோல்முறைமை செய்யாத மன்னற்கு நாள்தோறும் நாடுகெடும் எ-று.

காளிங்:— ஒரு மாத்திரைப் பொழுதும் இடைப்படாமை நாள் தோறும் ஆராய்ந்து செங்கோன்மை செய்து ஒழுகாத மன்னவன்தன் நாடானது நாள்தோறும் கெட்டுச் செல்லும் எ - று.

இனி இவ்வாறு அன்றி அரசனும் நாள்தோறும் கெட்டுச் செல் லும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

“நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி அவநெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாடோறும் செல்வ நரபதி குன்றுமே.” —திருமந்.

“ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
முறையில் அரசன் நாடு நல்கூர்ந்தன்று.” —முதுமொழி. 9 : 1.

முதுமொழிவெண்பாக்கள்:

“மாமன் என்றும் பாணன்என்றும் வந்தானைப் பொன்மதுரைச்
சேவகன்றன் என்றும் திரியாத சூரனென்றும்.” —முதுமொழி. 90.

குறிப்பு:

நாடொறும் நாடுகெடுதலாவது, குடிகளிடம் வெறுப்புக் குடிகொண்டு உட்பகை வளர்ந்துவருதல், அதனுல் வருவாய் குறைதல், பகைவர்க்கிடமாதல் முதலியன. நாடுதல் - ஒற்றானும், மாறுவேடந்தாங்கித் தானும் ஆராய்தல்.

—தொகுப்பாசிரியர்.

554. கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. (ச)

உரைப்பகுதி :

பரிமே:— சூழாது கோல் கோடிச் செய்யும் அரசு - மேல் விளைவது எண்ணாது முறைதப்பச் செய்யும் அரசன், கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் - அச்செயலான் முன் ஈட்டிய பொருளையும் பின் ஈட்டுதற்கு ஏதுவாகிய குடிகளையும் சேர இழக்கும்.

கோட என்பது திரிந்து நின்றது. முன் ஈட்டியபொருள் இழத்தற்கு ஏது, வருகின்ற பாட்டால் கூறுப.

மணக்:— பொருளையும் பொருள்தரும் குடியையும் கூட இழப்பன் முறை கோடி ஆராயாது செய்யும் அரசன் எ - று.

இஃது ஆராயாது செய்வதனுல் வருங் குற்றம் கூறிற்று.

பரிதி:— மழையும் மற்றுக் குடியும் இழப்பன், கொடுங்கோல் நடத்தி நல்ல மந்திரி வார்த்தை கேளாத மன்னவன் எ - று.

காளிங்;— இவ்வாறு அன்றிப் பின்னும் தனது நாட்டுள் வாழும் குடிகளையும் அக்குடிகளால் உளவாகும் உணவுப் பொருள்களையும் உடனே இழப்பன்; யாவன் எனின் நெறியும் நெறியல்லதும் தேராது, கோல் கோடி மற்று இங்ஙனம் செய்யும் அரசனவன் எ - று.

ஒப்புமைப்பகுதி :

"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறம் கூரின் மன்னுயிர் இல்லை,"

—மணிமே, 7 : 8 - 10.

"கோள்நிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரி இன்றி விளைவஃகிப் பசியும் நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பின் கற்பழிந்து அறங்கள் மாறி
ஆணையிவ் உலகுகேடாம் அரசுகோல் கோடின் என்றான்." —சீவக. 255

"முறைபெய லொழியும் கூழும் குடிகளும் ஒருங்கு நீங்கும்
.......காவலை விடுப்பின். —விநா. அரசி. 93.

குறிப்பு:

கோல்கோடும் அரசன், கோடுதற்குறுழிலையும் அமைச்சரோடு ஆலோசித்துச் செய்வானாயின் அதுவும் நிகழாது; அதனால் விளையும் இழப்பும் நிகழாது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

555. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே - அரசன் முறைசெய்யாமையால் குடிகள் துன்பமுற்று அதனைப் பொறுக்க மாட்டாது அழுத கண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை - அவன் செல்வத்தைக் குறைக்கும் கருவி.

அழுதகண்ணீர் - அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தை என்னுமையின், இஃது ஏகதேசவுருவகம், அல்லற்படுத்திய பாவத்தது தொழில் அதற்கு ஏதுவாகிய கண்ணீர்மேல் நின்றது. அக்கண்ணீரில் கொடிது பிறிதின்மையின், செல்வங் கடிதில் தேயும் என்பது கருத்து.

மணக்:— நீதியல்லன செய்தலானே அல்லற்பட்டு, அதற்கு ஆற்றாது, அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் ஆயுதம் எ-று.

இஃது அவ்வரசன் கெடும் என்றது.

பரிப்:— இவை இரண்டும், அல்லவை செய்ததனாலே இம்மை மறுமை இழப்பர் என்று கூறின.

பரிதி:— கொடுங்கோல் பொறுமல் குடி அழுத கண்ணீரன்றே அரசன் பாக்கியத்தைத் வெட்டும் ஆயுதம் எ - று.

காளிங்;— கொடுங்கோல் மன்னவன் செய்யும் கொடுவினையால் குடிகள் சாலத் துயரம் உற்று அது பொறுக்க மாட்டாது அழுதகண்ணீர் அதுவே அரசனானவன் அங்ஙனம் ஈட்டிய பெரும்பொருளைத் தேய்க்கும் வழிக்குக் கருவியாகலான் இவ்வினையாளர்க்கு வேறு ஓர் பகைவினை வேண்டா எ - று.

ஒப்புமைப்பகுதி:

“தோற்றத்தால் பொல்லார் துணையிலார் நல்கூர்ந்தார்
மாற்றத்தால் செற்றார் எனவலியர் அட்டக்கால்
ஆற்றாது அவரழுத கண்ணீர் அவரவர்க்குக்
கூற்றமாய் வீழ்ந்து விடும்.” —பழ. கா.

“வெருவரு முறைபுரி வேந்தை விட்டகல்
திருவொடு பெயர்வதோர் செல்வம் போலவே.”—கந்த. மாயைநீங்கு. 4.

“கண்ணினீர் கொல்ல உயிர்
கொடுத்த கோவேந்தன் வாழியரோ.” —சிலப்.

“ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.” —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

“ஐவரில் லாளழுத அன்றேகண் டேக்குற்றார்
துய்யகங்கை சேய்முதலோர் சோமேசா - மெய்யேயாம்.”
—சோமேசர். 56.

“அங்கோ வல்.......யடுங்கோ வலனுயர்த்த
செங்கோல் கொடுங்கோல் திருமலையா - எங்கோனே.” —திருமலை.

“தாதை சிறையிருக்கத் தங்கையழக் கஞ்சனுறும்
தீதைஎவர் சொல்வார் சிவசிவா - மேதினியில்.” —சிவசிவ. 56.

“துன்று புலிக்கிடும்பை சூழ்ந்து புரவேந்தர்
இன்றி எரிந்தார் இரங்கேசா - கன்றியே.” —இரங். 56.

குறிப்பு:

துளிதுளியாக விழும் கண்ணீர்த்துளி, பொருளைச் சிறிது சிறிதாகத் தேய்க்கும் படைக்கு ஒப்பாயிற்று. —தொகுப்பாசிரியர்.

556. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி. (சு)

உரைப்பகுதி:

பரிமே:— மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை - அரசர்க்குப் புகழ்கள்தாம் நிலை பெறுதல் செங்கோன்மையானும்; அஃது இன்றேல் மன்னர்க்கு ஒளி மன்னாவாம்-அச்செங்கோன்மை இல்லையாயின், அவர்க்கு அப்புகழ்கள்தாம் உளவாகா.

விகாரத்தால் தொக்க மூன்றாவது விரித்து ஆக்கம் வருவித்து உரைக்கப்பட்டது. மன்னுதற்கு ஏது புகழாதல் *"இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசைநடுக" என்பதனால் அறிக. மன்னாமை - ஒருகாலும் நிலையாமை. பழிக்கப்பட்டால் ஒளி மன்னாவாம், ஆகவே, தாமும் மன்னார் என்பதாயிற்று. வென்றி, கொடை முதலிய ஏதுக்களால் புகழ் பகுதிப் படுதலின், பன்மையால் கூறினார். அவையெல்லாம் செங்கோன்மை யில்வழி இலவாம் என்பதாம். இவை நான்கு பாட்டானும் கொடுங்கோலனாயினான் எய்தும் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— அரசர்க்கு ஒளி நிலைபெறுதல் செங்கோன்மை; அஃதில்லையாயின், அரசர்க்கு ஒளி நிலையாதாம் எ - று.

முறை செய்யாமையால் அவன் நிலைபெறுதல் அருமையெனக் குற்றங் கூறுவார் முற்படப் புகழில்லையாம் என்றார்.

பரிதி:— அரசற்குச் செங்கோல் செயங்கொடுக்கும்; மன்னவர் புகழ்பெறுவர்; கொடுங்கோலாகில் செயமும் இல்லை; புகழும் இல்லை எ - று.

காளிங்:— மன்னரானவர் தமக்குத் தமது ஒளி நிலை பெறுதலாவது செங்கோன்மை நிலை பெறுதல்; மற்று அஃது இல்லெனின் மன்னர்க்கு நிலையாவாம் ஒளிகளானவை எ - று.

மன்னுதல் என்பது நிலைபெறுதல்; மன்னாவாம் என்பது நிலையாவாம் என்றது. ஒளி என்பது குலமும் குணமும் கல்வியும் உணர்வும் மரபும் பிறவும் ஆகிய ஒளிகளான பெறுபொருள்கள் என அறிக.

*நான்மணிக் 15.

முதுமொழிவெண்பாக்கள்:

"வேர்த்திடுக்கண் செய்து விளிந்தான் கருநாடன்
மூர்த்திபான் மேனுள் முருகேசா - கூர்த்துணரின்." —முருகேசர். 56.

குறிப்பு:

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை - அரசர்கட்கு வினைவகையான் வரையறுக்கப்பட்ட காலத்தளவும் நிலைபெறுதல் செங்கோன்மையான் ஆம். அஃதின்றேல் - அச்செங்கோன்மை இல்லையாயின், மன்னர்க்கு ஒளி மன்னுவாம் - அரசர்க்கு என்றும் அழியாது நிற்கும் ஒளி நிலைபெறுவாம் எனவும் பொருள் காண்பர். இதனால் அரசர்கள் உள்ளவரையில் இடையூறு இன்றி நிலைபெறுதற்கும், இறந்த பின்பும் ஒளியோடு இருத்தற்கும் செங்கோன்மை வேண்டப்படும் என்பது விளக்கியவாறு.

—தொகுப்பாசிரியர்.

557. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளிஇன்மை வாழும் உயிர்க்கு. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— துளியின்மை ஞாலத்திற்கு எற்று - மழையில்லாமை வைத்து வாழும் உயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயக்கும், அற்றே வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு - அவ்வகைத்துன்பம் பயக்கும் அரசன் தண்ணளியில்லாமை அவன் நாட்டு வாழும் குடிகட்கு.

சிறப்புப்பற்றித் துளி என்பது மழைமேல்நின்றது; உயிர் என்பது குடிகள்மேல் நின்றது. மேல் 'வானோக்கி வாழும்' என்றதனை எதிர்மறை முகத்தால் கூறியவாறு.*

மணக்:— உலகத்தில் பல்லுயிர்க்கும் மழை யில்லையானால் வருந்துன்பம் எத்தன்மைத்தாகின்றது அத்தன்மைத்து; அரசன் அருளிலனாதல் அவன் கீழ் வாழும் மக்கட்கு எ - று.

இஃது அருள் செய்யாமையால் வருங் குற்றம் கூறிற்று.

பரிதி:— மழை இல்லாதபோது பூமி எப்படித் துயருறும்; அத் தன்மையின அரசன் செங்கோல் கோணின் மண்டலம் எ - று.

காளிங்:— பருவத்து வந்து பெய்யும் மழையில்லாமை இவ்வையகத்துக்குப் பெருமையில்லாதது எத்தன்மைத்து; மற்று அத்தன்மைத்து; யாது எனின் வேந்தனது தண்ணளி இல்லாமையாகிய கொடுங்கோன்மை மற்று ஈண்டு வாழும் உயிர்கட்கு எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பாற்றுளி, நெய்த்துளி எனவுமாம் ஆகலின், சிறப்புப் பற்றித் துளி மழைமேல் நின்றது.

ஒப்புமைப்பகுதி :

"பெயின் நந்தி வறப்பிற்சாம் புலத்திற்குப் பெயல் போல்."—கலி. 78 : 19.

"வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான் சோர்வு இனிதே." —இனியது. 16.

குறிப்பு:

மழையின்மையால் வையத்துப் பசி வருத்துவதுபோல அளியின்மையால் உலகத்துப் பஞ்சமும், பிணியும், தீயர்செயலும் வருத்தும். மழை குன்றியதால் உழவர் செயல் செய்யாதவாறுபோல அளியின்மையால் குடிகள் தத்தம் தொழிலைச் சரிவரச் செய்யாமையான் நாட்டு வருவாய் குன்றும். தானம் தவம் இரண்டும் தங்கா. அளியின்மையால் மாதவர்நோன்பும் மடவார் கற்பும் இல்லையாகும். ஆதலால் மழையின்மை வையத்திற்கு எற்று அற்று அளியின்மை என்றார்.

—தொகுப்பாசிரியர்.

558. இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோல்கீழ்ப் படின். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— முறைசெய்யா மன்னவன் கோற்கீழ்ப் படின் - முறை செய்யாத அரசனது கொடுங்கோலின்கீழ் வாழின், இன்மையின் உடைமை இன்னாது - யாவர்க்கும் பொருளினது தன்மையினும் உடைமை இன்னாது.

தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் வெஃகுவோனது நாட்டுக் கைக்நோவ யாப்புண்டல் முதலிய வருவது பொருளுடையார்க்கே யாகலின், அவ்வுடைமை இன்மையினும் இன்னாதாயிற்று. இவை இரண்டு பாட்டானும் அவன்நாட்டு வாழ்வார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— நல்குரவினும் செல்வம் துன்பமாகும்; முறைசெய்யாத அரசனது கொடுங்கோலின் கீழே குடியிருக்கின் எ - று.

இது பொருளுடையாரும் துன்பமுறுவர் என்றது. இவை மூன்றும் முறை செய்யாமையாலே வரும் குற்றம் கூறின.

பரிதி:— மிடியினும் பொல்லாது கொடுங்கோல் மன்னவன் மண்டலத்திற் குடிகள் மிடைப்படுவது எ - று.

காளிங்:— உலகத்தோர்க்கு மிகவும் இன்னாதது யாதோ எனின், இல்லாமை அன்றே; மற்று அதனினும் சால இன்னாததுடைமையானது எவ்விடத்து எனின் முறைமை செய்யாத மன்னவனது கொடுங்கோலிடத் தகப்பட்ட குடிகட்கு எ - று.

இனி மற்றுக் கொடுங்கோன்மை குற்றம் என்று கடிந்து ஒழுகும் குணமுடைய வேந்தன் செய்ய வேண்டுவது ஒன்று உண்டு; அது யாதோ எனின், முறை செய்வழியும் உயிர்கள் அஞ்சத்தக்கனவாகிய வினை செய்யற்க என்பதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— உடைமை - எழுவாய். கட்டிபிறக்குதல் - கிட்டிகட்டுதல் முதலாயின காண்க.

குறிப்பு:

பெற்றிழத்தலைக்காட்டினும் இல்லாமலே இருத்தல் பெருந்துன்பந் தருவ தன்மையின்உடைமை இன்மையின் இன்னாதது ஆயிற்று. எந்நேரத்திலும் துன்பத்தை எதிர்நோக்கியிருக்கவேண்டுதலின் கொடுங்கோலரசன்கீழ் உடைமை இன்னாதுஎன்றார்.

—தொகுப்பாசிரியர்.

559. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— மன்னவன் முறை கோடிச் செய்யின் - மன்னவன் தான் செய்யும் பொருளை முறை தப்பச் செய்யுமாயின், உறை கோடி வானம் பெயல் ஒல்லாது - அவன் நாட்டுப் பருவமழை இன்றாம்வகை மேகம் பொழிதலைச் செய்யாது.

இரண்டிடத்தும் கோட என்பன திரிந்துநின்றன. உறை கோடுதலாவது பெய்யுங்காலத்துப் பெய்யாமை. அதற்கு ஏது வருகின்ற பாட்டால் கூறுப.

மணக்:— முறைமைகோட மன்னவன் செய்வனாயின், மழை துளிவிடுதலைத் தவிர்த்துப் பெய்யாதொழியும் எ - று.

பரிதி:— செங்கோல் முறைமை நடவாத அரசன் மண்டலத்துக்கு மழை பெய்ய நாணும் எ - று.

காளிங்:— உலகத்து வேந்தனானவன் நீதி வழுவி நெறியல்லன செய்யுமாயின், கொண்டலானது பருவம் கோடி மற்று ஈண்டு மழை பெய்தலைச் செய்யாது எ - று.

முறைகோடி என்பது நீதி வழுவி என்றது. உறை என்பது மழைத்துளி என்றது. ஒல்லாது என்பது அதனைச் செய்யாது என்றது. வானம் என்பது கொண்டல் என்றது.

ஒப்புமைப்பகுதி:

"வெஞ்சின வேந்தன் முறைநெறியில் சேர்தலும்
திங்கள்மும் மாரிக்கு வித்து." —திரி. 98.

"கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
வல்லே மழையறுக்கும் கோள்." —ஷை. 50.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
முறையில் அரசன்நாடு நல்கூர்ந் தன்று." —முதுமொழிக். 9 : 1.

"கொண்மூ, மழைகால் ஊன்று வளவயல் விளையா
கொடுங்கோல் வேந்தன் காக்கு நாடே." —ஆசிரிய.

"பெறுபயன் நாட்டில் குன்றும் பிறங்கொளி நிலைபெறாது
......பொருள்கைக் கொண்டு காவலை விடுப்பின்." —விநா. அரசி. 93.

"வேந்தன் முறைதிறம்பின் வேத விதிதிறம்பும்
ஏந்திழையார் தம்கற்பும் இல்லறமும் நில்லாவாம்
மாந்தர் பசியால் உணங்க மழைவறந்து
பாந்தள் முடிகிடந்த பாரின்விளை வஃகுமால்."
—பிரமோத். பத்திராயு. 13.

குறிப்பு:

உறைகோடலாவது வேண்டிய காலத்துப் பெய்யாமையும் வேண்டாக் காலத்து மிகுபெயலும் உடையதாதல். —தொகுப்பாசிரியர்.

560. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின். (௬0)

உரைப்பகுதி

பரிமே:— காவலன் காவான் எனின் - காத்தற்கு உரிய அரசன் உயிர்களைக் காவானாயின், ஆ பயன் குன்றும் - அறனில்லாத அவன் நாட்டுப் பசுக்களும் பால்குன்றும், அறுதொழிலோர் நூல் மறப்பர் - அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர்.

ஆபயன் - ஆவாற்கொள்ளும் பயன். அறுதொழிலாவன ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என இவை. பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற்குரியார் மந்திரம் கற்பம் என்பன ஓதாமையானும், வேள்வி நடவாதாம்; ஆகவே, வானம் பெயலொல்லாது என்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானும் அவன் நாட்டின்கண் நிகழுங்குற்றம் கூறப்பட்டது.

மணக்:— பசுக்கள் பால் குறையும்; அந்தணர் வேதம் ஓதார் அரசன் காவானாயின் எ - று.

இது காவாமையால்வரும் குற்றம் கூறிற்று.

பரிதி:— ஆவின் பயன் குன்றும்; வேதநீதியும் கெடும்; மன்னவன் செங்கோல் குன்றின் எ - று.

காளிங்:— உலகத்து முந்நிரைப் பசுக்களானவை கறவையும் கன்றுமாகப் பயன்பட்டு வருகிற பயனும் குன்றும்: மற்று அதுவேயும் அன்றி அறுவகைத் தொழிலுக்கு உரியராகிய அந்தணரும் அருமறை ஓதலும் மறந்துவிடுவர்; என்னை எனின் வையம் காவலன் ஆகிய மன்னவன் செங்கோல் முறையால் பாதுகாவாது கொடுங்கோன்மை செய்து ஒழுகின் எ - று.

மேற்கோள்பகுதி:

நச்:— ஐவகை மரபின் அரசர்பக்கத்தில் காவலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

காரி:— ஒற்றுத்தோன்றும் சந்தி ஒற்றின்றி இயல்பாய் நின்றதற்கு 'ஆபயன்' என்பது மேற்கோள். (மாற. 266.)

ஒப்புமைப்பகுதி:

" அறுதொழி லாளர் நூல்கள் அயர்ப்பர்ஆன் பயனின் றுகும்
கறையின்மேல் பொருள்கைக் கொண்டு காவலை விடுப்பின் மைந்தா."
—விநா. அரசி. 93.

" வானம் சுருங்கில் தானம் சுருங்கும்." —பழ.

குறிப்பு:

இலக்கியங்களில் யாண்டும், 'ஆ வாழி, அந்தணர் வாழி,' 'வாழ்க அந்தணர் வானவரானினம்'' 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்' என ஆவும் அந்தணரும் சேர்ந்தே வழங்கப்பெறுதல் காண்க. ஆ தன் பால் முதலிய பயன்களால் நாட்டில் உடல்வளர்ச்சி வழங்குவது. அந்தணர் நூலோதி, ஓதியபடி ஒழுகி, உள்ளக்கிழியின் உருவெழுதி உற்றுநோக்கி உலகத்தில் உயிர்வளர்ச்சி வழங்க இருப்பவர்கள். ஆனிடம் காணப்பெறுவதும் அமைதி. அந்தணரிடமும் அது. அரசன் காவல் வேண்டும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை.

பரிமே:— கொலைமேற், வேலொடு, நாடொறும், கூழும், அல்லற்பட்டு, மன்னர்க்கு, துளியின்மை, இன்மையின், முறைகோடி, ஆபயன்.

மணக்:— மன்னர்க்கு, நாடொறும், இன்மையின், துளியின்மை, ஆபயன், முறைகோடி, கூழும், கொலைமேற், அல்லற்பட்டு, வேலொடு.

பரிதி:— நாடொறும், கூழும், மன்னர்க்கு, முறைகோடி, ஆப்பயன், துளியின்மை, வேலொடு, அல்லற்பட்டு, இன்மையின், கொலைமேற்,

காளிங்:— நாடொறும், கூழும், வேலொடு, அல்லற்பட்டு, முறைகோடி, கொலைமேற், துளியின்மை, மன்னர்க்கு, ஆபயன், இன்மையின்.

57. வெருவந்தசெய்யாமை.

தொகுப்புரை:

[குடிகள் குற்றஞ்செய்யின் நடுவுநிலைமை தவறாமல் ஆராய்ந்து, மேலும் செய்யாதபடி குற்றத்திற்குத்தக தண்டனை அளிப்பவனே அரசன். நெடுங்காலம் செல்வம் நீங்காமலிருக்க விரும்பும் வேந்தர்கள் வேகமாகக் கையை ஓங்கி மெதுவாக அடிக்க. குடிகள் அஞ்ச ஆளுங் கொடுங்கோல்மன்னன் விரைவில் அழிவான்: அது உறுதி. 'அம்ம! நம்மரசன் மிகமிகக் கொடியன்' என்று கூறப்படும் அரசன் ஆயுளும் குறைந்து விரைவில் கெடுவன். குடிகளால் காணவே முடியாதவனும் கண்டாலும் கடுகடுத்த முகத்தை உடையவனும் உள்ள அரசன் செல்வம், பேய்காத்த புதையல்போலத்தான். மன்னன் சிறிதும் கண்ணோட்டமில்லாமல், கடுஞ்சொல் சொல்வானாயின் அவன் செல்வம் உடனே அழியும். கடுகடுத்த சொல்லும், அளவுக்கு மீறிய தண்டனையும் அரசனது வலிமையைத் தேய்க்கும் அரங்களாம். எதனையும் அமைச்சரோடு இருந்து ஆராயாது அரசன் சினத்தால் சீறிவிழுவானாயின் செல்வம் குறையும். போர் மூள்வதற்கு முன்பே அரணையாக்கிக்கொள்ளாத அரசன் போர் மூண்டகாலத்து விரைவிற்கெடுவான். கொடுங்கோன்மை, கல்லாதமக்களை மந்திரிகளாக மதித்துக் கூட்டும். இந்தக் கூட்டத்தைப்போல நிலத்திற்குப்பாரம் வேறில்லை.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது குடிகள் அஞ்சுவதும் *பகுதி அஞ்சுவதும் தான் அஞ்சுவதுமாய தொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைப்பாற்படுதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

மணக்:— வெருவந்த செய்யாமையாவது பிறர்க்கு அச்சம் வருவன செய்யாமையும், தனக்கு அச்சம் வருவன செய்யாமையும் கூறுதல். தான் முறைசெய்வாரைப் போன்றிருந்து அதனை உலகத்தார் வெருவுமாறு செய்வனாயின், அதுவுங் கொடுங்கோலொடு ஒக்குமென்று அதன்பின் இது கூறப்பட்டது.

---

* 'புரோகிதன், பிரதிநிதி, பிரதானன், சசிவன், மந்திரி, நீதியதிபன், பண்டிதன், சுமந்திரன், அமாத்தியன், தூதன் ஆகிய இப்பதின்மரும் அரசருடைய பிரகிருதிகளாவர்' (சுக்கிரநீதி. அத். 2. சூ. 69, 70).

பரிதி:— வெருவந்தசெய்யாமையாவது குடியானவன் வெருவுவது செய்யுந் தொழில் செய்யாமை எ - று.

561. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து. (க)

உரைப்பகுதி :

பரிமே:— தக்காங்கு நாடி - ஒருவன் தன்னின் மெலியார்மேல் சென்றவழி அதனை நடுவாக நின்று ஆராய்ந்து, தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - பின்னும் அது செய்யாமற்பொருட்டு அவனை அக்குற்றத்திற்கொப்ப ஒறுப்பானே அரசனாவான்.

தக்காங்கு ஒத்தாங்கு என்பன ஒருசொல். தகுதி என்பது நடுவு நிலைமையாதல் *"தகுதி யென ஒன்று நன்றே" என்பதனானும் அறிக. இதனானே தக்காங்கு நாடாமையும், பிறிதோர்காரணம்பற்றி மிக ஒறுத்தலும், குடிகள் அஞ்சும் வினையாதல் பெற்றாம்.

மணக்:— குற்றத்திற்குத் தக ஆராய்ந்து, ஒருவர்மேற் செல்லாமை காரணமாக உலகத்துப் பொருந்துமாறு ஒறுப்பவன் அரசன் எ-று.

பரிப்:— இது செங்கோன்மை யன்றோ எனின், ஒக்கும்: முறை செய்யுங்கால் அரசன் வெகுட்சி உடையனாய் உலகத்தார் அஞ்சுமாறு செய்யாது, இம்முறை செய்யாக்கால் ஒருவரொருவரை அடர்ப்பரென்று உலகத்தார் தாமே இசையச் செய்யவேண்டும் என்றற்கு வேறுபடுத்துக் கூறப்பட்டது. இவ்வாறு செய்தல் வெருவந்த செய்யாமை என்றது.

பரிதி:— குடிக்குத்தக்க கடமை நீதியாலே கொண்டு தனக்குத் தலைசெல்லாத மாற்றாரை வெல்பவன் அரசன் எ - று.

காளிங்:— மற்று இப்படி யாகலான் அவை அவை செய்யத்தக்க பரிசு ஆராய்ந்து மற்று ஒருதலைச் சென்று ஒதுங்காத தன்மையான், ஒன்றினும் ஏற்றத் தாழ்வு இன்றி ஒத்து நிற்கும் பரிசே ஒறுக்க வேண்டும் அதனை ஓர்ந்து ஒறுப்பது வேந்தாவது; எனவே அது செய்யாவிடத்து எல்லாம் நல்லவி செய்தலே அரசர்க்கு அழகு எ - று.

---

*குறள் 111.

முதுமொழிவெண்பாக்கள்:

" இசைபயின்றார் வாதத் திறைவரும்ஒன் றேனும்
இசைவன்றி......வியற்குன் - இசைஒன்றத்." —முதுமொழி. 91.

குறிப்பு:

தலைச்செல்லாவண்ணத்தால் என்பதற்குப் பரிமேலழகர் 'பின்னும் அக்காரியத்தைச் செய்யாமற்பொருட்டு' என உரை காண்பர். மணக்குடவர் பரிப்பெருமாள் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் செல்லாமை காரணமாக என்பர். காளிங்கர் ஒரு தலைச்சென்று ஒதுங்காத தன்மையான் அதாவது நடுநிலை தவறாதவண்ணம் என உரை காண்பர். தலைச்செல்லாவண்ணத்தால் ஒறுப்பது என இயைதலின் குற்றத் தளவின் தண்டம் மிகாதவண்ணம் என்றும், ஒத்தாங்கு ஒறுப்பது என்பதற்கு ஒத்த தண்டமாம்வண்ணம் என்றும் உரைப்பாரும் உளர்.

—தொகுப்பாசிரியர்.

562. *கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— கடிது ஓச்சி - அவ்வொத்தாங்கு ஒறுத்தல் தொடங்குங்கால் அளவிறப்பச் செய்வார்போல் தொடங்கி, மெல்ல எறிக-செய்யுங்கால் அளவிறவாமல் செய்க, ஆக்கம் நெடிது நீங்காமை வேண்டுபவர் - ஆக்கம் தங்கண் நெடுங்காலம் நிற்றலை வேண்டுவார்.

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் அதனை அஞ்சுதற் பொருட்டும், மெல்ல எறிதல் யாவரும் வெருவாமைப்பொருட்டுமாம். தொடங்கினவளவில் குறைதல்பற்றி மென்மை கூறப்பட்டது. ஓச்சுதல் எறிதல் என்பன இரண்டும் உவமைபற்றி வந்தன. இவை இரண்டு பாட்டானும் குடிகள் வெருவந்த செய்யாமையது இயல்பு கூறப்பட்டது.

மணக்:— கடிதாகச் செய்வாரைப்போன்று மெல்லிதாகச் செய்க; நெடிதாக வருகின்ற ஆக்கம் நீங்காமையை வேண்டுவார் எ - று.

*'கடிதோக்கி' என்பது காளிங்கர், மணக்குடவர் பாடம்.

இது குற்றத்திற்குத் தக்க தண்டத்தைக் குறையச் செய்யவேண்டும் என்றது.

பரிதி:— குடியானவர்களை மிகுபயங்காட்டி உடனே நல்லது சொல்லுக; அரசற்கு ஆக்கம் மென்மேல் வர்த்திக்கவேண்டுமாகில் எ - று.

காளிங்:— இவ்வாறு ஆகலான் ஒருவரைத் தண்டம்செய்யும் இடத்து முன்னம் அவர் அஞ்சுமாறு கடிது செய்வார்போல் காட்டிப் பின் மெல்லெனச் செறுத்து விடுக. மற்று யார் எனின், தமது நெடிய செல்வம் இடையறாது வேண்டும் அரசர் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நெடிது - நெடுங்காலம். ஓச்சுதல், எறிதல் என்பன இரண்டும் முறையே கோல் என்னும் உவமை பற்றி வந்தன.

ஒப்புமைப்பகுதி:

"பேதைமைப் பாலி னாதல் பெருங்கிழ மையினா னாதன்
மேதக நட்டோர் மாட்டு விரவிடும் பிழைக ளெல்லாம்
காதுதற் பால அல்ல காதிடின் கண்ணி னோடி
நோதக ஓச்சி மெல்ல நோன்றவே எறிகு வாரால்."
—தணிகை, வீரட்ட. 205.

"அடிக்கும் ஒருகை, அணைக்கும் ஒருகை." —பழ.

குறிப்பு:

ஓச்சுங்கால் கடியதாயினும், அதன் தொழிற்பயன் உறுங்கால் மெல்லிதாக இருத்தல் வேண்டும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

563. வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— வெருவந்த செய்து ஒழுகும் வெங்கோலன் ஆயின் - குடிகள் வெருவிய செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனுமாயின், ஒருவந்தம் ஒல்லைக் கெடும் - அரசன் ஒருதலையாகக் கடிதில் கெடும்.

வெங்கோலன் என்பது ஈண்டு வாளா பெயராய் நின்றது. ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒருபொருட்கிளவி. அச்செயல்களும் கேடுகளும் முன்னர்க் கூறப்படும்.

மணக்:— அரசன் அஞ்சத்தகுவனவற்றைச் செய்தொழுகும் வெங்கோலை யுடையனாயின், அவன் ஒருதலையாகக் கடிதிற்கெடும் எ - று.

பரிப்:— இது நாடும் நகரமும் பொறுப்பினும் தெய்வத்தினால் கெடுவன் என்றது.

பரிதி:— யாரும் வெருவ நடத்துங் கொடுங்கோல் மன்னன் ஒருக்காலே கிளையுடனே கெடும் எ - று.

காளிங்:— அரசன் செங்கோல் நீதி செலுத்துமிடத்து உயிர்கள் பெரிதும் அஞ்சத் தக்கனவற்றைச் செய்து ஒழுகுமது கொடுங்கோல் போலும் தன்மையது உடைத்து: மற்று அதனால் அவனது பெருஞ்செல்வம் கடிதில் தலை அழியும்; எனவே ஒருவரைத் தண்டிக்குங்காலத்தும் இதற்குத் தகுதி என்று முன்னோர் சொன்ன முறைநூல் வழியால், மற்றவன் மனம் பொருந்தக் காட்டிய வழக்குடையானாதலே மன்னர்க்கு இயல்பு எ - று.

ஒருவந்தம் என்பது பெருஞ்செல்வம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒருபொருட் கிளவி. வெங்கோலன் என்பது வாளா பெயராய் நின்றது; வெருவந்த செய்தலும் அப்பொருட்டாதலின் என்க. "அடியளந்தான் றாஅயது" (610) என்பதும், கோவையாருள் "கருங்கண்ணனை" (53) என்பதும், "தெள்ளி நறவந் திசைதிசை பாயு மலைச்சிலம்பா" (128) என்பதும் அது. "பெயர்நிலைக் கிளவியின்" (தொல் - சொல். 449) என்னுஞ் சூத்திரத்தில் "களிறு கண்டல்லது வாளுறை கழிப்பறியாவேலோன்" எனவும், 'செழுந் தாமரையன்ன வாட்கண்" எனவும், நச்சினார்க்கினியரும் உரைத்தார் என்க.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— பல சொல்லினையே ஒரு சொல்லாகவும் கற்றறிந் தோர் கருதுவர் என்பதற்கு மேற்கோள். (கெ ர. 116.)

ஒப்புமைப்பகுதி:

"ஊருடன் பகைக்கின் வேரொடும் கெடும்." —கொன்றை. 6.

முதுமொழிவெண்பாக்கள்:

"வண்ணமகள் நோவ வருகீ சகன்மடிந்தான்
திண்ணமிது அன்றோ சிவசிவா - எண்ணின்." —சிவசிவ. 57.

"தாடகைதன் மைந்தர் தவமுனியை அச்சுறுத்தி
ஈடாக்கர் ஆனார் இரங்கேசா - நாடி." —இரங். 57.

குறிப்பு:

வெங்கோலனாதற்கு இடு என்றல் முறைகோடுதல் முதலாயின இலக்கணமாதல்போல, வெருவந்தசெய்தலும் ஆமென்பார் வெருவந்த செய்தொழுகும் வேங்கோலன் என்றார். ஒருவந்தம் - உறுதி என்பர் பரிமேலழகர். பெருஞ் செல்வம் என்பர் காளிங்கர். 'ஒருவந்தம் கைத்துடையார்' (593) என்புழியும் துணிவு என்ற பொருளிலேயே வந்துள்ளமை காண்க.

—தொகுப்பாசிரியர்.

564. இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— இறை கடியன் என்று உரைக்கும் இன்னாச்சொல் வேந்தன் - குடிகளான் நமது இறைவன் கடியன் என்று சொல்லப்படும் இன்னாதசொல்லையுடைய வேந்தன், உறை கடுகி ஒல்லைக்கெடும் - ஆயுளும் குறைந்து செல்வமும் கடிதின் இழக்கும்.

நெஞ்சு நொந்து சொல்லுதலான், இன்னாமை பயப்பதாய சொல்லை இன்னாச்சொல் என்றார். உறை என்பது மூதனிலைத் தொழிற் பெயர். அஃது ஈண்டு ஆகுபெயராய் உறைதலைச்செய்யும் நாண்மேல் நின்றது. அது குறைதலாவது அச்சொல்லில்லாதார்க்கு உள்ளதில் சுருங்குதல்.

மணக்:— தன்னிழலில் வாழ்வாரால் அரசன் கடியனென்று கூறப்பட்ட இன்னாத சொல்லையுடைய வேந்தனானவன், தான் உறையுமிடம் வெகுளப்பட்டு விரைந்து கெடும் எ - று.

இது, நாடும் உறையும் இடமும் பொறுப்பினும் தெய்வத்தி ஞற் கெடுவன் என்றது.

பரிதி:— குடிக்கடமையை வாங்குதற்கு வலியன் குடியைக் காக்க எளியனென்னும் அரசன் சடுதியிலே நகர் இழப்பான் எ - று.

காளிங்:— மற்று இம்மன்னவன் சாலக் கடியன் என்று மக்கள் யாவரும் சொல்லுகின்ற இன்னுத சொல்லினையுடைய வேந்தனது நாடும் ஊரும் விரையக் கெட்டுவிடும்; முன் சொல்லியவையும் அன்றியும் எ - று.

உறை என்பது இடம். இறை என்பது கடமை.

முதுமொழிவெண்பாக்கள்:

"காத்த கபிலற்கிடுக்கை செய்து கணைஞழிந்தான்
மூத்தோன் மழுவான் முருகேசா - ஏத்தம்." —முருகேசர், 57.

உரைப்பகுதி :

உறையென்பதற்கு உயிரோடு உறைதற்குரியதாகிய நாள் என்பர் பரிமேலழகர். உறைவிடம் அதாவது நாடும் ஊரும் என்பது பரிப்பெருமாள், மணக்குடவர் காளிங்கர் உரைகள். நாடுகெடும் என்ற அவர்கருத்து நாட்டுமக்கள் மனம்திரிந்து சினப்பர் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

565. அருஞ்செவ்வி இன்னு முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— அருஞ்செவ்வி இன்னுமுகத்தான் பெருஞ்செல்வம் - தன்னைக் காணவேண்டுவார்க்குக் காலம் அரியனுய்க் கண்டால் இன்னுத முகத்தினை உடையானது பெரியசெல்வம், பேய் கண்டன்னது உடைத்து - பேயால் காணப்பட்டாற்போல்வதொரு குற்றம் உடைத்து.

எனவே, இவை இரண்டும் வெருவந்த செய்தலாயின. இவை செய்வானைச் சார்வார் இன்மையின், அவனது செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாது என்பதுபற்றிப் பேய்கண்டன்னதுடைத்து என்றார். காணுதல் - தன்வயமாக்குதல்.

மணக்:— காண்டற்கரிய செவ்வியையும் இன்னா முகத்தையும் உடையவனது பெரியசெல்வம் பேயைக்கண்டதொக்க அச்சம்தருதல் உடைத்து எ - று.

இது செல்வத்தை வாங்குவார் இன்மையின் படை சேராது என்றது.

பரிதி:— கிருபையில்லாதவன் குளிர்ந்தமுகம் இல்லாதவன் செல்வம் நல்லோர்க்கு ஆகாதபடியினாலே பேய் செல்வம்பெற்றதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— அரசர் முறை செய்யுமிடத்து உவகைச் செவ்வியும் கண்ணோட்டமும் அரியன் ஆகிய இன்னா முகத்தானது பெரிய செல்வமானது எதனை ஒக்கும் எனின், பேயினது நோக்கம் தாக்கிய உருவானது எத்தன்மை உடைத்து மற்று அத்தன்மைத்து ஆம்: எனவே பேய் தாக்கிய உருவு பெண்ணுருவு ஆயினும் ஆணுருவு ஆயினும் உருவு ஒன்று இருந்து உள் ஓய்ந்துவிடும்; அதுபோல இங்கும் செல்வம் உள்ளதுபோன்று இருந்து உள் உடைந்து விடும் எ - று.

குறிப்பு:

பூதங்காத்த செல்வம் பூதத்திற்கும் பயன்படாது, உலகிற்கும் பயன் படாது. அதுபோல இன்னாமுகத்தான் செல்வமும் 'செல்வத்துப் பயனே ஈதலாதலின்' ஈத்துவக்கும் இன்பமும் அற்று, ஈதலால் பிறர்நுகரும் இன்பமும் அற்றுப்போம் என்பதாம். பேய்கண்டது அன்னது - பேயாற் காவல்காணப்பட்டதாகிய செல்வத்தை ஒத்தது.

பேய் பிடித்தவர் தன்செயலற்றுப் போவதுபோல அரசர் செல்வமும் பயனற்றுப்போம் என்பர் காளிங்கர். இத்தகைய அரசர் செல்வத்தைக்கண்டாலே பேயைப்பார்த்தது போலாம் என்பர் பரிப்பெருமாள்.

—தொகுப்பாசிரியர்.

566. கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும். (சா)

உரைப்பகுதி :

பரிமே:— கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் - அரசன் கடிய சொல்லையும் உடையனாய்க் கண்ணோட்டமும் இலனாயின், நெடுஞ் செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும் - அவனது பெரிய செல்வம் நீடுதலின்றி அப்பொழுதே கெடும்,

*'வேட்டம் கடுஞ்சொல் மிகுதண்டம் சூதுபொருள், ஈட்டம் கள் காமமோடேழு' எனப்பட்ட விதனங்களுள் கடுஞ்சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ்வெருவந்தசெய்தலுள் அடக்கினர். கண் ஆகுபெயர். இவை செய்தபொழுதே கெடுஞ்சிறுமைத் தன்றாயினும் என்பார் நெடுஞ் செல்வம் என்றார். நீடுதல் - நீட்டித்தல்.

மணக்:— அரசன் கடியசொல்லை உடையவனுமாய்க் கண்ணோட்டமும் இலனாயின், அவனது தொன்றுதொட்டு வருகின்ற செல்வம் பின்பு நிற்றலின்றி அக்காலத்தே கெடும் எ - று.

இஃது குறைதலேயன்றி முழுதும் கெடும் என்றது.

பரிதி.— கொடிய சொல்லனுமாய்க் கிருபை அற்றவனுமாகில் தொன்றுதொட்டுவரும் செல்வம் நிலையறக்கெடும் எ - று.

காளிங்:— யாவர்மாட்டும் கடிய சொல்லினை யுடையனுமாய்க் கண்ணோட்டம் இலனும் ஆயின் அவ்வரசற்கு நெடுஞ் செல்வமானது நீட்டித்தலின்றி அவை அவை செய்யும் காலத்தே கெட்டு விடும் எ - று.

கண்ணிலனாயின் என்பது கண்ணோட்டம் இலன் என்றது.

முதுமொழிவெண்பாக்கள்:

" ஆவ தறியார் அவருக்கு வேறுபகை
தேவைஇல்லை கண்டாய் தினகரா - கோவக்." —தினகர. 60.

" வெய்துரையால் அக்கணமே வீந்தான் சிசுபாலன்
தொய்யின் முலைஉமைபால் சோமேசா - உய்யாக்." —சோமேசர். 57.

" ஓதுமிடப் பாகத்தில் ஒன்றரைக்கண் ஒத்தவனே
நீதில் மனுவேந்தன் திருமலையா - யாதும்." திருமலை.

குறிப்பு:

'கண்ணுக்கணிகலம் கண்ணோட்டம்' என்பவாகலின் கண்ணோட்டம் இனிய பார்வையுடையனாதல். அதாவது காண்பார் அணுகுதற்குக் காரணமாய இனிய நோக்கு. கடுஞ்சொல்லின்மை, உரையின் இனிமை இவ்விரண்டும் ஒருங்கு

* பு. வெ. பாடாண், 37ம் பாட்டு உரையில் காணப்படுகிறது.

கூடியவழியே அரசர்க்கு அனைவரும் வசமாவர்; அதனால் நெடுஞ்செல்வம் நீடுநீங்காது என்பது விளக்கியவாறு. நெடுஞ்செல்வம் என்பதற்குப் பரம்பரையாக வரும் செல்வம் என்பர் பரிப்பெருமாள். —தொகுப்பாசிரியர்.

567. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— கடுமொழியும் கையிகந்த தண்டமும் - கடிய சொல்லும் குற்றத்தின் மிக்க தண்டமும், வேந்தன் அடு முரண் தேய்க்கும் அரம் - அரசனது பகை வெல்லுதற்கு ஏற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அரமாம்.

கடுமொழியால் தானையும் கையிகந்த தண்டத்தால் தேசமும் கெட்டு முரண் சுருங்கி வருதலின் அவற்றை அரமாக்கி, திண்ணிதாயினும் தேயும் என்றற்கு அடுமுரணை இரும்பாக்கினர். ஏகதேசவுருவகம். அரம் என்பதனைத் தனித்தனி கூட்டுக. இவை ஐந்து பாட்டானும் செவ்வியின்மை, இன்னாமுகமுடைமை, கண்ணோட்டமின்மை, கடுஞ்சொல் சொல்லல், கையிகந்ததண்டம் என்றிவைகள் குடிகள் அஞ்சும் வினை என்பதூஉம், இவைசெய்தான் ஆயுளும் அடுமுரணும் செல்வமும் இழக்கும் என்பதூஉம் கூறப்பட்டன.

மணக்:— கடுஞ்சொல் கூறுதலும் குற்றத்தின் மிக்க தண்டம் செய்தலும் அரசனுடைய பகைவரை வெல்லும் வலியைத் தேய்க்கும் அரமாம் எ - று.

இது வலியைக் கெடுக்கும் என்றது.

பரிதி:— வெவ்விய வசனமும் கொடிய ஆக்கினையுமுள்ளது அரசன் செல்வத்தைக் கெடுக்கும் அரம் எ - று.

காளிங்:— யாவர்மாட்டும் இன்சொல் வழக்கம் இன்றி வெஞ்சொல் விடுத்தலும், செய்யும் நீதியைக்கடந்து தண்டம் செய்தலும் இவை இரண்டும் மன்னவன் மாற்றாரைக் கொல்லும் வலியாகிய பொருள்வலி, படைவலி, துணைவலி, மற்று அரண்வலி, தன்வலி முதலிய அனைத்து வலிமையும் பொடிபடத் தேய்த்துவிடும் அரம் எ - று.

கை என்பது ஒழுக்கம்: ஆவது நீதி.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— 'இதனுள் அரம் என்ற ஒரு சொல் நின்றே தனித் தனி உதவுதல் காண்க' என்பர். (இ. கொ. 130.)

ஒப்புமைப்பகுதி :

" கடுமொழி கண்ணோ டாமை கையிகந் திட்ட தண்டம்
நடுநிலை யின்மை செவ்வி யின்மைநன் முகமு ருமை
உடனுறச் சூழ்ந்து செய்யா துறுபிழை அமைச்சர்க் கேற்றல்
படுசமர்ச் சிறைசெய் யாமை பலவும்தீங் காக்கும் மைந்தா."

விநா. அரசி. 94.

குறிப்பு:

கையிகந்த தண்டம் - 'கடிதோச்சி மெல்ல எறிக' 'ஒத்தாங்கு ஒறுத்தல்' என்ற அளவைகளான் வரையறுக்கப்பெற்ற நிலைகளின் மீறியதண்டனை. முரண் - வலி. அவை தன்வலி முதலிய ஐந்துமாம் என்பர் காளிங்கர். மாறுபாடு என்பர் பரிமேலழகர். —தொகுப்பாசிரியர்.

568. இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— இனத்து ஆற்றி எண்ணாத வேந்தன் - காரியத்தைப் பற்றி வந்த எண்ணத்தை அமைச்சர்மேல்வைத்து அவரோடு தானும் எண்ணிச் செய்யாத அரசன், சினத்து ஆற்றிச் சீறின் - அப்பிழைப்பால் தன்காரியம் தப்பியவழித் தன்னைச் சினமாகிய குற்றத்தின்கண்ணே செலுத்தி அவரை வெகுளுமாயின், திருச் சிறுகும் - அவன் செல்வம் நாடோறும் சுருங்கும்.

அரசர்பாரம் பொறுத்து உய்த்தல் ஒப்புமையான் அமைச்சரை இனம் என்றும், தான் பின் பிழைப்பாதல் அறிந்து அமையாது அதனை அவர்மேலேற்றி வெகுளின் அவர் வெரீஇ நீங்குவர்; நீங்கவே, அப் பிழைப்புத் தீருமாறும் அப்பாரம் இனிது உய்க்குமாறும் இலனும் என்பது நோக்கித் திருச்சிறுகும் என்றும் கூறினார். இதனால் பகுதியஞ்சும் வினையும் அது செய்தான் எய்தும் குற்றமும் கூறப்பட்டன.

மணக்:— பிறர் செய்த குற்றத்தைத் தனக்கு இனமானரோடே அமைந்து ஆராயாத அரசன் கடியசொல்லனுமாய்க் கண்ணோட்டமும் இலனாயின், அவனது செல்வம் நாடோறும் சுருங்கும் எ - று.

ஆராயாத அரசன் சின்னெறியில் தீரானுயின், அவன் செல்வம் குறையும் என்றவாறு. இனம் - மந்திரி புரோகிதர்.

பரிதி:— தன்னைச் சேர்ந்த துன்மந்திரிகளையும் மற்றுமுள்ள பேரையும் வாழவைத்துக் குடிகளை யிடைபண்ணும் அரசன் சினம்மேற் கொண்டால் அச்செல்வமும் சிறுகும் எ - று.

காளிங்:— வேற்றரசரோடு வினை செய்யும் இடத்தும், அத்தனையும் முன்கோலித் தன்னோடு எண்ணுதற்கு உரிய இனத்தோடு எண்ணிச் செலுத்தாத மன்னனானவன் சினத்துவழி பற்றிக் கன்றி எழுவனேல் சிறுகும் செல்வம்: எனவே அரசன் உரிமை அழிவன் என்பது பொருள் எ - று.

மற்று இக்கொடுங்கோன்மையாகிய நீதிக்கேடும் மற்று இத்தன்மைத்தாகிய வெருவந்த செய்தலும் என்னும் இரண்டு குற்றமும் இல்லாத குணவேந்தன்கண்ணதே கண்ணோட்டமும் ஆகலின், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

குறிப்பு:

அமைச்சர் முதலிய இனத்தைத் துணைக்கொண்டு ஆராயாது சினத்தைத் துணைக்கொண்டு சூழ்ந்து சீறின் செல்வம் சுருங்கும் என்றுமாம். இனத்தாற்றி எண்ணுகிறகாலத்து மன்னன் செருக்கற்ற சிந்தையையும், சினத்தாற்றிச் சீறும் போது செருக்கையும் எய்துகின்றுனாதலின் இவ்வாறு உரைத்தார். செருக்கடங்கிப் பிறர் கருத்துக்கு மதிப்புத்தரும்போது ஆய்வும் அறிவுவிளக்கமும் எய்துகின்றன; ஆகையால் செல்வம் பெருகும் என்பது விளக்கியவாறு.

—தொகுப்பாசிரியர்.

569. செருவந்த போழ்தில் சிறைசெய்யா *வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். (௯)

உரைப்பகுதி :

பரிமே:— சிறை செய்யா வேந்தன் - செரு வருவதற்கு முன்னே தனக்குப் புகலாவதோர் அரண் செய்துகொள்ளாத அரசன், செருவந்த போழ்தில் வெருவந்து வெய்து கெடும் - அது வந்தகாலத்து ஏமமின்மையான் வெருவிக் கடிதின் கெடும்.

* 'மன்னன்' என்றது காளிங்கர் பாடம்.

பகையை வெருவிச் சேர்ந்தார் நீங்குதலின் தமியனாய்த் தானும் வெருவி அப்பகைவயத்தனாம் என்பதாம். இதனால் தான் அஞ்சும் வினையும், அது செய்தான் எய்தும் பயனும் கூறப்பட்டன.

மணக்:— தனக்குக் காவலானவற்றை முன்னேயமைத்துச் செய்யாத வேந்தன் செருவந்த காலத்து அச்சமுற்றுக் கடிதுகெடும் எ - று.

இது தனக்கும் அச்சம் வருவன செய்யலாகாது என்றது.

பரிதி:— குடிக் கடமையை அன்பினாலேவாங்கி மாற்றார் வந்தால் அக்குடியைக் காட்டிக் கொடுக்கு மன்னவன் சடுதியிலே கெடும் எ - று.

காளிங்:— முன்னமே மதிற்சிறை முதலிய வன்சிறை நான்கும் வில்லரணும் வேலரணும் தோலரணும் தூர்க்க அரணும் உளவாகிய வியூகச் சிறையும் உடையரேனும், மற்று அச்சிறைநீங்கிச் செருத்தொழில் புரியச் சென்ற தேயத்துப் புறத்திறை மன்னரால் போரழிவு வந்தகாலம் நோக்கிய இடத்து இயையும் சிறை பலவும் செய்து கொள்ளாத மன்னனானவன் முனையெதிர் படைபோந்து முற்றிய காலத்து வெருவுதல் கடிதின் கெட்டுவிடும் எ - று.

குறிப்பு:

போருக்காகவந்த அரசன் பகைவரது ஊர்ப்புறத்தே சென்றிருப்பினும் தனக்காக அவண், ஏற்றதோர் அரண் அமைத்துக்கொள்ளக்கடவன். அங்ஙனம் செய்யாவிடின் அஞ்சிக்கெடுவன் என்றுமாம். இதுவே காளிங்கர் கருத்தும். பரிமேலழகர் தனக்கென்று அரணமைத்துக்கொள்ளாத அரசன் போர்வந்தகாலத்துப் புகலிடமின்மையான்கெடும் எனவுரைப்பர். அரசராயினார் தன்னாட்டில் அரணமையாது வாழாராதலின் செருவுக்காக வந்த இடத்திலும் அமைத்துக்கொள்ளாவிடின் அஞ்சுவர் என்பதே சிறந்த கருத்து ஆகலாமோ தெளிக. அன்றியும் நெடும்புனலுள் வெல்லும் முதலையாதலானும், தன்னூர்க்கு யாரும் புலியாதலானும் செருவுக்காக வந்த காலத்தில் புறத்தே அரணமைத்துக் கோடலின் இன்றியமையாமையே விளக்கியது இக்குறள் என்பது பொருந்துமோ ஆய்க.

—தொகுப்பாசிரியர்.

570. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுஅல்ல(து)
இல்லை நிலக்குப் பொறை. (௧0)

உரைப்பகுதி:

பரிமே:— கடுங்கோல் கல்லார்ப் பிணிக்கும் - கடுங்கோலனுய அரசன் நீதிநூல் முதலிய கல்லாதாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டா நிற்கும்; அது அல்லது நிலக்குப் பொறை இல்லை - அக்கூட்டமல்லது நிலத்திற்கு மிகையாய பாரம் பிறிது இல்லை.

கடுங்கோல் என்பது ஈண்டு மிக்கதண்டத்தின் மேற்று அன்றி, அதனைச் செய்வான்மேற்றாயிற்று. அவன் அது செய்தற்கு இயைவாரை யல்லது கூட்டாமையின் கல்லார்ப்பிணிக்கும் என்றும், ஏனையவற்றை யெல்லாம் பொறுக்கின்றது இயல்பாகலின் நிலத்திற்குப் பொறை அது வல்லது இல்லை என்றும் கூறினர். நிலக்கு என்பது செய்யுள்விகாரம். இதனால் வெருவந்த செய்தலின் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— கடுங்கோலனாகிய அரசன் அறிவில்லாதாரை அமாத்ய ராகக் கூட்டிக்கொள்ளும்; அவ்வரச னல்லது நிலத்துக்குப் பாரம் வேறொன்றும் இல்லை எ - று.

பரிப்:— அறிவில்லாதார் அமாத்தியர் ஆனல் அவராலே உலகம் அச்சம் உறும்; அதற்காகக் கடுங்கோல் அரசன் அவரைக் கூட்ட அவனை நிலம் பொருது என்றது.

பரிதி:— பூமிக்கு எட்டுமலையும் எழுகடலும் பாரமல்ல; கொடுங் கோல் மன்னவன் பாரம் எ - று.

காளிங்:— கல்லாதார் ஆகிய மூர்க்கரை அரசனானவன் தனது அன்பினால் பிணித்துக்கொள்ளும் நீதிக் கேடு யாது? மற்று அதுவல்லது இல்லை இந்த நிலத்து வாழுகின்ற உயிர்கட்குக் கிலேசபாரம்: பிறிது ஒன்றும் இல்லை எனவே மற்று அது உயிர்கட்கு வெருவந்த செய்தலுள் ஒன்று எ - று.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— பண்புதொகவரும் அன்மொழித் தொகைக்கு மேற்கோள் காட்டி, கடுங்கோல் என்பது அஃதுடைய அரசர்க்குப்

பெயராகி வருதலின் அன்மொழித் தொகையாயிற்று; கோவிற்கு அடையாகின்ற கடுமையும் அரசன்மேல் ஏறியவாறு கண்டுகொள்க என்பர். (தொல். சொல். 412.)

ஒப்புமைப்பகுதி:

"புத்திகெட்ட ராசாவுக்கு மதிகெட்ட மந்திரி." —பழ.

"மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்." —ஷை

குறிப்பு:

கல்லா வினத்தைச் சேர்த்துக்கொண்ட அதனானே அரசன் கொடுங் கோன்மை கண்டு உலகம் வெருவருமாதலின் இவ்வதிகாரத்திற்கு இக்குறள் இயைபுடைத்தாயிற்று. அது என்பது கல்லாரினத்தைச் சுட்டியதாகக் கொள்வர் பரிமேலழகர். கடுங்கோலனைச் சுட்டியதாகக் கொள்வர் மணக்குடவர்.

—தொகுப்பாசிரியர்.

குறள் வைப்புமுறை.

பரிமே:— தக்காங்கு, கடிதோச்சி, வெருவந்த, இறைகடியன், அருஞ் செவ்வி, கடுஞ்சொல்லன், கடுமொழியும், இனத்தாற்றி, செருவந்த, கல்லார்.

மணக்:— தக்காங்கு, கடிதோச்சி, கல்லார், இறைகடியன், இனத் தாற்றி, கடுஞ்சொல்லன், கடுமொழியும், அருஞ்செவ்வி, செருவந்த, வெருவந்த.

பரிதி:— கடுஞ்சொல்லன், இனத்தாற்றி, அருஞ்செவ்வி, வெருவந்த, இறைகடியன், கடுமொழியும், செருவந்த, தக்காங்கு, கடிதோச்சி, கல்லார்.

காளிங்:— வெருவந்த, தக்காங்கு, கடிதோச்சி, கடுஞ்சொல்லன், அருஞ் செவ்வி, கடுமொழியும், இறைகடியன், கல்லார், செருவந்த, இனத்தாற்றி.

58. கண்ணோட்டம்.

தொகுப்புரை:

[கண்ணோட்டம் என்னும் பேரழகு இருப்பதாலேயே உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. உலகியலும் அதன்கண்ணே அமைந்துள்ளது, ஆதலால் கண்ணோட்டமில்லாதார் பூமிக்குச் சுமையாவர். பாடலுக்கு ஏலாத பண்ணால் பயன் இல்லாதவாறு கண்ணோட்டம் இல்லாத கண்ணாலும் பயனில்லை. கண்ணோடாத கண் முகத்திலிருந்தும் பயன் என்ன. கண்ணுக்கு அணி கண்ணோட்டமே. அஃதில்லாத கண் புண்ணே. கண்களைப் பெற்றிருந்தும் கண்ணோட்டம் இல்லாதவர்கள் நடமாடுகின்ற மனிதராயினும் மரமாவர். கண்ணோட்டமில்லாதவர் குருடர். கண்ணிருந்தால் கண்ணோட்டமில்லாதிருக்கமுடியாது. அரசாட்சி முறைக்கு இடையூறு வராமல் கண்ணோட்டம் செய்பவர்களுக்கு இவ்வுலகமே உரிமையாகும். தண்டிக்கத் தக்கவர்களையும் பொறுத்துக் கண்ணோட்டம் செய்வதே தலையாயமுறை. கண்ணோட்டமுடையவர்கள் நஞ்சைக் கலந்து கொடுப்பினும் அதனை வாங்கி விரும்பியுண்பர்.]

அதிகாரப்பொருள்

பரிமே:— அஃதாவது தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேல் கண்சென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று. மேல் வெருவந்த செய்யாமையுள் கூறிய அதனையே சிறப்புப்பற்றி விரித்துக்கூறுகின்றமையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

மணக்:— கண்ணோட்டமாவது கண்ணால் காணப்பட்டாரை அருள் செய்தல். குற்றஞ்செய்தாரை ஒறுக்குங்கால் உலகத்தாரிசைய ஒறுக்க வேண்டுமென்றாராயினும் அவ்வாறு செய்தவரைத் தமது கண்முன்னாகக் கண்டால் அதனைப் பொறுத்தலும் வேண்டுமென்று அதன்பின் இது கூறப்பட்டது. இது பெரும்பான்மையும் முன்புகண்டு பழகினார்மேற்று.

பரிதி:— கண்ணோட்டமாவது அரசற்குக்கிருபையாகிய பார்வை வேணும் எ-று.

571. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் உலகு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை உண்மையான் - கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற சிறப்புடைய அழகு அரசர்மாட்டு உண்டாகலான், இவ்வுலகு உண்டு - இவ்வுலகம் உண்டாகா நின்றது.

கழிபெரும் காரிகை என்புழி ஒருபொருட்பன்மொழி இவ்வுயிரழகது சிறப்புணர நின்றது. இவ்வழகு அதற்கு உறுப்பாகலின், உண்மையான் என நிலைபேறும் கூறினார். இன்மை வெருவந்தசெய்தலாகலின் அவர்நாட்டு வாழ்வார் புலியையடைந்த புல்வாயினம்போன்று ஏமஞ்சாராமைபற்றி, இவ்வுலகு உண்டு என்றார்.

மணக்:— கண்ணோட்டமாகிய பெரிய அழகு அரசன்மாட்டு உண்டானபடியினாலே, இவ்வுலகநடை ஆகின்றது எ - று.

இஃது, அஃது இல்லையாயின், உலகம் கெடும்; ஆதலால், கண்ணோட வேண்டும் என்றது.

பரிப்:— செங்கோன்மை கூறுகின்றவழிக் கண்ணோடாது முறை செய்க என்று கூறி ஈண்டுக் கண்ணோடுக என்று கூறுதல் மாறுபடக் கூறுதலாம் பிற எனின், அற்றன்று: அது முறை செய்யும் திறன் கூறிற்று. இஃது உலகத்தார் பலர் ஆதலால் குற்றம் செய்வார் மிகுந்திருப்பர். அதற்கெல்லாம் தண்டம் செய்யின் உலகம் என்பது ஒன்று இல்லையாம்; அதற்காகப் பொறுக்க வேண்டுவன பொறுக்கவேண்டும் என்று கூறிற்று.

பரிதி:— கண்ணோட்டம் என்கிற திருமாது உண்டாகில் அரசற்கு உலகம் உண்டு எ - று.

காலிங்:— கண்ணோட்டம் என்று சொல்லப்பட்ட மிகவும் பெரிய நன்மையானது அரசர் முதலிய பெரியோர்மாட்டு உளதாய் வருவதால் உளது இவ்வுலகத்து உயிர்களின் வாழ்க்கை எ - று.

எனவே மற்று இவர்கள்மாட்டு அஃது இல்லையாயின் பலவுயிர்க்கும் துன்பம் வருவது பொருள் என அறிக.

ஒப்புமைப்பகுதி:

" பயின்றவர் தம்மால் கூறப் பட்டன மறுக்க மாட்டா
இயன்றநற் குணம்கண் ணோட்டம் இத்தகு கண்ணோட் டந்தாம்
முயன்றசெய் முறைக்குக் கேடு முன்னுநர் மாட்டுக் கூடா
நயந்தப நினக்குத் தீங்கு நாட்டினர் தம்பால் நாட்டல்."

—விநா. அரசி. 95.

முதுமொழிவெண்பாக்கள்:

" மேவரு கண்ணோட்டம் விரும்பியன்றோ ஆயிரங்கண்
தேவர்கோன் பெற்றான் திருமலையா - மூவுலகில்." —திருமலை.

குறிப்பு:

காரிகை என்பது அழகிற்கும், பண்பாகுபெயராய்ப் பெண்ணிற்கும் பெயர். கண்ணோட்டத்தைக் காரிகையாக உருவகித்தது உலகு உண்டாவதற்கு ஏதுவாகலின்.

—தொகுப்பாசிரியர்.

572. கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— உலகியல் கண்ணோட்டத்து உள்ளது-உலகநடை கண்ணோட்டத்தின்கண்ணே நிகழ்வது, அஃது இலார் உண்மை நிலக்குப் பொறை - ஆகலான், அக்கண்ணோட்டம் இல்லாதார் உளராதல் இந் நிலத்திற்குப் பாரமாதற்கே, பிறிதொன்றற்கு அன்று.

உலகநடையாவது ஒப்புரவுசெய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தல் என்று இவை முதலாயின. அவை நிகழாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படார் என்பதுபற்றி, நிலக்குப்பொறை என்றார். ஆதற்கு என்பது சொல்லெச்சம். இவை இரண்டு பாட்டானும் கண்ணோட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்— உலகநடை கண்ணோட்டத்தின்கண்ணது; ஆதலால், அஃது இல்லாதார் உளராயிருத்தல் நிலத்துக்குப் பாரமாம் எ - று.

இது கண்ணோட்டமில்லாதாரை நிலம் பொறாது என்றது.

பரிதி:— கிருபைக்கண் ஆகிய மன்னவன் பூமிபாரஞ்சுமந்தவன்; கொடுங்கோல் மன்னவன் பூமிக்குப் பாரம் எ - று.

காளிங்:— கீழ்ச் சொன்ன பரிசே கண்ணோட்டத்தின்கண்ணே உள்ளது உலகத்து உயிர்களது நடை: ஆதலான் மற்று அதனைத் தங்கண் இல்லாதோர் உளராயிருத்தல் நிலத்துக்குப் பாரம்: எனவே இங்குள்ள உயிர்கட்குப் பெரியதோர் கிலேசபாரம் என்பது பொருள் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஒவி லுழ வன்வேண்ட உக்கிரனார் இந்திரன்கொண்
மூவைவிடு வித்தார் முருகேசா - தாவலிலாக்." —முருகேசர். 58.

573. பண்என்னும் பாடற் கியைபின்றேல் கண்என்னும்
கண்ணோட்டம் இல்லாத கண். (ங)

உரைப்பகுதி :

பரிமே:— பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல் - பண் என்ன பயத்ததாம் பாடல்தொழிலோடு பொருத்தம் இன்றாயின், கண் என்னும் கண்ணோட்டம் இல்லாத கண் - அதுபோலக் கண் என்னபயத்த தாம் கண்ணோட்டம் இல்லாதவிடத்து.

பண் கண் என்பன சாதிப்பெயர், பண்களாவன பாலையாழ் முதலிய நூற்று மூன்று. பாடல்தொழில்களாவன யாழின்கண் வார்தல் முதலிய எட்டும், பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின்கண் எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம் என்னும் ஐந்தும், பெருவண்ணம் இடைவண்ணம் வனப்புவண்ணம் முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இவற்றோடு இயையாதவழிப் பண்ணால் பயனில்லாதவாறுபோலக் கண்ணோட்டத்து இயையாதவழிக் கண்ணாற்பயனில்லை என்பதாம். கண் சென்றவழி நிகழ்தல் பற்றி அதனை இடமாக்கினார். இறுதிக்கண் கண் என்பதனைக் "கண்ணகன் ஞாலம்" என்புழிப்போலக் கொள்க.

மணக்;— பண் என்ன பயனுடைத்தாம் பாடலொடு பொருந்தா தாயின்; அதுபோலக கண் என்ன பயனுடைத்தாம் கண்ணோட்டம் இல்லாதகாலத்து எ - று.

இது பிறர்க்கும் இன்பம் பயவாது என்றது.

பரிப்:— பாடலாவது பாடுதல் தொழில். அஃதாவது மந்தம், உச்சம், சமம், குடிலம் முதலாயின. அதனொடு பொருத்தம் இன்மையாவது எடுத்துக்கொண்ட பண், இவ்விடங்களில் ஒவ்வாது நின்று கேட்டார்க்கு இன்பம் பயவாமை.

பரிதி:— சங்கீத லட்சணம் இல்லாத பாட்டு பாட்டாமோ? அதுபோல, கண்ணோட்டம் இல்லாத கண் புண்ணோடு ஒக்கும் எ - று.

காளிங்:— இலக்கண முறையான் இசை அறியாது மயக்கமாந்தர் தமது இயற்கைச் செவியினால் கேட்டு மற்று இது மிகவும் இனியது ஓர் பண் என்றார் ஆயினும், அதனை யாம் பண் என்று சொல்லோம்: என்னையோ எனின் பாடல் தூக்காகிய இசைத்தொடர்பின்கண் தான் வந்துமேவி நின்று அவ்விசைநூல் யாப்பிற்கு இனிது இயைபு இன்றி நிற்குமாயின்; மற்று அதுபோல ஈண்டு நுண்ணுணர்வில்லோர் கண் என்றாராயினும் அதனைக் கண் என்று சொல்லோம், கண்ணோட்டம் இல்லாத கண்ணினை எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— இறுதியில் கண் என்பது 'கண்ணகன் ஞாலம்' (திரி. 1.) போல, முற்றிடப் பொருள்பெற்று ஏழாம்வேற்றுமையாகாமை அறிக. 'வினையெனப் படுவது வேற்றுமைகொள்ளாது' (தொல் - சொல் - வினை. 1.) என்பதுபற்றி.

ஒப்புமைப்பகுதி:

"யாவர் வரினும் எதிரேற்கும் தெய்வமடப்
பாவை அகத்திருந்தும் பாழன்றே - மேவினரைத்
தண்ணார் காதலத்தால் தள்ளாவாய்த் தாமுமொரு
கண்ணாகி நிற்கின்ற கண்." —பா-வெ.

"வெண்மை கருமை விரிசெம்மை நீண்மைவனப்(பு)
ஒண்மை இவற்றொன் றொழித்தேனும் - கண்மையினை
வையாது மாந்தர் மயில்போல் எனத்தனது
கையால் இறைவகுத்தான் கண்." —தெ.

574. உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— முகத்து உளபோல் எவன் செய்யும் - கண்டார்க்கு முகத்தின்கண் உளபோல் தோன்றலல்லது வேறென்ன பயனைச் செய்யும், அளவினான் கண்ணோட்டம் இல்லாத கண் - அளவிறவாத கண்ணோடுதலை உடையவல்லாத கண்கள்.

தோன்றலல்லது என்னுஞ்சொற்கள் அவாய்நிலையான் வந்தன. கழிகண்ணோட்டத்தின் நீக்குதற்கு, அளவினான் என்றார். ஒருபயனையும் செய்யா என்பது குறிப்பெச்சம்.

மணக்:— அவரவர் வாழ்வு காரணமாகக் கண்ணோடுதலைச் செய்யாத கண்கள், முகத்தின்கண் உள்ளனபோன்று இருப்பதன்றி வேறு என்ன பயனைச் செய்யும் எ - று.

அளவு என்றது தகுதியை. இது தனக்கும் பயன்படாது என்றது.

பரிதி:— முகத்திலே இரண்டுகண் என்று இருந்தால் ஆரளவிலும் கிருபைப்பார்வை இல்லாதபோது கண்ணால் ஏது பயன் எ - று.

காளிங்:— முகத்து உளபோலத் தோன்றி அங்ஙனம் வரும் பொருட்களைக் கண்டதேயாயினும் அதனால் என்ன பயன்? மற்று அவர்க்கு இரங்கவேண்டும் அளவினால் குறிக்கொண்டு கண்ணோடுவது ஓர் கண்ணோட்டம் இல்லாத கண்ணானது எ - று.

குறிப்பு:

கண்முகத்து உளபோன்ம்; எவன் செய்யும் எனப்பிரித்துக்கூட்டி, கண்கள் முகத்து உள்ளனபோலும்; அவ்வளவன்றி என்னபயனைச் செய்யும் எனவும் ஆம். போன்ம் - மகரக் குறுக்கம். செய்யுமென்முற்று. இங்ஙனம் பொருள்காணும் போது, 'தோன்றலல்லது' என்பதை அவாய்நிலையான் வருவிக்கவேண்டுவதின்று என்க.

—தொகுப்பாசிரியர்.

575. கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும். (இ)

உரைப்பகுதி :

பரிமே:— கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் - ஒருவன் கண்ணிற்கு அணியும் கலமாவது கண்ணோட்டம், அஃது இன்றேல் புண் என்று உணரப்படும் - அக்கலம் இல்லையாயின் அஃது அறிவுடையாரால் புண் என்று அறியப்படும்.

வேறு அணிகலம் இன்மையின் கண்ணிற்கு அணிகலம் என்றும், கண்ணுய்த்தோன்றினும் நோய்களானும் புலன்பற்றலானும் துயர்விளைத் தல் நோக்கிப் புண் என்று உணரப்படும் என்றும் கூறினர். இவை மூன்று பாட்டானும் ஓடாது நின்ற கண்ணின் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— கண்ணிற்கு அழகு செய்யும் அணிகலமாவது கண்ணோட்டமுடைமை; அஃதில்லையாயின், அவை புண் என்று அறியப்படும் எ - று.

இது கண்ணோட்டமில்லாத கண்ணிற்குப் பெயர் கூறிற்று.

பரிதி:— கண்ணுக்கு ஆபரணம் கிருபை; அது அல்லது முகத்தில் இரண்டு புண் எ - று.

காளிங்:— எல்லா உறுப்பிற்கும் அணிகலம் அணியலாம்: மற்றுக் கண்ணுக்கு அணிவது ஓர் அணிகலன் இல்லை என்று இங்ஙனம் கருதற்க: என்னை எனின், கண்ணுக்கு அணியும் கலனுவது கண்ணோட்டம் ஆகலான்: அஃது ஒருவர்க்கு இல்லை எனின் மற்று அது வெறும் புண் என்றே அறிய அடுக்கும் எ - று.

இதனைத் தசை என்னுது புண் என்றது என்னை எனின், ஈரம் புலராத இளந்தசையாகலான் அவர்க்கு அது நோயுறுதபுண் என்றவாறு.

ஒப்புமைப்பகுதி:

“ஒன்று நாம்பென்கோ ஒன்றுத என்பென்கோ
இன்தசைதான் என்கோ யாதென்கோ - மென்தொளுடையாழ்
பண்ணோட்டும் இன்சொல் பணைத்தோளாய் சேர்ந்தவர்பால்
கண்ணோட்டம் இல்லாத கண்.” —பா. வெ.

"கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்." —திரி. 52.

"கண்வனப்புக் கண்ணோட்டம்." —சிறுபஞ்ச. 9.

"பண்ணுக்கு வாம்பரித்தேர் ஆதபனும் பணிந்துபசு பதியை நோக்கி
மண்ணுக்குத் தவம்புரியும் தனஞ்சயற்குக் கோடையினும் மதியம் போன்றான்
எண்ணுக்கு வரும்புவனம் யாவினுக்கும் கண்ணுவான் இவனே யன்றோ
கண்ணுக்குப் புனைமணிப்பூண் கண்ணோட்டம் என்பதெல்லாம் கருணை யன்றோ." —வில்லி. அருச்சுனன்தவ. 43.

576. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ(டு)
இயைந்துகண் ணோடா தவர். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர் - ஒடுதற்குரிய கண்ணோடு பொருந்திவைத்து அஃதோடாதவர், மண்ணோடு இயைந்த மரத்து அனையர்-இயங்கா நின்றாராயினும் மண்ணோடு பொருந்திநிற்கின்ற மரத்தினை ஒப்பர்.

ஓடாதவர் என்புழிச் சினைவினை முதல்மேல் நின்றது. மரமும் கண்ணோடு இயைந்து கண்ணோடாமையின், இது தொழிலுவமம். இதனைச் சுதைமண்ணோடு கூடிய மரப்பாவை என்று உரைப்பாரும் உளர். அஃது உரையன்மை, காணப்படும் கண்ணலன்றி அதனுள் மறைந்து நிற்கின்ற ஒருசாருள் வீட்டால் கூறினமையானும், *"மரக்கண்ணோ மண்ணுள்வார் கண்ணென், றிரக்கண்டாய்" என்பதனானும் அறிக.

மணக்:— சுதைமண்ணோடு கூடிச்செய்த மரப்பாவையோடு ஒப்பார்; ஒருவன் கண்ணோடு தங்கண் கலந்தபின்பு கண்ணோட்டத்தைச் செய்யாதவர் எ - று.

இது கண்ணோடாமை மரப்பாவைக்கு ஒக்கும் என்றது.

பரிப்:— கண் காணாமை பாவைக்கும் ஒக்கும். இது மகன் அல்லன் என்றது.

---

* முத்தொள்.

பரிதி:— மண்ணோடு இயைந்த சித்திரத்தில் எழுதிப் பழுத்த மாமரத்துக்கு நிகராவன் கிருபைக்கண் இல்லாத அரசன் எ - று.

காளிங்:— வண்ணம் எழுதா வகைத்து உருவாகிய மண்மேல் எழுதிய கற்பகதரு முதலிய மரத்தைப் போல்பவர்: யார் எனின், செய்ய வாயும் செவ்வரிக் கண்ணும் கரிய குழலும் வெளிய நகையும் பிறவும் ஆகிய வகையமை உறுப்பின் வனப்பு வேற்றுமை தகைபெற உடைய தன்மைய ரேனும் கண்ணுறுப்புக்கு நுண்ணுறுப்பாகிய கண்ணோட்டம் இல்லாத கடுவினையாளர் எ - று.

மேற்கோள்பகுதி:

அடியார்:— கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும்; மண்ணீட் டாளர் - சிற்பாசாரிகள்; மண் ஈண்டுச் சுதை; 'மண்ணோடு இயைந்த மரத் தனையர்' என்றாராகலின். (சிலப். இந்திர. 30.)

அரும்பத:— ஷை.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மரக்கண் என்பதனை இக்காலத்தார் 'கணு' என்பர்.

குறிப்பு:

மண்ணோடு இயைந்த மரம் என்பதற்குச் சுவரில் எழுதிய கற்பகமரம் முதலியவற்றைப்போலப் பயன்படார் என உரைப்பர் காளிங்கர். சுதையோடு கூடிச்செய்த மரப்பாவை என்பர் மணக்குடவர் பரிப்பெருமாள் இருவரும். பரிமே லழகர் மண்ணோடு சேர்ந்திருக்கின்ற மரத்தைப்போல இயங்கார் என்பர். இம்மூன்று கருத்துள் மண்ணோடு இயைதலின் உயிருடையதாய், வளர்ச்சியாய புடைபெயர்ச்சி யுடைய மரம் கண்ணோட்டம் இல்லாததுபோலக் கண்ணிருந்தும் ஓட்டமில்லாதார் இவர் என்னும் பரிமேலழகர் உரைநயம் விளங்குதல் காண்க. ஆகுபெயரானன்றிச் சொற் கிடக்கைமுறையான் மரத்தனையர் என்பது மரத்தையொத்தவர்கள் என்ற பொருளைக் காட்டுமேயன்றி மரத்தானியன்ற பாவையனையர் என்பதை உணர்த்தாது.

—தொகுப்பாசிரியர்.

577. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— கண்ணோட்டம் இல்லவர் கண் இலர் - கண்ணோட்டம் இல்லாதவர் கண்ணுடையரும் அல்லர்; கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல் - கண்ணுடையவர் கண்ணோட்டமிலராதலும் இல்லை.

கண்ணுடையராயின் காட்சிக்கண்ணே அஃது ஓடும் என்பது பற்றிக் கண்ணோட்டமில்லவர் கண்ணிலர் எனக் கூறிப் பின் அதனை எதிர் மறைமுகத்தான் விளக்கினர். உம்மை இறந்ததுதழீய எச்சவும்மை. இவை இரண்டுபாட்டானும் கண்ணோடாதாரது இழிபு கூறப்பட்டது.

மணக்:— கண்ணோட்டமில்லாதவர் கண்ணிலரே; கண்ணுடையார் கண்ணோட்டமிலராதலும் இல்லை எ - று.

பரிப்:— உம்மை ஐயத்தின்கண் வந்தது. கண் உண்டாயின் நோக்குமாயின் வந்து நிலைமையைக்கண்டு கண்ணோடும்: ஆதலான் கண்ணோட்டம் இல்லாதார் கண்ணிலர் என்று மிகுத்துக் கூறிற்று எ - று.

பரிதி:— கிருபை இல்லாதார் அந்தகற்கு ஒப்பர்; கிருபையான பார்வை உள்ளவர் கண்ணுடையர் எ - று.

காளிங்:— இனிப் பல சொல்லி என்? உலகத்துப் பிறர்மாட்டுக் கண்ணோட்டம் இல்லாதவர் யாவர்? மற்று அவரே கண் இல்லாதோர் ஆவார்: மற்று இனிக் கண்ணுடையராவார் கண்ணோட்டம் இல்லாமையும் இல்லை எ - று.

இனி மற்று இங்ஙனம் கண்ணோட்டம் உடைய அரசர்க்குத் தம் கண்ணெதிர் அணுகாதார்க்கு உள்ள இடர்களும் தேர்ந்து குறிக்கோடலும் அரசியல் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

578. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை உடைத்திவ் உலகு. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு - முறை செய்தலாகிய தம் தொழில் அழியாமல் கண்ணோடவல்ல வேந்தர்க்கு, உரிமை உடைத்து இவ்வுலகு - உரித்தாந்தன்மையுடைத்து இவ்வுலகம்.

தம்மொடு பயின்றார் பிறரை இடுக்கண்செய்துழி அவரைக் கண்ணோடி ஒறாதார்க்கு முறைசிதைதல் மேல் "ஓர்ந்துகண்ணோடாது" என்ற முறையிலக்கணத்தானும் பெற்றாம். முறை சிதையவரும்வழிக் கண்ணோடாமையும் வாராவழிக் கண்ணோடலும் ஒருவர்க்கு இயல்பாதல்

அருமையின் கண்ணோடவல்லார்க்கு என்றும், அவ்வியல்பு உடையார்க்கு உலகமுழுதும் நெடுங்காலம் சேறலின் உரிமையுடைத்து என்றும் கூறினர். இதனால் கண்ணோடுமாறு கூறப்பட்டது.

மணக்:— தம் கருமத்திற்கு அழிவு வாராமல் கண்ணோடவல்லவர்க்கு, இவ்வுலகம் உரிமையாதலை உடையது எ - று.

இது, நற்குணமாவது கண்ணோட்டமாயினும், அரசர்க்குப் பொருட்கேடு வாராமல் கண்ணோடவேண்டும் என்று கூறிற்று.

பரிதி:— இராசகாரியம் குன்றாமல் அதுவே கண்ணாக இருக்கும் அரசற்கும் பூமிக்கும் உரிமை உடைத்தாம் எ - று.

காளிங்:— தாம் செய் கருமம் வாய்த்தற்பொருட்டாக யாவர் மாட்டும் கண்ணோட வல்லா..................................வழிச் செல்லுதல் உடைத்து இவ்வுலகு எ - று.

சிதையாமல் என்பது அழியாதவாறு என்றது.

முதுமொழிவெண்பாக்கள்;

“ஒன்று தனக்கும் உறுப்பில்லா மன்னனெனத்
தின்று கொழுத்தேன் தினகரா - என்றும்.” —தினகர. 61.

“வாணன் இருகாமும் வைத்துப் பணிகருதி
நாதனறுப் பித்தருளு நன்னயத்தைப் - போலக்.” —முதுமொழி. 92.

“முப்புரத்தை நீருக்கி மூவரையும் காத்தநலம்
செப்பமுடி யாதே சிவசிவா - ஒப்பில்.” —சிவசிவ. 58.

579. ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. (௯)

உரைப்பகுதி :

பரிமே:— ஒறுத்தாற்றும் பண்பினர்கண்ணும்-தம்மை ஒறுக்கும் இயல்புடையாரிடத்தும், கண்ணோடிப் பொறுத்தாற்றும் பண்பே தலை - கண்ணோட்டம் உடையராய்க் குற்றத்தைப் பொறுக்குமியல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது.

பண்பினுர் என்றதனுல் அவர்பயிற்சி பெற்றும். ஒறுத்தாற்றும், பொறுத்தாற்றும் என்பன ஈண்டு ஒருசொல்நீர.

மணக்:— தம்மை ஒறுத்துச் செய்யும் இயல்புடையார்மாட்டும் கண்ணோடிப் பொறுத்துச்செய்யும் குணமே தலையான குணம் எ - று.

பரிப்:— அன்றியும் ஒறுத்துச் செய்யவேண்டும் இயல்பினை உடையார்மாட்டும் என்றும் ஆம். உம்மை சிறப்பும்மை. பிறர்க்குக் குற்றம் செய்தாரையே அன்றித் தமக்குக் குற்றம் செய்தாரையும் பொறுக்க வேண்டும் என்றது.

பரிதி:— தமக்கு ஒறுப்புச் செய்யும் மாற்றுரிடத்தும் கிருபை செய்து காரியத்தைக் கொள்வது தலையான காரியம் எ - று.

காளிங்:— தம்மை ஒருவர் உணர்ந்தும் உணராது ஒருகாலத்து ஒறுத்தாராயினும், அவர்மாட்டுத் தாம் கண்ணோட்டம் உடையராய் மற்று அவர் செய்த பிழையினைத் தாம் பொறுத்து மற்று அதனை ஒழுகச் செய்யும் இயல்பே தலைமைப்பாடாவது எ - று.

ஒப்புமைப்பகுதி

"வெட்டெனப் பேசேல்" —ஆத்தி. 105.

"பகைவாராப் பழங்கண் அருளி." —பதிற்று.

முதுமொழிவெண்பாக்கள் :

"மாலான் முதலிகழ்ந்த வானவர்தீங் கும்பொறுத்துத்
தோலா விடம்உண்டாய் சோமேசா - சால." —சோமேசர். 58.

"சொல்லுகளன் றங்கதனைத் தூதேவி மாதைவிடல்
இல்லையே என்றான் இரங்கேசா - மெல்ல." —இரங். 58.

குறிப்பு.

இக்குறளால் கண்ணோடுதல் பொறுமைக்கு அடியென்பதறிவிக்கப்பெற்றது.
—தொகுப்பாசிரியர்.

580. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். (௮௰)

உரைப்பகுதி :

பரிமே:— நஞ்சு பெயக் கண்டும் உண்டு அமைவர் - பயின்றார் தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண்மறுக்கமாட்டாமையின் அதனை உண்டு பின்னும் அவரோடு மேவுவர், நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் - யாவரானும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுமவர்.

நாகரிகம் என்பது கண்ணோட்டமாதல் 'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்' என்பதனானும் அறிக. அரசர் அவரை ஒருது கண்ணோடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ்செய்துழி என்பது இவ்விரண்டுபாட்டானும் கூறப்பட்டது.

மணக்:— நஞ்சு பெய்ததுகண்டும் அதனை மாற்றாது உண்டு அமைவர்; எல்லாரானும் விரும்பத்தக்க நாகரிகத்தை விரும்புபவர் எ - று.

நாகரிகம் - அறம் பொருள் இன்பத்தின்கண் நற்குணங்கள் பலவும் உடைமை.

பரிப்:— மருமையால் கண்ணோட்டம் ஆயிற்று. இது பொறுத் தலே அன்றித் தமக்குச் செய்யும் தீமைக்கும் உடன்படுவர் புகழ்வேண்டு பவர் என்றது.

பரிதி:— மாற்றார் தமக்கு நஞ்சிட்டாலும் இது அமிர்தம் என்று இருப்பர்; காரியத்தினாலே சுவர்க்கம் வேண்டியும் இந்தப்பூமி வேண்டியும் மன்னவர் எ - று.

காளிங்:— ஒருவர் தமக்கு இன்னாமையால் கொணர்ந்து இடக் கண்டு வைத்தும் அவரிட்ட நஞ்சினைத் தாம் உண்டு உயிர் வாழ்க்கை சமைந்து விடுவர்: யார் எனின், பெரியோரால் விரும்பத்தக்க உம்பர் உலகினுள் சிறப்புடைய உத்தரகுருவினைத் தாம் எய்தி இனிது வாழ்ந் திருக்க வேண்டும் அவர் எ - று.

பெயக்கண்டும் என்பது கொணர்ந்திடக் கண்டும் என்றது.

ஒப்புமைப்பகுதி:

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்." —நற். 355 : 6-7.

நஞ்சுயிர் செகுத்தலும் அறிந்துண்டாங்கு அளிஇன்மை
கண்டுநின் மொழிதேறும் பெண்டிரும் ஏமுற்றார்.'' —கலி. 74 : 8 - 9.

குறிப்பு:

பொறுத்தாற்றும் பண்பேதலை என்ற ஆசிரியர், தம்முயிர் அழிவை விரும்பி நஞ்சளிப்பாராயினும் அதனை விரும்பியுண்டு அமைகின்ற அளவு பொறுமை வேண்டப்பெறுவது என்று கண்ணோட்டத்தினளவு கூறுகின்றார் இக்குறளால். 'கருமஞ்சிதையாமல் கண்ணோடவல்லார்க்கு' என்பதால் அறிவித்த ஆட்சிகுலையாமல் கண்ணோட்டம் செய்யவேண்டும் என்றதனோடு மாறுகொள்ளுமே யெனின், அற்றன்று ; ஆட்சியென்பது தன்கீழ்வாழுங்குடிகட்கு எவராலும் தீமை நேராத வாறு பாதுகாத்தலேயாம். தனக்குத்தீங்குவராது பாதுகாத்தலாகிய தற்காப்பன்று. ஆதலால் கருமஞ்சிதையாமல் என்றதனால் அரசாட்சிக்குக் கேடுவாராமையும், இதனால் தனக்கு நஞ்சிடினும் பொறுக்க என்பதும் கூறப்பெற்றன.

—தொகுப்பாசிரியர்.

குறள் வைப்புமுறை.

பரிமே:— கண்ணோட்டமென்னும், கண்ணோட்டத்து, பண்ணென்னும், உளபோன், கண்ணிற்கு, மண்ணோடு, கண்ணோட்டமில்லவர், கருமம், ஒறுத் தாற்றும், பெயக்கண்டு.

மணக்:— கண்ணோட்டமென்னும், ஒறுத்தாற்றும், பெயக்கண்டு, கருமம், கண்ணோட்டத்து, கண்ணோட்டமில்லவர், பண்ணென்னும், உளபோன், கண்ணிற்கு, மண்ணோடு.

பரிதி:— கண்ணோட்டமென்னும், கண்ணோட்டத்து, மண்ணோடு, கண் ணிற்கு, பண்ணென்னும், உளபோன், கண்ணோட்டமில்லவர், கருமம், பெயக்கண்டு, ஒறுத்தாற்றும்.

காளிங்:— கண்ணோட்டமென்னும், கண்ணோட்டத்து, ஒறுத்தாற்றும், பெயக்கண்டு, கண்ணிற்கு, பண்ணென்னும், மண்ணோடு, உளபோன், கருமம், கண்ணோட்டமில்லவர்.

59. ஒற்றாடல்.

தொகுப்புரை:

[ஒற்றும், சிறந்த நூலும் ஆகிய இரண்டும் அரசர்க்கு இருகண்கள். யாருக்கும் எப்பொழுதும் எல்லாம் நிகழக்கூடும்; அதனை விரைவாக அறிந்துகொள்வதே அரசன் தொழில். ஒற்றரால் பகைவர் புலன்களை அறிந்துகொள்ள முடியாத அரசன் ஒருக்காலும் வெற்றி எய்தமுடியாது. செயலாளர், உறவினர், பகைவர், இவர்கள் எல்லாரையும் ஆராய்பவனே ஒற்றன். சந்தேகப்படாத வடிவோடு பழகி, பயமில்லாமல், தன் மனக்கருத்தை வெளிப்படுத்திக் கொள்ளாதவனே ஒற்றன். முனிவர் வேடந்தாங்கிப் புகமுடியாத இடங்களிலும்புகுந்து, உண்மைகளை ஆராய்ந்து, எதிரிகள் என்னசெய்தாலும் உள்ளக்கருத்தை ஒளித்துவைப்பவனே ஒற்றன். எத்தகைய இரகசியங்களையும் கேட்டறியும் வன்மையோடு, அறிந்தவைகளில் ஐயப்பாடற்றவனே ஒற்றன். ஓரொற்றனால் ஆராய்ந்து அறிந்த உண்மைகளை மற்றும் ஓரொற்றனால் ஆராய்ந்து துணிக. அங்ஙனம் ஆராயும்போது ஒருவரையொருவர் தெரிந்துகொள்ள முடியாதவண்ணம் ஆளுதல்வேண்டும். ஒற்றர்மூவர் ஒருபடித்தாக உரைப்பார்களாயின் அதுவே முடிவானதாகும். மன்னன் ஒற்றர்கட்குப் பிறர் அறியச் சிறப்புச் செய்தல் கூடாது. அங்ஙனம் செய்தால் மறையை வெளிப்படுத்தியவனாவான்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது பகை, நொதுமல், நட்பு என்னும் மூன்று திறத்தார்மாட்டும் நிகழ்ந்தன அறிதற்கு ஒற்றரையாளுதல். மேற்சொல்லிய இலக்கணத்தானாய அரசனுக்குத் தன் நாடு செலுத்துங்காலும் பிறர்நாடு கொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றாராகலின், அவ்விருமைக்கும் இன்றியமையாதாய இது முன்வைக்கப்பட்டது.

மணக்:— ஒற்றாடலாவது ஒற்றரையாளவேண்டும் என்பதும், அவ்வொற்றர் திறனும் கூறுதல். பெரியாரைத் துணைக்கோடல் முதலாகக் கண்ணோட்டம் ஈறாகத் தன் அரசிலிருந்து செய்யவேண்டுவன கூறினார். அது செய்யுங்கால் அவரவர் செய்தியை ஒற்றரான் ஒற்றியறியவேண்டுதலானும், இனிப் பிறர்நாடு கொள்ளுங்கால் செய்யவேண்டுவன கூறுகின்றாராதலின் அந்நாட்டு இயல்பறிந்து வினைசெய்யவேண்டுதலானும், இவ்வதிகாரம் வேண்டப்பட்டது. மேலதனோடு இயைபும் அது.

பரிதி:— ஒற்றாடலாவது அரசற்கு ஒற்றுவிட்டுக் காரியங்கொள்ள வேணும் எ - று.

581. ஒற்றும் *உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். (க)

உரைப்பகுதி:

பரிமே:— ஒற்றும் உரை சான்ற நூலும் இவை இரண்டும் - ஒற்றும் புகழமைந்த நீதி நூலுமாகிய இவை இரண்டினையும், மன்னவன் கண் தெற்றென்க - அரசன் தன் இரண்டு கண்ணுமாகத் தெளிக.

ஒற்று - தன்கண் செல்லமாட்டாத பரப்பெலாம் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தன எல்லாம் உணர்த்தலானும், நூல் அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளையெல்லாஞ் சொல்லி உணர்த்தலானும், இவ்விரண்டனையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்துகொண்டு ஒழுகுக என்பதாம். ஒற்றனை ஒற்று என்றார், வேந்தனை வேந்து என்றாற்போல. தெற்றென்க என்பது தெற்றென் என்பது முதனிலையாக வந்த வியங்கோள். அது தெற்றென என்னும் செயவெனெச்சத்தான் அறிக. இதனால் ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— ஒற்றினையும் முறையமைந்த நூலினையும் தெளிய அறிந்த மன்னவனுக்கு இவையிரண்டையும் கண்களாகத் தெளிக எ - று.

அரசர்க்குக் கல்வி இன்றியமையாததுபோல ஒற்றும் இன்றியமையாதது என்றவாறு. இஃது ஒற்றுவேண்டும் என்றது.

பரிப்:— மறைந்தவை காணுங்கால் ஒற்றனானுதல், நூலினானுதல் காண வேண்டுமாதலின், அதற்காக இரண்டினையும் தெளிய அறிக. ஐயம் ஆகிய பொருள் உண்மை தோற்றுது என்று ஆயிற்று. ஈண்டு நூல் கூறியது எற்றுக்கு, எனின் அரசனுக்குக் கல்வி இன்றியமையாது என்றற்கு.

பழைய:— ஒற்றும் புகழமைந்த நீதிநூலுமாகிய இவை இரண்டனையும் அரசன் தன் இரண்டு கண்ணாகத் தெளிக எ - று.

பரிதி:— மனுநீதிநூலும் ஒற்றும் அரசற்குக் காவலாகிய இரண்டும்
... ...

* 'முறை' என்பது மணக்குடவர் பாடம்.

காளிங்:— ஒற்றரைக்கொண்டு ஒற்று ஆடலும் அரசியற்கு உரித்தாகிய உரைசான்ற கலைநூல்களும் என்னும் இலை இரண்டும் சாலத் தெளிவுற்று நிற்க மன்னவனிடத்து எ - று.

தெற்று என்பது தெளிவுற என்றது.

உரைவிளக்கப்பகுதி :

நுண்— தெற்றென்க என்பது, தெற்றென் என்பது முதனிலையாக வந்த வியங்கோள். 'தெற்றென நன்கறிந்த நாளும் விரைந்து' என்னும் பாட்டில் தெற்றென என்னும் செயவெனெச்சத்தாலுங் காண்க. 'பொள்ளென' 'கதுமென' 'தவ்வென' (487 - 1173 - 1144) என்பனவும் அது. 'எழுந்திருந்தான்' 'உய்த்துவிடும்' (121 - 168) என்பவற்றிற்கும் எழுந்திரு உய்த்துவிடு என முதனிலை காட்டுக.

மேற்கோள்பகுதி

பரிமே:— கடனறி காரியக் கண்ணவரோடு நின்; 'ஒற்றும்...... கண்' என்பதனால் கண்ணவர் என்றார் என்று விளக்குவர். (பரி. 19 : 23.)

ஒப்புமைப்பகுதி:

"மண்ணியன் மன்னர்க்குக் கண்ணென வகுத்த
நீதி நன்னூல் ஓதிய நாவினள்." —பெருங். 4 : 10 ; 13 - 14.

"காதிவேல் மன்னர் தங்கள் கண்ணென வைக்கப் பட்ட
நீதிமேல் சேறல் தேற்றாய்" —சீவக. 233

"மண்ணியல் வளாகம் காக்கும் மன்னவர் வணக்க லாகாப்
புண்ணிய நீர ரேனும் புலவரால் புகலப் பட்ட
நுண்ணிய நூலினன்றி நுழைபொருள் உணர்தல் தேற்றார்
எண்ணிய துணிந்து செய்யும் சூழ்ச்சியும் இல்லை யன்றே." —சூளா

"உளக்கண் நீதி நூலாக ஒற்றே வெளிக்கண் என விடுத்து
விளைக்கும் செயலால் மொழிதன்னால் வேண்டாச் சுற்றம் வினைஞரையும்
அளக்க மைந்தா." —விநா. அரசி. 96.

முதுமொழிவெண்பாக்கள்:

"கல்வி அறிவமைச்சுக் கண்களோ டொத்தமைந்தோர்
செல்வமுடி வேந்தர் திருமலையா - தொல்லுலகில்." —திருமலை.

"வெல்லுமுடி மன்னவற்கு வேண்டுமிரு கண்களுண்டு
தில்லைநடம் போற்றும் தினகரா - சொல்லவோ." —தினகர. 62.

" ஆணைவேல் வேந்துக் ககத்தின் இரண்டுண்டு
வாணயன மேதிருமலைக்கோ ழுந்தே - காணுங்கால்." —திருமலைக்.

குறிப்பு:

ஒற்று, சொல்லான் அஃறிணையாகலின் இவை யிரண்டும் என அஃறிணை முடிபேற்றது. ஒற்றரால் அறிந்தவைகளைக்கொண்டு அவர்களால் அறியமுடியாதவைகளையும் ஊகித்தறியத் துணைசெய்வது நூலாதலின் நூலும் கண்ணாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

582. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் எஞ்ஞான்றும் வல் அறிதல் - எல்லார்கண்ணும் நிகழ்வன எல்லாவற்றையும் நாள்தோறும் ஒற்றான் விரைந்தறிதல், வேந்தன்தொழில் - அரசனுக்கு உரிய தொழில்.

எல்லார்க்கும் என்றது மூன்று திறத்தாரையும். நான்காவது ஏழாவதன்பொருட்கண் வந்தது. நிகழ்வனவெல்லாம் என்றது நல்லவும் தீயவுமாய சொற்களையும் செயல்களையும் அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத் தக்க அளியாகத் தெறலாகச் செய்ய வேண்டுதலின் வல்லறிதல் என்றும், அவ்விருதொழிற்கும் அறிதல் காரணமாகலின் அதனையே உபசார வழக்கால் தொழில் என்றும் கூறினர். ஒற்றான் என்பது அதிகாரத்தான் வந்தது. இதனால் ஒற்றினது பயன் கூறப்பட்டது.

மணக்:— பகைவராகியும் நட்டாராகியும் மத்திமராகியும் உதாசீனராகியும் இருக்கின்ற அரசர்க்கும், அவர்சுற்றத்திற்கும், தம்சுற்றத்திற்கும், அறம் பொருள் இன்பங்களைப்பற்றி நிகழ்பவை எல்லாவற்றையும் நாடோறும் பிறர் அறிவதன் முன்னர்த் தான் ஒற்றால் விரைந்து அறிதல் வேந்தனது தொழில் எ - று.

பரிதி:— சத்துருவுக்கும் மித்துருவுக்கும் உண்டான காரியத்தை ஒற்றினாலே அறிவது வேந்தன் தொழில் எ - று.

காளிங்:— ஒற்றுமை பெரிதும் குற்றம் ஆகலான் அகத்தோரும் புறத்தோரும் அருகலரும் ஆகிய அனைவர்க்கும் நிகழ்வனவாகிய நலம் தீங்குகளை நாடோறும் ஒற்றுவித்து விரைவின் உணர்தல் வேந்தனது செய்தி எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நான்காவது ஏழாவதன்பொருட்கண் வந்தது. 'இதனது இது இற்று' (தொல் - சொல். 110) என்னும் சூத்திரத்துள், 'அன்ன பிறவும்' என்றதனால் ஊர்க்கட்சென்றான், ஊர்க்குச்சென்றான் என்பது போலும் என்க. ஞாபகத்தைக் காரகமாக்கி, அறிதலைத் தொழில் என்றது உபசாரவழக்கு.

முதுமொழிவெண்பாக்கள்:

"சீர்படைத்த முக்கட் சிவனன்பன் என்றெழுதும்
பேர்படைத்த சேரர் பெருமான்போல் - பார்மிசையின்."
—முதுமொழி. 93.

"வேதனில்லாள் விந்ததிற மீனவற்கு நீதெரித்தாய்
சோதி பழியஞ்சும் சோமேசா - பூதலத்தின்." —சோமேசர். 59.

"நெறிவார் சடையனைப்போல் நீள்நிலத்தோர் செய்கை
அறிவார் கழறிற் றறிவார் - அறிவாரார்." —திருத். 50.

குறிப்பு:

அரசர்க்கு உற்றார் உறவினர் நண்பினர் பகைவர் எல்லாரானும் தீமை விளையக்கூடுமாதலின் அவர்கள் செயலையும் ஒற்றான் அறிய வேண்டுவது அரசர்க்கு இன்றியமையாதது ஆயிற்று. காலம்போக அறியின் அதனால் விளையும் தீமை பலவாதலின் வல்லறிதல் என்றார். —தொகுப்பாசிரியர்.

583. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்த தில். (௩)

உரைப்பகுதி:

பரிமே:— ஒற்றினான் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் - ஒற்றினானே எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றுவித்து அவற்றான் எய்தும் பயனை ஆராயாத அரசன், கொற்றம் கொளக் கிடந்தது இல் - வென்றி அடையக்கிடந்தது வேறொருநெறி இல்லை எ - று.

அங்ஙிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்கு எளியனாதல் பிறிதின் றிராமையின், கொற்றம் கொளக்கிடந்ததில் என்றார். இதற்குக் கொளக்கிடந்ததொரு வென்றி இல்லை என்று உரைப்பினும் அமையும். இதனால் அத்தொழில் செய்யாதவழி வருங்குற்றம் கூறப்பட்டது,

மணக்:— ஒற்றராலே ஒற்றிப் பொருள் விசாரியாத மன்னவன் கொள்ளக் கிடந்ததொரு வெற்றி இல்லை எ - று.

இஃது ஒற்றின்மையால் வரும் குற்றம் கூறிற்று.

பரிதி:— மாற்றார்செய்யும் தொழிலை ஒற்றினாலே உறுதியாக விசாரித்து அந்த ஏகாந்தத்தை அடக்கி அதற்குத்தக்க பரிகாரம் செய்வான் கொற்றத்தை ஒருவராலே வெல்லப்படாது எ - று.

காளிங்:— தனது நாட்டகத்து வாழ்வாரது வன்மை மென்மையும் வேற்றரசர்மாட்டுள்ள வன்மையும் மென்மையும் ஒற்றாளரை உழலவிட்டு மற்று அவர்களான் ஒற்றுவித்துப் பின்னும் அவர் உரைப்பதன்கண் பொருட் கருத்தும் தெரிந்து உணரவல்லாத மன்னனானவன் அரசியல் திறமை கோடற்கு இயைபாவது யாதும் இல்லை எ - று.

ஒப்புமைப்பகுதி

"ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரிதல் முன்னினிதே
முற்றான் தெரிந்து முறைசெய்தல் முன்னினிதே." —இனிய. 36.

முதுமொழிவெண்பாக்கள் :

"மேகநா தன்செய்த வேள்விதனை ஒற்றினால்
ஏகியழித் துய்ந்தார் இரங்கேசா - சேகரித்த." —இரங். 59.

"பின்னைகரம் வீடியபின் பேதுற்றான் சூரனெற்றை
முன்னினிதா னாமன் முருகேசா - அன்னதனால்." —முருகேசர். 59.

584. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்(கு)
அனைவரையும் ஆராய்வ தொற்று. (சு)

உரைப்பகுதி:

பரிமே:— தம் வினை செய்வார் சுற்றம் வேண்டாதார் என்ற அனைவரையும் ஆராய்வது - தம்காரியஞ் செய்வார், சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் சொற்செயல்களான் ஆராய்வானே, ஒற்று - ஒற்றனாவான்.

தம் என்றது அரசனோடு உளப்படுத்தி. அவனுக்குக் காரியம் செய்வார் செய்வனவும், சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்தும் செய்வனவும், பகைவர் தன் அற்றமாராய்தலும் மேல் தேறப்படுதலும் முன்னிட்டுத் தன்னிடத்துச் செய்வனவும் அறிந்து, அவற்றிற்கு ஏற்றன செய்ய வேண்டுதலின், இம்மூவகையாரையும் எஞ்சாமல் ஆராயவேண்டும் என்பார் அனைவரையும் ஆராய்வது ஒற்று என்றார்.

மணக்;— தனக்குக் காரியமானவற்றைப் பார்த்துச் செய்வாரும், தமக்குச் சுற்றமாயிருப்பாரும், தம்மை வேண்டாதிருப்பாருமாகிய அனைவரையும் ஆராய்ந்தறிவான் ஒற்றனாவான் எ - று.

இவை இரண்டும் ஒற்றவேண்டுமிடம் கூறின.

பரிப்:— மேல் எல்லார்க்கும் நிகழ்பவை ஒற்ற வேண்டும் என்றார்; இது தன் காரியத்திற் செய்வார் செய்கின்ற அளவும் தனக்கு நட்பும் பகையுமாய் இருப்பாரையும் ஒற்றவேண்டும் என்றது.

பரிதி:— இராசகாரியஞ்செய்வாரையும் அரசன் சுற்றத்தாரையும், பகைவரையும், இங்குச் சொன்னமூவரையும் மற்றுள்ளோரையும் கசடற ஆராயவல்லதே ஒற்று எ - று.

காளிங்:— *....................

குறிப்பு:

ஒற்றர், அரசாது உரிமைச்சுற்றம் செய்வனவற்றையும் ஆராயவேண்டும். அங்கும் மதிப்பும் அசட்டையும் கூடாது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

* இவர் உரை பரிதியார் உரை போன்றதே.

585. கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— கடா உருவொடு - ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுறாத வடிவோடு பொருந்தி, கண் அஞ்சாது - அவர் ஐயுற்று அறியலுறின் செயிர்த்து நோக்கிய அவர் கண்ணிற்கு அஞ்சாது நின்று, யாண்டும் உகாமை வல்லதே ஒற்று - நான்கு உபாயமும் செய்தாலும் மனத்துக் கொண்டவற்றை உமிழாமை வல்லவனே ஒற்றனாவான்.

கடா என்பது கடுக்கும் என்னும் பெயரெச்சத்து எதிர்மறை. ஐயுறாத வடிவாவன பார்ப்பார், வணிகர் முதலாயினோர் வடிவு.

மணக்:— வினவப்படாத வடிவோடேகூடி, கண்ணஞ்சுதலும் இன்றி, அறிந்தபொருளை எவ்விடத்திலும் சோர்வின்றியே அடக்க வல்லவன் ஒற்றனாவன் எ - று.

பரிப்:— வினவப்படாத வடிவாய்து வணிகரும் பார்ப்பாரும் ஆகி ஆற்றற்குத்தக, எவ்விடத்துஞ் சோர்வு இன்றியே நடக்கவல்லவன் ஒற்றன் ஆவன் எ - று.

பரிதி:— *கடவுதலையுடைய வடிவோடு நின்று மனத்தில் கலக்கமின்றி எவ்விடத்தும் சோராமை வல்லது ஒற்று எ - று.

காளிங்:— அறவோர் வேடமும் துறவோர் வேடமும் வறியோர் வேடமும் பிறவுமாகிய நல்லுருவு கொண்டு ஒற்றுமிடத்து அமைச்சரும் பிறரும் ஆகிய அறிவுடையாளருள் யாவரேனும் தன்னைக் கண்டு ஐயுற்று இவ்விடைவந்து எய்திய நீ யாரோதான் என்று வினவுதல் செய்யாதபடி உரு வேடத்தோடு திரிதலும் மற்று இங்ஙனம் திரியுமிடத்தும் ஐயுற்றுக் கைப்பற்றியும் சிறைப்படுத்தியும் வருத்தம் செய்யுமிடத்துச் சிறிது நெஞ்சு அஞ்சாது நிறை உரம் செய்தலும் மற்றுத் தான் தகைந்து உட்கொண்ட மறைபொருளினை வேறு ஓரிடத்தும் சோர விடாமையும் வல்லது யாது? மற்று அதுவே அரசர்க்கு ஒற்றாவது எ - று.

மற்றும் தனது தந்தை தாயர் நட்டோர் சுற்றம் என்னும் இவர் மாட்டும் சோர விடாமை ஒற்று என அறிக.

---

*"கடவுதல் - விருந்தினராய் உசாவுதல்."

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கடா என்பது, கடுக்கும் என்னும் பெயரெச்சத்தெதிர் மறை. கடுத்த என்னும் இறந்தகாலப் பெயரெச்சத் தெதிர்மறையாகிற கடாத என இறந்தகாலத் தகர இடைநிலை பெற்றேநிற்கும் என்பது இவர் கருத்துப்போலும். தகர இடைநிலை பெறாது நிற்கில் விகாரமென்பர். அது 'கெடாஅ வழிவந்த கேண்மையார்' (809) 'வளங்குன்றா நாடென்ப' (736) இவற்றின்கண் காண்க.

மேற்கோள்பகுதி :

இளம்:— பொருளொடு புணர்ந்த பக்கம்: பக்கம் என்றதனல் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் என வருவனவெல்லாம் கொள்க எனக்கூறி ஒற்று என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75.)

பெருந்:— 'இதனை எப்படி ஓசை ஊட்டுவது எனில் குற்றிய விகரம் என்று ஒன்றாக்கி இகரம் அலகு பெறுதாக்கி ஓசை ஊட்டுக என்பர்; அதுவும் பிழை என்க. இகரம் குற்றெழுத்தாய் நின்று அலகுகாரியம் பெறுதல் அல்லது ஒற்றெழுத்தே போல் அரைமாத்திரை உடைத் தாயினும் அலகுகாரியம் பெறாது ஒழிதற்குக் காரணம் இன்மையால் என்க' என்று இக்குறளுக்குக் குறிப்பு எழுதுவர். (வீர. 125)

இது ஈரடி ஒவ்வாது வந்தமையால் சிந்துப்போலியாம் என்பர். (ஷை 127)

ஒப்புமைப்பகுதி:

"இற்றது கால மாக இலங்கையர் வேந்தன் ஏவ
ஒற்றர்வந் தளவு நோக்கிக் குரங்கென உழல்கின் றாரைப்
பற்றினம் என்ப மன்னே பண்டுதான் பலநாட் செய்த
நற்றவப் பயன்தந் துய்ப்ப முந்துறப் போந்த நம்பி."
—கம்ப. ஒற்றுக். 24.

"கூட்டிய விரல்திண் கையால் குரங்குகள் இரங்கக் குத்தி
மீட்டொரு வினைசெய் யாமல் மாணையின் கொடியால் வீக்கிப்
பூட்டிய கையர் வாயால் குருதியே பொழிகின் றாரைக்
காட்டினன் கள்வ ரென்னக் கருணையங் கடலும் கண்டான்." —ஷை 27.

"..........ஒற்றுவதை ஐயுறாத உருவோடு
துளக்க மின்றி என்செயினும் சோர்வி லாத தெனஅறிக."
—விநா. அரசி. 96.

குறிப்பு:

கடாவுதல் - இவர் யார் என உசாவி அறியப்படுதல். பெருங்கதையுள் யூகி என்னும் மந்திரி உண்மையான பித்தன் என்று துணியும்படி நடந்துகொண்டமை நினையத்தக்கது.

—தொகுப்பாசிரியர்.

586. துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்(து)
என்செயினும் சோர்விலது ஒற்று. (சு)

உரைப்பகுதி :

பரிமே:— துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து ஆராய்ந்து-முற்றத் துறந்தாராயும் விரத ஒழுக்கினராயும் உள்புகுதற்கரிய இடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டுவன ஆராய்ந்தறிந்து, என் செயினும் சோர்வு இலது ஒற்று - ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து எல்லாத் துன்பமுஞ் செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான்.

விரத ஒழுக்கம் தீர்த்தயாத்திரை முதலாயின. செயினும் என்பது அறவோர் என்று செய்வாரின்மை விளக்கி நின்றது. மேல் நால்வகை உபாயத்தினும் சோர்வின்மை சொல்லிவைத்து ஈண்டும் தண்டத்தைப் பிரித்துக் கூறியது அதனது பொறுத்தற்கு அருமைச் சிறப்பு நோக்கி. இதனுள் படிவம் என்றதனை வேடமாக்கித் துறந்தார் வேடத்தராகி என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— தவஞ்செய்வார் வேடத்தராகி நாட்டெல்லையைக் கடந்து போய், அங்குள்ள செய்தியை ஆராய்ந்து, அவ்விடத்து அகப்பட்டால் அவ் விடத்துள்ளார் துன்பமாயினும் இன்பமாயினும் செய்து கேட்டாலும், தன் உள்ளக்கருத்தைச் சோரவிடாதவன் ஒற்றனவன் எ - று.

பரிதி:— தவஞ்செய்வார் வேடத்தராகி மிகஆராய்ந்து பொறுக்க அல்லாத துன்பங்களைப் பிறர் செய்யினும் வாய்சோராதது ஒற்று எ - று.

காளிங்:— துறந்தோர் வேடம் முதலாகப் பல வேடங்களிலும் ஒற்று ஆராயும் இடத்துப் பிறர் தன்னையும்பற்றி ஆராய்ந்து கட்டுதல்

கடுத்தல் எற்றுதல் எறிதல் முதலிய இடரால் இடர்படுத்திக் கடாவினும் தன் தன்மையில் சிறிதும் சோர்வுபடாதது யாது; மற்று அதுவே அரசர்க்கு ஒற்றுவது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"பாத்தில்சீர்ப் பதுமுகன் படிவவொற் றுளர்சொல்
கோத்தெனக் கொடுத்தனன் கொழுநிதி." —சீவக. 1845.

"தாழ்ச்சி யின்றித் தருசகன் தமரோடு
ஏழ்ச்சியும் எறிபடை அளவும்எம் பெருமான்
சூழ்ச்சியும் சூழ்பொருள் துணிவும் எல்லாம்."
படிவ ஒற்றின் பட்டாங்கு உணர்ந்து." —பெருங். 3 : 25 : 51.

"கல்விக்கண் மிக்கோன் சொல்லக் கருமண நிருதக் கள்வர்
வல்விற்கை வீர மற்றிவ் வானரர் வலியை நோக்கி
வெல்விக்கை அரிதென் றெண்ணி விஜயத்தால் எம்மை எல்லாம்
கொல்விக்க வந்தான் மெய்ம்மைக் குரங்குநாம் கொள்க என்றார்."
—கம்ப. ஒற்றுக். 30.

முதுமொழிவெண்பாக்கள்:

'வந்தசுக சாரன் வடிவை நிருதனன் றிச்
சிந்தைசெய்தார் காண்பார் சிவசிவா - பந்தம்.' —சிவசிவ. 59.

குறிப்பு:

மேற்குறளில் கடாவுரு என்றதனை இன்னதென அறிவிப்பது துறந்தார் படிவத்தாராகி என்பது. துறந்தாராகி படிவத்தாராகி என்பது பரிமேலழகர் கருத்து. துறந்தார் - முனிவர். படிவத்தர் - விரதமேற்கொண்ட வானப்பிரஸ்தர் முதலானவர்கள். துறந்தார் முதலிய பலவேடங்களை உடையவராகி என்பர் காளிங்கர். சாணக்கியன் தன் சீடர்களைச் சமணத் துறவியாக - பாம்பாட்டியாக - வணிகனாக அனுப்பி உளவறிந்த வரலாறு காண்க. —தொகுப்பாசிரியர்.

587. மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பா டில்லதே ஒற்று. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— மறைந்தவை கேட்க வற்று ஆகி - ஒற்றப்பட்டார் மறையச்செய்த செயல்களை அவர்க்கு உள்ளாயினாரால் கேட்க வல்லனாய், அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று - கேட்டறிந்த செயல்களில் பின் ஐயப்படாது துணிய வல்லவனே ஒற்றனாவான்.

மறைந்தவை சொல்லுவாரை அறிந்து, அவர் அயிராமல் சென்று ஒட்டித் தாமே சொல்லும்வகை அதற்கு ஏற்ற சொல்லாக, செயலாக முன்னே விளைத்து, அத்தொடர்பால் கேட்குங்காலும் உறாதார்போன்று நின்று கேட்கவேண்டுதலின் கேட்கவற்றாகி என்றும், கேட்டறிந்தவற்றைத் தானே ஐயுற்றுவந்து சொல்லின் அரசனால் அவற்றிற்கேற்ற வினை செய்ய லாகாமையின் ஐயப்பாடில்லதே என்றும் கூறினார். இவை நான்குபாட் டானும் ஒற்றினது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— பிறரால் மறைக்கப்பட்டவற்றைக் கேட்டு அறிய வல்லனாகி, அறிந்தவற்றைத் தீர அறியவல்லவனே ஒற்றனாவன் எ - று.

இவை மூன்றும், ஒற்றிலக்கணம் கூறின.

பரிதி:— பிறர்மனை செய்வனவற்றைக் கேட்டறியவற்றால் அறிந்த பொருள்களை ஐயமின்றித் துணிந்து அறியவல்லது ஒற்று எ - று.

காளிங்;— வேந்தரிடத்தும் பிறரிடத்தும் மிகவும் மறைபொரு ளாகிய வினைச்சூழ்ச்சிகளை வினாவியும் விடுத்தும், நட்பினும் நகையினும் பிறவினும் தெரிந்து, விளங்கக் கேட்டுணர வல்லனும் ஆகி, அங்ஙனம் அறிந்தவைதம்பால் சிறிதும் ஐயப்பாடு இன்றித் தெளிவுற உரைக்கும் திறமையுள்ளது யாது; மற்று அதுவே அரசற்கு ஒற்றாவது எ - று.

இனி மற்று இங்ஙனம் ஒற்றரைக்கொண்டு உறுதி வினைப்பண்பு உணர்ந்த அரசனானவன், அவ்வுறுதி வினைவாய்ப்பின் அக்காலம் கழிவதன் முன்னரே கீழ்ச்சொல்லிப் போந்த காலம் அறிதல், இடன் அறிதல் என்னும் கருத்தினைக் கூறுவழுவாமல் குறிக்கொண்டு மற்று அவ்வினை மாட்டுப் பெரிதும் மேற்செலவு உடையனாக வேண்டுதலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— வற்று - வல்லது.

588. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— ஒற்று ஒற்றித் தந்த பொருளையும் - ஓரொற்றன் ஒற்றி வந்து அறிவித்த காரியந்தன்னையும், மற்றும் ஓரொற்றினால் ஒற்றிக் கொளல் - பிறனோர் ஒற்றனாலும் ஒற்றுவித்து ஒப்புமை கண்டுகொள்க.

ஒற்றப்பட்டாரோடு ஒத்துநின்று மாறுபடக்கூறலும் கூடுமாக லின், ஒருவன் மாற்றம் தேறப்படாது என்பதாம்.

மணக்:— ஒற்றர், மாற்றரசர்மாட்டும் பொருள் பெற்று மாறுபடச் சொல்லுதல் கூடுமாதலால், ஒரொற்று அறிந்து சொன்ன பொருளைப் பின்னையும் ஒரொற்றினாலே ஒற்றியறிந்து பின்பு அதனுண்மை கொள்க எ - று.

பரிப்:— ஓர் ஒற்றன் அறிந்து சொன்ன பொருளைப் பின்னையும் ஓர் ஒற்றினாலே ஒற்றி அறிந்து பின்பு அதனது உண்மை கொள்க எ - று.

பரிதி:— ஒருவன் சொன்ன ஒற்றின் சேதியை வேறொருவரைப் போகவிட்டு, அறிந்த ஒற்றர் சொல்லும் நிகராகில் ஒப்புக்கொள்க எ - று.

காளிங்:— இவ்வாறு செய்யும் இடத்து ஒற்றன் ஒற்றிக் கொணர்ந்து உரைத்த உரைபொருள் தன்னையும் அவன் அறியாமல் வேறேயும் ஒரு ஒற்றினால் ஒற்றுவித்து ஒத்ததாயின் கொள்க; இல்லை யாயின் அது செய்யற்க எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மற்று - பிறிது. பின்னூல்செய்தாரும் மற்றுக்கு 'வினை மாற்று அசைநிலை பிறிது' என்றாராதலால் (நன் - 433) அஃது இவ்வுரை யாசிரியர்க்கும் ஒத்தது.

ஒப்புமைப்பகுதி:

"ஒற்றொற் றியவரை ஒற்றின் ஆய்ந்து
முன்னம் கொள்ளும் உபாய முயற்சியொடு."—பெருங். 3 : 23 : 53 - 54.

"ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்..........
கொற்றங் கொள்குறிக் கொற்றவர்க் கென்பவே." —சீவக. 1921.

"அமைச்சரால் தெளிந்தும் வெவ்வேறு
ஒற்றுவிட் டுணர்ந்தும்....... —திருவிளை - தடா. அவதார. 53.

"ஒற்றரைத் தூண்டி அன்னோர் உறுவலி உணர்வ ரேனும்
மற்றுமோர் ஒற்றி னல்லால் அன்னது மனத்துட் கொள்ளார்
சுற்றுவுறு மணிக மன்றி ஒருபுடை துவன்றிச் சூழும்
பெற்றியும் உளதோ என்று வேய்வரீ இத் தேர்வர் பின்னும்."
—கந்த, அசுரேந். 51

589. ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும். (௯)

உரைப்பகுதி :

பரிமே:— ஒற்று ஒற்று உணராமை ஆள்க - ஒற்றரை ஆளுமிடத்து ஒருவனை ஒருவன் அறியாமல் ஆள்க; உடன் மூவர் சொல் தொக்க தேறப்படும் - அங்ஙனம் ஆண்ட ஒற்றர் மூவரை ஒருபொருள்மேல் வேறுவேறுவிட்டால் அம்மூவர் சொல்லும் பயனால் ஒத்தனவாயின், அது மெய்யென்று தெளியப்படும்.

ஆயின் என்பது வருவிக்கப்பட்டது. ஒருவனை ஒருவன் அறியின் தம்முள் இயைந்து ஒப்பக்கூறுவாராகலின் உணராமையாள்க என்றும், மூவர்க்கு நெஞ்சொற்றுமைப்படுதலும் பட்டால் நீடுநிற்றலும் கூடாமையின் தேறப்படும் என்றும் கூறினர். இதனானே அஃது ஒத்திலவாயின் பின்னும் ஆராய்க என்பதூஉம் பெற்றாம்.

மணக்:— ஒற்றரை விடுங்கால், ஒருவரையொருவர் அறியாமல் விடுக; மூவர்சொல் உடன்கூடின், அது தெளியப்படுமாதலால் எ - று.

இவை இரண்டும், ஒற்றரை யாளுந்திறம் கூறின.

பரிப்:— இஃது இருவர் சொன்னாலும் தெளியப்படாது; மூவர் சொன்னது தெளிவு எ - று.

பரிதி:— ஒற்றரும் ஒற்றரும் அறியாமல் வேறேபோகவிட்டு அவர்கள் சொன்ன சேதியை மூன்றுபேர் ஒருமொழியாகச் சொன்னால் ஒப்புக்கொள்க எ - று.

காளிங்:— இவ்வாறும் அன்றி இன்னமும் ஒற்றரைக்கொண்டு யாவர்மாட்டும் உள்ள நன்மை தீமைகள் ஒற்றுவிக்குமிடத்து, ஒருவரை ஒருவர் அறியாமல் ஆண்டு, அவ்வாறு பலரையுங்கொண்டு ஒற்றுவித்த இடத்துத் தனித்தனி தனக்கு உரைத்த மூவர் சொல்லும் ஒக்குமாயின், மற்று அவை அரசன் தெளிய அடுக்கும்; எனவே, மூவர் சொல்லிற் குறைபடின், தெளிய அடாது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"அறிந்த ஒற்றுளர் செறிந்தனர் உரைப்ப
ஒற்று மாக்களை ஒற்றின் ஆயா
முன்தனக் குரைத்த மூவர் வாயவும்
ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி." —பெருங். 3 : 25 : 47 - 50.

"ஒன்றிமுன் விடுத்தவர் மூவரொற் றுட்கள்வந்
தின்றிதாற் பட்டதென் றியம்புகின் றார்களே." —சீவக. 1829.

"ஒருவர் ஒருவர் தமைஅறியாது ஒருமை வினைக்கண் மூவர் தமை
மருவ விடுக்க................." —வினா. அரசி. 97.

590. சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தா னாகும் மறை. (கo)

உரைப்பகுதி:

பரிமே:— ஒற்றின்கண் சிறப்பு அறியச் செய்யற்க - மறைந்தவை அறிந்துகூறிய ஒற்றின்கண் செய்யுஞ்சிறப்பினை அரசன் பிறரறியச் செய்யாதொழிக, செய்யின் மறை புறப்படுத்தான் ஆகும் - செய்தானாயின் தன்னகத்து அடக்கப்படும் மறையைத் தானே புறத்திட்டானும்.

மறையாவது அவன் ஒற்றனாயதூஉம், அவன் கூறியதூஉம் ஆம். சிறப்புப்பெற்ற இவன் யாவன் என்றும், இது பெறுதற்குக் காரணம் யாது என்றும் வினவுவாரும் இறுப்பாரும் அயலாராகலின், புறப்படுத்தானாகும் என்றார். இவை மூன்றுபாட்டானும் ஒற்றரை ஆளுமாறும், அவரான் நிகழ்ந்தன அறியுமாறும், அறிந்தால் சிறப்புச்செய்யுமாறும் கூறப்பட்டன.

மணக்:— ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால், பிறரறியாமல் செய்க; பிறரறியச் செய்வனாயின், அவர் ஒற்றிவந்த பொருளைப் புறத்து விட்டானும் எ - று.

இஃது ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால் பிறரறியாமல் செய்ய வேண்டும் என்றது.

பரிதி:— ஒற்றற்குச் சிறப்புச்செய்யும்போது ஒருவர் அறியாமல் செய்க; அவர் அறிய ஒற்றற்குப் பாலித்தால் இராச்சியத்தில் பிரகாசம் பண்ணியதாம் எ - று.

காளிங்:— *இங்ஙனம் அகத்தும் புறத்தும் அருமையும் பெருமையும் நுட்பமும் ஒட்பமும் ஓர்ந்து உணர்ந்தஇடத்தும் ஒற்றர்க்கு அரசர்செய்யும் சிறப்புப் பலவும் உள அன்றே: அவற்றுள் யாதானும் ஒரு சிறப்பினையும் பிறர் அறியுமாறு தாம் செய்யாது ஒழிக: செய்வராயின் அங்ஙனம் அவரால் தாம் அரிதின் பெற்ற மறையுரையினை அவ்வுரைப்பொருளாகிய வினை முடிவதன் முன்னரே தாமே புறத்து வெளிப்படுத்தினர் ஆவர் எ - று.*

ஒப்புமைப்பகுதி:

" ......மூவர்களும் வந்து மொழிவ தேர்ந்துவிடின்
கரும மதனை மிகத்தெளிக கரும மறைப்ப வேண்டுதியேல்
பொருவில் அவர்தம் பாற்சிறப்புப் புறந்தோன் றாமல் செய்திடுக."

—*விநா. அரசி.* 97.

குறள்வைப்புமுறை

பரிமே:— *ஒற்றும், எல்லார்க்கும், ஒற்றினான், வினைசெய்வார், கடாஅஉரு, துறந்தார், மறைந்தவை, ஒற்றொற்றி, ஒற்றொற்று, சிறப்பறிய.*

மணக்:— *ஒற்றும், கடாஅஉரு, துறந்தார், மறைந்தவை, எல்லார்க்கும், வினைசெய்வார், ஒற்றொற்றி, ஒற்றொற்று, சிறப்பறிய, ஒற்றினான்.*

பரிதி:— *ஒற்றும், எல்லார்க்கும், ஒற்றினான், ஒற்றொற்றி, ஒற்றொற்று, சிறப்பறிய, கடாஅஉரு, துறந்தார், மறைந்தவை, வினைசெய்வார்.*

காளிங்:— *ஒற்றும், ஒற்றினான், எல்லார்க்கும், ஒற்றொற்றி, ஒற்றொற்று, கடாஅஉரு, துறந்தார், 'வினைசெய்வார், சிறப்பறிய, மறைந்தவை.*

60. ஊக்கமுடைமை.

தொகுப்புரை:

[ஊக்கம் உடையவரே உடையவர். அஃது இல்லாதவர்கள் வேறு எவற்றை உடையவர்களாயினும் உடையவர்கள் எனப்படார். ஊக்கமுடைமையே உடைமை; பொருள் உடைமை நிலையற்றது. ஊக்கத்தையே பொருளாகக் கொண்டவர்கள் பொருளை யிழந்துவிட்டோம் என்று பேதுறமாட்டார்கள். ஊக்கமுடையவனையே செல்வம் வழிதேடிச் சென்றடையும். நீரளவே யாகுமாம் நீராம்பல்; அதுபோல ஊக்கத்தின் அளவே உயர்வுண்டாகும். ஒருவன் உயர்ந்த காரியங்களையே எண்ண வேண்டும். அவை நிறைவேறாவிடினும் எண்ணம் நிறைவேறும். கணைகள் பல தைத்தாலும் களிறு பின்வாங்குவதில்லை; அதுபோல உயர்விற்குச் சிதைவுவந்தாலும் அறிவாளிகள் சிந்தை தளரமாட்டார்கள். இவ்வுலகத்தில் 'யாம் ஒருவள்ளல்' என்னும் பெருமை ஊக்கமில்லாதவர்களுக்கு இல்லை. யானை பெரியதாய் - கூரிய கொம்பை யுடையதாய் இருப்பினும் உருவிற் சிறிய புலி தாக்கினால் அஞ்சும். ஊக்கமே ஒருவற்கு வன்மை. அது இல்லாதார்கள் வடிவால் மக்களே யல்லாது தன்மையால் மரமேயாவர்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல். ஒற்றரான் நிகழ்ந்தன அறிந்து அவற்றிற்கேற்ற வினைசெய்வானுக்கு இஃது இன்றியமையாமையின், ஒற்றாடலின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— ஊக்கமுடைமையாவது அதனைச் செய்யுமிடத்துக் காலத்து அருமையை ஓராது இவ்வாறு செய்யக்கடவேனென்று கருதும் கருத்துடைமை. பிறர்நாடு கொள்ளுங்காலத்து அவ்விடத்துள்ள செய்தியை ஒற்றரால் அறிந்தபின்பு அதனையே அறிந்துகொள்ளக்கடவேன் என்று நினைக்குங்கருத்து வேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— ஊக்கமுடைமையாவது எப்போதும் விசாரமுடைமை எ - று.

591. உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார்
உடைய துடையரோ மற்று. (க)

உரைப்பகுதி :

பரிமே:— உடையர் எனப்படுவது ஊக்கம் - ஒருவரை உடைய ரென்று சொல்லச் சிறந்தது ஊக்கம்; அஃது இல்லார் மற்று உடையது உடையரோ - அவ்வூக்கமில்லாதார் வேறுடையதுதானும் உடையராவரோ ஆகார்.

வேறுடையது என்றது, முன் எய்திநின்ற பொருளை. உம்மை விகாரத்தால் தொக்கது. காக்குமாற்றல் இலராகலின், அதுவும் இழப்பர் என்பதாம்.

மணக்:— *ஒற்றறையுடைமை யென்று சொல்லப்படுவது ஊக்க முடைமை; அஃதிலாதார் மற்றுடையதாகிய பொருளெல்லாம் உடைய ராகார் எ - று.

பரிப்:— ஒன்றை உடையர் என்று சொல்லப்படுவது ஊக்கம்: அஃது இல்லாதார் மற்று உடைமையாகிய பொருளெல்லாம் உடைய ராகார் எ - று.

இஃது ஊக்கமுடைமை வேண்டும் என்றது.

பரிதி:— அரசன் செல்வன் என்று சொல்லப்படும் விசார முள்ளவனாகில்; விசாரஈனனாகில் அரசற்கு எத்தனை செல்வம் உண்டாகி லும் இல்லையாம் எ - று.

காளிங்:— உலகத்து அரசரானோர் எனைத்து வகைப்பட்ட பொருள்களையும் உடையரேனும் அவற்றுளெல்லாம் பலராலும் எடுத் துரைக்கப்படுவது சிறந்த ஊக்கம் உடைமையே; ஆகலான் அஃது இல்லா தார் வேறு தமக்கு உடையதாக வகுத்து எண்ணப்பட்ட உடைமை உடையரேனும் யாதும் இலர் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— "உடையது எனப்படுவது ஊக்கம்" என்று முன்னும் அஃறிணை வாய்பாட்டாற் சொல்லாது, உயர்திணை வாய்ப்பாட்டாற்

---

*இவர் "உடைமை எனப்படுவது ஊக்கம்" எனப்பாடங்கொண்டுள்ளார்,

சொல்லியதால், அதற்குரியர் என்று சொல்லச் சிறந்தது ஊக்கம் என்றார். அது வினவி அறிக. மற்று - வேறு.

ஒப்புமைப்பகுதி:

"ஊக்கமுடைமை ஆக்கத்திற் கழகு." —கொன்றை. 86

குறிப்பு:

உடையர் எனப்படுவது - இவர் எல்லாம் உடையவர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது; ஊக்கம் - மன எழுச்சியாகிய ஊக்கம் ஒன்றுமேனயாம். அஃதில்லார் - அவ்வூக்கம் இல்லாதார்; உடையது உடையரோ - செல்வத்தை யுடையவராவரோ எனவும் பொருள் காணப்பெறும். குந்தியிருந்து உண்டால் குன்றும் கரையும் ஆதலின் ஊக்கமில்லாதார் உடையது உடையரோ என்றார். உடையது - உடைய பொருள்.

—தொகுப்பாசிரியர்.

592. உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது *நீங்கி விடும். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— உள்ளம் உடைமை உடைமை - ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது; பொருள் உடைமை நில்லாது நீங்கிவிடும் - மற்றைப் பொருளுடைமை நிலைநில்லாது நீங்கிப்போம்.

உள்ளம் ஆகுபெயர். ஊக்கம் உள்ளத்துப் பண்பாகலின், அதற்கு நிலைநிற்றலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிதன்மாலைத் தாகலின் அதற்கு நிலை நில்லாமையும் கூறினார். கூறவே, அஃது உடைமையன்று என்பது பெறப்பட்டது.

மணக்:— உடைமையாவது ஊக்கமுடைமை; பொருளுடைமை நிலை நில்லாது நீங்கும் எ - று.

பொருள் உடையார்க்கு எல்லாம் உண்டாம் என்பார்க்கு இது கூறப்பட்டது.

---

*"நீத்துவிடும்" என்பது காளிங்கர் பாடம்,

பரிதி:— அரசர்க்கு உடைமையாவது விசாரமுடைமை; அது இல்லாதபோது *எட்டுவகைச் செல்வமும்கெடும் எ - று.

காளிங்:— மற்று இப்படியாகலான் ஊக்கம் உடைமையே ஒருவர்க்குச்செல்வமானது: மற்று இவ்வுலகத்துப் பொருளானது நிலையாது: முன்னை வினைவழியினால் தமக்கு வரும்பொருள் வருதலும், கெடும்பொருள் கெடுதலும் யாவராலும் ஒழித்தற்கு அரிது ஆகலான், மற்று உணர்வு ஊக்கம் ஆகின்றது அவ்விருபாலும் சிறந்ததாகலான் இதனை ஒப்பது ஓர் ஆக்கம் வேறு இல்லை எ - று.

ஒப்புமைப்பகுதி:

" அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும்
திருவுடைய ராயின் திரிந்தும் வருமால்
பெருவரை நாட பிரிவின் றதனால்
திருவினும் திட்பமே நன்று." —பழ. நா.

" உள்ளமுடை யான்முயற்சி செய்யவொரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனின் இல்லை." —சீவக. 496.

குறிப்பு:

மேற்குறளில் 'உடையது உடையரோ' எனப்பொதுவகையால் கூறியதை 'பொருளுடைமை நில்லாது நீங்கிவிடும்' என்று ஏதுக்காட்டிவிளக்கியவாறு. நில்லாது என்ற குறிப்பான் உள்ளமுடைமை நிலைத்த உடைமையாம் என்பது வருவித்துரைக்கப் பெற்றது.

—தொகுப்பாசிரியர்.

593. ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் - இழந்தாராயினும் யாம் கைப்பொருளை இழந்தேம் என்று அலமரார், ஒருவந்தம் ஊக்கம் கைத்து உடையார் - நிலைபெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக உடையார்.

*எட்டுவகைச் செல்வமாவன:- அடிமை, அரசாங்கம், சுற்றம், நெல், பொன், மக்கள், மணி, வாகனம்.

ஆக்கம் ஆகுபெயர். ஒருவந்தமாய ஊக்கம் என்க. கைத்து - கையகத்தாய பொருள்: *"கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்ம்மின்" என்றார் பிறரும். அல்லாவாமைக்கு ஏது வருகின்ற பாட்டால் கூறுப.

மணக்:— செல்வத்தை இழந்தோம் என்று அலமரார்; உள்ள மிகுதியை ஒரு தலையாகத் தம்மாட்டுடையார் எ - று.

இது பொருட்கேடுவரினும் தளரார் என்றது.

பரிதி:— செல்வம் ஒருகாலத்திலும் போகாது; தனம் சேதமானாலும் விசனப்படார்; விசாரத்தின் பெருமை கைவந்த †விசாரவான் எ - று.

காளிங்:— தம்மாட்டு முன்னமே உளதாகிய பெருஞ்செல்வத்தைப் பின்பு ஒருகால் இழந்தோம் என்று கொண்டு அலமருதல் இலர்: யார் எனில், பின்னும் ஊக்கம் உடைமையாகிய பெருஞ் செல்வத்தைத் தம்மிடத்து உடையவர் எ - று.

ஒருவந்தம் என்பது பெருஞ் செல்வம் என்றது. கைத்துடையார் என்பது தம்மிடத்து உடையவர் என்றது.

ஒப்புமைப்பகுதி:

" ஊக்க முரண்மிகுதி ஒன்றிய நற்சூழ்ச்சி
ஆக்கம் அவன்கண் அகலாவால் - வீக்கம்
நகப்படா வென்றி நலமிகு தாரார்க்கு
அகப்படா வில்லை அரண்."

—பு - வெ. 100.

குறிப்பு:

பொருளையாக்கும் ஊக்கமே பொருளாக உருவகிக்கப்பெற்றது. ஊக்கம் ஒருவந்தம் கைத்துடையார் - ஊக்கத்தை யுறுதியான கைப்பொருளாகக் கொண்டவர்கள் என்றுரைப்பர் பரிப்பெருமாள் மணக்குடவர். காளிங்கர், ஒருவந்தம் - பெருஞ்செல்வம். கைத்துடையர் - தம்மிடத்துடையார் எனப் பொருள்காண்பர். கை என்பது இடப்பொருளுணர்த்தும் பெயர்ச்சொல்.

—தொகுப்பாசிரியர்.

---

*நாலடி. 19. † விசாரவான் - ஆராய்ச்சியாளன்.

594. ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை. (ச)

உரைப்பகுதி:

பரிமே:— அசைவு இலா ஊக்கம் உடையானுழை - அசைவில்லாத ஊக்கத்தையுடையான்மாட்டு, ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் - பொருள் தானே வழி வினவிக்கொண்டு செல்லும்.

அசைவின்மை - இடுக்கண் முதலியவற்ருல் தளராமை. வழி வினவிச் சென்று சார்வார்போலத் தானே சென்று சாரும் என்பார், அதர்வினுய்ச்செல்லும் என்ருர். எய்தி நின்ற பொருளினும் அதற்குக் காரணமாய ஊக்கம் சிறந்தது என்பது, இவை நான்கு பாட்டானும் கூறப் பட்டது.

மணக்:— அசைவில்லாத ஊக்கமுடையான்மாட்டு ஆக்கம், தானே வழி கேட்டுச் செல்லும் எ - று.

நினைத்ததனுலே ஆக்கமுண்டாமோ என்ருர்க்கு இது கூறப் பட்டது.

பரிதி:— இலட்சுமி வழிகேட்டு வருவள்; உறுதியான விசாரம் உள்ள அரசனிடத்து எ - று.

காளிங்:— ஒருவனுக்கு இருமைக்கும் உரிய ஆக்கமானது தானே வழிதேடிச் சென்று எய்தும்: யாவர்மாட்டு எனின், சிறிது அசைவும் இல்லாத நெஞ்சு ஊக்கத்தை உடையார்மாட்டு; ஆதலான் ஊக்கம் உடைமை உளதாயினல்லது தமக்குரிய தாளாண்மை உள ஆகா எ - று.

அதர் என்பது வழி என்றது.

இனி மற்று இந்நெஞ்சூக்கம் உடையோர்க்கல்லது மடியின்மை நிகழ்தலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"அசைவில் நோன்ருள் நசைவளம் ஏத்தி." —புறம். 148 : 2.

"ஊக்க வேந்தன் ஆக்கம்போல." —பெருங். 3 : 5 : 21.

"பெருமுழங்கு திரைவரைகள் நீந்திப்பிணி உழினும்
திருமுயங்கல் இல்லெனின் இல்லைபொருள் ஈட்டம்
ஒருமுழமும் சேறலில ரேனும்பொருள் ஊர்க்கே
வரும்வழிவி னுயுழந்து வாழ்கதவம் மாதோ." —சீவக. 2556.

"ஆக்கமிங் கொருவரால் அணுக வேண்டுமேல்
ஊக்கம்உண் டாவரேல் உறுவர் அன்னது
நீக்கமில் கொள்கையின் நிற்ப ரேனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்." —கந்த. மாயைஉப. 13.

"ஊக்கமது கைவிடேல்." —ஆத்தி. 6.

"உண்மை ஓராப்பித்தர் உடைமை மயக்கென்ப
வண்மை யுறலுக்கல் ஒருதலையே - கண்ணீர்
இருபா லும் தோன்றன்ன ஈர்க்கலார் போழ்வாள்
இருபால் இயங்கலினே டொப்பு." —இன். 11.

முதுமொழிவெண்பாக்கள்:

"வீசு புகழ்விசயன் விற்றழும்பு சென்னியின்மேல்
ஈசன் தரித்தான் இரங்கேசா - ஆசையால்." —இரங். 60.

குறிப்பு:

எல்லாரானும் தேடப்படுஞ்செல்வம் ஊக்கமுடையவனைத் தானேதேடிச் சென்றடையும் என்பதாம். —தொகுப்பாசிரியர்.

595. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— வெள்ளத்து அனைய மலர் நீட்டம் - நின்ற நீரின் அளவினவாம் நீர்ப்பூக்களின் தாளினது நீளங்கள், மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு - அதுபோல் மக்கள்தம் ஊக்கத்து அளவினதாம் அவருயர்ச்சி.

மலர் - ஆகுபெயர். நீர் மிக்கதுணையும் மலர்த்தாள் நீளும் என்பதுபட, வெள்ளத்தனைய என்றார். இவ்வுவமையாற்றலான் ஊக்கமிக்கதுணையும் மக்களுயர்வர் என்பது பெறப்பட்டது. உயர்தல் - பொருள் படைகளான் மிகுதல்.

மணக்:— புகுந்த நீரின் அளவினது பூக்களது வளர்ச்சி; அது போல, மாந்தரது உள்ளத்தின் அளவினது ஊக்கம் எ - று.

இஃது ஊக்கம் இதனானே உண்டாம் என்றது.

பரிதி:— சலம் எத்தனை ஆழம் உண்டு அத்தனைவளரும் நீர்ப்பூ; அதுபோல அரசற்கு எத்தனைகல்வி உண்டு அத்தனையும் விசாரம் உண்டாம் எ - று.

காளிங்:— குளத்தின்கண் நின்ற வெள்ளம் எத்தன்மைத்து: மற்று அத்தன்மைத்து நீர்ப்பூத் தண்டின் நீளமானது: மற்று அதுபோல மன்னர் தமது நெஞ்சு ஒருப்பாடு எத்தன்மைத்து: மற்று அத்தன்மைத்து ஒருவர்க்கு உரியவாகப் பெரியோரான் உரைக்கப்பட்ட உயர்வுப்பொருள் அனைத்தும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"நீரளவே யாகுமாம் நீராம்பல்." —வாக்கு. 7.

முதுமொழிவெண்பாக்கள்:

"பார்த்த குரவர் பணிமுயன்றார் கண்ணுதலார்
தீர்த்தத் தியலும் திறம்நின்றார் - நீர்த்தடத்து." —முதுமொழி. 94.

"ஏறியஓ டக்கோல் இசைஞானச் செந்தமிழால்
ஆறுகடந் தார்தோணி யார்மகனார் - வீறடங்கா." —திருத். 39.

"நாள்களொடு கோளியக்கு நற்பதவி யைத்துருவன்
மூள்கருத்தால் பெற்றான் முருகேசா - நீள்பெருக்கின்."

—முருகேசர். 60.

குறிப்பு:

வெள்ளம் உயர அவ்வளவாக நீண்ட மலர், வெள்ளஞ் சுருங்கிய காலத்தும் அதன்தண்டு குறுகாதவாறு மடிந்து சுருண்டு கிடப்பதுபோல, ஊக்கத்தினளவாக வளர்ந்த உயர்ச்சி, காரிய முடித்தபின் அவ்வூக்கம் சுருங்கினும் உயர்வு சுருங்காது எனக் காண்டலும் ஒன்று. தக்கவழியில் காலமறிந்து முயன்ற முயற்சியின் பயன் என்றும் வளர்ச்சி குறையாது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

596. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (சு)

உரைப்பகுதி :

பரிமே:— உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் - அரசராயினோர் கருதுவதெல்லாம் தம் உயர்ச்சியையே கருதுக; அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து - அவ்வுயர்ச்சி பால்வகையால் கூடிற்றில்லையாயினும், அக்கருத்துத் தள்ளாமை நீர்மையுடைத்து.

உம்மை, தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. தள்ளிய வழியும் தாளாண்மையில் தவறின்றி நல்லோரால் பழிக்கப்படாமையின், தள்ளாவியற்கைத்து என்பதாம். மேல் உள்ளத்தனையது உயர்வு என்றதனையே வற்புறுத்தியவாறு.

மணக்:— நினைப்பனஎல்லாம் உயர்வையே நினைக்க; அந்நினைவு முடியாமல் தப்பினும், முயன்று பெற்றதனோடு ஒக்கும் எ - று.

இது தப்பினும் பழிக்கப்படாது என்றது.

பரிதி:— விசாரிப்ப தெல்லாம் பாரமானதே விசாரிப்பான்; விசாரித்தாலும் முடியாதபோதும் பாரகாரியம் எ - று.

காளிங்:— அரசர் தாம் செய்வதாகச் சிந்திப்பது எல்லாம் மேம்படு கருமம் சிந்திக்க: மற்று அது பிழைப்பினும் பிழையாத நீர்மை உடைத்து எ - று.

உயர்வுள்ளல் என்பது உயர்வினை உள்ளுக என்றது: தள்ளினும் என்பது பிழைப்பினும் என்றது: தள்ளாமை நீர்த்து என்பது பிழையாத நீர்மை உடைத்து என்றது.

முதுமொழிவெண்பாக்கள்:

" சிந்திக்கும் அற்ப நினைவுகளால் ஒன்றனையும்
சிந்திக்கொண் ணாது தினகரா - புந்திக்குள்." —தினகர. 63.

" மேல்நிகழ்வ தேதெனினும் வென்றீனத் தென்மதுரை
ஈசனொடு வாதத் தெதிர்நின்ற - கீரனைபோல்." —முதுமொழி. 95.

குறிப்பு:

விதியின் பகையால் செயல் சித்தி பெறுமல்போயினும் கருத்து தள்ளாமை நீர்த்து என்றார்.

—தொகுப்பாசிரியர்.

597. சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பின்
பட்டுப்பா டூன்றும் களிறு. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— களிறு புதை அம்பின் பட்டுப் பாடு ஊன்றும் - களிறு புதையாகிய அம்பால் புண்பட்டவிடத்துத் தளராது தன்பெருமையை நிலை நிறுத்தும், உரவோர் சிதைவிடத்து ஒல்கார் - அதுபோல ஊக்க முடையார் தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்த விடத்துத் தளராது தம்பெருமையை நிலைநிறுத்துவர்.

புதை - அம்புக்கட்டு; பன்மை கூறியவாறு. பட்டால் என்பது பட்டு எனத் திரிந்து நின்றது. ஒல்காமை களிற்றுடனும், பாடூன்றுதல் உரவோருடனும் சென்று இயைந்தன. தள்ளினும் தவறாது உள்ளியது முடிப்பர் என்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஊக்கமுடையாரது உயர்ச்சி கூறப்பட்டது.

மணக்:— தளர்ச்சிவந்தவிடத்துத் தளரார் உள்ள மிகுதி யுடையார்; மெய்புதைந்த அம்பினுள்பட்டும் பாடூன்றும் களிறுபோல எ - று.

இஃது உயிர்க்கேடு வரினும் தளரார் என்றது.

*பரிதி:— … … … … …

காளிங்:— நெஞ்சு ஊக்கம் உடைய அரசரானவர், தமது விதி வகையான் யாதானும் ஒருவாற்றான் தமது ஆக்கம் அழியுமிடத்துத் தளர் வுறார்: அது என்போல எனின், ஒருவன் எய்த அம்பானது தன் மெய் அழுத்தப்பட்டு வைத்தும் பின்னும் தனது பெருந்தன்மையை உரைத்து நிற்கும் அண்ணல் யானையானது மற்று அது எ - று.

* இவர் உரை கிடைக்கவில்லை.

சிதைவு இடத்து என்பது ஆக்கம் அழியுமிடத்து என்றது. ஒல்கார் என்பது தளரார் என்றது: உரவோர் என்பது அறிவுடையோர் என்றது.

குறிப்பு:

பொருளடையாகிய ஒல்காமை உவமத்தின்கண்ணும், உவம அடையாகிய பாடுன்றல் பொருட்கண்ணும் சென்றியைந்தன. அம்புபல தைத்தாலும் பெருமையைக் காத்துக் கொள்கின்ற களிறுபோல அழிவேவரினும் அரசர் தளரார் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

598. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— உள்ளம் இலாதவர் - ஊக்கமில்லாத அரசர், உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு எய்தார் - இவ்வுலகத்தாருள் யாம் வண்மை யுடையேம் என்று தம்மைத் தாம் மதித்தலைப் பெறார்.

ஊக்கமில்லையாகவே முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவை முறையே இலவாமாகலின், செருக்கெய்தார் என்றார். கொடைவென்றி யினுய இன்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனாகாமையின் தன்மையால் கூறப்பட்டது.

மணக்:— உள்ளமிகுதி யில்லாதார் உலகின்கண் வண்மை யுடைமை என்னும் களிப்பினைப் பெறார் எ - று.

இஃது உள்ளமிகுதி இல்லாதார்க்குப் பொருள்வரவு இல்லையாம்; ஆதலான் அவர் பிறர்க்கு ஈயமாட்டார் என்றது.

பரிதி:— விசார மில்லாதவர் உலகத்துச் செல்வவான் என்று ....

காளிங்:— யாதானும் ஒரு கருமத்தின்கண்ணும் தமது நெஞ்சு ஊக்கம் இல்லாத அரசரானோர் என்றும் எய்துவதிலர்: யாதினை எனின் இவ்வுலகத்து வாழ்வார் பலரினும் யாம் சாலச்செய் கருமத்தின்கண் வளவி யேம் என்று உள்ள மனச்செருக்கினை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"ஊக்க முடையார் கைப்பொருளை ஒழிந்தா ரேனும் ஒழிவில்லா
ஆக்க முடைய ரேயாவர் ஆக்க மிருந்தும் அசைவில்லா
ஊக்க மிலரேல் ஏதுமிலர் உளுற்று முயற்சி பொருள்கொடைகள்
தேய்க்கும் புகழ்நற் செருக்கிவைபின் சேரா ஏம கண்டனே."

—விநா. அரசி. 98.

"... .... உள்ளமிக்க
குலந்தரு நல்லோர் செல்வம் குன்றினும் தம்பால் இல்லென்று
அலந்தவர்க்கு உயிரை மாறி யாயினும் கொடுப்ப ரன்றே."

திருவிளை. தருமிக். 17.

முதுமொழிவெண்பாக்கள்:

"நல்லதினம் என்றே நாகன் இறு நாளுலகில்
செல்லவரம் பெற்றான் சிவசிவா - வல்லமைசேர்."

—சிவசிவ. 60.

குறிப்பு:

வள்ளியம் என்னுஞ் செருக்கு: இன்பநிலைக்களனாகப் பிறப்பது செருக்காதலின், ஈத்துவக்கும் இன்பம் மிக, அதனால் 'யாம் வள்ளன்மையுடையோம்' என்னும் செருக்கு விளையும் என்பது விளக்கியவாறு. வள்ளியம் என்பது, கொடுப்பதால் தன்மாட்டுளதாய இன்பம்.

—தொகுப்பாசிரியர்.

599. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (௯)

உரைப்பகுதி:

பரிமே:— பரியது கூர்ங்கோட்டது ஆயினும் - எல்லாவிலங்கினும் தான் பேருடம்பினது; அதுவேயுமன்றிக் கூரிய கோட்டையும் உடையதாயினும், யானை புலி தாக்குறின் வெரூஉம் - யானை தன்னைப் புலியெதிர்ப்படின் அதற்கு அஞ்சும்.

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய்வலியும் கருவிச் சிறப்பும் உடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான் அஃதுடைய அதற்கு அஞ்சும் என்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியும்

கருவிச்சிறப்பும் உடையராயினும் அரசர் ஊக்கமிலராயின் அஃது உடைய அரசர்க்கு அஞ்சுவர் என்பது தோன்றநின்றமையின் பிறிதுமொழிதல்.

மணக்:— யானை பெரிய உடம்பினதாய், கூரியகோட்டையும் உடைத்தாயினும், புலி பொருமாயின் அஞ்சும் எ - று.

இஃது உள்ளமுடைமை யில்லாதார் பெரியராயினும் கெடுவார் என்றது.

பரிதி:— அங்கபாரமும் கூரிய கொம்பும் யானைக்கு உண்டாகிலும் மனோபலம் இல்லாதபடியினாலே புலிக்குப் பயந்ததுபோல, மனோபலமில்லாதார் ஒருகண் ஒற்றினால் விசாரம் தாழ்வுவந்தாலும் அதனாற்குறை இல்லை. அது என்போல் என்னில் அம்பிலே நொந்த யானை பின்பும் அதன் பெலம் பெற்ற தன்மைபோலும் எ - று:

காளிங்:— சாலப் பரியதுமாய்க் கூரிய கோட்டினை உடையது மாய் இருந்ததே ஆயினும், யானையானது மிகவும் அஞ்சும்: எவ்விடத்து எனின், ஒரு புலி வந்து தன்னொடு பொரத் தாக்குறுவதான இடத்து: மற்று அத்தன்மைத்து மன்னர்க்கும்: பொருபடை ஆண்மையும் வருபடைத் துணையும் மற்றும் பிறவும் பெரியராகிய மாற்றரசர் வந்துற்றனர் ஆயினும், மற்று இவரை நோக்கிச் சிறியரே ஆயினும், நெஞ்சு ஊக்கம் என்னும் நிலைமையே அரசர்க்கு இயல்பு எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கில் துஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்த தாகலின்
கனவிற் கண்டு கதுமென வெரீஇ." —கலி. 49 : 1 - 4.

"கந்தடு களிறு கொல்லும் கருவரை உழுவை யன்னான்." —சீவக. 1219.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஊக்கம் உடையான் ஒருவன் விசையனடித்
தீக்குமவன் ஒல்கான் திருமலையா - ஆக்கை." —திருமலை.

"வெங்கரியைப் பாகனைமுன் வீட்டினார் ஏகமாய்த்
தங்க எறிபத்தர் சோமேசா - வங்கம்." —சோமேசர். 60.

600. உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு. (௬0)

உரைப்பகுதி:

பரிமே:— ஒருவற்கு உரம் உள்ள வெறுக்கை - ஒருவற்குத் திண்ணிய அறிவாவது ஊக்கமிகுதி; அஃது இல்லார் மரம் - அவ்வூக்க மிகுதி இல்லாதார் மக்களாகார் மரங்களாவார்; மக்களாதலே வேறு - சாதி மரங்களோடு இம்மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள்வடிவே, பிறிதில்லை.

உரம் என்பது அறிவாதல் * "உரன் என்னும் தோட்டியான்" என்பதனானும் அறிக. மரம் என்பது சாதியொருமை. மக்கட்குள்ள நல்லறிவும் காரியமுயற்சியும் இன்மைபற்றி மரம் என்றும், மரத்திற்குள்ள பயன்பாடின்மைபற்றி மக்களாதலேவேறு என்றும்கூறினர். பயன் பழம் முதலியவும், தேவர்கோட்டம் இல்லம் தேர் நாவாய்கட்கு உறுப்பாதலும் முதலிய. இவை மூன்றுபாட்டானும் ஊக்கமில்லாதாரது இழிபு கூறப் பட்டது.

மணக்:— ஒருவனுக்கு அறிவாவது உள்ளமிகுதி யுடைமை; அஃதில்லாதார் மரமென்று சொல்லப்படுவர்; மக்கள்வடிவாதலே மரத்தின் வேறாகத் தோன்றுகின்றது எ - று.

இஃது அறிவும் இதுதானே என்றது.

பரிதி:— அரசற்குச் சத்துவமாவது விசாரம்; அது இல்லாத அரசனும் மரமும் நிகர் எ - று.

காளிங்:— ஒருவர்க்கு உணர்வுடைமையாவது யாதோ எனின் ஓர்ந்து உற்ற கருமத்தின்கண் பெரிதும் நெஞ்சு ஊக்கம் உடையர் ஆதலே செல்வம்; அஃது இல்லாதார், மரமானது மக்களுள் உருவு கொண்டது எத்தன்மைத்து அத்தன்மைத்து எ - று.

உரம் என்பது அறிவுடைமை. வெறுக்கை என்பது செல்வம் என்றும் வெறுப்பு என்றும் சொல்லுவாரும் உளர்.

* குறள். 24.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— வெறுக்கை - ஊக்கமிகுதி. ஆதல் என்னும் ஒரு வினைமுதற் சொல்லிடத்து நின்ற அல்லீற்று விகுதி வியங்கோள் மக்களாகார்: மரங்களாவார் என எதிர்மறையினும், உடம்பாட்டினும் வந்தது. "மகனெனல் மக்கட் பதடியெனல்" (196) என்பது இருசொல்லின் கண்நின்று இரு பொருளையும் விளக்கிற்று: "ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை" (971)யும் அது.

குறள்வைப்புமுறை.

பரிமே:— உடையர், உள்ளமுடைமை, ஆக்கமிழந்தோம், ஆக்கமதர் வினாய், வெள்ளத்தனைய, உள்ளுவ, சிதைவிடத்து, உள்ளமிலாதவர், பரியது, உரமொருவற்கு.

மணக்:— உடையர், உள்ளமுடைமை, வெள்ளத்தனைய, ஆக்கமதர் வினாய், உள்ளுவ, உரமொருவற்கு, சிதைவிடத்து, ஆக்கமிழந்தேம், உள்ளமிலாதவர், பரியது.

பரிதி:— உடையர், உள்ளமுடைமை, ஆக்கமதர்வினாய், ஆக்கமிழந்தேம், உள்ளமிலாதவர், வெள்ளத்தனைய, உரமொருவற்கு, உள்ளுவ, பரியது, சிதைவிடத்து.

காளிங்:— உடையர், வெள்ளத்தனைய, சிதைவிடத்து, உள்ளுவ, உள்ளமிலாதவர், உரமொருவற்கு, ஆக்கமிழந்தேம், உள்ளமுடைமை, பரியது, ஆக்கமதர்வினாய்.

61. மடியின்மை.

தொகுப்புரை:

[குடிப்பிறப்பு என்னும் நந்தாவிளக்கு சோம்பல்என்னும் புகைசூழ அவிந்து போகும். தான் பிறந்தகுடியை நல்லகுடியாக்க விரும்புபவர்கள் சோம்பலை மேற் கொள்ளக் கூடாது. சோம்பலை மடியில் கட்டிக்கொண்டு வாழும் பேதையின்குடி அவனுக்கு முன்பே அழிந்துபோகும். சோம்பலுற்றுச் சிறந்த முயற்சியிலார்க்கு குடியுமடியும்; குற்றமும் மிகும். சோம்பலும் தாமதமும் மறதியும் தூக்கமும் ஆகிய நான்கும், அழிபவர் ஏறும்தோணியாம். அரசர்களுடைய அன்பைப் பெற்றவராயினும் சோம்பர் சிறந்த பயன் எய்தமுடியாது. சோம்பிச் சிறந்தமுயற்சியில் ஈடுபடாதவர் இடித்துரையையும், இழித்துரையையும் கேட்பார்கள். குடிப்பிறப்பாளனிடம் சோம்பல் தங்குமாயின் அது அவனைப் பகைவர்க்கு அடிமையாக்கிவிடும். சோம்பலை நீக்க, குடியுள்ளும், ஆண்மையுள்ளும் வந்த பழிகள் நீங்கும். சோம்பலற்ற மன்னன் நெடுமால் அளந்த நில முழுதையும் ஒருங்கே பெறுவன்.]

அதிகாரப்பொருள்

பரிமே:— அஃதாவது கருதியன செய்யுங்கால் சோம்புதல் இல்லாமை. ஊக்கமுடையார்க்கு ஒரோவழிக் குணவயத்தான் மடிவருதல் நோக்கி, இஃது ஊக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— மடியின்மையாவது சோம்பலில்லாமை. செய்யுங்காரியம் உயர நினைத்தாலும் அதனைச் செய்து முடிக்குங்கால், சோம்பாமை வேண்டும் என்று அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— மடியின்மையாவது சோம்பலினை விட்டுவிடுதல் எ - று.

601. குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசூர மாய்ந்து *கெடும். (க)

உரைப்பகுதி :

பரிமே:— குடி என்னும் குன்றா விளக்கம் - தான் பிறந்த குடியாகிய நந்தா விளக்கு, மடி என்னும் மாசு ஊர மாய்ந்து கெடும் - ஒருவன் மடியாகிய இருள் அடர நந்திப்போம்.

---

*"விடும்" என்பது காளிங்கர் பாடம்.

உலகநடை உள்ள துணையும் இடையறாது தன்னுள் பிறந்தாரை விளக்குதலின் குடியைக் குன்றாவிளக்கம் என்றும், தாமதகுணத்தான் வருதலின் மடியை மாசு என்றும், அஃது ஏனை இருள்போலாது அவ் விளக்கைத் தானடர்ந்து மாய்க்கும் வலியுடைமையின் மாசூர மாய்ந்து கெடும் என்றும் கூறினார். கெடுதல் பெயர்வழக்கமும் இல்லையாதல்.

மணக்:— குடியென்று சொல்லப்படுகின்ற குறைவில்லாத ஒளி மடி என்று சொல்லப்படுகின்ற மாசு மறைக்கத் தோன்றாதுகெடும் எ - று.

முன்பே தோற்றமுடைத்தாகிய குடியும் கெடும் என்றவாறு.

பரிதி:— செல்வக் குடி என்னும் ஒரு விளக்கு, மடி என்னும் இருட்டுக்குக் கெடும் எ - று.

காளிங்:— அரசர் குலம் என்று எடுத்து உரைக்கப்பட்ட கெடாத விளக்கானது..............வந்து பரக்கவே தனது ஒளி மறைந்து பின்னும் கெட்டு விடும் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— விளக்கம் மாசூர மாய்ந்துகெடுதல் விரோதப்பொருள். 'மொய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளென் றெண்ணித்துண் ணென் றொளித்துக், கைம்மல ராற்கண் புதைத்துப் பதைக்கும்எங் கார்மயிலே' என்னும் (233) கோவையும் அது.

குறிப்பு:

விளக்கு, பிராணவாயு குறைந்து கரிக்காற்று மிகுமாயின் அவிந்துபோம். அதுபோலக் குடிவிளக்கு ஊக்கம் என்னும் பிராணவாயுவின் உதவி இருக்கும்வரை எரிந்து, மடி என்னும் கரிக்காற்றுப் புகுந்தவுடன் அவிந்து போம் என்பதாம். மாய்தல் விளக்கிற்கும், குடிவிளக்கிற்கும் பொதுவாயினும் குடிவிளக்கு மாய்ந்தால் திரும்பத் தோன்றாது என்பார் மாய்ந்துகெடும் என்றார். மாசு - புகை.

—தொகுப்பாசிரியர்.

602. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— குடியைக் குடியாக வேண்டுபவர் - தாம் பிறந்த குடியை மேன்மேல் உயரும் நற்குடியாக வேண்டுவார், மடியை மடியா ஒழுகல் - மடியை மடியாகவே கருதி முயற்சியோடு ஒழுகுக.

முயற்சியோடு என்பது அவாய்நிலையான் வந்தது. நெருப்பில் கொடியது பிறிதின்மைபற்றி, நெருப்பை நெருப்பாகவே கருதுக என்றாற் போல மடியில் தீயது பிறிதின்மைபற்றிப் பின்னும் அப்பெயர் தன்னானே கூறினார். அங்ஙனங்கருதி அதனைக் கடிந்து முயன்று ஒழுகவே தாம் உயர்வர்; உயரவே குடியுயரும் என்பார், குடியைக் குடியாக வேண்டு பவர் என்றார். அங்ஙனம் ஒழுகாக்கால் குடியழியும் என்பது கருத்து. இனி மடியா என்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுக என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— மடிசெய்தலை மடித்து ஒழுகுக; தம்குடியை உயர்குடியாக வேண்டுபவர் எ - று.

இது சோம்பாமை வேண்டும் என்றது.

பரிதி:— மடி என்னும் பொல்லாத குணத்தினையும் மடியப்பார்க்க வேணும்; தன்குடியைக் குடியாக வேண்டில் எ - று.

காளிங்:— தாம் யாதானும் ஒரு கருமம் செய்யக்கருதிய காலத்துத் தம் மனத்து ஒரு மடி வந்துற்ற இடத்து அதற்கும் இடங்கொடாது அம்மடியை மடியா ஒழுகல் வல்லார் மற்று அவரே, தமது நாட்டு வாழும் குடிகளைக் குலம் தழீ............குடி நெருங்கி வாழவேண்டும் அரசர் எ - று.

குறிப்பு:

மடியை மடியா ஒழுகல் என்பதற்குப் பரிமேலழகர் சோம்பலைச் சோம்பலென்றே கருதி ஒழுகுக என்பர். இதன்கருத்து அறியாமை தன்னையுடையானுக்கு தன்னைக்காட்டாது அறிவுடைமையாகவே காட்டி மயக்குவதுபோல இம்மடியும் தன்னைக் கெடுபொருளாகக் காட்டாது மயக்கி நிற்கும் ஆதலால் இதனைச் சோம்பல் என்று கருதுக என ஆணைதந்தார். கெடுத்து ஒழுகுதல் எனப் பொருள்கொண்டவர் மணக்குடவர் பரிப்பெருமாள் இருவரும்.

—தொகுப்பாசிரியர்.

603. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி - விடத் தகுவதாய மடியைத் தன்னுள்ளே கொண்டொழுகும் அறிவில்லாதான் பிறந்தகுடி, தன்னினும் முந்து மடியும்-அவன்றன்னினும் முந்துற அழியும்,

அழிவு தருவதனை அகத்தே கொண்டு ஒழுகுதலின் பேதை என்றும், அவனால் புறந்தரப்படுவதாகலின் குடி தன்னினும் முந்துற அழியும் என்றும் கூறினார். ஆக்கத்திற் பிற்படினும் அழிவில் முற்படும் என்பதாம்.

மணக்:— நெஞ்சத்து மடியினாலே வினையின்கண் மடித்தலைச் செய்து, ஒழுகாநின்ற அறிவிலி பிறந்தகுடி தனக்கு முன்பே கெடும் எ-று.

சோம்புடையார்க்கு உளதாகும் குற்றம் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.

பரிதி:— மடித்த புத்தியுள்ளவன் கெடுவதற்கு முன்னே அவன் உறவின்முறை முந்தக் கெடும் எ-று.

காளிங்:— மடித்தலாகிய இதனைத் தன்மாட்டுக் கொண்டு ஒழுகும் மடவோனாகிய மன்னவன் தான் மாய்தலேயும் அன்றித் தன்னினும் முந்துறத் தனது குடி முழுதும் மாயும் எ-று.

மடி மடிக்கொண்டு ஒழுகும் என்பது மடியாகிய இதனைத் தன்மேல் வைத்துக்கொண்டு என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மடிக்கொண்டொழுகல் - அகத்தேகொண்டொழுகல்.

ஒப்புமைப்பகுதி:

"சோம்பித் திரியேல்." —ஆத்தி. 54.

குறிப்பு:

'சனியனை அடிமடியிற்கட்டியதுபோல' 'நெருப்பை மடியிற் கட்டியதுபோல' என்ற பழமொழிகளை நினைவு கூர்க. சோம்பலை மடியிலே கட்டியவன் பேதை யாவான் என்பதாம். மனச்சோம்பலாலே தொழிலிற் சோம்பலுறும் பேதை என்பர் பரிப்பெருமாளும் மணக்குடவரும்.

—தொகுப்பாசிரியர்.

604. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— மடி மடிந்து மாண்ட உஞற்று இலவர்க்கு - மடியின் கண்ணே வீழ்தலால் திருந்திய முயற்சி இலராயினார்க்கு, குடி மடிந்து குற்றம் பெருகும் - குடியும் மடிந்து குற்றமும் பல்கும்.

மடிந்து எனத் திரிந்து நின்ற வினையெச்சம் இலவர் என்னும் குறிப்புவினைப்பெயர் கொண்டது. குற்றங்கள் முன்னர்க் கூறுப. இவை நான்கு பாட்டானும் மடியின் தீமை கூறப்பட்டது.

மணக்:— குடியுங் கெட்டுக் குற்றமும் மிகும்; சோம்பின் கண்ணே பொருந்தி மாட்சிமைப்பட்ட முயற்சி இல்லாதார்க்கு எ - று.

இது பிறரால் இகழப்படுவர் என்றது.

பரிப்:— இது குடி கெடுதலே அன்றிக் குற்றமும் உண்டாம் என்றது.

பரிதி:— குடியும் கெட்டுக் குற்றமும் பெருகும்; மடித்தபுத்தி உள்ளார்க்கு எ - று.

காளிங்:— தன் கோல்கீழ் வாழும் குடிகளும் தத்தம் வினைச் செயலைச் செய்யாது மடிந்து பின்னும் தமக்கும் குற்றம் பெருகும்: யார்க்கு எனின், மடியின் கண் தங்கியதனாலே மாட்சிமை உடைய முயற்சி இல்லா மன்னவர்க்கு எ - று.

குடி மடிந்து என்பது குடிகள் வினைமடிந்து என்றது. குடிமடிந்து என்பதனைச் சுற்றத்தார் மாய்ந்து என்பாரும் உளர். மடி மடிந்து என்பது மடியின்கண்ணே மடிந்து எ - று.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து; 'தெரிவித்து என நிற்கற்பாலது தெரிந்து என விவ்விகுதி தொக்கு நின்றது. 'குடிமடிந்து குற்றம் பெருகும்' என்பதும் அப்பொருளவாய் நின்றது. (தொல். விருத். பக். 10.)

சுவாமி:— பிறவினை முதனிலை திரியாமல் வந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 73.)

ஒப்புமைப்பகுதி:

"கேளிர்கள் நெஞ்சழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்
தாளிலான் குடியேபோல் தமியவே தேயுமால்." —கலி. 149 : 8 - 9,

"ஒன்றால் சிறிதால் உதவுவதொன் றில்லையால்
என்றாங் கிருப்பின் இழுக்கம் பெரிதாகும்
அன்றைப் பகலையும் வாழ்கலார் நின்றது
சென்றது போரா தவர்."

—பழ. நா.

குறிப்பு:

மடி மடிந்து - மடியின்கண் மடிதலால்; மடிதல் - வீழ்தல். மடிய எனக்காரணப் பொருளில்வந்த செயவெனெச்சம் மடிந்து என செய்தெனெச்சமாகவும், குடிமடிந்து என்புழிச் செயவெனச்சத்திரிபாகவும் கொள்க; முன்னது இலவர் என்னும் குறிப்புவினையாலணையும் பெயரையும், பின்னது பெருகும் என்ற குற்றத்தின் வினையாகிய பிறவினையையும் கொண்டு முடிதலின். சுற்றத்தார் மாய்ந்து எனப் பொருள் கண்டவர் மணக்குடவர்.

—தொகுப்பாசிரியர்.

605. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (௫)

உரைப்பகுதி :

பரிமே:— மடி நெடுநீர் மறவி துயில் நான்கும் - மடியும் விரைந்து செய்வதனை நீட்டித்துச்செய்யும் இயல்பும் மறப்பும் துயிலும் ஆகிய இந் நான்கும், கெடும் நீரார் காமக்கலன் - இறக்கும் இயல்பினை யுடையார் விரும்பி ஏறும் மரக்கலம்.

முன்நிற்கற்பாலதாய மடி செய்யுள் நோக்கி இடை நின்றது. நெடுமையாகிய காலப்பண்பு அதன்கண் நிகழ்வதாய செயல்மேல் நின்றது. காலநீட்டத்தை உடைய செயல்முதல் மூன்றும் தாமதகுணத்தில் தோன்றி உடனிகழ்வனவாகலின் மடியொடு ஒருங்கு எண்ணப்பட்டன. இறக்கும் இயல்பு - நாளுலத்தல். இவை துன்புறு நீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி அவர் விரும்பிக்கொண்டவழித் துன்பத்திடைவீழ்த்தலின் நாளுலந்தார்க்கு ஆக்கம் பயப்பதுபோன்று காட்டி அவர் விரும்பியேறியவழிக் கடலிடை வீழ்க்கும் கலத்தினை ஒக்கும் என்னும் உவமைக் குறிப்புக் காமக்கலன் என்னும் சொல்லால் பெறப்பட்டது. இதற்கு விரும்பிப் பூணும் ஆபரணம் என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— விரைந்து செய்யும் வினையை நீட்டித்தலும், செய்ய நினைந்ததனை மறத்தலும், அதனைச் செய்தற்குச் சோம்புதலும், அதனைச் செய்யாது உறங்குதலுமாகிய இவை நான்கும் கெடுந்தன்மையுடையார் காதலித்து ஏறும் மரக்கலம் எ - று.

காமக்கலன் என்றது தன்னைக் காதலித்து ஏறினாரை நடுக்கடலுள் தள்ளும் மரக்கலம்போல என்றது. இத்துணையும் மடியினால் வரும் குற்றம் கூறினார்.

பரிப்:— துயிலும் மறவியும் நெடுநீர்மையும் மடியினோடு ஒத்த இயல்பின ஆகலான் இவையும் ஒருவாற்றான் கூற வேண்டுதலின் ஈண்டுக் கூறப்பட்டன.

பரிதி:— முடியாதகாரியத்தை முயலுதலும் செய்யுங்காரியத்தை மறந்திருப்பதும் மடித்தபுத்தியும் நித்திரையும் என்கின்ற நாலு குணமும் மடித்தபுத்தியுள்ளார்க்கு ஆபரணம் எ - று.

காளிங்:— விரைந்து எழவேண்டும் கருமத்தை நீளவிடுவதோர் நெடுநீர்மையும், குற்றத்தின்கண் பற்றிய மறவியும், அதற்கு உரியமடிமையும், கருமம் இயற்றக் காமுறாது கண் துயில்தலும் இந்நான்குமே கெடுதல் தன்மையராகிய அரசர் ஆசைப்பட்டு அணிந்துகொள்ளும் அணிகலமாவது; மற்று இது அன்றி அரசர்க்கு உரிய நன்கலம் ஆகிய கடகமும் கண்டமாலையும் ஆரமும் கடுக்கும் அணிதல் இலர் எ - று.

குறிப்பு.

காமக்கலன் - விரும்பிப்பூணும் ஆபரணம் என உரைப்பர் காளிங்கர். மடியால் ஏனைய மூன்றும் உண்டாதலின் மடி முன்னிற்கற்பாலதாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

606. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது. (சா)

உரைப்பகுதி :

பரிமே:— படி உடையார் பற்று அமைந்தக்கண்ணும் - நிலமுழுதும் ஆண்டாரது செல்வம் தானே வந்தெய்திய இடத்தும், மடி உடையார் மாண்பயன் எய்தல் அரிது - மடியுடையார் அதனான் மாண்ட பயனை எய்துதல் இல்லை.

உம்மை எய்தாமை விளக்கி நின்றது. மாண்பயன் - பேரின்பம். அச்செல்வம், அழியாமல் காக்கும் முயற்சியின்மையின் அழியும்; அழியவே, தம் துன்பம் நீங்காது என்பதாம். இதற்கு நிலமுழுதும் உடையவேந்தர் துணையாதல் கூடியவிடத்தும் என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— பூமியுடைய வேந்தர் பல பொருளினாலும் அமைந்த விடத்தும் மடியுடையாராயின், மாட்சிமைப்பட்ட பொருளைப் பெறுதல் இல்லை எ - று.

இது செல்வமுண்டாயினும் கெடுவர் என்றது.

பரிதி:— மண்டலத்தரசர் செல்வம் நிலையில்லை; அது நிலை பெற்றாலும் மடித்த புத்தியுள்ளார் பயன்பெறமாட்டார்கள் எ - று.

காளிங்:— மண் ஆளும் வேந்தரானவர் தம்மினும் வலிய வேந்தரைப்பற்றி வாழ்தல் முற்றும் பெற்ற இடத்தும், மடியுடைய மன்னராயின் மாட்சிமை உடைய அரசர் வாழ்க்கைப்பயன் எய்தல் அரிது எ - று.

மேற்கோள்பகுதி :

யா - வி:— இது பதினாறு எழுத்தடி (நெடிலடி) வெண்பா. (சூ.95.)

குறிப்பு:

பற்று - செல்வம் என்பர் பரிமேலழகர். பற்றிவாழ்தலாகிய துணை என்பர் பரிப்பெருமாளும் மணக்குடவரும். அரசராது துணையோ அல்லது பொருளோ இருப்பினும் அது துணைபெற்றோம் என்ற பயனை ஒழியுமேயன்றி அப்பொருளை அல்லது துணையைப் பயன்படுத்தி இன்புறும் நிலை மடியிலார்க்கே எய்துவதாகலின் பயன் எய்தலரிது என்னாது மாண்பயன் எய்தலரிது என்றார்.

—தொகுப்பாசிரியர்.

607. இடிபுரிந் தெள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— மடி புரிந்து மாண்ட உஞற்று இலவர் - மடியை விரும்புதலான் மாண்ட முயற்சி இல்லாதார், இடி புரிந்து எள்ளும் சொல் கேட்பர் - தம் நட்டார்முன் கழறுதலை மிகச்செய்து அதனால் பயன்காணாமையின் பின் இகழ்ந்து சொல்லும் சொல்லைக் கேட்பர்.

இடி என்னும் முதனிலைத்தொழிற்பெயரான், நட்டார் என்பது பெற்றாம். அவரிகழ்ச்சி சொல்லவே, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவற்றிற்கெல்லாம் மாறுசொல்லும் ஆற்றல் இன்மையின், கேட்பர் என்றார்.

மணக்:— *கழறுதலைச்செய்து பிறர் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்பர், மடியைச்செய்து மாட்சிமைப்பட்ட முயற்சியில்லாதார் எ - று.*

பரிப்:— *இது பிறரால் இகழப்படுவர் என்றது.*

பரிதி:— *மாற்றார் தன்னை இகழ்ச்சி சொல்வது கேட்பர்; மடிந்த புத்தி மிகுத்தார்கள் எ - று.*

காளிங்:— *தம்மைப் பிறர் இடித்தலைச்செய்து இகழ்ந்துரைக்கும் சொல்லினைக் கேட்பார்: யார் எனின், மடியின்கண் தங்கி மற்று அதனானே மாட்சிமைபட்ட முயற்சி இல்லாத மன்னவர் எ - று.*

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— *புரிதல் - முன்னது செய்தல்; பின்னது விரும்புதல்.*

ஒப்புமைப்பகுதி :

"சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்." —கொன்றை. 36.

முதுமொழிவெண்பாக்கள் :

"மாறன் இறையநுளால் வந்துவெல்லத் தோற்றளவில்
போர்விண்ட இந்திரனைப் போலவே - சால." —முதுமொழி. 97.

குறிப்பு:

"மடிமடிந்து மாண்ட உஞற்றிலவர்க்கு" என்புழிப்போல 'மடிபுரிந்து மாண்ட உஞற்றிலவர்' என்பதன்கண்ணும் காரணப்பொருளில்வந்த செயவெனெச்சம் திரிந்து செய்தென் எச்சமாயிற்று. புகழ்புரிந்த என்புழிப் பரிமேலழகர் உரைத்தாங்கு விரும்பி மேற்கொள்ளத்தகாத மடியை விரும்பி மேற்கொண்ட இழிதகைமையைப் புலப்படுத்த மடிபுரிந்த என்றார். நேரில் இடித்துச்சொல்லும் உரிமை நட்டோர்க்கே உளதாதலின் இடிபுரிதலை நட்டோர்க்கும், காணுவிடத்து எள்ளியுரையாடுதல் எதிலார்க்கு உரியதாதலின் எள்ளுதலை ஏதிலார்க்கும் கூட்டியுரைத்தார் பரிப்பெருமாள்.

—தொகுப்பாசிரியர்.

608. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்(கு)
அடிமை புகுத்தி விடும். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— மடிமை குடிமைக்கண் தங்கின் - மடியினது தன்மை குடிமையுடையான்கண்ணே தங்குமாயின், தன் ஒன்னார்க்கு அடிமை புகுத்திவிடும் - அஃது அவனைத் தன் பகைவர்க்கு அடியனாந் தன்மையை அடைவித்துவிடும்.

மடியினதுதன்மை - காரியக்கேடு. குடிமை - குடிசெய்தற்றன்மை. அஃது அதனை உடைய அரசன்மேற்றுதல், தன் ஒன்னார்க்கு என்றதனான் அறிக. அடியனாந்தன்மை - தாழ்ந்துநின்று ஏவல்கேட்டல். இவை நான்கு பாட்டானும் மடிமைக்குற்றங்கள் கூறப்பட்டன.

மணக்:— குடிப்பிறந்தார்மாட்டே மடிமை தங்குமாயின், அது தன் பகைவர்க்கு அடிமையாக்கிவிடும் எ - று.

இது கீழ்ப்படுத்தலேயன்றி அடிமையும் ஆக்கும் என்றது.

பரிதி:— மடித்தபுத்தி உள்ளவன் மாற்றார்க்கு அடிமையாவன் எ - று.

காளிங்:— தனக்கு உரிய அரசர் வாழ்க்கைக்கு உரியனவற்றை முயலாது மடிந்து ஒழுகும் மடித்தன்மையும், தன்கோல்கீழ் வாழும் குடிகளது குணமும் குற்றமும் ஆராயாமல் மடித்தலும் மற்று.................. பருவம் வழுவாமல் ஆங்கு உழவு முதலிய முயற்சியின் மடித்தலும் தனது பகை வேந்தர்க்குத் தான் ஏவல்கேட்டுப் பணிந்து ஒழுகும் அடிமைப் படுத்தி விடும் எ - று.

மேற்கோள்பகுதி :

நச்:— உயர்திணை இருபாலையும் உணர்த்துதற்கு 'மடிமை குடிமைக்கண் தங்கின்' என்பது மேற்கோள். (தொல். சொல்.57.)

முதுமொழிவெண்பாக்கள்:

"உய்யு மனமடிக்க ஒண்ணாது ஒருகருமம்
செய்யு மிடத்தில் தினகரா - மையா." —தினகர. 64.

"துஞ்சுவிழிக் கும்பகன்னன் துண்டம் செவியிழந்தும்
எஞ்சுதலை யுற்றான் இரங்கேசா - விஞ்சும்." —இரங். 61.

குறிப்பு:

குடிப்பிறந்தாரதுதன்மை குடிமை என, 'பிறப்பே குடிமை' என்ற சூத்திரத்து உரைகண்டிருக்கவும், ஈண்டுப் பரிமேலழகர் குடிமை என்றதற்குக் குடியுடையான் எனப்பொருள் காண்டல் பண்புக்கும் பண்பிக்கும் உள்ள ஒற்றுமை நயம் பற்றி என்க. அடிமை எவரானும் விரும்பி மேற்கொள்ளப்படுவதன்றாகலின் புகுத்தியெனப் பிறவினைவாய்பாட்டானும், அடிமைகொண்ட ஒன்னார் எவ்வகையினும் மீளவிடாராதலின், ஒருவாற்றானும் உய்ய வகையில்லையென்பார் புகுத்திவிடும் என்றும் கூறினார்.

—தொகுப்பாசிரியர்.

609. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— ஒருவன் மடி ஆண்மை மாற்ற - ஒருவன் தன் மடியாளும் தன்மையை ஒழிக்கவே, குடி ஆண்மையுள் வந்த குற்றம் கெடும் - அவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் கெடும்.

மடியாளுந்தன்மை மடியுடைமைக்கு ஏதுவாய தாமதகுணம். குடியாண்மை என்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்தகுற்றம் என்றது மடியானன்றி முன்னே பிறகாரணங்களான் நிகழ்ந்தவற்றை. அவையும் மடியாண்மையை மாற்றி முயற்சியுடையனாக நீங்கும் என்பதாம்.

மணக்:— குடியை யாளுதலுடைமையின்கண் வந்த குற்றமானது ஒருவன் சோம்புடைமையைக் கெடுக்கக் கெடும் எ - று.

குற்றம் - குடிக்கு வேண்டுவன செய்யாமையால் வருங் குற்றம்.

பரிப்:— இது மடி இல்லார்க்குப் போக்கலாம் என்றது.

பரிதி:— தன்குடியிலே ஒரு குற்றம் வந்தால் மடித்தபுத்தியை விட்டுக் காரியவாதியாகில் அந்தக்குற்றம் கெடும் எ - று.

காளிங்:— குடிகளைத் தான் ஆண்டு ஒழுகுமிடத்து அவர்க்கு வந்து எய்திய வடுப்பாடும், மற்று அம்மன்னவன்தனக்கு வந்த வடுப்பாடும் மற்று இங்ஙனம் வந்த மடியாட்சியைத் தவிர்க்கவே கெட்டுவிடும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"மடியொன் றுளதேல் வல்விரைந்து யருக்கும் தொழிலை நீட்டிக்கும்
கடியும் மறவி துயில்விளைக்கும் கலதி தனைச்சேர்த் திடும்பகைவர்க்கு
அடிமை புகுத்தும் குடிகெடுக்கும் அதனை விடுப்பின் ஆண்மையினும்
குடிமை யிடத்தும் வேறுளவாம் குற்றம் பலவும் ஒழிக்குமே."
—விநா. அரசி. 99.

குறிப்பு:

காரியக்கேடுகளனைத்துமே மடியான் வருவன; ஆதலால் குடிப்பிறப்பும் ஆண்மையும் அம்மடியானே குற்றப்படும். குடியும் ஆண்மையும் அடைந்த எந்த வகைக்குற்றங்களும் மடியான் வந்தனவாகவே இருக்கும் ஆதலால் மடியின்மையை ஆளக் குற்றங்கெடும் என்றார். பரிமேலழகர் பிறகாரணங்களால் வந்த குற்றமும் மடியின்மையால் விலகும் என்பர். ஒரு காரணத்தால் நிகழ்ந்தகுற்றம் அக் காரணத்தை நீக்க விலகுமேயன்றிப் பிறிதொன்றால் விலகாதாதல் சிந்திக்க. குடியாண்மை - குடிகளையாளுந்தன்மை; அதாவது அரசாட்சி என்பது காலிங்கர் பரிப்பெருமாள் கருத்து.

—தொகுப்பாசிரியர்.

610. மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. (கo)

உரைப்பகுதி :

பரிமே:— அடி அளந்தான் தாயது எல்லாம் - தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்புமுழுவதையும், மடி இலா மன்னவன் ஒருங்கு எய்தும் - மடியிலா அரசன் முறையானன்றி ஒருங்கே எய்தும்.

அடியளந்தான் என்றது வாளா பெயராய் நின்றது. தாவியது என்பது இடைக்குறைந்து நின்றது. எப்பொழுதும் வினையின்கண்ணே முயறலின், இடையீடின்றி எய்தும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் மடியிலாதான் எய்தும்பயன் கூறப்பட்டது.

மணக்:— மடியில்லாத மன்னவன் எய்துவன்; அடியினன் அளந்தானல் கடக்கப்பட்ட உலகமெல்லாம் ஒருங்கே எ - று.

இது மடியின்மையால் வரும் பயன் கூறிற்று.

பரிதி:— மடித்தபுத்தி யில்லாத அரசன் பெறுவன்; மகா விட்டுணுவின் பாதத்திலே அடங்கின உலகம் எ - று.

காளிங்:— தனது நெஞ்சு ஊக்கத்துக்குத் தக்க முயற்சி உடையனாய்த் தனதிடத்து ஒருநாளும் மடிப்பது ஓர் மடி இல்லாத மன்னவன் யாவன்? அவன் எய்தும்: யாதினை எனின், முன் ஒரு நாள் அசுரேசனிடத்துச் சென்று மூவடி வேண்டி அளந்தவனாகிய திருமால் அடியில் தாவிக்கொண்ட அனைத்து உலகினையும் எ - று.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— சத்தாம் அறிவறியா மெய்சிவன்றுளாம்; "சத்தாகிய மெய் எனக் கூட்டுக. 'அடியளந்தான் தாயது' என்புழிப்போல அறிவறியாமெய் என்றது வாளா பெயராய் நின்றது." (சிவஞான. சூ. 6. அதி. 2)

சுவாமி:— கற்றறிந்தோர் பல சொல்லினையே ஒரு சொல்லாகவும் கருதுவர் என்பதற்கு 'அடியளந்தான் தாயதெல்லாம்' என்பதை எடுத்துக் காட்டி 'அரி' என ஒரு சொல்லாகவே கொள்வர் என்பர். (இ. கொ. 116.)

ஒப்புமைப்பகுதி:

"உள்ளமுடை யான்முயற்சி செய்யஒரு நாளே
வெள்ளநிதி வீழும்வினை யாததனின் இல்லை
தொள்ளையுணர் வின்னவர்கள் சொல்லின்மடி கிற்பின்
எள்ளுநர்கட் கேக்கழுத்தம் போலஇனி தன்றே". —சீவக. 496.

முதுமொழிவெண்பாக்கள்:

"கஞ்சகனு தன்கோயில் காலெலிக்கு மாட்டாதே
வஞ்சனைசெய் தானை இவண் வைத்துப்பார் - துஞ்சு."—முதுமொழி. 96.

"பொன்மலையின் வேங்கை பொறித்துமீண் டான்சென்னி
தொன்மைவலி ஆண்மையினுல் சோமேசா - பன்னின்."
—சோமேசர். 61.

"தந்தையுள நோக்கித் தவமே வியதுருவன்
சிந்தைவலி தன்றே சிவசிவா - நந்தும்." —சிவசிவ. 61.

"அம்புவிமுற் றும்புரந்தான் ஆண்மைரகு மாற்றலரை
மொய்ம்பதனுல் வென்றே முருகேசா - இம்பர்." —முருகேசர். 61.

குறிப்பு:

அடியளந்தான்: வாளாபெயராய் (காரணம் குறியாது) இறைவனை உணர்த்திற்று என்பர் பரிமேலழகர். திருமால் ஒன்று, இரண்டு என்று முறையாக எண்ணி அளந்து தமதாக்கிக்கொண்ட இந்த இருநிலத்தை மடியிலா மன்னவன் ஒருசேர எய்துவன் என மடியின்மைக்கு உயர்வு கூறியவாறு.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை.

பரிமே:— *குடியென்னும், மடியை, மடிமடிக், குடிமடிந்து, நெடுநீர், படியுடையார், இடிபுரிந்து, மடிமை, குடியாண்மை, மடியிலா.*

மணக்:— *மடியை, மடிமடிக், குடியென்னும், குடிமடிந்து, மடிமை, படியுடையார், நெடுநீர், குடியாண்மை, மடியிலா, இடிபுரிந்து.*

பரிதி:— *மடியிலா, குடியாண்மை, மடியை, குடியென்னும், குடிமடிந்து, மடிமடிக், மடிமை, இடிபுரிந்து, படியுடையார், நெடுநீர்.*

காளிங்:— *மடியிலா, குடிமடிந்து, இடிபுரிந்து, மடிமை, மடிமடிக், குடியாண்மை, மடியை, குடியென்னும், படியுடையார், நெடுநீர்.*

62. ஆள்வினையுடைமை.

தொகுப்புரை:

[எடுத்த காரியம் மிகப்பெரியது; நம்மால் இயலுமா என்று தளர்தலாகாது. முடிக்கும் ஆற்றலை முயற்சி கொடுக்கும். அறைகுறையான முயற்சியுடையவனை உலகம் ஒதுக்கிவிடும்; ஆதலால் முயற்சியில் சோம்பல்கூடாது. உபகாரம் என்னும் பெருமிதம் முயற்சியாகிய தகுதியில் தங்கியுள்ளது. முயற்சியில்லாதவன் உபகாரம் செய்தல் பேடி பிடித்த வாள்போலப் பயனற்றது. இன்பத்தையே விரும்பாமல் உழைப்பையே நாடுபவன், சுற்றத்தார் துன்பத்தைத் துடைக்கும் தூண்போல்வான். முயற்சி செல்வத்தை வளர்க்கும். சோம்பல் வறுமையை யுண்டாக்கும். மூதேவி சோம்பலில் தங்குவாள். திருமகள் முயற்சியில் உறைவாள். விதியில்லாமை பழியன்று. முயற்சியில்லாமையே பழியாம். விதியின் மாறுபாட்டால் முயற்சி முழுதும் பயன் தராதாயினும் உழைப்புக்கேற்ற கூலிதரும். இடைவிடாது உழைப்பவர்கள் விதியையும் வெல்வர்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சி உடையனாதல். அஃது ஆளும் வினை எனக் காரியத்தால் கூறப்பட்டது. மடிகெடுத்தாலும் வினை முயற்சியானன்றி ஆளப்படாமையின், இது மடியின்மையின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— ஆள்வினையுடைமையாவது முயற்சியுடைமை. செய்யுங் காரியம் உயர நினைத்துச் சோம்புதல் இல்லாதிருந்தாலும் அது முடியுமாறு முயலவேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— ஆள்வினையுடைமையாவது காரியத்தில் முயற்சி யுடைமை எ - று.

611. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். (க)

உரைப்பகுதி :

பரிமே:— அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும் - தம் சிறுமை நோக்கி நாம் இவ்வினைமுடித்தல் அருமையுடைத்தென்று கருதித் தளராதொழிக; பெருமை முயற்சி தரும் - அது முடித்தற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சியுண்டாக்கும்.

சிறுமைநோக்கி என்பது பெருமை தரும் என்றதனானும், வினை முடித்தல் என்பது அதிகாரத்தானும் வருவிக்கப்பட்டன. விடாது முயலத் தாம் பெரியராவர்; ஆகவே, அரியனவும் எளிதின் முடியும் என்பதாம்.

மணக்:— ஒரு வினையைச்செய்தல் அருமையுடைத்து என்று முயலாமையைத் தவிர்தல் வேண்டும்; முயற்சி தனக்குப் பெருமையைத் தருமாதலால் எ - று.

இது வினைசெய்து முடித்தல் அரிதென்று தவிர்தலாகாதென்றது.

பரிதி:— இந்தக் காரியத்தை எடுத்து முடிக்க அருமையுண்டு என்று விசாரிக்கவேண்டாம்; உத்தியோக பலத்தினாலே காரியம் முடியும் எ - று.

காளிங்:— அரசரானோர் தமக்குச் சிறந்த கருமம் செய்யும் இடத்துப் பெரிதும் செய்தற்கு அருமை உடைத்து என்று கண் சோம்பி இராமையை விரும்பவேண்டும்; அதனால் அம்முயற்சியானது மிகவும் பெரிய மேம்பாட்டினைத் தரும் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— அசாவாமை - தளராதொழிக; மையீறு வியங்கோளானது. 'அவற்றுள், முன்னிலைத்தன்மை ஆயீரிடத்தொடு' என்னுஞ் (தொல். சொல். 228) சூத்திரத்தில் 'அஞ்சாமை அஞ்சினேன்' என நச்சினார்க்கினியரும் உரைத்தார் என்க.

ஒப்புமைப்பகுதி:

"முயற்சியின் முடியாக் கருமம் இல்லென." —பெருங். 5 : 4 : 14.

"பெருமை உடையதன் அருமை பழியார்." —முதுமொழிக். 3 : 3.

"இசையா தெனினும் இயற்றிஓ ராற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை - இசையுங்கால்
கண்டல் திரையலைக்கும் கானலம் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று." —நாலடி. 194

"எங்கணொன் றில்லை எமரில்லை என்றொருவர்
தங்கண் அழிவுதாம் செய்யற்க - எங்கானும்
நன்கு திரண்டு பெரியவாம் ஆற்றவும்
முன்கை நெடியார்க்குத் தோள்." —பழ - நா.

முதுமொழிவெண்பாக்கள்:

"காட்டத்தில் கூலிகொண்டோர் காளை தமிழறிவாள்
வாட்டமொழித் தான்திரும லைக்கொழுந்தே - நாட்டும்." —திருமலைக்.

612. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— வினைக்குறை தீர்ந்தாரின் உலகு தீர்ந்தன்று - வினையாகிய குறையைச் செய்யாதுவிட்டாரை உலகம் விட்டது; வினைக்கண் வினைகெடல் ஓம்பல் - ஆதலால், செய்யப்படும் வினைக்கண் தவிர்ந்திருத்தலை ஒழிக.

குறை - இன்றியமையாப்பொருள். அது *"பயக்குறை இல்லை தாம் வாழுநாளே" என்பதனானும் அறிக. இதற்கு வினைசெய்யவேண்டும் குறையை நீங்கினாரின் நீங்கிற்று என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— வினைசெய்யுங் காலத்து வினைகெடுதலைத் தவிர்க; வினைக்குறையை முடித்தாரினின்றும் உலகம் விடப்பட்டதன்று எ - று.

இது தொடங்கின வினையைக் குறைபட விடலாகாது என்றது.

பரிதி:— ஒரு காரியத்தை எடுத்தால் அந்தக் காரியம் குறையாமல் முடிப்பான்; அப்படிக்கு ஏதொரு காரியமும் முடிப்பவனை உலகம் கைவிடாது எ - று.

காளிங்:— அரசரானோர் தமக்குத் தகுவதாகிய கருமம்செய்ய முயலும் இடத்து அதற்குப் பழுதுவாராமல் பாதுகாத்து.................... வினை குறைபாடு நீங்கிய பெரியோர்மாட்டே தெளிவுற நிலைபெற்றது இவ்வுலகம் எ - று.

*புறம் 188.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தீர்ந்தன்று - தீர்ந்தது என அஃறிணையொருமைக்கண் வந்த றுவ்வீற்று வினைமுற்றுச் சொல். 'களம் வேட்டன்று' 'நகையமர்ந் தன்று' (திருமுரு) என்பனவும் அது.

குறிப்பு:

வினைக்கேடு - மனக்கெடு என்பது உலகியல் வழக்கு. குறைவினையுடையார் உலகத்து மதிக்கப்படார். ஆதலால் மேற்கொண்டகாரியத்தை முடியாது விடுதலாகாது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

613. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்று - முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின்கண்ணே நிலை பெற்றது, வேளாண்மை என்னும் செருக்கு - எல்லார்க்கும் உபகாரம் செய்தல் என்னும் மேம்பாடு.

பொருள் கைகூடுதலான் உபகரித்தற்கு உரியார் முயற்சியுடையார் என்பார் அவ்வக்குணங்கள்மேல் வைத்தும், அது பிறர்மாட்டு இல்லை என்பார் தங்கிற்றே என்றும் கூறினார். இவை மூன்று பாட்டானும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— முயற்சியாகிய நன்மையின்கண்ணே கிடந்தது; பிறர்க்கு உபகரித்தலாகிய பெருமிதம் எ - று.

இஃது அறஞ் செய்தலும் இதனனே யாகும் என்றது.

பரிதி:— தாளாண்மை என்னும் முயற்சியாலே வேளாண்மை என்னும் பிரியம் ஆகையால் உத்தியோகங்கண்ணுக இருப்பான் எ - று.

காளிங்:— அரசர்க்கு ஆள்வினையுடைமை என்னும் அத்தகுதிப் பாட்டின்கண் தங்கியது: யாது எனின், யாவர்க்கும் உகப்ப வழங்கும் உபகாரம் என்று எடுத்துரைக்கப்பட்ட பெரிய செருக்கு எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— *தாளாண்மை - உபகாரியாந்தன்மை. வேளாண்மை - வேலையாளுதல் தன்மை. ஆள் என்பது முதனிலைத் தொழிற்பெயர்.*

குறிப்பு:

வேளாண்மை என்பது உபகாரத்திற்கும், அதனடியாகிய உழவிற்கும் பெயர் என்பதாம்.

—*தொகுப்பாசிரியர்.*

614. *தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை*
வாளாண்மை போலக் கெடும். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— *தாளாண்மை இல்லாதான் வேளாண்மை - முயற்சி இல்லாதவன் உபகாரியாந்தன்மை, பேடி கை வாள் ஆண்மை போலக் கெடும் - படைகண்டால் அஞ்சும் பேடி அதனிடைத் தன்கையில் வாளை ஆளுதற்றன்மைபோல இல்லையாம்.*

ஆள் என்பது முதனிலைத்தொழிற்பெயர். பேடி வாளைப்பணி கோடல்கருத்துடையளாயினும் அது தன் அச்சத்தான் முடியாதவாறு போல முயற்சியில்லாதான் பலர்க்கும் உபகரித்தல் கருத்துடையனாயினும் அது தன் வறுமையான் முடியாது என்பதாம். வாளாண்மை என்பதற்கு வாளால் செய்யும் ஆண்மை என்று உரைப்பாரும் உளர். இதனான் அஃது இல்லாதானது குற்றம் கூறப்பட்டது.

மணக்:— *முயற்சியில்லாதான் பிறர்க்கு உபகரித்தல், படை கண்டால் அஞ்சுமவன் கைவாள் பிடித்தாற்போலக் கெடும் எ - று.*

இஃது அறம்செய்யமாட்டான் என்றது.

பரிதி:— *முயற்சியில்லான் உபகாரியாந் தன்மை எப்படி என்றால் பேடி கையில் வாள் ஒக்கும் எ - று,*

காளிங்:— *தனது ஆண்மைக்கு உரிய முயற்சியினை இல்லாத மன்னவனது கைவண்மை எத்தன்மையதோ எனின், உறையகத்து இருந்த வாளாண்மை போலக் கெடும் எ - று.*

இனி மற்று இவ்வாறும் அன்றி, ஆண்மகன் அல்லாத பேடி கைப்பற்றின வாள் ஆட்சிபோல ஆள்வினை முயற்சியும் மாற்றார் மேல் வழக்கும் அன்றிக் கெட்டு நின்றாற்போலப் பொருவில்முயற்சியும் பொலிவுறு வழக்கமும் இன்றிக் கெடும் எ - று.

வேளாண்மை என்பது யாவர்க்கும் வழங்கும் கைவண்மை என்றது. பேடிகை என்பது வாளினது உறை என்றது. வாளாண்மை என்பது வாள் ஆட்சி என்றது.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— பெண்ணவாய் ஆணிழந்ததனைப் பேடி எனக் கூறுதலே வழக்காறு என்பதற்கு மேற்கோள். (இலக். சூறு. பக். 75.)

குறிப்பு:

பேடிகைவாள் பேடிக்குப் பயன்படாமை மாத்திரமேயன்றிப் பிறரால் தம் உயிர் நீக்குங் கருவியாகவும் பயன்படுதல்போல, வருவாயில்லாத வேளாண்மையும் இருந்த பொருளையும் விரைவில் அழிக்க வழியாகும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

615. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— இன்பம் விழையான் வினை விழைவான் - தனக்கு இன்பத்தை விரும்பாதாகி வினைமுடித்தலையே விரும்புவான், தன்கேளிர் துன்பம் துடைத்து ஊன்றும் தூண் - தன்கேளிராகிய பாரத்தின் துன்பத்தினை நீக்கி அதனைத் தாங்கும் தூணும்.

இஃது ஏகதேசவுருவகம். ஊன்றும் என்றது அப்பொருட்டாதல் *"மதலையாய் மற்றதன் வீழுன்றி யாங்கு" என்பதனானும் அறிக. சுற்றத்தார் நட்டாரது வறுமையும் தீர்த்து அவர்க்கு ஏமஞ்செய்யுமாற்றலை

*நாலடி. 197.

உடையனும் எனவே, தன்னைக்கூறவேண்டாவாயிற்று. காரியத்தை விழை யாது காரணத்தை விழைவான் எல்லாப்பயனும் எய்தும் என்றதனால், காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாதும் எய்தான் என்பது பெற்றும். இதனான் அஃது உடையானது நன்மை கூறப்பட்டது.

மணக்:— தன்னுடம்பிற்கு இன்பத்தை விரும்பாது வினை செய்தலை விரும்புமவன், தன்கேளிர்க்கு உற்றதுன்பத்தை நீக்கி அவரைத் தளராமல் தாங்குவதொரு தூணும் எ - று.

ஆதலால், வருத்தம் பாராது முயலவேண்டும் என்றது.

பரிதி:— தான் இன்பம் விரும்பாமல் பிறர்க்கே இன்பம் தருவான், தன் உறவின் முறையாரது துன்பம் துடைக்குந்தூண் எ - று.

காளிங்:— என்றும் தனக்கு ஓர் இன்பநுகர்ச்சியை விரும்பா னாகிக் கருமத்தின்கண் ஆள்வினையுடைமையையே விரும்புவான் யாவன்? மற்று அவனே கேளிராகிய நட்டோர்க்கும் சுற்றத்தார்க்கும் சான்றோர் முதலிய அனைவோர்க்கும் தாளாண்மை நிலைபெறுத்தித் துன்பத்தைத் துடைத்து ஊன்றும் தூண் எ - று.

மேற்கோள்பகுதி:

யா - வி:— இக்குறள் வெண்பா முரண்தொடையான்வந்தமைக்கு மேற்கோள். (சூ.59.) ஓரசைப் பொதுச்சீர் வந்ததற்கு மேற்கோள். (சூ.15.) எதுகை முரணுக்கு மேற்கோள். (சூ. 53.) அலகிட்டு ஓசையூட்டுதற்கு மேற்கோள். (சூ. 57.)

ஒப்புமைப்பகுதி:

"இன்பம் வெய்யோர்க்குத் துன்பம் எளிது." —முதுமொழிக். 8 : 6.

"வருந்தினால் வாராததில்லை." —பழ.

"முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்." ,,

முதுமொழிவெண்பாக்கள்:

"எய்தா திராமற் கிலக்குவன்போல் என்றுரைக்கச்
செய்தான் அடிமை சிவசிவா - நொய்தேனும்." —சிவசிவ. 62.

குறிப்பு:

காரியத்தை விழையாது காரணத்தை விழைவான் எல்லாப்பயனும் எய்துவன் என்றது, இன்பத்தை விழையாமல் இன்பவாயிலாகிய முயற்சியை இடைவிடாது மேற்கொள்பவன் எல்லாப்பயனும் எய்துவன் என்பது கருத்து. ஆகவே முயற்சியுடையவன் இன்பமும் எய்துவன் என்பதாம். காளிங்கர், என்றும் தனக்கு ஓர் இன்பநுகர்ச்சியை விரும்பானாகி முயற்சியை விரும்புவன் என்றது, உழுகின்ற காளை உழுதுகொண்டேயிருக்கவேண்டும் உழைக்கின்ற மனிதன் உழைத்துக்கொண்டே இருக்கவேண்டுமேயன்றி இருந்து உண்ண எண்ணலாகாது; எண்ணினால் கேளிர் துன்பம் துடைக்க முடியாது என்பது கருத்துப்போலும்.

—தொகுப்பாசிரியர்.

616. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (கா)

உரைப்பகுதி :

பரிமே:— முயற்சி திருவினை ஆக்கும் - அரசர்மாட்டு உளதாய முயற்சி அவரது செல்வத்தினை வளர்க்கும் - முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும் - அஃது இல்லாமை வறுமையை அடைவித்துவிடும்.

செல்வம்-அறுவகை அங்கங்கள். வறுமை-அவற்றான் வறியராதல். அதனை அடைவிக்கவே, பகைவரான் அழிவர் என்பது கருத்து.

மணக்:— முயற்சி செல்வத்தை உண்டாக்கும்; முயலாமை வறுமையை உண்டாக்கும் எ - று.

இது செல்வமும் நல்குரவும் இவற்றாலேவரும் என்றது.

பரிதி:— உத்தியோகம் செல்வம் தரும்; உத்தியோகம் இன்மை வறுமை தரும் எ - று.

காளிங்:— இங்ஙனம் முயல்கின்ற முயற்சியானது செல்வத்தை உளதாக்கும்: மற்று அம்முயற்சி இல்லாமையானது அவர்க்கு வறுமையைக் கொடுக்கும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா வூழ்த்திறத்த என்னூர் - மயலாயும்
ஊற்றம் இறுவிளக்கம் ஊழுண்மை காண்டுமென்று
ஏற்றூர் எறிகால் முகத்து." —நீதிநெறி. 50.

"முயற்சி திருவினை ஆக்கும்." —பழ.

"பாடுபட்டா லல்லது பலனில்லை." ,,

முதுமொழிவெண்பாக்கள்:

"கூற்றுவர்மூ வேந்தர் நிலமும்கைக் கொண்டாரே
தோற்றுந்தா ளாண்மையினுல் சோமேசா - சாற்று."—சோமேசர். 62.

617. மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னுள். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— மா முகடி மடி உளாள் - கரியசேட்டை ஒருவன் மடியின்கண்ணே உறையும்; தாமரையினுள் மடி இலான் தாள் உளாள் என்ப - திருமகள் மடியிலாதானது முயற்சிக்கண்ணே உறையும் என்று சொல்லுவர் அறிந்தோர்.

பாவத்தின் கருமை அதன்பயனுய முகடிமேல் ஏற்றப்பட்டது. மடியும் முயற்சியும் உடையார்மாட்டு நிலையை அவைதம்மேல் வைத்துக் கூறினுர். இவை இரண்டுபாட்டானும் அவ்விருமைக்கும் ஏது கூறப்பட்டது.

மணக்:— வினை செய்யுங்கால் அதனைச் செய்யாது சோம்பி யிருப்பானது சோம்பலின்கண்ணே மூதேவி உறைவள்; அதனைச் சோம்ப லின்றி முயலுபவன் முயற்சியின்கண்ணே திருமகள் உறைவள் என்று சொல்லுவர் எ - று.

இது வினையை மடியின்றிச் செய்யவேண்டும் என்பது கூறிற்று.

பரிதி:— உத்தியோகம் லட்சுமியைத் தரும்; மடிந்த புத்தி சேட்டையைத் தரும் எ - று.

காளிங்:— தனக்கு ஏற்ற கருமத்தின்கண் முயலாது மடிப்பானுடைய மடியானது. மற்று இது அளித்தாள் யார் எனின் வறுமை நெறியில்பெரியளாகிய மூதேவி என்று சொல்லுவர் சான்றோர்: மற்று மடியானது தன்னிடத்து இல்லாதோனது தாளாண்மை இடத்தாள் திருமகள் எ - று.

ஒப்புமைப்பகுதி;

"செய்வினை மடிந்தோர்ச் சேர்ந்துறை விலளே
மையறு தாமரை மலர்மகள்." —பெருங். 2 : 17 : 39 - 40.

"மடியிலா அரசினுன் மார்புளா ளோவளர்
முடியுளா ளோதெரிந் துணர்கிலா முளரியாள்."—கம்ப. எதிர்கோட். 8.

"ஆக்கமிங் கொருவரால் அணுக வேண்டுமேல்
ஊக்கமுண் டாவரேல் உறுவர் அன்னது
நீக்கமில் கொள்கையின் நிற்ப ரேஎனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்." —கந்த. மாயையுப.13.

குறிப்பு:

மடி என்பது மடியென்னும் உறுப்பிற்கும் சோம்பற்கும் பெயராதலும், தாள் என்பது காலுக்கும் முயற்சிக்கும் பெயராதலும் ஆகிய இயைபு இனிமைபயப்பது ஒன்று. "அசந்து நடப்பவன் அடிமடியில் அக்காள்; கடுகிநடப்பவன் காலிலே சீதேவி" என்ற பழமொழியும் காண்க.

—தொகுப்பாசிரியர்.

618. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்(து)
ஆள்வினை இன்மை பழி. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— பொறி இன்மை யார்க்கும் பழியன்று - பயனைத் தருவதாய விதியில்லாமை ஒருவற்கும் பழியாகாது; அறிவு அறிந்து ஆள்வினை இன்மை பழி - அறியவேண்டுமவற்றை அறிந்து வினைசெய்யாமையே பழியாவது.

அறியவேண்டுவன - வலி முதலாயின. தெய்வம் இயையாவழி ஆள்வினையுடைமையால் பயனில்லை என்பாரை நோக்கி, உலகம் பழவினை பற்றிப் பழியாது ஈண்டைக் குற்றமுடைமைபற்றியே பழிப்பது என்றார்; அதனால் விடாது முயல்க என்பது குறிப்பெச்சம்.

மணக்:— யார்க்கும் புண்ணியமின்மை குற்றமாகாது; அறியத் தகுவன அறிந்து முயற்சியில்லாமையே குற்றமாவது எ - று.

அறிவு - காரிய அறிவு. புண்ணியமில்லாதார் முயன்றால் வருவது உண்டோ என்றார்க்கு, இது கூறப்பட்டது.

பரிதி:— மெய் வாய் கண் மூக்குச் செவி குறைந்தது பங்கமல்ல; அறிவின்மை பங்கம் எ - று.

காளிங்:— தாம் ஒரு கருமத்தை முயலின், அது விதிவழி இடத்தால் தமக்கு ஆக்கம் இல்லாமை மன்னவர்க்கும் மற்று யாவர்க்கும் பழியாவது அன்று: மற்று யாதோ பழியாவது எனின், தமக்குச் செய்யத் தகுவதாகத் தாம் அறியும் கருமம் யாது; அதனையே குறிக்கொண்டு அறிந்து மற்று அதன்கண் முயல்வது ஓர் முயற்சி இல்லாமையே எ - று.

பொறி இன்மை என்பது விதி இல்லாமை என்றது.

ஒப்புமைப்பகுதி:

"வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலால் - ஆங்கு
முடியும் திறத்தால் முயல்கதாம் கூரம்(பு)
அடிஇழுப்பின் இல்லை அரண்." —பழ. நா.

"முயற்சிக்குப் பயனின்றுதல் ஊழ்வலியாலும்; அதுபற்றி
முயற்சி குற்றமுடையது ஆகாது." —சுக்கிர. அத். 1. சு. 386.

குறிப்பு:

அறியுமளவும் அறிந்து முயன்றால் அது ஆகாவிடினும் பழி இவனைச்சாராது; விதியின்மையால் இவ்வாறாயினன் என்று விதியைச்சாரும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

619. தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— தெய்வத்தான் ஆகாது எனினும் - முயன்றவினை பால் வகையால் கருதிய பயனைத் தராதாயினும், முயற்சி தன்மெய் வருத்தக் கூலிதரும் - முயற்சி தனக்கு இடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும்; பாழாகாது.

தெய்வத்தானுயவழித் தன்னளவின் மிக்க பயனைத்தரும் என்பது உம்மையால் பெற்றும். இருவழியும் பாழாகல் இன்மையின் தெய்வநோக்கி யிராது முயல்க என்பது கருத்து.

மணக்:— புண்ணியம் இன்மையால் ஆக்கம் இல்லையாயினும், ஒரு வினையின்கண்ணே முயல்வனுயின், முயற்சி தன்னுடம்பினுல் வருந்திய வருத்தத்தின் அளவு பயன் கொடுக்கும் எ - று.

இது புண்ணியமில்லையாயினும், பயன் கொடுக்கும் என்றது.

பரிதி:— தெய்வ சகாயத்தினுலேயாகிற காரியம் தன் முயற்சி யாலே ஒன்று பாதி பலிக்கும் எ - று.

காளிங்:— இவ்வுலகத்து ஒருவர்க்கு விதியினுல் சிலகாலம் ஆக்கம் இலதாயினும் இருந்ததேயாயினும் பின்பு குறிக்கொண்டு முயல்வான் ஆயின், அம்முயற்சிதானும் விதியினுல் விளைவது ஆகலின், மற்று இதுவும் தம் மெய்வருத்தத்தால் உள்ள பலத்தினை இறுதிக்கண் கொடுக்கும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"பட்டால் பாழ்போமா." —பழ.

"பட்டபாட்டிற்குப் பலன் கைமேலே." —ஷை

முதுமொழிவெண்பாக்கள்:

"வற்கடம்வந் தூண்போய்மெய் வாடிப் புகழ்த்துணைக்கை
நற்கலசம் வீழவா ளுர்கொடுத்தார் - பொற்காசு." —திருத். 72.

குறிப்பு:

சிறுமுயற்சியான் பெரும்பயன் எய்துதல் விதியுபகாரப்படுதலின். பெரு முயற்சியான் முயற்சியினளவிற்குப் பயன் அடைதல் விதி எதிராக இருத்தலின் என்க. 'ஆகாது' என்றது முடிவுபெறுது என்னும் கருத்தினதன்று. முயல்பவன் எண்ணிய அளவு பயனைத்தராது என்பதே கருத்து. வருத்தக்கூலி - உழைப்பிற்கு ஏற்ற கூலி.

—தொகுப்பாசிரியர்.

620. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். (௧௦)

உரைப்பகுதி:

பரிமே:— ஊழையும் உப்பக்கம் காண்பர் - பயனை விலக்குவதாய ஊழினையும் புறங்காண்பார், உலைவு இன்றித் தாழாது உஞற்றுபவர் - அவ்விலக்கிற்கு இளையாது வினையைத் தாழ்வற முயல்பவர்.

தாழ்வறுதல் சூழ்ச்சியினும், வலிமுதலிய அறிதலினும், செயலினும் குற்றம் அறுதல். ஊழ் ஒருகாலாக இருகாலாக அல்லது விலக்கலாகாமையின் பலகால் முயல்வார் பயன் எய்துவர் என்பார், உப்பக்கங்காண்பர் என்றார். தெய்வத்தான் இடுக்கண்வரினும் முயற்சி விடற்பாலதன்று என்பது, இவை மூன்றுபாட்டானும் கூறப்பட்டது.

மணக்:— ஒரு வினையை மனத்தில் தளர்வு இன்றி நீட்டியாமல் முயலுமவர், பயன்படாமல் விலக்குகின்ற தீய வினையையும் முதுகு புறங் காண்பர் எ - று.

இஃது ஊழ்தன்னையும் வெல்வர் என்றது.

பரிதி:— ஊழினையும் புறங்காண்பான் மனத்தின்கண் தாழ்வின்றி மடியாது முயல்வான் எ - று.

காளிங்:— தமது விதிதன்னையும் புறத்து இடுவர்போலும்: யார் எனின் தமக்குத் தருவதாகிய கருமம் செய்யும் இடத்துக் காலத்தாழ்வு வாராமல் பருவத்தோடு வினை முயலும் வேந்தர் எ - று.

ஊழையும் உப்பக்கம் காண்பர் என்பது விதி தன்னையும் புறத்திடுவர் என்றது.

இனி மற்று இவ்வாறு அரசரானோர்க்கு ஆள்வினையுடைமை அமைந்து ஒழுகவும், நெடும் பொருள் இழத்தல் முதலிய இடுக்கண் வந்துழிச் சிறிதும் நெஞ்சு அழிவுறாமை தமக்கு உளதாக வேண்டுதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

மேற்கோள்பகுதி:

சொக்கப்ப:— முயன்றால் ஐந்தலை நாகநன்மணியும் பெறலாம் இத் தரணியிலே; தவஞ்செய்து முயன்றோர்க்கும் எய்துதற்கு அரிதாகிய இவளை

நம்முயற்சியால் பெற்றமையான் நாகமணியும் பெறலாம் என்று தன் முயற்சியின் பெருமை கூறினன் என்க. என்னை? 'ஊழையும்.........உஞற்று பவர்' இக்குறளில் ஊழான் ஒருவற்குப் பேறில்லாவிடினும் முயற்சி ஊழைப் புறங்கண்டு நினைத்தது முடிக்கும் எனக் கூறினராகலின். (தஞ்சை 18.)

ஒப்புமைப்பகுதி:

" உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே — உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி." —நீதிநெறி. 51.

" முழுதுடன் முன்னே வகுத்தவன் என்று
தொழுதிரந்தக் கண்ணே ஒழியுமோ அல்லல்
இழுகினு னாப்ப தில்லையே முன்னம்
எழுதினன் ஓலை பழுது." —பழ. நா.

" விதியையும் மதியால் வெல்லலாம் " —பழ.

" விடாது தனுவில் செயும்முயற்சி மென்மேற் பொருளை மிகவளர்க்கும்
கெடாது சுற்ற நட்பினர்தம் கிளையும் தாங்கும் யாவர்க்கும்
தடாத உபகா ரம்புரியும் தடந்தா மரையா ளையும் சேர்க்கும்
படாத ஊழ்வந் திடுகாலும் பயனே விளைக்கும் பழியின்றாம்."
—விநா. அரசி. 100.

முதுமொழிவெண்பாக்கள்:

" அய்யிருநா ளுண்டுவிக்ர மார்கனுக்குப் பட்டியுந்தான்
தெய்வமுடன் ஈந்தான் தினகரா — மெய்யாக." —தினகர. 65.

" பாலன் ஒருவன் பணிந்துகட வூரானைக்
காலற் கடந்திருக்கக் கண்டோமோ - ஞாலத்தின்." —முதுமொழி.98.

" பரகாயம் சேர்ந்தார் பசுக்களால் ஆட்சி
மருவாமை மாதவமே வாழ்ந்தார் - திருமூலர். " —திருத். 42.

" ஆள்வினையான் மிக்கதவம் ஆற்றிச் சுவேதமன்னன்
மூள்வினையற் றுய்ந்தான் முருகேசா — கோள்வினையாம்."
—முருகேசர். 62.

"செய்து சிவபூசை சிரஞ்சீவி யாமபயம்
எய்தினன்மார்க் கண்டன் இரங்கேசா — நொய்தாக." —இரங் 62.

குறிப்பு:

முன்னர், 'ஊழிற் பெருவலி யாவுள' என்ற ஆசிரியர் ஈண்டு 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்' என்பது எவ்வாறு பொருந்துமெனின், ஆண்டு, ஊழ் தன்பயனைக் கொடுத்தலிற் பிற்படாது என்றது. ஈண்டு, முயற்சி விதியையும் வெல்லும் என்றது. எத்துணை வெல்லும் எனின் ஊழ் மாறுகொள்ளாவழி, பெரும்பயன் தருமுயற்சி ஊழ்வலியால் முயன்றவரை பயன் தருதல். இதனைத் 'தெய்வத்தானாகாது எனினும்' என்ற குறள் தெளிவுபடுத்துகிறது. 'தின்ற மண்ணுக்குச் சோகை' 'உழைத்த அளவுக்கு ஊதியம்' என்கிறது பழமொழி. "ஊழாவது வலி முற்பிறப்பிற் செய்த முயற்சிவலியாகியது. அம்முயற்சி வலியினும் இப்பிறப்பிலே செய்கிற முயற்சி வலி மிக்கிருப்பின் ஊழ்வலியைத் தாண்டலாம்" என்பாரும் உளர்.

—தொகுப்பாசிரியர்.

குறள் வைப்புமுறை

பரிமே:— அருமை, வினைக்கண், தாளாண்மையென்னும், தாளாண்மையில்லாதான், இன்பம், முயற்சி, மடியுளாள், பொறியின்மை, தெய்வத்தான், ஊழையும்.

மணக்:— இன்பம், அருமை, வினைக்கண், மடியுளாள், தாளாண்மையென்னும், தாளாண்மையில்லாதான், முயற்சி, பொறியின்மை, தெய்வத்தான், ஊழையும்.

பரிதி:— அருமை, தாளாண்மையென்னும், இன்பம், முயற்சி, தாளாண்மையில்லாதான், வினைக்கண், பொறியின்மை, மடியுளாள், தெய்வத்தான், ஊழையும்.

காளிங்:— அருமை, தாளாண்மையென்னும், இன்பம், வினைக்கண், தாளாண்மையில்லாதான், மடியுளாள், தெய்வத்தான், முயற்சி, பொறியின்மை, ஊழையும்.

63. இடுக்கணழியாமை.

தொகுப்புரை:

[துன்பம் வருமிடத்து மகிழ்க. மகிழ்ச்சியைப்போலத் துன்பத்தை வெல்வது ஒன்று இல்லை. வெள்ளம்போன்ற துன்பமாயினும் அறிவுடையவன் உள்ளப் பண்பாட்டால் மாறிவிடும். துன்பத்தால் வருந்தாதவர்கள் துன்பத்திற்கே துன்பம் விளைப்பவர்கள் ஆவார்கள். ஓட்டியவழியெல்லாம் செல்லும் எருதுபோன்றவன் அடைந்த துன்பமே துன்பப்படும். மனம் தளராதவனுக்கு ஒன்றன்மேல் ஒன்றாகத் துன்பம் வரினும் வந்த துன்பம்தான் துன்பப்படும். பொருள்பெற்றகாலத்து உலோபகுணமில்லாதவர்கள் பொருள் அற்றகாலத்தும் வருந்தார். இந்த உடம்பே துன்பத்திற்கு இலக்கானது என்று எண்ணி, மேலோர்கள் துன்பத்தைத் துன்பமாகக் கருதமாட்டார்கள். இன்பத்தை விரும்பாமல் துன்பம் அடைதலே எமக்கு இயல்பு என்று இருப்பவர்கள் துன்பப்படமாட்டார்கள். இன்பத்தை இன்பமாக எண்ணி அதனை விரும்பாதவன் துன்பம்வந்தகாலத்தில் துன்பப்படுதல் இலன். ஒருவன் துன்பத்தை இன்பமாகக் கொள்வானாயின் அவனைப் பகைவரும் நன்குமதிப்பர்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:—அஃதாவது வினையின்கண் முயல்வான் தெய்வத்தானாக, பொருளின்மையானாக, மெய்வருத்தத்தானாகத் தனக்கு இடுக்கண் வந்துழி, அதற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— இடுக்கணழியாமையாவது யாதானும் ஒரு துன்பம் வந்துற்றகாலத்து அதற்கு அழியாமை. வினைசெய்யுங் காலத்தினை முடிவு செய்வதன்முன்னர்ச் சில இடையூறு வந்தால் அவற்றைப் பொறுத்துச் செய்கின்ற வினையை முற்ற முயல வேண்டும் என்று அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— இடுக்கண் அழியாமையாவது ஒரு விதனம் வந்தாலும் கலங்காமல் இருக்கும் தன்மை எ - று.

621. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். (க)

உரைப்பகுதி :

பரிமே:— இடுக்கண் வருங்கால் நகுக - ஒருவன் வினையால் தனக்கு இடுக்கண் வருமிடத்து அதற்கு அழியாது உள்மகிழ்க; அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல் - அவ்விடுக்கணை மேன்மேல் அடர வல்லது அம்மகிழ்ச்சிபோல்வது பிறிதில்லையாகலான்.

வினை இனிது முடிந்துழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கு இடையே இடுக்கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியான் அதனைத் தள்ளி அக்குறைமுடிக்கும் ஆற்றல் உடையனுமாகலின், அதனையடுத்தூர்வது அஃதொப்பது இல் என்றார்.

மணக்:— தனக்குத் துன்பம் வந்த காலத்தும் நகுக; அத்துன்பத்தை மேன்மேலும் அடர்க்க வல்லது அந்நகுதல் போல்வது பிறிதில்லை எ - று.

இஃது இடுக்கணுக்கு அழியாமை வேண்டும் என்றது.

பரிதி:— இடுக்கண் வந்த காலத்துக்கு நகுக; அது துன்பத்தை அறுக்கிற அரம் எ - று.

காளிங்:— உலகத்து அரசரானோர் தமக்கு யாதானும் ஒரு வழியால் இடுக்கண் வந்த இடத்துக் கலங்காது மகிழ்ந்திருக்க; என்னை எனின், மற்று இவ்விடுக்கணினை அடர்த்து மேற்பட்டு நின்று நக வல்லனயின்; இதனை ஒப்பது ஓர் இன்பம் பிறிது யாதும் இல்லை எ - று.

நகுக என்பது மகிழ்ந்திருக்க என்றது. அதனை அடுத்தூர்வது என்பது அவ்விடுக்கணினை நெருக்கி மீதுபோய் நிற்கவல்லது என்றது.

ஒப்புமைப்பகுதி:

"இடுக்கண்வந் துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றானும் இன்றி நகுகதான் நக்க போழ்தவ்
இடுக்கணை அரியும் எஃகாம் இருந்தழு தியாவர் உய்ந்தார்
வடுப்படுத் தென்னை ஆண்மை வருபவந் துறுங்கள் அன்றே."
—சீவக. 509.

"எடுத்த கருமம் முடிவதன்முன் எய்தும் தெய்வத் தாலுக
தொடுத்த முயற்சி யாலுடலில் தோன்றும் வருத்தத் தாலுக
மடுத்த பொருள்இன் மையினுக மைந்தா அடுக்கி வந்திடினும்
இடுக்கண் தனக்குள் அழியற்க இன்பம் அதுவே எனத்தெளிக,"
—விநா. அரசி. 101.

"சிரிக்கத் தெரியாதவன் பிழைக்கத் தெரியாதவன்." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஒரும் உலகிடுக்கண் உற்ற பொழுதீசன்
தீரநகை செய்தான் தினகரா - ஆரும்." —தினகர. 66.

"நக்கர் சிறிது நகைத்தலுமே முப்புரமும்
அக்கணமே வெந்துவிழும் ஆதலால் - மிக்க." —முதுமொழி. 99.

குறிப்பு:

இடுக்கண் மனத்தை வருத்துமாயினும், அதனை மகிழ்ச்சியால் மறைத்தல், இவன் இடுக்கணுற்றான் எனப் பகைவர் அறிந்துகொள்ளாதவாறு உபகாரப்படுதலே யன்றி, மேலும் துன்பத்தைவெல்லும் உபாயமுமாம் என்றது.
—தொகுப்பாசிரியர்.

622. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— வெள்ளத்து அனைய இடும்பை - வெள்ளம் போலக் கரையிலவாய இடும்பைகளெல்லாம், அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும் - அறிவுடையவன் தன் உள்ளத்தான் ஒன்றனை நினைக்க, அத்துணை யானே கெடும்.

இடும்பையாவது உள்ளத்து ஓர்கோட்பாடேயன்றிப் பிறிதில்லை என்பதூஉம் அது மாறுபடக்கொள்ள நீங்கும் என்பதூஉம் அறிதல் வேண்டுதலின், அறிவுடையான் என்றும், அவ்வுபாயத்து எண்மை தோன்ற உள்ளத்தின் உள்ள என்றும் கூறினர். இவை இரண்டு பாட்டானும் ஊழினு னாய இடுக்கணால் அழியாமைக்கு உபாயம் கூறப்பட்டது.

மணக்:— வெள்ளம்போன்ற துன்பம், அறிவுடையவன் நெஞ்சி னாலே வினைப்பயன் என்று நினைக்கக் கெடும் எ - று.

இது பலவாய் ஒருங்கு வரினும், அறிவுடையான் உற்ற இடுக்கண் கெடும் என்றது.

பரிதி:— *வெள்ளம் போலவந்த துன்பம் அறிவுடையவன் உத்தி யோக அக்கினியினாலே கெடும் எ - று.

காளிங்:— அளவுபட்டது அன்றிக் கடல்போன்ற இடுக்கண் ஆயினும், அறிவுடையாளராகிய அரசர் தம் அறிவினால் உள்ளத்து உணர்ந்து யாம் முன்செய்த வினைப்பயனே எய்திய இன்பமும் இடரும் ஆகலான், இவை இனிப் பகுத்துக் கோடல் பிறர்க்கு அரிது என்று, இங்ஙனம் உண்மை உணரவே எய்திய இடுக்கண் தானே கெட்டுவிடும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"என்றும் சனனத் திடர்க்கடலி லேழுழ்கிப்
பொன்றுமன மேஉனக்கோர் புத்திகேள்." —சிவபோ. 12.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஆறுறு காட்டாரை யாறணியால் ஆறுபெரு
காறுறு காட்டஅடைந் தாரூரர் - பேறுணர்." —திருத். 35

குறிப்பு:

எல்லையற்ற துன்பங்களையும் அறிவாளி மனத்தால் எண்ணக்கெடும் என்றது துன்பமெல்லாம் இன்பமாம் என்றதாம். அறிவுடையவன் தன்மனத்தால் அத்துன்பங் களையெல்லாம் வெல்லும் உபாயத்தைச் சிந்திக்க அழியும் என்றுமாம்.

—தொகுப்பாசிரியர்.

*'சமுத்திரம்போல' என்பது பழைய உரை.

623. இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்(கு)
இடும்பை படாஅ தவர். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— இடும்பைக்கு இடும்பை படாதவர் - வினை செய்யுங்கால் அதற்கு இடையே வந்த துன்பத்திற்கு வருந்தாதவர், இடும்பைக்கு இடும்பை படுப்பர் - அத்துன்பந்தனக்குத் தான் துன்பம் விளைப்பர்.

வருந்துதல் - இளைத்து விடநினைத்தல். மனத்திட்பம் உடையராய் விடாது முயலவே வினை முற்றுப்பெற்றுப் பயன்படும்; படவே, எல்லா இடும்பையும் இலவாமாகலின், இடும்பைக்கு இடும்பை படுப்பர் என்றார். வருகின்ற பாட்டு இரண்டினும் இதற்கு இவ்வாறே கொள்க. சொற் பொருட்பின்வருநிலை

மணக்:— துன்பத்திற்குத் துன்பத்தைச் செய்வார், அத் துன்பத் திற்குத் துன்பம் உறாதவர் எ - று.

இது பொறுக்கவேண்டும் என்றது; இவை மூன்றும் பொதுவாகக் கூறப்பட்டன.

பரிதி:— துன்பம் வந்தால் துன்பம் அதற்கு இவர்; துன்பம் வந்தாலும் துன்பப்படாதவர் எ - று.

காளிங்:— யாதானும் ஒருவாற்றான் வந்து எய்திய இடும்பைக்குத் தாம் பெரிதும் இடும்பையைச் செய்வார்: யார் எனின் அங்ஙனம் எய்திய இடும்பைக்கு இங்ஙனம் தெளிந்து தாம் சிறிதும் இடுக்கண் உறாத இகல் வேந்தர் எ - று.

624. மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து. (ச)

உரைப்பகுதி :

பரிமே:— மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னான் - விலங்கிய இடங்களெல்லாவற்றினும் சகடம் ஈர்க்கும் பகடுபோல வினையை எடுத்துக் கொண்டு உய்க்கவல்லானை, உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து - வந்துற்ற இடுக்கண் தானே இடர்ப்படுதலை உடைத்து.

மடுத்தவாயெல்லாம் என்பது பொதுப்பட நின்றமையின், சகடத்திற்கு அளற்றுநிலம் முதலியவாகவும், வினைக்கு இடையூறுகளாகவும் கொள்க. பகடு மருங்கு ஒற்றியும் மூக்கு ஊன்றியும் தாள் தவழ்ந்தும் அரிதின் உய்க்குமாறுபோலத் தன் மெய்வருத்தம் நோக்காது முயன்று உய்ப்பான் என்பார், பகடன்னான் என்றார்.

மணக்:— இடுக்கண் வந்து உற்றவிடத்தெல்லாம் பகடுபோலத் தளர்வின்றிச்செலுத்த வல்லவனை உற்ற துன்பம் இடர்ப்படுதலையுடைத்து எ - று.

இது தளர்வில்லாதவன் உற்ற துன்பம் கெடும் என்றது.

பரிதி:— மேடு என்றும் பள்ளம் என்றும் பாராமல் நடக்கின்ற வண்டில் போலே திடமுடையவன்பக்கல் வந்த இடுக்கண் தானே விதனப்படும் எ - று.

காலிங்:— தான் சென்று முகம்மடுத்த இடத்து எங்கும் ஏறுனது எத்தன்மைத்து, மற்று இத்தன்மைப்பட்ட அஞ்சாத் தறுகண்மையை உடைய அரசனானவன் தன்னைவந்து உற்ற இடுக்கணானது தான் பெரிதும் இடர்ப்பாடு உடைத்தாம் இத்துணையாம் எ - று.

பகடன்னான் என்பதனைக் களிறு அன்னான் என்று உரைத்தலும் ஒன்று.

ஒப்புமைப்பகுதி:

" கழியுப்பு முகந்து கல்நாடு மடுக்கும்
ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்பகட் டன்ன எங்கோன்." —புறம். 60 : 7 - 9.

" அச்சொடு தாக்கிப் பாருற்று இயங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ." —ஷை 90 : 6 - 9.

" குண்டுதுறை இடுமணல் கோடுற அழுந்திய
பண்டிதுறை ஏற்றும் பகட்டினைப் போல." —பெருங். 1 : 53 : 53 - 4.

"நிரம்பாத நீர்யாற்று இடுமணலுள் ஆழ்ந்து
பெரும்பார ஆடவர்போல் பெய்பண்டம் தாங்கி
மருங்கொற்றி மூக்கூன்றித் தாள்தவழ்ந்து வாங்கி
உரங்கெட்டு உறுப்பழுகிப் புல்லுண்ணு பொன்றும்." —சீவக. 2784.

முதுமொழிவெண்பாக்கள் :

"தலையன்பி னல்வளேந்தார் தம்மைநிமிர்த் திட்டார்
கலையன்பின் காணிடுக்கண் காணார் - வலைவை." —திருத். 12.

குறிப்பு:

மடுத்தவாய் - களரும், அளறும், மணலும், காடும்போன்ற வழிகளிலும் என்றவாறு.

—தொகுப்பாசிரியர்.

625. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— அடுக்கி வரினும் - இடைவிடாது மேன்மேல் வந்தன வாயினும், அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கண்படும் - தன் உள்ளக் கோட்பாடு விடாதான் உற்ற இடுக்கண் தாம் இடுக்கணிலே பட்டுப்போம்.

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன விராய்வருதலும் அடங்க, அடுக்கிவரினும் என்றார். அழிவு என்னும் காரணப்பெயர் காரியத்தின்மேல் நின்றது. இவை மூன்று பாட்டானும் தெய்வத்தா னாயதற்கு அழியாமை கூறப்பட்டது.

மணக்:— மேன்மேலே துன்பம் வந்தனவாயினும், மனனழிவு இல்லாதவன் உற்ற இடுக்கண், தான் இடுக்கண்படும் எ - று.

இது மனனழிவு இல்லாதவன் உற்றதுன்பம் மேன்மேல் வரினும் கெடும் என்றது.

பரிதி:— மேன்மேல் துயரம் வந்தாலும் கலங்காதவனை உற்ற இடுக்கண் துயரப்படும் எ - று.

காலிங்:— நாளும் நாளும் ஒன்று இரண்டு அன்றிப் பல அடுக்கி வரினும் தனது அறிவுடைய நெஞ்சத்தான் அழிவு உறுதல் சிறிதும்

இலனாகிய அரசனானவன் தன்னை வந்துற்ற இடுக்கணானது தான் பெரிதும் இடர்ப்படும்; அ.து அன்றி அவனை இடர்ப்படுத்தல் எஞ்ஞான்றும் இல்லை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"மனந்தடு மாறேல்." —ஆத்தி. 88.

முதுமொழிவெண்பாக்கள் :

"என்றுமொரு மீனேவந் தின்மைமிக வுந்தளரார்
துன்றோர் அதிபத்தர் சோமேசா - மன்ற." —சோமேசர். 63.

"இரணியனார் செய்த இடும்பைதனை மைந்தன்
திரணமதாய்க் கண்டான் சிவசிவா - மாணம்." —சிவசிவ. 63.

குறிப்பு:

துன்பம் மலைபோல வந்தாலும் பனிபோல நீங்கும் என்பதாம். அழிவு - கலக்கம்; அது கலங்குதலால் விளைந்த தளர்ச்சியைக் காட்டியதால் காரணப்பெயர் காரியத்தின்மேல் நின்றது என்றார் பரிமேலழகர்.

—தொகுப்பாசிரியர்.

626. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்(று)
ஓம்புதல் தேற்று தவர். (சு)

உரைப்பகுதி:

பரிமே:— அற்றேம் என்று அல்லல் படுபவோ - வறுமைக் காலத்து யாம் வறியமாயினேம் என்று மனத்தால் துயர் உழப்பரோ, பெற்றேம் என்று ஓம்புதல் தேற்றாதவர் - செல்வக்காலத்து இது பெற்றேம் என்று இவறுதலை அறியாதார்.

பெற்றவழி இவறுமை நோக்கி அற்றவழியும் அப்பகுதி விடாது ஆகலின், அல்லற்பாடு இல்லையாயிற்று. இதனான் பொருளின்மையா னயதற்கு அழியாமையும் அதற்கு உபாயமும் கூறப்பட்டன.

மணக்:— பொருளற்றேம் என்று இரங்கித் துன்பம் உறார்: அதனைப் பெற்றேம் என்று போற்றிவைத்தலை நன்று என்று தெளியாதவர் எ - று.

பரிதி:— பொருளும் கிளையும் அற்றோம் என்று விதனப்படார்; பொருளும் கிளையும் நிலையில்லை என்று அறிந்திருப்பார் எ-று.

காளிங்:— யாம் கைப்பொருள் அற்றேம் என்றுகொண்டு அல்லற் படுவார்களோ? படார் அன்றே: யார் எனின் பெரும் பொருள் பெற்றேம் என்று கொண்டு அதனைப் பேணிப் பிடித்தலை அறியாது பலர்க்கு உபகாரம் செய்யும் அரசர் எ - று.

627. இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று - நாற்கதியினும் உள்ள உடம்புகள் இடும்பை என்னும் வாளுக்கு இலக்கு என்று தெளிந்து, கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம் மேல் - தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடையார்.

ஏகதேசவுருவகம். உடம்பு - சாதிப்பெயர். கலக்கம் என்னும் காரியப்பெயர் காரணத்தின்மேல் நின்றது. கையாறு என்பது ஒருசொல்; இதற்கு ஒழுக்கநெறி என்று உரைப்பாரும் உளர். இயல்பாகக் கொள்வர் என்பது குறிப்பெச்சம்.

மணக்:— உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று கருதி, தமக்கு உற்ற துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளார் மேலாயினர் எ - று.

இது மேல் என்றமையால் தவஞ்செய்யுங்கால் வருந் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று.

பரிதி:— உடம்பு துன்பத்துக்கு இலக்கு என்று துன்பத்தால் துன்பப்படார்; உடம்புக்கு அடுத்த கன்மம் அநுபவிக்கும் என்று எண்ணுவார் எ - று.

காளிங்:— மற்று இவ்வுடம்பானது என்றும் இடும்பைக்கு இலக்கம் என்று இங்ஙனம் தெளிந்து மற்று இது வந்த இடத்து மனம் கலங்குவதோர்கலக்கத்தைத் தமது ஒழுக்க நெறிக்கு உரியதாகக் கொண்டிடார் உணர்விலும் தறுகண்மையினும் பெரிய அரசரானோர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட்கு இயல்பு கண்டாய்
நோதலும் பரிவும் எல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி என்றான்."

—சீவக, 269.

குறிப்பு:

கையாறு - ஒழுக்கநெறி என்பர் காளிங்கர். இவ்வுடல் வினையின்வந்தது வினைக்கு விளைவாயது ஆதலின் துன்பக்கொள்கலம் ஆயிற்று என்பதாம். 'மேல் என்றமையான் தவஞ்செய்யுங்கால் வருந்துன்பத்திற்கு அழியாதாரைக்கூறிற்று' என்ற மணக்குடவர் பரிப்பெருமாள் உரைகள் அரசரும் ஆக்கங்கருதித் தவஞ்செய்வுழி அழிதலாகாது என்பது விளக்கியவாறு.

—தொகுப்பாசிரியர்.

628. இன்பம் *விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான் - தன்னுடம்பிற்கு இன்பமாயவற்றை விரும்பாதே வினையால் இடும்பை எய்துதல் இயல்பு என்று தெளிந்திருப்பான், துன்பம் உறுதல் இலன் - தன்முயற்சியால் துன்பம் உறான்.

இன்பத்தை விழையினும், இடும்பையை இயல்பு என்னாது காக்கக் கருதினும், துன்பம் விளைதலின், இவ்விரண்டும் செய்யாதானைத் துன்ப முறுதல் இலன் என்றார்.

மணக்:— இன்பமுறுதலை விரும்பாது இடும்பையுறுதலை இயல் பாகக் கொள்ளுமவன், துன்பமுறுதல் இல்லை எ - று.

இஃது இடுக்கணை இயல்பாகக் கொள்ளல்வேண்டும் என்றது.

பரிதி:— இன்பம் வந்தாலும் பிரியப்படான்; 'துன்பத்துடனே கூடப்பிறந்தது' என்று துன்பம் வந்தாலும் துயரம் உறான் எ - று.

*'விழையாது' என்பது பரிப்பெருமாள் பாடம்.

காளிங்:— மற்று இவ்வாறும்அன்றி ஓர்இன்பம் வந்த இடத்து அதனை விரும்பானுமாய், இடும்பை வருதல் இயல்பு என்று கருதும் இறைவன் எஞ்ஞான்றும் ஒருவாற்றானும் துயரம் உறுதல் இலன் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது." —முதுமொழிக். 8 : 5.

" இன்பம், நயவாமை யன்றே நலம்." —நீதிநெறி. 19.

" விலங்கிவில் உமிழும் பூணான் விழுச்சிறைப் பட்ட போழ்தும்
அலங்கலந் தாரி னான்வந் தருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலும் மகிழ்வும் நெஞ்சில் பொலிதலும் இன்றிப் பொன்னார்ந்(து)
உலங்கலந் துயர்ந்த தோளான் ஊழ்வினை என்று விட்டான்."
—சீவக. 1167.

" புகழ்ந்துரை மகிழ்ச்சியும் பொற்பில் பல்சனம்
இகழ்ந்துரைக் கிரக்கமும் இன்றி அங்கநூல்
அகழ்ந்துகொண் டரும்பொருள் பொதிந்த நெஞ்சினர்
திகழ்ந்தெரி விளக்கெனத் திலக மாயினர்." —ஷை 2640.

" வாய்ச்சிவா யுறுத்தி மாந்தர் மயிர்தொறும் செத்தி னாலும்
பூச்சுறு சாந்தம் ஏந்திப் புகழ்ந்தடி பணிந்த போதும்
தூக்கிஇவ் விரண்டும் நோக்கித் தொல்வினை என்று தேறி
நாச்செறு பராவு கொள்ளார் நமர்பிறர் என்றும் உள்ளார்"
—ஷை 2825.

" வேரிக் கமழ்தார் அரசன்விடு கென்ற போழ்தும்
தாரித்த லாகா வகையாற்கொலை சூழ்ந்த பின்னும்
பூரித்தல் வாடல் இவற்றாற்பொலி வின்றி நின்றான்
பாரித்த வெல்லாம் வினையின்பயன் என்ன வல்லான்." —குண்டல.

" மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகத்தினை உன்னுவாள்." —கம்ப. காட்சிப். 20.

குறிப்பு:

விருப்பு வெறுப்புக்களே துன்ப ஏதுக்களாயிருத்தலின் இவை இரண்டும் இல்லாகத் துன்பமுறுதல் இலன் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

629. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். (௯)

உரைப்பகுதி:

பரிமே:— இன்பத்துள் இன்பம் விழையாதான் - வினையால் தனக்கு இன்பம் வந்துழி அதனை அனுபவியாநின்றே மனத்தான் விரும்பாதான், துன்பத்துள் துன்பம் உறுதல் இலன் - துன்பம் வந்துழியும் அதனை அனுபவியாநின்றே மனத்தால் வருந்தான்.

துன்பம் - முயற்சியான் வரும் இடுக்கண். இரண்டையும் ஒரு தன்மையாகக் கோடலின், பயன்களும் இலவாயின.

மணக்:— இன்பம் நுகருமிடத்து அதனை விரும்பாதவன், அதனால் வரும் துன்பம் நுகருமிடத்து வருத்தமுறுதல் இலன் எ - று.

இன்பம் நுகருமிடத்து அதனை விரும்பாமையாவது அவ்விடத்துத் தான் அழிந்து நில்லாமை. இது காமத்தால் வருந் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று.

பரிதி:— இன்பம் வந்தால் இன்பப்படாதவன் துன்பம் வந்தாலும் துன்பம் கெடுப்பன் எ - று

காளிங்:— இன்பம் வந்து எய்திய இடத்து அவ்வின்பத்தை ஒரு பொருளாகக் கொண்டு விரும்பாத வேந்தனானவன், ஏனைத் துன்பம் வந்து எய்திய இடத்தும் தான் சிறிதும் துயர் உறுதல் இலன்: இவ்விரண்டும் இயல்பு என்னும் திட்பம் உடையார் ஆடவர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"மறிப மறியும் மலிர்ப மலிரும்
பெறுப பெறும்பெற்று இழப்ப இழக்கும்
அறிவது அறிவார் அழுங்கார் உவவார்
உறுவது உறும்என்று உரைப்பது நன்று." —குண்டல.

630. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. (௩0)

உரைப்பகுதி:

பரிமே:— இன்னாமை இன்பம் எனக் கொளின் - ஒருவன் வினை செய்யுமிடத்து முயற்சியான் வரும் துன்பந்தன்னையே தனக்கு இன்பமாகக் கற்பித்துக்கொள்வனாயின், தன் ஒன்னார் விழையும் சிறப்பு ஆகும் - அதனால் தன்பகைவர் நன்குமதித்தற்கு ஏதுவாய உயர்ச்சி உண்டாம்.

துன்பந்தானும் உயிர்க்கு இயல்பன்றிக் கணிகமாய் மனத்திடை நிகழ்வதோர் கோட்பாடாகலின், அதனை மாறுபடக்கொள்ளவே, அதற்கு அழிவின்றி மனமகிழ்ச்சி உடையனாய் அதனால் தொடங்கியவினை முடித்தே விடும் ஆற்றலுடையனாம் என்பதுகருத்து. இவை நான்குபாட்டானும் மெய் வருத்தத்தானாயதற்கு அழியாமையும், அதற்கு ஓருபாயமும் கூறப்பட்டன.

மணக்:— இன்னாமையை இன்பம் போலக் கொள்வானாயின், அது தன் பகைவரும் விரும்புவதொரு சிறப்பாம் எ - று.

மேற் கூறியவாற்றால் செய்தலே யன்றித் துன்பத்தையும் இன்ப மாகக் கொள்வானாயின், அவனைப் பகைவரும் மதிப்பர் என்பது.

பரிதி:— தனக்கு வந்த பொல்லாங்கினால் கலங்காமல் அதுவே பெலமாகக் கொள்வானாகில் தனக்குச் சத்ருக்களும் திறையிடுவர் எ - று.

காளிங்:— தனக்கு ஓர் இன்பம் வந்த இடத்து அதனையும், செய்தியின் வந்த சிற்றின்பம் ஆகலான் இன்னாத் தன்மையது என இங்ஙனம் இறைவன் கருதிக் கொள்வனாயின் மற்று அது தெவ்வரும் தன்னை விரும்பும் சிறப்புடைத்தாகும் எ - று.

அன்றியும் உலகத்து இனிமை செய்தோர் இனியார் ஆதலும் மற்றும் இன்னாமை செய்தோர் இன்னாதார் ஆதலும் இயல்பு அன்றே: அதனான் ஒருவர் தம் கருத்தால் இன்னாமை செய்யினும் அதனை 'இவர் எமக்கு இதின் அடுக்கும் எனக்கருதிக் கொள்வராயின் தாம் அவர்க்கு இனியர் ஆம் அத்துணை அல்லது இன்னாராதல் இன்று என்பதுவும் கூறியவாறு.

இப்படி இயல்நெறி வேந்தர்க்கு இறைமாட்சி முதலாக இடுக்கண் அழியாமை ஈறாக இராச தன்மம் ஆகிய நீதிப்பொருளின் இயல்பு உணர்த்தி, இனி மற்று இதன்பின்னரே அமைச்சியல் பொருள் உணர்த்துகின்றது மேலை அதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"துன்பத்தால் துகைக்கப் பட்டார் துகைத்தவத் துன்பம் தாங்கி
இன்பம்என் றிருத்தல் போ லும் அரியதிவ் வுலகில் என்றாள்."
—சீவக. 1392.

"துன்பத்திற் கிடம்கொடேல்." —ஆத்தி. 59.

குறிப்பு:

துன்பம் இன்பம் என்பன நுகர்வானையும் நுகரப்படுபொருளையும் பற்றி நில்லாது மனக்கருத்தாக இருத்தலின் துன்பத்தையே இன்பமாகப் புத்திபண்ணலாம். அங்ஙனம் செய்யின் பகைவரும் மதித்துச் சிறப்புச்செய்வர் என்பதாம்.

— தொகுப்பாசிரியர்

குறள் வைப்புமுறை

பரிமே:— இடுக்கண், வெள்ளத்தனைய, இடும்பைக்கு, மடுத்தவாய், அடுக்கி, அற்றேம், இலக்கம், இன்பம், இன்பத்துள், இன்னாமை.

மணக்:— இடுக்கண், இன்பம், இடும்பைக்கு, மடுத்தவாய், அடுக்கி, வெள்ளத்தனைய, இலக்கம், அற்றேம், இன்பத்துள், இன்னாமை.

பரிதி:— இன்னாமை, வெள்ளத்தனைய, மடுத்தவாய், அற்றேம், அடுக்கி, இடும்பைக்கு, இன்பத்துள், இலக்கம், இன்பம், இடுக்கண்.

காளிங்:— இடுக்கண், வெள்ளத்தனைய, இடும்பைக்கு, இன்பத்துள், மடுத்தவாய், அடுக்கி, இலக்கம், அற்றேம், இன்பம், இன்னாமை.

அங்கவியல்

பரிமே:—இனி முறையானே அரசியல் நடாத்துதற்கண் ஒன்றற்கு ஒன்று துணையாய அங்கங்கள் ஆறனது இயல்பு மூப்பத்திரண்டு அதிகாரத்தால் கூறுவான் எடுத்துக்கொண்டு, அவை ஆறனுள்ளும் *'காவற் சாகாடு உகைத்தற்'' கண் அவ்வரசற்கு இணையாய அமைச்சனது இயல்பு பத்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார்.

64. அமைச்சு.

தொகுப்புரை:

[வினைசெய்தற்கேற்ற சேனை பொருள் முதலான சாதனங்களும், காலமும், செய்யுமுறையும், செயலும் எண்ணிப்பார்க்கவல்லவனே அமைச்சன். உறுதியும், குடிகளைக் காத்தலும், அறநூல்களைக்கற்றுச் செய்வனசெய்து தவிர்வன தவிர்தலும், முயற்சியும் ஆகிய இவ்வைந்தும் உடையவனே அமைச்சன். பகைவர்க்குத் துணையானவர்களைப் பிரிக்கவேண்டிற் பிரித்தலும், தமக்குவேண்டியவர்கள் பிரிந்துபோகாதவாறு பார்த்துக்கொள்ளுதலும், முன்னொரு காரணத்தாற்பிரிந்தவர்களைச்சேர்த்துக்கொள்ள வேண்டினால் சேர்த்துக்கொள்ளுதலும் வல்லவனே அமைச்சன். வினைகளை ஆராய்தலும், ஆராய்ந்து செய்தலும், உறுதியாக உரைத்தலும் வல்லவனே அமைச்சன். நீதிநூல்களை முற்றக்கற்று அறிந்து அடக்கமாகப்பேசுபவனே ஆலோசனைக்கு ஏற்ற அமைச்சனாவன். இயற்கை அறிவையும், கல்வி அறிவாகிய செயற்கை அறிவையும் உடைய மதிமந்திரிகட்குப் பகைவர் அதிநுட்பமாகச்செய்யும் சூழ்ச்சிகளில் முன்னிற்பவை எவை? ஏட்டுக்கல்வியால் வினையாற்றுந்திறங்களை அறிந்திருந்தானாயினும் உலக இயற்கையை அறிந்து அதற்குத்தக வினைசெய்யவேண்டும். அரசன் தன்னறிவை அவமதித்து ஏற்றுக்கொள்ளானாயினும் அவற்கு நன்மைபயக்கும் காரியங்களைக் கூற வேண்டியது அமைச்சன் கடமை. அரசற்கு அண்மையில் இருந்துகொண்டே அவனுக்குக் கேடுசூழும் அமைச்சனைக் காட்டிலும் பல பகைவர் நல்லவராவர். நன்றாக ஆராய்ந்தும் நன்குமுடிவுபெறாத காரியங்களையே செய்வார்கள் எடுத்தகாரியத்தை முடிக்கும் இயல்பிலாத அமைச்சர்கள்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அமைச்சனது தன்மை: என்றது அவன்றன் குணங்களையும் செயல்களையும்.

---

* புறம். 185.

மணக்:— அமைச்சாவது அமைச்சர் செய்யுந் திறங்கூறுதல். அஃதாவது அது கூறிய அதிகாரம் பத்தினும் மூற்பட அமைச்சர்க்கு இன்றியமையாக் குணங்களெல்லாம் ஓரதிகாரத்தானும், வாத மண்டலத்திலிருந்து செய்யவேண்டுவன நான்கதிகாரத்தானும், புறமண்டலத்திற்குப் போம் தூதர் இலக்கணம் ஓரதிகாரத்தானும், அவர் செய்யும் திறன் நான்கதிகாரத்தானும் கூறினரென்று கொள்ளப்படும். மேல் அரசர் செய்யும் திறன் கூறினர்; இனி ஒரு வினைசெய்து முடிக்குங்கால் அமைச்சு வேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— அமைச்சாவது மந்திரி லட்சணம் சொல்லுவது எ - று.

631. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— கருவியும் - வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டும் கருவிகளும், காலமும் - அதற்கேற்றகாலமும், செய்கையும் - அது செய்யுமாறும், செய்யும் அருவினையும் - அவ்வாற்றின் செய்யப்படும் அவ்வரிய வினைதானும், மாண்டது அமைச்சு - வாய்ப்ப எண்ண வல்லவனே அமைச்சனாவான்.

கருவிகள் - தானையும் பொருளும். காலம் - அது தொடங்குங்காலம். செய்கை எனவே, அது தொடங்கும் உபாயமும், இடையூறுநீக்கி முடிவு போக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியால் பெரிய பயன் தருவது என்பார், அருவினை என்றார். இவை ஐந்தனையும் வடநூலார் மந்திரத்திற்கு அங்கம் என்ப.

மணக்:— செய்தற்கு அரியவினையும், அதற்காம் கருவியும், அதற்காம் காலமும், அதனை இடையூறுபடாமல் செய்து முடித்தலுமாகிய இந்நான்கும் மாட்சிமைப்பட்டவன் அமைச்சனாவான் எ - று.

செய்தற்கு அரியவினையாவது மறுமண்டலங்கோடல்; கருவியாவது யானை, குதிரை முதலிய படை; காலமாவது நீரும் நிழலுமுள்ள காலம்; செய்தலாவது மடியின்றிச் செய்தல்.

பரிதி:— ஆயுதம் முதலானதும், கால நீதியும், செய்யும் முறைமையும், செய்யும் பெருமையும் இந்தவகை உண்டானது அமைச்சு எ - று.

காளிங்:— யாதொரு காரியங்கள் இயற்றுதற்கு மற்று அதற்கு அடுத்த கருவிகளும், மற்று அவை அவை செய்தற்கு அடுத்த காலங்களும், தாம் பொருள்களைச்செய்யும் செய்கை வேற்றுமையும், மற்று, அத்தொழில் வேற்றுமையால் செய்யும் அரிய கருமங்களும் ஒருவகைப்பட்ட மாட்சிமை படத் தெளிந்து அமைந்ததே அமைச்சாவது எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— வடநூலார் இவ்வைந்தினையும் மந்திரத்திற்கு அங்கம் என்ப. அரசங்கம் ஆறு அமைச்சங்கம் ஐந்து.

ஒப்புமைப்பகுதி:

“நனிபயன் பயப்பச் சிறுமுயற்சியினால் நலத்தகு வினையுமற் றனைய
வினையினைத் தொடங்குங் காலது தனக்கு வேண்டிய பொருள்களும் படையும்
இனிதுறு பொழுதும் உபாயமும் செயலும் இடைப்படும் ஊறுகள் நீக்கித்
துணிவற முடிவு போக்கிடு மாறும் சூழ்தர வல்லவன் அமைச்சன்.”

—விநா. அரசி. 102.

குறிப்பு:

படை குடி முதலிய ஆறும் அரசற்கு அங்கமானாற்போல, கருவி முதலிய இவ்வைந்தும் அமைச்சற்கு அங்கமாயின. “உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும், அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்” என்பது விதியாதலின் அமைச்சு மாண்டது என்று அஃறிணைமுடிபேற்றது.

—தொகுப்பாசிரியர்.

632. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட தமைச்சு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— வன்கண் - வினைசெய்தற்கண் அசைவின்மையும், குடி காத்தல் - குடிகளைக் காத்தலும், கற்று அறிதல் - நீதிநூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும், ஆள்வினை - முயற்சியும், ஐந்துடன் மாண்டது அமைச்சு - மேற்சொல்லிய அவ் அங்கங்கள் ஐந்துடனே திருந்த உடையானே அமைச்சனாவன்,

எண்ணொடு நீண்டது. அவ்வைந்து எனச் சுட்டு வருவிக்க. இந்நான்கனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையும் இவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்து என்னும் தொகை பெறுதற்கும். இனி இதனை ஈண்டு எண்ணியவற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தல் என்பதனைக் குடிப்பிறப்பும் அதனை ஒழுக்கத்தால் காத்தலும் எனப் பகுப்பாரும், கற்றறிதல் என்பதனைக் கற்றலும் அறிதலும் எனப் பகுப்பாரும் உளர். அவர் உடன் என்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடி என்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப.

மணக்:— அஞ்சாமையும், குடிகாத்தலும், இந்திரியங்களைக் காத்தலும், நூல்முகத்தானறிதலும், முயற்சியும் என்னும் ஐந்துங் கூட மாட்சிமைப்பட்டவன் அமைச்சனாவன் எ - று.

இவை அமைச்சனாவதன்முன்னே வேண்டுமாதலின், இது முன் கூறப்பட்டது.

பரிதி:— தறுகணண்மை, குடிகாத்தல், கல்வி, அறிவுடைமை, உத்தியோகம் என்னும் அஞ்சு குணமுள்ளவன் மந்திரி எ - று.

காளிங்:— வன்கண்ணதாகிய தறுகண்மையும், தன்னரசன் கோற்கீழ்வாழும் குடிகளது வன்மை மென்மை வழக்கு அறிதலும் காத்தலாகிய நாடுகாவலும், காடுகாவலும், நாடிச் சொல்லுதலும், கற்றறிதல் ஆகிய பெரும்பொருள்நூல் கற்று உணர்ந்து அறிதலும், ஆள்வினை என்னும் அரசியல் முயற்சியும், அமைச்சியல் முயற்சியும் இவை ஐந்தும் ஒருதலைப்பட ஆராய்ந்தவன் அமைச்சன் ஆவன் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— முன் பாட்டிற் சொல்லிய அங்கங்கள் ஐந்துடன் ஈண்டு உரைத்த நான்கையும் கூட்டுக. எண்ணொடு நீண்டது "உடம்போடு உயிரிடை நட்பு." (338) என்பதுபோல நீளாது நிற்பினுங் குற்றமில்லை. அதனை ஈண்டு நீண்டது என்பது இன்னொலி நோக்கியே என்க. உரையுள் அவருடன் என்பதனை அவர் என்றது பட்சாந்தரம் உரைப்பாரை.

மேற்கோள்பகுதி:

இளம்: — பொருளாவது நாடும், பொருளும், அரணும், அமைச்சும் நட்பும், படையும் எனக்கூறி, அமைச்சு என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75.)

பேரா:— உருவு நிறுத்த காமவாயில்: உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினாயினும் உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத்து எண்ணிக் கொண்டாம் என்பது; 'என்னை வன்கண் குடிகாத்தல் கற்றறிதல்' என்புழி, கற்றறிதல் என்பதனை இரண்டாக்கி ஐந்து என்ப வாகலின். (தொல். பொருள். 273.)

ஒப்புமைப் பகுதி:

"குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பும் ஆற்றல் உடைமை - முடியோம்பு
நாற்றம் சுவைவெஃகி நல்லார் இனம்சேர்தல்
தேற்றானேல் தேறும் அமைச்சு." —ஏலாதி. 17.

"மிசைவினை வரினும் அசைவுறா வன்கண் விழுக்குடி காத்தலான்
......அமைச்சாம்." —விநா - அரசி. 103.

குறிப்பு:

வினைமேற்கொண்ட அமைச்சரைப்பற்றிப் பழிசொல்லும் இழிசொல்லும் மிகப் பிறக்குமாதலின் இவற்றையெல்லாம் கேட்டு அஞ்சாமை வேண்டும் என்பார் முதற்கண் "வன்கண்" ஓதினார்.

—தொகுப்பாசிரியர்.

633. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— பிரித்தலும் - வினை வந்துழிப் பகைவர்க்குத் துணையாயினாரை அவரின் பிரிக்கவேண்டின் பிரித்தலும், பேணிக்கொளலும் - தம்பாலாரை அவர்பிரியாமல் கொடை இன்சொற்களால் பேணிக் கொள்ளுதலும், பிரிந்தார்ப் பொருத்தலும் - முன்னே தம்மினும் தம் பாலாரினும் பிரிந்தாரை மீண்டுப் பொருத்தவேண்டின் பொருத்தலும், வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனாவான்.

இவற்றுள், அப்பொழுதை நிலைக்கு ஏற்ற செயல் அறிதலும், அதனை அவர் அறியாமல் ஏற்ற உபாயத்தால் கடைப்பிடித்தலும் அரிய வாதல்நோக்கி, வல்லது என்றார். வடநூலார் இவற்றுள் பொருத்தலைச் சந்தி என்றும், பிரித்தலை விக்கிரகம் என்றும் கூறுப.

மணக்:— மாற்றரசரிடத்து உள்ளாரையும் அவர்க்கு நட்பாகிய அரசரையும் அவரிடத்தினின்று பிரித்தலும்; அவ்வாறு பிரிக்கப்பட்டாரை விரும்பித் தம்மிடத்துக் கொளலும், தம்மிடத்து நின்று பிரிந்தாரைக் கூட்டிக்கொளலும் வல்லவன் அமைச்சனாவன் எ - று.

பரிதி:— மாற்றரசனிடத்திலுள்ள மனிதரைப்பிரித்தலும், பிரித்த பேரைத் தான் கூட்டிக்கொள்வதும், அரசர்க்குப் பிரிந்த மன்னவரைக் கூட்டுவதும் வல்லது மந்திரிதத்துவம் எ - று.

காளிங்:— தம் அரசர்க்குப் பகைவேந்தரானோர் இருவருள் ஒருவரைப் பிரிக்கவல்லதும், மற்று, அவர்தம்மையும்பிறரையும் தம்மாட்டு விரும்பி அணைத்துப் பாதுகாத்தலும், தம் அரசர்மாட்டு நின்றும் பிரிந்தார் உளர் ஆயின், அவர்தம்மையும் யாதானும் ஒரு வழியால் பொருந்தச் செய்தலும், பின்னும் இவையும் எய்த இயற்றவல்லதும் யாது? மற்று அதுவே அமைச்சாவது எ - று.

மேற்கோள்பகுதி:

"பகைவர்தந் துணையைப் பிரித்தல்தம் மிடத்துப்
பயின்றவர் பகைவர்பால் புகாமல்
தகையுறச் செய்தல் பிரிந்தவர் தம்மைத்
தம்மொடு பொருத்தலும் அமைச்சாம்." —விநா. அரசி.103.

"வேறு செய்துபின் பொருத்துறும் வினைவல அமைச்சில்
கூறு செய்ததன் சேறெலாம் குழப்பிஒன் றாக்கிச்
சாறு செய்துவா சவற்றொழு துறுமிடர் தவிர்த்து
நாறு செய்கென வெண்முளை வித்துவர் நாளால்." —காஞ்சி. நாட்டு. 74

"பகையுடன் கிடந்த நிலைபிரி வழக்கினைப்
பொருத்தலும் பிரித்தலும் பொருபகை காட்டலும்
உட்பகை அமைத்தலும் உணர்த்துசொல் பொருத்தலும்
ஒருதொழிற் கிருபகை தீராது வளர்த்தலும்
செய்யா அமைச்சுடன் சேரா அரசன்
நாடு கரிந்தன்ன காடு." —கல்லா. 3 : 1 - 6.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஆனகுல மந்திரிநீ யானாலும் நான்சொலக்கேள்
தேன்மருவும் கோவைத் தினகரா - தானே!" —தினகர. 67

"கால்சேய் கதிர்சேயைக் காத்தரசன் நட்புதவித்
தூலமுடி சூட்டுவித்தான் சோமேசா - சாலப்." —சோமேசர். 64.

குறிப்பு:

பிரித்தல் - தம் அரசருடன் வாழ்வாரைப் பிரிக்கவேண்டின் பிரித்தலும், மாற்றரசற்குத் துணையாவாரைப் பிரித்தலும். பேணிக்கொளல் - தம்முடன் வாழ்வார் எக்காரணத்தானும் தம்மைவிட்டுப் பிரியாதவண்ணம் கொடையானும், இன்சொல்லானும், தகுதியளித்தலானும் பாதுகாத்துக்கொள்ளுதல். பிரிந்தார்ப்பொருத்தல் - தம் அரசரினும், மாற்றரசரினும் பிரிந்தாரைச் சேர்த்துக்கொள்ளுதல்.

—தொகுப்பாசிரியர்.

634. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— தெரிதலும் - ஒரு காரியச்செய்கை பலவாற்றான் தோன்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்தறிதலும், தேர்ந்து செயலும் - அது செய்யுங்கால் வாய்க்குந்திறனறிச் செய்தலும், ஒருதலையாச் சொல்லலும் - சிலரைப் பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலது என்று துணிவுபிறக்கும்வகை சொல்லுதலும், வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனாவான்.

தெரிதல் செயன்மேலதாயிற்று, வருகின்றது அதுவாகலின்.

மணக்:— ஒருவினையை நன்றாக ஆராய்தலும், அதனைச் செய்ய நினைத்தால் முடியுமாறு எண்ணிச் செய்தலும், ஐயமாகிய வினையைத் துணிந்து சொல்லுதலும் வல்லவன் அமைச்சனாவன் எ - று.

பரிதி:— காரியத்தை நாலு வகையாக விசாரித்தலும், விசாரித்தாற்போலே செய்தலும், ஒரு மொழியாகச் சொல்லுதலும் வல்லது மந்திரித்துவம் எ - று.

காளிங்:— அரசனது காரியம் வேறுபட்டுத் தெரிதலும், அங்ஙனம் தெரிந்த பின்னும் காரியத்தில் சிறந்ததனை ஓர்ந்து பார்த்துச் செய்தலும், மேற்செய்யும் கருமங்களை ஐயுறாது ஒருவழிப்பட அரசர்க்குச் சொல்லுதலும் வல்லது அமைச்சு எ - று.

64. அமைச்சு

இனி, இவ்வரசர்க்குக் கூறிய அமைச்சராஞேரது சொல்வன்மையைத் தோற்றுவிக்கிறது மேலே அதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"செறிந்தவர் தெளிந்த நூலால் சிறந்தன தெரிந்து கூறி
அறிந்தவை ஆற்ற கிற்கும் அமைதியான் அமைச்சன் ஆவான்."
—சூளா. மந்திர. 9.

" தன்னிலேயும் தாழாத் தொழில்நிலேயும் துப்பெதிர்ந்தார்
இன்னிலேயும் ஈடில் இயனிலேயும் - துன்னி
அளந்தறிந்து செய்வான் அரசமைச்சன் யாதும்
பிளந்தறியும் பேராற்ற லான்." —சிறு. 57.

முதுமொழிவெண்பாக்கள்:

"போயவர சாளி புகவெழக்கண் டாளியுடல்
தீயின்அமைச் சிட்டான் சிவசிவா - ஆயின்." —சிவசிவ. 64.

635. அறனறிந் தான்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணே. (௫)

உரைப்பகுதி:

பரிமே:— அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் - அரசஞல் செய்யப்படும் அறங்களே அறிந்து தனக்கு ஏற்ற கல்வியான் நிறைந்தமைந்த சொல்லே உடையனுய், எஞ்ஞான்றும் திறன் அறிந்தான் - எக்காலத்தும் வினே செய்யும் திறங்களே அறிந்தான், தேர்ச்சித் துணே - அவர்க்குச் சூழ்ச்சித் துணேயாம்.

தன் அரசன் சுருங்கியகாலத்தும், பெருகியகாலத்தும், இடைநிகராயகாலத்தும் என்பார் எஞ்ஞான்றும் என்றூர். சொல்லான் என்பதனே ஒடுஉருபின் பொருட்டாய ஆனுருபாக்கி உரைப்பாரும் உளர். இவை ஐந்துபாட்டானும் அமைச்சரது குணத்தன்மை கூறப்பட்டது.

மணக்:— அறத்திணேயும் அறிந்து, நிரம்பியமைந்த சொல்லினேயும் உடையனுய், எல்லாக்காலத்தினும் செய்யுந்திறன்களேயும் அறிய வல்லவன் அரசற்குச் சூழ்ச்சித்துணேயாய அமைச்சனுவன் எ - று.

தேர்ச்சிக்குத்துணையாதலின் தேர்ச்சித்துணை என்று பெயர் இட்டார்.

பரிப்:— எஞ்ஞான்றும் என்றது நிகழ்காலத்தினும் எதிர்காலத்தினும்.

பரிதி:— தன்மநெறி யறிந்து, ஒழுக்கம் பொருந்தியசொல்லும் உள்ளவன் எப்போதும் உத்தியோகம் உள்ள மந்திரியாம் எ - று.

காளிங்:— இராச தன்மத்து இயல்பு அறிந்த அறிவினை உடையனுமாய், அதற்கு ஏற்ற சமைவு என்கிற நிறைவினை உடையனுமாய், மற்று அரசன் விருப்புற்றுக் கேட்குமாறு அரிய சொல்லாளனுமாய், நாட்டகத்தும் புறவிடத்தும் வாழ்வோர் வினைத்திறம் அனைத்தும் நெறிபட அறிந்து அறிவு நிறைவு ஓர்ப்புக் கடைப்பிடி என்னும் நாற்பெருங் குணனும் நன்குற அமைந்த அமைச்சனே அரசனது கருமத்திற்கு அமைந்த துணை ஆவான் எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

"தென்னன் இறைவர் அருள் சேர்ந்துசெங் கோல்செலுத்த
மன்னு குலச்சிறையே மந்திரியாம் - என்னை." —முதுமொழி. 100.

குறிப்பு:

அறன் அறிந்து - நீதிநூல்களை ஆராய்ந்தறிந்து என்றுமாம். அறன் ஆகுபெயர். எத்துணையறிந்திருந்தாலுமினும் அரசற்கு அடங்கியே பேசவேண்டுதலின் "அமைந்த சொல்லான்" என்றார். எஞ்ஞான்றும் என்றது துன்ப இன்ப மிகுதிகளில் அறிவு கலங்குமன்றே, அங்ஙனமன்றி, எக்காலத்தும் திறம் அறிந்து வினை செயல்வேண்டும் என்பது வற்புறுத்தியவாறு.

—தொகுப்பாசிரியர்.

636. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. (சு)

உரைப்பகுதி :

பரிமே:— மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு - இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூலறிவோடு உடையராய அமைச்சர்க்கு, அதிநுட்பம் முன் நிற்பவை யா உள - மிக்க நுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன்நிற்பன யாவை உள.

மதிநுட்பம், என்பது பின்மொழிநிலையல். அது தெய்வந்தர வேண்டுதலின் முன்கூறப்பட்டது. நூல் என்பதூஉம் ஆகுபெயர். அதி என்பது வடசொல்லுள் மிகுதிப்பொருளதோர் இடைச்சொல்; அது திரிந்து நுட்பம் என்பதனோடு தொக்கது. முன்னிற்றல் மாற்றார் சூழ்ச்சியாயின தம் சூழ்ச்சியால் அழியாது நிற்றல். இனி *அதினுட்பம் என்று பாடமோதி, அதனின் நுட்பம் யா என்று உரைப்பாரும் உளர்; அவர் சூழ்ச்சிக்கினமாய் முன் சுட்டப்படுவது ஒன்றில்லாமையும் சுட்டுப்பெயர் ஐந்தாம் உருபு ஏற்றவழி அவ்வாறு நில்லாமையும் அறிந்திலர். பகைவர் சூழ்வனவற்றைத் தாம் அறிந்து அழித்து அவரறிந்து அழியாதன தாம் சூழ்வர் என்பது கருத்து. இதனால் அவரது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— மேற்கூறிய நூற்கல்வியோடு கூட நுண்ணிதாகிய மதியினையும் உடையார்க்கு அதனினும் நுண்ணியவாய் மாற்றாரால் எண்ணப்பட்டு எதிர் நிற்கும் வினைகள் யாவுள எ - று,

மேற்கூறியவற்றோடு மதியும் வேண்டும் என்றது.

பரிதி:— மதிகூர்மையும், கல்வியின் கூர்மையும் உள்ள பேருக்கு யாது நுட்பம் எ - று.

காளிங்:— தம் பிறவிக்கண்ணே இயற்கையாக விதிவழி வாய்ந்த மதியின் கூர்மையைப் பின்னும் தெளியக்கற்று உணர்ந்த செயற்கைத் தன்மை நூலோடுகூட உடையாராகிய நுண்ணறிவாளர்க்கு மற்று அவை இரண்டுடன் சிறந்த கூர்மையிற் கூரியன யாவை உளவோ? யாவும் இலது அன்றே முன்னிய நெஞ்சிற்கு வேறு முன் நிற்பவை எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மதி நுட்பம் பின்மொழி நிலையல். "வேங்கைப்பூ" என்பதும் அது. அதி என்பது வடசொல்லின் மிகுதிப் பொருளதோர் இடைச்சொல். வடநூலார் உபசர்க்கம் என்பர். அது திரிந்து நுட்பம் என்பதனோடு தொக்கது. இனி, "அதினுட்பம் என்று பாடம் ஓதுவாரும் உளர். அவர் சூழ்ச்சிக்கினமாய்ச் சுட்டப்படுவதல்லது ஒன்றில்லாமையும், சுட்டுப்பெயர் தாம் உருபேற்றவழி அவ்வாறு நில்லாமையும் அறிந்திலர்" என்றது "சுட்டுமுதலுகரம் அன்னொடுஞ்சிவணி" (தொல். எழுத். 176) என்னுஞ் சூத்திரவிதியால் என்க.

மேற்கோள்பகுதி:

சுவாமி:—வடமொழி நியாயம் வந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 7.)

*'அதினுட்பம்' மணக்குடவர் பாடம்.

ஒப்புமைப்பகுதி:

"ஒன்றுநன் றெனஉணர் ஒருவன் கொள்ளுமேல்
அன்றதென் றொருவனுக் கறிவு தோன்றுமால்
நின்றதொன் றுண்டுகேள் நீதி நூலினோ(டு)
ஒன்றிநின் றவமொடும் உணர்க ஒட்டியே" —சூளா. இரதநூ. 118.

"பன்னூல், வல்லாரு மாகி மதிநுட்பரு மாகி."
—திருவிளை. பன்றி. மந்திரி. 13.

"குலமக ளுடனே வந்த குலச்சிறை குணனும் கேள்வித்
தலைமையும் மதியின் மிக்க தன்மையும் நூக்கி நோக்கி
நலமலி அமைச்ச னாகி நானிலம் புரக்கு நாளில்."
—சை பாண்டியன்சுரங், 9.

"தூக்கி வினைசெய்" —ஆத்தி. 60.

குறிப்பு:

நூலறிவு - கட்டிக்கொடுத்த சோறுபோல எஞ்ஞான்றும் பயன்படாத செயற்கையறிவு. மதிநுட்பம் எதனையும் துருவி ஆராயும் இயற்கை அறிவு.
—தொகுப்பாசிரியர்.

637. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்(து)
இயற்கை அறிந்து செயல். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— செயற்கை அறிந்தக்கடைத்தும் - நூல் நெறியான் வினைசெய்யுந்திறங்களை அறிந்த இடத்தும், உலகத்து இயற்கை அறிந்து செயல் - அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து. அதனோடு பொருந்தச் செய்க.

கடைத்து என்புழித் து பகுதிப்பொருள் விகுதி. நூல்நெறியே யாயினும் உலக நெறியோடு பொருந்தாதன செய்யற்க; செய்யின், அது பழிக்கும் என இயற்கையறிவால் பயன் கூறியவாறு.

மணக்:— செயத்தகுவன அறிந்தவிடத்தும், அது செய்யுங்கால் உலக நடை அறிந்து செய்க எ - று.

உலகநடை அறிதலாவது அரசர் சீலமும் பரிவாரத்திலுள்ளார் நிலைமையும் அறிதல். இவை அறியாது செய்யின் குற்றமாம் என்றவாறு.

பரிதி:— செய்யும் முறைமை அறிந்தாலும் உலகம் பொருந்தின காரியம் செய்வது நன்று எ - று.

காளிங்:— இவ்வாறு நூல்வழிச் செய்கைப் பொருள் அனைத்தும் தெளிய அறிந்ததன்பின், உலகத்தோடு ஒத்த நடை ஆகிய இயற்கைப் பொருளினையும் எய்த அறிந்து யாதானும் ஒரு கருமம் செய்க எ - று.

ஒப்புமைப்பகுதி:

"அறிவதும் செயலும் ஒழிவதும் அரசர்க் காக்கமே குறித்தன வாகும்
திறனும்நன் றறியா அரசருக் குறுதி செப்பலும் செய்வன வேனும்
உறும்உல கியற்கைக் கொத்திடின் செயலும் ஒருவினைக் கியைந்தபல் செயலும்
நிறுவுவ தொன்றால் வாய்ப்பனஞ் ஞான்றும் நிகழ்த்தலும்
அமைச்சருக்கு இயல்பாம்." —விநா. அரசி. 104.

குறிப்பு:

ஏட்டுக்கல்வியினும் நாட்டுநடப்பு அறிவது நன்மைபயப்பது என்பதாம்.
—தொகுப்பாசிரியர்.

638. அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழைஇருந்தான் கூறல் கடன். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— அறிகொன்று அறியான் எனினும் - அறிந்து சொல்லியாரது அறிவையும் அழித்து அரசன் தானும் அறியானேயாயினும், உறுதி கூறல் உழையிருந்தான் கடன் - அக்குற்றம் நோக்கி ஒழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை.

அறி என்பது முதனிலைத் தொழிற்பெயர். கோறல் - தான் கொள்ளாமை மேலும் இகழ்ந்து கூறுதல். உழையிருந்தான் எனப் பெயர் கொடுத்தார், அமாத்தியர் என்னும் வடமொழிப் பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின். உறுதி கூறுக்கால் அவனது இறுதியெய்தற் குற்றத்தை உலகம் தன்மேலேற்றும் என்பார், கூறல் கடன் என்றார். இவை இரண்டு பாட்டானும் அவர் செயல் கூறப்பட்டது.

மணக்:— அரசன் அமைச்சன் கூறிய பொருளை அறிக; அவன் ஒன்று அறியானாயினும், அவனுக்கு உறுதியாயினவற்றை அருகு இருந்த அமைச்சன் சொல்லுதல் கடன் எ - று.

இஃது அரசன் கேளான் என்று சொல்லாதொழிதலாகாது என்று கூறிற்று.

பரிதி:— எல்லாம் அறிவுள்ள ராசா அறிகிறதறுவாயில் அறியாத போது உறுதியாக மந்திரி சொல்லக்கடவன் எ - று.

காளிங்:— அரசரானவர் ஒன்றோ காரியா காரியங்களைத் தாமே அறியினும், மற்று அதன் உறுதிப்பாட்டினை அருகிருத்தற்கு உரியனாகிய அமைச்சன் பெயர்த்தும் ஐயம் அற ஆராய்வது முறைமை. இனி ஒன்றோ அரசன் இவை அறியானாயின் இவன்தானே அதன் உறுதிப்பாட்டினை அமைவுற ஆராய்வது முறைமை எ - று.

அறிந்து ஒன்றறியான் என்பது ஒன்றோ அறியினும் அறியான் ஆயினும் என்றது. உழையிருந்தான் என்பது அரசர் அருகு இருந்தான் என்றது.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— உழையிருந்தான் எனப் பெயர் கொடுத்தார், அமாத்தியன் என்னும் வடமொழிப் பெயரும் அப்பொருண்மையதாகலின்.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— முதனிலைதானே தொழிற்பெயராய் நின்றதற்கு 'அறிகொன்றறியான்' என்பது மேற்கோள். (இ. கொ. 66.)

ஒப்புமைப்பகுதி :

" உலப்பில் உலகத்து உறுதியே நோக்கிக்
குலைத்தடக்கி நல்லறம் கொள்ளார்க் குறுத்தல்
மலைத்தழுது உண்ணாக் குழவியைத் தாயர்
அலைத்துப்பால் பெய்து விடல்." —பழ. நா.

"மூரித்தேன் தாரி னாய்நீ முனியினும் உறுதி நோக்கிப்
பாரித்தேன் தரும நண்நூல் வழக்கது வாதல் கண்டே." —சீவக. 214.

“அற்றமின் றுலகம் காக்கும் அருந்தொழில் புரிந்து நின்றான்
கற்றவர் மொழிந்த வாறு கழிப்பது கடன தாகும்
மற்றவர்க் குறுதி நோக்கி வருபழி வழிகள் தூரச்
செற்றவர்ச் செருக்கும் சூழ்ச்சி தெருண்டவர் கண்ட தன்றே”

—சூளா. மந்திர. 8.

“தம்முயிர்க் குறுதி எண்ணார் தலைமகன் வெருண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின்று உரைக்கும் மெய்யர்.”

—கம்ப. மந்திர. 9.

“கதம்கொள் சீற்றத்தை ஆற்றுவான் இனியன கழறிப்
பதங்கொள் பாகனும் மந்திரி ஒத்தனன் பன்னால்
விதங்களா லவன் மெல்லென மெல்லென விளம்பும்
இதங்கள் கொள்கிலா இறைவனை ஒத்ததோர் யானை.”

—கம்ப. வரைக். 4.

“இறப்பது சாதமேல் இறைவ என்னுரை
வெறுத்தனன் இகழுமேல் வேண்டி இன்னும்யான்
மறுத்தெதிர் மொழியலன் மன்ன என்பிழை
பொறுத்தியென்று இன்னுரை புகல்வ தல்லதே. —கந்த. சூரனமைச். 167

“மன்னவர் செவியழல் மடுத்த தாம்என
நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்
சொன்னவர் அமைச்சர்கள் துணைவர் மேலையோர்
ஒன்னலர் விழைந்தவா றுரைக்கின் றார்களே.” —ஷை 192.

“அரசர் சீறுவ ரேனும் அடியவர்
உரைசெ யாதொழி யார்கள் உறுதியே.” —கலிங். 378.

“இன்று சீறினும் நாளைஅச் சேனைமுன்
நின்ற போழ்தினில் என்னை நினைத்தியால்.” —ஷை 389.

“செவிசுடச் சென்றாங்கு இடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் போகா கவுண்மதத்த
கைம்மா வயத்ததோ பாகுமற் றெத்திறத்தும்
அம்மாண் பினவே அமைச்சு.” —நீதிநெறி. 45.

“மறத்தாம வேலான் மனக்கொள்கைதந் நெஞ்சுள் வான
நிறத்தாடி நீழல் எனத்தோற்ற நிறுத்து மற்று அது

அறத்தாறு எனில்ஆற் றுவர்அன்றெனில் ஆக்கம் ஆவி
இறத்தான் வரினும் மனத்தானும் இசைக்க எண்ணார்."
—திருவிளை. பன்றி. மந்திரி. 17.

முதுமொழிவெண்பாக்கள்:

"சேக்கிழார் சென்னிக்குத் தொண்டர் சிறப்புணர்த்தி
நோக்கநெறி தந்தார் முருகேசா — ஊக்கி." —முருகேசர். 64.

"மானவன்மால் தேவரே வானரராம் மாதைவிடாய்
ஈனம்உறும் என்றான் இரங்கேசா—ஆனது." —இரங். 64.

639. பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
[1]எழுபது கோடி உறும். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— பக்கத்துள் பழுது எண்ணும் மந்திரியின் - பக்கத்திருந்து பிழைப்ப எண்ணும் அமைச்சனொருவனில், ஓர் எழுபதுகோடி தெவ் உறும் - அரசனுக்கு எதிர்நிற்பார் ஓர் எழுபதுகோடி பகைவர் உறுவர் எ - று.

எழுபது கோடி என்றது மிகப்பலவாய எண்ணிற்கு என்று காட்டியவாறு. வெளிப்பட நிற்றலான் அவர் காக்கப்படுவர், இவன் உட்பகையாய் நிற்றலான் காக்கப்படான் என்பதுபற்றி, இவ்வாறு கூறினார். எழுபதுகோடி மடங்கு நல்லர் என்று [2]உரைப்பாரும், எழுபது கூறு தலை என்று பாடம் ஓதுவாரும் உளர்.

மணக்:— குற்றப்பட எண்ணும் அமைச்சரில் எழுபது கோடி மடங்கு நல்லர், உட்பகையாய்த் தன் அருகிலிருப்பவர் எ - று.

இவை இரண்டும் மந்திரிகளுள் விடப்படுவாரது இலக்கணங் கூறின.

பரிதி:— அரசர்க்குப் பழுது எண்ணும் மந்திரியின், கொல்லும் சத்ருக்கள் ஏழ்கோடிதலையான காரியம் எ - று.

[1] 'எழுபது கூறு தலை' காளிங்கர் பாடம்.

[2] உரைப்பார் மணக்குடவரும் பரிப்பெருமாளும்.

காளிங்:— இவ்விலக்கணத்தானன்றி அரசர்க்கு உரியவனும் பொருள் கருமத்தைப் பழுதுபட எண்ணும் மந்திரியினும் அரசன் பக்கத்தின்கண் பகைவர் பலர் புடை சூழ்ந்திருத்தல் யாது மற்று அதுவே மிகவும் தலையானது; மற்று அது எங்ஙனமோ எனின், பலரே ஆயினும் பகைவர் என்று அறிதலால் பரிகரிக்கவும் கூடுமன்: மற்று உழை இருந்துழி உரைத்தற்கு உரியான் ஒருவன் உணர்வு முதலிய குணம் இலனாயின், மற்று அவன் உரைக்கும் உரையினை நம்பி ஒழுகும் அரசனும் கெடும்: அவ்வரசன் ஆளும் நாடும் கெட்டுவிடும் எ - று.

உரைப்பகுதி :

“ பழுதெண்ணும் வன்மனத்தார்.” —சீவக. 1552.

“ இறைவனுக்கு அகிதம் எண்ணுமந்திரியும்.” —விநா. அரசி. 105.

குறிப்பு:

கட்டியங்காரனைப்போல அணியனாக இருந்து நன்மைசெய்வார்போலக் கேடுசூழ்வாரை அறியலாகாமையின் இவர்களைக் காத்தலும் முடியாது. பகைவர் நல்லவர் என்றது அவர்களைப் பகைவர் என்றே அறிதலின் விலகி வென்று கொள்ளலாமாதலின் என்க.

—தொகுப்பாசிரியர்.

640. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர். (௧0)

உரைப்பகுதி :

பரிமே:— முறைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர் - செய்யப்படும் வினைகளை முன் அடைவுபட எண்ணிவைத்தும், செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யாநிற்பர், திறப்பாடு இலாதவர் - முடித்தற்கு ஏற்ற கூறுபாடு இல்லாதவர் எ - று.

அக்கூறுபாடாவன வந்த வந்த இடையூறுகட்கு ஏற்ற ஏற்ற பரிகாரம் அறிந்து செய்தலும், தாம் திண்ணியராதலுமாம். பிழையாமல் எண்ண வல்லவராய்வைத்தும் செய்து முடிக்கமாட்டாரும் உளர் என்பதாம். இவை இரண்டுபாட்டானும் அமைச்சருள் விடப்படுவாரது குற்றம் கூறப்பட்டது.

மணக்:— அடைவுபட எண்ணியும், தம்மால் முடிவது இல்லாதவற்றையே செய்யாநிற்பர்; வினை செய்யுந் திறன் இல்லாதார் எ - று.

இஃது எண்ணவல்லாராய் வினை செய்யமாட்டார் என்று கூறிற்று.

பரிதி:— விசாரம் இல்லாதார் ஒருகாரியத்தை முடிப்போம் என்று எடுத்து முடியாமல் கைவிடுவார். எ - று.

காளிங்:— நெறிபடவே எண்ணியும், தாம் எண்ணியவண்ணமே முடியச் செய்யமாட்டார்: மற்று யார் எனின் அரசியல் திறப்பாடு அமைவுற அறியும் அறிவிலாத அமைச்சர் எ - று.

ஒப்புமைப்பகுதி :

"முறையுறச் சூழு மாத்திர மன்றி முடிக்கமாட் டாதமந் திரியும்"
—விநா. அரசி. 105.

"முற்றுற வருவதும் முதலும் அன்னதால்
பெற்றிடு பயன்களும் பிறவும் தூக்கியே
தெற்றென உணர்ந்துபின் பலவும் செய்வரால்
குற்றமொன் றவர்வயின் குறுக வல்லதோ."
—கந்த. சூரனமைச். 93.

குறிப்பு.

திட்டமிடுவார் பலர். திட்டமிட்டபடி செயல்முடிப்பார் சிலரே என்பது.
—தொகுப்பாசிரியர்.

குறள் வைப்புமுறை

பரிமே:— கருவியும், வன்கண், பிரித்தலும், தெரிதலும், அறனறிந்து, மதிநுட்பம், செயற்கை, அறிகொன்று, பழுதெண்ணும், முறைப்படச்.

மணக்:— வன்கண், மதிநுட்பம், அறனறிந்து, தெரிதலும், கருவியும், பிரித்தலும், செயற்கை, அறிகொன்று, முறைப்படச், பழுதெண்ணும்.

பரிதி:— கருவியும், வன்கண், மதிநுட்பம், அறனறிந்து, தெரிதலும், பிரித்தலும், செயற்கை, முறைப்படச், பழுதெண்ணும், அறிகொன்று.

காளிங்:— வன்கண், மதிநுட்பம், கருவியும், செயற்கை, பிரித்தலும், அறிகொன்று, அறனறிந்து, பழுதெண்ணும், முறைப்படச், தெரிதலும்.

65. சொல்வன்மை.

தொகுப்புரை:

[நாவால் உளதாகிய நன்மை அமைச்சர்களுக்கு எல்லா நன்மைகளினும் சிறந்தது. ஆக்கமும் அறிவும் சொல்லால்வரும்; ஆதலால் சொற்சோர்வுபடுதலாகாது. கேட்பவர்கள் அனைவரையும் கட்டுப்படுத்திக் கேட்காதவர்களும் விரும்பும்நிலையில் மொழிவது சொல்லாம். சொல்லுகின்ற தன்னுடைய நிலையையும், கேட்கின்ற பிறர் நிலையையும் அறிந்து சொல்லவேண்டும். அதைக்காட்டிலும் சிறந்த அறமும் இல்லை; பொருளும் இல்லை. தான்கூறும் சொல்லை வெல்லக்கூடிய பிறிதொருசொல் இல்லாத வண்ணம் எண்ணிச் சொல்லவேண்டும்; பிறர் விரும்பக்கூடியநிலையில் தாம்பேசி, பிறர் சொல்லின் பயனைத் தாம் எடுத்துக்கொள்ளுதல் குற்றமில்லாத அமைச்சர் இயல்பு. சொல்லில் வல்லவனாய், மறதியுமில்லாத அமைச்சரைப் பகைவர் வெல்லமுடியாது. ஒழுங்குபடுத்தி இனிமையாகப்பேசும் அமைச்சனுக்கு உலகமே ஏவல்வழிநடக்கும். சிலசொற்களில் கருத்தை விளக்கும் ஆற்றலில்லாதவர்கள் பலபடப்பேச விரும்புவர். தாம் படித்தவைகளைப் பிறருள்ளங்கொள்ளப் பேசும் ஆற்றலில்லாதவர்கள்மலர்ந்தும் மணமில்லாத மலரை ஒப்பர்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது தான் கருதிய வினை முடியுமாற்றால் அமைச்சியல் நடத்தற்கு ஏதுவாய சொற்களைச் சொல்ல வல்லனாதல். மேல் "ஒருதலையாச் சொல்லலும் வல்லது" என்றதனையே சிறப்புப்பற்றி விரித்துரைக்கின்றமையின், இஃது அமைச்சின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— சொல்வன்மையாவது வார்த்தைசொல்ல வல்லவனாதல். அரசர்க்குக் கல்வி இன்றியமையாததுபோல அமைச்சர்க்கு இஃது இன்றியாதது ஆதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— சொல்வன்மையாவது பதாற்றதாய்ப் பயனுண்டாகிய சொல்லை உரைத்தல் எ - று.

641. நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று. (க)

உரைப்பகுதி:

பரிமே:— நா நலம் என்னும் நலன் உடைமை - அமைச்சர்க்கு இன்றியமையாக் குணமாவது சான்றோரான் நாநலம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்தினை உடையராதல், அந்நலம் யாநலத்து உள்ளதூஉம்

அன்று - அந்நலம் பிறர்க்கும் பிறநலமெல்லாவற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்கது ஆகலான்.

நாவால் உளதாய நலம் என விரியும். இந்நலம் உலகத்தைத் தம் வயத்ததாக்கும் அமைச்சர்க்கு வேருகவேண்டும் என்னும் நீதிநூல் வழக்குப் பற்றி நாநலம் என்னும் நலன் என்றும், பிறர்க்கும் இதுபோற்சிறந்தது பிறிது இன்மையான் அந்நலம் யாநலத்துள்ளதூஉம் அன்று என்றும் கூறினர். பிரித்தல் பொருத்தல் முதலிய தொழிலில்லாதார்க்கும் இஃது இன்றியமையாதாயபின் அத்தொழிலார்க்குக் கூறவேண்டுமோ என்பது கருத்து.

மணக்:— நாவினது நலம் என்று சொல்லப்படுகின்ற நலம் ஒருவற்கு உடைமையாவது; அந்நலம் எல்லா நலத்துள்ளும் உள்ளதொரு நலமன்று; மிக்கது எ - று.

எல்லா நலத்துள்ளும் உள்ளதொரு நலமன்று என்றமையால் இன்பம் பயக்கும் என்பதாயிற்று.

பரிப்:— இஃது, எல்லா அழகினும் மிகுந்த அழகு என்றமையான் இன்பமும் பயக்கும் என்றது; 'சொல்வலை வேட்டுவன்' என்ருரும் உளர்.

பரிதி:— நாவின் நலமாகிய சொல்லும் மற்றை நாலு புலன்களினும் விசேஷம் எ - று.

காளிங்:— அரசர்க்கு அமைச்சராய் அமைந்தோர்க்குத் தமது நாவில் பிறக்கும் சொல்நலமாகின்ற இன்னலமுடைமையாவது; மற்று அது வேறு யாவை சில நன்மையின்கண்ணும் உள்ளது ஒன்று அன்று: எனவே இதற்கு மற்றும் ஒரு நன்மை உவமையாக எடுத்து உரைத்தல் அரிது என்பது பொருள் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும் - செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு." —சிறு. 36.

குறிப்பு:

நலனுடைமை - நலத்தையுடையராதல் எனத் தொழிற்பெயர். யா நலம் என்றது அமைச்சர்க்கு உரியனவாக ஓதப்பெற்ற தெரிதல் முதலிய பிறநலங்கள் எவற்றினும் என்பதாம்.
—தொகுப்பாசிரியர்.

642. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— ஆக்கமும் கேடும் அதனால் வருதலால் - தம் அரசற்கும் அங்கங்கட்கும் ஆக்க அழிவுகள் தம் சொல்லான் வருமாகலான், சொல்லின்கண் சோர்வு காத்து ஓம்பல் - அப்பெற்றித்தாய சொல்லின்கண் சோர்தலை அமைச்சர் தங்கண் நிகழாமல் போற்றிக்காக்க.

ஆக்கத்திற்கு ஏதுவாய நற்சொல்லையும் கேட்டிற்கு ஏதுவாய தீச்சொல்லையும் சொல்லாதல் ஒப்புமைபற்றி அதனால் என்றார். செய்யுளாகலின், சுட்டுப்பெயர் முன்வந்தது. பிறர் சோர்வு போலாது உயிர்கட்கெல்லாம் ஒருங்குவருதலால், காத்தோம்பல் என்றார்: இவை இரண்டு பாட்டானும் இஃது இவர்க்கு இன்றியமையாது என்பது கூறப்பட்டது.

மணக்:— ஆக்கமும் கேடும் சொல்லினால் வருவதால், சொல்லின்கண் சோர்வைப் போற்றிக் காக்கவேண்டும் எ - று.

இது சோர்வுபடாமற் சொல்லல் வேண்டும் என்றது.

பரிதி:— வாழ்வும் கேடும் அதனால் வருதலால் சொற்சோர்வு வாராமல் காத்துச் சொல்லுக எ - று.

காளிங்;— அரசர் வாழ்க்கையாகிய ஆக்கமும் அது வீழ்த்தல் ஆகிய கேடும் அமைச்சரது சொல்லினானே வந்து விளையும் ஆகலான் மற்றைச் சொல்லின்கண் ஒரு சோர்வு படாமல் காத்துச் சொல்லத் தகுவதனைக் குறிக்கொண்டு சொல்லுக எ - று.

இனி உலகத்தில் யாவரேனும் யாதானும் ஒன்றினை இனிது இயற்றுமிடத்துத் தாம் கருதிய கருத்து உரையினும் செயலினும் தூயதாக வேண்டுதலான் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அதனால் என்பது, "முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே" (தொல் - சொல் - 39) என்பதனான் அறிக. "அவனணங்கு நோய் செய்தான்" என்பதுபோலச் செய்யுளாகலின் சுட்டுப்பெயர்

முன்வந்தது. ஆக்கத்திற்கும், கேட்டிற்கும் காரணமாகிய நற்சொல்லும், தீச்சொல்லும் சொல்லுதல் ஒற்றுமைப்பற்றி, அவற்றால் என்னாது அதனால் என்று ஒருமையாக்கினார்.

ஒப்புமைப்பகுதி:

"சொற்சோர் வுடைமையின் எச்சோர்வும் அறிப." —முதுமொழிக். 2 : 8.

"சொல்லுங்கால் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிதே."
—இனியவை. 35.

"சொற் சோர்வு படேல்." —ஆத்தி. 53.

முதுமொழிவெண்பாக்கள்:

"நித்தத் துவம்கேட்க நின்றகும்ப கன்னனுக்குச்
சித்தித்த தொன்று தினகரா - அத்தனையோ." —தினகர. 65.

"சிவனடி என்னுமயன் சீர்பெறுமுன் பின்னர்ச்
சிவசமதை சொல்லலும் சீர்போம் — எவரும்தம்."
—முதுமொழி. 101.

"பரமனருள் வேண்டிப் பகர்ந்தசுர ரான
கரது டணன்முதலோர் காதை — வரவறிவீர்." —ஷை 102.

"நித்தியத்து வங்கேட்பான் நித்திரைஎன் றேமயக்கம்
துய்த்தனனும் கும்பகன்னன் சோமேசா - எத்திறத்தும்."
—சோமேசர். 65.

குறிப்பு:

காத்து ஓம்பல் என ஒரேபொருள் தரச் சொல்லைக் இருகாற்கூறியது இன்றியமையாமையைக்காட்ட.

—தொகுப்பாசிரியர்.

643. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய் - நட்பாயேற்றுக் கொண்டாரைப் பின் வேறுபடாமல் பிணிக்கும் குணங்களை அவாவி, கேளாரும் வேட்ப மொழிவது - மற்றைப் பகையாய் ஏற்றுக்கொள்ளா

தாரும் பின் அப்பகைமை ஒழித்து நட்பினை விரும்பும்வண்ணஞ் சொல்லப் படுவதே, சொல்லாம் - அமைச்சர்க்குச் சொல்லாவது.

அக்குணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் என்றிவை முதலாயின. அவற்றை அவாவுதலாவது சொல்லுவான் குறித்தனவேயன்றி வேறு நுண்ணுணர்வுடையோர் கொள்பவற்றின்மேலும் நோக்குடைத்தாதல். அவாய் என்னும் செய்தெனெச்சம் மொழிவது என்னும் செயப்பாட்டுவினை கொண்டது. இனிக் கேட்டார் கேளார் என்பதற்கு நூல்கேட்டார் கேளாதார் எனவும், வினவியார் வினவாதார் எனவும் உரைப்பாரும் உளர். தகையவாய் என்பதற்கு எல்லாரும் தகுதியையுடையவாய் என்று உரைத்தார்; அவர் அப்பன்மை மொழிவது என்னும் ஒருமையோடு இயையாமை நோக்கிற்றிலர். இதனுன் சொல்லினது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— வினுவினுரைப் பிணித்துக் கொள்ளுந் தகையவாய், வினுவாதாரும் விரும்புமாறு சொல்லுதல் சொல்லாவது எ - று.

இது மேம்படக் கூறல் வேண்டும் என்றது.

பரிப்:— கேட்டார் என்பதனைக் கேள்வியுடையார் எனினும் அமையும்; சொல்லக்கேட்டார் எனினும் அமையும். கேளாமையும் அவ்வாறே கொள்ளப்படும். இது நயம்படக் கூறவேண்டும் என்றது.

பரிதி:— கேட்டவர் செவியும் மனமும் பிணிக்கவும் கேளாதாரும் சத்ருக்களும் நாலு புலன்களும் விரும்பச் சொல்லுதல் சொல் எ - று.

காளிங்:— பலவகைப்பட்ட நூல்களையும் பாடம் ஓதி அவற்றின் பொருட்பயன் தெளியக் குரவரை வழிப்பட்டுக் கேட்ட குற்றமற்ற சான்றோரையும் தம்மாட்டுப் பிணித்துக் கொள்ளும் தகுதியை உடையனுமாய்ப் பின்னும் அங்ஙனம் பொருந்தக் கேளாது புவியிடைத் திரியும் புல்லறிவாளரும் 'யாமும் இவ்வாறுகேட்டு ஒன்று அறியவேண்டும்' என்னும் விருப்பம் உளதாகச் சொல்லுமது அமைச்சரது சொல்வன்மை எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்;— தகையவாய் - குணங்களை அவாவி; அவாய் என்னும் எச்சம் மொழிவது என்னுஞ் செயப்பாட்டுவினை கொண்டது என்றூர்; தகையமொழிவது என்னும் பன்மை யொருமை மயங்காமல்.

மேற்கோள்பகுதி :

சிவஞான:— கேளாம் புறன். கேட்டல் - பொருளாகக்கோடல்; அது 'கேளாரும் வேட்ப மொழிவதாம்' என்பதனானும் அறிக என்பர். (சிவஞான - அவை.)

ஒப்புமைப்பகுதி:

"கேட்டார்க்கு இனியவாய்ச் சொல்லாரேனல்." —தகடூர்.

"சுளிக்கச் சொல்லேல்." —ஆத்தி. 48.

"சுருக்கிமெய் விளக்கி இனிமையும் பயனும்
தொகுத்தய லார்மொழி கிடையாத்
திருக்கிளர் மொழியைச் சோர்வற அவைக்கண்
செல்லுமா றஞ்சுத லின்றி
உரைக்கவல் லவரே அமைச்சர்க ளாவர்
உறுமுறை பிறழ்தரப் பலவாய்
விரிக்கவல் லவரும் கற்றது விளங்க
விரிக்கமாட் டாரும்மெல் லியரே." —விநா. அரசி. 106.

குறிப்பு:

கேளார் - அவையிலிருந்து கேட்காதபிறர், பகைவர் இவ்விரண்டுள் பகைமை காரணமாக எதினும் குறைகாணும் பகைவரும் விரும்புவர் என்பதிலேயே பொருட் சிறப்பிருத்தல் காண்க. பரிதி நாலுபுலன் என்றது செவியொழிந்த கண், மூக்கு, நாக்கு, மெய் என்றவற்றை.

—தொகுப்பாசிரியர்.

644. திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங் கில். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— சொல்லைத் திறன் அறிந்து சொல்லுக - அப்பெற்றித் தாய சொல்லை அமைச்சர் தம்முடையவும் கேட்பாருடையவுமாய திறங்களை அறிந்து சொல்லுக, அதனின் ஊங்கு அறனும் பொருளும் இல் - அங்ஙனம் சொல்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளும் இல்லையாகலான்.

அத்திறங்களாவன குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்பனவற்றான் வரும் தகுதி வேறுபாடுகள். அவற்றை

அறிந்து சொல்லுதலாவது அவற்றால் தமக்கும் அவர்க்கும் உளவாய ஏற்றத்தாழ்வுகளை அறிந்து அவ்வம்மரபால் சொல்லுதல். அஃது உலகத்தோடு ஒட்ட ஒழுகலையும் இனிமையையும் பயத்தலின் அறனாயிற்று; தம் காரியம் முடித்தலின் பொருளாயிற்று. அறனும் பொருளும் எனக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறினார்.

மணக்:— சொல்லைச் சொல்லுந் திறன் அறிந்து சொல்லுக; அதனின் மேம்பட்ட அறனும் பொருளும் இல்லை எ - று.

திறன் அறியவே புறங்கூறாமையும் பயனில சொல்லாமையும் பொய்கூறாமையும் உளவாம்; ஆதலான் அறனாயிற்று; அரசன்மாட்டும் ஏனையோர்மாட்டும் தகுதியறிந்து சொல்லுதலான், பொருளாயிற்று. என்னை? அதனானே ஆக்கமும் கேடும் ஆதலான். இஃது அறனும் பொருளும் பயக்கும் என்றது.

பரிதி:— மனம் பொருந்தக் காரியங்கட்கு உட்படச் சொல்வானாகில் இது போலும் அறனும் பொருளும் இல்லை எ - று.

காளிங்:— அரசர்க்கு அமைச்சரானோர் ஒன்று சொல்லுங் காலத்து அமைவு உடையராய்ச் சொல்லும் திறப்பாட்டினை அறிந்து கீழ்ச் சொல்லிப் போந்த இல்லறம் முதலிய அறமும், மற்று இங்குச் சொல்லுகின்ற பொருள் நெறியும், மற்று உம்மையான் மேல் சொல்லுவதாகிய இன்ப நெறியும் எல்லாம் அவரவர் மரபின் திறப்பாடு அறிந்து சொல்லுக. இத்துணை அல்லது இதனின் ஊங்குப் பயன் யாதும் இல்லை எ - று.

645. சொல்லுக *சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— சொல்லைப் பிறிது ஓர்சொல் வெல்லும்சொல் இன்மை அறிந்து - தாம் சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லாய் வெல்ல வல்லதொருசொல் இல்லாமை அறிந்து, அச்சொல்லைச் சொல்லுக - பின் அச்சொல்லைச் சொல்லுக.

பிறிதோர்சொல் - மாற்றாரது மறுதலைச்சொல். வெல்லுதல் - குணங்களான் மிகுதல். அதுவே வெல்லச் சொல்லுக என்பதாம். இனிப்,

*'சொல்லின்' என்பது காளிங்கர் பாடம்

பிறிதோர்சொல் வெல்லும்சொல் எனச் செவ்வெண்ணாக்கி, ஒத்த சொல்லும் மிக்கசொல்லும் உளவாகாமல் சொல்லுக என்று உரைப்பாரும் உளர். இது சொற்பொருட்பின்வருநிலை.

மணக்:— சொல்லைச் சொல்லுக; தான் சொல்ல நினைத்த அச் சொல்லைப் பிறிதொரு சொல்லாய் வெல்லுஞ் சொல் இல்லையாதலை யறிந்து எ - று.

பரிப்:— சொல்வன்மையாயின பலவற்றுள்ளும் தோலாவகை சொல்லுதல் சிறப்புடைத்தாகலின் இது முன் கூறப்பட்டது.

பரிதி:— களறியிலே வார்த்தைசொல்லுவானாகில் தான்சொல்லு கிற சொல்லை வேறேஒருவன் சொல் வெல்லாமல் சொல்லுவான் எ - வு.

காளிங்:— அமைச்சர் ஒன்று சொல்லும் இடத்து மற்று அச் சொல்லினைப் பிறர் ஒருவர் சொல் வெல்லுதல் இன்மையைக் குறிக் கொண்டு சொல்லுக; அல்லாக்கால் சொல்லற்க எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பின்வருநிலை. பட்சாந்தரம் இதனில் மிக்காய்த் தோன்றுவது காண்க.

ஒப்புமைப்பகுதி :

"மொழிவததனை அழிவதறமொழி." —கொன்றை. 79.

முதுமொழிவெண்பாக்கள்:

"எவற்றினுமேல் என்னஇறை வர்சொன்ன தெல்லாம்
சிவப்பிரகா சத்தடங்கச் செப்பும் - தவத்தினர்போல்."
—முதுமொழி. 103.

"என்றும் பதிஞறெனஅரனார் ஓதியசொல்
சென்றதே இன்றும் சிவசிவா - நன்றிபெறச்." —சிவசிவ. 65.

"வாதவூ ராளிசெண்டால்வாங்கலின்ஞோர் வண்மைஎன
மோதம்இறைக் கீந்தார் முருகேசா - தீதிலதாச்." —முருகேசர். 65.

"சோழன் சிவாற்பரச்சொல் தோற்றமைதான் இந்தஉல(கு)
ஏழும் அறிந்த திரங்கேசா - தாழாமல்." —இரங். 65.

646. *வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— வேட்பத் தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்- பிறர்க்குத் தாம் சொல்லுங்கால் அவர் பின்னும்கேட்டலை விரும்புமாறு சொல்லி, அவர் தமக்குச்சொல்லுங்கால் அச்சொல்லின் பயனைக் கொண் டொழிதல்; மாட்சியின் மாசு அற்றார் கோள் - அமைச்சியலுள் குற்ற மற்றாரது துணிபு.

பிறர் சொற்களுள் குற்றம் உளவாயினும் அவை நோக்கி இகழார் என்பதாம். வல்லாரை இகழ்தல் வல்லுநர்க்குத் தகுதியன்மையின், இதுவும் உடன் கூறினர். இவை மூன்றுபாட்டானும் அதனைச் சொல்லு மாறு கூறப்பட்டது.

மணக்:— தாம் சொல்லுங்கால் பிறர் விரும்புமாறு சொல்லி, பிறர் சொல்லுங்கால் அச்சொல்லின் பயனைத் தெரிந்துகொள்ளுதல், மாட்சிமையில் குற்றமற்றாரது கோட்பாடு எ - று.

இது நயம்படக் கூறுதலேயன்றி, பிறர் சொல்லுஞ் சொல் அறிந்து சொல்லுதலும் வேண்டும் என்றது.

பரிதி:— கேட்பார் விரும்பும்படிச் சொல்லி அவர் பிரியப்படச் சொல்லும் வார்த்தை கேட்டல் கற்றோர் கடன் எ - று.

காளிங்:— இவ்வாறு தாம் விரும்பிச் சொல்வதும் செய்து மற்று அதுவேயும் அன்றிப் பிறர் சொல்லினது பொருட்பயனும் தேர்ந்து உள்ளத்துக் கோடல் யாது: மற்று அதுவே அறிவுடைய அமைச்சரது கோட்பாடு எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பர் வித்தகர்." —பழ. நா.

*'வேட்பத்தின்' என்பது காளிங்கர் பாடம்.

"சோர்வில், சொல்லால் அடையார் மனமும்களிதூங்கச் சொல்லிப்
பல்லார் பிறர்சொல் பயனுய்ந்து கவர வல்லார்."

—திருவிளை, பன்றி - மந்திரி, 14.

''நயத்திலாகிறது பயத்திலாகாது''

"நயமொழியால் ஜயம் உண்டு." —பழ.

குறிப்பு:

பிறர்சொற்பயன்கோடல் - பிறர் சொல்வன்மையில்லாதவர்களாக இருப்பினும் அதன் பயனைமட்டும் கொண்டு சொல்லழகின்மைக்குத் தூற்றலாகாது என்பதும் விளக்கப்பெற்றது.

—தொகுப்பாசிரியர்.

647. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— சொலல் வல்லன் - தான் எண்ணிய காரியங்களைப் பிறர்க்கு ஏற்பச் சொல்லுதல் வல்லனாய், சோர்வு இலன் - அவை மிகப் பலவாயவழி ஒன்றினும் சோர்விலனாய், அஞ்சான் - அவைக்கு அஞ்சானுமாயினான் யாவன், அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது - அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது.

ஏற்பச்சொல்லுதல் அவர்க்கு அவை காரியமல்லவாயினும் ஆம் எனத் துணியும்வகை சொல்லுதல். சோர்வு - சொல்லவேண்டுவதனை மறப்பானொழிதல். இம்மூன்று குணமும் உடையானை மாற்றாராய்ப் பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வார் இல்லை என்பதாம்.

மணக்:— ஒருவன் சொல்ல வல்லவனுமாய் அதனைச் சோர விடுதலும் இல்லானாய் அஞ்சாது சொல்லுதலும் உடையவனாயின், அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது எ - று.

பரிப்:— இம்மூன்று பகுதியினும் என்பதனால் அவனைச்சொல்லில் வெல்வார் இல்லை என்றது.

பரிதி:— வார்த்தை சொல்லவல்லவன் திடவானாகில் அவனை மாறுபட்டு வெல்லல் யார்க்கும் அரிது எ - று.

காளிங்:— இங்ஙனம் ஏற்றத்தாழ்வு என்னும் குற்றம் தங்காமல் சொல்லுதல் வல்லனுமாய், மற்று இங்ஙனம் சொல்லும் இடத்து மறந்தும் ஒரு சொற்சோர்வுபாடு இலனுமாய், அரசனைக் கழறவேண்டும் இடத்துக் கழற்றுரை கூறக் கண்ணஞ்சானுமாய், இருப்போன் யாவன் மற்று அவ்வமைச்சனை மற்று ஒருவர்க்கு மாறுபடக்கூறி வெல்லுதல் அரிது எ - று.

மேற்கோள்பகுதி:

சங்கா:— வினைக்குறிப்புச் சொல் குறிப்பினுல் இருதிணை ஐம்பாற் பொருளைத்தரும் என்பதற்கு இக்குறளை மேற்கோள்காட்டி, வல்லன் இலன் என்னும் சொற்கள் பெயர்ப்பொருளை ஒழித்து வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பான் உணர்த்தின என்பர். (நன். 269.)

குறிப்பு:

சொலல்வல்லார் - காரியமல்லாதவற்றையும் காரியமாம் எனத்தெளியும் வகை அவரவர்க்கு ஏற்பச் சொல்லுந்திறமுடையார். சோர்வின்மை - அதில் முன்னுக்குப்பின், ஆளுக்கு ஆள் முரணுன கருத்து நிகழாதவாறு மொழிதல். பலசொல்வதால் சொற்குற்றங்கள் மலிதலேயன்றி வாய்சோர்ந்து மறைவிடுக்கவும் கூடுமாதலின் பலசொல்ல விரும்புதல் கூடாது என்று கடியப்பெற்றது.

—தொகுப்பாசிரியர்.

648. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— தொழில் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின் - சொல்லப்படுங் காரியங்களை நிரல்படக் கோத்து இனிதாகச் சொல்லுதல்வல்லாரைப் பெறின், ஞாலம் விரைந்து கேட்கும் - உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக்கொள்ளும்.

தொழில் சாதியொருமை. நிரல்படக்கோத்தல் - முன்சொல்வனவும் பின்சொல்வனவும் அறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல் - கேட்டார்க்கு இன்பம் பயத்தல். சொல்லுதல்வல்லான் நூருயிரவருள் ஒருவன் என்ற வடமொழிபற்றிப் பெறின் என்ருர். ஈண்டுக் கேட்டல் ஏற்றுக்கோடல். இவை இரண்டுபாட்டானும் அவ்வாற்ருல் சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— இனிதாகச் சொல்ல வல்லாரைப் பெற்றாராயின், உலகத்தார் மேவி விரைந்து சென்று செய்யுந் தொழில் யாது என்று கேட்பர் எ - று.

இது சொற்களைச் சொல்லின், இனிதாகச் சொல்லவேண்டும் என்றது.

பரிதி:— கேட்பார் செவியும் மனமும் புலப்பட வார்த்தை சொல்லும் மந்திரிக்கு, மண்டலம் சொல்வழி கேட்கும் எ - று.

காளிங்:— அரசர்க்கு ஆயினும் பிறர்க்கு ஆயினும் அவர் அவர்க்குப் பொருந்த உணர்ந்து செவிக்கு இனிதாகச் சொல்லுதல் வல்லராகிய அமைச்சரை அரசர் பெறுவாராயின், அரசர் ஏவாமல் தானே விரைந்து தொழில்கேட்டு ஒழுகுவர் இவ் வையகத்து வாழ்வார் எ - று.

மேற்கோள்பகுதி:

இளம்:— அணங்கிலவகையில் சொல்வென்றிக்கு மேற்கோள். (தொல். பொருள். 74.)

நச்:— ஷை (தொல். பொருள். 75.)

649. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— மாசு அற்ற சில சொல்லல் தேற்றாதவர் - குற்றமற்றனவாய்ச் சிலவாய வார்த்தைகளை அவ்வாற்றான் சொல்லுதலை அறியாதார், பல சொல்லக் காமுறுவர் - பலவாய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர்.

குற்றம் - மேற்சொல்லிய குணங்கட்கு மறுதலையாயின. இடைவிடாது பல சொல்லுதலையும் சொல்வன்மை என்று விரும்புவாரும் உளர்; அவர் இவ்வாறு சொல்ல மாட்டாதாரே; வல்லார் அதுசெய்யார் எனயாப்புறுப்பார் மன்ற என்றார்.

மணக்:— பல சொற்களைச் சொல்லக் காதலியா கிற்பர்; குற்றம் அற்ற சில சொற்களைத் தெளியச் சொல்லலை அறியமாட்டாதார் எ - று.

மன்ற - தெளிய. இது சுருங்கச்சொல்லல் வேண்டும் என்றது.

பரிதி:— பல வார்த்தை சொல்லி அந்தச் சொல்லெல்லாம் கர்வீப் பர்; சில சொல்லிலே பிரியப்பட வார்த்தை சொல்லமாட்டாதார் எ - று.

காளிங்:— இவ்வாறு சொல்லுதலுடையான் அன்றியே எவ்வாறு சொன்னால் பொருள் ஆம் என்னும் கருத்தினால், பலவற்றையும் சொல்ல ஆசைப்படுவார் யார் எனின், குற்றமற்ற பொருளைச் செலச் சொல்லி அமைதலைத் தெளியாத தீய அமைச்சர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"விரைந்துரையார் மேன்மேல் உரையார்பொய் யாய
பரந்துரையார் பாரித் துரையார் — ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னானே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து. —ஆசார. 76.

"மிகைபடச் சொல்லேல்." —ஆத்தி. 90.

650. இணருழ்த்தும் நாறா *மலரனையர் கற்ற(து)
உணர விரித்துரையா தார். (கo)

உரைப்பகுதி:

பரிமே:— கற்றது உணர விரித்து உரையாதார் - கற்றுவைத்த நூலைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்கமாட்டாதவர், இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர் - கொத்தின்கண்ணே மலர்ந்துவைத்தும் நாறாத பூவை ஒப்பர்.

செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாற்றம் இல்லாத பூச் சூடப் படாதவாறுபோல நூலைக் கற்றுவைத்தும் சொல்லமாட்டாதார் நன்கு மதிக்கப்படார் என்றமையின், இது தொழிலுவமம் ஆயிற்று. இவை இரண்டுபாட்டானும் அது மாட்டாதாரது இழிபு கூறப்பட்டது.

---

*'மாத்தனையர்' என்பது காளிங்கர் பாடம்.

மணக்:— இணராய் மலர்ந்து நாற்றமில்லாத பூவை ஒப்பர், கற்றதனைப் பிறர் அறிய விரித்துச் சொல்லமாட்டாதார் எ - று.

பரிப்:— இது சுருங்கச்சொல்லுதலே அன்றி வேண்டுமிடத்து விரித்தும் சொல்லவேண்டும் என்றது.

பரிதி:— கண்ணுக்குப்புலப்படக் கொத்தாகப் பூத்து *மணமில்லாத முருக்கம் பூவொடு ஒப்பர்; கற்றகல்வியைச் செவிக்குப்புலப்படச் சொல்லாதார் எ - று.

காளிங்:— நறுமலர்ப் பூங்கொத்து உடையவாகிய சண்பகம் புன்னை முதலியபோலத் தானும் பெரிதும் இணர்கொண்டு மலரப் பெற்று வைத்தும் அவைபோல மணம் நாறப்பெறாத பிறமரத்தை ஒப்பர்: யார் எனின், தாம் கற்ற சொல்மலரினைக் கேட்ட அரசர் முதலானவர்க்கு மற்று அதன்பொருள் நயம் மணம்தோன்ற விரித்துச் சொல்லமாட்டாத அமைச்சர் எ - று.

சொல்மலர் எவ்விடத்துப் பெறுதும் எனின், குரவர் முதலான அரசர் சொல் திருவாய் மலர்ந்தார் என்னும் வழக்கத்துள் கண்டுகொள்க. இணர் என்பது பூங்கொத்து. ஊழ்த்தல் என்பது மலர்தல்.

ஒப்புமைப்பகுதி:

"நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்கேலா
வெண்மொழி வேண்டினும் சொல்லாமை - நன்மொழியைச்
சிற்றின மல்லார்கண் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன்." —திரி. 32.

"செழும்பெரும் பொய்கையுள் வாழினும் என்றும்
வழும்பறுக்க கில்லாவாம் தேரை - வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணும் நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி அரிது." —நாலடி. 352.

---

*"குலமிக உடையர் எழில்மிக உடையர் குறைவில் செல்வமும் மிக உடையர், நலமிக உடையர் என்னினும் கல்வி ஞானம் அற்பமும் இலாதவரை, வலமிகு திகிரிச் செங்கையாய் முருக்கின் மணமிலா மலரென மதிப்பேன், சலமிகு புவியில் என்றனன் வாகைத் தார் புனை தாரைமா வல்லான்." —வில்லி. நச்சு. 19.

"எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்து
உய்த்துணர் வில்லெனின் இல்லாகும் — உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து." —நீதிநெறி. 5.

"மொழிவ தறமொழி." —ஆத்தி. 97.

"..........உறுமுறை பிறழ்தரப் பலவாய்
விரிக்கவல் லவரும் கற்றது விளங்க விரிக்கமாட் டாரும்மெல் லியரே."
—விநா. அரசி 106.

குறள் வைப்புமுறை

பரிமே:— நாநலம், ஆக்கமும், கேட்டார், திறனறிந்து, சொல்லுக, வேட்பத், சொலல்வல்லன், விரைந்து, பலசொல்லக், இணரூழ்த்து.

மணக்:— சொல்லுக, விரைந்து, வேட்பத், கேட்டார், ஆக்கமும் பலசொல்லக், இணரூழ்த்து, சொலல்வல்லன், திறனறிந்து, நாநலம்.

பரிதி:— கேட்டார், திறனறிந்து, நாநலம், சொல்லுக, பலசொல்லக், இணரூழ்த்து, விரைந்து, சொலல்வல்லன், வேட்பத், ஆக்கமும்.

காளிங்:— கேட்டார், வேட்பத், விரைந்து, திறனறிந்து, சொல்லுக, பலசொல்லக், நாநலம், சொலல்வல்லன், இணரூழ்த்து ஆக்கமும்.

66. வினைத்தூய்மை.

தொகுப்புரை:

[துணையின் நன்மை செல்வத்தைக் கொடுக்கும். வினையினது நன்மை எல்லாவற்றையும் தரும். அரசர்க்குப் புகழும் புண்ணியமும் தாராத காரியங்களை அமைச்சர் எக்காலத்தும் இயற்றுதல் கூடாது. மதிப்பைக் குறைக்கும் காரியங்களை மந்திரிகள் எஞ்ஞான்றும் ஒழிக. அசையாத அறிவாற்றலையுடையவர்கள் துன்பத்திற் சிக்கினும் இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள். 'என்ன செய்துவிட்டோம்' எனப் பின் இரங்கத்தகும் காரியங்களை ஒருவன் செய்யாதொழிக. ஒருக்கால் மயங்கிச் செய்யின் கழிவிரக்கப்படாதொழிதல் நன்று. தாயின் பசியைக்கண்டு இரங்கும் வறுமையனாயினும் பெரியோர்கள் பழிக்கும் காரியங்களைச் செய்தல் கூடாது. பழி தாங்கும் செல்வத்திலும் மிக்க வறுமையே மேலானது. நூல்கள் விலக்கியகாரியங்களை அமைச்சர்களும் செய்யாது விலக்கவேண்டும். மீறிச்செய்து முடித்தாலும் அது துன்பமேதரும். பிறர் அழப் பிடுங்கிக்கொண்ட செல்வங்கள் இவர்களை அழவைத்துப் பிரிந்துபோம். நல்வழியில் ஈட்டிய பொருளை விதியால் இழப்பினும், பின் அது நன்மையையேபயக்கும். தீயவழியில் பொருள்தேடிச் சேர்த்துவைத்தல் சுடாத மட்கலயத்தில் தண்ணீர்வைத்தது போலாம்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது செய்யப்படும்வினைகள் பொருளேயன்றி அறமும் புகழும் பயந்து நல்லவாதல். சொல்லேயன்றிச் செயலும் நன்றாக வேண்டும் என்கின்றமையின், இது சொல்வன்மையின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— வினைத்தூய்மையாவது செய்யும் வினையைக் குற்றம் பயவாமற் செய்தல். மேல் சொல்லுங்கால் சொல்வதையும் பிறர் விரும்புமாறு சொல்லல் வேண்டும் என்றார்; செய்வதையும் அவ்வாறு செய்ய வேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— வினைத்தூய்மையாவது காரியம் செய்வதின் திருத்தம் கூறுதல் எ - று.

651. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
*வேண்டிய எல்லாம் தரும். (க)

உரைப்பகுதி:

பரிமே:— துணை நலம் ஆக்கம் தரூஉம் - ஒருவனுக்குத் துணையது நன்மை செல்வம் ஒன்றனையும் கொடுக்கும்; வினை நலம் வேண்டிய எல்லாம் தரும் - அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையும் கொடுக்கும்.

வேண்டியவெல்லாம் என்றது இம்மைக்கண் அறம் பொருள் இன்பம் முதலாயவற்றையும், மறுமைக்கண் தான்விரும்பிய பதங்களையும். இதனான் காணப்படும் துணைநன்மையினும் கருதப்படும் வினைநன்மை சிறந்தது என வினைத்தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— துணைநலம் ஆக்கத்தைக் கொடுக்கும்: வினைநலம் அவ்வளவேயன்றி, வேண்டிய எல்லாவற்றையும் ஒருங்கு கொடுக்கும் எ - று.

துணைநலம் ஆக்கங் கொடுத்தல் எல்லாரானும் அறியப்படுதலின், ஈண்டு ஏதுவாக வந்தது.

பரிதி:— நல்லோருறவு ஆக்கம் தரும்; செய்யும் காரியமும் முன் பின்பார்த்து நன்மையே செய்வானாகில் வேண்டியவெல்லாம் தரும் எ - று.

காளிங்:— ஒருவர்க்குத் துணைவலியாய் உள்ள நன்மையானது அத்துணைநலத்து ஆக்கமே தரும்: அதனை வினைத்தூய்மையாகிய இது தாம் விரும்பிய பயன் எல்லாம் ஒரு தன்மைப்படத் தரும் எ - று.

குறிப்பு:

துணை நலந்தருவது இம்மைப்பயனாகிய பொருள் ஒன்றே. வினைநலம் இருமைக்கும் வேண்டிய எல்லாவற்றையும் தரும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

*"வேண்டிய தெல்லாம் ஒருங்கு" காளிங்கர் பரிப்பெருமாள் பாடம்.

652. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— புகழொடு நன்றி பயவா வினை - தம் அரசனுக்கு இம்மைக்கண் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை, என்றும் ஒருவுதல் வேண்டும் - அமைச்சர்க்கு எக்காலத்தும் ஒழிதல்வேண்டும்.

பெருகல், சுருங்கல், இடைநிற்றல் என்னும் நிலைவேறுபாடு காலத்தான் வருதலின், என்றும் என்றார். வேண்டும் என்பது, ஈண்டு இன்றியமையாது என்னும் பொருட்டு.

மணக்:— எல்லாக் காலமும் தவிர்தல் வேண்டும்; புகழோடு நன்மை பயவாத வினையை எ - று.

என்றும் என்றது செயலற்ற காலம் என்றது.

பரிப்:— இது முதலாகக் கடிய வேண்டுவன கூறுகின்றார் ஆதலின், முற்பட அறமும் புகழும் பயவாத வினையைத் தவிர்க என்றது.

பரிதி;— என்றென்றும் கைவிடவேணும் ஆக்கமும் புகழும் தாராத காரியத்தை எ - று.

காளிங்:— எஞ்ஞான்றும் குறிக்கொண்டு தவிர்தல்வேண்டும்; யாதினை எனின் புகழுடன் தனக்கு நன்மையைப் பயவாத கருமத்தை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"பொருள்பயந் திடினும் அறம்புகழ் பயவாப் புரைபடுவினைஎன்றும் புரியார்."
—விநா. அரசி. 107.

முதுமொழிவெண்பாக்கள் :

"ஈன்றாள் பசிகொண் டிருந்தாலும் சோலையெல்லாம்
தேன்தாவும் கோவைத் தினகரா - சான்றோருக்(கு)." —தினகர. 69.

குறிப்பு:

நல்லவினையை அறிவது எப்படி என்பார்க்கு, பலரால் புகழப்பெறுவதும் செய்யப்பெற்றவனுக்கு நன்மையை விளைப்பதும் ஆகிய பயனால் அறிக என வரையறுத்தவாறு.
—தொகுப்பாசிரியர்.

653. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— ஆதும் என்னும் அவர் - மேலாகக்கடவேம் என்று கருதுவார், ஒளிமாழ்கும் வினை செய் ஓஒதல்வேண்டும் - தம் ஒளிகெடுதற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க.

ஓதல்வேண்டும் என்பது ஒருசொல்நீர்மைத்து, ஓவுதல் என்பது குறைந்து நின்றது. ஒளி - தாமுள காலத்து எல்லாரானும் நன்குமதிக்கப் படுதல். செய் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது. அன்றிச் செய்வினை என வினைத்தொகையாக்கியவழிப் பொருளின்மை அறிக. ஒளி கெடவருவது ஆக்கமன்று என்பதாம்.

மணக்:— தமக்குப் புகழ்கெடவரும் வினையைச் செய்தலையும் ஆக்கங் கருதுவார் தவிர்க எ - று.

இது முன்புள்ள புகழ் கெடவரும் வினையையும் தவிர்க என்றது.

பரிப்:— ஓஒதல்வேண்டும் என்றது ஓவுக என்னும் பொருட்கண் ஓவுதல் வேண்டும் என ஒரு சொல்நீர்மைப்பட வந்தது.

பரிதி:— அரசர்க்கு ஆகாத காரியம் கண்டால் ஓவென்று நொந்து கொண்டு அந்தக்காரியத்தைக் கைவிடுவான் எ - று.

காளிங்:— தூய்மை அல்லாத வினைசெய்தார்க்குக் கெடுதி உறுதி ஆகலான், அதனை ஒழியவேண்டும்; யார் எனின், இருமைக்கண்ணும் ஆக்கம் பெறக்கடவேம் யாம் என்னும் அறிவினை உடையோர் எ - று.

ஒளிமாழ்கும் செய்வினை என்பது முன்பு தமக்கு நின்ற ஒளி கெடுமாறு செய்யும் வினை என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஓஒதல் என்பது, "அடியளந்தான் தாவியது - தாயது" (610) என்றாற்போல் இடைக்குறைந்தது, வினை செய்தலை என்றதனால் முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— இக்குறளை எடுத்துக்காட்டி, பல்லோர் படர்க்கை யாதலின், வேண்டும் என்னும் முற்றுச்சொல்கொண்டு முடியாமையின், ஆக்கங் கருதுவார் இவ்வாறு செய்தல் வேண்டும் என வேண்டிக் கோடற் பொருட்கண் வியங்கோள் ஈறுதிரிந்தது என்பர். (தொல். சொல். 219,)

சிவஞான:— வேண்டும் என்னும் சொல்லும் ஐம்பால் மூவிடத்தும் வரும் என்பதற்கு மேற்கோள். (நன். 339.)

சுவாமி:— வேண்டும் தகும் படும் என்பன செய்யும் என்னும் வாய்பாடன்றோ எனின் 'ஓஒதல் வேண்டும்........அவர்' என உயர்திணைப் பல்லோர் படர்க்கைக்கண் வருதலின் அவ்வாய்பாடு அன்று என்பர். (இ. கொ. 85.)

காரி:— ஆதும் என்பது மேலாகக்கடவோம் என்னும் உளப் பாட்டுத் தன்மையில் வந்த எதிர்கால முற்றுவினைச் சொல்லாதற்கு மேற்கோள். (மாற. 261.)

யா - வி:— அளபெடை இயைபுத்தொடைக்கு மேற்கோள். (சூ, 40.)

654. இடுக்கண் *படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். (௪)

உரைப்பகுதி:

பரிமே:— இடுக்கண் படினும் இளிவந்த செய்யார் - தாம் இடுக்கணிலேபடவரினும், அது தீர்தற்பொருட்டு முன் செய்தார்க்கு இளிவந்த வினைகளைச் செய்யார், நடுக்கு அற்ற காட்சியவர் - துளக்கமற்ற தெளிவினை உடையார்.

சிறிது போழ்தின் கழிவதாய இடுக்கண் நோக்கி, எஞ்ஞான்றும் கழியாத இழிவு எய்தற்பாலதன்று என்பதூஉம், அஃது எய்தினும் வருவது வரும் என்பதூஉம் தெளிவாராகலான், செய்யார் என்றார்.

மணக்:— துன்பம் வரினும் இழிவாகிய வினைகளைச் செய்யார், துளக்கமற்ற தெளிவுடையார் எ - று.

*'வரினும்' மணக்குடவர் பாடம்.

இது பிறரால் இகழப்படுவன செய்யற்க என்றது. இத்துணையும் கடியவேண்டும் என்பது கூறப்பட்டது.

பரிதி:— தாம் இடுக்கண் உற்றாலும் இழிவான காரியம் செய்யார் திடபுத்தியுள்ளவர் எ - று.

காளிங்:— இதன் தன்மை இது ஆகலான் தாம் பெரிதும் வறுமை ஆகிய இடர் உறினும் அதனையுற்று, அமைவது அன்றி மற்று அது ஒழித்தல் காரணமாகப் பெரிதும் இளிவந்தனவாகிய வினையைச் செய்யத் துணியார்; யார் எனின் ஆக்கமும் கேடும் அனுபவித்தல் கடன் என்று நெஞ்சில் கலக்கம் அற்று அமைந்த அறிவினை உடையவர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" அழகலாதன செயேல்." —ஆத்தி. 28.

முதுமொழிவெண்பாக்கள்:

"வேள்வியிற்கோ வூனுகர்ந்தும் வேடரில்தாழ்ந் தேழ்மறையோர்
மூள்விதனம் உற்றார் முருகேசா - நீள்வின்." —முருகேசர். 66.

குறிப்பு:

'ஆபத்திற்குத் தோஷமில்லை' என்பது பழமொழியாதலின் துன்பமிக்க காலத்தும் இழிவான செயல்களைச் செய்தலாகாது என்றவாறு. நடுக்கு+காட்சி கணந்தோறும் தடுமாறும் அறிவு. நடுக்கற்ற அறிவு - துணிவான அறிவு.

—தொகுப்பாசிரியர்.

655. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— எற்று என்று இரங்குவ செய்யற்க - யான் செய்தது எத்தன்மைத்து என்று பின் தானே இரங்கும் வினைகளை ஒருகாலும் செய்யாது ஒழிக: செய்வானேல் மற்று அன்ன செய்யாமை நன்று - அன்றி ஒருகால்மயங்கி அவற்றைச் செய்யுந்தன்மையன் ஆயினுமயின் பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யாது ஒழிதல் நன்று.

இரங்குவ என முன்வந்தமையின் பின் அன்ன எனச் சுட்டி ஒழிந்தார். அவ்வினைகளது பன்மையான், இரக்கமும் பலவாயின. அச் செயற்குப் பின்னிருந்து இரங்குவானாயின்; அது தீரும் வாயில் அறிந் திலன் எனவும், திட்டமிலன் எனவும், பயனில்லன செய்கின்றான் எனவும், தன் பழியைத் தானே தூற்றுகின்றான் எனவும், எல்லோரும் இகழ்தலின் பின்னிரங்காமை நன்று என்றார். இதுவும், வினைத்தூயார் செயலாகலின், உடன் கூறப்பட்டது. பிற்றொடருக்குச் செய்வானாயின் அவைபோல் வனவும் செய்யாமை நன்று எனப் பிறரெல்லாம் இயைபற உரைத்தார்.

மணக்:— துணியப்பட்டதென்று பின் இரங்கப்படும் வினைபைச் செய்யா தொழிக; வினைசெய்வானாயின், அவைபோல்வனவும் செய்யா மையே நல்லது எ - று.

இது பின்னிரங்கப்படும் வினையைச் செய்யலாகாது என்றது.

பரிதி:— என்னகாரியம் செய்தோம் என்று பின்பு விதனப் படாத காரியமே *செய்வான் மறுத்து நல்லகாரியம் செய்வான் எ - று.

காளிங்:— இவை தகாது என்று அஞ்சாது நெஞ்சில் துணிவு கொண்டு பிறர் சோகிக்கத் தகுவனவாகிய தூயதுஅல்லாத கருமங்களைச் செய்யாது ஒழிக; இங்ஙனம் இதனைக் குறிக்கொண்டு செய்வான் ஆயினும், செய்யும் கருமம் செய்யும் இடத்தும் பிறர்க்கு இரக்கம் வருதல் செய் யாமையே நன்று எ - று.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— எற்றம் என்ற உரிச்சொல் துணிவுப் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 332.)

ஒப்புமைப்பகுதி:

"முன்கோபம் பின் இரக்கம்." —பழ

முதுமொழிவெண்பாக்கள் :

"தக்கன்உனை எள்ளிமகம் சாடும்போ தெண்ணிஎண்ணித்
துக்கமுற்றான் ஆவதென்னே சோமேசா - எக்காலும்."

—சோமேசர். 66.

---

*'செய்க: மற்ற காரியத்தைத் தவிர்க்க' என்பது பழைய உரை.

குறிப்பு:

கழிவிரக்கப்படத்தக்க காரியங்களைத் தவறி ஒருமுறை செய்துவிட்டாலும், மீட்டும் அத்தகைய காரியங்களைச் செய்யாது ஒழிக எனவும் பொருள்காண்பர். பரிமேலழகர் அன்ன என்பதற்கு அத்தகைய கழிவிரக்கம் என்று மட்டும் பொருள் கண்டு, செய்தபின் வருந்துவதால் வருந்தீமைகளை விலக்குவர்.

—தொகுப்பாசிரியர்.

656. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (சா)

உரைப்பகுதி :

பரிமே:— ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் - தன்னைப் பயந்தாளது பசியை வறுமையால் கண்டு இரங்கும் தன்மையனாயினான் எனினும், சான்றோர் பழிக்கும் வினைசெய்யற்க - அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிக.

இறந்த மூப்பினராய இருமுதுகுரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயனபலவும் செய்தாயினும் புறந்தருக என்னும் அறநூற் பொதுவிதி பொருள்நூல்வழி ஒழுகுதலும் அரசர்தொழிற்குரியராதலும் நன்கு மதிக்கற்பாடும் உடைய அமைச்சர்க்கு எய்தாமைபற்றி, இவ்வாறு கூறினார். இவை ஐந்து பாட்டானும் பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க என்பது கூறப்பட்டது.

மணக்:— தன்னைப் பயந்தாள் பசி கண்டானாயினும், சான்றோரால் பழிக்கப்படும் வினையைச் செய்யாதொழிக எ - று.

இது நல்லோர் பழிக்கும் வினையைத் தவிர்க என்றது.

பரிதி:— மாதாவின் பசியைப்பார்த்தாலும் பெரியோர் பழிக்கும் காரியம் செய்வானல்லன் எ - று.

காளிங்:— ஈன்ற தாய் முதல்தெய்வம் என்று மறை மொழிதலானும் தன்னை ஈன்றாளை முன்னம் வணங்கி வழிபடுதல் யாவர்க்கும் கடன் ஆகலானும், மற்று இவள் பசி கண்டு இரங்கா நெஞ்சினன் ஆதல் மிகவும் தீவினை: மற்று அது யாம் கண்டு பொறுத்திருப்பதும் அன்று: அதனால் முழுதும் உணர்ந்த சான்றோர் பழிக்கும் பழிதரு வினைகளைச் செய்தலே மிகவும் தீது எ - று.

ஒப்புமைப்பகுதி :

"இருமுது குரவர் கற்புடை மகளிர் இளமகவு இவர்பசித் திடினும்
பெருமிதப் படாத வினைசெயார் உலகு பேணுநர்க் கேமஞ்செய்
அமைச்சர்." —விநா. அரசி. 107.

"கௌவை அகற்று." —ஆத்தி. 43.

குறிப்பு:

தாயைப் பட்டினிபோடுதலைக்காட்டினும் கொடியது சான்றோர் பழிக்கும் வினை என்பதாம். தாய்ப்பசி தன்மனத்தை வாட்டும். பழிக்கும் வினை ஊர் அறியத் தூற்றிவைக்கும் ஆதலால் செய்யற்க என்றது.

—தொகுப்பாசிரியர்.

657. பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் - சாலாதார் தீயவினைகளைச் செய்து அதனால் பழியைத் தம்மேற்கொண்டு பெற்றசெல்வத்தின், சான்றோர் கழி நல்குரவே தலை - அதுமேற்கொள்ளாத சான்றோர் அநுபவிக்கும் மிக்க நல்குரவே உயர்ந்தது.

நிலையாத செல்வத்தின்பொருட்டு நிலையின பழியை மேற்கோடல் சால்போடு இயையாமையின், சான்றோர் கழிநல்குரவே தலை என்றார்.

மணக்:— பழியைச் சுமந்து எய்திய ஆக்கத்தினும், சான்றோர் மாட்டு உளதாகிய மிக்க நல்குரவே தலைமையுடைத்து எ - று.

மேற் கூறியவாறு செய்யின் நல்குரவு உளதாகும் என்றார்க்கு இது கூறப்பட்டது.

பரிப்:— பழிப்பினாலே மிகுதியாக எய்துகிற ஆக்கத்தின் சான்றோர்க்குப் பெருமிடியே தலை எ - று.

பரிதி:— பொல்லாங்கான காரியத்தைச்செய்து அதனால் வந்த இன்பத்தை அநுபவிப்பதில் நன்மைசெய்து மிடியை அநுபவிக்கை நன்று எ - று.

காளிங்:— இங்ஙனம் சான்றோர் பழித்த வினைகளைத் தானும் தகாது என்று உடன்பட்டு, மற்று அவற்றினைச் செய்யத்தவிராது மற்று அவர் உரைத்த நீதிக்கு எதிர் மலைந்து இயற்றி, மற்று அதனால் தான் எய்துவ்தாகிய செல்வத்தினும், தனக்கு மிக்க வறுமை தானே பெரிதும் தலைப்பாடு உடைத்து எ - று.

மலைதல் என்பது மாறுபடுதல்.

மேற்கோள்பகுதி:

இளம்:— புறப்பொருட்கண் அறக்கழிவுடையன பகைவர் தேளத்து நிரைகோடலும் அழித்தலும் போலப் பொருட்பயன் காரணத் தான் நட்டோர் தேளத்துச் செயல். இவையும் பொருள் பயப்பினும் வழக்கென வழங்குதலாகா என்றவாறு. இதுவும் ஓர் முகத்தான் நீதி கூறியவாறு. 'பழிமலைந்......தலை' எனவரும். (தொல்: பொருள். 214.)

ஒப்புமைப்பகுதி:

"சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே - தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மாணிழாய் மோரின்
முதுநெய்தீ தாதலோ இல்." —பழ, நா.

குறிப்பு:

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாததுபோல சான்றோர் வறுமையுற்ற காலத்தும் பழிப்படுவசெய்யார். ஆதலின் நல்குரவு தலையாயிற்று. கீழோர் வறுமை எய்தின் செய்யாதன செய்தும் வயிறுகழுவ முற்படுவர். இவர் அங்ஙனம் ஆகார் என்பது.

—தொகுப்பாசிரியர்.

658. கடிந்த கடிந்தொரார் *செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— கடிந்த கடிந்து ஓரார் செய்தார்க்கு - நூலோர் கடிந்த வினைகளைத் தாமும் கடிந்து ஒழியாது பொருள் நோக்கிச் செய்த அமைச்சர்க்கு, அவைதாம் முடிந்தாலும் பீழைதரும் - அவை தூயவன்மையின் முடியா, ஒருவாற்றான் முடியினும் பின் துன்பத்தையே கொடுக்கும்.

*'செய்வார்க்கு' மணக்குடவர் பாடம்.

முடிதல் - கருதிய பொருள் தருதல். பீழைதருதலாகிய பொருளின் தொழில் அதற்குக் காரணமாய வினைகள்மேல் ஏற்றப்பட்டது.

மணக்:— நல்லோரால் கடியப்பட்டவற்றைக் கடிந்து நீக்காது செய்யுமவர்க்கு, அவ்வினைகள் தாம் கருதியவாற்றான் முடிந்த பின்பும் பீழையைத் தரும் எ - று.

இது நன்மையல்லாத வினையைச் செயின், அது தீமை தரும் என்றது. அவை பின்பு காட்டப்படும்.

பரிப்:— உம்மையால் முடிவதன் முன்னும் பீழை தரும் என்றது.

பரிதி:— காரியமல்லாத காரியத்தைக் கடிந்து நல்ல காரியம் செய்வான், காரியமல்லாத காரியம் முடிந்தாலும் பின்பு பீழைவரும் எ. று.

காளிங்:— இவை இவை செய்யத்தகா என்று சான்றோர் கடிந்தனவாகிய வினைத்தீமைகளைத் தாமும் கடிந்து நீக்காது செய்வார் யாவர்? மற்று அவர்க்கு அவை தாம் கருதியாங்கு முடிந்தாலும் பெரிதும் இடரைத் தருவதன்றிப் பெருமை பெறுதல் அரிது எ - று.

கடிந்த என்பது செய்யத்தகாதன என்றது. ஒரார் என்பது நீங்கார் என்றது.

இனி, மற்று இங்ஙனம் அரசர்க்கு அரும்பொருள் உரைக்கும் சொல்வன்மை உறுதி உடையாராகிய அமைச்சர், மற்று அச்சொல் லினுல் அரசர் செய்யும் வினையினது தூய்மையும் ஆராய்ந்த இடத்தும், அவற்றுள் நல்லனவற்றைப் பின்பு ஐயுறாது செய்யவேண்டும் ஆதலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

மேற்கோள்பகுதி:

சேனா:— கடி என்னும் உரிச்சொல் வரைவுப்பொருளில் வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 378.)

தெய்வச்:— ஷை

நச்:— ஷை (தொல். சொல். 383.)

முதுமொழிவெண்பாக்கள் :

" தன்மகனைற் றேற்றான் தரணியைக் கைகேயி
என்மகற்கு நல்கென் றிரங்கேசா - நன்மை."

—இராம். 66.

659. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— அழக்கொண்ட எல்லாம் அழப்போம் - ஒருவன் தீய வினைகளைச் செய்து பிறர் இரங்கக்கொண்ட பொருளெல்லாம் இம்மையிலே அவன்தான் இரங்கப் போகாநிற்கும், நற்பாலவை இழப்பினும் பிற் பயக்கும் - மற்றைத் தூயவினையான் வந்த பொருள்கள் முன் இழந்தா னாயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும்.

பின் எனவே மறுமையும் அடங்கிற்று. பொருள்களான் அவற் றிற்குக் காரணமாய வினைகளது இயல்பு கூறியவாறு.

மணக்:— பிறர் அழக்கொண்ட பொருள்களெல்லாம் தாமும் அழப்போம்; அவ்வாறன்றி அறப்பகுதியால் கொண்ட பொருள்கள் இழந்தாராயினும், பின்பு பயன்படும் எ - று.

இது தேடினபொருள் போம் என்றது.

பரிதி:— பிறர் அழக்கொண்ட பொருள் தன்னையும் அழப் பண்ணிப்போம்; இழந்தாலும் பின்னேவந்து கைகூடும் நீதியால்தேடும் பொருள்; என்பதனால் நல்வினையால் பொருள் தேடுவான் எ - று.

காளிங்:— தாம் பிறரைச் செறுத்தும் உறுத்தும் அவர் நெஞ்சு புழுங்கி அழுமாறு வலியினால் வவ்விக்கொண்ட பொருள் அனைத்தும் தாமும் அவ்வாறு அழும்படி, போய்விடும்: இனி இவ்வாறன்றி முன்னம் தமக்கு உளதாகிய பொருளினை ஒருவாற்றான் இழந்தாராயினும், பின்னும் உளதாய்ச் செல்லும் நற்கூறாகிய வினையினான் இயற்றும் பொருளானவை எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நற்பாலவை பிற்பயக்கும் என்றதற்கு, நற்பாலவை தானேபயக்கும் என்று, தன்வினையாய் உரையாமல் பின்வந்து கொடுக்கும் என்று, பயனைச் செயப்படுபொருளாக்கினார். இவ்வுரையாசிரியர்க்குப் பயக்கும் என்பது, செயப்படு பொருளடைந்த சொல். "இருணீங்கி யின்பம் பயக்கும்" (352) என்பதனுள் காட்சி என்பதனை எழுவாயாக்கினதும் காண்க. இதனை வடநூலார் சகன்மகம் என்பர்.

முதுமொழிவெண்பாக்கள் :

"சூரனிழுந் தானிழுந்தான் சோதியரு ளுந்தாய
ளுர் இழுந்த எல்லாம் அடையுமே - தேரின்." —முதுமொழி. 104.

"சோர்கோன் நீதித் திரவியங்கள் சுந்தரர்பால்
சோரர் கவர்ந்தொளித்தும் சோர்வுண்டோ - பார்க்கில்."
—திருத். 62.

குறிப்பு:

பொருளுக்கு வரவும் இழப்பும் இயல்பாயினும், அழக்கொண்டபொருள் இழப்பின்கண் அழவைக்கும். நல்வழியீட்டிய பொருள் இழப்பின்கண்ணும் இனிமை தரும் என்பதுமாம்.

—தொகுப்பாசிரியர்.

660. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. (௬0)

உரைப்பகுதி:

பரிமே:— சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் - அமைச்சன் தீயவினைகளால் பொருள் படைத்து அதனல் அரசனுக்கு ஏமஞ்செய்தல், பசுமண் கலத்துள் நீர்பெய்து இரீஇயற்று - பசியமட்கலத்துள்ளே நீரைப் பெய்து அதற்கு ஏமஞ்செய்ததனேடு ஒக்கும்.

மூன் ஆக்கம் பயப்பனபோல் தோன்றிப் பின் அழிவே பயத்தலால், அவை சலம் எனப்பட்டன. ஏமமார்த்தல் என்பது ஏமார்த்தல் என்ருயிற்று. ஏமத்தை அடையப்பண்ணுதல் என்றவாறு. இருத்துதல்-நெடுங்காலம் இருப்பச் செய்தல். அரசனும் பொருளும் சேரப்போம் என்பதாம். பிறரெல்லாம் ஏமாத்தல் என்றும் *பாடம் ஓதி, அதற்கு மகிழ்தல் என்றும், இரீஇயற்று என்பதற்கு வைத்தாற்போலும்என்றும் உரைத்தார்; அவர் அவை தன்வினையும் பிறிதின்வினையுமாய் உவமையிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர். இவை நான்கு பாட்டானும் அதற்குக் காரணம் கூறப்பட்டது.

*இவ்வாறு பாடங் கொண்டவர் மணக்குடவர் காளிங்கர் முதலியோர்.

மணக்:— வஞ்சத்தாலே பொருள்தேடி மகிழ்ந்திருத்தல், பசுமட் கலத்திலே நீரை மூகந்துவைத்த தன்மைத்து எ - று.

இது தானும் பொருளுங் கூடிக் கெடும் என்றது.

பரிதி:— அநீதியினால் தேடும்பொருள் தன்னையும் கெடுத்துத் தானும் போம்; எப்படி என்றால் பச்சைமண் பாத்திரத்தில் வார்த்த தண்ணீரும் பாத்திரமும் கெட்டாற் போலே எ - று.

காளிங்:— இது நமக்கு உறுதி அன்று என்று கருதாது பிறரொடு சலம் பற்றிக்கொண்டு மற்று அதனால் பொருளினைச்செய்து யாம் உடையம் என்று இறுமாந்திருத்தல் எத்தன்மைத்தோ எனின், மண்ணால் வனைந்துள வாகிய பசுங்கலத்தினகத்து நீரினைப் பெய்து இருத்திய அத்தன்மைத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— இரீஇ என்பதனை இருத்தி எனப் பிறிதின் வினையாக்கிப் பட்சாந்தரத்தைத் தூஷித்தார். "நன்கிரீஇ யாண்டும் பிறிது யாது நோக்கான்" (ஆசாரக். 20.) என முள்ளியார் தன்வினையாக்கினாராதலால், இவ்வுரையாசிரியர் கருத்து, எம்மனோர்க்கு அறிதல் அரிது என்க.

மேற்கோள்பகுதி :

பெருந்:— ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு வந்ததற்கு மேற்கோள். (வீர. 34)

அநுமானத்திற்கு மேற்கோள். (ஷை. 180.)

ஒப்புமைப்பகுதி :

"பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல." —குறுந். 29.

முதுமொழிவெண்பாக்கள்:

"மைந்தன்முடி மண்ணிலிட்டான் மாள்களனக் கைவிரித்த
சிந்துபதி பட்டான் சிவசிவா - தந்தம்." —சிவசிவ. 66.

குறிப்பு:

வஞ்சனையாற் பொருளீட்டிப் பாதுகாத்தல் பொருள். பசுமட்கலத்துள் நீர்பெய்துவைத்தல் உவமை. ஏமார்த்தல் என்ற தொழில் பொருளீட்டுவானுடைய தொழிலாதலின் தன்வினையேயாம். நீர்பெய்து இரீஇயற்று என்பதும் அங்ஙனமே. ஆதலால் உவமையும் பொருளும் ஒத்தவினையாகவே பொருந்தின. பரிப்பெருமாள் காளிங்கர் இருவரும் ஏமாத்தல் எனப்பாடங்கொண்டனர். அதற்குப் பொருள் இறுமாந்திருத்தல், மகிழ்தல் என்பதாம். பொருள் செய்தலுக்கு, நீர் பெய்தலும், ஏமார்த்தலுக்கு இருத்துதலும் ஒப்பு. இவற்றுள் மகிழ்தல் தன்வினை; இருத்துதல் பிறவினை. ஆதலால் உவமைவினையும் பொருள்வினையும் தம்முள் இயையாமை காண்க. அதனால் உவமையிலக்கணத்தோடு மாறுகொண்டது என மறுத்தார் பரிமேலழகர். அரசர்க்கு ஏமஞ்செய்தல் என்றது. வஞ்சனையாற் பொருள் செய்து தனக்குச் சேமமாக வைத்துக்கொள்ளுதல் எனவும் பொருள் காண்பர் சிலர். நுண்பொருண்மாலை ஆசிரியர் 'இரீஇ' என்பதற்குத் தன்வினையாக வந்ததற்கும் மேற்கோள் காட்டி இவ்வுரையாசிரியர் கருத்து எம்மனோர்க்கறிதல் அரிது என்றார். ஈண்டும் பச்சை மண் கலத்துள் நீர்பெய்து (நீரைச் சேமித்துவிட்டோம் என்று மகிழ்ந்து) இருந்தாற் போலும் எனப் பொருள் செயின் அக்குறையும் பரிகரிக்கப் பெறும். காளிங்கர் இருத்தி எனப் பொருள் செய்தமையின் பரிமேலழகர் அதனை மறுத்தாரேயன்றி இரீஇ என்பது தன் வினையில்வாராதென்பது அவர்க்குக் கருத்தன்று.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— துணைநலம், என்றும், ஓஒதல், இடுக்கண், எற்றென்று, ஈன்றாள், பழிமலைந்து, கடிந்த, அழக்கொண்ட, சலத்தால்.

மணக்:— துணைநலம், என்றும், ஓஒதல், எற்றென்று, ஈன்றாள், இடுக்கண், கடிந்த, அழக்கொண்ட, சலத்தால், பழிமலைந்து.

பரிதி:— என்றும், ஓஒதல், இடுக்கண், ஈன்றாள், அழக்கொண்ட, சலத்தால், எற்றென்று, துணைநலம், பழிமலைந்து, கடிந்த.

காளிங்:— என்றும், ஓஒதல், எற்றென்று, ஈன்றாள், பழிமலைந்து, இடுக்கண், துணைநலம், சலத்தால், அழக்கொண்ட, கடிந்த.

67. வினைத்திட்பம்.

தொகுப்புரை:

[வினையுறுதியாவது மனவுறுதியே. ஏனையவை உறுதியென்று உரைக்கப் படா. பழுதுபடாத காரியங்களைச் செய்தலும், விதிவசத்தால் பழுது வரின் மனம் தளராமையும் ஆராய்ந்தறிந்த அமைச்சரது துணிபு. ஒருகாரியத்தை முடியும்வரை இரகசியமாகச்செய்து முடிப்பதே ஆண்மை. நடுவில் வெளிப்பட்டுவிடின் விளையும் தீமைகள் பல. யாருக்கும் பேசுதல் எளிது. பேசியவண்ணம் செய்தல் அருமை. தனிப்பெருமையோடு விளங்கும் அமைச்சர்களின் உறுதி அரசற்கு ஆக்கமளிப்பதால் மிகப் பாராட்டப்பெறும். ஆராயும் அமைச்சர்கள் வினைக்கண் உறுதியுடையராயின் எண்ணியபொருளை எண்ணியபடியே எய்துவர். பெரிய தேரைச் சிறிய கடையாணி தாங்கி நடத்துவதுபோல வடிவிற்சிறியராய் அறிவிற்பெரியாரை உடையது உலகம்; ஆதலால் யாரையும் வடிவத்தால் இகழலாகாது. தெளிந்த அறிவோடு செய்யத் துணிந்த காரியத்தைத் தாமதியாது செய்துமுடிக்க. துன்பங்கள் தொடர்ந்துவரினும் இறுதியில் இன்பம் பயக்கும் காரியத்தை உறுதியுடன் செய்க. எவ்வளவு உறுதி எவ்வெவற்றிலிருப்பினும் வினைக்கண் உறுதியில்லாரை உலகம் விரும்பாது.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— *அஃதாவது அத்தூயவினை முடிப்பானுக்கு வேண்டுவதாய மனத்திண்மை. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.*

மணக்:— *வினைத்திட்பமாவது வினையின்கண் திண்ணியராதல். மேல் நல்வினையைச் செய்யவேண்டும் என்றார். அது செய்யுங்கால் திண்ணியராகிச் செயல் வேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.*

பரிதி:— *வினைத்திட்பமாவது காரியத்தினால் திடம்பெற்று நிற்றல் எ - று.*

661. *வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்*
மற்றைய எல்லாம் பிற. (க)

உரைப்பகுதி:

பரிமே:— *வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத் திட்பம் - வினை செய்தற்கண் திண்மை என்று சொல்லப்படுவது அதனை முடித்தற்கு உரியானொருவன் மனத்தினது திண்மை; மற்றைய எல்லாம் பிற - அஃது ஒழிந்தன எல்லாம் அதற்குத் திண்மை என்று சொல்லப்படா.*

ஒழிந்தனவாவன - படை, அரண், நட்பு முதலியவற்றின் திண்மைகள். அவையும் அதற்கு வேண்டுவனவாய் இனமாகலின் மற்றைய என்றும், வேண்டினும் அஃது இல்வழிப் பயனிலவாகலின் பிற என்றும் கூறினர். இதனால் வினைத்திட்பமாவது இன்னது என்பது கூறப்பட்டது.

மணக்:— வினையினிடத்துத் திண்மை என்று சொல்லப்படுவது ஒருவன் மனத்து உண்டான திண்மை: அதனை யொழிய மற்றவை யெல்லாம் திண்மையென்று சொல்லப்படா எ - று.

மற்றவையென்றது கருவியும் உபாயமும். வினைத்திட்பமாவது யாது என்றார்க்கு இது கூறப்பட்டது.

பரிதி:— எடுத்துக்கொண்டகாரியம் முடிவது எப்படி என்றால் திடபுத்தியினாலே முடியும் அல்லது, மற்றைத்திடமான சதுரங்கபெலம் திடமல்ல எ - று.

காளிங்:— வினையின் திட்பமாவது அவ்வினை முடியும் அளவும் உரம் செய்து திற்றல் ஆகலான், அதனை அங்ஙனம் கோலிக்கொண்ட அமைச்சனது மனத்தின்திட்பமே திட்பம் ஆவது: மற்று ஏனையவெல்லாம் பிறவாய் ஒழியும்; செய்வன எல்லாம் வழியழிந்து கெட்டுவிடும் எ - று.

662. ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— ஆய்ந்தவர் கோள் - முன் நீதி ஆராய்ந்த அமைச்சரது துணிபு, ஊறு ஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு என்பர் - பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும் செய்யும்வினை தெய்வத்தால் பழுதுபட்டவழி அதற்குத் தளராமையும் ஆகிய இவ்விரண்டின் வழியென்பர் நூலோர்.

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின் ஈண்டு வினைத்தூய்மையும் உடன் கூறினார். உறுதலுடையதனை முன் ஊறு என்றமையின் உற்றபின் என்றும், இவ்விரண்டின் கண்ணே பட்டதுஎன்பார் இரண்டின்ஆறு என்றும் கூறினார். ஊறொரார் என்று பாடம் ஓதுவாரும் உளர். அஃது ஒல்காமை என்னும் எண்ணோடும் இரண்டு என்னும் தொகையோடும் இயையாமை அவர் அறிந்திலர்.

மணக்:— வினைசெய்யுங்கால் உறும் துன்பத்தை ஓரார் ஆதலும், அவ்விடத்துத் துன்பேமுற்றால் தளரார் ஆதலுமாகிய இவ்விரண்டினது நெறி என்று சொல்லுவார், நீதி நெறியை ஆராய்ந்தவர் எ - று.

பரிப்:— மனத்திட்பமாவது யாது என்றார்க்கு அஃது இரண்டு வகைப்படும் என்று கூறிற்று.

பரிதி:— காரியம் செய்வார் எப்படிச் செய்வார் என்னில் தங்கள் விதனம் பாரார்; விதனம் வந்ததென்று ஒடுங்கார்; இது சாதுரியவான்கள் குணம் எ - று.

காளிங்:— யாதானும் ஒருவினை செய்யும் இடத்து அதற்கு இடையூறு வருவதும் வந்துற்றதுமாய் இருக்கும். அவற்றுள் வருவதாகிய இடையூறு முன்கோலிக் கழியுமாறு செய்தலும், அது அன்றி ஒன்று உற்றதாயின் அதற்கு மனம் தளராமையும் அவ்விரண்டினது நெறி என்று சொல்லுப ஆராய்ந்து அமைந்த அமைச்சரானோர் வினையினது கோட்பாட்டினை எ - று.

மேற்கோள்பகுதி :

இளம்:— சொல்லொடு சொல் தொடர்புபடும் வாய்பாட்டால் தொடராது பிறிதோர்வாய்பாட்டால் தொகுப்பினும் பொருள் தொடர்பு உண்டாயின் பொருள் இயையும்வழி அசைச்சொற்கள் திரியாது நின்ற நிலையே பொருள்படுமாறாயிற்று. 'ஊறொரார்......கோள்' இதுவும் இரண்டு என்னும் தொகைக்கு ஊறொராமை எனப் பொருளுரைக்க வேண்டும் (தொல். பொருள். 193,)

ஒப்புமைப்பகுதி:

"ஊறுசேர் வினையைப் புரிகலார் ஊழால் ஊறுவந் தடுப்பினும் கலங்கார்."

—விநா. அரசி. 108.

குறிப்பு:

மனமாகிய உட்காரணம் இருந்து ஏவ வினை நிகழ்த்தப்பெறுதலின் அவ்வினைக்குத் திட்பம் எனப்படுவது அவ்வினையின் காரணமாகிய மனத்தின் திட்பமே என்பது.

—தொகுப்பாசிரியர்.

663. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை*இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும். (ங)

உரைப்பகுதி :

பரிமே:— கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை - செயப்படும் வினையை முடிவின்கண் புலப்படும்வகை முன்னெல்லாம் மறைத்துச் செய்வதே திட்பமாவது; இடைக் கொட்கின் எற்றாவிழுமம் தரும் - அங்ஙன மன்றி இடையே புலப்படுமாயின் அப்புலப்பாடு செய்வானுக்கு நீங்காத இடும்பையைக் கொடுக்கும்.

மறைத்துச் செய்வதாவது அங்கம் ஐந்து எண்ணியவாறு பிறர் அறியாமலும்; தான் அறிந்ததூஉம், தன் இங்கிதம், வடிவு, செயல், சொற்களான் அவர் உய்த்துணராமலும் அடங்கிச் செய்தல். அத்திட்பம் ஆண்தன்மையான் வருதலின் ஆண்மை எனப்பட்டது. எற்றாவிழும மாவன பகைவர் முன்னறிந்து அவ்வினையை விலக்குதல், செய்வானை விலக்குதல் செய்வாராகலின் அவற்றான் வருவன. விழுமம் சாதிப்பெயர். இவை இரண்டுபாட்டானும் அதனது பகுதி கூறப்பட்டது.

மணக்:— ஒரு வினையைத் தொடங்கினால், முடிவிலே சென்று மீளல் செய்வது ஆண்மையாவது; இடையிலே மீள்வனாயின், அது மிகுதி யைக் கொடாது நோயைக் கொடுக்கும் எ - று.

சென்றுமீளல் சுழல்தல் ஆயிற்று. இது தொடங்கின வினையை முடியச் செய்யவேண்டும் என்றது.

பரிதி:— ஒருகாரியத்தை எடுத்துக்கொண்ட பிரியம்போலே காரியம் முடியுமட்டும் செய்வான்; இடையிலே விக்கினம் வருமாகில், உலகம் பேணாது தனக்கும் புகழில்லையாய்த் துன்பம் வரும் எ - று.

காளிங்:— அமைச்சரானோர் திண்ணிதாகத் தெரிந்து உரைத்த வினையினைக் கைக்கொண்ட அரசர் கடைபோகச் செய்யத்தக்கதே ஆண்மைப்பாடாவது: இனி இவ்வாறன்றி இடைபுரிந்து விடின், நெஞ்சினன் எனத்தொன்றும் கருதப்படாத துயரத்தைத் தரும் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"சீவகன்சீ ருதிருந்தே தெவ்வைஅழித் தான்முடிவின்
மூவுலகும் போற்றும் முருகேசா - யாவும்." —முருகேசர். 67.

---

* 'இடைக்கொட்பின்' காளிங்கர் பாடம்.

664. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— *சொல்லுதல் யார்க்கும் எளிய - யாம் இவ்வினையை இவ்வாற்றான் செய்தும் என நிரல் படச் சொல்லுதல் யாவர்க்கும் எளிய, சொல்லிய வண்ணம் செயல் அரியவாம் - அதனை அவ்வாற்றானே செய்தல் யாவர்க்கும் அரியவாம்.*

சொல்லுதல், செயல் என்பன சாதிப்பெயர். அரியவற்றை எண்ணிச்சொல்லுதல் திட்பமில்லாதார்க்கும் இயறலின், எளிய என்றார் இதனால் அதனது அருமை கூறப்பட்டது.

மணக்:— ஒரு வினையை இவ்வாறு செய்தும் என்று சொல்லுதல் *யாவர்க்கும் எளியவாம்; அதனைச் சொல்லியவாற்றால் செய்து முடித்தல் யாவர்க்கும் அரியவாம் எ - று.*

பரிப்:— மேற்கூறிய இருவகையினும், ஊறு ஒராது செயலின் வகை *கூறுவார் முற்படச் சொல்லியவாறு செய்யவேண்டும் என்று கூறினர்.*

பரிதி:— *சொல்லுதல் யார்க்கும் எளிது; அரியது சொன்னது* போலே காரியம் முடிப்பது எ - று.

காளிங்:— *யாம் வினைத்திட்பம் உடையோம் என்று இங்ஙனம் சொல்லல் யாவர்க்கும் எளிய: மற்று அச்சொல்லிய வண்ணமே செய்து முடித்தல் அரிய ஆகும்: அதனால் அங்ஙனம் முறைவழி செய்யத் திட்பம் உடையோர் வானவருள் ஒருவர் ஆவர் எ - று.*

ஒப்புமைப்பகுதி:

"எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பிற்
கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராளர்." —புறம். 178; 7 - 9.

"செயக்கடவ அல்லனவும் செய்தறுமன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னும் - செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோம் என்று தலைதுமிப்பான் தண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று." —நீதிநெறி. 71.

"அரசியற் குரிய யாவும் ஆற்றுழி ஆற்றி ஆன்ற
திரைசெயற் குரிய சேனை கடலொடும் திங்கள் நான்கின்
விரைசுக என்பான் நின்னை வேண்டினன் வீர என்றான்
உரைசெயற் கெளிது மாகி அரிதுமாய் ஒழுக்கில் நின்றான்."
—கம்ப. அரசி. 44,

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயலென்று - மெல்லியலைக்
கொண்டு மனையில் குறுக........." —திருவெங்கை உலா. 411.

"சொல்லலாம் இருந்துழிச் சொன்ன சொற்படி
வெல்லலாம் என்பது விதிக்கும் கூடுமோ
மல்லலா ளியைப்பல வளைந்து கொள்ளினும்
கொல்லலா யிருக்குமோ குஞ்ச ரங்களால்." —வில்லி - நிரைமீட்சி. 83.

முதுமொழிவெண்பாக்கள்:

"தப்பாமல் வீடணற்குத் தந்தோம் இலங்கைஎனச்
செப்பியது செய்தான் தினகரா - இப்புவிமேல்." —தினகர. 70.

"தோழனென்று சொன்னஅடித் தொண்டர்க் கிறைவர்தூ
தாக நடந்த தரிதரிது - காதலியால்." —முதுமொழி. 105.

"அந்தகன்என் றேசும் அமணர்தம் கண்ணழிய
தந்தமொழி சாதித்தார் தண்டியார் - முந்தமொழி." —திருத். 43.

"என்றும் அரசனக்கே என்றான் கதிர்மகற்கே
வன்றகைரா மன்திரும லைக்கொழுந்தே - வென்றியாய்ச்." —திருமலைக்.

665. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும். (ரு)

உரைப்பகுதி

பரிமே:— வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் - எண்ணத்தால் சிறப்பெய்திப் பிற இலக்கணங்களானும் மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத்திட்பம், வேந்தன்கண் ஊறு எய்தி உள்ளப்படும் - வேந்தன் கண்ணே உறுதலை எய்தலான், எல்லாரானும் நன்கு மதிக்கப்படும்.

வேந்தன்கண் ஊறெய்தல் எடுத்தவினை அதனான் முற்றுப்பெற்றுச் செல்வமும் புகழும் அவன்கண்ணவாதல். எய்தலான் என்பது திரிந்து நின்றது. உள்ளல் - மதிப்பான் மறவாமை. இதனால் அதன்சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— மிகுதியெய்தி மாட்சிமைப்பட்டாரது வினைத்திட்பமானது அரசன்மாட்டு உறுதலையெய்தி எல்லாராலும் நினைக்கப்படும் எ - று.

எய்த என்பது திரிந்தது. இதுவினைத்திட்ப முடையாரை எல்லாரும் விரும்புவர் என்றது.

பரிதி:— காரியத்தால் மேம்பாடுபெற்று நிலைநின்ற மந்திரி நீதி மன்னருள்ளாரால் விரும்பப்படும். எ - று

காளிங்:— வேந்தன் கோலிக்கொண்ட வினைத்திட்பமானது பின்பு ஓர் இடையூறு வந்து எய்தின், அறிவு மாட்சிமை உடைய அமைச்சரானோர் அதனை வெல்லும் உபாயத்தை விருப்புற்று விசாரிக்க, மற்று அவ்விடையூறானது கெட்டு விடும் எ - று.

இனி மற்று இங்ஙனம் ஆராய்ந்து ஓர்ந்து துளங்கிய வினைக்கண் திட்பம் உடையான் பின்பு அது முடித்தலன்றே செயற்பாலது: அதனான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஊற்று - உறுதல்; பாடு, வீடு, கேடு என்பனவும் அது. அறத்துப்பாலுள் எச்சத்திரிபு காட்டியதால் அவ்வாறுதிரியும் எச்சங்களை ஈண்டுக் காட்டாது ஒழிந்தது என அறிக.

குறிப்பு:

வீறு - வேறொன்றற்கு இல்லாத தனிச்சிறப்பு. அமைச்சர்களது வினைத்திட்பத்தான் விளைவன எல்லாம் அரசர்க்கே நன்மைபயத்தலின் வேந்தன்கண் உற்று மதிக்கப்பெறும் என்றார்.

— தொகுப்பாசிரியர்.

666. எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (சு)

உரைப்பகுதி :

பரிமே:— எண்ணிய எண்ணியாங்கு எய்துப - தாம் எய்த எண்ணிய பொருள்களெல்லாவற்றையும் அவ்வெண்ணியவாறே எய்துவர்; எண்ணியார் திண்ணியர் ஆகப்பெறின் - எண்ணியவர் அவற்றிற்கு வாயிலாகிய வினைக்கண் திண்மையுடையராகப் பெறின்.

எளிதின் எய்துப என்பார், எண்ணியாங்கு எய்துப என்றார். அவர் அவ்வாறல்லது எண்ணாமையின் திண்ணியராகவே வினைமுடியும்; அது முடிய அவை யாவையும் கைகூடும் என்பது கருத்து. இதனால் அஃதுடையார் எய்தும் பயன் கூறப்பட்டது.

மணக்:— தாம் எண்ணிய பொருள்களை எண்ணியபடியே பெறுவர்; அவ்வாறு எண்ணினவர் அவ்வினையைச் செய்து முடிக்குந் திண்மையுடையாராகப் பெறுவாராயின் எ - று.

இது வினையின்கண் திண்மை வேண்டும் என்றது.

பரிதி:— எண்ணிய எண்ணம்போலே காரியம் எடுத்துக் கொள்ளுகிற போதே, திடம் பெற விசாரித்துச் செய்யின் எ -று.

காளிங்:— இவ்வாறும் அன்றி மற்று இவ்வினையை இவ்வாறு செய்து முடிப்போம் என்று எண்ணியார், அதற்கு ஏற்பத் தாமும் திண்ணியர் ஆகப் பெறின், அவ்வினையானது மேல் வினையதாகத் தாம் கருதிய பயன் யாது: அதனை மற்று அக்கருதியாங்குப் பெறுவார்கள் எ - று.

மேற்கோள்பகுதி :

சிவஞான:— "நாடிய பொருள் கைகூடின் மகிழ்ச்சி மேன்மேலுண்டாம் ஆகலின், அவ்வாறு மகிழ்ச்சி உண்டாகும்படி நாடிய பொருளே எளிதில் கிடைக்கும் என்பார் நாடியபொருள் கைகூடும் என்றார். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்பதும் இக்கருத்தே பற்றிவந்தது." (கம்ப. விருத்தி, பக். 9.)

"அறிந்தாங்கு - மறந்து மறந்து அறியாது அறிந்தவாறே திரிபின்றி அறிந்து. அறிந்தாங்கு என்பது அப்பொருட்டாதலை 'எண்ணிய......பெறின்' என்பதனானும் அறிக." (சிவஞான. சூ. 3. அதி. 6.)

ஒப்புமைப்பகுதி:

"இனியாரும் இல்லர்தார் எம்மிற் பிறர்யார்
தனியேம்யாம் என்றொருவர் தாமடியல் வேண்டா
முனிவில ராகி முயல்க முனிவில்லார்
முன்னிய தெய்தாமை இல்."
—பழ. நா.

"எண்ணிய எண்ணியாங்கே யான்பெற முடித்தாய் போற்றி"
—திருவிளை. விடையிலச். 15.

முதுமொழிவெண்பாக்கள்:

"நக்கமணர் வெள்க நமிநந்தி ஆரூர்க்கு
மிக்கபுன லாலே விளக்கெரித்தார் - தக்கமனத்(து)." —திருத். 34.

"எய்தும் உருவறிந்தும் ஏந்திழையாள் பாவனையே
செய்துபடி யாச்சே சிவசிவா - வையத்தில்." —சிவசிவ. 67.

குறிப்பு:

உறுதியானஎண்ணம், இடையூறுகள் அடுக்கடுக்காகவரினும், எல்லாவற்றையும் வென்று, பயன்தருமாதலின், எண்ணிய அளவிற் சிறிதும் குறையாதே பயன் எய்துவர் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

667. உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னா ருடைத்து. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— உருள்பெருந்தேர்க்கு அச்சு ஆணி அன்னார் உடைத்து - உருளாநின்ற பெரிய தேர்க்கு அச்சின்கண் ஆணிபோல வினைக்கண் திண்ணியாரை உடைத்து உலகம்; உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - அதனால் அவரை வடிவின் சிறுமைநோக்கி இகழ்தலை ஒழிக.

சிறுமை, எள்ளாமை வேண்டும் என்பதனாலும், உவமையானும் பெற்றும். அச்சு - உருள்கோத்த மரம். ஆணி - உருள் கழலாது அதன் கடைக்கண் செருகுமது. அது வடிவால் சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக் கொண்டுய்க்கும் திட்பம் உடைத்து; அதுபோல, வடிவால்சிறியராயிருந்தே பெரிய வினைகளைக்கொண்டுய்க்கும் திட்பம் உடைய அமைச்சரும் உளர், அவரை அத்திட்பநோக்கி அறிந்துகொள்க என்பதாம். இதனால் அவரை அறியுமாறு கூறப்பட்டது.

மணக்:— யாவரையும் வடிவுகண்டு இகழ்தலைத் தவிர்தல் வேண்டும்; உருளாநின்ற பெரியதேர்க்குக் காலாய் நடக்கின்ற உருளையைக் கழலாமல் தாங்கும் அச்சின் புறத்துச் செருகின சிற்றாணியைப் போலத் திண்ணியாரை இவ்வுலகம் உடைத்து ஆதலால் எ - று.

பரிப்:— திண்ணியாரை அறியுமாறு என்னை என்றார்க்கு, வடிவு கண்டு அறியல் ஆகாது என்பதூஉம் கூறிற்று.

பரிதி:— விசாரவான் பொல்லாதவனாயினும் இகழக்கடவான் அல்லன்: அவன் தேர்க்கு அச்சாணிபோலே இருப்பான் உண்டு ஆகையால் அவரவர் விசாரத்தால் கொள்க எ - று.

காளிங்:— தாம் கருதிய வினையைக் கைக்கொண்டு முடிவு செய்தற்கு உரிய கட்டாண்மையுடையோர் வேண்டுதலான், அவரை உருவினை நோக்கி இகழாது கைக்கொள்ள வேண்டும்: என்னை எனின், ஓடுகின்ற பெரிய தேர்க்கு அச்சாணிபோலும் திட்பம் உடையாரையும் உடைத்து இவ்வுலகம் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— எள்ளாமை - இகழ்தலை ஒழிக என மையீறு "அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்" (511) என்பதுபோல வியங்கோ ளானது காண்க. ஈண்டும் வேண்டும் என்பது ஒருசொல்நீர்மைத்து. எனல், ஓதல், கொளல் அல்லீறு தொழிற்பெயராயும் வியங்கோளாயும் வருதல்போல, மையீறும் அவ்வாறு வரும் என்க.

மேற்கோள்பகுதி :

போரா:— வாளாதே உவமஞ்செய்து உற்றது உணர்த்தாத வழித் தெளியுமாறு; 'உருவு......உடைத்து' என்பதனுள் அவர்செய்கை

கூறுராயினும் அச்சாணி என்று உவமப்பொருள்தானே அச்செய்கை வன்மைகூறிற்று. (தொல். பொருள். 295.)

பெருந்:— 'இது இழிந்த உவமையின் உயர்ந்ததனைப் புகழ்ந் தமையால் இழிவுயர்ப்புப் புகழ்ச்சியுவமையாயிற்று' என்பர். (வீர. 159.)

யா - வி:— பலவிகற்பக்குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (சூ. 59.)

மேற்கோள்பகுதி:

" பலகற்றோம் யாமென்று தற்புகழ்தல் வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்கு
அச்சாணி அன்னதோர் சொல்." —அறநெறிச். 79.

" மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா — கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்." —வாக்கு. 12.

" உடலின் சிறுமைகண்டு ஒண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணும் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு." —நன்னெறி. 26.

" பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே - நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றுன்." —ஷை 32.

" துச்சாத னுஇம் மொழிசென்று கங்கை சுதனுக் குரைக்க எனவே
நச்சாட ராவை யனையானும் அங்கொர் நொடியுற்ற போழ்தின் நடவா
எச்சாப மன்னு மணியூக மான இரதந் தனக்கு நடுவோர்
அச்சாணி யான அவனுக் கிவன்சொல் அடைவே புகன்றன னரோ."
—வில்லி. 9ம் போர். 6.

" சிற்றுளியால் கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்." —நீதிநெறி. 14.

“மருவினின் றவரின் மருள னேயென
விரைவினிற் ககலகல் எனவி லக்கினர்
ஒருவரும் கண்டிறை உருஉ ணர்ந்திலர்
உருவுகண் டெள்ளுநர் உணர வல்லரோ. —பிரபு. சூனிய. 39.

“தேறுகா ரியத்தை முடிப்புழி யன்றிச் செயன்மொழி யாதியால் இடையே
வேறுபோ மாறு விளக்குறார் துணிந்த வினைதுளங் காதுவல் விரைவார்
விறல்சேர் இவரை உருவுகண் டெள்ளா வேந்தனே வேந்தனும் மைந்தா.”
—விநா. அரசி. 108.

“அச்சில்லாமல் தேர் ஓடுமா?” —பழ.

“அச்சாணி யில்லாத்தேர் முச்சாணும் ஓடாது.” —ஷை

“மலையைத் துளைக்க சிறு உளி போதாதா?” —ஷை

“மலைபோலிருக்கிற தேரும் சிறு சுள்ளாணியால் நிலைபெறும்.” —ஷை

“அச்சில்லாத தேர் ஓடவும், ஆம்புடையான் இல்லாதவள்
பிள்ளை பெறவும் கூடுமா?” —ஷை

முதுமொழி வெண்பாக்கள்:

“குறுமுனியும் ஈசனருள் கொண்டுகட லங்கை
வரையடிக் கீழடக்கு மாற்றல் —சிறிதும்.” —முதுமொழி. 106.

“செவ்வேளைப் பாலனென எள்ளித் திறலழிந்தான்
துவ்வாத வெஞ்சூரன் சோமேசா — அவ்வாறு.” —சோமேசர். 67

“என்புருவால் அம்மைஎள்ள ஈசரேமக் கம்மைஎன்னும்
அன்புருவாள் காரைக்கால் அம்மைகாண் — முன்பே” —திருத். 31.

“ஆர்க்கும் கடல்நீர் அருந்த ஒருகரத்தில்
ஏற்க அடங்கிற் றிரங்கேசா — பார்க்கும்.” —இரங். 66

குறிப்பு:

அறிவு நுணுகவே உடல் நுணுகும் என்பது ‘தீந்தமிழின் துறைவாய்
நுழைந்தனையோ அன்றி ஏழிசைச்சூழல் புக்கோ இறைவா தடவரைத் தோட்கு

என்கொலாம் புகுந்தெய்தியதே' என்ற கோவைப் பகுதியாலும் உணரலாம். ஆதலால் அமைச்சர் அறிவுழவரேயன்றி உடலுழைப்பாளரன்மையின் இளைத்த உருவு கண்டு எள்ளாமைவேண்டும் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

668. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— கலங்காது கண்ட வினைக்கண் - மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண், துளங்காது தூக்கம் கடிந்து செயல் - பின் அசைதலின்றி நீட்டித்தலை ஒழிந்து செய்க.

கலங்கியவழி ஒழிவது செய்வதுபோல் தோன்றும் ஆகலின், தெளிந்து பலகால் ஆராய்ந்து தாம்செய்வதாக ஓர்ந்தவினையைக் கலங்காது கண்டவினை என்றார். துளங்காமை - திட்பமுடைமை.

மணக்:— கலக்கமின்றி ஆராய்ந்துகண்ட வினையிடத்துப் பின்னைத் துளக்கமின்றி, அதனை நீட்டியாது செய்க எ - று.

இது விரைந்து செய்ய வேண்டும் என்றது.

பரிதி:— திடபுத்தியாகிற காரியம், அழியுமாப்போலே வந்தாலும் கலங்காமல் விரையும் கருமம் தூங்காமல் செய்வான் எ - று.

காளிங்:— யாதானும் ஒருவினையும் அதன் தூய்மையும் கலங்காமல் ஆராய்ந்து, தெளியக்கண்ட வினையினிடத்துப் பின்னை இதனைச் செய்வோம்கொல் என்று அசைவது செய்யாது, காலத்தாழ்வினையும் கடிந்து கடிதின் செய்க எ - று.

குறிப்பு:

தூக்கம் - மடியால் தாமதித்துச் செய்தல், இன்று முடிப்பதை நாளை முடிப்பினும் வருந்தீமை பலவாதலின் உடனே செய்க என்றார்.

—தொகுப்பாசிரியர்.

669. துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— துன்பம் உறவரினும் - முதற்கண் மெய்ம்முயற்சியால் தமக்குத்துன்பம் மிக வருமாயினும், இன்பம் பயக்கும் வினை துணிவு ஆற்றிச் செய்க - அது நோக்கித் தளராது முடிவின்கண் இன்பம் பயக்கும் வினையைத் திட்பமுடையராய்ச் செய்க.

துணிவு - கலங்காமை. அஃது உடையார்க்கல்லது கணிகமாய முயற்சித்துன்பநோக்காது நிலையுதலுடைய பரிணாமவின்பத்தைநோக்கிச் செய்தல் கூடாமையின், துணிவாற்றிச்செய்க என்றார். இவை இரண்டு பாட்டானும் அவர் வினை செய்யுமாறு கூறப்பட்டது.

மணக்:— முற்பாடு துன்பம் உறவரினும், துணிந்து செய்க; பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை எ - று.

பரிப்:— இனி உற்ற பின் ஒல்காமையின் பகுதி கூறுவார் முற்படத் துன்பம் உறவரினும் துணிந்துசெய்க; பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை என்றார்.

பரிதி:— துன்பம் மென்மேலே வந்தாலும் அதைப் பாராமல் இன்பமாக விசாரித்து அந்தக் காரியத்தைச் செய்வான் அதன்பின்னே இன்பந்தரும் காரியத்தை எ - று.

காளிங்:— வினைத்திட்பம் என்பது இத்துணை அருமை உடைத்து ஆகலான், அவ்விடுக்கண் மிகவரினும் அதற்கு அழியாது நின்று, நெஞ்சில் துணிவுடைமையை நடாத்தி, மேல் இன்பம் விளைவிப்பதாகத் தாம் எடுத்துக்கொண்ட வினைகளையே செய்து முடிக்க எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— கணிகமாய முயற்சி - நொடிப்பொழுதில் அழியும் முயற்சி. பரிணாம இன்பம் - ஒன்றொன்றாய்ப் பரிணமித்து நெடுங்காலம் நிற்பது.

முதுமொழிவெண்பாக்கள்:

"கணம்புல்லர் நெய்வாங்கக் காணார் கணம்புல்
இணங்குதலை நெய்விளக்கென் றிட்டார் - வணங்கான்பால்." — திருத். 63.

670 எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. (௧0)

உரைப்பகுதி:

பரிமே:— வினைத்திட்பம் வேண்டாரை - வினைத்திட்பத்தை இது நமக்குச் சிறந்தது என்று கொள்ளாத அமைச்சரை, எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் - ஒழிந்த திட்பங்களெல்லாம் உடையராயவிடத்தும், வேண்டாது உலகு - நன்குமதியார் உயர்ந்தோர்.

மனத்தின்கண் திட்பமில்லாதார்க்குப் படை, அரண், நட்பு முதலியவற்றின் திட்பங்களெல்லாம் உளவாயினும், வினை முடியாதாம்; ஆகவே, அவையெல்லாங் கெடும் என்பதுபற்றி உலகுவேண்டாது என்றார். இதனால் வினைத்திட்பம் இல்லாதாரது இழிபு கூறப்பட்டது.

மணக்:— கருவி முதலான எல்லாவற்றானும் திண்மை பெற்ற விடத்தும், வினையினது திண்மையை விரும்பாதாரை உலகத்தார் விரும்பார் எ - று.

பலபொருளும் அமைதியும் உடையார்க்கு வினைத்திட்பம் இன்றானால் வருங்குற்றம் என்னை என்றார்க்கு, இது கூறப்பட்டது.

பரிதி:— செல்வம் கல்வி உறவு இந்தத்திடம் பெற்றாலும் வினைத் திடம் இல்லாதாரை உலகம் வேண்டாது எ - று.

காளிங்:— மற்று எனைத்து வகைப்பட்ட திண்ணிமையும் அரசர்க்கு எய்திய இடத்தும், அமைச்சர் துணிந்து உரைக்கும் வினையின் திண்ணிமையை விரும்பிக் கொள்ளாராயின், அவர்களை விரும்பார் உயர்ந்தோர் எ - று.

குறள்வைப்புமுறை

பரிமே:— வினைத்திட்பம், ஊறொரால், கடைக்கொட்க, சொல்லுதல், வீறெய்தி, எண்ணிய, உருவுகண்டு, கலங்காது, துன்பம், எனைத்திட்பம்.

மணக்:— எண்ணிய, எனைத்திட்பம், வினைத்திட்பம், ஊறொரால், சொல்லுதல், கலங்காது, துன்பம், கடைக்கொட்க, உருவுகண்டு, வீறெய்தி.

பரிதி:— கலங்காது, எனைத்திட்பம், எண்ணிய, துன்பம், ஊறொரால், வினைத்திட்பம், சொல்லுதல், உருவுகண்டு, கடைக்கொட்க. வீறெய்தி

காளிங்:— கலங்காது, எனைத்திட்பம், கடைக்கொட்க, வினைத்திட்பம், சொல்லுதல், ஊறொரால், துன்பம், உருவுகண்டு, எண்ணிய, வீறெய்தி.

68. வினைசெயல்வகை.

தொகுப்புரை:

[ஆராய்ச்சியின் எல்லை துணிதல். அங்ஙனம் துணிந்த ஒன்றைத் தாமதித்துச் செய்யின் அதனால் விளையுந் தீமைகள் பல. தாமதித்துச் செய்யத் தக்கவைகளைத் தாமதித்துச் செய்க. விரைந்து செய்யத்தக்கவைகளை விரைந்து செய்க. செல்லுமிடத்துப் போரால் வினைமுடித்தல் நல்லது. செல்லாவிடத்து ஏனைய சாம, தான பேதங்களாற் செய்க. வினையையும் பகையையும் முடிக்காது மிச்சம் வைத்திருந்தால் அவை, அணைக்காது மிச்சம் வைத்த தீப்பொறியைப் போலப் பரவிக்கெடுத்துவிடும். பொருள், கருவி, காலம், வினை, இடம் என்ற ஐந்தையும் நன்காராய்ந்து செய்ய வேண்டும். முயற்சிக்கும்போது அது முடிவுபெறுதற்கேற்ற உபாயங்களையும், அதற்குவரும் இடையூறுகளையும், முடிவான பயனையும் எண்ணுதல் வேண்டும். முயற்சிப்பவன் மேற்கொள்ளவேண்டிய முறைமையாவது முன்னே முயற்சித்தவன் செய்த உபாயங்களைத் தானும்தெரிந்துகொள்ளுதல், யானையால் யானையைப்பிடிப்பது போல ஒருகாரியத்தால் மற்றோர் காரியத்தையும் முடித்துக்கொள்ளல் வேண்டும். நட்பாளனுக்கு நல்லனசெய்தலைக் காட்டிலும் பகைவனைச் சேராதவர்களைத் தாம் சேர்த்துக்கொள்ளுதல் விரைவாகச் செய்யப்படவேண்டிய காரியம். வலியார் படையெடுத்துவரின் தம்படைகள் நடுங்குவதற்காக அஞ்சி இடத்தாற் சிறியவர்கள் சமாதானம் செய்துகொள்வார்கள்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அத்திட்பமுடைய அமைச்சன் அவ்வினையைச்செய்யுந்திறம்: அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— வினைசெயல்வகையாவது வினைசெய்யுமாறு கூறுதல். மேல் வினைசெய்யுங்கால் திண்ணியராக வேண்டும் என்று கூறினார்; திண்ணியார் வினைசெய்யும் வண்ணம் கூறுகின்றாராதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— வினைசெயல் வகையாவது காரியம் செய்யும் முறைமை எ - று.

671. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. (க)

உரைப்பகுதி:

பரிமே:— சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் - விசாரத்திற்கு எல்லை யாவது விசாரிக்கின்றான் இனி இது தப்பாது என்னும் துணிவினைப் பெறுதல்; அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது - அங்ஙனம் துணிவு பெற்ற வினை பின் நீட்டிப்பின்கண் தங்குமாயின், அது குற்றமுடைத்து.

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் எனவே, துணிவெய்துமளவும் சூழ வேண்டும் என்பது பெற்றாம். பின்னர்த் துணிவு ஆகுபெயர். நீட்டிப்பு - செய்யுங்காலத்துச் செய்யாமை. அஃது உள்வழிக் காலக்கழிவாகலானும் பகைவர் அறிந்து அழித்தலானும் முடியாமையின் அதனைத் தீது என்றார்.

மணக்:— சூழ்ச்சிக்கு எல்லை துணிவுபெறுதல்; அவ்வாறு துணிந்தவினை நீட்டித்தலின்கண்ணே கிடக்குமாயின், அது தீதாம் எ - று.

இது வினைசெயத் துணிந்தகாலத்து நீட்டிக்குமாயின், அதனை அறிந்து பகைவர் தம்மைக் காப்பார்; ஆதலால், நீட்டியாது விரைந்து வினை செய்யவேண்டும் என்றது.

பரிதி:— சூழ்ச்சிமுடிவு எடுத்துக்கொண்ட காரியம் முடியுமட்டும் ஒரு தன்மையாகக் காரியம் எடுத்து முடிப்பானாக எ - று.

காளிங்:— இவ்வாறு இவ்வனைத்துக் குறையும் தீரத் தேர்ந்து கொண்ட தேர்ச்சியினது சமைவின்கண் தாம் கருதிய வினைசெய்யத் துணியும் துணிவு எய்துதல், அங்ஙனம் துணிந்த இடத்து மற்று அத்துணிவு பின்பு காலத்தாழ்வின்கண் படுதல் குற்றம் எ - று.

மேற்கோள்பகுதி:

மயிலை:— துணிவு என்பது உடம்பொடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள். (நன். 451.)

ஒப்புமைப்பகுதி:

"தாமதம் தாழ்வுக்கு ஏது."

குறிப்பு:

அத்துணிவு என்பதில் துணிவு என்பது துணிதலாகிய தொழிலை உணர்த்தாது துணியப்பட்ட செயலைக்காட்டிற்று; ஆதலால் ஆகுபெயர்.

—தொகுப்பாசிரியர்.

672. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. (உ)

உரைப்பகுதி:

பரிமே:—தூங்கிச் செயற்பால தூங்குக - நீட்டித்துச் செய்யும் பகுதியவாய வினைகளுள் நீட்டிக்க; தூங்காது செய்யும் வினை தூங்கற்க - நீட்டியாது செய்யும் வினைகளுள் நீட்டியாதொழிக.

இருவழியும் இறுதிக்கண் தொக்க ஏழாவது விரிக்கப்பட்டது. இருவகை வினைகளும் வலியானும் காலத்தானும் அறியப்படும். மாறிச் செய்யின் அவை வாயா என்பது கருத்து. *மேல் தூங்காமை என்றார், ஈண்டு அதனைப் பகுத்துக்கூறினார். இவை இரண்டு பாட்டானும் பொது வகையால் வினைசெய்யுந்திறம் கூறப்பட்டது.

மணக்:— தாழ்த்துச் செய்யவேண்டும் வினையைத் தாழ்த்துச் செய்க; தாழாமற் செய்யவேண்டும் வினையைத் தாழாமற் செய்க எ - று.

பரிப்:— இது எய்தியது விலக்கிச்செய்யத்துணிந்தாலும் காலம் பார்த்துச் செய்யவேண்டுவன தாழாது செய்க என்றது.

பரிதி:— மெத்தென்ற காரியம் மெத்தெனவும் விரையும் காரியம் தூங்காமையும் செய்வான் எ - று.

காளிங்:— இப்படி ஆகலான் தொடங்கிய கருமமானது காலத் தாழ்வு படாது அதனை விரைவொடு செய்து முடிக்கவேண்டும். மற்று அக்காலத் தாழ்வு படவேண்டும் கருமப் பகுதி உளதேல் அவற்றிற்கு ஏற்ற காலம் வருகாறும் தாழ்க்க நின்று செய்க; எனவே இங்ஙனம் கடிதிற் செய்து முடித்த கருமம் எச்சக் குற்றம் இல்லை; மற்றைக காலம் பார்த்து நின்ற கருமமும் எச்சக் குற்றம் இல்லை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"மற்றுஇக் காலத் தல்லது மேற்சென்று
வெற்றிக் காலத்து வீட்டுதல் அரிது." —பெருங். 4:8: 53-54.

---

* மேல் என்றது 383-ம் குறளை.

குறிப்பு:

தூங்கிச் செய்தலும் தூங்காது செய்தலுமாவது 'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்தவிடத்து' என்றவாறு காலமறிந்து காரிய முடித்தலும், காலம் பார்த்திருத்தலும்.

—தொகுப்பாசிரியர்.

673. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்று - வினைசெய்யுங் கால் இயலுமிடத்தெல்லாம் போரால் செய்தல் நன்று; ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கிச் செயல் - அஃது இயலாவிடத்து ஏனை மூன்று உபாயத்துள்ளும் அது முடிவதோர் உபாயம் நோக்கிச் செய்க.

இயலும் இடம் - பகையின் தான்வலியனாய காலம். அக்காலத்துத் தண்டமே நன்று என்றார், அஞ்சுவது அதற்கேயாகலின். இயலா இடம் ஒத்தகாலமும் மெலியகாலமும். அவ்விரண்டு காலத்தும் சாம பேத தானங்களுள் அது முடியும் உபாயத்தால் செய்க என்றார், அவை ஒன்றற்கு ஒன்று வேறுபாடு உடையவேனும் உடம்படுத்தற்பயத்தால் தம்முள் ஒக்குமாகலின். இதனால் வலியான் ஒப்பான் மெலியான் எனநிலை மூவகைத்து என்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன.

மணக்:— இயலும் இடமெல்லாம் வினைசெய்தல் நன்று; இயலாத காலத்து அதனை நினைத்திருந்து, இயலும் இடம் பார்த்துச் செய்க எ - று.

இது வினைசெய்து முடிந்ததில்லை என்று இகழாது பின்பு காலம் பார்த்துச் செய்க என்றது.

பரிதி:— காரியத்தை எந்தவகையாலும் செய்தால் அதுபாரத்தைக்கொடுக்கும்; தன்னால் முடிகிற காரியமே செய்வான் எ - று.

காளிங்:— கீழ்ச்சொல்லிப் போந்த வினைசெய்யும் கூறுபாடுகள் அங்ஙனம் செய்கை தமக்கு இயலுமாயின் அவ்வியலும்வழியெல்லாம்

வினை செய்து ஒழுகுதல் சால நல்லது. மற்று இயலாதறபினும் அவ் வினைகள் செலவுபடும் வழி எல்லாம் ஓர்ந்து பார்த்துச் செய்து கொள்க எ - று.

குறிப்பு:

வினை - போர். 'காரியமாகுமானால் தலையைப் பிடி. காரியமாகாவிட்டால் காலைப்பிடி' என்றவாறு முடிந்தால் போர்; முடியாவிட்டால் அடைக்கலம் என்பதாம்.
—தொகுப்பாசிரியர்.

674. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீஎச்சம் போலத் தெறும். (௪)

உரைப்பகுதி :

பரிமே;— வினை பகை என்ற இரண்டின் எச்சம் - செய்யத் தொடங்கிய வினையும் களையத்தொடங்கிய பகையும் என்று சொல்லப்பட்ட இரண்டனது ஒழிவும், நினையுங்கால் தீ எச்சம்போலத் தெறும் - ஆராயுங் கால் தீயினது ஒழிவுபோலப் பின் வளர்ந்து கெடுக்கும்.

இனி இக்குறை என்செய்வது என்று இகழ்ந்தொழியற்க; முடியச் செய்க என்பதாம். பின் வளர்தல் ஒப்புமைபற்றிப் பகையெச்சமும் உடன் கூறினர். இதனான் வலியான் செய்யுந்திறம் கூறப்பட்டது.

மணக்:— வினையும் பகைமையும் என்னும் இரண்டினது ஒழிபு விசாரிக்குங்காலத்து, தீயின் ஒழிவுபோலக் கெடுக்கும் எ - று.

எச்சம் - சேஷம். இது வினைசெய்யுங்கால் சிறிதொழியச் செய் தேம் என்று விடலாகாது என்றது.

பரிப்:— ஈண்டுப் பகை கூறியது என்னை எனின் வினைசெய்வார் பகைவர்மாட்டாதலான் அவரைச் சிறியரென்று இகழாமையும் வேண்டும்; ஆதலான் ஈண்டுக் கூறப்பட்டது.

பரிதி;— காரியமும் பகையும் ஒன்றிரண்டு காரியத்தை முன்பின் பாராமல் செய்தால் தீயைப்போலக் கெடுக்கும் எ - று.

காளிங்:— தாம் எடுத்துக்கொண்டது ஓர் கருமம் முடியச் செய்யாது ஒழிவுபட நிற்றலும் தமது பகைதீர்க்கும் இடத்துத் தீராது

ஒழிவுபட்டு நிற்றலும் என்னும் இவ்விரண்டு ஒழிவுபாடும் ஆராயுங்காலத்து, ஒன்றினைக் கொளுவிப் பரந்த தீயினைச் செலவு அறத்தணியாது சிறிது ஒழிவுபட இகழ்ந்து நீங்கியவழி, மற்று அது யாங்ஙனம் சுட்டுவிடுவதுபோல, இவை இரண்டும் பற்றி நிற்பன தம்மாட்டு ஆகலான் வினை எச்சத்தால் தம் பொருட்கேடும் பகை எச்சத்தால் தமது உயிர்க்கேடும் வரும் எ - று.

மேற்கோள்பகுதி:

சேனா:— என்று என்னும் இடைச்சொல் ஒருவழிநின்று, பிரிந்து பிறவழிச்சென்று ஒன்றியதற்கு மேற்கோள். (தொல். சொல்.294.)

நச்:— ஷை (தொல். சொல். 296.)

மயிலை:— ஷை (நன். 428.)

சங்கர:— ஷை (நன். 429.)

காரி:— ஷை (மாற. 66.)

675. பொருள்கருவி காலம் வினைஇடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். (௫)

உரைப்பகுதி :

பரிமே:— பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும் - வினைசெய்யுமிடத்துப் பொருளும் கருவியும் காலமும் வினையும் இடனுமாகிய இவ்வைந்தனையும், இருள் தீர எண்ணிச் செயல் - மயக்கமற எண்ணிச் செய்க.

எண்ணொடு பிறவழியும் கூட்டப்பட்டது. பொருள் - அழியும் பொருளும் ஆகும் பொருளும். கருவி - தன்தானையும் மாற்றார்தானையும். காலம் - தனக்காம் காலமும் அவர்க்காம் காலமும். வினை - தான்வல்ல வினையும், அவர் வல்லவினையும். இடம் - தான் வெல்லும் இடமும், அவர் வெல்லும் இடமும். இவற்றைத் தான் வென்றி எய்துந்திறத்தில் பிழையாமல் எண்ணிச் செய்க என்பதாம்.

மணக்:— பொருளும், கருவியும், காலமும், செய்யும் வினையும், பகைவரைப் பொருதற்குரிய இடமும் என்னும் ஐந்தினையும் மயக்கந்தீர எண்ணி, பின்பு வினைசெயத் தொடங்குக எ - று.

இவற்றுள், ஒவ்வொன்றும் இரண்டு இரண்டு வகைப்படும்:— (1) பொருளாவது கெடும்பொருளும் பெறும் பொருளும்; (2) கருவியாவது தனக்கு உள்ளபடையும்; மாற்றரசர்க்கு உள்ளபடையும்; (3) காலமாவது தனக்காம் காலமும் மாற்றரசர்க்காம் காலமும்; (4) வினையாவது தான் செய்யும் வினையும் பகைவர் செய்யும் வினையும்; (5) இடமாவது தனக்காம் இடமும் பகைவர்க்காம் இடம் ஆம். இவை செய்யும்வினைக்கு முற்பட வேண்டுதலின், முற்கூறப்பட்டன.

பரிதி:— பொருள்செய்வகை, கருவி, காலம் அறிதல், வினைசெயல் வகை, இடம்அறிதல் இந்த ஐந்துகாரியமும் எண்ணிச்செய்க எ - று.

காளிங்:— எடுத்துக் கொண்ட கருமம் முடிவுகாறும் நடத்த வேண்டும் பொருளும், அஃது இயற்றுதற்கு உரிய கருவிகளும், அது வாய்த்தற்கு அடுத்த காலங்களும், அது செய்தற்கு அமைந்த இடன் ஆகிய நிலன் என்னும் இவை ஐந்தும் இயையுமாறு மயக்கம் அற ஆராய்ந்து செய்தலே கடனவது என்று அரசர்க்கு அமைச்சன் வினை செயல்வகை கூறியது இதன் கருத்து எ - று.

மேற்கோள்பகுதி:

இளம்:— பொருளொடு புணர்ந்த பக்கம்; பக்கம் என்றதனல் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் எனவருவனவெல்லாம் கொள்க எனக் கூறி வினை செயல்வகை என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75.)

சேன:— ஒடு என்னும் இடைச்சொல் எண்ணினுள் ஒருவழி நின்று, பிரிந்து பிறவழிச் சென்று ஒன்றியதற்கு மேற்கோள். (தொல். சொல். 294.)

நச்:— ஷை. (தொல். சொல். 296.)

'சின்மென் மொழியால் தாய பனுவலின் அம்மை தானே அடி நிமிர் வின்றே' என்ற சூத்திரத்திற்கு மேற்கோள்காட்டி, இஃது இலக்கணம் கூறலின் பனுவலின் என்றார் எனப்பதசாரம் குறிப்பர். (தொல். பொருள் செய். 235.)

மயிலை:— ஒடு என்னும் இடைச்சொல் ஒரோவழி நின்று ஏனை நான்கிடத்தும் சென்று இயைந்ததற்கு மேற்கோள். (நன். 428.)

சங்கா:— ஷை. (நன் 429.)

சுவாமி;— ஷை (இ. கொ. 130.)

ஒப்புமைப்பகுதி;

" காலம் அறிந்தாங்கு இடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து — மேலும்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும்." —நீதிநெறி. 52.

" பண்டு முளைப்ப தரிசியே யானும்
விண்டுமி போனால் முளையாதாம் — கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்." —வாக்கு. 11.

" துணிவுறு மளவும் சூழ்ந்துபி னிராது சூழ்வினை பொருந்தும்வா யெல்லாம்
தணிவற முடித்தல் அதுதகா தாயின் தருபொருள் வினைஇடம் காலம்
அணியுறு கருவி ஐந்தும்ஆய்ந் திகலே அடர்த்தலொட் டார்க்கழி வுறுங்கால்
பணிவுசெய் தேனும் காத்தல்முத் தொழிலும் பண்புடை அமைச்சர்தந் தொழிலே. —விநா. அரசி. 109.

" காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுணித்தறம் குறித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டும் செய்கையும் தெரிந்து கொண்டு
பால்வரும் உறுதியாவும் தலைவற்குப் பயக்கும் நீரார்." —கம்ப. மந்திரப். 8.

முதுமொழிவெண்பாக்கள் :

" ஆனுயர் வேயிசையில் அஞ்செழுத்தை அஞ்செவிச்சேர்த்
தேனைய் அரனுற்குச் செய்தனரே — கானில்." —திருத். 15.

676. முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— முடிவும் - வினைசெய்யுங்கால் அது முடிதற்கு உளதாம் முயற்சியும், இடையூறும் - அதற்கு வரும் இடையூறும், முற்றியாங்கு எய்தும் படுபயனும் - அது நீங்கி முடிந்தால் தானெய்தும் பெறுபயனும், பார்த்துச் செயல் - சீர்தூக்கிச் செய்க.

முடிவு ஆகுபெயர். முயற்சி இடையூறுகளது அளவின், பயனது அளவு பெரிதாயின் செய்க என்பதாம்.

மணக்:— வினை தொடங்கினால் அது முடியும் வண்ணமும், அதற்குவரும் இடையூறும், முடிந்தா லுண்டாகும் பெரும்பயனும் முன்பே கண்டு, பின்பு வினைசெய்க எ - று.

பரிப்:— முடிவு - மேல் கூறியவாற்றால் செய்யுங்கால் முடியும் முடியாது என்று அறிதல். இடையூறு - பகைவர்க்கு வரும் படைத்துணை. முற்றியாங்கு எய்தும் படுபயன் - நேரும் இடையூறு சிறிதாய்ப் பெறும் பொருள் பெரியதாயினும் அதன்பின்பு வினையும் வினைவு. இது வெற்றிப் படை தோற்றுதல்.

பரிதி:— ஒருகாரியம் முடிகிறதும், அதற்கு இடையூறும், காரியம் முடிந்தால்வரும் பயனும் எண்ணிச் செய்வான் எ - று.

காளிங்:— மற்று இவ்வாறும் அன்றி யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்து அது கடைபோகச் சென்று முடிவது ஓர் முடிவும், அது செய்யுங்காலத்து நடுவு வரும் இடையூறும், அது செய்து முற்றுப்பெற்ற இடத்து அதனால் எய்தும் பெரும்பயனும் முன்னுறச் சீர் தூக்கிக்கொண்டு பின்பு செய்க அக்கருமத்தை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"தன்தூக்கித் தன்துணை யும்பயன் தூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார் - அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண்டு யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்."
—பழ. நா.

"நல்லவும் தீயவும் நாடிநா யகற்கு
எல்லையின் மருத்துவன் இயல்பின் எண்ணுவார்
ஒல்லைவந் துறுவன உற்ற பெற்றியின்
தொல்லைநன் வினையென உதவும் சூழ்ச்சியார்."
—கம்ப. மந்திரப். 12.

முதுமொழிவெண்பாக்கள்:

"சும்மாதே ஒன்றைத் துணிந்துசெய்ய ஒண்ணாது
செம்மாலை மார்பத் தினகரா - தம்மால்."
—தினகர. 71.

"இறையருளால் செவ்வேள் இமையோரைக் காக்கும்
திறனுடைச் சூர்தடிந்த செய்கை - அதுபோல்." —முதுமொழி. 107.

"வெள்ளிவெற்பை எண்ணு தெடுப்பனென வீறெய்தித்
துள்ளியழிந் தானரக்கன் சோமேசா - மெள்ள." —சோமேசர். 68.

"மங்கைமுலைக் கச்சவிழ்க்க வந்த சயந்தனொரு
செங்கண் இழந்தான் சிவசிவா - எங்கும்." —சிவசிவ. 68.

"யாண்டுளனா ராயணனென் றேற்றிரணி யன்மகன்பால்
மூண்டுசின மாண்டான் முருகேசா - வேண்டின்." —முருகேசர். 68.

677. செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— செய்வினை செய்வான் செயல்முறை - அவ்வாற்றாற் செய்யப்படும் வினையைத் தொடங்கினன் செய்யுமுறைமையாவது, அவ் வினை உள் அறிவான் உள்ளம் கொளல் - அதனது உளப்பாட்டினை அறிவான் கருத்தினைத் தான் அறிதல்.

அவ்வாறு என்றது பொருள் முதலிய எண்ணலையும் முடிவுமுதலிய தூக்கலையும். உள்ளறிவான் முன்செய்து போந்தவன். அவன் கருத்து - அவன் செய்து போந்த உபாயம். அதனை அறியவே, தானும் அதனாற் செய்து பயன் எய்தும் என்பதாம். இவை மூன்று பாட்டானும் ஒப்பான் செய்யுந்திறம் கூறப்பட்டது.

மணக்:— செய்யத்தகும் வினையைச் செய்யுமவன் முறைமை யாவது அவ்வினையினது உளப்பாடு அறிவானது உள்ளத்தைக் கூட்டிக் கோடல் எ - று.

பரிதி:— ஒருவன் ஒரு காரியத்துக்கு வல்லவனாகில் அந்தக் காரியத்தையும், அவன் காரியம்செய்யும் முறைமையும் தான்கவரப் பண்ணிக்கொள்ள வேணும் எ - று.

காளிங்:— யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்துச் செய் கருமம் தானும், அக்கருமம் தலைக்கொண்டு செய்யும் அவனும், மற்று அது முடியக் கற்று அதனை நாள்தோறும் செய்து ஒழுகும் முறைமைப்பாடும்

என்று சொல்லப்பட்ட இவை மூன்றும் இனி இவற்றின் உள்பாடு அறிந்து நடாத்தும் உபாயம் உடையோனும் என்னும் இவை இத்தனையும் நெஞ்சு கைக்கொண்டு செய்கை வினைசெயல்வகையாவது எ - று.

உள்ளறிவான் என்றது என்னை எனின் கடல் ஓடிப் பொருள் வினை செய்யும் வணிகனும் அவனுக்கு அவ்வினை செய்வாருமே அன்றிக் கடல் ஓட்டத்து உள்ளறிவான் ஆகிய மீகாமனும் வேண்டியாங்கு வினை செய்வாரை அன்றி அவ்வினை உள்ளறிந்து ஓட்டும் உபாயம் உடையோரும் வேண்டும் என அறிக.

ஒப்புமைப்பகுதி :

"மெய்ந்நீ ராகி விரியப் புகுவார்க்கும்
பொய்ந்நீ ராகிப் பொருளை முடிப்பார்க்கும்
எந்நீ ராயினும் ஆக அவரவர்
தந்நீ ராதல் தலை." —பழ. நா.

குறிப்பு:

உள்ளறிவான் உள்ளங்கொளலாவது இராமன், இராவணன் படைத்திறம் படையமைதி முதலியவற்றை வீடணனைக்கொண்டு அறிந்தது போல, அந்தரங்கங்களை அறிந்தவனுடைய அறிவைத் தாம் கேட்டுக் கொள்ளுதல் என்றுமாம்.

—தொகுப்பாசிரியர்.

678. வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் [1] யானையாத் தற்று. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— வினையான் வினை ஆக்கிக்கோடல் - செய்கின்றவினை யாலே அன்னது பிறிதும் ஓர்வினையை முடித்துக்கொள்க; நனை கவுள் யானையால் யானை யாத்தற்று- அது மதத்தால் நனைந்த கபோலத்தினை யுடைய யானையாலே அன்னது பிறிதும் ஓர் யானையைப் பிணித்ததனோடு ஒக்கும்.[2]

[1] 'யானையார்த்தற்று' காளிங்கர் பாடம்.

[2] 'பெரிய மலைச்சிகரம்போன்ற உருவமுடையதும் விளையாட்டால் மரங்களை வேருடன் பிடுங்குவதுமாகிய யானை, பெண் யானையின் ஊற்றின்பத்தால் மயங்கிக் கட்டுண்டு அகப்படுத்தப்படுகின்றது' —சுக்கிர. அத். 1. சு. 104.

பிணித்தற்கு அருமை தோன்ற நனைகவுள் என்பது பின்னும் கூட்டப்பட்டது. தொடங்கிய வினையானே பிறிதும் ஓர்வினையை முடித்தற்கு உபாயமாமாறு எண்ணிச்செய்க, அம்முறையான் எல்லாவினையும் எளிதின் முடியும் என்பதாம்.

மணக்:— ஒரு வினையால் பிறிதொரு வினையைச் செய்து கொள்வது, ஒரு மதயானையால் பிறிதொரு மதயானையைப் பிணித்தாற் போலும் எ - று.

இது தமக்கு ஒரு பகைவர் தோன்றினால் அவர்க்குப் பகையாயினாரை அவரோடு பகைக்குமாறு பண்ணுவார்பக்கல் பகையாய் வருவார் இல்லை என்றது.

பரிதி:— காரியத்தாலே காரியமாக்கிக் கொள்ளுதல் எத்தன்மைத்து எனில், அது ஆனையைக்கொண்டு ஆனைபிடித்தாற்போல் எ - று.

காளிங்:— ஒரு கருமத்திற்கு வேண்டும் பொருள் நேர்ந்து நிறைவு செய்து பின் அக்கருமத்தானே வேண்டிய கருமத்தை ஆக்கிக் கோடல் எத்தன்மைத்தோ எனின், மதத்தினாலே நனையும் கபோல நன்மைக்கு உரியது ஓர் அண்ணல் யானையை ஆர்த்தற்குவேண்டும் பொருள் நேர்ந்தும் பின் மற்று அதனாலே வேறு அடவியுள் வாழும் யானை பலவற்றையும் தங்கண் பிணித்துக் கொள்ளுகின்ற அத்தன்மைத்து எ - று.

நனைகவுள் என்பது மதத்தாலே நனையும் கபோலம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அன்னது பிறிதும் ஓர் ஆனை என்றதனால் பிணித்தற்கு அருமைதோன்றப் பின்னுங் கூட்டுக என்றார்; அது "நனைகவுள்............ யானை யாத்தற்று" (678) என்பது.

ஒப்புமைப்பகுதி

"தெள்ளி உணரும் திறனுடையார் தம்பகைக்
குள்வாழ் பகைவர்ப் பெறுதல் உறுதியே

கள்ளினால் கள்ளறுத்தல் காண்டும் அதுவன்றே
முள்ளினால் முள்களையு மாறு.'' —பழ. நா.

"ஆணமுடைய அறிவினர் தங்கலம்
மாணும் அறிவின் அவரைத் தலைப்படுத்தல்
மானமர் கண்ணாய் மறங்கெழு மாமன்னர்
யானையால் யானையாத் தற்று.'' —ஷை

"இரும்பின் இரும்பிடை போழ்ப பெரும்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப.'' —நான்மணிக். 34.

"அஞ்சனக் காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறுவான்.'' —பழ.

"முள்ளை முள்ளாலே எடுக்கவேணும்.'' —ஷை

"திருடனைக் கொண்டு திருடனைப் பிடிக்கவேண்டும்.'' —ஷை

"மான்காட்டி மான் பிடிப்பதுபோல.'' —ஷை

முதுமொழிவெண்பாக்கள்:

"இறைவர்க்குத் தொண்டாய் இடர்தீர்ந்த தன்றிப்
பெறுபயனும் வாகீசர் பெற்றார் - அறிஞர்.'' —முதுமொழி. 108.

"கண்ணுதல்பால் ஆழிபெறக் கண்சாத்தித் தாள்காண
வண்ண மொழிந்தநெடு மாலேபோல் - எண்ணி.'' —ஷை 109.

"தொட்ட தெரிப்போன் சுடர்முடிமேல் அங்கைவைப்பித்(து)
இட்டவனைச் செற்றாய் இரங்கேசா - முட்ட.'' —இரங். 68.

குறிப்பு:

மதம் பிடித்த யானையைப் பிணிக்க விரும்புவார் வேறொரு மதயானையை யேவி இரண்டுஞ் சண்டையிட்டு ஓய்ந்த பிறகு பிணிப்பர். அதுபோல வலியபகைவன் எதிர்ப்பின் வேறொரு வலியவனை அவனோடு பொரத்தூண்டிவிட்டு, இருவரும் வலியோய்ந்த பிறகு தான் வசப்படுத்தல் போர்முறை என்பதாம்.

—தொகுப்பாசிரியர்

679. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே - வினைசெய்வானல் தன்நட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும், ஒட்டாரை ஒட்டிக் கொளல் - தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல்.

அவ்வினை வாய்த்தற்பயத்தவாய இவ்விரண்டும் பகைவர்க்குத் தன் மெலிவு புலனாவதன் முன்னே செய்க என்பார் விரைந்தது என்றார்.விரைந்து செய்யப்படுவது என்றவாறு. வினைசெய்யுந் திறமாகலின் பகைவரோடு ஒட்டாராயிற்று. தன் ஒட்டார் பிறருட் கூடாமல் மாற்றிவைத்தல் எனினும் அமையும்.

மணக்:— தம் சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும், பகைவரைப் பொருந்தி நட்பாகக் கொள்ளுதலை விரைந்து செய்யவேண்டும் எ - று.

இஃது அரசர்க்கும் ஒக்கக் கொள்ளவேண்டுமாயினும், அமைச்சர் தம் தொழிலாக ஈண்டுக் கூறப்பட்டது.

பரிப்:— இது சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும், வேண்டுவன விரைந்து செய்யவேண்டும் அன்றே; அதனினும் பகை கொள்ளாமை விரைந்து செய்தல் வேண்டும்; அவரும் தம்மொடு ஒத்த வலியுடையார் ஆயின் என்றவாறு.

பரிதி:— நல்லோர்க்கு நல்லதுசெய்வதிலும் சத்துருக்களை நல்லது சொல்லி உறவுகட்டிக் கொள்வது நல்லது எ - று.

காளிங்:— தம்மொடு நட்டார்க்கு நல்லனவற்றைச் செய்தல் மிகவும் வேண்டுவது அன்றே! மற்று அவை செய்தலினும் சால விரைந்ததே; யாது எனின் பகைவரானோரை ஒருவாற்றால் பகைதீர்த்து இங்ஙனம் பொருத்திக் கொள்வாராயின் பகை எச்சம் இல்லை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"நட்டார்க்கு நல்ல செயல்இனிது எத்துணையும்
ஒட்டாரை ஒட்டிக் கொளல்அதனின் முன்னினிதே." —இனியவை. 18.

குறிப்பு:

ஒட்டாரை யொட்டிக்கொளல் என்பதற்குப் பகைவர்க்குப் பகையாயினாரை தாம் சேர்த்துக் கொள்க என்பர் பரிமேலழகர். பகையாயினாரையும் பகைமாற்றித் தமக்குத் துணையாகச் சேர்க்க என்பர் காளிங்கர் முதலாயினார். பகையாயினாரைப் பகைமாற்றிச் சேர்த்தாலும் அவரான் விளைவது தீமையே யாதலின் பரிமேலழகர் கூறிய உரையே மிகச் சிறந்ததாதல் காண்க. அன்றியும் அவர் தன் ஒட்டார் பிறருட் கூடாமல் மாற்றிவைத்தல் என எழுதியது மிகவும் நயம் பயக்கும் பகுதியாகும்.

—தொகுப்பாசிரியர்.

680. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. (௧0)

உரைப்பகுதி:

பரிமே:— உறை சிறியார் - ஆளுமிடம் சிறியராய அமைச்சர்; உள் நடுங்கல் அஞ்சி - தம்மின்வலியார் எதிர்ந்தவழித் தம்பகுதி நடுங்கலை அஞ்சி, குறை பெறின் பெரியார்ப் பணிந்து கொள்வர் - அந்நிலைக்கு வேண்டுவ தாய சந்து கூடுமாயின், அவரைத் தாழ்ந்து அதனை ஏற்றுக்கொள்வர்.

இடம்-நாடும் அரணும். அவற்றது சிறுமை ஆள்வார்மேல்ஏற்றப் பட்டது. மெலியாரோடு சந்திக்கு வலியார் இயைதல் அரிதாகலின், பெறின் என்றார். அடியிலே மெலியராயினார் தம்பகுதியும் அஞ்சிநீங்கின் முத லொடும்கெடுவராகலின், அது வாராமல் சிறிது கொடுத்தும்சந்தினை ஏற்றுக் கொள்க என்பதாம். பணிதல் மானமுடையார்க்குக் கருத்தன்மையின், கொள்வர் என உலகியலால் கூறினார். இவை மூன்று பாட்டானும் மெலியான் செய்யுந்திறம் கூறப்பட்டது.

மணக்:— உறையும் இடம் சிறியார் தமது இடம் நடுங்குதற்கு அஞ்சித் தமது குறைதீரப் பெறின், தம்மின் பெரியாரைத் தாழ்ந்து நட்பாகக் கொள்வர் எ - று.

இது சிறியனாயின் இவ்வாறு செய்தல் வேண்டும் என்றது.

பரிப்:— இவை எல்லாம் அரசர்க்கும் ஒக்கச்செய்ய வேண்டுமாயினும் அமைச்சுத்தொழிலாதலான் ஈண்டுக் கூறப்பட்டன.

பரிதி:— பெலயீனனான ராசா தன்னைவந்து அடைந்தால் அவன் காரியத்தைப் பார்ப்பது மந்திரி தத்துவம் எ - று.

காளிங்:— உலகத்துப் பொருள் வலி முதலிய அனைத்தானும் தம் பகைவரின் சிறியர் யாவர் சிலர் மற்று அவர் பகைவரால் தமக்கு உள் நடுக்கம் வருதலை அஞ்சி மற்று அவரினும் பெரிய வேந்தர்மாட்டுத் தமது குறைகூறி அவர்களை வணங்கி வழிபட்டுப் படைத் துணையாகக் கொள்வர் எ - று.

இனி மற்று இங்ஙனம் அரசர் உழையிருந்த அமைச்சரானோர் வினையின் திட்பமும் வினைசெயல் வகையும் வைப்புறுத்தியும், பொருந்தா மன்னரைப் பொருந்துவித்தலும் திறைகோடலும் குறும்புஅறுத்தலும் பிறவும் வேண்டுதலாண் தூதுசேறலும்அமைச்சர்க்குக் கடன் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

குறிப்பு:

உறை - உறையுமிடம்; அதாவது நாடு. குறைபெறின் - குறையிரத்தற்கு உரியதாகிய சமயம் பெற்றால். பெரியார் - நாட்டாற்பெரியவர்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— சூழ்ச்சி, தூங்குக, ஒல்லும்வாய், வினைபகை, பொருள்கருவி, முடிவும், செய்வினை, வினையான், நட்டார்க்கு, உறைசிறியார்.

மணக்:— பொருள்கருவி, முடிவும், செய்வினை, வினையால், சூழ்ச்சி, தூங்குக, வினைவகை, ஒல்லும்வாய், உறைசிறியார், நட்டார்க்கு.

பரிதி:— பொருள்கருவி, சூழ்ச்சி, செய்வினை, வினையான், தூங்குக, ஒல்லும்வாய், வினைபகை, நட்டார்க்கு, உறைசிறியார், முடிவும்.

காளிங்:— பொருள்கருவி, வினைபகை, தூங்குக, நட்டார்க்கு, செய்வினை, வினையான், முடிவும், சூழ்ச்சி, ஒல்லும்வாய், உறைசிறியார்.

69. தூது.

தொகுப்புரை:

[சுற்றத்தாரிடம் அன்புடைமையும், குடிப்பிறப்பும், அரசர்கள் விரும்பும் குணனுடைமையும் ஆகிய இவைகள் தூதன் இயல்பாம். அன்பும் அறிவும் எதனையும் ஆராய்ந்து பேசும் ஆற்றலும், தூதர்க்கு இன்றியமையாத குணங்களாம். அரசநீதி நூல்களை ஆராய்ந்த அமைச்சரினும் சிறந்தானதலே வேற்றரசனிடம் சென்று தன் அரசர்க்கு வெற்றிதரும் சொற்களைச் சொல்லும் தூதனியல்பாம். இயற்கையறிவும் கவர்ச்சிகரமான வடிவும், ஆராய்ச்சிஞானமும் ஆகிய இம்மூன்றும் செறிந்தவனே தூதிற்குச் செல்லத்தக்கவன். எதனையும் மாற்றவரிடைப் பேசுங்கால் தொகுத்துச் சொல்லியும், கடுஞ்சொற்களை நீக்கியும், மகிழும்படி இனியையாகப் பேசியும் தன் அரசர்க்கு நன்மை தருபவனே தூதன். நன்றாகப்படித்து, பகைவர் மனங்கொள்ள எடுத்துச்சொல்லி, அவர்கள் தம்பேச்சைக்கேட்டு வெகுண்டு நோக்கினும் அஞ்சாது, காலத்தோடு ஒட்டி காரியத்தை முடிக்கும் உபாயம் அறிபவனே தூதன். கடமை அறிந்து, காலமும் இடமும் கருதிப்பார்த்து ஆராய்ந்து உரைப்பவன் சிறந்த தூதன்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது சந்தி விக்கிரகங்கட்கு வேற்று வேந்தரிடைச் செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் மேல் வினைசெயல்வகை என்றமையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது. தான் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான் எனத் தூது இருவகைப்படும். அவருள் முன்னோன் அமைச்சனோடு ஒப்பானாகலானும், பின்னோன் அவனிற் காற்கூறு குணம் குறைந்தோனாகலானும், இஃது அமைச்சியலாயிற்று.

மணக்:— தூதாவது மாற்றரசர்மாட்டுச் சந்து செய்யும் அமாத்தியரிலக்கணம் கூறுதல். இனிப் பகைவர்மாட்டு அமாத்தியர் செய்யும் திறம் கூறுகின்றாராதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— தூதாவது தானாதிபதி சொல்லும்முறைமை சொல்லுதல் எ - று.

681. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. (க)

உரைப்பகுதி :

பரிமே:— அன்பு உடைமை - தன் சுற்றத்தார்மாட்டு அன்புடையனாதலும், ஆன்ற குடிப்பிறத்தல் - அமைச்சுப்பூணற்கு அமைந்த குடியின்கண் பிறத்தலும், வேந்துஅவாம் பண்பு உடைமை - அரசர்சாதி விரும்பும் பண்புடையனாதலும், தூது உரைப்பான் பண்பு - தூதுவார்த்தை சொல்லுவானுக்கு இலக்கணம்.

முன்னைய இரண்டனாலும், முறையே சுற்றத்தார்க்குத் தீங்கு வாராமல் தான்பேணி ஒழுகலும், தன் முன்னோர் தூதியல் கேட்டறிதலும் பெற்றாம். வேந்தவாம் பண்புடைமை, முன்னர் மன்னரைச் சேர்ந்தொழுகற்கண் பெறப்படும். அதனால் வேற்றரசரும் அவன் வயத்தராதல் பெறுதும்.

மணக்:— அரசன்மாட்டு அன்புடைமையும், அமைந்த குடியின்கண்பிறத்தலும், வேந்தனால் விரும்பப்படும் குணமுடைமையும், தூதாகிச் சென்று சொல்லுமவனது இயல்பாம் எ - று.

வேந்தனால் விரும்பப்படும் குணமுடைமையாவது அவன் விரும்புவனவற்றைத் தான் விரும்பாமை.

பரிதி:— அரசன்மேல் அன்புடைமையும் நற்குலத்தில் பிறத்தலும் அரசனது மனமகிழ்ச்சி உள்ளவனும் தூதுவன் எ - று.

காளிங்:— தன் அரசர்மாட்டு அன்பு பெரிது உடையனுமாய்த் தான் நல்ல குடியில் பிறந்தானுமாய், வந்து பயிலுந்தொறும் வேந்தனவன் விரும்பும் மரபு உடையனுமாய் இம்மூன்று குணமும் உடையான் அரசர்க்குத் தூது உரைப்பான் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" அன்புடைமை ஆய்ந்த அறிவுடைமை இற்பிறப்பு
நன்குடைமை நல்ல நயனுடைமை - நன்கமைந்த
சுற்ற முடைமை வடிவுடைமை சொல்வன்மை
கற்றடங்கல் தூதின் கடன்." —பா-வெ.

"குடிப்பிறந் திருநூல் கற்றறிந் தமைச்சர் குணங்களும் உடையனாய்ச்
சுற்றம்
கடப்படும் அரச னிடத்துறும் அன்பும் கருதுவேற் றரசரைப் பண்பும்
விடப்படா இன்சொல் வன்மையும் உருவும் வெருவுறாத் திண்மையுமருவி
.... தூதன்." —விநா. அரசி. 110.

குறிப்பு:

'அன்புடைமை' என இந்தக் குறளிலும், 'அன்பு அறிவு' என மேற் குறளிலும் இருமுறை அன்பு கூறப்பெறுகின்றது. இக்குறளில் குடிப்பிறத்தலை அடுத்துக் கூறப்படுதலின் சுற்றத்தார்மாட்டன்புடையனாதல் எனவும், மேற்குறளில் அரசர்மாட்டன்புடைமை எனவும் பரிமேலழகர் விதந்துகூறுவர். அன்பிற்கு இலக்கண மாக அறத்துப்பாலில் 'வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார் கண் காதலுடையனாதல்' எனக்கூறினர் பரிமேலழகர். மனைவியர்கண்ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின்கண்ணும் மனமகிழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்து நிற்கும் நேயம் என்பர் நச்சினார்க்கினியர். தான் வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி என்பர் நக்கீரர். தன்னாற் புரக்கப்படுவார்மேலுள தாகிய காதல் என்பர் புறநானூற்று உரையாசிரியர்.

அன்பைத் தூது உரைப்பான் பண்பு எனக்கூறியதற்கும், அன்பு........ இன்றியமையாத மூன்று எனக்கூறுவதற்கும் வேறுபாடு காணற்குரியது. பண்பு தூதனுடைய சகசகுணமாய் அவனைவிட்டுப் பிரியாததாய் இருப்பது. சுற்றத்தாரிடம் உள்ள அன்பு அவனது இயற்கைக் குணமாயிருத்தலின் அன்புடைமை பண்பெனப் பெற்றது.¦ இன்றியமையாமை என்பது, காரணத்தாற் பின்னர்க் கூடியதாய் இன்றி யமையாத் தேவையாக இருப்பது. அரசர்மாட்டுவைக்கும் அன்பு தூதன் பதவியை யேற்ற காலமுதல் தொடங்கியதாய், ஆண்டான் அடிமைச்சம்பந்தத்தை அடிப்படை யாகக்கொண்டு பிறந்தது. இந்த அன்பாலேயே அரசர்க்கு எல்லாவகையானும் எஞ்ஞான்றும் வெற்றியேயுண்டாகவேண்டும் என்ற விருப்பமீதூர அதனால், அறிவும் ஆராய்ந்த சொல்லும் உடையனாகின்றான் என்பதும் கருதற்குரியது.

வேந்தவாம் பண்பு: தன்னரசன் தனது பழக்க வழக்கங்களால் விரும்பத் தக்க பண்பு. தூதிற்குச் சென்றவிடத்து மாற்றரசனும் மயங்கத்தக்க பண்பு.
—தொகுப்பாசிரியர்.

682. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்(கு)
இன்றி யமையாத மூன்று. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— அன்பு - தம்அரசன்மாட்டு அன்புடைமையும், அறிவு- அவனுக்கு ஆவன அறியும் அறிவுடைமையும், ஆராய்ந்த சொல்வன்மை -

அவற்றை வேற்றரசரிடைச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையும் என, தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று - தூது உரைக்க உரியார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று.

ஆராய்தல் - அவற்றிற்கு உடம்படும் சொற்களைத் தெரிதல். இன்றியமையாத மூன்று எனவே, அமைச்சர்க்குச் சொல்லிய பிறகுணங்களும் வேண்டும் என்பது பெற்றாம். இவை இரண்டு பாட்டானும் இருவகையார்க்கும் பொதுவிலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— அன்புடைமையும், அறிவுடைமையும், தெரிந்த சொல்வன்மையுடைமையும், தூதுரைப்பாற்கு இன்றியமையாத மூன்று குணங்களாம் எ - று.

இத்துணையும் தூதர் இலக்கணம் கூறியவாறு.

பரிப்:— ஆராய்ந்த என்றமையால் கல்வியாயிற்று. மேற்கூறிய குணங்கள் எல்லாவற்றினும் இவை இன்றியமையர்தன என்று கூறிற்று.

பரிதி:— அரசன்மேல் அன்புடைமையும், அறிவுடைமையும், அரசற்குஇழுக்கம்வாராத சொற்சொல்லும், சொல்வன்மையும் உள்ளவன் தூதன் எ - று.

காளிங்:— அரசர்மாட்டு அன்பு பெரிது உடைமையும், இயற்கையானும் தெளிந்த அறிவு உடைமையும், சொல்லும் சொல் ஏற்றத்தாழ்வு இல்லாத சொல்வன்மையும் என்னும் இம்மூன்றும் அரசர்க்குத் தூது உரைக்கும் அமைவுடையோர்க்குப் பெரிதும் இன்றியமையாது எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஆராய்ந்த சொல்வன்மை - ஆராய்ந்து சொல்லுதல் வன்மை என்றமையால் சொல் முதனிலைத் தொழிற்பெயர். ஆராய்ந்த எனப் பெயரெச்சமாக உரையாது வினையெச்சமாக உரைத்தல் காண்க. முருகாற்றுப்படையுள் "சீரைதை இய" என்றதற்கு உரைத்தாங்கு உரையாது 'திலகந்தை இய' என்பதற்கு வினை எச்சமாக உரைத்தலும், 'உரையிடத்தியலும் இடனிலை அறிதல்" (தொல். சொல் - 458) என்னுஞ் சூத்திரத்துள் "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்" என்பதனையும், 'ஆடிய கூத்தனும் வந்தான்; அவனொடு கூடிய கூத்தியுங் கொண்டு' எனவும் காட்டி இவற்றைப் பெயரெச்சம் வினையெச்சமாகத் திரிந்தது எனவும் நச்சினார்க்கினியாரும் உரைத்தார் என்க.

ஒப்புமைப்பகுதி:

“மாண்டமைந்தார் ஆய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல் - பூண்டமைந்த
கால மறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ்.” —ஏலாதி. 26.

முதுமொழிவெண்பாக்கள்:

“பேதையரும் காவலரும் பேதமின்றி யேபொருந்தத்
தூதுசென்ற கொன்றைத் தொடையலார் - போலவே.”
—முதுமொழி. 100.

குறிப்பு:

பரிமேலழகர் இருவகையார் என்றது தூதரில் தான்வகுத்துக் கூறுவானும், கூறியது கூறுவானுமாகிய இருதிறத்தினரையும்.

—தொகுப்பாசிரியர்.

683. *நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. (ந)

உரைப்பகுதி:

பரிமே:— வேலாருள் வென்றி வினை உரைப்பான் பண்பு - வேலையுடைய வேற்றரசரிடைச் சென்று தன்னரசனுக்கு வென்றிதரும் வினையைச் சொல்லுவானுக்கு இலக்கணமாவது, நூலாருள் நூல் வல்லன் ஆகுதல் - நீதிநூலை உணர்ந்த அமைச்சரிடைத் தான் அந்நூலை வல்லனாதல்.

கோறன்மாலையர் என்பது தோன்ற வேலார் என்றும், தூது வினை இரண்டும் அடங்க வென்றிவினை என்றும் கூறினர். வல்லனாதல் - உணர்வு மாத்திரம் உடையராய அவர்முன் வகுக்கும் ஆற்றலுடையனாதல்.

மணக்:— எல்லா நூல்களையும் கற்றார்முன்னர் அந்நூல்களைத் தானும் சொல்ல வல்லவனாகல், வேலுடையார் முன்னின்று தன்னரசனுக்கு வெற்றியாகிய வினையைச் சொல்லுமவனது இயல்பாம் எ - று.

*‘நூலார்முன் நூல்வல்ல னாகுதல் வேலார்முன்’ மணக்குடவர் பாடம்.

பரிதி:— கல்வியுள்ளார் தான்கற்ற கல்விவிளங்குதல் *வெண்பா மாலையை வெல்லுதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— பலவகைப்பட்ட நூல்களையும் கற்று வல்ல சான்றோரினும் சமையக் கற்றுவல்லானாய் இருக்கின்றது யாது மற்று அது வேல்வேந்தர் மாட்டுச் சென்று தன் அரசர்க்கு வென்றிக் கருமம் சொல்லுவானது மரபு எ - று.

எனவே அரசரும் யாவையும் மற்றுளோரும் அனைத்தும் அறிந்த தன்மையர் ஆகலான் அவர்மாட்டுச் சென்று உரைக்கும் இடத்துக் கல்வியும் திருத்தம் வேண்டும் என்பது கருதி இவர்க்கு நூல்வன்மை எடுத்து உரைத்தது என அறிக. சூழ்ச்சியாளரில் சூழ்ச்சி பெரிது உடையன் ஆதல் என்றும் ஆம்.

குறிப்பு:

இக்குறள்முதல் 'கடனறிந்து' (687) என்பதுகாறும் வகுத்துக்கூறும் தூதனியல்பு கூறும்.

மாற்றரசன் வேலுடையனாயினும் அவன் சீற்றத்தையும் மாற்றித் தன் வேந்தற்கு வென்றிதரும் சொற்களை அவன்கேட்கச் சொல்லும் சாதுரியத்தைத் தருவது நூல்வன்மையே என்பது.

நூலை ஓதியவர்களைக் காட்டிலும் அவர்கள் முன்பேயே அதனை வகுத்துச் சொல்லும்வன்மை பெரிதாம். அரசர் பிறபடைக்கலங்களும் உடையரேனும் வேலார் என்றது சிறப்புப்பற்றி என்க. தொல்காப்பியத்து, 'பெரும்படை தாங்கும் வேலினானும்' என்பதற்குக் காத்தல் தொழிலன்றி அழித்தல் தொழில்பூண்ட முக்கட் கடவுட்குச் சூலவேல் படையாதலானும், முருகற்கு வேல் படையாதலானும், சான்றோர் வேற்படையையே சிறப்பப் பெரும்பான்மை கூறலானும் வேலைக்கூறி, ஏனைய படைகளெல்லாம் 'மொழிந்தபொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாத தனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியாற் பெறவைத்தார்' என்றவுரை ஈண்டுச் சிந்தித்தற்குரியது. —தொகுப்பாசிரியர்.

684. அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. (௪)

உரைப்பகுதி :

பரிமே:— அறிவு - இயற்கையாகிய அறிவும், உரு - கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும், ஆராய்ந்த கல்வி - பலரோடும் பலகாலும்

*இப்பகுதி விளங்கவில்லை.

ஆராயப்பட்ட கல்வியும் என, இம்மூன்றன் செறிவு உடையான் - நன்கு மதித்தற்கு ஏதுவாய இம்மூன்றனது கூட்டத்தை உடையான், வினைக்குச் செல்க - வேற்று வேந்தரிடைத் தூது வினைக்குச் செல்க.

இம்மூன்றும் ஒருவன்பால் கூடுதல் அரிதாகலின், செறிவுடையான் என்றார். இவற்றான் நன்கு மதிப்புடையனாகவே, வினை இனிது முடியும் என்பது கருத்து.

மணக்:— அறிவும், வடிவும், தெரிந்த கல்வியுமாகிய இம்மூன்றினது அடக்க முடையவன் வினைக்குச் செல்க.

பரிப்:— அறிவு - இயற்கையறிவு. உருவு - வடிவழகு. ஆராய்ந்த கல்வி - கலைகளை அறிந்து ஆராய்ந்ததனால் ஆட்சியான கல்வி. இவற்றினது அடக்கமாவது இம் மூன்றினால் வரும் பெருமிதத்தை அடக்கி ஒழுகுதல்.

பரிதி:— அறிவுடைமை, அழகு, கல்வி இம்மூன்றும் உள்ளான் தூது செல்வான் எ - று.

காளிங்:— முன்னமே தான் இயல்பாக அறிவு உடையன் ஆதலும், மன்னரும் பிறரும் மகிழ்ந்து அணைத்தற்கு உரிய வடிவு உடையன் ஆதலும், கீழ்ச்சொன்ன வரம்பின் அன்றி மற்றும் பல ஆராய்ந்த கல்வி உடையன் ஆதலும் என்னும் இம்மூன்றினையும் உடையனாய் இருக்கின்றான் யாவன்? மற்று அவன் செல்வானாக அரசர் காரியத்துக்கு எ-று.

குறிப்பு

அறிவு 'அன்பறிவு' (682) குறளிலும், ஈண்டும் கூறப்பெற்றுள்ளது. 682ல் கூறியது தம் அரசற்கு அவ்வப்போது ஆவன அறியும் சமயோசித புத்தி. ஈண்டுக் கூறியது இயற்கையான நுண்ணறிவு. இம்மூன்றின் செறிவு என்பதற்கு பரிப் பெருமாள் கூறும் 'இம்மூன்றினால் வரும் பெருமிதத்தையடக்கியொழுகுதல்' என்னும் உரை மிக இனிமைபயப்பது. செறிவு - கூட்டம் என்பர் பரிமேலழகர். மேல் 688ம் குறளில் 'இம்மூன்றின் வாய்மை' என்பதற்குப் பரிமேலழகர் இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையும் எனப் பொருள்கண்டதுபோல ஈண்டும் இம்மூன்றோடும் செறிவும் உடையான் எனக்கோடலே பொருந்துவதாகும்.

—தொகுப்பாசிரியர்.

685. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— தொகச் சொல்லி - வேற்றரசர்க்குப் பல காரியங்களைச் சொல்லும் வழிக் காரணவகையால் தொகுத்துச் சொல்லியும், தூவாத நீக்கி நகச் சொல்லி - இன்னாத காரியங்களைச் சொல்லும்வழி வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களான் மனமகிழச் சொல்லியும், நன்றி பயப்பது தூதாம் - தன் அரசனுக்கு நன்மையைப் பயப்பவனே தூதன் ஆவான்

பல காரியங்கட்கு உடம்படாதார் பரம்பரையான் அவற்றிற்குக் காரணமாயதொன்றைச் சொல்ல அதனால் அவை விளையுமாறு உய்த்துணர அருமையானும் சுருக்கத்தானும் உடம்படுவர்; இன்னாதவற்றிற்கு உடம்படாதார் தம்மனம் மகிழச்சொல்ல அவ்வின்னாமை காணாது உடம்படுவர் ஆதலின், அவ்விருவாற்றானும் தன்காரியம் தவறாமல் முடிக்க வல்லான் என்பதாம். எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கன.

மணக்:— சுருங்கச்சொல்லி, விரும்பாத சொற்களை நீக்கி, மகிழுமாறு சொல்லி, தன் அரசனுக்கு நன்மையைத் தருமவன் தூதனாவன் எ - று.

இது சொல்லுமாறு கூறிற்று.

பரிதி:— தொகுத்துச் சொல்லி நல்லவையுட்கொண்டு அரசன் மனமும் முகமும் மகிழச்சொல்லுவான் தூதன் எ - று.

காளிங்:— இங்ஙனம் ஆராய்ந்து தகுவன சொல்லுமிடத்தும் பொருள் பொதிந்த சொல்லினைச் சுருங்கச் சொல்லி, அங்ஙனம் சுருங்கச் சொல்லுமிடத்தும் பயன்படாத சொல்லினை நீக்கி மற்று அச்சொல்வது தன்னையும் கேட்டவர் மகிழ்ந்து முகமலருமாறு சொல்லிப் பின்னும் இவ்வாறு சொல்லுதலே அன்றி மற்று அவரால் தன் அரசர்க்கு வேண்டும் நன்மையைத்தர வல்லதாம் தூதாவது எ - று.

தூவாத நீக்கி என்பது பயன்படாத ஒழித்தல் என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— எண்ணும்மை விகாரத்தால் தொக்கது. எண்ணும்மை தொகுவது, உம்மைத்தொகை விதியாயிருந்தும் அதனை விகாரம் என்றது "வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா" (தொல்.சொல்-295) என்னுஞ் சிறப்புவிதிபற்றி என்க.

ஒப்புமைப்பகுதி:

"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே
ஏணியும் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையும் மணிகளைந் தனவே." —புறம். 305.

குறிப்பு:

விரித்துச்சொல்லியவழி வாய் சோர்ந்து மறை வெளிப்படுமாதலின் தொகச்சொல்லி என்றார் எனலுமாம்.

—தொகுப்பாசிரியர்

686. கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது. (சு)

உரைப்பகுதி:

பரிமே:— கற்று - நீதிநூல்களைக் கற்று, செலச்சொல்லி - தான் சென்ற கருமத்தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லி, கண் அஞ்சான் - அவர் செயிர்த்து நோக்கின் அந்நோக்கிற்கு அஞ்சாது, காலத்தால் தக்கது அறிவது தூதாம் - காலத்தோடு பொருந்த அது முடிக்கத்தக்க உபாயம் அறிவானே தூதனுவான்.

அவ்வுபாயம் அறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அதனையன்றிப் பிறிதொன்றுன் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்க வேண்டுதலின் காலத்தால் தக்கது அறிதலும், இலக்கணமாயின.

மணக்:— தன்னரசன் சொன்ன மாற்றத்தைச் சொல்லுங்கால் பகையரசன் வெகுண்டானாயின் அது மாற்றுதற்காம் உபாயத்தைக் கற்று, அவ்விடத்தினும் அஞ்சுதலின்றி, மகிழ்ச்சி வருமாறு இசையச்சொல்லி, நாளோடே கூடச்செய்யத் தகுவன அறிந்து சொல்ல வல்லவன் தூதனாவான் எ - று.

பரிப்:— தக்கதறிதலாவது சொல்லிய வார்த்தையைச் சொல்லாமல் போதலும் வினைசெய்து போதலும் இஃது இவ்விடத்திற்கு ஆவன செய்யவேண்டும் என்றது.

பரிதி:— மந்திரி நூல் கற்று ஆஸ்தானம் அஞ்சாதவனுமாய் அரசன்செவிக்கு ஏறச்சொல்பவனுமாய்க் காலம் அறிவன் தானுபதி எ - று.

காளிங்:— இராச நீதிக்கு ஏற்ற நூல்களை இனிது உணரக் கற்றும், இகல்வேந்தர் முன்னர்ச் சென்று உரைக்குமிடத்துத் தறுகண்மையும் வேண்டுங்கால் உடையனாய், வேண்டாக்கால் அவர் செவிக்கு இனிது சொல்லுமாறு சொல்லிச் சொல்லுதற்கு அமைந்த காலத்தையும் கடைப்பிடித்து, ஏற்றத்தாழ்வு படாமல் சொல்லத் தக்கதனையே அறிந்து சொல்லுவது யாது, மற்று அதுவேயாம் தூது என்று சொல்லப்படுவது எ - று.

மேற்கோள்பகுதி:

இளம்:— பொருளொடு புணர்ந்த பக்கம்: பக்கம் என்றதனால் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் எனவருவன வெல்லாம் கொள்க எனக்கூறி, தூது என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75.)

குறிப்பு:

நன்கு கற்றிருந்தாலும் செலச்சொல்லாமைக்கு அச்சம் காரணமாகும் ஆதலின் கற்று, கண்ணஞ்சான், செலச்சொல்லி எனக் காரணகாரிய முறைப்படியே வைக்கப்பெற்றது. காலத்தாலறிவது நூலறிவுமன்று; தம் அரசன் சொல்லி அனுப்பிய முறையும் அன்று; சமயோசிதபுத்தி என்பதாம்.

— தொகுப்பாசிரியர்.

687. கடன்அறிந்து காலம் கருதி இடனறிந்(து)
எண்ணி [1]உரைப்பான் தலை. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— கடன் அறிந்து - வேற்றரசரிடத்துத் தான் செய்யும் முறைமை அறிந்து, காலம் கருதி - அவர் செவ்வி பார்த்து, இடன் அறிந்து - சென்ற கருமம் சொல்லுதற்கு ஏற்ற இடமறிந்து, எண்ணி - சொல்லுமாற்றை முன்னே விசாரித்து, உரைப்பான் தலை - அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான்.

செய்யுமுறைமையாவது அவர் நிலையும் தன்னரசன் நிலையும் தன்னிலையும் தூக்கி அவற்றிற்கு ஏற்பக் காணுமுறைமையும் சொல்லும் முறைமையும் முதலாயின. செவ்வி - தன்சொல்லை ஏற்றுக்கொள்ளும் மன நிகழ்ச்சி. அது காலவயத்ததாகலின் காலம் என்றார். இடம் தனக்குத் துணையாவாருடைய இடம். எண்ணுதல் தான் அதுசொல்லுமாறும் அதற்கு அவர் சொல்லும் உத்தரமும் அதற்குப்பின் தான் சொல்லுவனவுமாக இவ்வாற்றான் மேன்மேல் தானே கற்பித்தல். வடநூலார் இவ்விருவகை யாருடன் ஓலைகொடுத்து நிற்பாரையுங்கூட்டித் தூதரைத் [2]தலை, இடை கடை என்று வகுத்துக் கூறினாராகலின், அவர் மதமும் தோன்றத் தலை என்றார். தூது என்பது அதிகாரத்தான் வந்தது. இவை ஐந்து பாட்டானும் தான் வகுத்துக் கூறுவானது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— காரியம் நின்ற முறைமையை அறிந்து, காலத்தையும் நினைத்து, இடமும் அறிந்து, தானே எண்ணிச் சொல்லவல்லவன் தலையான தூதனாவான் எ - று.

இது தலையான தூதரிலக்கணம் கூறிற்று.

பரிதி:— செய்யும் முறைமை அறிந்து, காலம் இடம் அறிந்து, முன்பின் விசாரித்துச் சொல்பவனே தூதபதி எ - று.

---

1 'உரைப்பதாம் தூது' காளிங்கர் பாடம்.

2 'தானறிந்து கூறும் தலைமற் றிடையது
கோனறைந்த தீதென்று கூறுமால் - தானறியா(து)
ஓலையே காட்டும் கடைஎன் றொருமூன்றும்
மேலையோர் தூதுரைத்த வாறு. —பா - வெ.

பரிப்:— தலை, இடை, கடை என மூன்று வகையாருள் மேற் கூறின எல்லாம் இடையும் கடையும் ஆகிய தூதர் இயல்பு கூறினர்; இது தலையான தூதர் இலக்கணம் கூறிற்று. தலையான தூதன் தானே காரியம் அறிந்து சொல்லும். இடையான தூதன் சொன்ன மாற்றத்தைச் சொல்லும். கடையான தூதன் ஓலை காட்டும்.

காளிங்:— அரசர் சொல்லும் திறப்பாடுகள் யாவும் அறிந்து சொல்லுதற்கு உரிய காலத்தையும் கருதிக் கொண்டு, மற்றுச் சொல்லுதற்கு அமைந்த இடத்தையும் இனிது உணர்ந்து பின்னும் மக்கள் பாட்டு, உரை தம்மினும் அப்பொழு............கற்பனவற்றை நெஞ்சகத்து ஓர்ந்துகொண்டு இங்ஙனம் சொல்ல வல்லதாம் தூது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"செல்லுங்கால் தேயத் தியல்தெரிந்து சென்றக்கால்
புல்லிய சுற்றம் புணர்வறிந்து — புல்லார்
மனத்தால் பிரித்து வலியால் உதவும்
இனத்தால் தெரிவது தூது." —பா.வெ.

"காலம் அறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ்." ஏலாதி. 26

"இடத்தொடுசெவ்வி யறிந்துகா லத்துக் கேற்றவும் உரைப்பவன் தூதன்."
—விநா. அரசி. 110.

குறிப்பு:

மேல் 'காலத்தால் தக்கதறிவது' என்றது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வினை முடிக்கத்தக்க உபாயம் அறிவது. காலங்கருதி என்பது தான் சொல்லுவனவற்றை மாற்றரசன் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் சமயம் அறிந்து என்பது. மன்னன், மடியானுதல், காமமுதலியவற்றான் மயங்கியாதல், சினந்தாதல் இருக்குங்கால் இவன் தூதுசொல்லின் வினைவேறுபடுமாதலின் செவ்வியறிந்து சொல்ல வேண்டியது இன்றியமையாதாயிற்று. கடனறிந்து என்பதற்குப் பரிமேலழகர் வேற்றரசரிடம் தான் நடந்துகொள்ளும் முறைமையறிந்து எனவும், காளிங்கர் அரசர் சொல்லுந் திறங்களையறிந்து எனவும், பரிப்பெருமாள் மணக்குடவர் காரியம் நின்றமுறைமை எனவும் பொருள்கண்டனர்.

—தொகுப்பாசிரியர்.

688. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— வழி உரைப்பான் பண்பு - தன்னரசன் வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்றரசர்க்குச் சென்று சொல்லுவானது இலக்கணமாவன, தூய்மை - பொருள் காமங்களால் தூயனாதலும், துணைமை - தனக்கு அவரமைச்சர் துணையாந்தன்மையும், துணிவுடைமை - துணிதலுடைமையும், இம்மூன்றின் வாய்மை - இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையும் என இவை.

பொருள் காமங்கள்பற்றி வேறுபடக் கூறாமைப்பொருட்டுத் தூய்மையும், தன்னரசனுக்கு உயர்ச்சி கூறியவழி எம்மனோர்க்கு அஃது இயல்பு எனக்கூறி அவர் வெகுளி நீக்குதற்பொருட்டுத் துணைமையும், இது சொல்லின் இவர் ஏதஞ்செய்வரென்று ஒழியாமைப் பொருட்டுத் துணிவுடைமையும், யாவரானும் தேறப்படுதற்பொருட்டு மெய்ம்மையும், வேண்டப் பட்டன. இன் ஒடுவின் பொருட்கண் வந்தது.

மணக்:— தூய்மை உடைமையும், சுற்றம் உடைமையும், ஒரு பொருளை யாராய்ந்து துணிதலுடைமையும், இம் மூன்றின்கண்ணும் மெய்ம்மையுடைமையும் தூதற்கு இயல்பாம் எ - று.

தூய்மை - மெய்யும் மனமும் தூயன் ஆதல். இதன் மெய்ம்மை யாவது பிறர்க்கு வேண்டிச் செய்யாது தனக்கு வேண்டிச் செய்தல். சுற்றத்தார்மாட்டும் பொய் கூறாமை பகைவர்மாட்டுப் பொய்கூற வேண்டுதலின் இது பின் கூறப்பட்டது. துணிவு - துணிந்த பின்பு ஐயம் தோற்றாமல் துணிதல். வழியுரைப்பார் என்றார் அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுதலால்.

பரிதி:— வினைத்தூய்மை, உதவிக்கட்டு, திடபுத்தி இம்மூன்றும் உள்ளவனாய் ஒருவழிப்பட்ட வார்த்தை சொல்வான் தானாபதி எ - று.

காளிங்:— குலத்தூய்மை, குணத்தூய்மை மனத்தூய்மை வாய்மொழித் தூய்மை முதலிய தூய்மையும் இருபாலும் சென்று சொல்லுங்கால் தன் அரசற்கும் அவன் கருமத்திற்கும் பெரிதும் துணைமைப்பாடுடையன் ஆதலும் அரசர்முன்னர்ச் சொல்லுமிடத்துக் கலங்காது சொல்லும் தெளிவுடைமை இம்மூன்றினுடைய வஞ்சனையற்ற வண்மைப்பாடுடைது யாது மற்று அது தூது நடந்து சொல்லுவான் மரபாவது எ - று.

இனி வழியுரைப்பான் என்பது அரசன் ஏவலின் பின் சென்று உரைப்பான் என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— இம் மூன்றோடுகூடிய மெய்ம்மையும் என இவையே இலக்கணம் என்றதனால் இன் ஒடுவின் பொருட்கண் வந்தது; புறநடைச் சூத்திரவிதியால் அமையும் என்க.

ஒப்புமைப்பகுதி:

"உறுபொருள் காமம் விரும்புறாத் தூய்மை யுயிர்க்கழிவுறினும் அஞ்சாமை
மறுபுலத் தமைச்சர் துணைமையாம் தன்மை வாய்மைசொல் சோர்வுறாத் துணிவும்
மறுவற உடைய ஞய்வழி யுரைப்பன் மத்திமத் தூதனும் முடங்கல்
குறுகுபு கொடுப்பான் கடைப்படும் தூதன் கூறிய இவரையும் தழீஇக்கொள்." —விநா. அரசி. 111.

குறிப்பு:

இது கூறியது கூறுவானாகிய மத்திமத்தூதன் இயல்பு கூறுகிறது. துணைமை - தான் தூதுசென்ற அரசனிடமே தனக்குத் துணையாகச் சிலரை யாக்கிக் கொள்ளும் வன்மை. அனுமன் விபீடணனை யாக்கிக்கொண்டதுபோலும் கண்ணன் விகர்ணனை ஆக்கிக் கொண்டது போலும் ஆக்கிக்கொள்வது. இம் மூன்றின் வாய்மை எனத் தூய்மை முதலிய மூன்றோடும் வாய்மையைக் கூட்டிச்சொல்லாது பிரித்துக் கூறியது மாற்றரசனிடம் வாய்மையல்லாதனவும் வாய்மை யெனத் தோன்றச் சொல்லுதல் வேண்டுமாதலின் என்க.

—தொகுப்பாசிரியர்.

689. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். (க)

உரைப்பகுதி :

பரிமே:— விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் - தன் அரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றரசர்க்குச்சென்று சொல்ல உரியான், வடு மாற்றம் வாய்சோரா வன்கணவன் - தனக்கு வரும் ஏதத்திற்கு அஞ்சி அவனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந்தும் சொல்லாத திண்மையை உடையான்.

தாழ்வு சாதிதருமமன்மையின், வடு என்றார். வாய்சோரா எனக் காரியம் காரணத்துள் அடக்கப்பட்டது.

மணக்:— தன் அரசன் சொல்லிவிட்ட மாற்றத்தைப் பகையரசர்க்குச் சொல்லுமவன், தன்னரசனுக்கு வடுவாகுஞ் சொற்களை மறந்தும் சொல்லாத அஞ்சாமையையுடைய தூதனாவன் எ - று.

பரிப்:— இது முதலாகச் சொல்லும் திறன் கூறுகின்றது ஆகலின் மூற்படச் சொல் சொல்லவேண்டும் என்றது.

பரிதி:— பராச்சியத்தில் காரியம் கொள்ளப்போகிற தானாபதி குற்றமில்லாத சொல்லை வாய்தடுமாறாமல் சொல்லவல்லான்; தூது அவனே எ - று.

காளிங்:— ஒரு வேந்தன் சொல்லிவிடும் மாற்றத்தை ஒரு வேந்தர்க்குச் சென்று உரைப்போனானவன் யாவன் எனின், தன் அரசன் வேற்றரசனுக்குச் சொல்லிவிடும் மாற்றமாயினும் இனி வேற்றரசன் தன் அரசர்க்குச் சொல்லிவிடும் மாற்றமாயினும் தனித்தனி இராச பாவனைக்கு உரிய மாற்றமாம் அத்துணையல்லது எளிமைப்பட நிகழாமை இயல்பு அன்றோ? அதனின் இவை முழுதும் இவர் இவர்க்குச் சென்று இசைப்பின் தனது இராச காரியம் கெடும் ஆகலான் இருபாலும் சென்றால் வாய்ப்பன கூறி, வடு அடுப்பன வழுவியும் புறப்படாமல் செறியப்பிடிக்கும் திறப்பாடு உடையவன் தூதாவது எ - று.

ஒப்புமைப்பகுதி:

" தடுமாற்றம் இன்றித் தகைசான்ற சொல்லான்
வடுமாற்றம் வாய்சோரா னாகி — விடுமாற்றம்
எஞ்சாது கூறி இகல்வேந்தன் சீறுங்கால்
அஞ்சாது அமைவது தூது."

—பா - வெ.

முதுமொழிவெண்பாக்கள்:

" சூரனெதிர் தக்கவுரை சொற்றிறமாந் தூற்றகன்றான்
மூரிமிகு வாகு முருகேசா — ஊரின்."

—முருகேசர். 69.

குறிப்பு:

இதுவும் மத்திமத்தூதன் இயல்பு கூறுகிறது. வாய் சோர்தலால் ஆகிய வடுமாற்றத்தை 'வடுமாற்றம் வாய்சோரா' என அடக்கினாராகலின் காரியம் காரணத்துள் அடக்கப்பெற்றது என்றார். வாய்சோர்தல் - தான் தப்பத் தன் கடைமைகளை மறந்தும் மந்தணத்தை வெளியிடல்.

—தொகுப்பாசிரியர்.

690. இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்(கு)
உறுதி பயப்பதாம் தூது. (௯0)

உரைப்பகுதி:

பரிமே:— இறுதி பயப்பினும் எஞ்சாது - அவ்வார்த்தை தன்னுயிர்க்கு இறுதி தருமாயினும் அதற்கு அஞ்சி ஒழியாது, இறைவர்க்கு உறுதி பயப்பது தூதாம் - தன்னரசன் சொல்லியவாறே அவனுக்கு மிகுதியை வேற்றரசரிடைச் சொல்லுவானே தூதனாவான்.

இறுதி பயப்பினும் என்றதனால், ஏனைய பயத்தல் சொல்ல வேண்டாவாயிற்று; இவை மூன்று பாட்டானும் கூறியது கூறுவானது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— தனக்கு இறுதி வருமாயினும், ஒழியாது தன் இறைவற்கு நன்மையைத் தருவது தூதாவது எ - று.

பரிப்:— இஃது இறுதி பயப்பினும் என்றமையான் அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுக என்றது.

பரிதி:— தனக்கு இறுதிவரினும் அஞ்சாமல் அரசற்கு உறுதியான காரியம் பண்ணுவான் எ - று.

காலிங்:— தான் சென்று பகைவேந்தர் முன்னர்க் கருமம் சொல்லுங்கால் கண்ணஞ்சாது சொல்ல வேண்டுவனவும் சொல்லி மற்று அதனால் தன் உயிர்க்கு இறுதி அடுப்பினும் ஒழியவிடாது தன் இறைவனாகிய அரசனுக்கு வேண்டும் கரும உறுதியைப் பயக்க நிற்பது யாது மற்று அதுவே தூதாவது எ - று.

இனி, இங்ஙனம் அரசர்க்கு அமைச்சர் தூதாடி நாடும் ஆக்கமும் பிறவும் செய்தமைந்து அடிப்படுத்த மன்னரைச்சேர்ந்து ஒழுகவேண்டும் அன்றே; அதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள்:

"அன்றெதிரி செய்தவினைக்(கு) அஞ்சாமல் ஐவருக்காய்ச்
சென்றுறுதி சொன்னான் தினகரா — என்றும்." —தினகர. 72.

"தன்துயரம் நோக்கான் தனைவிடுத்தோர்க் கேஉறுதி
துன்றமொழிந் தானிடதன் சோமேசா — என்றும்." —சோமேசர். 69.

"சானகியைக் கண்டரக்கன் தானிகலி வாலிலிடும்
நிநகரில் இட்டான் சிவசிவா — ஊனுக்(கு) —சிவசிவ. 69.

"அக்கன் முதலரக்கர் ஆவிதனை வாங்கியூர்
எக்கியனுக் கீந்தான் இரங்கேசா — மிக்க." —இரங். 69.

குறள் வைப்புமுறை

பரிமே:— அன்புடைமை, அன்பறிவு, நூலாருள், அறிவுரு, தொகச்சொல்லி, கற்றுக்கண், கடனறிந்து, தூய்மை, விடுமாற்றம், இறுதிபயப்பினும்.

மணக்:— அன்புடைமை, தூய்மை, நூலாருள், அறிவுரு, அன்பறிவு, விடுமாற்றம், தொகச்சொல்லி, கற்றுக்கண், கடனறிந்து, இறுதிபயப்பினும்.

பரிதி:— கற்றுக்கண், தொகச்சொல்லி, கடனறிந்து, நூலாருள், தூய்மை, அன்புடைமை, அறிவுரு, விடுமாற்றம், அன்பறிவு, இறுதிபயப்பினும்.

காளிங்:— கற்றுக்கண், அறிவுரு, அன்புடைமை, கடனறிந்து, அன்பறிவு, தொகச்சொல்லி, நூலாருள், விடுமாற்றம், தூய்மை, இறுதிபயப்பினும்.

70. மன்னரைச்சேர்ந்தொழுகல்.

தொகுப்புரை:

[அடிக்கடி அன்பு மாறும் இயல்பினராகிய மன்னரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர் அகலாமலும் அணுகாமலும் குளிர்காய்வாரைப் போல இருக்க. அரசர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாமை அமைச்சர்க்கு நிலைத்த ஆக்கத்தைத்தரும். அமைச்சர், அரசர்பொறுத்தற்கரிய பிழைகள் தன்கண்வாராமற் காக்க. வந்தனவாக எண்ணி அரசர்கள் ஐயமுற்றால் அவர்களைத் தெளிவிக்க யாராலும் முடியாது. அரசர்க்கு அருகில் இருக்கும்போது வேறுபிறரோடு இரகசியம் பேசுதலும், சிரித்தலும் கூடாது. அரசன் பிறரோடு இரகசியமாகப் பேசுபவைகளைச் செவிகொடுத்துக் கேட்கவும் கூடாது. 'அது என்ன' என்று அரசனை வினவவும் கூடாது. அரசனுகச் சொன்னால் அதைக்கேட்டுக்கொள்ளலாம். அரசனிடம் ஒருகாரியத்தைத் தெரிவிக்கும் போது அவன் குறிப்பறிந்து சமயம் பார்த்து வெறுக்காதனவும் அவன் விரும்புவன வுமாகியவற்றை, மேலும் சொல் சொல் என்று அவன் கேட்கத்தக்கதாகச் சொல்லுக. அரசன் விரும்புங்காரியங்களைச் சொல்லிப் பயனற்றவைகளை அவன் விரும்பினாலும் சொல்லாதுவிடுக. அரசன் வயதில் இளையவன், இன்னமுறையினன் என்று இகழ்தலாகாது. அரசன் என்ற ஒளியோடு பழகவேண்டும் 'அரசனால் மரியாதையுடன் நடத்தப்படுகிறோம்' என்று எண்ணி, அவன் விரும்பாதகாரியங்களைச் செய்யார் நிலைத்த அறிவுடையவர்கள். மிகப்பழகியவன் என்று எண்ணித் தமக்குத்தகுதியில்லாதவற்றை அரசனிடம் செய்யும் உரிமை ஒருக்கால் இல்லையாயினும் ஒருக்கால் கெடுத்துவிடும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அமைச்சர் அரசரைப் பொருந்தி ஒழுகுமாறு. இது, வேந்தவாம் பண்புடைமை என மேலே வேண்டப்பட்டமையின், தூதின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— மன்னரைச் சேர்ந்து ஒழுகலாவது அரசர்மாட்டு அமாத்தியர் ஒழுகுந்திறங் கூறுதல். இது முதலாக அவையஞ்சாமை ஈறாகக் கூறுகின்றவை தம் அரசர்மாட்டு வேண்டுமாயினும், மாற்றரசர் மாட்டும் வேண்டுதல் இன்றியமையாத சிறப்புடைத்தாதலின், அதன் பின் இது கூறப்பட்டது.

பரிதி:— மன்னரைச்சேர்ந்தொழுகலாவது மன்னனால் சேர்க்கை செய்யும் இயல்பு எ - று.

691. அகலா தணுகாது தீக்காய்வார் *போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். (க)

உரைப்பகுதி:

பரிமே:— இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - மாறுபடுதலை யுடைய அரசரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர், அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க - அவரை மிகச்செறிவதும் நீங்குவதும் செய்யாது தீக்காய்வார்போல இடைநிலத்திலே நிற்க.

கடிதின் வெகுளும் தன்மையர் என்பது தோன்ற, இகல்வேந்தர் என்றார். மிக அகலின் பயன் கொடாது மிக அணுகின் அவமதிபற்றித் தெறும் வேந்தர்க்கு, மிக அகலின் குளிர் நீங்காது மிக அணுகின் சுடுவதாய தீயோடு உளதாய தொழிலுவமம் பெறப்பட்டது.

மணக்:— மாறுபாடுடைய வேந்தரைச்சேர்ந்தொழுகும் அமைச்சர் அவரை அகலுவதும் செய்யாது அணுகுவதும் செய்யாது தீக்காய்வார் போல இருக்க.

இது சேர்ந்தொழுகும் திறம் கூறிற்று.

பரிதி:— அணுகில் சுடும் அகலின் குளிரும் என்று தீக்காய்வார் போல ராசசேவை பண்ணுக எ - று.

காளிங்:— குளிர்க்கு உடைந்து தீக்காய்கின்ற இடத்து மற்று அதனை அகல்வதும் செய்யாது அணைவதும் செய்யாது தீக்காய்ந்து இன்புறுகின்றார் யாதொரு படி: அப்படியே அவரைப்போல ஒழுகுவார் யார் எனின் விறல் மன்னரைச் சேர்ந்து ஒழுகும் விதி மரபு உடையோர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"விடலைமை செய்ய வெருண்டகன்று நில்லா(து)
உடலரு மன்னர் உவப்ப ஒழுகின்
மடலணி பெண்ணை மலிதிரைச் சேர்ப்ப
கடல்படா எல்லாம் படும்."
—பழ. நா.

"அழல்போல் அணுகார் அகலார் நிழலன்ன நீரார்."
—திருவிளை. பன்றி. மந்திரி. 15.

---

*'போல' காளிங்கர் பாடம்.

"தீண்டி ஞாந்தமைத் தீச்சுடும் மன்னர் தீ
ஈண்டு தங்கிளை யோடும் எரித்திடும்
வேண்டில் இன்னமிர் தும்நஞ்சும் ஆதலான்
மாண்ட தன்றவின் வாய்மொழித் தெய்வமே." —சீவக. 250

"வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திர மாந்த ரோடும்
தீமைதீர் ஒழுக்கின் வந்த திறத்தொழில் மறவரோடும்
தூய்மைசால் புணர்ச்சி பேணித் துகளறு தொழிலை யாகிச்
சேய்மையோ டணிமை யின்றித் தேவரில் தெரிய நிற்றி."
—கம்ப. அர. 28.

"தீக்காய்ந்தாற் போலிருக்கவேணும்." —பழ.

உயிர்க்கும் பொருட்கும் தலைவனும் பிரபுவுமாகிய வேந்தனை, எரிகின்ற நெருப்பைப்போலவும் சினமிக்க பாம்பைப் போலவும் அவன் பக்கல் அணுகவேண்டும். —சுக்கிர. அத். 2: சு. 214.

குறிப்பு:

இகல் வேந்தர் - மாறுபாடே தமக்கியல்பாகு மன்னர்; தமர் என்றும் பாராது தந்நலம், அரசியல் இவற்றைப் பார்த்துக் கடிதின் வெகுள்பவர்களாதலின். இதுவரை மாற்றரசரை நோக்கிற்று என்ற பரிப்பெருமாள் உரையால், மாற்றரசரைச் சாரும் வகை கூறியதாகக் கொள்க. விறல்வேந்தர் காளிங்கர் பாடம்.

—தொகுப்பாசிரியர்.

692. மன்னர் விழைப *விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— மன்னர் விழைப விழையாமை - தம்மால் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாது ஒழிதல், மன்னரான் மன்னிய ஆக்கம் தரும் - அமைச்சர்க்கு அவரானே நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும்.

ஈண்டு விழைப என்றது அவர்க்குச் சிறப்பாக உரியவற்றை. அவை நுகரப்படுவன, ஒப்பனை, மேன்மை என்று இவை முதலாயின. இவற்றை ஒப்பிற்கஞ்சித் தாம் விழையாது ஒழியவே, அவ்வச்சம்நோக்கி

*'விழையாரேல்' காளிங்கர் பாடம்.

உவந்து அவர்தாமே எல்லாச் செல்வமும் நல்குவர், என்பது கருத்து. எனவே, அவற்றை விரும்பின் கேடுதரும் என்பதாம்.

மணக்:— எல்லார்க்கும் பொதுவாகக் கருதப்பட்டவை யன்றி, மன்னரால் விரும்பப்பட்டவையிற்றை விரும்பாமை, அம்மன்னராலே நிலையுள்ள செல்வத்தைத் தருமாதலான் எ - று.

அவை நுகர்வனவும் ஒப்பனைமுதலாயினவுமாம். இஃது அவற்றைத் தவிர்தல் வேண்டும் என்றது.

பரிதி:— அரசன் விரும்பினதைத் தான் விரும்புவானல்லன்; விரும்பானாகில் மன்னரால் ஆக்கம் பெறுவான் எ - று.

காளிங்:— அரசர் விரும்புவன யாவை சில: மற்று அவற்றைத் தாம் சிறிதும் விரும்பாரெனில், விரும்பாமையாகிய இதுதான் அம்மன்னரால் நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும் எ - று.

இனி, இவ்வாறு அமைச்சர் மன்னரைச் சேர்ந்து ஒழுகி நின்ற இடத்து அவர் உட்குறிப்பு அறிந்து அதனை முகக்குறிப்பினான் அறிந்து ஒழுகுதல் கடன் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்:

ஒப்புமைப்பகுதி :

"வேந்தர்தாம் விழைப எல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்டாய்
நாந்தக உழவர் ஏறே நன்பொரு ளாவதென்றான்." —சீவக. 2910.

"அறத்தொடு கல்யாணம் ஆள்வினை கூரை
இறப்பப் பெருகியக் கண்ணும் - திறப்பட்டார்
மன்னரின் மேம்படச் செய்யற்க செய்பவேல்
மன்னிய செல்வம் கெடும்." —ஆசாரக். 85.

"பெரியார் உவப்பன தாம் உவவார்." —ஷை 68.

"உழைஏவல் செய்யும் சிறார்போல ஒதுங்கி வேந்தன்
விழைவுஏது அதனை விடம்போல வெறுத்து வெஃகார்."
—திருவிளை. பன்றி. மந்திரி. 15.

"இறைசிறப் பாக அணிவண நுகர்வ இனிதுறு மேன்மையா திகள்தாம்
உறல்அறை போதல் உரிமையின் மருவல் ஒண்பொருள் வெளவல்...
.......சேர்ந்தவர்க்காகா." —விநா. அரசி. 112

693. போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— போற்றின் அரியவை போற்றல் - அமைச்சர் தம்மைக் காக்கக் கருதின் அரிய பிழைகள் தங்கண் வாராமல் காக்க; கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது - அவற்றை வந்தனவாகக்கேட்டு அவ்வரசர் ஐயுற்றால் அவரைப் பின் தெளிவித்தல் யாவர்க்கும் அரிதாகலான்.

அரிய பிழைகளாவன அவரால் பொறுத்தற்கரிய அறைபோதல், உரிமையொடு மருவல், அரும்பொருள் வெளவல் என்றிவை முதலாயின. அவற்றைக் காத்தலாவது ஒருவன் சொல்லியக்கால், தகுமோ என்று ஐயுறாது தகாது என்றே அவர் துணிய ஒழுகல். ஒருவாற்றான் தெளிவித்தாலும் கடன்கொண்டான் தோன்றப் பொருள் தோன்றுமாறுபோலக் கண்டுழியெல்லாம் அவை நினைக்கப்படுதலின் யார்க்கும் அரிது என்றார். இவை மூன்று பாட்டானும் அது பொதுவகையான் கூறப்பட்டது.

மணக்:— காப்பின், காத்தற்கு அரியனவற்றைக் காப்பாற்றுக; குற்றம் உண்டென்று ஐயப்பட்டபின்பு தெளிவித்தல் யாவர்க்கும் அரிது எ - று.

இஃது அடுத்தொன்று சொல்லாமல் ஒழுகவேண்டும் என்றது.

பரிப்:— இது பெரும்பான்மையும் பெண்டிர்மாட்டே வரும்.

பரிதி:— இராசாவின் உறவு அருமை; நெறிமுறைமையிலே ராசசேவை பண்ணுக. அரசன் மனஞ்சலித்தால் தேற்ற முடியாது எ - று.

காளிங்:— அரசர்மாட்டுக் குறிக்கொண்டு ஒழுக நினைப்பின் கீழ்ச்சொல்லிப் போந்தவையும் பிறவும் ஆகிய அரியனவற்றைக் குறிக்கொண்டு நெறியின் ஒழுகுக; என்னை எனின் அவற்றுள் ஒன்றினான் அரசர் முகம் கடுத்தபின் அவரைத் தெளிவித்தல் யாவர்க்கும் அரிது எனவே உயிர்க்கேடும் பொருட்கேடுமாய்விடும் என்பது பொருள் ஆயிற்று எ - று.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— கடி என்ற உரிச்சொல் ஐயப்பொருளில் வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 379.)

குணவீர:— ஷை (நேமி. 58.)

அடியார்:— கடுக்கும் என்நெஞ்சம் 'கடுக்கும் ஐயுறும்; கடி என்னும் உரிச்சொல் ஈறுதிரிந்தது; 'போற்றின் அரியவைபோற்றல் கடுத்த பின்......அரிது' என்றாற்போல.' (சிலப். கனாத். 45.)

ஒப்புமைப்பகுதி :

" நீர்த்தன் றொருவர் நெறியன்றிக் கொண்டக்கால்
பேர்த்துத் தெருட்டல் பெரியார்க்கும் ஆகாதே
கூர்த்தநுண் கேள்வி அறிவுடையார்க் காயினும்
ஓர்த்த திசைக்கும் பறை." —பழ - நா.

முதுமொழிவெண்பாக்கள்:

" மன்னனயி ராதுமெல்ல மல்குவித்தார் சைவநெறி
முன்னுவச வேசர் முருகேசா - இன்னதனால்." —முருகேசர். 70.

குறிப்பு:

அரியவை - பொறுத்தற்கரியனவாய பிழைகள். கடுத்தபின் - ஐயுற்றபிறகு. 'கடுக்கும் என்னெஞ்சம்' என்றவிடத்து அடியார்க்கு நல்லார், கடி யென்னும் உரிச்சொல்லினது ஈற்றின் திரிபு என்று இக்குறளை எடுத்து சொற்சோதனை காட்டுவர். 'கடாவுருவொடு' என்ற வழியும் பரிமேலழகர் கடுக்கும் என்னும் பெயரெச்ச எதிர் மறை எனக்கூறும் குறிப்பும், உரையும் காண்க. 'முகங்கடுத்தபின்' என்பர் காளிங்கர்.

—தொகுப்பாசிரியர்.

694. செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. (௪)

உரைப்பகுதி :

பரிமே:— ஆன்ற பெரியாரகத்து - அமைந்த அரசர் அருகிருந்தால், செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல் - அவர்காண ஒருவன் செவிக்கண் சொல்லுதலையும் ஒருவன் முகநோக்கி நகுதலையும் தவிர்ந்து ஒழுகுக.

சேர்தல் பிறனொடு சேர்தல். செய்தொழுகின், தங்குற்றம் கண்டு செய்தனவாகக் கொள்வர் என்பது கருத்து.

மணக்:— அமைந்த பெரியாரிடத்து ஒருவன் செவியுட்சொல்லு தலும், ஒருவன் முகம்பார்த்துத் தம்மில் நகுதலும், தவிர்ந்தொழுகல் வேண்டும் எ - று.

இது செவிக்கூற்றும் நகையும் ஆகா என்றது.

பரிதி:— இரகசியமாக ஒருவர்கூடச் சொல்லுவதும் சிரிப்பதும் ராசசந்நிதியில் கைவிடுக எ - று.

காளிங்:— அரசரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சரானோர் மற்று அவர்தம்மொடு சொல்லும் செவிச்சொலன்றிப் பிறரொடு பறையும் செவிச் சொல்லும், இனி மற்று அவரோடாயினும் பிறரோடாயினும் அங்குக்கூடி நகும் நகையும் என்னும் இவை இரண்டும் ஒழிந்து ஒழுகுக; யார்மாட்டு எனின் செல்வம் முதலிய முற்றுப்பெற்ற பெரியோராகிய அவ்வரசரிடத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— அவித்தொழுகல் பயனின்று.

ஒப்புமைப்பகுதி:

"செவிச்சொல்லும் கொள்ளார் பெரியாரகத்து." —ஆசாரக். 75.

"பிறரொடு மந்திரம் கொள்ளார் இறைவனைச்
சாரார் செவியோரார் சாரில் பிறிதொன்று
தேர்வார்போல் நிற்க திரிந்து." —ஷை 78.

"நகையொடு மந்திரம் நட்டார்க்கு வாரம்
பகையொடு பாட்டுரைஎன் றைந்தும் - தொகையொடு
மூத்தோர் இருந்துழி வேண்டார் முதுநூலுள்
யாத்தார் அறிந்தவர் ஆய்ந்து." —சிறுபஞ்ச. 85.

"..................மன்னவன்முன்
பிறர்செவி மொழிதல் பிறரொடு நகைத்தல் பேணுறப் பண்புவேந்து இளமை
முறைமதித் திகழ்தல் விரும்புறு வினையை முடித்தலும் சேர்ந்தவர்க் காகா"
—விநா. அரசி. 112.

முதுமொழிவெண்பாக்கள்:

"வேகருக்கு மன்சிரிக்க வீடிழு னேமுசலீ
வாகுவலி யால்திருமலைக்கொழுந்தே - ஆகச்." —திருமலைக்.

குறிப்பு:

சேர்ந்த நகை: தம்மரசரோடும் சேர்ந்து நகுதல்கூடாதென்பர் காளிங்கர்.

—தொகுப்பாசிரியர்.

695. எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— மறை - அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி, எப்பொருளும் ஓரார் - யாதொரு பொருளையும் செவிகொடுத்துக் கேளாது, தொடரார் - அவனை முடுகி வினவுவதும் செய்யாது, அப்பொருளை விட்டக்கால் கேட்க - அம்மறைப்பொருளை அவன்தானே அடக்காது, சொல்லியக்கால் கேட்க.

ஓர்தற்கு ஏற்கும் பொருளாயினும் என்பார், எப்பொருளும் என்றார். மற்று வினைமாற்றின்கண் வந்தது.

மணக்:— யாதொரு பொருளையும் செவிகொடுத்து ஓராது, தொடர்ந்து கேளாது, அப்பொருளை மறைத்தல் தவிர்ந்தால் பின்பு கேட்க எ - று.

இது கேட்டல்விருப்பமும் குற்றம் என்றது.

பரிதி:— மந்திரி ஒரு ரகசியத்தை முகத்திலே மனத்திலே காட்டாமல் மறைத்து அந்தக்காரியம் முடிந்தவாறே இரகசியத்தைப் பிரசங்கம் செய்வான் எ - று.

காளிங்:— எப்பொருளும் ஓரார் என்பது அரசர்மாட்டுப் பிறரால் சில மறை உளதானகாலத்து அப்பொருள் சிறிதேயாயினும் பெரிதேயாயினும் தாம் அதனை பொருட்படுத்திக் குறிக்கொண்டு விரும்பார். தொடரார் என்பது மற்று அவர் அங்குநின்றும் நீங்கிப்போன இடத்தும் பின்பும் அவரொடு பற்றிக் கொள்ளார்: மற்று அப்பொருள்தான் புறத்து எங்கும் தானேவிட்டு வெளிப்பட்ட காலத்தும் வேண்டுகின் கேட்பாராக அம் மறைப்பொருளினை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"இறைவனைச், சாரார் செவியோரார் சாரிற் பிறிதொன்று
தேர்வார்போல் நிற்க திரிந்து." —ஆசாரக். 78.

"சிறப்புற ஓர்வ தாயினும் மறைதான் செப்பிடின் கேட்பினல் லாது
மறப்பினும் தொடரார் ஓர்தரார் அணுகார் மருங்கக லார்வினை
வலித்தார்." —விநா. அரசி. 113.

குறிப்பு:

தொடரார் என்பதற்கு அரசனை நெருக்கி யறியார் என்பர் பரிமேலழகர். அரசனிடம் மறைபேசிச் சென்ற பிறனைப் பின்தொடர்ந்து சென்று அறியார் என்பர் காளிங்கர்.

—தொகுப்பாசிரியர்.

696. குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். (சா)

உரைப்பகுதி :

பரிமே:— குறிப்பு அறிந்து - அரசனுக்குக் காரியம் சொல்லுங்கால் அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினை அறிந்து, காலம் கருதி - சொல்லுதற்கு ஏற்ற காலத்தையும் நோக்கி, வெறுப்பு இல வேண்டுப வேட்பச் சொலல் - வெறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரியங்களை அவன் மனம் விரும்பும்வகை சொல்லுக.

குறிப்புக் காரியத்தின்கண் அன்றிக் காமவெகுளி உள்ளிட்டவற்றில் நிகழ்வுழியும் அதற்கு ஏலாக்காலத்தும் சொல்லுதல் பயனின்றாகலின் குறிப்பறிந்து காலங்கருதி என்றும், அவன் உடம்படாதன முடிவு போகாமையின் வெறுப்பில என்றும், பயனில்லவும் பயன்சுருங்கியவும் செய்தல் வேண்டாமையின் வேண்டுப என்றும், அவற்றை இனியவாய்ச் சுருங்கி விளங்கிய பொருளவாய சொற்களான் சொல்லுக என்பார் வேட்பச் சொலல் என்றும் கூறினார்.

மணக்:— அரசன் குறிப்பறிந்து, காலம் பார்த்து, வெறுப்பில்லாதனவாய், சொல்ல வேண்டுவனவற்றை விரும்புமாறு சொல்லுக எ - று.

இது சொல்லுந்திறம் கூறிற்று.

பரிதி:— அரசன் குறிப்பறிந்து காலம் அறிந்து சோம்பாமல் அரசனது அவா உள்ளவாறு வசனம் சொல்லுவான் எ - று.

காளிங்:— அரசனது உள்ளக்குறிப்பினை ஆராய்ந்து உணர்ந்து தான் சென்று அறிவுரைக்கும் காலத்தையும் கருதிச் சென்று உரைக்கும் இடத்து அவர்க்கு வெறுப்பு இல்லனவுமாய் பின்னும் மிகுதிக்குறைவின்றி

ஒருவண்ணம்வேண்டும் அளவினவுமாய் இருப்பனவற்றையே அரசர் பெரிதும் விருப்புற்றுக் கேட்குமாறு சொல்லுக மன்னரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"இகழின் இகழ்ந்தாங் கிறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப - இகல்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை." —நீதிநெறி. 42.

"விரைந் துரையார் மேன்மேல் உரையார்பொய் யாய
பரந்துரையார் பாரித் துரையார் - ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து." —ஆசாரக். 76.

"புன்னவை யான மாற்றம் புகன்றவ ரெனினும் கேட்டாங்கு
இன்னவை நன்று நன்றென்று இதம்பட மொழிவ தல்லால்
மன்னவை இருந்து நாளும் வழிபடு மாந்தர் மன்னர்
சொன்னவை மறுத்து மாறு சொல்வரோ சுருதி வல்லாய்."
—வில்லி. நிரை. 122.

"குறிப்பொடு காலம் அறிந்திறை விரும்பக் கோதறு பயன்மிகப் பயக்கும்
வெறுப்பில வினையை விளம்பிவேண் டாத வினையினைக் கேட்பினும்
விளம்பார்." —விநா. அரசி. 113.

குறிப்பு:

காலங்கருதிச் சொல்லப்பட்டனவும் குறிப்பறிந்து சொல்லாக்கால் தீய பயத்தலின் குறிப்பறிதல் முற்கூறப்பட்டது.

—தொகுப்பாசிரியர்.

697. வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் *சொல்லா விடல். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— வேட்பன சொல்லி - பயன் பெரியனவுமாய் அரசன் விரும்புவனவுமாய காரியங்களை அவன் கேட்டிலனாயினும் சொல்லி,

* 'சொல்லார்' காளிங்கர்பாடம்.

எஞ்ஞான்றும் வினையில கேட்பினும் சொல்லாவிடல் - எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றைத் தானே கேட்டாலும் சொல்லாது விடுக.

வினையில எனவும் கேட்பினும் எனவும் வந்த சொற்களான், அவற்றின் மறுதலைச்சொற்கள் வருவிக்கப்பட்டன. வினையான் வருதலின் வினை என்றும், வறுமைக் காலமும் அடங்க எஞ்ஞான்றும் என்றும் கூறினர். சொல்லுவனவும் சொல்லாதனவும் வகுத்துக் கூறியவாறு. இவை நான்கு பாட்டானும் சிறப்புவகையால் கூறப்பட்டது.

மணக்:— எப்போதும் வேந்தனால் விரும்பப்படுவனவற்றைச் சொல்லி, தமக்குப் பயன்படாதனவற்றைக் கேட்டாலும் சொல்லாது விடுக எ - று.

சொல்லாது விடலாவது, தூதனை 'அரசர்க்குப் படை எவ்வளவு உண்டு' என்று பகையரசன் வினவினால், 'நீ அறியாததொன்றோ' என்று அளவு கூறாமை.

பரிப்:— பயன் உண்டாயின் சொல்லுக என்பது கருத்து. தன் அரசன் பெண்டிர் முதலாயினாரைக் கேட்டாருக்குச் சொல்லாமை. இவை போல்வன சொல்லாமை வேண்டும் எ - து.

பரிதி:— அரசன் விரும்பின காரியம் சொல்லுக; விரும்பாத காரியம் கேட்டாலும் சொல்லாமை நன்று எ - று.

காளிங்:— அரசரைச் சேர்ந்து ஒழுகும் அருமை இத் தன்மைத்து ஆகலான் அவர் விரும்பிக் கேட்பனவற்றைச் சொல்லி மற்று ஆங்கும் அவ்வுரையினான் மேல் ஒருபயன் விளைத்தல் இல்லனவற்றை அரசர் கேட்டாராயினும் தாம் சொல்லாது ஒழிக எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

" அன்றரசோ டேரண்டன் ஆடுமுரை யாலவமே
சென்றுயிரை ஈந்தான் சிவசிவா - நன்றிபெற." —சிவசிவ. 70.

குறிப்பு:

அரசன் வேட்குங்காரியங்களைச் சொல்லும்போது 'அவன் கேட்டிலனாயினும்' சொல்லி என்ற குறிப்பு ஆராய்தற்குரியது. அரசன் வேட்பனவற்றைச் சொல்லும்போது அவன் விரும்பாதிருத்தல் யாங்ஙனம்? பயனாற் பெரியன என்று ஆய்ந்து தாம் விரும்பியவற்றை அரசன் விரும்பானாயினும் பயன் கருதிச் சொல்லி, அவன் விரும்பினாலும் பயனற்றவைகளைச் சொல்லாதிருத்தலே மன்னரைச் சேர்ந் தொழுகுவார் மாண்பு எனப் பொருள்காணப் பெறின் சிறப்புடைத்தாதல் காண்க.

—தொகுப்பாசிரியர்,

698. இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— இளையர் இன முறையர் என்று இகழார் - இவர் எம்மின் இளையர் என்றும் எமக்கு இன்ன முறையினையுடையர் என்றும் அரசரை அவமதியாது, நின்ற ஒளியோடு ஒழுகப்படும்-அவர்மாட்டு நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப்படும்.

ஒளி, உறங்கா நிற்கவும் தாம் உலகம்காக்கின்ற அவர் கடவுள் தன்மை. அதனோடு பொருந்த ஒழுகலாவது அவர் கடவுளரும், தாம் மக்களுமாய் ஒழுகுதல். அவ்வொளியால் போக்கப்பட்ட இளமையும் முறையும்பற்றி இகழ்வராயின், தாமும் போக்கப்படுவர் என்பது கருத்து.

மணக்:— இவர் நமக்கு இளையரென்றும் இத் தன்மையாகிய முறையரென்றும் இகழாது, அவர் பெற்று நின்ற தலைமையோடே பொருந்த ஒழுக வேண்டும் எ - று.

பரிப்:— முறையர் என்றது இளங்கிழமையின்முறை. இது காலத்துக்குத்தக்க காட்சி செய்யவேண்டும் என்றது. இது மூன்றும் பெரும் பான்மையும் தன் அரசனை நோக்கின.

பரிதி:— இவர்க்கும் நமக்கும் இப்படி நட்பு இவர் நமக்கு இன்ன முறையாம் என்ற இப்படி அரசரை அவமதியாது, அவர்மாட்டு நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப்படும் எ - று.

காளிங்:— இவர் மிகவும் இளையராய் இருந்தார் என்றும், ஒரு வாற்றால் நமக்கு இன்னமுறையினர் என்றும் கருதிக் கொண்டு இகழாராய் மற்று அவ்வரசர்க்கு அவரது குலமரபினால் உளதாம் நிலைபெற்று வருகின்ற பெரியதொர் ஒளி உண்டு அன்றே: மற்று அதனொடு சாரக் குறிக் கொண்டு ஒழுக அடுக்கும் அமைவுடையோர் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— 'பல்லோர் படர்க்கை' என்னும் விலக்குப்பற்றி ஒழுகப்படும் என்பதனை ஒழுகுதல் செய்யப்படும் என ஒழுகுதலை எழுவாயாக்கிச் செய்யப்படும் என்பதனைப் பயனிலையாக்கினது காண்க. "வஞ்சரை யஞ்சப்படும்" (824) என்பதும் அது. "செழுங்கார் முழவதிர்" என்னும் கோவையாருள் (157) "வழுங்காவதரின் வழுங்கென்றுமோ இன்றெம் வள்ளலையே" என்பதும் அது.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— படும் என்னும் சொல்லும் ஐம்பால் மூவிடத்துக்குப் பொதுவாய் வரும் என்பதற்கு மேற்கோள். (நன். 339.)

சுவாமி.— தேற்றப் பொருளில்வரும் வேண்டும் என்னும் சொல்லின் குணம்தெரியாத பரிமேலழகர் தமக்கு வேண்டியவாறே பொருளெழுதிச் செல்வர் என மறுப்பர். (இ. கொ. 85.)

ஒப்புமைப்பகுதி;

"அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றனஎன்று எண்ணி
இகழின் இழுக்கம் தரும்." —ஆசாரக். 84.

"அறிவறியாப் பிள்ளையே யாயினும் நீத்துரையார்." —ஞெ. 68.

"சீர்த்தகு மன்னர் சிறந்தனைத்தும் கெட்டாலும்
நேர்த்துரைத் தெள்ளார் நிலைநோக்கிச் - சீர்த்த
கிளையின்றிப் போஒய்த் தனித்தாயக் கண்ணும்
இளைதென்று பாம்பிகழ்வார் இல்." —பழ. நா.

"பாம்பு நெருப்பு நோய் ஆகிய இவற்றையும், தீயவன் அரசன் மருமகன் உடன்பிறந்தாள்மகள் பகைவன் ஆகிய இவர்களையும் முறையே சிறியன என்றும் சிறியவர் என்றும் கருதிப் பழகுங்கால் பொருட்படுத்தாமல் இருத்தலாகாது.'
—சுக்கிர. அத். 3. சு. 106

முதுமொழிவெண்பாக்கள்:

"மன்னர் எவர்க்கும் வயதுமுறை தேவைஇல்லைத்
தென்னவதிகாரி தினகரா—தன்னின்" —தினகர. 73.

"ஐயன் அருள்புரிந்த அன்றுசம் பந்தர்தமைத்
தெய்வம்எனத் தந்தையரும் தேறினர் - நொய்தின்."—முதுமொழி. 11.

குறிப்பு:

இனமுறையர் - இன்னமுறையர் என்பதன் தொகுத்தல்.
— தொகுப்பாசிரியர்.

699. கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— கொளப்பட்டேம் என்று எண்ணிக் கொள்ளாத செய்யார் - அரசனால் யாம் நன்குமதிக்கப்பட்டேம் என்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யார், துளக்கு அற்ற காட்சியவர் - நிலைபெற்ற அறிவினை உடையார்.

கொள்ளாதனசெய்து அழிவெய்துவார் கொளப்பாட்டிற்குப்பின் தம்மை வேறொருவராகக் கருதுவராகலின், முன்னையராகவே கருதி அஞ்சி ஒழுகுவாரைத் துளக்கற்றகாட்சியவர் என்றார்.

மணக்:— அரசனாலே கைக்கொள்ளப்பட்டோம் என்று நினைத்து, அவன் நெஞ்சிற் கொள்ளாதன செய்யார், அசைவற்ற தெளிவுடையார் எ - று.

இஃது அரசன் நெஞ்சிற்குப் பொருந்தினவை செய்ய வேண்டும் என்றது.

பரிதி:— அரசன் உட்கொள்ளப் பெற்றேம் என்று அரசற்கு மனமில்லாத காரியம் செய்வான் அல்லன் அறிவுடையான் எ - று.

காளிங்:— அரசரான் மிகவும் கைக்கொள்ளப்பட்டேம் என்று கருதி இதுகாரணமாக அரசரால் கைக்கொள்ளத் தகாதனவற்றைச் செய்வதிலர்: யார் எனின் கலக்கமற்ற திண்ணிய அறிவினையுடையோர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கைவரும் வேந்தன் நமக்கென்று காதலித்த
செவ்வி தெரியாது உரையற்க - ஒவ்வொருகால்
எண்மைய னேனும் அரியன் பெரிதம்மா
கண்ணிலன் உள்வெயர்ப்பி னான்."

—நீதிநெறி. 46.

குறிப்பு:

பதவிபெற்றாலும் பண்பாடு திரியாதவரைத் துளக்கற்ற காட்சியவர் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

700. பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். (௰)

உரைப்பகுதி:

பரிமே:— பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை - அரசனுக்கு யாம் பழையம் எனக் கருதித் தமக்கு இயல்பு அல்லாதவற்றைச் செய்யும் உரிமை, கேடு தரும் - அமைச்சர்க்குக் கேட்டினைப் பயக்கும்.

அவன் பொறுது செறும்பொழுதின் அப்பழமைநோக்கிக் கண்ணோடாது உயிரை வௌவுதலான், அவன் வேண்டாதன செய்தற்குக் கெழுதகைமை கேடுதரும் என்றார். இவை மூன்று பாட்டானும் பொறுப்பர் என்று அரசர் வெறுப்பன செய்யற்க என்பது கூறப்பட்டது.

மணக்:— யாம் பழைமையுடையோம் என்று கருதி, இயல்பல்லாதனவற்றைச் செய்யும் நட்பின் தன்மை, நமக்குக் கேட்டைத் தரும் எ - று.

இது பின் பகையாவனவற்றைத் தவிரல் வேண்டும் என்றது.

பரிதி:— அரசற்குப் பழையோம் என்று பண்பல்லாத காரியம் செய்தால் கேடுவரும் எ - று.

காளிங்:— அரசர்க்கு நாம் பழையர் எனக்கருதி யாதானும் ஒன்று காரணமாக அரசர்மாட்டுத் தாம் ஒழுகும் பண்பிற்கு உரிய அல்லனவற்றைச் செய்யக் கருதும் கெழுதல்தன்மையானது கேட்டினைத் தரும்: எனவே என்றும் அரசர்மாட்டு அஞ்சி ஒழுகுதல் கடன் என்பது பொருள் ஆயிற்று.

ஒப்புமைப்பகுதி:

"பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றும் கொள்ளார் வெகுளின்மன்
கா தன்மை உண்டே இறைமாண்டார்க்கு ஏதிலரும்
ஆர்வலரும் இல்லை அவர்க்கு." —நீதிநெறி. 47.

"கழிகிழமை செய்யார்......கடைபோக வாழ்தும் என்பார்."
—ஆசாரக். 66.

"பழையேம் இறை யூழ்கொளப்பட்டேம் என்றுவருமாப்(பு) எய்தார்."
—திருவிளை. பன்றி. மந்திரி. 15.

"பழையம்யாம் எனப் பண்பில செய்வரோ பணிதற் பயனோர்வார்."
—கம்ப. ஊர்தேடு. 198.

முதுமொழிவெண்பாக்கள் :

"மாமன்நான் என்னு மதத்தால் உனையிகழ்ந்து
தோமுற்றார் தக்கனார் சோமேசா - வாமே." —சோமேசர். 70.

"அட்சன் நிதியோர்க் கபசாரம் செய்ததினால்
எட்சன் பிரிந்தான் இரங்கேசா - பட்சம்." —இரங்: 70.

குறிப்பு:

பழையம் எனக்கருதி, மாணிக்கத் தியாகப் பெருமானிடம் பண்பல்லாத சூள் பொய்த்தலைச் செய்த சுந்தரர், கண்ணிழந்ததைக் கருதுக.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— அகலாது, மன்னர், போற்றின், செவிச்சொல்லும், எப்பொருளும், குறிப்பறிந்து, வேட்பன, இளையர், கொளப்பட்டேம், பழையம்.

மணக்:— குறிப்பறிந்து, வேட்பன, செவிச்சொல்லும், எப்பொருளும், மன்னர், போற்றின், அகலாது, கொளப்பட்டேம், பழையம், இளையர்.

பரிதி:— குறிப்பறிந்து, வேட்பன, கொளப்பட்டேம், பழையம், இளையர், எப்பொருளும், அகலாது, செவிச்சொல்லும், போற்றின், மன்னர்.

காளிங்:— குறிப்பறிந்து, கொளப்பட்டேம், இளையர், பழையம், அகலாது, எப்பொருளும், போற்றின், வேட்பன, செவிச்சொல்லும், மன்னர்.

71. குறிப்பறிதல்.

தொகுப்புரை:

[அரசனது குறிப்பறிந்து நடப்பவன் உலகத்திற்கே ஓர் அணியாவன். அரசனது மனக்குறிப்பைத் துணிந்தறியக் கூடியவனைத்தெய்வத்தோடொக்க மதிக்க. அரசன் தன் குறிப்பையும் அறிந்து, பிறர் குறிப்பையும் தெரிவானைப் படை குடி முதலிய அரசங்கங்களுள் எதனைக் கொடுத்தும் அவன் நட்பைக் கொள்ளுக. மனக்குறிப்பை வாயாற் சொல்லாமலே அறியும் அமைச்சரோடு அங்ஙனம் அறியமாட்டாதார்கள் உறுப்பால் மனிதரேயாயினும் அறிவால் வேறேயாவர். குறிப்பாகத் தெரியமுடியாத கண்களால் பயன் என்ன? தன் அணிமையிலுள்ள பொருள்களைக் காட்டும் கண்ணாடி போல மனம் எண்ணியதை முகம் காட்டிவிடும். மகிழ்ந்தாலும் வருந்தினாலும் காட்டும் முகம்போல அறிவுடைய பொருள் ஏதுண்டு. மனக்குறிப்பறிந்து நடக்கும் மந்திரிகளைப் பெற்றுவிட்டால் அவர் முகத்தைப் பார்த்து நின்றாற்போதும்; எல்லாம் தானே விளங்கிவிடும். அரசர்களின் பார்வைக் குறிப்பை உணர்வார்களைப் பெற்று விட்டால் பகை நட்பு என்னும் இரண்டையும் பகையரசர் கண்கள் சொல்லிவிடும். நுண்மதியமைச்சர் கண்களே அரசர்கருத்தை யளக்குங்கோல்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அரசர் கருதிய அதனை அவர் கூறாமல் அறிதல். இது மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமையாதாகலின், அதன்பின் வைக்கப்பட்டது.

மணக்:— குறிப்பறிதலாவது அரசர் உள்ளக் கருத்தை அமைச்சர் [1]அறிதல். இஃது அமைச்சியலாதலின் அமைச்சர்குறிப்பறிதல் கூறியது என்னையெனின், குறிப்பறிதல் அரசர்க்கும் வேண்டுமாதலின், இறந்ததுகாத்தல் என்னும் தந்திரஉத்தியால் கூறப்பட்டது என்க. இது பெரும்பான்மையும் [2]அரசர்க்கும் வேண்டுமாதலின், மன்னரைச் சேர்ந்தொழுகலின்பின் கூறப்பட்டது.

பரிதி:— குறிப்பறிதலாவது அரசன் நினைவு அறிதல் எ - று.

---

[1] 'குறிப்பறிதலாவது அரசர் உள்ளக்கருத்தை அமைச்சர் அறிதலும், அமைச்சர் உள்ளக்கருத்தை அரசர் அறிதலும்,' என்பர் பரிப்பெருமாள்.
[2] 'அமைச்சர்க்கு' என்பர் பரிப்பெருமாள்.

701. கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி. (க)

உரைப்பகுதி :

பரிமே:— குறிப்புக் கூறாமை நோக்கி அறிவான் - அரசனால் குறித்த கருமத்தை அவன் கூறவேண்டாவகை அவன்முகத்தானும் கண்ணானும் நோக்கி அறியும் அமைச்சன், எஞ்ஞான்றும் மாறா நீர் வையக்கு அணி - எஞ்ஞான்றும் வற்றாத நீரால் சூழப்பட்ட வையத்துள்ளார்க்கு ஓர் ஆபரணமாம்.

ஒட்பம் உடையனாய் எல்லார்க்கும் அழகுசெய்தலான், வையக்கு அணி என்றார். குறிப்பும் வையமும் ஆகுபெயர். வையத்திற்கு என்பது விகாரப்பட்டு நின்றது.

மணக்:— அரசன் மனநிகழ்ச்சியை அவன் கூறுவதன்முன்னே நோக்கி அறியுமவன், எல்லாநாளும் மாறாநீர் சூழ்ந்த வையகத்துக்கு அணிகலனாவன் எ - று.

இது மக்களிற் சிறப்புடையனாம் என்றது.

பரிதி:— அரசன் மனத்திலே எண்ணியதைத், சொல்லாமல் அறிவான் சமுத்திரம் சூழ்ந்த உலகத்திற்கு ஆபரணம் எ - று.

காளிங்:— அரசன் சொல்லவேண்டாமல் அவன் உள்ளம் குறித்ததனை முன்னம் குறிப்பினான் அறிந்துகொள்வான் யாவனோர் அமைச்சன், மற்று அவன் எஞ்ஞான்றும் வற்றா நீராகிய கடல் சூழ்ந்த வைப்பிற்கு ஓர் அணிகலம்: எனவே வையத்து வாழ்வோர்க்குப் பெரிதும் ஒளியுடை அணிகலத்தனையன் என்பது பொருளாயிற்று எ - று.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— 'ஏனையெச்சம் வினைமுதலானும்' என்ற சூத்திரத்தில் அன்னமரபினால் கொள்ளப்படுவனவற்றிற்கு, 'கூறாமைநோக்கிக்குறிப்பறிவான்' என்பதை மேற்கோள் காட்டுவர். (தொல். சொல். 225.)

நச்:— வினையெச்சம் 'வினையெஞ்சு கிளவியும் வேறு பல் குறிய' என்பதனால் மகர ஐகாரயீறாய் வந்ததற்குக் 'கூறாமை நோக்கி' என்பதை மேற்கோள் காட்டுவர். (தொல். சொல். 230.)

மயிலை:— 'வான்பான் பாக்கின வினை எச்சம்' 'இன்ன என்றத னால் 'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்' என்பதுவும் இவற்றிற்கு எதிர் மறையாய் வருவனவும் இவ் வாய்பாடுகளிலே அடக்கிக்கொள்க' என்பர். (நன். 342.)

சங்கர:— வினையெச்சவாய்பாடுகள் உணர்த்தும் சூத்திர உரை யில் 'இன' ஈன்றமையான், 'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்' என எதிர்மறை விகற்பங்களாய் வருவனவும் கொள்க என்பர். (நன். 343.)

முதுமொழிவெண்பாக்கள்:

"உண்ணப் பொதிசோறும் ஊர்சிவிகை யும்பிறவும்
எண்ணம் அறிந்தடியார்க் கீந்தருளும் — கண்ணுதல்போல்."

—முதுமொழி. 112.

குறிப்பு:

வற்றாநீர் வையம் என்றதால் உலகம் உள்ளளவும் அவனழியினும் அவன் புகழ் வையத்திற்கு அணியாம் என்பது. வையக்கு மாறாநீர் அணி எனக் கூட்டி உலகத்திற்கு அழியாத்தன்மையுடைய அணி என்பாரும் உளர். வையத்திற்கு அணி யெனவே வையத்திலுள்ளார்க்கு அவ்வணியாலாய ஒளி எனப் பொருள்காண்பர் காளிங்கர்.

—தொகுப்பாசிரியர்.

702. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— அகத்தது ஐயப்படாது உணர்வானை - ஒருவன் மனத்தின்கண் நிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாக உணரவல்லானை, தெய்வத்தோடு ஒப்பக் கொளல் - மகனேயாயினும், தெய்வத்தோடு ஒப்ப நன்கு மதிக்க.

உடம்பு முதலியவற்றான் ஒவ்வானாயினும் பிறர் நினைத்தது உணரும் தெய்வத்தன்மை உடைமையின், தெய்வத்தோடு ஒப்ப என்றார்.

மணக்:— பிறர் நினைத்ததனை ஐயப்படுதலின்றித் துணிந்து அறியவல்லாரை, தேவரோடு ஒப்பக்கொள்க எ - று.

பரிப்:— அவரும் பிறர் நினைவு அறிவர்; இவரும் அவ்வாறு அறிதலான் இவரைத் தேவராக மதிக்கப்படும் என்றது. இவை இரண்டும் குறிப்பறிந்தார்க்கு உளதாகும் தன்மை கூறின.

பரிதி:— சந்தேகமற மனத்தின் நினைவை அறியும் மந்திரிக்குத் தேவர் நிகராம் எ - று.

காளிங்:— ஒருவர் தாம் உள்ளத்துக் குறித்த பொருளை அல்ல ஆம் என்று ஐயப்படாதே இதுவே ஆகும் என்று அறியவல்ல குறிப்பு அறிவாளராகிய அமைச்சரை, அவ்வரசர் தெய்வத்தோடு ஒப்பக்கொண்டு ஒழுகுக எ - று.

எனவே கருதியது அறிவார் கடவுளர் ஆகலான் மற்று இவர் மக்கள் யாக்கையின் வந்தனராயினும் வானக்கடவுளரோடு ஒப்பர்.

இனி அமைச்சரானோர் அரசன் குறிப்பு அறிந்து ஒழுகுதலே அன்றி அரசர்மாட்டு இருக்கும் அவையினது மரபு அறிந்து ஒழுகவேண்டு தலான் மற்று இதன் பின்னரே மரபு அதனை அறிவிக்கின்றது மேலை யதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள் :

"அப்பூதி யார்மறைத்தும் வாகீசர் அக்கரவைத்
தப்பான் அறிந்தனரே சோமேசா — இப்புவியில்." —சோமேசர். 71.

"பார்வைகண் டிராமன் பரன்வில் லொடித்தணங்கை
ஏர்வையாக் கொண்டான் இரங்கேசா — நீர்மையொடும்." —இரங். 71.

"*இந்தனக்கே லாமமமென் றுன்தருமன் வீமன்எண்ணம்
முந்தவையில் தேர்ந்தே முருகேசா-மைந்தருள்ளும்." —முருகேசர். 71.

703. குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். (௩)

உரையப்குதி:

பரிமே:— குறிப்பின் குறிப்பு உணர்வாரை - தம்குறிப்பு நிகழு மாறு அறிந்து அதனால் பிறர்குறிப்பறியும் தன்மையாரை, உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல் - அரசர் தம் உறுப்புக்களுள் அவர் வேண்டுவது ஒன்றனைக் கொடுத்தாயினும், தமக்குத் துணையாகக் கொள்க.

*இந்தனக்கு - விறகிற்கு.

உள் நிகழ்ச்செறி யாவர்க்கும் ஒத்தலின், பிறர் குறிப்பு அறிதற்கு தம் குறிப்புக் கருவியாயிற்று. உறுப்புக்களாவன பொருளும் நாடும் யானை குதிரைகளும முதலிய புறத்துறுப்புக்கள். இதற்குப் பிறர்முகக் குறிப்பானே அவர் மனக்குறிப்பு உணர்வாரை என்று உரைப்பாரும் உளர். இவை மூன்று பாட்டானும் குறிப்பறிவாரது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— முகக்குறிப்பினாலே உள்ளக்கருத்தை அறியுமவர்களை உறுப்பினுள் அவர் வேண்டுவது யாதொன்றாயினும் கொடுத்து, துணையாகக் கூட்டிக்கொள்க எ - று.

உறுப்பினுள் என்பதற்குத் தனக்கு அங்கமாயினவற்றுள் எனவும் அமையும்.

பரிப்:— குறிப்பறிவாரை அறிதல் குறிப்பறிதலாயிற்று குறிப்பறிவாரை அரசன் கடியப்படுமோ கூட்டப்படுமோ என்று ஐயமுற்றார்க்குக் கூறப்பட்டது. இவை இரண்டும் அரசன் மேலன.

பழைய:— மனதில் எண்ணத்தைக் குறிப்பினால் அறியும் பேரைத் தன் தேகத்தில் உறுப்பாகிய கண்ணையாகிலும் கொடுத்து உறவு கொள்வார் எ - று.

பரிதி:— அரசன் நினைத்த நினைவை அறிவானைக் கரணம் வேண்டினாலும் கொடுத்து உறவு கொள்வான் எ - று.

காளிங்:— அரசரது முகங்கொண்ட குறிப்பினான் அவர் யாதானும் ஒரு கருமத்தை அவர் உள்ளம் கொண்ட குறிப்பினை அறிவார் யாவர்; மற்று அவர் தம்மை அவ்வரசரானோர் தாம் படைத்துளவான அவற்றுள் பெரிதும் உறுப்பு உடையவாகச் சிறந்தனவற்றால் யாதானும் கொடுத்துக் கைக்கொள்க எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"வென்றி இராமனொடு வில்லைமுனி வன்குறிப்பால்
சென்று வளைத்தான் சிவசிவா — மன்றில்." —சிவசிவ. 71.

"தொண்டர் குறிப்பறிந்த தொண்டர் திருக்குறிப்புத்
தொண்டரைத்தம் கந்தைதந்து சோதியர் ஆட்—கொண்டார்."
—திருத். 21.

704. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— குறித்தது கூறாமைக் கொள்வாரோடு - ஒருவன் மனத்துக் கருதிய அதனை அவன் கூறவேண்டாமல் அறியவல்லாரோடு, ஏனை உறுப்பு ஓரனையர் - மற்றை மாட்டாதார் உறுப்பால் ஒருதன்மைய ராக ஒப்பாராயினும், வேறு - அறிவான் வேறு.

கொள்ளாதார் என்பதூஉம், ஆயினும் என்பதூஉம் அவாய்நிலை யான் வந்தன. சிறந்த அறிவின்மையின், விலங்கு என்னும் கருத்தான் வேறு என்றார்.

மணக்:— நினைந்ததனைச் சொல்லாமைக் கொள்ளவல்லாரோடு மற்றையார் உறுப்பால் ஒருதன்மையர் அல்லது, அறிவினான் வேற்றுமை யுடையர் எ - று.

இது குறிப்பறியாதார் அறிவில்லாதார் என்றது.

பரிதி:— நினைத்த நினைவைச் சொல்லுவதன் முன்னே பார்வை யினாலே அறிவான்; அவன் தேவரோடு ஒப்பாவன் எ - று.

காளிங்:— ஒருவர் உள்ளம் குறித்தது ஒன்றினை அவர் உரைக்க வேண்டாமல் மற்று அவர் முகக்குறிப்பினால் கைக்கொள்வாருடன் மற்று ஏனை மாந்தர் முகம் கை கால் முதலிய மக்கள் உறுப்பின்கண் ஒரு தன்மையர் ஆதலே உள்ளது: மக்கட்கு அன்பாகிய உணர்வில் பெரிதும் வேறுபாடு உடையார். என்வே உறுப்பின் அவரோடு ஒருதன்மையர்; உணர்வில் விலங்கொடு மக்கள் அனையர் என்பது வெளிப்படுத்தியவா றாயிற்று என்பது பொருள் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"அகத்திடைக் குறித்த காரியம் அதனை ஐயுறு தவரவர் விழியான்
முகத்தினால் அறியு வல்லவ னாகி முகம்விழி இரண்டினும் அன்றி
அகத்திடை தனக்கு நிகழ்ந்திடும் குறிப்பால் அவரவர் அகக்குறிப் பறிந்து
மிகத்தெளி பவனைக் கரிமுதல் உறுப்புள் விழைவன கொடுத்துங்கொள்
மைந்தா." —விநா. அரசி. 114.

குறிப்பு:

ஏனை யென்பது ஏனையோரை உணர்த்திற்று. அறிவான் விலங்காவர் எனக் குறிப்பறியமாட்டாதார் இழிவு கூறியவாறு.

—தொகுப்பாசிரியர்.

705. குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— *குறிப்பின் குறிப்பு உணராவாயின் - குறித்தது காண வல்ல தம் காட்சியால் பிறர்குறிப்பினை உணரமாட்டாவாயின். உறுப்பினுள் கண் என்ன பயத்தவோ - ஒருவன் உறுப்புக்களுள் சிறந்த கண்கள் வேறு என்ன பயனைச் செய்வன.*

முதற்கண் குறிப்பு ஆகுபெயர். குறிப்பறிதற்கண் துணையாதற் சிறப்புப்பற்றி உயிரது உணர்வு கண்மேல் ஏற்றப்பட்டது. அக்கண்க ளால் பயனில்லை என்பதாம். இவை இரண்டு பாட்டானும் குறிப்பறியாரது இழிபு கூறப்பட்டது.

மணக்:— *ஒருவன் முகக்குறிப்பினாலே அவனவன் மனக் குறிப்பை அறியமாட்டாவாயின், தன் உறுப்புக்களுடள் கண்கள் மற்று என்ன பயனைத் தருமோ?*

இது குறிப்பறியாதார் குருடரோடு ஒப்பார் என்பது.

பரிதி:— *அரசன் நினைத்த நினைவைப் பார்வையால் அறியாத மந்திரிதன் முகத்திலே கண் புண் எ - று.*

காளிங்:— *தமது கண்கள் பிறர் நோக்கிய நோக்கிற்குப்பின் உளதாகிய குறிப்பினையே உணரமாட்டாவாயின் உறுப்பினுள் என்ன பயத்தன கொல்லோ தாம்? எ - று.*

ஒப்புமைப்பகுதி:

"யாந்திய செய்த மலைமறைத்த தென்றெண்ணித்
தாந்தீயார் தந்தீமை தேற்றுரால் — ஆம்பல்
மணவில் கமழும் மலிதிரைச் சேர்ப்ப
கணையிலும் கூரியவாம் கண்." —பழ. நா.

குறிப்பு:

இதனாற் குறிப்புணரப் பயன்படுங் கருவி கண் என்பதும், அது செய்யாதாயின் கண்ணிருந்தும் பயனில்லை என்பதும் கூறப்பெற்றன.

—தொகுப்பாசிரியர்.

706. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— அடுத்தது காட்டும் பளிங்குபோல் - தன்னை அடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டுகாட்டும் பளிங்குபோல, நெஞ்சம் கடுத்தது முகம் காட்டும் - ஒருவன் நெஞ்சத்து மிக்கதனை அவன் முகம் தானே கொண்டு காட்டும்.

அடுத்தது என்பது ஆகுபெயர். கடுத்தது என்பது கடி என்னும் உரிச்சொலடியாய் வந்த தொழிற்பெயர். உவமை ஒருபொருள் பிறிதொரு பொருளின் பண்பைக் கொண்டு தோற்றுதலாகிய தொழில்பற்றி வந்தது.

மணக்:— தன்னையடுத்த வண்ணத்தைக் காட்டுகின்ற பளிங்கைப் போல, நெஞ்சத்து மிக்கதனை முகம் காட்டும் எ - று.

பரிப்.— மேல்முகம் அறிவிக்கும் என்றார்; அஃது அறிவிக்குமாறு என்னை என்றார்க்கு வெகுட்சியுண்டாயின் கருகியும் மகிழ்ச்சியுண்டாயின் மலர்ந்தும் காட்டும் என்றது.

பரிதி:— சேர்ந்த வண்ணம் காட்டும் கண்ணாடிபோல மனத்தின் எண்ணம் முகம் காட்டும். ஆகலின், முகத்திலும் கண்ணாடி உண்டோ? மனத்தின் கோபமும் பிரியமும் முகத்திற் காட்டிக்கொடுக்கும் எ - று.

காளிங்:— தன்னை வந்து அடுக்கத் தோன்றின வண்ணத்தைத் தான் காட்டும் பளிங்கேபோல ஒருவன் நெஞ்சமானது குறித்த நீர்மையை கைக்கொண்டு நின்று காட்டுவன முகம். எனவே ஒருவர் முன்னி அறிதற்குக் கருவி முகம் என்பது பொருளாயிற்று எ - று.

ஒப்புமைப்பகுதி:

"முன்னம் முகத்தின் உணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே." —புறம். 3 : 25 - 26.

" அகத்தவுத எல்லாம் முகத்தினிதுணர்ந்து." —பெருங். 3 : 14 : 238.

"வெள்ளம் வருங்காலை யீர்ப்படுக்கும் அஃதேபோல்
கள்ளம் உடையாரைக் கண்டே அறியலாம்
ஒள்ளமர்க் கண்ணாய் ஒளிப்பினும் உள்ளம்
பரந்ததே கூறும் முகம்." —பழ. நா.

"நோக்கி அறிகல்லாத் தம்உறுப்புக் கண்ணாடி
நோக்கி அறிப அதுவேபோல் - நோக்கி
முகனறிவார் முன்னம் அறிப அதுவே
மகனறிவு தந்தை அறிவு." —நெறி

" வாடிய முளரிபோல் மாறிட் டாரிடத்து
ஊடியும் மலர்ந்தபோது ஒப்ப மைந்தன்மேல்
நாடிய தண்ணளி நயந்தும் உட்கிடை
கூடிய முகத்தினர் குறுகுவார் அவை." —திருவிளை. மாமனு. 20.

" அகத்தினழகு முகத்தில் தெரியும்." —பழ.

" மகஞ்செயும் ஓமப் புகைபோய் விசும்பின் மழைபெய்வித்துச்
சகம்சலி யாமல்செய்கோடீச் சுரவள்ளல் சாரலின்உன்
அகஞ்சலிப் புற்றதென் னூர்என்ன ஓதினர் அன்னதைநின்
முகம்சிறி தோதிற்று நீசிறிது ஓது முகிழ்முலையே." —கோடீச். 218

முதுமொழிவெண்பாக்கள்:

" கண்பார்வை யால்குறிப்பைக் காணஎளி தோபுணரித்
திண்பார் புரக்கும் தினகரா - பண்பால்." —தினகர. 74.

707. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— உவப்பினும் காயினும் தான் முந்துறும் - உயிர் ஒருவனை உவத்தலானும் காய்தலானும் உறின், தான் அறிந்து அவற்றின் கண் அதனின் முற்பட்டுநிற்கும் ஆகலான், முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ - முகம்போல அறிவுமிக்கது பிறிது உண்டோ இல்லை.

உயிர்க்கே அறிவு உள்ளது; ஐம்பூதங்களான் இயன்ற முகத்திற்கு இல்லை என்பாரை நோக்கி, உயிரது கருத்தறிந்து அஃது உவக்குறின் மலர்ந்தும் காய்வுறின் கருகியும் வரலான், உண்டு என மறுப்பார் போன்று குறிப்பறிதற்குக் கருவி கூறியவாறு.

மணக்:— முகம்போல முதிர்ந்த அறிவுடையனு பிறிதுண்டோ? ஒருவனை உவப்பினும் தான் முற்பட்டுக் காட்டும் எ - று.

குறிப்பறியுமாறு என்னை யென்றார்க்கு, இது முகம் அறிவிக்கும் என்றது.

பரிதி:— உவப்பினும் முனியினும் முகத்திற் காணலாம் எ - று.

காளிங்:— மக்களானோர்க்கு உறுப்பிற் சிறந்ததாகிய முகத்தினும் பொறி உடையது ஒன்று உண்டோ? இல்லை அன்றே? என்னை எனின், ஒருவர் உள்ளத்தான் உவப்பினும் காயினும் மற்று அவை அவர் சொல்லானும் செயலானும் வெளிப்படுவதன் முன்னமே குறிப்பினால் தான் முந்துற்று நிற்கும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" நாற்றம் உரைக்கும் மலருண்மை கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கும் எல்லா
முகம்போல முன்னுரைப்ப தில்." —நான்மணி. 46.

" மகனுரைக்கும் தந்தை நலத்தை ஒருத்தன்
முகனுரைக்கும் உள்நின்ற வேட்கை." —ஷை 69.

" புனங்கொள் கார்மயில் போலியொர் பொற்கொடி
மனங்கொள் காதன் மறைத்தலை எண்ணினள்
அனங்க வேளறிந்தனன் அற்றத்தான்
மனங்கள் போல முகமும் மறைக்குமே." —கம்ப. உலாவரு. 29.

708. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— அகம் நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின் - குறையுறுவானும் தன் மனத்தைக் குறிப்பானறிந்து தானுற்ற அதனைத்

தீர்ப்பாரைப் பெறின், முகம் நோக்கி நிற்க அமையும் • அவர் தன்முகம் நோக்கும்வரை தானும் அவர்முகம் நோக்கி அவ்வெல்லைக்கண் நிற்க அமையும்.

உணர்வார் எனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினர். அவ் வெல்லையைக் கடந்து சொல்லுமாயின் இருவர்க்கும் சிறுமையாம்; ஆகலின் அது வேண்டா என்பதாம். குறையுறுவான் இயல்பு கூறுவார்போன்று கருவி கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் குறிப்பறிதற்கருவி முகம் என்பது கூறப்பட்டது.

மணக்:— முகத்தை நோக்கி நிற்க அமையும்; தன் மனத்தை நோக்கி அறியலுற்றதனை அறியவல்லாரைப் பெறின் எ - று.

இஃது அமாத்தியர்குறிப்பை அரசனும் அறியவேண்டும் என்றது; நிற்கின்றதொழில் அமாத்தியன்கண்ணது ஆகலான்.

பரிதி:— மனத்தின் நினைவை அறியும் மந்திரிக்கு அரசன் முகம் பார்க்கத்தெரியும் எ - று.

காளிங்:— தம் கருத்தின் கொண்டது உரைக்கலாளும் ஒள்ளி யோர் தாம்வறிதே முகத்தைநோக்கி மற்று உட்கொண்டதை உரையாமல் நிற்க அமையும்; யார்மாட்டு எனின், அப்பொழுதே தாம் உட்கொண்டதனை ஓர்ந்து மற்று இவர் உற்ற இன்பமும் துன்பமும் இதுபோல எனக் குறிப் பினன் அறிவாரைப்பெறின் அவர்மாட்டு எ - று.

ஒப்புமைப்பகுதி :

" ஆர்த்தியும் உற்றதும் அறிஞர்க் கற்றந்தான்
வார்த்தையின் உணர்த்துதல் அரிதன் றேமனம்
வேர்த்தனள் வெதும்பினள் மெலிந்து சாய்ந்தனள்
பார்த்தனள் ஒருத்திதன் பாங்க ருளேயே." —கம்ப. உண்டாட்டு. 54.

" வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி. " —பழ

" அகத்துக்கு முகம் கண்ணாடி." —ஷை

" அகத்தினழகு முகத்தில் தெரியும்." —ஷை

குறிப்பு:

'குறிப்பறிந்தீதலே கொடை' என்றாற்போலக் குறை யிரப்பான் குறிப்பு நோக்கி நிற்க அமையும் என்றவாறு.

—தொகுப்பாசிரியர்.

709. பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின் - வேந்தர் தம் நோக்கு வேறுபாட்டின் தன்மையை அறியவல்ல அமைச்சரைப் பெறின், பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் - அவர்க்கு மனத்துக் கிடந்த பகைமையையும் ஏனைக் கேண்மையையும் வேற்று வேந்தர் சொல்லிற்றிலராயினும் அவர்கண்களே சொல்லும்.

இறுதிக்கண் கண் ஆகுபெயர். நோக்குவேறுபாடாவன வெறுத்த நோக்கமும் உவந்தநோக்கமும். உணர்தல் அவற்றை அவ்வக் குறிகளான் அறிதல்.

மணக்:— ஒருவனோடு உள்ள பகைமையையும் நட்பையும் கண்கள் சொல்லும்; கண்ணினது வேறுபாட்டை அறிவாரைப் பெறின் எ - று.

இது கண்கண்டு குறிப்பறிதல் நுண்ணியார்க்கல்லது பிறர்க்கரிது என்றது.

பரிதி:— உறவும் பகையும் என்ற இரண்டினையும் பார்வை சொல்லும்; ஆகையாலே கண்ணிலும் ஒரு குறிப்பு இல்லை எ - று.

காளிங்:— ஒருவரோடு ஒருவர்க்கு உள்ளத்தான் உள்ள பகைமையும் கெழுமுதல் தன்மையும் அவர் கண் தானே சொல்லித்தரும்; யார்க்கு எனின், அவை இரண்டையும் பிரித்து உணர்த்துகின்ற கூறுபாட்டை அங்ஙனம் தெரிந்து உணர்வார்க்கு எ - று.

கண் உரைக்கும் என்றது "மது மறைந்து உண்டோர் மகிழ்ச்சி" கண்ணினானே கண்டு கொள்வார் என்பது.

மேற்கோள்பகுதி :

மயிலை:— அஃறிணையிடத்துக் கிளக்காதனவற்றைக் கிளக்குந போலக் கூறியதற்கு மேற்கோள். (நன். 408.)

சங்கர:— ௸ (நன். 409.)

ஒப்புமைப்பகுதி :

"ஆற்றும் துணையும் அறிவினை உள்ளடக்கி
ஊக்கம் உரையார் உணர்வுடையார்—ஊக்கம்
உறுப்பினால் ஆராயும் ஒண்மை உடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு." —நாலடி. 196.

710. நுண்ணியம் என்பார் *அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற. (௰)

உரைப்பகுதி:

பரிமே:— நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் - யாம் நுண்ணறிவுடையேம் என்றிருக்கும் அமைச்சர் அரசர்கருத்தினை அளக்கும் கோலாவது, காணுங்கால் கண்ணல்லது பிற இல்லை - ஆராயுமிடத்து அவர் கண்ணல்லது பிற இல்லை.

அறிவின் நுண்மை அஃதுடையார்மேல் ஏற்றப்பட்டது. இங்கிதம், வடிவு, தொழில், சொல் என்பன முதலாகப் பிறர்கருத்தளக்கும் அளவைகள் பல; அவையெல்லாம் முன்னறிந்தவழி அவரான் மறைக்கப்படும் நோக்கம் மனத்தொடு கலத்தலான் ஆண்டு மறைக்கப்படாது என்பதுபற்றி அதனையே பிரித்துக் கூறினார். இனி அலைக்குங்கோல் என்று பாடம் ஓதி, நுண்ணியம் என்றிருக்கும் அமைச்சரை அரசர் அலைக்குங்கோலாவது கண் என உரைத்து, தன்வெகுளிநோக்கால் அவர் வெகுடற்குறிப்பறிக என்பது கருத்தாக்குவாரும் உளர். இவை இரண்டு பாட்டானும் நுண்கருவி நோக்கு என்பது கூறப்பட்டது.

மணக்:— யாம் நுண்ணிய அறிவையுடையேம் என்றிருக்கும் அமைச்சர் பிறரை அளக்குங் கோலாவது ஆராயுமிடத்து, அவர் கண்ணல்லது பிற இல்லை எ - று.

* 'அலைக்கும்கோல்' காளிங்கர்பாடம்.

பரிப்:— நுண்ணியார் முகத்தின் தோற்றம் விடார்: அவரைக் கண்டு அறியவேண்டும் என்றது.

பரிதி:— கூரிய காரியத்தை அளக்கும் கோல் எது என்னில் கண்ணல்லது இல்லை எ - று.

காளிங்:— உலகத்து யாவரினும் யாம் பெரிதும் கூரியேம் என்று இருப்பாரையும், தாம் மற்றுத் தம் குறிப்பினுன் அதை அறிந்து சீர்தூக்கும் கோல், ஆராயும் இடத்து மற்று அவர் கண் தாமே அல்லது, வேறு இல்லை எ - று.

அலைக்கும் கோல் என்பது ஏற்றமும் தாழ்வும் இனிது உணரப் பலகாலும் தட்டியும் அசைத்தும் சீர்தூக்கும் தராசு என்று ஆயிற்று.

குறள்வைப்புமுறை

பரிமே:— கூருமை, ஐயப்படா அது, குறிப்பின்குறிப்புணர்வாரை, குறித்தது, குறிப்பிற்குறிப்புணரா, அடுத்தது, முகத்தின், முகநோக்கி, பகைமையும், நுண்ணியம்.

மணக்:— முகத்தின், அடுத்தது, நுண்ணியம், பகைமையும், குறிப்பிற் குறிப்புணரா, குறித்தது, கூருமை, ஐயப்படா அது, முகநோக்கி, குறிப்பின் குறிப்புணர்வாரை.

பரிதி:— கூருமை, அடுத்தது, பகைமையும், குறிப்பிற்குறிப்புணர்வாரை, குறிப்பிற்குறிப்புணரா, குறித்தது, நுண்ணியம், முகநோக்கி, ஐயப்படா அது, முகத்தின்.

காளிங்:— கூருமை, அடுத்தது, குறிப்பிற்குறிப்புணர்வாரை, குறித்தது, முகத்தின், குறிப்பின்குறிப்புணரா, பகைமையும், நுண்ணியம், முகநோக்கி, ஐயப்படா அது.

72. அவையறிதல்.

தொகுப்புரை :

[சொற்குழுவையறிந்த தூயோர் அவையின் நிலையறிந்து ஆராய்ந்துபேசுக. சொல்லின் நடையறிந்த நல்லறிவாளர் செவ்வியறிந்து சீர்தூக்கிப் பேசுக. அவையின் அளவறியாமல் பேசுபவர் சொற்கூறுபாட்டை அறியாதவர்கள். அவர்கட்குக் கலை வன்மையுமில்லை. அறிவாளிகள் நிரம்பிய சபையில் தாமும் அறிவுடையராக; வெள்ளைக் கூட்டத்துள் தாமும் வெள்ளையறிவினராகுக. தம்மிற்சிறந்தோர் கூடியுள்ள அவையில் முன்னர்ப்பேசாத அடக்கம் நன்மைகள்யாவற்றினும் சிறந்த நன்மையாம். பேரறிவாளர் முன் சொற்குற்றப்படுதல் உயர்நெறிக்கண்செல்வான் ஒருவன் வழிதவறி வீழ்ந்தது ஒக்கும். குற்றமறச் சொல்நயம் ஆராயும் அறிவினர் அவைக்கண் பரந்துபட்ட கல்வியாளனது அறிவு விளக்கமுறும். அறிந்துகொள்ளும் ஆற்றலுடையார் பேரவையுள் சிறந்த கருத்துக்களைச் சொல்லுதல் வளரும் பயிருள்ள பாத்தியில் நீர்சொரிந்தாற் போலும். நல்லசபையில் நல்லபொருள்களை நன்றாகப்பேசுபவர் புல்லவையுள்மறந்தும் பேசாதொழிக. தம்மோடொவ்வாத கீழ்மக்களோடு கோட்டிகொள்ளுதல் சாக்கடையுள் சிந்திய அமுதம்போலும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— *அஃதாவது அரசனோடு இருந்த அவையினது இயல்பை அறிதல். காரியஞ்சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலேயன்றி இதுவும் வேண்டுதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *அவையறிதலாவது இருந்த அவையறிந்து அதற்குத் தக சொல்லுதல். அரசன் குறிப்பறிந்தாலும் அவையறிந்து சொல்ல வேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.*

பரிதி:— *அவையறிதலாவது ஆஸ்தானம் அறிதல் எ - று.*

711. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். (க)

உரைப்பகுதி :

பரிமே:— *சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின் குழுவினை அறிந்த தூய்மையினை உடையார், அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக - தாம் ஒன்று சொல்லுங்கால் அப்பொழுதை அவையினை அறிந்து ஆராய்ந்து சொல்லுக.*

சொல்லின் குழு எனவே செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல் என்னும் மூவகைச் சொல்லும் அடங்கின. தூய்மை - அவற்றுள் தமக்கு ஆகாதன ஒழித்து ஆவன கோடல். அவை என்றது ஈண்டு அதன் அளவை; அது, மிகுதி ஒப்பு தாழ்வு என மூவகைத்து. அறிதல் - தம்மொடு தூக்கியறிதல். ஆராய்தல் - இவ் அவைக்கண் சொல்லுங்காரியம் இது, சொல்லுமாறு இது, சொன்னால் அதன்முடிவு இது என்று இவையுள்ளிட்டன ஆராய்தல்.

மணக்:— இருந்த அவையத்தாரை அறிந்து, அதற்குத்தக சொல்லின் திறத்தை ஆராய்ந்து, சொல்லுக; சொல்லின் தொகுதியை அறிந்த தூய்மையையுடையவர் எ - று.

தொகையறிதல் - திறனறிதல். இது அவையறிந்து சொல்லல் வேண்டும் என்றது.

பரிதி:— ஆஸ்தானம் அறிந்து பிழைவாராத சொல்லைச் சொல்லுக சொல்லறிந்தபேர் எ - று.

காளிங்:— அரசர்மாட்டு இருக்கும் அவையினது மரபினை அறிந்து அவ்விடத்தில் சொல்லத் தகுவனவற்றை ஆராய்ந்து பார்த்துச் சொல்லுக; யார் எனின் சொல்லினது தகுதிக்குறைவில்லாத் தொகுதிப் பாட்டினை அறிந்த தூய்மையினை உடைய அமைச்சர் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல் என மூன்றும் அடங்குதற்குச் சொல்லின்தொகை என்றார். "நோயும் இன்பமும் இருவகை நிலையில்" (தொல், 1142) என்னும் சூத்திர விதிபெற்றன இலக்கணைச் சொல். "வாரா மரபின வரக்கூறுதலும்" (தொல், 905) என்பன குறிப்புச் சொல். இவ்விரண்டும் அல்லாதன செஞ்சொல். இலக்கணை குறிப்பு என்ற இவ்விரண்டுங் கூடி நிற்பது இலக்கணமருஉ, இலக்கண வழக்கு என்பனபோல எனக. இவையெல்லாம் காமத்துப்பாலுள் காண்க.

ஒப்புமைப்பகுதி:

"கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பார் வித்தகர் - வேட்கையால்
வண்டு வழிபடரும் வாட்கண்ணாய் தோற்பன
கொண்டு புகாஅர் அவை." —பழ - நா.

"தொகைபடு செஞ்சொல் இலக்கணைச் சொல்லே
சூழ்ந்திடும் குறிப்புச்சொல் மூன்றின்
வகையறிந் துயர்ந்தோர் ஒத்தவர் தாழ்ந்தோர்
மருவுமூன் றவையும்ஆ ராய்ந்து
தகையுற உணர்ந்தோர் அவையின்முந் துரையார்
சமத்தின்எவ் வாற்றினும் இளப்பார்
நகைபடு தாழ்வின் ஒன்றையும் மொழியார்
நவைபடாச் சொற்பொருள் ஆய்ந்தோர்." —விநா. அரசி. 115.

முதுமொழிவெண்பாக்கள்:

"தேவர் குழாத்தினிடைத் தென்பால் அகத்தியனை
ஏவின் நிகரென்றான் இரங்கேசா - பூவில்." —இரங். 72.

குறிப்பு:

சொல்லின்தொகை - சொற்களின் வகைகள் பலவும்; பலவகைச் சொற்களை இவர்கள் அறிந்தமையான் எவ்வெக்காலத்து எது எது தக்கது என்பதை ஆராய்ந்து சொல்வர் என்பதாம். வெள்ளவையுள் குறிப்புச்சொல் இலக்கணைச்சொல்லும் நல்லவையுள் செஞ்சொல்மட்டும் வழங்கிப் பயனின்று என்க.

—தொகுப்பாசிரியர்.

712. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— சொல்லின் நடைதெரிந்த நன்மையவர் - சொற்களின் நடையினை ஆராய்ந்தறிந்த நன்மையினை உடையார், இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக - அவைக்கண் ஒன்றுசொல்லுங்கால் அதன் செவ்வியை ஆராய்ந்து வழுப்படாமல் மிகவுந்தெளிந்து சொல்லுக.

சொற்களின் நடையாவது - அம்மூவகைச் சொல்லும் செம்பொருள், இலக்கணைப்பொருள், குறிப்புப்பொருள் என்னும் பொருள்களைப் பயக்குமாறு. செவ்வி - கேட்டற்கண் விருப்புடைமை. வழு - சொல் வழுவும் பொருள்வழுவும். இவை இரண்டு பாட்டானும் ஒன்று சொல்லுங் கால் அவையறிந்தே சொல்லவேண்டும் என்பது கூறப்பட்டது.

மணக்:— சொன்னால் அதற்கு வருங்குற்றத்தை ஆராய்ந்து, நன்மையாமவற்றை யறிந்து, சொல்லுக; சொல்லினது வழக்காராய்ந்த நன்மையுடையார் எ - று.

இஃது ஆராய்ந்து சொல்லுமாறு கூறிற்று.

பரிதி:— சொல்லின் இடையூறும் நன்மையும் அறிந்து சொல்லுக; சொல்லும் சாதுரியம் அறிந்த மந்திரி எ - று.

காளிங்:— எய்தியிருந்த அவையிடம் அறிந்தும், பெரிதும் நன்மையைக் குறிக்கொள்வது அறிந்தும், பின் ஒன்று சொல்லுக. யார் எனின், சொல் ஒழுங்கினை நான்முறையான் அறிந்து நன்மையினை உடையவர் எ - று.

குறிப்பு:

சொன்னடையாவது, ஒரேபொருளைத்தரும் பலசொற்களைக் கூறுமிடத்தும் இன்னசந்தர்ப்பத்தில் இன்னசொல் ஆம் என அளந்தறிந்து வழங்குதல். அறைதல், பன்னுதல், உரைத்தல் எல்லாம் சொல்லல் என்னும் பொருளைத் தருமாயினும் தண்டித்து நீதிவழங்குமிடத்து அறைந்தான் என்பதையும், நன்றாகப் பொருள்விளங்க விரித்துரைக்கும் இடத்துப் பன்னினான் என்பதையும் சொற்சோதனைகாட்டி சொல்லின்நயம் புலப்படுத்துமிடத்து உரைத்தான் என்பதையும் பயன்படுத்துதல் போல்வன.

—தொகுப்பாசிரியர்.

713. அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல். (௩)

உரைப்பகுதி:

பரிமே:— அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின் வகை அறியார் - அவையினது அளவை அறியாது ஒன்று சொல்லுதலைத் தம்மேற்கொள்வார் அச்சொல்லுதலின் கூறுபாடும் அறியார், வல்லதூஉம் இல் - கற்றுவல்ல கலையும் அவர்க்கு இல்லை.

அம்மூவகைச்சொற்களால் வரும் சொல்லுதல்வகைமை கேட்பாரது உணர்வுவகைமைபற்றி வருதலான் சொல்லின் வகையறியார் என்றும், இஃது அறியார் யாதும் அறியார் என்று எல்லாரானும் இகழப்படுதலின் வல்லதூஉமில் என்றும் கூறினார். இதனால் அவையறியாக்கால் வருங்குற்றம் கூறப்பட்டது.

மணக்:— [5] அவையினது அளவை அறியாது ஒன்றைச் சொல்லுதலை மேற்கொள்பவர், சொல்லின் வகையும் அறியார்; அவ்வாறன்றி வேறு வல்லதூஉம் இலராவார் எ - று.

பரிப்:— வகை - சில சொல். இது பிறரால் மதிக்கப்படார் என்றது.

பரிதி:— ஆஸ்தானம் அறியாமல் தன்சொல் மேற்பட விசாரியாமல் பயனில் சொல்சொல்லுவான் சொல்லறியாதான் எ - று.

காளிங்:— இவ்வாறு அவையினது மரபினை அறிந்து ஆராயாது வறிதே சொல்லுதலை ஒருப்பட்டு நடாத்துவார் யாவர்; மற்று அவர் சொல்லின் தகுதியும் மற்று அல்லதும் ஆகிய கூறுபாட்டினையும் அறியார்: மற்று யாதானும் தாம் வல்லதும் இல்லையாய்விடும்; சொல்லின்கண் சோர்வு படுதலான் எ - று.

குறிப்பு:

சொல்லின் வகையறிதலும், சொல்வன்மையும் இருப்பினும் அவையறியாது பேசுவாராயின் அவைகளும் இல்லாதவராகவே எண்ணப்படுவர் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

714. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். (௪)

உரைப்பகுதி:

பரிமே:— ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் - அறிவால் ஒள்ளியாரவைக்கண் தாமும் ஒள்ளியராக, வெளியார்முன் வால்சுதை வண்ணம் கொளல்-ஏனை வெள்ளைகளவைக்கண் தாமும் வாலியசுதையின் நிறத்தைக் கொள்க.

ஒள்ளியார் என்றது - மிக்காரையும் ஒத்தாரையும். அது விகாரத்தால் ஒளியார் என நின்றது. ஒள்ளியராதல் தம்நூலறிவும் சொல்வன்மையும் தோன்றவிரித்தல். அவை அறியாத புல்லரை வெளியார் என்றது, வயிரமில் மரத்தை வெளிறு என்னும் வழக்குப்பற்றி. அவர் மதிக்கும் வகை அவரினும் வெண்மையுடையராக என்பார், வான்சுதை வண்ணங்கொளல் என்றார். அவையளவு அறிந்தார் செய்யுந்திறம் இதனால் தொகுத்துக் கூறப்பட்டது. முன்னர் விரித்துக்கூறுப.

மணக்:— ஒள்ளிய அறிவுடையார்முன்பு தாமும் ஒள்ளிய அறிவுடையாராயிருத்தலும், வெள்ளிய அறிவுடையார்முன்பு வாலிய சுதை வண்ணம்போன்ற வெண்மையைக் கொண்டிருத்தலும், அவையறிதலாவது எ - று.

பரிப்:— மேல் அவை அறிந்து ஆராய்ந்து சொல்லவேண்டும் என்றார்: அவற்றுள் அவை அறிதலாவது இது என்று கூறியது.

பரிதி:— சமர்த்தன் முன்னே சமர்த்தன் என்று பெயர்பெறுதல் வெள்ளை முன்னே கறுப்பு வெண்மையாமோ எ - று.

காளிங்:— ஒள்ளிய அறிவாளர் அவை முன்னர்க்கு ஏற்பத் தாமும் ஒள்ளிய அறிவாளர் ஆதல் உடையர் எனின் அவ்வறிவு இல்லாப் பேதையார் ஆகிய வெள்ளறிவாளர் முன்னர் வரின், வெண்மை நிறமே தனக்கு இயல்பு ஆகிய சுதைபோலும் வெள்ளைவண்ணத்தைத் தம்கண் உள்ளதாகக்கொண்டு கழிதல் எ - று.

ஒளியார் என்பது ஒள்ளிய அறிவு உடையார். வெளியர் என்பது வெள்ளியார்; அறிவு கேடர். வான் சுதை வண்ணம்கொளல் என்பது - இதில் வாலிமை - வெண்மை: சுதை என்பது மணலும் நீறும் கூடிய சுண்ணம்பு.

மேற்கோள்பகுதி:

நச்:— அறிவுமடம் படுதலும் அறிவு நன்கு உடைமையும் என்ற அடிக்கு உரை எழுதியவர் இக்குறளை எடுத்துக்காட்டி 'என்றார் பிறரும்' எனக் கூறுவர். (சிறுபா. 216.)

முதுமொழிவெண்பாக்கள்:

"பொல்லார்முன் எல்லாம் புகன்று சிவஞானம்
அல்லார்முன் அல்லார் அடங்குதலால் - வல்லார்." —முதுமொழி. 113.

குறிப்பு:

அவையின் நிலைக்கேற்ப பேரறிவாளர்முன்னே பேரறிவாளனாகவும், புல்லறிவாளர்முன்னே அவர்களைப்போலவும் பேசினாலல்லது பயனில்லை என்றது. புல்லறிவாளர்க்கு நுண்கருத்தைமதிக்கும் ஆற்றல் இல்லை; பேரறிவாளர் வெளிற்றுரையை விரும்பிக் கேளார்; ஆதலின் ஏற்றவாறு பேசுக என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

715. நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— நன்று என்றவற்றுள்ளும் நன்றே - ஒருவற்கு இது நன்று என்று சிறப்பித்துச்சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நன்றே, முதுவருள் முந்துகிளவாச் செறிவு - தம்மின் மிக்காரவைக்கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத அடக்கம்.

தம் குறைவும் அவர்மிகுதியும் முந்துகிளந்தாற்படும் இழுக்கும் கிளவாக்கால் எய்தும்நன்மையும் அறிந்தே அடங்கினமையின், அவ்வடக்கத்தினை நன்று என்றவற்றுள்ளும் நன்று என்றார். முன்கிளத்தலையே விலக்கினமையின், உடன்கிளத்தலும் பின்கிளத்தலும் ஆம் என்பது பெற்றாம். இதனான் மிக்காரவைக்கண் செய்யுந்திறம் கூறப்பட்டது.

மணக்:— நன்றென்று சொல்லப்பட்ட எல்லாவற்றுள்ளும் மிக நன்று, தம்மின் மூதிர்ந்தார்முன் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத அடக்கம் எ - று.

முதுவர் - தவத்தானும் குலத்தானும் கல்வியானும் பிறயாதானும் முதிர்ந்தார். இஃது இருந்த அவையின்கண் முந்துற்றுச் சொல்லல் ஆகாது என்றது.

பரிப்:— இவை மூன்றும் ஆராய்ந்து சொல்லுமாறு கூறின.

பரிதி:— நன்மை என்றதற்குள் நன்மையாவது ஆஸ்தானத்துக்கு நடுவேயிருந்து தன்சொல் மேற்படச் சொல்லுதல் எ - று.

காளிங்:— இது நன்று என்று சான்றோர் தெரிந்து கைக்கொண்டவற்றுள் எல்லாம் சாலநன்றே: யாது எனின், தம்மினும் முதிர்ந்த அறிவினை உடைய மூதறிவாளர் முன்னர் அவர் குறிப்பு அறிந்தன்றித் தாம், ஒன்றினை முந்து உற்றுச் சொல்லாமையாகி நின்ற அரணிப்பு எ - று.

அரணிப்பு ஆவது - நாவை மிகவும் ஒடுக்கிக் கொண்டிருத்தல் என்பது.

குறிப்பு:

முதுவர் முற்பட்டுப்பேசின் அவர்கள் விரும்பும் கருத்து எது? அவர்கள் பேச்சாற்றல் எத்தகைத்து என்பன அறியப்பெற்று, அதற்குத்தக தாம்பேச இயலும் ஆதலின், முந்து கிளவாச்செறிவு நன்மையாயிற்று. முதியோர் அவையில் அவர் பண்பாடறிந்தபின்பே பேசவேண்டும் என்பது.

—தொகுப்பாசிரியர்.

716. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு. (சா)

உரைப்பகுதி:

பரிமே:— ஆற்றின் நிலை தளர்ந்தற்று - வீடு எய்தற்பொருட்டு நன்னெறிக்கண் நின்றான் ஒருவன் அந்நெறியினின்றும் நிலை தளர்ந்து வீழ்ந்தாலொக்கும், வியன் புலம் ஏற்று உணர்வார்முன்னர் இழுக்கு - அகன்ற நூற்பொருள்களை உட்கொண்டு அவற்றின் மெய்ம்மை உணர வல்லாரவைக்கண் வல்லானொருவன் சொல்லிழுக்குப்படுதல்.

நிலைதளர்ந்து வீழ்தல் "*உரனென்னும் தோட்டியான் ஓரைந் துங்கா" த்துஒழுகியான் பின் இழுக்கிக் கூடா ஒழுக்கத்தனாதல். பயன் இழத்தலேயன்றி இகழவும்படும் என்பதாம். இதனான் அதன்கண் இழுக்கிய வழிப்படுங்குற்றம் கூறப்பட்டது.

மணக்:— ஒரு நெறியின்கண் நின்றார் அந்நிலைமை குலைந்தாற் போல இகழப்படும், அகன்ற கல்வியைக் கேட்டறியவல்லார் முன்னர்த் தப்புதல் எ - று.

இது தப்புதல் வாராமல் சொல்லல்வேண்டும் என்றது.

பரிப்:— ஏற்று என்பது கேள்வியின்கண் வருதலின் கேள்வி யாயிற்று. மேல் தப்புவாராமல் சொல்லவேண்டும் என்றார்: அதனால் வரும் குற்றம் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.

பரிதி:— ஆற்றுக்குள்ளே நிலைச்சுக் கரையேறுவான் அவன் நீச்சிலேவிழுந்ததற்கு ஒக்கும்; பெரியோரிருந்த சமயத்திலே மந்திரி சொல் தட்டுப்படுதல் எ - று.

---

* குறள். 24.

காளிங்:— தொன்று தொட்டுத் தாம் ஒழுகி வருகின்ற ஒழுக்க நிலையின் தவறியது எத்தன்மைத்து: அவ்வளவு அன்றி அதனினும் சாலக் குற்றம் உடைத்து: யாதுஎனின் தம்கல்வியால் பரந்த அறிவினைத் தாம் ஒன்று சொல்லும்போது எதிர் ஏற்று அறிவோர் கூட்டமாகிய அவை முன்னர் தமது சொல்லின் இழுக்கம் எ - று.

ஆற்றின்நிலை தளர்ந்து அற்று என்பது தாம் ஒழுகி வருகின்ற ஒழுக்கின் நிலையின் தவறிய அத்தன்மைத்து என்றது. வியன்புலம் என்பது உயர்ந்த அறிவு என்றது. ஏற்று உணர்வார் என்பது உரை கலப்பதன் முன்னமே யாது எனக் கருதி இதனை எதிர் ஏற்று அறிவோர் என்பது.

ஒப்புமைப்பகுதி :

"பிழைபடச் சொல்லேல்." —ஆத்தி. 79.

முதுமொழிவெண்பாக்கள் :

"மன்றில் பரசமய கோளரியின் வல்லமணர்
சென்றநிலை என்னும் சிவசிவா - துன்றுதிரை" —சிவசிவ. 72.

குறிப்பு:

பரந்த நூலறிவை உணர்ந்து சுவைக்கும் பெரியோர்முன்னே சொற்குற்றப் படுதலாகாது. அங்ஙனம் படுதல் ஒழுக்கங்கெட்டஇடத்து உண்டாகும் அவமானம் போன்ற அவமானத்தைத்தரும். இந்தநிலையை ஒட்டி 'கடும்பகல் ஏதிலான்பாற்கண்ட இல்லினும் பொல்லாதே' என்று அவையில் குற்றப்படுதலையே அறிவிப்பர் குமரகுருபரர்.

— தொகுப்பாசிரியர்.

717. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— கசடு அறச் சொல் தெரிதல் வல்லாரகத்து - வழுப் படாமல் சொற்களை ஆராய்தல்வல்லாரவைக்கண் சொல்லின், கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பல நூல்களையுங்கற்று அவற்றினுய பயனை அறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும்.

சொல்லின் என்பது அவாய்நிலையான் வந்தது. ஆண்டே சொல்லுக என்பதாம்.

மணக்:— நூல்களைக்கற்று, அதன்பயனும் அறிந்துள்ளாரது கல்வி விளங்காநிற்கும்; குற்றமறச் சொற்களைச் சொல்லவல்லார் முன்னர்ச் சொல்லின் எ - று.

இது கல்வியின் விழுப்பம் கற்றார்க்கல்லது பிறர்க்கு அறிதல் அரிது என்றது.

பரிதி:— *பலநூல் கற்ற அறிவுடையார் கல்வி பிரகாசிக்கும் பழுதற்ற மந்திரியினிடத்து எ - று.

காளிங்:— பலநூல்களையும் திருந்தக்கற்று அமைந்த அமைச்சரது கல்வியானது விளங்கா நிற்கும்: எவ்விடத்து எனின், தமது சொல்லினை ஒரு குற்றம் அற இனிது உணரவல்லாரிடத்து எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"சுந்தரனின் பேரவையுள் சொன்னாற் கருந்தமிழும்
செந்தமிழாம் கோவைத் தினகரா — முந்தைநூல்." —தினகர. 75.

"இறைநூல் உரையாடார் இன்புற்றார் சால
அறிவுரை யைக்கேட்ட அன்றே — நெறிநின்று."
—முதுமொழி. 114.

"ஓர்சங்கத் தார்கல்வி ஊமைச்சேய்க் குக்காட்டிச்
சோர்வுநலர் தேர்ந்தனரே சோமேசா —ஒருங்கால்."
—சோமேசர். 72.

குறிப்பு:

புனுகும் சவ்வாதும் பூசிமகிழும் அரசர்முன் சிறப்படைவதுபோல, கற்றறிந்தார் கல்வி பெரியோர்முன்னே பெருமையடையும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

---

* 'பலநாள்' என்பது பழையவுரை.

718. உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— உணர்வது உடையார்முன் சொல்லல் - பிறருணர்த்த லின்றிப் பொருள்களைத் தாமே உணரவல்ல அறிவினையுடையாரவைக்கண் கற்றார் ஒன்றனைச் சொல்லுதல், வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று - தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண் நீரினைச் சொரிந்தாற் போலும்.

தானேயும் வளர்தற்குரிய கல்வி மிக வளரும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் ஒத்தாரவைக்கண் எவ்வழியுஞ்சொல்லுக என்பது கூறப்பட்டது.

மணக்:— யாதாயினும் ஒன்றைச் சொல்லுங்கால், அதனைத் தெரிந்தறியும் அறிவுடையார்முன்பு சொல்லுவது, வளர்வதொன்று நின்ற பாத்தியின்கண்ணே நீர் சொரிந்தாற்போலும் எ - று.

பரிப்:— உணர்வது - அறிவது. மேல் சொல்அறிவார் முன் சொல்லுக என்றார்: அப்பொருள் அறிவார் முன்னர்ச் சொல்லுக என்பதூஉம், அச்சொல்லினாலே தம் கல்விவளரும் என்பதூஉம் கூறிற்று.

பரிதி:— அறிவுடையார்முன் சொல்லும் கல்வி பூந்தோட்டப் பாத்திக்குத் தண்ணீர் சொரிதலாம் எ - று.

காளிங்:— ஒள்ளிய அறிவின உடையோர்அவை முன்னர் தாமும் தமது ஒள்ளிய அறிவு புலப்படச் சொல்லுதல் எத்தன்மைத்தோ எனின், தானே இனிது வளர்வது ஓர்பயிருக்குக் கட்டிய பாத்தியுள் பருவக் குறை வாராமல் நீர் கோலிச்சொரிந்த அத்தன்மைத்து எ - று.

குறிப்பு:

நீர் சொரியச் சொரிய வளர்ந்து தழைக்கும் பயிர். நுண் கருத்துக்களைத் தாங்கிய சொற்களைப் பொழியப் பொழிய உணர்வுடையார் மகிழ்ந்து மலர்ந்திருப்பர் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

719. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார். (௯)

உரைப்பகுதி:

பரிமே:— நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார் - நல்லாரிருந்த அவைக்கண் நல்லபொருள்களை அவர்மனங்கொள்ளச் சொல்லுதற்குஉரியார், புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க - அவை அறியாத புல்லர் இருந்த அவைக்கண் அவற்றை மறந்தும் சொல்லாதொழிக.

சொல்லின், தம்மை அவை அறியாமை நோக்கி நல்லவையும் பொருளறியாமையால் புல்லவைதானும் இகழ்தலின், இரண்டு அவைக்கும் ஆகார் என்பது கருதிப் பொச்சாந்தும் சொல்லற்க என்றார்.

மணக்:— புல்லியவரிருந்த அவையின்கண் மறந்தும் சொல்லாதொழிக; நல்லவரிருந்த அவையின்கண் நல்லதனை இசையச் சொல்ல வல்லார் எ - று.

பரிப்:— இது வெளியார்முன் வெள்ளையாயிருத்தலால் அவர் முன்பு சொல்லாது இருத்தல் என்றது.

பரிதி:— புல்லறிவாளர் கூட்டத்தில் வார்த்தை சொல்ல வல்லான் இட்டுக்கட்டிச் சொல்வான் அல்லன்; பெரியோர் முன்னே நல்லது செலச் சொல்லுமவன் எ - று.

காளிங்:— தாம் புல்லறிவாளர்குழாத்துப்புக்கால் தமது சிறந்த சொல்லினை மறந்தும் சொல்லற்க: யாரெனின், நல்லன அறியும் நல்லறிவாளர் அவையின்கண் தமது நன்கு அமைந்த சொல் அவர் செவிக்குச் செல்லுமாறு சொல்லவல்ல தூய அமைச்சர் எ - று.

பொச்சாந்து - மறந்து.

ஒப்புமைப்பகுதி:

“கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு — நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு.” —பழ-நா.

"அருளின் அறம்உரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லா
ஏழை யதனை இகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு." —நாலடி. 321.

"வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ — டொன்றி
உரைவித் தகமெழுவார் காண்பவே கையுள்
சுரைவித்துப் போலுந்தம் பல்." —ஷை 315.

குறிப்பு:

பரதவர் சேரியில் பரிமளப்பொருள் விற்றதுபோல் புல்லவையில் நுண் கருத்துக்களைச் சொன்னால் அதன் அருமை யாராலும் அறியப்படாது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

720. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். (௰)

உரைப்பகுதி :

பரிமே:— தம் கணத்தர் அல்லார்முன் கோட்டி கொளல் - புல்லார் தம்மினத்தாரல்லார் அவைக்கண் ஒன்றனையும் சொல்லற்க; அங்கணத்துள் உக்க அமிழ்தற்று - சொல்லின், அது தூய்தல்லாத முற்றத்தின்கண் உக்க அமிழ்தினை ஒக்கும்.

கொள் என்னும் முதனிலைத்தொழிற்பெயர் முன்னின்று பின் எதிர்மறை அல்விகுதியோடு கூடி *"மகனெனல்" என்பதுபோல் நின்றது. சொல்லின் அது என்பன அவாய்நிலையான் வந்தன. பிறரெல்லாம் கொளல் என்பதனைத் தொழிற்பெயராக்கி உரைத்தார்; அவர் அத்தொழில் அமிழ்து என்னும் பொருளுவமையோடு இயையாமைநோக்கிற்றிலர். சாவா மருந்தாதல் அறிந்து நுகர்வார் கையினும் படாது அவ்வங்கணத்துக்கும் இயைபின்றிக்கெட்டவாறு தோன்ற, உக்க அமிழ்து என்றார். அச்சொல் பயனில் சொல்லாம் என்பதாயிற்று. இவை இரண்டுபாட்டானும் தாழ்ந்தாரவைக்கண் ஒருவழியும் சொல்லற்க என்பது கூறப்பட்டது.

*குறள். 196.

மணக்:— அங்கணத்தின்கண் உக்க அமுதம்போல இகழப் படுவர்; தம்முடைய இனத்தாரல்லாதார் முன்னர் ஒன்றைச் சொல்லுவா ராயின் எ - று.

கல்வியுடையார் புல்லவையுள் சொன்னால் உளதாகும் குற்றம் என்னை என்றார்க்கு, இது இகழப்படுவர் என்று கூறிற்று.

பரிதி:— அங்கணமாகிய சேற்றுக்குள் அமிர்தத்தை ஊற்றின தற்கு ஒக்கும் புல்லறிவாளர் முன் வித்தை செய்தல் எ - று.

காளிங்:— பொல்லாத நீர் உகுத்தற்கு உரியதோர் அங்கணத் துள் கொண்டுசென்று உகுத்த பாலும்தேனும் முதலிய அமுதம் எத்தன் மைத்து: மற்று அத்தன்மைத்து: யாது எனின் தம்மோடு சிறந்த நல்லறி வினரல்லார் கூட்டத்து முன்னர், தமது கல்வி விநோதம் கொண்டு ஒழுகல் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்.— கொளல் - கொள்ளற்க; கொள் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் விதிமேல் நின்று பின் எதிர்மறை விகுதியோடு கூடி, "மகனெனல்" (196) போலநின்றது. "அரங்கின்றிவட்டாடியற்றே" (401) என்பதுபோல வாராமையால் என்க. இவ்வுரையாசிரியர் உடம்பாட்டினை விதி என்பர். இதனுள் அற்று என்பது பெயரடுத்துநின்றதால் ஈண்டு இவ்வாறு உரைத்தார். "வையத்திறந்தாரை எண்ணிக்கொண்டற்று" (22) என்பது முதலியவற்றெல்லாம் வினையை அடுத்து வருதலின் இவ்வாறு உரையாதொழிந்தார் என்க.

ஒப்புமைப்பகுதி:

"பன்றிக்கூழ்ப் பத்தரில் தேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேல் கொட்டும் தறிபோல் தலைதகர்ந்து
சென்றிசையா வாகும் செவிக்கு."

—நாலடி. 257.

“ கல்வியா ளைய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவும் தீயவாம் — எல்லாம்
இவர்வரை நாட தமரைஇல் லார்க்கு
நகரமும் காடுபோன் றுங்கு.” —பழ.நா.

முதுமொழிவெண்பாக்கள்:

“ சொற்றவிடைக் காடர்கவி தோற்றதுதென் னன்சபையின்
முற்றுசுவை யுற்றும் முருகேசா — உற்றனுகா.” —முருகேச. 72.

குறள்வைப்புமுறை

பரிமே:— அவையறிந்து, இடைதெரிந்து, அவையறியார், ஒளியார், நன்றென்ற, ஆற்றின், கற்றறிந்தார், உணர்வது, புல்லவையுள், அங்கணத்துள்.

மணக்:— அவையறிந்து, ஒளியார், இடைதெரிந்து, ஆற்றின், நன்றென்ற, கற்றறிந்தார், உணர்வது, புல்லவையுள், அங்கணத்துள், அவையறியார்.

பரிதி:— அவையறிந்து, அவையறியார், ஆற்றின், நன்றென்ற, இடைதெரிந்து, கற்றறிந்தார், உணர்வது, அங்கணத்துள், ஒளியார். புல்லவையுள்.

காளிங்:— அவையறிந்து, அவையறியார், ஒளியார், உணர்வது, அங்கணத்துள், இடைதெரிந்து, நன்றென்ற, ஆற்றின், புல்லவையுள், கற்றறிந்தார்.

73. அவையஞ்சாமை.

தொகுப்புரை:

[சொல்லின் வகையெல்லாம் அறிந்த அறிவினையுடையவர் கற்றுவல்லோர் நிரம்பிய அவையில் சொற்குற்றப்படார். கற்றவர்களுக்கு முன்பு தாம் கற்ற நுண் கருத்துக்களை மனங்கொள்ளச்சொல்லவல்லவர்கள் கற்றாருள் கற்றாராவர். போர் முனையில் சாவார் பலர்; அவை அஞ்சாது சொற்போர் புரிபவர் சிலர். கற்றவர்களுக்கு முன் தாம்கற்றவைகளை ஏற்கச்சொல்லி, தாம்படித்தவற்றைக்காட்டிலும் மிக்கபொருள் களை அவரிடமிருந்து கொள்க. அவையில் அஞ்சாமல் எதிர்மொழிதற்காக இலக்கண நூல்களையும்தருக்க நூல்களையும்படிக்க. அஞ்சாமையில்லாதவர்க்கு வாளாற்பயனென்ன அவை அஞ்சுவார்க்கு நூலால் பயன் என்ன? அவையில் அஞ்சுபவன் படித்தநூல் போர்முனையிலே பேடியின் கையிலிருக்கும் வாள்போலும். நல்ல அவையிலே அச்சத் தால் நன்கு சொல்லத்தெரியாதவர்கள் பலபடித்தும் பயன் என்ன? படித்தும், அதன் பயனறிந்தும் அவைக்கு அஞ்சுபவர்கள் கல்லாதவரினும் கடையாவர். அவைக்குப் பயந்து படித்தவற்றைச் சொல்லமாட்டாதவர்கள் இருந்தும் இல்லாதவரோடு ஒப்பர்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— *அஃதாவது சொல்லுதற்குரிய அவையினை அறிந்து சொல்லுங்கால் அதற்கு அஞ்சாமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.*

மணக்:— *அவையஞ்சாமையாவது அவையின்கண் அஞ்சாது சொல்லுதல். அவையறிந்தாலும் அஞ்சாது சொல்லுதல் வேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.*

பரிதி:— *அவையஞ்சாமையாவது நல்லோர் கூட்டம் கண்டால் அஞ்சாமை எ - று.*

721. வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். (க)

உரைப்பகுதி :

பரிமே:— *வகை அறிந்து வல்லவை வாய்சோரார் - கற்றுவல்ல அவை, அல்லா அவை என்னும் அவைவகையினை அறிந்து வல்ல அவைக் கண் ஒன்றுசொல்லுங்கால் அச்சத்தான் வழுப்படச்சொல்லார், சொல் லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின் தொகை அறிந்ததூய்மை யினை உடையார்.*

இருந்தாரது வன்மை அவைமேல் ஏற்றப்பட்டது. வல்லவை என்பதற்குத் தாம் கற்றுவல்ல நூற்பொருள்களை என்று உரைப்பாரும் உளர். அச்சத்தான் என்பது அதிகாரத்தான் வந்தது. சொல்லின் தொகை, தூய்மை என்பனவற்றிற்கு மேல் உரைத்தாங்கு உரைக்க.

மணக்:— தப்பினால் வருங் குற்றவகையை யறிந்து, கற்றுவல்ல அவையின்கண் அஞ்சுதலால் சோர்வுபடச் சொல்லார், சொற்களின் தொகுதியையறிந்த தூய்மையுடையவர் எ - று.

இது மேற்கூறியவாற்றால் கற்றவர் தப்பச் சொல்லாரென்று அக் கல்வியால் வரும் பயன் கூறிற்று.

பரிதி;— சொல்லின் திடப்பாடு அறிந்து தான் கற்ற கல்விக்குச் சோர்வு வாராமல் சொல்வான் தூயனும் எ - று.

காளிங்:— இக்குற்றம் தங்குதல் இன்றி அவை முன்னர்ச் சென்ற இடத்துத் தாம் கற்று வல்லவை சொல்லும் கூறுபாடு அறிவதும் செய்து மற்றும் அவைக்கு உரித்து அல்லதனை மறந்தும் அவர்வயின் சோரவிடுவது இலர்: யார் எனின் கல்விமிகுதியால் சொல்லின் தொகை அனைத்தும் துரிசு அற உணர்ந்த தூய்மையினை உடையோர் எ - று.

குறிப்பு:

"சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்" என்பது 711 ம் குறளின் ஈற்றடியாயிருத்தலும் காண்க. வல்லவை அவை என்பது வல்லவை என குறிப்புப் பெயரெச்சத்து அகரம் விகாரத்தால் தொக்கது.

—தொகுப்பாசிரியர்.

722. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— கற்றாருள் கற்றார் எனப்படுவர் - கற்றாரெல்லாரினும் இவர் நன்குகற்றார் என்று உலகத்தாரால் சொல்லப்படுவார், கற்றார்முன் கற்ற செலச் சொல்லுவார்-கற்றாரவைக்கண் அஞ்சாதே தான்கற்றவற்றை அவர்மனங்கொள்ளும்வகை சொல்ல வல்லார்.

உலகமறிவது அவரையேயாகலின், அதனால் புகழப்படுவாரும் அவர் என்பதாம்.

மணக்:— கற்றாரெல்லாரினும் கற்றாரென்று சொல்லப்படுவார்; தாம் கற்றதனைக் கற்றார்முன்பு அவர்க்கு ஏற்கச் சொல்லவல்லார் எ - று.

பரிதி:— கற்றோர் கூடின கூட்டத்திலே தாம் கற்ற கல்வியைச் செலுத்துதல், அமிர்தமானதை நல்லோர்முன்னே வைத்ததற்கு ஒக்கும்; கல்லார்முன் சொல்லுதல் மரப்பாவைமுன் வைத்ததற்கு ஒக்கும் எ - று

காளிங்:— உலகத்துக் கற்றவர் பலருள்ளும் இவர் பெரிதும் கற்றார் என்று அக் கற்றவர் தம்மிலே முன்எடுத்து உரைக்கப்படுவார்: யார் எனின் கற்றோர் முன்னர்த் தாம் கற்றனவற்றை ஏற்கச் சொல்ல வல்லோர் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"முத்தமிழ்ச்சங் கத்தவரை மூதுரையால் வள்ளுவரும்
சித்தமகிழ் வித்தார் சிவசிவா - எத்தனையும்.' —சிவசிவ. 73.

"சங்கத்தார் வாக்கும் தமிழுணர்த லாற்சொக்க
லிங்கந் தமிழ்ப்புலவர் எல்லார்க்கும் - சிங்கமன்றோ."
—முதுமொழி. 115.

"ஆன்றசங்கர் போற்றஒன்றை ஐயிரண்டாம் மாநிலத்தார்க்கு
ஈன்றவரிற் சொன்னார் இரங்கேசா - தோன்றவே." —இரங். 73.

குறிப்பு:

கற்றார் முன் அவர் மனங்கொளச் சொல்லுமாற்றல் சிலர்க்கேயுளதா மாதலின் அவர் கற்றாருள் கற்றாராவர்.

தொகுப்பாசிரியர்.

723. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத் தஞ்சா தவர். (௩)

உரைப்பகுதி:

பரிமே:— பகையகத்துச் சாவார் எளியர் - பகையிடை அஞ்சாது புக்குச் சாவவல்லார் உலகத்துப் பலர்; அவையகத்து அஞ்சாதவர் அரியர் - அவையிடை அஞ்சாது புக்குச் சொல்லவல்லார் சிலர்.

அஞ்சாமை சாவார் என்பதனோடுங்கூட்டி, அதனால் சொல்வல்லார் என்பது வருவித்துரைக்கப்பட்டது. இவை மூன்று பாட்டானும் அவை அஞ்சாரது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:—[1] பகையின்கண் அஞ்சாது நின்று சாவார் பெறுதற்கு எளியர்; அவையின்கண் அஞ்சாது சொல்லவல்லவர் பெறுதற்கு அரியர் எ - று.

இஃது அவையஞ்சாமை அரிது என்றது.

பரிதி:— பகையகத்துச் சாதல் எளிது. ஆஸ்தானத்திலே அஞ்சாமல் கல்வி செலச் சொல்வது அரிது எ - று.

காளிங்:— பகை நடுவுள் சென்றுபுக்க இடத்துத் தமது உயிர் ஓம்பாது மானம் ஓம்பிச் சாகத்துணிவார் உலகத்துள் எளியர் ஆகவும் கூடும்: அவையின் நடுவுள் சென்று புக்க இடத்துச் சிறிதும் அஞ்சாது தெளிந்து அறிவுறுத்தும் அமைவுடையோர் பெரிதும் அரியர்: எனவே ஆண்மைக்கு அவரும் அறிவுக்கு இவரும் சாலச் சிறந்தார் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அஞ்சாது சாவார் என்று உரைத்ததனானும், அஞ்சாது சொல்லவல்லார் என்று உரைத்ததனானும் அஞ்சாமை சாவார் என்பதனோடுங்கூட்டி., அதனால் சொல்வார் என்பது வருவிக்கப்பட்டது என்றார். அதனால் ஒன்று சுட்டியது சாவார் என்றதனை.

ஒப்புமைப்பகுதி;

"ஆனை குதிரைகா லாட்படைக ளால்மிகுந்த
சேனைவனைந் தாலும் தினகரா - ஏனைப்." —தினகர. 76.

குறிப்பு:

எளிமை பலராதலையும், அருமை சிலராதலையும் விளக்கியது. "சாவப் பிறந்தாயோ பேசப் பிறந்தாயோ" என்பது பழமொழி.

—தொகுப்பாசிரியர்.

724. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். (ச)

உரைப்பகுதி:

பரிமே:— கற்றார்முன் கற்ற செலச் சொல்லி - பலநூல்களையும் கற்றாரவைக்கண் தான் கற்றவற்றை அவர்மனம் கொள்ளுமாற்றான் சொல்லி, தாம் கற்ற மிக்க மிக்காருள் கொளல் - அவற்றின் மிக்கபொருள்களை அம்மிகக் கற்றாரிடத்து அறிந்து கொள்க.

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறுவேறாய கல்வியுடையார் பலரிருந்த அவைக்கண் தாம் கற்றவற்றை அவர்க்கு ஏற்பச் சொல்லுக; சொல்லவே, அவரும் அவையெல்லாம் சொல்லுவராகலான், ஏனைக்கற்கப்பெறாதன கேட்டறியலாம் என்பதாயிற்று. இதனால் அதனது ஒருசார் பயன் கூறப்பட்டது.

மணக்:— தாம் கற்றதனைக் கற்றவர்முன்பு இசையச் சொல்லி, தாம் கற்றதினும் மிகக்கற்றார்மாட்டு அவர் மிகுதியாகக் கூறும்பொருளைக் கேட்டுக்கொள்ளுதல் அவையஞ்சாமையாவது எ - று.

பரிப்:— கேட்டல் நாணாமையால் வருதலின் அஞ்சாமை ஆயிற்று. மேல் அரிது என்று கூறிய அவை அஞ்சாமை எத்தன்மைத்து என்றார்க்கு இத்தன்மைத்து என்று கூறப்பட்டது.

பரிதி:— கற்றார் மனம்மகிழும்படி தாம் கற்ற கல்வியைச் செலுத்தி, தம்மின் கல்வி மிக்காருள் மிகுத்த கல்வியைக் கண்டால் அவரிடத்திலே கற்பது கல்வி எ - று.

காளிங்:— இவ்வாறு அறிவு பெரிது உடைய அமைச்சரானோர் யாது செயற்பாலது எனின், பலவற்றையும் கற்றுவல்ல சான்றோர் கூட்டத்து அவைமுன்னர்த் தாம் கற்றனவற்றை அவர் செவிக்குச் செல்லுமாறு சொல்லுதலும் செய்து மற்று அதுவேயும் அன்றி அவ்விடத்துத்தாம் கற்றனவற்றின் மிக்கார் உளர் எனின் மிக்கனவற்றை இகழாது பெரிதும் குறிக்கொள்க எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அவற்றின் எனச் சுட்டியுரைத்தது தாம் கற்ற என்பதனை.

மேற்கோள்பகுதி:

இளம்:— அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கம்: அறுவகையில் ஓதுவித்தலுக்கு மேற்கோள் (தொல். பொருள். 74.)

ஒப்புமைப்பகுதி:

"வல்லவர் அவையுள் கற்றதஞ் சாது வகுத்துரைத் தவருள் மிக்கான
நல்லவை கேட்பார் கற்றவர் தம்முள் நன்கூற மதித்திடப் படுவார்."
—விநா. அரசி. 116.

725. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— ஆற்றின் அளவு அறிந்து கற்க - சொல்லிலக்கண நெறியானே அளவை நூலை அமைச்சர் உட்பட்டுக் கற்க, அவை அஞ்சா மாற்றம் கொடுத்தற்பொருட்டு - வேற்றுவேந்தரவையிடை அஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரம் சொல்லுதற் பொருட்டு.

அளவைநூல் சொல்நூல் கற்றே கற்கவேண்டுதலின், அதற்கு அஃது ஆறெனப்பட்டது. அளக்கும் கருவியை அளவு என்றார், ஆகு பெயரான். அவர்சொல்லை வெல்வதொரு சொல்சொல்லலாவது நியாயத்து *வாத செற்ப விதண்டைகளும் சலசாதிகளும் முதலிய கற்றார்க்கே யாகலின், அவற்றைப் பிழையாமல் கற்க என்பதாம். இதனால் அதன் காரணம் கூறப்பட்டது.

---

*வாதம்: உண்மைப் பொருளையறியும் விருப்பமுடையோர் இருவரில் ஒருவருக்கு ஒருவர் உண்டாகும் வினாவும் விடையும்.

செற்பம்: ஒருவரை ஒருவர் வெல்லவேண்டும் என்னும் விருப்புடையோர் இருவர் கொள்கைகளையும் தாபித்தல். ஜல்பம் எனவழங்கும் வடநூல்.

விதண்டை: வெல்லும் வேட்கையுடையோர் தம் கொள்கையை நிலை நாட்டுதல்.

சலம்: ஒருபொருள் கருதிச் சொல்லியதற்கு வேறுபொருள் கற்பித்துக் கொண்டு பழித்தல்.

சாதி: போலிஉத்தரம்.

அது பொதுவியல்பு, வேற்றியல்பு, உயர்ச்சி, தாழ்ச்சி, புகழ்ந்துரை, பழித்துரை, விகற்பம், சாத்தியம், அடைவு, அடையாமை, பிரசங்கம், வேறு திருஷ்டாந்தம், உற்பத்தியின்மை, ஐயம், பிரகரணம், ஏதுவின்மை, அருத்தாபத்தி, விசேடமின்மை, உபலப்தி, அநுபலப்தி, காரணம். நித்தியம், அநித்யம், காரியம் இவற்றின் சமமென்க.

'முதலிய' என்றதனால் தோல்வித்தானமும் கொள்ளப்படும். அஃதாவது வாதம்பேசுவார் தோல்வியுறுதற்கு ஏது; அது - மேற்கோளழிவு, வேறுமேற்கோள், மேற்கோள்மாறுபாடு, மேற்கோள்விடுதல், வேற்றேது, வேற்றுப்பொருள், பொருளின்மை, பொருளுணரப்படாமை, பொருட்போலி, காலம்பெறாமை, குன்றக்கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், பிற்கூற்றின்மை, அறியாமை, விடைதோன்றாமை, வேறுகாரணங் கற்பித்து வாதமொழிதல், தன்கோட்குற்றமகற்றாது பிறன்கோள் குற்றங் கூறல், பிறன்தோல்வியை யுணர்த்தாமை, உடன்படற்பாலதல்லதனை உடன்படுதல், சித்தாந்தப்போலி, ஏதுப்போலி என்பனவாம்.

மணக்:— அவையஞ்சாது மறுமாற்றம் சொல்லுதற்காக, நெறியானே அளவுகூறு நூல்களை அறிந்து கற்க எ - று.

நூல்கற்றலாவது மெய்யாராய்ச்சியாகிய நூலைக்கற்றலும், வேதமும் ஆகமமும் கற்றலும், உழவும் வாணிகமும் கற்றலும், படைவழங்கல் மநுநீதி முதலியன கற்றலும் என நான்கு வகைப்படும்.

பரிப்:— நூல்கள் நான்கினும் பின் கூறிய இரண்டும் சொல்லாண்மை யன்மையானும், வேதம் கேட்டல் சொல்லாதே அமைதலானும், அவையிற்றைக் கூறாது தர்க்கம் கற்றார்க்கல்லது மறுமாற்றம் சொல்லுதல் அரிது ஆதலின் அதனைக் கற்கவேண்டும் என்று இது கூறப்பட்டது. அளவு - பிரமாணம்.

பரிதி:— ஒரு காரியத்தைக் கற்கும்போது பொருள் தெரிந்து கற்க; ஆஸ்தானத்திலே உத்தாரங் கொடுத்தல் பொருட்டாக எ - று.

காளிங்:— அரசர்க்கு அமைச்சராய் உள்ளார் முன்னமே தாம் கற்குமிடத்துக் கல்வி நெறியின் அளவு அறிந்து கற்பார் ஆக என்னை எனின், பின்பு தாம் சென்று எய்திய அவையினை அஞ்சாது மற்று அவர் கேட்டவற்றிற்கு மாற்றம் வண்மையின் வழங்குதல் பொருட்டு எ - று.

இதனால் என்சொல்லியவாறோ எனின், அரசநீதியும் அமைச்சநீதியும் அறநெறிக்கு உரியவும், புரவியும் களிறும் பொருந்துவ குறிப்பவும் பிறவும் ஆகிய வரம்புக்கு ஏற்பன கற்க என்று இங்குச் சொல்லிய அன்றிப் புல்லியகற்பின் அவை அரசர்க்கும் அவைக்கும் அடாதன எ - று.

இனி மற்று இந்நீதி அரசரும் அமைச்சரும் கூடி வாழினும், தாமே பரிந்து கொள்ளும் நாடு அன்றி இயல்பினால் வாழும் நாடு இவ்வாறே வேண்டும் என்பதனால் மற்று இதன் பின்னர் அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"ஆற்றின் அளவறிந்து கல்லா தவையஞ்சும்
கூற்றினர்பால் ஏகாதே கூடாதே..........." —தமிழ். 189.

"நூல்பல கல்." —ஆத்தி. 71.

முதுமொழிவெண்பாக்கள் :

“ வாழ்வாத வூரர் வளவனவை முன்னெதிர்த்தும்
சூழ்தோ ரைவென்றார் சோமேசா - தாழ்வகல.” —சோமேசர். 73.

“ தாதையைவெல் வந்திமுனி தன்னையட்ட வக்கிரன்றான்
மூதுணர்வால் வென்றான் முருகேசா - கேதமிலா.” —முருகேசர். 73.

குறிப்பு :

இன்னது கேட்ட பின்னரே இன்னது கேட்கற்பாற்று என்னும் இயைபு உண்மையின் சொல்லிலக்கணம் கற்றபின் அளவை நூல் கற்கத்தக்கது என்பதை “ ஆற்றின் அளவறிந்து ” என்றபகுதி குறிக்கிறது. மாற்றம் சொல்லிற்குப் பொதுப் பெயராயினும் மறுமொழிக்கு உரிய பெயராதலால் இடமறிந்து பெய்யப்பெற்றது.

—தொகுப்பாசிரியர்

726. வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு. (சு)

உரைப்பகுதி:

பரிமே:— வன்கண்ணர் அல்லார்க்கு வாளொடு என் - வன்கண்மை உடையரல்லாதார்க்கு வாளொடு என்ன இயைபு உண்டு, நுண்ணவை அஞ்சுபவர்க்கு நூலொடு என் - அதுபோல நுண்ணியாரது அவையை அஞ்சுவார்க்கு நூலொடு என்ன இயைபு உண்டு.

இருந்தாரது நுண்மை அவைமேல் ஏற்றப்பட்டது. நூற்கு உரியர் அல்லர் என்பதாம்.

மணக்:— வன்கண்ணரல்லாதவர்க்கு வாளினால் பயன் என்னை? அதுபோல நுண்ணிய அவையின்கண் அஞ்சுபவர்க்கு நூலினால் பயன் என்னை? எ - று.

இது பிறர்க்குப் பயன் படாமையேயன்றி, தமக்கும் பயன்படாது என்றது.

பரிதி:— தறுகணாண்மையில்லாதார்க்கு வாளைக்கொண்டு காரியமில்லை, ஆஸ்தானத்தில் அஞ்சுவார்க்குக் கல்வி வேண்டாம் எ - று.

காளிங்:— பலநாளும் தாம் வாளொடு பயின்று போந்தன ரேனும் என்ன பயன்? பகை வந்து உற்ற இடத்து அவ்வாளினால் பணி கொள்ளும் தறுகண்மை உடையர் அல்லாதார்க்கு; மற்று அப்படியே சிலர் பலநாளும் நூலொடுபயின்று போந்தாரேனும் என்ன பயன்? அந்நூலைத் தாம் எதிர்விடுத்து இன்புறுது கல்விக்கு உரிய சான்றோர் குழாத்தை அஞ்சுமவர்க்கு எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நுண்ணவை இருந்தாரது நுண்மை அவை மேல் ஏற்றப்பட்டது. நல்லவை, புல்லவை என்பவும் ஆம். அல்லாக்கால் 'நல்லாரவை யஞ்சுவார்' (729) என்பதுபோல வரும்.

ஒப்புமைப்பகுதி:

"ஆற்றல் இலாதான் பிடித்த படை இன்னு." —இன்னு. 8.

முதுமொழிவெண்பாக்கள்:

"கருத்தன் அணி பூவைக் கழற்சிங்கன் தேவி
அருத்தியின்மோந் தாள்மூக் கரிந்தார் - செருத்துணையார்."
—திருத். 71.

குறிப்பு:

கருவியிருந்தும் கருத்து உறுதியின்மையின் பயன்படாதவாறுபோல நூல் அறிவிருந்தும் அவைக்கு அஞ்சுதலின் அறிவு பயன்படாது என்பார் 'என்' என்றார்.
—தொகுப்பாசிரியர்.

727. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்(து)
அஞ்சு மவன்கற்ற நூல். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— பகையகத்துப் பேடி கை ஒள்வாள் - எறியப்படும் பகைநடுவண் அதனை யஞ்சும் பேடி பிடித்த கூர்வாளை ஒக்கும்; அவை யகத்து அஞ்சுமவன் கற்றநூல் - சொல்லப்படும் அவைநடுவண் அதனை அஞ்சுமவன் கற்றநூல்.

பேடி - பெண்ணியல்புமிக்கு ஆணியல்பும் உடையவள். களமும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததேயாயினும் பிடித்தவள் குற்றத்தால் வாள் சிறப்பின்றாயினாற்போல, அவையும் வாய்த்துத் தானும் நன்றாயிருந் ததேயாயினும் கற்றவன் குற்றத்தால் நூல் சிறப்பின்றாயிற்று.

மணக்:— பகையின்கண் அஞ்சுவோன் பிடித்த கூர்வாள் போலும், அவையின்கண் அஞ்சுமவன் கற்றநூலும் எ - று.

மேல் பயனில்லை என்றார் இங்குப் பயனில்லாதவாறு காட்டினார்.

பரிதி:— உயுத்த களரியிலே பேடி கையில் வாளன்றோ? ஆஸ்தா னத்துக்கு அஞ்சுமவன் கற்றநூல் எ - று.

காளிங்:— ஒருவன் தான் பகைநடுவுள் புக்க இடத்தும் உறை யகத்து ஒடுங்கிய கூரிய தெளிந்த வாளினை ஒக்கும்: யாதெனின், ஒருவன் அவையில் சென்று புக்க இடத்துத் தனது கல்வியால் தெளிந்த கூரிய அறிவு புலப்படாமை அஞ்சி இருப்போன் கற்ற நூலானது எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பேடியைப் 'பிடித்தவள் குற்றத்தால்' எனப் பெண் பாலாய் உரைத்தது, "ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி ஆண்மை அறிசொற் காகிடனின்றே" (தொல். சொல். 92) என்ற விதிபற்றி என்க. "பெண்ணவாய் ஆணிழந்த பேடி யணியாளோ" என்பதும் அது.

ஒப்புமைப்பகுதி:

"நல்லவை கண்டக்கால் நாச்சுருட்டி நன்றுணராப்
புல்லவையுள் தம்மைப் புகழ்ந்துரைத்தல் - புல்லார்
படைத்தறுகண் அஞ்சுவான் இல்லுள்வில் லேற்றி
இடைக்கலத் தெய்து விடல்." —பழ-நா.

குறிப்பு:

பேடியும் வடிவால் ஆண்மகனை ஒக்கினும் வாளைப் பயன்படுத்தாமையான் தன்னை வெளிக்காட்டிக்கொண்டதுபோலக் கற்றவனும் அச்சத்தால் நூலறிவு பயன்

படாமையைக் காட்டிக்கொள்வதால் இகழப்படுவான் என்பதாம். முற்குறளில் 'என்' எனப் பொதுப்படக்கூறியதோடு அமையாது உவமை முகத்தால் விளக்கியவாறு.

—தொகுப்பாசிரியர்.

728. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— நல்லவையுள் நன்கு செலச் சொல்லாதார் - நல்லாரிருந்த அவைக்கண் நல்ல சொற்பொருளைத் தம் அச்சத்தான் அவர்க்கு ஏற்கச் சொல்லமாட்டாதார், பல்லவை கற்றும் பயம் இலரே - பல நூல்களைக் கற்றாராயினும் உலகிற்குப் பயன்படுதல் இலர்.

அறிவார்முன் சொல்லாமையின் கல்வியின் நுண்மை அறிவாரில்லை என்பதாம். இனிப் பயமிலர் என்பதற்குக் கல்விப் பயனுடையரல்லர் என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— பலநூல்களைக் கற்றாலும் ஒருபயன் இல்லாதவரே; நல்லவையின்கண் நன்றாக ஏற்கச் சொல்லமாட்டாதார் எ - று.

இஃது அவையஞ்சுவார் கற்றகல்வி பிறர்க்குப் பயன் படாது என்றது.

பரிதி:— பலநூல் கற்றும் பலனில்லை; நல்லோர் செவிக்கு ஏறச் சொல்லாத கல்வியுடையார் எ - று.

காளிங்:— பலவற்றுள் கற்று உணர்ந்தும் அவற்றால் ஒருபயனும் இலர்: யார் எனின் நல்லறிவாளர் சூழாத்துள் சென்ற இடத்தும் கல்விநன்மை அவர்செவிக்கு ஏற்குமாறு சொல்லுதற்கு வல்லாதார் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"நெடும்பகல் கற்ற அவையத் துதவாது
உடைந்துளார் உட்குவரும் கல்வி - கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால்." —நீதிநெறி. 8.

குறிப்பு:

தாங்கற்றவை வாய்ச்சொல்லான் அறியப்படுமாதலின், செலச்சொல்லாதார் பலகற்றும் பயனிலாதார் ஆனார்.

—தொகுப்பாசிரியர்.

729. கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்தும்
நல்லார் அவைஅஞ்சு வார். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— கற்று அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவார் - நூல்களைக் கற்றுவைத்தும் அவற்றால் பயனறிந்து வைத்தும் நல்லாரிருந்த அவையினை அஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை, கல்லாதவரின் கடை என்ப - உலகத்தார் கல்லாதவரினும் கடையர் என்று சொல்லுவர்.

அக் கல்வியறிவுகளான் பயன் தாமும் எய்தாது பிறரை எய்துவிப்பதும் செய்யாது கல்வித்துன்பமே எய்திநிற்றலின், கல்லாதவரின் கடை என உலகம் பழிக்கும் என்பதாம்.

மணக்:— கல்லாதவரினும் கடையர் என்று சொல்லப்படுவர்; உலகநூல் கற்றறிந்துவைத்தும், கல்லாரிருந்த அவையின்கண் சொல்லுதலஞ்சுவார் எ - று.

இது கல்லாதவரினும் இகழப்படுவர் என்றது.

பழைய:— நூல்களைக்கற்றும் நல்லாரிருந்த் சபையினை அஞ்சிச் சொல்லமாட்டாதாரைக் கல்லாதவரினும் கடையர் என உலகம் சொல்லும் எ - று.

பரிதி:— கல்லாதவரினும் கடையராவர் கல்வியைக் கற்றும் ஆஸ்தானத்திலே அஞ்சுமவர் எ - று.

காளிங்:— மற்று இவ்வாறு அன்றிக் கற்று அறிவு இல்லாத மூடரினும் சாலக்கடை என்று சொல்லுப சான்றோர்: யாரை எனின் கற்க வேண்டுவன கற்று அவற்றின் கருத்து அறிந்துவைத்துப் பின்னும் கல்வியால் பெரிதும் நல்லோரது குழாத்தைக் கண்ட இடத்து அஞ்சுமவர்களை எ - று.

ஒப்புமைப்பகுதி:

“ அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் ....
பூத்தலில் பூவாமை நன்று.’’ — நீதிநெறி. 6.

“சொல்லவை அஞ்சிக் கற்றன செலுத்தாச் சோர்வினர் கற்றும் கல்லாத
புல்லியர் இருந்தும் பொன்றின ரதனுல்போற்றுக அவையஞ்சா தவரை.’’
—விநா. அரசி. 116.

730. உளர்எனினும் இல்லாரொ டொப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். (௧௦)

உரைப்பகுதி:

பரிமே:— களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார் - அவைக் களத்தை அஞ்சித் தாம் கற்றவற்றை அதற்கு ஏற்கச் சொல்லமாட்டாதார், உளர் எனினும் இல்லாரோடு ஒப்பர் - உயிர் வாழ்கின்றாராயினும் உலகத்தாரால் எண்ணப்படாமையின் இறந்தாரோடு ஒப்பர்.

ஈண்டுக் களன் என்றது ஆண்டு இருந்தாரை. இவை ஐந்து பாட்டானும் அவை அஞ்சுவாரது இழிபு கூறப்பட்டது.

மணக்:— உளராயினும் செத்தாரோடு ஒப்பர்; அவைக்களத்து அஞ்சித் தாம் கற்றதனை அதற்கு இசையச் சொல்லமாட்டாதார் எ - று.

இது செத்தாரோடு ஒப்பர் என்றது. இவை ஐந்தும் அவையஞ்சு தலான் வருங்குற்றம் கூறின.

பரிதி:— படித்தவைகளைப் பயந்து அவையிற் செல்லும்படி சொல்லமாட்டாதவர்கள் விளைவில்லாத நிலம் உடையராயினும் இல்லா ரோடு ஒப்பாவார் எ - று.

காளிங்:— இவ்வுலகத்து உயிர்வாழ்க்கை உடையரேனும் இறந்தாரோடு ஒப்பர்: யாரெனின், தாம் எய்திய அவைக்களத்தை அஞ்சித் தாம் கற்றனவற்றை அவர் செவிக்கு ஏற்குமாறு சொல்லுதல் கல்லாதார் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே." —இனியவை. 13.

குறிப்பு:

"இல்லாரோடு ஒப்பர்" என்றது வடிவிருத்தலால் உளராதலும், பயன் படாமையின் இலராதலும் உடைமையின் என்க.

தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— வகையறிந்து, கற்றருள், பகையகத்துச்சாவார், கற்றார்முன், ஆற்றின், வாளொடு, பகையகத்துப் பேடிகை, பல்லவை, கல்லாதவரின், உளரெனினும்.

மணக்:— பகையகத்துச்சாவார், கற்றார்முன், கற்றருள், பல்லவை, வாளொடு, பகையகத்துப்பேடிகை, கல்லாதவரின், உளரெனினும், ஆற்றின், வகையறிந்து.

பரிதி:— பகையகத்துப்பேடிகை, வாளொடு, பல்லவை, பகையகத்துச் சாவார், உளரெனினும், கற்றருள், கற்றார்முன், வகையறிந்து, ஆற்றின், கல்லாதவரின்.

காளிங்:— பகையகத்துப்பேடிகை, உளரெனினும், பகையகத்துச்சாவார், கற்றார்முன், கற்றருள், வாளொடு, கல்லாதவரின், வகையறிந்து, பல்லவை, ஆற்றின்.

74. நாடு.

தொகுப்புரை :

[குறையாத விளைவும், அதனைச் செய்யும் உழவரும், அறவோரும், கேடில்லாச்செல்வரும் ஒருங்குவாழ்வதே நாடு. பெருஞ்செல்வத்தால் பிறநாட்டாராலும் விரும்பப்பெறுவதாய், கேடின்றி மிக விளைவது நாடு. எவ்வளவு சுமை வந்தாலும் தாங்கிக்கொண்டு, தன் அரசற்கு வரிமுழுதையும் வாங்கிக்கொடுப்பதே நாடு. பசியும், பிணியும், பகையும் சேராமல் நடப்பதே நாடு. பல கூட்டங்களும், நாட்டைப் பாழ்படுத்துகின்ற உட்பகையும், அரசனுக்கு உலைவைக்கும் குறும்பர்களும் இல்லாததே நாடு. பகைவரால் கேடறியாததாய், கெட்டாலும் வளங்குன்றாததாய் இருக்கும் நாடே எல்லா நாட்டிலும் சிறந்தது. ஊற்றுநீரும், வேற்றுநீரும், மலை வளமும், ஆற்றுநீரும் வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புக்களாம். நோயின்மையும், செல்வமும், விளைவும், இன்பமும், பாதுகாப்புமாகிய இந்த ஐந்தையும் நாட்டிற்கு அணியென்று சொல்லுவர். மக்கள்தேடாமல் மக்களைத் தேடிவந்தடையும் செல்வத்தை உடையதே நாடு. குடிகள் வருந்தித் தேடும் செல்வமுடைய நாடுகள் நாடன்று. மேற் கூறிய எல்லா நலன்களும் பெற்ற நாடாயினும் வேந்தில்லா நாடு பயனற்றநாடே.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி அவ்வரசனுனும் அமைச்சனுனும் கொண்டுய்க்கப் படுவதாய், ஏனை அரண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றாய நாடு ஓரதிகாரத்தால் கூறுகின்றார்.

மணக்:— *பொருளியலாவது பொருளின்பகுதி: அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்படப் பொருளாக்குதற்கு இடமாகிய நாட்டியல்பு ஓரதிகாரத்தானும், அந்நாட்டிற்கு ஏமமாகிய அரணியல்பு ஓரதிகாரத் தானும், அவ்விடங்களில் ஆக்கப்பட்ட பொருளியல்பு ஓரதிகாரத்தானும் அப்பொருளினலாக்கும் படையின் நன்மை ஓரதிகாரத்தானும், அப் படையின் நன்மையாலாக்கும் படைச்செருக்கு ஓரதிகாரத்தானும், கூறப்படும். இஃது அமைச்சரால் செய்யப்படுதலின், அதன்பின் கூறப் பட்டது. நாடாவது நாட்டிலக்கணங் கூறுதல்.

பரிதி:— நாடாவது அரசர்க்குத் தண்மையான நாடு வேண்டும் எ - று.

---

*மணக்குடவரும் பரிப்பெருமாளும் நாடுமுதல் ஐந்து அதிகாரங்களையும் பொருளியல் எனவகுத்துள்ளார்.

731. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— தள்ளா விளையுளும் - குன்றாத விளையுளைச் செய்வோரும், தக்காரும் - அறவோரும், தாழ்வு இலாச் செல்வரும் - கேடில்லாத செல்வமுடையோரும், சேர்வது நாடு - ஒருங்கு வாழ்வதே நாடாவது.

மற்றை உயர்திணைப் பொருள்களோடும் சேர்தல்தொழிலோடும் இயையாமையின், விளையுள் என்பது உழவர்மேல் நின்றது. குன்றாமை-எல்லா உணவுகளும் நிறைய உளவாதல். இதனான் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அறவோர் - துறந்தோர், அந்தணர் முதலாயினார். *'நற்றவஞ் செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கும் அஃது இடம்' என்றார் பிறரும். இதனால் அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை வழங்கத் தொலையாமை. செல்வர் - கலத்தினும் காலினும் அரும்பொருள் தரும் வணிகர். இதனால் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது.

மணக்:— தப்பாமல் விளையும் நிலங்களும், தகுதியுடையாரும், தாழ்வில்லாத செல்வரும் சேர்வது நாடு எ - று.

தள்ளா விளையுள் - மழையில்லாத காலத்தினும் சாவிபோகாத நிலம்.

பரிப்:— தக்கார் - குலத்தாலும் குணத்தாலும் அமைந்தார். தாழ்வு இல்லாத செல்வர் - பிறரால் இகழப்படாத செல்வர். பிறர்க்குப் பயன்படும் செல்வர் என்றது. இம்மூன்றும் எல்லா உயிர்க்கும் ஆகலின் சேரவேண்டும் என்று கூறப்பட்டது.

பரிதி:— மாறாவிளைச்சலும் நல்லோரும் குறைவில்லாத செல்வரும் சேர்வது நாடு எ - று.

காளிங்:— மாறாது விளையும் விளைச்சலும், தகுதியால் சிறந்த கல்வியும் ஞானமும் உடைய சான்றோரும், நாளும் யாவர்க்கும் ஈயக் குறைபடாத செல்வம் உடையோரும் செறிந்து இயல்வது நாடு எ - று.

---

*"சீவக" 77

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— மற்றை உயர்திணைப் பொருள்களோடும் சேர்தல் தொழி லோடும் இயையாமையின் விளையுள் விளையுளைச் செய்வோர் என உழவர் மேல் நின்றது.

மேற்கோள்பகுதி:

இளம்:— பொருளாவது நாடும், பொருளும், அரணும், அமைச் சும், நட்பும், படையும் எனக்கூறி நாடு என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75.)

சிவஞான:— நாடிய பொருள் கைகூடும் என்பதில் நாடி என்பது ஆகுபெயராய் அன்புடைக் காமத்தை உணர்த்திற்று எனக்கூறி, 'தள்ளா.......நாடு' என்புழி விளையுள் என்பது ஆகுபெயரான் உழவர்மேல் நின்றது என்றார் பரிமேலழகரும். ஆதலின் நாடி என்பது அவ்வாறு ஆகுபெயராதற்கு ஏற்குமாறு அறிக என்பர். (கம்ப. விருத். பக். 18.)

குறிப்பு:

தள்ளா விளையுள் - கெடாத விளைவு. "பலவயினானும் எண்ணுத்திணை விரவுப்பெயர் அஃறிணை முடிபின செய்யுளுள்ளே" ஆதலின் விளையுளும், தக்காரும் செல்வரும் சேர்வது நாடு என்று அஃறிணைமுடிபு ஏற்றது. சேர்தலாகிய புடை பெயர்ச்சி விளையுளுக்கு இன்மையின் விளையுள் என்ற தொழிற்பெயர் அதனையுடைய உழவர்மேனின்றது என்றார் பரிமேலழகர். விளையுள் என்னும் தொழிற்பெயர் விளைவ தாகிய நெல் முதலியவற்றின்மேல் நின்றது. உழவர் தொழில்செய அதனால் கூடியும் குறைந்தும் நிலவளத்திற்கு ஏற்பத் தானே சேர்வது விளைச்சலாதலின் சேர்வது என்னும் வினை நெல்விளைந்தது என்பதுபோல விளைவும் சேர்வது நாடு என இயை தற்கு இழுக்கின்மை காண்க. காளிங்கரும் விளைச்சல் எனவே பொருள்கண்டார். பரிப்பெருமாள் விளையுள் விளையும் நிலம் எனப் பொருள்கண்டார்.

—தொகுப்பாசிரியர்

732. பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி - அளவிறந்த பொருளுடைமையால் பிறதேயத்தாரானும் விரும்பத்தக்கதாய், அருங் கேட்டால் ஆற்றவிளைவது நாடு - கேடின்மையோடு கூடி மிக விளைவதே நாடாவது.

அளவிறப்புப் பொருள்களது பன்மைமேலும் தனித்தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மை என்றிவற்றான் வருவது. "மிக்கபெய லோடுபெயல் இன்மை எலி விட்டில்கிளி - அக்கண ரசண்மையோ டாறு." இவற்றை வடநூலார் ஈதிகள் என்ப. இவற்றுள் முன்னையவற்றது இன்மை அரசன் அறத்தானும் பின்னையது இன்மை அவன் மறத்தானும் வரும். இவ்வின்மைகளான் மிக விளைவதாயிற்று.

மணக்:— பெரும்பொருளாலே விரும்பத்தக்கதாகி, கேடரிதாத லோடே மிகவும் விளைவது நாடு எ - று.

பெரும்பொருள் - நெல்லு. கேடாவது விட்டில், கிளி, நால்வாய், பெரும்புயலென் றிவற்றான் வரும் நட்டம்.

பரிப்:— இதுமேல் சொன்னவும் சொல்லாதனவும் தொகுத்துக் கூறிற்று.

பரிதி:— கலக்கத்தில் கெடப்பட்ட நாட்டார் செல்வம் பெறுவ தாக முழு விளைச்சல் கொடுப்பது நாடு எ - று.

காளிங்:— அவ்விடத்து வாழ்வார் பலரும் பெரும் பொருட் செல்வருமாய்ப் பிறநாட்டு உள்ளோரும் தம்மை நாள்தோறும் விரும்பத் தக்கதுமாய்த் தம் அரசானும் பிறவாற்றானும் எஞ்ஞான்றும் கேடு அறியாதுமாய் அளவு இறந்த விளைச்சலை உடையது யாது அதுவே நாடு ஆவது எ - று.

பெட்டக்க என்றது விரும்பத்தக்க என்றது. அருங்கேட்டால் என்றது கேடரிய என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பெட்டக்கது - விரும்பத்தக்கது. 'செய்தக்க' (466) என்பதுபோலப் பெள் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் செயவெ னெச்சமானது காண்க. மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, பன்றி, புல்வாய், யானை, அரசண்மை, வேற்றரசு எனக்கேடு; இவற்றை வடநூலார் 'ஈதிவாதை' என்பர்.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— 'விளைவது நாடு' என்பது வினைமுற்றுப்பெயர் இடப்பொருள் ஏற்றுவந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 83.)

விளைவது நாடு என்பது வருமொழி நோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலை விட்டுப் பன்மைப்பாலையே விளக்குதலால் அஃறிணைச் சாதி ஒருமையாயிற்று என்பர். (ஷை 130.)

ஓப்புமைப்பகுதி :

"மலிபெரும் பொருளால் பெட்கும் வண்மையும் நாடாது யாதும்
மெலிவுக உதவும் வாய்ப்பும் மெலிகலார் மெலிந்த காலும்
நலிதரா வளனும் எல்லாம் நலிவுநீத் தாற்ற ஈண்டும்
ஒலிகெழு விளையு ளோடும் உடையது தொண்டை நாடு."

—தணிகை, திருநாட்டுப். 5.

முதுமொழிவெண்பாக்கள்:

"சீரிதாம் எண்ணமுற்ற தேசத்தில் தென்திருக்கா
வேரிசூழ் சோணா டிரங்கேசா - ஆமப்." —இரங். 74.

733. பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்(கு)
இறைஒருங்கு நேர்வது நாடு. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி - பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண்வருங்கால் அவற்றைத் தாங்கி, இறைவற்கு இறை ஒருங்கு நேர்வது நாடு - அதன்மேல் தன்னரசனுக்கு இறைப்பொருள் முழுதையும் உடம்பட்டுக் கொடுப்பதே நாடாவது.

பாரங்கள் - மக்கள் தொகுதியும் ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும்; தாங்குதல் - அவை தத்தம் தேயத்துப் பகை வந்திறுத்ததாக, அரசு கோல்கோடியதாக, உணவின்மையானுகத் தன்கண் வந்தால் அவ்வத்தேயங்களைப் போல இனிதிருப்பச் செய்தல். அச்செயலால் இறையைக் குறைப்படுத்தாது தானேகொடுப்பது என்பார் இறையொருங்கு நேர்வது என்றார்.

மணக்:— குடிமை செய்தால், ஒரு காலத்திலே பல குற்றம் தன்னிடத்து வரினும் அதனைப் பொறுத்து, நிச்சயித்த கடமையை அரச னுக்கு ஒருங்கு கொடுக்கவல்லது நாடு எ - று.

குடிமையாவது கடமையொழிய வருவது.

பரிப்:— தளர்ச்சியைச் செய்தலின் பொறை ஆயிற்று. இதனானே குடிமக்கள் பண்பு உடையராக வேண்டும் என்பது கூறிற்று.

பரிதி:— நாட்டாண்மைக்காரர்க்குச் சேதம் வந்தால் தளராமல் இறைக்கடமை ஒருக்காலே கொடுப்பது நாடு எ - று.

காளிங்:— கோல் கீழ்வாழும் குடிகள் ஆயினர் யாதானும் ஒரு காரணத்தான் முன் இறுக்கும் ஆறு அன்றிப் பெரும் பொருள் பாரம் தங்கள் மேல் வரவேண்டுங்காலத்தும் அதனைப் பொறுத்தும், அரசனைப் பாதுகாத்துப் பின்னும் அரசற்கு ஆறில் ஒன்றாக என்றும் இறுத்தற்கு உரிய இறையினையும் ஒன்றும் குறைபடாமல் ஒருங்கு உடன் கொடுத்து இயல்வது யாது? மற்று அதுவே நாடு ஆவது எ - று.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— நேர்வது நாடு என்பது அஃறிணைச் சாதி ஒருமைக்கு மேற்கோள் (இ. கொ. 130.)

ஒப்புமைப்பகுதி:

"பல்குழு வேந்தலைக்கும் படர்கொலைக் குறும்பு தீய
பல்குழுட் பகையுடற்றும் பகையுறு பசிநீ ராநோய்
பல்குழி தானு மின்றிப் பொறையொருங் குறுகால் தாங்கி
நல்கிறை வேந்தர்க் குய்க்கு நலத்தது தொண்டை நாடு."

—தணிகை, திருநாட்டுப். 6.

குறிப்பு:

பொறையொருங்கு தாங்குதலாவது ஏனைய நாடுகள் எல்லாம் வறந்து அவற்றைத்தாங்கும் பொறுப்பும் தன்மேலதாயினும் தாங்குதல்; அயல்நாடுகளி லிருந்துவரும் அனைத்துப்பொருளும் நின்று குடிகளுடைய எல்லாத் தேவையையும் நிறைக்கும் பொறுப்புவரினும் தாங்குதல்.

— தொகுப்பாசிரியர்.

734. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— உறு பசியும் - மிக்க பசியும், ஓவாப் பிணியும் - நீங்காத நோயும், செறுபகையும் சேராது - புறத்து நின்றுவந்து அழிவு செய்யும் பகையும் இன்றி, இயல்வது நாடு - இனிது நடப்பதே நாடாவது.

உறுபசி உழவருடைமையானும் ஆற்றவிளைதலானும் சேராதாயிற்று. ஓவாப்பிணி தீக்காற்று மிக்ககுளிர் வெப்பங்களும் நுகரப்படுமவற்றது தீமையும் இன்மையின் சேராதாயிற்று. செறுபகை அரசன் ஆற்றலும் நிலைப்படையும் அடவியும் அரணும் உடைமையின் சேராதாயிற்று.

மணக்:— மிகுத்த பசியும், இடையறாத பிணியும், ஒறுக்கும் பகையும், சேராது இயல்வது நாடு எ - று.

இது சேர்தலாகாதன இவை என்று கூறிற்று.

பரிதி:— பசிப்பிணியும் பலபிணியும் பகைஞரும் இல்லாதது நாடு எ - று.

காளிங்:— மிக்க பசியும், நிலத்து இயல்பால் உளது ஆகிய நீங்காப் பிணியும், தம்மைச் செறுக்கும் பகையும் சேராது நன்கு நடப்பது நாடு எ - று.

ஒப்புமைப்பகுதி:

"ஒன்றுடைப் பதினை யாண்டைக் குறுகடன் இறைவன் விட்டான்
இன்றுளீர் உலகத் தென்றும் உடனுளீர் ஆகி வாழ்மின்
பொன்றுக பசியும் நோயும் பொருந்தலில் பகையும் என்ன
மன்றல மறுகு தோறும் மணிமுரசு ஆர்த்த தன்றே."
—சீவக. 2375.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி" —சிலப். இந்திர. 72

735. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— பல் குழுவும் - சங்கேதவயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும், பாழ்செய்யும் உட்பகையும் - உடனுறையா நின்றே பாழாகச் செய்யும் உட்பகையும், வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு - அளவுவந்தால் வேந்தனை அலைக்குங் கொல்வினைக்குறும்பரும் இல்லாததே நாடாவது.

சங்கேதம் - சாதிபற்றியும் கடவுள் பற்றியும் பலர்க்கு உளதாம் ஒருமை. உட்பகை - ஆறலைப்பார், கள்வர், குறளைகூறுவார் முதலிய மக்களும்; பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும். உட்பகை, குறும்பு என்பன ஆகுபெயர். இம்மூன்றும் அரசனாலும் வாழ்வாராலும் கடியப்பட்டு நடப்பதே நாடு என்பதாம்.

மணக்:— பலபலவாய்த் திரளுந் திரட்சியும், பாழ்செய்யும் உட்பகையும், வேந்தனை அலைக்கின்ற கொலைத் தொழிலினையுடைய குறும்பரும் இல்லாதது நாடு எ - று.

பரிப்:— பாழ் ஆக்கும் உட்பகையாவது - நாட்டுத் தலைவராயினும் அதிகாரியாயினும் நாட்டைக் கெடுக்குமவர்கள். இவை ஆராய்ந்து கடிய வேண்டுதலின் இது கூறப்பட்டது.

பரிதி:— பலகுடியைச் சேதம்பண்ணும் தாயாதிகளும் ராசாவுடன் பகைசெய்யும் கூட்டமும் இல்லாதது நாடு எ - று.

காளிங்:— மறப்படை மாக்கள் பெருகக் கூடும் கூட்டமும், செல்வம் உடையோர் தம் செல்வத்தைத் தேய்க்கும் உட்பகையும், நாடு பற்றி வாழும் பெருநெறிவேந்தனைக் காடுபற்றி நிற்கச் செய்யும் கொல் வினைக் குறும்பும் இல்லது யாது? மற்று அதுவே நாடாவது எ - று.

ஒப்புமைப்பகுதி:

“பழுதுசேர் நாட்டுக் கமரர்கள் சாதி பற்றுசங் கேதத்தி னீண்டும்
குழுவுமா றலைக்கும் கள்வர்பொய் குறளை கூறுவோர் பன்றிமான் முதலாய்க்
கெழுவுமுட்பகையும் அளவுபார்த் தரசைக் கெடுக்கும்கொல் குறும்பரும் மிக்க
மழைமழை இன்மை எலிகிளி விட்டில் மன்னராங் கோளுமாம் மைந்தா.”

—விநா. அரசி. 118.

736. கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை. (௬)

உரைப்பகுதி:

பரிமே:— கேடு அறியா - பகைவரால் கெடுதல் அறியாததாய், கெட்ட இடத்தும் வளம் குன்றா நாடு - அரிதிற்கெட்டதாயினும் அப்பொழுதும் தன்வளம் குன்றாத நாட்டினை, நாட்டின் தலை என்ப - எல்லா நாட்டினும் தலை என்று சொல்லுவர் நூலோர்.

அறியாத, குன்றாத என்னும் பெயரெச்சங்களின் இறுதி நிலைகள் விகாரத்தால் தொக்கன. கேடறியாமை, அரசனாற்றலானும் கடவுட் பூசை அறங்கள் என்று இவற்றது செயலானும் வரும். வளம் - *ஆகரங்களிற் படுவனவும் வயலினும் தண்டலையினும் விளைவனவுமாம். குன்றாமை - அவை செய்யவேண்டாமல் இயல்பாகவே உளவாயும் முன் ஈட்டப்பட்டும் குறைவறுதல். இவை ஆறுபாட்டானும் நாட்டது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— கெடுதலை அறியாதாய், கெட்டதாயினும் பயன் குன்றாத நாட்டினை எல்லா நாடுகளினும் தலையான நாடு என்று சொல்லுவர் எ - று.

இது மேற்கூறிய விட்டில் முதலாயினவற்றால் நாடு கெட்டதாயினும், பின்பும் ஒருவழியால் பயன்படுதல் கூறிற்று.

பரிதி:— பிறர் நாட்டிற்போய் ஏதொன்றும் தேடாமலும், பகைவரால் கெடுதல் வாராததாயும், வாழ்ந்தார் கெட்டால் நாட்டாண்மைக்காரனைச்செல்வனுக்குவதும் நாட்டுக்குச்சிகாமணி எ - று.

காளிங்:— வேற்று அரசரால் கேடு அறியாததாய் யாதானும் ஒருவாற்றால் கெட்ட இடத்தும் பின்னும் விளைவளம் குறைவுபடாதாகிய நாடு யாது? மற்று அது நாடுகளில் பெரிதும் தலைமைப்பாடு உடையது எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அறியாது குன்றாத என்னும் வினையெச்சம் பெயரெச்சங்களின் இறுதிநிலை விகாரம் என்க.

---

* ஆகரம் - சுரங்கம். படுவன பொன் வெள்ளி முதலியன.

737. *இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— இருபுனலும் - கீழ்நீர் மேல்நீர் எனப்பட்ட தண்ணீரும், வாய்ந்தமலையும் - வாய்ப்புடைத்தாய மலையும், வருபுனலும் - அதனினின்றும் வருவதாய நீரும், வல் அரணும் - அழியாத நகரியும், நாட்டிற்கு உறுப்பு - நாட்டிற்கு அவயவமாம்.

ஈண்டுப் புனல் என்றது தூரவுகேணிகளும் ஏரிகளும் ஆறுகளுமாகிய ஆதாரங்களை; அவயவமாதற்குரியன அவையேயாகலின். அவற்றான் வானம் வறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது. இடையதன்றி ஒருபுடையதாகலும் தன்வளந் தருதலும் மாரிக்கண் உண்டநீர் கோடைக்கண் உமிழ்தலும் உடைமைபற்றி வாய்ந்த மலை என்றார். அரண் ஆகுபெயர். இதனான் அதன் அவயவம் கூறப்பட்டது.

மணக்:— மேல்நீர் கீழ்நீர் நிறுத்தலாமிடத்தினைக் கிணறுகல்லி நீருண்டாக்கும் இடத்தினையும், பயன்படு மலையினையும், ஆறொழுகும் இடத்தினையும் வலிய அரணாகும் இடத்தினையும் கண்டு, அவ்விடத்தை நாடாக்குக; அவை நாட்டிற்கு உறுப்பாதலால் எ - று.

இஃது இவை ஐந்துங் குறையாமல் வேண்டும் என்றது.

பரிப்:— ஆற்று நீரும், வாய்ந்த மலையும், நிலைநீரும், ஊற்று நீரும், வலிய அரணும் நாட்டிற்கு அங்கம் எ - று.

நாடு ஆக்கும் இடத்து யாறு ஒழுகும் இடத்தினையும், பயன் படும் மலையினையும். ஏரி ஆக்கும் நீர் நிறுத்தலாம் இடத்தினையும், குன்று கல்லி நீர் உண்டாக்கலாம் இடத்தினையும், அரண் ஆக்கும் இடத்தினையும் கண்டு அவ்விடத்தை நாடு ஆக்குக: அவை நாட்டிற்கு உறுப்பு ஆகலான் என்ற வாறாயிற்று.

பரிதி:— கிணற்றுநீர், குளத்துநீர், ஆற்றுநீர் இந்த மூன்றுவகை நீரும் காடும் மலையும் அரணும் நாட்டிற்கு உறுப்பு எ - று.

---

*'வருபுனலும் வாய்ந்த மலையும் இருபுனலும்' காளிங்கர் பாடம்.

காளிங்:— வருபுனல் என்றது கூடிக்கூடிப் பல இடத்தும் மலை முதலாகக் கடல் ஈறாக வழித் தொடர்பு அறாது வருபுனல் உடைய ஆறுகளும்: வாய்ந்த மலை என்றது வாய்ப்புடை மலைகளும்: இருபுனலும் என்றது சிறிது கல்லிய இடத்துக் கீழ்நீரும் மேல் தெரியும் குளநீரும்: வல் அரணும் என்றது பல இடத்தும் தனக்கும் தன் படைத்தலைவர்க்கும் தனது நாட்டுக் குடிகளுக்கும் சென்ற இடத்துப் பிறர் நலியாது சேர்ந்து நீங்குதற்கு உரிய அரண்களும்: இனி நாட்டு எல்லைக்கண் மாற்றார் வருதற்கு அரிய புலியும் எண்கும் மாவும் பயிலும் அடர் பெருங்காடும், மிடை தரும் கான்யாறும் இங்குச் சொன்ன இவை அனைத்தும் மாசு அறச் சிறப்புடைய நாட்டிற்கு உறுப்பு எ - று.

ஒப்புமைப்பகுதி

"இருபுனல் வாய்ந்த மலைவரு புனலும் இடவிய நகர்களும் உடைத்தாய்ப் பெருகளப்பொருளும் ஒழிவறவிளைக்கும் பெருங்குடி களும்கலம் காலால் பொருள்பலஈட்டும்செல்வரும் மறையோர் புரையறுதவத்தினர்துறவோர் மருளுறு கலைஞர் ஆதியோர் பலரும் மன்னிவாழ்ந் திருப்பது நாடு."
—விநா. அரசி. 117.

"வருபுனல் வாய்ந்த ஓங்கல் வல்லரண் இருநீர் என்னும்
பொருவில்பல் லுறுப்பிற் றாகி......நாடு." —தணிகை, திருநாட்டுப். 4.

"நீரகம் பொருந்திய ஊரகத்திரு." —கொன்றை. 51.

முதுமொழிவெண்பாக்கள்:

"தையலார் நாடகம்செய் சாலைகளும் சோலைகளும்
செய்யுமுறுப் பல்ல தினகரா - துய்ய." —தினகர. 77

"பொன்னிஎன வேதமுனி பொற்கரக நீர்கவிழ்த்த
சென்னிவள நாடே சிவசிவா - நன்று(டு)." —சிவசிவ. 74.

738. பிணிஇன்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கிவ் வைந்து. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ்வைந்து - நோயின்மையும் செல்வம் விளைதல் இன்பம் காவல் என்றிவை உடைமையுமாகிய இவ்வைந்தினையும், நாட்டிற்கு அணி என்ப - நாட்டிற்கு அழகு என்று சொல்லுவார் நூலோர்.

பிணியின்மை நிலநலத்தான் வருவது. செல்வம் மேற்சொல்லியன. இன்பம் விழவும் வேள்வியும் சான்றோரும் உடைமையானும், நுகர்வன உடைமையானும், நில நீர்களது நன்மையானும், வாழ்வார்க்கு உள் நிகழ்வது. காவல் எனவே அரசன்காவலும் வாழ்வோர்காவலும் அரண் காவலும் அடங்கின. பிறதேயங்களின் உள்ளாரும் விழைந்து பின் அவை யுள்ளாமைக்கு ஏதுவாய அதன் அழகு இதனுல் கூறப்பட்டது.

மணக்:— நோயின்மையும், செல்வமுடைமையும், விளைவுடைமையும், இன்பமுடைமையும், காவலுடைமையும் என்று சொல்லப்பட்ட இவை ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று சொல்லுவர் எ - று.

பரிப்:— செல்வம் - பொன்னும் பசுவும் பலவாயின மிகுதல்; விளைவாவது - பல தானியங்களும் பொலிவு உடைமை; இன்பமாவது - கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் இன்புறப்படும் பொருள்களை உடைமை; காவலாவது மாற்றரசனானும் தன் அரசனானும் நலிவு இன்மை. மேல், நாட்டிற்கு அங்கம் ஆவன கூறினார்: இஃது அழகு ஆவன கூறிற்று.

பரிதி:— நோயின்மை, செல்வம், *பதினாறு தானியமும் விளைவு, அரண், வினையற்றிருக்கை இந்த அஞ்சும் நிலத்துக்கு ஆபரணம் எ - று.

காளிங்:— நிலனும் நீரும் சோறும் முதலியவற்றின் இனிமைகளானே பிணி பெரிது இன்மையும், பலர் வழிச் செல்வம் பெரிது உடைமையும், வேட்பன எல்லாம் விளைந்து செல்கின்ற விளைநுகர் பொருளும், நுண்ணறிவு இன்பம் ஆகிய இன்பமும் ஒருநாள்போல் எந்நாளும் அரசனால் ஏமுற்றுச் செல்வதோர் ஏமமும் என்னும் இவை ஐந்தும் நாட்டிற்கு அணிகலம் எ - று.

ஒப்புமைப்பகுதி

"ஆதலிற் குடிக ளாதியோர் தொகவும் அழிவுசெய் குழுமுத லகன்று
போதவும் காவல் புரிபிணி யின்மை புகழ்திரு விளைவின்பம் அனைத்தும்
கோதற நாளும் மிகவுள தாகும் குலைந்தயல் நாடுகள் உறினும்
மேதகத் தாங்கும் வருந்துறு தெவையும் வேண்டுழி அளித்திடும் மைந்தா."

—விநா. அரசி. 119.

*நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை,

"......................பொங்கிய செல்வம் ஏமம்
வெருள்பிணி இன்மை இன்பம் விளைவுநன் கணிந்து தாழ்வில்
திருவினர் தக்கோர் சாலச் செறிந்தது தொண்டை நாடு."

—தணிகை. திருநாட்டுப். 4.

739. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— நாடா வளத்தன நாடு என்ப - தங்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பால் தானே அடையும் செல்வத்தை உடையவற்றை நூலோர் நாடு என்று சொல்லுவர், நாட வளம் தரும் நாடு நாடு அல்ல - ஆதலால் தேடி வருந்தச் செல்வம் அடைவிக்கும் நாடுகள் நாடு ஆகா.

நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மேல் நின்றது. "பொருள் செய்வார்க்கும் அஃதிடம்*" என்றார் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறை முகத்தான் குற்றம் கூறியவாறு. இவ்வாறன்றி என்ப என்பதனைப் பின்னுங்கூட்டி இருபொருள்பட உரைப்பின், அனுவாதமாம்.

மணக்:— தேடவேண்டாத வளத்தினை யுடைய நாட்டை நாடு என்று சொல்லுவர்; தேடினல் வளந்தருகின்ற நாட்டை நாடு அல்ல என்று சொல்லுவர் எ - று.

பரிப்:— இஃது எல்லா நிலத்தினும் உள்ள பண்டம் கலத்தினலாதல் காலினலாதல் தன்னிடத்தே உடைத்தாதலும், தன் நிலத்தில் உள்ள பண்டத்தை மிகுதியாக உடைத்தாதலும் வேண்டும் என்றது.

பரிதி:— புறத்திலேபோய் ஒன்றும் தேடாமல் நானுசெல்வமும் உண்டாயிருப்பது நாடு; அல்லது நாடல்ல எ - று.

காளிங்:— நாடு என்று சொல்லுவர் பெரியோர்: யாதினை எனின் புறத்து ஒன்று போய்த் தேடவேண்டாத பலவகைப்பட்ட விளைவளம் சிறந்த நாடுகளை: மற்று அல்லவை யாது எனின் நிலத்து விளையும் வளம் புறத்துப் போய்த் தேடுமாறு விளையும் நாடு எ - று.

* சீவக, 77.

மேற்கோள்பகுதி :

சிவஞான:— 'நாடென்ப......நாடு' என்பவாகலின் தேடி வருந் தாதுபெறப் பொருள் கைகூடச் செய்தலாம்; அவ்வாறன்றித் தேடிப் பெறப்பொருள் கைகூடிடச் செய்தல் செய்யாமையோடு ஒக்குமாதலின் நாடாப்பொருள் கைகூடும் என்றது நாடியபொருள் என்றல் சிறப் பிலதாம். (கம்ப - விருத். பக். 6.)

"நாடாவளத்தன என்றது நாடி வருத்தம் உறாது எளிதின் எய்தும் வளத்தினையுடையன என்பதேயாம். அது பரிமேலழகர் உரை யானும் உணர்க." (ஷை பக். 9.)

740. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. (௪௰)

உரைப்பகுதி :

பரிமே:— வேந்து அமைவு இல்லாத நாடு - வேந்தனோடு மேவுதல் இல்லாத நாடு, ஆங்கு அமைவு எய்தியக்கண்ணும் பயம் இன்றே - மேற் சொல்லிய குணங்களெல்லாவற்றானும் நிறைந்திருந்ததாயினும் அவற்றால் பயனுடைத்தன்று.

வேந்தமைவு எனவே, குடிகள் அவன்மாட்டு அன்புடையராதலும் அவன்றான் இவர்மாட்டு அருளுடையனாதலும் அடங்கின. அவை இல்வழி வாழ்வோர் இன்மையின், அவற்றால் பயன் இன்றாயிற்று. இவை இரண்டு பாட்டானும் அதன் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— மேற்கூறியவாற்றால் எல்லாம் அமைந்ததாயினும், பயனில்லையாம்; வேந்தனது அமைதியை உடைத்தல்லாத நாடு எ - று.

இது நாட்டுக்கு அரசனும் பண்புடையனாகல் வேண்டும் என்றது.

பரிதி:— நாட்டுக்கு உறுப்பானது எல்லாம் உண்டாகினும் நாட் டாண்மைக்காரன் நன்மையில்லாத நாடு நாடல்ல எ - று.

காளிங்:— அவ்வண்ணமே கீழ்ச்சொல்லி வந்த நன்மைகள் எல்லாம் முற்றுப் பெற்ற இடத்தும் யாதானும் ஒரு பயன் இலதே: யாது எனின் கொற்றவன் காவல் முற்றுப் பெறுதல் இல்லாத நாடானது எ - று.

இங்ஙனம் பொதுவகையான் நாட்டு அரண் கூறிப் பின் மன்னர்பதி அரண் கூறலும் இயல்பு ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள்:

"இறைசாரும் தென்னாடே நாடேனை நாடு
பிறவுடைய வேனும் பெருகாண் - உறையுமவர்க்(கு)"
—முதுமொழி. 116.

"மேல்வளமெல் லாமமைந்தும் வீர மகேந்திரந்தான்
தோல்வியுற்று மாய்ந்ததே சோமேசா - ஞாலமிசை." —சோமேசர். 74

"எச்சிறப்பேய்ந் தென்னிலங்கை வீந்ததா சீனத்தான்
முச்சகமும் ஏத்து முருகேசா - மெச்சவே." —முருகேசர். 74.

குறள்வைப்புமுறை

பரிமே:— தள்ளா, பெரும்பொருள், பொறையொருங்கு, உறுபசியும், பல்குழுவும், கேடறியா, இருபுனலும், பிணியின்மை, நாடென்ப, ஆங்கமை.

மணக்: — இருபுனலும், பிணியின்மை, நாடென்ப, தள்ளா, உறுபசியும், பல்குழுவும், பெரும்பொருள், கேடறியா, பொறையொருங்கு, ஆங்கமை.

பரிதி:— இருபுனலும், பிணியின்மை, தள்ளா, நாடென்ப, கேடறியா, பெரும்பொருள், பொறையொருங்கு, பல்குழுவும், உறுபசியும், ஆங்கமை.

காளிங்:— இருபுனலும், உறுபசியும், கேடறியா, தள்ளா, நாடென்ப, பெரும்பொருள், பல்குழுவும், பொறையொருங்கு, பிணியின்மை, ஆங்கமை.

75. அரண்.

தொகுப்புரை:

[போர்மேற் செல்வார்க்கும் தன்னைக் காத்துக்கொள்பவர்கட்கும் அரண் பொருளாம். நீரும், நிலமும், மலையும், அடர்ந்தகாடும் உடையது அரண். உயரமும், உறுதியும், அகலமும், ஏறுதற்கு அருமையும் ஆகிய இந்த நான்கினையும் மிகுதியும் உடையதே மதில் என்று நூலோர் சொல்வர். காக்கவேண்டிய இடம் சிறியதாய், அகலமாய், பகைவரின் ஊக்கத்தைக் கெடுப்பது அரண். பகைவர் கொள்ளுதற்கு அரியதாய், பலவகை உணவுகளையும் உள்ளேயுடையதாய், அகத்தார் போர்செய்தற்கு எளியதாய் இருப்பது அரண். எல்லாவகையான பொருள்களும் நிரம்பி, துன்பக் காலத்தில் உதவும் படையாட்களையும் உடையது அரண். முற்றுகையிட்டும், மோதியும், தோண்டியும் பகைவரால் பிடித்தற்கரியது அரண். முற்றுகையிட்ட புறத்தாரையும், அகத்தோர் நிலைபெயராதுநின்று பொருதுவெல்லும் இயல்பினது அரண். போர் முனையிலே பகைவர் பொருதுமாயப் போரில் தனிச்சிறப்போடு விளங்குவது அரண். அரண் எவ்வளவு வலிதாயினும் பொருதிறம் அகத்தாரிடம் இல்லையாயின் பயன் என்ன?]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி, அந்நாட்டிற்கு உறுப்பாய் அடங்குமாயினும் பகைவரால் தொலைவு வந்துழி அது தனக்கும் அரசன் தனக்கும் ஏமமாதற் சிறப்புப்பற்றிப் பிறிதோர் அங்கமாக ஓதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தால் கூறுகின்றார்.

மணக்:— அரணாவது அரணிலக்கணம் கூறுதல். மேல், நாட்டு இலக்கணம் கூறினார்; நகர் இலக்கணம் கூறுகின்றாராதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— அரணாவது நாலுவகை அரண் அரசர்க்கு வேண்டும் எ - று.

741. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தன்
போற்று பவர்க்கும் பொருள். (க)

உரைப்பகுதி:

பரிமே:— ஆற்றுபவர்க்கும் அரண் பொருள் - மூவகையாற்றலும் உடையராய்ப் பிறர்மேல் செல்வார்க்கும் அரண் சிறந்தது; அஞ்சித் தன் போற்றுபவர்க்கும் (அரண்) பொருள் - அவையின்றித் தம்மேல் வருவார்க்கு அஞ்சித் தன்னையே அடைவார்க்கும் அரண் சிறந்தது.

பிறர்மேல் செல்லுங்கால் உரிமை பொருள் முதலியவற்றைப் பிறன் ஒருவன் வௌவாமல் வைத்துச் செல்லவேண்டும் ஆகலானும், அப்பெருமை தொலைந்து இறுதி வந்துழிக் கடல்நடுவண் உடைகலத்தார் போன்று ஏமங்காணாது இறுவராகலானும், ஆற்றுபவர்க்கும் போற்று பவர்க்கும் அரண் பொருளாயிற்று. ஆற்றலுடையாராயினும் அரணில் வழி அழியும்பாலராகலின், அவரை முன் கூறினர், இதனால் அரணினது சிறப்புக் கூறப்பட்டது:

மணக்:— வலியுடையார்க்கும் அரணுடைமை பொருளாவது; பகைவர்க்கு அஞ்சித் தன்னைக் காப்பார்க்கும் அரணுடைமை பொருளாவதாம்; ஆதலால், அதனைச் செய்யவேண்டும். எ - று.

பரிப்:— வலி உடையோர்க்கும் ஒரு காலத்தே வேண்டுதலின் வேண்டும் என்றார்: இஃது அரண் செய்ய வேண்டும் என்றது.

பரிதி:— வீரர்க்கும் அரணே பொருள்; பொருள் படைத்தார்க்கும் அரணே பொருள் எ - று.

காளிங்:— சோர மன்னரைப் போர் ஆற்றுபவர்க்கும் அரண் பொருள்; இனி இங்ஙனம் போர் ஆற்றாது அஞ்சி அகம்புக்குத் தம்மைப் பேணிக் கொள்பவர்க்கும் அரண் பொருள்; ஆதலால் அதனை இகழ்தல் ஆகாது எ - று.

குறிப்பு

ஆற்றுபவர் - பகைமேற்செல்வார்; அகத்தும் புறத்தும் நின்று போர் செய்வார் என்றுமாம். தன்போற்றுபவர் - மதிலாகிய தன்னையே அடைந்து பாது காப்பவர் என்பது பரிமேலழகர் உரை. அகத்தோனாகிய தன்னையே பாதுகாப்பவர் எனவும் உரைப்பர் பிறர். இவ்வுரையில் ஒருமை பன்மை மயக்கம். மதிலாகிய தன்னைக் காத்துநிற்கும் மதில் வீரர் எனலுமாம்.

—தொகுப்பாசிரியர்

742. *மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடைய தரண். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழல் காடும் உடையது அரண் - மணிபோலும் நிறத்தினை உடைய நீரும் வெள்ளிடை நிலமும் மலையும் குளிர்ந்த நிழலையுடைய காடும் உடையதே அரணாவது.

எஞ்ஞான்றும் வற்றாத நீர் என்பார் மணிநீர் என்றும், நீரும்நிழலும் இல்லா மருநிலம் என்பார் மண் என்றும், செறிந்த காடு என்பார் அணிநிழற்காடு என்றும் கூறினார். மதிற்புறத்து மருநிலம் பகைவர் அரண்பற்றாமைப்பொருட்டு. நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என இயற்கையும் செயற்கையுமாய இந்நான்கு அரணும் சூழப்படுவது அரண் என்பதாம்.

மணக்:— தெளிந்த நீராயினும், நிழலும் நீருமிலாத வெறு நிலமாயினும், மலையாயினும், அழகிய நிழலினையுடைய காடாயினும் உடையது அரணாம் எ - று.

தெளிந்தநீர் - பெருநீர்; இது கலங்காதாதலின். அணி நிழற்காடு என்றதனாலே, செறிவுடைய காடு என்று கொள்ளப்படும்.

பரிப்:— மலை அரண் என்றும், காடுஅரண் என்றும் கூறுப. சேற்றுஅரண் என்பதும் ஒன்று உண்டு. அதுவும் இவற்றினுள் அடங்கும். இஃது அரண்செய்யும் இடம் கூறிற்று.

பரிதி:— நீரரணும் கோட்டையரணும் மலையரணும் காட்டரணும் என்ற நாலுவகை அரணும் அரண் எ- று.

காளிங்:— மணி நீரும் என்றது பளிங்கு போலத் தெளிந்து ஆழம் உடைமையும் வற்றாமையும்: மண்ணும் என்றது நாற்பெரும்

---

*'நாற்புறமும் மிக அழகாகத் தோண்டி அமைக்கப்படுவது அகழியரண்: நாற்புறத்தும் மிக்க நீர்ப்பரப்பினை உடையது நீரரண்; பிறர் உட்புக இயலாதவாறு பஞ்ளம் முள் கல் ஆகிய இவைகளால் அமைக்கப்படுவது களர்நிலஅரண்; நீரும் நிழலும் இன்றி நாற்புறத்தும் உள்ள மருநிலம் நிலஅரண்; மக்கள் வழக்கமில்லாத இடத்தில் நல்ல நீரைப் பிற்புறத்தேகொண்டு மிக உயர்ந்திருப்பது மலையரண்; பெரிய முள்மரக்கூட்டங்கள் சூழ அமைக்கப்படுவது காட்டரண்.

—சுக்கிர, அரணியல்.

சேனையும் அகத்து அடி இடுதற்கு அரிய இடமும்; மலையும் என்றது மற்று அதன் புறத்து முற்றி ஓங்கித் தலை மயக்குறுத்து நிற்கும் மலையும்; அணிநிழல் காடும் என்றது ஆங்கு அதன் புறம் சூழ்ந்து ஓங்கிப் பரந்த தூங்கு இருள் காடும் வகையறப்பெற்ற இவை நான்கினையும் உடையதே அரணாவது எ - று.

மேற்கோள்பகுதி:

யா - வி:— மென்மை மிக்குவந்த செய்யுளுக்கு மேற்கோள். (சூ. 2.)

ஓப்புமைப்பகுதி:

" மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவில் பட்டினம்." —சிறுபா. 152 - 3.

" மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்." —மதுரைக். 351.

" நீண்டநீர் காடு களர்நிவந்து விண்தோயும்
மாண்ட மலைமக்கள் உள்ளிட்டு - மாண்டவர்
ஆய்ந்தன ஐந்தும் அரண் உடையானை
வேந்தன நாட்டல் விதி." —சிறுபஞ்ச. 49.

" அகழ்கிடங்கு அந்துகில் ஆர்ந்த பாம்புரி
புகழ்தரு மேகலை நாயில் பூண்முலை
திகழ்மணிக் கோபுரம் திங்கள் வாண்முகம்
சிகழிகை நெடுங்கொடி செல்விக்கு என்பவே." —சீவக. 1444

முதுமொழிவெண்பாக்கள்:

" ஆரற் சுவர்கள் அரணாமோ அவ்வளவர்
சேரார்க் கிணையாம் தினகரா - வாரி." —தினகர. 78.

குறிப்பு:

மணிநீர் - தெளிந்தநீர். ஆழந்தெரியாதவண்ணம் அடிநிலத்தை அண்மையில் காட்டுமாதலின் மணிநீர் அரணாயிற்று. மண் - கப்பணமுதலியன பரப்பப்பெற்ற நிழலிலாதவெளி. நிலம் என்னாது மண் என்றது இடுமுள்புதைத்த மணற்பரப்பாதலின். அணிநிழற்காடு - நிழலின் குளிர்ச்சியில் பகைவரை அகப்படுத்தி, துணியையும் மயிரையும் மேனியையும் ஊறுபடுத்தும் வேல் விடர் முதலியன உள்ள காடு.

—தொகுப்பாசிரியர்.

743. *உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவு - உயர்ச்சியும் அகலமும் திண்மையும் அருமையும் என்று சொல்லப் பட்ட இந்நான்கின் மிகுதியையுடைய மதிலை, அரண் என்று உரைக்கும் நூல் - அரண் என்று சொல்லுவர் நூலோர்.

அமைவு, நூல் என்பன ஆகுபெயர். உயர்வு - ஏணி எய்தாதது. அகலம் - புறத்தோர்க்கு அகழலாகா அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினைசெய்யலாந் தலையகலமும். திண்மை - கல்லிட்டிகைகளால் செய்தலின் குத்தப்படாமை. அருமை - பொறிகளான் அணுகற்கு அருமை. பொறிக ளாவன ‡"வளைவிற் பொறியும் அயிற்செறி நிலையும், கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும், பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும், காய்பொன் உலையும் கல்லிடு கூடையும், தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும், கவையும் கழுவும் புதையும் புழையும், ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும், சென்றெறி சிரலும் பன்றியும் பணையும், எழுவும் சீப்பும் உழு விறல் கணையமும், கோலும் குந்தமும் வேலும் சூலமும்" என்று இவை முதலாயின.

மணக்:— உயர்ச்சியும், அகலமும், திண்மையும், கிட்டுதற்கு அருமையும் என்னும் இந்நான்கினது அமைதியுடையது மதிலாம் என்று சொல்லுவர் நூலோர் எ - று.

திண்மை என்பது கல்லும் இட்டிகையும் இட்டுச் செய்தல்.

பரிப்:— அருமையாவது - முதலையும் கிடங்கும் † அடியொட்டியும் முதலாயினவற்றால் கிட்டுதற்கு அருமை. அமைவு என்றது இதனின் மேல் செய்யப்படாது என்னும் அளவு உடைத்து ஆதல். இஃது அரண்செய்யும் ஆறு கூறிற்று.

---

* "மதிற்சுவரின் அடிப்படை அதன் உயரத்தின் சம அளவாதல், பாதி அளவாதல், மூன்றிலொரு கூறுதல் இருத்தல்வேண்டும். அதன் அகலம் உயரத்தின் பாதியளவு இருத்தல்வேண்டும். அதன் உயரம் கள்வரால் கடக்கமுடியாவண்ணம் வேண்டிய அளவு உயர்ந்திருத்தல் வேண்டும்." —சுக்கிர. அத். 1. சு. 238.

‡ சிலப். அடைக். 207 - 216.

† அடி ஒட்டி - இது ஒருவகைக் கருவி; சீவக. 2768 உரைபார்க்க.

பரிதி:— உயர்ச்சியும், அகலமும், வலிக்கையும், கொள்ளு தற்கு அருமையும் பெற்றது மலையரண் எ - று.

காளிங்:— நோக்குதற்கு அரிய உயர்வு உடைமையும், அதற்கு அரிய அகலம் உடைமையும், குத்துதற்கு அரிய திட்பம் உடைமையும், எ..............................மை வினையான் அருமை உடைமையும் என்னும் இந்நான்கினது முற்றுப்பேறு உடையது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— "வரிவில் பொறியுங்...............கருவிரல் கூகையும்' என்பன பாட்டுக்குறை.

குறிப்பு:

அமைவு - அமைதியையுடையதாகிய மதில்: பண்பாகுபெயர். நூல் உரைக் கும் என்றது வாள்வெட்டும் என்றாற்போலக் கருத்தாவின் தொழில் கருவியின்மேல் ஏற்றி உரைக்கப்பெற்றது.
—தொகுப்பாசிரியர்.

744. சிறுகாப்பின் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்ப தரண். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— சிறுகாப்பின் பேர் இடத்தது ஆகி - காக்கவேண்டும் இடம் சிறிதாய் அகன்ற இடத்தை உடைத்தாய், உறு பகை ஊக்கம் அழிப்பது அரண் - தன்னைவந்து முற்றிய பகைவரது மனவெழுச்சியைக் கெடுப்பதே அரணாவது.

வாயிலும் வழியும் ஒழிந்த இடங்கள் மலை, காடு, நீர்நிலை என்றி வற்றுள் ஏற்பனவுடைத்தாதல்பற்றிச் சிறுகாப்பின் என்றும், அகத்தோர் நலிவின்றி இருத்தல்பற்றிப் பேரிடத்ததாகி என்றும், தம்வலி நோக்கி இதுபொழுதே அழித்தும் என்று வரும் பகைவர் வந்து கண்டால் அவ்வூக்கம் ஒழிதல்பற்றி ஊக்கம் அழிப்பது என்றும் கூறினார்.

மணக்:— காக்கவேண்டும் இடம் சிறிதாய், மதிலகலம் பெரிய இடத்தை உடைத்தாய், மதிலையுற்ற பகைவரது மிகுதியைக் கெடுப்பது அரணாவது எ - று.

சிறுகாவலாவது ஒருபக்கம் மலையாயினும் காடாயினும் நீராயினும் உடைத்தாதல்.

பரிப்:— இஃது இடம் பெரிதாகவும் காவல் சிறிதாகவும் வேண்டும் என்றது.

பரிதி:— உள்ளிடம் உள்ளதாய் வாசல் சிறிதாகிப் பகையை வெல்விப்பது அரண் ஏ - று.

காளிங்:— சிறு படையால் காக்கும் காப்பு அமைவு உடைத்துமாய், அகத்து வாழ்வோர்க்குப் பெரிதும் இடப்பாடு உடைத்துமாய்ப் புறத்துப் பகையினது உள்ளக் கோட்பாட்டினை ஒருங்கு அழிப்பது யாது? மற்று அதுவே அரணாவது எ - று.

குறிப்பு:

சிறுகாப்பின் பேரிடம் - மதிலின் வளைவு பெரிய இடத்தை அகப்படுத்தி இருப்பினும் வாயில் பல இன்றி, விரிவின்றி இருப்பதால் சிறுதொகையினர் இருந்து காப்பதற்கு ஏற்றதாய விசாலமான இடம். ஒருநாள் இருநாளில் முற்றுகையிட்டோ, இடித்தோ வெல்லலாம் என வந்த பகைவர் மன உறுதியைத் தொலைப்பது அரண் என்றவாறு.

தொகுப்பாசிரியர்.

745. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர தரண். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— கொளற்கு அரிதாய் - புறத்தாரால் கோடற்கரிதாய், கொண்ட கூழ்த்தாகி - உட்கொண்ட பலவகை உணவிற்றாய், அகத்தார் நிலைக்கு எளிதாம் நீரது அரண் - அகத்தாரது போர்நிலைக்கு எளிதாய நீர்மையை உடையதே அரணாவது.

கோடற்கு அருமை - இளை கிடங்குகளானும் பொறிகளானும் இடங்கொள்ளுதற்கு அருமை. உணவு தலைமைபற்றிக் கூறினமையின், மற்றுள்ள நுகரப்படுவனவும் அடங்கின. நிலைக்கெளிதாம் நீர்மையாவது அகத்தார் விட்ட ஆயுதம் முதலிய புறத்தார்மேல் எளிதிற்சேறலும், அவர் விட்டன அகத்தார்மேல் செல்லாமையும், பதணப்பரப்பும் முதலாயின.

மணக்:— பகைவரால் கொள்ளுதற்கு அரிதாய், தன்னகத்தே அமைக்கப்பட்ட உணவையும் உடைத்தாய், அகத்துறைவார்க்கு நிற்றற்கு எளிதாகும் நீரையுடைத்தாயிருப்பது அரணாவது எ - று.

எனவே, புறத்தார்க்கு நிற்றற்கரிதாகும் நீரையுடைத்தாதலும் வேண்டும் என்றவாறாயிற்று; தூரத்தில் நீரைப் பிறரறியாமல் உள்ளே புகுதவிடுதலும் வேண்டும் என்பதாம்.

பரிப்:— அஃதாவது அரணுக்கு நீங்குகிற்பதோர் ஆற்றினின்றும் பிறர்க்குத் தோற்றாமல் சுருங்கையாகப் படுத்து உள்ளே நீர் புகுதலும், மதிலை முற்றினார்க்கு அணிய நீர் இன்மையும், இன்னும் அதனானே வெற்றிலையும் பூவும் உள்ளே உண்டாக்குதலும் பிறவும் ஆம்.

பரிதி:— மாற்றாரால் அழிக்கப் படாததாய், விளைவுண்டாய், நோயற்றதாய் உள்ளது அரண் எ - று.

காளிங்:— பகைவேந்தர் முற்றி இருந்தும் கொளற்கு அரிதாய் அகத்தோர் நெடிது ஆண்டு இருப்பினும் உணர்க்கு எளிதாகப் பெரிதும் ஈட்டிக் கொண்ட நெல் அரிசி கொள்ளுப்பயிர் முதலிய உணவுப் பொருள்களையும் உடைத்தாய், நாற்பெருஞ் சேனையும் விட்டு உலாவுதற்கு வேண்டும் வீதியும் பூவும் சாந்தும் நீரும் நிழலும் பொதுவியர்க்கு உரிய மகளிரும் பிறவும் உடையது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ - று.

மேற்கோள்பகுதி :

இளம்:— பொருளாவது நாடும், பொருளும், அரசனும், அமைச்சும், நட்பும், படையும் எனக்கூறி அரசன் என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள் 75.)

நச்:— இருபெருவேந்தர் தம்முள் மாறுகொண்டவழி எதிர் செலற்காற்றாது போய் மதிலகத்து இருந்த வேந்தன் மதில் பெரும்பான்மையும் மருத நிலத்துள்ளது என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 64)

ஒப்புமைப்பகுதி;

"பற்பல தானியத்த தாகிப் பலருடையும்
மெய்த்துணையும் சேரல் இனிது." — இனியவை. 18.

குறிப்பு:

"கொண்ட கூழ்த்தாகி" என்பதை மூவேந்தரும் பறம்பு மலையை முற்றுகை இட்டிருந்த காலத்து "ஒன்றே சிறியிலை வெதிரினெல்விளையும்மே, இரண்டே தீஞ் சுளைப் பலவின் பழமூழ்க்கும்மே, மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க் கும்மே, நான்கே அணிநிறவோரி பாய்தலின் மீதழிந்து, திணி நெடுங்குன்றம் தேன் சொரியும்மே" என்ற நான்கு உணவுப்பொருள்களைப் பெற்றிருந்தமையால் அறியலாம்.

—தொகுப்பாசிரியர்.

746. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடைய தரண். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— எல்லாப் பொருளும் உடைத்தாய் - அகத்தோர்க்கு வேண்டும் பொருள்களெல்லாவற்றையும் உள்ளே உடைத்தாய், இடத்து உதவும் நல்லாள் உடையது அரண் - புறத்தோரால் அழிவெய்தும் எல்லைக்கண் அஃது எய்தாவகைஉதவிக் காக்கும் நல்ல வீரரையும் உடையதே அரணாவது.

அரசன்மாட்டு அன்பும் மானமும் மறமும் சோர்வின்மையும் முதலிய நற்குணங்கள் உடைமை பற்றி நல்லாள் என்றார்.

மணக்:— எல்லாப்பொருள்களையும் உடைத்தாய், உற்றவிடத்து உதவவல்ல வீரரையுடையது அரண் எ - று.

எல்லாப்பொருளுமாவன - நுகர வேண்டுவனவும் படைக்கலங் களும்.

பரிப்:— இது நல்ல வீரரும் வேண்டும் என்றது.

பரிதி:— எல்லாப்பொருளும் உண்டாய் உற்றவிடத்துதவும் சேவகர்களை உடையது அரண் எ - று.

காளிங்:— கீழ்ச் சொல்லிப் போந்த பரிசே அரணியல் பொருளும் அகத்தமைபொருளும் பிறவுமாகிய எல்லாப் பொருள்களும்

இனிது அமைவுஉடைத்தாய் புறத்தகல்சேனைத்திறந்து அழிவினைக்குச் சினத்து இடன் உதவும் திருந்திய வீரரையும் உடையதுயாது? மற்று அதுவே அரணாவது எ - று.

குறிப்பு:

"எல்லாப்பொருளும் உடைத்தாய்" என்பது முற்குறளில் கூறியாங்கு உணவுப்பொருள்மட்டுமன்றி, பாதுகாப்புக்கும் வேண்டிய படைக்கலம் முதலிய பொருள்களும் உடையதாய். இதன் விரிவை சுக்கிரநீதி, அத். 1. சு 241-259ல் காண்க.

—தொகுப்பாசிரியர்.

747. முற்றியும் முற்று தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— முற்றியும் - புகலொடு போக்கொழியும்வகை நெருங்கிச் சூழ்ந்தும், முற்றாது எறிந்தும் - அங்ஙனம் சூழாது நெகிழ்ந்த இடனோக்கி ஒருமுகமாகப் பொருதும், அறைப்படுத்தும் - அகத்தோரை அவர் தெளிந்தோரைவிட்டுக் கீழறுத்துத் திறப்பித்தும், பற்றற்கு அரியது அரண் - புறத்தோரால் கொள்ளுதற்கு அரியதே அரணாவது.

இம்மூன்று உபாயத்துள்ளும் முதலாவது எல்லாப்பொருளும் உடைமையானும், ஏனைய நல்லாளுடைமையானும் வாயாவாயின.

மணக்:— சூழவிட்டும், சூழவிடாதே ஒரு பக்கமாகப் போர் செய்தும், அரணிலுள்ளாரைக் கீழறுத்தும் இம் மூன்றினாலும் கொள்ளுதற்கு அரியது அரணாவது எ - று.

பரிப்:— அரண் கொள்வார்க்கு உபாயம் இம்மூன்றும் அல்லது இல்லை: இம்மூன்றினும் கொள்ளப்படாமை வேண்டும் என்றது.

பரிதி:— சூழ்ந்தும் சூழாது எறிந்தும் வஞ்சித்தும் பகைவரால் கொள்ளுதற்கு அரியது அரண் எ - று.

காளிங்:— கொற்றவேந்தர் புறம் கோலிக்கொண்டும், அங்ஙனம் கோலிக்கொண்டிராது புறத்து நின்று பொருதும், சென்று குத்தியும், அறைப்படுத்தும் அதனைப் பற்றுவேம் என்று முயன்றாலும் பற்றுதற்கு அரியது யாது? மற்று அதுவே அரணாவது எ - று.

748. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— முற்று ஆற்றி முற்றியவரையும் - தானைப் பெருமையால் சூழ்தல்வல்லராய் வந்து சூழ்ந்த புறத்தோரையும், பற்றியார் பற்று ஆற்றி வெல்வது அரண் - தன்னைப் பற்றிய அகத்தோர் தாம் பற்றிய இடம்விடாதே நின்று பொருது வெல்வதே அரணாவது.

உம்மை சிறப்பும்மை. பற்றின்கண்ணே ஆற்றி எனவிரியும். பற்று ஆகுபெயர். வெல்வது என உடையார்தொழில் அரண்மேல் நின்றது. பெரும்படையானைச் சிறுபடையான் பொறுத்து நிற்குந் துணையேயன்றி வெல்லும் இயல்பினது என்பதாம். இதற்குப் பிறிதுரைப்பாரும் உளர். இவை ஏழுபாட்டானும் அதனது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— சூழவல்லாரைச் சூழ்ந்து, நலிந்தவரையும் தன்னகத்து நின்று காக்கவல்லவராய்க் காப்பவர் வெல்வது அரணாவது எ - று.

பற்றாற்றுதல் - தாம் பற்றின இடம் விடாது வெல்லுதல்.

பரிப்:— சூழ விடுதலைச் செய்து மதிலைச் சூழ்ந்து பொருவாரையும் அரணையும் பற்றுதலைச் செய்து மதில் தலையைப் பற்றியார் வெல்வது அரணாவது எ - று.

இஃது அரண் இல்லாமையே அன்றி வெல்லவும் வேண்டும் என்றது.

பரிதி:— 'அரண் அழிப்போம் என்பார்க்கு அரிதாகி அரண் இருப்போம் என்பார்க்கு வெற்றி கொடுப்பது அரண் எ - று.

காளிங்:— 'அவ்வரண் யாம் கொள்வேம்' என்று அதன் புறத்து வந்து சூழ்ந்துகொண்ட பற்றலரை முற்றும் வெற்றி யரசர் முன் கடாவியவர் வேய்வர, வரத்து ஆற்றி எவ்வாற்றானும் தன்னைப் பதியாகப் பற்றி வாழ்வோர் வெல்லுமாறு இருப்பது யாது? மற்று அதுவே அரணாவது எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பற்றின்கண்ணே என விரியும். வெல்வது என்பது, உடையார் தொழிலின்மேல் நின்றது.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— 'வெல்வது அரண்' என்பது வினைமுற்றுப்பெயர் கருவிப்பொருள் ஏற்றுவந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 83.)

குறிப்பு:

இக்குறளுக்கு மணக்குடவர் 'புறத்தாரைச் சூழ்ந்து நொந்த அகத்தாரைக் காக்கவல்ல வீரர்கள் வெல்ல இடந்தருவது அரண்' எனவும், பரிப்பெருமாள் புறத்தே முற்றுகையிட்ட வீரர்களையும் மதிலையும் நெருங்கவிடாதே தாம் மதிற்றலையிருந்து வெல்ல வகைசெய்வது அரண்' எனவும் பரிதியார் 'உழிஞையார்க்கு அரிதாகி நொச்சியார்க்கு வெற்றிகொடுப்பது அரண்'' எனவும் காளிங்கர் 'அகத்தோரால் முன் ஏவப்பட்ட ஒற்றர்களை உள்ளேவரவிடுப்பதாய், புறத்தோரையும் வெல்லஇருப்பதுவே அரண்' எனவும் உரைப்பர். சிறந்த கருத்து தேர்ந்து தெளிக.

அகத்துவீரர், அரசனிடத்துப் பற்றுக்கொண்டு, முற்றுகையிட்டவர்கள் அனைவரையும் முடிய அழித்து வெல்வதேஅரண் என்பதும் ஆம்.

—தொகுப்பாசிரியர்

749. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறு எய்தி - போர்தொடங்கின அளவிலே பகைவர் கெடும்வண்ணம் அகத்தோர் செய்யும் வினைவேறுபாடுகளான் வீறுபெற்று, மாண்டது அரண் - மற்றும் வேண்டும் மாட்சியை உடையதே அரணாவது.

தொடக்கத்தில்கெட்டார், பின்னும் கூடிப் பொருதல் கூடாமையின், முனைமுகத்துச் சாய என்றார். வினை வேறுபாடுகளாவன பகைவர் தொடங்கிய போரினை அறிந்து எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதல் என்று இவைமுதலாய வினைகளுள் அதனைச் சாய்ப்பனசெய்தல். மற்றும் வேண்டும்மாட்சி என்றது புறத்தோர் அறியாமல் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கைவழி முதலாயின உடைமை.

மணக்:— முந்துற்றமுகத்தினையுடைய பகைவர் கெடும்படியாக வினை செய்யுமிடத்து வெற்றியெய்தி மாட்சிமைப்பட்டது அரணாவது எ - று.

அஃதாவது அட்டாலகமும் மதிற்பொறியும் முதலாயின மதில்தலையில் அமைத்தல்.

பரிப்:— இது மதில் தலையில் கருவிகள் அமைக்கவேண்டும் என்றது.

பரிதி:— எதிர்த்தபடை சயங் கொள்ளாமல் சாய்ந்துபோக அரணிருந்தார் வெற்றி கொள்வது அரண் எ - று.

காளிங்:— புறத்து அரசன் கடைப்புறத்துப் போர் தொடங்கிய அளவிலே தலை சாய்ந்து ஓடுமாறு அகத்தோர் இயந்திரம் முதலிய கல்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும் வில் பொறியும் வேலும் வெந்நீவட்டும் காய்ச்சிய மணலும் கவவும் இருப்பு உலக்கையும் வீச்சுறு தூண்டிலும் விசைத்தெறி கவணும் ஆகிய வினைத்தொழில் உடைய மாட்சிமைப் பட்டது யாது? மற்று அதுவே அரணாவது எ - று.

முனைமுகத்து என்பது கடைப்புறந்து வந்து போர் தொடங்கிய என்றது. வினைமுகத்து என்பது போர்த் தொழிலிடத்து என்றது. வீறு எய்தி என்பது விருப்பம் உற்று என்றது.

ஒப்புமைப்பகுதி :

“ மருங்குநீர்க் கிடங்கு வெள்ளிடை கான
மலையுற அகன்றுயர்ந் தரங்கொண்டு
ஒருங்குபல் பொறியும் அணிந்துபே ரிடத்தாய்
உறுசிறு காப்பினல் வீசர்
நெருங்குபல் பொருளும் தழுவிஎத் திறத்து
நேரலர் கொளப்படா தாகிச்
சுருங்கையா திகளும் பொதிந்தகத் துறைவோர்
தொழிலினி தாற்றுவ தரணே.” —விநா. அரசி. 120.

குறிப்பு:

முனை–முகம் - என்பன ஒருபொருட்பன்மொழி. ஈண்டு முன்னது போரின் துவக்கத்தையும் பின்னது இடத்தையும் காட்டிற்று. வினைமுகம் - போர்த்தொழிலின் வேறுபாடுகள். அட்டாலகம் - கோபுரம், மேல்வீடு.

—தொகுப்பாசிரியர்

750. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் *இல்ல தரண். (௫௦)

உரைப்பகுதி :

பரிமே:— அரண் - அரண், எனைமாட்சித்து ஆகியக்கண்ணும் - மேற்சொல்லப்பட்ட மாட்சியெல்லாம் உடைத்தாயவிடத்தும், வினைமாட்சி இல்லார்கண் இல்லது - வினைசெய்தற்கண் மாட்சியில்லாதார்மாட்டு அவை இலதாம்.

வாளா இருத்தலும் அளவறியாது செய்தலும் ஏலாதது செய்தலு மெல்லாம் அடங்க வினைமாட்சியில்லார் என்றும், ஏற்ற வினையை அளவறிந்து செய்து காவாக்கால் அம்மாட்சிகளால் பயனின்றி அழியும் என்பார் அவையுடைத்தன்று என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டானும் காப்பாரையின்றி அமையாது என்பது கூறப்பட்டது.

மணக்:— சொல்லப்பட்ட எல்லா மாட்சிமையும் உடைத்தாயி னும், வினையின்கண்மாட்சிமை இல்லாதார்மாட்டு அரணால் பயனில்லை எ - று.

இது வினைவல்லாரும் வேண்டும் என்றது.

பரிதி:— அரண் எத்தனை வலிக்கை உண்டாகிலும் சாதுரியவான் இல்லாத அரண் அரணல்ல எ - று.

காளிங்:— கீழ்ச் சொன்னவும் பிறவும் ஆகிய எனைத்து வகைப்பட்ட மாட்சிமை உடைத்தாகிய இடத்தும், புறத்தவர் திறத்துப் பொழுதோறும் வேறுபடச் செய்யும் வினையினது மாட்சிமை இல்லாதார் மாட்டு நில்லாது அரண்: எனவே அவ்வினைகள் ஆங்கு ஆங்குச் செய்து தெவ்வரை ஓட்டும் திறன் இல்லாதார்கண் உளதேனும் அழிந்துவிடும் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"குன்றவில்லி காத்தருளும் கூடலரணேயன்றி
நின்ற உளவெனினும் நிற்குமோ - என்றும்." —முதுமொழி. 117.

---

* 'நில்லாது அரண்' காளிங்கர் பாடம். 'இல்லை அரண்' மணக்குடவர் பாடம்.

"வல்லதிகன் தன்னரணம் வான்வளவன் சேனைசெலத்
தொல்லைவலி மாண்டதே சோமேசா - நல்ல." —சோமேசர். 75.

"காத்தா னசலக் கருணா கரன்கலிங்கம்
சேர்த்தான் திறத்தில் சிவசிவா - பார்த்தால்." —சிவசிவ. 75.

"சிந்துவிடை ஏழுமதிள் சேர்ந்த இலங்கைநகர்
எந்தவகை போய திரங்கேசா - முந்தும்." —இரங். 75.

"நம்மாரூர் செய்புன் னகையில்வெந்த வேயசுரர்
மும்மதிலும் மேனாள் முருகேசா - அம்ம." —முருகேசர். 75.

குறள்வைப்புமுறை

பரிமே:— ஆற்றுபவர், மணிநீரும், உயர்வகலம், சிறுகாப்பின், கொளற்கரிதாய், எல்லாப்பொருளும், முற்றியும், முற்றாற்றி, முனைமுகத்து, எனைமாட்சி.

மணக்:— ஆற்றுபவர், மணிநீரும், உயர்வகலம், முனைமுகத்து, சிறுகாப்பின், கொளற்கரிதாய். எல்லாப்பொருளும், முற்றியும், எனைமாட்சி, முற்றாற்றி.

பரிதி:— கொளற்கரிதாய், மணிநீரும், எல்லாப்பொருளும், சிறுகாப்பின், முனைமுகத்து, முற்றாற்றி, ஆற்றுபவர், எனைமாட்சி, முற்றியும், உயர்வகலம்.

காளிங்:— கொளற்கரிதாய், முற்றியும், முற்றாற்றி, முனைமுகத்து, ஆற்றுபவர், எனைமாட்சி, சிறுகாப்பின், உயர்வகலம், மணிநீரும், எல்லாப்பொருளும்,

76. பொருள் செயல்வகை.

தொகுப்புரை:

[ஒருபொருளாக மதிக்கப்படாதவரையும் எல்லாரும் மதிக்கச்செய்வது பொருளே; ஆதலால் பொருளே பொருளாவது. வறியாரை எல்லாரும் இகழ்வர்; செல்வரை எல்லாரும் சிறப்புச்செய்வர். செல்வம் என்னும் தேயாத விளக்கு எண்ணிய தேசங்களெல்லாம் சென்று இருள்கெடுக்கும். அறவழி ஈட்டியபொருள் அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும். அருளைக்கொடுத்து அன்பைக்கொண்டு அதனால் ஆக்கப் படாத பொருள்களை அரசர் அணுகலாகாது; நீக்குதல்வேண்டும். உரிமையாளரின்றி வந்த பொருளும் சுங்கப்பொருளும் கப்பப்பொருளும் அரசனுக்குரிய பொருள்கள். அன்பின் குழந்தையாகிய அருள், பொருள் என்னும் செவிலியாலேயே வளரும். கைமுதல்கொண்டு தொடங்கிய தொழில் மலையின்மேல் ஏறி யானைப்போர் கண்டாற் போலும். பகைவரது செருக்கை அடக்கும் கூரிய படை பொருளாதலின் பொருளையே மிகுதியாகத்தேடுக. நல்வழியில் பொருளை ஈட்டியவர்கட்கு அறனும் இன்பமும் தானே வந்துசேரும்]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரணானும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின்திறம் இவ்வதிகாரத்தால் கூறுகின்றார்.

மணக்:— பொருள்செயல் வகையாவது பொருள் தேடுமாறும் அதனால்பயன் கொள்ளுமாறும் கூறுதல். இது மேற்கூறிய நாடும் நகரமும் உடையார்க்கு உளதாவதொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— பொருள் செயல் வகையாவது மூன்று வகைப் பொருள் தேடும் முறைமை சொல்வது எ - று.

751. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். (க)

உரைப்பகுதி:

பரிமே:— பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது - ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச் செய்ய வல்ல பொருளை யொழிய, பொருள் இல்லை - ஒருவனுக்குப் பொருளாவது இல்லை.

மதிக்கப்படாதார் - அறிவிலாதார், இழிகுலத்தார். இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மதிக்கப்படுவாராகச் செய்தல் அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற்சென்று நிற்கப்பண்ணுதல். அதனால் ஈட்டப்படுவது அதுவே பிறிதில்லை என்பதாம்.

மணக்:— ஒரு பொருளாக மதிகப்படாதாரையும் பொருளாக மதிக்கப் பண்ணுவதாகிய பொருளையல்லது வேறு பொருள் என்று சொல்லப்படுவது இல்லை எ - று.

இது வடிவில்லாதாரைப் பெண்டிர் இகழ்வார்; பொருளுடையாரை யாவரும் நன்றாக மதிப்பர் என்றது.

பரிப்:— மேல் இன்பம் எளிதாக வரும் என்றார்; அஃது எளிதாக வரும் ஆறு என்னை? வடிவு இல்லாதாரைப் பெண்டிர் இகழ்வர் ஆதலின், நன்னெறி உற்றார்க்குப் பொருள் உடையாரை யாவரும் நன்கு மதிப்பர் என்று கூறப்பட்டது.

பரிதி:— ஒரு பொருளும் அற்றாரை அநேகம் பொருளாகச் செய்யவல்லது பொருளல்லது வேறு பொருள் இல்லை எ - று.

காளிங்:— சத்துருக்களையும் மித்துருக்களையும் தமக்கு உறுதி பண்ணிக் கொடுக்கும் பொருளானது இது அன்றிப், பொருளாக மதிக்கலாவது ஒன்றும் இல்லை எ - று.

இனி இவ்வாறு அன்றிக் குலத்தில் இழிவாகியாரையும், உறுதி இல்லாதாரையும் யாவரும் மதிக்கப்பண்ணும் என்று உரைப்பினும் ஆம்.

ஒப்புமைப்பகுதி:

"பொருளல்லாற் பொருளும் உண்டோ." —கலி. 14 : 10.

"வென்றி யாக்கலும் மேதக வாக்கலும்
அன்றி யும்கல்வி யோடழ காக்கலும்
குன்றி னார்களைக் குன்றென வாக்கலும்
பொன்றும் சாகத்தி னுய்பொருள் செய்யுமே." —சீவக. 1922.

"அளப்பரும் விஞ்சையே அன்றி மேன்மையும்
உளப்படு தன்மையும் உயர்ந்த சீர்த்தியும்
கொளப்படு கொற்றமும் பிறவும் கூட்டலால்
வளத்தினிற் சிறந்தது மற்றொன் றில்லையே." —கந்த. மாயையுப. 12.

"பூரியர் தமைவேங் தாக்கும் புவிபுரப் பிக்கும் துய்க்கும்
சீரிய உண்டி சேர்க்கும் தேவர் தம் உலகம் போக்கும்
காரியம் அனைத்தும் கூட்டும் கருதலர் தம்மை வாட்டும்
கூரிய திதன்மே லில்லை கொழும்பொனீர் கொண்மின் என்றார்.
—கம்ப. அசுவமேத. 266.

"குலம்தரும் கல்வி கொணர்ந்து முடிக்கும்
அலந்த வினைகள் அழிபசி நீக்கும்
நிலம்பக வெம்பிய நீள்சுரம் போகிப்
புலம்பில் பொருள்தரப் புன்கண்மை உண்டோ" —வளையா.

"பணம் பந்தியிலே குலம் குப்பையிலே" —பழ

"பணம்உண்டானால் மனம்உண்டு." —ஷை.

முதுமொழிவெண்பாக்கள்:

"வில்விமத னைத்தனதன் வென்றானோர் மாதினால்
வல்லதுபொன் னேதிரும லைக்கொழுந்தே - செல்லப்" —திருமலைக்

குறிப்பு:

பொருள்; நன்கு மதிக்கப்படும் பொருள். நன்மதிப்பு அறிவாலும் குலத்தாலும் இருக்குமாயினும் அதனை விளக்கம் காணுவது பொருளே என்பதாம்.
—தொகுப்பாசிரியர்.

752. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— இல்லாரை எல்லாரும் எள்ளுவர் - எல்லா நன்மையும் உடையராயினும் பொருளில்லாரை யாவரும் இகழ்வர், செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்வர் - எல்லாத்தீமையும் உடையராயினும் அஃது உடையாரை யாவரும் உயரச்செய்வர்.

உயரச்செய்தல்: தாம் தாழ்ந்து நிற்றல். இகழ்தற்கண்ணும் தாழ்தற்கண்ணும் பகைவர், நட்டார், நொதுமலர் என்னும் மூவகையாரும் ஒத்தலின், யாவரும் என்றார். பின்னும் கூறியது அதனை வலியுறுத்தற் பொருட்டு.

மணக்:— பொருளில்லாதாரை எல்லாரும் இகழ்வர்; பொருளுடையாரை எல்லாரும் சிறப்புச் செய்வர் எ - று.

இது சிறப்பெய்துதலும் பொருளுடைமையாலே வரும் என்றது.

பரிதி:— பொருளற்றாரை எல்லாரும் இகழ்வர்; செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு எ - று.

காளிங்:— கைப்பொருள் இல்லாதாரை யாவரும் இகழ்வர்: கைப்பொருள் உடையோரை யாவரும் இன்பம் உற்றுச் சிறப்புச் செய்வார்கள் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"அருளுடை யாருமற் றல்லா தவரும்
பொருளுடை யாரைப் புகழா தார் இல்லை
பொருபடைக் கண்ணாய் அதுவால் திருவுடையார்
பண்டம் இருவர் கொளல்." —பழ-நா.

"கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்." —நல்வழி. 34.

"இன்சொல்லன் தாழ்நடையன் ஆயினும்ஒன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா - என்சொலினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடன்ஞாலம்
பித்துடைய அல்ல பிற." —நீதிநெறி. 11.

"பட்டாங்குத் தூயர் பழிச்சற் குரியராய்
ஒட்டின் றுயா உலகத்தோர்—கட்டளை
யாம்வெறுக்கை இன்றி அமையாராம் அஃதிலார்
ஆம்வெறுக்கை நிற்கும் உடம்பு" —இன். 19.

"செல்வர்க்கே சிறப்புச் செய்யும் திருந்துநீர் மாந்தர்போல
அல்குற்கும் முலைக்கும் ஈந்தார் அணிகலமாய எல்லாம்." —சீவக. 2535

"ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்." —பழ.

"கையிலுண்டானால் காத்திருப்பர் ஆயிரம்பேர்" —ஷை.

" ... ...எந்நாளும்
இல்லாரை எல்லாரும் எள்குவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பென்னும்—சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து—நல்கூர்
இடைஇடையே உள்ளுருகக் கண்டாள்....." —திரு. உலா. 135 - 137.

முதுமொழிவெண்பாக்கள் :

"காடுமலை நாடும் கடலோடி யும்பொருளைத்
தேடவே வேண்டும் தினகரா — நாடுங்கால்." —தினகர. 79.

"திகம்பரர்க்கு நஞ்சைத் திருமகளைப் பீதாம்
பரதரர்க் கீயும் பயோதி - நிரந்தரமும்." —முதுமொழி. 119.

"நட்டுவனும் பற்குணனூர் நாடாளக் கண்டுதிசை
எட்டும் பணிந்த திரங்கேசா—கிட்டுபொருள்." —இரங். 76.

குறிப்பு:

எல்லாரும் என்பன இரண்டனுள் முன்னதில் தாயும் மனைவியும் அடங்குவர். பின்னதில் பகையாவாரும் நொதுமலரும் அடங்குவர்.

—தொகுப்பாசிரியர்.

753. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. (ந.)

உரைப்பகுதி:

பரிமே:— பொருள் என்னும் பொய்யாவிளக்கம் - பொருளென்று எல்லாரானும் சிறப்பிக்கப்படும் நந்தாவிளக்கு, எண்ணிய தேயத்துச் சென்று இருள் அறுக்கும் - தன்னைச் செய்தவர்க்கு அவர் நினைத்த தேயத்துச் சென்று பகை என்னும் இருளைக் கெடுக்கும்.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல்பற்றிப் பொய்யாவிளக்கம் என்றும், ஏனை விளக்கொடு இதனிடை வேற்றுமை

தோன்ற எண்ணிய தேயத்துச்சென்று என்றும் கூறினர். ஏகதேச வுருவகம். இவை மூன்று பாட்டானும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— பொருளென்னும் மெய்யாகிய ஒளி, எண்ணப்பட்ட தேசமெல்லாவற்றினும் சென்று பகையென்னும் இருளை அறுக்கும் எ-று.

பரிப்:— இருள் ஆவது ஒளி இல்லாத இடம். பொருள் உண்டாகப் புகழ் உண்டாம்; புகழ் உண்டாக ஒளி எங்கும் பரக்கும் என்றது. அரசன் பொருள் உடையன் ஆயின் தான் கருதின தேயம் எல்லாவற்றினும் தன் ஆணை நடக்கும் என்றும் ஆம்.

பரிதி:— அகத்திலிட்ட விளக்கு அகத்திருளை ஓட்டும், தனம் என்கின்ற விளக்கு தான் இருந்த தேசத்தில் சத்துரு என்னும் இருளை ஓட்டும் எ-று.

காளிங்:— நெறியினல் ஈட்டிய பொருள் என்று சொல்லப்படுகின்ற கெடாத விளக்கானது பிறவியில் இனிய மறுமை உலகமும் பிறவி நீங்கிய மூத்தியும் தாம் கருதிய வண்ணம் பெறலாவதும் செய்து, கொலை களவு கள் காமம் பொய் சினம் சூது முதலியவற்றில் செல்லுகின்ற அறியாமையாகிய இருளைநீக்கி நன்மை பயக்கும் எண்ணிய தேயத்து எய்துமாறு எ-று.

ஒப்புமைப்பகுதி:

" உடைமையுறு நீட்டல் உறுதுணையாம் யாண்டும்
உடைமையராச் சென்றக்கால் ஊரெல்லாம் சுற்றம்
உடைமைக்கோல் இன்றங்குச் சென்றக்கால் சுற்றம்
உடையவரும் வேறு படும்." —இன். 12.

குறிப்பு:

பொருள் என்னும் பொய்யாவிளக்கு என்பது உபசார வழக்கு. அழிதல் மாலைத்தாய செல்வத்தை, பொய்யா விளக்கு என்றது செத்துப் பிறக்கும் தேவர்களை அமரர்கள் என்றதுபோலாம். செல்வத்தின் இன்றியமையாமைபற்றி இவ்வாறு உபசரிக்கப்பட்டது.

இருள் - அறியாமையும் பகைமையும். விளக்கு இருள் அறுப்பது இருந்த இடத்து; பொருள் எண்ணிய எண்ணிய தேயங்களெல்லாம் சென்று; என வேற்றுமை விளக்கிகின்றது காண்க. பரிமேலழகர் உரையுள் ஏகதேசஉருவகம் என்ற குறிப்பு காணப்படுகிறது. இக்குறளில் பொருள் பகை என்பன இரண்டும் உபமேயங்கள்.

விளக்கு இருள் என்பன இரண்டும் உபமானங்கள். பொருள் என்னும் பொய்யா விளக்கம் என உருவகித்த ஆசிரியர் பகை என்னும் இருள் எனக் கூறுது இருள் என்றுமட்டும் கூறினர். ஆதலால் இஃது ஏகதேச உருவகமாகாது. உவமைக்கும் பொருளுக்கும் வேற்றுமை தோன்றுது உருவகிக்குமிடத்து உவமையும் பொருளையும் நிரலே நிறுத்தி உருவகிப்பதும், உவமையைப் பொருளாகக் கூறுவதும் என இருமரபு மேற்கொள்ளப்படும். இக்குறளில் இரண்டும் வந்துள்ளமையின் முற்றுருவகமே.

—தொகுப்பாசிரியர்.

754. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். (ச)

உரைப்பகுதி:

பரிமே:— திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள் - செய்யுந் திறத்தினை அறிந்து அரசன் கொடுங்கோன்மையிலனாக உளதாயபொருள், அறன் ஈனும் இன்பமும் ஈனும் - அவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்.

செய்யுந்திறம் - தான் பொருள்செய்தற்குரிய நெறி: இலனாக என்பது இன்றி எனத் திரிந்து நின்றது. செங்கோலன் என்று புகழப் படுதலானும் கடவுட்பூசை தானங்களால் பயன் எய்தலானும் அறன் ஈனும் என்றும், நெடுங்காலம் நின்று துய்க்கப்படுதலான் இன்பமும் ஈனும் என்றும் கூறினர். அதனன் அத்திறத்தான் ஈட்டுக என்பதாம்.

மணக்:—அறத்தையும் தரும், இன்பத்தையும் தரும்; பொருள் வரும் திறமறிந்து, பிறர்க்குத் தீமை பயத்தலின்றி வந்த பொருள் எ - று.

இது பொருளால் கொள்ளும் பயன் அறஞ்செய்தலும் இன்பம் நுகர்தலும் அன்றே; அவ்விரண்டினையும் பயப்பது நியாயமாகத் தேடிய பொருளாமாதலின் என்றது.

பரிதி:— தன்மமும் இன்பமும் கொடுக்கும் தீதின்றி வந்தபொருள் எ - று.

காளிங்:— அறத்தையும் தரும்: அறத்தினல் வழுவாத இன்பத்தையும் தரும்; யாது எனின்? நெறியினல் ஈட்டிய வேறு ஒரு குற்றம் இன்றி வருதலுற்ற பொருளானது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்." —நாலடி. 114.

"ஐயமில்லை இன்பம்அற னோடவையும் ஆக்கும்
பொய்யில் பொருளே பொருள் மற்றல்ல பிறபொருளே" —சீவக. 497.

"பழியில் நீங்கிநன் கிட்டிய பசும்பொருள் சிறிதும்
கழிப டாதுநல் வழிப்பயன் படுவது கடுப்பக்
கொழிதி ரைச்சுவைப் பாலியின் குளிர்புனல் முழுதும்
வழுவு றாதுகால் வழிச்சென்று வளவயல் நிரைக்கும்"
—காஞ்சி. நாட்டுப். 70.

முதுமொழிவெண்பாக்கள்:

"தந்தைபொருட் டெந்தைபிரான் சம்பந்தர்க் கீந்தகிழி
நந்திப் பயனைத்து நல்கிற்றே - முந்தும்" —முதுமொழி. 118.

குறிப்பு:

தீயநெறியான் வந்த பொருள் அறத்திற்கு ஆக்கப்படின் தீமை இவன் மேலும் அறப்பயன் பொருளுடையார்மேலும் சாருமாகலின் தீதின்றி வந்தபொருளை அறன் ஈனும் என்றார். இன்பம் நுகர்கின்ற காலத்தும் பொருள்வந்த வழியையும் பிறர் கூறும் பழியையும் எண்ணிக் கவல்வான் ஆகலின் தீதின்றி வந்த பொருள் என்றார். —தொகுப்பாசிரியர்.

755. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம் - தாம் குடிகள்மாட்டுச் செய்யும் அருளோடும் அவர் தம்மாட்டுச் செய்யும் அன்போடுங்கூடி வாராதபொருளீட்டத்தை, புல்லார் புரளவிடல் - அரசர் பொருந்தாது கழியவிடுக.

அவற்றோடு கூடிவருதலாவது ஆறியொன்றாய்வருதல். அவ்வாறு வாராத பொருளீட்டம் பசுமட்கலத்துள் நீர்போலச் செய்தானையுங் கொண்டு இறத்தலின், அதனைப் புல்லார் என்று ஒழியாது புரளவிடல் என்றும் கூறினார்.

மணக்:— அருளுடைமையோடும் அன்புடைமையோடும் வாராத பொருளால் வரும் ஆக்கத்தைப் பொருந்தாது போக விடுக எ - று.

இது பொருள் தேடுங்கால் பிறர் வருத்தத்திற்கு உபகரியாதும், பயின்றோர்மாட்டுக் காதலில்லாமலும், பொருள் தேடுதலைத் தவிர்க என்றது.

பரிதி:— அருளும் அன்பும் இல்லாமல் கொடுமையினால் வந்த பொருள் கொடுமையினாலே போம் எ - று.

காளிங்.— இப்படி நெஞ்சத்து அன்போடும் நல்ல அருளோடும் மருவி வாராத பொருளினது ஆக்கத்தை எஞ்ஞான்றும் பொருந்தாராய் நழுவவிடுக எ - று.

ஒப்புமைப்பகுதி:

"அருளும் அன்பும் நீங்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோ ராயின்
உரவோர் உரவோ ராக." —குறுந். 20.

குறிப்பு:

இக்குறளுக்கு அருளும் அன்பும் கலந்ததான பொருளே அரசரால் கொள்ளத்தக்கது எனக் கருத்துரைப்பாரும் உளர். குடிகளின் பஞ்சமும் வறுமையும் உணர்ந்து செலுத்தப்படும் அருளும், இன்னார் இன்னமுறையர் எனச் செலுத்தப்படும் அன்பும் செல்வத்தைக் கொள்ளுமா கொள்ளச்செய்யும். அங்ஙனம் வாராப்பொருள் உட்பகையையும் வெறுப்பையும் விளைத்தலின் நீக்குக என்றார்.

—தொகுப்பாசிரியர்.

756. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். (சு)

உரைப்பகுதி:

பரிமே:— உறுபொருளும் - உடையார் இன்மையின் தானே வந்துற்ற பொருளும், உல்கு பொருளும் - சுங்கமாகிய பொருளும், தன் ஒன்னார்த் தெறு பொருளும் - தன் பகைவரைத் திறையாகக்கொள்ளும் பொருளும், வேந்தன் பொருள் - அரசனுக்கு உரிய பொருள்கள்.

உறுபொருள் - வைத்தார் இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின் கண் கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறாததூஉம் ஆம். சுங்கம் - கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது. தெறு பொருள் - தெறுதலான் வரும் பொருள் என விரியும். ஆறிலொன் றொழியவும் உரியன கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் அஃது ஈட்டும் நெறி கூறப்பட்டது.

மணக்:— *தானே வந்துற்ற பொருளும், ஆயத்தால் வரும் பொருளும், தன் பகைவரை அடர்த்துக்கொண்ட பொருளும் அரசனுக்குப் பொருளாம் எ - று.*

பரிப்:— *உறுபொருள் - கால் அற்ற பொருள். மேல் நியாய மாகத் தேடவேண்டும் என்றார்: இவை நியாயமோ என்று ஐயுற்றாற்கு அரசற்கு நியாயம் என்று கூறப்பட்டது.*

பரிதி:— *குடிக்கடமையும் சுங்கமும் சத்துருக்கள் திறையிடும் பொருளும் அரசன் பொருள் எ - று.*

காளிங்:— *நாடு இறுக்கும் முறைமையின் பெறும் பொருளும், நீரினும் நிலத்தினும் வருவனவற்றுள் தனக்கு உளவாம் சுங்கப்பொருளும், தன் பகைவரைத் திறை வாங்கிக்கொள்ளும் பொருளும் எல்லாம் வேந்தனுக்கு நெறியின் வரும் பொருள் எ - று.*

இனி அரசர்க்குப் பொருள் ஈட்டம் உண்டாய இடத்தும் படை இடம் இல்லையாயின் பகைவரை வெல்லற்கு அரிது ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— *உறுபொருள் - நெடுங்காலம் நிலத்திற்கிடந்து பின் கண்டெடுத்ததும் தாயத்தார் பெறாததும் என்க. உல்குபொருள் - சுங்கப் பொருள். தெறுபொருள் - பகைவரைவென்ற திறை.*

மேற்கோள்பகுதி:

இளம்:— *பொருளாவது நாடும், பொருளும், அரணும் அமைச்சும், நட்பும், படையும் எனக்கூறி, பொருள் என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75.)*

ஒப்புமைப்பகுதி:

" கால்கலத்தால் சேர்பொருளும் கண்ணற்றார் தேர்பொருளும்
நாலிரண்டால் கூடும் நலப்பொருளும் - கோல்தாங்கிக்
கோடும்அரசிற் குரியாமே தொல்புவிக்கீழ்
ஆடும் பொருளோ டணைந்து." —இன். 17.

" மறுக்கும் செயல்நீத்து நடக்கையின் வையத் தோரை
ஒறுக்கும் பொருளும் பணிகேட்கையின் ஒன்ன லாரைச்
செறுக்கும் பொருளும் கவரார்வினை செல்வ மாக்கள்
இறுக்கும் பொருளே இறைவர்க்குஇவர் ஈட்டும் செல்வம்."
—திருவிளை. பன்றி. மந்திரி. 16.

" வேந்தர் வாங்கும் பொருள்கோள் வகைமூன்றே." —தமிழ். 77.

" அருள்கொடு புரக்கப் படும்குடி அன்போ
டளித்திடும் ஆறினி லொன்றும்
இருநிலத் தெடுத்த பழம்பொரு ளுரிமை
யின்றியே இறந்தவர் பொருளும்
மருவிய சுங்கப் பொருளுமொட் டலரை
மாட்டிய பொருளும்ஈட் டுகஇப்
பொருளறம் இன்பம் புகழ்தரும் பகையைப்
புரட்டும்எவ் வினைகளும் முடிக்கும்." —விநா. அரசி. 121.

குறிப்பு:

நாட்டு வருமானம் முழுதும் அரசற்கே உரியதாயினும் அரசனது சொந்தச் செலவிற்கு உரியபொருள்கள் இந்த மூன்றுமே என்பதாம். குடிகளிடம் வரியாக வசூலித்தது குடிகளுடைய நன்மைக்கே செலவிடப்படும் என்பது குறிப்பு.

தொகுப்பாசிரியர்.

757. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— அன்பு ஈன் அருள் என்னும் குழவி - அன்பினால் ஈனப்பட்ட அருளென்னும் குழவி, பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு - பொருள் என்று உயர்த்துச் சொல்லப்படும் செல்வத்தை உடைய செவிலியான் வளரும்.

தொடர்புபற்றாதே வருத்த முற்றார்மேல் செல்வதாய அருள் தொடர்புபற்றிச் செல்லும் அன்பு முதிர்ந்துழி உளதாவதாகலின் அதனை அன்பின் குழவி என்றும், அது வறியார்மேற் செல்வது அவ்வறுமை களையவல்லார்க்கு ஆதலின் பொருளை அதற்குச் செவிலி என்றும், அஃது உலகிற் செவிலியர்போலாது தானே எல்லாப்பொருளும் உதவி வளர்த்தலின் செல்வச்செவிலி என்றும் கூறினர்.

மணக்:— அறம் செய்தற்குக் காரணமாகிய அன்பினின்றும் தோன்றிய அருளாகிய குழவி, பொருள் என்று சொல்லப்படும் செல்வத்தையுடைய செவிலித்தாய் வளர்த்தலாலே உண்டாம் எ - று.

இது பொருளுடையார்க்கே அறஞ்செய்தலாவதென்பது கூறிற்று.

பரிப்:— மேல் பொருள் உடையாற்கு அறம் எளிது என்றார்: இது பெறுமாறு என்னை என்றார்க்கு அன்பும் அருளும் இயல்பாக உடையர் ஆயினும் பொருளிலர் ஆயின் அவற்றால் பயன் இல்லையாம்: ஆதலால் பொருள் உடையாற்கே அறம் செய்யலாவது என்று கூறப்பட்டது.

பரிதி:— அன்பு என்னும் கற்பினுள் பெற்ற அருள் என்னும் குழவியைப் பொருள் என்னும் செவிலித்தாய் வளர்க்கவேண்டும் எ - று.

காளிங்:— இவ்வருள் என்று சான்றோரால் சொல்லப்படுகின்ற அனைத்து உயிர்க்கும் ஒத்தது ஓர் அன்பு ஈன் குழவியானது பின்பு பொருள் என்று சொல்லப்படுகின்ற செல்வம் யாது: மற்று அந்தச் செவிலித்தாயால் உளதாம் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"மண்ணீர் உடையார் வழங்கிச் சிறுகாலைத்
தண்ணீரார் சாரும் நிலம்சார்வர்—உண்ணீர்
அறியின் அருஞ்செவிலி மாண்பொருளே வெள்நீர்ச்
சிறியரையும் ஏர்ப்படுத்தும் செய்" இன். 13.

முதுமொழிவெண்பாக்கள்:

"நடங்கழியார் அன்பருக்கே நற்பொருள்கள் எல்லாம்
இடங்கழியார் அன்பினெடுத் தீந்தார்—முடங்கா." —திருத். 70.

758. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்(று)
உண்டாகச் செய்வான் வினை. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— தன்கைத்து உண்டாக ஒன்றுசெய்வான் வினை - தன் கையதாகிய பொருளுண்டாக ஒருவினையை எடுத்துக்கொண்டான் அதனைச் செய்தல், குன்று ஏறி யானைப்போர் கண்டற்று - ஒருவன் மலைமேல் ஏறிநின்று யானைப்போரைக் கண்டாலொக்கும்.

ஒன்று என்பது வினையாதல் செய்வான் என்றதனால் பெற்றாம். குன்றேறியான் அச்சமும் வருத்தமும் இன்றி நிலத்திடை யானையும் யானையும் பொரு போரைத் தான் இனிதிருந்து காணுமதுபோலக் கைத் துண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமும் இன்றி வல்லாரை ஏவித் தான் இனிதிருந்து முடிக்கும் என்பதாம்.

மணக்:— குன்றின்மேல் ஏறியிருந்து, யானையோடு யானை போர் செய்தலைக் கண்டாற் போலும்; தன் கையகத்து எய்தியபொருளுண்டாக ஒரு வினையை யெடுத்துக்கொண்டு தொடங்கினவன் செய்யும் வினை எ - று.

இது பொருளுடையார் தாம் வருந்தாமல் பிறரை வினைசெய்வா ராக ஏவி வினைக்கண் விட்டிருக்கலாம் என்றது.

பரிதி:— மலையின் உச்சியிலேறி யானைப்போர் பார்த்தற்கு ஒக்கும், தன் கையில் பொருள்கொண்டு மாற்றாரை வெல்கை எ - று.

காளிங்:— தான் குன்றின்மீது ஏறிப்போய் இனிது இருந்து நிலத்துப் பொருகின்ற யானைப் போரினை அஞ்சாது கண்டு இன்புறாஉம் அத்தன்மைத்து: யாது எனின் தன்மாட்டு ஒருபொருள் உளதாகச் செய்துகொள்பவனது வினையும் எ - று.

எனவே பாவமும் பகையும் தன்னை நணுகாமல் பரிகரித்து இனிது வாழும் பொருளுடையோன் என்பது பொருளாயிற்று என அறிக.

மேற்கோள்பகுதி:

யா - வி— வெண்சீரொடு வெண்சீர் ஒன்றிவந்த சிறப்புடை வெண்சீர் வெண்டளைக்கு மேற்கோள் (சூ. 18.)

சொல்வேறுபடுதலால் இரட்டைத் தொடையாகாது என்பர். (சூ. 51.) அல்கிட்டு ஓசை யூட்டுதற்கு மேற்கோள். (சூ. 57.)

முதுமொழிவெண்பாக்கள்:

" உக்கிரனார் மேருவைவென் ளுண்ணிதியம் பெற்றமையால்
தொக்ககுடி காத்தனர்காண் சோமேசா - மிக்குயர்ந்த."
—சோமேசர். 76.

" மன்னுநிதி பெற்றகுல பூடணனுன் மல்கினவே
முன்னுமற மெல்லா முருகேசா - துன்னியதோர்." —முருகேசர். 76.

759. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனின் கூரிய தில் (க)

உரைப்பகுதி:

பரிமே:— பொருளைச் செய்க - தமக்கு ஒன்று உண்டாகக் கருதுவார் பொருளை உண்டாக்குக; செருநர் செருக்கு அறுக்கும் எஃகு - தம் பகைவர் தருக்கினை அறுக்கும் படைக்கலம் அதுவாம்; அதனின் கூரியது இல் - அதற்கு அதுபோலக் கூரிய படைக்கலம் பிறிதில்லை.

அதுவாம், அதற்கு என்பன அவாய்நிலையான் வந்தன. பொருளைச் செய்யவே பெரும்படையும் நட்புமுடையராவர், ஆகவே, பகைவர் தருக்கொழிந்து தாமே அடங்குவர் என்பார் செறுநர் செருக்கறுக்கும் எஃகு என்றும், ஏனை எஃகுகள் அதுபோல அருவப்பொருளை அறுக்க மாட்டாமையின் அதனின் கூரியது இல் என்றும் கூறினார்.

மணக்:— பொருளையுண்டாக்குக; பகைவரது பெருமிதத்தை அறுக்கலாங் கருவி, அப்பொருள்போலக் கூரியது பிறிது இல்லை எ - று.

இது பொருளீட்டல் வேண்டும் என்றது.

பரிதி:— அரசன் பொருளையே தேடுவான்; சத்துருக்கள் என்னும் காட்டை வெட்டுதற்கு அதுபோலும் ஆய்தம் இல்லை எ - று.

காளிங்:— நெறியினால் இயற்றி ஈட்டுக பொருளை: என்னை எனின் வேந்தராயினும் பகைவரை வெல்லும் கருவியானது இதனின் கூரியது பிறிது இல்லை: அதனால் பொருள் வழங்கச் செறுநர் சினம் தணிந்து பெரிதும் இனியர் ஆவர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"செறுவோர் செம்மல் வாட்டலும் சேர்ந்தோர்க்கு
உறுமிடத்து உவக்கும் உதவி யாண்மையும்
இல்லிருந் தமைவோர்க்கு இல்லென்றெண்ணி
... ... வெஞ்சுரம் இறந்தனர்." —அகம். 231

"பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்.........தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநம் காதலர்." —கலி. 11 : 2 - 4.

"செற்றாரைச் செறுத்தலின் தற்செய்கை சிறந்தன்று." -முதுமொழிக். 9.

"தெருளா தொழுகும் திறனிலா தாரைப்
பொருளால் அறுத்தல் பொருளே," —பழ - நா.

"செய்கபொருள் யாரும்செறு வாரைச்செறு கிற்கும் எஃகு பிறிதில்லை."
சீவக. 497.

"....................கருதலர் தம்மை வாட்டும்
கூரிய திதன்மே லில்லை கொழும்பொனீர் கொண்மின் என்றான்."
கம்ப. அசுவமேத. 266.

குறிப்பு:

பொருளைச் செருக்கறுக்கும் வாளாக உருவகித்த ஆசிரியர் அதனின் கூரியதில் லென்றது எஃகுக்கும் பொருளுக்கும் வேற்றுமை தோன்ற. ஈட்டி எட்டியமட்டும் பாயும் பணம் பாதாளமட்டும் பாயும் என்பது பழமொழியாகலின் எஃகினும் பொருள் கூரியதாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

760. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. (௬௦)

உரைப்பகுதி :

பரிமே:— ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு - நெறியான் வரும்பொருளை இறப்ப மிகப் படைத்தார்க்கு, ஏனை இரண்டும் ஒருங்கு எண்பொருள் - மற்றை அறனும் இன்பமும் ஒருங்கே எளிய பொருள் களாம்.

காழ்த்தல் - முதிர்தல். பயன்கொடுத்தல்லது போகாமையின் ஒண்பொருள் என்றும், ஏனை இரண்டும் அதன் விளைவாகலின் தாமே ஒருகாலத்திலே உளவாம் என்பார் எண்பொருள் என்றும் கூறினர். இவை நான்குபாட்டானும் அதனான் வரும் பயன் கூறப்பட்டது.

மணக்:— *ஒள்ளிய பொருளை முற்ற உண்டாக்கினார்க்கு ஒழிந்த அறனும் காமமுமாகிய பொருளிரண்டும் ஒருங்கே எளியபொருளாக எய்தலாம் எ - று.*

பரிப்:— *மேல் சில பொருள் உடையார்க்குப் பொருள் எய்துதல் வருந்தாமை வரும் என்றார்: அஃது அறமும் இன்பமும் வந்தால் எய்தல் ஆம் என்று கூறிற்று.*

பரிதி:— *நீதியினால் தேடும் பொருளினால் அறமும் இன்பமும் உண்டாம் எ - று.*

காளிங்:— *முறையின் வருவதுஆகிய பொருளினை முதிர ஈட்டினவர்க்கு முன்பு கூறிய அறமும் இன்பமும் என்று சொல்லப்பட்ட ஏனைய இரண்டும் ஒருதன்மைப்பட எய்தும் எ - று.*

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— *காழ்த்தல் - முதிர்தல்.*

மேற்கோள்பகுதி :

சிவஞான:— *"தோள்வலி கூறுவோர்க்கு அக்கூற்று, பொருளும் வீடும் பயக்கும் என்பதாயிற்று. ஆகவே பக்கட்கு உறுதிப்பயன் எனக் கூறப்படும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனுள் ஏனை அறமும் இன்பமும் பயவாபோலும் எனின்? அற்றன்று; 'ஒண்பொருள் ....ஒருங்கு' என்றதால் பொருள் பயத்தல் கூறவே ஏனை அறமும் இன்பமும் பயத்தல் கூறாமையே பெறப்பட்டது."* (கம்ப. விருத். பக். 17.

ஒப்புமைப்பகுதி :

*" அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்லம்."* —புறம். 28 : 15 - 16.

" அப்பொருள், துன்னுங் காலைத்துன் னாதன இல்லையே." —சீவக. 1923.

"பொருள்தனைப் போற்றிவாழ்." —ஆத்தி. 36.

"பொன்பொருட்டினால் யாவும் உண்டாம்."

—கந்த. மாயைப். 7.

முதுமொழிவெண்பாக்கள்:

"தென்புகலூர் ஈசரையும் சென்றுபணிந் தாரூரர்
பொன்புகலாப் பெற்றார் புகழ்பெற்றார் - இன்புற்றார்." —திருத். 68.

"கொண்டான் வடகிரியில் கூடல் அரசுபொருள்
செண்டால் அடித்தே சிவசிவா - தண்டாமல்." —சிவசிவ. 76.

குறிப்பு:

இக்குறளுக்கும் 'அறனீனும் இன்பமும் ஈனும்' என்ற குறளுக்கும் வேற்றுமை இன்றாயினும் பரிமேலழகர் இதனால் பொருளின் பயனும் அதனால் பொருள் ஈட்டும் நெறியும் கூறியவாறு என உரைத்தமையால் பொருள் செய்தற்கண் மேற்கொள்ளவேண்டியதை அந்தக்குறளும் எஞ்ஞான்றும் அழியாது நிலைத்திருக்கு மளவு இயற்றினார் எய்தும்பயனை இந்தக்குறளும் கூறினவென்னலாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— பொருளல்லவரை, இல்லாரை, பொருளென்னும், அறனீனும், அருளொடும், உறுபொருளும், அருளென்னும், குன்றேறி, செய்க, ஒண்பொருள்.

மணக்:— செய்க, அருளொடும், அறனீனும், உறுபொருளும், குன்றேறி, ஒண்பொருள். அருளென்னும், பொருளல்லவரை, பொருளென்னும், இல்லாரை.

பரிதி:— அறனீனும், அருளொடும், ஒண்பொருள், அருளென்னும், குன்றேறி, செய்க, பொருளென்னும், பொருளல்லவரை, உறுபொருளும், இல்லாரை.

காளிங்:— அறனீனும், பொருளென்னும், அருளென்னும், அருளொடும், ஒண்பொருள், குன்றேறி, இல்லாரை, செய்க, பொருளல்லவரை, உறுபொருளும்.

77. படைமாட்சி.

தொகுப்புரை :

[யானை முதலிய அங்கங்களால் நிறைந்து துன்பத்துக்கு அஞ்சாது பகையை வெல்லும் படையே, வேந்தனது செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த செல்வம். தான் சிறியதாயிருப்பினும் போரின்கண் அழிவுவந்தால் தனக்குவரும் துன்பத்துக்கு அஞ்சாது எதிர்த்துப் போராடும் வன்கண்மை பழமையான படைக்கே உண்டு. எலிகள் ஒன்றுகூடி, கடல் போலக் கத்தியும் பயன் என்ன; பாம்பு மூச்சுவிட்டால் அவ்வளவும் அழியும். போரில் புறங்கொடுத்து ஓடாது, பகைவர் சூட்சிக்குட்பட்டதாய் வழிவழியாகவருவதாய் அஞ்சாமையை உடையதே படை. எமனே எதிர்த்து வரினும் எதிர்த்துநிற்கும் வன்மையையுடையதே படை. வீரமும், மானமும், முன்னோர் வழிபற்றிச் செல்லும் முறைமையும், அரசரால் தெளியப்படுதலும் ஆகிய நான்கு குணங்களும் படைக்குப் பாதுகாப்பு. வந்த போரைத் தடுக்கும் தன்மையறிந்து பகைவர் முன்படையை மேவவிடாமல் தடுத்துநிற்பதே படை. எதிர்த்துப் போரிடும் வன்மையும், பொறுக்கும் ஆற்றலும் இல்லையானாலும் சேனை தோற்றப்பொலிவான் பெருமையுறும். கலைதலும் வெறுப்பும் வறுமையும் இல்லையானால் படைவெல்லும். நிலைத்த வீரர்கள் பலரிருந்தாலும் அவர்களுக்கு ஒரு காவல் இல்லையானால் சேனையே இல்லை எனலாம்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி அப்பொருளினான் ஆவதாய படை இரண்டு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் படைமாட்சி கூறுகின்றார். அஃதாவது படையினது நன்மை.

மணக்:— படைமாட்சியாவது படையினது நன்மை கூறுதல். படை மேற்கூறிய பொருளினால் உண்டாமாதலானும், அதனை ஈட்டுதற்கும் நுகர்தற்கும் படை வேண்டுமாதலானும், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— படைமாட்சியாவது அரசன் படையின் பெருமையைச் சொல்லுதல் எ - று.

761. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை. (க)

உரைப்பகுதி :

பரிமே:— உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல்படை - யானை முதலிய நான்கு உறுப்பானும் நிறைந்து போரின்கண் ஊறுபடுதற்கு அஞ்சாது நின்று பகையை வெல்வதாய படை, வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை - அரசன் செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாயசெல்வம்.

ஈண்டுப் படை என்றது அந்நான்கன் தொகுதியை. ஊறஞ்சிய வழி வேறல்கூடாமையின் ஊறஞ்சா என்றும், ஒழிந்த அங்கங்கட்கும் அரசன்றனக்கும் காவலாகலின் வெறுக்கையுளெல்லாம் தலை என்றும் கூறினர்.

மணக்:— யானை, குதிரை, தேர், கருவி, காலாளாகிய உறுப்புக்களால் அமைந்து, இடுக்கண்உற்றால் அதற்கு அச்சமின்றி, வெற்றியுடைய படை, அரசன் தேடியபொரு ளெல்லாவற்றினும் தலையான பொருள்; ஆதலால், படைவேண்டும் எ - று.

பரிதி:— சதுரங்கபலம் உண்டாகிய அரசர்க்கு அழிவுவந்தால் கலங்கா மனம் செல்வத்துளெல்லாம் தலையான செல்வம் எ - று.

காளிங்:— பாதாதிகேசமாக ஓர் ஆள் என்றதற்குத் தக, உறுப்பினல் முற்றுப் பெற்றுக் கணை கருவி முதலியவற்றான் வந்து உற்ற வடுப்பாட்டிற்கும் சிறிதும் கண்ணஞ்சாத வீரப்படையானது அரசன் படைத்த செல்வத்துள் எல்லாம் பெரிதும் தலைமைப்பாடு உடைத்து எ - று.

ஒப்புமைப்பகுதி:

"போரறின் வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரறின் வாடும் மரமெல்லாம் — நீர்பாய்
மடையறின் நீள்நெய்தல் வாடும் படையறின்
மன்னர்சீர் வாடி விடும். —நான்மணி. 42.

குறிப்பு:

உறுப்பு அமைந்து - யானை, குதிரை, தேர், காலாள் என்ற உறுப்புக்கள் தத்தம் அளவைக்குத் தகப்பொருந்தி. அஃதாவது யானை ஒன்று, தேர் ஒன்று, குதிரை மூன்று, காலாள் ஐந்து கொண்டது பதாதியாதல்போல, அளவானமைதல்.
—தொகுப்பாசிரியர்.

762. உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— தொலைவிடத்து உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண் - தான் சிறிதாயவழியும் அரசற்குப் போரின்கண் உலைவு வந்தால் தன் மேலுறுவதற்கு அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை, தொல்படைக் கல்லால் அரிது - அவன் முன்னோரைத் தொடங்கி வரும் படைக்கல்லது உளதாகாது.

இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மூலப்படை, கூலிப் படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்னும் [1] அறுவகைப் படையுள்ளும் சிறப்புடையது மூலப்படையாகலான், அதனை அரசன் "வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்ணடையும், கொல் களிறும் மாவும் கொடுத்தளிக்க[2]" என்பது குறிப்பெச்சம். இப்படையை வடநூலார் மௌலம் என்ப.

மணக்:— அரசர் கெடுமிடத்து, வழிவந்த படைக்கல்லது பிற படைக்குப் போர்க்களத்து அழிவு வந்தவிடத்து, உயிர்க்கு வரும் ஊறு அஞ்சாத வன்கண்மை இல்லை எ - று.

---

[1] "உறவின் மிக்கவர் பகையின் எய்த்தவர் உதவு மப்படை குடைநிழல்
செறித லத்தினில் வளர கர்ப்படை திரள்வ னப்படை பொருள்விலைத்
தறுகண் மெய்ப்படை உறுதி யில்பொரு தமத கப்படை எனவிராய்
அறுவ கைப்படை களும்வகுத்தன அணிகள் உட்கின பணிகளே."
—வில்லி. அணிவகுப்பு. 12.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நிற்பது மூலப்படை; தொல்படை என்பதும் இதுவே. பொருள் உதவிக் காக்கப்படுவது உரிமைப்படை; கூலிப்படை என்பதும் இதுவே. நாட்டிலுள்ள வீரர்களைச் சேர்ப்பது நாட்டுப்படை; வன்மை மிகுதியால் தம்விருப்பின்படி ஒழுகும் வேடர் முதலியோரின் குழு காட்டுப்படை; நட்புரிமைபற்றிக் காரியத்திற்குத் துணைசெய்வது துணைப்படை, பகைவனால் விலக் கப்பட்டுத் தன்படையுள் புகுந்ததும், பகைவனை வேறுபடுத்தி அவனிடத்தினின்றும், தன்வயமாகச் செய்யப்பட்டதுமாகிய படை பகைப்படை: மற்றும் அமையப்படை, வன்படை, மென்படை, பயிற்சிப்படை, பயிற்சியில்படை, குழுப்படை, தனிப்படை கருவிபெறுபடை, தன்கருவிப்படை, ஊர்திபெறுபடை, தன் ஊர்திப்படை எனப் பலதிறப்படைகளும் அரசனுக்கு உண்டு என்று சுக்கிரநீதி படையியலில் கூறப் பட்டுள்ளது. [2] "பு - வெ. தும்பை. 2.

பரிப்:— தொலைவிடம் என்பதனை முன்னே கூட்டுக: மேல் வழி வந்த படைவேண்டும் என்றார்: அதனால் பயன் என்னை என்றார்க்கு அவர் தமக்கு முன்புள்ளார் செயலை நினைப்பார்: ஆகலான் அவர்க்கல்லது படைகெட்டால் நிற்றல் அரிது என்றவாறாயிற்று.

பரிதி:— அரசன் படைசாய்ந்தவிடத்துத் தன்சீவனைப் பாராத வீரர் தான் சேவகனை அரசற்கல்லது மற்றையோர்க்கு இல்லை எ - று.

காளிங்—: தன்படை கெடுமிடத்தும் தன்மேல் வந்துற்ற கருவி வடுப்பாட்டிற்கும் சிறிதும் கண்ணஞ்சாத தறுகண்மையானது பண்டு படைத்தலை வீரரைக் கண்ணுற்றுப் புறத்து எறியாது முன் எறிந்து முன் ஏற்றுக்கொண்டு வினைநிறித்து அழிபடைதாக்குதல் பழம்படைக்கு அல்லால் அரிது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கரிபரி இரதம் தானையும் அமைந்து கருதும்ஊ றஞ்சுறு திகல்வேந்து
இரிதரப் பொருது வெல்வதெப் படைதான் எய்துகூ லிப்படை நாட்டுப்
பரிபடை காட்டுப் படைதுணைப் படைகைப் படைமூலப் படைஎன ஆறுத்
தெரிபடை இவற்றுள் சிறந்தது மூலப்படைஇதில் சிறந்தவர் வீரர்."
—விநா. அரசி. 122.

763. ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். (௩)

உரைப்பகுதி:

பரிமே:— எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என்னும் - எலியாய பகை திரண்டு கடல்போல ஒலித்தால் நாகத்திற்கு என்ன ஏதம் வரும், நாகம் உயிர்ப்பக் கெடும் - அந்நாகம் உயிர்த்தஅளவானே அதுதானே கெடும்.

உவமைச்சொல் தொக்குநின்றது. இத்தொழிலுவமத்தால் திரட்சி பெற்றும். வீரரல்லாதார் பலர் திரண்டார்த்தால் அதற்கு வீரனஞ்சான், அவன் சினந்தஅளவானே அவர்தாம் கெடுவர் என்பது தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். வீரரல்லாதார் பலரினும் வீரனொருவனை ஆடல் நன்று என்பதாம். இவை மூன்று

பாட்டானும் முறையே அரசனுக்குப் படை ஏனையங்கங்களுள் சிறந்தது என்பதூஉம், அதுதன்னுள்ளும் மூலப்படை சிறந்தது என்பதூஉம், அதுதன்னுள்ளும் வீரன் சிறந்தான் என்பதூஉம் கூறப்பட்டன.

மணக்:— கடல்போல ஒலித்தாலும் எலியினது மாறுபாட்டினால் வருந்திமை என்னுளதாம்; எலி நாகம் உயிர்த்த அளவிலே கெடும் எ - று.

இது படைமிகுந்தது வெல்லும் என்று கருதாது வீரரைத் தெளிந்து ஆளல் வேண்டும் என்றது.

பரிதி:— எலிக்கூட்டம் கடல்போலக் கூடினாலும் ஒரு நாகம் புறப்பட்டால் கெட்டாற்போல, கூட்டப்படையெல்லாம் ஓர் பேர்பெற்ற சேவகன் புறப்பட்டால் கெடும் எ - று.

காளிங்:— எலிப்பகை அனைத்தும் கூடிக்கொண்டு கடல்போல ஆர்த்துவரினும் பயன் இல்லை. என்னை எனின் அவை அத்தனைக்கும் ஒருநாகமானது வந்து பூத்தென மூச்சு எறியக் கெட்டுவிடும் எ - று.

மேற்கோள்பகுதி :

சங்கர:— வினையெச்சவாய்பாடுகள் உணர்த்தும் சூத்திர உரையில் 'இன' என்றமையால் 'ஒலித்தக்கால் என்னும் உவரி' எனச் செயின் என்னும் வாய்பாடுபோல் எதிர்காலம் காட்டுவனவும் கொள்க எனக் கூறி, ஒலித்தக்கால் என்புழிக் ககர ஒற்று இடையே மிக்கமையின் கால் என்பது பெயரெச்சம் கொண்ட பெயரன்று வினைஎச்ச விகுதியே என்பது பொருந்தும்' என்பர் (நன். 343.)

ஒப்புமைப்பகுதி:

"பைவிரி நாகத்து ஐவாய்ப் பிறந்த
ஒலிப்புயிர் பெற்ற எலிக்கணம் போல
ஒழிந்தோர் ஒழிய...." —பெருங். 1 : 56 : 273 - 5.

"மறுமனத்தான் அல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்தா னாகி ஒழுகின் - செறுமனத்தார்
பாயிரம் கூறிப் படைதொக்கால் என்செய்யும்
ஆயிரம் காக்கைக்குஓர் கல்." —பழ-நா.

"எலியெலாம் இப்படை அரவம் யானென
ஒலிஉலாம் சேனையை உவந்து கூயினான்
வலியுலாம் உலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலாம் ஒருவழி புகுந்த போலவே." —கம்ப. குகப். 10.

"ஒருபுடை இவன்போர் செய்ய ஒருபுடை உரக கன்னி
அருளுடை மைந்தன் எண்ணில் ஆயிரம் உருவ மாகி
இருபுடை யினும்போர் வேந்தர் எலிகள்போல் ஏங்கி அம்பால்
பொருபடை உருண்டு போகப் பொருவில்வெம் பூசல் செய்தான்."
—வில்லி. 8ம் போர், 18.

முதுமொழிவெண்பாக்கள்:

"எத்திறத்த நூலும் இலங்கு சிவஞான
சித்தியொன்று காணச் சிதையுமே - மெத்த." —முதுமொழி, 120.

"நீநகைப்ப முப்புரமும் நீறாகி மாய்ந்ததே
ஆநகையாள் பாலமருஞ் சோமேசா - வானின்." —சோமேசர். 77.

"பார்த்திவனைக் கட்டவிழ்த்துப் பத்ராயு வன்பகையைத்
தீர்த்தொருவ னின்றான் சிவசிவா - ஆர்த்தங்(கு)" —சிவசிவா. 77.

"மொய்கொள் கடல்போலும் மூல பலமடிய
எய்துவென்ற தோர்வில் இரங்கேசா - வையத்(து)." —இரங். 77.

"பற்றுநிரை மீட்டெதிர்த்த பார்த்தனால் புண்பட்டார்
முற்றினவர் யாரும் முருகேசா - சுற்றி," —முருகேசர். 77.

குறிப்பு:

படைமாட்சி காலாட்பன்மையில் இல்லை; வீரன் ஒருவனால் அமையும் என்பதாம்.

— தொகுப்பாசிரியர்.

764. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. (௪)

உரைப்பகுதி :

பரிமே:— அழிவு இன்று - போரின்கண் கெடுதலின்றி, அறை போகாதாகி - பகைவரால் கீழறுக்கப்படாததாய், வழிவந்த வன்கணதுவே படை - தொன்றுதொட்டு வந்த தறுகண்மையை உடையதே அரசனுக்குப் படையாவது.

அழிவின்மையான் மறமானங்கள் உடைமையும், அறைபோகாமையான் அரசன்மாட்டு அன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை "கல்நின்றான் எந்தை கணவன் களப்பட்டான், முன்னின்று மொய்யவிந்தார் என்னையர் - பின்னின்று, கைபோய்க் கணை உதைப்பக் காவலன்மேலோடி. எய்போல் கிடந்தான் என் ஏறு"* என்பதனான் அறிக. குற்றியலுகரத்தின் முன்னர் உடம்படுமெய் விகாரத்தான் வந்தது. இது வருகின்ற பாட்டுள்ளும் ஒக்கும்.

மணக்:— கெடுதல் இன்றி, கீழறுக்கப்படாதாகி, குலத்தின் வழி வந்த அஞ்சாமையையுடையதே படையாவது எ - று.

வழிவருதல் - வீரன்மகன் வீரன் ஆகுதல். இது படையினது தன்மை கூறிற்று.

பரிதி:— அழிவற்றதாய் அரசர்க்கும் மாற்றார்க்கும் இடம் கொடாமல் தலைமுறையான் இன்னான்மகன் என்று பேர்பெற வெட்டுமது படை எ - று.

காளிங்:— எதிர்ப்பட்டமுகத்து நெஞ்சழிவு இன்றித் தன் கோமானை வஞ்சித்துக் கீழ்போகாதாகி வழிவருகின்ற தறுகண்மையை உடையது யாது? மற்று அதுவே படையாவது எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— வன்கணதுவே படை என்றது, குற்றியலுகரத்தின் முன் உடம்படுமெய் விகாரத்தால் வந்தது. "புணர்ப்போ நிலனும்" (17) என்னுங் கோவையாருள் 'புகுந்ததுவே' என்பதும் அது, "ஆற்றலதுவே படை" (765) என்பதும் அது. "விண்வத்துக் கொட்கும்" எனக் காட்டினார் நச்சினார்க்கினியர். "வல்சியின் எண்கு" (264) என்னுங் கோவையாருள் 'செல்வரிதன்று' எனக் காட்டினார் (பேராசிரியர்). இவ்விரண்டும் ஒற்றின்முன் உடம்படுமெய் வந்தது. "கல்நின்றான்" (பு - வெ - வாகை. 22.) என்னும் பாட்டும் இதனுள் காண்க.

மேற்கோள்பகுதி:

இளம்:— பொருளாவது நாடும், பொருளும், அரணும், அமைச்சும், நட்பும், படையும் எனக் கூறி, படை என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75.)

---

* பு - வெ. வாகை. 22.

குறிப்பு:

'அழிவின்றி' என்ற வினைஎச்சம் 'அழிவின்று' என உகரமாய் வந்தது; 'இன்றியென்னும் வினைஎஞ் சிறுதி, நின்ற இகரம் உகரமாதல், தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே' என்பது விதியாகலின். வழிவந்த வன்கண்மை என்றதால் வீரம் படிப்பன்று, பரம்பரைக் குணம் என்பது விளக்கப்பெற்றது.

—தொகுப்பாசிரியர்.

765. கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— கூற்று உடன்று மேல்வரினும் - கூற்றுவன்தானே வெகுண்டு மேல்வந்தாலும், கூடி எதிர்நிற்கும் ஆற்றலதுவே படை - நெஞ்சு ஒத்து எதிர்நின்று தாங்கும் ஆற்றலை உடையதே படையாவது.

*மருந்தில் கூற்றாகலின், உம்மை சிறப்பும்மை. மிகப்பலர் நெஞ்சொத்தற்குக் காரணம் அரசன்மேல் அன்பு. ஆற்றல் - மனவலி.

மணக்:— கூற்றமானது வெகுண்டு மேல்வரினும், சிதறுதலின்றியே எதிர்நிற்கவல்ல வலியுடையதே படையாவது எ - று.

பரிதி:— தன்னுயிரை ஒருவர்க்கும் கொடாத கூற்றுவன் வந்தாலும் எதிர் நின்று தாக்குவது படை எ - று.

காளிங்:— எல்லைக்காலத்துக் கூற்றம் சினன்று எதிர்வந்து பொரினும் அதற்கு இயைந்து தானும் எதிர்த்து அடர்த்து நிற்கும் திறமைப்பாட்டது யாது? மற்று அதுவே படையெனப்படுவது எ - று.

இனி மற்று இங்ஙனம் படைமாட்சி அமைத்ததற்பின் படை பொருசெருக்கு உணர்த்த வேண்டுதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

---

* "மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாய: மருந்தில் கூற்று - பரிகாரம் இல்லாத கூற்று" புறம், 3: 12.

ஒப்புமைப்பகுதி:

" - ....கொலைநாட்பின்
மொய்ம்புடை வீரரும் அஞ்சார் முரண்மறலி
தம்பை முடிசூடி னும்.'' — நீதிநெறி. 42.

" தண்டலாளர்கள் இவனைக் கொடுபோய்நம்
பொருள்முழுதும் தடுத்தும் ஈர்த்தும்
மிண்டினால் வலிசெய்தும் வாங்குமென
வெகுண்டரசன் விளம்பக் கூற்று
கண்டுமேல் மறஞ்செய்யும் வலியுடையார்
கதிரைஇருள் அடுத்துப் பற்றிக்
கொண்டுபோ னல்எனனக் கொடுபுறம்போய்
அறவோரைக் கொடுமை செய்வார். " —திருவிளை. பரிநரி. 46.

முதுமொழிவெண்பாக்கள்:

" வெல்படையைக் கண்டால் மிகவும் பயந்தோடிச்
செல்படையும் உண்டோ தினகரா — சொல்வலிய. " —தினகா. 80.

" ஆலமுகந் தானைமணந் தாள்படையே வெல்படையாம்
காலனையும் தோற்றோடக் காணுதலால் — ஞாலத்துக்." —முதுமொழி. 121.

குறிப்பு

கூற்றுடன்றுவரினும் அவன் உயிர்கொள்வது விதி முற்றியவழியேயாதலின் அத்துணையும் ஆற்றல் குலையாதிருப்பதே படை என்றது. 'மிண்டனுக்கு இரண்டாள்' என்பாராகலின் கூற்றன் ஒருவன் உடன்றுலும் படைகள் பலர்கூடி எதிர்த்தால் வெல்லலாம் எனவுமாம்.

—தொகுப்பாசிரியர்.

766. மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. (சா)

உரைப்பகுதி :

பரிமே:— மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் என நான்கே - தறுகண்மையும் மானமும் முன் வீரராயினோர்சென்ற நன்னெறிக்கண் சேறலும் அரசனால் தேறப்படுதலும் என இந்நான்கு குணமுமே, படைக்கு ஏமம் - படைக்கு அரணாவது.

இவற்றான் முறையே பகைவரைக் கடிதில் கொன்றுநிற்றலும், அரசனுக்குத் தாழ்வுவாராமல் காத்தலும், "அழியுநர் புறக்கொடை அயில் வாள் ஓச்சா*"மை முதலியவும், அறைபோகாமையுமாகிய செய்கைகள் பெறப்பட்டன. இச்செய்கையார்க்குப் பகைவர் நணுகாராகலின், வேறு அரண் வேண்டா என்பதாம்.

மணக்:— மறமும், மானமும், நல்லவழிச்சேறலும், தெளிவுடைமையும் என இந்நான்குமே படைக்கு அரணும் எ - று,

பரிப்:— மேல் கெடாமை வேண்டும் என்றார்: இது கெடாமைக்குக் காரணம் கூறிற்று.

பரிதி:— வீரதத்துவ முனையில் இன்னான் மகன் இன்னான் என்பது நம்பிக்கை. இந்த நாலுவகையாம் படைஞர் குணம் எ - று.

காளிங்:— தன் நெஞ்சிற்கு இயல்பாயது ஓர் மறமும், சேவகத் தாழ்ச்சிக்கு மாணிப்பது ஓர் வாசிப்பாடும், மாட்சிமைப்பட்ட வழிச்செலவும் என்றும் அரசர்க்கு ஏவல்வழி பிழையாது செல்லலும், எதிர்கண்ட விடத்துத் தடுத்து ஏறி நிற்கும் திறமையும் என்னும் இந்நான்குமே படைக்குச் சேம உறுதிப்பாடு எ - று.

ஒப்புமைப்பகுதி:

"விரையவன் பகையை வெல்லும்வன் கண்மை வேந்துதா றாவகை காக்கும்
புரையறு மானம் போரின் அஞ்சினரைப் பொருதடா ஒளியறை போகா."
—விநா. அரசி. 123.

767, தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— தலைவந்த போர்தாங்கும் தன்மை அறிந்து - மாற்றாரால் வகுக்கப்பட்டுத் தன்மேல்வந்த படையின்போரை விலக்கும் வகுப்பு அறிந்து வகுத்துக்கொண்டு, தார் தாங்கிச் செல்வது தானை - அவர் தூசியைத் தன்மேல் வாராமல் தடுத்துத் தான் அதன்மேற் செல்வதே படையாவது.

---

* பு - வெ, வஞ்சி, 20.

படைவகுப்பாவது வியூகம்; அஃது எழுவகை உறுப்பிற்றாய், வகையால் நான்காய், விரியால் முப்பதாம். உறுப்பு ஏழாவன: உரமுதல் கோடி ஈறாயின. வகை நான்காவன; தண்டம், மண்டலம், அசங்கதம், போகம் என இவை. விரி முப்பதாவன: தண்டவிரிபதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரி ஆறும், போகவிரி ஐந்தும் என இவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் ஈண்டு உரைப்பிற்பெருகும்; அவையெல்லாம் வடநூல்களுள் கண்டுகொள்க. இவை நான்குபாட்டானும் படையினது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— உற்றவிடத்து உற்றபோரினைத் தடுக்கும் இயல்பறிந்து முன்வந்தாரைப் பொறுத்து, மேற்செல்லவல்லது படையாவது எ - று.

இது மூந்திச்செல்லவேண்டும் என்பதூஉம், செல்லுங்கால் இடமறிந்து செல்ல வேண்டும் என்பதூஉம் கூறிற்று.

பரிப்:— முன் வந்த படையைப் பொறுத்து மேற்செல்ல வல்லது படையாவது: அவ்விடத்துற்ற போரினைத் தடுக்கும் இயல்பு அறிந்து எ - று.

பரிதி:— வெட்சி முதலான எட்டுவகை மாலை சூடிப் போர் செய்வது மாற்றானைக் கண்டபடை எ - று.

காளிங்:— எதிர்ப்படை வந்து தலைப்பட்ட காலத்து இவ்வாறு பொருவோம் என்று எண்ணிக் கலங்காது மற்று அதனைப் பொறுத்து அடர்த்துச் சென்று நெருக்க வல்லது யாது? மற்று அதுவே தூசி எனப் படுவது எ - று.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— 'தார்தாங்கிச் செல்வது தானை' முற்றுப்பெயர் வினை முதற் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 83.)

குறிப்பு:

'வட்கார்மேற் சேறல் வஞ்சி' யாதலின் வஞ்சிமாலையைச் சூடிச்செல்வது சேனை எனவும் பொருள்காணலாம். தார் - தூசிப்படையாகிய முன்படை என்பர் பரிமேலழகர். பரிதி எட்டுவகை மாலை யென்றது வெட்சிமுதலாக வாகையீறாகச் சொல்லப்பட்ட ஏழுடன் அவரவர்கட்குரிய அடையாள மாலையையுஞ் சேர்த்தென்க.

படைப்பகுப்பிற்குள்ள ஏழு அங்கம்:— மார்பு, இருசிறகுகள், இடை, பின்புறம், பிரதிகிரகம், கோடி என்பன. பிரதிகிரகமாவது, முன்படைக்குப் பாது காவலாக இருநூறு விற்கிடைக்குப் பின்னேசெல்வது.

தண்டமாவது தம் படைக்குச் சூழ நாற்புறத்திலும் அச்சமுண்டானபோது தம் படையைக் குறுக்காக நிறுத்துவது.

மண்டலமாவது பாம்பு வட்டமிட்டாற்போல வளைவாக நிறுத்துவது. இது தம் சேனைக்குப் பின்புறத்திலே அச்சம்கண்டபோது அமைக்கப்பெறும். இதனைச் சக்கரவியூகம் எனவும் கூறுவர்.

அசங்கதமாவது சேனைகளை வேறுவேறாகப் பிரித்து நிறுத்துவது. ஒன்றற்கொன்று இயைபில்லாதபடி அங்கங்கே பிரித்துவைப்பது. இது இரண்டு பக்கங்களிலும் அச்சம் உண்டானபோது அமைக்கப்பெறும். பன்றி தன் குட்டிகளோடு எங்கும் சிதறி ஓடுவதுபோல அமைக்கப்பெறுவதாதலின் வராகம் எனவும் வழங்கும்.

போகமாவது, நால்வகைச் சேனைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்துவது. இதுவும் பக்கங்களிலுண்டாகும் பயத்தைப்போக்கவே அமைக்கப்பெறுவது. பருந்தின் வீழ்வாகப் போர் செய்வதாதலின் கருடவியூகம் எனவும் வழங்கும்.

விரிமுப்பதாவன:—

தண்டவிரி பதினேழு:— பிரதரம், திருடகம், சியாவஸ்தம், குக்ஷி, பிரதிட்டம், சுப்பிரதிட்டம், சியேநம், விசயம், சஞ்சயம், விசாலம், நிசயம், சூசி, தூணம், கர்ணம், சமூமுகம், ரதாஸ்யம், வலயம் என்பன.

மண்டலவிரி இரண்டு:— சர்வதோபத்ரம், துர்ஜயம் என்பன.

அசங்கதவிரி ஆறு:— அர்த்தசந்திரம், சிருங்காடம், வஜ்ரம், கர்க்கடக சிருங்காரி, காகபாதி, கோதிகா என்பன.

போகவிரி ஐந்து:— கோமூத்திரிகை, அபிசாரி, சகடம், மகரம், பதங்கம் என்பன.

—தொகுப்பாசிரியர்.

768. அடற்றகையும் ஆற்றலும் இல்எனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— தானை - தானை, அடற்றகையும் ஆற்றலும் இல் எனினும் - பகைமேல் தான்சென்று அடும் தறுகண்மையும் அது தன்மேல் வந்தால் பொறுக்கும் ஆற்றலும் இல்லையாயினும், படைத்தகையால் பாடு பெறும் - தன் தோற்றப்பொலிவானே பெருமை எய்தும்.

இல்லெனினும் எனவே, அவற்றது இன்றியமையாமை பெறப்பட்டது. படைத்தகை என்றது ஒரு பெயர்மாத்திரமாய் நின்றது. தோற்றப்பொலிவாவது அலங்கரிக்கப்பட்ட தேர், யானை, குதிரைகளுடனும் பதாகை, கொடி, குடை, பல்லியம், காகளம் முதலியவற்றுடனும் அணிந்து தோன்றும் அழகு. பாடு - கண்ட அளவிலே பகைவர் அஞ்சும் பெருமை.

மணக்:— பகைவரைக்கொல்லுந் தகுதியும், அவர் மேல்வந்தால் பொறுக்கும் ஆற்றலும் இல்லையாயினும், சேனையானது படையழகினால் பெருமைபெறும் எ - று.

படையழகு என்றது தேர் யானை குதிரைகளின் அலங்காரமும், கொடியும், குடையும், முரசும், காகளமும் முதலாயினவற்றால் அழகு பெறுதல். இஃது அரசன் படையழகு அமைக்கவேண்டும் என்றது.

பரிதி:— வெற்றிப்பாடும் சத்துவமும் இல்லாத போதும் அரசன் போற்றுதலாலே சிறப்புப் பெறும் எ - று.

காளிங்:— எதிர்ந்தோரை எறிந்துகொள்ளும் தகைமையும் அதற்கு உரிய ஆண்மைத் திறப்பாடும் இல்லை ஆயினும், சேனையானது கைக்கொண்டு நிற்குமிடத்து விட்டுவிளங்கிப் பயின்றுள்ளதாகிய விறல் கருவிகளால் பொலிவுடன் நிற்றல் சாலப் பெருமை பெறும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தகை - முன்னது தறுகண்மை; பின்னது தோற்றப் பொலிவு.

குறிப்பு:

'செட்டியார் மிடுக்கோ சரக்கு மிடுக்கோ' என்பது பழமொழி. பொரும் வன்மை குறையாயினும் தோற்றப்பொலிவு இன்றியமையாதது என்கிறது இக்குறள்.

—தொகுப்பாசிரியர்.

769. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல்லாயின் - தான் தேய்ந்து சிறிதாகலும் மனத்தினின்று நீங்காத வெறுப்பும் நல்குரவும் தனக்கு இல்லையாயின், படை வெல்லும் - படை பகையை வெல்லும்.

விட்டுப்போதலும் நின்றது நல்கூர்தலும் அரசன் பொருள் கொடாமையான் வருவன. செல்லாத்துனியாவது மகளிரை வெளவல், இளிவரவாயின செய்தல் முதலியவற்றான் வருவது. இவை உள்வழி அவன்மாட்டு அன்பின்றி உற்றுப்பொராமையின், இல்லாயின் வெல்லும் என்றார்.

மணக்:— தான் தேய்ந்து சிறிதாகலும், மனத்தினின்று நீங்காத வெறுப்பும், நல்குரவும் தனக்கு இல்லையாயின், படை பகையை வெல்லும் எ - று.

பரிப்:— சிறுமை உறுதலும் போகாத் துன்பம் உறுதலும் வறுமையும் இல்லையாயின் படை வெல்லும் எ - று.

சிறுமை உறுதலாவது இழிந்தார் பெற்றசிறப்பு உயர்ந்தார் பெறாமை. போகாத் துன்பமாவது பெண்டிரைக் கைக்கொள்ளுதலும் இளிவரவு செய்தலும் போல்வன. வறுமையாவது கொடாமை. இது படைக்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று.

பரிதி:— மிடியும் சேவகத்தன்மையும் சிறுமையும் இல்லையாயின் படைவெல்லும் எ - று.

காளிங்:— படைச்சிறுமையும் நீங்காத கோபமும் படையினது வறுமையும் என்னும் இக்குற்றம் மூன்றும் இலதாயின் எதிர்ப்படையை எவ்வாற்றானும் வெல்லும் படை எ - று.

குறிப்பு:

சிறுமை - படைதேய்ந்து சிறிதாகல் என்பர் பரிமேலழகர். அரசர் செய்யும் அவமதிப்புமாம். செல்லாத் துனி - ஒன்றாலும் நீக்கமுடியாத பிணக்கு.

—தொகுப்பாசிரியர்.

770. நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல். (கo)

உரைப்பகுதி :

பரிமே:— நிலைமக்கள் சால உடைத்து எனினும் - போரின்கண் நிலையுடைய வீரரை மிகவுடைத்தேயாயினும், தலைமக்கள் இல்வழித் தானை இல் - தனக்குத் தலைவராகிய வீரரில்லாதவழித் தானை நில்லாது.

படைத்தலைவர் நிலையுடையாரன்றிப் போவாராயின் காண் போர் இல் எனப் பொராது தானும்போம் என்பார், தலைமக்களில்வழி இல் என்றார். இவை மூன்று பாட்டானும் முறையே படைத் தகையின்மையானும், அரசன்கொடைத் தாழ்வுகளானும், தலைவரின்மையானும் தாழ்வு கூறப்பட்டது.

மணக்:— படையானது நிலையுடைய வீரரைப் பெரிது உடைத்தாயினும், தனக்குத் தலைவரை இல்லாத விடத்துத் தனக்கு வெற்றி இல்லையாம் எ - று.

இது படையமைத்தாலும் படைத்தலைவரையும் அமைக்க வேண்டும் என்றது.

பரிதி:— நிலையுடைய வீரர் உண்டாகிலும் தளவாய் நன்மை இல்லாதபோது சேவகம் இல்லை எ - று.

காளிங்:— எதிர்ப்படை கண்டால் பிறர் காதலிக்க நிலையாது தெளிந்து நிற்கும் நிலைப்பாட்டினை உடைய வீரரைச் சால உடைத்தேனும் சேனையானது சேனைத் தலைவராகிய தலைமக்கள் இல்லாத இடத்துச் செய்வது ஓர் சேவகம் இல்லை எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நிலைமக்கள் சாலவுடைத்து என்பதனுள், தளகத்தன் இல்லாத படை நில்லாது என்பது காண்க.

ஒப்புமைப்பகுதி :

“வரையறு தேற்றம் உடையரே யானும் வறுமையும் சிறுமையும்வெறுப்பும்
நிரைதரின் வெல்லார் தலைவரில் வழியும் நேர்ந்திடும் பகைவரைவெல்லார்”
—விநா. அரசி. 123.

"மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது." —கொன்றை. 73.

"தலைவன் நிற்கத் தண்டு நிற்கும்; தலைவன் மயங்க சர்வமும்மயங்கும்."
—பழ.

குறிப்பு:

நிலைமக்கள், உறுப்பின் பிண்டமாகிய உடல்போல்பவர்கள். தலைமக்கள் அறிவுபோல்பவர். உடல் ஒழுங்கான முறையில் தொழிற்பாடுற, இயக்கும் அறிவு தேவையாதல்போலச் சேனைக்குத் தலைவன் தேவை என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— உறுப்பமைந்து, உலைவிடத்து, ஒலித்தக்கால், அழிவின்று, கூற்றுடன்று, மறமானம், தார்தாங்கி, அடற்றகையும், சிறுமையும், நிலைமக்கள்.

மணக்:— உறுப்பமைந்து, அழிவின்று, மறமானம், தார்தாங்கி, கூற்றுடன்று, உலைவிடத்து, அடற்றகையும், ஒலித்தக்கால், நிலைமக்கள், சிறுமையும்.

பரிதி:— அழிவின்று, கூற்றுடன்று, மறமானம், தார்தாங்கி, சிறுமையும், அடற்றகையும், நிலைமக்கள், ஒலித்தக்கால், உலைவிடத்து, உறுப்பமைந்து.

காளிங்:— அழிவின்று, மறமானம், சிறுமையும், உறுப்பமைந்து, நிலைமக்கள், அடற்றகையும், ஒலித்தக்கால், தார்தாங்கி, உலைவிடத்து, கூற்றுடன்று.

78. படைச்செருக்கு.

தொகுப்புரை:

[பகைவர்களே! என் தலைவன்முன் எதிர்த்து நில்லாதீர்கள். அவ்வாறு நின்று மடிந்து நடுகல்லிலே நின்ற வீரர்பலர். காட்டு முயலைக் குறிதவறாது எய்து வீழ்த்திய அம்பைக்காட்டிலும் யானையையெய்து குறிதவறிய வேலையேந்துதல் வீரம். நூலோர் வீரரின் அஞ்சாமையைப் பெரிய ஆண்மை யென்று சொல்லுவார்கள். பகைவற்கு ஓர் ஆபத்துவந்தகாலத்து உபகாரஞ் செய்தலே அவ்வாண்மைக்கு உறுதி யென்பர். கைவேலை யானைமேல் எறிந்து வருபவன் தன்னுடலில்தைத்திருந்த வேலைப் பறித்து கைக்கொண்டு படைபெற்ற வாய்ப்பிற்காக மகிழ்வன். பகைவரைக் கோபத் தோடு பார்த்த கண், பகைவர் வேலோச்ச இமைக்குமாயின் வீரர்க்கு முதுகுகாட்ட லாகிய குற்றமாம். மார்பிலும் முகத்திலும் புண்படாத நாள்களைப் பயனற்றநாளெனக் கழிப்பர் வீரர்கள். தாம் அழிந்தாலும் இவ்வுலகத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கிற புகழையே விரும்பி உயிர்த்தியாகம் செய்யாத வீரர்கள் காலில் அணிந்த கழல் அலங்காரத்திற்கு அணிந்ததாம். போர்வந்தால் உயிரை விடுதற்கு அஞ்சாத வீரர்கள் அரசன் சீறினாலும் வீரங்குன்றமாட்டார்கள். தாம்செய்த சூள் தப்பா மைக்காக உயிரையும் விடத்தக்க வீரர்களைச் சபதம் தவறியதற்காக இகழ்பவர்கள் யார்? தம் அரசர் கண்கள் அவலக்கண்ணீர் வடிக்கச் சாக்காடு கிடைக்குமாயின் அது இரந்தாவது கொள்ளும் தன்மைத்து.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அப்படையது மறமிகுதி. அதிகாரமுறை மையும் இதனானே விளங்கும்.

மணக்:— படைச்செருக்காவது படையினது வீரியம் கூறுதல். இது படைக்கு இன்றியமையாமையின், அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— படைச்செருக்காவது படையின் வெற்றிப்பாடு கூறுதல் எ - று.

771, என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்நின் றவர். (க)

உரைப்பகுதி:

பரிமே:— தெவ்விர் என் ஐ முன் நின்று கல் நின்றவர் பலர் - பகைவீர்! இன்றினாங்கு என் தலைவனெதிர் போரேற்று நின்று அவன்

வேல்வாய் வீழ்ந்து பின் கல்லின்கண்ணே நின்றவீரர் பலர், என் ஐ முன் நில்லன்மின் - நீவிர் அதன்கண் இன்றி நும் உடற்கண் நிற்றல்வேண்டின், என் தலைவனெதிர் போரேற்று நிற்றலை ஒழிமின்.

என்னை எனத் தன்னொடு தொடர்புபடுத்துக் கூறினமையின், அவன் வேல்வாய் வீழ்தல் பெற்றாம். கல் நடுகல். *"நம்பன் சிலைவாய் நடக்குங்கணை மிச்சி லல்லால், அம்பொன் மணிப்பூ ணரசும் இலை" எனப் பதுமுகன் கூறினாற்போல ஒருவீரன் தன் மறம் அரசன்மேல் வைத்துக் கூறியவாறு. இப்பாட்டு நெடுமொழிவஞ்சி.

மணக்:— என்னுடைய ஐயன்முன்னர்ப் பகைவீரரே! நில்லாது ஒழிமின்; முன்னாள் இவன் முன்னே நின்று, கல்லிலே எழுதப்பட்டு நிற்கின்றார் பலராதலால் எ - று.

இஃது எளியாரைப் போகச்சொல்லி, எதிர்ப்பாரோடு பொரா வேண்டும் என்றது:

பரிதி:— என்முன் நில்லாதீர்கள் வீரர்காள்! முன்னே என்முன் நின்று பட்டுச் சிலையிலே பலர் பிணழுத்ததைக் கண்டீரில்லையோ என்பன் வீராதி வீரன் எ - று.

காளிங்:— வறிதே என்முன் வந்து நில்லன்மின் தெவ்வீர்காள்: என்னை எனின் முற்பட மதியாது என் முன் வந்து நின்று பிற்படக் கல்லுருவாகி நின்றார் அளவிறந்த வீரர் ஆகலான் எ - று

மேற்கோள்பகுதி:

இளம்:— அரும்பகைதாங்கும் ஆற்றலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

என்னை என்ற முறைப்பெயர் அகத்திற்கே அன்றி, புறத்திற்கும் வரும் எனக் கூறி, இதனை மேற்கோள் காட்டுவர். (ஷை 242.)

நச்:— ஷை (தொல். பொருள். 247.)

மயிலை:— ரவ்வீற்று உயர்திணைப்பெயர் விளி ஏற்குங்கால் ஈற்றயல் அகரம் இகரமானதற்குத் தெவ்விர், என்பது மேற்கோள். (நன். 308.)

* சீவக, 809.

சங்கர:— ஷ்ஷ (நன். 309.)

சிவஞான:— என்னை என்பது என்னுடைய தலைவன் எனப் பொருள்படும் என்பதற்கு மேற்கோள். (எடுத். வைரக். பக். 66.)

ரவ்வீற்று உயர்திணைப்பெயர் ஈற்றயல் அகரம் இகரமாகி விளிப் பொருள் ஏற்றதற்கு மேற்கோள். (நன். 309.)

குறிப்பு:

ஒரு வீரன் தன் வீரத்தையும் அரசன்மேல்வைத்துக் கூறியது நன்றியும் அடக்கமும்பற்றி. அன்றி அரசன் வீரத்தைக் கூறுவது மூலமாகத் தன் வீரங் கூறியது என்பாரும் உளர். பரிதியார் என்னை என்பதிலுள்ள ஐகாரத்தைச் சாரியை யாக்கி 'என்முன் நில்லாதீர்கள்' என்பர்.

—தொகுப்பாசிரியர்.

772. கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— கான முயல் எய்த அம்பினில் - கானத்தின்கண் ஓடும் முயலைப் பிழையாமலெய்த அம்பை ஏந்தலினும், யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது - வெள்ளிடை நின்ற யானையை எறிந்து பிழைத்த வேலை ஏந்துதல் நன்று.

கானமுயல் என்றதனால் வெள்ளிடை நின்ற என்பதும், பிழைத்த என்றதனால் பிழையாமல் என்பதும், முயற்குத் தக எய்த என்றதனால் யானைக்குத்தக எறிதலும், வருவிக்கப்பட்டன. இது மாற்றரசன் படையொடு பொருதானோர் வீரன் அது புறங்கொடுத்ததாக நாணிப் பின் அவன் றன்மேல் செல்லலுற்றானது கூற்று.

மணக்:— வீரர்க்குக் காட்டகத்து முயலைப்பட எய்த அம்பினும், யானையைப் பிழைக்க எறிந்த வேலை ஏந்துதல் இனிது எ - று.

இது மேலதற்குக் காரணமாகக் கூறப்பட்டது.

பரிதி:— முயலை எய்த அம்பினும் யானையைப் பிழைக்க எய்த வேல் ஏந்தல் இனிது. யானை பிழைத்த வேல் விசேஷமானாற்போல ஆயிரம் சேவகரில் ஒரு சுத்தவீரன் விசேஷம் எ - று.

காளிங்:— ஒருவன் காட்டிடத்து முயலினைப் பட்டுக் கழலுமாறு எய்த அம்பினின் போர்க்களத்து ஒருவன் ஒரு களிற்றுயானையைக் குறித்து எறிந்து இலக்குப் பிழைத்த வேலினை எடுத்து ஏந்திக் கொள்ளுதல் பெரிதும் இனிது எ - று.

ஒப்புமைப்பகுதி :

" இசையு மெனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர் — விசையின்
நரிமா உளம்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்." —நாலடி. 152.

" நடம்பயில் எந்தை மங்கை நாணினால் வருந்தினாள் என்று
அடைந்தருள் சொல்வன் ஞால மலைக்குமம் மாயை சூளான்
நெடுந்தகை முன்னம் சென்ற நிலையோநன் றுடு கொல்வோன்
மடங்கல்முன் வெல்வேன் என்று வருதலே யாற்றலன்றோ."
—பிரபு. வசவண். 32.

முதுமொழிவெண்பாக்கள்:

" ஈனர் கொடைத்தமிழில் எள்ளார் கொடாத்தமிழ்செந்
தேனனைய நன்மை தினகரா - ஆனதொரு." —தினகர. 81.

" இறையோ டெதிர்ந்திறந்த தென்றாலும் என்ன
குறையோ பிறரையடும் கூற்று - முறையேகாண்." —முதுமொழி. 122.

" மன்மதனின் ஞேடெதிர்த்து வீறழிந்து மாண்டாலும்
துன்னுபுக ழேபெற்றான் சோமேசா - புன்னெருக்கும்" -சோமேசர். 78.

குறிப்பு:

அம்பு தூர இலக்கில் எய்யப்பெறுவது. வேல் கைக்கெட்டிய தூரத்தில் எறியப்பெறுவது. கானமுயல் - ஆளைக்கண்டால் அஞ்சிக் காட்டுச்சார் ஓடுவது. களிறு - எதிர்த்துநிற்பது. தூர இருந்து எய்யத்தக்க களிற்றின்மேல் அணுகி எறிந்தது படைச்செருக்கு. அணுகித் துன்புறுத்தத்தக்க முயலை எய்தது படையிழிவு. ஆகவே வெற்றி தோல்விகளில் செருக்கில்லை. எதிர்க்கப்பெற்ற பொருளின் உயர்வு இழிவுகளில் செருக்கு அமைந்துள்ளது என்பதாம். ஆதலால் யானை பிழைத்த வேல் இனிது என்று பாராட்டப்பெறுகிறது. பிறிது மொழிதலாக முயல் வலியற்ற வீரரையும். களிறு எதிர்த்துப் பொரும்வீரரையும் காட்டின. இது போலவே 'பீலிபெய்சாகாடும்' 'நெடும்புனலுள் வெல்லும் முதலை' என்ற குறள்களும்

பிறிதுமொழிதல். அவைகள் வீரன் கூற்றாக அன்றி ஆசிரியர் கூற்றாகவே அமைந்துள்ளன. இதனை வீரன் கூற்றென்கிறது பரிமேலழகர் குறிப்பு. படை புறங்கொடுத்ததாக நாணி மாற்றரசன் மேற்செல்லலுற்றான் கூற்றாகக்கொள்ளின் புறங்காட்டிய படை முயல், பிழைத்த களிறு மாற்றரசன் எனக்கொள்ளப்பெற்று முயல் மேற் செல்லாமை படைச்செருக்காவதோடமையாது குறிதவறல் படையிழிவாகும். 'இட்டுத்தலை எண்ணும்' வீரர்க்கு மாற்றரசன் மேல்வைத்த குறி பிழைத்தலைப் போல்வதொரு இழிவின்று. இந்நூலுக்குப் பின்னூலாரும் உரையாசிரியரில் ஒருவராகக் கருதப்பெறுவாராதலின் அவர் கருத்தையும் ஒட்டி நரி உளங்கிழித்த அம்பினில், அரிமா பிழைப்பெய்த கோல் இனிது என்று குறி தவறுவதிலும் படைச்செருக்குண்டு என்று கோடலே பொருந்துவதாகும் ஆகவே சிறியாரைக்கொன்றான் வெற்றியினும் பெரியாரை இலக்காக்கித் தவறுதல் மேல் என்ற அளவிலேயே இக்குறட்கருத்துச் சென்றியைவதாகும்.

—தொகுப்பாசிரியர்.

773. பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— தறுகண் பேராண்மை என்ப - பகைவர்மேல் கண்ணோடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்க ஆண்தன்மை என்று சொல்லுவர், ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு (என்ப) - அவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயின் கண்ணோடி அது தீர்த்துக்கோடற் பொருட்டு ஊராண்மை செய்தலை நூலோர் அதற்குக் கூர்மை என்று சொல்லுவர்.

என்ப என்பது பின்னும் இயைந்தது. ஊராண்மை உபகாரியாந் தன்மை; அஃதாவது, இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுதும்படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமைநோக்கி, அயோத்தியரிறை மேற்செல்லாது 'இன்றுபோய் நாளை நின் தானையோடு வா' என விட்டாற்போல்வது. இவை இரண்டு பாட்டும் தழிஞ்சி.

மணக்:— ஒன்று உற்றக்கால் அஞ்சாமையை ஒருவனுக்குப் பெரிய ஆண்மை என்று சொல்லுவர்; உலகியலறிந்து செய்தலை அவ்வாண்மைக்குப் படைக்கலம் என்று சொல்லுவர் எ - று.

பரிப்:— உலகியல் அறிதல் - தனக்கு எளியார்மேல் செல்லாமை; இது வீரம் செய்யுங்கால் எளியாரை அடராமை வேண்டும் என்றது.

பரிதி:— செருவிடை வேண்டியகாலையில் சுத்த வீரன் விசேஷம். அது பேராண்மை; சுத்தவீரரில் வீராதிவீரன் விசேஷம் அவன் வீரன் எ - று.

காளிங்:— படை மக்கள் தமக்கு எப்பொழுதும் இயல்பு ஆகிய மிகவும் பெரிய ஆண்மை என்று சொல்லுவர் உலகோர்: யாதினை எனின், பகை வந்து உற்ற இடத்துப் பண்டை ஆண்மையை மிகவும் கூர்க்கப் பிடித்து அடர்த்து எதிர் நடத்தல் கூர்மையாவது எ - று.

ஒப்புமைப்பகுதி

"தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவது பாம்பு." —பழ. நா.

முதுமொழிவெண்பாக்கள்:

"துஞ்சினர்பொன் றூய்நாளைத் தோன்றக்க என்னுமால்
வஞ்சினம்சொன் னான்றிருமலைக்கொழுந்தே - அஞ்சாத"
—திருமலைக்.

குறிப்பு:

அருச்சுனன் கர்ணனை வென்றும் கொல்லாது விட்டமை ஈண்டுச் சிந்திக்கத்தகும். உபகாரத்திலே ஊர்முழுதும் வயப்பட்டு ஏவல்கேட்குமாதலின் உபகாரியாந் தன்மையை ஊராண்மை என்றார்.
—தொகுப்பாசிரியர்.

774. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். (௪)

உரைப்பகுதி:

பரிமே:— கைவேல் களிற்றொடு போக்கி வருவபவன் - தன் கைப் படையாய வேலைத் தன்மேல்வந்த களிற்றோடு போக்கி வருகின்ற களிற்றுக்கு வேல்நாடித்திரிவான், மெய் வேல் பறியா நகும் - தன் மார்பின்கண் நின்ற வேலைக்கண்டு பறித்து மகிழும்.

களிற்றொடு போக்கல்: களிற்றினது உயிரைக் கொடுபோமாறு விடுதல். மகிழ்ச்சி தேடியது எய்தலான். இதனுள் களிற்றையல்லது எறியான் என்பதூஉம், சினமிகுதியான் வேலிடைபோந்தது அறிந்திலன் என்பதூஉம், பின்னும் போர்மேல் விருப்பினன் என்பதூஉம் பெறப் பட்டன. நூழிலாட்டு.

மணக்:— தன் கையிலுள்ள வேலைக் களிற்றின் உயிரோடே போக்கி, அதன்பின் கருவி தேடிச் செல்பவன், தன் மெய்யின்மேல் பட்ட வேலைப் பறித்துக் கருவி பெற்றேம் என்று மகிழும் எ - று.

இது வீரர் செயல் இத்தன்மையாதலால், புண்பட்டால் அதற்கு ஆற்றிப் பின்னும் போரின்கண் சாதல் அல்லது வெல்லல் வேண்டும் என்றது.

பரிதி:— மதயானைகூடப் போர்செய்து கைவேல் பறிகொடுத்த வீரன் மெய்யிலேதைத்த வேலைப்பறித்து இந்தத்தருவாயில் வேல் நேர் பட்டது என்று சிரித்துச் சலிப்பிலன். எ - று.

காளிங்:— தனது கைவேலினை எதிர் வந்த களிற்றொடும் போக்கி மீண்டு வருகின்ற வீரனானவன் தன் மெய்க்கண் வேறு ஒருவன் எறிந்த வேலினைப் பறித்துக் கைக்கொண்டு நின்று சிரிக்கும் எ - று.

நகும் என்றது வெறுங்கையாளனை எறிந்தவன் என்ன வீரனோ என்று ஒரு நகையும், வெறுங்கைக்கு அம்மா! ஒரு வேல் வந்தது என்று ஒரு நகையும் என அறிக.

மேற்கோள்பகுதி :

இளம்:— தானைநிலைக்கு மேற்கோள். (தொல். பொருள். 72.)

நச்:— ஷை (தொல். பொருள். 72.)

சங்கர:— எழுத்துப் போலியுள் 'இச் செய்யுட்கண் தொடை நோக்கி ஐகாரம் நின்ற நிலைக்களத்துப் போலிவந்தவாறு காண்க' என்பர். (நன். 125,)

சிவஞான:— 'ஐகாரக் குறுக்கம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாயும், ஏனையிடங்களில் ஒரு மாத்திரையாயும் குறுகும் என்பது

உய்த்துணர்ந்து கொள்க. அவ்வாறு உய்த்துணர்ந்து கொள்ளாக்கால் 'கைவேல்...நகும்' எனவரும் இலக்கியங்களுக்கு இலக்கணம் இன்றாய் முடியும் என்க'. (நன். 95.)

சுவாமி:— செய்வினன் வினையுள் செய்வினை சிலவே என்பதற்கு மேற்கோள். (இ. கொ. 72.)

பெருந்:— வீரச்சுவைக்கு மேற்கோள். (வீர. 154.)

ஒப்புமைப்பகுதி:

"பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வரும் களிற்றொடு வேல்துறந்து இனியே
தன்னும் தூக்குவன் போலும் ஒன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பின் ஊக்கி மெய்க்கொண் டனனே." —புறம். 274.

"பூணேற் றகன்ற புடைகிளர் அகலத்துத்
தாமேற் றழுத்திய சத்தி வாங்கிப்
புரைசை உய்த்த பொருகழல் காலினர்."
—பெருங். 3: 20: 62 - 64.

"புண்ணிடம் கொண்ட எஃகம் பறித்தலின்." —சீவக. 284.

"மார்பிடையில் குறித்த பகழியை
வார்சிலையில் தொடுத்து விடுவரே." —கலிங். 436.

"கையில் வாளி தொலைந்தபின் காய்ந்துதம்
மெய்யில் வாளிகள் வாங்கிவில் வாங்கினர்." —வில்லி. முதற்போர், 27.

முதுமொழிவெண்பாக்கள் :

"மார்பத் தழுந்துகணை வாங்கிவிடுத் தான்கரங்கள்
ஈர்பத்தின் மைந்தன் இரங்கேசா - ஆர்வத்தில்." —இரங். 78.

குறிப்பு:

மெய்யின்கண் வேல்தைத்த நிலையினும் பிடுங்கும்போதும் பிடுங்கியபின்னும் துன்பமிகும். அங்ஙனமிருந்தும் வேற்படை கிடைத்தமைக்காக மகிழ்வன் என்பதனால் வீரனுக்குத் தன்மாட்டுண்டான செருக்கும், வேலைப்போக்கி வெறுங்கையனாய் வந்த தன்மேற் பகைவர் வேலைவிட்டமையால் அவரது இழிவுந் தோன்றுதல் காண்க.

தொகுப்பாசிரியர்.

775. விழித்தகண் வேல்கொண்டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— விழித்த கண் பகைவரை வெகுண்டுநோக்கியகண், வேல்கொண்டு எறிய அழித்து இமைப்பின் - அவர் வேலைக்கொண்டு எறிய அஃதாற்ருது அந்நோக்கை அழித்து இமைக்குமாயின், வன்கணவர்க்கு ஓட்டு அன்றோ - அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம்.

அவ்வெகுளிநோக்கம் மீட்டலும் போரின்கண் மீட்சி எனக்கருதி அதுவும் செய்யார் என்பதாம்.

மணக்:— மாற்ருரோடு எதிர்த்துச் சிவந்துநோக்கின கண்ணிலே ஒரு வேலினுலே எறிய, அதற்கு மீண்டும் இமைப்பாராயின், அஃது அஞ்சாதார்க்குக் கெட்டதனேடு ஒக்கும் எ - று.

விழித்தகண் என்பதற்கு மாற்ருனை நோக்கி இமையாத கண் எனினும் அமையும்.

பரிதி:— முகத்திலே வேல்படும்போது கண்ணிமைத்ததன்ரோ! அதுவும் வீரதத்துவத்துக்கு இழுக்காம் எ - று.

காளிங்:— தாம் கூர்த்து நோக்கிய இடத்தே மற்றை எதிர்ந்தோர் தம் கைக்கொண்ட வேலினைத் தம்மீது எறியப் பெற்று வைத்து மற்று அதனைத் தலையழித்து அப்பொழுது இமைப்பர் ஆயின், இமைத்தவர்க்கு முன் சொன்ன தறுகண்மையானது யாதும் இல்லை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"எறிபடைக்கு ஓடா ஆண்மை." —புறம். 154: 10.

"எடுத்தெறி ஞாட்பின் இமையான்." —ஷை. 290: 4.

"வேலும் கணையமும் விழினும் இமையார்
வீரியத் தறுகணர்." —பெருங். 1: 46: 17 - 18.

"இகலிடை இமையா எரிமலர்த் தடங்கண்." —பெருங். 4: 5: 60.

"ஆரமருள் ஆண்டகையும் அன்னவகை வீழும்
வீரர்எறி வெம்படைகள் வீழஇமை யாளுய்." —சீவக. 288.

"ஏந்தல்தன் கண்கள் வெய்ய இமைத்திட எறித வேலோம்பி
நாந்தக உழுவன் நாணி நக்குநீ அஞ்சல் கண்டாய்" —சீவக. 2258.

"விழித்தவெகு ளிக்கண்இடன் ஆடுதொறும் மேவார்
அழித்திமைஎ னக்கருதி ஆர்ப்பர்என வெள்கி
ஒழித்துவலன் நோக்கின்அழல் சீற்றம்நனி காட்டித்
தெழித்து விறல் சாற்றிஅமர் ஏற்பர்திதி பெற்றார்."
—காஞ்சி. வாணேசப். 55.

"வேலெதிர் வரினும் விழித்தகண் இமையா வீறமெய் யூறகா ணுமே
ஆலிய சினத்தின் றூழிலாட் டயரும் ஆண்மையும் அழியினல் லாது
சீலவஞ் சினம்செய் யாதமையாத தீரமும் வேந்துசீ றினும்செல்
வாலியமறமு மன்கண்நீர் உகுப்ப மடிதலும் படைச்செருக் காகும்."
—விநா. அரசி. 124.

776. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. (சா)

உரைப்பகுதி :

பரிமே:— தன் நாளை எடுத்து - தனக்குச் சென்ற நாள்களை எடுத்து எண்ணி, விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும் - அவற்றுள் விழுப்புண் படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்த நாளுள்ளே வைக்கும் வீரன்.

விழுப்புண், முகத்தினும் மார்பினும் பட்ட புண். போர்பெற்றிருக்கவும் அது பெறாத நாள்களோடும் கூட்டும் என்பதாம். இவை மூன்று பாட்டானும் ஊறஞ்சாமை கூறப்பட்டது.

மணக்:— தனது வாழ்நாளாகிய நாளை எண்ணி, அவற்றுள் விழுமிய புண்படாத நாளெல்லாவற்றையும் தப்பின நாளுள்ளே எண்ணி வைக்கும் வீரன் எ - று.

இது போரின்கண் முகத்தினும் மார்பினும் புண்படலும், முதுகு புறங்கொடாமையும் வேண்டும் என்றது.

பரிதி:— வீரன் நாள்தோறும் தன்சரீரத்திலே புதுமைப்புண் படாதநாள்களை உயிருடன் வாழாத நாளாக எண்ணுவான் எ - று.

காளிங்:— போர்க் களத்துச் சென்று புக்கார் புறத்துப்படுதல் இன்றி முகத்தினும் தோளினும் மார்பினும் விழுமிய புண்ணாகிய வீரத் தழும்புபடப் பெறாத நாட்களும் உள அன்றே: அவை எல்லாம் தனக்கு உளவாகக் கருதாது தன்னை வழுக்கிக் கழிந்தனவற்றுள் சிலவையாக அந்நாட்களை வேறே நீக்கி வைக்கும் எ - று.

மேற்கோள்பகுதி:

நச்:— வாள் உழந்து அதன் தாள் வாழ்த்தி - வாட்போரிலே வருந்தினபடியாலே அவ் வருத்தத்தினால் பின்பும் அதன்கட் பிறக்கின்ற முயற்சியை வாழ்த்தி; என்றது வாட்போரின்கண் பெற்ற இனிமையைப் பின்னும் விரும்பி அதிலே முயல்கின்றார் என வீரச்சிறப்பு கூறிற்றாம். 'விழுப்புண்படாத......எடுத்து' என்றார் பிறரும். (மதுரைக். 222.)

சுவாமி:— நிலைமொழியும் வருமொழியும் திரியாது தமிழ்மொழி விதியால் நிலைமாறுதலுக்கு மேற்கோள். (இ. கொ. 114.)

ஒப்புமைப்பகுதி:

" தன்காயம் தனக்குத் தித்திப்பு." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

" உரமிறந்து போகாத உள்ளத் தராவான்
சிரமறந்து நின்றான் சிவசிவா—தரமாய்." —சிவசிவ. 78.

777. *சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்*
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார் - இறக்கத்துத் தம்மொடு செல்லாது வையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழை வேண்டி உயிர்வாழ்தலை வேண்டாத வீரர், கழல் யாப்புக் காரிகை நீர்த்து - கழல்கட்டுதல் அலங்கார நீர்மையை உடைத்து.

வையகத்தைச் சூழும் எனவே, அதன் பெருமை பெற்றும். செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. சூழ்தல் - அகத்திடல். துறக்கமும் புகழும் எளிதின் எய்துவராகலின், ஆபரணமாவது அதுவே என்பதாம்.

மணக்:— பரவும் புகழை விரும்பி உயிரை விரும்பாதார், கழல் கட்டுதல் அழகுடைத்து எ - று.

இது புகழ் விரும்பும் படை வேண்டும் என்றது.

பரிதி:— பூமியிலே சுற்றித்திரிகின்ற கீர்த்தியை வேண்டியும் உயிர் வேண்டாதவீரன் கட்டின வீரகடகம் அழகுபெறும் எ - று.

காளிங்:— இன்னார் இன்ன போர்க்களத்து இன்ன விறல் தொழில்செய்தார் என்று மற்று எண்திசையும் பரந்து திரியும் புகழினையே விரும்பி மற்று இது காரணத்தால் சிறிதும் விரும்பா உயிரினை உடைய ராயவர் தம்காலில் யுத்த வீரக் கழல் யாப்பானது பெரிதும் ஆண்மைக் கட்டளைப்பாடு உடைத்து. மற்றையார் காலில் கட்டிய கழல் யாதுக்கோ என்று அறியோம் யாம் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"புகையுடைத் தென்னின் உண்டு பொங்கனல் அங்கென்று உன்னும்
மிகையுடைத் துலக நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பில் தீரா
நகையுடை முகத்தை யாகி இன்னுரை நல்கு வாயால்"

—கம்ப. அரசி. 121.

"மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை." —கொன்றை. 72.

குறிப்பு:

சுழலும் இசை - உலகைச் சுற்றிச்சுற்றிவரும் புகழ். புகழ்வேண்டி வாழாதவர் கழலணிதல் பெண் தன்மைத்து எனலுமாம். பெண் காலணி அணிவது போலாம், இவர் கழலணிவது என இழித்துக் கூறியவாறு. அழகுக்காக என்பதே முடிவு.

—தொகுப்பாசிரியர்.

778\. உறினுயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— உறின் உயிர் அஞ்சா மறவர் - போர் பெறின் தம் உயிர்ப்பொருட்டு அஞ்சாது அதன்மேற் செல்லும் வீரர், இறைவன் செறினும் சீர் குன்றல் இலர் - தம் இறைவன் அது வேண்டா என்று முனியினும் அவ்வீரமிகுதி குன்றார்.

போர்பெற்றறியாமையின், அது பெற்றால் அரசன் தடுப்பினும் நில்லார் என்பதாம். பிறரும் [1]"போரெனின் புகலும் புனைகழல் மறவர்" என்றும் [2]"புட்பகைக், கேவானாகலின் சாவேம் யாம் என - நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப" என்றும் கூறினார்.

மணக்:— ஒன்று உற்ற காலத்து உயிர்ப்பொருட்டு அஞ்சாத மறவர் தம்மரசனால் செறுக்கப்பட்டாராயினும், தமது தன்மை குறைதல் இலர் எ - று.

இஃது அஞ்சாமையுடையார் வீரியஞ் செய்யுமிடத்துக் குறைய நில்லாமை வேண்டும் என்றது.

பரிப்:— மேல் அதிகாரத்துச் சிறுமை முதலாயின செய்யின் படை வெல்லாது என்றார் ஆயினும், இயல்பாக அஞ்சாமை உடையர் வீரியம் செய்யும் இடத்துக் குறைய நில்லாமை வேண்டும் என்றது.

பரிதி:— அரசர்க்கு ஒரு தறுவாயான இடத்திலே தன்னை உதாரம் பண்ணும் சுத்தவீரனை அரசன் வெறுத்தாலும் தன் சேவகம் குன்றான் எ - று.

காளிங்:— எதிர்ப்படை தம்மேல் வந்து தாக்கும் அளவின்கண் தமது உயிர் பேணக்கருதி அஞ்சாது அவ்விடத்து உயிர் வழங்கக் கருதும் வீரர், தம்மை ஆண்ட அரசரானோர் ஒருகாலம் உற்றுச் செறினும், தமது சேவகத் தறுகண்மையில் சிறிதும் குறைபடுதல் இலர் எ - று.

குறிப்பு:

உயிர்கொடுக்கும் உண்மைவீரனை அரசன் ஒருபோதும் செறுனதலின் செறினும் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

---

[1], [2] புறம், 31, 68.

779. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— இழைத்தது இகவாமைச் சாவாரை - தாம் கூறின வஞ்சினம் தப்பாமைப் பொருட்டுச் சென்று சாவவல்ல வீரரை, பிழைத்தது ஒறுக்கிற்பவர் யார் - அது தப்பியவாறு சொல்லி எள்ளுதற்கு உரியார் யாவர்.

இழைத்தல் இன்னது செய்யேனாயின் இன்னேனாகுக எனத்தான் வகுத்தல். சொல்லி என்பது அவாய்நிலையான் வந்தது. வஞ்சினமுடிப்பான் புக்கு முன்னே சாவினும் தொலைவின்மையின், அதுமுடித்தாராவர் எனச் சாதற்சிறப்புக் கூறியவாறு.

மணக்:— முன் கூறிய வஞ்சினம் தப்பாமல் சாவாரை அவர் தப்பியது சொல்லிப் பழிக்கவல்லவர் யாவர் எ - று.

இது வஞ்சினம் தப்பின் படவேண்டும் என்றது.

பரிதி:— அரசன் சொன்ன அவசரத்தினாலே தன்சீவனை விடும் சுத்தவீரனைப் பிழைகண்டாலும் ஒறுப்பவர் யாவர். எ - று.

காளிங்:— போர்க்களத்து எதிர் நின்ற வீரரை நோக்கி நும்மை யாம் இவை செய்வோம் என்று எண்ணி முன் கூறியது யாது? மற்று அவ்வெண்ணத்தைக் கடவாமை காரணமாகச் சென்று பொருது தம் உயிர் செருக்கும் திறல் உடையோரை இவ்வுலகத்து யாரே தானெண் எண்ணத்தைப் பிழைத்தார் என்று சொல்லி முன் நின்று ஒறுக்க வல்லார் எ - று.

மேற்கோள்பகுதி:

இளம்:— ஒல்லார் நாணப் பெரியவர்க்கண்ணிச் சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்துத் தொல்லுயிர் வழங்கிய அவிப்பலிக்கு மேற்கோள் (தொல். பொருள். 75)

நச்:— ஷை (தொல். பொருள். 76.)

ஒப்புமைப்பகுதி:

"உரைத்தவர் நாவோ பருந்தெறியா தென்று
சிலைத்தெழுந்து செம்மாப் பவரே—மலைத்தால்
இழைத்த திறவா தவரைக் கவற்றிப்
பலிப்புறத் துண்பர் உணா." —பழ. நா.

780. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா(டு)
இரந்துகோட் டக்க துடைத்து. (௬௦)

உரைப்பகுதி:

பரிமே:— புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின் - தமக்குச் செய்த நன்றிகளை நினைந்து ஆண்ட அரசர் கண்கள்நீர் மல்கும்வகை போரிடைச் சாவப்பெறின், சாக்காடு இரந்துகோட்டக்கது உடைத்து - அச்சாக்காடு இரந்தாயினும் கொள்ளும் தகுதியை உடைத்து.

மல்குதலாகிய இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. விளையமு இல்லிடை நோயால் விளிவார் பழவினைப்பயனே எய்தலின், அடுத்தவினையால் துறக்கமெய்தும் சாதலை இரந்துகோட்டக்க துடைத்து என்றார். இவை நான்கு பாட்டானும் உயிரோம்பாமை கூறப்பட்டது.

மணக்:— தம்மை ஆண்டவரது கண் நீர்மல்குமாறு சாகவல்லாராயின், அச்சாக்காடு எல்லாராலும் வேண்டிக்கொள்ளும் தகுதி யுடைத்து எ - று.

இஃது ஆண்டவனுக்குக் கேடுவரின், படவேண்டும் என்றது;

பரிதி:— அரசன் கண்ணீர்மல்கச் சாகிறசாக்காடு தரவேணும் என்று தெய்வசந்நிதியிலே வேண்டிக்கொள்வான் எ - று.

காளிங்:— தம்மைப் பெரிதும் தலையளித்து ஓம்பின அரசன் முதலானோர் இவரை யாம் இழந்தோம்! என்ன பாவம்! என்று இரங்கிக் கண்ணீர் சொரியுமாறு அமரில் புக்குச் சாக வல்லாராயின்; அதுவே சாக்காடு என்பது: மற்று அது புறம் கொடுத்துச் சாகாது இரந்து கொள்ளும் தகுதியினை உடைத்து எ - று.

இனி மற்று இங்ஙனம் படைமாட்சி, படைச் செருக்கால் எதிர் மலைவு காட்டி மற்று இதன் பின்பு இனிது மேவி நட்புப் புரிந்து ஒழுக வேண்டி மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை யதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள்:

"மாலுறுத்தி வீடுமென்பான் மாண்டசிலை தற்கயர்ந்தார்
மோலிபுனை மன்னர்! முருகேசா - சாலப்." —முருகேசர். 78.

குறள்வைப்புமுறை

பரிமே:— என்னைமுன், கானமுயல், பேராண்மை, கைவேல், விழித்த கண், விழுப்புண், சுழலும், உறினுயிர், இழைத்தது, புரந்தார்கண்.

மணக்:— உறினுயிர், பேராண்மை, கானமுயல், என்னைமுன், கைவேல், விழித்தகண், விழுப்புண், சுழலும், இழைத்தது, புரந்தார்கண்.

பரிதி:— உறினுயிர், இழைத்தது, விழித்தகண், விழுப்புண், கைவேல், கானமுயல், பேராண்மை, என்னைமுன், புரந்தார்கண் சுழலும்.

காளிங்:— உறினுயிர், பேராண்மை, என்னைமுன், விழித்தகண், கைவேல், கானமுயல், விழுப்புண், சுழலும், இழைத்தது, புரந்தார்கண்.

79. நட்பு.

தொகுப்புரை:

[நட்பைப்போல செய்தற்கரிய காரியங்கள் எவை? அதைப்போல பகைவர் செய்யும் சூழ்ச்சிக்குக் காவலாக உள்ளன யாவை? அறிவுடையார் நட்பு பிறைமதி போல்வது. பேதையார் நட்பு நிறைமதி போல்வது. நல்லோர் நட்பு பழகப்பழக இன்பந்தருதல் நல்லநூல்கள் பயிலப்பயில இன்பந்தருவதுபோலும். நட்பு நகுதற்காக அல்ல; குற்றம்செய்தகாலத்து நெருங்கித் திருத்துதற்காக. கலந்திருத்தலும், இடைவிடாது பழகுதலும் வேண்டா; உணர்ச்சியே நட்பை விளைப்பது. முகம் மட்டும் மலர நட்பது உண்மைநட்பாகாது; மனம் மலர நட்பதே நட்பு; கேடுதரும் தீயவழிகளை விலக்கி, நன்னெறியில் செலுத்தி, நட்பினற்குத் துன்பம் வந்தால் தானும் வருந்துவதே நட்பாம். ஆடையிழந்தவன்கை விரைந்துசென்று ஆடையைப் பிடித்துக் கட்டுமாறுபோல, நட்பாளனுக்குத் துன்பம்வரின் விரைந்துசென்று நீக்குவதே நட்பாம். நட்பிற்கு இருப்பிடம் முடிந்தவரை மாறுபடாமல் அறத்திலும் பொருளிலும் தளராமல் தாங்கும் நிலையாம். நட்பாளனைப்பற்றி "இவர் என்னிடம் வைத்திருக்கும் அன்பு இவ்வளவு; நாம் இவரிடம் இவ்வளவு உறுதியும் அன்பும் உடையோம்" என்று சொன்னாலும் அன்றே நட்பு இழிவுபடும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பினை ஐந்து அதிகாரம் விதிமுகத்தானும் பன்னிரண்டு அதிகாரம் எதிர்மறைமுகத்தானும் கூறுவான் தொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார். அஃதாவது இன்னது என்பதூஉம் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும்.

மணக்:— நட்பாவது நட்பாமாறு கூறுதல். அமைச்சு, நாடு, அரண், பொருள், படை ஐந்துங்கூறினார் இனி நட்பாமாறு கூறுகின்றார். மன்னருள் படையும் பொருளும் உள்ளிட்டன நிலைநின்று வளர்வதும் இனநலன் அழிவு பெறாத நட்பையுடையவனுக்கல்லது கூடாதாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிப்:— நட்பியலாவது அறம், பொருள் இன்பம் என்னும் மூன்றின்கண்ணும் நின்று நன்னெறிக்கண் உய்க்கும் ஆதலின் அதன் இலக்கணம் கூறுதல். அரசன் தானும் திருந்தித் திருந்தினாரையும் கூட்டிக் கொண்டு நாடு முதலான பொருளையும் பெற்று அதனை அழியாமல் காக்கும்

படையை உடையனாயினும், காமத்தானாதல் மயக்கத்தானாதல் பிறழ ஒழுகுவானாயின் இவை எல்லாப் பொருளையும் கெடுத்துத் தானும் கெடுவன் என்று அவ்வாறு ஒழுகுங்கால் தன்னில் பெரியர் ஆகிய மந்திரி புரோகிதரை ஒளித்தும் தன் ஏவல்வழிவரும் அமாத்தியரையும் கேளாதும் ஒழுகுவன் ஆதலின், அவ்விடத்து உடன்பட்டு நின்று பாதுகாப்பர் வேண்டும் என்று இப்பொருள் கூறப்பட்டது. அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்பட நட்பு இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், அவரை ஆராயும் ஆறு ஓர் அதிகாரத்தானும், நட்கப்படாதார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், மனத்தினால் நட்பின்றி நட்டார் போன்று ஒழுகுவார் திறன் ஓர் அதிகாரத்தானும் கூறப்பட்டது. அவற்றுள் நட்பாவது நட்டோர் மாட்டுச் செய்யும் திறன் கூறுதல்.

பரிதி:— நட்பாவது நட்பின் முறைமை சொல்லுதல் எ - று.

781. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— நட்பின் செயற்கரிய யா உள - நட்புப்போலச் செய்து கோடற்கரிய பொருள்கள் யாவை உள? அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள - செய்து கொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கு அரிய காவலாவன யாவை உள?

நட்புச்செய்தற்காவாரைப் பெறுதலும் பெற்றால் செய்யும் உபாயமும் செய்தால் திரிபின்றி நிற்றலும் முதலிய அரியவாகலின் நட்பிற் செயற்கரியன இல்லை என்றும், செய்தால் பகைவரஞ்சி வினைதொடங்காராகலின் அதுபோல வினைவாராமைக்கு அரிய காவலில்லை என்றும் கூறினார். நட்புத்தான் இயற்கை செயற்கை என இருவகைப்படும். அவற்றுள் இயற்கை பிறப்புமுறையானாயதூஉம் தேயமுறையானாயதூஉம் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையது சுற்றமாகலின் அது சுற்றந்தழாலின் அடங்கிற்று; ஏனையது பகையிடையிட்ட தேயத்ததாகலின், அது துணைவலி என வலியறிதலுள் அடங்கிற்று. இனி ஈண்டுச் சொல்லப்படுவது முன்செய்த உதவிபற்றி வரும் செயற்கையேயாகலின், அதன் சிறப்பு இதனால் கூறப்பட்டது.

மணக்:— நட்புப்போல உண்டாக்குதற்கு அரியவான பொருள்கள் யாவை உள? அவ்வாறு உண்டாக்கப்பட்ட நட்புப்போல, பிற நல்வினை செய்தற்கு அரியவாகக் காக்கும் காவல்கள் யாவை உள எ - று.

இது நட்புத் தேடலரிது என்றது.

பரிதி:— அரியகாரியத்தில் அரியது நட்புப்போல் இல்லை; நட்புப் போலே உதவியும் இல்லை எ - று.

காளிங்:— நட்பினைப்போல ஒருவரால் செய்துகோடற்கு அரியன மற்று யா உள? எனவே யாவும் இல்லை; இனி நட்பினதுபோல வினைக்கு அரிய யா உள காப்பு? எனவே தாம் செய்துகொண்ட பொருள் முதலியவர்க்கங்களைப் புரைபடாமல் காக்கின்ற காப்பு மற்று இந்நட்புக்குப் பழுதுபடாமல் காப்பது ஓர் காவல் வினைபோலே வினைக்கு அரியன யாவும் இல்லை எ - று.

782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
*பின்னீர பேதையார் நட்பு. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— நீரவர் கேண்மை பிறை நிறை நீர - அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறையுந்தன்மைபோல நாடோறும் நிறையுந்தன்மைய வாம்; பேதையார் நட்பு மதிப் பின் நீர - மற்றைப் பேதைமையுடையார் நட்புக்கள் நிறைந்தமதி பின் குறையுந்தன்மைபோல நாடோறும் குறையுந் தன்மையவாம்.

நீரவர் என்றார், இனிமைபற்றி. கேண்மை, நட்பு என்பன ஒருபொருட் கிளவி. செய்தாரது பன்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாரும் செய்தன முன் சுருங்கிப் பின் பெருகற்கும், பேதையாரும் பேதையாரும் செய்தன முன்பெருகிப் பின் சுருங்கற்கும் காரணம் தம்முள் முன் அறியாமையும் பின் அறிதலுமாம்.

மணக்:— பிறை நிறையும் நீர்மைபோல, ஒருநாளைக் கொருநாள் வளரும் அறிவுடையார் கொண்ட நட்பு; மதியின் பின்னீர்மைபோல ஒருநாளைக் கொருநாள் தேயும் பேதையார் கொண்ட நட்பு எ - று.

*'பின்னீர்மை' காளிங்கர் பாடம்.

இஃது அறிவுடையார் நட்பு வளருமென்றும் அறிவில்லாதார் நட்புத் தேயுமென்றும் கூறிற்று.

பரிப்:— *பின் நட்பு ஆராய்தல் கூறுகின்றார் ஆகலின் இது பின் கூறப்பட்டது.

பரிதி:— வளர்பிறை ஒப்பது நல்லோர் நட்பு; தேய்பிறை ஒப்பது பொல்லாத நட்பு எ - று.

காளிங்:— பிறை உருபு நாள்தோறும் நிறைந்து செல்லும் தன்மையதுபோலும் நீர்மைஉடையார் கெழுமுதல் தன்மை; மற்று இனிப் பிறை நிறை மதியது பின்நாள் தொடங்கித் தேய்ந்துசெல்லும் நீர்மையது உடைத்து அறிவுகேடர் செய்யும் நட்பானது எ - று.

மேற்கோள்பகுதி:

காரி:— இடையிணை நிரல்நிறையணியாய் நீரவர் கேண்மைக்குப் பிறையும், பேதையார் நட்புக்கு மதியும் இயைந்ததற்கு மேற்கோள். (மா.ற. 173.)

ஒப்புமைப்பகுதி:

"வளர்பிறை போல வழிவழிப் பெருகி." —குறுந். 289.

"முறைமையில் தேயும் நிறைமதி நீர்மை, நண்பு." —பெருங் 1 : 46 : 309.

"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு." —நாலடி. 125.

"நளிகடல் தண்சேர்ப்ப நாள்நிழற் போல
விளியும் சிறியவர் கேண்மை - விளிவின்றி
அல்கு நிழற்போல் அகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு." —ஷை 166

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மைஎஞ் ஞான்றும்
குருத்தில் கரும்புதின் றற்றே- குருத்திற்கு
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுர மிலாளர் தொடர்பு." —ஷை 211.

*இவர் இதனைப் பத்தாவது குறளாகக் கொண்டார் ஆதலின் இங்ஙனம் வருகின்ற அதிகாரத்துக்குத் தோற்றுவாய் செய்தார்.

குறிப்பு

இக்குறளில் அறிவுடையாரை "நீரவர்" என்றது மிகச் சிறந்த சொல் ஆட்சி. நீர்மை - இனிமை, இனிமைப்பண்பு அறிவுடையார்க்கே அமைந்ததாகலின் இவ்வாறு கூறினர்.

—தொகுப்பாசிரியர்.

783. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— பண்பு உடையாளர் தொடர்பு பயில்தொறும் - நற்குணமுடையமக்கள் தம்முள் செய்த நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கு இன்பஞ்செய்தல், நூல் நவில்தொறும் நயம் போலும் - நூற்பொருள் கற்குந்தோறும் கற்றார்க்கு இன்பஞ்செய்தலை ஒக்கும்.

நயத்தினைச் செய்தலான், நயம் எனப்பட்டது. இருமையினும் ஒருகாலைக்கொருகால் மிகும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் அச்சிறப்பிற்கு ஏது கூறப்பட்டது.

மணக்:— படிக்குந்தோறும் நூல்நயம்போல அறிவுதரும், பழகுந்தோறும் பண்புடையாளரது நட்பு எ - று.

இது குணவானோடு நட்புக்கொள்ளின், அறிவுண்டாம் என்றது.

பரிப்:— மேல் பொதுவாக நட்டோர் செய்யும் திறன் கூறினர்: இது குணவானோடு நட்புக் கொள்ளின் அறிவு உண்டாம் என்று கூறியது.

பரிதி:— கல்வியைப் பாராட்டப் பாராட்ட அறிவு ஊறும்; அத்தன்மை போல நட்பும் பழகப் பழக மகிழ்ச்சி கொடுக்கும் எ - று.

காளிங்:— கற்குந்தொறும் கற்குந்தொறும் கற்பவர்க்கு நூல் நயம் செய்யும் இனிமை போலும்: பயிலுந்தொறும் பயிலுந்தொறும் பண்புடையாளர் நட்பு எ - று.

இனி இவ்வாறு நட்பு வடு இன்றி வளர்ந்து செல்லும் இடத்துத் தகுதி ஆராய்ந்து நடக்க வேண்டுதலான் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

" நவில்தொறும் இனிய ஞானம் போலப்
பயில்தொறும் இனியநின் பண்பு." —பெருங். 5; 7 : 148-9.

" ...நூல் உணர்தொறும் உறுநயம் போலக்
கழிமகிழ் நாளும் பயில்தொறும் வளரக் கலப்பதே நட்பெனப் படுமால்."
—விநா. அரசி. 125.

குறிப்பு:

பலகாற்படித்தல், பலகாற்பாடம்சொல்லுதல், பேசுதல் முதலிய எல்லா வகையினும் நூலறிவு ஒருகாலைக்கொருகால் நயம்மிக்குத்தோன்றும். அதுபோலப் பழகுந்தோறும் நட்பு வளரும் என்பதாம். மேல் " புணர்ச்சி பழகுதல் வேண்டா " என்ற ஆசிரியர் ஈண்டுப் பயில்தொறும் இன்பம் பயக்கும் என்றது எவ்வாறு இயைவதாகும் எனின், புணர்ச்சி பழகுதல் என்ற குறள் நட்பு உண்டாதற்குக் காரணம் கூறியது; இக்குறள் பயிலுதலால் அந்நட்பு வளர்ந்து இன்பம் அளிக்கும் என்பது அறிவிக்கின்றது.

—தொகுப்பாசிரியர்

784. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— நட்டல் நகுதற்பொருட்டன்று - ஒருவனோடு ஒருவன் நட்புச்செய்தல் தம்முள் நகுதற்கு இயைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று, மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற்பொருட்டு - அவர்க்கு வேண்டாதசெய்கை உளதாயவழி முற்பட்டுக் கழறுதற்பொருட்டு.

பழியும் பாவமும் தரும்செய்கை துன்பமே பயத்தலான் வேண்டப் படுவதன்மையின் அதனை மிகுதி என்றும், அதுசெய்தற்கு முன்னே மீட்டல்வேண்டுதலின் மேற்சென்று என்றும், இன்சொற்கு மீளாமையின் இடித்தற்பொருட்டு என்றும் கூறினர்.

மணக்:— ஒருவனோடு ஒருவன் நட்புப்பண்ணுதல் நகுதற் பொருட்டன்று, மிகையாயின செய்யுமிடத்து முற்பட்டுக்கழறுதற்பொருட்டு எ - று.

இது மனமகிழ நட்புக்கோடலன்றித் தீக்கருமங்கண்டால் கழறவும் வேண்டும் என்றது.

பரிதி:— இடுக்கண் வந்தால் நிந்தித்துச் சிரிப்பனவும் நன்றான காலத்து மகிழ்ந்து சிரிக்கவும் அல்லது துனபம் வருமுன்னே பரிகாரம் பண்ணுவது நட்பு எ - று.

காளிங்:— ஒருவரோடு ஒருவர் நட்டலாவது புறமே நகை செய்தல் பொருட்டு அன்று: மற்று யாதிற்கோ எனின், அவர் நடக்கும் முறைமைக்கும் இங்கு அமையாது ஆகியது ஓர் குற்றம் கண்டால் அப்பொழுதே அவர் தம்மைப் பெரிதும் அடர்த்துக் கழறுதல் பொருட்டு; எனவே அவர் கேடு தம் கேடு எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"வாக்கரசர் பிள்ளாய் எனவலித்து மாற்றனுற்றார்
தூக்குபிள்ளை யார்செலவைச் சோமேசா - நோக்கு." —சோமேசர். 79

குறிப்பு:

இக்குறள், நட்பாளர் பலர் கூடியிருந்து நகையாடிக் காலம் கழித்தலையும், நட்பாளனுடைய செல்வம் முதலிய தகுதிகுறித்து அவன் எதுசெய்யினும் சிரித்துச் சிரித்து அவனைக் கெடுத்தலையும் கருதிக் கூறப்பெற்றது.

—தொகுப்பாசிரியர்.

785. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— புணர்ச்சி பழகுதல் வேண்டா - ஒருவனோடு ஒருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை, உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் - இருவர்க்கும் ஒத்த உணர்ச்சி தானே நட்பாம் உரிமையைக் கொடுக்கும்.

புணர்ச்சி ஒருதேயத்தாராதல்; *"இன்றேபோல்க நும்புணர்ச்சி" என்றதும் அதனை. பழகுதல் பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல், இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்

*புறம், 58: 28.

போல உணர்ச்சி ஒப்பின், அதுவே உடனுயிர்நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம். நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என்னும் காரணம் மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்து என்பது இதனன் கூறப்பட்டது.

மணக்:— நட்பாதற்குப் பலநாள் பழகுதல் வேண்டா; ஒருநாள் கண்டாராயினும் உணர்வுடையார்க்கு அவ்வுணர்வுடைமை தானே, நட்பாகும் உரிமையைத் தரும் எ - று.

அவ்வுணர்வுடைமை தானே நட்பாகும் என்றவாறு.

பரிப்:— மேல்குணவாளுெடு கொண்ட நட்பு அறிவு உண்டாக்கும் என்றார்: இஃது ஒத்த அறிவு உடையார்க்கும் அவ்வறிவுடைமை தானே நட்பு ஆக்கும் என்று கூறப்பட்டது.

பரிதி:— நட்புக்குப் பழமை என்று வேண்டாம் கூடின நல்ல நட்பாகில் அந்தக்காலம் பழகின பழமையாம் எ - று.

காளிங்:— ஒருவரோடு ஒருவர் கலப்பு நெடுங்காலம் பழகுதல் வேண்டா: மற்று என்னை எனின் அவர் நல்ல என்று தாம் ஒருக்குற்று உணர்ந்த உணர்ச்சிதானே நட்பு ஆகிய வேற்றுமையற்ற உரிமையைத் தரும் எ - று.

ஈண்டுக் கிழமை என்பது உரிமை.

ஒப்புமைப்பகுதி;

"கேட்டன் மாத்திரை யல்லது யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்
அரிதே தோன்றல் அதற்பட ஒழுகல்என்று
ஐயம் கொள்ளன்மின் ஆறறி வாளீர்." —புறம். 216: 1: 5.

"நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன்." —முதுமொழிக். 5: 5.

"செல்வுழிக் கண்ணொருநாள் காணினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் தோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநாள் அடிப்படின்
கல்வரையும் உண்டாம் நெறி." —நாலடி. 154.

"காண்டகைமை இன்றியும்முன் கலந்தபெரும் கேண்மையினார்
பூண்டபெருங் காதலுடன் போனகமும் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டஅரசு அமுதுசெயத் திருவமுதாம் படிஅமைத்து."
—பெரிய, திருநாவுக். 203.

முதுமொழிவெண்பாக்கள்:

"உண்மைஅறி கண்ணனைப் புடையாரைக் கண்டவுடன்
திண்மைநட்புக் கொண்டாய் தினகரா - உண்மை." —தினகர. 82.

"பிள்ளை இறைவர் அருள்பெறலும் கேட்டிருந்த
கள்ளவிழ்பூங் கோதையார் காதலால் - சொல்லும்."—முதுமொழி. 123

"அரசினைஅப் பூதி அடிகளறி வாரோ
உரைசெயுணர் வாலுநட் புற்றார் - மருவிப்." —திருத். 32.

786. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்(து)
அகநக நட்பது நட்பு. (சா)

உரைப்பகுதி:

பரிமே:— முகம் நக நட்பது நட்பு அன்று - கண்டவழி அகம் ஒழிய முகமாத்திரமே மலரும்வகை நட்குமது நட்பாகாது; நெஞ்சத்தகம் நக நட்பது நட்பு - அன்பால் அகமும் மலர நட்குமதே நட்பாவது.

நெஞ்சின்கண் நிகழ்வதனை நெஞ்சு என்றார். இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. இதனால் இரண்டும் ஒருங்கே மலர வேண்டும் என்பது பெற்றாம்.

மணக்:— முகத்தோடு முகமகிழக் கொள்ளும் நட்பு நட்பன்று; மனத்தோடு மனமகிழக் கொள்ளும் நட்பே நட்பாவது எ - று.

பரிப்;— மேல் நட்பு அரிது என்றார்: உலகத்துப் பலரும் தம்மில் கலந்தது காணாநின்றோம். அஃது அரிதாயினவாறு என் என்றார்க்குக் கூறப்பட்டது.

பரிதி:— முகம் மலரவும் காரியம் கெடவும் செய்வது நட்பல்ல; மனம் மகிழவும் காரியமாகவும் கூடுவது நட்பு எ - று.

காளிங்:— புறத்து உறுப்பு ஆகிய முகநகை மாத்திரம் செய்து நட்புக்கொள்ளும் நட்பது நட்பு அன்று: இனி அகத்து உறுப்பு ஆகிய நெஞ்சானது உள் மகிழ்வு உற நிற்கும் நட்பே நட்பானது எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"சீரூர் கயிலையினும் செல்லுநாள் வில்லவனை
ஆரூரர் சிந்தித் தழைத்தகன்றார் - ஓரூர்." —திருத். 94.

குறிப்பு:

காரியங்கொள்ளும் நட்புவாணிகர்கள் சிலர் முகமலர்ச்சி மட்டும் காட்டி நட்பாளுவர். அவரியல்பை எடுத்துக்காட்டி உண்மை நட்பு அகமலர்ச்சியே எனப் பட்டது. அகமலர முகமும்மலரும். நட்பினர் தீயசெய்யின் அகமலர்ச்சி முகக்கடுப் பாகவும் தோற்றமளிக்கும். வெளித்தோற்றம் எப்படியாயினும் அகமலர்ச்சியோடு செய்யும் நட்பே வேண்டப்பெறுவது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

787. அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— அழிவினவை நீக்கி ஆறு உய்த்து - கேட்டினைத்தரும் தீநெறிகளைச் செல்லுங்கால் விலக்கி ஏனை நன்னெறிகளைச் செல்லாக்கால் செலுத்தி, அழிவின்கண் அல்லல் உழப்பது நட்பாம் - தெய்வத்தால் கேடு வந்துழி அது விலக்கப்படாமையின் அத்துன்பத்தை உடன் அனுப விப்பதே ஒருவனுக்கு நட்பாவது.

ஆறு என வருகின்றமையின், அழிவினைத்தருமவை என்றொழிந் தார். *"தெருண்ட அறிவினர்" என்புழிப்போல இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. இனி நவை என்று பாடமோதி, அதற்குப் போரழிவினும் செல்வ அழிவினும் வந்த துன்பங்கள் என்றும், அழிவின் கண் என்பதற்கு யாக்கை அழிவின்கண் என்றும் உரைப்பாரும் உளர்.

*நாலடி, 301.

மணக்:— நட்டார்க்கு அழிவு வந்தவிடத்து, அவர் துன்பத்தை நீக்கி, நல்ல நெறியின்கண் செலுத்தித் தாங்கி, தன்னால் செயலற்றவிடத்து அவரோடு ஒக்கத் தானும் துன்பம் உழப்பது நட்பு எ - று.

பரிப்:— இது துன்பம் கெடுக்க மாட்டாக்கால் தானும் துன்பம் உறவேண்டும் என்றது.

பரிதி:— அழிவு வந்த இடத்து நல்லவழியிலே செலுத்தித் துயரம் ஏற்பட்டால் கூடஅநுபவிப்பது நட்பு எ - று.

காலிங்:— தம்மொடு நட்டார்க்கு ஓர் இடுக்கண் வந்தவிடத்துக் குற்றத்தை நீக்கி மற்று இவர்க்கு நல்வழியைச் செலுத்திப் பின்னும் வருகிற அழிவின்கண் தாமும் கூட நின்று அவ்வல்லல் அனுபவிப்பதே நட்பாவது எ - று.

மேற்கோள்பகுதி :

இளம்:— பொருளாவது நாடும், பொருளும், அரணும், அமைச்சும், நட்பும், படையும் எனக்கூறி நட்பு என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள் 75.)

ஒப்புமைப்பகுதி:

"அழிதரு நெறியில் செலவினை விலக்கி
யாம்வழி செலுத்திஊழ் வினையால்
அழிவுவந் தடுப்பின் அதற்குடன் அல்லாந்து
ஆக்கைவே றின்றியா ருயிர்கள்
ஒழிவகை யின்றி உணர்ச்சிஒத் தருநூல்
உணர்தொறும் உறுநயம் போலக்
கழிமகிழ் நாளும் பயில்தொறும் வளரக்
கலப்பதே நட்பெனப் படுமால்." —விநா. அரசி. 125.

முதுமொழிவெண்பாக்கள் :

"வாசவன் தட்சன் மகம்புகா வாறய்த்தான்
ஈசன் அயன்போற் றிரங்கேசா - நேசம்." —இரங். 79.

"மேவ விதுரமனொடு விண்ணிழந்திம் மண்ணடைந்தார்
மூவாகல் வஞ்சி முருகேசா - தாவில்." —முருகேசர். 79.

குறிப்பு:

நட்டான் ஒருவன் தானாகச்செல்லும் தீநெறிகளை விலக்கி, நன்னெறி இது என்று காட்டி, அதன்கண் நடத்தி, வினைவயத்தால் அழிவுவரின் தானும் கூடவே அவ்வழிவைப் பகிர்ந்து நுகருவது நட்பு என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

788. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— உடுக்கை இழந்தவன் கைபோல - அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கைசென்று உதவி அவ்விளிவரல் களையு மாறுபோல, ஆங்கே இடுக்கண்களைவது நட்பாம் - நட்டவனுக்கு இடுக்கண் வந்துழி அப்போழுதே சென்று உதவி அதனைக்களைவதே நட்பாவது.

அற்றங்காத்தற்கண் கை தன்மனத்தினும் முற்படுதலின், அவ் விரைவு இடுக்கண் களைவுழியும் அதற்கொத்த தொழில் உவமையினும் வருவிக்க.

மணக்:— உடைசோராநின்றானுக்குக் கைசென்று உடைசோராமற் காத்தாற்போல, இடுக்கண்வந்தால் அப்பொழுதே அவ்விடுக்கணை நீக்குவது நட்பாவது எ - று.

பரிப்:— இது கழறுதலே அன்றித் துன்பம் துடைக்கவும் வேண்டும் என்றது.

பரிதி:— புடவை சோர்ந்தால் கை சென்று தாங்கும் முறைமை போல நட்பாளர்க்கு இடுக்கண் வந்ததறுவாய்க்கு இடுக்கண்தீர்ப்பது நட்பு எ - று.

காளிங்:— உடை நழுவினவன் தனது கை கடிது பற்றித் தாங்கிக் கொண்டாற்போல அப்பொழுதே அவ்விடுக்கண் களைவது யாது? மற்று அதுவே நட்பாவது எ - று.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— உடுக்கை என்பது உடுக்கப்படும் பொருளை உணர்த்துங்கால் ஐகாரவிகுதியை உடையது என்றும், உடுத்தல் எனப் புடைபெயர்ச்சியை உணர்த்துங்கால் கை என்பது விகுதி என்றும் கூறுவர். (தொல், விருத். பக். 34.)

ஒப்புமைப்பகுதி:

" உடையழி காலை உதவிய கைபோல்
நடலை தீர்த்த நண்பனது." —பெருங். 5 : 3 : 39 - 40.

" தோளுற்று ஓர் தெய்வம் துணையாய்த் துயர்தீர்த்தவாறும்."
—சீவக. 10.

" சோரா நல்நட்பு உதவியின் அறிப." —முதுமொழிக். 2 : 3.

" கடுக்கை யணிந்த முடியோன் திருவெங்கைக் காரிகையாய்
உடுக்கை இழந்தவன் கைஓர் பொருளை ஒழித்ததனைத்
தடுக்கை விரைந்தது போல்நட்ட வேந்தன் தனக்குதவி
அடுக்கை விழைந்து நினைவிடுத் தார்நட் பறிந்தவரே."
—திருவெங்கை. 417.

" பொடிய ணிந்தெழில் பொங்குறும் அல்லமன்
அடியர் தங்கள் அகத்திற் றுயரினை
உடையி ழந்தவன் ஒருவன் கரம்எனக்
கடித டைந்து களைந்தருள் செய்யுநாள்." —பிரபு. முத்தாயி. 2.

" ....வாரம் என்பது
அல்லல் அடையின் அவர்விழிக்கு வாரிமைபோல்
மெல்லுடைக்குக் கைபோல் விரைவதன்றோ."
—கச்சி, ஆனந்த. 382.

" உற்றசினேகம் உயிருக்கு அமுதாம்." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

" இட்டமாய் வந்தார்க் கிடுக்கணு ழலவரைத்
தெட்டஒண் ணுது தினகரா - உற்றதுகேள்." —தினகர. 83.

"நன்னிழலில் நீர்வைத்து நம்பர் நடுப்படையில்
தென்னரழி யாதருளும் செய்தியான் - முன்னர்." —முதுமொழி. 124.

"உற்ற குசேலனல முற்றிருத்தற் காஉவந்தோர்
சிற்றுணவு கொண்டான் சிவசிவா - சுற்றும்." —சிவசிவ. 79.

789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்று நிலை. (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் - நட்பினுக்கு அரசிருக்கை யாது எனின், கொட்பு இன்றி ஒல்லும் வாய் ஊன்றும் நிலை- அஃது எஞ்ஞான்றுந் திரிபின்றி இயலுமெல்லை எல்லாம் அறம்பொருள்களின் தளராமைத் தாங்கும் திண்மை.

ஒருஞான்றும் வேறுபடாது மறுமை இம்மைகட்கு உறுதியாய அறம் பொருள்களில் தளர்ந்துழி அத்தளர்ச்சி நீக்கி அவற்றின்கண் நிறுத்துதற்கு மேல் ஒருசெயலும் இன்மையின், அதனை நட்பிற்கு முடிந்த எல்லை என்றார்.

மணக்:— நட்புக்கு மேம்பட இருக்கும் இடம் யாதெனின், மனத்தின்கண் ஐயுறவின்றிச் செல்லுமாற்றால் தளராமைத் தாங்கி நிற்கும் நிலை எ - று.

வீற்றிருத்தல் - தலைப்பட இருத்தல்.

பரிப்:— நட்புக்குச் சுழல்வு இன்றி இனிது இருக்கலாவது யாது என்னில், அதுவும் இடத்து ஊன்றியாகி நிற்றல் எ - று.

கொட்பு இன்றி வீற்றிருத்தல் எனக் கூட்டுக. இதனால் சொல்லியது நட்புத் திரிவின்றி இருத்தலாவது நட்டார்க்குத் தளர்ச்சிவந்தால் தாங்குதல் என்றவாறு ஆயிற்று. மேல் கூறின எல்லாம் ஒத்தார்மாட்டும் மிக்கார்மாட்டும் செய்யும் திறன் கூறிற்று. இது செல்வக் குறைபாட்டினால் தம்மில் தாழ்ந்தார்மாட்டும் செய்யும் திறன் கூறிற்று.

பரிதி:— நட்பாவது எது என்னில் இடையூறு படாமல் அக்காலம் பெற நட்பதே நட்பு எ - று.

காளிங்:— தாம் இவ்வாறு நட்டநட்பிற்குப் பின் ஒரு குறை இன்றி இனிது வீற்றிருக்கை யாதோ எனின், அவர்க்கு உதவவேண்டும் இடத்து எங்கும் புரிவு இன்றித் தமக்கு இயலும்வழியெல்லாம் உதவி உரைத்து நிற்கும் நிலைமை எ - று.

கொட்பு இன்றி என்றது புரிதல் இன்றி என்றது.

முதுமொழிவெண்பாக்கள் :

" தம்முடைய தோழர்வரத் தம்முடைய தோழரையும்
வம்பினென வெண்கயிலை வாழ்வித்தான் - எம்இறைவன்." —திருத். 98.

குறிப்பு:

ஊன்றும்நிலை என்பதற்கு அறம்பொருள்களில் தளராமைத் தாங்கும் திண்மை என்றார் பரிமேலழகர். இன்பத்தில் தளர்ந்து புறத்தொழுக்கம் உளனுய வழியும் தடுத்து நிலைக்கச்செய்தல் நட்பினனுக்குக் கடமையன்றோ எனின், அங்ஙனம் தடுத்தல் அறத்துப்பாற்படுதலின் கூறாராயினர் என்க. வேண்டா கூறாது சுருங்கச் சொல்லும் பரிமேலழகர் கருத்தறிந்து இன்புறுக. இன்பத்துத் தகைதலை அகப்பகுதியில் கற்றறிபாங்கன் கழறல் முதலாயினவற்றானும் காண்க.

—தொகுப்பாசிரியர்.

790. இனையர் இவரெமக் கின்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு. (௧௦)

உரைப்பகுதி :

பரிமே:— இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் - இவர் நமக்கு இத்துணை அன்பினர் யாம் இவர்க்கு இத்தன்மையம் என்று ஒருவரை ஒருவர் புனைந்துசொல்லினும், நட்புப் புல்லென்னும் - நட்புப் புல்லிதாய்த் தோன்றும்.

இவர்க்கு என்பது வருவிக்கப்பட்டது. தாம் அவர் என்னும் வேற்றுமையின்றி வைத்துப் புனைந்துரைப்பினும் வேற்றுமை உண்டாமாகலின், நட்புப் புல்லென்னும் என்றார். இவை ஐந்து பாட்டானும் நட்பினது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— இவர் நமக்கு இத்தன்மையர், யாமும் இவர்க்கு இத்தன்மையோம் என்றுபேணிச் சொல்லினும், நட்புவாடும்; ஆதலால், நட்பினைத் தன்னைத்தான் நினைக்குமாறுபோல நினைக்க எ - று.

பரிப்:— இது மேல் கூறியவாறு செய்தலே அன்றித் தான் அவன் என்னும் வேற்றுமை இன்றி ஒழுகவேண்டும் என்றது. இத்துணையும் நட்பின் இலக்கணம் கூறப்பட்டது.

பரிதி:— இவர் நமக்குச் சுற்றத்தினாலே இன்னமுறைமையாவார் என்று சொல்லி நட்பு வைத்தது நட்பல்ல எ - று.

காளிங்:— வேறு ஒருவர் வந்து தம்மொடு இவர் நுமக்கு யாவர் என்று வினவினால், 'இவர் நமக்கு இன்ன தன்மையர்: யாம் இவர்க்கு இன்ன தன்மையேம்' என்று இங்ஙனம் தம் கெழுமுதல் புனைந்து உரைப்பினும் பொலிவு அழியும் நட்பு; எனவே பேதையார் நட்பின் பிழையினைப் பெரிதும் கடிந்தவாறு ஆயிற்று எ - று.

ஒப்புமைப்பகுதி:

'முகனமர் கிளவி முன்னின்று உரைப்பின்
ஏதின்மை ஈனும் ஏனோர் மாட்டு.'' —பெருங். 4 : 8 : 6-7.

குறிப்பு:

எல்லையின்றிப் புகழுலகத்தும் பிணித்துநிற்பதாய நட்பை இனையர், இத் தன்மையர் என்பன அளவுபடுத்தலின் நட்பு புல்லிதாயிற்று என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— செயற்கரிய, நிறைநீர, நவில்தொறும், நகுதல், புணர்ச்சி, முகநக, அழிவின், உடுக்கை, நட்பிற்கு இனையர்.

மணக்:— செயற்கரிய, முகநக, நகுதல், உடுக்கை, நட்பிற்கு, இனையர், நவில்தொறும், புணர்ச்சி, நிறைநீர, அழிவின்.

பரிதி:— அழிவின், நகுதல், புணர்ச்சி, முகநக, இனையர், நிறைநீர, நட்பிற்கு, செயற்கரிய, உடுக்கை, நவில்தொறும்.

காளிங்:— அழிவின், உடுக்கை, நிறைநீர, இனையர், முகநக, நகுதல், புணர்ச்சி, செயற்கரிய, நட்பிற்கு, நவில்தொறும்.

80. நட்பாராய்தல்.

தொகுப்புரை:

[நட்புக்கொண்டபின் பிரிதல் முடியாது. ஆதலால் ஆராயாது சிநேகித்தலைக்காட்டிலும் தீமையில்லை. பலமுறையும் ஆராய்ந்துகொள்ளாத நட்பு இறுதியில் சாகுந் துன்பத்தையும் தரும். குணம், குற்றம், குடிப்பிறப்பு, சுற்றம் இவைகளை ஆராய்ந்து நட்புக்கொள்க. நல்லகுலத்தில் பிறந்து, உலகப்பழிக்கு அஞ்சி நடப்பவன் நட்பை எது கொடுத்தும் பெறவேண்டும். அழஅழச் சொல்லித் திருத்தியும், மேன்மேல் தவறுசெய்யாமல் தடுத்தும், வழக்கங்களையறியவல்லார்நட்பை ஆராய்ந்து கொள்க. நமக்குக் கேடுவந்தாலும் அதிலும் ஒரு நன்மையுண்டு; அக்கேடு தம் நட்பாளரை அளக்கும் கருவியாகப் பயன்படுகிறது ஆதலால். பேதைகள்நட்பைக் கழித்துவிடுதலே ஒருவர்க்குப் பெரியபேறும். ஊக்கம் அழிதற்கேற்ற வினைகளை எண்ணலும் கூடாது. துன்பத்தில் கைவிடுவார் நட்பைக் கொள்ளக்கூடாது. அங்ஙனம் கெட்டகாலத்துக் கைவிடுவார் நட்பு மரணகாலத்தும் மனத்தை வருத்தும். குற்றமில்லாத பெரியோர்நட்பைப் பொருந்துக. பணம் கொடுத்தாவது தீயோர் நட்பை விடுக.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது மேற்சொல்லிய இலக்கணத்தாரை ஆராய்ந்து அறிந்தே நட்கவேண்டுதலின், அவரை ஆராயுந்திறம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— நட்பாராய்தலாவது நட்பிற்கு ஆவாரை ஆராய்ந்து கொள்ளுமாறு கூறுதல். நட்குங்கால் ஆராய்ந்து நட்கவேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— நட்பாராய்தலாவது ஆராய்ந்து நட்புப் பெறவேண்டும் எ - று.

791. நாடாது நட்டலின் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை - நட்பினை விரும்பி அதன்கண்ணே நிற்பார்க்கு ஒருவனோடு நட்புச்செய்தபின் அவனை விடுதலுண்டாகாது; நாடாது நட்டலின் கேடு இல்லை - ஆகலான், ஆராயாது நட்புச் செய்தல்போலக் கேடுதருவது பிறிதில்லை.

ஆராய்தல் - குணஞ்செய்கைகளது நன்மையை ஆராய்தல். கேடு: ஆகுபெயர். நட்கின் தாம் அவர் என்னும் வேற்றுமை இன்மையின் வீடில்லை என்றும், அவ்வேற்றுமை இன்மையான் அவன்கண் பழிபாவங்கள் தமவாமாகலின் இருமையுங்கெடுவர் என்பது நோக்கி நாடாது நட்டலின் கேடில்லை என்றும் கூறினார்.

மணக்:— நட்பை விரும்பியாள்பவர்க்கு ஒருவனை ஆராயாது நட்புச்செய்வதுபோலக் கேடுதருவது இல்லை; நட்டபின், அவனை விடுதலில்லை யாதலால் எ - று.

இது நட்பாராய்தல் வேண்டும் என்றது.

பரிதி:— ஒருவன் குற்றத்தை விசாரியாமல் நட்புக்கொள்வது போலக் கேடு இல்லை; பின்பு அவன் பொல்லாத குணத்தைக் கண்டு விடாமல் அவனை நட்புக் கொண்டிருப்பது பெருமை எ - று

காளிங்:— இங்ஙனம் ஆராய்ந்து கடிது நட்டலின் மேற்பட்ட கேடும் இல்லை: ஒருவாற்றான் நட்ட பின்பு விடுதியும் இல்லை; யார்க்கு எனின், நட்பு அறிந்து ஆளும் அவர்க்கு எ - று.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— நாடுதல் - ஆராய்தல் 'நாடாது நட்டலிற்கேடில்லை' என்பதனானும் உணர்க. (கம்ப. சங்கோத். பக். 10.

ஒப்புமைப்பகுதி:

"நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே." —நற். 32. 8 - 9.

"மரீஇப் பலரொடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇப் பின்னைப் பிரிவு." —நாலடி. 220.

"இணக்கம் அறிந்திணங்கு." —ஆத்தி. 19.

"நள்ளா தொழியின் அன்றிஅவள் நட்டா ளாயின் பிழைப்பேதம்
கொள்ளாள் ஒருவர் மாட்டுமெனில் உயிர்போல் சிறப்பில் கொண்டவனை

எள்ளாள் என்ன வேண்டுமோ என்சொல் எல்லாம் இருந்தறிதி
வள்ளால் எனஇன் மொழிபுகன்றுள் மாற்ற மறிந்த மதமானி."
—பிரபு - பிரபுதேவர். 42.

792. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— ஆய்ந்து ஆய்ந்து கேண்மை கொள்ளாதான் - குணமும் செய்கையும் நல்லன என்பது பலகாலும் பலவாற்றானும் ஆராய்ந்து ஒருவனோடு நட்புக்கொள்ளாதவன், கடைமுறை தான் சாம் துயரம் தரும் - முடிவில் தான் சாதற்கு ஏதுவாய துன்பத்தினைத் தன் மாற்றார் விளைக்க வேண்டாமல் தானே விளைக்கும்.

கடைமுறைக்கண் என இறுதிக்கண் தொக்க ஏழாவது விரிக்க. குணமும் செயலும் தீயானொடு கொள்ளின் அவற்கு வரும் பகைமையெல்லாம் தன்மேலவாய்ப் பின் அவற்றான் இறந்துவிடும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் ஆராயர்வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

மணக்:— குற்றமும் ஆய்ந்து குணமும் ஆய்ந்துகொள்ளாதான் கொண்ட நட்பு, பிற்காலத்துத் தான் சாதற்கு ஏதுவான துன்பத்தைத் தரும் எ - று.

இஃது ஆராயாமையால் வருங்குற்றம் கூறிற்று.

பரிதி:— நாள்தோறும் புத்தியுண்டாகிய நட்பு ஆராய்ந்து கொள்ளாமல் களிப்பிலே ஒருவன் நட்புக் கொண்டால் பின்பு தனக்கு மானம் வந்தாற் போல் துயரம் வரும் எ - று.

காளிங்:— ஒருவரோடு முதல் முறை நட்புச் செய்யும் இடத்து அவர் குணம் குற்றங்களைப் பலபடியும் தெரிந்து ஆராய்ந்து கொள்ளாதான் செய்யும் நட்பானது, பின் முறையே தனது உயிர்க்கு இறுதியாவது ஓர் உறுதுயரத்தைச் செய்யும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்
முளிந்தாரைத் தஞ்ச மொழியலோ வேண்டா

அளிந்தார்க ணாயினும் ஆராயா னாகித்
தெளிந்தான் விளிந்து விடும்.'' —பழ-நா.

முதுமொழிவெண்பாக்கள்:

'' துருபதனட் பாயான் துரோணனடி யார்செய்
செருவினிற்கட் டுண்டான் சிவசிவா—வருவதன்முன்.'' —சிவசிவ. 80.

'' வஞ்சகவா னந்தனட்பால் சூரியசன் மாவாளா
முஞ்சுமிடர் பெற்றான் முருகேசா - நெஞ்சதனில்.'' —முருகேசர். 80.

குறிப்பு:

ஆய்ந்து ஆய்ந்து - ஒருக்கால் ஆய்ந்தவற்றையே பின்னும் பலவகைகளான் ஆய்ந்து. கடைமுறை - நட்பின் இறுதியில். அல்பசிநேகம் பிராணசங்கடம் என்பது பழமொழி.

—தொகுப்பாசிரியர்.

793. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு. (ங)

உரைப்பகுதி :

பரிமே:— குணனும் குடிமையும் குற்றமும் குன்றா இனனும் அறிந்து - ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்து அறிந்து, நட்பு யாக்க - அவனோடு நட்புச்செய்க.

குற்றமில்லாதார் உலகத்து இன்மையின் உள்ளது பொறுக்கப் படுவதாயின் அவர் நட்பு விடற்பாற்றன்று என்பார் குற்றமும் என்றும், சுற்றப்பிணிப்புடையார் நட்டாரோடும் பிணிப்புண்டு வருதலின் குன்றா இனனும் என்றும் விடப்படின் தம்குறையாம் என்பார் அறிந்துயாக்க என்றும் கூறினர்.

மணக்:— ஒருவனுடைய குணமும், குடிப்பிறப்பும், குற்றமும், குறைவில்லாத சுற்றமும் முன்பே ஆராய்ந்து, பின்பு அவனை நட்பாகக் கொள்க எ - று.

இவையெல்லாம் ஒத்தனவாயின், உறவு நீளச்செல்லும் என்றவாறும்.

பரிதி:— குணமும் குற்றமும் குடிப்பிறப்பும் விசாரித்து நட்புக் கொள்ளுக எ - று.

காளிங்:— குடிப்பண்பும், ஒழுக்கக் குறைபாடு இல்லாச் சுற்றமும், குணமும், குற்றமும் இவை நான்கினும் ஒருவரைச் சீர்தூக்கி அறிந்து மற்று அவரோடு செறிக நட்பினை எ - று.

ஒப்புமைப்பகுதி:

“குற்றமும் ஏனைக் குணனும் ஒருவனை
நட்டபின் நாடித் திரிவானேல் - நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வையம் நக.” —நாலடி. 230.

“நன்மதி உடைமை குடிகுணம் குற்றம்
நல்வினைத் தானும்எத் திறத்தும்
பன்முறை யாய்ந்து நட்பினைக் கொள்க
பாம்பொடு பழகினும் பிரிதல்
இன்மையாம் அதனால் ஆய்ந்தலால்ஒருவர்
இடத்துநட் புறேல்உறின் அவர்செய்
புன்மையும் பழியும் புணர்ந்திரு பயனும்
போக்குவ துண்மைபுத் திரனே.” —விநா. அரசி, 126.

“சிநேகம் செய்தபின்; சோதி தெரிந்தபின்.” —பழ.

குறிப்பு:

குணம்நாடி, குற்றமும்நாடி, மிகைநாடி மிக்ககொளல் என்பராகலின் குற்றமும் அறிந்து என்றார். நட்பும், காதன்மையும், மகன்மையும் போல்வதொரு பந்தமாதலின் “யாக்க” என்றார். யாத்தல் - கட்டுதல். குணமும் குடிமையும் “குலத்தளவே யாகும் குணம்” என்றாங்கு என்றும் இயைபுபட்டு; உடன்தோன்றியனவாதலின் முதற்கண் கூறினார். குற்றம் இனம் பற்றியும் விளைவதொன்றாகலின் குற்றத்தையடுத்து அதுவாராமல் தடுக்கக் குன்றா இனத்தைக் குறித்தார். குறைவற்ற சுற்றம் என்பது சுற்றத்தின்பன்மை குறித்ததன்று; குற்றமற்ற சுற்றம் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

794. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— குடிப்பிறந்து தன்கண் பழி நாணுவானை - உயர்ந்த குடியின்கண் பிறந்து தன்மாட்டு உலகர்சொல்லும் பழிக்கு அஞ்சுவானை, கொடுத்தும் நட்புக் கொளல் வேண்டும் - சில கொடுத்தாயினும் நட்புக் கோடல் சிறந்தது.

குடிப்பிறப்பால் தான் பிழைசெய்யாமையும், பழிக்கு அஞ்சலால் பிழைத்தன பொறுத்தலும் பெற்றும். இவை இரண்டும் உடையானைப் பெறுதல் அருமையின், அவன் நட்பை விலைகொடுத்தும் கொள்க என்பதாம்.

மணக்:— மேற்கூறியவற்றுள் உயர்குடிப்பிறந்து, தன்மாட்டுப் பிறர் சொல்லும் பழிக்கு அஞ்சுமவனை, அவன் வேண்டியது ஒன்று கொடுத்தும் நட்பாகக் கொள்ளல்வேண்டும் எ - று.

பரிப்:— கொடுத்தும் கொளல் வேண்டும் என்றமையால் அரசன் நட்பு ஆவாரைக் கூறிற்று.

பரிதி:— நற்குலத்திலே பிறந்தவனுகவும் பழிக்கு அஞ்சுவானுகவும் அவன் இருப்பது கண்டால் அவனுக்கு வேண்டுவன கொடுத்தும் நட்புக் கொள்ளுக எ - று.

காளிங்:— ஒழுக்கம் குன்ருக் குலத்துப் பிறந்து தன்மாட்டு ஒரு பழி நாணுவானைச் சிறந்தன கொடுத்தும் நட்புக்கொளவேண்டும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— வேண்டும் என்பது ஒரு சொல்நீர்மைத்து. "உறுப் பினுள் யாது கொடுத்தும் கொளல்" (703)ம் என்பதனை ஒக்கும் கொளல்.

முதுமொழிவெண்பாக்கள்:

"உத்தமர்கள் சூழ்மாவை யுத்தண்ட னுள்ளமுமுன்
சித்தமும்போல் கோவைத் தினகரா - ஒத்தால்." —தினகர. 84

"தேசுபெறு மார்த்தாண்டன் செல்வன்முடி சூடிஇலங்
கேசனை வென்றான் இரங்கேசா - மாசில்." —இரங். 80.

குறிப்பு:

குடிப்பிறப்பு உடையனாய் என்றும் பழிக்கு நாணுபவன் பொருட்கண் பற்றுவையானாதலானும், அவன் நல்லோர்நட்பைநாடியே இருப்பவனாதலானும் விலை விரும்பான் என்பார் கொடுத்தும் கொள்க என்றார்.

—தொகுப்பாசிரியர்.

795. அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— அல்லது அழச் சொல்லி - தாம் உலகவழக்கல்லது செய்யக் கருதின் சோகம்பிறக்கும்வகை சொல்லி விலக்கியும், இடித்து - செய்தக்கால் பின்னும் செய்யாவகை நெருக்கியும், வழக்கு அறியவல்லார் - அவ்வழக்குச் செய்யாவழிச் செய்விக்கவும் வல்லாரை, ஆய்ந்து நட்புக் கொளல் - ஆராய்ந்து நட்புக்கொள்க.

அழச்சொல்லி இடித்து எனவந்த பரிகாரவினைகளான் அவற்றிற்கு ஏற்ற குற்றவினைகள் வருவிக்கப்பட்டன. வழக்கு - உலகத்தார் அடிப்படச் செய்துபோந்த செயல். தம்மொடு நட்டாரும் அறியும்வகை அறிவித்தல் அரிதாகலின் அறியவல்லார் என்றார். இரண்டாவது இறுதிக் கண் தொக்கது.

மணக்:— குற்றம்கண்டால் அழுமாறு சொல்லி, நெறியல்லாதனவற்றிற்குக் கழறி, உலகவழக்கறிய வல்லாரது நட்பை ஆராய்ந்துகொள்க எ - று.

இது மந்திரிகளுள் நட்பாகற்பாலரைக் கூறிற்று.

பரிப்:— இது மந்திரிகளில் நட்பு ஆவாரைக் கூறிற்று. அரசர் அல்லாதார்க்குத் தம்மில் உயர்ந்தாரை நட்பு ஆகவேண்டும் என்று கொள்ளப்படும்.

பரிதி:— அழச்சொல்லிக் காரியம் உறுதியிட்டு நெறியில்லாத காரியம் தள்ளி உலகவழக்கறிய வல்லார் நட்பு ஆய்ந்து கொள்ளுக எ - று.

காளிங்:— நட்பானவன் இங்ஙனம் காரியமானது நிகழுமாறு சொல்லியும், நெறியல்லது செய்யும் இடத்து நெருக்கியும், செய்யத் தகும் முறைமை இது என்று அறிதலும் இம்மூன்று நெறியும் வல்லவர் யாவர் சிலர் நல்லறிவாளர்; அவரது நட்பினை ஆராய்ந்து கொள்க நட்கும் இடத்து எ - று.

ஒப்புமைப்பகுதி:

“அழஅழச் சொல்லுவார் தன்மனிதர்.” —பழ

முதுமொழிவெண்பாக்கள்:

“மாவணங்கைக் கொண்டிடுமுன் வந்தானூர் சுந்தரர்க்கோர்
ஆவணம்கைக் கொண்டுமறித் தாட்கொண்டார் - நோவ.” —திருத். 74.

796. கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல். (சா)

உரைப்பகுதி :

பரிமே:— கிளைஞரை நீட்டி அளப்பது ஓர்கோல் - ஒருவனுக்குக் கேடு என்பது தன் நட்டாராகிய புலங்களை எஞ்சாமல் அளப்பதோர்கோல்; கேட்டினும் ஓர் உறுதி உண்டு - ஆகலின் அதன்கண்ணும் அவனால் பெறப்படுவதோர் நல்லறிவு உண்டு.

தத்தம் நட்பெல்லைகள் சுருங்கி இருக்கவும், செல்வக்காலத்துப் புறத்துத் தோன்றுமல் போந்தார், பின் கேடுவந்துழிச் செயல்வேறு படுதலின் அக்கேட்டால் அவை வரையறுக்கப்படும் என்பது பற்றிக் கேட்டினைக்கோலாக்கியும், அதனால் அவரை அளந்தறிந்தால் ஆவாரையே கோடலின் அவ்வறிவை உறுதி என்றும் கூறினர். கிளைஞர் ஆகுபெயர். இஃது ஏகதேசவுருவகம். இவை நான்கு பாட்டானும் ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவர் என்பதூஉம் கூறப்பட்டன.

மணக்:— கேடுவந்தவிடத்தும் ஒருபயனுண்டாம்; அக்கேடு நட்டாரது தன்மையை நீட்டி அளந்தறிதற்கு ஒருகோலாமாதலால் எ - று.

மேல் கெடுங்காலைக்கைவிடுவாரை விடவேண்டுமென்றார் அவரை அறியுமாறு என்னை என்றார்க்கு, கேட்டாலல்லது அறிதல் அரிதென்றார்.

பரிதி:— தனக்கு வந்த விதனம், தனக்கு ஆன மனிதரையும் ஆகாதவர்களையும் அறிவிக்கவந்த அளவுகோல் எ - று.

காளிங்:— ஒருவர்க்கு வறுமை முதலிய கேடு வந்து உற்ற இடத்துத் தளர்ச்சி அல்லது ஓர் உறுதி இன்று அன்றே: மற்று அக் கேட்டின் பெரியதோருறுதிப்பாடு அஃது யார்க்கோ எனின் இவர் எமக்கு இனிய துணையாவர் என்று இங்ஙனம் தமக்குச் சிறந்த கிளைஞரைக் காலம் நெடுக விட்டு அளப்பது ஓர் கோல் எ - று.

இனி மற்று இங்ஙனம் நெடுக நிலைநிற்பதே நட்பு என்றார் ஆகலின் காலம் நீட்டி மற்று இதன் பின்னரே பழைமையை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"கேட்டினுறுதி கூட்டமுடைமை." —கொன்றை. 21.

"ஆபத்தில் அறியலாம் அருமைச் சிநேகிதனை." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"மாறனது கேட்டில் உறுதிஎன மாணிக்கம்
கூறி விலையாக் கொடுக்கும்இறை - ஆதலால்." —முதுமொழி. 125.

797. ஊதியம் என்ப தொருவர்க்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— ஒருவற்கு ஊதியம் என்பது - ஒருவனுக்குப் பேறு என்று சொல்லப்படுவது, பேதையார் கேண்மை ஒரீஇ விடல் - அறிவிலாரோடு நட்புக்கொண்டானாயின் அதனை ஒழிந்து அவரின் நீங்குதல்.

நட்பு ஒழிந்தாலும் நீங்காக்கால் *"வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வே" மாறுபோலத் தீங்கு வருதலின் விடல் என்றும், நீங்கியவழித் தீங்கொழிதலேயன்றி இருமையின்பத்திற்குரிமை எய்தலும் உடைமையின் அதனை ஊதியம் என்றும் கூறினார்.

* நாலடி, 180.

மணக்:— ஒருவனுக்கு இலாப்மென்று சொல்லப்படுவது அறி வில்லாதாரோடு நட்பாகுதலை நீங்கி விடுதல் எ - று.

இது பேதையார் நட்பைத் தவிர்க என்றது.

பரிதி;— ஒருவர்க்கு லாபமானது பொல்லாதார் நட்பைவிடுதல் எ - று.

காளிங்:— உலகத்து உணர்வுடை ஒருவனுக்குப் பெறும்பேறு என்று எடுத்து உரைக்கப்படுவது யாதோ எனின், அறிவு கேடரது கெழு முதலைச் செய்யாது தப்பிப்போதல் எ - று.

ஒரீஇ என்பது நீங்கி யொழிதல் என்பது.

முதுமொழிவெண்பாக்கள்:

"போற்றுஞ் சுசீலன் புயபெலனை நீத்தகன்றுன்
தோற்றிறைவி தும்பிடவும் சோமேசா - ஏற்றதே." —சோமேசர். 80

குறிப்பு:

ஊதியம் - இலாபம். இது ஒன்றைப் பெறுவதால் உளதாவதாயிருக்க, பேதையார் நட்பை இழத்தலால் உண்டாகிறது என்று முரண்தோன்ற நிற்பது காண்க.

—தொகுப்பாசிரியர்.

798, உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— உள்ளம் சிறுகுவ உள்ளற்க - தம் ஊக்கம் சுருங்கு தற்குக் காரணமாய வினைகளைச் செய்ய நினையாதொழிக, அல்லற்கண் ஆற்று அறுப்பார் நட்புக் கொள்ளற்க - அதுபோலத் தமக்கு ஒருதுன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதொழிக.

உள்ளம் சிறுகுவவாவன தம்மின்வலியாரோடு தொடங்கியனவும் பயனில்லனவும் ஆம். ஆற்று என்பது முதனிலைத்தொழிற்பெயர். முன் னெல்லாம் வலியராவர் போன்று ஒழிதலின், வலியறுப்பார் என்றார். எடுத்துக்காட்டுவமை. கொள்ளின் அழிந்தே விடும் என்பதாம்.

மணக்:— தான் சிறுகுமவற்றை உள்ளத்தால் நினையாதொழிக; அது போல, அல்லல் வந்தவிடத்து வலியாகாதாரது நட்பினைக் கொள்ளா தொழிக எ - று.

இது தீக்குணத்தார் நட்பைத் தவிர்க என்றது.

பரிதி:— நினைக்கக் கடவானல்லன் தன் செல்வம் குறையின் காரியத்தை; அதுபோலத் தனக்கு விதனம் செய்தார் நட்புச் செய்யக் கடவானல்லன் எ - று.

காளிங்:— சிறுமை உள்ளனவற்றை எஞ்ஞான்றும் உள்ளம் கருதற்க; அல்லல் உற்ற இடத்துக் கீழ் அறுப்பாரது நட்பினையும் கொள்ளற்க எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஆற்றறுத்தல் - கைவிடுதல். "அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா" (814) வும் அது.

குறிப்பு:

ஆபத்துக்கு உதவாத சிநேகத்தால் ஊக்கம் சுருங்குமாதலின் அச்சிநேகத்தைக் கொள்ளற்க. தவறிக் கொண்டால் ஊக்கம் குன்றற்கு ஏதுவாய வினைகளை எண்ணற்க என்று உரைப்பாரும் உளர்.

—தொகுப்பாசிரியர்.

799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை - ஒருவன் கெடுங்காலத்து அவனை விட்டு நீங்குவார் முன் அவனோடு செய்தநட்பு; அடுங்காலை உள்ளினும் உள்ளம் சுடும் - தன்னைக் கூற்று அடுங்காலத்து ஒருவன் நினைப்பினும், அந்நினைத்த உள்ளத்தைச் சுடும்.

நினைத்ததுணையானே இயைபில்லாத பிறனுக்கும் கூற்றினும் கொடிதாம் எனக் கைவிடெண்ணிச் செய்த நட்பின் கொடுமை கூறியவாறு. இனி அவன்தானே ஆக்கிய கேடு தன்னை அடுங்காலை உள்ளினும்

அக்கேட்டினும் சுடும் என்று உரைப்பாரும் உளர். இவை மூன்று பாட்டானும் ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவர் என்பது கூறப்பட்டது.

மணக்:— கெடும்பொழுது கைவிடுவாரது நட்பைத் தன்னைப் பிறர் கொல்லுங் காலத்து நினைப்பினும் நினைத்த மனத்தினை அந்நட்புச் சுடும்; அவர் சொல்லுமதனினும் எ - று.

இது கேட்டிற்கு உதவாதார் நட்பைத் தவிர்க என்றது.

பரிதி:— தனக்கு ஒரு விதனம்வந்த இடத்திலே கைவிடுவான் நட்பு தன் மரணாந்தமட்டும் நெஞ்சினைச் சுடும் எ - று.

காளிங்:— வாழும் காலத்து உடன்கூடி நட்புச்செய்து கெடும் காலத்துக் கைவிடுவாரது நட்புக் கூற்றுவன் வந்து அடுங்காலத்து நினைப்பினும் உள்ளம் சுடும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கெட்டகாலை விட்டனர் என்னுது
நட்டோர் என்பது நாட்டினை." —பெருங். 2 : 9 : 117 - 8.

"இன்னு கெடுமிடம் கைவிடுவார் நட்பு." —இன்னு. 37.

"ஆபத்திலே பார்க்கலாம் அருமைச் சிநேகிதனை." —பழ.

குறிப்பு:

ஒருவனைத் துன்பக்காலத்து அவனது நட்பினர் ஒருதவியும் செய்யாமல் பிரிந்துபோயினர் என்பதை அயலான் ஒருவன் கேள்விப்பட்டு, அதனை மரணகாலத்தில் நினைத்துப் பார்ப்பானுயின், அவ்வயலானுக்கே மரணத் துன்பத்தினும் பெரும் துன்பம் விளைப்பது இச்செயல் என்பது ஓர் உரை.

ஒருவன் துன்புறுங்காலத்து அவனைவிட்டுப் பிரிபவன் நட்பு, தான் தேடிக் கொண்ட துன்பத்தாலேயே தான் இறக்கும்போது ஒருவன் நினைத்தால் சாவைக் காட்டிலும் பெருந்துன்பம் தருவதாம். கெடுங்காலைக் கைவிடுவாரது நட்பு, அது கொண்டவனுக்கு, தன்னைக் காலன் கொல்லும் தறுவாயில் நினைப்பினும், அந்நினைத்த உள்ளத்தைக் காலனைக்காட்டிலும் கொடுமையாக வருத்தும் எனலுமாம்.

—தொகுப்பாசிரியர்.

800. மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (௧௦)

உரைப்பகுதி :

பரிமே:— மாசு அற்றார் கேண்மை மருவுக - உலகோடு ஒத்துக் குற்றமற்றார் நட்பினையே பயில்க; ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக - உலகோடு ஒத்தலில்லார் நட்பினை அறியாது கொண்டாராயின், அவர்வேண்டியது ஒன்றனைக் கொடுத்தாயினும் விடுக:

உலகோடு ஒத்தார் நட்பு இருமை இன்பமும் பயத்தலின் மருவுக என்றும், அதனோடு மாறாயினார் நட்புத் துன்பமே பயத்தலின் அதனொழிவை விலைகொடுத்தும் கொள்க என்றும் கூறினார். இதனால் அவ்விருமையும் தொகுத்துக் கூறப்பட்டன.

மணக்:— குற்றமற்றாரது நட்பைக் கொள்க; ஒருபொருளைக் கொடுத்தாயினும், தனக்கு நிகரில்லாதார் நட்பினின்று நீங்குக எ - று.

பரிப்:— இது குற்றம் அற்றார் நட்பைக் கொள்ளவேண்டும் என்பதூஉம், நிகர் அல்லாதார் நட்புத் தவிரவேண்டும் என்பதூஉம் கூறிற்று.

பரிதி:— குற்றமற்றார் நட்பு வேண்டினது கொடுத்தும் கூட்டிக் கொள்க: பொல்லாதார் நட்பு சில கொடுத்தும் கைவிடுக எ - று.

காளிங்:— மனம் மாசு அற்றார் கேண்மையை மருவுக; தமக்குச் சிறந்தது யாதானும் ஒன்று கொடுத்தும் தமது நீர்மைக்கு ஒவ்வாதாரது நட்பினைக் கொள்ளாது நீங்குக எ - று.

குறள்வைப்புமுறை

பரிமே:— நாடாது, ஆய்ந்தாய்ந்து, குணனும், குடிப்பிறந்து, அழச்சொல்லி, கேட்டினும், ஊதியம், உள்ளற்க, கெடுங்காலை, மருவுக.

மணக்:— நாடாது, குணனும், குடிப்பிறந்து, அழச்சொல்லி, மருவுக, ஊதியம், உள்ளற்க, கெடுங்காலை, கேட்டினும், ஆய்ந்தாய்ந்து.

பரிதி:— அழச்சொல்லி, ஆய்ந்தாய்ந்து, குணனும், குடிப்பிறந்து, கேட்டினும், உள்ளற்க, கெடுங்காலை, ஊதியம், மருவுக, நாடாது.

காளிங்:— அழச்சொல்லி, நாடாது, ஆய்ந்தாய்ந்து, ஊதியம், உள்ளற்க, கெடுங்காலை, மருவுக, குடிப்பிறந்து, குணனும், கேட்டினும்.

81. பழைமை.

தொகுப்புரை:

[பழைமை எனப்படுவது உரிமையை ஒரு சிறிதும் சிதையாது உடம்படும் நட்பாம். நட்பிற்கு அங்கம் உரிமையாற்செய்வன. அந்த உரிமைக்கு உடம்படுதல் சான்றோர்கடமை. உரிமையாற்செய்தனவற்றைத் தாம்செய்தாற்போல உடம்படாராயின் பழகியநட்பால் பயன் என்ன? உரிமையால் தம்மைக் கேளாதே நட்டார் காரியங்களைச் செய்வாராயின் விருப்பத்தால் அதனை வேண்டுவர். வருந்தும் செயல்களைச் சினேகிதர்கள் செய்வார்களாயின் பேதைமை என்றாவது மிக்க உரிமை என்றாவது எண்ணுக. நட்பு எல்லைக்கண்நின்றவர், பழைமை மாறாதவர்கள்நட்பை என்னகெட்டாலும் விடமாட்டார்கள். அன்பில் ஊறிய நட்புடையார் தமக்கு அழிவு தரும் காரியங்களைச் செய்வாராயினும் அவர்மாட்டு அன்பொழியார். உனதுசிநேகிதன் இன்னதீமைசெய்தான் என்று யார்சொன்னாலும் கேளாத உரிமையை அறியவல்லவர்க்கு நட்பினர் பிழைசெய்வாராயின் அவர்க்கு அந்நாளே பயன்பட்டநாளாம். அழியாது நெடுநாள்பழகிவந்த நட்பை விடாதவர்களை உலகம் விரும்பும். பழைமையானவர்கள் பிழைசெய்தாலும் அவர்மாட்டு அன்புகுன்றாதவர்கள் பகைவராலும் விரும்பப்படுவர்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது நட்டாரது பழையராந்தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப்பெயர் காரியத்திற்கு ஆயிற்று; ஆராய்ந்து நட்கப்பட்டார் எனினும் பொறுக்கப்படும் குற்றமுடையராகலானும் ஊழ்வகையானும் நட்டார்மாட்டுப் பிழையுளதாம் என்பது அறிவித்தற்கு, இது நட்பாராய்தலின் பின் வைக்கப்பட்டது.

மணக்:— பழைமையாவது நட்டோரது உரிமை கூறுதல். இஃது அவருரிமையால் செய்தனவற்றிற்குப் பொறுக்கவேண்டும் என்று அதன் பின் கூறப்பட்டது.

பரிதி:— பழைமையாவது பழைமையை அறிந்து கொள்க என்று.

801: பழைமை எனப்படுவ தியாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— பழைமை எனப்படுவது யாது எனின் - பழைமை என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், கிழமையை யாதும் கீழ்ந்திடா நட்பு - அது பழைமையோர் உரிமையால் செய்வனவற்றைச் சிறிதும் சிதையாது அவற்றிற்கு உடம்படும் நட்பு.

கிழமை ஆகுபெயர். கெழுதகைமை என வருவனவும் அது. உரிமையால் செய்வனவாவன கருமமாயின செய்யுங்கால் கேளாது செய்தல், கெடும்வகைசெய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணி வச்சங்கள் இன்மை என்று இவை முதலாயின, சிதைத்தல் - விலக்கல். இதனால் பழைமையாவது காலஞ்சென்றதன்று, இப்பெற்றித்தாய நட்பு என்பது கூறப்பட்டது.

மணக்:— பழைமை என்று சொல்லப்படுவது யாது எனின், அது யாதொன்றிலும் உரிமையை அறுத்தலில்லாத நட்பு எ - று.

இது பழையவன் செய்த உரிமையைச் சிறிதும் சிதையாது உடன்படுதல் நட்பாவது என்றது.

பரிதி:— பழைமை என்று சொல்லப்படுவது யாது எனில் பழைமையானவன் செய்த உரிமையைச் சிறிதும் சிதையாது உடன்பட்ட' நட்பு எ - று.

காளிங்:— ஒருவரோடு ஒருவர்க்கு உள்ள காலப்பழைமை என்றுஎடுத்து உரைக்கப்படுவது யாதோஎனின் தம்பொருட்கண் அவர் செய்யும் யாதானும் உரிமையை வேறிடாது விரும்பும் நட்பு எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கிழமை - உரிமையாலாயது: ஆகுபெயர். 'கெழுதகை' என வருவனவும் அது. கீழ்ந்திடுதல் - சிதைத்தல். 'ஆண்டிலெடுத்த' என்னும் (249) கோவையாருள் 'பஃறுமனை கிழும் பழனம்' என்பதும் அது. 'கீள்வது செல்வதன்று' என்னும் (247) கோவையாருள், 'கீள்வது செய்த கிழவோன்' என்றதனற் 'கீண்டல்' வேறு.

ஒப்புமைப்பகுதி :

"பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றும் கொள்ளார்." —நீதிநெறி. 47.

குறிப்பு:

கிழமை என்னும் காரணப்பெயர் கிழமையாற்செய்யும் காரியங்களை உணர்த்தினமையின் காரண ஆகுபெயர். கிழமை என்பது உடையவனை அடிக்கடிகேட்டு உபாதைகொடுத்தலும் ஆகாது என்ற உள்ளத்தால் கேளாமலே வினைசெய்யும் உரிமை.
—தொகுப்பாசிரியர்.

802. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்(கு)
உப்பாதல் சான்றோர் கடன். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை - நட்பிற்கு அவயவமாவன நட்டார் உரிமையால் செய்வன, அதற்கு உப்பாதல் சான்றோர் கடன் - அதனால் அவ்வுரிமைக்கு இனியராதல் அமைந்தார்க்கு முறைமை.

வேறன்மைதோன்ற உறுப்பு என்றார். உறுப்பு என்பது ஈண்டு இலக்கணையடியாக வந்த குறிப்புச்சொல். அவயவமாதல் அறிந்தே இனியவராவர் என்பது தோன்றச் சான்றோர்மேல் வைத்தார்.

மணக்:— நட்பிற்கு அங்கமாவது உரிமை: அவ்வுரிமையால் செய்யுமதற்கு உடன்படுதல் சான்றோர்க்கு இயல்பு எ - று.

இது பேய்ச்சுரைக்காய்க்குப் பல காயம் அமைத்தாலும் இனிமை உண்டாகாததுபோல, உடன்படாராயின் இனிமை உண்டாகாதாதலான் உடன்படல் வேண்டும் என்றது.

பரிதி:—நட்புக்கு அலங்காரம் கூட்டுறவு உண்டாயிருப்பது. இது சான்றோர் ஒழுக்கம் எ - று.

காளிங்:— ஒருவரோடு ஒருவர் நட்டால் அந்நட்பிற்குச் சிறந்தது யாது எனின், என்றும் ஒருபடிப் படக் கெழுமிய கெழுதகைமையாகிய பழைமைக்கு என்றும் இனியர் ஆதல் சான்றோர் கடன் எ - று.

உப்பு என்பது இனிமை.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— உறுப்பு என்பது இலக்கணை யடியாகவந்த குறிப்புச் சொல்: "அனிச்சப்பூக் கால்" (1115) என்பதும் அது. வடநூலார் இலக்கணமூலத் தொனி என்பர். வேறின்மை தோன்ற உறுப்பு என்றார்.

குறிப்பு:

நட்பு குணமாதலின் அதற்கு ஓர் உறுப்பு உண்டென்று கூறியது இலக்கணை வழக்கு. இனிமைக்கும் இனிமை மிகுவிப்பது உப்பாதலால் உப்பு இனிமை ஆயிற்று.

—தொகுப்பாசிரியர்.

803. பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— கெழுதகைமை செய்தாங்கு அமையாக்கடை - தாம் உடம்படாதனவேனும் நட்டார் உரிமையால் செய்தனவற்றிற்குத் தாம் செய்தாற்போல உடம்படாராயின், பழகிய நட்பு எவன்செய்யும் - அவரோடு பழையதாய் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும்.

செய்தாற்போல உடம்படுதலாவது தாமும் அவரிடத்து உரிமையால் உடம்படுதல். இவை இரண்டு பாட்டானும் பழைமையான்வரும் உரிமையது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— ஒருவன் தனது உரிமையாலே இசைவில்லாதவற்றைச் செய்தவிடத்து, தான் அமையானாயின், பின் அவனோடு பழகிய நட்பு யாதினைச் செய்யும் எ - று.

இது மறுமையிற் பயன்படான் என்றது.

பரிதி:— பழைமையான நட்பு என்னசெய்யும்? பழைமைக்குத் தக்க நல்லநெறியில் நடவானாகில் எ - று.

காளிங்:— அவரொடும் நெடுங்காலம் பழகிய நட்பெல்லாம் என் செய்யும்: யாதும் இல்லை: எவ்விடத்து எனின் கீழ்ச்சொன்னபடியே அவர் தமக்கு வேண்டும் கெழுதகைமை செய்து அமையா இடத்து எ - று.

குறிப்பு:

அவர் தம்மிடத்து உரிமையால்செய்த தீமையை தாமும் அவர்பால்வைத்த உரிமையால் உடன்படவேண்டும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

804. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின். (ச)

உரைப்பகுதி :

பரிமே:— நட்டார் கெழுதகையால் கேளாது செயின் - தன் கருமத்தை நட்டார் உரிமையால் கேளாது செய்தாராயின், விழைதகையான் வேண்டியிருப்பர் - அச்செயலது விழைபப்படுந்தன்மைபற்றி அதனை விரும்புவர் அறிவுடையார்.

ஒருவர்க்குத் தம் கருமம் தாம் அறியாமல் முடிந்திருத்தலி னாஉங்கு நன்மை யின்மையின், அச்செயல் விழையத் தக்கதாயிற்று. அதனை அவ்வாறறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கல்லது இன்மையின், அவர்மேல் வைத்துக்கூறினர். வேண்டியிருப்பர் என்பது எழுந்திருப்பர் என்பது போல ஒருசொல்நீர்மைத்து. இதனால் கேளாதுசெய்துழி அதனை விரும்புக என்பது கூறப்பட்டது.

மணக்:— நட்டோர் தமது உரிமையாலே கேளாது இசைவில் லாதவற்றைச் செய்வாராயின், அதற்கு முனியாது அதனையும் தாம் விரும்பும் தன்மையோடே கூட விரும்பி இருப்பர் மிக்கார் எ - று.

இஃது உடன்படுதலன்றி விரும்பவும் வேண்டும் என்றது.

பரிதி:— பழையவர் தம்மைக் கேளாமல் செய்தகாரியத்தை விரும் புவாரல்லது வேறு குணம் காட்டார் எ - று.

காளிங்:— நட்டாரானோர் யாம் இப்பொருள் கைக்கொள்வோம் என்று கொண்டவரைக் கேட்டுக் கொள்ளாது அவருடன் தமக்கு உள்ள பழைமை மிகுதியாலே யாதானும் ஒன்று செய்யின் அவருடன் நட்பின்கண் விழைதகைய ரானோர், அவர் அங்ஙனம் கேளாது செய்கின்ற உரிமையை மேன்மேலும் வேண்டி யிருப்பர்: என் எனின், தாம் அவர் என்னும் வேற்றுமை இலர் ஆகலான் எ - று.

குறிப்பு:

தமக்குத்தெரியாமலே தமக்குவேண்டிய காரியம் முடிதலைக்காட்டினும் இனிமை வேறு இன்மையின் விழைதகையால் வேண்டியிருப்பர் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

805. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— நோதக்க நட்டார் செய்யின் - தாம் வெறுக்கத்தக்கன வற்றை நட்டார் செய்தாராயின், பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்று உணர்க - அதற்குக் காரணம் ஒன்றிற்பேதைமை என்றுதல் ஒன்றின் மிக்க உரிமை என்றுதல் கொள்க.

ஒன்றோ என்பது எண்ணிடைச்சொல். செயின் எனவே, தம் இயல்பால செய்யாமை பெற்றும். இது வருகின்றவற்றுள்ளும் ஒக்கும். இழவூழான் வரும் பேதைமை யாவர்க்கும் உண்மையின் தமக்கு ஏதம் கொண்டார் என்றுதல், ஊழ்வகையான் எம்மின்வரற்பாலது ஒற்றுமை மிகுதிபற்றி அவரின்வந்ததென்றுதல் கொள்வதல்லது அன்பின்மை என்று கொள்ளப்படாது என்பதாம். கெடும்வகைசெய்யின் அதற்குக் காரணம் இதனால் கூறப்பட்டது.

மணக்:— தாம் நோவத்தக்கனவற்றை நட்டோர் செய்வா ராயின், அதற்கு முனியாது ஒன்றில் அறியாமையாலே செய்தாரென்று கொள்க; ஒன்றில் பெரிய உரிமையாலே செய்தாரென்று கொள்க எ - று.

பரிதி:— பழையார் அறிவிலாமையினால் ஒரு குற்றம் செய் தாலும் அவர் குற்றத்தைப் பாராட்டார் எ - று.

காளிங்:— தம்மொடு நட்டார் இவ்வாறு அன்றித் தாம் பெரிதும் நோவத்தக்கனவற்றைச் செய்வாராயின் ஒன்றோ அவர் அறியாமை என்று உணர்க; இனி ஒன்றோ அவர்க்குத் தம்மொடு வேற்றுமை அற நின்ற பெரியதோர் உரிமை என்று அறிக எ - று.

ஒப்புமைப்பகுதி:

"பழமையில் திரியார் பயன்தெரி மாக்கள்
கிழமையில் செய்தனன் கெழுதகை தரும்.'' —பெருங். 4 : 8 : 75-76.

"தந்தீமை யில்லவர் நட்டவர் தீமையையும்
எந்தீமை என்றே உணர்பதாம் - அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப
ஒருவர் பொறைஇருவர் நட்பு." —பழ நா.

"இறப்பவே தீய செயினும்தன் நட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ - நிறக்கோங்(கு)
உருவவண் டார்க்கும் உயர்வரை நாட
ஒருவர் பொறைஇருவர் நட்பு." —நாலடி. 223.

"பேதைமைப் பாலி னுதல் பெருங்கிழ மையினு னுதல்
மேதக நட்டோர் மாட்டு விரவிடும் பிழைக ளெல்லாம்
காதுதற் பால அல்ல...." —தணிகை, வீரட்ட. 105.

"கெடுதியில் உதவ வல்லவர் நட்பால்
கிளந்திடா தொன்றனைச் செயினும்
கெடும்வகை செய்தல் வேண்டினதாமே
கெழுவுதல் பணிவச்சம் இன்மை
படுதரும் ஊழில் புரியினும் அவற்றைப்
பழமைஎன் றறிந்துளம் உவப்பின்
நெடுநில முழுதம் கேண்மையாம் மைந்தா
நேரலார் தாமும்கே ளாவர்." விநா. அரசி. 127.

"தொன்மை மறவேல்." —ஆத்தி. 64.

முதுமொழிவெண்பாக்கள்:

"எப்பொழுதும் தம்மனத்துக் கேற்கநடப் பார்க்கொருசெய்
திப்பிழைவா ராதோ தினகரா - அப்பொழுது." —தினகர. 85.

"வெம்பிவிரா டன்சூது விட்டெறிந்து மேதருமன்
வம்புசகித் தான்திரும லைக்கொழுந்தே - நம்பிய." —திருமலைக்.

"நம்பனமர்க் கேன்றவா ணற்புரந்தான் தொன்மையுன்னி
மொய்ம்புதொலை யாமல் முருகேசா - அம்புவியில்." —முருகேசர். 81.

குறிப்பு:

நட்பினர்செய்த அழிசெயலைப் பேதைமை என்று எண்ணுவது குற்றத்தை மன்னிக்கும் தன்மை. பெருங்கிழமை என்றெண்ணுவது குற்றம் என்று பாராட்டாமை

மாத்திரமேயன்றி நன்கு மதித்தலும் ஆம். இவ்வாறன்றி, பேதைமையோ அன்று; உரிமை என்று எண்ணுக என்பாரும் உளர். இப்பொருளில் பேதைமை ஒன்றோ என்பது பேதைமையோ என்னும் பொருள்தந்துநின்றது.

—தொகுப்பாசிரியர்.

806. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. (சா)

உரைப்பகுதி :

பரிமே:— எல்லைக்கண் நின்றார் - நட்புவரம்பு இகவாது அதன் கண்ணே நின்றவர், தொல்லைக்கண் நின்றார் தொடர்பு தொலைவிடத்தும் துறவார் - தம்மொடு பழைமையில் திரியாது நின்றாரது நட்பினை அவரால் தொலைவு வந்தவிடத்தும் விடார்.

பழைமையின் திரியாமை - உரிமை ஒழியாமை. தொலைவு - பொருட்கேடும் போர்க்கேடும்.

மணக்:— பழைமையின்கண்ணே நின்றாரது நட்பை அவராலே தமக்கு அழிவுவந்தவிடத்தும் ஒழுக்கத்தின்கண்ணே நின்றார்விடார் எ - று.

எல்லை - வரம்பு.

பரிப்:— எல்லையாவது வரம்பு. அஃது ஒழுக்கம் ஆயிற்று. மேல் கூறியவாற்றான் அமைந்துவிடுதல் அன்றி, நட்பு விடுதல் உயர்ந்தோர் செய்யார் என்றது.

பரிதி:— இன்னார் என்னும் தகுதி மிகுதி பெற்றார் பழையோரைக் கைவிடார் எ - று.

காலிங்:— தம்மொடு நட்பினால் பழமைக்கண் நிலை நின்றார் தொலையும் இடத்தும் அப்படிப் பழமை வரம்பின்கண் நின்றார் யாவர்? மற்று இவர் இவரோடு உண்டாகிய தொடர்பினை என்றும் கைவிடார் எ - று.

இவ்வாறன்றிக் கெழுமிக் கைவிடுவாரது தீங்கு உணர்த்துகின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"அருளு மேலா சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்கல் அழித்தலங் காபவோ." —சீவக. 247.

முதுமொழிவெண்பாக்கள்:

"தானவர் வேந்தைச் சடாயு பொருதிறந்தான்
ஏன உருவாம் இரங்கேசா - மாநிலத்தில்." —இரங். 81.

807. அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— அழிவந்த செய்யினும் அன்பு அறார் - நட்டார் தமக்கு அழிவு வந்தவற்றைச் செய்தாராயினும் அவர்மாட்டு அன்பு ஒழியார், அன்பின் வழி வந்த கேண்மையவர் - அன்புடனே பழையதாய்வந்த நட்பினையுடையார்.

அழி என்பது முதனிலைத் தொழிற்பெயர். அழிவு மேற்சொல்லிய கேடுகள். இவை இரண்டு பாட்டானும் கேடுசெய்தற்கண்ணும் நட்புவிடற்பாற்றன்று என்பது கூறப்பட்டது.

மணக்:— தமக்கு அழிவுவரும் கருமங்களைப் பழைய நட்டோர் செய்தாராயினும், அவரோடு உள்ள அன்புவிடார்; முற்காலத்து அன்பின் வழியாகவந்த நட்பை உடையவர்கள் எ - று.

இது கேடு வருவன செய்யினும் அமையவேண்டும் என்றது.

பரிதி:— தம்முடைய செல்வம் அழியும் படியாகக் குற்றம் செய்தாலும் அதற்குப் பரிகாரம் பண்ணுவாரல்லது பழையார்மேல் அன்புவிடார் எ - று.

காளிங்:— தாம் அழிய வந்தனவற்றைச் செய்தாராயினும் அன்பு விடார்: அன்பினாலே வழிவந்த கேண்மையை உடையோர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" நண்பொன்றித் தம்மாலே நட்கப்பட் டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார்
பண்கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய் யாருளரோ
தம்கன்று சாக்கறுப் பார்." —பழ. நா.

" ஈரமில் லாதது கிளைநட் பன்று." —முதுமொழிக். 5 : 3.

முதுமொழிவெண்பாக்கள்:

" வழுவுசெய்தும் மாலயர்க்கு வந்தானே பின்னும்
பழமை கருதியருள் பண்ணும் - முழுதும்." —முதுமொழி. 126.

" இல்லாளைப் பற்றிமூழ் கென்றிடவும் அன்புகுன்றார்
தொல்லைநெறி நீலகண்டர் சோமேசா - ஒல்லா(து)" —சோமேசர். 81.

" பித்தரென்று வைதால் பிழைபொறுத்தல் மாத்திரமோ
வைத்தாரா ரூரற் கருள்புரிந்தார் - வித்தம்." —திருக். 82.

" குறித்தரசு கன்னனுடன் கோதைவிளை யாட்டுள்
தெறித்த மணியும் சிவசிவா - பொறுக்கும்." —சிவசிவ. 81.

குறிப்பு:

கேண்மை அன்பாலல்லது விளையாதாயினும், அன்பின்வழிவந்த கேண்மை என்றது அன்பு அறுதற்கு ஏதுவந்ததாயினும் அறுதலாகாது என்பதை வற்புறுத்த.
—தொகுப்பாசிரியர்.

808. கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு - நட்டார் செய்த பிழையைத் தாமாகவே அன்றிப் பிறர் சொன்னாலும் கொள்ளாத உரிமை அறிய வல்லார்க்கு, நட்டார் இழுக்கம் செயின் நாள் - அவர் பிழை செய்வாராயின், அது பயன்பட்ட நாளாம்.

பிழையாவன - சொல்லாது நற்பொருள் வெளவல், பணியாமை, அஞ்சாமை முதலாயின. கேட்டல் - உட்கோடல். கெழுதகைமை வல்லார் என்பது ஒருபெயராய்க் கேளாத என்னும் எச்சத்திற்கு முடிபாயிற்று. செய்துபோந்துழியல்லது அவ்வுரிமை வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின. இதனால் பிழைபொறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— நட்டோரது தப்பைப் பிறர் சொல்லுங்கால் கேளாத உரிமையை அறியவல்லார்க்கு நட்டோர் தப்புச்செய்யின், அந்நாள் நல்ல நாளாம் எ - று.

இது கேளாது செய்தலே அன்றித் தப்புச் செய்யினும் அமைய வேண்டும் என்றது.

பரிதி:— நட்பினால் குற்றத்தைக் கேளாத உறவை வல்லவர்க்கு நாள்போல நன்மை நட்டாராலே உண்டாம் எ - று.

காளிங்:— இவ்வாறு நல்லவும் தீயவும் அவரைக் கேளாது செய்தற்கு உரிய கெழுதகைமை வல்லாராகிய கிளைமையோர்க்கு அவருடன் நட்டார் பின்னும் நட்பிடைக் குற்றம் செய்யின், அற்றை நாள் தமது வாழுள் வரையுள் இழந்தநாள் ஆகும் எ - று.

கேள் இழுக்கம் என்பது நட்பில் குற்றம் என்றது.

குறிப்பு:

தம்முடைய கெழுதகைமையை விளக்குவதற்கு நட்டார் இழுக்கம் பயன் பட்டமையின் அவர் இழுக்கம்செய்தநாள் நன்னாளாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

809. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. (௯)

உரைப்பகுதி:

பரிமே:— கெடா வழி வந்த கேண்மையார் கேண்மை - உரிமை யறாது பழையதாய் வந்த நட்பினை உடையாரது நட்பினை, விடார் உலகு விழையும் - அவர் பிழைநோக்கி விடுதல்செய்யாதாரை உலகம் நட்புக் குறித்து விரும்பும்.

கெடாது என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது. விடா தாரை எனவே, விடுதற்காரணம் கூறப்பட்டது. நம்மாட்டும் இவர் இத்

தன்மையராவர் என்று யாவரும் தாமே வந்து நட்பாவர் என்பதாம். கெடார் என்று பாடமோதி, நட்புத்தன்மையில் *கெடாராகி என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— குற்றம் உண்டாயின் அவ்விடத்து நட்பினிற் கெடாராய்க் குலத்தின்வழி வந்த நட்புடையாரது நட்பை விடுதலின்றி உலகத்தார் விரும்புவர் எ - று.

இது பழமையைக் கொண்டாடுவாரை உலகத்தார் தாமும் நட்பு ஆடுதற்கு விரும்புவர் என்றது.

பரிதி:— பழைமையான் உறவை விடாதாரை உலகம் விரும்பும் எ - று.

காலிங்:— ஒருபொழுதும் இடைவிடாது ஒரு வழிப்பட வந்த கேளின் தன்மையோர் நட்பினை ஒருகால் ஒழியாதே விரும்பி நிற்பர் உயர்ந்தோர் எ - று.

810. விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார். (௧௦)

உரைப்பகுதி:

பரிமே:— பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார் - பழைய நட்டார் பிழைசெய்தாராயினும் அவர்மாட்டுத் தம் பண்பின் நீங்காதார், விழையார் விழையப்படுவ - பகைவரானும் விரும்பப்படுவர்.

தம் பண்பாவது செய்யாதமுன்போல அன்புடையராதல். மூன்றனுருபும் சிறப்பும்மையும் விகாரத்தால் தொக்கன. அத்திரிபின்மை நோக்கிப் பகைவரும் நட்டாராவர் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் பழைமை அறிவார் எய்தும் பயன் கூறப்பட்டது.

மணக்:— பழைய நட்டோர்மாட்டுக் குணத்தினின்று நீங்காதார், விரும்பாதாராலும் விரும்பப்படுவர் எ - று.

இது பகைவரும் விரும்புவார் என்றது.

---

* இங்ஙனம் பாடங்கொண்டவர் மணக்குடவர்.

பரிதி:— தாம் ஒன்றை விரும்பார் தம்மை எல்லாரும் விரும்பப் படுவார்: பழையாரை நட்புவிடாதார் குணம் எ - று.

காளிங்:— விரும்பா மனத்தாராலும் விரும்பப்படுவர்: யார் எனின் நட்பில் தமக்குப் பழையராய் உள்ளவர்மாட்டு மரபில் தலைப்பிரியா மாட்சிமையோர் எ - று.

குறிப்பு:

பெரும்பிழைசெய்தும் இவர்மனம் திரியாமையின் நம்பகையையும் பாராட்டமாட்டார் என்று பகைவரும் நட்பாவார்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— *பழைமை, நட்பிற்கு, பழகிய, விழைதகையான், பேதைமை, எல்லைக்கண், அழிவந்த, கேளிழுக்கம், கெடாஅ, விழையார்.*

மணக்:— *பழைமை; நட்பிற்கு, விழைதகையான், பழகிய, கேளிழுக்கம், அழிவந்த, பேதைமை, எல்லைக்கண், கெடாஅ, விழையார்.*

பரிதி:— *விழையார், கெடாஅ, நட்பிற்கு, பழகிய, விழைதகையான், கேளிழுக்கம், எல்லைக்கண், பேதைமை, அழிவந்த, பழைமை.*

காளிங்:— *விழையார், நட்பிற்கு, கெடாஅ, விழைதகையான், அழிவந்த, கேளிழுக்கம், பழகிய, பேதைமை, பழைமை, எல்லைக்கண்.*

82. தீநட்பு.

தொகுப்புரை :

[தீயோர் பருகுவார்போன்ற அன்பு மிகுதியுடையராயினும் அவர்நட்பு வளர்தலைக்காட்டிலும் தேய்தலே நல்லது. கையில் உள்ளபோது சிநேகித்து இல்லாத போது நீங்குபவர் நட்பைப் பெற்றாலும் இழந்தாலும் என்ன? இலாபத்தை எதிர் நோக்கும் நட்பும், வந்ததை வரப்பற்றும் வேசையும், கள்வரும் நேராவர். போர்க் களத்தில் போட்டுவிட்டு ஓடும் புரவியை ஒத்தவர்கள் நட்பைக்காட்டிலும் தனிமை நல்லது. ஒருபோதும் அரணாகாத தீநட்பைக்காட்டிலும் நட்பே இல்லாதிருப்பது நல்லது. முட்டாள் நட்பைக் காட்டிலும் அறிவாளியின் பகை கோடிமடங்கு நல்லது. இடித்துச்சொல்லாது சிரித்துப் பொழுதுபோக்கும் நட்பைக்காட்டிலும் பகைவரால் பத்துக்கோடி நன்மை உளவாகலாம். முடியும்காரியத்தை முடியாதபடி உழப்புபவர்கள் நட்பைச் சொல்லாமல் கைவிடுக. சொல்லொன்றும் செயலொன்றுமாக இருப்பவர்கள் நட்பு கனவிலும் துன்பம் தருவது. உள்ளே உறவாடிச் சபையில் பழிப்பவர்களது நட்பை ஒரு சிறிதும் அணுகலாகாது.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— *இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையின் விடற்பாலதாய நட்பு, நட்பாராய்தற்கண் சுருங்கச்சொல்லிய துணையான் அடங்காமையின் அதனை இருவகைப்படுத்து இரண்டு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் தீநட்புக் கூறுகின்றார். அஃதாவது தீக்குணத்தாரோடு உளதாய நட்பு. குணத்தின் தீமை ஒற்றுமைபற்றி உடையார் மேற்றாய், அதுபின் அவரோடுசெய்த நட்பின்மேற்றாயிற்று. அதிகார முறைமை கூறாமையே விளங்கும்.*

மணக்:— *தீநட்பாவது தீயகுணத்தாராகிய மாந்தரோடு நட்டதனால் வரும் குற்றங் கூறுதல்.*

பரிப்:— *மேல் நட்பு ஆராய்தல் கூறுகின்றுழி நட்கப்படாதாரைக் கூறி ஈண்டும் கூறுதல் கூறியதுகூறலாம் பிற எனின் அற்றன்று: அதனுள் நட்கப்படாதாரைக் கூறினார்: இதனுள் அவரால் பயன் இன்மை கூறினாராதலின் வேறுபடுத்துக் கூறப்பட்டது என்க. மேல் நட்பினால் வரும் பயனும் அவரோடு ஒழுகும் திறனும் கூறினார்; இது நட்பினால் வரும் பயன் கூறுகின்றது ஆகலின் அதன்பின் கூறப்பட்டது.*

பரிதி:— தீநட்பாவது கூடினாலும் பொல்லாக்குணத்தார் நட்பு. அது விடவேண்டும் எ - று.

811. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது. (க)

உரைப்பகுதி:

பரிமே:— பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை - காதன்மிகுதியால் பருகுவார் போன்றாராயினும் தீக்குணமுடையார் நட்பு, பெருகலின் குன்றல் இனிது - வளர்தலின் தேய்தல் நன்று.

*"பருகு வன்ன அருகா நோக்கமொடு" என்றார் பிறரும். நற்குணமில்லார் எனவே, தீக்குணமுடையர் என்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகினால் வருங்கேடு குன்றினால் வாராமையின், குன்றலினிது என்றார். இதனால் தீநட்பினது ஆகாமை பொதுவகையான் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையான் கூறுப.

மணக்:— கண்ணினால் பருகுவாரைப் போலத் தமக்கு அன்புடையராயிருப்பினும் குணமில்லாதார் நட்புப் பெருகுமதனினும் குறைதல் நன்று எ - று.

இது குணமில்லாதார் நட்புத் தீது என்றது.

பரிதி:— புசிக்கிற அமிர்தம்போலே இதமானாலும் பண்பிலார் உறவு பெருகுதலின் குறைவது நன்று எ - று.

காளிங்:— காணுந்தொறும் கண்ணினால் பருகிக் கொள்வார் போன்று இருப்பினும் நல்லொழுக்கம் இல்லாத கேண்மை பெருகி வருதலின் தம் கருமம் குறை படுதல் சால இனிது எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"தக்கன் உறவெனினும் சங்கரன்தன் நட்பிற்குத்
தக்கவனன் றென்றொறுத்தல் சாலுமே - மிக்க." —முதுமொழி. 127.

---

*பொருந. 78.

" இன்னலே பல்குரம்பால் என்று விபீடணன்றன்
முன்னவனை நீத்தான் முருகேசா - அன்னிப்." —முருகேசர். 82.

குறிப்பு:

பருகுவார்போலினும், 'பருகுவன் அன்ன ஆர்வத்தனாகி', 'பருகுவான் போல நோக்கி 'என்பன அன்பு ஆர்வமான நிலையை விளக்குவன. தீயோர் நட்பு தொடக்கத்தில் அங்ஙனமாகும். ஆனாலும் பிற்பயக்கும் பீழை பெரிதாகலின் குன்றல் இனிது என்றார்.

—தொகுப்பாசிரியர்.

812. உறின்நட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.

உரைப்பகுதி :

பரிமே:— உறின் நட்டு அறின் ஒரூஉம் ஒப்பு இலார் கேண்மை - தமக்குப் பயனுள்வழி நட்புச்செய்து அஃது இல்வழி ஒழியும் ஒப்பிலாரது நட்பினை, பெறினும் இழப்பினும் என் - பெற்றால் ஆக்கம் யாது! இழந்தால் கேடு யாது எ - று.

தமக்குற்றன பார்ப்பார் பிறரோடு பொருத்தம் இலராகலின், அவரை ஒப்பிலார் என்றார். அவர்மாட்டு நொதுமற்றன்மையே அமையும் என்பதாம்.

மணக்:— செல்வம் மிக்க காலத்து நட்புக்கொண்டு, அஃது அற்ற காலத்து நீங்குகின்ற நிகரில்லாதார் நட்பைப் பெற்றதனால் வரும் நன்மை யாது? இழந்ததனால் வரும் தீமை யாது? எ - று.

மக்களுள் இவரோடு ஒத்த இழிவுடையார் இன்மையான் ஒப்பிலார் என்றார். இது காலபுருடர் நட்புத் தீது என்றது.

பரிதி:— பயன்கண்டால் உறவுசெய்து பயனில வந்தபோது உறவு விடுவார் நட்புப் பெற்றால் என்ன? பெறாவிடில் என்ன? எ - று.

காளிங்:— இங்ஙனம் தமக்கு உறுவது பெறும் காலத்து மிகவும் நட்டு தமக்கு உறுதி அறுமிடத்து நீங்கும் இயல்பினராகிய இந்த ஒத்த நெறி இல்லாதார் கேண்மை பெறின் அதனால் வரும் இன்பம் யாது? இழப்பின் அதனால் வரும் சேதம் யாது? மற்று ஒன்றும் இல்லை எ - று.

ஒப்புமைப்பகுதி:

“அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.” —வாக்கு. 17.

“ காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்—ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர்.” —நாலடி. 113.

குறிப்பு:

போலினும்: உம்மை இழிவுசிறப்பும்மை. ஒப்பிலார் - செல்வத்தையும் வறுமையையும் சமபுத்தி பண்ணுதவர்கள். பரிமேலழகர் “பொருத்தமிலாரகலின் ஒப்பிலார் என்றார்” எனக் கூறினர் ஆய்க.

—தொகுப்பாசிரியர்.

813. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். (ங)

உரைப்பகுதி :

பரிமே:— உறுவது சீர்தூக்கும் நட்பும் - நட்பளவு பாராது அதனல் வரும் பயனளவு பார்க்கும் நட்டாரும், பெறுவது கொள்வாரும் - கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளும் பொதுமகளிரும், கள்வரும் - பிறர்கேடு நோக்காது அவர் சோர்வு நோக்கும் கள்வரும், நேர் - தம்முள் ஒப்பர்.

நட்பு: ஆகுபெயர். பொருளையே குறித்து வஞ்சித்து ஒழுகலின், கணிகையர் கள்வர் என்றிவரோடு ஒப்பர் என்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானும் தமக்கு உறுவதுபார்ப்பார் நட்பின் தீமை கூறப்பட்டது.

மணக்:— நட்டோர்க்கும் தமக்கும் வரும் நன்மை தீமைகளை ஒக்கப் பார்த்துத் தமக்கு நன்மையாகுமதனைச் சீர்தூக்கும் நட்டோரும், பெற்றது கொள்ளும் கணிகையரும், கள்வரும் என்று கூறப்பட்டவர்கள் தம்முள் ஒப்பார் எ - று.

பரிப்:— இம்மூவர் நட்பையும் ஆராயின் அவர்களும் தீமை தருவர் என்றது.

பரிதி:— பயன்கண்டு உறவுசெய்வாரும், பரத்தையரும், கள்ளரும், நிகர் என்க. அது எப்படி என்றால் இம்மூவரும் பயன்கண்டால் உறவு கொள்வர்; பயனில்லாதபோது கைவிடுவர் எ - று.

காளிங்:— தமக்கு உறுவது பார்த்து வந்து சார்ந்த நட்டாரும், பெறுவது கொள்ளும் பொது மகளிரும், பொருள் சோர்வு பார்க்கும் கள்வரும் இம்மூவர்க்கும் வஞ்சனை தன்னில் ஒக்கும் எ - று.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— இதனுள் நேர் என்னும் முதனிலைத் தனிவினை முற்றாயிற்று என்பர். (நன். 351)

ஒப்புமைப்பகுதி:

“சாய உரைத்துக் கருமம் சிதையாதார்
தாயரோ டொவ்வாரோ தக்கார்க்கு - வாய்பணிந்து
உள்ளம் உருக உரைத்துப் பொருள்கொள்வார்
கள்ளரோ டொவ்வாரோ தாம்.” —அறநெறி. 98.

“கண்ணுள் மணியேபோல் காதலால் நட்டாரும்
எண்ணும் துணையில் பிறராகி நிற்பரால்
எண்ணி உயிர்கொள்வான் வேண்டித் திரியினும்
உண்ணும் துணைக்காக்கும் கூற்று.” —பழ.நா.

முதுமொழிவெண்பாக்கள்:

“கோதென் றகற்றும் குணமில்லா நட்பினரைத்
தீதென் றகற்றும் தினகரா - யாதொன்(று);” —தினகர. 86.

குறிப்பு:

நட்பைப் பணயமாகவைத்துக் கைப்பொருளைக் கருதுபவர் நட்பும், இன்பமென்று ஏய்த்துத் தான் அன்புகொள்ளாது அவர் கைப்பொருள் கவரும் கணிகையும், அகப்பட்டதை அடித்துச்செல்லும் கள்வரும் நேராவர்.

—தொகுப்பாசிரியர்.

814. அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. (சு)

உரைப்பகுதி:

பரிமே:— அமரகத்து ஆற்று அறுக்கும் கல்லா மா அன்னார் தமரின் - அமர் வாராதமுன்னெல்லாம் தாங்குவதுபோன்று வந்துழிக் களத்திடை வீழ்த்துப்போம் கல்வியில்லாத புரவிபோல்வாரது தமர்மையில், தனிமை தலை - தனிமை சிறப்புடைத்து.

கல்லாமை *கதி ஐந்தும், சாரி பதினெட்டும், பொருமுரணுற்றலும் அறியாமை. துன்பம் வாராதமுன்னெல்லாம் துணையாவார்போன்று வந்துழி விட்டுநீங்குவர் என்பது உவமையால் பெற்றாம். அவர் தமரானால் வருமிறுதி தனியானால்வாராமையின், தனிமையைத் தலை என்றார்: எனவே, அதுவும் தீதாதல் பெறுதும்.

மணக்:— தெருவின்கண் நெறிப்பட நடந்து அமரின்கண் நெறிப்படாமல் நடந்து ஏறினவன் வலிமையைக் கெடுக்கும் அறிவில்லாத குதிரையைப் போல்வார் தமராவதினும் ஒருவன் தனியனாதல் நன்று எ - று.

இது கயவர் நட்புத் தீமைபயக்கும் என்றது.

பரிப்:— தனிமை தீது என்பது மூன்பே அமைந்துகிடந்தது. இந்நட்பின் கொடுமை யதுவும் நன்று ஆயிற்று. தீமைக்கு அளவு இன்மையின் இவ்வாறு கூறினார். இவ்வுரை மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும்.

பரிதி:— சமர்பூமியிலே இராவுத்தன் சேவகத்தைக் கெடுக்கிற திருந்தாக் குதிரையை ஒத்தார் நட்பினும் தனிமை நல்லது எ - று.

காளிங்:— போர் செய்யும் இடத்து இடது சாரியும், வலது சாரியும், குறுக்கு அறுத்தலும், நெடுகப் பாய்தலும், மற்றும் பலவும் கற்று

---

*"ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையும், கந்து மறமும் கறங்குளைமா: விக்கிதம், வற்கிதம், உபகண்டம், ஜவம், மாஜவம், என்னும் இப்பஞ்ச தாரையையும், பதினெட்டுவகைப்பட்ட சுற்றுவரவினையும் கழியப்பாய்தலையும் கறவு தலையும் ஒலிக்கும் தலையாட்டத்தினையும் உடைய குதிரை."

—பு. வெ. வென்றிப் பெருந்திணை.13.

அறியா மாவானது தன்னை நடாத்துவான் ஆற்றலை அறுக்குமாப் போல அன்னர் ஆகிய தமரின் தனிமையே மிகவும் தலை எ - று.

ஒப்புமைப்பகுதி;

"எய்ப்புழி வைப்பாம் எனப்போற்றப் பட்டவர்
உற்றுழி ஒன்றுக் குதவலராய்ப் பைந்தொடீஇ
அச்சிடை இட்டுத் திரியின் அதுவன்றே
மச்சேற்றி ஏணி களைவு." —பழ நா.

"பாப்புக் கொடியாற்குப் பால்மேனி யான்போலத்
தாக்கி அமருள் தலைப்பெய்யார் - போக்கி
வழியார நட்டார்க்கு மாதவம்செய் வாரே
கழிவிழாத் தோளேற்று வார்." —ஷை

குறிப்பு:

கல்லாமா - போரில் வீழ்த்தலையன்றி கதி, சாரி முதலியவற்றைக் கல்லாதமா.
—தொகுப்பாசிரியர்.

815. செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— செய்து ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை - செய்து வைத்தாலும் அரணாகாத கீழ்மக்களது தீநட்பு, எய்தலின் எய்தாமை நன்று - ஒருவர்க்கு உண்டாதலின் இல்லையாதல் நன்று.

சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. அரணாகாமை - தொலைவின்கண் விட்டு நீங்குதல். எய்தலின் எய்தாமை நன்று என்பதற்கு மேலுரைத்தாங்கு உரைக்க. சாராத என்னும் பெயரெச்சம் கேண்மைஎன்னும் பெயர் கொண்டது; சிறியவர் என்பதனைக் கொள்ளின், செய்து என்பது நின்று வற்றும். இவை இரண்டு பாட்டானும் தொலைவில் துணையாகாத நட்பின் தீமை கூறப்பட்டது.

மணக்:— நட்புச்செய்து தனக்குப் பாதுகாவலாதல் இல்லாத புல்லியாரது புல்லிய நட்பைப் பெறுவதினும், பெறாமை நன்று எ - று:

இது சிறியார் நட்புத் தீமைதரும் என்றது. சிறியார் - சூதர், வேட்டைக்காரர், பெண்டிர் போல்வார்.

பரிதி:— தமக்குத் துன்பமேசெய்து நிலையற்ற குணத்தாரான பொல்லாதார் நட்பைப் பெறின் என்ன? பெறுவிடில் என்ன? எ - று.

காளிங்:— பலநாளும் தமக்கு ஒருவர் பேருதவி செய்தவர்க்கும் தாம் சிறிதும் உறுதி சாராத புல்லியர் ஆகிய நீசர் நட்புப் பெறுதலின் பெறுமையே மிகவும் நன்று எ - று.

816. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும். (சா)

உரைப்பகுதி :

பரிமே:— பேதை பெருங்கெழீஇ நட்பின் - அறிவிலானது மிகச் செறிந்த நட்பின், அறிவுடையார் ஏதின்மை கோடி உறும் - அறிவுடையானது பகைமை கோடி மடங்கு நன்று.

கெழீஇய என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது. பன்மை உயர்த்தற்கண் வந்தது. அறிவுடையான் பகைமை ஒரு தீங்கும் பயவாமையானும், பேதைநட்பு எல்லாத் தீங்கும் பயத்தலானும், கோடியுறும் என்றார். பெருங்கழி நட்பு என்று பாடம் ஓதுவாரும் உளர்.

மணக்:— அறிவில்லாதார் மிகவும் கெழுமிய நட்பாகுமதனினும், அறிவுடையார் பகைமை கோடிமடங்கு மிக்க நன்மையை உண்டாக்கும் எ - று.

இது பேதையார் நட்புத் தீமை பயக்கும் என்றது.

பரிதி:— பேதையார்நட்பினும் அறிவுடையார்பகை இனிது எ-று.

காளிங்:— அறிவிலாதான் ஒருவன் வந்து பெருங்கெழுமுதல் செய்து நட்பைச் செலுத்துவதினும் அறிவுடையார் பகைமை கோடி உறும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"இழிந்த மாக்களொடு இன்பம் ஆர்தலின்
உயர்ந்த மக்களொடு உறுபகை இனிது." —பெருங். 4:4:21-22.

" இசைந்த சிறுமை யியல்பிலா தார்கண்
பசைந்த துணையும் பரிவாம் - அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறி வினார்கண்
பகையேயும் பாடு பெறும்." —நாலடி. 187.

முதுமொழிவெண்பாக்கள்:

"மாயமா ரீசன் மடிந்தான் கவுசிகன்றான்
ஏயதவம் உற்றான் இரங்கேசா - ஆயதனால்." —இரங். 82.

குறிப்பு:

ஏதிலார் தன்மை ஏதின்மையாகலின் அயன்மை என்னும் பொருளே சிறந்தது. ஏதிலார் பகையும், நண்புமாகிய ஏதுமிலாதவர் என்ற காரணம் பற்றிவந்த பெயர். ஏதின்மை அவர்கள் தன்மையாகி நொதுமலைக்காட்டிநிற்கும். பகையையாகிய ஒன்று உடையாரை ஏதிலார் என்றலும், அவர்தன்மையையும் ஏதின்மை என்றலும் பொருந்துமாறு ஆய்க. ஆதலால் அறிவுடையாருடைய நொதுமலே கோடிமடங்கு நல்லது. பகை கோடிமடங்கு நல்லது எனின் "பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர் கைவிடல்" என்றதனோடு மாறுகொள்ளாதோ? ஆராய்க. —தொகுப்பாசிரியர்.

817. நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— நகை வகையர் ஆகிய நட்பின் - தாம் அறிதல் வகையராகாது நகுதல் வகையராதற்கு ஏதுவாகிய நட்பான் வருவனவற்றின், பகைவரால் பத்து அடுத்த கோடி உறும் - பகைவரான் வருவன பத்துக் கோடிமடங்கு நல்ல.

நட்பு ஆகுபெயர். அந்நட்பாவது *விடமரும் தூர்த்தரும் வேழம்பரும் போன்று பலவகையான் நகுவித்துத் தாம் பயன் கொண்டொழிவாரோடு உளதாயது. பகைவரால் என்பது அவாய்நிற்றலின், வருவன என்பது வருவிக்கப்பட்டது. பத்தடுத்தகோடி - பத்தாகத்தொகுத்தகோடி. அந்நட்பான் வரும் இன்பங்களின் அப்பகைவரான் வரும் துன்பங்கள் இறப்ப நல்ல என்பதாம். இதற்குப் பிறரெல்லாம் சொல்லிலக்கணத்தோடு மாறுகொள உரைத்தார்.

*'விடமரும் தூர்த்தரும் விட்டேற்றாளரும் நடவை மாக்களும் நகையொடு வைகி.' —மணிமேகலை. 14 : 61-62.

மணக்:— நகையின் பகுதியார் செய்த நட்பினும், பகைவராலே பத்துக்கோடி மடங்கு நன்மை மிகும் எ - று.

நகைவகையர் - காமுகர், வேழம்பர் முதலாயினர். இஃது இவர்கள் நட்புத் தீது என்றது.

பரிப்:— நகைவகையர் நட்பாகிய அதனினும் பகைவராதல் நன்மைபயக்கும் என்று பொருளுரைக்கினும் அமையும். பின் கூடா நட்புக் கூறுவாராதலின் இவர்களும் அதற்கு உரியர் என்பதற்கு ஈண்டு உரைத்தது என்க.

பரிதி:— தம்மில் குற்றத்தைத் தமக்கு வேண்டாதாரிடத்திலே தூற்றுபவர் உறவின் பத்துக்கோடி பகை அழகு எ - று.

காளிங்:— இவர் நகையர் ஆகி நட்டு ஒழுகலின் இவர் மாட்டு ஓர் அயிர்ப்பு இல்லை: அதனால் பலகோடி படைவரினும் அவை புறத்தின் நின்று வருவன ஆகலான் அதனிடை ஓர் உபாயம் சிந்தித்து உய்யவும் கூடும். மற்று இவர் கூட நின்றே குடி முழுதும் கெடுப்பர் என்பது பொருள் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"வன்பாட் டவர்பகை கொள்ளினும் மேலாயார்
புன்பாட் டவர்பகை கோடல் பயமின்றே
கண்பாட்ட பூங்காவிக் கானலந் தண்சேர்ப்ப
வெண்பாட்டம் வெள்ளம் தரும்." —பழ. நா.

"வாயிலே உறவு மனதில் பகை." —பழ.

"வழவழத்த உறவைப்பார்க்கினும், வைரம் பற்றிய பகைநன்று." —ஷை

குறிப்பு:

நகைநட்பு இன்பம்பயப்பதுபோலத் துன்பம் பயப்பது ஆதலின் துன்பமே பயக்கும் பகைவரைப் பார்க்கினும் பத்துமடங்கு கெட்டது.

—தொகுப்பாசிரியர்.

818. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை - தம்மால் முடியும் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரோடு கொண்ட நட்பினை, சொல்லாடார் சோர விடல் - அதுகண்டால் அவரறியச் சொல்லாதே சோரவிடுக.

முடியாதாக்குதல் முடியாதாக நடித்தல். சோரவிடல் விடுகின்ற வாறு தோன்றாமல் ஒருகாலைக்கொருகால் ஓயவிடுதல். அறியச்சொல்லினும் விடுகின்றவாறு தோன்றினும் அதுபொழுது பரிகரித்துப் பின்னும் நட்பாய் ஒழுகக் கருதுவாராகலின், சொல்லாடார் என்றும், சோரவிடல் என்றும் கூறினர். இவை மூன்று பாட்டானும் முறையே பேதையார், நகுவிப்பார், இயல்வது செய்யாதார் என்று இவர்கள் நட்பின்தீமை கூறப் பட்டது.

மணக்:— தம்மால் இயலும் கருமத்தை முடியாது வருத்துமவர் நட்பை, நட்பென்று சொல்லுவதும் செய்யாராய் வீழவிடுக எ - று.

பரிதி:— தனக்கு வேண்டின காரியத்தை முடியாமல் விக்கினம் பண்ணுவான் உறவை நழுவவிடுக எ - று.

காளிங்:— தமக்கு இயலும் கருமத்தையும் இயற்றாது கெடுபவர் கேண்மையை நாவினாலும் உரையாடாராய்க் கழிய விடுக எ - று.

உடற்றுபவர் என்பது கெடுப்பவர் என்றது.

ஒப்புமைப்பகுதி:

"மூர்க்கரோடு இணங்கேல்." —ஆத்தி. 93.

"கெடுவது செய்யின் விடுவது கருமம்." —கொன்றை. 20.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஆங்கா ரியந்தடுத்த அங்கனைசொல் கேட்டிறந்தான்
தூங்காத் தசரதன்றான் சோமேசா - ஈங்கிதனால்." —சோமேசர். 82.

குறிப்பு:

தான்செய்யாது உழப்புபவர் பிறர்செய்வதையும் தாழ்த்துகின்றாராதலின் சோரவிடல் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

819. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. (௯)

உரைப்பகுதி:

பரிமே:— வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு - வினையும் சொல்லும் ஒவ்வாது வேறுவேறாய் இருப்பார் நட்பு, கனவினும் இன்னாது - நனவின்கண்ணே யன்றிக் கனவின்கண்ணும் இன்னாது.

வினை சொற்களது ஒவ்வாமை முதல்மேல் ஏற்றப்பட்டது. அஃதாவது வினையில் பகைவராய்ச் சொல்லில் நட்டாராயிருத்தல். நிகழ்வின்கண் உளதாயிருத்தலால் கனவினும் இன்னாது என்றார். உம்மை எச்சவும்மை; இழிவுசிறப்பும்மையும் ஆம். மன்னும் ஓவும் அசைநிலை.

மணக்:— செய்யுந்தொழில் வேறாக, சொல்லுங்கூற்று வேறாக ஒழுகுவாரது நட்பு, பயன்படும் நனவின்கண்ணேயன்றிக் கனவின் கண்ணும் இன்னாது எ - று.

இது பொய்கூறுவார் நட்புத் தீது என்றது.

பரிதி:— கனவினும் ஆகாது நினைப்பதொன்று செய்வதொன்று ஆனார் நட்பு எ - று.

காளிங்:— நனவின்கணன்றியே கனவின்கண்ணும் இன்னாத்து: எது எனின் தொழில் ஒன்றாய்ச் சொல் ஒன்றாய் வேறுபட்டு இருப்பார் நட்பு எ - று.

ஒப்புமைப்பகுதி:

"யாஅர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேரும் துணைமை உடையவர் - சாரல்
கனமணி நின்றிமைக்கும் நாடகேள் மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு." —நாலடி. 127

" மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும் - அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளும் ஒன்றே
கனமொன்று மேலவர்தம் கண்." —நீதி. 75.

" நட்பிடைக் குய்யம்வைத்து எய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தாராய் நின்றார்க்குத் - திட்பமா
நாலுலந்த தன்றே நடுவன் நடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து." —நீதிநெறி. 57.

" நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்." —கொன்றை. 48.

முதுமொழிவெண்பாக்கள்:

" பொன்மானன் றாசைகொண்ட பொன்னனையார் பட்டதுயர்
சென்மாந்த பாவம் சிவசிவா - சொன்னோம்." —சிவசிவ. 82.

820. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு. (௧௦)

உரைப்பகுதி:

பரிமே:— மனைக் கெழீஇ மன்றில் பழிப்பார் தொடர்பு - தனியே மனைக்கண் இருந்துழி நட்பாடிப் பலரோடு மன்றின்கண் இருந்துழிப் பழிகூறுவார் நட்பு, எனைத்தும் குறுகுதல் ஓம்பல் - சிறிதாயினும் தம்மை நணுகுதலைப் பரிகரிக்க.

மனைக்கண் கெழுமலும் மன்றின்கண் பழித்தலும் தீதாகலின் அவர் ஒருகாலும் தம்மை நணுகாவகை குறிக்கொண்டு காக்க என்பார், அவர் நட்பின்மேல் வைத்துக் கூறினர். இவை இரண்டு பாட்டானும் வஞ்சர்நட்பின் தீமை கூறப்பட்டது.

மணக்:— மனையின்கண் நட்டோராயிருந்து, மன்றின்கண் குற்றம் கூறுவாரது நட்பை, சிறிதும் செறிதலைத் தவிர்க்க எ - று.

இது புறங்கூறுவார் நட்புத் தீது என்றது.

பரிதி:— அகத்திலே உவந்திருந்து இரண்டற்றிருந்து ஒருவர் குற்றம்செய்தால் அந்தக் குற்றத்தை மன்றிலே தூற்றுவான் உறவு என்றென்றும் ஆகாது எ - று.

காளிங்:— எவ்வாற்றானும் சென்று அடைதலைப் பரிகரிக்க; யாதினை எனின் மனையிடத்துக் கெழுமி வைத்து மன்றின்கண் சென்றே பழித்து உரைப்பாரது நட்பினை எ - று.

ஒப்புமைப்பகுதி:

“ காதல ரேனும் விடுவிலை மாதர் கள்வரின் தமக்குறல் குறிப்போர்
பேதையர்கெடுதி யுற்றுழி உதவார் பெருட்பொருள் நகுவித்துப்பறிப்பார்
ஆதரு கருமம் தம்மினு காத தாகவே நடிப்பவர் உளமும்
ஓதலும் ஒவ்வார் மனைக்கெழீஇ மன்றி னுறப்பழிப் பார்இவர் தமையே”
—விநா. அரசி. 128.

குறள்வைப்புமுறை

பரிமே:— பருகுவார், உறினட்டு, உறுவது, அமரகத்து, செய்தேமம், பேதை, நகைவகைய, ஒல்லும், கனவினும், எனைத்தும்.

மணக்:— அமரகத்து, செய்தேமம், பேதை, பருகுவார், நகைவகைய, ஒல்லும், எனைத்தும், கனவினும், உறினட்டு, உறுவது.

பரிதி;— பருகுவார், அமரகத்து, கனவினும், எனைத்தும், ஒல்லும், உறினட்டு, உறுவது, நகைவகைய, செய்தேமம், பேதை.

காளிங்:— பருகுவார், நகைவகைய, கனவினும், அமரகத்து, உறினட்டு, உறுவது, செய்தேமம், ஒல்லும், எனைத்தும், பேதை.

83. கூடாநட்பு.

தொகுப்புரை:

[காலம், வாய்க்கும்துணையும் காத்திருப்பவர்கள் நட்பு வாய்த்தபோது அடித்தற்கு உதவும் பட்டடையைப்போல்வதாம். இனம்போலப் பழகும் இனம் அல்லாதாருடைய நட்பு பெண்களின் மனத்தைப்போல மாறுபடும். நல்லநூல்கள் பலவற்றை நன்றாகக் கற்றறிந்தாலும் பகைவர்கள் மனம் நல்லவர்களாகமாட்டார்கள். கண்டபொழுது சிரிக்கும் நயவஞ்சகர்களை அஞ்சுதல்வேண்டும். மனத்தோடு பழகாதவர்களை, அவர்கள் பேச்சைக்கண்டு ஏமாந்து எந்தக்காரியத்திலும் ஏவுதல்கூடாது. பகைவர்கள் சிநேகிதர்கள்போல நல்லதையே சொன்னாலும் அதன்பயனைக்கொண்டு விரைவில் அறிந்துகொள்ளலாம். பகைவரின் பணிவான சொல்லை நாம் பாராட்டுதலாகாது. வில்வளைந்திருந்தாலும் தீமையைச் செய்கிறது. வணங்குகிற கையில் வாளிருக்கலாம். அதுபோலவேயாகும் பகைவர் அழுகையும். புறத்தே நட்புச்செய்து அகத்தே இகழும் பகைவரைத் தாமும் அவ்வாறே செய்துபகை சாகும்வண்ணம் பழகுக. பகைவனை நட்பாகக்கொள்ளும் காலம்வரின் முகம் அளவில் நட்புச்செய்து அகநட்பை அகற்றுக.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி, ஏனைக் கூடாநட்புக் கூறுகின்றார். அஃதாவது பகைமையான் அகத்தால் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந் துணையும் புறத்தால் கூடியொழுகுவார் நட்பு.

மணக்:— கூடாநட்பாவது சுற்றத்தாராயினும் பிறராயினும் மனத்தினால் நள்ளாது நட்டாரைப்போல ஒழுகுவாரது இயல்பும் அவர் மாட்டு ஒழுகுந்திறமும் கூறுதல். தமக்கு இனம்அன்றிக் கருமம் காரணமாக நட்பாரும், பகைவராய் நட்பாரும் என அவ்விருவகையாரையும் தீநட்புப் போலக் கடியவேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி;— கூடாநட்பாவது புரையறக் கூடியும் பிரிவான் எ-று.

821. சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— நேரா நிரந்தவர் நட்பு - கூடாதிருந்தே தமக்குவாய்க்குமிடம் பெறுந்துணையும் கூடியொழுகுவார் நட்பு, சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை - அது பெற்றால், அற எறிதற்குத் துணையாய பட்டடையாம்.

எறியுமெல்லை வாராமுனெல்லாம் தாங்குவதுபோன்று இருந்து வந்துழி அற எறிவிப்பதாய பட்டடைக்கும் அத்தன்மைத்தாய நட்பிற்கும் தொழிலொப்புமை உண்மையான், அதுபற்றி அந்நட்பினைப் பட்டடையாக உபசரித்தார். சீர்விடம் என்று *பாடம் ஓதி முடிவிடம் என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— முடியுமிடங்காணின், மற்றொருவன் எறிதற்குப் பட்டடையாம்; மனத்தினால் ஒவ்வாது புறத்து வேறுமிகச் செய்து ஒத்தார் போல ஒழுகுவாரது நட்பு எ - று.

இது கருமங்காரணமாக நட்டாரோடு கூடும் திறம் கூறிற்று. பட்டடையாவது தான் தாங்குவதுபோல நின்று வெட்டுவார்க்கு உதவி செய்வது.

பரிப்:— இது கூடா நட்பினால் வரும் குற்றம் கூறிற்று.

பரிதி:— ஒருவனை நட்புக்கொண்டு அவன் உள்பாடெல்லாம் அறிந்து இவனுக்கு ஒருகுற்றம் வந்தால் அந்தக் குற்றமே முன்னாக எண்ணுவான் அது என்போல் எனின், பட்டடையும் கரும்பும் போல தறிப்பர் எ - று.

காளிங்:— தமக்கு ஏறத் திருந்தின இடம் காணின் அவரைத் தாம் கொல்லுதற்குப் பட்டடை யாது எனின், தமது அகத்து ஒவ்வாராய்ப் புறத்து ஒருவரோடு ஒத்தார் போன்று உள்ளவர் நட்பு எ - று.

---

* இது மணக்குடவர் பாடம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— எறிதற்குப் பட்டடை - எறிதற்குத் ஆணையாய பட்டடை. "ஆரம்பரந்து" என்னும் கோவைபாருள் 'சீரம்பரம் - சீர்த்தவம் பரம்' என இறந்தகால வினைத்தொகையானது போல, ஈண்டும் சீரிடம் - வாய்த்தவிடம். பரிபாட்டுள் "புகவரிவண்டு" புகர்த்த வரிவண்டு "அமர்க்கட்டு" (1083) என்பனவும் அன்ன.

குறிப்பு:

நேராநிரந்தவர் - பகை உள்ளத்தோடு பழகுபவர். சீரிடம் - வாய்ப்பான இடம். பட்டடை - கொல்லன் உலைக்களத்தில் உள்ள ஒரு கருவி. இக்காலத்தில் பட்டரை என வழங்குகிறது.

—தொகுப்பாசிரியர்.

822. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— இனம்போன்று இனமல்லார் கேண்மை - தமக்கு உற்றார்போன்று உறாதாரோடு உளதாய நட்பு, மகளிர் மனம்போல வேறு படும் - இடம்பெற்றால் பெண்பாலார் மனம்போல வேறுபடும்.

அவர் மனம் வேறுபடுதல் 'பெண்மனம் பேதின் றொருப்படுப்பே னென்னும், எண்ணில் ஒருவன்' என்பதனானும் அறிக. நட்பு வேறு படுதலாவது பழையபகையேயாதல். இவை இரண்டு பாட்டானும் கூடா நட்பினது குற்றம் கூறப்பட்டது.

மணக்:— நட்டோர்போன்று மனத்தினான் நட்பில்லாதார் நட்பு, பெண் மனம்போல வேறுபடும்; ஆதலால், அவருள்ளக் கருத்து அறிந்துகொள்க எ - று.

இது நட்பாயொழுகுவாரது உள்ளக்கருத்தறியவேண்டும் என்றது.

பரிதி:— இனம் போல கூடியிருக்கையிலே மனம்பகையாயினார் உறவு இருமனப் பெண்டிர்போலும் எ - று.

காளிங்:— புறத்து ஒருவரோடு ஒத்தார் போன்று இருந்து அகத்து அவ்வினம் இல்லாதார் நடிக்கும் நடிப்பு மகளிர் தமது உள்ளம் போல் இடம் காணின் வேறுபட்டு விடும் எ - று.

பொதுமகளிர் என்னாது மகளிர் எனப் பொதுவகையால் கூறியது குலமகளிரும் குணம்கெடுதல் கூடும் என்பது குறிப்பு என்று அறிக.

ஒப்புமைப்பகுதி :

" அட்டாலும் பால்சுவையில் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்." —வாக்கு. 4.

" மனதிலே பகையும் உதட்டிலே உறவும்." —பழ.

முதுமொழிவெண்பாக்கள் :

" நீரிலே கஞ்சநிலை நின்று மலைமீது
வாரிதோ யாதிரும லைக்கொழுந்தே - தேரில்." —திருமலைக்.

" ஆரூரர்க் காரூரர் போன்றொற்றி யூரர்செயும்
கூடாநட் பாலே குறைவாலால் - ஒரும்." —முதுமொழி. 128

குறிப்பு:

மகளிர் மனம் வேறுபடும் அளவிற்கே ஒப்புமை கூறப்பட்டது. இனம் அல்லார் கேண்மை வேறுபட்டுத் தீமையும் செய்யும் பின்னர் இருமனப் பெண்டிர் என்பர் ஆகலின் ஈண்டுமகளிர் எனப் பொதுப்படக் கூறினாரேனும் இருமனப் பெண்டிராகிய பொதுமகளிரையே கொள்க. பரிதியுரைகாண்க.

—தொகுப்பாசிரியர்.

823. பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது. (ந)

உரைப்பகுதி :

பரிமே:— நல்ல பல கற்றக்கடைத்தும் - நல்லன பலநூல்களைக் கற்றவிடத்தும், மனம் நல்லர் ஆகுதல் மாணார்க்கு அரிது - அதனான் மனந்திருந்தி நட்பாதல் பகைவர்க்கு இல்லை.

நல்லன மனக்குற்றம் கெடுப்பன. மனம்நல்லர் எனச் சினைவினை முதன்மேல் நின்றது. நல்லராகுதல் செற்றம் விடுதல். உள்ளே செற்ற முடையாரைக் கல்வியுடைமை பற்றி நட்பென்று கருதற்க என்பதாம்.

மணக்:— நல்லவாகிய பல நூல்களைக் கற்றவிடத்தும், மனம் நல்லாராகுதல் மாட்சிமையில்லார்க்கு அரிது எ - று.

இது கல்வியால் அறிதல் அரிது என்றது.

பரிப்:— மன நன்மையாவது செம்மை: அஃது இவ்விடத்து இன்மையால் மன நன்மை இல்லாதார் ஆயினர்.

பரிதி:— பலநூல் கற்றாலும் மனம் திருந்தி நற்குணம் உண்டாதல் மாணார்க்கு அரிது எ - று.

காளிங்:— நல்ல நூல்கள் பலவற்றையும் பழுதறக் கற்ற இடத்தும் அக்கல்விச் சிறப்பால் தன் நெஞ்சு இனியர் ஆகுதல் உள் தூய்மை இல்லாதார்க்கு அரிது எ - று.

குறிப்பு:

படிப்பனயாவும் மனப்பண்பாட்டிற்கே; அங்ஙனமிருந்தும் இவர் பழைய பகைமை பாராட்டுதலின் படிப்பால் பயனில்லை என்பது. மனமும் மனமுடையானும் வேறன்மையின் ஒற்றுமை நயம்பற்றி மனநல்லர் என மனத்தின் நிலை உடையான் மேலேற்றி உரைக்கப்பட்டது. உம்மை இழிவுசிறப்பு.

—தொகுப்பாசிரியர்.

824. *முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும். (ச)

உரைப்பகுதி :

பரிமே:— முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்னா வஞ்சரை - கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்பொழுதும் மனத்தால் இன்னாராய வஞ்சரை, அஞ்சப்படும் - அஞ்சல்வேண்டும்.

---

*'இனியன் ஆதலும் - முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்னாதவன் நகாமல் நெஞ்சு முகத்திற்கு ஏற்ப இனியனாதலையும்' —சிறுபா, 208 உரை

நகையது வகைபற்றி இனிய என்றும், அகத்துச் செற்றம் நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்து விளைத்தலின் வஞ்சர் என்றும், அச்செற்றம் குறிப்பறிதற் கருவியாய முகத்தானும் தோன்றாமையின் அஞ்சுதல செய்யப்படும் என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டானும் குற்றத்திற்கு ஏதுவாய அவர்கொடுமை கூறப்பட்டது.

மணக்:— முகத்தால் இனியவாக நக்கு மனத்தால் இன்னாதவாக நினைக்கும் வஞ்சகரை அஞ்சவேண்டும் எ - று.

பரிப்:— மேல் நட்பாய் ஒழுகுவாரது உள்ளக்கருத்து அறிய வேணும் என்றார்: இஃது அறியுங்கால் குறிப்பினாதல், சொல்லினாதல் அறியவேண்டும் அன்றே: அவை எல்லாவற்றானும் அறிதல் அரிது என்பார் முற்படக் குறிப்பினான் அறிதல் அரிது என்றார்.

பரிதி:— முகத்தில் சிரிப்பும் மனத்தில் கறுப்பும் உண்டான பேரை எமனிலும் அஞ்சப்படும் எ - று.

காளிங்:— முகத்தினால் இனியவாக மகிழ்ந்து நகுதலும் செய்து மனத்தின்கண் இன்னாத வஞ்சரைக் காணின் அஞ்சப்படும் எ - று.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— படும் என்னும் சொல்லும் ஐம்பால் மூவிடத்துக்குப் பொதுவாய் வரும் என்பதற்கு மேற்கோள். (நன். 339.)

சுவாமி:— தொழிற்பெயராய் தேற்றப்பொருள்பட்டு நிற்கும் அஞ்சப்படும் என்ற சொற்குணம் தெரியாத பரிமேலழகர் தமக்கு வேண்டியவாறே பொருளெழுதிச் சென்றனர் எனக் கூறி மறுப்பர். (இ. கொ. 84.)

ஒப்புமைப்பகுதி :

"புறம்நட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும் - கழிபெரும்
கண்ணோட்டம் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து." —நீதிநெறி. 56.

குறிப்பு:

'காஞ்சிரங்கனி கடும் சிவப்பாயிருத்தல் கடிதாக உயிர்மாய்க்க' என்றாற்போல கலந்து பழக முகத்து இனிமையுடையவராவர். உட்கொண்டால் காஞ்சிரங்கனி கொல்வதைப்போல இவரும் விடமாவர் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

825. மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற் றன்று. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— மனத்தின் அமையாதவரை - மனத்தால் தம்மொடு மேவாதாரை, எனைத்தொன்றும் சொல்லினால் தேறற்பாற்று அன்று - யாதொரு கருமத்தினும் சொல்லால் தெளிதன்முறைமைத் தன்று நீதிநூல்.

நீதிநூல் என்பது அவாய்நிலையான் வந்தது. பகைமை மறைத்தற் பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச்சொல்லைச் செவ்வியசொல் எனக் கருதி அவரைக் கருமங்களில் தெளிதல் நீதிநூல்முறைமை அன்று என்பதாம்.

மணக்:— மனத்தால் பொருத்தமில்லாதவரை யாதொன்றன் கண்ணும் அவர் சொல்லினால் தெளிதற்பாலதன்று எ - று.

இது சொல்லினால் அறிதல் அரிது என்றது.

பரிதி:— மனத்தில் அடக்கமும் நற்குணமும் இல்லாதவரை ஒன்றிலும் கூடப் படாது எ - று

காளிங்:— இவ்வாறு நெஞ்சினால் நட்பு அமைவு இல்லாதாரை அவர் சொல் பகுதியால் யாதானும் ஒன்று நட்குதல் பகுதியினை உடைத்து அன்று: எனவே ஒன்றும் குறிக்கொண்டு தம்மை ஓம்பிக்கொள்க என்பது பொருளாயிற்று எ - று.

இனி இவற்றினும் தீது பேதைமை என்பதனான் இவற்றின் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள் :

"நேசன்போல் காடுவெட்டி நேரியன்றென் னற்றழுவி
மோசமே செய்தான் முருகேசா - மாசின்." —முருகேசர். 83.

826. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். (௬)

உரைப்பகுதி:

பரிமே:— நட்டார்போல் நல்லவை சொல்லினும் - நட்டார் போன்று நன்மைபயக்கும் சொற்களைச் சொன்னாராயினும், ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும் - பகைவர் சொற்கள் அது பயவாமை அச் சொல்லியபொழுதே அறியப்படும்.

சொல்லினும் எனவே, சொல்லாமையே பெற்றும்; ஒட்டாரா தலான் தீமைபயத்தல் ஒருதலை என்பார் ஒல்லை உணரப்படும் என்றார்.

மணக்:— உற்றாரைப்போல நல்லவானவை சொன்னாராயினும், பகைவர் சொல்லுஞ்சொல் விரைந்து அறியப்படும் எ - று.

பரிப்:— இது காரியமானவற்றைச் சொல்லினும் தேறல் அரிது என்றது.

பரிதி:— உற்றாரைப் போலே நல்லது சொன்னாலும் கூடா நட்பார் குணம் சடுதியிலே அறியலாம் எ - று.

காளிங்:— தாமும் சிலரோடு நட்டார்போல் நடித்துச் செவிக்கு இனியனவே சொல்லினும் அகத்து ஓர் ஒட்டு இல்லாதார் சொல்லும் அச்சொல் தானும் விரைய ஆராய்ந்துகொள்ள அடுக்கும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"உடம்பட்டு நீப்பார் கிளவி மடம்பட்டு
மெல்லிய வாதல் அறியினும்." —கலி. 113 : 15 - 16.

"இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னார்
கனியு மொழியும் கடுவே - அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்." —நீதிநெறி. 59.

முதுமொழிவெண்பாக்கள்:

"தாய்நீண்டத் தூசுடுத்துச் சாரெனுஞ்சொல் தீதென்றான்
தூய சுயோதனற்குச் சோமேசா - ஆயதனால்." —சோமேசர். 83.

"தாய்போல் வருமலகை தன்னட் பறிந்துமவள்
சேய்போல் இருந்தான் சிவசிவா - மாயனெதிர்." —சிவசிவ. 83.

குறிப்பு:

கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் என்றாற்போல ஒட்டார் சொல்லால் தீமைவிளைதல் விரைவில் உணரப்படும். ஒல்லை - விரைவுப்பொருளைத்தரும் இடைச் சொல். சொல்லினும் என்ற உம்மை எதிர்மறையாய்ச் சொல்லாமையையே உணர்த்தி நின்றது.

—தொகுப்பாசிரியர்.

827. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— வில்வணக்கம் தீங்கு குறித்தமையான் - வில்லினது வணக்கம் ஏற்றவர்க்குத் தீமைசெய்தலைக் குறித்தமையால், ஒன்னார்கண் சொல்வணக்கம் கொள்ளற்க - பகைவர்மாட்டுப் பிறக்கும் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மை செய்தலைக்குறித்ததென்று கருதற்க.

தம்வணக்கமன்று என்பது தோன்றச் சொல்வணக்கம் என்றும், வில்வணக்கம் வேறாயினும் வணங்குதலொப்புமைபற்றி அதன் குறிப்பை ஏதுவாக்கியும் கூறினார். வில்லியது குறிப்பு அவனுடைய வில்வணக்கத்தின் மேல் நிற்றலான், ஒன்னாரது குறிப்பும் அவருடைய சொல்வணக்கத்தின் மேலதாயிற்று. இதுவும் தீங்குகுறித்த வணக்கம் என்றேகொண்டு அஞ்சிக் காக்க என்பதாம். இவை மூன்று பாட்டானும் அவரைச் சொல்லால் தெளியற்க என்பது கூறப்பட்டது.

மணக்:— வில்லினது வணக்கம் தீமையைக் குறித்தமை ஏதுவாக, தாழச்சொல்லுஞ் சொல்லைப் பகைவர்மாட்டு நன்று சொன்னார் என்று கொள்ளாதொழிக எ - று.

இது தாழச்சொல்லினும் தேறப்படார் என்றது.

பரிதி:— துர்ச்சனன் வணங்குதலால் நல்லவன் என்று சொல்லு வார்; அவனை நம்ப வேண்டா. அது எது போல் என்றால் கொலைசெய்வதற்கு வில் வளைத்ததனோடு ஒக்கும் எ - று.

காளிங்:— முன்னரே வந்து சொல்லும் சொல் வணக்கத்தை அகம் பொருந்தாதார்மாட்டு என்றும் கைக்கொள்ளாது ஒழிக: என் எனின், வில் வளைந்த வணக்கம் எத்துணை உண்டு; அத்துணையும் கொலைக் குறித்து நின்றமையால் அது நினைக்கவேண்டும் ஏ - று.

மேற்கோள்பகுதி :

சிவஞான:— வணங்குதல் சிறப்பு வினையாதலல்லது பொது வினையாகாது என்பதற்கு மேற்கோள். (இலக். சூறு. 60.)

ஒப்புமைப்பகுதி:

“வில்லினும் கடிதவர் சொல்லினுட் பிறந்த நோய்.” —கலித்.

“வில் அம்போ, சொல் அம்போ.” —பழ.

முதுமொழிவெண்பாக்கள் :

“சார்ந்துதிதி கர்ப்பம் சதகிருதேழ் கண்டமா
ஈர்ந்தனன் அன்றோ இரங்கேசா - சேர்ந்தார்போல்.” —இரங். 83.

குறிப்பு:

வில் எத்துணை வளைகிறதோ அத்துணைக்கும் அம்பின்கடுமை. அதுபோல பகைவர்சொற்களில் பணிவின் எல்லையும் அத்துணைக்கொடியது என்பது காளிங்கர் கருத்து.

—தொகுப்பாசிரியர்.

828. தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— ஒன்னார் தொழுத கையுள்ளும் படைஒடுங்கும் - ஒன்னார் குறிப்பை உணரவல்லார்க்கு அவர் தொழுத கையகத்தும் படைக்கலம் மறைந்திருக்கும்; அழுத கண்ணீரும் அனைத்து - அவர் அழுதகண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருத்தற்கு இடனும்.

தாம் நட்பு என்பதனைத் தம் கையானும் கண்ணானும் தேற்றிப் பின் கோறற்கு வாங்க இருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்றுகின்றபொழுதே அவற்றுள்ளே தோன்றும் என்பார், ஒடுங்கும்

என்றார். பகைவர் தம் மென்மைகாட்டித் தொழினும் அழினும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்க என்பதாம். இதனால் அவரைச் செயலால் தெளியற்க என்பது கூறப்பட்டது.

மணக்:— தொழுதகையுள்ளும் கொலைக்கருவி ஒடுங்கும்; பகைவர் அழுதகண்ணீரும் அத்தன்மையதாம் என்று கொள்க எ - று

மெல்லியராகத் தொழுதுவந்து ஒத்தார்போல ஒழுகுவது நட்பு என்றவாறு. இது கூடாநட்பினால்வரும் குற்றம் கூறிற்று. கூடா நட்பினர் வேறு காலத்தினும் அழுதகாலத்தினும் தேறப்படார் என்க.

பரிதி:— தொழுதகையுள் ஆயுதம் அடக்கி, வஞ்சனை செய்யும் கண்ணீருமாக இருந்து சதிக்கும் ஈனர் உறவு விடுக எ - று.

காளிங்:— உள்ளம் பொருந்தாதார் புறமே தொழுதகையினைக் கண்டால் குறிக்கொண்மின்: அதுதானே கொலைக்கருவி அறிந்து ஒடுங்கக் கொண்மின்: மற்றவர் ஒன்று உற்ற இடத்து அழுத கண்ணீரும் அத்தன்மைத்து எனவே அதுவும் உயிர்க்கு இறுதி செய்தற்கு அடிக்கொண்டதோர் கருவி எ - று.

இங்ஙனம் தொழுதலும் அழுதலும் அன்றி அவர் நகுதலும் அன்னது என்பதனை அறிவிக்கின்றது *வருங்குறள்.

மேற்கோள்பகுதி:

நச்:— அரசர்க்கு ஒரு துன்பம் வந்தஇடத்து அவர் நட்புடையோர்போல அழுதகண்ணீரும் கொலைசூழ்தலின் கண்ணீரிலும் படை ஒடுங்கிற்றாம்; 'ஒன்னார் அழுதகண்ணீரும் அனைத்து' என்றார் தேவரும். (சீவக. 1891.)

ஒப்புமைப்பகுதி:

"தொழுததங் கையி னுள்ளும் துறுமுடி அகத்தும் சோர
அழுதகண் ணீரி னுள்ளும் அணிகலத் தகத்தும் ஆய்ந்து
பழுதகண் ணரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும் பற்று
தொழிகயார் கண்ணும் தேற்றம் தெளிகுற்றார் விளிகுற் றாரே."
—சீவக. 1891

*காளிங்கர் முறைவைப்பில் வருங்குறள் 'முகத்தினினிய' என்பது.

"வழிபடு வோரை வல்அறி தீயே" —புறம். 10: 1

"நல்லன பலநூல் கற்பினும் கூடா நட்பினர் மனநலன் எய்தார்
சொல்லின்முன் வணங்கும் வணக்கமும் தொழுலும் சொரிந்தகண்
ணீரும்தப் பாது
கொல்லும்வன் படையா மாதலின் பகையுட்கொண்டவர்க் கவரெனினும்
ஒல்லுக அதுவு நீக்குறுக் கால முற்றுழி யல்லது வேண்டா."
—விநா. அரசி. 129.

"மெழுகி னுல்நமக் காலயம் வகுத்ததும் விரகே
ஒழுகு கின்றதன் ஒழுக்கமும் வஞ்சனை ஒழுக்கே
எழுக டற்படை யாவையும் இவன்வழி யனவே
தொழுத கையுளும் படையுள சூழ்ச்சியும் பெரிதால்."
—வில்லி, வாரணவத. 119.

"தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"மாறுகொண்ட ஒன்னார் வணங்கிலவ ரைப்பெரியோர்
தேறுவது செய்யார் தினகரா - வேறு." —தினகர. 87.

குறிப்பு:

"முகத்தின் இனிய" என்ற குறளால் பகைவர் நகுதலை நம்பலாகாது என்றார். இந்தக் குறளால் தொழுதலும் அழுதலும்கூட அத்தகைய என்றார். "அழுங்கள்ளர் தொழுங்கள்ளர் கும்பிடுகள்ளர்" என்ற தனிப்பாடலையும் சிந்திக்க.
—தொகுப்பாசிரியர்.

829. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று. (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— மிகச் செய்து தம் எள்ளுவாரை - பகைமை தோன்றாமல் புறத்தின்கண் நட்பினை மிகச் செய்து அகத்தின்கண் தம்மை இகழும் பகைவரை, நட்பினுள் நகச் செய்து சாப் புல்லற்பாற்று - தாமும் அந்நட்பின்கண்ணே நின்று புறத்தின்கண் அவர் மகிழும் வண்ணம் செய்து அகத்தின்கண் அது சாம்வண்ணம் பொருந்தற்பான்மை யுடைத்து அரசநீதி.

நின்று என்பதூஉம் அரசநீதி என்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. அகனென்று புறனென்றூதல் ஒருவற்குத் தகாது எனினும் பகைவர்மாட்டாயின் தகும் என்பது நீதிநூல் துணிபு என்பார், அதன்மேல் வைத்துக் கூறினர். சாவ என்பதன் இறுதி நிலை விகாரத்தால்தொக்கது; [1]'கோட்டின்வாய்ச் சாக்குத்தி' என்புழிப்போல. எள்ளுவாரைப் புல்லல் எனக் கூட்டுக.

[2]மணக்:— ... .

பரிப்:— நட்டாரைப் போலச் செய்யும் அவற்றை மிகச் செய்து மனத்தினுல் தம்மை இகழுமவர்களைத் தாமும் மகிழுமாறு செய்து நட்பின்கண் நட்புச் சாவ நட்க எ - று.

இது கருமம் காரணம் ஆகி நட்டாரோடு ஒழுகும் திறன் கூறிற்று.

பரிதி:— மிகையானது செய்து தம்மை இகழ்வார் நட்பு முகஞ் சிரிக்கச் சொல்லி மனத்தில் நட்பு விடுவான் எ - று.

காளிங்:— கீழ்ச்சொன்ன அவையே அன்றிப் பின்னும் மிகப் பல செய்தே தம்மை உள்ளத்தால் பெரிதும் இகழ்ந்திருப்பாரை ஓர்ந்து தாம் புறமே முகத்தான் நகச்செய்தே அவரொடு நட்பினுல் உள்ளுறச் செறியும் பகுதியினை உடைத்து அன்று எ - று.

நட்பினுள் சாப்புல்லற் பாற்று என்பது தாம் அவரொடு நட்பின் கண் சாவப் புல்லுதல் என்றது. உள் புல்லற் பாற்று அன்று - தாம் அவரொடு உள்ளுற அணைக்கும் பகுதியினை உடைத்து அன்று எ - று.

ஒப்புமைப்பகுதி:

" புகையுடைத் தென்னில் உண்டு பொங்கனல் அங்கென் றன்னும்
மிகையுடைத் துலக நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பில் தீரா
நகையுடை முகத்தை யாகி இன்னுரை நல்குநாவால்." —கம்ப. அரசி. 29.

குறிப்பு:

நட்பினுள் நகச்செய்து சாப்புல்லற்பாற்று என்னும் பகுதிக்குப் பரிமேலழகர் நட்பின்கண்ணேநின்று புறத்தே மகிழும் வண்ணம் செய்து அகத்தே அந்நட்புச் சாகும்வண்ணம் பழகவேண்டும் என்பர். பரிப்பெருமாளும் அங்ஙனமே.

---

[1] கலி. 105: 35. [2] இவர் உரை கிடைக்கவில்லை.

காளிங்கர், தாமும் முகத்தால் சிரித்து நட்பினால் அவர்கள் மனத்தைப் பொருந்துக. ஆயின் தாம் அவரோடு நட்பின்கண் சாவப்புல்லுதல்கூடாது. அதாவது உயிர் நட்புச் செய்தல் கூடாது என்றார். —தொகுப்பாசிரியர்.

830. பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்(டு)
அகநட் பொரீஇ விடல். (ம)

உரைப்பகுதி:

பரிமே:— பகை நட்பாம் காலம் வருங்கால் - தம்பகைவர் தமக்கு நட்டாராய் ஒழுகுங்காலம் வந்தால், முகம் நட்டு அகம் நட்பு ஒரீஇவிடல் - தாமும் அவரோடு முகத்தால் நட்புச்செய்து அகத்தால் அதனைவிட்டுப் பின் அதுவும் தவிர்க.

அக்காலமாவது-தம்மானும் பகை என்று வெளிப்பட நீக்கலாகாத அளவு. இதனானே ஆமளவெல்லாம் நீக்குக என்பது பெற்றாம். இவை இரண்டு பாட்டானும் அந்நட்பிடை ஒழுகுமாறு கூறப்பட்டது.

மணக்:— பகைவர் நட்பாங்காலம் வந்தவிடத்து, முகத்தால் நட்பினைச் செய்து அகநட்பு நீங்கவிடுக எ - று.

இது பகைவராய நட்டோர்மாட்டு ஒழுகும் திறன்கூறிற்று.

பரிதி:— பகையான் உறவாகவந்தால் நல்லகாரியம் என்று கூடி மனத்துள் வார்த்தை சொல்லாமல் முகத்தில் வார்த்தை சொல்லவும் எ - று.

காளிங்:— இங்ஙனம் பகை நட்பு ஆம் காலம் வருங்கால் இது ஒன்று உடைத்து எனக் கருதிக் குறிக்கொண்டு தாமும் புறமே முகத்தினான் நட்புச்செய்து அகத்தான் இவரை நம்பி நள்ளாது ஒழித்து விடுக எ - று.

குறள்வைப்புமுறை

பரிமே:— சீரிடம், இனம்போன்று, பலநல்ல, முகத்தின், மனத்தின், நட்டார், சொல்வணக்கம், தொழுதகை, மிகச்செய்து, பகைநட்பாம்.

மணக்:— இனம்போன்று, முகத்தின், மனத்தின், பலநல்ல, நட்டார், சொல்வணக்கம், தொழுதகை, சீரிடம், மிகச்செய்து, பகைநட்பாம்.

பரிதி;— சீரிடம், தொழுதகை, இனம்போன்று, பலநல்ல, முகத்தின் மனத்தின், சொல்வணக்கம், நட்டார், பகைநட்பாம், மிகச்செய்து.

காளிங்:— சீரிடம், நட்டார், பலநல்ல, இனம்போன்று, சொல்வணக்கம், தொழுதகை, முகத்தின், பகைநட்பாம், மிகச்செய்து, மனத்தின்.

84. பேதைமை.

தொகுப்புரை:

[பேதைமையாவது தனக்கு வரக்கூடிய பொருள், புகழ், புண்ணியங்களைக் கைவிட்டுத் துன்பத்தை மேற்கொள்வதாம். தமக்குத்தகாத ஒழுக்கத்தின்கண் மனத்தைச் செலுத்துதல், பேதைமையின் மிக்க பேதைமையாம். பழி பாவங்களுக்கு நாணாமையும், தள்ளத்தக்கனவற்றையும் கொள்ளத்தக்கனவற்றையும் ஆராயாமையும், கண்ணோட்டமின்றிக் கடுகடுத்துப் பேசுதலும், குடிப்பிறப்பு முதலியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளாமையும் பேதையின் தொழில்களாம். படித்தும் பிறருக்கு உபதேசித்தும் தான் அடங்காத முட்டாளைப்போல முட்டாள் உலகத்தில் இல்லை. ஏழு பிறவிகளில் நரகத்தில் வீழ்ந்து அனுபவிக்கும் துன்பங்களை ஒருபிறவியிலேயே தேடிக் கொள்பவன் பேதையாம். முட்டாள் காரியம்செய்யத்தலைப்படின் காரியமும் கெட்டுத் தானும் கெடுவான். பேதைக்குச் செல்வம் வந்தால் அயலார் விலாப்புடைக்க உண்பர். உறவினர் பசியால் வாடுவர். பேதைக்குச் செல்வம் கிடைத்தால் பித்தன் கள்ளைக் குடித்து மயங்கினாற்போலத் தாறுமாறாகக் கெடுதலைச்செய்வான். பிரிவின்கண் துன்பம் தாராமையால் பேதையார் நட்பு மிக இனியதாம். அறிவாளிகள் நிரம்பிய அவையில் பேதை புகுதல் கழுவாதகாலைப் படுக்கையில் வைத்தாற்போலும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி அங்கட்பினை எதிர்மறுத்துப் பகைமுகத்தால் கூறியதொடங்கினர். அப்பகைதான் முற்றக்கடியும் குற்றமன்மையின் உளவாய வெகுளியானும் காமத்தானும் வருவதாம். அவற்றுள் வெகுளியான் வருவன ஐந்ததிகாரத்தானும் காமத்தான் வருவன ஐந்ததிகாரத்தானும் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப் படுத்து, இரண்டதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் பேதைமை கூறுகின்றார். அஃதாவது யாதும் அறியாமை.

மணக்:— பேதமையாவது கேட்டிற்குக் காரணமாகியவற்றை அறியாதாரியல்பு கூறுதல். இறைமாட்சி முதலாக் கூடாநட்பு ஈறாகப் பொருட்பகுதியாகிய அமைச்சும், நாடும், அரணும், பொருளும், படையும், நட்பும் என்று சொல்லப்பட்ட ஆறு உறுப்பும் கூறினர். இனி அவ்வரசர்க்கும் அவராலாக்கப்பட்ட பொருட்கும் கேடுவரும் நெறியை அறிந்து காக்குமாறு கூறவேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— பேதைமையாவது அறிவின்மையான குணம் அதனை விடுக.

831. பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்(டு)
ஊதியம் போக விடல். (க)

உரைப்பகுதி :

பரிமே:— பேதைமை என்பது ஒன்று - பேதைமை என்று சொல்லப்படுவது ஒருவனுக்கு ஏனைக் குற்றங்களெல்லாவற்றினும் மிக்கது ஒன்று; யாது எனின் ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல் - அதுதான் யாது என்று வினவின், தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல்.

கேடு - வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம் - செல்வம், புகழ், அறங்கள். தானே தன் இருமையும் கெடுத்துக்கோடல் என்பதாம்.

மணக்:— அறியாமை என்று சொல்லப்படுவது ஒன்று யாதெனின், அது குற்றம் பயப்பனவற்றைக்கொண்டு நன்மை பயப்பன வற்றைப் போகவிடல் எ - று.

இது பேதைமையின் இலக்கணம் கூறிற்று.

பரிதி:— பேதைமை என்பது ஒன்று அது யாதெனில் குற்றங்களை விளைத்துத் தனக்கு உண்டாகிய உதவியாளரைக் கெடுத்தல் எ - று.

காளிங்:— அறியாமை என்று சொல்லப்படுவது யாது எனின் குற்றமாகிய செயலைக் கொண்டு உறுதியாகிய செயலைச் செய்யாதே விடுதல் எ - று.

அல்லதூஉம் பேதைமை என்று சொல்லப்படுவதாகிய தீக்குணம் ஒன்று உண்டு; அஃது யாதோ எனின் பிறர் குற்றம் முழுவதும் கைக் கொண்டு மற்று அவர் தமது நற்குணம் அனைத்தும் கழிய விடுதல் எ - று.

குறிப்பு:

ஒன்று என்றது, இழிதகைமையில் இதனோடு ஒருங்குவைத்து எண்ணத் தக்கது வேறு ஒன்றும் இல்லாமையால்.

—தொகுப்பாசிரியர்.

832. பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— பேதைமையுள் எல்லாம் பேதைமை - ஒருவனுக்குப் பேதைமையெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது, கையல்லதன் கண் காதன்மை செயல் - தனக்கு ஆகாத ஒழுக்கத்தின்கண் காதன்மை செய்தல்.

இருமைக்கும் ஆகா என்று நூலோர் கடிந்த செயல்களை விரும்பிச் செய்தல் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் பேதைமையது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— அறியாமை எல்லாவற்றுள்ளும் அறியாமையாவது தனக்குக் கைவராத பொருளின்கண் காதன்மை செய்தல் எ - று.

இது, வருந்தினாலும் பெறுதற்குக் காதல் செய்தலும் பேதைமை என்றது.

பரிதி:— பேதைமையிற் பெரியபேதைமையாவது யாரிடத்திலும் விரோதம் இடுகை எ - று.

காளிங்:— அறியாமைகள் எல்லாவற்றினும் மிக்க அறியாமை யாவது யாதோ எனின், செய்யும் முறையல்லவற்றின்கண் காதன்மை செய்தலே. கீழ்ச்சொன்ன நரகாதிகட்குக் காரணமாகிய பாவங்கள் எல்லாம் விளைக்கும் இவன் காதன்மை என்பது பொருளாயிற்று எ - று.

குறிப்பு:

—தொகுப்பாசிரியர்.

கை - ஒழுக்கம்.

833. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— நாணாமை - நாணவேண்டுமவற்றுக்கு நாணாமையும், நாடாமை - நாடவேண்டுமவற்றை நாடாமையும், நார் இன்மை - யாவர் மாட்டும் முறிந்தசொற்செயல் உடைமையும், யாதொன்றும் பேணாமை - பேணவேண்டுமவற்றுள் யாதொன்றனையும் பேணாமையும், பேதை தொழில் - பேதையது தொழில்.

நாணவேண்டுமவை - பழி பாவங்கள். நாடவேண்டுமவை - கருமங்களில் செய்வன தவிர்வன. ழுறிதல் - கண்ணறுதல். பேணவேண்டுமவை - குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம் முதலாயின. இவை பேதைக்கு என்ஞான்றும் இயல்பாய் வருதலின், தொழில் என்றார்.

மணக்;— நாணம் இல்லாமையும், தெரிந்து உணராமையும், ஈரமின்மையும், யாதொரு பொருளையும் போற்றாமையும் பேதையர் தொழில் எ - று.

இது பேதையார் செயல் கூறிற்று.

பரிப்;— இவைநான்கினும் பேதையார் இலக்கணம் கூறியவாறு

பரிதி:— நாணுதலின்மை, காரியம் எண்ணுமை, கிருபை இன்மை, யாதொரு பண்டமும் பேணுமை, ஆகிய இந்நாலு குணமும் பேதை தொழில் எ - று.

காளிங்:— செய்யத் தகாதன செய்தால் பிறர் சிரிப்பர் என்று நாணம் இல்லாமையும், நன்மையும் தீமையும் ஆராயாமையும், யாவர் மாட்டும் தன் நெஞ்சத்தோடு நட்பும் நயமும் இல்லாமையும், தவமும் ஞானமும் கல்வியும் முதலிய பெரும் பேறுகளில் யாதானும் ஒன்று தனக்கு வேண்டும் என்று பேணிக்கொள்ளாமையும் இப்படிச் சொல்லப் பட்டவை எல்லாம் மதிமயக்கை உடையது யாது? மற்று அதுவே பேதை தன் தொழில் எ - று.

மேற்கோள்பகுதி :

தெய்வச்:— வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா என்ற சூத்திரத்தில் தொகைபெறு து வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 288)

மயிலை:— நாண் என்பது உடம்பொடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள். (நன். 451.)

ஒப்புமைப்பகுதி:

"பழிமுதல் நாணுர் செய்வன தவிர்வ பார்த்திடார் குடிப்பிறப் பொழுக்கம்
எழில்வளர் கல்வி யாதிகள் பேணுர் எவரையும் முறிக்கும்சொல் செயலார்."
—விநா. அரசி. 130.

குறிப்பு:

முன்னர் அறிவுடைமை அதிகாரத்தில் "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை" என அஞ்சாமை பேதையர்க்கு இயல்பு என்றாராதலின் ஈண்டு ஏனைய மூன்றும் பேதை தொழிலாக வினைக்கப்பட்டது.

—தொகுப்பாசிரியர்.

834. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத் தும் தான் அடங்காப்
பேதையின் பேதையார் இல். (ச)

உரைப்பகுதி:

பரிமே:— ஓதி - மனமொழிமெய்கள் அடங்குதற்கு ஏதுவாய நூல்களை ஓதியும், உணர்ந்தும் - அவ்வடக்கத்தான் வரும் பயனை உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும் - அதனை அறியலுறப் பிறர்க்கு உரைத்தும். தான் அடங்காப் பேதையின் - தான் அவையடங்கி ஒழுகாத பேதை போல, பேதையார் இல் - பேதையார் உலகத்து இல்லை.

உம்மை மூன்றும் கூட்டப்பட்டது. இப்பேதைமை தனக்கு மருந்தாய இவற்றால் தீராமையானும், வேற்றுமருந்து இன்மையானும் பேதையிற்பேதையாரில் என்றார். இவை இரண்டு பாட்டானும் பேதையது தொழில் பொதுவகையான் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையான் கூறுப.

மணக்:— நூல்களைக் கற்றறிந்தும், அவற்றைப் பிறர்க்கு இசையச் சொல்லியும், தான் அடங்குதலைச் செய்யாத பேதையார்போலப் பேதையார் உலகத்தில் இல்லை எ - று.

பரிப்:— கல்வி உடையாரை அறிவுடையார் என்று உலகத்தார் கூறுவர் ஆதலின் அதனை மறுத்துக்கூறுராயினும் அடக்கம் இல்லையாயின் பேதையார் என்று கூறப்பட்டது.

பரிதி:— சகல சாஸ்திரங்களையும் ஓதிஉணர்ந்தும் பிறர்க்குச் சொல்லியும் தாம் அடங்காத பேதையினும் பெரிதான பேதையில்லை எ - று.

காளிங்:— கற்கக்கடவ நூல்கள் அனைத்தையும் கற்றும் அவற்றின் பொருள் முழுவதும் உணர்ந்தும் மற்று அவை பிறர்க்கு இவ்வண்ணமே உரைத்தும் பின்னும் தான் அமைவு உடையான் ஆகாதான் யாவன் அவனைப்போலப் பேதைமை உடையார் உலகத்து யாவரும் இல்லை எ - று.

இனித் தமக்கு உள்ள மதிகொண்டு பழுதுடன் சில கற்றும் கல்லாதும் பேரறிவு உடையராகப் பாவித்திருக்கும் புல்லறிவாளர் அறிவும் பேதைமையின்கண் ஓர் பிரிபு உரு ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"தந்தையே யாயினும் தானடங்கா னாகுமேல்
கொண்டடையா னாதல் இனிது." —இனியவை. 8.

"கற்றுப் பிறர்க்குரைத்துத் தானில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை - சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுரைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்." —நீதிநெறி. 21.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஓதியுடன் கற்றும் உலகத்தோ டொத்தொழுகார்
தீதகலார் கோவைத் தினகரா - ஆதலினால்." —தினகர. 88.

"வேதசன்மா பல்கலையின் மிக்குமுனி வர்ப்பழிப்பான்
மூதாக்க னானான் முருகேசா - காதலினால்." —முருகேசர். 84.

குறிப்பு:

கற்றலும் அதனைப் பலகாற்கருதி உணர்தலும் மனம் அடங்க முதன்மை யானவழிகள்; ஆதலின் அது செய்யாதானைப் பேதை என்றும், பிறர்க்கு உரைத்தக் கால் "தான் நில்லாது பிறர்க்கு உரைக்க வந்துவிட்டானே" என்று பிறர் ஏளனம் செய்வார்களே என்று கருதியாவது அடங்கவேண்டியிருக்க, அதுவும் செய்யாதவன் பெரும் பேதை என்றும் கூறினார்.

—தொகுப்பாசிரியர்.

835, ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— பேதை - பேதையாயினன், எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு - வரும்பிறவிகளெல்லாம் தான்புககு அழுந்தும் நிரயத் தினை, ஒருமைச் செயல் ஆற்றும் - இவ்வொருபிறப்புள்ளே செய்துகொள்ள வல்லனும்,

எல்லாப்பிறப்பும் ஏழாய் அடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும்மை கொடுத்தார். அழுந்துதற்கு இடனாய நிரயம். ஈண்டைப் பிறப்புக்களினும் கொடுவினைவயத்தால் அந்நிரயத்துன்பமே உழந்து வருதலின், எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு என்றார். முடிவில் காலமெல்லாம் தான் நிரயத்துன்பம் உழத்தற்கு ஏதுவாம் கொடுவினைகளையே அறிந்து சிலகாலத்துள்ளே செய்துகோடல் பிறர்க்கு அரிது ஆகலின், ஆற்றும் என்றார். இதனான் அவன் மறுமைச்செயல் கூறப் பட்டது.

மணக்:— பேதை ஒரு பிறப்பின்கண் செய்யும் செயலாலே செய்யவல்லன், எழுபிறப்பினும் தாம் புக்கழுந்தும் நரகத்தை எ - று.

பரிப்:— எனவே அதற்குக் காரணமாயின செய்யும் என்றவா றாயிற்று. எழுபிறப்பினும் என்றது ஒருகால் அதன் அகத்திலே பிறந்தால் அவ்வுடம்பு நீங்கினாலும் பின்னும் அதன் உள்ளே பிறந்து அகலாதுறப் பேதை அறம் செய்யுமாறு கூறிற்று.

பரிதி:— ஒரு சன்மத்திலே பேதைக்குணம் பெற்றால் ஏழு சென்மும் நரகம் புகுவான் எ - று.

காளிங்:— தான் பெற்று நின்ற ஒரு பிறவிக்கண்ணே செய்து கோடலை வல்லன் பேதையானவன்: யாதினையோ எனின், இனி வரும் பிறப்பின்கண் எஞ்ஞான்றும் ஒரு கரையேற்றம் இல்லாத வண்ணம் தான் புக்கு அழுந்தும் கும்பி நரகத்தை எ - று.

மேற்கோள்பகுதி:

சங்கர:— 'ஏனை உயிர்வழி வவ்வும் ஏழன் இவ்விருமையும்' இருமை என்பது 'ஒருமை.............அளறு' என்றாற்போலக் குணியைக் குணமாகக் கூறுவதொரு மரபுவழுவமைதி. (நன். 162.)

குறிப்பு:

ஒருமை, எழுமை என்பன "ஏழன் இவ்விருமையும்" என்பதுபோல எண்ணடியாகப்பிறந்த பண்பையும் எண்ணுப்பெயரையும் உணர்த்தாது எண்ணாகு பெயராகப் பிறப்பின்மேல் நின்றது.

—தொகுப்பாசிரியர்.

836. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். (சு)

உரைப்பகுதி:

பரிமே:— கை அறியாப் பேதை வினை மேற்கொளின் - செய்யு முறைமை அறியாத பேதை ஒருகருமத்தை மேற்கொள்வனாயின், பொய் படும் ஒன்றோ புனைபூணும் - அதுவும் புரைபடும், தானும் தளைபூணும்.

புரைபடுதல் - பின் ஆகாவகை உள்ளழிதல். ஒன்றோ என்பது எண்ணிடைச்சொல். அதனையும் கெடுத்துத் தானுங்கெடும் என்பதாம். இதனான் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது.

மணக்:— ஒழுக்கமறியாத பேதையான் ஒருகருமத்தை மேற் கொண்டானாயின், பொய்யன் என்னவும்பட்டு, பிறர்க்குப் புனைபூணும்.

புனைபூணல் - சிறைப்படுதல்.

பரிப்:— பயன் அறியாப் பேதை ஒருவினையை மேற்கொள்வன் ஆயின் அஃது ஒன்றில் தப்பும்: ஒன்றில் செய்ய வல்லாரைத் தேடும்: அல்லது தான் செய்து முடிக்கமாட்டான் எ - று.

பரிதி:— பேதை பொய் சொல்வான் என்றதும் ஒன்றோ! உன்னை நம்போம். வேறேயாம் புனையாகச் சொல்லி வை என்று வார்த்தையுங் கேட்பர்; பேதை ஒருகாரியம் செய்யப்புகின் எ - று.

காளிங்:— அவ்வினை செய்யத் தகும் ஒழுக்கம் அறியாப் பேதை யானவன் ஒரு வினை செய்ய ஒருப்படும் ஆயின் அது பொய்யாய்விடும் ஒன்றோ: அன்றி இனி ஒன்றோ மேல் விளைவது அறியாது பிறர்க்குத் தான் புனையாதலைத் தன்மேலே ஏறட்டுக்கொள்ளும் எ - று.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— "பாயிரங் கூறுதல் நூல்கட்கு அன்றிப் பிறவற்றிற் கன்றே; அங்ஙனமாதலின் நூல்களின் வரலாறு ஒன்றுமே கூறவேண்டும்; அதனோடு ஆசிரியன் வரலாறு முதலிய நான்கினையும் உடன் கூறுதல் வரலாற்று முறைமையின் வாராதார் நூல்களைக் கற்பிக்கவும் கற்கவும் புகின் 'பொய்படும்......மேற்கோளின்' என்றவாறேயாய் நூல்கள் அருமை யும் பெருமையும் கெட்டுப் பயன்படாவாம் என்பது கருதி என்க." (நன். 3.)

சங்கர:— ஷை (நன். 3.)

ஒப்புமைப்பகுதி:

"............திண்கருத்தை
நாட்டமின்றிக் கையறியாப் பேதையர்செய் நற்றொழில்போல்
கூட்டி முடித்திடாக் கூந்தலாள்......" —தஞ்சைப். 105.

முதுமொழிவெண்பாக்கள்:

"தன்தலைமேல் கைவைக்கத் தான்தொடர்ந்தாற் கீந்தபலன்
சென்றொளிக்க லாச்சே சிவசிவா - என்றென்றும்." —சிவசிவ. 84.

குறிப்பு:

பொய்படுதல் - காரியம் முடிவுபெறுமலே பொய்த்துப்போதல்.

—தொகுப்பாசிரியர்.

837. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை - பேதையாயினன் பெரிய செல்வத்தைத் தெய்வத்தான் எய்தியவழி, ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் - தன்னேடு ஓர் இயைபும் இல்லாதார் நிறைய, எல்லா இயைபும் உடைய தமராயினர் பசியாநிற்பர்.

எல்லா நன்மையும் செய்துகோடற்கருவி என்பது தோன்றப் பெருஞ்செல்வம் என்றும், அதனைப் படைக்கும் ஆற்றலில்லாமைதோன்ற உற்றக்கடை என்றும், எல்லாம் பெறுதல் தோன்ற ஆர என்றும், உணவும்பெறுமை தோன்றப் பசிப்பர் என்றும் கூறினர்.

மணக்:— அயலார் உண்ண, உற்றூர் பசியாநிற்பர்; பேதையானவன் பெரிய செல்வத்தை உற்றவிடத்து எ - று.

இது பேதை பொருள்பெற்றால் வழங்குந்திறம் கூறிற்று.

பரிதி:— அயலார் சுகித்திருப்பர். உறவின் முறையார் பசித்திருப்பர்; பேதை பெருஞ் செல்வம் பெற்ற இடத்து எ - று.

காளிங்;— அயலார் பலரும் உண்டு இனிது இருப்பத் தனக்கு இன்றியமையாத சுற்றத்தார் பலரும் பசியொடு வாழ்வர்; அக்குடிப்பிறந்த பேதையானவன் விதியினால் ஒரு பெருஞ் செல்வம் உற்ற இடத்து எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கழிமகிழ்வுடையார் கெடுதிகொண்டாக்கம் கைவிடுவார்செல்வமுறினும்
கொழிபயன்எய்தார்பிறர்க்கலால்தமர்க்கும்கொடாரிவர்பேதையர் ஒழிக."
—விநா. அரசி. 130.

முதுமொழிவெண்பாக்கள்:

"மாதாபி தாவை மதியாம லேசிறையில்
ஏதாக வைத்தான் இரங்கேசா - மேதினியில்." —இரங். 84

838. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— பேதை தன்கை ஒன்று உடைமை பெறின் - பேதையாயினான் தன் கைக்கண்ணே ஒன்றனை உடைமையாகப் பெற்றானாயின், மையல் ஒருவன் களித்தற்று - அவன் மயங்குதல் முன்னே பித்தினையுடையானொருவன் அம்மயக்கத்தின்மேலே மதுவுண்டு மயங்கினாற்போலும்.

பெறின் எனவே, தெய்வத்தானன்றித் தன்னால் பெறாமை பெற்றாம். பேதைமையும் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்வன, மையலும் மதுக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோல் தலைதடுமாறும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் அவன் செல்வம் எய்தியவழிப் பயன்கொள்ளுமாறு கூறப்பட்டது.

மணக்:— முன்னே பித்தாய் மயங்கிய ஒருவன் பின்பு கள்ளினை நுகர்ந்து களித்தாற்போல் ஆவதொன்று; பேதை தன்கையின்கண் ஒன்றுடையனானவிடத்து எ - று.

பரிப்:— இது பொருள் பெற்றால் ஒழுகும் திறன் கூறிற்று.

பரிதி:— பித்துக் கொண்டவன் களித்தற்கு ஒக்கும்; பேதைக்கு ஒரு உடைமை பெறின் எ - று.

காளிங்:— முன்னமே பித்து ஏறினன் ஒருவன் பின்னும் கள் உண்டு களித்த அத்தன்மைத்து: யாதோ எனின், தான் முன்னமே யாதும் அறியாப்பேதையுமாய்ப் பின்னும் அதன்மேலே தன் கையகத்து ஓர் உடைமையும் பெறுமாயின் செய்யும் முறைமை செய்யான் ஆம் எ - று.

839. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல் - பின் பிரிவு வந்துழி அஃது இருவர்க்கும் தருவதொரு துன்பம் இல்லை; பேதையார் கேண்மை பெரிது இனிது - ஆகலான் பேதையாயினர் தம்முட்கொண்ட நட்பு மிக இனிது.

நாடோறும் தேய்ந்து வருதலின், துன்பந் தாராதாயிற்று. புகழ் வார்போன்று பழித்தவாறு. இதனல் அவரது நட்பின் குற்றம் கூறப் பட்டது.

மணக்:— மக்கட்குப் பேதையாரது நட்பு மிகவும் இனிது, பிரிந்தவிடத்து, வருவதொரு துன்பம் இல்லையாதலான் எ - று.

இது பேதை காமம் துய்க்குமாறு கூறிற்று.

பரிதி:— பேதையாருறவு நல்லது; அது ஏன் என்னில், நல்லோரைப் பிரிந்தால் விதனம் உண்டு. பேதையரைப் பிரிந்தால் விதனம் இல்லை எ - று.

காளிங்:— மிகவும் இனிது இப்பேதையார் நட்பு: என்னை காரணம் எனில், அவர் பிரிந்த பிரிவினிடத்து நெஞ்சுக்கு ஒரு துயரம் தருவது யாது ஒன்றும் இல்லை எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

“வன்சமணர் தம்பிரிவால் வாசிசேர்க் கின்பமன்றித்
துன்பமென்ப தில்லையே சோமேசா - நன்காம்.” —சோமேசர். 84.

"அரனன்பர் வாகீசர் அன்றமணை நீங்கப்
பெரிதின்பம் அன்றியுண்டோ பிழை - தெரியின்." —முதுமொழி. 129.

குறிப்பு:

பேதையார் நட்பு, பெரியோர் நட்புப்போல உள்ளப்பிரிவதாய், துன்பம் விளையாமையின் இனிது என்றார்.

—தொகுப்பாசிரியர்.

840. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். (௪0)

உரைப்பகுதி:

பரிமே:— சான்றோர் குழாத்துப் பேதை புகல் - சான்றார் அவையின்கண் பேதையாயினான் புகுதல், கழாக்கால் பள்ளியுள் வைத்தற்று - தூயவல்ல மிதித்த காலை இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற் போலும்.

கழுவாக்கால் என்பது இடக்கரடக்கு. அதனால் அவ்வமளியும் இழிக்கப்படுமாறுபோல இவனால் அவ்வவையும் இழிக்கப்படும் என்பதாம். இதனால் அவன் அவையிடை இருக்குமாறு கூறப்பட்டது.

மணக்:— கழுவாதகாலைப் பள்ளியின்கண் வைத்தாற்போலும் சான்றோர் அவையின்கண் பேதை புகுந்து கூடியிருத்தல் எ - று.

இது பேதையிருந்த அவை இகழப்படும் என்றது.

பரிதி:— பெரியோர் கூட்டத்தில் பேதை சென்று நடுப்பட இருக்கில் ஒரு பெரியோன் வந்தகாலத்துத் தலையில் வைத்த காலுடன் வாங்குவதுபோல இவனை எழுப்பி, அவரை இருத்துவர் எ - று.

காளிங்:— ஒருவன் மாசறக் கழுவாத காலைத் தூவெண் துகில் விரித்த சிறந்த படுக்கைமேல் சென்று வைத்த அத்தன்மைத்து, கல்வியால் மாசற விளங்கிய மனத்தூய்மை உடைய சான்றோர் அவையுள் நெஞ்சு அழுக்கு உடைய பேதை சென்று புகுதல் எ - று.

மேற்கோள்பகுதி:

மயிலை:— எதிர்தொடங்கிப் பொருள் கொள்ளும் எதிர்ப்பெயர் நிரல்நிறைக்கு மேற்கோள். (நன். 413.)

சுவாமி:— 'கழா அக்கால் பள்ளியுள்' என்பதற்குப் பகரவிகார முதலிய குற்றங்களை மிதித்து என்னும் சொற்களை வருவித்தல் போல்வன, சிதைந்ததனுல் மொழிவருவித்து முடித்தல்' என்பர். (இ. கொ. 89.)

குற்றெழுத்தளபெடைக்கு மேற்கோள். (ஷை 90.)

யா - வி:— எதிர்நிரல்நிறைக்கு மேற்கோள். (சூ. 95.)

குறள்வைப்புமுறை

பரிமே:— பேதைமைஎன்பது, பேதைமையுள், நாணுமை, ஓதி, ஒருமைச், பொய்படும், ஏதிலார், மையல், பெரிதினிது, கழா அக்கால்.

மணக்:— பேதைமைஎன்பது, பேதைமையுள், ஓதி, நாணுமை, ஒருமைச், பொய்படும், ஏதிலார், பெரிதினிது, கழா அக்கால், மையல்.

பரிதி:— நாணுமை, பேதைமையுள், ஓதி, பேதைமைஎன்பது, மையல், ஏதிலார், ஒருமைச், பொய்படும், கழா அக்கால், பெரிதினிது.

காளிங்: நாணுமை, கழா அக்கால் ஒருமைச், மையல், பேதைமையுள், பொய்படும், ஏதிலார், பெரிதினிது, பேதைமை என்பது, ஓதி.

85. புல்லறிவாண்மை.

தொகுப்புரை:

[அறிவில்லாமை ஏழைமை, பொருளில்லாமையை ஏழைமையாக எண்ணு துலகம். அறிவற்றவன் மனம் உவந்துசெய்யும் கொடைக்குக் காரணம் வேறொன்றும் இல்லை; பெறுவான் தவமே. அறிவற்றவர் தமக்குத் தாமே செய்துகொள்ளும் தீங்கைப் பகைவரும் செய்யமுடியாது. தாமே நுண்ணிய அறிவாளி என்று எண்ணும் செருக்கே வெள்ளறிவாம். படிக்காத நூல்களையும் படித்ததாகக்கொண்டு சொல் லுதல் படித்ததிலும் பிறர்க்கு ஐயத்தை உண்டாக்கும். தன்கண் உண்டாகும் குற்றங் களை நீக்காதபோது, ஆடையையுடுத்தி மானங்காத்தலும் புல்லறிவாகும். பெறுதற்கரிய உபதேசங்களைக் கேட்டுவைத்தும் அதனைப் பாதுகாவாது பரப்புகின்ற அறிவற்றவன் தனக்கே கேடுசூழ்பவனுவான். சொன்னாலும் செய்யமாட்டான் தானாகவும் தெளிய மாட்டான் அவன் உயிர் போகும்வரை ஒருநோயாம். அறிவற்றவனுக்கு அறிவிப் பவனே அறியாதவன். அறியாதவன் தான் அறிந்த வரையில் அறிந்தவனாகவே பாவிப்பன். உலகமுழுதும் ஒருமுகமாக உண்டு என்று சாதிப்பின், அதனை இல்லை என்று பேசுபவன் உலகத்தில் ஒருமனிதன் அல்லன்; பேய்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி ஏனைப்புல்லறிவாண்மை கூறுகின்றார். அது புல்லிய அறிவினை ஆடற்றன்மை என விரியும். அஃதாவது தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொல் கொள்ளாமை.

மணக்:— புல்லறிவாண்மையாவது சிற்றறிவின் இயல்பும் அதனால் வரும் குற்றமும் கூறுதல். இதுவும் பேதைமையோடு ஒத்த இயல் பிற்றாதலான், அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— புல்லறிவாண்மையாவது புல்லறிவை ஆளுதல்; பேரறி வைப் பற்றவேணும் எ - று.

841. அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு. (௧)

உரைப்பகுதி:

பரிமே:— இன்மையுள் இன்மை அறிவின்மை - ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்க இல்லாமையாவது அறிவில்லாமை;

பிறிதின்மை இன்மையா வையாது உலகு - மற்றைப் பொருளில்லாமையோ எனின், அதனை அப்பெற்றித்தாய இல்லாமையாகக் கொள்ளார் உலகத்தார்.

அறிவு என்பது ஈண்டுத் தலைமைபற்றி நல்லறிவின்மேல் நின்றது. புல்லறிவாளர் செல்வமெய்தியவழியும் இம்மை மறுமைப்பயன் எய்தாமையின் அதனை இன்மையுள் இன்மை என்றும், நல்லறிவாளர் வறுமை எய்தியவழியும் அஃது இழவாமையின் அதனை இன்மையா வையாது என்றும் கூறினார். இதனால் புல்லறிவினது குற்றம் கூறப்பட்டது.

மணக்:— நல்குரவினுள் நல்குரவாவது அறிவின்மை; பொருளின்மையை நல்குரவாக எண்ணார் உலகத்தார்; அது புண்ணியம் செய்யாதார்மாட்டே சேருமாதலான் எ - று.

பரிப்:— அறிவு புண்ணியம் செய்தாற்கு உளதாமோ எனின், அது முயற்சியானும் வரும் ஆதலின் வேறு பகுத்துக் கூறினார். இனி அறிவின்மையான் வரும் குற்றமும் கூறுவார் முற்பட இதனின் மிக்க நல்குரவு இல்லை என்றார்.

பரிதி:— மிடிக்குள் மிடியாவது அறிவின்மை. பொருள்மிடி ஒரு தறுவாயில் வரும்; ஒருதறுவாயில் போம் எ - று.

காளிங்:— கற்கப்படு நூல்கள் பலவற்றையும் கசடு அறக் கற்று மனத்து இருள் நீங்கி நுணுகிப் பரந்த அறிவு ஒருவர்க்கு இல்லாமையே இல்லாமையாவது: அதனால் அவ்வறிவின் வேறுபட்டுள்ள இல்லாமை ஒன்றையும் இல்லாமையாக வைத்து எண்ணார் உயர்ந்தோர் எ - று.

குறிப்பு:

பொருள் முதலியன படைத்தும் அதனைத் தனக்கும் பிறர்க்கும் நற்பயன் தரும் நெறியில் வகையறிந்து அழிக்கத் துணைசெய்வது அறிவாதலின் அஃதில்லாமை இன்மையுள் இன்மையாயிற்று. பணம் இல்லாதவனும் அறிவு இல்லாதவனும் "ஏழை" என்ற சொல்லால் அழைக்கப்படுதலை ஓர்க. இக்கருத்தைப் பணமற்ற ஏழையாயிருந்தாலும் அறிவுமட்டும் உளதாயின் எல்லாம் உடையானைப்போல இன்பமாகப்பெற்றது கொண்டு சுற்றமருத்தி வரிசையறிந்து வாழ்வன் என எதிர்மறைக்கண்வைத்து அறிவு உடையார் வாழ்க்கைச் சிறப்பையும் கருதுக. உலகு வையாது என வினைமுதலின் சொல்லமைதிக்கு ஏற்ப அஃறிணை முடிபு ஏற்றது.

—தொகுப்பாசிரியர்.

842. அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— அறிவிலான் நெஞ்சு உவந்து ஈதல் - புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனம் உவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின், பெறுவான் தவம் பிறிது யாதும் இல்லை - அதற்குக் காரணம் பெறுகின்றவன் நல்வினையே, வேறொன்றும் இல்லை.

ஒரோவழி நெஞ்சுவந்து ஈதல்கூடலின் புல்லறிவாளரும் நல்வினை செய்ப என்பார்க்கு, பெறுவான் வீழ்பொருள் எய்தியான் போல்வது அல்லது இம்மை நோக்கியாக மறுமை நோக்கியாக ஈகின்றாரல்லர் எனக் கூறியவாறு. கூடிற்றாயின் அதற்குக் காரணம் என்னும் சொற்கள் அவாய் நிலையான் வந்தன. இதனால் அஃதுடையார் தம்மாட்டு நல்லன செய்தல் அறியாமை கூறப்பட்டது.

மணக்:— அறிவில்லாதான் மனங்குளிர்ந்து கொடுத்தற்குக் காரணம் வேறொன்றும் இல்லை; அது பொருளைப் பெறுகின்றவனது நல்வினைப்பயன் எ - று.

இது கொடுத்தானாயினும் வரிசையறியாது கொடுக்குமாதலின் அது புல்லறிவு என்றது. இத்துணையும் புல்லறிவின் இயல்பு கூறப்பட்டது.

பரிதி:— அறிவில்லான் ஒருவனுக்குக் கொடுக்கும் கொடை வேறொன்றும் அல்ல; பெற்றவன் செய்யும் புண்ணியமே எ - று.

காளிங்:— புல்லறிவாளனாகிய அறிவுகேடன் தன் மனம் மகிழ்ந்து ஒருவர்க்குப் பொருள் கொடுத்தல் என்கின்ற இது பிறிது யாதானும் ஒன்றும் இல்லை. இஃது அன்றி அஃது யாதோ எனின் அவன் வயின் பெறுகின்ற வளம், முன்முன்செய்த நல்வினைப்பயனே யன்றி வேறு யாதொன்றும் காரணம் இல்லை எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"எம்மைஉனைப் போலறிவான் ஈந்தகொடை யேகொடையாம்
செம்மைபெற வாழும் தினகரா - சும்மா." —தினகர. 89.

"மாற்கு மதுவும் கயிடவனும் வாழ்நாளைத்
தீர்க்கவரம் ஈந்தார் சிவசிவா - பார்க்கின்." — சிவசிவ. 85.

குறிப்பு:

அறிவே இல்லாதவன் மரக்கட்டையோடு ஒப்பாகுதலின் அவனுக்கு நெஞ்சுஉவத்தலும் ஈதலும் கூடாமையின் அறிவிலான் என்பதற்குப் புல்லறிவாளன் என உரைகண்ட பரிமேலழகர் கருத்து இன்புறற்கு உரியது.

—தொகுப்பாசிரியர்.

843. அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— அறிவிலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை - புல்லறிவுடையார் தாமே தம்மை வருத்தும் வருத்தம், செறுவார்க்கும் செய்தல் அரிது - அதுசெய்தற்கு உரியராய தம்பகைவர்க்கும் செய்தல் அரிது.

பகைவர் தாம் அறிந்தது ஒன்றனைக் காலம் பார்த்திருந்து செய்வதல்லது வறுமை, பழி, பாவம் முதலிய பலவற்றையும் எக்காலத்தும் செய்யமாட்டாமையின், அவர்க்கும் செய்தல் அரிது என்றார். இதனால் அவர் தம்மாட்டும் தீயன செய்தல் அறிவர் என்பது கூறப்பட்டது.

மணக்:— அறிவில்லாதார் தாமே தம்மை இடர்ப்படுத்தும் இடர்ப்பாடு, பகைவர்க்கும் செய்தல் அரிது எ - று.

இது மேற்கூறியதனை வலியுறுத்திற்று.

பரிப்:— இதனானே பீழை கூறுகின்ற துன்பத்தை உண்டாக்குமவற்றுக்குக் காரணம் ஆம் என்பதூஉம் கண்டு கொள்க.

பரிதி:— அறிவில்லார் தங்களைத் தாங்கள் கெடுத்துக் கொள்வது தன்னிடம் மாற்றார்க்கும் முடியாது எ - று.

காளிங்:— புல்லறிவாளர் ஆகிய அறிவு கேடர் தாமே தம்மைத் துயர் உறுக்கும் துயரம் சொன்ன வறுமையேயன்றித் தம்மைப் பெரிதும் செறுக்கும் பகைவர்க்கும் செய்தல் அரிது எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

“ ஈசனடி யாரிசையா தேயும் இசைந்தமணர்
தாமே கழுவேறும் தன்மையால் - ஞாலத்(து)” —முதுமொழி. 130.

" தாதை சிலையொடிப்பப் தான்மொழிந்தான் தீதாக
ஏதுடையார் செய்யார் இரங்கேசா - ஓதில்." —இரங். 85.

844. வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. (ச)

உரைப்பகுதி:

பரிமே:— வெண்மை எனப்படுவது யாது எனின் - புல்லறிவுடைமை என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், யாம் ஒண்மை உடையம் என்னும் செருக்கு - அது தம்மைத்தாமே யாம் நல்லறிவுடையம் என்று நன்குமதிக்கும் மயக்கம்.

வெண்மையாவது அறிவுமுதிராமை. ஒண்மை எனக் காரியப் பெயர் காரணத்திற்கு ஆயிற்று. உலகத்தார் இகழ்தல் அறிந்துவைத்தும் அவ்வாறு மதித்தலான், மயக்கம் என்றார்.

மணக்:— புல்லறிவு என்று சொல்லப்படுவது யாது எனின், அது யாம் அறிவுடையோம் என்று தம்மைத் தாம் மதிக்கும் களிப்பு எ - று.

பரிப்:— வெண்மை - காழ்ப்பு இன்மை. முற்றுதல் இன்மையின் வெண்மை எனப்பட்டது. புல்லறிவாவது இத்தன்மைத்து என்று கூறுவார் முற்பட அறிவில்லாதவன் அறியேன் என்னாது அறிவுடையோனாகத் தன்னைமதித்தல் புல்லறிவு என்றது.

பரிதி:— அறிவின்மையாவது யாது எனில் நான் சமர்த்தன் என்று சொல்லிக் கொள்வது எ - று.

காளிங்:— பலரானும் இது வெள்ளறிவு என்று பழித்து உரைக்கப்படுவது யாதோ எனின் எல்லாரினும் யாம் சால நுண்ணறிவு உடையோம் என்று இருக்கும் பெருமிதம் எ - று.

வெள்ளறிவாவது புல்லறிவு.

ஒப்புமைப்பகுதி:

" தன்னைஎப் பொருளும் அறிந்த வனாகத்
தான்மிக மதிக்கும்புல் லறிவின்
வன்மையை யுடையான் உறுதிசொற் கேளான்
வல்லதல் லாதும்கொண் டுரைத்து

புன்மையைத் தெறிப்பான் நவைபுரிந் துலகோர்
போல்நடிப் பான்றனை உணர்த்து
நன்மதி யினரை அறிவில ராக
நாட்டுவன் இவனையும் நண்ணேல்." —விநா. அரசி. 131.

குறிப்பு:

செருக்கு, அறிவிற்கு வளர்ச்சியும் உள்ளீடும் உண்டாகாவண்ணம் தடுத்து நிற்றலின் அது வெண்மை எனப்படுவது என்றார். செருக்கு வெண்மை என்றது காரணத்தைக் காரியமாகக் கூறிய உபசாரம்.

—தொகுப்பாசிரியர்.

845. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— கல்லாத மேற்கொண்டு ஒழுகல் - புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும் கற்றாராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுகுதல், கசடு அற வல்லதூஉம் ஐயம் தரும் - கசடறக் கற்றதொரு நூலுண்டாயின், அதன்கண்ணும் பிறர்க்கு ஐயத்தை விளைக்கும்.

வல்லது என ஏழாவது இறுதிக்கண் தொக்கது. உண்டாயின் என்பது அவாய்நிலையான் வந்தது. ஐயம் அது வல்லர் என்பதூஉம் இவ்வாறுகொல்லோ என்பது.

மணக்:— தாம் முடியக் கல்லாதவற்றைக் கற்றாராக மேற்கொண் டொழுகல், குற்றந்தீரக் கற்றதனையும் ஐயமாக்கும் எ - று.

இது கல்லாததனை மேற்கொள்ளுதல் புல்லறிவு என்றது.

பரிதி:— தனக்குக் கைவராத வித்தையைக் கைவரும் என்று பரீட்சை பார்த்தால் வாராது; அதனாலே தனக்குக் கைவந்த நூலும் கைவராது என்று சந்தேகப் படுவர். ஆதலால் கைவந்த வித்தையைச் சொல்வது எ - று.

காளிங்:— தான் கல்லாதவற்றையும் கற்றானாகத் தன்மேல் ஏறட்டுக்கொண்டு நடத்தல் யாது? அது மற்றுத் தான் கசடு அறக் கற்று வல்லதூஉம் ஐயப்படுதலைச் செய்யும் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஆதி மொழியை அறியான் அறிந்தேனென்
றோதியது மீளப்போ யோ......லேதம."   ...முதுமொழி. 131.

846. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் *மறையா வழி.   (சா)

உரைப்பகுதி :

பரிமே:— தம்வயின் குற்றம் மறையாவழி - புல்லறிவாளர் தங்கண் நிகழும் குற்றங்களை அறிந்து கடியாராயின், அற்றம் மறைத்தலோ புல் அறிவு - ஆடையால் அற்றம் மறைத்தாராகத் தம்மைக் கருதுதலும் புல்லறிவாம்.

குற்றம் மறைத்தலாவது அவற்றை இலவாக்குதல். மறைக்கப் படுவன பலவற்றுள்ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது தாழ்ந்த தொன்றனையே மறைத்து அவ்வளவால் தம்மையும் உலக ஒழுக்கினராக மதித்தலும் புல்லறிவு என்பதாம். இவை மூன்று பாட்டானும் அவர் தம்மை வியத்தற்குற்றம் கூறப்பட்டது.

மணக்:— தம்பாலுள்ள குற்றத்தைப் பிறரறியாமல் தாம் மறையாத காலத்து, பிறர் காணாமல் மறைக்க வேண்டும் உறுப்பை ஆடையால் மறைத்தலும் புல்லறிவு எ - று.

பரிப்:— எனவே அதுவும் மறையானாயின் குற்றம் நாடுவார் இல்லை என்றவாறாயிற்று. இது குற்றம் மறையாமை புல்லறிவு என்றது.

பரிதி:— அற்றம் மறைத்தல் அறிவில்லாத தன்னிடத்தில் குற்றம் மறைத்தற்கு அரிது எ - று.

காளிங்:— அற்றம் மறைத்தலோ புல்லறிவு என்பது தமக்குப் பொருள் அற்றம் தீர்த்தல் சாலப் புல்லறிவு என்றது. தமக்கு வறுமையை நீக்குவதாகக் குற்றம் செய்தலே புல்லறிவு என்று ஆயிற்று: எனவே ஒருவர் விரைந்து மறைத்தற்கு முயல்வது இவ்வற்றம் அல்லது பொருள் அற்றம் மறைத்தலன்று என்பது பொருள் ஆயிற்று எ - று.

---

*'மறையாக் கடை' காளிங்கர் பாடம்.

குறிப்பு:

குற்றம் மறைத்தலாவது - தாம்செய்த குற்றத்தைப் பிறர் அறியாதவாறு மறைத்துவைத்தலன்று; குற்றம் தன்கண் நிகழவொட்டாது தடுத்தல். வெயில் மறைத்தான் என்பதுபோல. வெட்கத்திற்காக ஆடையுடுத்துவதும் குற்றம் செய்யா வழியே சிறக்கும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

847. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— அருமறை சோரும் அறிவிலான் - பெறுதற்கு அரிய உபதேசப்பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன், தானே தனக்குப் பெரும் இறை செய்யும் - அவ்வுறுதி யறியாமையால் தானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்துகொள்ளும்.

சோரும் என இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. மிக்க வருத்தம் - பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி அருமறை சோரும் என்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய்சோர்ந்து பிறர்க்கு உரைக்கும் என்று உரைத்தார்; அது பேறுமை என்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மையன்மை அறிக.

மணக்:— அறிவில்லாதான் அரிதாக எண்ணின மறைப் பொருளைச் சோரவிடுவன்; அதுவேயன்றி, தனக்குத் தானே துன்பத்தினையும் செய்துகொள்ளுவன் எ - று.

சோரவிடுதல்-பிறர்க்குச் சொல்லுதல். இது பொருட்கேடும் உயிர்க் கேடும் தானே செய்யும் என்றது.

பரிதி:— இரகசியத்தை அடக்க மாட்டாமல் பரரகசியமாக்குவான் தனக்குத் தானே மிடிதேடிக்கொள்வானும் எ - று.

காளிங்:— இவர் எமக்கு இனியர் என்று கருதிப் பிறர்க்கு உரைத்தற்கு அரியது ஓர் மறையினை ஒருவர் சொன்னால் அதனை அடக்குவது ஓர் அமைவு இன்றிப் பின்பு அவ்விடத்திலே சோரவிடும் புல்லறிவாளன் மற்று அவன் தானே தனக்குப் பிறிது ஒன்றாலும் தீராத பெரிய துக்கத்தைச் செய்து அனுபவிக்கும் எ - று.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— ஈவோன் ஏற்றலுக்கு மேற்கோள். (இ. கொ. 36.)

ஒப்புமைப்பகுதி:

"விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்
முளிந்தாரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா
அளிந்தார்க ணாயினும் ஆராயா னாகித்
தெளிந்தான் விரைந்து கெடும்." —பழ. நா.

முதுமொழிவெண்பாக்கள் :

"ஓகையினால் வேதா உரையையுமெள் ளிச்சுதன்மன்
மூகையனாய்ச் சோர்ந்தான் முருகேசா - வாகை." —முருகேசர். 85.

குறிப்பு:

இக்குறளுக்குப் பரிமேலழகர் "அரிய உபதேசப்பொருளைப் பிறர்க்குச் சொல்லும் புல்லறிவாளன் தானே தனக்கு வருத்தத்தைச் செய்துகொள்ளும்" என்பர். காளிங்கர் இரகசியங்களைப் புறம்போக்கும் புல்லறிவாளன், வேறு எதனாலும் போக்கமுடியாத துன்பத்தைத் தானே தனக்குச் செய்துகொண்டு வருந்துவான் என்பர். இதனை பரிமேலழகர்ப் பேணமை என்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மையல்ல என்று மறுப்பர். இது அரசிற்கு அங்கமாவார் மேற்கொள்ளவேண்டிய இயல்பு கூறும் பகுதியாதலானும், அரசாங்கத்தில் மிக இரகசியமான செய்திகளையும் யான் அறிவேன் என்று வேண்டுமென்றே பிறர் அறியப் பேசுதல் அவனால் பெருமைக்கு ஏதுவாகக் கருதப்படுதலானும், அருமறையை உபதேசப்பொருள் எனின் அது அறத்துப்பாலுக்கு அன்றி, ஆட்சிமுறை கூறும் அங்கவியலுக்குப் பொருந்தாமையானும் தாம் குருமுகமாகக் கேட்ட உபதேசப்பொருளைத் தாம்பெற்ற பேறு பெறுக இவ்வையகம் எனப் பலரறியப் பரப்புதலே பேரின்பமாதலானும், எட்டெழுத்து மந்திரத்தை எல்லோர்க்கும் உபதேசித்த இராமாநுசர் உயர்ந்தாராதலானும் மறுப்பு ஏற்புடையதோ என்பதை ஆராய்க. அன்றியும் பேதைமை அறியாமையை அடிப்படையாகக்கொண்டு மயக்க அறிவால் விளைவது ஆதலால் மன்னிக்கத்தக்கது. புல்லறிவாண்மை செருக்கால் வேண்டுமென்றே செய்யும் மன்னிக்கமுடியாத குற்றம். இதனாலும் மறைவெளிப்படுத்தலே புல்லறிவாண்மையே யாமாறு துணியலாம்.

—தொகுப்பாசிரியர்.

848. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— ஏவவும் செய்கலான் - புல்லறிவாளன் தனக்கு உறுதி யாயவற்றை அறிவுடையார் சொல்லாநிற்கவும் செய்யான், தான் தேறான் - அதுவன்றித் தானாகவும் இவை செய்வன என்று அறியான், அவ்வுயிர் போமளவும் ஓர் நோய் - அவ்வுயிர் யாக்கையின் நீங்குமளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கரியதொரு நோயாம்.

உயிர் தான் உணர்தல் தன்மைத்தாயிருந்தும் நின்ற யாக்கை வயத்தான் மருடல் தன்மைத்தாய் வேறுபடுதலின் அவ்வுயிர் என்றும், அதனின் நீங்கியபொழுதே அதற்கு இரண்டனுளொன்று கூடுதலின் போமளவும் என்றும், குலமலைமுதலிய பொறுக்கின்ற நிலத்திற்குப் பாவ யாக்கை பெரும்பொறையாய்த் துன்பம் செய்தலின் ஒருநோய் என்றும் கூறினார்.

மணக்:— அறிவுடையார் சொல்லவும் செய்யான்; தானும் தெளியான்; அத்தன்மையன் சீவன் போமளவும் உலகத்தார்க்கு ஒரு நோய்போல்வன் எ - று.

இஃது ஈட்டின பொருளைக் கொடுத்தலும் தொகுத்தலும் செய்யாமை புல்லறிவு என்றது. வேறுசெய்யும் வினைக்கும் ஒக்கும்.

பரிப்:— ஏவுதல் - தான்தெரிய என்று ஏவுதல். தெளிதல் - பொருள் யாது என்று தெளிதல்.

பரிதி:— கற்பித்த புத்தியுங் கேளான்; தானும் அறியானாகில் சாமளவும் அறிவின்மை ஒருவியாதி எ - று.

காளிங்:— தானும் அறியான் பிறர் சொல்லவும் செய்யான் ஆகிய புல்லறிவாளன் யாவன்? அவன் உயிர் நீங்கும் அளவும் விடாது அனுபவிப்பது ஓர் நோயாம் இத்துணை எ - று.

மேற்கோள்பகுதி:

நச்:— செறற்சொல்லிற்குத் தன்னினமுடித்தலான் இக்குறளை எடுத்துக்காட்டி, இழிபும் கொள்க என்பர். (தொல். சொல். 57.)

மயிலை:— இழிப்பின்கண் உயர்திணை அஃறிணையானதற்கு மேற்கோள். (நன். 378.)

சங்கர:— செறலின்கண் உயர்திணை அஃறிணையானதற்கு மேற்கோள். (நன். 379.)

சுவாமி:— மறையாய் அடுக்கலுக்கு மேற்கோள். (இ. சொ. 120.)

ஒப்புமைப்பகுதி :

"ஏவா மக்கள் மூவா மருந்து." —கொன்றை. 8.

முதுமொழிவெண்பாக்கள்:

"இல்லாள் மறுப்பவுஞ்சென் றேகிச் சலந்தான்றான்
தொல்வலிபோய் மாண்டனனே சோமேசா - வல்லாமை."

—சோமேசர். 85.

குறிப்பு:

செய்கலானை நோய் என்று கூறியது செறல்பற்றிய வழக்கு. "மகன் எனல் மக்கட் பதடி எனல்" என்றாற்போல, நோய் உடற்குப் பொறையாதலேயன்றி ஊறும் விளைப்பதுபோல இவன் உலகிற்குப் பாரமாய் இருத்தலன்றி தீமையும் செய்கின்றான் என்பதைச் சிந்திக்க. நோய் மருந்தால் பரிகரிக்கப்படுமாறுபோல மன்னனால் இவனும் கடியத்தக்கவன் என்றவாறு.

—தொகுப்பாசிரியர்.

849. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு. (௯)

உரைப்பகுதி:

பரிமே:— *காணாதான் காட்டுவான் தான் காணான் - தன்னை எல்லாம் அறிந்தானாக மதித்தலான் பிறரால் ஒன்று அறியும் தன்மையிலாதானை அறிவிக்கப் புகுவான் அவனால் பழிக்கப்பட்டுத் தான் அறியானாய் முடியும், காணாதான் தான் கண்டவாறு கண்டானாம் - இனி அவ்வறியுந்தன்மை இல்லாதான் கொண்டது விடாமையான் தானறிந்தவாற்றால் அதனை அறிந்தானாய் முடியும்.*

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்றானும் இயைவ தன்று என்பதாம்.

மணக்:— அறியாதானை அறிவிக்கப் புகுதுமவன் தானறி யான்; அவ்வறியாதவன் தான் அறிந்தபடியே அறிந்தானா யிருக்குமாத லான் எ - று.

இது கொண்டது விடாமை புல்லறிவு என்றது.

பரிதி:— புல்லறிவற்கு அறிவு சொல்லுவான்றான் இந்தப்புல்லறி வன் அந்தப் புல்லறிவற்கு என்னறிவு சொல்லப் பெற்றான் எ - று.

காளிங்:— தான் கற்றது ஒன்றின் மெய்ப்பொருளைக் காண அறியாத புல்லறிவாளன் தான் கண்டவாற்றையே குறித்து ஒன்றைக் கசடு அறக் காட்டக் கருதுவான் யாவன்? அவன் தானும் மற்று அன்னனே ஆம்: என்னை எனின், தான் காட்டும் மெய்ப்பொருள் காணாதானாகிய புல்லறிவாளன் தான் கண்டவற்றையே கண்டானாய் விடும் இத்துணை அல்லது, ஓர்ந்து கைக்கொள்ளும் கருத்தினன் அல்லன் எ - று.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— வழக்கு அறியாதார் வழக்கையும் இகழ்தல் இயற் கேயே என்பதற்கு மேற்கோள். (இ. கொ. 6.)

ஒப்புமைப்பகுதி:

"பூத்தாலும் காயா மரமும்உள மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர் - பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்கு
உரைத்தாலும் தோன்றா உணர்வு." —பழ. நா.

"ஓர்த்த கருத்தும் உணர்வும் உணராத
மூர்க்கற்கு யாதும் மொழியற்க - மூர்க்கன்றான்
கொண்டதே கொண்டு விடானாகும் ஆகாதே
உண்டது நீலம் பிறிது." —ஷை.

"கோவாத சொல்லும் குணனிலா மாக்களை
நாவாய் அடக்கல் அரிதாகும் - நாவாய்
களிகள்போல் தூங்கும் கடற்சேர்ப்ப வாங்கி
வளிதோட் கிடுவாரோ இல்." —ஷை.

" பூத்தாலும் காயா மரமுள நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றாதார் - பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்கு
உரைத்தாலும் செல்லா துணர்வு" —சிறுபஞ்ச. 23.

" பூவாதே காய்க்கும் மரமும்உள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே - தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றா உணர்வு." —நல்வழி 35.

" கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉம்
குற்றம் தமதே பிறிதன்று - முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை உணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்." —நீதிநெறி. 25.

" கல்லாக் கயவர்க்கு அருநூற் கிளைமறை
சொல்லினர் தோமெனத் துணைமுலை பெருத்தன."
கல்லாடம். 1. 15 - 16.

" ....ஆய்ந்தருநூல்
ஓதி அறியா ஒண்பே தையருடனே
நீதி முறையா நிகழ்த்துநூல் - பேதைமையாம்
காணுதான் காட்டுவான் தான்காணான் கண்ணெதிரே
நாணுதி ராதே நவிலாதே.............." —தமிழ். 187 - 188.

" உறுதியை யுரைத்தனன் உணர்வி லாதவன்
வறிதெனை இகழ்ந்தனன் வருவ தோர்கிலன்
இறும்வகை நாடினன் யாதெந் புந்தியை
அறிவிலார்க் குரைப்பவர் அவரில் பேதையார்."
—கந்த. சூரனமைச். 162.

" உய்த்தனர் தேன்மழை உதவிப் போற்றினும்
கைத்திடல் தவிருமோ காஞ்சி ரங்கனி
அத்தக வல்லவோ அறிவி லாதவன்
சித்தம துணர்வகை தெருட்டு கின்றதே." ௸ 163.

" ....உசாவினைப்
பேதைக் களிப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக் கொம்பன்னாள் குயம்." யா-கா. மேற்கோள்.

"முட்டாள் என்னசொன்னாலும் கட்டோடே கேளான்." —பழ.

"மூடருக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வு." —ஷை.

850. உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்(து)
அலகையா வைக்கப் படும். (௫௦)

உரைப்பகுதி:

பரிமே:— உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் - உயர்ந்தோர் பலரும் உண்டு என்பதோர் பொருளைத் தன் புல்லறிவால் இல்லை என்று சொல்லுவான், வையத்து அலகையா வைக்கப்படும் - மகன் என்று கருதப்படான்; வையத்துக் காணப்படுவதோர் பேய் என்று கருதப்படும்.

கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலாக அவர் உள என்பன பலவேனும் சாதிபற்றி உண்டு என்பது என்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையும் உடைமையின் தன் யாக்கை கரந்து மக்கள் யாக்கையுள் தோன்றுதல்வல்ல அலகை என்றும் கூறினார். இவை நான்கு பாட்டானும் உறுதிச்சொல் கொள்ளாமையது குற்றம் கூறப்பட்டது.

மணக்:— உலகத்தில் அறிவுடையார் பலர் உண்டு என்பதாகிய ஒரு பொருளை இல்லை என்று சொல்லுமவன், இவ்வுலகத்தின்கண்ணே திரிவதாகிய பேய் என்று எண்ணப்படுவன் எ - று.

இஃது உயர்ந்தோர் உண்டு என்பதனை இல்லை என்றல் புல்லறிவு என்றது.

பரிதி:— பெரியோர் உள்ளதென்று சொல்லுமதை இல்லை என்று சொல்பவன் பூமியில் பசாசாய்த் திரிவன் எ - று.

காளிங்:— திருந்திய கேள்வியின் உயர்ந்தோர் தெரிந்து உண்டு என்னும் மெய்ப்பொருளை அஃது இல்லை என்று கழறுவான் யாவன் ஒரு புல்லறிவாளன், அவனை ஈண்டு ஒரு மகன் என்று கருத அடாது: பின்னை என் எனின் பேய்களுடன் இவனும் ஒரு பேயாக வைத்து எண்ண அடுக்கும் எ - று.

இத்தன்மையர் ஆகிய புல்லறிவாளருடன் கெழுமல் ஆகாமை உணர்த்தி மற்று இதன் பின்னரே ஒருவரோடும் இகல்கோடலும் ஆகாது என்பதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— 'உலகத்தார் உண்டென்பது இல்லென்பான்' என்பது வினைமுற்றுப்பெயர் வினைமுதற் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 83.)

வருமொழியை நோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலை விட்டுப் பன்மைப்பாலை விளக்குதலால் அஃறிணைச்சாதி ஒருமையாயிற்று என்பர். (ஷை. 130.)

முதுமொழிவெண்பாக்கள்:

"எறும்புகடை யானைதலை ஈசனைப்பூ சித்துப்
பெறும்கதிகண் டுந்தேறார் பேய்கள் — அறிந்த." —முதுமொழி. 132.

குறிப்பு:

அலகை உலகத்தோடு ஒத்துப் பேசாமையேயன்றித் தன்வாழ்விற்காகப் பிறரைப் பிடித்து நலிவிக்கும் பிடிவாதம் உடையது. அதுபோல இவனும் பிறரை நலிவிக்கும் பிடிவாதகுணம் உடையவனாவன் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— அறிவின்மை, அறிவிலான், அறிவிலார், வெண்மை, கல்லாத, அற்றம், அருமறை, ஏவவும், காணாதான், உலகத்தார்.

மணக்:— வெண்மை, கல்லாத, உலகத்தார், காணாதான், அற்றம் ஏவவும், அறிவிலான், அறிவின்மை, அருமறை, அறிவிலார்.

பரிதி:— அறிவின்மை, அறிவிலார், அருமறை, வெண்மை, கல்லாத, காணாதான், அற்றம், ஏவவும், அறிவிலான், உலகத்தார்.

காளிங்:— அறிவின்மை, அறிவிலார், அற்றம், அறிவிலான், கல்லாத, காணாதான், ஏவவும், அருமறை, வெண்மை, உலகத்தார்.

86. இகல்.

தொகுப்புரை:

[பகைமை என்பது எல்லா உயிர்கட்கும் பிரிவை வளர்க்கும் பெருநோயாம் ஒருவன் பிரிவை விரும்பிப் பிடிக்காத காரியங்களைச் செய்தாலும் பகைமையால் துன்பம் செய்யாமையே சிறந்தது. பகைமை என்கின்ற பெரும் துன்பத்தை விளைக்கும் நோயை நீக்கினால் அது அழியாதிருக்கும் புகழை அவனுக்காக்கும். பகைமை என்கின்ற துன்பத்துள் துன்பம் இல்லையானால் அது அவனுக்கு மிக்க இன்பங்கொடுக்கும். பகைமைக்கு விலகிப்போகும் வீரர்களை யாரால் வெல்லமுடியும். பகைமையில் மேலும் மேலும் ஊக்கத்தோடு செல்லுபவன் வாழ்க்கை பிழைத்தலும், அழிதலும் அண்மையில் இருக்கின்றன. பகையை விரும்பும் தீங்கு பயக்கும் அறிவினையுடையார் வெற்றியைத்தரும் நீதிநூல்களை ஆராயாதவர்கள். மனத்தில் பகைமை தோன்றில் அதனை அழிப்பதே ஆக்கம். அதனை வளர்ப்பது கேடு. ஆக்கம் வருங்காலத்துப் பகைமைக் காரணங்கள் இருந்தாலும் அதனைப் பாராட்டமாட்டான். கேடு வருங்காலத்துப் பகைமையையே மிகுதியாகப் பாராட்டுவான். பகைமையாலேயே துன்பங்கள் அனைத்தும் தோன்றும். எல்லாரோடும் உறவாடிக் களிப்பதால் செல்வம் நிறையும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி அவற்றான் வரும் வெகுளி காமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும்பான்மைத்தாகலின், அதனான் வருவன கூறுவான் தொடங்கி, முதற்கண் இகல் கூறுகின்றார். அஃதாவது இருவர் தம்முள் பொருது வலிதொலைதற்கு ஏதுவாய மாறுபாடு.

மணக்:— இகலாவது பிறரோடு மாறுகொண்டால்வரும் குற்றம் கூறுதல். இஃது அறியாதார்க்கு உளதாமாதலின், அதன்பின் கூறப்பட்டது எ-று.

பரிதி:— இகலாவது புல்லறிவினர்க்கு உண்டாம் மாறுபாடு எ-று.

851. இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். (க)

உரைப்பகுதி:

பரிமே:— எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிக்கும் நோய் - எல்லா உயிர்கட்கும் பிற உயிர்களோடு கூடாமை என்னும் தீக்குணத்தை வளர்க்கும் குற்றம், இகல் என்ப - இகல் என்று சொல்லுவர் நூலோர்.

மக்களையும் விலங்குகளோடு ஒப்பிப்பது என்பது தோன்ற எல்லா உயிர்க்கும் என்றும், பகுதிக்குணத்தை இடைநின்று விளைத்தலின் பகல் என்னும் பண்பின்மை என்றும் கூறினர். நற்குணமின்மை அருத்தாபத்தியால் தீக்குணமாயிற்று. இதனால் இகலது குற்றம் கூறப்பட்டது.

மணக்:— எல்லா உயிர்க்கும் வேறுபடுதலாகிய குணமின்மையைப் பரப்பும் துன்பத்தை, இகல் என்று சொல்லுவார் அறிவோர் எ - று.

இஃது இகலாவது இது என்று கூறிற்று.

பரிதி;— மாறுபாடு என்பது எல்லா உயிர்க்கும் எக்காலமும் பிரகாசமில்லாத பண்பின்மைதரும் நோய் எ - று.

காளிங்:— தாம் பிறரொடு மாறுபட்டு ஒழுகும் மாறுபாடு என்று சொல்லுப சான்றோர்: எவ்வுயிர்க்கும் இனிது மேவி ஒழுகாது வேறுபடுதல் என்னும் இப்பண்பின்மையைப் பரப்பும் நோயை எ - று.

பகல் என்பது பகுதல் என்றது. பாரித்தல் என்பது பரப்புதல்.

852. பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— பகல் கருதிப் பற்றா செயினும் - தம்மொடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானாயினும், இகல் கருதி இன்னா செய்யாமை தலை - அவனொடு மாறுபடுதலைக் குறித்துத் தாம் அவனுக்கு இன்னாதவற்றைச் செய்யாமை உயர்ந்தது.

செய்யின் பகைமை வளர்த் தாம் தாழ்ந்துவரலானும், ஒழியின் அப்பற்றாதன தாமே ஓய்ந்துபோகத் தாம் ஓங்கிவரலானும், செய்யாமை தலை என்றார். பற்றாத என்பது விகாரமாயிற்று.

மணக்:— தம்மோடு பற்றில்லாதார் வேறுபடுதலைக் கருதி, இன்னாதவற்றைச் செய்தாராயினும், அவரோடு மாறுபடுதலைக் கருதித் தாமும் அவர்க்கு அவற்றைச் செய்யாமை நன்று எ - று.

இது மேற்கூறிய குற்றமும் குணமும் பயக்குமாதலின், மாறுபடு தற்குக் காரணம் உள்வழியும் அதனைத் தவிர்தல் வேண்டும் என்றது எ - று.

பரிதி:— இன்னானை வென்றோம் என்கிற கீர்த்தியை எய்த வேண்டி மாற்றார் தம்முடனே மாறு கொண்டாலும் மாறுபாடெண்ணி யவனுக்குப் பொல்லாங்கு செய்யாமை நன்று எ - று.

காளிங்:— தம்மொடு சிறிதும் பற்று இல்லாதார் வந்து கருதிக் கொண்டு மாறுபடுதலைச் செய்யினும் தாம் அவரொடும் இகல்கருதிக்கொண்டு மற்று அவர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமையே தமக்குத் தலைமைப் பாடாவது எ - று.

ஓர் அரசர்க்குப் பகை விளைக்க வேண்டியவழி மற்று அதனால் அவர்க்கு ஓர் அழிவு வராது மாட்சிமைப்பட ஆராய்தலும் அமைச்சர்க்குக் கடன் ஆகிய ஆற்றால் முன்னம் மிகைத்து இகல் செய்யல் ஆகாது என்பதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

853. இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவல் இல்லாத்
தாவில் விளக்கம் தரும். (ங)

உரைப்பகுதி :

பரிமே:— இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின் - மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பத்தைச் செய்யும் நோயை ஒருவன் தன் மனத்தினின்று நீக்குமாயின், தவல் இல்லாத் தாவில் விளக்கம் தரும் - அவனுக்கு அந்நீக்குதல் என்றும் உளதாதற்கு ஏதுவாய புகழைக் கொடுக்கும்.

தவலில்லாமை அருத்தாபத்தியான் அப்பொருட்டாயிற்று. தாவில் விளக்கம் வெளிப்படை. யாவரும் நண்பராவர், ஆகவே எல்லாச் செல்வமும் எய்திக் கொடை முதலிய காரணங்களால் புகழ்பெறும் என்பதாம்.

மணக்:— மாறுபாடாகிய இன்னாத நோயை நீக்குவானாயின் அந்நீக்குதல் கேடில்லாத குற்றமற்ற ஒளியினைத் தரும் எ - று.

இது தோற்றம் உண்டாம் என்றது.

பரிதி:— மாறுபாடு என்கிற பொல்லாநோயை விடுவானாகில் ஒரு காலத்தும் கேடில்லாத புகழ் உண்டாம் எ - று.

காளிங்:— இகல் என்று சொல்லப்படும் துயர் விளைக்கும் நோயை ஒழிப்பின் பின் கெடுதலும் இன்றி மற்றும் தமக்கு ஓர் வருத்தமும் இன்றி உலகத்துத் தம் பேர் விளங்குவதோர் விளக்கத்தையும் தரும் எ - று.

எவ்வம் என்பது துக்கம்: தா என்பது வருத்தம்.

குறிப்பு:

நோயுற்றவன் தவறுவான் - பகை என்னும் நோய் உள்ளவன் தவறிப் போவான். நோயற்றவன் தவறாமையோடு கேடற்ற விளக்கத்துடன் இருப்பன். பகையற்றவன் தவறாதவனாய்ப் புகழோடு இருப்பன். தவல் - தவறுதல்: தொழிற்பெயர். தா - கேடு. "தாவாத இன்பம்" என்புழிப்போல, தவலில்லா என்ற ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் காரணப்பொருளதாய் விளக்கம் என்னும் பெயர் கொண்டது. பறவாக்குளவி, பாயாவேங்கை என்புழிப்போல, தாவில் விளக்கம் வெளிப்படைச்சொல். உலகம் உள்ளளவும் எவ்விடத்தும் அழியாது நிற்றல்பற்றித் தாவில் விளக்கம் எனப்பட்டது. இடைக்கிடை தூண்டப்படுதலும், எண்ணெய் வார்க்கப்படுதலும், அவிதலும், ஏற்றுதலும் இன்றி இவன் நாள் தொட்டு என்றும் நிற்றலின் உலக விளக்கோடு இதனிடை வேற்றுமை விளங்கத் தாவில் விளக்கம் என வெளிப்படையாய் ஓதினர்.

—தொகுப்பாசிரியர்.

854. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பங்களெல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒருவனுக்கு இல்லையாயின், இன்பத்துள் இன்பம் பயக்கும் - அவ்வின்மை அவனுக்கு இன்பங்களெல்லாவற்றினும் மிக்க இன்பத்தினைக் கொடுக்கும்.

துன்பத்துள் துன்பம் பலரொடு பொருது வலிதொலைதலான் யாவர்க்கும் எளியனாய் உறுவது. அதனை இடையின்றியே பயத்தலின், இகல் என்னும் என்றார். இன்பத்துளின்பம் - யாவரும் நட்பாதலின் எல்லாப்பயனும் எய்தியுறுவது.

மணக்:— இன்பத்தின் மிக்க இன்பம் எய்தும்; துன்பத்தின் மிக்க துன்பம் கெடுமாயின் எ - று.

எல்லா இன்பத்தின்மிக்க வீடுபேற்றின்பம் எய்தும் என்றவாறு.

பரிதி:— இன்பம் வந்தகாலம் இன்பம் வந்தது என்றுமகிழாதவன், துன்பம் வந்தகாலத்தும் துன்பப்படான் எ - று.

காளிங்:— இன்பத்துள் மிக்க இன்பத்தைத் தரும்: இகல் என்னும் துன்பத்துள் மிக்க துன்பம் கெடின் எ - று.

855. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர், (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை - தம் உள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை ஏற்றுக்கொள்ளாது சாய்ந்து ஒழுக வல்லாரை, மிகல் ஊக்கும் தன்மையவர் யார் - வெல்லக்கருதும் தன்மை உடையார் யாவர்?

இகலையொழிந்து ஒழுகல் வேந்தர்க்கு எவ்வாற்றானும் அரிதாகலின் வல்லாரை என்றும், யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருதுவார் யாவரும் இல்லை என்றும் கூறினார். இவை நான்கு பாட்டானும் இகலாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

மணக்:— இகலின் எதிர் சாய்ந்தொழுக வல்லாரை வெல்ல நினைக்கும் தன்மையார் யாவர்தான் எ - று.

மேல் இகலின்கண் சாய்ந்தொழுக வேண்டும் என்றார் அது தோல்வியாகாதோ என்றார்க்கு அவரை வெல்வார் இல்லை.

பரிதி:— மாறுபாடெதிர்த்தால் பொறுமையினாலே வெற்றி கொள்ளுபவனை யார்தானும் வெல்வரோ எ - று.

காளிங்:— தம்மொடு பிறர் வந்து இகலின் அவ்விகல் எதிர் மலையாது தலைசாய்ந்து ஒழுக வல்லாரை மற்று யாரேதான் அவர் மேம்பாட்டைத் தள்ளும் தன்மையவர் எ - று.

மிகல் என்பது மேம்பாடு. ஊக்குதல் என்பது தள்ளுதல்.

முதுமொழிவெண்பாக்கள்:

" ஓரவே மாறுபா டொண்ணுது வந்தாலும்
தீரவே வேண்டும் தினகரா . கூறும்." —தினகர. 90.

தாயடிமை வானமுதம் தந்தகற்றச் சார்வயின
தேயனைமால் வென்றான் சிவசிவா - ஏய." —சிவசிவ. 86.

குறிப்பு:

பெருங்காற்றுக்கு எதிர்சாய்ந்து கொடுக்கும் நாணலைப்போல, பகைமைக்குச்சாய்ந்து போதலின் அருமைதோன்ற " ஒழுகவல்லாரை " என்றார்.

தொகுப்பாசிரியர்.

856. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து. -(சா)

உரைப்பகுதி :

பரிமே:— இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை - பிறரொடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு இனிது என்று அதனைச் செய்வானது உயிர்வாழ்க்கை, தவலும் கெடலும் நணித்து - பிழைத்தலும் முற்றக்கெடுதலும் சிறிதுபொழுதுள் உளவாம்.

மிகுதல் - மேன்மேல் ஊக்குதல். இனிது என்பது தான் வேறல் குறித்தல். பிழைத்தல் - வறுமையான் இன்னுதாதல். முற்றக்கெடுதல் - இறத்தல். இவற்றோடு நணித்து என்பதனைத் தனித்தனி கூட்டி, உம்மைகளை எதிரதும் இறந்ததும் தழீஇய எச்சவும்மைகளாக உரைக்க. பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே உளவாம் என்பதாம்.

மணக்:— பிறருடன் மாறுபாட்டின்கண் மிகுதல் இனிதென்று கருதுமவனும், அவன் வாழ்க்கையும், சாதலும் கெடுதலும் அணித்து எ - று.

நிரல்நிறை. இது சாயானுயின் உயிர்க்கேடும் பொருட்கேடும் உண்டாம் என்றது.

பரிதி:— மாறுபாட்டிலே மிகுத்த குணமுடையார்க்கு வாழ்வு சிறுகுதலும் பிராணன் கெடுதலும் சடுதியிலே உண்டாம் எ - று.

காளிங்:— இதுநமக்குத் தகாது என்று மீட்சி இன்றிப் பிறரோடு இகலின்கண்ணே மிகுதலையும் இனிதென்று கொள்பவரது வாழ்க்கை குறைபடுதலும் கெட்டுவிடுதலும் அணித்து எ - று.

ஒப்புமைப்பகுதி:

"பகைநேர் வார்உள ரான பண்பினால்
உகநேர் சிந்தி உலந்த ழிந்ததால்
மகனே கண்டிலை யோநம் வாழ்வெலாம்." —கம்ப. அரசி. 15.

முதுமொழிவெண்பாக்கள் :

"ஆதியையும் வெல்வான் சலந்தரன்சென் றாழிஎஃக
மோதமுடி வுற்றான் முருகேசா - ஓதில்." —முருகேசர். 86.

குறிப்பு:

தவல் கெடல் இரண்டும் ஒருபொருள் மொழிபோல்தோன்றும் ஆயினும், தவல் என்பது பொருள் அழிவையும், கெடல் என்பது உடல் அழிவையும் உணர்த்தி நின்றன. —தொகுப்பாசிரியர்.

857. மிகன்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— இகல் மேவல் இன்னா அறிவினவர் - இகலோடு மேவுதலையுடைய இன்னாத அறிவினையுடையார், மிகல் மேவல் மெய்ப்பொருள் காணார் - வெற்றி பொருந்துதலையுடைய நீதிநூற்பொருளை அறியமாட்டார்.

இன்னாவறிவு தமக்கும் பிறர்க்கும் தீங்கு பயக்கும் அறிவு. வெற்றி வழிநின்றார்க்கு உளதாவது. காணப்படும்பயத்ததாகலின், மெய்ந்நூல் எனப்பட்டது. இகலால் அறிவு கலங்குதலின், காணார் என்றார். இவை இரண்டு பாட்டானும் இகலினார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

மணக்:— மிகுதலைப் பொருந்துகின்ற உண்மைப்பொருளைக் காணமாட்டார், மாறுபாட்டினைப் பொருந்தின இன்னாத அறிவுடையார் எ - று.

இது மாறுபடுவார்க்கு மெய்ப்பொருள் தோன்றாது என்றது.

பரிப்:— மெய்ப்பொருள் காணார் என்றமையால் கல்வியின்கண் தருக்கத்தினால் மாறுபடுவாரை நோக்கிற்று.

பரிதி:— மிகவும் பெருமையுள்ளவன் என்கிற குணம் காணார்; மாறுபாடு மேற்கொண்ட புல்லறிவாளர் எ - று.

காளிங்:— தன்னின் பெரியது பிறிது இன்றித் தானே பெருமை மேவுதல் பண்பிற்றாய் என்றும் யாது ஒருபடி படநிற்பது ஆகிய இம்மெய்ப் பொருளைக் காணமாட்டார் யாரோ எனின் சில சமயவேற்றுமை பற்றிநின்று அதன்கண் மேவுதல் பண்பிற்று ஆகிய இப்பெரியது ஓர் இன்னாத அறிவினர் எ - று.

858. இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம் - தன் உள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை எதிர்தலை ஒழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம்; அதனை மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம் - அது செய்யாது அதன்கண் மிகுதலை மேற்கொள்வானாயின் கேடும் தன்கண் வருதலை மேற்கொள்ளும்.

எதிர்தல் - ஏற்றுக்கோடல். சாய்ந்தபொழுதே வருதலின், சாய்தல் ஆக்கம் என்றார். இகலிற்கு எனவும் அதனை எனவும் வந்தன வேற்றுமைமயக்கம்.

மணக்:— மாறுபாட்டிற்குச் சாய்ந்து ஒழுகுதல் ஆக்கமாம்; அதனை மிகுதலை நினைக்கின் கேடுமிகும் எ - று.

இது மாறுபாட்டிற்குச் சாய்ந்தொழுகல் வேண்டும் என்றது.

பரிதி:— மாறுபாட்டுக்குப் பொறுத்தல் ஆக்கம்; மாறுபாட்டை மேற்கொள்ளுதல் கேடு எ - று.

காளிங்;— தம்முடன் பிறர் இகலும் இகலில் தான் எதிர்தலை சாய்ந்து ஒழுகுதல் யாவது? அது தமது ஆக்கத்தைக்கொணர்ந்து ஊக்கும்:

இனி அங்ஙனம் தலைசாய்ந்து ஒழுகக் கருதாது மற்று அதனை இகலின் கண்ணே நெஞ்சு ஊக்கின் ஆங்கு அது கொணர்ந்து ஊக்குமாம் கேடு என்பதனை எ - று.

குறிப்பு:

"இகல் எதிர்" என்ற குறளால் வெல்லமுடியாமையை விளக்கினார். இந்தக் குறளால் ஆக்கம் வரும் என்றும் இகலின் கேடுளதாம் என்றும் சாய்தலின் நன்மையும், மிகலின் தீமையும் ஒருங்கு உணர்த்தினர்.

—தொகுப்பாசிரியர்.

859. இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு. (௯)

உரைப்பகுதி :

பரிமே:— ஆக்கம் வருங்கால் இகல் காணான் - ஒருவன் தன்கண் ஆக்கம் வரும்வழிக்காரணம் உண்டாயினும் இகலை நினையான், கேடு தரற்கு அதனை மிகல் காணும் - தனக்குக் கேடுசெய்து கோடற்கண் காரணம் இன்றியும் அதன்கண் மிகுதலை நினைக்கும்.

இகலான் வருங்கேடு பிறரானன்று என்பது தோன்றத் தரற்கு என்றார். நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன. ஆக்கக் கேடுகட்கு முன்னடப்பன இகலினது இன்மை உண்மைகள் என்பதாம்.

மணக்:— மாறுபடுதற்குக் காரணம் உண்டாயினும், ஆக்கம் வருங்காலத்து மாறுபாடு காணான்; கேடுவருங்காலத்து, அதனை மிகுதலைக் காணும் எ - று.

இம்மாறுபாடு நல்வினையுடையார்க்குத் தோன்றாது என்றவாறு.

பரிதி:— தனக்கு ஆக்கம் வருங்காலம் மாறுபாட்டை மேலாக் காண், தான் கெடுகிற காலம் மாறுபாட்டை மேலாகக் கொள்வான் எ - று.

காளிங்:— தான் பிறரோடு இகலுதலைக் காணான்: தனக்கு ஓர் ஆக்கம் வரக்கடவதான காலத்து: இனி மற்று அதனை மேன்மேலும் மிகுதலை காணும் தனக்குக் கேடு வருவதற்கு உரிய காலத்து எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

“ஆங்கால் இறைவர் அடிதொழுவார் செல்வமெல்லாம்
போங்கால் அசுரர் பொாவருவார் - நீங்கா.” —முதுமொழி. 133.

“சொன்ன சிறத்தன் சுதனே அரும்பகையாய்
இன்னுயிரைக் கொன்றான் இராங்கேசா - மன்னும்.” —இராங். 86.

குறிப்பு:

‘கெடுமதி கண் தோன்றாது’ ‘மதியை விதிமறைக்கும்’ என்பன பழமொழி ஆதலால், கேடுதாற்கு மிகல் காணும் என்றார். தாற்கு என்பது, ‘தருசொல் வருசொல் ஆயிருகிளவியும், தன்மை முன்னிலை ஆயிரிடத்த’ ஆகலின் தனக்குச் சோறுதந்தான், என்புழிப்போல, தாற்கு என்பது தனக்குச் செய்து கோடற்கண் என்னும் பொருளில் வந்தது.

—தொகுப்பாசிரியர்.

860. இகலானும் இன்னாத எல்லாம் நகலானும்
நன்னயம் என்னும் செருக்கு. (கo)

உரைப்பகுதி:

பரிமே:— இகலான் இன்னாத எல்லாம் ஆம் - ஒருவனுக்கு மாறுபாடு ஒன்றானே இன்னாதன எல்லாம் உளவாம்; நகலான் நன்னயம் என்னும் செருக்கு ஆம் - நட்பு ஒன்றானே நல்ல நீதி என்னும் பெருஞ்செல்வம் உளதாம்.

இன்னாதன - வறுமை, பழி, பாவம் முதலாயின. நகல் - மகிழ்தல். நகல் என்பதூஉம் செருக்கு என்பதூஉம் தத்தங்காரணங்கட்கு ஆயின. நயம் என்னும் செருக்கு எனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். இவை மூன்றுபாட்டானும் அவ்விருமையும் கூறப்பட்டன.

மணக்:— மாறுபாட்டினாலே துன்பங்களெல்லாம் உளவாம்; உடன்பட்டு நகுதலாலே நல்ல நயமாகிய உள்ளக்களிப்பு உண்டாம் எ - று.

பரிப்:— மேல் கூறிய குற்றம் எல்லாம் பயத்தலின், அதனைத் தவிரத் தனக்கும் பிறர்க்கும் மகிழ்ச்சி உண்டாம் என்றது.

பரிதி:— மாறுபாடுகொண்டால் பொல்லாதவையெல்லாம் வரும்; மாறுபாடு கண்டு சிரித்துப் பொறுப்பானாகில் ஆக்கமும் கெடாது வெற்றியும் உண்டாம் எ - று.

காளிங்:— யாவரோடாயினும் தான்கொள்ளும் மாறுபாட்டானே உளவாம்; மற்று இனி யாவரோடாயினும் முகமலர்ந்து இனிது ஒழுகுவரேல் அதனாலாம் நல்ல ஆசாரம் என்று சொல்லப்படுகின்ற யாவரும் மகிழும் மகிழ்ச்சி எ - று.

ஒப்புமைப்பகுதி:

" இகலை மதித்தின் னுமைபிழை யியற்றி னார்க்கும் புரியாயேல்
பகையும் உறவாம் பெருஞ்செல்வம் பலிக்கும் கெடாத புகழுண்டாம்
இகலின் மிகுந்தின் னுங்கியற்றின் இனிய தமரும் ஏதிலராய்ப்
பகைமை வளரும் வலிதொலையும் பாழ்க்கும் பாழா வாழ்க்கையுமே."
—விநா. அரசி. 132.

முதுமொழிவெண்பாக்கள்:

" எத்திறத்தும் கெட்டான் இகலால் சுயோதனன்சீர்
துய்த்தனனட் பால்தருமன் சோமேசா - மொய்த்த." —சோமேசர். 86.

குறிப்பு:

நன்னயம் என்னும் செருக்கு என்பதன்கண் செருக்குஎன்பது கொள்ளத் தகுவதாகிய செருக்கினை. அது செருக்கு விளைதற்குக் காரணமாகிய செல்வத்தை உணர்த்திற்று; காரிய ஆகுபெயர்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— இகலென்ப, பகல்கருதி, இகலென்னும், இன்பத்துள், இகலெதிர், இகலின், மிகன்மேவல், இகலிற்கு, இகல்காணான், இகலானும்.

மணக்:— இகலென்ப, இகல்காணான், இகலெதிர், இகலிற்கு, இகலின், இகலானும், மிகன்மேவல், இகலென்னும், இன்பத்துள், பகல்கருதி.

பரிதி:— இகலின், இகலிற்கு, இகல்காணான், இன்பத்துள், இகலென்ப இகலெதிர், இகலானும், மிகன்மேவல், இகலென்னும், பகல்கருதி.

காளிங்:— இகலானும், இகலென்னும், இகலின், இகலெதிர், இகலிற்கு; இன்பத்துள், இகலென்ப, இகல்காணான், மிகன்மேவல், பகல்கருதி.

87. பகைமாட்சி.

தொகுப்புரை:

[தம்மினும் வலியார்மேல் பகைகொண்டு எதிர்த்தலை ஒழிக. மெலியார் மேற்செல்லுதலை விரும்புக. அன்பும், வலிநிறைந்த துணையும், தன்வலிமையும் இல்லாத ஒருவன் எவ்வாறு பகைவன் வலியைத்தொலைப்பான்! எடுத்ததற்கெல்லாம் அஞ்சு பவனும், ஒன்றும் அறியாதவனும், பிறரோடு பழகத்தெரியாதவனும், உலோபியும் ஆன ஒருவன் பகைவர்க்கு மிக எளியனாவன். எப்போதும் கோபிப்பவனும், மனத் தில் எதையும் மறைத்துவையாதவனும், ஆகிய ஒருவன் எல்லாரானும் எவ்விடத்தும் எப்பொழுதும் வெல்லப்படுவன். வெல்லும்வழி தெரிந்து பொருத்தமானவற்றைச் செய்யாதவனும், பிறர்பழிக்கத் தக்கனவற்றைச் செய்பவனும், பண்பாடில்லாத வனும் ஆன ஒருவன் பகைவர்க்கு வெல்ல இனியனாவன். கண்ணைமறைக்கும் கோபத்தையும்; அளவுக்குமீறிய காமத்தையும் உடைய ஒருவனது பகைமையைப் பகைவர் விரும்பிக்கொள்ளுவர். போரைத் தொடங்கியிருந்தும் அதற்கு ஏலாதன செய்யும் ஒருவனுடைய பகையைப் பொருள்கொடுத்தாயினும் கொள்ளுதல் வேண்டும். குணமின்றிக் குற்றம்பலவுடையான் தனக்குத்துணை ஒன்றும் இலனாவன். ஆனால் இவன் பகைவர்க்கு வெற்றியைத் தானே விளைவிப்பான். அறிவற்ற - அஞ்சும் இயல்புடைய பகைவனைப் பெற்றால் அவன் பகைவனுக்குப்பெரிய இன்பமாம். நீதியறியாத ஒருவனோடு பகை கொள்ளுதலால் எளிதாக வருகின்ற செல்வத்தைக் காலத்தில் விரும்பாதவனை ஒருகாலும் புகழ்பொருந்தாது.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது அறிவின்மை முதலிய குற்றங்கள் உடைமையால் பகையை மாட்சிப் படுத்தல். அரசர்க்கு எவ்வாற்றானும் பகையின்மை கூடாமையின் மேல் பொதுவகையான் விலக்கப்பட்ட இகலை ஈண்டுச் சிறப்புவகையான் விதிக்கின்றாராகலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

மணக்:— பகைமாட்சியாவது பகைகொள்ளுங்கால் தனக்கு நன்மை பயக்குமாறு கொள்ளுதல். மேல் பகைகொள்ளலாகாது என்றார்; பகைகொள்ளுங்கால் நன்மை பயக்குமாயின் கொள்க, என்றமையால் அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— பகைமாட்சியாவது பகைவாராவழியைச் சொல்வது எ-று

861. வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. (க)

உரைப்பகுதி:

பரிமே:— வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக - தம்மின் வலியார்க்குப் பகையாயெதிர்தலை ஒழிக; மெலியார்மேல் பகை ஓம்பா மேக - ஏனை மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக.

வலியார் என்புழித் துணைவலியும் அடங்கலின், மெலியார் என்புழித் துணைவலி இன்மையும் கொள்ளப்படும். அத்துணைதான் படை பொருள் முதலிய வேற்றுமைத்துணையும், நல்லறிவுடைமை நீதிநூல்வழி ஒழுகல் முதலிய ஒற்றுமைத்துணையும் என இரண்டாம். அவ்விரண்டும் இல்லாரை வெல்வார்க்கு வலிதொலையாமையின் அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. சிங்கநோக்காகிய இதனுள் பகைமாட்சி பொதுவகையான் கூறப்பட்டது.

மணக்:— தம்மின் வலியார்க்குப் பகையா யெதிர்தலைத் தவிர்க; தம்மைப் போற்றாத எளியார்மாட்டுப் பகைகோடலை மேவுக எ - று.

இது தனக்கு எளியாரோடு பகை கோடலாம் என்றது.

பரிதி:— தன்னில் வலியார்மேலே மாறுகொள்வதை விடுக; தன்னில் எளியார்மேலும் பகையை விடுக எ - று.

காளிங்:— ஆள்வலி, தோள்வலி பொருள்வலி, துணைவலி முதலிய இவற்றால் தம்மின் வலியார்க்குத் தாம் மாறுபாடு ஏற்றலைப் பரிகரிக்க; மற்று யார்மாட்டு ஏனின் தம் வன்மையும் மென்மையும் சீர்தூக்கித் தம் வலியைப் பரிகரிக்க; வல்லாத மெலியார்மாட்டு மேவுக பகைமை எ - று.

மேகபகை என்பது மேவுக பகைமை என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஓம்பா - ஒழியாது. மேக - விரும்புக. ஒன்று, கடைக் குறைந்தது; ஒன்று இடைக்குறைந்தது. "தத்தம் திரிபே சிறிய என்ப" (தொல் - எழுத் - 83) என்பதுபோலச் சிங்கநோக்காய் ஈண்டுப் பொதுப் பட மெலியார் மேலும் முன்னர்ச் சிறப்புவகையால் மெலியார்மேலும் பகைமாட்சி சிங்கநோக்காயிற்று.

ஒப்புமைப்பகுதி:

"அமர்நின்ற போழ்தின்கண் ஆற்றுவ ரேனும்
நிகரொன்றின் மேல்விடுதல் ஏதம் - நிகரின்றி
வில்லொடுநே ரொத்த புருவத்தாய் அஃதன்றோ
கல்லொடு கைஎறியு மாறு." —பழ. நா.

"ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க
போற்றுது கொண்டாக்கன் போருளகப் பட்டானல்
நோற்ற பெருமை உடையாரும் கூற்றம்
புறங்கொப்மை கொட்டினர் இல்." —ஷை

"மிக்குடைய ராகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயறல் என்றல் இழுக்காகும்
நற்கெளி தாகி விடினும் நளிவரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தார் இல்." —ஷை

"வலியாரைக் கண்டக்கால் வாய்வாளா ராகி
மெலியாரை மீதூரும் மேன்மை யுடைமை
புலிகலாம் கொள்யானைப் பூங்குன்ற நாட
வலியலாம் தாக்கு வலிது." —ஷை

முதுமொழிவெண்பாக்கள்:

"கண்ணன் கடையிருந்த கண்ணுதலின் தாள்வணங்கி
உண்ணின்ற வாணனொடுபொருதான் - எண்ணி." —முதுமொழி. 134.

"ஏனையர்பால் வெற்றிகொண்டான் நின்றேனெதிர்த்திறந்தான்
தூநறும்பூ வாளியான் சோமேசா - மானம்." —சோமேசர். 87.

"நந்திளதிர் செம்மாந்தே நாகாரி எஞ்சலிலா
முந்தைவலி தோற்றான் முருகேசா - உந்தும்." —முருகேசர். 87.

862. அன்பிலன் ஆன்ற துணைஇலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— அன்பு இலன் - ஒருவன் தன்சுற்றத்தின்மேல் அன்பு இலன், ஆன்ற துணை இலன் - அதுவேயன்றி வலிய துணையிலன், தான்

துவ்வான் - அதன்மேல் தான் வலியிலன், ஏதிலான் துப்பு என் பரியும் - அப்பெற்றியான் மேல்வந்த பகைவன் வலியினை யாங்ஙனம் தொலைக்கும்.

சுற்றமும் இருவகைத்துணையும் தன்வலியும் இலனாகலின், அவன் மேல் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையாது என்பதாம். துவ்வான் - துவ்வினைச் செய்யான்.

மணக்:— சுற்றத்தார்மாட்டு அன்புறுதலும் இலன்; வேற்றரசராகிய வலிய துணையும் இலன்; ஆதலான், தான் வலியிலன்; இப்பெற்றிப்பட்டவன் மேல் வந்த பகைவன் வலியை யாங்ஙனம் தொலைப்பன்? எ - று.

பரிப்:— என்பரியும் என்பது இகழ்ச்சிக் குறிப்பு. இம் மூன்றும் இல்லாதவன் வெல்லமாட்டான் என்றது.

பரிதி:— எல்லாரிடத்தும் பகையுள்ளவன்; தனக்கு உதவியும் இல்லாதவன்; இவன் கொடையும் அறியானாகில் மாற்றாரை எப்படி வெல்வன்? எ - று.

காளிங்:— பகைகொளின் அல்லது யாவர்மாட்டும் அன்பிலன்: மற்றும் தனக்கு அமைந்த துணைவலியிலன்: பின்னும் தான் ஒன்றுக்கு ஓர் துப்பிலாதான் யாவன்? அவன் என்பினையும் அரியும் ஏதிலான் கைக் கருவி எ - று.

ஏதிலான் துப்பு என்பது பகைவன் படைக்கலம்.

இனி மற்று இதன் பின்னரே ஒருவர்க்குப் பகைமை நாடவேண்டிற்று ஆயின் அப்பகைத்திறம் தெரிந்து தமக்கு வாய்ப்பச்செய்ய வேண்டுமதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

குறிப்பு:

ஏதிலான்துப்பு என்பு அரியும் எனக்கொண்டு பகைவன் படைக்கலம் இவன் எலும்பைவெட்டும் எனப்பொருள் காண்பவர் காளிங்கர். என் பரியும் எனக்கொண்டு பகைவலியை எங்ஙனம் நீக்கும் என்பர் பரிமேலழகர் பரிப்பெருமாள் முதலியோர்.

—தொகுப்பாசிரியர்.

863. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— அஞ்சும் - ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாநிற்கும், அறியான் - அறியவேண்டுமவற்றை அறியான், அமைவு இலன் - பிறரோடு பொருத்தம் இலன், ஈகலான் - இவற்றின்மேலும் யாவர்மாட்டும் இவறன்மாலையன், பகைக்குத் தஞ்சம் எளியன் - இப்பெற்றியான் பகைவர்க்கு மிக எளியன்.

தஞ்சம் எளியன் என்பன ஒருபொருட்பன்மொழி. இந்நான்கு குற்றமும் உடையான் பகையின்றியும் அழியுமாகலின் தஞ்சம் எளியன் என்றார்.

மணக்:—அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சுவான், பகைவனது வலிமை அறியான், மதியிலன், ஈயமாட்டான்; இப்பெற்றிப்பட்டவன் பகைவர்க்கு மிகவும் எளியன் எ - று.

இஃது இவை நான்குமுடையவன் தோற்கும் என்றது.

பரிதி:— அஞ்சுதல் அறியான், அடக்கமும் அறியான் ஆகில் மாற்றார்க்கு இவனை வெல்லல் எளிது எ - று.

காளிங்:— ஒருவன் தனக்கு எதிர்காணின் அஞ்சுவது செய்யும்: பின் உற்ற வினைக்கண் கட்டும் கழறியும் அறிவது செய்யான்: அன்றியும் தன்னைச் சமைத்துக்கொள்வது ஓர் நிறைவும் இலன்: இதன்மேலும் கொடைக்கடன் அறிந்து தணிப்பதும் செய்யான் யாவன்? அவன் பிறர்க்கு மிகவும் எளியன் பகைமைக்கு எ - று.

தஞ்சம் எளியன் என்றது மிகவும் எளியன் என்றது.

குறிப்பு:

அஞ்சும் - "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை" யாதலின் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சும் என்றார். "தஞ்சக்கிளவி எண்மைப் பொருட்டே" என்பது தொல்காப்பியமாதலின் தஞ்சம் எளியன் ஒரு பொருட்பன்மொழியாய் சிறப்பினின் வழாது மிக எளியன் என்னும் பொருட்டாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

864. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— வெகுளி நீங்கான் - ஒருவன் வெகுளியின் நீங்கான், நிறை இலன் - அதுவேயன்றித் தான் நிறையுடையன் அல்லன், எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது - அவன்மேற்சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கும் எளிது.

நிறை - மறைபிறரறியாமை, வெகுடன் மாலையனுகலானும், மறை வெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியும் அறிந்து சேறல் வேண்டாதாயிற்று. இனி, இனிது என்று பாடம் ஓதி அவன் பகைமை இனிது என்று உரைப்பாரும் உளர்,

மணக்:— வெகுளியினின்றும் நீங்கானய், நிறையுடைமையிலனயின் அவனை வெல்லுதல் எக்காலத்தும் யாவர்க்கும் எளிது எ - று.

இஃது, இவை இரண்டும் உடையவன் எல்லார்க்கும் தோற்கும் என்றது.

பரிதி:— கோபம்விடான் பொறுமை இல்லானுகில் அவனை வெல்லல் யார்க்கும் எளிது எ - று.

காளிங்:— பெரிதும் சினம் தணியானுமாய்த் தன்னை நிரப்பத்தே வைக்கும் நிறைவு இலனும் ஆயின், மற்று அவனெடு பகைமை எல்லாக் காலமும் எவ்விடத்தானும் யாவர்க்காயினும் எளிது எ - று.

865. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. (௫)

உரைப்பகுதி:

பரிமே:— வழி நோக்கான் - ஒருவன் நீதிநூலை ஓதான், வாய்ப்பன செய்யான், - அது விதித்த தொழில்களைச் செய்யான், பழி நோக்கான் - தனக்கு வரும் பழியைப் பாரான், பண்பு இலன் - தான் பண்புடையன் அல்லன், பற்றார்க்கு இனிது - அவன் பகைவர்க்கு அப்பகைமை இனிது.

தொல்லோர் அடிப்பட வழங்கிவந்ததாகலான் வழி என்றும், தப்பாது பயன்படுதலின் வாய்ப்பன என்றும், இக்குற்றங்களுடையான் தானே அழிதலின் பற்றார்க்கு இனிது என்றும் கூறினர்.

மணக்:— ஒருவினை செய்யத்தொடங்குங்கால் பின் வருவன பாரான், பயன்படுவனவற்றைச் செய்யான், அதனால் உறும் பழியைப் பாரான், குணம் இலன்; இவன் பகைமை பகைவர்க்கு இனிதாம் எ - று.

இஃது இவன் பகைமையால், பகைவர்க்கு இனிமை உண்டாம் என்றது.

பரிப்:— இவை ஐந்தினாலும் தான் திருந்தவேண்டும் என்று கூறப்பட்டது.

பரிதி:— ஆகிறவழியான் உலகம் பொருந்தின காரியம் செய்யான்; அபகீர்த்தியும் பாரான்; பண்பில்லாதான் ஆகில் அவனை வெல்லுதற்கு மாற்றாருக்குப் பிரியம் எ - று.

காளிங்:— நூல் நெறி ஆராய்ந்து பாரானுமாய், மற்று அதனாலே வாய்ப்புடைக்கருமங்கள் செய்யானுமாய் மற்று, இவைசெய்தார் பிறர் பழிக்கும் பழித்துரை பாரானுமாய், மற்று உலகவழக்கம் ஆகிய மரபு இலனும் ஆயின், அவன்பகை பகைவர்க்குச் சால இனிதாம் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

“நால்வகையும் இல்லாரை நாடாள ஒட்டுவரோ
சேனுகனும் கோவைத் தினகரா - நூல்வாய்.” —தினகர. 91.

“ஐங்கரனென் றோரா அரக்கன் தலைமோதிச்
செங்கரங்கள் நொந்தான் சிவசிவா - அங்கவ்.” —சிவசிவ. 87.

“சித்திரசே னன்கையில் சிக்கினன் மன்னவர்மன்
இத்தரணி போற்றும் இரங்கேசா - சுத்த.” —இரங். 87.

குறிப்பு:

வழி - நீதிநூலிற் சொல்லப்பெற்றநெறி என்பது பரிமேலழகர், காளிங்கர் உரை. தான் தொடங்கும் வினை நன்மைக்கோ அல்லது தீமைக்கோ வழியாயிருத்தலை நோக்கான் என்பது பரிப்பெருமாள் உரை.

—தொகுப்பாசிரியர்.

866. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— காணாச் சினத்தான் - தன்னையும் பிறரையும் தான் அறியாமைக்கு ஏதுவாகிய வெகுளியுடையான் யாவன், கழி பெருங் காமத்தான் - மேன்மேல் வளராநின்ற மிக்க காமத்தையுடையான் யாவன், பேணாமை பேணப்படும் - அவரது பகைமை விரும்பிக் கொள்ளப்படும்.

காணாச் சினம் என்பது விகாரமாயிற்று. முன்னோனுக்கு யாவரும் பகையாகலானும், ஏனோனுக்குக் காரியம் தோன்றாமையானும், தாமே அழிவர் என்பதுபற்றி, இவர் பேணாமை பேணப்படும் என்றார்.

மணக்:— மீண்டு பாராத சினத்தனுமாய் மிகப்பெருகிய காமத்தனுமாகியவன் பகை விரும்பப்படும் எ - று.

இஃது இவையுடையார் நட்டோரிலராதலால், இவரிடத்துப் பகை கொள்ளலாம் என்றது.

பரிப்:— காணாச்சினம் என்றது மேல் கூறிய வெகுட்சியின் மிகுதிமை. இவை உடையார் நட்டோர் இலர் ஆவார் ஆதலால் பகை கோடல் ஆம் என்றது.

பரிதி:— அளவுபடாத கோபத்தை உள்ளவன் மோகாக்கினி உள்ளவன் ஆரிடத்திலும் உதாசீனம் உள்ளவன் சடுதியிலே கெடுதல் தப்பாது எ - று.

காளிங்:— ஈண்டு இதுக்குத் தகாது என்று நோக்காது செய்யும் சினத்தை உடையோனுமாய் மிக்கபெரும் காமத்தை உடையோனுமாய், நெறிப்பட்டு வருவன ஒழியப் பேணாமை ஆகிய நெறிகெட வரூஉம் தனம் முதலியவற்றைக் காமித்துச் சொல்வோனுமாய் இதனால் பகையை விரும்பிக் கைக் கொள்ளப்படும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"வலியார் பகைகொள் ளேல்சுற்றம் வலிகள் பொருள்நட் பேபடையின்
மெலியார் அச்சம் அறியாமை மேவாத் தன்மை கொடையின்மை

நலியா வெகுளி மறையின்மை நனியாம் காமம் கல்லாமை
ஒலியார் பழிநோக் காமைமறு வுடையார் இவர்மேல் பகையுறுக."
—விநா. அரசி. 133.

குறிப்பு:

கோபம் வந்தால், செய்வன தவிர்வன, தன்னவர் பிறர், நன்மை தீமை அறியமாட்டாமையின் காணுச்சினம் என்றார். கையகத்துவைத்த உணவுபோல வெற்றிதப்பாது ஆகலின் இவன் பகைமை விரும்பிக்கொள்ளப்பெறும் என்றார்.
—தொகுப்பாசிரியர்.

867. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— அடுத்து இருந்து மாணாத செய்வான் பகை - வினையைத் தொடங்கியிருந்து அதற்கு ஏலாதன செய்வான் பகைமையை, கொடுத்தும் கொளல் மன்ற வேண்டும் - சிலபொருள் அழியக்கொடுத்தாயினும் கோடல் ஒருதலையாக வேண்டும்.

ஏலாதன மெலியனாய் வைத்துத் துணிதலும், வலியனாய் வைத்துத் தணிதலும் முதலாயின. அப்பொழுது அதனால் சிலபொருள் அழியினும் பின் பலபொருள் எய்தற்கு ஐயமின்மையின், கொளல்வேண்டும்மன்ற என்றார். இவை ஆறுபாட்டானும் அது சிறப்புவகையால் கூறப்பட்டது.

மணக்:— பகையை உற்றிருந்தும் மாட்சிமையில்லாதன செய்யுமவன் பகையினை, துணிந்து ஒன்றனைக் கொடுத்தும் கொள்ளல்வேண்டும் எ - று.

மாணாதசெய்தலாவது பகைக்காவன செய்யாது பிறிது செயல். இஃது இவன் பகைசெய்யமாட்டானாதலால், அப்பகை கோடலாமென்றது.

பரிதி:— அடுத்திருந்தும் புல்லறிவினாலே மாறுபாடு செய்வான் பகையை வெற்றி கொள்ளவேணும் எ - று.

காளிங்:— தமக்குச் சிறந்தது யாதானும் கொடுத்தும் கோடல் வேண்டும் என்றது யாதினை எனின் பயில மண்டித்திருந்து தானே தனக்கு இன்னாதவற்றைச் செய்வானது பகையினை எ - று.

868. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்(கு)
இனனிலனாம் ஏமாப் புடைத்து (அ)

உரைப்பகுதி :

பரிமே:— குணன் இலனாய்க் குற்றம் பலவாயின் இனன் இலனாம் - ஒருவன் குணமொன்றும் இலனாய் உடைய குற்றம் பலவாயவழி, அவன் துணையிலனாம், மாற்றார்க்கு ஏமாப்பு உடைத்து - அவ்விலனாதல் தானே அவன் பகைவர்க்குத் துணையாதலை உடைத்து.

குணம் - இறைமாட்சியுள் சொல்லியன. குற்றம் - இவ்வதிகாரத்துச் சொல்லியனவும் மற்றும் அத்தன்மையனவும். துணை - சுற்றம், நட்பு, பொருள், படை முதலாயின. பகைவர்க்கு இவற்றான் உளதாம் பயன் தானே உளதாமாகலின், ஏமாப்புடைத்து என்றார். இலனாய் என்னும் செய்தெனெச்சம் உடைய என வந்த பெயரெச்சக் குறிப்புக்கொண்டது.

மணக்:— குணங்களுள் யாதும் இலனாய்க் குற்றங்கள் பல உடையனாயின், அவன் துணையிலனாம்; அது மாற்றார்க்கு ஏமமாதலை உடைத்தாம் எ - று.

பரிப்:— அன்றியும் மாற்றார்க்கு இவன் துணையிலன் என்று மனத்தின்கண் கொள்ளும்வலி உடைத்தாம் என்றும் ஆம். மேல் பகைவர் மாட்டுக் குற்றம் பெருகின், அவரை வெல்லலாம் என்றார்: இக் குற்றம் தம்மாட்டும் உளதாயின் வெல்ல ஒண்ணாது என்றது.

பரிதி:— நற்குணமில்லாதவனாய்க் குற்றம் பலவும் உள்ளவனாகில் மாற்றார்க்கு இன்பமில்லாதவனாகில் அவர்க்கு மகிழ்ச்சி உண்டாம் எ - று.

காளிங்:— தன்வயின் குணம் என்பது ஒன்றும் இலனாய்க் குற்றம் பலஉடையனாய் இருப்பின் அவனொடு மாறுபாடு கொள்ளக் கருதுகின்ற மாற்றார்கட்கு இணை இல்லாததோர் சேம உறுதியைப் பெரிதும் உடைத்து எ - று.

இனனிலன் என்பது இணை இலன் என்றது.

869. செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின் - நீதியை அறிதலில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால், செறுவார்க்குச் சேண் இன்பம் இகவா - அவரைச் செறுவார்க்கு உயர்ந்த இன்பங்கள் நீங்கா.

உபாயம் அறிதலும் அறிந்தால் செய்துமுடிக்கும் திண்மையும் இல்லாதாரே பகைவராதல் கூடாமையின் பெறின் என்றும், அவரை அறிந்து மேற்சென்றபொழுதே பகையின்மையும் செல்வமும் ஒருங்கே எய்தலின் சேணுடை இன்பங்கள் இகவா என்றும் கூறினர்.

மணக்:— அறிவில்லாத அச்சமுடைய பகைவரைப்பெறின், அவரைச் செறுவார்க்கு இன்பம் தூரப்போகாது, அணித்தாக வரும் எ-று.

அறிவு - காரியவறிவு.

பரிப்:— இவை இரண்டும் ஒருங்கு உடையார் வெல்லமாட்டார் ஆதலால் பகை கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

பரிதி:— அடக்கமில்லான் அச்சமில்லான் ஆகில் மாற்றார்க்கு இவனை வெல்ல நாட்செல்லாது எ - று.

காளிங்:— வந்து அடர்க்க நினைவார்க்குத் தம்மைச்சேண் நீங்கா இன்பம் ஆனவை எவ்விடத்து எனின் முன் தீங்கு தெரிந்து அறிவு இல்லாதவருமாவோர் எதிர் காணின் உள்நடுக்கம் உடைய பகைவரைப் பெறின் அவ்விடத்து எ - று.

சேண் இகவா இன்பம் என்பது நீங்கா இன்பம் என்றது.

ஒப்புமைப்பகுதி:

"முன்னலிந் தாற்ற முரண்கொண் டெழுந்தாரைப்
பின்னலிதும் என்றுரைத்தல் பேதைமையே - பின்னின்று
காம்பன்ன தோளி கலங்கக் கடித்தோடும்
பாம்புபற் கொள்வாரோ இல்."

—பழ-நா.

870. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி. (௮0)

உரைப்பகுதி:

பரிமே:— கல்லான் வெகுளும் சிறுபொருள் ஒல்லானை - நீதி நூலைக் கல்லாதானொடு பகைத்தலான் வரும் எளியபொருளை மேவாதானை, எஞ்ஞான்றும் ஒளி ஒல்லாது - எஞ்ஞான்றும் புகழ் மேவாது.

சிறுபொருள் - முயற்சி சிறிதாய பொருள். நீதியறியாதானை வேறல் எளிதாயிருக்கவும் அது மாட்டாதானை வெற்றியான் வரும் புகழ் கூடாது என்பதாம்; ஆகவே, இச்சிறிய முயற்சியான் பெரிய பயன் எய்துக என்றவாறாயிற்று. இதற்குப் பிறரெல்லாம் அதிகாரத்தோடு மாறுதன்மேலும் ஓர் பொருட்டொடர்புபடாமல் உரைத்தார். இவை மூன்று பாட்டானும் அதனினாய பயன் கூறப்பட்டது.

மணக்:— கல்லாதானுமாய், வெகுளியுடையானுமாய், சிறுபொருளாளனுமாகிய பகைவனை எல்லாநாளும் ஒளி பொருந்தாது எ - று.

பரிப்:— மேல் தம்மைப் பாதுகாவாத எளியாரைப் பகைகொள்ளலாம் என்றார்: அவர் எத்தன்மையர் என்றார்க்கு அவரது இலக்கணம் கூறுவார் மூற்பட இவை மூன்றும் உடையார்க்கு விளக்கம் உண்டாகாது ஆகலின் அவரோடு பகைகொள்ளலாம் என்றார்.

பரிதி:— கல்வியில்லாதவன், வெகுளி உள்ளவன், அற்பகுணன், இவர்களைக் கீர்த்தி வேண்டியிராது எ - று.

காளிங்:— சிறந்தநூல்களைக் கல்லாதானுமாய்க் கண்டாரோடு எல்லாம் வெகுளுவானுமாய் எஞ்ஞான்றும் இழிபொருள் விரும்பி இருப்பானை மேவமாட்டாது புகழ் எ - று.

சிறுபொருள் என்பது இழிவுபொருள். ஒளி என்பது புகழ்.

குறிப்பு:

சிறுபொருள் - இலேசாக முயற்சியின்றியே கிடைக்கும் பொருள்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— வலியார்க்கு, அன்பிலன், அஞ்சும், நீங்கான், வழிநோக்கான், காணாச்சினத்தான், கொடுத்தும், குணனிலனாய், செறுவார்க்கு, கல்லான்.

மணக்:— வலியார்க்கு, கல்லான், செறுவார்க்கு, காணாச்சினத்தான் குணனிலனாய், அன்பிலன், நீங்கான், அஞ்சும், வழிநோக்கான்.

பரிதி:— குணனிலனாய், வழிநோக்கான், அஞ்சும், காணாச்சினத்தான், கொடுத்தும், நீங்கான், செறுவார்க்கு, அன்பிலன், கல்லான், வலியார்க்கு.

காளிங்:— குணனிலனாய், வலியார்க்கு, கல்லான், செறுவார்க்கு, காணாச்சினத்தான், வழிநோக்கான், நீங்கான், கொடுத்தும், அஞ்சும், அன்பிலன்.

88. பகைத்திறம்தெரிதல்.

தொகுப்புரை :

[பண்பற்றபகையை விளையாட்டிற்காகவாவது விரும்புதலாகாது. போர் வீரனதுபகை கொண்டாலும் புலவன்பகை கொள்ளலாகாது. தனியனாயிருந்தும் பலரோடு பகைப்பவன் பித்துப்பிடித்தவனினும் பெரியமுட்டாள். வேண்டியகாலத்தில் பகைவனையும் நட்பாக்கிக்கொள்ளும் தகுதியுடையவனிடத்திலே உலகம் தங்கியுள்ளது. தனக்கோ துணையில்லை; பகையோ இரண்டு; ஆதலால் பகைஇரண்டனுள், ஒன்றைத் தனக்குத் துணையாகக்கொண்டு தப்புக. உள்ளிருந்தே பகைசெய்பவனை முன்னர்த் தெளிந்திருந்தாலும், தெளியாமலே சேர்த்துக்கொண்டிருந்தாலும் தனக்குத் தோல்விவந்த காலத்துப் பிரித்தலாகாது. கொஞ்சநாள் வைத்துப்பார்க்க. நாம் படுகின்ற துன்பங்களைத் தானே தெரிந்துகொள்ளாத நட்பாளர்க்குத் தாம் படுந்துன்பங்களைச் சொல்லுதல்கூடாது. நம்முடைய குறைகளைப் பகைவர்களிடமும் சொல்லுதல் கூடாது. போர்செய்யும் வகைகளையறிந்து, அதற்குத்தக்கவாறு தன்னைப் பெருக்கிக்கொண்டு, தகுந்தவாறு தன்னையும் காத்துக்கொள்ளவே பகைவர் செருக்கு பட்டுப்போகும். முள்மரம் முளைத்தால் அதனை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும். வயிரங்கொண்டால் களையும் கையை மிகவருத்தும். பகைத்தவர் செருக்கை யடக்க வேண்டியிருக்க அடக்காத அரசர் பின் மூச்சுவிடுங்காலம் வரை கூடப்பிழைத்திருக்க மாட்டார்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது மாறாத பகையை ஆக்குதல் குற்றமும், முன் ஆகின்ற பகையுள் நட்பாக்கற்பாலதும், நொதுமலாக்கற்பாலதும், அவற்றின்கண் செய்வதும், ஏனைக் களைதற்பால்தன்கண் செய்வனவும், களையும் பருவமும், களையாக்கால்படும் இழுக்கும் என்று இத்திறங்களை ஆராய்தல். இரட்டுறமொழிதல் என்பதனால் பகையது திறமும் பகையிடத்தாக்கும் திறமும் என விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாறாப் பகையவாகலின், இது பகைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— பகைத்திறந் தெரிதலாவது பகையின்கண் செய்யுந் திறமாராய்தல், மேல் பகைகொண்டால் வெல்வாரையும் தோற்பாரையும் கூறினார். இனி அப்பகைவர்மாட்டுச் செய்யுந்திறம் எண்ணிச் செய்ய வேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

871. பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. (க)

உரைப்பகுதி :

பரிமே:— பகை என்னும் பண்பு இலதனை - பகை என்று சொல்லப்படும் தீமை பயப்பதனை, ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று - ஒருவன் விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புதல் இயற்கைத் தன்று நீதிநூல்.

மாணாதபகையை ஆக்கிக்கோடல் எவ்வாற்றானும் தீமையே பயத்தலின் பண்பிலது என்றும், அதனை விளையாட்டின்கண் வேண்டினும் செற்றமே விளைந்து மெய்யாமாகலின் நகையேயும் என்றும், வேண்டாமை தொல்லையோரது அணிவு என்பார் நீதிநூல் மேல்வைத்தும் கூறினர். அப்பெயர் அவாய்நிலையான் வந்தது.

மணக்:— பகை என்று சொல்லப்படுகின்ற குணமில்லாததனை, ஒருவன் விளையாட்டின்கண்ணும் விரும்பற்பாலதன்று எ - று.

இஃது எவ்விடத்தும் பகைகோடல் தீது என்றது.

பரிதி:— பண்பிலாத பகையை அதனாலே சில வகை உண்டாகிலும் வேண்டாம் எ - று.

காளிங்:— பகைமை என்று சொல்லப்படும் நெறி இல்லதனை ஒரு மக்கட் பண்புடையோன் தான் ஒருவரோடு நகையாடியும் செய்ய வேண்டற்பாலது அன்று: எனவே என்றும் குறிக்கொண்டு இது செய்யற்க என்பது பொருளாயிற்று எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

" விளையாடிக் கீசனொடு வெல்வதற்குச் செல்லும்
இறையோனும் பின்வெகுளும் என்றால் - குறையாம்."
—முதுமொழி. 135.

" ஐங்கரனைக் கண்டுநகைத் தாவணிநா ளாந்திதியில்
திங்கள்பகை யானன் சிவசிவா - எங்கும்." —சிவசிவ. 88.

குறிப்பு:

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் ஆதலின் அங்ஙனமாகாத பகை பண்பிலதாயிற்று. "விளையாட்டுச்சண்டை வினையாம்" ஆதலின் வேண்டற்பாற்றன்று என்றார்.

—தொகுப்பாசிரியர்.

872. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— வில் ஏர் உழவர் பகை கொளினும் - ஒருவன் வில்லை ஏராகவுடைய உழவரோடு பகைகொண்டானாயினும், சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க - சொல்லை ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக.

சொல் ஆகுபெயராய் நீதிநூல்மேல் நின்றது. வீரம் சூழ்ச்சி என்னும் ஆற்றல்களுள் வீரமேயுடையாரோடு பகைகொண்டால் கேடு வருதல் ஒருதலையன்று; வந்ததாயினும் தனக்கேயாம்; ஏனைச் சூழ்ச்சியுடையாரோடாயின் தன் வழியின் உள்ளார்க்கும் தப்பாது வருதலின், அது கொள்ளினும் இது கொள்ளற்க என்றார். உம்மையான் அதுவும் ஆகாமை பெறுதும். இரண்டும் உடையாரோடு கொள்ளலாகாமை சொல்ல வேண்டாவாயிற்று. உருவகவிசேடம்.

மணக்:— வில்லை ஏராக உடைய பகைவரோடு பகைகொளினும், சொல்லை ஏராக உடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக எ - று.

இஃது அரசரோடு பகைகொள்ளினும் அமைச்சரோடு பகை கொள்ளலாகாது என்றது.

பரிதி:— வில்லாட்களுடனே பகை கொள்ளினும் சொல்லவல்லவனுடனே பகைகொள்ளக் கடவான் அல்லன் எ - று.

காளிங்:— நட்புக் கொள்ளாது வில் வேந்தருடன் ஒருவர் பகை கொளினும் கொள்ளற்க: யாது எனின், கற்று உணர்ந்த சான்றோரோடு பகை எ - று.

வில்லேருழவர் என்பது வில்வேந்தர் என்பது. சொல்லேருழவர் என்பது கற்று உணர்ந்த சான்றோர் என்றது.

மேற்கோள்பகுதி:

மயிலை:— உழவு என்பது உடம்பொடு கூடிய உயிர்த்தொழிற் பண்பு என்பதற்கு மேற்கோள். (நன் 432.)

பெருந்:— 'இது வில்லினை ஏராகவுடைய உழவர் என்றும், சொல்லினை ஏராகவுடைய உழவர் என்றும் உருவகமாக்கி இருவரையும் பொருட்டெளிவால் உவமித்தலினால் உருவகவுவமை' என்பர். (வீர. 177.)

காரி:— உவமையுள் ஒருவகைக்கு மேற்கோள். (மாற. 122.)

சுப்பிர:— ஏது உருவகத்திற்கு மேற்கோள். (தண்டி. 39. சூ.)

ஒப்புமைப்பகுதி:

"வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு
வில்லம்பின் சொல்லம்பே மேலதிகம் — வில்லம்பு
பட்டதடா என்மார்பில் பாண்டியா நின்குலத்தைச்
சுட்டதடா என்வாயிற் சொல்." —தனிப்.

"பாரம் பரிக்க வேண்டினுறு பகைநட் பாகக் கொண்டொழுகல்
வீரம் தணியா ரொடுபொரினும் விதிநூ லினரோடு இகலாமை."
—விநா. அரசி. 134.

முதுமொழிவெண்பாக்கள்:

"நந்திக் கலம்பகத்தான் மாண்டகதை நாடறியும்
சுந்தரஞ்சேர் தென்குளத்தூர்ச் சோமேசா—சந்ததமும்."
—சோமேசர் - 88.

"பண்ணார் பசுந்தமிழ்ச்சம் பந்தரெதிர் வந்தமணர்
எண்ணா யிரம்கழுவில் ஏறினார் — ஒண்ணாது". —திருத். 37.

"ஆர்த்தொரசன்பர் புத்தநந்தி யைச்செகுத்தார் சம்பந்த
மூர்த்திதிரு வாக்கான் முருகேசா - சீர்த்திமிகு." —முருகேசர். 88.

குறிப்பு :

வீரர்பகை எதிர்த்துப் போராடும் ஆதலின் அதினின்று தப்பியுய்யலாம். புலவர்பகை இருந்த இடம் பெயராதேஎல்லாரையும் இயக்குவிப்பது ஆதலின் தப்பவே முடியாது ஆதலின் கொள்ளற்க என்றார்.

கொள்ளினும் என்ற உம்மை எதிர்மறை; யாரிடமும் பகைகொள்ளலாகாது என்பது விளக்கலின்.

—தொகுப்பாசிரியர்.

873. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். (௩)

உரைப்பகுதி:

பரிமே:— தமியனாய்ப் பல்லார் பகை கொள்பவன் - தான் தனியனாய்வைத்துப் பலரோடு பகைகொள்வான், ஏமுற்றவரினும் ஏழை - பித்துற்றாரினும் அறிவிலன்.

தனிமை - சுற்றம், நட்பு, படை முதலிய இன்மை. மயக்கத்தால் ஒப்பாராயினும் ஏமுற்றவர் அதனால் தீங்கு எய்தாமையின், தீங்குஎய்துதலும் உடைய இவனை அவரினும் ஏழை என்றார். தீங்காவது, துணையுள்வழியும் வேறல் ஐயமாயிருக்க அஃது இன்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறுவேறு பொருதற்கண்ணும் ஒருங்கு பொருதற்கண்ணும் அழிந்தே விடுதல். இவை மூன்றுபாட்டானும் பகைகோடற்குற்றம் பொதுவினும் சிறப்பினும் கூறப்பட்டது.

மணக்:— பித்து உற்றவரினும் அறிவிலன்; தனியனாயிருந்து பலரோடு பகை கொள்ளுமவன் எ - று.

இது பலரோடும் பகைகொள்ளலாகாது என்றது.

பரிப்:— இருவரோடு பகை கொள்ளுதல் நீதியன்றாகப் பலரோடு பகை கொண்டவன் பித்தனோடு ஒக்கும் என்றவாறாயிற்று.

பரிதி:— ஏமுற்று ஏழையாய்த்திரிவன், எல்லாருடனும் பகை கொள்பவன் எ - று.

காளிங்:— பேய்கொண்டவரினும் சாலப் பித்தன்: யாவன் எனின் இங்ஙனம் தான் ஒருவனாய் இருந்து மற்று இது நமக்கு வாயாது என்று கருதாது பலரொடும் தான் பகை கொள்ளக் கருதுபவன் எ - று:

ஏமுற்றவன் என்பது மதிமயக்கு உற்றவன் என்றது:

குறிப்பு:

'பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே' என்பதாலும் பலரோடு பகைத்தலின் தீமையை ஈண்டுக்கருதுக. ஏமம் - பைத்தியம்.

—தொகுப்பாசிரியர்.

874. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு. (சு)

உரைப்பகுதி:

பரிமே:— பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் - வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச்செய்துகொண்டு ஒழுகும் இயல்பினையுடைய அரசனது பெருமையுள்ளே, தங்கிற்று உலகு - அடங்கிற்று இவ்வுலகு.

வேண்டியவழி என்பது ஆக்கத்தான் வந்தது. வேறுபடுத்தல் - பகைநிலைமையின் நீக்குதல். ஒழுகல் - நீதிவழி ஒழுகல். பெருமை - பொருள் படை என இருவகைத்தாய ஆற்றல். அதன்வழித்தாதற்கு எஞ்ஞான்றும் திரிபு இன்மையின், அத்துணிவுபற்றித் தங்கிற்று என்றார்.

மணக்:— பகைவரை நட்புபோலக் கொண்டு ஒழுகவல்ல பண்புடையவன் பெருமையின்கீழே உலகம் தங்கும் எ - று.

இது பகை கொள்ளாமையால் வரும் பயன் கூறிற்று.

பரிதி:— பகைவரைத் தன் உறவாகக் கொண்டு நடப்பானாகில் அவன் குடைக்கீழ் உலகம் அடங்கும் எ - று.

காளிங்:— பகை தானேவந்து மென்மை செய்யுங்காலத்து இரங்கிப் பின் தான் ஒருவன் பகைமை செய்யாது நட்பாகக்கொண்டு ஒழுகும் மரபுடையாளன் யாவன்? மற்று அவனது நெறிமைக்கண்ணே நிலை நின்றது ஒழுக்கம் எ - று.

உலகம் என்பது ஒழுக்கம்.

முதுமொழிவெண்பாக்கள்:

"வேற்றுப் பொருள்குறிக்க வேண்டா சமர்க்களத்தில்
சேற்றுக் கமலம் தினகரா - மாற்றிப்." —தினகர. 92.

குறிப்பு:

இக்குறள் பகைவனை நட்பாக்கி ஒழுகவேண்டிய இன்றியமையாமை தனக்குவேண்டியகாலத்து ஒழுகுதலைக்கூறிற்று. 'பகைநட்பாங்காலம் வருங்கால்' என்ற குறள், பகைவன் தன்பகைத்தன்மை மாறி நட்பாங்காலம் வரின் என்றது. இவற்றுள் வேற்றுமை தன்காரியம் முடிய, தானாகத் தழுவிக்கொண்டால் பகைவன் ஐயப்படாத வண்ணம் பழகி வசப்படுத்தவேண்டும்; அவனாகவரின் முகநட்டு, அகத்தான்நட்டலை அகற்றவேண்டும் என்றதாம். —தொகுப்பாசிரியர்.

875. தன்துணை இன்றால் பகைஇரண்டால் தானொருவன்
இன்துணையாக் கொள்கவற் றின் ஒன்று. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— தன் துணை இன்று - தனக்கு உதவும் துணையோ எனின் இல்லை, பகை இரண்டு - நலிவுசெய்யும் பகையோ எனின் இரண்டு, ஒருவன் தான் அவற்றின் ஒன்று இன்துணையாக் கொள்க - அங்ஙனமாய் நின்றவழி ஒருவனாகிய தான் அப்பகை இரண்டனுள் பொருந்தியது ஒன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்துகொள்க.

பொருந்தியது - ஏனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது - அவ்வெல்லும் பொழுது. திரிபின்றாகச் செய்துகொள்க என்பார், இன் துணையா என்றார். ஆல்கள் அசை இவை இரண்டு பாட்டானும் நட்பாக் கற்பாலது கூறப்பட்டது.

மணக்:— பகை இரண்டாய், தான் ஒருவனாய், தனக்குத் துணையும் இலனாயின், அப்பகை இரண்டினுள் ஒன்றை இனிய துணையாகச் செய்து கொள்க எ - று.

இஃது இருவரோடு பகை கொள்ளலாகாது என்றது.

பரிதி:— தனக்குத் துணையில்லாதபோது தன் மாற்றாற்கு இரண்டு பகை உண்டாகில் அவர்களில் பெலவானானவனைத் தனக்குத் துணையாகக் கொள்வர் எ - று.

காளிங்:— தன்னொடு நட்பாகிய துணை என்பது ஒன்று இலதாயின், தனக்குப் பகை இரண்டு ஆயின், அன்னன் ஆகிய ஒருவன் தான் இனி யாதோ செயற்பாலது எனின், அப்பகை இரண்டின் ஒன்றை யாதானும் ஒருவாற்றான் தனக்கு இனிய துணையாகப் பிரித்துக்கொள்க எ - று.

ஒப்புமைப்பகுதி :

“ தன்னலி கிற்பான் தலைவரின் தானவற்குப்
பின்னலி வானைப் பெறல்வேண்டும் - என்னானும்
வாய்முன்ன தாக வலிப்பினும் போகாதே
நாய்பின்ன தாகத் தகர்.” —பழ. நா.

“ சாரும் துணைஇற் பினும்பலரைப் பகையாக் காமைத் தனிமையுறின்
நேரும் துணையா இருவகையுள் நீக்கி ஒன்றை உறவாக்கல்”
—விநா. அரசி. 134.

குறிப்பு:

பகையிரண்டு என்பது பன்மைப் பொருளைக் காட்டிற்று. அன்றி மணக்குடவர் இருவரைப் பகைகொள்ளலாகாது என்று கூறுவர்.

—தொகுப்பாசிரியர்.

876. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— தேறினும் தேறாவிடினும் - பகைவனை முன் தெளிந்தாயினும் தெளிந்திலனாயினும், அழிவின்கண் தேறான் பகான் விடல் - தனக்குப் புறத்தொருவினையால் தாழ்வுவந்துழிக் கூடாது நீக்காது இடையே விட்டுவைக்க.

முன் தெளிந்தானாயினும் அப்பொழுது கூடாதொழிக என்றது, உள்ளாய் நின்று கெடுத்தல் நோக்கி. தெளிந்திலனாயினும் அப்பொழுது நீக்காதொழிக என்றது, அவ்வழிவிற்குத் துணையாதல் நோக்கி. இதனான் நொதுமலாக்கற்பாலது கூறப்பட்டது.

மணக்:— பகைவனை ஆக்கமுள்ள காலத்து நட்டோன் என்று தெளியலுமாம்; பகைவன் என்று ஐயப்படலுமாம்; அழிவுவந்தவிடத்துத் தெளிவதும் செய்யாது நீக்குவதும் செய்யாது ஒழுகுக எ - று.

இது பகையாயினார்மாட்டும் அழிவின்கண் செய்வதோரியல்பு கூறிற்று.

பரிதி:— அறிந்தும் அறியான்; அழிந்தபேரைக்கண்டும் அறியான்; புத்தியும் கேளான்; அவனைக் கைவிடுக எ - று.

காளிங்:— பகை என்று தேறினும் தேறாவிடினும் ஒருவர் இடரின்கண் பெரிதும் தேறும் பண்பிலனுமாகித் தம்மைவிட நீங்காதானும் ஆயின், மற்று அவன் திறம்தெரிந்து அவனைக் கைவிடுக: எனவே இவனும் ஒருவர்க்கு உள்ளுறுபகை என்பது பொருளாயிற்று எ - று.

அழிவின்கண் தேறான் என்பது தமக்கு ஓர் அழிவுவந்த இடத்துப் பெரிதும் தேறத் தகானாகி என்றது. பகான் என்பது நீங்கான் என்றது. விடல் என்பது விடுக என்றது.

இனி, மற்று இங்ஙனம் புறத்ததாகிய பகைத்திறம் தெரிந்த பின்னரே உள்ளுறு பகை எழுச்சி உணர்த்தி மற்று இதன் பின்னரே அதன் முதிர்பாகிய உட்பகை உணர்த்துகின்றது மேலையதிகாரம்.

877. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— நொந்தது அறியார்க்கு நோவற்க - நொந்ததனைத் தாமாக அறியாத நட்டார்க்குத் தன்நோவு சொல்லற்க; மென்மை பகைவ ரகத்து மேவற்க - வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்மாட்டு அவ்வலி யின்மையை மேலிட்டுக் கொள்ளற்க.

நோ என்னும் முதனிலைத்தொழிற்பெயர் ஈண்டு, அது சொல்லு தற்கண் ஆயிற்று. பகைவர்கண் தவிர்வது கூறுவார், நட்டார்கண் தவிர்வதும் உடன் கூறினார். இதனால் அவ்விருபகுதிக்கண்ணும் செய்வது கூறப்பட்டது.

மணக்:— தாம் வருத்தமுற்றதனை அறியாதார்க்கு வருத்த முற்றுச் சொல்லாது ஒழிக; அதுபோலப் பகைவரிடத்துத் தமது மென்மை யைத் தோற்றுவித்தலை விரும்பாதொழிக எ - று.

இது பகைவர்மாட்டுத் தமது மென்மையைத் தோற்றுவியாது ஒழிக என்றது.

பரிதி:— தன் நோவு அறியாத பேருக்குத் தன் நோக்காடு சொல்லவேண்டாம் தன் சத்துருக்களிடத்தும் தான் சொல்லவேண்டாம் எ - று.

காளிங்:— உறுதுயர் கண்டு தாம் பெரிதும் நொந்தால் மற்று அந்நொந்ததனை இவர் எம்பொருட்டு இது செய்தார் என்பதனை மதியா தாற்கு நோவற்க: அன்றியும் பகைவரிடத்து என்றும் தாம் வன்மையோடு இயைய நிற்கும் அத்துணையல்லது அவரொடு தாம் மென்மையோடு இயைய நினையற்க எ - று.

தம் துயர்க்கு ஒருவர் நொந்தது மதியாதாரும் பகைவரின் ஒரு கூற்றரே வேறு அல்லர் என்பதனால் இதனை எடுத்து ஓதினார் என அறிக: என்னை, காஞ்சிரம்பிஞ்சும் காஞ்சிரமரமும் இத்துணை அல்லது பிறி தொன்று ஆகாதாற் போல.

குறிப்பு :

நொந்தது அறியார் என்பதற்கு முன்பகைவராயிருந்து பின்நட்பாயும், நட்பாளன் - நட்டாராயிருந்து உட்பகை காரணமாக அயலாராகியும் நோவறியாதவர்கள் என்று உரைப்பாரும் உளர். எருத்துப்புண் காகமறியாதவாறு களியராய்ப் பிறர்நோவறியாத நட்பினரும் உளரன்றே அவர்எனவும், என்றும் கூடாது சோர்வே பார்த்திருக்கும் பகைவர் எனவும் கருத்துவிளங்க உரைப்பர் பரிமேலழகர். தாம் அவர்க்காக வருந்தியதை அறியாத நட்பினர் பகைவருள் ஒருசாரார் ஆவர் என்பர் காளிங்கர்.

'ஒவ்வும் அற்றே நவ்வலங்கடையே' என வரையறுக்கப்பெற்ற 'நொ'என்னும் குறிலீறு விகாரப்பட்டு நோஎன வருதலையும்''ஏ ஓ எனும்உயிர் ஞகாரத்தில்லை' என்பதனால் தழுவினர்என்க பின்னூலாரும் 'தபநவில் ஐந்தும்' என நெட்டெழுத்து வகையில் 'நோ' என்பதையும், ''நொதுஆம்குறில்'' என நொ என்பதையும் இருபகுதிகளாகவே உரைத்தமை காண்க. எங்ஙனமாயினும் நொ என்பதே நோ என நீண்டு விகாரப் பட்டமை வெளி. ஆதலால் 'நொ என்னும் முதனிலைத் தொழிற்பெயர் நீண்டு, அது சொல்லுதற்கண் ஆயிற்று' என்றபாடம் பார்த்துக் கொள்ளப்பெற்றது. நோநொந்து என்புழியும் இச்சொல்லாட்சி காண்க.

—தொகுப்பாசிரியர்.

878. வகைஅறிந்து தன்செய்து தன்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— வகை அறிந்து தன்செய்து தன்காப்ப - தான் வினை செய்யும்வகையை அறிந்து அது முடித்தற்கு ஏற்பத் தன்னைப் பெருக்கி மறவி புகாமல் தன்னைக்காக்கவே, பகைவர்கண் பட்ட செருக்கு மாயும் - தன் பகைவர்மாட்டு உள்தாய களிப்புக்கெடும்.

வகை வலியனுய்த் தான் எதிரே பொருமாறும், மெலியனுயை அளவில் போர் விலக்குமாறும் முதலாயின. பெருக்கல் - பொருள் படைகளால் பெருகச்செய்தல். களிப்பு - இவற்றுன் வேறும் என்றெண்ணி மகிழ்ந்திருத்தல். இவ்விறுகுதல் அறிந்து தாமே அடங்குவர் என்பதாம். இதனுன் கனைதற்பாலதன்கண் செய்வன கூறப்பட்டது.

மணக்:— வினைசெய்யும் வகையை அறிந்து, தன்னைப்பெருக்கி, தன்னைக்காக்க, பகைவர்மாட்டு உண்டான பெருமிதம் கெடும் எ - று.

இது பகைவரைவெல்லும் திறம் கூறிற்று.

பரிதி:— பகை வெல்லும்வகை யறிந்து தனக்குப் பகையாகிய பகைவற்குப் பகைவனாகிய பெரியோனிடத்திற் சேரில் அந்தப் பகையும் மாயும் எ - று.

காலிங்:— தன்னோடு எதிர்வதன் கூறுபாட்டை அறிந்து மற்று அதற்குத் தக்காங்கு அதனின் மிகத் தன்னைச் சமைத்துக் கொண்டு இங்ஙனம் தன்னைப் பேணிக்கொள்ளவே கெடும்: யாதோ எனின் பகைவர் மாட்டு உளதாகிய மனச்செருக்கு எ - று.

வகை என்பது தன்னொடு மலைந்து எழும் பகைக்குத் தகாது எனின் மிகைப்பட்ட தன்னைச் சமைத்துக்கொண்டு என்றது.

ஒப்புமைப்பகுதி:

"பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே." —புறம். 35 : 32 - 4.

"உற்றதற் கெல்லாம் உரஞ்செய்ய வேண்டுமோ
கற்றறிந்தார் தம்மை வெகுளாமைக் காப்பமையும்
நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும்." —பழ. நா.

879. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— முள் மரம் இளைதாகக் கொல்க - களையவேண்டுவதாய முள்மரத்தை இளைதாய நிலைமைக்கண் களைக; காழ்த்த இடத்துக் களையுநர் கைகொல்லும் - அன்றியே முதிர்ந்த நிலைமைக்கண் களையலுறின் களைவார் கையினை அதுதான் களையும்.

களையப்படுவதாய தம்பகையை அது மெலிதாய காலத்தே களைக அன்றியே வலிதாயகாலத்துக் களையலுறின் தம்மை அதுதான் களையும் என்பது தோன்ற நின்றமையின் இது பிறிதுமொழிதல். இதனால் களையும் பருவம் கூறப்பட்டது.

மணக்:— முள்மரத்தை இளைதாகவே களைக; முற்றினவிடத்து, தன்னைக் களைவார் கையைக் கொல்லுமாதலால் எ - று.

இது பகைவர் வலியராவதன்முன்னே களைதல் வேண்டும் என்றது.

பரிதி:— முள் மரத்தை முளையான உடனே களைக. அல்லது மரம் வளர்ந்தால் கையை வருத்தும் எ - று.

காளிங்:— களையவேண்டின் எத்துணையும் சால இளைதாகவே முள்ளுடை மரத்தினைக் களைக: என் எனின் களையுநரது கையினை வாதிக்கும்: மற்று அது முற்றிய இடத்து: எனவே பற்றார் திறமும் அப்படி என்பது பொருள் எ - று.

மேற்கோள்பகுதி:

சேனா:— தியாரைக் காலத்தால் களைக என்னும் தொடர்மொழி எச்சமாய் நின்ற குறிப்புப்பொருளை வெளிப்படுத்தலால் குறிப்பெச்ச மாயிற்று என்பர். (தொல். சொல். 440.)

நிலைபெற்றபின் களையலுறின் களையலுற்றாரை அவர்தாம் கொல்வர்; அதனால் தியாரை அவர் நிலைபெறாக்காலத்தே களைக என்னும் பொருள் விளங்குதலின் குறிப்பிற்றோன்றலாம் என்பர். (தொல். சொல். 157.)

நச்:— குறிப்பிற்றோன்றலுக்குச் சேனாவரையர் உதாரணம் காட்டியதை மறுத்து, 'தொல்காப்பியர் செய்யுளியலில் (சூ. 206) கூறிய குறிப்பெச்சத்தின் பாற்படும் இக்குறள்' என்பர். (தொல். சொல்.159.)

இடத்து என்னும் ஈற்று வினைஎச்சவாய்பாடு இறந்த காலத்தில் வந்ததற்குக் 'காழ்த்தவிடத்து' என்பது மேற்கோள். (ஷை 231.)

தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும் என்ற சூத்திரத்தில் சேனா வரையரை மறுத்துரைப்பர். (ஷை 440.)

சிவஞான:— இம் மூன்றும் மெய்ஞ்ஞானிக்காகாவிடு: "சிவபோகப் பெருவாழ்வை இழப்பிப்பன ஆகலான் மெய்ஞ்ஞானிக்காகா என்றார். மேன்மேல் முறுகுவனவாகிய இவற்றைத் தோன்றும்பொழுதே தடை யாக்கால் 'களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து' என்னும் முறைமைத் தாய் முடியுமென்பதுபற்றி விடு என ஈண்டும் வலியுறுத்தப்பட்டது. (சிவஞான. சூ. 12. அதி. 2.)

ஒப்புமைப்பகுதி:

"பஞ்சியின் மெல்லி தேனும் பகைசிறி தென்ன வேண்டா
அஞ்சித்தற் காத்தல் வேண்டும் அரும்பொரு ளாக என்றான்."

—சீவக. 1894

"முட்கொள் நச்சு மாமுளை யாகவே
உட்க நீக்கின் உகிரினும் நீக்கலாம்
வட்க நீண்டதன் பின்மழுத் தள்ளினும்
சுட்கொ டாமன்ன யார்களை கிற்பவே.' —சூளா. சீய. 72.

"எரியும் தீத்திரள் எட்டுணை யாயினும்
கரியச் சுட்டிடும் காந்திக் கனலுமேல்
தெரியில் தொல்பகை தான்சிறி தாயினும்
விரியப் பெற்றபின் வென்றிடு கிற்குமே." ...சூளா.

"எதிர்த்த பகையை இளைதாய போழ்தே
கதித்துக் களையின் முதிராதே தீர்த்து
நனிநயப்பச் செய்தவர் நண்பெல்லாம் தீரத்
தனிமரம் காடாத லில்." —பழ. நா.

"சிறியரென் றிகழ்ந்து நொய்வு செய்வன செய்யல்." —கம்ப. அரசி. 32.

"அருப்பம் என்று பகையையும் ஆரழல்
நெருப்பை யும்இகழ்ந் தால்அது நீதியோ." —ஷை. முதற்போர். 92.

"இனியவன் சின்னாட் செல்லின் எம்மனோர் வாழ்வும் கொள்ளும்
துனைவரும் புரவித் திண்தேர்த் துணைவரும் சூர ரானார்
முளைவரும் கூர்முள் வேலை முளையிலே களையின் அல்லால்
நனிவர வயிர்த்த போது நவியமும் மடியும் அன்றே." வில்லி. சூது. 11.

"சிறிய பகைஎனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையார்." —நீதிநெறி. 54.

"முளையில் கிள்ளாததை முற்றினால் கோடாலிகொண்டு
வெட்டவேண்டும்." —பழ.

"நகத்தால் கிள்ளாததை கோடலி கொண்டு வெட்டநேரிடும்." —ஷை.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா." —ஷை.

முதுமொழிவெண்பாக்கள்:

"தாகமதன் வேலைதள்ளும் சம்பரனை வென்றேமுன்
வாகைபடைத் தான்திருமலைக்கொழுந்தே - ஆக." —திருமலைக்.

"தெவ்வை இளத்தைஎன்று செப்பியே விக்கிரமன்
எவ்வமிக உற்றான் இரங்கேசா - வவ்வி." —இரங். 88.

880. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். (௮௰)

உரைப்பகுதி:

பரிமே:— செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார் - தம்மொடு பகைப்பாரது தருக்கினைக் கெடுக்கலாயிருக்க இகழ்ச்சியான் அது செய்யாத அரசர், உயிர்ப்ப உளரல்லர் மன்ற - பின் உயிர்க்குமாத்திரத்திற்கும் உளரல்லர் ஒருதலையாக.

அவர் வலியராய்த் தம்மைக் களைதல் ஒருதலையாகலின், இறந்தாரேயாவர் என்பதாம். அவர் உயிர்த்தததுணையானே தாம் இறப்பர் எனினும் அமையும். இதனுன் களையாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

மணக்:— பகைவரது தலைமையைக் கெடுக்க மாட்டாதார், அப்பகைவர் உயிர்க்கும் மாத்திரத்திலே அழுதியாகச் சாவார் எ - று.

இது பகை கொள்ளுங்கால் வலியாரோடு பகைகோடலாகாது என்றது.

பரிதி:— மாற்றாரை வெல்ல வகை அறியாதார் மாற்றார் சுவாசம் விட அழிஞ்சு போவார்; நாகமும் எலியும்போல் எ - று.

காளிங்:— தம்மை வருத்தம் செய்பவராகிய பகைவர் தம் எதிர் வந்து சினத்து ஒரு மூச்சு எறிய அத்தனைக்கு உளர் அல்லர் மன்ற: யார் எனின், மற்று அவரது பெருமையைத் தலையழிக்க மாட்டாதார் எ - று.

குறள் வைப்புமுறை

பரிமே:— பகைஎன்னும், வில்லேருழவர், ஏமுற்றவரினும், பகைநட்பாக், தன்துணை, தேறினும், நோவற்க, வகையறிந்து, இளைதாக, உயிர்ப்ப.

மணக்:— உயிர்ப்ப, பகைஎன்னும், வில்லேருழவர், தன்துணை, ஏமுற்றவரினும், தேறினும், பகைநட்பாக், நோவற்க, இளைதாக, வகையறிந்து.

பரிதி:— வகையறிந்து, இளைதாக, உயிர்ப்ப, தன்துணை; பகைஎன்னும், நோவற்க, ஏமுற்றவரினும், தேறினும், பகைநட்பாக், வில்லேருழவர்.

காளிங்:— வகையறிந்து, இளைதாக, வில்லேருழவர், தன்துணை, ஏமுற்றவரினும், உயிர்ப்ப, நோவற்க, பகைநட்பாக், பகைஎன்னும், தேறினும்.

89. உட்பகை.

தொகுப்புரை:

[நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய் தருவன கூடா. அதுபோல உறவினரியல்பும் உட்பகையாயிருந்து துன்பஞ்செய்யுமாயின் கூடாவாம். வாளைப்போல கொடிய பகைவர்க்கு அஞ்சவேண்டாம். உறவுபோல இருக்கும் உட்பகைவர்க்கு அஞ்சவேண்டும். தளர்ந்த காலத்து, மண்ணறுக்கும் ஊசியைப்போல அறுப்பர் ஆதலின் உட்பகையாவார்க்கு அஞ்சித் தற்காப்பு செய்துகொள்க. மனம் திருந்தாத உட்பகை தோன்றுமாயின் அது சுற்றத்தாரனைவரும் பிரிதற்கு ஏதுவாகிய கேட்டை விளைவிக்கும். உறன்முறையாருக்குள் உட்பகை தோன்றுமாயின் அது அரசன் இறக்குமளவினதாகிய கேட்டையுண்டாக்கும். உற்றாரிடத்தே உட்பகையுண்டாகுமாயின் சாவில்லாமலிருத்தல் அருமை. செப்பினது மேல்மூடியும் கீழ்மூடியும் ஒன்றுபட்டாற்போல உட்பகையுள்ள உறவினர் கூடியிருந்தாலும், ஒன்றுபடமாட்டார்கள். உட்பகையுள்ள குடி அராவப்பெற்ற இரும்பைப்போல வலிமையற்றதாகும். எள்மூக்கத்தனை பகை ஆனாலும் அதனால் உண்டாகும் கேடுகள்பல. மனஒற்றுமையில்லாதவர்கள் கூடிவாழ்தல் ஒரு வீட்டிலே பாம்போடு குடியிருந்தாற்போலும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது புறப்பகைக்கு இடனாக்கிக் கொடுத்து அது வெல்லுந்துணையும் உள்ளாய்நிற்கும் பகை. இதுவும், களையப்படுவதன்பாலது ஆகலின், பகைத்திறந்தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— உட்பகையாவது உடனே வாழும் பகைவர் செய்யும் திறம் கூறுதல். அஃதாவது புறம்பு நட்டார்போன்றும் சுற்றத்தாராயும் ஒழுகி மனத்தினால் பகைத்திருப்பார் செய்யும் திறன் கூறுதல். இதுவும் ஆராய்ந்து காக்கவேண்டுமாதலின், அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— உட்பகையாவது பகையில் உட்பகை வெல்லலரிது என்றவாறு.

881. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். (௧)

உரைப்பகுதி:

பரிமே:— நிழல் நீரும் இன்னாத இன்னா - ஒருவனுக்கு அனுபவிக்கவேண்டுவனவாய நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய்

செய்வன இன்னுவாம்; தமர் நீரும் இன்னுசெயின் இன்னுவாம் - அது போலத் தழுவவேண்டுவனவாய தமரியல்புகளும் முன் இனியவேனும் பின் இன்னுசெய்வன இன்னுவாம்.

நோய் - பெருங்கால், பெருவயிறு முதலாயின. தமர் என்றதனல் உட்பகையாதற்கு உரியராய ஞாதியர் என்பது அறிக. இன்னுசெயல் - முன் வெளிப்படாமைகின்று துணை பெற்றவழிக் கெடுத்தல்.

மணக்:— நிழலகத்து நீர் இனிதேயாயினும் அவற்றுள் இன்னுத செய்யும் நீர் இன்னுதாகும்; அது போல, சுற்றத்தார் நன்மை இனிதாயினும் அவர் இன்னுதவற்றைச் செய்வாராயின், அஃது இன்னுதாயேவிடும் எ - று.

இது சுற்றமென்று இகழற்க என்றது.

பரிப்:— இவை இரண்டினுலும் இகழாமை கூறப்பட்டது.

பரிதி:— நிழல்சேர்ந்த நீர் அழகு ஆனுலும், வியாதியைத்தருவது போல உறவின் முறையும் நல்லவர்களாகில் நன்மையைத் தரும்; அல்லது கேட்டைத்தரும் எ - று.

காளிங்:— உலகத்துப் பொதுவகையாக நிழலும் நீரும் இனிய எனினும், சில நச்சுமரமும் நச்சுப் பொய்கையும் என்பன உள அன்றே: மற்று அவை ஏனை நிழலும் நீரும்போன்று இருந்தும், இருந்தோரும் அருந்திஞேரும் இறந்துபடும் திறம் விளையும: அதனல் மற்று ஆங்குத் தமராக நட்டோரது நீர்மை, நீர்மைபோன்று இருந்து பெரிதும் இன்னு வாம்; இன்னுதனவற்றைச் செய்யும் இடத்து எ - று.

குறிப்பு:

நிழனீர் - சூரியவெப்பம் படாத மர நிழலினுள்ள நீர் எனவுமாம். நீர் இன்றியமையாத உணவாயினும் நிழலின் தன்மையால் நோய் செய்தல்போலச் சுற்றத் தாரும் மிக இன்றியமையாதவர்களாயினும் துன்பந்தருவார்களாயின் நீக்கத்தக்கவர் களே என்பதும், நீர் தண்ணிதாய் நல்லதே செய்யினும் சார்வாற் கெட்டதுபோலச் சுற்றத்தார் நன்மனமுடையவர்களாயினும், பகைச் சார்பாற் கெட்டார்கள் என்பதும் தோன்ற உவமை அமைந்திருத்தல் காண்க.

—தொகுப்பாசிரியர்.

882. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— வாள்போல் பகைவரை அஞ்சற்க - வாள்போல எறிதும் என்று வெளிப்பட்டுநிற்கும் பகைவர் பகையினை அஞ்சாதொழிக, கேள்போல் பகைவர் தொடர்பு அஞ்சுக - அங்ஙனம் நில்லாது கேள்போல மறைந்து நிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக.

பகைவர் . ஆகுபெயர். முன்னே அறிந்து காக்கப்படுதலான் அஞ்சற்க என்றும், அங்ஙனம் அறியவும் காக்கவும் படாமையின் கெடுதல் ஒருதலை என்பதுபற்றி அஞ்சுக என்றும் கூறினார். பின்செய்யும் பகையினும் கொடிதாகலானும், காக்கலாகாதது ஆகலானும், அஞ்சப்படுவது முன்செய்த அவர்தொடர்பாயிற்று. இவை இரண்டு பாட்டானும் உட்பகை ஆகாது என்பது கூறப்பட்டது.

மணக்:— வாள்போலக் கொல்லும் திறலுடைய பகைவரை அஞ்சாதொழிக; மூகம் நட்டாரைப்போல மனத்தினால் பகைத்திருப்பார் தொடர்பை அஞ்சுக எ - று.

இது பகை அஞ்சுவதினும் மிக அஞ்சவேண்டும் என்றது.

பரிப்:— உட்பகையாவது இது என்பதூஉம், அதற்கு அஞ்ச வேண்டும் என்பதூஉம் கூறிற்று.

பரிதி:— வாள்போலே வெட்டுகிற பகைவர்க்குப் பயப்பட வேண்டா; உறவு போல இருந்து வினைசாதிக்கிற உட்பகைக்குப் பயப்பட வேண்டும் எ - று.

காளிங்:— வாள்போலக் கடியராகிய புறப்பகைவரை அஞ்சாது ஒழியினும் ஒழிக: மற்று உள்புகுந்து கேள்போன்று கேளாகப் பகைவரது நட்பினை அதினின்று குறிக்கொண்டு அஞ்சுக எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கண்ணின் மணியேபோல் காதலராய் நட்டாரும்
உண்ணும் துணையும் உளராய்ப் பிறராவர்
எண்ணி உயிர்கொள்வான் ஏன்று திரியினும்
உண்ணும் துணைகாக்கும் கூற்று."

—பழ. நா.

" இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பரியார் தமர்போ லடைந்தாரின்
செம்மைப் பகைகொண்டு சேரா தார் தீயரோ
மைம்மைப்பின் நன்று குருடு." —வை

குறிப்பு:

வாள் கொலைக்கருவி என்பது வெளிப்படை. பகைவர் இன்னுசெய்வார் என்பதும் வெளிப்படை. ஆதலின் அவரை அறிந்து ஒதுங்கலாம் ஆதலின் அஞ்சற்க என்றார். —தொகுப்பாசிரியர்.

883. உட்பகை அஞ்சித்தன் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். (௩)

உரைப்பகுதி:

பரிமே:— உட்பகை அஞ்சித் தன் காக்க - உட்பகையாயினரை அஞ்சித் தன்னைக் காத்துக்கொண்டொழுகுக; உலைவிடத்து மட்பகையின் மாணத் தெறும் - அங்ஙனம் ஒழுகாதவழித் தனக்கு ஓர் தளர்ச்சி வந்த விடத்துக் குயவன் மட்கலத்தை அறுக்குங்கருவிபோல அவர் தப்பாமல் கெடுப்பர்.

காத்தல் - அவர் அணையாமலும் அவர்க்கு உடம்படாமலும் பரி கரித்தல். மண்ணைப் பகுக்குங்கருவி மட்பகை எனப்பட்டது. பகைமை தோன்றுமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலின், கெடுதல் தப்பாது என்பதாம்.

மணக்:— உடனே வாழும் பகைவரை அஞ்சித் தன்னைக்காக்க; அவர் தனக்குத் தளர்ச்சி வந்தவிடத்து, குயவன் கலத்தை அறுக்குங் கருவிபோலத் தப்பாமல் கொல்லுவர் எ - று.

மட்பகை தான் அறுக்குங்கால் பிறரறியாமல் நின்று அறுக்கும்.

பரிப்:— இது தன்னைக் காக்கவேண்டும் என்றது. இவை இரண்டி னும் அஞ்சவேண்டும் என்பதூஉம், காக்கவேண்டும் என்பதூஉம் கூறப்பட்டன.

பரிதி:— உட்பகை செய்கிறபேரை நன்றாக விசாரித்து, தங்களுக்கு ஒரு தறுவாய் வந்தவிடத்தில், மேலே மட்கலத்தைக் கீழே அறுக்கிற ஊசி போலக் கெடுப்பர் எ - று.

காளிங்:— உட்பகை சிறிது உறுவழியும், பெரிதும் அஞ்சித் தன்னைப் பரிகரித்துக் கொள்க; என் எனின் தனக்கு ஓர் தளர்ச்சி வந்த இடத்தே கரைபடக் கட்டிய மண் உறுதிக்கு ஒரு தளர்ச்சிவந்த இடத்து மற்று அதனை முழுவதும் மூரித்து எறியும் வெள்ளம்போல் இதுவும் தன் குடி முழுதும் குலைத்து எறிந்துவிடும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"............................இன்றே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு." —நாலடி. 237.

"புறம்நட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும் கழிபெரும்
கண்ணோட்டம் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து." —நீதிநெறி. 56.

"ஒன்றுரைத் தேறேல்." —ஆத்தி. 108.

முதுமொழிவெண்பாக்கள்:

"நாரதர்மா வுட்பகையாய் நம்பரடி பேணுத
வாறுசொல்லி முப்புரமும் மாய்வித்தார் - ஆதலினால்."
—முதுமொழி. 136.

குறிப்பு:

மட்பகை - மண்ணைப்பகுக்குங் கருவி. பகு + ஐ = பகை - பகுத்தலைச் செய்வது என வினைமுதற்பொருளில் வந்தது. இதனை ஊசியென்பர் குயவர். குட முதலியன முடிந்தவிடத்துச் சக்கரத்தைவிட்டுப் பிரிக்கப்பயன்படுவது.

—தொகுப்பாசிரியர்.

884. மனம்மாணு உட்பகை தோன்றின் இனம்மாணு
ஏதம் பலவும் தரும். (௪)

உரைப்பகுதி:

பரிமே:— மனம் மாணு உட்பகை தோன்றின் - புறம்திருந்தியது போன்று அகம் திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின்

இனம் மாறு ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்குச் சுற்றம் வயமாகாமைக்கு ஏதுவாகிய குற்றம்பலவற்றையும் கொடுக்கும்.

அவை சுற்றத்தாரை உள்ளாய்நின்று வேறுபடுத்தலும், அதனால் அவர் வேறுபட்டவழித் தான்தேறாமையும், பின் அவற்றான் விளைவனவும் ஆம்.

மணக்:— மனம் நன்றாகாத உள்பகை தோன்றுமாயின், தனக்கு இனமாயினார் நல்லராகார்; அஃதன்றிப் பல குற்றங்களும் உண்டாம் எ - று.

இஃது இனம் பொருந்தாமல் கூடநின்று பகைப்பிக்கும் என்றது.

பரிப்:— இவை நான்கினானும் அவர் செய்யும் திறன் கூறப் பட்டது.

பரிதி:— மனப் பொல்லாங்கினாலே உட்பகை தோன்றலின் இனத்தைக்கெடுத்துப் பேதையாகிய சிறுமை தரும் உட்பகையாவது உறவின் முறையார் பகைஎன அறிக எ - று.

காளிங்:— ஒருவர்க்கு, தம் மனம் மாட்சி இல்லாததோர் உட்பகை வந்து தோன்றுமாயின் தம் குடி மாட்சிமை இல்லாதவாறு உள்ள குற்றம் பலவற்றையும் தரும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"தமரால் லவரைத் தலையளித்தக் கண்ணும்
அமராக் குறிப்பவர்க் காகாதே தோன்றும்.
சுவர்நிலம் செய்தமைத்துக் கூட்டியக் கண்ணும்
உவர்நிலம் உட்கொதிக்கு மாறு." —பழ. நா.

885. உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— உறல் முறையான் உட்பகை தோன்றின் - புறத்து உறவுமுறைத்தன்மையோடு கூடிய உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின், இறல் முறையான் ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்கு இறத்தல் முறையோடு கூடிய குற்றம்பலவற்றையும் கொடுக்கும்.

அவை புறப்பகைத் துணையாய் நின்றே அது தோன்றாமல் கோறல் முதலிய வஞ்சனை செய்தலும், அமைச்சர் முதலிய உறுப்புகளைத் தேய்த்தலும் முதலாயின.

மணக்:— உறவு முறையோடே உட்பகை தோன்றுமாயின், அது கெடுதல் முறையோடே கூடப் பல துன்பத்தினையும் தரும் எ - று.

இது சுற்றத்தாராகிய உட்பகையினால் வரும் தீமை கூறிற்று.

பரிதி:— உறவின் முறையான் உட்பகையாகில் தனக்குக் கேடு. அதனால் அனேகம் விதனம் வரும் எ - று.

காளிங்:— தம்மொடு வந்து உறுதல் பண்பினான் யாவன்மாட்டு உட்பகை தோன்றுவதாயின் அதனான் இறுதல் பண்பினான் வரும் குற்றம் ஒன்று இரண்டு அல்ல பலவும் விளையும் எ - று.

உறல் என்பது தம்மோடு வந்து உறுதல் என்றது. முறைமை என்பது மரபு. இறல் என்பது உயிர்க்கு இறுதி, பொருட்கு இறுதிவருதல் என்றது.

ஒப்புமைப்பகுதி:

"தமரா யிருந்து புறப்பகையைச் சார்வாய்க் காலம் வருமளவும்
அமரா நிற்கும் உட்பகையை அஞ்சிக் காக்க உறின் கடிக
நமராம் எனவே கண்ணோடின் நல்ல வமைச்சா தியைத் தேய்க்கும்
நமராம் இனத்தைத் தணப்பிக்கும் நன்னைக் குடியோ டினி
தழிக்கும்." —விநா. அரசி. 136·

886. ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. (சா)

உரைப்பகுதி:

பரிமே:— ஒன்றாமை ஒன்றியார்கண் படின் - பகைமை தனக்கு உள்ளாயினார்மாட்டே பிறக்குமாயின், பொன்றாமை ஒன்றல் எஞ்ஞான்றும் அரிது - அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்றும் அரிது.

பொருள் படை முதலிய உறுப்புக்களான் பெரியனாயகாலத்தும் என்பார், எஞ்ஞான்றும் என்றார். இவை நான்கு பாட்டானும் அதனால் தனக்குவரும் தீங்கு கூறப்பட்டது.

மணக்:— தனக்கு ஒன்றினார்மாட்டு ஒன்றாமை உளதாயின், எந்நாளினும் சாவாமையைக் கூடுதல் அரிது எ - று.

இது நட்டோராகிய உட்பகையினால் வரும் தீமை கூறிற்று.

பரிதி:— ஒன்றுபட்ட மனமாக இருக்கையிலே இருமனப்பட்டவர் உட்பகையாகில் எந்நாளும் கேடானது மேன்மேலே தழைக்கும் எ - று.

காளிங்:— தம்மோடு நட்டார்மாட்டும் உட்பகை உளதாம் ஆயின் மற்று ஒன்றுகூடியும் அதனால் தான் எஞ்சாமை கூடுதல் அரிது எ - று.

887. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் - செப்பினது புணர்ச்சி போலப் புறத்து வேற்றுமை தெரியாமல் கூடினாராயினும், உட்பகை உற்ற குடி கூடாது - உட்பகை உண்டாய குடியிலுள்ளார் அகத்துத் தம்முள் கூடார்.

செப்பினதுபுணர்ச்சி - செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட்பகையான் மனம் வேறுபட்டமையின் புறப்பகை பெற்றுழி வீற்று வீற்றாவர் என்பதாம். குடி கூடாது என்பதனை நாடு வந்தது என்பது போலக் கொள்க. உட்பகை தானுற்றகுடியோடு கூடாது என்றும், உட்பகை உண்டாயகுடி அப்பகையோடு கூடாது என்றும் உரைப்பாரும் உளர்.

மணக்:— உட்பகையும் அஃது உற்ற குடியும், செப்பும் மூடியும் பொருந்தினாற்போலப் பொருந்தினவாயினும், பொருத்தமில்லவாம் எ - று.

உட்பகையுற்றார் செப்பும் மூடியும் ஒன்றுபட்டாற்போல இருந்து செப்பகத்துப் பொருள் வாங்குவார்க்கு மூடி துணையாய் அகன்று நிற்கு மதுபோல அகன்று நிற்பர் என்றவாறு.

பரிப்:— செப்பிற்கு உவமை குடி: மூடிக்கு உவமை உட்பகை.

பரிதி:— செப்பும் மூடியும் போல கூடியிருந்தும் செப்பு இரண் டானாற் போலே உட்பகையும் இப்படி இருந்தும் பிரிந்தவர் எ - று.

காளிங்:— செப்பு உருபு பொருந்துங் காலத்து மூதலும் மூடியும் ஒரு பழுதற ஓர் உருபு என்னுமாறு இறுக மூறுகப் பொருந்த நிற்கும் அன்றே: அதுபோலத் தம்முள் ஒரு வேற்றுமையறப் பொருந்திநின்று ஓர் எல்லைக்கண் பின்னும் அச்செப்பின் புணர்ச்சிபோல் சிறிதும் கூடாது பகருவிடுமே: யாது எனின், உட்பகை உற்றவரது குடி முழுதும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"வெள்ளம் பகைவரினும் வேறிடத்தார் செய்வதென்
கள்ளம் உடைத்தாகிச் சார்ந்தார் கழிநட்புப்
புள்ளொலிப் பொய்கைப் புனலூர அஃதன்றோ
உள்ளில்லத் துண்ட தனிசு." —பழ. நா.

"தழங்குகுரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்
கிழங்குடைய வெல்லாம் முளைக்குமோ ராற்றால்
விழைந்தவரை வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்டா
பழம்பகை நட்பாதல் இல்." —ஷை

முதுமொழிவெண்பாக்கள்:

"எப்பொழுதும் ஒன்றாய் இருப்பவர்போ லேமறைத்துச்
செப்பமுடன் வாழ்வார் தினகரா - அப்பொழுதும்." —தினகர. 93.

குறிப்பு:

செப்பு - காரண விடுகுறிப்பெயர். செம்பினால் செய்யப்பெற்ற சிமிழ். பின்னர் அதுபோல மரத்தாற் செய்யப்பட்டனவற்றிற்கும் பெயராயிற்று. உட்பகை - உற்ற குடியோடு கூடாது எனப்பிரித்து உட்பகைவர் தான் பிறந்த குடியோடு கூடார் எனவும் பொருள் காண்பர்.

—தொகுப்பாசிரியர்.

888. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு(து)
உட்பகை உற்ற குடி. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— உட்பகை உற்றகுடி - முன் வளர்ந்துவந்ததாயினும் உட்பகை உண்டாய குடி, அரம் பொருத பொன் போலப் பொருது உரம் தேயும் - அரத்தால் பொரப்பட்ட இரும்புபோல அதனால் பொரப்பட்டு வலி தேயும்.

பொருது என்னும் செயப்பாட்டுவினையெச்சம் தேயும் என்னும் வினைகொண்டது. அஃது உரத்தின் தொழிலாயினும் குடிமேல் ஏறுதலின், வினைமுதல்வினையாயிற்று. காரியஞ்செய்வதுபோன்று பொருந்தி மெல்ல மெல்லப் பிரிவித்தலான், வலி தேய்ந்து விடும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் அவன்குடிக்குவரும் தீங்கு கூறப்பட்டது.

மணக்:— உட்பகையானது உற்றகுடி, அரத்தினால் தேய்க்கப் பட்ட பொன்னைப்போல, அதனால் பொரப்பட்டு வலிதேயும் எ - று.

இஃது உட்பகை அழகு செய்வது போலப் பலத்தைக் கெடுக்கும் என்றது.

பரிதி:— பெரிய அரத்திலே அராவின பொன் போலத் தேயும் உட்பகையுள்ள குடி எ - று.

காளிங்:— அராவுகின்ற அரம் சென்று பொருத காரிரும்பு போலத் தமது உரம் முழுவதும் ஒழுகத் தேய்ந்துவிடும்: யாதோ எனின் உட்பகை உற்ற குடி முழுவதும் மற்று அவனால் பொரப்பட்டு எ - று.

பொன் என்றது இரும்பு.

அதனால் இதனின் நீங்கிப் பெரியோரோடு கெழீஇய நட்பின் பிழையாமையே உறுதி என்பதனை உணர்த்துதற்கு மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பொருது என்னும் செயப்பாட்டு வினையெச்சம், தேயும் என்னும் வினைகொண்டது. "ஆகாறளவிட்டிதாயினும்" (478) என்பதற்கு உரைத்தாங்கு உரையாது, உரத்தின் தொழிலாயினும், குடிமேலேற்று தலின் வினைமுதல்வினையாயிற்று என்பது.

முதுமொழிவெண்பாக்கள்:

"வென்றிபுனை சம்பரனை வென்றதவ னில்லிருந்தே
தென்றலெனும் தேரோன் சிவசிவா - என்றும்." —சிவசிவ. 89.

"சத்திமுதல் நூற்றுவர்மாய்ந் தார்விசுவா மித்திரனுண்
மொய்த்தபகை யாலே முருகேசா - வைத்த." —முருகேசர். 89.

889. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை உள்ளதாங் கேடு. (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— உட்பகை எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும் - அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின்பிளவை ஒத்த சிறுமையுடைத்தேயாயினும், கேடு உள்ளதாம் - பெருமையெல்லாம் அழிய வருங்கேடு அதனகத்ததாம்.

எத்துணையும் பெரிதாயகேடு தனக்கு எல்லைவருந்துணையும் எத்துணையும் சிறிதாய உட்பகையுள்ளே அடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டுநிற்கும் என்பதாம். இதனால் அது சிறிதென்று இகழப்படாது என்பது கூறப்பட்டது.

மணக்:— எள்ளின் பிளவுபோன்ற சிறுமைத்தேயாயினும், உடன்வாழும் பகையினால் ஒருவர்க்குக் கேடு உளதாம் எ - று.

இது பகை சிறிதென்று இகழற்க என்றது.

பரிதி:— எள்ளின் பாதியாகிலும் அந்த உட்பகையாலே கேடு வரும் எ - று.

காளிங்:— எள்ளில் பிளந்த சிறுமை உடைத்தாயினும் உட்பகையுடனே வாழும் பகையின் கண்ணது ஒருவர்க்குக் கேடு எ - று.

ஒப்புமைப்பகுதி:

"எள்ளூற்ற நுண்துகளின் துணையாகும் சிறுமைத்தே எனினும் யார்க்கும்
உள்ளூற்ற பகைஉண்டேல் கேடுளதென் றுரைப்பர் அஃது உண்மையாமால்
தள்ளூற்றும் தள்ளூற்றும் ஏவல்புரிந் துழல்குலிசத் தடக்கை அண்ணல்
கள்ளூற்று மறைந்திருந்தே எனதுகரம் துணிப்பித்தான் காண்மின் காண்மின்."

—கந்த. அசமுகிபுலம். 7.

"புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார்
அகப்பகை ஒன்றஞ்சிக் காப்ப." —நீதிநெறி. 55

முதுமொழிவெண்பாக்கள் :

" மாற்ருர் முடியும் வளமையுங்கொண் டேகநலம்
தோற்ருன் வழுதிமகன் சோமேசா - ஆற்றலிலா." —சோமேசர். 89.

" இவ்வுலகை யாளா திராமனைக்கான் போக்கினுள்
எவ்வமனக் கூனி இரங்கேசா - அவ்வியஞ்சேர்." —இரங். 89.

890. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று. (௯௦)

உரைப்பகுதி :

பரிமே:— உடம்பாடு இலாதவர் வாழ்க்கை - மனப்பொருத்தம் இல்லாதாரோடு கூட ஒருவன் வாழும்வாழ்க்கை, குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று - ஒரு குடிலுள்ளே பாம்போடுகூட உறைந்தாற் போலும்.

குடங்கம் என்னும் வடசொல் திரிந்து நின்றது. இடச்சிறுமை யானும் பயிற்சியானும் பாம்பாற்கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, இவ்வுவமையால் அவனுயிர்க்கு இறுதிவருதல் ஒருதலை என்பது பெற்ரும். இதனுன் கண்ணேடாதவரைக் கடிக என்பது கூறப்பட்டது.

மணக்:— மனத்தினுல் பொருத்தம் இல்லாதாரோடு ஒத்து வாழும் வாழ்க்கை, ஒரு குடிலகத்தே பாம்போடு கூடி வாழ்ந்தாற் போலும் எ - று.

இது பாம்பு இடம் வந்தால் கடிக்கும்; அதுபோல உட்பகைவர் இடம் வந்தால் கொல்லுவர் என்றது.

பரிதி:— உட்பகையாஞர் கூட்டுறவு ஒரு குடத்திலே பாம்பும் கீருடனும் இருப்பதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— உள்ளத்துள் உடம்பாடிலாதவரோடு கூடிவாழும் வாழ்க்கை எத்தன்மைத்தோ எனின் பெரும்பேழையகத்து உறையும் பாம்பொடு தாழும் ஆண்டுக் கூடி உறையும் அத்தன்மைத்து ஆகலான் எ - று.

மேற்கோள்பகுதி:

சங்கர:— உடம்படு மெய்யென்றுரும்: உடன்படல் என்பது உடம்படல் என மரீஇயிற்று. 'உடம்பாடிலாதவர் வாழ்க்கை' எனவருதல் காண்க. (நன். 162.)

சிவஞான:— எழுத்தெனப்படுபவகரமுதல் என்புழி வகரம் நிலைமொழியீற்றினும் வருமொழி முதலினும் நின்ற உயிர்களை உடம்படுத்தற்கு வந்தகருவியாதலின் அஃது உடம்படுமெய்யென்றாயிற்று, அஃது 'உடம்பாடிலாதவர் வாழ்க்கை' என்பதனானும் அறிக. (தொல். விருத். பக். 42.)

ஒப்புமைப்பகுதி:

"பாம்புறையும் புற்றன்னார் புல்லறிவினார்." —நான்மணிக். 56.

"தலைமை கருதும் தகையாரை வேந்தன்
நிலைமையான் நேர்செய் திருத்தல் - மலைமிசை
காம்பனுக்கு மென்தோளாய் அஃதாலவ் வோரறையுட்
பாம்போடு உடனுறையு மாறு." —பழ - நா.

"நாணார் பரியார் நயனில செய்தொழுகும்
பேணா அறிவிலா மாக்களைப் பேணி
ஒழுக்கி அவரோ டுடனுறை செய்தல்
புழுப்பெய்து புண்பொதியு மாறு." —ஷை

"உடம்பாடிலாத மனைவிதோள் இன்னா." —இன்னா. 12.

"பாம்பொடு பழகேல்." —ஆத்தி. 78.

"பாம்போடு ஒருகூரையிலே பயின்றாற்போல்." —திருமொழி. 11 : 8 : 3.

"பாந்த ளோடொரு மனைவயின் பயில்பவர் போல
வேந்த ரைவரும் மந்திர வலியினான் மிக்கோர்
காந்து நெஞ்சுடை யமைச்சனைக் கைவிடா ரணுகித்
தாந்த மெய்யென உயிரெனத் தனித்தனி சார்ந்தார்."

—வில்லி. வாரணாவதச். 126

முதுமொழிவெண்பாக்கள்:

"முந்திகலாற் செங்கணூர் மூண்டானைக் காவினும்பின்
தந்திபுகா வாயில் சமைத்தாரே - எந்தைக்(கு)." —திருத். 86.

குறள்வைப்புமுறை

பரிமே:— நிழல்நீரும், வாள்போல், உட்பகை, மனமாணு, உறன் முறையான், ஒன்றாமை, செப்பின், அரம்பொருத, எட்பகவு, உடம்பாடு.

மணக்:— வாள்போல், உட்பகை, எட்பகவு, நிழல்நீரும், அரம்பொருத, செப்பின், உடம்பாடு, மனமாணு, உறன்முறையான், ஒன்றாமை.

பரிதி:— எட்பகவு, மனமாணு, உறன்முறையான், ஒன்றாமை, நிழல் நீரும், உடம்பாடு, வாள்போல், அரம்பொருத, உட்பகை, செப்பின்.

காளிங்:— எட்பகவு, செப்பின், உட்பகை, மனமாணு, நிழல்நீரும், வாள்போல், உடம்பாடு, ஒன்றாமை, உறன்முறையான், அரம்பொருத.

90. பெரியாரைப்பிழையாமை.

தொகுப்புரை :

[எதனையும் முடிக்கவல்ல பெரியோர்களின் அறிவாற்றல் முதலியவைகளை இகழாதிருத்தல் தலையாய காவலாம். பெரியோர்களை அவமதித்தால் அவர்களால் எப்பொழுதும் துன்பம் உண்டாகும். தான் அழியவேண்டின் நீதிநூல் வரம்பைக் கடந்து, தன் வெற்றிக்குத் துணையாகும் பெரியவர்கட்குப் பிழைசெய்க. ஆற்றலுடையார்க்கு அஃதில்லாதவர் பிழைசெய்தல் யமனைக் கைகாட்டி அழைத்தாற் போலும். கொடிய வலியுடைய வேந்தால் கோபிக்கப்பட்டவர்கள் எங்குச் சென்றும் தப்பமுடியாது. தீ சுட்டாலும் தப்பலாம்; பெரியவர்களுக்குத் தீமைசெய்தால் தப்பமுடியாது. சாப அருள்கள் வழங்கும் தக்கோர் கோபிப்பார்களாயின் ஆட்சியும் பொருளும் தாழ்ச்சியுறும். தவத்தான் மலையைஒத்த பெரியோர்கள், ஒருவனை அழிய வேண்டும் என்று கருதுவாராயின் நிலைபெற்ற செல்வரும் குடியோடு அழிவர். உயர்ந்த விரத ஒழுக்கங்களையுடையவர்கள் சினப்பாராயின் இந்திரனும் பட்டம் துறப்பான். உயர்ந்ததரத்தினர் சீறுவார்களாயின் எத்துணைப்பெரிய துணையுடையராயினும் தப்பார்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது பெரியராயினாரை அவமதித்து ஒழுகாமை. இரட்டுறமொழிதல் என்பதனான் பெரியார் என்பது ஆற்றலால் பெரியாராய வேந்தர்மேலும் தவத்தால் பெரியாராய முனிவர்மேலும் நின்றது. மேற்சொல்லாது எஞ்சிநின்றதாகலின், இது வெகுளியான் வருவன வற்றது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

மணக்:— பெரியாரைப் பிழையாமையாவது தம்மின் பெரிய அரசரையும், முனிவரையும், அறிஞரையும் பிழைத்தொழுகாமை. மேல் பகையும் பகையின்கண் செய்யும் திறமும் கூறினார். இது தம்மின் பெரியார் தம்மைப் பகையாகக் கொள்ளாராயினும், தமது இகழ்ச்சி அவரால் தீமை பயக்குமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— பெரியாரைப் பிழையாமையாவது பெரியவர்க்கு ஒரு குற்றமும் செய்யாமை எ - று.

891. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. (க)

உரைப்பகுதி :

பரிமே:— ஆற்றுவார் ஆற்றல் இகழாமை - எடுத்துக்கொண்டன யாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றல்களை அவமதியாமை, போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை - தங்கண் தீங்குவாராமல் காப்பார் செய்யும் காவல்கள் எல்லாவற்றினும் மிக்கது.

ஆற்றல் என்பது பெருமை, அறிவு, முயற்சி என்னும் *மூன்றன் மேலும் நிற்றலின் சாதியொருமை. இகழ்ந்தவழிக் களையவல்லார் என்பது தோன்ற ஆற்றுவார் என்றும், அரண், படை, பொருள், நட்பு முதலிய பிறகாவல்கள் அவரான் அழியுமாகலின் அவ்விகழாமையைத் தலையாய காவல் என்றும் கூறினர். பொதுவகையால் அவ்விருதிறத்தாரையும் பிழையாமையது சிறப்பு இதனால் கூறப்பட்டது.

மணக்:— தவத்தினானும் வலியினானும் பெரியாரது வலியை இகழாதொழிதல், தம்மைக் காப்பார்க்குக் காவலாகிய எல்லாவற்றுள்ளும் தலையான காவலாம் எ - று.

இது பெரியாரைப் பிழையாமையால் வரும் பயன் கூறிற்று.

பரிப்:— இகல் முதலாகப் பெரியாரைப் பிழையாமை ஈறாகப் பிறரால் வரும் துன்பப்பகுதி ஆயினவாறு கண்டு கொள்க.

பரிதி:— பெரியவர் எந்தக்கிரமத்திலே நடந்தார் அந்தக்கிரமத்தை இகழாமல் நடப்பானாகில் போற்றுதற்கரிய காரியமான தன்மத்திலும் பெரியகாரியம் எ - று.

காளிங்:— உலகத்துத் தவநெறியாளராகிய பெரியோரது தவ நெறி ஒழுக்கத்தைத் தாம் இகழாமையாகிய தலைமை யாது? அது குறிக் கொள்வார் தம் குறிக்கோளுள் எல்லாம் சாலத்தலைமை எ - று.

எனவே அவரைப் பிழைப்பின் தாம் கெடுவர் என்பது பொருள்.

---

*'மூவகையாற்றலாவன - பிரபு சக்தி, மந்திர, சக்தி உற்சாகசக்தி'
—கவிராஜபண்டிதர்.

குறிப்பு:

'ஆற்றுவார் ஆற்றல்' என்ற சொற்றொடர் முன்னும் ஈகைக்கண் 'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் (குறள் 225) எனவந்துளது. அவ்விடத்து தவத்தான் வலியார்க்கு வலி என உரைகண்டனர் பரிமேலழகர். எடுத்துக்கொண்ட காரியங்களை முடிக்க வல்லாருடைய ஆற்றல் என்பர் இங்கு; இரண்டிடத்தும் தவத்தினரைக் கருதுதல் காண்க.

—தொகுப்பாசிரியர்.

892. பெரியாரைப் பேணா தொழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— பெரியாரைப் பேணாது ஒழுகின் - ஆற்றல்களான் பெரியாராயினாரை வேந்தர் நன்குமதியாது அவமதித்து ஒழுகுவாராயின், பெரியாரால் பேரா இடும்பை தரும் - அவ்வொழுக்கம் அப்பெரியாரால அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும்.

அத்துன்பங்களாவன இருமையினும் இடையறாது வரும் மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாந் தாமே செய்துகொள்கின்றனர் என்பது தோன்ற, ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியும் கூறினர். பொதுவகையால் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனான் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையான் கூறுப.

மணக்:— பெரியவர்களைப் போற்றாது ஒழுகுவானாயின், அவ்வொழுக்கம் அவராலே எல்லாரானும் இகழப்படும் நீங்காத துன்பத்தைத் தரும் எ - று.

இது முனிவரைப் போற்றா தொழியின், அது குற்றம் பயக்கும் என்றது.

பரிப்:— இவை *இரண்டும் பிழையாமை வேண்டும் என்று கூறப்பட்டது.

பரிதி:— பெரியாரை உதாசினம் சொல்வனாகின் அந்த பெரியாரால் போக்குதற்கரிய இடும்பைதரும் எ - று.

---

*இரண்டு என்றது இக்குறளும் 'குன்றன்னார்' என்ற குறளும்.

காளிங்:— அங்ஙனம் பெரியோரை நெஞ்சினால் விரும்பாது ஒழுகின் அப்பெரியார் தம்மாலும் பேணிக் கோடற்கு அரிதாகிய பெரிய இடும்பையைத் தரும் எ - று.

பேணு இடும்பை என்பது பேணிக்கொள்ள ஒண்ணாத இடும்பை என்றது.

ஓப்புமைப்பகுதி:

"பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும் - வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கும் அரிது." —நாலடி. 161.

"தீயன கொடியவன் செய்த செய்கையை
நாயினேன் உணரினன் னெறியி னீங்கலாத்
தூயவர்க் கிடரிழைத் துழலும் தோமுடை
ஆயவர் வீழ்கதி அதனில் வீழ்கயான்." —கம்ப. பள்ளியடை. 116.

"மெய்மை நீங்கியே கொலைகள வியன்றுமே லுள்ள
செம்மை யாளரைச் சிறியே அணங்குசெய் தீயோர்
தம்மில் லாற்றரும் பழிசுமந் தொல்லையில் தமரோ(டு)
இம்மை வீடுவர் எழுமையும் துயரினு டிருப்பர்."
—கந்த. அவைபுகு. 104.

முதுமொழிவெண்பாக்கள்:

"மன்றுடையார் குன்றை மதியா தெடுத்தரக்கன்
அன்று படுந்துயரம் ஆர்படுவார் - என்றும்." —முதுமொழி. 137.

"வந்தமுனி வோரை வணங்கா வரன்பேறு
சிந்தைசெய வேணும் சிவசிவா - முந்தும்." —சிவசிவ. 90.

குறிப்பு:

இடும்பை தருவது பெரியோர்க்கு இயல்பன்று. தவளை தன் வாயாற் கெட்டதுபோல, பெரியோரைப் பிழைத்த தமது தவறே இடும்பை தரும் என்றார்.
—தொகுப்பாசிரியர்.

893. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. (ங)

உரைப்பகுதி:

பரிமே:— அடல் வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு - வேற்று வேந்தரைக் கோறல்வேண்டியவழி அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர்மாட்டுப் பிழையினை, கெடல் வேண்டின் கேளாது செய்க - தான் கெடுதல்வேண்டினனாயின் ஒருவன் நீதிநூலைக் கடந்து செய்க.

அப்பெரியாரைக் *"காலனும் காலம்பார்க்கும் பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தர்" என்றார் பிறரும். நீதிநூல் செயலாகாது என்று கூறலின், கேளாது என்றார்.

மணக்:— தான் கெடுதல் வேண்டுவானாயின், பெரியாரைக் கேளாதே ஒரு வினையைச் செய்க; தன்னைக் கொல்ல வேண்டுவனாயின் வலியுடையார்மாட்டே தப்புச்செய்க எ - று.

பரிப்:— கேளாது செய்தல் என்பதனை மந்திரி புரோகிதரைக் கேளாது செய்தல் என்று கொள்ளப்படும். அவ்வாறு செய்தால் அவரை அவமதித்தலாம் ஆதலின் ஈண்டுக் கூறப்பட்டது. அறிவாரைக் கேளாது செய்தலும் வலியார்க்குத் தப்புச் செய்தலும் குற்றம் என்றது.

பரிதி:— தான் கெடவேண்டினால் பெரியோர் வார்த்தைக் கேளா திருப்பது; வாழவேண்டினால் பெரியோர்வார்த்தை கேட்பது எ - று.

காளிங்:— தான் கெடவேண்டினன் ஆயின் நல்ல அறிவுடையா ரோடு ஆராயாது ஒரு காரியத்தைச் செய்வானாக: மற்றுத் தன்னைக்கொல்ல வேண்டினனாயின் வலியுடைய பெரியோர்மாட்டுக் குற்றத்தைச் செய்க எ - று.

இனி மற்று இவர்கண் இழுக்கு என்னும் இக்குற்றம் கடந்ததன் பின்னரே இது பெண்மை அஞ்சுவான் யாவன்? மற்று அவன் பெரிதும் அஞ்சும்; யாதினை எனின், எஞ்ஞான்றும் உலகத்து நல்லோராகிய சான்றோர்க்குக் கூட. வழக்கு இயல்பு அல்லாதது ஓர் இழுக்கு ஆகலான் இதுவும் பரிகரிக்க வேண்டும் என்பதனை உணர்த்துகின்றது மேலையதிகாரம்.

---

*புறம். 41: 1-3.

ஒப்புமைப்பகுதி :

" சூரவ ரைச்சிறு பாலரை மாதரைக் குறைதீர்
விரத நற்றொழில் பூண்டுளோர் தம்மையே லவரை
அரும றைத்தொழி லாளரை ஒறுத்தன ரன்றே
நிரய முற்றவும் சென்றுசென் றலமரு நெறியோர்."

—கந்த. சூரனமைச். 103.

குறிப்பு:

இது வேந்தனுக்குப் பிழை செய்தலாகாது என்பதை விளக்குகிறது. கேளாது என்பதற்கு நூல் வரம்பைக் கடந்து என்பர் பரிமேலழகர். சூழத்தகு வாரோடு சூழாது எனவும் ஆம்.

—தொகுப்பாசிரியர்.

894. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்(கு)
ஆற்றாதார் இன்னா செயல். (௪)

உரைப்பகுதி:

பரிமே:— ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல் - மூவகை யாற்றலும் உடையார்க்கு அவை இல்லாதார் தாம் முற்பட்டு இன்னாத வற்றைச் செய்தல், கூற்றத்தைக் கையால் விளித்தற்று - கூற்றத்தைக் கைகாட்டி அழைத்தாலொக்கும்.

கையால் விளித்தல் இகழ்ச்சிக்குறிப்பிற்று. தாமேயும் உயிர் முதலிய கோடற்கு உரியாரை அதற்குமுன்னே விரைந்து தம்மேல் வருவித்துக்கொள்வார் இறப்பினது உண்மையும் அண்மையும்கூறியவாறு. இவை இரண்டு பாட்டானும் வேந்தரைப் பிழைத்தலின் குற்றம் கூறப் பட்டது.

மணக்:— வலியுடையார்க்கு வலியில்லாதார் இன்னாதவற்றைச் செய்தல், தம்மைக் கொல்லும் கூற்றத்தைக் கைகாட்டி அழைத்தாற் போலும் எ - று,

பரிப்:— மேல்கூறிய மூவரினும் அரசரைப் பிழைத்தலால் வரும் குற்றம் கூறுவார் முற்பட உயிர்க்குக் கேடு வரும் என்றார்.

பரிதி:— தன் சிவனை ஒருவருக்கும் கொடாதவன் காலனைப் 'போர்செய்ய வா' என்று அழைத்ததற்கு ஒக்கும் பெரியோருடன் பகை கொள்ளுதல் எ - .

காளிங்:— தமக்கு மிகவே வேதனை வருதலை யாரும் வேண்டார் அன்றோ? மற்று அதற்கு உரிய கூற்றத்தை 'இங்கே வா' என்று தாமே தம் கைகாட்டி அழைத்த அத்தன்மைத்து; யாது எனின் தவ நெறியாளராகிய பெரியோர்க்கு மற்று அஃது இல்லாராகிய சிறியோர் இன்னாதனவற்றைச் செய்தல் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"வெஞ்சின மன்னவன் வேண்டாத செய்யினும்
நெஞ்சத்துக் கொள்வ சிறிதும் செயல்வேண்டா
என்செய் தகப்பட்டக் கண்ணும் எழுப்புபவோ
துஞ்சு புலியைத் துயில்." —பழ. நா.

"எல்லாத் திறத்தும் இறப்பப் பெரியாரைக்
கல்லாத் துணையார் கயப்பித்தல் - சொல்லின்
நிறைந்தார் வளையினுய் அஃதால் எருக்கு
மறைந்தியானை காய்த்தி விடல்." —ஷ

"காலனை அளியன்தானே கையினால் விளிக்கும்." —சீவக. 2148.

முதுமொழிவெண்பாக்கள்:

"முத்தமிழ்ஞா னத்தலைவர் முன்னம் பகைசாரிப்
புத்தனெதிர் நின்றிடியிற் பொன்றினான் - இத்திறமென்." —திருத். 38.

"சொல்வல் லகத்தியர்க்குச் சூழ்ச்சிசெய்த வாதாவி
வில்வலனும் மாய்ந்தார் இரங்கேசா - மல்வல்ல." —இரங். 90.

குறிப்பு:

மூவகை ஆற்றலாவன தன்வலியும், மாற்றான்வலியும், துணைவலியும். கையால் விளித்தல் - அண்மையிற் சென்று அடக்க ஒடுக்கத்தோடு அழைக்கவேண்டியவர்களைக் கைதட்டியழைத்தலும், கைச்சாடைகாட்டி அழைத்தலும் இகழ்ச்சியாதலின் இகழ்ச்சிக் குறிப்பாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

895. யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— வெந் துப்பின் வேந்து செறப்பட்டவர் - பகைவர்க்கு வெய்தாய வலியினையுடைய வேந்தனால் செறப்பட்ட அரசர், யாண்டுச் சென்று யாண்டும் உளராகார் - அவனைத் தப்பி எங்கே போய் உளராவர், ஓரிடத்தும் உளராகார்.

இடைவந்த சொற்கள் அவாய்நிலையான் வந்தன. வெந் துப்பின் வேந்து ஆகலால் தன் னிலம் விட்டுப்போயவர்க்கு இடங்கொடுப்பார் இல்லை, உளராயின் இவர் இனியாகார் என்பது நோக்கி அவனோடு நட்புக்கோடற் பொருட்டும் தானே வந்தெய்திய அவருடைமை வெளவுதற் பொருட்டும் கொல்வர், அன்றெனின் உடனே அழிவர் என்பன நோக்கி, யாண்டுச் சென்று யாண்டும் உளராகார் என்றார். இதனால் அக்குற்றமுடையார் அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்யார் என்பது கூறப்பட்டது.

மணக்:— எவ்விடத்துச் செல்லினும் எவ்விடத்தும் உளராகார்; வெய்ய வலியையுடைய வேந்தனால் செறப்பட்டார் எ - று.

பரிதி:— எந்தத் தேசத்திலும் போய் பலதீர்த்தம் ஆடினும் மனுஷரானவர்கள் பெரியோர் முனிந்தால் உய்யார் எ - று.

காளிங்:— எவ்விடத்தில் சென்றும் எக்காலத்திலும் உளராக உய்யமாட்டார்: மற்று யார் எனின் உலகத்து நல்லோரால் விரும்பத்தக்க வலிக்கு ஒரு சக்ரவர்த்தியாகிய அரசரால் செறப்பட்டவர் எ - று.

ஈண்டு வெம்மை என்பது விருப்பம் என்றது, துப்பு என்பது வலி என்றது.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— 'வேந்து செறப்பட்டவர்' என்பதில் செறப்பட்டார் என்னும் வினைமுற்றுப்பெயர் ஈற்றயல் திரிந்துவந்தது என்பர். (இ. கொ. 83.)

ஒப்புமைப்பகுதி:

"மன்னவன் ஆணைக்கீழ் மற்றையார் மீக்கூற்றம்
என்ன வகையாற் செயப்பெறுப - புன்னைப்
பாப்புநீர் தாஅம் படுகடல்தண் சேர்ப்ப
மாத்திரின்கீ ழாகா மரம்." —பழ. நா.

"வேந்தொடு மாறுகோடல் விளிகுற்றார் தொழில தாகும்"
—சீவக 1089.

"சக்கர நெறி நில்." —ஆத்தி. 44.

"வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை." —கொன்றை. 88.

"கொற்றவனோடு எதிர்மாறு பேசவேண்டாம்." —உலக. 4.

குறிப்பு:

சினந்த அரசன் யாரும் அணுகுதற்கரிய வலிமையை உடையனாய் இருந்த லின் அவனால் செறப்பட்டவர் யாண்டும் உளராகார் ஆயினர். யாண்டும் என்றது அவ்வரசனுக்கு மாற்றரசன் நாட்டையும் உள்ளடக்கி நின்றது. இவன் காரணமாகப் பகைவிளைத்துக்கொள்ளப் பகைவனும் விரும்பான் என்பது.

—தொகுப்பாசிரியர்.

896. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— எரியால் சுடப்படினும் உய்வு உண்டாம் - காட்டிடைச் சென்றான் ஒருவன் ஆண்டைத் தீயால் சுடப்பட்டானாயினும் ஒருவாற்றான் உயிருய்தல் கூடும்; பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார் உய்யார் - தவத்தான் பெரியாரைப் பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றானும் உயிருய்யார்.

தீ, முன் உடம்பினைக் கதுவி, அதுவழியாக உயிர்மேல்சேறலின் இடையே உய்யவுங்கூடும், அருந்தவர்வெகுளி அன்னதன்றித் தான் நிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்கும் காத்தலரிது ஆகலின், அது கூடாதாகலான், அதற்கு ஏதுவாய பிழைசெய்யற்க என்பதாம்.

மணக்:— தீயினால் சுடப்படினும் உய்தல் உண்டாம்; பெரியாரைப் பிழைத்தொழுகுவார் உய்யார் எ - று.

இது முனிவரைப் பிழைத்தலினால் வரும் குற்றம் கூறிற்று. முற்பட உயிர்க்கேடு வரும் என்று கூறினார்.

பரிதி:— நெருப்புப் பற்றினமரம் வேர் உண்டாய் பதினைந்து நாளையில் கிளைக்கும்; பெரியார் கோபித்தால் கிளையற வெந்து போய்விடும் எ - று.

காளிங்:— தீயினால் சுடப்படினும் யாதானும் ஒருவாற்றால் பிழைப்பு உண்டாகவும் கூடும்: பிழையார் பெரியோரைப் பிழைத்து ஒழுகுமவர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" இன்னா பெரியார்க்குத் தீயசெயல் " —இன்னா 27.

பெருமையுடையாரைப் பீடழித்தல் இன்னா." —ஷை 28.

" நீத்த வராகியோர் நெருப்பு யிர்த்திடின்
காத்திடும் கடவுளும் கலங்கும் ஆதலால்
ஏத்துவ தேகடன் என்று மைந்தனே
யாத்தர்கள் பொறுப்பர்என் றவமதித் திடேல்." —விநா. அரசி. 14.

குறிப்பு:

பெரியாரைப் பிழைத்தொழுகுவார் உய்யார் என்றது அவரால் செறப்பட்டன்று. விட்டில் தன் இயற்கையால் தீயில் மாய்வதுபோலப் பிழைப்பார் தன்னியற்கையால் கெடுவாரென்பது கருத்து.

பரிமேலழகர் 'அருந்தவர்வெகுளி அன்னதன்றித் தாம் நிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்கும் காத்தல் அரிதாகலின்' என்று உரைப்பது நீத்தார்பெருமை அதிகாரத்தில் 'குணமென்னும் குன்றேறி நின்றார்' என்னும் குறளை உட்கொண்டு. ஆண்டும் அவர் உரை அவ்வளவு ஏற்புடைத்து அன்மைஅறிக. ஆண்டு நீத்தாரது இலக்கணம் கூறவந்த பரிமேலழகர் "செயற்கரிய செய்வார்" என்னும் குறள்

உரையில் 'செயற்கு எளியவாவன வெஃகலும், வெகுடலும் முதலாயின' என்றார். வெகுளல் அருந்தவரிடம் அரைக்கணம் இருந்தாலும் குற்றமே; ஆதலால் அக்குறளுக்கு "நீத்தாரால் வெகுளியைத் தன்கண் கணப்பொழுதும் காக்கமுடியாது" என்ற பரிதியார் உரையே நயந்தருதல் காண்க.

—தொகுப்பாசிரியர்.

897. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்
தகைமாண்ட தக்கார் செறின். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— தகை மாண்ட தக்கார் செறின் - சாப அருள்கட்கு ஏதுவாய பெருமைமாட்சிமைப்பட்ட அருந்தவர் அரசனைவெகுள்வாராயின், வகை மாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என்னும் - உறுப்பழகு பெற்ற அவன் அரசாட்சியும் ஈட்டிவைத்த பெரும் பொருளும் என்பட்டு விடும்.

உறுப்பு - அமைச்சு, நாடு, அரண், படை என இவை. செறின் என்பது அவர் செறுமை தோன்ற நின்றது. இவ்வெச்சத்தான் முன் வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும். அரசர் தம் செல்வக்களிப்பான் அருந்தவர்மாட்டுப் பிழை செய்வராயின், அச்செல்வம் அவர் வெகுளித் தீயான் ஒருகணத்துள்ளே வெந்துவிடும் என்பதாம்.

மணக்:— எல்லாவகையானும் மாட்சிமைப்பட்ட வாழ்க்கையும் மிக்க பொருளும் என்ன பயனுடையனவாம்; பெருமையால் மிக்க தகுதியுடையார் செறுவாராயின் எ - று.

பரிதி:— தவத்தின்வகை தானத்தின்வகை உண்டாயினும் அதனால் என்னபயன்? பெரியோர் முனிந்தால் எ - று.

காளிங்:— நூல் வகுத்த வகையனைத்தும் மாட்சிமைப்பட்ட இல்வாழ்க்கையும் அதற்குச் சிறந்த பொருளும் உடைத்து ஆயினும் என்னும்? தவமும் ஞானமும் ஒழுக்கநெறியும் உடைய சீரார் செறின் எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

"எஞ்சலிலா வாழ்வும் இராவணனும் போனதொரு
செஞ்சிலையால் அன்றோ தினகரா - மிஞ்சு." —தினகர. 94.

898. குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— குன்று அன்னார் குன்ற மதிப்பின் - குன்றத்தை ஒக்கும் அருந்தவர் கெட நினைப்பாராயின், நிலத்து நின்றன்னார் குடியொடு மாய்வர் - அப்பொழுதே இந்நிலத்து நிலைபெற்றாற்போலும் செல்வர் தம்குடியொடும் மாய்வர்.

வெயில் மழை முதலிய பொறுத்தலும் சலியாமையும் உள்ளிட்ட குணங்கள் உடைமையின், குன்றன்னார் என்றார்: *"மல்லன் மலையனைய மாதவர்" என்றார் பிறரும். நிலைபெற்றாற்போறலாவது இறப்பப்பெரியராகலின் இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லை என்று கண்டாரால் கருதப்படுதல்.

மணக்:— மலைபோலப் பெரியாரைக் குறைய மதிப்பாராயின் உலகத்தின்கண்ணே நின்றாற்போலத் தோன்றுகின்றவர் குடியோடே கூடமாய்வர் எ - று.

குன்ற மதித்தல் - அவமதித்தல்.

பரிப்:— நின்றாற்போல என்றது நிலையாமை குறித்தது. இது மந்திரி புரோகிதரைப் பிழைத்து ஒழுகினால் அவர் அவமதிப்பாராயின் தாமும் தம்கீழ்வாழும் குடியும் மாய்வர் என்று கூறிற்று.

பரிதி:— மேருகிரியை ஒத்த பெரியோர் ஒருவரைப் பிழைத்தால் குடி கெட்டுத் தானும் மாளுவார் எ - று.

காளிங்:— தவம் முதலியவற்றால் பெரியோராகிய மலைபோலச் சிறிதும் சலியாதோரைக் குறைபட நினைப்பின் இவ்வுலகத்துச் சிறந்த குடிப்பிறப்போடு நின்று வைத்தே மற்று அத்தன்மையாரும் அதனால் ஓர் ஆக்கம் இன்றி நசிப்பர் எ - று.

ஒப்புமைப்பகுதி :

"நெடும்காலம் வந்தார் நெறியின்மை கண்டு
நடுங்கிப் பெரிதும் நலிவார் பெரியர்
அடும்பார் அணிகானல் சேர்ப்ப கெடுமே
கெடும்பாடு உடையான் குடி." —பழ. நா.

* சீவக. 2789.

குறிப்பு:

பொறுத்தற்கரிய துன்பத்திற்கும் அசையாது நிற்றலின் குன்றன்னார் என்றார். நின்றன்னார் என்றது இவரது நிலைபேறு உண்மையன்று என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

899. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். (௯)

உரைப்பகுதி:

பரிமே:— ஏந்திய கொள்கையார் சீறின் - காத்தற்கு அருமையான் உயர்ந்த விரதங்களை உடையார் வெகுள்வாராயின், வேந்தனும் இடை வேந்து முரிந்து கெடும் - அவராற்றலான் இந்திரனும் இடையே தன்பதம் இழந்துகெடும்.

*"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" என்றார் பிறரும். நகுடன் என்பான் இந்திரன்பதம்பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர்பிழை செய, அதனால் சாபம் எய்தி அப்பதம் இடையே இழந்தான் என்பதனை உட்கொண்டு, இவ்வாறு கூறினார். இவை நான்குபாட்டானும் முனிவரைப் பிழைத்தலின் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— உயர்ந்த கோட்பாட்டை யுடையோர் வெகுள்வராயின், இந்திரனும் இடையிலே இற்றுத் தன்னரசு இழக்கும் எ - று.

இது பொருட்கேடு வரும் என்று கூறிற்று.

பரிதி:— நல்லொழுக்கமான தவநெறியிலே நின்றார் முனிந்தால் வேந்தனாகிலும் சடுதியிலே கெடுவன் எ - று.

காளிங்:— சொன்ன தவமும் ஞானமும் முதலியவற்றால் மிக்க கோட்பாட்டை உடைய பெரியோர் சீறுவர் ஆயின், அரசனும் தனது வாழ்க்கை இடையே முரிந்து கெட்டுவிடும் எ - று.

*தொல். பொருள். அகத். 5.

வேந்தனும் என்ற உம்மை சிறப்பும்மை ஆகலான்................. நாடும் பொருளும் பெரும் படையும் உடையவர்.....................கெட்டு விடும் எ - று.

ஏந்துதல் - மிகுதல்.

மேற்கோள்பகுதி :

சாமுண்டி:— விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து; 'ஏந்திய கொள்கை......கெடும்' என்பதனால் வேந்து இராச்சியம் என்றுமாம்.'' (பு. வெ. 65.)

ஒப்புமைப்பகுதி :

'' ஆற்றன் மிகுந்த வேந்தரையும் அரிய தவத்து முனிவரையும்
போற்றி ஒழுகின் எப்பொருளும் போற்ற லாகும் அவமதிப்பின்
தேற்ற மிகும்சார் பினரே னும் சிதைவர் திகழ்முப் புரச்சூரன்
சாற்றிற் திரன்மா லாதியரும் தளர்ந்தார் எனின்சாற் றுவதென்னே.
விநா. அரசி. 137.

முதுமொழிவெண்பாக்கள்:

''கொன்படைகள் நீறாகக் கோசிகனார் சாபத்தால்
துன்பமுற்றார் நால்வேந்தர் சோமேசா — இன்புதவும்.'' —சோமேசர்.90.

''தெற்றிஉதங் கற்கமிழ்நீ யாதுவஞ்சித் திந்திரன்சீர்
முற்றுமிழந் தெய்த்தான் முருகேசா — உற்றுணரின்.'' —முருகேசர். 90.

900. இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். (௯௦)

உரைப்பகுதி:

பரிமே:— சிறந்து அமைந்த சீரார் செறின் - கழியமிக்க தவத்தினையுடையார் வெகுள்வராயின், இறந்து அமைந்த சார்பு உடையராயினும் உய்யார் - அவரான் வெகுளப்பட்டார் கழியப் பெரிய சார்பு உடையராயினும், அதுபற்றி உய்யமாட்டார்.

சார்பு - அரண், படை, பொருள், நட்பு என இவை. அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலால் திரிபுரம்போல அழிந்துவிடும் ஆகலின், உய்யார் என்றார். சீருடையது சீர் எனப்பட்டது. இதனால் அக்குற்றமுடையார் சார்பு பற்றியும் உய்யார் என்பது கூறப்பட்டது.

மணக்:— மிகவும் அமைந்த துணையுடையராயினும் கெடுவர்; மிகவும் அமைந்த சீர்மையுடையார் செறுவாராயின் எ - று.

இது துணையுடையாராயினும் உயிர்க்கேடு வரும் என்றது.

பரிப்:— எல்லையற்ற சார்வாகிய உறவு தன்மம், கல்வி, தவம், தானம் உண்டாகிலும் பெரியவர் முனிந்தால் இது தங்காது எ - று.

காளிங்:— சீர்மைப்பாட்டினை உடையார் யாவர்? மற்று அவர் குணம், கல்வி, கேள்வி, அறிவுடைமை முதலியவற்றான் மிக்கு அமைந்த சார்பினையுடையர் ஆயினும் உய்ந்து கரை ஏறார்: தவமும் ஞானமும் முதலியவற்றான் மிக்கு அமைந்த சீர்மைப்பாட்டினை உடையார் தம்மைச் செறின்; எனவே இங்ஙனம் பெரியோரை என்றும் பிழையற்க என்பது பொருள் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"இடுகுடைத்தேர் மன்னர் எமக்கமையும் என்று
கடிதவர் காதலிப்பத் தாங்காதல் கொண்டு
முடிய எனைத்தும் உணரா முயறல்
கடிய கனைத்து விடல்."

—பழ. நா.

"விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்
அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின்."

—நாலடி. 164.

குறள்வைப்புமுறை

பரிமே:— ஆற்றுவார், பெரியாரை, கெடல்வேண்டின், கூற்றத்தை, யாண்டுச்சென்று, எரியால், வகைமாண்ட, குன்றன்னார், ஏந்திய, இறந்தமைந்த.

மணக்:— கெடல்வேண்டின், பெரியாரை, கூற்றத்தை, வகைமாண்ட, யாண்டுச்சென்று, எரியால், இறந்தமைந்த, ஏந்திய, குன்றன்னார், ஆற்றுவார்.

பரிதி:— ஆற்றுவார், இறந்தமைந்த, ஏந்திய, வகைமாண்ட, எரியால், யாண்டுச்சென்று, கூற்றத்தை, குன்றன்னார், பெரியாரை, கெடல்வேண்டின்.

காளிங்:— ஆற்றுவார், இறந்தமைந்த, ஏந்திய, எரியால், வகைமாண்ட, கூற்றத்தை, யாண்டுச்சென்று, குன்றன்னார், பெரியாரை, கெடல் வேண்டின்.

91. பெண்வழிச்சேறல்.

தொகுப்புரை:

[பெண்புத்தியைக்கேட்பவர் பெரும்பயன் எய்தமாட்டார்கள். பொருளீட்டுபவர் பெண்வழியாகப்பெறும் இன்பத்தையும் இகழ்வர். பெண்மையை விரும்புபவனது செல்வம் ஆடவர்க்கெல்லாம் நாணத்தைத் தருவது பெண்டாட்டிக்குப் பயப்படுவது பெரியோர்களிடைச் செல்லும்போது வெட்கத்தைக் கொடுக்கும். பெண்டாட்டிக்குப் பயப்படுபவனுக்கு மறுமை இன்பம் இல்லை. இம்மையில் அவனுடைய வினைத்திறம் கொண்டாடப்படமாட்டாது. மனைவிக்குப் பயப்படுபவன் எப்பொழுதும் நல்லவர்களுக்கு நல்லனசெய்ய அஞ்சுவான். அமரர்போல வாழ்ந்தாலும் அகமுடையாளுக்கு அஞ்சுபவர் ஆண்மையில்லாதவர். மனைவிக்குக் குற்றேவல் செய்யும் ஆண்மையைக் காட்டிலும் வெட்கமுடைய பெண்மையே மேல். மனைவியின் விருப்பப்படி நடப்பவர் சிநேகிதர்களுக்கு நல்லன செய்யமாட்டார். மனைவிக்கு ஏவல் செய்பவனிடம் அறம், பொருள், இன்பம் மூன்றும் இல்லை. ஆராய்ச்சி அறிவோடு தகுதியை உடையவர்களுக்குப் பெண்ணேவல்கேட்கும் பேதைமைஇல்லை.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனிக் காமத்தான் வருவன நேரே பகையல்லவாயினும் ஆக்கஞ்சிதைத்தல் அழிவுதலைத் தருதல் என்னும் தொழில்களால் பகையோடு ஒத்தலின் பகைப்பாற்படுவனவாம் ஆகலான், அவற்றைப் பகைப் பகுதியது இறுதிக்கண் கூறுவான் தொடங்கி, முதற்கண் பெண்வழிச் சேறல் கூறுகின்றார். அஃதாவது தன்வழி ஒழுகற்பாலளாய இல்லாள் வழியே தான் ஒழுகுதல்.

மணக்:— இனித் தன்னால் வரும் துன்பப்பகுதியாவது இன்பங் காரணமாக மனையாள்வழி ஒழுகுதலும், கணிகையரோடுகூடி ஒழுகுதலும், நறவுண்டு களித்தலும், சூதாடுதலும், தீயஉண்டி மிக உண்டலும் என ஐந்து வகைப்படும்; அவற்றுள், பெண்வழிச் சேறலாவது மனைவியர் வழியொழுகுதலினால் வரும் குற்றங் கூறுதல். இது மூன்று வகைப்படும்: மனையாளை அஞ்சுதலும், அவள் சொன்னது செய்தலும், அறத்தினும் பொருளினும் சாராத காதலினும் மிக்க காதலும் என.

பரிதி:— பெண்வழி சேறலாவது மனையாள் வார்த்தை கேட்டல் எ - று.

901. மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. (க)

உரைப்பகுதி :

பரிமே:— மனை விழைவார் மாண் பயன் எய்தார் - இன்பம் காரணமாகத் தம்மனையாளை விழைந்து அவள் தன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன்துணையாய அறத்தினை எய்தார்; வினை விழைவார் வேண்டாப் பொருளும் அது - இனிப் பொருள்செய்தலை முயல்வார் அதற்கு இடையீடு என்று இகழும்பொருளும் அவ்வின்பம்:

மனையும் விழைதலும் பயனும் ஆகுபெயர். அவ்வின்பம் அவள் தன்மையராதற்கு ஏதுவாய இன்பம். அஃது, அவளால்பயனுய அறத்தினும் அவ்வறத்திற்கும் தனக்கும் ஏதுவாய பொருளினும் செல்லவிடாமையின், விடற்பாற்று என்பதாம்.

மணக்:— மனையாளைக் காதலித்து ஒழுகுவார் நற்பயனைப் பெறார்; யாதானும் ஒருவினையைச் செய்து முடிக்கவேண்டுவார் விரும்பாத பொருளும் அவரை விழையாமையே எ - று.

இஃது அறத்தினும் பொருளினும் காதலின்றி, அவர்தம்மையே காதலிப்பார்க்கு அறனும் பொருளும் இல்லையாம் என்றது.

பரிதி:— பெண் ஏவல் செய்வார் பெரியராகார்; பெண் சொல் கேளாதவர் பெரியவர் எ - று.

காளிங்:— மனையாளைச் சால விரும்புவார் யாவர்? மற்று அவர் மாட்சிமை உடைய மறுமைப் பயனும் எய்துதல் இலர் ஆக ஏயும் தம் கருமம் விரும்பிச் செல்வார் யாவரும் வேண்டாப் பொருளும் அவ்விழைப்பம் தானே எ - று.

உரைப்பகுதி:

"தன்னால் ஆளப் படுமனைவி தன்னால் ஆளப் படுவானேல்
அன்னாற் கறனும் பொருளும்உள வாகா தொல்லைப் பொருளானும்
மன்னு பயன்கள் வினைமுடியா மறுமை யணுகா தெப்பிழையும்
முன்னும் பின்னும் பெருநாணும் மூவாப் பழியும் அறிமைந்தா."

—விநா. அரசி. 138.

"மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கையின் றுணர்தி வாலி செய்கையால் சாலும் இன்னும்
அங்கவர் திறத்தி னானே அல்லலும் பழியும் ஆதல்
எங்களிற் காண்டி யன்றே இதற்குவே றேதி யாதோ."
—கம்ப. அரசி. 33.

"தையல் சொல் கேளேல்." —ஆத்தி. 63.

முதுமொழிவெண்பாக்கள்:

"சந்தனுவேந் தேழு தனையர் உயிரிழந்தான்
இந்துநுதல் கங்கைக் கிரங்கேசா - அந்தோ." —இரங். 91.

குறிப்பு:

ஆடவன் மனைவியை விழைவது இல்லறம் செய்ய. அது முடியாமையின் மாண் பயன் எய்தாது என்றார். மாண்பயன் - இல்லறத்தின் மாண்பாகிய பயன். இன்பத்தைப் பொருளென்றார் புருஷார்த்தங்களுள் ஒன்றாதலின்.

—தொகுப்பாசிரியர்.

902. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— பேணாது பெண் விழைவான் ஆக்கம் - தன் ஆண்மையைவிட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்திநின்ற செல்வம், பெரியது ஓர் நாண் ஆக நாணுத் தரும் - இவ்வுலகத்து ஆண்பாலார்க்கு எல்லாம் பெரியதோர் நாணுண்டாகத் தனக்கும் நாணுதலைக் கொடுக்கும்.

எய்திநின்றதாயிற்று, படைக்கும் ஆற்றல் இலனாகலின். அச்செல்வத்தால் ஈதலும் துய்த்தலும் முதலிய பயன்கொள்வாள் அவளாகலின், அவ்வாண்மைச் செய்கை அவள்கண்ணதாயிற்று என்று ஆண்பாலார் யாவரும் நாண அதனால் தன் ஆண்மையின்மை அறிந்து பின் தானும் நாணும் என்பதுநோக்கிப் பெரியதோர் நாணாக நாணுத் தரும் என்றார். இவை இரண்டு பாட்டானும் மனைவிழைதற் குற்றம் கூறப் பட்டது.

மணக்:— அறத்தினையும் பொருளினையும் பேணாது மனையாளைக் காதலிப்பானது செல்வம், பெரியதோர் நாணம் உலகத்தே நிற்கும்படி யாகத் தனக்கு நாணினைத்தரும் எ - று.

பரிப்:— அவன் செல்வத்திற்குப் பயன் நாணமாய் முடியும். என்னை அச்செல்வம் அவற்றால் பின்பு என்ன செய்வோம் என்று நாணுவன் ஆதலின். பெரியதோர் நாணுதலாவது இவன் காமத்தால் கெட்டான் என்று உலகத்தார் அறிய நிற்பது ஓர் நாணம் உண்டாதல். சச்சந்தன் திறம் காண்க.

பரிதி:— தன்மத்தை வேண்டாம் என்று பெண்சொல் கேட்பான் பெரியோரால் நாணப்படுவான் எ - று.

காளிங்:— தான் ஒழுகும் தகுதியைப் பொருளாக விரும்பாது மனையாளைப் பொருளாக விரும்புவானது பொருள் முதலிய ஆக்கம், ஒருவன் உள் அஞ்சி நாணைத் தரும்: அவற்றுளெல்லாம் பெரியதோர் நாணமாம்; மற்று அங்ஙனம் தீதாகிய நாணுதலைத் தரும் எ - று.

பேணாது என்பது தன் தகுதியை விரும்பாது என்றது.

குறிப்பு:

பெண்வழிவந்த செல்வத்தால் பெறும்பயனாகிய ஈதலும் துய்த்தலும் அவளுடையனவாகலின் ஆக்கம் நாணுத்தருவதாயிற்று. "சீதனம் வேதனை" என்ற பழமொழியும் நோக்குக.

—தொகுப்பாசிரியர்.

903. இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். (௩)

உரைப்பகுதி:

பரிமே:— இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை - ஒருவன் இல்லாள்மாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம், நல்லாருள் நாணு எஞ்ஞான்றும் தரும் - அஃது இலராய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்தும் கொடுக்கும்.

அவள்தான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளை அஞ்சுதல் இயல்பின்மையாயிற்று. அங்ஙனம் அஞ்சி ஒழுகுதலின், அவளை வியமிப் பாரில்லையாம், ஆகவே, எல்லாக்குற்றமும் விளையும் என்பதுநோக்கி, எஞ்ஞான்றும் நாணுத்தரும் என்றார்.

மணக்:— மனையாள்மாட்டுத் தாழ்ந்து ஒழுகும் இயல்பாகிய எல்லா நாளும் நல்லாரிடத்து நாணுதலைத் தரும் எ - று.

பரிப்:— மனையாளை அஞ்சித்தாழ்ந்து ஒழுகுவனாயின் அவளைக் கடியும் தன்மை இலன் ஆவான்: அதனானே நல்லார்முன்பு நாணி நிற்கும்: ஆதலால் காம நுகர்ச்சியும் பெறான் என்றது. இவை நான்கினும் அஞ்சி ஒழுகுவார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது.

பரிதி:— மனையாளிடத்தில் விருப்பம், எப்போதும் நல்லோரிடத்தில் நாணம் தரும் எ - று.

காளிங்:— மனையாள்மாட்டு உள் அழுந்திச் செல்கின்ற மரபுக்கேடானது மற்று எஞ்ஞான்றும் தனக்குப் பல சான்றோர் இருந்த இடத்து எல்லாம் பெரியதோர் கூச்சமான நாணத்தைத் தரும் எ - று,

முதுமொழிவெண்பாக்கள்:

"கற்பின்மை யில்லாள்பால் கண்டுமய லுற்றழிந்தான்
சொற்புண்ட ரீகாக்கன் சோமேசா - பொற்பெண்ணி."

—சோமேசர். 91.

904. மனையாளை அஞ்சும் மறுமைஇ லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— மனையாளை அஞ்சும் மறுமை இலாளன் - தன் மனையாளை அஞ்சி ஒழுகுகின்ற மறுமைப்பயன் இல்லாதானுக்கு, வினை ஆண்மை வீறு எய்தல் இன்று - வினையை ஆளுந்தன்மை உண்டாய வழியும் நல்லோரால் கொண்டாடப்படாது.

உண்டாயவழியும் என்பது அவாய்நிலையான் வந்தது. இல்லறஞ் செய்தற்கு உரிய நன்மையின்மையின் மறுமையிலாளன் என்றும், வினையையாளுந்தன்மை தன்தன்மை இல்லாத அவனுன் முடிவுபோகாமையின் வீறெய்தலின்று என்றும் கூறினர்.

மணக்:— மனையாளை அஞ்சுகின்ற மறுமைப்பயன் எய்தாதவன் ஒரு வினையை ஆளுந்தன்மை, பெருமை யெய்துதல் இல்லை எ - று'

இது பொருள் செய்ய மாட்டான் என்றது.

பரிதி:— பெண்சாதிக்குப பயப்படுவானாகில் அவனுக்கு மறுமையும் இல்லை, இம்மைக்குப் புகழும் இல்லை எ - று.

காளிங்:— தன் மனையாளைத் தான் அஞ்சி ஒழுகுகின்ற அம் மறுமைப்பயன் இழந்தோனது வினையாட்சி ஒரு நன்மை பெறுதல் இல்லை எ - று.

குறிப்பு:

இம்மையின்பம் ஒன்றே கருதி மனையாளுக்கு அஞ்சுகின்றானாதலின் அவனை மறுமையிலாளன் என்றார். இவன் செய்யும் வினைகளிலும் அவள் குறுக்கிடுவளாதலின் இவனிடத்து ஆளும் தன்மையிருப்பினும் அது தனிச்சிறப்பு அடையாதென்பார், வீறு எய்தல் இன்று என்றார். மனையாளை யஞ்சும் என்பது பகைவரை யஞ்சும் என்புழிப்போல நான்கன்பொருளில் வந்தது.

—தொகுப்பாசிரியர்.

905. இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— இல்லாளை அஞ்சுவான் - தன்மனையாளை அஞ்சுவான், நல்லார்க்கு நல்லசெயல் எஞ்ஞான்றும் அஞ்சும் - தான்தேடிய பொருளே யாயினும் அதனால் நல்லார்க்கு நல்லனசெய்தலை எஞ்ஞான்றும் அஞ்சா நிற்கும்.

நல்லார் - தேவர், அருந்தவர், சான்றோர், இருமுதுகுரவர் முதலாயினாரும் நல்விருந்தினரும். நல்லனசெய்தல் - அவர்விரும்புவன கொடுத்தல். அது செய்யவேண்டும் நாள்களினும் என்பார், எஞ்ஞான்றும் என்றார். *"இல்லாளை அஞ்சி விருந்தின் முகங்கொன்ற நெஞ்சின், புல்லாளனாக" என்றார் பிறரும்.

மணக்:— மனையாளை அஞ்சுவான், எஞ்ஞான்றும் நல்லார்க்கு நல்லவை செய்தலை அஞ்சும் எ - று.

---

*சீவக. 2319.

இஃது அறஞ்செய்ய மாட்டான் என்றது.

பரிதி:— மனையாள் கோபத்திற்குப் பயப்படுவானாகில் நல்லோர்க்கு நல்லது செய்யப் பயப்படுவான் எ - று.

காளிங்:— தன் மனையாளை அஞ்சுவான் யாவன்? மற்று அவன் பெரிதும் அஞ்சும்: யாதினை எனின், எஞ்ஞான்றும் உலகத்து நல்லோராகிய சான்றோர்க்குக்கூட நல்லனவற்றைச் செய்தலை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"இல்லாளை அஞ்சி விருந்தின்முகம் கொன்ற நெஞ்சின்
புல்லாளனாக மறந்தோற்பின் எனப்பு கைந்து
வில்லாளழுவம் பிளந்திட்டு வெகுண்டு நோக்கிக்
கொல்யானை உந்திக் குடைமேலுமோர் கோல்தொடுத்தான்."
—சீவக. 2319.

முதுமொழிவெண்பாக்கள்:

"மெய்யடியார் ஆயுமடி மேற்பெயுநீர் பிந்தவாள்
கையடியும் கூர்ந்தார் கலிக்கம்பர் - மையலைக்கொண்(டு)." —திருத். 58.

குறிப்பு:

'இருந்துமுகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி' விருந்துபேணவேண்டினும் அவள் அடிப்பாடி அச்சுறுத்துவாளாதலின் நல்லதுசெய்ய அஞ்சும் என்றார்.
—தொகுப்பாசிரியர்.

906. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர். (சு)

உரைப்பகுதி :

பரிமே:— இல்லாள் அமை ஆர் தோள் அஞ்சுபவர் - தம் இல்லாளுடைய வேய்போலும் தோளினை அஞ்சுவார், இமையாரின் வாழினும் பாடு இலர் - வீரத்தால் துறக்கம் எய்திய அமரர்போல இவ்வுலகத்து வாழ்ந்தாராயினும், ஆண்மை இலர்.

அமரர்போல வாழ்தலாவது பகைத்த வீரர்தோள்களை எல்லாம் வேறலான் நன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையின், வாழினும் என்றார். அமையார் தோள் எனவே, அஞ்சுதற்காரணத்தது எண்மை கூறியவாறு. வீரர்தோள்களை வென்றாராயினும் இல்லாள் தோள்களை அஞ்சுவார் ஆண்மையிலர் என்பதாம். இவை நான்கு பாட்டானும் அவளை அஞ்சுதற்குற்றம் கூறப்பட்டது.

மணக்:— தேவரைப்போல இன்புற்று வாழினும், பெருமையில ராவர்; மனையாளது வேய்போலும் தோளை அஞ்சுபவர் எ - று.

இது செல்வமுடையாராயினும் பிறரால் மதிக்கப்படார் என்றது.

பரிதி:— தேவரைப்போல வாழ்ந்தாலும் பெருமையில்லை, மனை யாளுக்குப் பயப்படுவானாகில் எ - று.

காளிங்:— நுகர்ச்சியின்கண் ஒருமறு இன்றி வாழ்வார் அமரர் அன்றே: மற்று அவர்போல வாழினும் பெருமை இலரே: யாவர் எனின் அமைவளம் நிறைந்த தோளினளாகிய மனையாளை அஞ்சும் மக்கட் பண்பு இல்லார் எ - று.

குறிப்பு:

இமையவர்கண்டது உணவின்பம், ஊறின்பமே. மனையாளுக்கு அஞ்சு பவர்கள் அவ்விரண்டையும் பெற்றாலும் பெருமை இல்லையென்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

907. பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் - நாண் இன்றித் தன் இல்லாளது ஏவல் தொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண்தன்மையின், நாண் உடைப் பெண்ணே பெருமை உடைத்து - நாணினை உடைய அவள் பெண்தன்மையே மேம்பாடு உடைத்து.

நாணுடைப்பெண் என வேண்டாது கூறியது அவளேவல் செய்வானது நாணின்மை முடித்தற்கு ஆதலின், அம்மறுதலைத்தொழில்

வருவிக்கப்பட்டது. ஏவல் ஆகுபெயர். இறுதிக்கண் பெண் என்பதூஉம் அது. ஏவல் செய்வித்துக்கோடற் சிறப்புத் தோன்றப் பெண்ணே எனப் பிரித்தார்.

மணக்:— பெண்டிர் ஏவின தொழிலைச் செய்தொழுகும் ஆண்மையின், நாணமுடைய பெண்மையே தலைமை உடைத்தாம் எ - று.

இது பிறரால் மதிக்கப்படார் என்றது.

பரிதி:— பெண்ணுக்குப் பயப்படுகிற ஆண்மையினும் பெண்ணே விசேஷம் எ - று.

காளிங்:— மனையாள் ஏவல் கேட்டு அது செய்து ஒழுகும் ஆண்மை ஒருவர்க்குச் சிறுமைதரும் அதுவல்லது பெருமை உடைத்து அன்று: அதனால் அவ்வாண்மை படைப்பதில் ஆண்மகற்கு உள் அஞ்சும் நாணத்தையுடைய நன்னெறிப் பெண்ணே அவர்க்கு மிக்க பெருமையைக் கொடுக்கும் எ - று.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— பொருள் திரிபிற்கு மேற்கோள் காட்டி 'ஒழுகுவான் என்னும் முற்றினது பொருள் தன்னிலை திரிந்து பெயரெச்சத்தின் கண்ணே சென்றது' என்பர். (இ. கொ. 125.)

ஒப்புமைப்பகுதி:

"ஏண்பா லோவா நாண்மடம் அச்சம் இவையேதம்
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தம்பால் நணுகாரே
ஆண்பா லாரே பெண்பா லாரோ டடைவம்மா."

—கம்ப. கைகேசி. 39.

முதுமொழிவெண்பாக்கள்:

"பெண்புத்தி கேட்குமவர் பேயர்காண் மன்னவர்க்குத்
திண்புத்தி கூறும் தினகரா - நண்புற்றுப்."

—தினகர. 95.

குறிப்பு:

பெண்மை ஆண்மைகட்குப் பொருள் கட்புலனாகிய அமைதித்தன்மை, ஆளுந்தன்மை என்பர் நச்சினார்க்கினியர்.

—தொகுப்பாசிரியர்.

908. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். (அ)

உரைப்பகுதி :

பரிமே:—நன்னுதலாள் பெட்டாங்கு ஒழுகுபவர் - தாம்வேண்டியவாறன்றித் தம்மனையாள் வேண்டியவாறு ஒழுகுவார், நட்டார் குறை முடியார் - தம்மொடு நட்புச் செய்தார் உற்ற குறை முடிக்கமாட்டார், நன்று ஆற்றார் - அதுவேயன்றி மறுமைக்குத் துணையாய அறஞ்செய்யவும் மாட்டார்.

நன்னுதலாள் என்பதனை *"அமையார் தோள்" என்புழிப்போலக் கொள்க. அவள் தானே அறிந்து ஏவலும் பொருள்கொடுத்தலும் கூடாமையின், இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டார் என்பதாம்.

மணக்:— நல்ல நுதலினையுடையாள் விரும்பியவாறு செய் தொழுகுவார், தம்மொடு நட்டார் குறைதீர்க்கவும் மாட்டார்; அவர்க்கு நல்லது செய்யவும்மாட்டார் எ - று.

குறைதீர்த்தல் - உற்ற துயரம் தீர்த்தல்.

பரிப்:— நன்று ஆற்றல் - சிறந்தன செய்தல். இவையும் அவள் சொல்ல வேண்டுதலின் செய்யமாட்டார் என்றது.

பரிதி:— சிநேகித்தார்க்கு உண்டாகிய குறை முடியார்; நல்வழி நினையார்; பெண் சொல் கேட்பவர் எ - று.

காளிங்:— தனக்குச் சிறந்த நட்டார்க்கு ஒரு குறைவந்த இடத்து அதனைத் தீர்க்கமாட்டார். இனி அதுவேயும் அன்றிக் கல்வியும் கேள்வியும் முதலிய நன்கு செய்தலும் மாட்டார்: என் எனின் தன் மனையாளை விரும்பியது ஆண்மைக்குத் தகுதி அன்று என நாணுது மற்று ஆங்கே உள்ளமூழ்ந்தி ஒழுகும் அவர் எ - று.

---

* குறள். 906.

909. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— அறவினையும் - அறச்செயலும், ஆன்ற பொருளும் - அது முடித்தற்கு ஏதுவாய பொருட்செயலும், பிறவினையும் - அவ்விரண்டின் வேறாய இன்பச் செயல்களும், பெண் ஏவல செய்வார்கண் இல் - தம்மனையாள் ஏவல் செய்வார்மாட்டு உளவாகா.

புலன்கள் ஐந்தாகலின், பிறவினை எனப் பன்மையாயிற்று. அவைநோக்கி அறச்செயல் பொருட்செயல்கள் மூன்னே ஒழிந்தார்க்குத் தலைமை அவள்கண்ணதாகலின், பின் அவைதாமும் இலவாயின என்பது தோன்ற, அவற்றைப் பிரித்துக் கூறினார். இவை மூன்று பாட்டானும் அவள் ஏவல்செய்தற் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— அறம்செய்தலும், அமைந்த பொருள் செய்தலும், ஒழிந்த காமநுகர்தலும், பெண்ணேவல் செய்வார்மாட்டு இல்லையாம் எ - று.

இஃது அச்சமில்லாராயினும் சொன்னது செய்வாராயின், இம்மூன்று பொருளும் எய்தார் என்றது.

பரிப்:— இவை மூன்றினும் ஏவல் செய்தார்க்கு உளதாகும் குற்றம் கூறப்பட்டது.

பரிதி:— அறமும் பொருளும் இன்பமும் பெண் ஏவல் செய்வார்க்கு இல்லை எ - று.

காளிங்:— அறமும், பொருளும், இன்பமும் பெண் ஏவல் செய்து ஒழுகுவார்க்கு இல்லை எ - று.

பிறவினை என்றது இன்பம் என்றது.

குறிப்பு:

பெண்ணேவல் செய்வார்க்கு அவர்கள் எதிர்பார்த்த இன்பமும் இல்லையென்பார் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிதலாகிய ஐந்து வினையையும் அடக்கிப் பிறவினையும் இல் என்றார். பிறவினை - இன்பநுகர்ச்சி.

—தொகுப்பாசிரியர்.

910. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். (௧0)

உரைப்பகுதி:

பரிமே:— எண்சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு - கருமச் சூழ்ச்சிக்கண் சென்ற நெஞ்சத்தினையும் அதனினுய செல்வத்தினையும் உடையராய வேந்தற்கு, பெண் சேர்ந்து ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல் - மனையாளைச் சேர்தலான் விளையும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது.

[1]"இடனில் பருவத்தும்" எனவும் [2]"இடனின்றி இரந்தோர்க்கு" எனவும் வந்தமையின், இடன் என்பது அப்பொருட்டாதல் அறிக. இளமைக்காலத்தும் என்பார் எஞ்ஞான்றும் என்றார். அப்பேதைமை யாவது மேற்சொல்லிய விழைதல், அஞ்சல், ஏவல்செய்தல் என்னும் மூன்றற்கும் காரணமாயது. எதிர்மறை முகத்தான் அம்மூன்றும் இதனால் தொகுத்துக் கூறப்பட்டன.

மணக்:— எண்ணம் சேர்ந்த மனத்தினை விரிவாக உடையார்க்கு எல்லாநாளும் பெண்ணைச் சேர்ந்து ஆகும் அறியாமை இல்லையாம் எ - று.

எண்சேர்தலாவது இதனால் வருங்குற்றத்தினைத் தெரிந்து உணர்தல்.

பரிதி:— மோட்சம் இச்சையான மனத்தார் பெண்சொல் கேட்டலாகிய பேதைமைக்கு உட்படார் எ - று.

காளிங்:— [3]அறம், பொருள், இன்பம், வீடு என நான்கின் திறம் தெரிந்து எண்ணும் எண் சேர்ந்த நெஞ்சத்தின் இடம் பாடு உடையார் யாவர்? மற்று அவர்க்கு எஞ்ஞான்றும் பெண்வழிச்சென்று சேர்ந்து ஏவல் கேட்டு ஒழுகும் பேதைமை சிறிதும் இல்லை எ - று.

இனி, மற்று இவ்வாறு யாவர்க்கும் தாம் வரைந்துகொண்ட வரைவுமகளிர்மாட்டேயும் மனைவாழ்க்கை மரபு ஒழிய விழைந்து வாழ்தல் மரபு அன்று என்பதனை உணர்த்தி, மற்று இதன் பின்னரே வரைவின் மகளிர் ஆகிய பரத்தையர்மாட்டு மருவுதல் மரபு அன்று என்பதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

---

[1] குறள். 218. [2] கலித். 1: 19. [3] குறள். 501.

ஒப்புமைப்பகுதி :

" அங்கோட் டகலல்குல் ஆயிழையாள் நம்மொடு
செங்கோடு பாய்துமே என்றாள்மன் — செங்கோட்டின்
மேற்காணம் இன்மையால் மேவா தொழிந்தாளே
கால்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து." —நாலடி. 372.

முதுமொழிவெண்பாக்கள் :

" திசைவென் றவள்பதியும் செல்லா தவள்பின்
அசைவின்றித் தானுலகம் ஆளும் - இசையொன்ற."
—முதுமொழி. 138.

" தாசரதி யும்சீதை தன்வழிப்பட் டோர்மானால்
மோசம்போய்ச் சேர்ந்தான் முருகேசா — பேசுங்கால்."
—முருகேசர். 91.

குறள்வைப்புமுறை

பரிமே:— மனைவிழைவார், பேணாது, இல்லாள்கண், மனையாளை, இல்லாளை, இமையாரின், பெண்ணேவல், நட்டார், அறவினையும், எண்சேர்ந்த.

மணக்:— இமையாரின், இல்லாளை, மனையாளை, இல்லாள்கண், பெண்ணேவல், நட்டார், அறவினையும், மனைவிழைவார், பேணாது, எண்சேர்ந்த.

பரிதி:— இல்லாளை, மனையாளை, இமையாரின், அறவினையும், பெண்ணேவல், மனைவிழைவார், பேணாது, நட்டார், இல்லாள்கண், எண்சேர்ந்த.

காளிங்:— இல்லாளை, இமையாரின், அறவினையும், நட்டார், மனையாளை, பேணாது, இல்லாள்கண், மனைவிழைவார், பெண்ணேவல், எண்சேர்ந்த.

92. வரைவின்மகளிர்.

தொகுப்புரை :

[அன்பால் விரும்பாது பொருளுக்காக விரும்பும் மகளிரது இன்சொல் துன்பம்தரும். ஒருவர்க்குள்ள பணநிலையை அளந்து அது தம் கைக்குவருமளவும் பண்பாட்டோடு பேசும் நன்றிகெட்ட மகளிரது ஒழுக்கத்தை ஆராய்ந்து பழகா தொழிக. பொது மகளிரது அன்பில்லாத கலப்பு, இருட்டறையில் அயல்பிணத்தைத் தழுவினாற்போலும். அருளோடுகூடிய பொருளிலே தோயும்அறிவுடையார்கள், பொருளையே குறிக்கோளாகக் கொண்ட மகளிரது இழிந்த நலத்தை விரும்பார். அறிவிற் சிறந்தவர்கள், பொருள் கொடுப்பாரனைவர்க்கும் தம் இன்பத்தைப் பொதுவாக்கும் மகளிரது இழிந்த இன்பத்தைத் தீண்டமாட்டார்கள். அறிவு ஒழுக்கங்களாலேயே தம்புகழை நாட்டிப்பரப்பும் நல்லறிவுடையோர், பரத்தைமையால் தருக்கித் தமது இன்பத்தைக் காசுக்கு விற்கும் பொதுமகளிர் தோளைப் பொருந்தமாட்டார்கள். மனத்திற் பொருள் முதலியவற்றை விரும்பிப் புணரும் பொதுமகளிர் தோளை, நிறை நெஞ்சில்லாதவர்கள் பொருந்துவர். வஞ்சகப் பெண்டிரது புணர்ச்சி, ஆராய்ச்சி யறிவில்லாதார்க்கு அணங்குபோல்வதாம். பாகுபாடற்ற பொருட் பெண்டிர்களின் தோளே கீழ்மக்கள் அழுந்தும் நரகம். பிளவுபட்ட மனத்தையுடைய பெண்களும், கள்ளும் சூதும் சீதேவியால் துறக்கப்பட்டார்க்குரிய நட்புக்களாம்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது தந்நலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவிலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக்குரிய மகளிரான் வருங்குற்றத்தின்பின் வைக்கப் பட்டது.

மணக்:— வரைவின்மகளிராவது கணிகையரோடு கலந்தொழு கினால் வரும் குற்றம் கூறுதல். முயக்கத்தில் வரைவின்மையால், வரைவின் மகளிரென்று கூறப்பட்டது.

பரிப்:— மேல் மனைவியர்மாட்டு மிக்ககாதலினால் வரும் குற்றம் கூறினார்; இது கணிகையர் காமத்தினால் வரும் குற்றம் கூறுதலின் பின் கூறப்பட்டது.

பரிதி:— வரைவின் மகளிராவது பொதுமகள் இயற்கை கூறல் எ - று.

911. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். (க)

உரைப்பகுதி :

பரிமே:— அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய் தொடியார் - ஒருவனை அன்புபற்றி விழையாது பொருள்பற்றி விழையும் மகளிர், இன்சொல் இழுக்குத்தரும் - அது கையுறுந்துணையும் தாம் அன்புபற்றி விழைந்தாராகச் சொல்லும் இனியசொல் அவனுக்குப் பின் இன்னாமையைப் பயக்கும்.

பொருள் என்புழி இன் விகாரத்தால் தொக்கது. ஆய்ந்த தொடியினை உடையார் என்றதனாலும், இனியசொல் என்றதனாலும், அவர் கருவி கூறப்பட்டது. அச்சொல் அப்பொழுதைக்கு இனிது போன்று பின் வறுமை பயத்தலின், அது கொள்ளற்க என்பதாம்.

மணக்:— அன்பால் கலத்தலின்றிப் பொருளால் கலக்கும் ஆய்தொடியார் சொல்லும் இன்சொல், பின்பு கேட்டினைத் தரும் எ - று.

பரிப்:— இது கணிகையர் கூட்டத்தினால் வரும் குற்றம் என்னை என்றார்க்குக் கூறப்பட்டது.

பரிதி:— அன்பினாலே விரும்பார் பொருளாசையால் விரும்புமவர் இன்பம், நல்லோர்முன் இழுக்குண்டாம் எ - று.

காளிங்:— ஆவடரை எஞ்ஞான்றும் நெஞ்சத்து அன்பினன் விரும்பாராய்ப் பொருளையே விரும்பிச் செல்லும் ஆய்தொடிப்பரத்தையர் சொல்லிக்காட்டும் இன்சொல்லும் இழுக்கத்தைத் தரும் இத்துணை அல்லது விழுப்பம் தாராதாம் ஆராயின் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே." —புறம். 73 : 13 - 15.

"அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்
செங்கண்மா லாயினும் ஆகமன் - தம்மைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தங் கையால் தொழுது." —நாலடி. 373.

" மைவிழியார் மனை அகல்." ஆத்தி. 96.

" வேசி உறவு காசிலும் பணத்திலும்தான்." —பழ.

" வேசி உறவும் வெள்ளாட்டி அடிமையும் காசிலும் பணத்திலுந்தான்." —ஷை

முதுமொழிவெண்பாக்கள் :

" போச னுரைக்கிசைந்த புண்ணியனை வேசிகொன்றாள்
தேசமறி யாதோ சிவசிவா - பேசுமிடத்து." —சிவசிவ. 92.

குறிப்பு :

ஆய் தொடியார் என்று மகளிரைக் குறித்தது, அவர்களிடம் இவன் மயங்கச் செய்தற்கு அவர்கள் தொடி முதலிய புறவணிகளே ஏது என்பதுணர்த்த. இன்சொல் என்றது பயனால் வன்சொல் என்றவாறு.

—தொகுப்பாசிரியர்.

912. பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் - ஒருவனுக்கு உள்ளபொருளை அளந்தறிந்து அஃது எய்துந்துணையும் தம்பண்புடைமை சொல்லும் பண்பில்லாத மகளிரது, நயன் தூக்கி நள்ளா விடல் - ஒழுகலாற்றினை ஆராய்ந்தறிந்து அவரைப் பொருந்தாது விடுக.

பண்பு, சொல்லின்கண் 'அல்லது தங்கண்' இடவாமைதோன்றப் பண்பின்மகளிர் என்றும், அவர்க்கு அது சாதிதருமமாதல் நூலானே யன்றி அவர்செயலானும் அறிந்து என்பார் நயன்தூக்கி என்றும், அவ்வறிவு அவரை விடுதற்கு உபாயம் என்பது தோன்றப் பின் நள்ளா விடல் என்றும் கூறினார்.

மணக்:— தமக்கு உளதாகும் பயனை நோக்கிக் குணமாகக் கூறும் குணமில்லாத மகளிரது இன்பத்தை ஆராய்ந்து பார்த்து, அவரைச் சாராதொழிக எ - று.

இதனாலே கணிகையர் இலக்கணமெல்லாம் தொகுத்துக் கூறினார்.

பரிப்:— இது கணிகையர் கலவியைத் தவிர்க என்றது.

பரிதி:— பொருளாசை கண்டு பண்பு சொல்லும் பண்பில்லாத மடவார்நயம், 'இத்தனையல்லோ' என்று கண்டு கை விடுக எ - று.

காளிங்:— தாம் கருதியபொருள் தமக்குப் பயன்படும் உபாயமே சீர்தூக்கிப் புறமே நெறிப்பட உரைக்கும் நெறியில்மகளிர் செய்யும் நசையை, இது வெறும் பொய் நசை என்று சீர்தூக்கி, மற்று இவரோடு நட்புச் செய்யாது ஒழிக எ - று.

913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் - கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையை உடைய முயக்கம், இருட்டு அறையில் ஏதில் பிணம் தழீஇயற்று - பிண மெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன் அறியாத பிணத்தைத் தழுவினால் போலும்.

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்தும் செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானை முயங்குங்கால் அவர் குறிப்புக் கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோர் இடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர் குறிப்போடு ஒக்கும் எனவே, அகத்தால் அருவராநின்றும் பொருள்நோக்கிப் புறத்தால் தழுவுவர்; அதனை ஒழிக என்பதாம். இவை மூன்று பாட்டானும் அவர் சொல்லும் செயலும் பொய் என்பது கூறப்பட்டது.

மணக்:— பொருளே கருதும் பெண்டிர் ஒருவனோடு பொய்யே முயங்கும் முயக்கம், இருட்டறையினுள்ளே கிடந்ததொரு வேற்றுப் பிணத்தைக் கூலிக்குத் தழுவியதுபோலும் எ - று.

இவை இரண்டினாலும் கணிகையர் கூட்டத்தினால் வரும் குற்றம் கூறப்பட்டது.

பரிப்:— கேடு வரினும் இன்பம் தருமாயின் புணர்ச்சியான் வரும் குற்றம் என்னை என்றார்க்கு, அவர் இவ்வாறு வருந்துவர் ஆகலான் இன்பம் இல்லை என்று கூறப்பட்டது.

பரிதி:— வரைவின் மகளிர் பொய்யை மெய்யன்பாக ஒழுகுதல் எத்தன்மைத்து எனின் இருட்டறையில் கல்பிணத்தைக்கட்டி அழுபவற்கு ஒக்கும் எ - று.

காளிங்.— தாமே தமக்குப் பொருள் வரைந்து ஒழுகும் பெண்டிர் தமது பொருள் வரலாற்றிற்கு வேண்டும் ஆடவர் உயர்ந்தோர் இழிந்தோர் யாவரே யாவரே ஆயினும் வரைவு இன்றிப் பொய்ம்மைமுயக்கம் முயங்கும் மகளிரது முயககம், பெரிதும் இருள் உடைய அறையுள் புக்கவர் பிணம் தழீஇ உறையும் அத்தன்மைத்து எ - று.

மேற்கோள்பகுதி :

மயிலை:— பொருட்பெயரை அடையாக அடுத்தவந்தமொழி செய்யுளிடத்து இனத்தைக்காட்டி வந்ததற்கு மேற்கோள். (நன். 400.)

சங்கர:— ஷை. (நன். 401.)

முதுமொழிவெண்பாக்கள் :

"ஆரத் தழுவினும்அன் பில்லாப் பரத்தையரைச்
சேரத் தகுமோ தினகரா - தேரின்." —தினகர. 96.

"புனிதரமுல் மூழ்குதலும் போயழலின் மூழ்கும்
பனிமலர்மென் கோதைஎழில் பாவை - ஒழியப்." —முதுமொழி. 139.

914. பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். (ச)

உரைப்பகுதி :

பரிமே:— பொருள் பொருளார் புன்னலம் - இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லிய நலத்தை, அருட்பொருள் ஆயும் அறிவினவர் தோயார் - அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்துசெய்யும் அறிவினையுடையார் தீண்டார்.

அறமுதலிய நான்கும் பொருளெனப்படுதலின், பொருட்பொருள் அருட்பொருள் என விசேடித்தார். புன்மை இழிந்தார்க்கே உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர் மெய்ந்நலம் மறுதலையாகலின், தோயார் என்பதாம்.

மணக்:— பொருளைப் பொருளாகக் கொள்வாரது புல்லிய நலத்தைத் தோயார், அருளைப்பொருளாக ஆராயும் அறிவுடையார் எ - று.

பரிப்:— அருள் உடையாராம் அறிவு என்றமையால் இவரை அறன் அறிவார் சாரார் என்றது. என்னை? அறத்தைக்கெடுப்பர் ஆதலின்.

பரிதி:— பொருட் பொருளால் அற்பமான இன்பத்தை விரும்பார், பிறவாநெறியான இன்பம் விரும்புபவர் எ - று.

காளிங்:— ஆடவரது பெருமையும் சிறுமையும் விரும்பாது பொருள் பொருள் என்று விரும்பி இருப்பவர் புல்லிய நலத்தைப் பொருந்தார்: யார் எனின் அருளைத் தமக்குப் பொருளாகத் தெரிந்து உணரும் அறிவினை உடையோர் எ - று.

எனவே இவ் வஞ்சமகளிர்க்குக் கொடுக்கும் பொருளை வறியோர்க்கு ஈதல் தமக்கு வாய்ப்பதே என்று ஆயும் அறிவினர் கருத்து என அறிக எ - று.

மேற்கோள்பகுதி:

இளம்:— மொழி எதிர்மொழிதல் பாங்கற்கு உரித்தே என்ற சூத்திரத்திற்கு மேற்கோள். (தொல். பொருள். 180.)

நச்:— புறத்தொழுக்கம் மிக்க தலைவற்கு நீ கற்றறிந்த அறிவு இனிமெய்யாகவேண்டும் என்று அவனை மெய்யறிவின்கண்ணே நிறுத்தல் என்ற கூத்தர் கிளவிக்கு மேற்கோள். (தொல். பொருள். 168.)

ஒப்புமைப்பகுதி:

"ஏமார்ந்த போழ்தின் இனியார்போன் றின்னாய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடா — மானைக்கிற்
றங்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்துமென் பார்." —நாலடி. 378.

"மைவிழியார் தம் மனையகன்றொழுகு." —கொன்றை. 78.

"அம்மி துணையாக ஆறிழிந்த வாறொக்கும்
கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம் — இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்." —நல்வழி. 20.

முதுமொழிவெண்பாக்கள்:

" மாழ்கிவரை வின்மகளிர் வஞ்சனையில் பாட்களன்றுன்
மூழ்கிஅல்லாப் புற்றுன் முருகேசா - வீழ்கும்." —முருகேசர், 92.

குறிப்பு:

பொதுப்பெண்டிர் முயக்கு பொருளுக்கேயன்றி அருளுக்கும் அழிவு தருவது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

915. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— மதி நலத்தின் மாண்ட அறிவினவர் - இயற்கையாகிய மதிநன்மையான மாட்சிமைப்பட்ட செயற்கை அறிவினை உடையார், பொது நலத்தார் புன்னலம் தோயார் - பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாய ஆசையினை உடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார்.

மதிநன்மை - முற்பிறப்புக்களில் செய்த நல்வினைகளான் மனம் தெளிவுடைத்தாதல். அதனானன்றிக் கல்வியறிவு மாட்சிமைப்படாமையின் மதிநலத்தின் மாண்ட அறிவினவர் என்றும், அவ்வறிவுடையார்க்கு அவராசையது பொதுமையும் மெய்ந்நலத்தது புன்மையும் விளங்கித் தோன்றலின் தோயார் என்றும் கூறினர்.

மணக்:— மதிநலத்தால் மாட்சிமைப்பட்ட அறிவுடையார், எல்லார்க்கும் பொதுவாகிய நலத்தினையுடையவரது புல்லிய நலத்தைச் சேரார் எ - று.

இது புத்திமான் சேரார் என்றது.

பரிதி:— எல்லார்க்கும் பொதுவான இன்பம் கொள்ளார் மதியினல் பெரியவர்; பலர்எச்சில் என்று கழிப்பர் எ - று.

காளிங்:— யாவர்மாட்டும் பொதுப்பட வரும் பொருள் காரணமாக நடிக்கும் பொதுநலத்தாராகிய பொதுமகளிர் காட்டும் புல்லிய நலத்தைப் பொருந்தார் யார் எனின், தம் மதித்தூய்மையால் பெரிதும் மாட்சிமைப் பட்ட அறிவினை உடையோர் எ - று.

இங்ஙனம் பொதுமகளிர் மயக்கம் பொருளன்று என்பதனை உணர்த்தி மற்று அதன் பின்னரே இதனொடு பொருஉம் கள் உண்டலும் உணர்த்துகின்றது மேலையதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள்:

"வேண்டும் உருப்பசியைப் பார்த்தன் வெறுத்தனனே
தூண்டு மறைப்பரியாய் சோமேசா - யாண்டும்." —சோமேசர். 92.

916. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். (க)

உரைப்பகுதி:

பரிமே:— தகை செருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள் - ஆடல் பாடல் அழகு என்பனவற்றால் களித்துத் தம் புல்லிய நலத்தை விலை கொடுப்பார் யாவர்மாட்டும் பரப்பும் மகளிர்தோளினை, தம் நலம் பாரிப்பார் தோயார் - அறிவொழுக்கங்களானாய தம்புகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந்தோர் தீண்டார்.

ஆடல் முதலிய மூன்றும் உடைமை அவர்க்கு மேம்பாடாகலின் தகை என்றும், தோயின் அறிவொழுக்கங்கள் அழியுமாகலின் அவற்றால் புகழ்பரப்புவார் தோயார் என்றும் கூறினார். தந்நலம் என்புழி நலம் ஆகுபெயர். இவை மூன்று பாட்டானும் அவரை உயர்ந்தோர் தீண்டார் என்பது கூறப்பட்டது.

மணக்:— தம்முடைய நலத்தை உலகின்கண் பரப்புவார் சேரார் வனப்பினால் களிப்புற்றுத் தமது புல்லிய நலத்தை எல்லார்மாட்டும் பரப்புவாரது தோளினை எ - று.

பரிப்:— புல்லிய நலன் என்றார் வனப்பு உடையாராயினும் இழிந்தார்மாட்டும் பரப்புதலின். தம்நலம் பாரிப்பார் என்றமையால் இன்பம் நுகர வல்லார் சாரார் என்றார்; பின்னர் இன்பம் அது ஆகாமையின். இவை மூன்றும் அறம், பொருள், இன்பம் வேண்டுவார் சாரார் என்று கூறப்பட்டது.

பரிதி:— தம்முடைய கீர்த்தி பிரகாசிப்பார் விரும்பார், இளமை நலம் செருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள் எ - று.

காளிங்:— தமது நன்மையை மேன்மேலும் விரித்துக்கொண்டு ஒழுகும் தகைமையர் யாவர்? அவர் என்றும் தோயார்; யாதினை எனின் எப்பொழுதும் பொருள் வரும் தகைமையைத் தருக்கி மற்று இது காரணமாக வஞ்சனையாகிய புல்லிய ஆசையைப் பாரித்து நடிக்கும் பொது மகளிர்தம் தோளினை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"எழிலால் பாடல் ஆடலினால் இச்சை பெருக்கி உளம் ஒவ்வா
மொழியின் செயலால் வயமாக்கி முற்றும் பொருளைப் பறித்துவிடும்
பழிநா ணாத பரத்தையரைப் பற்றார் ஆய்ந்த பண்புடையார்
ஒழியார் அவரைப் பேதையையில் ஒழியார் ஏம கண்டனே."

—விநா. அரசி. 139.

முதுமொழிவெண்பாக்கள்:

"தொண்டர் அடிப்பொடியைத் தோளிறுக வீக்குதலால்
எண்டிசையும் போற்றும் இரங்கேசா - கண்டிருந்தும்." —இரங். 92.

917. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்
பேணிப் புணர்பவர் தோள். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— நெஞ்சின் பிறபேணிப் புணர்பவர் தோள் - நெஞ்சினால் பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை மெய்யால் புணரும் மகளிர் தோள்களை, நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் - நிறையால் திருந்திய நெஞ்சமில்லாதார் தோய்வர்.

பொருளும் அதனால் படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு அவற்றின் மேலது ஆகலின், புணர்வது உடம்புமாத்திரம் என்பதறிந்து அதுவழி ஓடாது நிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமையின், அஃதிலார் தோய்வர் என்றார்.

மணக்:— நிறையுடைய நெஞ்சில்லாதவர் தோய்வர்: இன்பம் அல்லாத பிறவாகிய பொருளை நெஞ்சினாலே விரும்பிவைத்து அன்புற்றார் போலப் புணருமவரது தோளினை எ - று.

இது நிறையில்லாதார் சேர்வர் என்றது

பரிதி:— நிறைந்த அறிவில்லார் வரைவின்மகளிர் தோள் சேர்பவர் அது ஏதெனில் நம்மனத்துக்கு உவந்த நாயகரை மனதிலே வைத்து, இவரை மரப்பாவைபோலப் புணர்வார் எ - று.

காளிங்:— தமது நற்குணம் நிறைவுடைய நெஞ்சம் இல்லாதார் முயங்குவர்: பிறவற்றை நெஞ்சின்கண் பேணிப்புணரும் பொதுமகளிர் தோளை எ - று.

பிற என்ற பன்மை பொன்னும் ஆடையும் பூவும் சாந்தும் முதலியன என அறிக.

ஒப்புமைப்பகுதி:

> "உள்ளம் ஒருவன் உழையதா ஒண்ணுதலார்
> கள்ளத்தால் செய்யும் கருத்தெல்லாம்—தெள்ளி
> அறிந்த விடத்தும் அறியாராம் பாவம்
> செறிந்த உடம்பி னவர்." —நாலடி. 380.

குறிப்பு:

நிறைநெஞ்சம் - மனத்தை யொழுக்கநெறிக்கண்ணே நிறுத்தும் நெஞ்சம்.
—தொகுப்பாசிரியர்.

918. ஆயும் அறிவினர் அல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— மாய மகளிர் முயக்கு - உருவு சொல் செயல்களான் வஞ்சித்தலை வல்ல மகளிரது முயக்கத்தை, ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப - அவ்வஞ்சனை ஆராய்ந்தறியும் அறிவுடையார் அல்லார்க்கு அணங்குதாக்கு என்று சொல்லுவர் நூலோர்.

அணங்கு - காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வமகள். தாக்கு - தீண்டல். இவ்வுருவகத்தான் அம்முயக்கம் முன் இனிதுபோன்று பின் உயிர்கோடல் பெற்றாம். இது நூலோர் துணிவு என்பதுதோன்ற அவர் மேல்வைத்துக் கூறினார். அப்பெயர் அவாய்நிலையான் வந்தது.

மணக்:— யாதானும் ஒரு பொருளை உள்ளவாறு ஆராய்ந்தறியும் அறிவுடையரல்லாதார்க்கு, வருத்தமாமென்று சொல்லுவர், மாயத்தை வல்ல மகளிரது முயக்கத்தை எ - று.

இஃது இவரை அறிவில்லாதார் சேர்வர் என்றது.

பரிதி:— அறிவாராய்ந்த குணத்தார் அல்லாதார்க்குச் சூது பொருந்தி மாயமகளிர் முயக்கம் பொருந்தும்; அவர்களைத் தெய்வமாகக் கொள்ளுவர் எ - று.

காளிங்:— இவர் இப்படிப்பட்டவர் என்று ஆராயும் அறிவு இல்லாதார்க்குத் தெய்வத்தன்மை உடைத்து என்பர் வஞ்சனையால் பொருள் வரையும் மாயப் பொதுமகளிர் முயக்கு எ - று.

உரைவிளக்கப்பகுதி :

துண்:— அணங்கு - காமநெறியால் உயிர் கொள்ளும் தெய்வ மகள். தாக்கு - தீண்டல். காமத்துள் "தாக்கணங்கு" (1082) என்பதும் அது.

குறிப்பு:

அணங்கு - தெய்வப்பெண், பேய்ப்பெண் இரண்டற்குப் பொதுச்சொல். ஆயும் அறிவினர் அல்லார் மாயமகளிரைத் தெய்வப்பெண்ணெனவே சிந்தைகொண்டு கிடைத்தற்கரியது கிடைத்ததாக மகிழ்வர். ஆயுமறிவினர் இவரைப்பேயாக நினைத்து வெறுப்பர். இக்குறள் ஆயுமறிவினர் அஃதிலார் நிலைக்கு வருந்திக்கூறியது.

—தொகுப்பாசிரியர்.

919. வரைவிலா மாணிழையார் மென்தோள் புரைஇலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— வரைவு இலா மாண் இழையார் மென்தோள் - உயர்ந்தோர் இழிந்தோர் என்னாது விலைகொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லியதோள்கள், புரை இலாப் பூரியர்கள் ஆழும் அளறு - அக்குற்றத்தை அறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்து நிரயம்.

உயர்தற்கு ஏதுவாகலின், புரை எனப்பட்டது. சாதியான் இழிந்தாரின் நீக்குதற்குப் புரையிலாப்பூரியர்கள் என்றும், அவர் ஆழ்தற்கு ஏது உருவமுதலிய மூன்றும் என்பது தோன்ற மாணிழையார் மென்றோள் என்றும், அவர்க்கு அளற்றினை இடையின்றிப் பயக்கும் என்பது தோன்ற உருவகமாக்கியும் கூறினர்.

மணக்:— முயக்கத்தில் வரைவில்லாத மாணிழையாரது மெல்லிய தோளாவது, உயர்வில்லாத கயவர் அழுந்தும் நரகம் எ - று.

இஃது இழிந்தார் சார்வர் என்றது.

பரிப்:— கயவர் அழுந்துவது நரகின்கண் ஆதலின் நரகு எனப்பட்டது.

பரிதி:— வரைவில்லாதார் இன்பம் அறிவில்லாதார் விழுகிற நரகம் எ - று.

காளிங்:— வரைவின் மகளிராகிய பரத்தையரது மென்றோள் அவ்வுருவிற்று ஆயினும் அது அன்று: மற்று என்னை எனின் அறிவு மேம்பாடு இல்லாத கீழ்மக்கள் புக்கு அழுந்தும் கும்பிநரகம் எ - று.

புரை என்பது உயர்வு. பூரியர்கள் என்பது கீழ்மக்கள்.

குறிப்பு:

வரைவிலா என்றது 'அப்பன் வருவான் அதன்பின் மகன் வருவான் தப்பு முறையென்று தள்ளாதே' என்றாங்கு வரம்புகடந்தநிலை.

—தொகுப்பாசிரியர்.

920. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. (௧௦)

உரைப்பகுதி :

பரிமே:— இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் - கவர்த்த மனத்தினை உடைய மகளிரும் கள்ளும் சூதும் என இம்மூன்றும், திருநீக்கப்பட்டார் தொடர்பு - திருமகளால் துறக்கப்பட்டார்க்கு நட்பு.

இருமனம் - ஒருவனோடு புணர்தலும் புணராமையும் ஒருகாலத்தே யுடைய மனம். கவறு: ஆகுபெயர். ஒத்தகுற்றத்தவாகலின், கள்ளும் சூதும் உடன்கூறப்பட்டன. வடநூலாரும் இக்கருத்தான் விதனம் என உடன்கூறினர்*. வருகின்ற அதிகார முறைமையும் இதனான் அறிக. திணைவிராய் எண்ணியவழிப் பன்மைபற்றி முடிபுகோடலின், ஈண்டு அஃறிணையாற்கொண்டது. திருநீக்கப்பட்டமை இக்குறிகளான் அறியப் படும் என்பதாம். இவை நான்கு பாட்டானும் சேர்வார் இழிந்தோர் என்பது கூறப்பட்டது.

மணக்.— கவர்த்தமனத்தையுடைய பெண்டிரும், கள்ளும், கவறும் திருமகளால் கடியப்பட்டாரது நட்பு எ - று.

பரிப்.— பின்பு கள்ளும் கவறும் கூறுகின்றார் ஆதலின், அவை மூன்றும் ஒத்த இயல்பின என்று அறிதற்குப் பின் கூறப்பட்டது. இவை நான்கினும் அவரைச் சார்வார் கெடுவர் என்பது கூறப்பட்டது.

பரிதி:— பொதுமகளும் கள்ளும் சூதும் ஆகிய இந்த மூன்றி டத்தில் மூதேவியிருப்பாள் என்று பெரியவர் விரும்பார் எ - று.

காளிங்:— இம்மூவகைப் பொருள் அனைத்தும் தாமே தம்வயின் நீக்கல் ஆற்றாத மனத் தொடர்ச்சி எ - று.

"இம்மையே தவஞ்செ யார்கை யிருநிதி யகற்றல் வேண்டி
நம்மையுங் கள்ளும் சூதும் நான்முகன் படைத்துவிட்டான்"

என்றார் பிறரும் என அறிக.

மேற்கோள்பகுதி :

சொக்கப்ப:— இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த் தல்; வடநூலார் புறத்தைப் பரம் என்று கூறுவாராதலால் பரத்தையர் என்னும் சொற்குப் புறமுடையவர் என்னும் பொருள் கூறி நின்றவாறு உணர்க. புறமுடையார் என்பது என்னையெனின் இவரின்பம் இன்பம் அன்று என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் வரைவின் மகளிர் என்னும் அதிகாரத்தில் இன்பத்திற்குப் புறம் இவரின்பம் என்று கூறிய வாற்றான் உணர்க; 'இருமனம்..........தொடர்பு' என்பதனானும் உணர்க. (த. கோ. 380.)

* காமந்தகம் அத். 11. சு. 124.

ஒப்புமைப்பகுதி:

“ காதல் கவறுடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்—போதில்
சினையாமை வைகும் திருநாடா [செம்மை
நினையாமை பூண்டார் நெறி.” —நள • கலிதொடர். 39.

“ கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளபோன் றில்லாப் பொருள்.” —திரி. 59.

“ புலைமயக்கம் வேண்டில் பொருட்பெண்டிர்த் தோயல்
கலமயக்கம் கள்ளுண்டு வாழ்தல் - சொலைமுனிந்து
பொய்மயக்கம் சூதின்கண் தங்குதல் இம்மூன்றும்
நன்மையி லாளர் தொழில்.” —ஷை 39.

“ இருமைவா ணிபத்தில் கூர்த்த மதியரும் இறும்பூ தெய்த
அருவமாம் இன்பந் தன்னை இம்மியின் அளவும் ஏறாது
உருவமாம் பொருளுக் கேற்ப நிறுத்துவிற் றுழுக வல்ல
இருமனப் பெண்டிர் தம்முள் தருக்கிவாழ் இருக்கை ஈதால்.”
—காஞ்சி. நகரப். 57.

“ குடி சூது விபசாரம் குடியைக்கெடுக்கும்.” —பழ.

குறிப்பு

தோய்ந்தாரையும், குடித்தாரையும், ஆடினாரையும் தம்வயப்படுத்தி அறிவிழக்கச் செய்தலால் மூன்றும் ஒருங்கு எண்ணப்பட்டன. —தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— அன்பின், பயன்தூக்கி, பொருட்பெண்டிர், பொருட்பொருளார், பொதுநலத்தார், தந்நலம், நிறைநெஞ்சம், ஆயும்அறிவினவர், வரைவிலா, இருமனப்.

மணக்:— பயன்தூக்கி, அன்பின், பொருட்பெண்டிர், பொருட்பொருளார், பொதுநலத்தார், தந்நலம், ஆயும்அறிவினவர், நிறைநெஞ்சம், வரைவிலா, இருமனப்.

பரிதி:— பொருட்பெண்டிர், ஆயும்அறிவினவர், நிறைநெஞ்சம், வரைவிலா, அன்பின், பயன்தூக்கி, பொருட்பொருளார், பொதுநலத்தார், தந்நலம், இருமனப்.

காளிங்:— பொருட்பெண்டிர், ஆயும்அறிவினவர், பொருட்பொருளார், நிறைநெஞ்சம், தந்நலம், அன்பின், பயன்தூக்கி, இருமனப், வரைவிலா, பொதுநலத்தார்.

93. கள்ளுண்ணாமை.

தொகுப்புரை:

[*கள்ளைவிரும்புங் காவலர் பகைவரால் அஞ்சப்படார்; பழைய புகழையும் இழப்பர். பெரியோர்களால் மதிக்கப்படவேண்டாதவர்கள் கள்ளையுண்ணுக. தன்மகன் கள்குடித்தல் தாய்க்கும் அருவருப்பைத் தரும். அங்ஙனமிருக்கப் பெரியோர்களைப் ப்ற்றிச் சொல்லவாவேண்டும். கள் குடித்தலாகிய பெருங்குற்றவாளிகட்கு வெட்கம் என்ற பெண் புறங்கொடுத்தோடிவிடுவாள். விலைகொடுத்து மடமையை வாங்குதல் வினையால் விளைந்த செய்வதறியாமையாலேயாம். தூங்கியவர்கள் செத்தவர்களின் வேறல்லர் அவ்வாறே கள்ளுண்பவர்கள் நஞ்சுண்பவர்களே. கள்குடித்து அறிவு மயங்குபவர்கள் உள்ளூர்மக்களால் எப்பொழுதும் இகழப்படுவர். கள்குடித்துப் பழகியவன் குடியாதபோது குடித்ததேயில்லையென்று கூறுதல் கூடாது; ஏனெனில் குடித்தகாலத்து மறைத்துக் கூறிய இந்த ரகசியமும் வெளிவரும் ஆகையால். குடித்தவனைக் காரணங்கள் கூறி விலக்கித் திருத்தமுற்படுதல் தண்ணீரில் மூழ்கியவனை விளக்குப்பிடித்துக்கொண்டு தேடியதுபோலாம். ஒருவன் தான் கள்ளுண்ணாதிருந்த காலத்துக் 'கள்ளுண்டான் ஒருவன் மயங்கித் தடுமாறும் நிலையை' எண்ணிப்பார்க்க மாட்டானோ?.*]

அதிகாரப்பொருள்:

பரிமே:— *இனி ஒழுக்கமும் உணர்வும் அழித்தற்கண் அவ்வரைவின்மகளிரோடு ஒப்பதாய கள்ளினை உண்ணாமையது சிறப்பு எதிர்மறைமுகத்தால் கூறுகின்றார்.*

மணக்:— *கள்ளுண்ணாமையாவது கள்ளுண்டலைத் தவிர வேண்டுமென்று கூறுதல். இது கணிகையர் கூட்டத்தினால் வருதலின் அதன்பின் கூறப்பட்டது.*

921. உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டொழுகு வார். (க)

உரைப்பகுதி:

பரிமே:— *கள்காதல் கொண்டு ஒழுகுவார் - கள்ளின்மேல் காதல் செய்து ஒழுகும் அரசர், எஞ்ஞான்றும் உட்கப்படார் - எஞ்ஞான்றும் பகைவரான் அஞ்சப்படார்; ஒளி இழப்பர் - அதுவேயன்றி முன் எய்தி நின்ற ஒளியினையும் இழப்பர்.*

அறிவின்மையால் பொருள் பலபட முதலியவற்றான் பெரியராய காலத்தும் பகைவர் அஞ்சார், தம்முன்னோரான் எய்தி நின்ற ஒளியினையும் இகழற்பாட்டான் இழப்பர் என்பதாம். இவை இரண்டானும் அரசு இனிது செல்லாது என்பது இதனான் கூறப்பட்டது.

மணக்:— பிறரால் மதிக்கவும் படார், தோற்றமும் இழப்பர்; எல்லாநாளும் கள்ளின்கண் காதல்கொண்டு ஒழுகுவார் எ - று.

இது மதிக்கவும்படார் புகழும் இலராவர் என்றது.

பரிதி:— கள்ளுண்பானாகில் நல்லோரால் நினைக்கப்பட்டான்; கீர்த்தியும் ஒழியும். எ - று.

காளிங்:— பிறரால் இவர் பெரியோர் என்று மதிக்கப்படார்; மற்று ஒளியினையும் இழப்பர்; யார் எனின் எஞ்ஞான்றும் கள்ளின்மாட்டுக் காதல் கொண்டு ஒழுகும் கடுவினையாளர் எ - று.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— செயப்பாட்டுவினையில் 'படு சொல்வரினும் படு பொருள் வருதலின்றாயும்' என்பதற்கு மேற்கோள். (இ. கொ. 78.)

ஒப்புமைப்பகுதி :

"ஒளியும் ஒளிசான்ற செய்கையும் சான்றோர்
தெளிவுடையன் என்றுரைக்கும் தேசும் - களிஎன்னும்
கட்டுரையால் கோது படுமேல் இவைஎல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து." —அறநெறி. 86.

குறிப்பு:

எத்துணைவன்மையுடையராயினும் காதலிக்கப்பட்ட கள்ளால் இவனை மயக்கலாம் என்ற உபாயமறிந்தமையின் இவன் பகைவர் இவனுக்கு அஞ்சார் என்பதாம். இது இடைவிடாக் குடியர்க்கு வருந் தீங்கு கூறியது.

—தொகுப்பாசிரியர்.

922. உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— கள்ளை உண்ணற்க - அறிவுடையராயினோர் அஃது இலராதற்கு ஏதுவாய கள்ளினை உண்ணாதொழிக, உணில் சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க - அன்றியே உண்ணல் வேண்டுவார் உளராயின், நல்லோரால் எண்ணப்படுதலை வேண்டாதார் உண்க.

பெறுதற்கரிய அறிவைப் பெற்றுவைத்தும் கள்ளான் அழித்துக் கொள்வாரை இயல்பாகவே அஃது இல்லாத விலங்குகளுடனும் எண்ணுராகலின், சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க என்றார்.

மணக்:— கள்ளினை உண்ணாது ஒழிக; உண்ணவேண்டின் சான்றோரால் மதிக்கப்படுதலை வேண்டாதார் உண்க எ - று.

பரிப்:— இது கள் உண்டலைத் தவிரவேண்டும் என்றது.

பரிதி:— கள்ளின் மேல் ஆசை உண்டாகில் அப்படிச்செய்க; நல்லோர் எண்ணப்படவேண்டினுல் கள்ளை விடுக எ - று.

காளிங்:— எஞ்ஞான்றும் உண்ணாது ஒழிக கள்ளினை மற்று உண்ணினும் உண்க: யார் எனின், சான்றோரால் மற்று 'இவரும் எம்மில் ஒருவர்' என்று உடன் எண்ணப்படுதலை வேண்டாதவர் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"அண்ணல் பழமலையை அண்ணுமுன் கள்ளுண்ண
எண்ணில் பெருந்துயரம் எய்துதலான் - மண்ணுலகத்(து)."
—முதுமொழி. 140.

923. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. (ங)

உரைப்பகுதி:

பரிமே:— ஈன்றாள் முகத்தேயும் களி இன்னாது - யாது செய்யினும் உவக்கும் தாய்முன் பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்;

மற்றுச் சான்றோர்முகத்து என் - ஆனபின், குற்றம் யாதும் பொறாத சான்றோர்முன்பு களித்தல் அவர்க்கு யாதாம்.

மனமொழிமெய்கள் தம்வயத்த அன்மையான் நாண் அழியும். அழியவே, ஈன்றாட்கும் இன்னாதாயிற்று; ஆனபின், கள் இருமையும் கெடுத்தல் அறிந்து செய்மைக்கண்ணே கடியும் சான்றோர்க்கு இன்னாதாதல் சொல்லவேண்டுமோ என்பதாம்.

மணக்:— தன்னைப்பயந்தாள் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்; அங்ஙனமாக, சான்றோர் முன்பு களித்தல் மற்று யாதாகும் எ - று.

எல்லார்முன்பும் இன்னாமையே பயப்பது என்றவாறாயிற்று.

பரிப்:— கள் உண்டல் இனிமை தரும் அன்றோ: இதனால் வரும் குற்றம் என்னை என்றார்க்கு அதனால் வரும் குற்றம் கூறுவார் முற்பட இன்னாமை பயக்கும் என்று கூறப்பட்டது.

பரிதி:— பெற்ற மாதாவிற்கும் இவன்குணம் பொருந்தாதாகில் சான்றோர்க்கு ஏதாகும் எ - று.

காளிங்:— பெற்ற தாய்க்குப் புதல்வர் செய்யும் பிழையும் கூட இனிது அன்றோ? மற்று அவள் முன்னரும் இன்னாதால்: இனி என்னை வேறு சான்றோர் முன்னர்க் களி எ - று.

ஒப்புமைப்பகுதி :

" அறிவை அழிக்கும் செயலழிக்கும் அழியா மானந் தனைஅழிக்கும்
செறியும் அறிஞர் மதியாத செருக்கை விளைக்கும் ஈன்றாளும்
முறியும் வெறுப்பு மிகவிளைக்கும் முனிவு விளைக்கும் பகையஞ்சாக்
குறிகள் விளைக்கும் நகைவிளைக்கும் கொள்ளேல் கள்ளுண் டலைமைந்தா."

—விநா. அரசி. 140.

குறிப்பு:

உள்ளத்தில் உண்டாகும் அருவருப்பை அறிவிப்பது முகமாதலின் முகத்தேயும், என்றார்.

—தொகுப்பாசிரியர்

924. நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. (ச)

உரைப்பகுதி :

பரிமே:— கள் என்னும் பேணாப் பெருங்குற்றத்தார்க்கு - கள் என்று சொல்லப்படுகின்ற யாவரும் இகழும் மிக்க குற்றத்தினை உடையாரை, நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் - நாண் என்று சொல்லப் படுகின்ற உயர்ந்தவள் நோக்குதற்கு அஞ்சி அவர்க்கு எதிர்முகம் ஆகாள்.

காணுதற்கும் அஞ்சி உலகத்தார் சேய்மைக்கண்ணே நீங்குவர் ஆகலின் பேணா என்றும், பின் ஒருவாற்றானும் கழுவப்படாமையின் பெருங்குற்றம் என்றும், இழிந்தோர்பால் நில்லாமையின் நல்லாள் என்றும் கூறினார். பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி. இவை மூன்று பாட்டானும் ஒளி இழத்தற்காரணம் கூறப்பட்டது.

மணக்:— நாணம் என்று சொல்லப்படுகின்ற நன்மடந்தை பின்புகாட்டிப் போம்; கள்ளுண்டலாகிய பிறரால் விரும்பப்படாத பெரிய குற்றத்தினை யுடையார்க்கு எ - று.

இது நாணம்போம் என்றது.

பரிதி:— இன்னான் என்றும் பேர் சொல்லமாட்டான் கள் என்னும் பேய் பிணித்தாற்கு எ - று.

காலிங்:— நாண் என்னும் நன்னெறியாட்டி இவனின் நீங்கிப் புறத்து ஏகும்: இவ்வாறு புறம் மாறிப் போவது யார்க்கு எனின், கள் என்று எடுத்துரைக்கப்படும் சிறிது உணர்வுடையோர் யாவராலும் விரும்பப்படாதாகிய இந்தப் பெரிய குற்றத்தை உடையோர்க்கு எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— நல்லாள் எனப் பெண்பாலாக்கியது, சொல்லப்பட்ட சொற்களையெல்லாம் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என, பால் வரையறுத்தோதுதல் வடநூலார் மதமாகலின், இலச்சை என்பதைப் பெண்பால் என்பதுபற்றி நல்லாள் என்றார் என்க; அவை ஸ்திரீலிங்கம், புல்லிங்கம், நபுஞ்சகலிங்கம் என்பர்.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— வடமொழி நியாயம் வந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 7.)

ஒப்புமைப்பகுதி:

"காணாமை உண்ட கடுங்கள்ளை மெய்கூர
நாணாது சென்று நடுங்க உரைத்தாங்கு." —கலி. 115 : 2 - 3.

குறிப்பு:

'லஜ்ஜா' என்ற வடமொழி வழக்குப்பற்றி 'நாணென்னும் நல்லாள்' என்றார் என்பர் பரிமேலழகர். நாண் பெண்மைக்கே சிறந்த குணமாதலின் குணத்திற்கும் குணிக்கும் உள்ள ஒற்றுமைபற்றி நாணையே நல்லாளென உருவகித்தார். 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' என்புழிப்போல என்பர் தமிழ்வழக்குப் பேணுவார்.

—தொகுப்பாசிரியர்.

925. கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— பொருள் கொடுத்து மெய் அறியாமை கொளல் - ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளால் தனக்கு மெய்ம் மறப்பினைக் கொள்ளுதல், கை அறியாமை உடைத்து - அவன்பழவினைப் பயனாய செய்வது அறியாமையைத் தனக்குக் காரணமாக உடைத்து.

தன்னை அறியாமை சொல்லவே, ஒழிந்தன யாவும் அறியாமை சொல்லல்வேண்டாவாயிற்று. கை அப்பொருட்டாதல் *"பழனுடைப் பெருமரம் வீழ்ந்தெனக் கையற்று" என்பதனானும் அறிக. அறிவார் விலை கொடுத்து ஒன்றனைக்கொள்ளுங்கால் தீயதுகொள்ளாமையின் மெய்யறி யாமைகொளல் முன்னை அறியாமையான் வந்தது என்பதாம்.

மணக்:— பயன் அறியாமையுடைத்து, பொருளினைக்கொடுத்துத் தம் மெய்யறியாமையைச் செய்யும் கள்ளினைக்கோடல் எ - று.

*புறம். 209.

இது மேற் கூறிய குற்றமெல்லாம் பயத்தலின், அதனை அறிவுடையார் செய்யார் என்றது.

பரிப்:— மெய் என்பது தாம் என்பதும், ஒன்று என்பதும் அறத்துப்பாலில் கூறப்பட்டது: அன்றியும் பொருளில் உண்மை அறியாமை என்றும் ஆம்.

பரிதி:— கையில் பொருள் கொடுத்து மெய்யறியாக் கள்ளுண்டல் என்ன மாயம் எ - று.

காளிங்:— இதன் பயன் அது ஆகலான் பெரிதும் தான் ஓர் ஒழுக்கம் அறியாமை என்னும் குற்றத்தை உடைத்து: அஃது யாது எனின் ஒருவன் பித்து ஏறல் இன்றி வேண்டும் விலைகொடுத்தும் தான் மெய் மறந்து ஒழுகுவது ஓர் மெய் அறியாமையைக் கோடல் எ - று.

ஈண்டுக் கை என்பது ஒழுக்கம்.

குறிப்பு:

மடமையைவிலைகொடுத்து வாங்குதலாகிய செயல் சிறு மடமையா? அன்று மடைமையுள் மடமையாகிய பெருமடமை எனவும்பொருள்காண்பர் சிலர். உடைத்தே ஏகாரம் எதிர்மறைக்கண் வந்ததாய் உடைத்தன்று பெருமடமை எனப் பொருள் விளக்கிநிற்கும். கை - சிறுமை; 'கைக்கிளை' என்பதுபோல.

—தொகுப்பாசிரியர்.

926. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் - உறங்கினார், செத்தாரின் வேறுதல் உடையரேனும், அக்காலத்து அறிவின்மையான் வேறுஎனப்படார்; கள் உண்பவர் எஞ்ஞான்றும் நஞ்சு உண்பார் - அவ்வாறே கள்ளுண்பார், நஞ்சுண்பாரின் வேறுதல் உடையரேனும், எக்காலத்தும் அறிவின்மையான் வேறெனப்படார், அவர்தாமே யாவர்.

உறங்கினார்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உயிர்ப்புநிற்றல். வேறுதலும் வேறன்மையும் உடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது. இதனை நிரல்நிறையாக்கி, நிரிக்கப்படுதலால் உறங்கினாரும்

நஞ்சுண்பாரும் ஒப்பர், கைவிடப்படுதலால் செத்தாரும் கள்ளுண்பாரும் ஒப்பர் என்று உரைப்பாரும் உளர்; அதிகாரப்பொருள் பின்னதாயிருக்க யாதும் இயைபில்லாத நஞ்சுண்பார்க்கு உவமைபுணர்த்து ஈண்டுக்கூறல் பயனின்றாகலானும், சொற்கிடக்கை நிரல்நிறைக்கு ஏலாமையானும், அஃது உரையன்மை அறிக. இவை இரண்டு பாட்டானும் அவரது அறிவிழத்தற்குற்றம் கூறப்பட்டது.

மணக்:— அறிவிழத்தலான், உறங்கினார் செத்தாரோடு ஒப்பர்; அதுபோல, மயங்குதலான் எல்லாநாளும் கள்ளுண்பார் நஞ்சுண்பவரோடு ஒப்பர் எ - று.

இஃது அறிவிழப்பர் என்றது.

பரிதி:— நித்திரையும் மரணமும் வேறல்ல; நஞ்சு தின்பானும் கள்ளுண்பானும் சரி எ - று.

காளிங்:— உலகத்து ஓவாது துஞ்சினார் என்றும் செத்தார் என்றும் வருவதன்பொருள் கருதின் இறந்து பட்டார் என்பதே தரவல்லது துஞ்சினார் என்றது: வேறு ஒன்றும் அல்ல: கள் உண்பவரும் நஞ்சு உண்பாரின் வேறு அல்லர் எ - று.

இனி மற்று இங்ஙனம் கள்ளும், சூதும், களவும் என்பன கண்டகத் தொழில் ஆகலால் மற்று இதன் பின்னரே சூதினை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபில் கோட்பும்
தஞ்சமென் றாரை நீக்கும் தன்மையும் களிப்பும் தாக்கும்
கஞ்சமெல் லணங்கும் தீரும் கள்ளினால் அருந்தி னாரை
நஞ்சமும் கொல்வ தல்லால் நரகினை நல்கா தன்றே."

—கம்ப. கிட்கிந்தை. 95.

முதுமொழிவெண்பாக்கள்:

"தூயபல பத்திரன்தான் சூதனைமாய்த் தல்லலுற்றான்
மூயமது மாலான் முருகேசா - ஆயுங்கால்." —முருகேசர். 93.

குறிப்பு:

தூக்கத்திற்குச் சிறுசாவு என்ற பெயருண்டு. கள்ளுண்பார் நஞ்சுண்பார் என்பதற்கு உறங்கினார் செத்தாரின் வேறல்லர் என ஒப்புமை தோன்றக் கூறியதால்

எண்ணத்தக்கன. துஞ்சுதல் விழிக்குமளவும் உயிர்ப்போடு அறிவின்றியிருத்தலும், அறிவு சூக்கும உடம்போடு காரியப்பட கனவில் துன்ப இன்பங்களை நுகர்தலும் ஆம். சாதல், இவ்விரண்டு நிலையுமின்றி அறவே அறிவின்றியிருத்தல். கள்ளுண்பவர்க்குக் களியால் அறிவு நிலைதிரிந்து துஞ்சினார் நிலையை எய்தும். நஞ்சுண்பவர் சாதல் எய்துவர். ஆதலால் எதிர் நிரல்நிறையாக்கி நஞ்சுண்பார் செத்தாராதலைப் போலக் கள்ளுண்பார் துஞ்சினாராவர் என உரைப்பர். அதனால் கள்ளுண்டலின் தீமை மிகுதிப்படுத்தப்படாமையின் துஞ்சினாரையொத்த கள்ளுண்பவர் நஞ்சுண்பாராகிய செத்தாரின் வேறல்லர் என்றியைத்துப் பொருள்கண்ட பரிமேலழகர் உரை மிகப் பாராட்டற்பாலது. நிரல்நிறையாகவைத்துப் பொருள்காண்பவர்கள் பரிப்பெருமாளும் மணக்குடவரும். காளிங்கர் துஞ்சினார் செத்தார் என்பன ஒருபொருட்கிளவிகள்; கள்ளுண்பவர், நஞ்சுண்பாரின் வேறல்லர் என்பர். செத்தாரைத் துஞ்சினார் என்பது மங்கல வழக்கு.

—தொகுப்பாசிரியர்.

927. உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— கள் ஒற்றிக் கண் சாய்பவர் - கள்ளை மறைந்து உண்டு அக்களிப்பால் தம் அறிவு தளர்வார், உள்ளூர் உள் ஒற்றி எஞ்ஞான்றும் நகப்படுவர் - உள்ளூர் வாழ்பவரான் உள் நிகழ்கின்றது உய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவர்.

உள்ளூர் ஆகுபெயர். உண்டு என்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்துணர்தல்-தளர்ச்சியால் களிப்பினை உணர்ந்து அதனால் கள்ளுண்டது உணர்தல்.

மணக்:— தங்கள் ஒழுக்கத்தை உள்புக்கு அறிந்த உள்ளூராலே இகழப்படுவார்; எல்லாநாளும் கள்ளுள்ளவிடத்தைநாடி, அதன்கண்ணே தாழ்வார் எ - று.

பரிப்:— உண்ணுமது அறிவார் இல்லை என்பார்க்கு இது கூறப்பட்டது.

பரிதி:— கள்ளுண்பானது ஆசாரஈனப்புத்தியறிந்து அவனிருந்த ஊர் சிரிக்கும் எ - று.

காளிங்:— தனித்தனி நெஞ்சினால் அயிர்த்து ஆராய்ந்து தாம் வாழும் ஊரின் மக்களானே எஞ்ஞான்றும் சிரிக்கப்படுவார்: யார் எனின், கள் உள்ள வழி ஒற்றிச்சென்று மற்று ஆங்கே தம் கண்ணோடித் திரிபவர் எ - று.

உள் ஒற்றி என்பது நெஞ்சினால் அயிர்த்து ஆராய்ந்து என்றது. கள் ஒற்றி என்பது கள் உளவழி ஆராய்ந்து என்றது. கண் சாய்பவர் என்பது கண்ணோடித் திரிபவர் என்றது.

குறிப்பு :

கள்ளொற்றிக் கண்சாய்பவர் என்றது மேற்குறளில் கூறிய கள்ளுண்பவராகிய துஞ்சினாரை உணர்த்திற்று. கண்சாய்பவர் - அறிவுதளருவார். கண்செருகப் படுபவர். கள்ளுண்டார் கண்கள் சொருகும். இரண்டும் ஒருங்குநிகழ்தலின் கண் சாய்பவர் எனப் பொதுச்சொல்லால் ஆண்டார்.

—தொகுப்பாசிரியர்.

928. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்(து)
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— களித்து அறியேன் என்பது கைவிடுக - மறைந்து உண்டு வைத்து யான் கள்ளுண்டறியேன் என்று உண்ணாதபொழுது தம் ஒழுக்கம் கூறுதலை ஒழிக; நெஞ்சத்து ஒளித்ததும் ஆங்கே மிகும் - அவ்வுண்டபொழுதே பிறரறியின் இழுக்காம் என்று முன் நெஞ்சத்து ஒளித்த குற்றமும் முன்னையளவின் மிக்கு வெளிப்படுதலான்.

களித்தறியேன் எனக் காரியத்தால் கூறினார். இவை இரண்டு பாட்டானும் அது மறைக்கப்படாது என்பது கூறப்பட்டது.

மணக்:— கள்ளுண்டால் களித்தறியேன் என்பதனைக் கைவிடுக; மனத்தின்கண்ணே கரந்ததூஉம் அப்பொழுதே வாய்சோர்ந்து புலப்படும்; அது கள்ளிற்கு இயல்பு எ - று.

உளம் கெடாது என்பார்க்கு இது கூறப்பட்டது.

பரிதி:— களித்தறியேன் கள்ளுண்டபோது என்று சொல்லுகின்ற ஆங்காரத்தை விடுக; நெஞ்சத்தில் ஒளித்திருந்த இரகசியத்தையும் சொல்லப்பண்ணும் எ - று.

காளிங்:— ஒருவன் கள்ளின் களித்தும் மற்று அதனால் யான் அறியேன் என்பதனைக் கைவிடுவான் ஆக, மற்று அக்களவினையும் கள்ளினால் களித்த காலத்துப் பித்தரைப்போலப் பிறர் அறியவிட்டுப் பேசும் எ - று.

மேற்கோள்பகுதி:

இளம்:— அருளொடு புணர்ந்த அகற்சியில் கள்ளுண்ணுமை என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

ஒப்புமைப்பகுதி:

"கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்வான்." —பழ

முதுமொழிவெண்பாக்கள்:

"தக்ககுரு மைந்தனென்பு சார்ந்தமது உண்டசுங்கன்
எக்கருமம் செய்தான் இரங்கேசா - மிக்க." —இரங். 93.

929. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. (௯)

உரைப்பகுதி:

பரிமே:— களித்தானைக் காரணம் காட்டுதல் - கள்ளுண்டு களித்தான் ஒருவனை இஃது ஆகாதென்று பிறன் ஒருவன் காரணம் காட்டித் தெளிவித்தல், நீர்க் கீழ்க் குளித்தானைத் தீத்துரீ இயற்று - நீருள் மூழ்கினான் ஒருவனைப் பிறனொருவன் விளக்கினால் நாடுதலை ஒக்கும்.

களித்தானை என்னும் இரண்டாவது *"அறிவுடை அந்தணன் அவனைக்காட் டென்றானே" என்புழிப்போல நின்றது. நீருள் விளக்குச் செல்லாதாற்போல அவன் மனத்துக் காரணம் செல்லாது என்பதாம். இதனான் அவனைத்தெளிவித்தல் முடியாது என்பது கூறப்பட்டது.

மணக்:— கள்ளுண்டு களித்தவனைக் காரணங்காட்டித் தெளிவித்தல், நீரின் கீழே முழுகினானைத் தீயினால் அறிகுற்றதுபோலும் எ - று.

இது பிறர் சொல்லவும் கேளார் என்றது.

* கலி. 72 : 18.

பரிப்:— துருவுதல் - திசைச்சொல். இத்துணையும் கள் உண்பாற்கு உளது ஆகும் குற்றம் கூறப்பட்டது.

பரிதி:— கள்ளுண்டுகளித்தவனுக்கு அறிவு சொல்லுதல் நீரிலே முழுகிக் கிடக்கிறவனைக் கொள்ளிகொண்டு சுடுகிறதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— கள்ளுண்டான் ஒருவனைக் குறித்துச் சான்றோர் பல நூல் வகையாலும் இது தகாது என்று எடுத்து உரைத்துக் காட்டுதலாவது எத்தன்மைத்தோ எனின், நீருள் முழுகி நின்றான் ஒருவனைத் தீயினால் சென்று துருவிப்பிடித்த அத்தன்மைத்து எ - று.

மேற்கோள்பகுதி :

சிவஞான:— நண்ணனல் வேவாத நற்றவர்: "நண்ணனல் 'கீழ்நீர்' என்பதுபோல முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. (சிவஞான. சூ. 10. ஆதி. 2.)

ஒப்புமைப்பகுதி:

"கிணற்றுக்குள் இருப்பவனை விளக்கிட்டுத் தேடினாற்போல." —பழ.

"விளக்கை பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுவதா." —ஷை

முதுமொழிவெண்பாக்கள் :

"வண்டு மதுஉண மாந்தரும் ஒவ்வாதோ
திண்திறல்சேர் வீமா தினகரா - உண்டு." —தினகர. 97.

"தக்கன்பால் ஞானந் ததீசியுப தேசமெல்லாம்
தொக்கதனு லாவதென்னே சோமேசா - மிக்கு." —சோமேசர். 93.

குறிப்பு:

கள்ளுண்பவனை விதியாலல்லது கள்ளுண்டலின் தீமையை எடுத்தறிவித்து அக்குற்றத்தினின்று விலக்குதல் முடியாது.

—தொகுப்பாசிரியர்.

930. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. (௧0)

உரைப்பகுதி:

பரிமே:— கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானை - கள்ளுண்பான் ஒருவன் தான் அஃது உண்ணாது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணுமன்றே, காணுங்கால் உண்டதன் சோர்வு உள்ளான்கொல் - காணுங்கால் தான் உண்டபொழுது உளதாஞ் சோர்வினை அவன் சோர்வால் அதுவும் இற்று என்று கருதான் போலும்.

சோர்வு மனமொழிமெய்கள் தன்வயத்தவல்லவாதல். கருதல் அளவையான் அதன் இழுக்கினை உய்த்துணரின் ஒழியும் என இதனால் அஃது ஒழிதற்காரணம் கூறப்பட்டது.

மணக்:— தான் கள்ளுண்ணாதபோது கள்ளுண்டு களித்தவனைக் கண்டவிடத்து, தான் கள்ளுண்டபோழ்து தனக்குள்ளதாகும் சோர்வினை நினையான்போலும்: நினைப்பானாயின், தவிரும் எ - று.

பரிப்:— இது தமக்கு உளது ஆகும் குற்றம் காணார் என்றது.

பரிதி:— கள்ளுண்ணாமல் தெளிந்திருக்கிற வேளையில் கள்ளுண்டு மெய் அசந்தவன் பட்டபாடு காணானோ எ - று.

காளிங்:— ஒருவன் ஒருபொழுது கள்ளுண்டான் ஆயினும் பின் ஒருபொழுது அது செய்யாதும் இருக்கும அன்றே: மற்று அப்பொழுதின் கண்ணே கள்பருகித் தன்னை அறியாது கலங்கி வருவானையும் தான் கண்டிருக்கும் அன்றே: அங்ஙனம் கண்ட இடத்தாயினும் கருதி நோக்கானோ அக்கள்ளினைப் பருகுவானது சோர்வினை எ - று.

எனவே அவன் உணர்ச்சிச் சோர்வும், கண் சோர்வும், உடல் சோர்வும், உடைச்சோர்வும் கண்டு, யாமும் அங்ஙனம் கெடுவேம் ஆகாதே என்று உள்ளும் உபாயம் அறியாது, மற்று இதுவே சோர்வு என்று அறிக.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— எண்ணுங்காலை அது அதன்மரபே என்ற சூத்திர உரையில் 'ஊன் துவை கறி சோறு உண்டு என்றவழி உண்டு என ஒரு வினையான் வந்ததால் எனின் அது பொதுவினை என்று கொள்க' எனக் கூறி 'கள்ளுண்ணும் போழ்து' என்பதை மேற்கோள் காட்டுவர். (தொல். சொல். 45.)

ஒப்புமைப்பகுதி:

"கள்ளுண்போன் சோர்வு இன்மை பொய்." —முதுமொழிக். 7 : 3.

முதுமொழிவெண்பாக்கள்:

"சுக்கிரனுர் சாபத் தொடர்பறிந்தோர் கள்ளிருந்த
திக்கினடப் பாரோ சிவசிவா - மக்களென்பார்." —சிவசிவ. 93.

குறள்வைப்புமுறை

பரிமே:— உட்க, உண்ணற்க, ஈன்றாள், நாணென்னும், கையறியாமை, துஞ்சினார், உள்ளொற்றி, களித்தறியேன், களித்தானை, கள்ளுண்ணா.

மணக்:— உண்ணற்க, ஈன்றாள், நாணென்னும், உட்க, துஞ்சினார், கள்ளுண்ணார், களித்தானை, உள்ளொற்றி, களித்தறியேன், கையறியாமை.

பரிதி:— கள்ளுண்ணா, களித்தானை, களித்தறியேன், துஞ்சினார், உள்ளொற்றி, உட்க, உண்ணற்க, கையறியாமை, நாணென்னும், ஈன்றாள்.

காளிங்.— உண்ணற்க, உள்ளொற்றி, களித்தானை, நாணென்னும், ஈன்றாள், உட்க, கள்ளுண்ணா, களித்தறியேன், கையறியாமை, துஞ்சினார்.

94. சூது.

தொகுப்புரை:

[வெற்றிமேல் வெற்றி கிட்டினாலும் சூதினை விரும்பற்க அவ்வெற்றி மீன் தூண்டில் முள்ளை விழுங்கியது போலாம். ஒருபொருளை வெற்றியால் பெற்று நூற்றுக்கணக்காக இழக்கின்ற சூதாடிகளுக்கு அறமும் இன்பமும் அடைந்துவாழும் வாழ்வும் உண்டோ? பொருள்வருவாய் சூதுக்காய்கள் உருளுவதை ஓயாமல் கூறுபவனைவிட்டு அகன்று அவனுடைய பகைவர்கண்ணே தங்கும். அளவற்ற துன்பங்களை விளைவித்துப் புகழையும் அழிக்கின்ற சூதைப்போல வறுமையைத் தரும் வாயில் ஒன்றும் இல்லை. சூதாட்டக் காய்களையும், கழகத்தையும், ஆடுங்கைகளையும் நம்பி லோபமாய் இருந்தவர்களே வறுமையால் வாடிய மன்னர். சூதாட்டம் என்னும் மூதேவியால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் வயிறார உண்ணமாட்டார்கள். துன்பத்தையும் எய்துவார்கள். ஒருவன் சூதாடும் களத்திலேயே காலத்தைக் கழிக்குமானால் அவனுடைய பழைமையான செல்வமும், நற்குணங்களும் அழியும். சூது பொருளையும் அருளையுங்கெடுத்துப் பொய்யனாக்கித் துன்பத்தில் ஆழ்த்தும். சூதுக்களத்தைச் சேர்பவனை உடை, செல்வம், உணவு, புகழ், கல்வி என்ற ஐந்தும் அடையாவாம். பொருளைத் தோற்கத் தோற்க சூது விரும்பும் சூதாடியைப்போல, துன்பத்தை அனுபவிக்குந்தோறும் உயிர் உடம்பின்மேல் காதலை உடைத்து.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி, அக்கள்ளுண்டல்போல அறம் பொருள் இன்பங்கட்கு இடையீடாகிய சூதாடலும் பிணியுழத்தலும் கூறுவான் தொடங்கி, முதற்கண் சூதினது இயல்பு கூறுகின்றார்.

மணக்:— சூதாவது சூதாடினால் வரும் குற்றம் கூறுதல். இது மேற்கூறியவற்றோடொத்த இயல்பிற்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— சூதாவது கள்ளுண்டற்கு ஒக்கும் எ - று.

931. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று. (க)

உரைப்பகுதி :

பரிமே:— வென்றிடினும் சூதினை வேண்டற்க - தான் வெல்லும் ஆற்றலுடையனாயினும் சூதாடலை விரும்பாதொழிக; வென்றதூஉம் தூண்டில்பொன் மீன் விழுங்கியற்று - வென்று பொருளெய்துவார்உளரால்

எனின் அவ்வென்றபொருள் தானும் இரையான் மறைந்த தூண்டிலிரும் பினை இரை எனக்கருதி மீன் விழுங்கினாற்போலும்.

வேறல் ஒருதலையன்மையின் வென்றிடினும் என்றும், கருமங்கள் பலவும் கெடுதலின் வேண்டற்க என்றும் கூறினார். எய்திய பொருள் சூதாடுவார் நீங்காமைக்கு இட்டதோர் தளை என்பதூஉம், அதனால் பின் துயருழத்தலும் உவமையால் பெற்றாம்.

மணக்:— வெல்லுமாயினும் சூதினை விரும்பாதொழிக; வென்று பெற்ற பொருளும், தூண்டிலின்கண்ணுண்டாகிய பொருளை மீன் விழுங் கினாற்போலும் எ - று.

இது பின் கேடுபயக்கும் என்றது.

பரிப்:— பொன் என்பது இரும்பாம். உம்மையான் வெல்லான் என்பது துணிபு. இது சூது ஆடலைத் தவிர்க என்றது.

பரிதி:— சூதிலே மிகுதியாக வென்றாலும் அந்தப்பொருள்கெடும்; பொன்னினால் பண்ணின தூண்டிலைப் பிரியம்பண்ணிப் பெரியமீன் விழுங்கினாற்போலே எ - று.

காளிங்:— சூது ஆடலைத் தாம் வென்றிடினும் விரும்பற்க: என் எனின் அங்ஙனம் வென்று உளதாய அப்பொருள் தானும் ஒருவன் கொலை கருதித் தூண்டிலிற் செறித்த பொன்னினைக் கண்ட மீனானது நமக்கு இனிது என்று கருதி விழுங்கிய அத்தன்மைத்து எ - து.

மேற்கோள்பகுதி:

சொக்கப்ப:—, 'நாகிள ஏறுபுல்லி பொன்மா மணியும் பிரிந் திருந்தாரும் புலம்ப' பொன்-இரும்பு. 'தூண்டிற்பொன் மீன் விழுங்கியற்று' என்றாற்போல. (த. கோ. 274.)

ஒப்புமைப்பகுதி:

"வென்றி வரினும் அதனான்முன் மேவும் ஒன்றற் காயிரம்பின்
மன்ற இழக்கும் அதுவன்றி வைத்த பொருளும் வருவாயும்
அன்றி யனைத்தும் பகைகொள்ளும் அமைச்ச ராதி உறுப்பொழியும்
ஒன்றும் ஒளிகல் விகண்மறுமை யுறுதி இலையாம் சூதாடேல்."

—விநா. அரசி. 141.

"சூது விரும்பேல்." —ஆத்தி. 49.

"சூதும் வாதும் வேதனைசெய்யும்." —கொன்றை. 31.

முதுமொழிவெண்பாக்கள்:

"அரனடியார் நித்தம் அமுதுசெய வேண்டிக்
கவறுருட்டிக் கைவந்தார் அன்றிப் - பிறரெல்லாம்."
—முதுமொழி. 141.

932. ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு. (௨)

உரைப்பகுதி:

பரிமே:— ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும் - அத் தூண்டிற் பொன்போன்ற ஒன்றனை முன்பெற்று இன்னும் பெறுதும் என்னும் கருத்தால் நூற்றினை இழந்து வறியராம் சூதர்க்கும், நன்று எய்தி வாழ்வது ஓராறு உண்டாங்கொல் - பொருளால் அறனும் இன்பமும் எய்தி வாழ்வதொருநெறி உண்டாமோ ஆகாது.

அவ்வாற்றால் பொருள் இழந்தே வருதலான், அதனால் எய்தும் பயனும் அவர்க்கு இல்லை என்பதாம்.

மணக்:— முன்பு ஒரு பொருளைப்பெற்று, அவ்வாசையாலே மற்றொரு பொருளினைப் பெறலாம் என்று நூறு பொருளை இழக்கின்ற சூதாடிகளுக்கு நன்றெய்தி வாழ்வதொரு நெறி உண்டாமோ? எ - று.

பரிப்:— இது தூண்டிலில்பொன் மீன் விழுங்கினால் போலும் என்றார்; அதற்குக் காரணம் ஆகவும் இரக்கம் இல்லை என்பதூஉம் கூறிற்று.

பரிதி:— ஒரு பணம்வென்று நூறு பணம் தோற்கும் சூதிலும் உண்டோ? நன்மைபெற்று அவர்கள் வாழும் முறை எ - று.

காளிங்:— சூதைப்பற்றி நின்று ஒரு பொருள் எய்திப் பல பொருள் இழக்கும் சூது ஆடுவார்க்கும் உளது ஆமோ? ஆகாது: யாது எனின் ஒருவாற்றானும் தமக்கு ஓரிடத்தும் ஒரு நன்மைபெற்று வாழ்வது ஓர் நெறி எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

" மாபா ரதத்தின் வரலா றறிந்துசிவன்
சீர்பாதம் போற்றும் தினகரா - ஆபாதர்." —தினகர. 98.

" முற்பணயத் தாற்பின்னும் மூண்டிழந்தார் சூதரொடு
சொற்படுஞ்சூ தாடினோர் சோமேசா - அற்பமாம்." —சோமேசர். 94.

குறிப்பு:

ஒன்று, நூறு என்பன எண்ணுகுபெயர்; பொருள் மேல் நின்றன. நன்று - நன்மை. அது பொருளாலெய்தும் நன்மைகளாகிய அறத்தையும் இன்பத்தையும் உணர்த்திற்று.

—தொகுப்பாசிரியர்.

933. உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— உருள் ஆயம் ஓவாது கூறின் - உருளுங்கவற்றின்கண் பட்ட ஆயத்தை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின், பொருள் ஆயம் போய்ப் புறமே படும் - அரசன் ஈட்டிய பொருளும் அவன் பொருள் வருவாயும் அவனை விட்டுப்போய்ப் பகைவர்கண்ணே தங்கும்.

கவற்றினது உருட்சியை அதனுடைய ஆயத்தின்மேல் ஏற்றியும், சூதாடலை அது கூறலாகிய காரணத்தின்மேலிட்டும் கூறினார். பொருளாயம் என்பது உம்மைத்தொகை. ஆயம் வடமொழித்திரிசொல். காத்தற்கண்ணும் இயற்றற்கண்ணும் கருத்திலனாகலின், அவை இரண்டும் பகைவர்பாற் செல்லும் என்பதாம்.

மணக்:— புரளும் கவற்றை இடைவிடாது எக்காலத்தும் கூறுவனாயின், பொருள் வரவு தன்னைவிட்டுப் போய்ப் பிறர்பாற்செல்லும் எ - று.

பரிப்:— மேல்கூறிய ஐந்தும் அடையாமைக்குக் காரணம் என்னை என்றார்க்கு, முயற்சி இன்மையான் இவற்றை உண்டாக்கற்குக் காரணமாகிய வருவாய் இல்லையாம் என்று அதற்குக் காரணமாகக் கூறப்பட்டது.

பரிதி:— கவறுவிழுந்த இலக்கம் எப்போதும் பேசுவார்க்குப் பொருளாயமும் புறத்திற்படும் எ - று.

காளிங்:— வாய்மையும் வழக்கும் கல்வியும் முதலிய தன் நாவினால் கூறும் நயம் இன்றி, என்றும் கவறு புரட்சியில் தோன்றும் தாயப் பெயர்களையே ஒழியாது கூறின், திரட்டிய பொருள் தொகை அனைத்தும் தம் இடத்தினின்றும் போய்க் கெட்டுவிடும் எ - று.

உருள்தல் என்பது புரளுதல் என்றது. ஆயம் என்பது கவறு புரட்சியின் தாயம் என்றது. பொருளாயம் என்பது பொருள் கூட்டம் என்றது. படும் என்பது கெடும் என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பொருளாயம் - பொருளும், பொருள் வருவாயும் என்பதனால் உம்மைத்தொகை. உருள் - உருளுங்கவறு. ஆயத்தை இக் காலத்தார் ஆதாயம் என வழங்குவர்.

ஒப்புமைப்பகுதி :

" இருளாரும் மணிகண்டர் அடியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாயம் எய்துதற்குப் புகழ்க்குடந்தை அம்பலத்தே
உருளாயச் சூதாடி உறுபொருள்வென் றனநம்பர்
அருளாக வேகொண் டங்கமுதுசெய்வித் தின்புறுவார்."

—பெரிய. மூர்க்க. 8.

குறிப்பு :

உருளாயமாவது; பகடை பன்னிரண்டு, தாயம், சோணாலு வாணாலு என்றாற் போன்ற எண்ணிக்கைகள். சூதாடுவார் இவற்றை விடாது சொல்லிச் சூதாடுவது வழக்கம்.

—தொகுப்பாசிரியர்.

934. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில். (௪)

உரைப்பகுதி :

பரிமே:— சிறுமை பல செய்து சீர் அழிக்கும் சூதின் - தன்னை விழைந்தார்க்கு முன் இல்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்து உள்ள புகழையும் கெடுக்கும் சூதுபோல், வறுமை தருவது ஒன்று இல் - நல்குரவினைக் கொடுக்கவல்லது பிறிதொன்று இல்லை.

அத்துன்பங்கள் முன்னர்க் கூறுப. நல்வினைகளையும் நல்லினத்தையும் நீக்கித் தீவினைகளையும் தீயினத்தையும் கூட்டுதலால், சீரழிக்கும் என்றார். வறுமைக்கு எல்லையாவர் என்பதாம்.

மணக்:— துன்பமாயின பலவற்றையும் செய்து தலைமையை அழிக்கும் சூதுபோல, வறுமையைத் தருவது பிறிதொன்றில்லை எ - று.

பரிப்:— மேற்கூறிய எல்லாவற்றையும் தொகுத்து நன்கு மதித்துக் கூறப்பட்டது.

பரிதி:— சூது விரும்புகையினால் யாவர்க்கும் சிறுமையாவது; மனத்தில் லட்சுமி துலங்கிய பவிசையுங் கெடுக்கும் எ - று.

காளிங்:— தனக்குக் கீழ்மைகள் பலவற்றையும் செய்வதாய் இங்ஙனம் மேன்மை ஆகிய சீர்மைப் பாட்டினைத் தலையழிக்கும் சூதின் மேற்பட ஒருவர்க்கு வறுமையைத் தரவல்லது மற்று ஒன்றும் இல்லை எ - று.

குறிப்பு :

நளன் தேர்ப்பாகனும், வாருகனும் ஆனது சூதால் என அறிக. பாண்டவர்களும் உணவின்றிக் காட்டில் அலைந்ததும், புரோகிதனும், மடையனும், பேடியும் ஆனதும் சூதினால் உண்டான சீரழிவே.

—தொகுப்பாசிரியர்.

935. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். (கு)

உரைப்பகுதி :

பரிமே:— இல்லாகியார் - முற்காலத்துத் தாம் உளராகியே இலராகி ஒழுகினார், கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார் - கவற்றினையும் அஃது ஆடுங்களத்தினையும் அவ்வாடற்கு வேண்டும் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத வேந்தர்.

கைத்தொழில் - வெல்லும் ஆயம்படப் பிடித்து எறிதல். அவ் இவறுதலால் பாண்டவர் தம் அரசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டு மறைந்தொழுகினார் என அனுபவம் காட்டியவாறு. இவை ஐந்து பாட்டானும் அதனது வறுமை பயத்தற்குற்றம் கூறப்பட்டது.

மணக்:— கவற்றினையும், கழகத்தினையும், கைத்தொழிலினையும் விரும்பிவிடாதவர் முற்காலத்தினும் வறுவியரானார் எ - று.

கவறு - நெத்தம்; கழகம் - உண்டையுருட்டு மிடம்; கைத்தொழில் - கவடி பிடித்தல்.

பரிப்;— சூதாவது இம்மூன்று வகைத்து என்பதூஉம், இதனானே வறுமை உறுமென்றார் அஃது யாங்ஙனம் அறிதும் என்பார்க்கு முன்பு சூது ஆடிக் கெட்ட அரசராலே அறியலாம் என்பதூஉம் கூறப்பட்டது.

பரிதி:— கவறும் கழகமும் கொண்டு விளையாடுகிற தறுவாயிலே ஐவர் கையே என்று சூதுமேற்கொண்டார் இம்மைக்கும் மறுமைக்கும் வெறுமையாவர் எ - று.

காளிங்:— கவறு ஆடலும், அக்கவறு ஆடு களத்தில் சென்று புகுதலும், பிறிது ஒன்றினும் கைவைக்கும் கருமம் இன்றி அக்கவறு ஆடும் ஒழுக்கமே ஒழுக்கம் ஆதலும், இவையே நெருங்கப் பயின்று மற்று இது அல்லது பிறர்க்கு ஒன்று ஈயாது இறுகி நிற்கும் உலோபம் உடையார் யாவர்? மற்று அவரே இருமை ஆக்கமும் இலர் ஆகியோர் எ - று.

கழகம் என்பது சூதாடுகளம். கை என்பது இதற்கு ஏற்ற ஒழுக்கம். தருக்குதல் என்பது நெருக்குதல். இவறல் என்பது உலோபம்.

936. அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— சூது என்னும் முகடியான் மூடப்பட்டார் - தன் பெயர்சொல்லல் மங்கலமன்மையிற் சூது என்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்பட்டார், அகடு ஆரார் அல்லல் உழப்பர் - இம்மைக்கண் வயிறாரப் பெறார், மறுமைக்கண் நிரயத்துன்பம் உழப்பர்.

செல்வங்கெடுத்து நல்குரவு கொடுத்தற்றொழில் வேறுபடாமையின் சூது என்னும் முகடிஎன்றும், வெற்றி தோல்விகள்நோக்கி ஒருபொழுதும் விடாராகலின் ஈண்டு அகடாரார் என்றும், பொய்யும் களவும் முதலிய பாவங்கள் ஈட்டலின் ஆண்டு அல்லல் உழப்பர் என்றும் கூறினார். வயிறாராமை சொல்லவே, ஏனைப்புலன்கள் நுகரப்பெறாமை சொல்ல வேண்டாவாயிற்று. உழப்பர் என்பது எதிர்காலவினை.

மணக்:— தமக்கு உளதாகிய இந்திரியங்களும் மனமும் இன்புற்று நிறையப்பெறார்; அதுவேயன்றி, அல்லற்படுவதும் செய்வர்; சூதாகிய மூதேவியாலே மறைக்கப்பட்டார் எ - று.

மறைத்தல் - நற்குணங்களைத் தோன்றாமல் மறைத்தல்.

பரிப்:— மேல் சூது ஆடல் ஆகாது என்றார்; அதனால் குற்றம் என்னை என்றார்க்கு இவை இரண்டு குற்றமும் உள ஆம் என்று கூறப்பட்டது.

பரிதி:— சூது கொண்டுதிரிவாளாகில் பசியிலே அசனம் பண்ணார்; கிலேசமுறுவர்; மூதேவியால் மூடப்பட்டார். எ - று.

காளிங்:— பிறிது ஓர் செல்வம் அடையாமையே அன்றித் தன் வயிறார உண்டு சேறலும் இலர்: இன்னும் மற்று இதுவேயும் அன்றிப் பெருந்துயரம் உறுவர்: யார் எனின் சூது என்று எடுத்து உரைக்கப் படுகின்ற இம்மூதேவியால் சூழ்ந்து கொள்ளப்பட்டவர் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மூடப்பட்டார் எழுவாயாகியதால் அல்லலுழப்பர் என்பது பயனிலையாதல் நோக்கிப் பெயர் என்னாது, எதிர்காலமுற்றுச் சொல் என்றார்.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— செயப்பாட்டுவினை வினைமுதலாய் வந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 78.)

முகடியான் மூடப்பட்டார் என்பதை முகடி மூடினார் எனத் தொகுத்தல் கூடாது பொருள் வேறுபடுதலான் என்பர். (ஷை.)

முதுமொழிவெண்பாக்கள்:

"வெஞ்சூதால் தந்தை வெறுக்கக் குணநிதிதான்
முஞ்சினனாண் வவ்வி முருகேசா - தாஞ்சும்." —முருகேசர். 94.

குறிப்பு:

முகடி - மூத்தாள். முகடு - மூன். 'சூதாட்டத்தில் மூழ்கியவர்களுக்குப் பசித்துன்பமும் தோன்றாது. ஏனைய இன்பங்களில் எண்ணஞ்செல்லாது என்பது விளக்கப்பெற்றது. —தொகுப்பாசிரியர்.

937. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். (7)

உரைப்பகுதி:

பரிமே:— காலை கழகத்துப் புகின் - அறம் பொருள் இன்பங்கட்கு அடைத்தகாலம் அரசனுக்குச் சூதாடுகளத்தின்கண் கழியுமாயின், பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் - அக்கழிவு தொன்றுதொட்டுவந்த அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும்.

பழகிய என்பது பண்புடனும் இயையும். தான் செய்துகொள்ளும் அறமுதலியவேயன்றி முன்னோரைத் தொடங்கி வருகின்றசெல்வமும் முன்செய்த நல்வினையின் பயனாய பண்பும் இலவாம் என்பதாம்.

மணக்:— சூது கழகத்தின்கண்ணே காலைப்பொழுது புகுவானாயின், அது தொன்றுதொட்டு வருகின்ற செல்வத்தினையும் தனக்கு இயல்பாகிய குணத்தினையும் கெடுக்கும் எ - று.

பரிப்:— மேல்கூறிய இன்புறுதல் வாயலர் ஆயினும், தோன்றின நாள்தொட்டு வருகின்ற செல்வம் உடையார்க்கும் பண்பு உடையார்க்கும் உளது ஆகுமே என்றார்க்கு அவை இரண்டும்போம் என்று கூறப்பட்டது.

பரிதி:— பழகியசெல்வமும், பண்பும் கெடுக்கும் சூதாடுமிடத்திற் செல்லின் எ - று.

காளிங்:— தம் குலத்தொடு பழகி வருகின்ற செல்வத்தையும் கெடுத்துத் தாம் ஒழுகி வருகின்ற மரபினையும் கெடுத்துவிடும்: தாம் என்செயின், காலையே தாம் செய்யும் கருமக்கடன் ஒழிந்து சூதாடு களரிக்கண் சென்று புகூஉம் செய்தி ஆயின் எ - று.

குறிப்பு

பழகிய செல்வம் - பாரம்பரையாக அழிவின்றிவரும் செல்வம். பழகிய பண்பு - பாரம்பரைக் குணம்.

—தொகுப்பாசிரியர்.

938. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்(து)
அல்லல் உழப்பிக்கும் சூது. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— சூது - சூது, பொருள் கெடுத்து - தன்னைப்பயின்றவன் பொருளைக்கெடுத்து, பொய் மேற்கொளீஇ - பொய்யை மேற்கொள்ளப் பண்ணி, அருள் கெடுத்து - மனத்தெழும் அருளைக்கெடுத்து, அல்லல் உழப்பிக்கும் - இவ்வாற்றான் அவனை இருமையினும் துன்பம் உறுவிக்கும்.

இத்தொழில்கள் மூன்றற்கும் சூது வினைமுதலாகவும், தோல்வி வெற்றி செற்றம் என்பன முறையே கருவிகளாகவும் கொள்க. முன்னதனன் இம்மையினும், ஏனையவற்றான் மறுமையினுமாம். பொருள் கொடுத்து என்பது பாடமாயின், அவ்வெச்சத்திற்கு முடிவு மேற்கொளீஇ என்புழி மேற்கோடலாகிய வினைமுதல்வினை.

மணக்:— சூது முற்படப் பொருளைக் கெடுத்து, அதன்பின்னர்ப் பொய்யை மேற்கொள்ளப்பண்ணி, அருளுடைமையைக் கெடுத்து அல்லற் படுத்துவிக்கும் எ - று.

பரிப்:— சூது ஆடினார் அல்லல் உழப்பர் என்றார்; பொருட்கேடு வருவது அல்லது அருள் கெடுவது உண்டோ என்றார்க்கு அத்துணை வருமாறு இது என்று கூறப்பட்டது.

பரிதி:— சூதுபொருளைக் கெடுத்துப் பொய் சொல்விக்கும்; அருளைக் கெடுத்துத் துயரமும் செய்யும் எ - று.

காளிங்:— ஒருவர்க்கு முன் நின்ற பொருளையும் கெடுத்துப், பொய்ம்மையும் அவன்பால் கொளுவி, வறியோர்க்கு ஒன்று ஈதல் மரபு ஒன்றுள்ள அருளினையும் கெடுத்துப், பின்னும் தமக்கு ஆற்ற ஒண்ணு அரும்துயர் உறுவிக்கும் சூதானது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"தன்மர் துரியோ தனனுடனே சூதாடி
இன்மையுற்றார் என்றோ இரங்கேசா - நன்மைப்." —இரங். 94.

குறிப்பு:

பொருள் கெடுத்தல் இம்மைஇன்ப அழிவிற்கும், பொய் மேற்கொள்ளுதல் பஞ்சமா பாதகங்களைச் செய்தற்கும், அருள்கெடுத்தல் மறுமையின்ப அழிவிற்குமாகக் கொள்க. —தொகுப்பாசிரியர்.

939. உடைசெல்வம் ஊணொளி கல்விஎன் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். (௯)

உரைப்பகுதி :

பரிமே:— ஆயம் கொளின் - அரசன் சூதினைத் தனக்கு வினைத்தொழிலாக விரும்புமாயின், ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்று ஐந்தும் அடையாவாம் - அவனை ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையும் என்று இவ்வைந்துஞ் சாராவாம்.

ஆயம் ஆகுபெயர். இச்சிறப்புமுறை செய்யுள் நோக்கிப் பிறழ நின்றது. செல்வம் - அறுவகை உறுப்புக்கள். ஊணுடை என்பனவற்றால் துப்புரவுகளெல்லாம் கொள்ளப்படும். காலமும் கருத்தும் பெறுமையின், இவையுளவாகா என்பதாம். இவை நான்கு பாட்டானும் சிறுமைபல செய்து அவற்றான் இருமையும் கெடுத்தல் கூறப்பட்டது.

மணக்:— உடையும், செல்வமும், உணவும், புகழும், கல்வியும் என்று சொல்லப்பட்ட ஐந்தும் சூதினைக் கொள்ளின், சாராவாம் எ - று.

செல்வம் - பொன்னும், மனையும், பூமியும், அடிமையும் முதலாயின.

பரிப்:— மேல் சூது ஆடினோர் இன்பு உற்று நிறைவு பெறார் என்றார்; அதற்குக் காரணம் என்னை என்றார்க்கு இன்பத்திற்குக் காரணம் ஆகிய இவை ஐந்தும் அடையார் என்று காரணம்கூறிற்று.

பரிதி:—உடைமை, செல்வம், அசனம், புகழ், கல்வி இந்தஐந்து காரியமும் சூது விரும்புவார்க்கு இல்லை எ - று.

காளிங்:— உடுப்பனவும், உடைய பல செல்வமும், உண்பனவும், ஊன்று தோற்றமும், கல்விகளும் என்று இவ்வைந்தும் இவனை அணுகாவாம்: சூதின் கருவி இருந்து நின்று ஆயம் கைவிடமாட்டாமல் கைக்கொண்டு ஒழுகப் பெறுவோர்க்கு எ - று.

இவ்வாறு நட்பின்கண் சூதும், கள்ளும் மருவற்க என்பது உணர்த்தி மற்று அனைவர்க்கும் முந்துஉற மருவுதற்கு இனிய யாக்கை உறுதிக்கு வாய்ப்பு உடைமை மருந்து ஆகலான் மற்று இவற்றின் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

" உருவழிக்கும் உண்மை நலனழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானம் சிதைக்கும் - ஒருவர்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து."
—நளவெண்பா

" ஓதலும் ஓதி உணர்தலும் சான்றோரால்
மேதை எனப்படும் மேன்மையும் - சூது
பொரும்என்னும் சொல்லினால் புல்லப் படுமேல்
இருளாம் ஒருங்கே இவை."
—அறநெறி. 87.

முதுமொழிவெண்பாக்கள்:

" வெற்றிநளன் சூதாடி வீடுவிட்டுக் கானுறைந்தான்
சிற்றிடையும் தானும் சிவசிவா - சுற்றும்."
—சிவசிவ. 94.

940. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற் றுயிர். (௪௦)

உரைப்பகுதி:

பரிமே:— இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் - சூதாடலான் இருமைப் பயன்களையும் இழக்குந்தோறும் அதன்மேல் காதல் செய்யும் சூதன்போல், துன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர் - உடம்பான் மூவகைத் துன்பங்களையும் அனுபவிக்குந்தோறும் அதன்மேல் காதலையுடைத்து உயிர்.

சூது ஆகுபெயர். உயிரினது அறியாமை கூறுவார்போன்று சூதனது அறியாமை கூறுதல் கருத்தாதலின், அதனை யாப்புறுத்தற் பொருட்டு உவமமாக்கிக்கூறினார். இதன் எதிர்மறைமுகத்தால் சூதினை வெறுத்தொழிவானை ஒக்கும் உடம்பினை வெறுத்தொழியும் உயிரெனவும் கொள்க. இதனான் அஃது ஒழிதற்கு அருமையும் ஒழிந்தாரது பெருமையும் கூறப்பட்டன.

மணக்:— பொருளை இழக்குந்தோறும் பொருளைக் காதலிக்கும் சூது போல, துன்பத்தை உழக்குந்தோறும் இன்பத்திலே காதலுடைத்து உயிர்; இவை இரண்டினுக்கும் அஃதியல்பு எ - று.

பரிப்:— ஈண்டு உயிர்க்கு அஃது ஆதல் கூறியது எற்றுக்கு எனின், இவை இரண்டையும் ஒன்றை ஒன்றாகக் கூறின் அல்லது பிறிது உவமிக்கப்படும் பொருள் இல்லை என்றற்கு எனக்கொள்க. மேல் ஒன்று எய்தி நூறு இழக்கும் என்றார்; அஃது என்னை? ஒருகால் தோற்றவன் பின்பு தவிரானோ என்றற்கு இது கூறப்பட்டது.

பரிதி:— தோற்கத் தோற்கச் சூதிலே ஆசைப்படுமாப் போலே பொருள் தோற்கத் தோற்கத் துன்பம் மிகுத்துத் தோன்றும் எ - று.

காளிங்:— கற்றல் கேட்டல் கடன் அறிந்து ஒழுகுதல் என்னும் இவை காதலியாது சூதினால் தன் கைப்பொருள் இழத்தல் கண்டுவைத்தும் ஆங்ஙனம் இழத்தொறும் இயற்றல் காதலிக்கும் சூதேபோலும் பெரிதும் துன்பம் உழத்தொறும் உழத்தொறும் காதல் உடைத்தாவது இச்சூது ஆடும் உணர்விலி; என்னை பாவம்! எ - று.

காதற்று என்பது காதலை உடைத்து என்றது. உயிர் என்பது இவனை ஒரு மகன் என்று கூறுதற்கு நாணி உயிர் என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தொறு - தான் சார்ந்த இடத்தைப் பலவாக்கி யாண்டாண்டு என்பதுபட நிற்பதோர் இடைச்சொல் இழத்தொறும் உழத்தொறும் என நின்றன. இழக்குந் தொறும் உழக்குந்தொறும் என நின்றன. 'இறைத்தொறும் ஊறும் கிணறு' என்பதும் அது. "இடந்தொறும் வாரணம்" என்னுங் (253) கோவையாருள் 'தொடர்ந்தொறும்' என்பதும் அது

குறிப்பு:

அதிகாரம் சூதாயிருக்கவும், சூதேபோல் என உவமமாக்கி 'உயிர் துன்பம் உழத்தொறூஉம் காதற்று' எனக் கூறியது உயிர்களுக்கு எத்துணைத் துன்பம் அனுபவித்தாலும் தோன்றுது மீட்டும் அவ்வுடலோடு இருக்கவிரும்புமாறுபோல, சூதாடிக்கு எவ்வளவுபொருள் இழந்தாலும் எழுச்சியுறும் என்பது விளக்கியவாறும்.

அன்றியும் வருகின்ற அதிகாரம் மருந்தாகலின் துன்பத்தால் வருந்தும் உடல்மேல் உயிர் காதலையுடைத்தல்லவாயின் மருந்தாற் பயனில்லை; மருந்தை உண்டாவது துன்பம் நீக்கிக்கொள்ள விரும்பும் என்ற இயைபு விளக்க ஈண்டு முக்கிய மல்லாத வகையில் உயிர் காதற்று என முடித்தார்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— வேண்டற்க, ஒன்றெய்தி, உருளாயம், சிறுமை, கவறும், அகடாரார், பழகிய, பொருள், உடைசெல்வம், இழத்தொறூஉம்.

மணக்:— வேண்டற்க, அகடாரார், உடைசெல்வம், உருளாயம், பழகிய, பொருள், ஒன்றெய்தி, இழத்தொறூஉம், சிறுமை, கவறும்.

பரிதி:— அகடாரார், சிறுமை, பொருள், பழகிய, கவறும், உருளாயம், வேண்டற்க, ஒன்றெய்தி, இழத்தொறூஉம், உடைசெல்வம்.

காளிங்:— அகடாரார், சிறுமை, பொருள், பழகிய, கவறும், ஒன்றெய்தி, உருளாயம், வேண்டற்க, இழத்தொறூஉம், உடைசெல்வம்.

95. மருந்து

தொகுப்புரை:

[உணவு மிகுந்தாலும், குறைந்தாலும் வாத, பித்த, சிலேட்டுமங்கள் நோயை உண்டாக்கும். உண்ட உணவு சீரணிக்க, மேல் அளவறிந்து ஒருவன் உண்டானாயின் அவன் உடலுக்கு மருந்தே வேண்டாம். உண்ட உணவு சீரணித்த பிறகு அளவறிந்து உண்ணுக. அதுதான் உடம்பு பெற்றவன் நெடுங்காலம் பிழைத்திருக்கும் உபாயம். உணவு சீரணித்ததை அறிந்து, நன்றாகப் பசித்த பிறகு, உடலுக்கும் பருவத்துக்கும் ஒத்த உணவை உண்ணுக. எதிராகாத உணவை மனம் போனபடியில்லாமல் அளவறிந்து உண்டால் உயிருக்கு இறுதியில்லை. செரித்ததை அறிந்து உண்பவனிடத்து இன்பம் நிலை நிற்பதுபோல அளவுக்குமீறி உண்பவனிடம் நோய் நிலைத்து நிற்கும். தன்னுடைய உடல் நிலைக்கும், பசிக்கும் ஏற்றவாறு அன்றி மிகுதியாக உண்ணுமாயின், நோய்களும் மிகுதியாக வளரும். நோயையும், அதன் காரணங்களையும், அதைப்போக்கும் உபாயங்களையும் அறிந்து, தவறு வாராதபடி பரிகரிக்கவேண்டும் மருத்துவன் நோயாளியின் உடல்நிலை வயது முதலியவற்றையும், பிணியின் அளவையும், பருவத்தையுமறிந்து மருந்து கொடுக்கவேண்டும். மருந்தாவது நோயாளி, மருத்துவன், மருந்து, மருந்துமுடிப்பவன் என்ற நான்கு பகுதியை யுடையது.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாதம் முதலிய பிணிகள் வரும்; அவற்றுள் பழவினையான் வருவன அதன் கழிவின்கணல்லது தீராமையின் அவை ஒழித்து, ஏனைக்காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் திறம் கூறுகின்றார். காரணங்களாவன உணவு செயல்களது ஒவ்வாமையாகலின், பிணிகளும் காரணத்தான் வருவனவாயின.

மணக்:— மருந்தாவது யாக்கை நோயுறாமல் செய்யும் திறம் கூறுதல். மேல் கடியப்படுவன கூறினார் இனி கடியப்படாத உணவும் தன்னளவில் மிகுமாயின் துன்பம் பயக்குமாதலான், அதுவும் அளவறிந்து உண்ணவேண்டும் என்று அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— மருந்தாவது ஆகாரங்களின் மிகுதியாலே நோய் கொண்டு மருந்துகொடாமல் நியமத்திலே நடப்பது நெறி எ-று.

941. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. (க)

உரைப்பகுதி :

பரிமே:— மிகினும் குறையினும் - உணவும் செயல்களும் ஒருவன் பகுதிக்கு ஒத்த அளவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும், நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்றும் நோய் செய்யும் - ஆயுள்வேதம் உடையாரால் வாதம் முதலாக எண்ணப்பட்ட மூன்றுநோயும் அவனுக்குத் துன்பம் செய்யும்.

நூலோர் எண்ணிய எனவே, அவர் அவற்றான் வகுத்த வாதப் பகுதி பித்தப்பகுதி ஐப்பகுதி என்னும் பகுதிப்பாடும் பெற்றாம். அவற்றிற்கு உணவு ஒத்தலாவது சுவை வீரியங்களானும் அளவானும் பொருந்துதல். செயல்கள் ஒத்தலாவது மனம் மொழி மெய்களால் செய்யும் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே ஒழிதல். இவை இரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல் செய்யின், அவை தத்தம் நிலையின் நில்லாவாய் வருத்தும் என்பதாம். காரணம் இரண்டும் அவாய்நிலையான் வந்தன. முற்றும்மை விகாரத்தால் தொக்கது. இதனால் யாக்கைகட்கு இயல்பாகிய நோய் மூவகைத்து என்பதூஉம், அவை துன்பம் செய்தற்குக் காரணம் இருவகைத்து என்பதூஉம் கூறப்பட்டன. இன்பம் செய்தற்குக் காரணம் முன்னர்க் கூறுப.

மணக்:— உணவும் உறக்கமும் இணைவிழைச்சும் தன்னுடம்பின் அளவிற்கு மிகினும் குறையினும், நூலோரால் எண்ணப்பட்ட வாதமும் பித்தமும் சிலேட்டுமமுமாகிய மூன்றும் நோயைச் செய்யும் எ - று.

பரிப்:— மேல் உணவு மிகின் நோய் செய்யும் என்றார்: அதுவே அன்றி மற்றுள்ளவைமிகினும், இவை மூன்றும் குறையினும் நோய் ஆகும் என்றது.

பரிதி:— ஆகாரம் மிகுந்தாலும் குறைந்தாலும் வாத பித்த சிலேட்டுமம் மிடைப்படுத்தும் எ - று.

காளிங்:— இவ்வாறு மாறுபாடு வகுத்து உண்பது: அது தானும் அளவின்கண் மிகினும் குறையினும் மருத்து நூல் வல்லோர் ஆகிய மருத்துவர் அனைத்து நோய்க்கும் அடிப்புரம் ஆக, நூல்நெறியின் சூழ்ந்த வாதம் முதலிய மூன்று நோயினையும் செய்யும் எ - று.

நூலோர் என்பது மருத்துவர். வளி என்பது வாதம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மூன்றும் என்பது மூன்று என முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

மேற்கோள்பகுதி:

பெருந்:— மாட்டெறிந்தொழுகல் என்னும் தந்திரவுத்திக்கு மேற்கோள் (வீர. 180.)

ஒப்புமைப்பகுதி:

"நோய்க்கிடம் கொடேல்." —ஆத்தி. 76.

குறிப்பு:

வாத பித்த சிலேட்டுமங்கள் ஒன்றற்கு ஒன்று விஞ்சின் நோய் செய்யும் என்பர் பரிப்பெருமாள். இவைகளுக்குள் ஏற்றத்தாழ்வுண்டாவது உணவின் மிகுதி குறைவினாலேயாதலின் 'உணவு மிகினும் குறையினும்' என்றார் பரிமேலழகர். இவைகளில் மாற்றம் உண்டாதற்கு ஏது உணவையன்றிப் பருவமாறுபாடும், தட்ப வெப்பமும் ஆம் என்பர்.

—தொகுப்பாசிரியர்.

942. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய(து)
அற்றது போற்றி உணின். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— அருந்தியது அற்றதுபோற்றி உணின் - ஒருவன் முன் உண்டது அற்றபடியைக் குறிகளான் தெளிய அறிந்து பின் உண்ணுமாயின், யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம் - அவன் யாக்கைக்கு மருந்து என்று வேறு வேண்டாவாம்.

குறிகளாவன யாக்கைநொய்ம்மை, தேக்கின் தூய்மை, கரணங்கள் தொழிற்குரியவாதல், பசிமிகுதல் என இவை முதலாயின. பிணிகள் யாக்கையவாகலின், யாக்கைக்கு என்றார். உணின் என்பது அதன் அருமை தோன்ற நின்றது.

மணக்:— யாக்கைக்கு மருந்தென்பது ஒன்று வேண்டா; குற்றமற முற்காலத்து அருந்திய உணவு அற்றமை அறிந்து பாதுகாத்து உண்பனாயின் எ - று.

இஃது இவ்வாறுசெய்யின் மருந்து தேடவேண்டாம் என்றது.

பரிதி:— செரித்தால் சாமம் பார்த்து அன்னம் இரண்டு கூறும் தண்ணீர் ஒரு கூறும் வாயுசஞ்சரிக்க ஒரு கூறும் வாதபித்த சிலேட்டு மத்திற்கு வேண்டாக்கறியை விட்டு அசனம் பண்ணக்கடவன் எ - று.

காளிங்:— தாம் அங்ஙனம் உண்பது இங்ஙனம் அற்றமை குறிக் கொண்டு ஒழுகப் பெறின், உறுவது ஓர் நோய் இன்மை தமதுயாக்கைக்கு இனி, வேறு மருந்து ஒன்று நாவினுல் சொல்லலும் வேண்டாதாய் விடும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" மனமெய்ம் மொழிகள் வருந்தாமல் வருத்துத் தொழிலை மாறுபடா
இனிய உணவை மிகப்பசித்த இடத்தின் உடற்குப் பொருந்த உணின்
முனிசெய் பிணிகட் கிடனின்றும் முறைகள் பிறழ்ந்து வந்துவிடின்
புனித முடைய வயித்தியரால் வழிநின் றவற்றைப் போக்குகவே.''

—விநா. அரசி. 142.

குறிப்பு:

யாக்கையின் நொய்ம்மை: - உடல் தனக்குத்தானே இலேசாகத் தோன் றுதல். தேக்கின் தூய்மை - புளிச்சஏப்பமும், வாய்நாற்றமும் இன்றி இருத்தல்.

—தொகுப்பாசிரியர்.

943. அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— அற்றால் அளவு அறிந்து உண்க - முன் உண்டது அற்றால் பின் உண்பதனை அறுமளவு அறிந்து அவ்வளவிற்றாக உண்க, உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு அஃது - இறப்பவும் பலவாய பிறயாக்கைகளில் பிழைத்துப் பெறற்கரிய இம்மானுட யாக்கையைப் பெற்றான் அதனை நெடுங்காலங்கொண்டு செலுத்துநெறி அதுவாகலான்.

இம்மை மறுமை வீடுபேறுகள் எய்தற்பாலது ஈது ஒன்றுமே யாதலின் உடம்புபெற்றான் என்றும், அது நெடிதுநின்றுழி அவை பெருகச் செய்துகொள்ளலாமாகலின் நெடிதுய்க்குமாறு என்றும் கூறி னர். பெற்றால் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

மணக்:— முன்பு உண்டது அற்றால், பின்பு உண்ணுங்கால் இத்துணை அறும் என்று தான் அறிந்து உண்க; அஃது உடம்பு பெற்றவன் அதனை நெடுங்காலம் செலுத்துதற்கு உரியவழி எ - று.

பரிப்:— மேல் அற்றது போற்றி உண்க என்றார்: இது போற்றுத லாவது அளவு அறிந்து உண்டல் என்று கூறப்பட்டது.

பரிதி:— முன்னுட்கொண்ட அசனம் செரித்தது பார்த்துத் தன் பசியறிந்து உண்க. நோயற்றுச் சிறிது நாள் உடம்பு சுகமாயிருக்க வேண்டில் எ - று.

காளிங்:— ஒருவன் தான் முன்னம் உண்டது வெந்து அற்றால், அவ்வறவுதான் பொய்ப்பசியோ மெய்ப்பசியோ என்று சிறிது தாழ்க்க நின்று, ஓர்ந்து தெளிந்த பின்னர் உண்க: அங்ஙனம் உண்ணவே அது கொண்டு தன் உடம்பு நிலை தளராமல் உறுதிக்கண் நெடிது கொண்டு செலுத்துவது ஓர் நெறியினைப் பெறலாம் எ - று.

மேற்கோள்பகுதி :

தெய்வச்:— ஏனையெச்சம் வினைமுதலானும் என்ற சூத்திரத்தில் அன்னமரபினால் கொள்ளப்படுவனவற்றிற்கு 'அற்றால் அளவறிந்து உண்க' என்பதை மேற்கோள் காட்டுவர். (தொல். சொல். 225.)

நச்:— வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய என்பதனால் ஆல் ஈறுதலுக்கு 'அற்றால் அளவறிந்து உண்க' என்பது மேற்கோள். (தொல். சொல். 230.)

மயிலை:— வான்பான்பாக்கு இன வினைஎச்சம்; 'இன என்ற தனால் 'அற்றால் அளவறிந்து உண்க' என்றற் றொடக்கத்தனவும் இவ்வாய் பாடுகளிலே அடக்கிக்கொள்க' என்பர். (நன். 342.)

சங்கர:— ஆய்தமாகிய சார்பெழுத்து உயிர்போல அலகுபெற்ற தற்கு மேற்கோள். (நன். 60.)

வினையெச்சவாய்பாடுகள் உணர்த்தும் சூத்திர உரையில் 'இன என்றமையால் 'அற்றால் அளவறிந்து உண்க' எனச் செயின் என்னும் வாய்பாடு போல் எதிர்காலம் காட்டுவனவும் கொள்க என்பர். (ஷை 343.)

ஒப்புமைப்பகுதி :

"பாலோடாயினும் காலமறிந்துண்." —கொன்றை. 50.

"நொறுங்கத் தின்றவன் நூறுண்டிருப்பான்." —பழ.

944. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. (சு)

உரைப்பகுதி:

பரிமே:— அற்றது அறிந்து - முன் உண்டது அற்றபடியை அறிந்து, துவரப்பசித்து - பின் மிகப்பசித்து, மாறல்ல கடைப்பிடித்துத் துய்க்க - உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்க.

அற்றதறிந்து என்னும் பெயர்த்துறை அதனை யாப்புறுத்தற் பொருட்டு. உண்டது அற்றாலும் அதன்பயனாகிய இரதம் அறாதாகலான் அதுவும் அறல்வேண்டும் என்பார், மிகப்பசித்து என்றார். பசித்தல் வினை ஈண்டு உடையான்மேல் நின்றது. மாறுகொள்ளாமையாவது உண்பான் பகுதியோடு மாறுகொள்ளாமையும் காலவியல்போடு மறுகொள்ளாமையும் சுவை வீரியங்களான் தம்முள் மாறுகொள்ளாமையுமாம். அவையாவன முறையே வாத பித்த ஐகளானாய பகுதிக்கு அடாதவற்றைச் செய்வன வாதலும், பெரும்பொழுது சிறுபொழுது என்னும் காலவேறுபாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற்கு ஆகாமையும், தேனும் நெய்யும் தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம்பட்டவாற்றால் துய்ப்பின் அதனானே நோயும் மரணமும் வருதலின், கடைப்பிடித்து என்றார்.

மணக்.— முன்பு உண்ட உணவு அற்றதனை அறிந்து, பின்பு அறுமளவும் கடைப்பிடித்து, உண்ணுங்கால் ஒன்றினோடு ஒன்று மாறுகொள்ளாத உணவினை மிகவும் பசித்து உண்க எ - று.

மாறுகோடலாவது நெய்யும் தேனும் இனியவாயினும் தம்மில் அளவொக்குமாயின் கொல்லும்; அது போல்வதாம். இஃது உண்ணுங்கால் அளவறிந்துண்ணலேயன்றி மாறற்றஉணவை உண்ணவேண்டுமென்றது.

பரிதி:— அசனம் செரித்ததும் அசனம் பண்ணினவன் நோய் அறுப்பான். நித்தியம் ஒருபொழுது அசனம் பண்ணிவருவானாகில் அவனுக்கு வியாதியில்லை எ - று.

காளிங்:— தான் முன் காலத்து உண்டது அற்றது அறிந்து பின்னும் தான் உண்ணும் முறைமைக்கு மாறு அல்லவற்றை முதிரப் பசித்தும் அரதி அறவே உண்க எ - று.

மேற்கோள்பகுதி:

மயிலை:— கடைப்பிடி என்பது உடம்பொடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள். (நன். 451)

ஓப்புமைப்பகுதி:

"மீதூண் விரும்பேல்." —ஆத்தி. 91.

945. மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் - அம்மூவகை மாறுகோளும் இல்லாத உணவைத் தன் உள்ளம் வேண்டிய அளவினன்றிப் பிணிவாரா அளவினால் ஒருவன் உண்ணுமாயின் உயிர்க்கு ஊறுபாடு இல்லை - அவன் உயிர்க்குப் பிணிகளால் துன்பம் விளைதல் உண்டாகாது.

உறுவதனை ஊறு என்றார்; அஃது இன்பத்திற்செல்லாதாயிற்று இல்லை என்பது தொடர்பாகலின். துன்பமுறுவது உயிரேயாதலின் அதன்மேல்வைத்துக் கூறினார். மாறுபாடில்வழியும் குறைதல் நன்று என்பதாம். இவை நான்குபாட்டானும் உண்ணப்படுவனவும், அற்றதளவும், காலமும், பயனும் கூறப்பட்டன.

மணக்:— சுவையும் வீரியமும் மாறுபாடில்லாத உணவை நீக்கி உண்பனாயின், தன்னுயிர்க்கு வரும் இடையூறு இல்லை எ - று.

மாறுபாடு - பலாப்பழந் தின்றால் சுக்குத்தின்றல்.

பரிப்:— மேல் மாறுபடாத உணவை உண்ண என்றார்: இதனை எவ்விடத்தும் மாறு ஆகாமை வருதலின் அஃது எய்தியது விலக்கிச் சுவையும் வீரியமும் மாறுபட்டன நுகரவேண்டும் என்றது.

பரிதி:— தன் சரீரத்திற்கு மாறுபாடு இல்லாத உண்டியை விரும்பின் ஊறுபாடில்லை உயிர்க்கு எ - று.

காளிங்:— கைப்பு, புளிப்பு, தித்திப்பு, காழ்ப்பு, உவர்ப்பு' துவர்ப்பு என்று சொன்ன அறுவகைச் சுவையும் இப்படி மாறுபடு

வருத்து உண்ணாது ஒருபடியே உண்ணும் சில்சுவை உண்டியை ஒழித்து மருத்துநூல் கூறியாங்கு உண்ணப்பெறின் ஓர் இடையூறுபடுதல் இல்லை மக்கட்கு எ - று.

ஒப்புமைப்பகுதி:

"லங்கணம் பரம ஔஷதம்." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"மாதவருண் மாமருதின் மங்கையர்க்கு முற்பிறப்பின்
சேதிதெரி விக்கும் சிவசிவா - ஆதலினால்." —சிவசிவ. 95.

946. இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் - அக்குறைதலை நன்று என்றறிந்து அவ்வாறே உண்பவன்மாட்டு இன்பம் நீங்காது நிலைநிற்குமாறு போல், கழிபேர் இரையான்கண் நோய் நிற்கும் - மிகப்பெரிய இரையை விழுங்குவான்மாட்டு நோய் நீங்காது நிலைநிற்கும்.

அவ்வாறே உண்டல் - உண்ணலாமளவின் சிறிது குறைய உண்டல். இன்பமாவது வாதமுதலியமூன்றும் தத்தம் நிலையில் திரியாமையின் மனமொழிமெய்கள் அவன்வயத்தவாதலும் அதனான் அறமுதலிய நான்கும் எய்தலுமாம். இரையை அளவின்றி எடுத்து அதனான் வருந்தும் விலங்கோடு ஒத்தலின், இரையான் என்றார். விதியெதிர்மறைகளை உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு.

மணக்:— அறம் அளவறிந்து உண்பவன்கண் இன்பம்போல உண்டாம்; மிக உண்பான்கண் நோய் எ - று.

பரிப்:— மேற் கூறியவாற்றான் உண்ணாதார்க்கு நோய் உண்டாம் என்றது.

பரிதி:— தீபாக்கினி அறுந்து அசனம் பண்ணுவாரிடத்தில் இன்பம் போலே நின்றது, வெகுவான இரைதின்னும் பேரிடத்திலே நோய் எ - று.

காளிங்:— அளவின்கண் இழிவது ஆகிய இழிவு அறிந்து உண்போன் யாவன், அவன் மாட்டு இன்பம்போல இனிது நிற்கும்: யாவர் மாட்டு யாது எனின், அங்கி அளவு அறியாத மிகுரிபேரையனிடத்து நோயானது எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— விதி, எதிர்மறைகளை உவமமும், பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு.

மேற்கோள்பகுதி:

நச்:— எடுத்தமொழி இனம் செப்பலும் உரித்தே என்பதற்கு மேற்கோள். (தொல். சொல். 61.)

காரி:— விதி எதிர்மறைகளை உவமமும் பொருளுமாக்கியதற்கு மேற்கோள். (மாற. 109.)

முதுமொழிவெண்பாக்கள்:

"பைவாய் மருந்துகொண்டு பண்டிதருண் பற்றலர்க்கென்
செய்வார்தென் கோவைத் தினகரா - மெய்வாய்." —தினகர. 99.

947. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— தெரியான் தீ அளவு அன்றிப் பெரிது உண்ணின் - தன்பகுதியும் அதற்கு ஏற்ற உணவும் காலமும் ஆராயாது வேண்டியதோர் உணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுத்தீயளவன்றி ஒருவன் மிக உண்ணுமாயின், நோய் அளவு இன்றிப் படும் - அவன்மாட்டு நோய்கள் எல்லையற வளரும்.

தெரியாமைவினைக்குச் செயப்படுபொருள்கள் அதிகாரத்தான் வந்தன. நோய் சாதியொருமை. இவை இரண்டுபாட்டானும் அவ்வகை உண்ணுவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

மணக்:— பசியின் அளவன்றி ஆராயாதே மிகவுண்பானுயின் நோய் மிக உண்டாம் எ - று.

இது நோய் தீர்ந்தாலும் பசியளவு அறியாதே உண்பானுயின் மீண்டும் நோயாமாதலான், அளவறிந்து உண்ணல் வேண்டும் என்றது.

பரிதி:— உதராக்கினி அளவை யறியாமல் கறியதார்த்தம் உருசி யறிந்து புசித்தான் மூன்று வகை நோயால் மிடைப்படுவன் எ - று.

காளிங்:— இவ்வாறு தனது அங்கிக்குத் தக்க அளவு என்பது ஒன்று இன்றிப் பின்னும் அவ்வுண்பதனை மற்று இது உண்டிக்குத் தகும் தகாது என்று தெரிந்து உணரானுமாய் முன் கூறியாங்குக் கழிபேர் இரையாகப் பெரிது உண்ணுமாயின் அவன்கண் வரும்நோய் ஓரளவு இன்றி உளதாம் எ று.

ஒப்புமைப்பகுதி:

" உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது." —முதுமொழிக். 8 : 7.

முதுமொழிவெண்பாக்கள் :

" அம்பரிடன் வேள்விநுகர்ந் தக்கினிக்கு மந்தமுற்ற(து)
என்ப தறிந்தும் இரங்கேசா - தன்பசியின்.' —இரங். 95.

948. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— நோய் நாடி - மருத்துவனுயினுன் ஆதுரன்மாட்டு நிகழ் கின்ற நோயை அதன் குறிகளால் இன்னது என்று துணிந்து, நோய் முதல் நாடி - பின் அது வருதற்காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, அது தணிக்கும் வாய் நாடி. பின் அதுதீர்க்கும் உபாயத்தினை அறிந்து, வாய்ப்பச் செயல் - அதனைச் செய்யும்வழிப் பிழையாமல் செய்க.

காரணம் உணவு செயல் என முற்கூறிய இரண்டும். அவற்றை ஆயுள்வேதமுடையார் நிதானம் என்ப. அவை நாடுதற்பயன் நோயினை யும் வாயினையும் ஐயமறத் துணிதல். மருந்துசெய்தல், உதிரங்களைதல்

அறுத்தல், சுடுதல் முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு, அது தணிக்கும்வாய் என்றார். "*கழுவாயுமுள" என்றார்பிறரும். பிழையாமை - பழையமருத்துவர் செய்துவருகின்ற முறைமையில் தப்பாமை.

மணக்:— நோயினையும் ஆராய்ந்து, நோய்வருவதற்குக்காரணத்தையும் ஆராய்ந்து அந்நோய் தீர்க்கும் நெறியையும் ஆராய்ந்து, அது தீர்க்குங் கால் தப்பாமற் செய்க.

இது நோய் தீர்க்குமாறு கூறிற்று.

பரிதி:— மூன்றுவகை நோயை நாடி, நோய்வந்த காரணத்தையும் நாடி, அது பொறுக்கிற வகையையும் நாடி, போகிறவகையையும் பார்ப்பான் பரிகாரி எ - று.

காளிங்:— இவன் உற்ற நோய் இது என்று மருத்து நூல் முறையினால் ஆராய்ந்தும், இவற்கு இந்நோய் வருதற்குக் காரணம் யாது என்று இங்ஙனம் தெரிந்து நோக்கிப் பின்னும் அந்நோயினை இனிது ஆகத் தணிக்கும் திறம் அறிந்தும், அவர் இடங்களில் செயல் விழையாமல் வாய்ப்பச் செய்க. எ - று.

ஒப்புமைப்பகுதி:

"நோயைத் துணிந்தே உறுநோய்முதல் நாடி அந்நோய்க்கு
ஆய மருந்தே அறிந்தூட்டும்அஃது உண்டு காட்டில்
பாய் மறுக்கும் படியாம்அது பல்லுயிர்க்கும்
கூயத்தின் என்னை ஞாவர் உபதேசம் என்றாள்." —நீல. 723.

முதுமொழிவெண்பாக்கள் :

"மண்ணுண் டவனறியா மண்ணுண்டை ஒன்றுகொடுத்(து)
எண்ணருநோய் தீர்க்கும் எழில்வேளூர்க் - கண்ணுதல்போல்."
—முதுமொழி. 142.

"நல்ல திலகவதி யார்மொழியை நம்பிவெந்நோய்
சொல்லரசர் தீர்ந்துய்ந்தார் சோமேசா - புல்லிய." —சோமேசர். 95.

"நலங்கொள்திரு நீலநக்கர் நாதர்மேல் இல்லாள்
சிலம்பிவிழ வாய்மருந்து செய்தாள் - சலங்கொளுமுன்." —திருத். 33.

"சீலமிலாப் பேய்ச்சமணர் சிந்தைநைந்தார் பாண்டியனைப்
மூலமறி யாது முருகேசா - ஏலவே." —முருகேசர். 95.

---

*புறம். 34.

949. உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— கற்றான்—ஆயுள் வேதத்தினைக் கற்ற மருத்துவன், உற்றான் அளவும் பிணி அளவும் காலமும் கருதிச் செயல் - அவ்வுபாயத் தினைச் செய்யுங்கால், ஆதுரன் அளவினையும் அவன்கண் நிகழ்கின்ற நோயின் அளவினையும் தன்செயற்கு ஏற்ற காலத்தினையும் அந்நூல் நெறியால் நோக்கி, அவற்றோடு பொருந்தச் செய்க.

ஆதுரனளவு - பகுதி பருவம் வேதனை வலிகளின் அளவு. பிணி யளவு - சாத்தியம், அசாத்தியம், யாப்பியம் என்னுஞ் சாதி வேறுபாடும், தொடக்க நடுவீறு என்னும் அதன் பருவவேறுபாடும், வன்மை மென்மை களும் முதலாயின. காலம் - மேற்சொல்லியன. இம்மூன்றும் பிழையாமல் நூல்நெறியானும் உணர்வு மிகுதியானும் ஆராய்ந்து செய்க என்பார், கற்றான் கருதிச்செயல் என்றார். இவை இரண்டுபாட்டானும் அவ்விழுக்குப் பட்டுழி மருத்துவன் தீர்க்குமாறு கூறப்பட்டது.

மணக்:— நோயற்றவனது அளவும், நோயினது அளவும், அதுபற்றிய காலமும் அறிந்து, அதற்குத்தக்கவாறு மருந்து செய்க: ஆயுள் வேதம் வல்லவன்.

பரிப்:— மேல் வாய்ப்பச் செய் என்றார் இதனால் வாய்ப்பச் செய்யு மாறு கூறினார்.

பரிதி:— வியாதிகொண்டவன் குணமும், வியாதியின் பேரும் காலத்தையும் விசாரித்துச் செய்வான் எ - று.

காளிங்:— நோய் உற்றவனது வன்மையும், மென்மையும், அவனுக்குச் சென்ற வயது அளவு ஆம் பிறவும், அவன் உற்ற நோயா வது அவன் அனுபவத்திற்கு வந்து அடிக்கொண்ட முகமோ என்றும், இடம் கொண்ட நோய் தலைசாய்ந்த முகமோ என்றும், இந்நோய் நிலை அளவு அறிந்தும், காலம் கார் கூதிர், முன்பனி, பின்பனி, சீரிள வேனில், வேனில் என்னும் அறுவகைப் பருவத்துள்ளும் இப்பருவத்து இந்நோய்க்கு இம்மருந்து செய்தால் தீரும், விகற்பிக்கும் என அறிதலும்

யாரோ எனின், வாகடம் முதலிய மருத்துநூல்களை மாசு அறக் கற்றவரே: இத்துணையும் குறிக்கொண்டு மற்று இதன் பின்னரே மருந்தினைச் செய்வானாக எ - று.

950. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்(று)
அப்பானால் கூற்றே மருந்து. (௧0)

உரைப்பகுதி :

பரிமே:— மருந்து - பிணிக்கு மருந்தாவது, உற்றவன் - அதனை உற்றவன், தீர்ப்பான் - அதனைத்தீர்க்கும் மருத்துவன், மருந்து - அவனுக்குக் கருவியாகிய மருந்து, உழைச் செல்வான் என்ற அப்பால் நாற்கூற்று - அதனைப் பிழையாமல் இயற்றுவான் என்று சொல்லப்பட்ட நான்கு பகுதியையுடைய நான்கு திறத்தது.

நான்கு என்னும் எண் வருகின்றமையின், அதுநோக்கி அப்பால் என்றொழிந்தார். நாற்கூற்றது என்பது விகாரமாயிற்று. அவற்றுள் உற்றவன் வகை நான்காவன: பொருளுடைமை, மருத்துவன்வழி நிற்றல், நோய்நிலைஉணர்த்தல் வன்மை, மருத்துத்துன்பம்பொறுத்தல் என இவை. தீர்ப்பான்வகை நான்காவன: நோய்கண்டு அஞ்சாமை, ஆசிரியனைவழி பட்டோதிய கல்வியும் நுண்ணறிவும் உடைமை, பலகாலுந்தீர்த்துவருதல், மனமொழிமெய்கள் தூயவாதல் என இவை. மருந்தின்வகை நான்காவன: பல பிணிகட்கும் ஏற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களான் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுதியோடுபொருந்துதல்என இவை. இயற்றுவான் வகை நான்காவன: ஆதுரன்மாட்டு அன்புடைமை, மனமொழிமெய்கள் தூயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை, அறிவுடைமை என இவை. இவையெல்லாம் கூடியவழியல்லது பிணி தீராமையின், இத்தொகுதியையும் மருந்து என்றார். ஆயுள்வேதமுடையாரும் இவை கால்களாக நடக்கும் என்பதுபற்றிப் பாதம் என்றும், இவை மாறு பட்டவழிச் சாத்தியமும் முதிர்ந்து அசாத்தியமாம் என்றும் கூறினார். இதனால் அதனைத் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன.

மணக்:— நோயுற்றவனும், நோய்தீர்க்குமவனும், மருந்தும், அதற்குத்தக்க மருத்தினைக் காலம் தப்பாமல் இயற்றுவானும் என்று இவ்வகைப்பட்ட நான்குதிறத்தது மருந்து எ - று.

பரிப்:— எனவே இந்நான்கினும் ஒன்று தப்புமாயின் நோய் தீராது என்றவாறாயிற்று. இது மருந்தின் பகுதி கூறிற்று.

பரிதி— வியாதிகொண்டவர்க்கும் பண்டிதர்க்கும் மருந்திற்கும் பரிகாரம் பண்ணுவார்க்கும் நந்நான்கு குணமுண்டு. அது ஏதென்றால் வியாதியாளர்குணம் திடவான், பதார்த்தவான், கிரமத்திலேவருபவன் கிலேயுள்ளவன் ஆக நான்கு. வைத்தியன் குணம் கற்றவன், தெய்வசகாயம் உள்ளவன், கண் ஆனி உள்ளவன், கோவண சுத்தமுள்ளவன் ஆக நான்கு. மருந்தின்குணம் எளிதாய், ஒருமருந்தாய், சுத்தமுள்ளதாய், தப்பாமல் பொறுப்பதாய் உள்ள நான்கு. பரிகாரம் பண்ணுவிப்பான் குணம் வியாதியாள்பவன்மேல்பத்தி, வைத்தியன் சொன்னகிரமத்திலே வருபவன், சோம்பின்மை உள்ளவன், கொடையுள்ளவன் ஆக நான்கு. இந்த நான்கு பேருக்கும் பதினாறு குணம் வேணும் மருந்து என்னும் அதிகாரம் எ - று.

காளிங்:— நோயினை உற்றோன் தானும், இந்நோயான் இடர் உறக்கடவோம் அல்லேம் என்று மற்று இது தீருமளவு முயற்சியும் உணவும் குறியும் முதலிய இவ்வாறு மொழிவோம் என்னும் அறிவு உடையோன் தானேயும், ஒரு மருந்து ஆகும். இது அல்லது மருந்தாவது ஒரு நோய்க்குப் பலமருந்து உளவாயினும் உற்றான் அளவும் பின் அளவும் காலமும் நோக்கினன் இவற்றுடன் பொருந்தினது யாது மற்று அதுவும் தனி மருந்து ஆகும். இது அல்லது உழைச்செல்வான் அவனது தாயினும் இனிய தன்மையன் ஆகிய உற்ற இடத்து உதவும் பெற்றியோன் யாவன் மற்று அவன் தானும் ஒரு மருந்து ஆகும். எனவே, இந்நான்கு பகுதியும் உடையது யாது மற்று அதுவே மருந்து என்று இயம்பப்படுவது. ஆதலால் இந்நான்கினுள் ஒன்று உதவான் ஆயின் மற்று அதுவே கூற்றம் எ - று.

இனி, மற்று இவ்வாறு நல்லாரோடும் நல்லவற்றோடும் மருஉதலும், தீயாரோடும் தீயவற்றோடும் மருவாமையும் பெரும்பாலும் குடிப்பிறந்தோர்க்கு அல்லது வாராமையான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நாற்கூற்றது என்பது, கூற்று எனச் செய்யுட் டொடைகாரணமாகவிகாரமாயிற்று.

மேற்கோள்பகுதி :

மயிலை:— சிறப்பினால் உயர்திணை அஃறிணையானதற்கு மேற் கோள். (நன். 378)

ஒப்புமைப்பகுதி:

"காப்பான் மடமகள் காப்பான்கைப் பட்டிருந்தும்
மேய்ப்பாட்ட தென்றுண்ணு ளாயினுள்—தீப்புகைபோல்
மஞ்சாடு வெற்ப மறைப்பினும் ஆகாதே
தஞ்சாதி மிக்கு விடும்." —பழ. நா.

குறிப்பு:

உற்றவன் வகை முதலிய நந்நான்கும்பற்றி உரையாசிரியர் ஒவ்வொருவர் கருத்தும் மாறுபட்டிருத்தல் காண்க. உழைச்செல்வான் - மருந்தினைப்பிழையாமல் இயற்றுவான் என்பர் பரிமேலழகர். பரிகாரம்பண்ணுபவன் என்பர் பரிப்பெருமாள். வியாதியாளனுக்குக் கூட இருந்து உதவுபவன் என்பர் காளிங்கர். இவருள் காளிங்கர் உரையே சிறத்தல் ஓர்க.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— மிகினும், மருந்தென, அற்றால், அற்றது, மாறுபாடு, இழிவறிந்து, தீயளவு, நோய்நாடி, உற்றான், உற்றவன்.

மணக்:— மருந்தென, அற்றால், அற்றது, மாறுபாடு, இழிவறிந்து, மிகினும், நோய்நாடி, உற்றான், உற்றவன், தீயளவு.

பரிதி:— அற்றால், மருந்தென, தீயளவு, இழிவறிந்து, மிகினும், உற்றான், நோய்நாடி, மாறுபாடு, உற்றவன், அற்றது.

காளிங்:— அற்றால், மாறுபாடு, மிகினும், இழிவறிந்து, தீயளவு, அற்றது, மருந்தென, நோய்நாடி, உற்றான், உற்றவன்.

ஒழிபியல்.

பரிமே:— இனி அவ் அரசியலினும் அங்கஇயலினும் அடங்காது ஒழிந்தவற்றது இயல்பு பதின்மூன்று அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் குடிமை கூறுகின்றார்.

மணக்;— *குடியியலாவது அரசரும், அமைச்சரும், வீரருமல்லாத மக்களது இயல்பு கூறுதல்.

பரிப்:— அஃது யாங்ஙனம் கூறினர் எனின், அது கூறிய அதிகாரம் பதின்மூன்றினும் முற்படக் குடிப்பிறந்தார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், மானமுடையார் இயல்பும் சான்றோர் இயல்பும் நான்கு அதிகாரத்தானும், பண்பு இன்றிப் பொருள் ஈட்டினர்க்கு உள தாகும் குற்றம் கூறுதலும், அந்தக் குற்றத்துக்கு அஞ்சி ஒழுகுதலாகிய நாண் உடைமையும், அந்நாண் உடையார் தம் குடும்பத்தை நோக்கு மாறும், அவர் குடும்பத்தை நோக்குதற்குப் பொருள் வருநெறி பலவற் றுள்ளும் சிறப்புடைத்தாகிய உழவினது இயல்பும் நான்கு அதிகாரத் தானும், பொருள் இல்லாத மக்களது இயல்பும், அவர் பொருள் தேடு மாறும் மூன்று அதிகாரத்தானும், மக்களில் இழிந்தார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும் கூறப்பட்டது.

மேல் அரசர்க்கு முதலான பொருளும் பொருட்கேடும் கூறி இனி நிலத்து மக்களது இயல்பும் கூறுகின்றார் ஆதலின் அவற்றின் பின் கூறப்பட்டது.

96. குடிமை.

தொகுப்புரை:

மனமொழி மெய்கள் ஒன்றுபட்டு ஒழுக்கமுடனிருத்தலும், நாணமும் குடிப்பிறந்தார்க்கல்லது இயல்பாக அமையாது. அவர்கள் ஒழுக்கம், வாய்மை, நாணம் என்ற இம்மூன்று குணங்களினின்றும் தவறமாட்டார்கள். எக்காலத்தும் மெய்மையையுடைய மாறுபடாத குடிக்கு முகமலர்ச்சியும், கொடையும், இன்சொல் லும், யாரையும் இகழாமையும் ஆகிய இந்நான்கும் உரியன என்று சொல்வர். கோடியளவுபொருளை யடுக்கிக் கொடுத்தாலும் குடிப்பிறந்தார் ஒழுக்கம் குன்றிய

* மணக்குடவரும் பரிப்பெருமாளும் குடியியல் எனக் குறித்துள்ளார்.

காரியங்களைச் செய்யமாட்டார். பழம்பெருமையை யுடைய குடிப்பிறந்தார் கொடுப்பது இளைத்தாலும் குணம் மாறமாட்டார்கள். பழியற்ற பழங்குடிமக்கள் வஞ்சனையாகத் தகுதியற்ற காரியங்களைச் செய்யமாட்டார்கள். குடிப்பிறந்தாரிடம் குற்றம் உண்டாயின் அது வானமண்டலத்தில் நிறைமதியினிடம் களங்கம்போல மிகுந்து தோன்றும். குலநலமுடையானிடத்தே ஈவு இரக்கமின்மை தோன்றுமாயின் அவன் பிறந்த குலத்திலே உலகம் ஐயப்படும். நிலத்தின் தன்மையை முளை அறிவிப்பது போல, குடிப்பிறப்புடையாரை வாய்ச்சொல்லால் அறியலாம். ஒருவன் தனக்குப் புகழும் புண்ணியமும் விரும்புவானாயின் நாணத்தை விரும்புக; குலப்பெருமை யழியாதிருக்க விரும்புவானாயின் எல்லார்க்கும் பணிவை விரும்புக.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின், அச்சிறப்புப்பற்றி இது முன்வைக்கப்பட்டது.

பரிப்:— குடிமையாவது உயர்குடிப் பிறந்தாரது இயல்பு கூறுதல். மக்கள் உடைத்து ஆகிய கணங்கள் எல்லாவற்றினும் உயர் குடிப்பிறத்தல் சிறப்புடைத்து ஆதலின் இது முன் கூறப்பட்டது.

பரிதி:— குடிமையாவது கடல் சூழ்ந்த உலகில் தன்குடியை ஆக்க எ - று.

951. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— செப்பமும் நாணும் ஒருங்கு - செம்மையும் நாணும் சேர, இல் பிறந்தார்கண் அல்லது இயல்பாக இல்லை - குடிப்பிறந்தார் மாட்டு அல்லது பிறர்மாட்டு இயற்கையாக உளவாகா.

இல், குடி, குலம் என்பன ஒருபொருளன; ஈண்டு உயர்ந்தவற்றின் மேல. செம்மை - கருத்தும் சொல்லும் தம்முள் மாறுகாமை. நாண் - பழி பாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவர் கற்பிக்க வேண்டாமல் தாமே உளவாம், பிறர்க்காயின் கற்பித்தவழியும் நெடிது நில்லா என்பதாம்.

மணக்:— உயர்குடிப் பிறந்தார்மாட்டல்லது பிறர்மாட்டு நடுவு நிலைமையும், பழி நாணுதலும், இயல்பாக ஒருங்கே உண்டாகா எ - று:

இஃது இற்பிறந்தார் இவை இரண்டும் இயல்பாக உடையர் என்றது.

பரிதி:— குடிப்பிறந்தார்க்கல்லது நடுவுநிலைமையும், நாணுடைமையும் கைவராது எ - று.

காளிங்:— நாம் கீழ் விரித்துச் சொன்ன நடுவுநிலைமையும் மேல் விளங்கக் காட்டி விடுவதாகிய நாண் உடைமையும் இவை இரண்டும் ஒருங்கு உளவாதல் குடிப்பிறந்தார்மாட்டு அல்லது பிறர்மாட்டு இல்லை எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— இற்பிறந்தார் என்றதனால் இல், குடி, குலம் என்பன ஒருபொருட்கிளவி.

ஒப்புமைப்பகுதி:

" தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம்." —வாக்கு. 7.

குறிப்பு :

"சொற்கோட்டமில்லது செப்பம்" (குறள். 119) என்பராகலின் செப்பம் மனமொழிமெய்கள் மாறுகாமையாதல் காண்க. குடிப்பிறந்தாரிடத்து இவை ஒருங்கே இயல்பாக அமையுமெனவே ஏனையோரிடத்துப் பதவியும், நிலையுங்காரணமாக ஒரோவிடத்து வருந்தி யமைத்துக் கொள்ளப்படும் என்பது பெற்றும். இக்குறள் குடிப்பிறப்புடையாரை அறிதற்கு உபாயம் கூறிற்று.

—தொகுப்பாசிரியர்.

952. ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— குடிப் பிறந்தார் - உயர்ந்தகுடியின்கண் பிறந்தார், ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும் இழுக்கார் - தமக்கு உரிய ஒழுக்கம் மெய்ம்மை நாண் எனப்பட்ட இம்மூன்றன்கண்ணும் கல்வியானன்றித் தாமாகவே வழுவார்.

ஒழுக்கம் முதலியன மெய்ம்மொழிமனங்களின ஆகலின், அம் முறைய ஆயின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், இழுக்கார் என்றார்.

மணக்:— ஒழுக்க முடைமையும், மெய்ம்மை கூறுதலும், அற்றம் மறைத்தலாகிய நாணமுடைமையும் ஆகிய இம்மூன்றினையும் தப்பார் உயர் குடிப் பிறந்தார் எ - று.

பரிதி:— ஒழுக்கமுடைமையும், சத்தியவசனமும், நாணமும் குடிப்பிறந்தார்க்குக் கைவரும் எ - று.

காளிங்:— கீழ்ச்சொல்லிப் போந்த ஒழுக்கம் உடைமையும், வாய்மை நிகழ்ச்சியும், அங்குத் தோற்றம் செய்த நாணம் உடைமையும் என்னும் இம்மூன்றும் சிறிதும் வழுவகில்லார்; யார் எனின் குடிப் பிறந்தார் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கல்லது - வான்தோயும்
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு." —நாலடி. 142.

"உன்னல் மொழிதல் செயல்மூன்றாந் தொழுக்கம் வாய்மை நாண் இழுக்கார்
மன்னு மனையில் பிறந்தார்கள் மலர்தல் ஈகை இகழாமை
நன்னர் மொழியும் அவர்க்கேயாம் நன்மை பயவா வினைவறுமை
இன்ன விடத்தும் புரியார்கள் ஏமகண்டா இனியறிமோ."
—விநா. அரசி. 143.

குறிப்பு:

ஒழுக்கம் என்பது ஒருவரைவிலக்கணம் கூறமுடியாதது. அறத்துப்பாலில் 'தீய வழுக்கியும்வாயாற் சொலல்' 'ஒழுக்கமுடையார்க்குஒல்லா' என்பனவற்றால்வாய்மை ஒழுக்கம் என உரைக்கப்பெற்றது. உலகநடையோடு ஒத்து நடத்தலே ஒழுக்கம் என, நூல் விதிக்கு அப்பாற்பட்ட - அநுபவநிலைக்கு ஏற்ற - அனைவரானும் நல்லன என்று ஒத்துக்கொள்ளக்கூடிய செயலிலேயே ஒழுக்கம் இருப்பதாக உணர்த்தப்பெற்றது. 'அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன்று இல்லை ஒழுக்கமிலான்கண் உயர்வு' என அழுக்காறாகிய மனத்தீமையை உவமையாக ஆண்டதனால் மனத்தூய்மையே ஒழுக்கம் என உணர்த்தப்பெற்றது. ஆகவே ஒழுக்கம் என்பது உலகவர் அனைவர்க்கும் ஒத்ததாய் எல்லாரானும் உயர்வென்று போற்றப்படுவதாயுள்ள கருத்தும் சொல்லும்

செயலுமேயாம் என்பது வள்ளுவர் கருத்தாதல் தெளிக. தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பெற்ற ஒழுக்கத்தினையுடையராதல் எனின், வேதம் ஓதுதலும், ஓதுவித்தலும்,மறையவர் ஒழுக்கமாக விதிநூல்கள் விதிக்கவும், அதனைவள்ளுவர் 'மறப்பினும் ஓத்துக்கொளலாகும் பார்ப்பான்பிறப்பு ஒழுக்கம்குன்றக்கெடும்'என ஒழுக்கம் என்பது ஓதுதல் தொழிலுக்கும் புறம்பானது என்று விளக்குதல்காண்க.' ஒழுக்க முடைமை குடிமை' எனக் குறித்ததும் ஈண்டு இணைத்து எண்ணுதற்குரியது. ஆகவே இம்மூன்றும் குடிமையின் இயல்பாதலின், இழுக்கார் என்பதற்குக் 'கல்வியானன்றித் தாமாகவே வழுவார்' என்ற பரிமேலழகர் உரை மிக நயம்பயப்பதொன்று. நாண் சென்ற குறளினும் (951) இதினும் கூறப்பெறுதலையும் 960ம் குறளினும் வற்புறுத்தப்பெறுதலையும் காண்க.

—தொகுப்பாசிரியர்.

953. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— வாய்மைக் குடிக்கு - எக்காலத்தும் திரிபில்லாத குடியின்கண்பிறந்தார்க்கு, நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகை என்ப - வறியார் சென்றவழி முகமலர்ச்சியும், உள்ளனகொடுத்தலும், இன்சொற்சொல்லுதலும், இகழாமையும் ஆகிய இந்நான்கும் உரிய கூறு என்று சொல்லுவர் நூலோர்.

பொய்ம்மை திரிபுடைமையின் திரிபின்மையை வாய்மை என்றும் இல்லாரை எல்லாரும் எள்ளுவராகலின் இகழாமையை அவர் கூறுக்கியும் கூறினர். குடி ஆகுபெயர். நான்கின்வகை என்பதுபாடமாயின், வாய்மைக் குடிப் பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இந்நான்கான் உளதாம் என்று உரைக்க. இவை மூன்று பாட்டானும் குடிப்பிறந்தாரது இயல்பு கூறப்பட்டது.

மணக்:— முகமலர்ச்சியும், கொடையும், இனியவை கூறுதலும், பிறரை இகழாமையுமாகிய நான்கினையும் மெய்ம்மையுடைய குலத்திலுள்ளார்க்கு அங்கம் என்று சொல்லுவர் எ - று.

பரிப்:— தொகை என்பது பிண்டத்தின் பெயர் ஆதலின் வகை என்பது உறுப்பிற்குப் பெயர் ஆயிற்று. மெய்ம்மைக் குடி என்றதனானே எஞ்ஞான்றும் தப்பு இல்லாக் குடி என்று சொல்லப்படும்: இவை நான்கினையும் தமக்கு உறுப்பாக உடையார் என்றும் கூறிற்று.

பரிதி:— மகிழ்ச்சி, கொடை, நல்வார்த்தை, இகழ்ச்சியின்மை இந்த நாலு குணமும் உள்ளவன் குடிசெய்வான் எ - று.

காளிங்:— யாவர்மாட்டும் முகமலர்ச்சி உடையராகையும், வறியவர் யாவர்க்கும் யாதானும் ஒன்றைக் கொடுத்தலும், யாவர்மாட்டும் முகம் மலர்ந்து இனியவை கூறலும், ஒருவரை நெஞ்சினுன் இகழ்ந்திராமையும் இந்நான்கும் குடிப்பிறந்தார்க்கு வாய்ப்புடைமை என்று சொல்லுப சான்றோர் எ - று.

இங்குச் சொன்ன குணங்களில் சிறிது குன்றினும் குடிக்கு வடு என்று மானிக்கு மானம் உடைமையும் அக்குடிப் பிறந்தோர்க்கே குணம் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

மேற்கோள்பகுதி:

இளம்:— பொருளொடு புணர்ந்த பக்கம்: பக்கம் என்றதனல் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் என வருவனவெல்லாம் கொள்க எனக்கூறி, குடிமை என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75.)

ஒப்புமைப்பகுதி :

"இனநன்மை இன்சொலொன் றீதல்மற் றேனை
மனநன்மை என்றிவை எல்லாம் - கனமணி
முத்தோ டிமைக்கும் முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே உள."
—நாலடி. 146.

954. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (ச)

உரைப்பகுதி :

பரிமே:— அடுக்கிய கோடி பெறினும் - பலவாக அடுக்கிய கோடி அளவிற்றாய பொருளைப் பெற்றாராயினும், குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் - உயர்ந்த குடியின்கண் பிறந்தார் தம் ஒழுக்கம் குன்றும் தொழில்களைச் செய்யார்.

அடுக்கியகோடி என்பது ஈண்டு எண்ணப்படும் பொருள்மேல் நின்றது. குன்றும் தொழில்கள் - குன்றுதற்கு ஏதுவாய தொழில்கள்.

மணக்:— பல கோடி பொருளைப் பெறினும், உயர்குடிப் பிறந்தார் தம்குடிக்குத் தாழ்வாயின செய்யார் எ - று.

இது மானம் விடார் என்றது.

பரிதி:— கோடி தனம் பெற்றாலும் குடிப்பிறந்தார் குல நெறிக்குக் குறைசெய்யார் எ - று.

காளிங்:— ஒன்று இரண்டு அன்றிப் பிற பல அடுக்கிய கோடி பொருள் பெறினும், குடிப்பிறந்தோர் இந்நாணமும் நடுவும் குன்ற வருவன என்றும் கடிவதல்லது செய்வது இலர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கயவரைக் கைஇகந்து வாழ்தல் நயவரை
நள்ளிருளும் கைவிடா நட்டொழுகல் - தெள்ளி
வடுவான வாராமல் காத்தல்இம் மூன்றும்
குடிமாசி லார்க்கே உள." —திரி. 77.

முதுமொழிவெண்பாக்கள்:

"தூடணமாம் ஐவருடன் தூன்னுதலென் றேதன்னன்
ஈடணையை நீத்தான் இரங்கேசா - நீட." —இரங். 96.

955. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— பழங்குடி - தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார், வழங்குவது உள்வீழ்ந்தக்கண்ணும் - தாம்கொடுக்கும் பொருள் பண்டையின் சுருங்கிய இடத்தும், பண்பின் தலைப்பிரிதல் இன்று - தம் பண்புடைமையின்கண் நீங்கார்.

தொன்று தொட்டு வருதல் - சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருதல். அவர்க்கு நல்குரவாவது வழங்குவது உள்வீழ்வதாகலின், அதனையே கூறினார்.

மணக்:— வழங்கும் பொருள் தம் அளவிற்குக் குன்றிச் சுருங்கிய இடத்தும், பழய பண்பு வழுவாத குடிப்பிறந்தார் தமது இயல்பினின்றும் நீங்குதல் இலர் எ - று.

இது பண்புடைமை விடார் என்றது.

பரிப்:— இது பொருள் இல்லாத காலத்தும் இயல்பு குறையார் என்றமையின், ஒப்புரவு செய்தலும் தவிரார் என்றவாறாயிற்று. இவை ஏழும் குடிப்பிறந்தார் இலக்ஷணம் கூறின.

பரிதி:— ஒருவர்க்குக் கொடுக்க வகையற்றாலும் குடிப்பிறந்தார் குலநெறிக்கு ஒத்த ஒழுக்கம் கெடார் எ - று.

காளிங்:— தமது இல்லின்கண் வழங்கிவரு பொருள் இனி மற்று யாதும் இல் என மாய்ந்தக்கண்ணும் நெடுநாள் பழகிவருகின்ற குடிப் பிறந்தோர் என்றும் தமது மரபின்கண் தலை அழிதல் இல்லை எ - று:

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பழங்குடிப்பேர் சேர, சோழ, பாண்டியர் என்றாற் போல்வன என்க.

ஒப்புமைப்பகுதி:

"உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையின் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று." —நாலடி. 141.

"எற்றொன்று மில்லா இடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவர்
அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்." ஷை. 150.

"கூஉய்க் கொடுப்பதொன் றில்லெனினும் சார்ந்தார்க்குத்
தூஉய்ப் பயின்றாரே துன்பம் துடைக்கிற்பார்
வாய்ப்பத்தான் வாடியக் கண்ணும் பெருங்குதிரை
யாப்புள்வே றாகி விடும்." —பழ. ௩௧.

" சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா தாதலால் - தந்தம்
தனம்சிறிய ராயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம்சிறிய ராவரோ மற்று." —வாக்கு. 28.

" சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலங் கென்னாகும் - சீரிய
பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடம்உடைந்தக் கால்." —ஷை 18.

" ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்அந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து." —நல்வழி. 9.

" பிறந்தி றந்து போய்ப் பெறுவதும் இழப்பதும் புகழேல்
நிறந்தி றம்பினும் நியாயமே திறம்பினும் நெறியின்
திறன்தி றம்பினும் செய்தவம் திறம்பினும் செயிர்தீர்
மறந்தி றம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ."
—கம்ப. மந்தரை, 66.

" தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம் மாறாது." —பழ.

" குப்பைக்குள் இருந்தாலும் குன்றிமணி குன்றாது" —ஷை

" கெட்டாலும் செட்டி செட்டியே கிழிந்தாலும் பட்டு பட்டே" —ஷை

" நஞ்சுக்குள் இருந்தாலும் நாகமணி மாணிக்கம்." —ஷை

முதுமொழிவெண்பாக்கள்:

" மங்கலியம் விற்றும் வழாதுபணி செய்துவந்தார்
தூங்கமறை தேர்கலயர் சோமேசா - அங்கண்." —சோமேசர். 96.

குறிப்பு:

வழங்குவ துள்வீழ்ந்தக்கண்ணும் கொடைப்பண்பு பிரியாமையால் காளத்தி முதலியார் புற்றில் கையிட்டதும், கிடைத்ததை அப்படியே புலவனுக்கு அளித்ததும் காண்க.

—தொகுப்பாசிரியர்.

956. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— மாசு அற்ற குலம்பற்றி வாழ்தும் என்பார் - வசையற்று வருகின்ற நம் குடிமரபினோடு ஒத்து வாழக்கடவேம் என்று கருதி அவ்வாறு வாழ்வார், சலம்பற்றிச் சால்பு இல செய்யார் - வறுமையுற்ற வழியும், வஞ்சனையைப்பொருந்தி, அமைவிலவாய தொழில்களைச் செய்யார்.

அமைவின்மை அம்மரபிற்கு ஏலாமை. இவை மூன்றுபாட்டானும் அவர் வறுமையுற்ற வழியும் அவ்வியல்பின் வேறுபடார் என்பது கூறப்பட்டது.

மணக்:— பொய்யைச் சார்ந்து, அமைவில்லாதன செய்யார்; குற்றமற்ற குலத்தைச்சார்ந்து உயிர்வாழ்வோம் என்று கருதுவார் எ - று

இது சான்றாண்மை விடார் என்றது.

பரிதி:— கோபம் பற்றி நெறியல்லாதன செய்யார்; மாசற்ற குலத்தொழிலிலே நிற்பார் எ - று.

காளிங்:— பிறரோடு நெஞ்சினல் சலம்பற்றி நின்று தமது தகுதிக்கு அமைவு இல்லன எஞ்ஞான்றும் செய்யார்: யார் எனின் குற்றம் அற்ற தம் குடிப்பண்பினைச் சலியாமல் இறுகப் பற்றிக்கொண்டு நின்று யாம் வாழும் உயிர் வாழ்க்கையை இங்ஙனம் வாழ்தும் என்னும் இயல்பினர் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— சலம் - வஞ்சனை.

ஒப்புமைப்பகுதி:

" கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து." —நாலடி. 156.

" கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார் - தள்ளியும்

வாயிற்பெய் கூரூர் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்." —நாலடி. 157.

" நாம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினும் சான்றோர்
குடம்பெழுந்து குற்றம்கொண் டேறார் - உறங்கவறு
உள்ளமெனும் நாரினால் கட்டி உளவரையால்
செய்வர் செயற்பா லவை." —நாலடி. 153.

குறிப்பு:

சலம்பற்றிச் சால்பில செய்யார் என்பதால் குடிப்பிறப்பின் மனஒழுக்கம் வற்புறுத்தப்பெற்றது.

—தொகுப்பாசிரியர்.

957. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— குடிப் பிறந்தார்கண் குற்றம் - உயர்ந்த குடியின்கண் பிறந்தார்மாட்டு உளதாம் குற்றம், விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து விளங்கும் - தான் சிறிதேயாயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஓங்கித் தோன்றும்.

உயர்குடி முதலிய பொருள்வகை மூன்றற்கும் விசும்பு முதலிய உவமைவகை ஒத்துப் பால்மாறுபட்டது. குடியது உயர்ச்சியானும், மதிபோன்ற அவர் நற்குணங்களோடு மாறுதலானும், உலகெங்கும் பரந்து வெளிப்படும் என்பதாம்.

மணக்:— உயர்குடிப் பிறந்தார்மாட்டுக் குற்றம் உளதாயின், அது வானத்தின் மதியின்கணுள்ள மறுப்போல உயர்ந்து விளங்கும்; ஆதலால், குற்றப்பட ஒழுகற்க எ - று.

இது குற்றஞ் செய்தலைத் தவிரவேண்டும் என்றது.

பரிதி:— குடியிலே பிறந்தார் குற்றம் விசும்பில் மதியிடத்துக் களங்கம் போலத் தோன்றும் எ - று.

காளிங்:— ஒழுக்க நலத்திற்கு உரிய குடிப்பிறந்தோர்மாட்டும் ஒரு குற்றம் உளதாம் ஆயின், மற்று அது வானின் திகழும் மதியிடத்து உண்டாகிய மறுப்போல் உயர்ந்து விளங்கும் எ - று.

ஓப்புமைப்பகுதி:

"விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை இல்லார்
கதிப்பவர் நூலினைக் கைவிகந்தா ராகிப்
பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்துப் பட்ட மறு." —பழ-நா.

"நிரைதொடி. தாங்கிய நீடோள் மாற்கேயும்
உரையொழியா வாகும் உயர்ந்தோர்கட் குற்றம்
மரையாகன் றாட்டும் மலைநாட மாயா
நரையான் புறத்திட்ட சூடு." —ஷை

"கன்றி முதிர்ந்த கழியப்பன் ளுள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றானும் - தோன்றாதாம்
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மே லிட்ட விளக்கு." —பழ-நா.

"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் — திங்கள்
மறுவாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்." —நாலடி. 151.

"பெருவரை நாட பெரியார்கண் தீமை
கருநரைமேல் சூடேபோல் தோன்றும்." —ஷை. 186.

"பதிப்பட்டு வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்தில் பட்ட மறு." —அறநெறி. 74.

"வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல
மாசறு விசும்பின் மறுநிறம் கிளர." —மணி 6: 2-5.

முதுமொழிவெண்பாக்கள்:

"சித்திரையோர்க் கொன்றவசு வத்தாம னீக்கமுற்றான்
முத்தமுனி ஓரான் முருகேசா — மெய்த்த." —முருகேசர். 96.

958. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் *ஐயப் படும். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— நலத்தின்கண் நார் இன்மை தோன்றின் - குலநலம் உடையனாய் வருகின்றவன்கண்ணே ஈரமின்மை உளதாமாயின், அவனைக் குலத்தின்கண் ஐயப்படும் - அவனை அக்குலப்பிறப்பின்கண்ணே ஐயப்படும் உலகம்.

நலமும் குலமும் ஆகுபெயர். நாரின்மையால் கொடாமையும் கடுஞ் சொல்லும் முதலிய கூறப்பட்டன. தோன்றின் என்பது தோன்றாமை விளக்கி நின்றது. நலனுடையனாய் வருதலினிடையே இவை தோன்றலின், உள்ளது ஐயமாயிற்று. உலகம் என்பது அவாய்நிலையான் வந்தது. ஐயப் படல் என்பது பாடமாயின், ஐயப்படுக என விதியாக்கி உரைக்க. இவை இரண்டு பாட்டானும் வேறுபட்டவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

மணக்:— ஒருவன் குடிநலத்தின்கண்ணே நீர்மையின்மை தோன்றுமாயின், அவனைக் குலத்தின்கண் தப்பினவன் என்று ஐயப் படுக எ - று.

பரிப்:— இதனானும் குடிப்பிறந்தார் நீரல்ல செய்யார் என்று நன்கு மதித்தவாறாயிற்று.

பரிதி:— மனிதனாகப் பிறந்து கிருபையற்றவனாகில் அவனது குலம் யாது என்று சந்தேகப்படுவர் எ - று.

காளிங்: நல்லொழுக்கத்தின்கண் தமக்குச் சிறிதும் கிருபை இல்லாமை தோன்றின் மற்று அவரைப் பிறந்த குலத்தின்கண் ஐயப் படுதல்: எனவே அவர் ஏக்கமுத்தின்கண் நலம் இல்லாமையால் அவர் மாட்டு அஞ்சத்தகும் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— நாரின்மை - ஈரமின்மை.

---

* 'ஐயப்படல்' பரிப்பெருமாள் பாடம்.

ஒப்புமைப்பகுதி:

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேர்இல் பிறந்தமை ஈரத்தின் அறிப." —முதுமொழிக். 2 : 1.

முதுமொழிவெண்பாக்கள்:

"மன்னும் அரன்புலியூர் வாய்மை மதியானை
அன்னை வயிற்குறைஎன் றையுற்றார் - என்னை." —முதுமொழி. 143.

குறிப்பு:

சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும், தாமப்பல்கண்ணன் என்னும் புலவரும் வட்டாடியகாலத்து, அரசன் காயைக் கையில் மறைப்ப, புலவர் வெகுண்டு 'சோழன் மகன் அல்லை' என்றதும், அவர் அதனையுட்கொண்டு, "ஐயமுடையேன், ஆர்புனைதெரியல் நின் முன்னோர் எல்லாம், பார்ப்பார் நோவன செய்யலர், மற்றிது நீர்த்தோ நினக்கிது" எனக்கூறியதும் புறப்பாடிட்டில் காண்க.

—தொகுப்பாசிரியர்.

959. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். (௯)

உரைப்பகுதி:

பரிமே:— நிலத்தில் கிடந்தமை கால் காட்டும் - நிலத்தின் இயல்பை அதன்கண் முளைத்த முளைகாட்டும்; குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல் காட்டும் - அதுபோலக் குலத்தின் இயல்பை அதன்கண் பிறந்தார் வாயிற் சொல்காட்டும்.

கிடந்தமை உள்ளபடி. முளைத்த மாத்திரத்தானே நன்மையும் தீமையும் தெரிதலின், இலை முதலிய கூறாராயினர்; ஆகவே, பொருளினும் செயல் முதலியன வேண்டாவாயின. குலத்தியல்பு அறிதற்கருவி கூறுவார் போன்று, இன்சொல் வேண்டும் என்றவாறாயிற்று.

மணக்:— வித்து நிலத்தின்கண் மறைந்து கிடப்பினும், அது மறைந்து கிடந்தமையை அதன் முளை அறிவிக்கும்; அதுபோல உயர்குடிப் பிறந்தாரை அவரவர் வாயிற்சொல் அறிவிக்கும் எ - று.

பரிப்:— இதனானே குடிப்பிறந்தார் இன்னாத சொல்லார் என்றவாறாயிற்று.

பரிதி:— நிலத்தில் கிடந்த விதையை இன்ன விதை என்று அங்குரம் காட்டும்; அதுபோலக் குலத்தில் பிறந்தவர் இவர் என்று வார்த்தை காட்டும் எ - று.

காளிங்:— முன்னம் புலப்படாது நிலத்தின்கண் ஒரு விதை கிடந்தால் கிடந்தமையை முதல் தோன்றிய தழைத்த தண்டே காட்டிக் கொடுக்கும்: அது போலக் குலத்தில் பிறந்தாரையும் காட்டிக் கொடுக்கும்: யாது எனின், வாய்ப்பிறக்கும் சொல்தானே எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"இன்னநலம் இன்னகுலம் இன்னமர பென்றிகழும்
சின்னம் பலவேன் தினகரா - முன்னம்." —தினகர. 100.

"மன்னுதிரு வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தார்
உன்னு சிவகணத்தின் உற்றுயர்ந்தார் - இன்னே." —திருத். 78.

குறிப்பு:

கால்காட்டும் என்பதற்குக் காலாகிய உறுப்புக்காட்டும் என்பாரும் உளர். காலில் ஒட்டியிருக்கும் மண்ணால், செம்மண் பூமியில் நடந்தான், சாம்பல் மண்ணில் நடந்தான் என்பதை யறியுமாறுபோல, குலப்பிறப்பைச் சொல்லின் நன்மை காட்டும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

960. நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. (௧௦)

உரைப்பகுதி :

பரிமே:— நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும் - ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவானாயின் தான் நாணுடையனாதலை வேண்டுக, குலம்வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டுக - குலனுடைமையை வேண்டுவானாயின், பணியப்படுவார் யாவர்மாட்டும் பணிதலை வேண்டுக.

நலம் - புகழ் புண்ணியங்கள். வேண்டும் என்பது விதிப்பொருட்டாய் நின்றது. *"வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்" என்புழிப் போல அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாய் என்று இவர் எல்லாரும் அடங்க, யார்க்கும் என்றார். பணிவு - இருக்கையெழுலும் எதிர்செலவும் முதலாயின. இவை இரண்டு பாட்டானும் குடிமைக்கு வேண்டுவன கூறப்பட்டன.

மணக்:— ஒருவர் தமக்கு நலத்தை வேண்டுவாராயின், நாணுடைமையை விரும்புக; அவ்வண்ணமே, குலத்தை விரும்புவாராயின், யாவர் மாட்டும் தாழ்ந்தொழுகுதலை விரும்புக எ - று.

இது பணிந்தொழுகவேண்டும் என்றது.

பரிதி:— நல்லவராகப் பேர்பெற வேண்டினால் நாணம் வேண்டும்; குலம்வேண்டினால் எல்லோர்க்கும் வணக்கம் உண்டாயிருக்கவேண்டும் எ-று.

காளிங்:— தமது நல்லொழுக்கம் குன்றாமை வேண்டின், நம்மாட்டு ஒரு குறைவரின் என்னை என்னும் இந்நாண் உடைமையை வேண்டும்: இனி நீர் நும் குலனுக்கு வேண்டினது யாவர்க்கும் இனிது இயலும் பணிவு உடைமையை வேண்டும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— "இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு - வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்." (தொல். சொல். 33) என்புழிப்போல ஈண்டும் வேண்டும் என்பது விதிப்பொருட்டாயிற்று.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— தொழிற் பெயராய் தேற்றப்பொருள்பட்டு வரும் வேண்டும் என்னும் சொல்லின் சொற்குணம் அறியாது பரிமேலழகர் 'வேண்டும் என்பது விதிப்பொருட்டாய் நின்றது' எனக் கூறிச்செல்வர் என்பர். (இ. கொ. 85.)

* தொல். சொல். 33.

ஒப்புமைப்பகுதி:

" நலனுடைமையில் நாணுச் சிறந்தன்று." —முதுமொழி: 6.

முதுமொழிவெண்பாக்கள்:

" தந்தை வதுவை தவிராது வீடுமன்போய்ச்
சிந்தைதெளி வித்தான் சிவசிவா - நந்தா." —சிவசிவ. 96.

குறள்வைப்புமுறை

பரிமே:— இற்பிறந்தார், ஒழுக்கமும், நகையீகை, அடுக்கிய. வழங்குவ, சலம்பற்றி, குடிப்பிறந்தார், நலத்தின், நிலத்தில், நலம்.

மணக்:— நகையீகை, இற்பிறந்தார், ஒழுக்கமும், நிலத்தில், அடுக்கிய, வழங்குவ, சலம்பற்றி, நலம், குடிப்பிறந்தார், நலத்தின்கண்.

பரிதி:— இற்பிறந்தார், சலம்பற்றி, அடுக்கிய, வழங்குவ, ஒழுக்கமும், குடிப்பிறந்தார், நிலத்தில், நலம், நலத்தின், நகையீகை.

காளிங்:— இற்பிறந்தார், அடுக்கிய, வழங்குவ, நலத்தின், சலம்பற்றி, குடிப்பிறந்தார், நலம், ஒழுக்கமும், நிலத்தில், நகையீகை.

97. மானம்.

தொகுப்புரை:

[எத்துணை இன்றியமையாத சிறப்புடையவாயினும் குடிமைக்குத் தாழ்வானகாரியங்களைவிடுக. புகழோடு ஆண்மையை விரும்புபவர் சிறப்பிற்சிறப்பில்லாதவற்றைச் செய்யார். செல்வாய காலத்துப் பணிவும், வறியாய காலத்துப் பணியாமையும் வேண்டப்பெறும். தம் நிலையில் தவறிய மக்கள் தலையினின்று கழிந்த மயிரை ஒப்பார்கள். மலையை ஒத்த தோற்றமும் ஏற்றமும் உடையராயினும் தாழ்விற்கேதுவான காரியங்களைக் குன்றியளவு செய்வார்களாயின் நிலையில் தாழ்வர். மானத்தைவிட்டு இகழ்வார்க்குப் பின் ஒருவன் சென்று நிற்றல் புகழும் கொடுக்காது. வானுலகத்தும் செலுத்தாது. பகைவரை ஒட்டி வாழ்தலைக் காட்டிலும் அவன் இறந்தான் எனப்படுதல் நன்று. பெருமைக்குத் தாழ்வுவந்த இடத்து இந்தவாழ்வு தேவாமிர்தமோ. ஒரு மயிர் உதிர்ந்தாலும் உயிர்விடும் கவரிமானை யொத்தவர்கள் மானமழிந்தால் உயிரை விடுவர். இழிவுவந்தவிடத்து வாழாத மானமுடையாரது புகழைச் சொல்லிப் போற்றும் உலகு.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறுவான் தொடங்கி, முதற்கண் மானம் கூறுகின்றார். அஃதாவது எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வுவந்துழி உயிர்வாழாமையுமாம். இஃது, அக்குடிப்பிறப்பினை நிறுத்துதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி முன் வைக்கப்பட்டது.

மணக்:— மானமாவது எக்காலத்தினும் தமது நிலைமையில் திரியாமை. இது குடிப்பிறந்தார்க்கு இன்றியமையாமையின் அதன் பின் கூறப்பட்டது. இது மூன்று வகைப்படும்; தமது தன்மை குன்றுவன செய்யாமையும், இகழ்வார்மாட்டுச் செய்யாமையும், இளிவரவு பொறுமையும் என.

961. இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல். (க)

உரைப்பகுதி:

பரிமே:— இன்றி அமையாச் சிறப்பின ஆயினும் - செய்யாதவழித் தாம் அமையாத சிறப்பினையுடையவே எனினும், குன்ற வருப விடல் - தம்குடிப்பிறப்புத் தாழவரும் செயல்களை ஒழிக.

அமையாமை - இறத்தல். குடிப்பிறப்பு என்பது அதிகாரமுறைமையான் வந்தது. இறப்பவருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க என்னும் வடநூன் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையுந் தூக்கி அவை செய்யற்க என்பதாம்.

மணக்;— இன்றியமையாத சிறப்புடையன வாயினும், தமது தன்மை குறையவரும் பொருளையும் இன்பத்தையும் விடுக எ - று.

இது பொருளும் இன்பமும் மிகினும், தன்மை குறைவன செய்யற்க என்றது.

பரிதி:— அளவில்லாதசிறப்பும் செல்வமும் வருமாயினும் குற்றம் வருமாகில் அந்தக்காரியத்தைக் கைவிடுக எ - று.

காளிங்:— இதனை இன்றி இது அமையாது எனினும் பெரும் சிறப்பினை உடையவனாயினும் தன் குடிப்பண்பு குன்ற வருவனவற்றைக் கைவிடுக எ - று.

மேற்கோள்பகுதி:

இளம்:— பொருளொடு புணர்ந்த பக்கம்: பக்கம் என்றதனால் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் எனவருவனவெல்லாம் கொள்க எனக்கூறி மானம் என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 75-)

ஒப்புமைப்பகுதி:

“ஈனமாய் இல்லிருந் தின்றி விளியினும்
மானம் தலைவருவ செய்பவோ - யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்
அரிமா மதுகை யவர்.” —நாலடி. 198.

“கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் - இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்.” —ஷ 300.

முதுமொழிவெண்பாக்கள் :

“இறையருள்சேர் தென்னவன்அன் றிந்திரன்பால் சென்றும்
குறைஇரவான் போயிருந்தான் கூட - முறையன்றோ.”
—முதுமொழி. 144.

962. சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— சீரினும் சீர் அல்ல செய்யார் - புகழ் செய்யுமிடத்தும் தம் குடிமைக்கு ஒவ்வாத இளிவரவுகளைச் செய்யார், சீரொடு பேராண்மை வேண்டுபவர் - புகழுடனே மானத்தை நிறுத்துதலை விரும்புவார்.

எவ்விடத்தும் நிலைகுலையாத திண்மையான் உளதாதல்பற்றிப் பேராண்மை எனப்பட்டது. நிலையுடைய புகழின்பொருட்டாகவும் செய்யார் என்பதாம்.

மணக்:— தமக்குப் பொருள் மிகுதி உண்டாமாயினும், நிகரல்லாதன செய்யார், தலைமையோடேகூடப் பெரிய ஆண்மையை விரும்புவார் எ - று.

பரிப்:— இது நல்கூர்ந்த காலத்துச் செல்வம் உளதாயின் தமது தன்மை குறைந்து குடிசெய்தல் வேண்டாவோ என்றார்க்குத் தலைமக்கள் செய்யார் என்று கூறப்பட்டது.

பரிதி:— நன்மை செய்யினும் சீராகவிசாரித்துச் செய்வார்; நன்மையும் மேன்மையும் வேண்டுபவர் எ - று.

காளிங்:— சீரிய செல்வம் பெரிது உய்ப்பினும் சீர் அல்லனவற்றைச் செய்யக் கருதாரே: யார் எனின் தம் குடிமையாகிய சீர்மைப் பாட்டோடு பெரிய ஆண்மைப்பாடும் விரும்புவார் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— வேண்டுபவர் - விரும்புவர்.

முதுமொழிவெண்பாக்கள்:

"தேசுருவா னின்னிலைமை தேர்ந்துமா னத்திறந்தான்
மூசுபுகழ்ச் சூரன் முருகேசா - நேசமிகும்." —முருகேசர். 97.

குறிப்பு:

பேராண்மை: ஆண்மையிற் சிறந்த ஆண்மை. சீரினும் சீர் - புகழிற்சிறந்த புகழ். வெறும்புகழை மட்டும் விரும்பார்கள்; புகழிற் புகழையே விரும்புவார்கள் என்பதாம். பரிமேலழகர் சீரினும் என்பதற்குப் புகழ் செய்யுமிடத்தும் என்பர். அப்போது அது உம்மையேற்ற செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

—தொகுப்பாசிரியர்.

963. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— பெருக்கத்துப் பணிதல் வேண்டும் - குடிப்பிறந்தார்க்கு நிறைந்த செல்வம் உளதாயவழி யாவர்மாட்டும் பணிவு வேண்டும்; சிறிய சுருக்கத்து உயர்வு வேண்டும் - குறைந்த நல்குரவு உளதாயவழிப் பணியாமை வேண்டும்.

பணியாமை - தாழ்வு வாராமல் பழைய உயர்ச்சிக்கண்ணே நிற்றல். செல்வக்காலை அஃதுயர்ச்சி செய்யத் தாம் தாழ்தலும், அல்லற்காலை அது தாழ்வுசெய்யத் தாம் உயர்தலும் வேண்டும் என்பதாம். இவை மூன்றுபாட்டானும் தாம் தாழ்தற்கு ஏதுவாயின செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— செல்வம் பெருகிய காலத்து எல்லார்க்கும் பணிசெய்தல் வேண்டும்; செல்வம் மிகவும் சுருங்கின காலத்துத் தமது தன்மை குறைவுபடாமல் ஒழுகல் வேண்டும் எ - று.

பரிப்:— இது திரு உடையார் பணிவு புகழப்படும்; திரு இலாதார் பணிதல் இகழப்படும்; ஆதலான் நல்கூர்ந்த காலத்தும் தன்மை குறைவன செய்யற்க என்றது.

பரிதி:— தனக்கு வாழ்வுவந்தால் எல்லாரிடத்தும் வணக்கம் வேண்டும். மிடியனானால் தாழ்ச்சி சொல்லாமல் கனமாய் இருக்கவேண்டும் எ - று.

காளிங்:— குடிப் பிறந்தோர்க்கு என்றும் செல்வச் சிறப்பின்கண் வேண்டும் அச்செல்வம் செருக்கின இடத்தும் அதற்கு மறுதலையாகிய பணிவு உடையவர் ஆதல். இனி அச்செல்வம் நீங்கிய மிக்க வறுமைக்கண் வேண்டும் அவ்வறுமையால் பிறர்க்குத் தாம் குறைகூற மானித்து ஒழுகும் மேம்பாடு எ - று.

ஒப்புமைப்பகுதி :

"தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல்
உய்ய மற்றவள் உள்ளத்தொ டுங்கினான்
வைய முற்றும் வயிற்றின் அடக்கிய
ஐய னிற்பெரி யார்இனி யாவரே." —கம்ப. உலாவடு. 20.

"பெருக்கத் துயர்வாம் பணி வொழியல் பேணுப் பணிவு சுருக்கத்தில்
செருக்க லின்றி அமையாத சிறப்பிற் றேனும் உயர்மானம்
உருக்கும் வினையைச் செய நினையல்." —விநா. அரசி. 144.

"உருத்திட்ப முருக்காலைத் தலைநிறீஇ யுற்றதற்பின்
தருக்கற்று நணிவணங்கிப் பழுத்தகதிர்த் தடஞ்சாலி
பெருக்கத்து வேண்டுமால் பெரும்பணிவு மிகச்சிறிய
சுருக்கத்து வேண்டும்உயர் வெனும்மொழியின் சுவைதேற்றும்."
—காஞ்சி. திருநாட்டுப். 97.

குறிப்பு :

இல்லாக்காலத்து 'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்றாங்குப் பணியின், இல்லாமையாற் பணிகின்றான் என உலகம் ஏளனம் செய்யுமாதலின், அப்போது உயர்ச்சியும், செல்வக்காலத்து மற்றோர் செல்வமாந் தகைத்தாகலின் உலகம் இதுவும் அணியெனப் போற்றுமாதலின் அப்போது பணிதலும் விதிக்கப்பெற்றன.

—தொகுப்பாசிரியர்.

964. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (சு)

உரைப்பகுதி :

பரிமே:— மாந்தர் - குடிப்பிறந்த மாந்தர், நிலையின் இழிந்தக் கடை - தம் உயர்ந்த நிலையை விட்டு அதனின்றும் தாழ்ந்தவழி, தலையின் இழிந்த மயிர் அனையர் - தலையைவிட்டு அதனின்றும் வீழ்ந்த மயிரினை ஒப்பர்.

அந்நிலையை விடாதுநின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத் தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும் உவமையால் பெற்றாம்.

மணக்:— தலையினின்று நீங்கின மயிரைப்போல இகழப்படுவர்; மாந்தர் தமது நிலையினின்று நீங்கித் தாழ ஒழுகினவிடத்து எ - று.

பரிப்:— மேல் தலைமக்கள் செய்யார் என்றதனால் குற்றம் என்னை என்றாற்குக் கூறப்பட்டது.

பரிதி:— தலையின் இழிந்த மயிரொப்பர் நிலைகெட்ட மனிதர் எ - று.

காளிங்:— ஒருவர்க்கு எல்லா உறுப்பினும் தலைமைப்பாடு உடையது தலை ஆதலால் மற்று அதினின்று இழிந்த மயிரானது பின்பு அத்தலைமைப்பாடு பெறுதல் இல்லை: மற்று அதனை ஒப்பர் குலமேம்பாடு உடைய மாந்தர் தம் நிலையினின்றும் இழிந்த இடத்து எ - று.

மேற்கோள்பகுதி:

நச்:— ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பற்றிவரும் வாய்பாடு களுள் தீர்தல் என்பதற்கு மேற்கோள். (தொல். சொல். 79.)

மயிலை:— இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு நீங்கற் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (நன். 298.)

சங்கர:— ஷெ (நன். 299.)

ஒப்புமைப்பகுதி:

"மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே." —இனியவை. 14.

"மானம் படவரின் வாழாமை முன்னினிதே." —ஷெ 28

"மெலியார் விழினும் ஒருவாற்றான் உய்ப
வலியார்மற் றென்றாலும் உய்யார் - நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமால் உய்யா பிற." —நீதிநெறி. 96.

"தலைமயிரும் கூருகிரும் வெண்பல்லும் தத்தம்
நிலையுடைய மானவரும் நிற்கும் - நிலைதவறுத்
தானத்திற் பூச்சியமே சாரு நிலைதவறும்
தானத்திற் பூச்சியமோ தான்." —நீதி. 28.

"நிலையில் பிரியேல்." —ஆத்தி. 68.

965. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— குன்றின் அனையாரும் - குடிப்பிறப்பான் மலைபோல உயர்ந்தோரும், குன்றுவ குன்றி அனைய செயின் குன்றுவர் - தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களை ஒரு குன்றியளவாயினும் செய்வராயின் தாழ்வர்.

குன்றியனையவும் என்னும் இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தாழ்தற்கு ஏதுவாய செயல்களாவன இளிவந்தன. சொற்பின் வருநிலை.

மணக்:— மலைபோல் பெரிய உயர்வுடையாரும் தமது தன்மை குறைபடுவர்; ஒரு குறைவு வருவனவற்றைக் குன்றி அளவாயினும் செய்வாராயின் எ - று.

இது மிக்காராயினும் இகழப்படுவர் என்றது.

பரிப்:— இத்துணையும் தன்மை குறைய ஒழுகல் ஆகாது என்று கூறப்பட்டது.

பரிதி:— மலை போலப் பெருமை பெற்றோரும் குன்றுவர்; குன்றுகிற காரியம் குன்றியத்தனை செய்வாராயின் எ - று.

காளிங்:— குன்றினை ஒத்த பெருமையோரும் குன்றுவர்: தமது மானம் குன்றுவனவாகிய சிறுமை ஒரு குன்றி அனையசெய்யினும் எ - று.

ஆதலான் மற்று இதன் பின்னரே பெருமையின் மிகுதியை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— சொற்பின் வருநிலை. மேலையுரைத்தவெல்லாம் பொருட் பின்வருநிலை எனக் காண்க. "கல்லாது போகிய நாளும் பெரியவர்கண், செல்லாது வைகிய வைகலும் - ஒல்வ, கொடாஅது தொழிந்த பகலும் உரைப் பின், படாஅவாம் பண்புடையார் கண்" (நாலடி. 169) "ஏந்தல் வண்ணம், சொல்லிய சொல்லின் சொல்லியது சிறக்கும்"(தொல். பொருள்.செய். 232.)

மேற்கோள்பகுதி:

பேரா:— அனைய என்னும் உவமஉருபு வந்ததற்கு மேற்கோள். (தொல். பொருள். 286.)

முதுமொழிவெண்பாக்கள்:

" ஆகம் குறைந்துருவே ருணுனில் லாளைவிடுத்(து)
ஏகினள வேந்தன் இரங்கேசா - ஆகையினல்." —இரங். 97

குறிப்பு:

குன்று - அசையாமையும், தோற்றமும், ஏற்றமும், வளமும்பற்றிப் குடிப்பிறப்புடையார்க்கு உவமையாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

966. புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்(று)
இகழ்வார்பின் சென்று நிலை. (௬)

உரைப்பகுதி:

பரிமே:— இகழ்வார்பின் சென்று நிலை - மானத்தை விட்டுத் தன்னை அவமதிப்பார் பின்னே ஒருவன்சென்று நிற்கின்றநிலை, புகழ் இன்று - இவ்வுலகத்துப் புகழ் பயவாது; புத்தேள் நாட்டு உய்யாது - ஏனைப் புத்தேளுலகத்துச் செலுத்தாது, மற்று என் - இனி அவனுக்கு அது செய்வது யாது?

புகழ் பயப்பதனைப் புகழ் என்றார். பயனாய இவ்விரண்டும் இன்றிக் கொன்னே மானங்கெடுகின்றது என்னை என்பதாம். இவை மூன்று பாட்டானும் அவை செய்தற் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— இம்மைப் பயனாகிய புகழைத் தாராதாயின், மறுமைப் பயனாகிய சுவர்க்கத்துப் புகுதலில்லை; ஆயின், தன்னை இகழ்ந்துரைப்பார் பின் சென்று ஒருவன் நிற்கின்றது பின்னை என்னபயனைக் கருதி? எ - று.

இது தம்மை இகழ்வார்மாட்டுச் சென்று நிற்றலைத் தவிர்க என்றது.

பரிதி:— புகழில்லாதார்க்குத் தெய்வலோகம் இல்லை. அப்படி அறிந்திருந்தும் சத்துருக்களிடத்துப்போய் ஒதுங்கி வாழலாமோ எ - று.

காளிங்:— இங்ஙனம் குடிப் பிறந்தோர்க்கு இம்மைக்கண் பெரியது ஓர் இகழ்ச்சி அல்லது புகழ்ச்சி இல்லை: ஆயின் மறுமைக்கண் வான் உலகு உய்க்கும் வாய்ப்பு இல்லை; ஆதலால் இனி மற்று என்னை கொல்லோ தம்மை இகழ்வார் பின்னரே தாம் சென்று நிற்கும் நிலை; எனவே மானக்கேடு அல்லது மற்று ஒரு பயன் இல்லை எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மற்று - விட்டு.

ஒப்புமைப்பகுதி:

"இம்மையும் நன்றும் இயல்நெறியும் கைவிடாது
உம்மையும் நல்ல பயத்தலால் - செம்மையின்
நாணம் கமழும் கதுப்பினாய் நன்றேகாண்
மாணம் உடையார் மதிப்பு.' —நாலடி. 294.

"என்பா யுகினும் இயல்பில்லார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார் - தம்பாடு
உரையாமை முன்னுணரும் ஒண்மை யுடையார்க்கு
உரையாரோ தாமுற்ற நோய்." —ஷை 292.

குறிப்பு:

இதுவரை இகழ்ச்சிக்கு ஏதுவான காரியங்களைச் சிறிதும் தாம் செய்ய லாகாது என்பதை வரையறுத்தார். வருங்குறளால் பகைபற்றிப் பகைவர் இழித் துரைத்தால் அவர் பின் சென்று ஒட்டிவாழ்தலாகாது என்கிறார். இகழ்கின்றார் களாதலின் இம்மையிற் புகழில்லை யென்பது வெளிப்படை. இகழ்ச்சியைக்கேட்டு மனங்குன்றி அறநெறியில் ஊக்காமையால் மறுமைப்பயனும் இல்லை என்பதாம். காரணமின்றிப் பிறர் கூறும்பழி, பழிக்கப்பட்டார் பாவத்தைக் குறைக்கும் என்பது நியாயமாதலின் அதனால் பாவங்கழிந்து விண்ணுலகமடைவர் எனின், பாவங்கழிந்ததே யன்றி விண்ணடைதற்கு ஏதுவாய நல்வினையில் ஊக்கங்கொள்ளாமையின் விண்ணுலகு உய்யாது எனப்பெற்றது.

—தொகுப்பாசிரியர்.

967. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின் - தன்னை இகழ்வார்பின்னே சென்று பொருள்பெற்று அதனால் ஒருவன் உயிர் வாழ்தலின், அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று - அது செய்யாது இறந்தான் என்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று.

ஒட்டுதல் - பொருந்துதல். அந்நிலையே என்றது செல்லாத முன்னை நிலைக்கண்ணே நின்று என்றவாறு; அப்பொழுதே என்றுமாம். புகழும் புத்தேள்நாடும் பயவாதேனும் பொருள்பெற்று உயிர்வாழ்வாம் என்பாரை நோக்கிக் கூறியது.

மணக்:— ஒருவன் தன்னை இகழ்வார்பின் சென்று வாழும் வாழ்க்கையின், அவர்பால் செல்லாத அந்நிலையேநின்று கெட்டான் என்று பிறரால் சொல்லப்படுதல் நன்று எ - று.

பரிப்:— மேல் இம்மை மறுமையில் பயன்படாது என்றார்; அஃது எற்றுக்குப் பொருள் பயக்குமே என்றாற்குக் கூறப்பட்டது. இவை இரண்டும் இகழ்வார்பால் சேறல் ஆகாது என்பது கூறிற்று.

பரிதி:— சத்துருவின் பின் சென்று வயிறுவளர்ப்பதில், அன்றே கெட்டான் என்பது நன்று எ - று.

காளிங்:— குடிமரபாளன் தனக்கு மானக்கேடு ஆம் மற்று இன்னாதார் பின் சென்று உயிர் வாழ்தலின் அப்பொழுதே மானித்து இறந்து பட்டான் என்று பலராலும் எடுத்து உரைக்கப்படுதல் சால இனிது; மற்று அதுதான் வந்து எய்தும் ஆயின் எ - று.

968. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— பெருந்தகைமை பீடு அழிய வந்தவிடத்து - உயர்குடிப் பிறப்புத் தன்வலியாகிய மானம் அழியவந்துழி, ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ - இறத்தலொழிந்து பயனில்லாத உடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னும் இறவாமைக்கு மருந்தாமோ?

மற்று என்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றிநின்றது. நற்குணங்கட்கெல்லாம் இடனாதற் சிறப்புப்பற்றிப் பெருந்தகைமை என்றும், அவையெல்லாவற்றுள்ளும் அதற்கு வலியாதற் சிறப்புப்பற்றிப் பீடு என்றும், அஃது அழிந்தால் நின்றவெற்றுடம்பு இழிக்கப்படுதலின் அதனை ஊன் என்றும், பின்னும் இறத்தல் ஒருதலை என்பார் மருந்தோ என்றும் கூறினார். மானத்தின் தொழில் அதற்கு இடனாகிய குடிப் பிறப்பின்மேல் நின்றது.

மணக்:— தனது பெரிய தகைமை வலியழிய வந்தவிடத்து சாவாதே இருந்து உயிரினையோம்பி வாழும் வாழ்க்கை பின்பும் ஒருகாலுஞ் சாவாமைக்கு மருந்தாமோ? எ - று.

பெருந்தகைமை அழிய வந்தவிடத்து என்று கூட்டுக.

பரிப்:— இஃது அதற்கு அழிவரவு உளதாயின் சாவவேண்டும் என்றது.

பரிதி:— மானஈனம்வந்தால் பிராணனைவிட்டு மானத்தை ரக்ஷிப்பானாகில் கீர்த்தி நிற்கும். பிராணன் நிலையில்லை எ - று.

காளிங்:— குடிப் பிறந்தோர்க்குத் தம் குடிப்பண்பு ஆகிய பெருந்தகைமை அழியவந்த இடத்து மானித்து ஒழியாது பின்னும் இருந்து ஊன் ஓம்பும் செய்கை மருந்தோ? எனவே சாவா மூவாப் பதம்தரும் செய்கையோ அச்செய்கை எ - று.

மருந்து என்றது அமுதம்.

ஒப்புமைப்பகுதி:

"மான அருங்கலம் நீக்கி இரவென்னும்
ஈன விளிவினால் வாழ்வேன் மன்." —நாலடி. 40.

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் - இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்." —ஷெ 300.

"இழித்தக்க செய்தொருவன் ஆர உணலின்
பழித்தக்க செய்யான் பசித்தல் தவறன்று
விழித்திமைக்கு மாத்திரை யன்றோ ஒருவற்கு
அழித்துப் பிறக்கும் பிறப்பு." —ஷெ 302.

"பறைபட வாழா அசுணமா உள்ளம்
குறைபட வாழார் உரவோர் - நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாக் தமக்கொல்லாச்
சொற்பட்டால் சாவுமாம் சால்பு." —நான்மணிக். 2.

"மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே." —இனியவை. 14.

"தனக்குத் தகவல்ல செய்தாங்கோ ராற்றால்
உணற்கு விரும்பும் குடரை - வனப்பற
ஆம்பற்றாள் வாடலை போல அகத்தடக்கித்
தேம்பத்தாம் கொள்வ தறிவு." —அறநெறி. 88.

" உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ - கற்றாண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்." —வாக்கு. 6.

" பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை - சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர்விடுகை சால உறும்." —நல்வழி. 14.

" தம்முடை யாற்றலும் மானமும் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக — பின்னர்ச்
சிறுவரை யாயினும் மன்ற தமக்காங்கு
இறுவரை இல்லை எனின்." —நீதிநெறி. 41.

" இறந்திட வரினும் அல்லால் இடுக்கணொன் றுறினும் தம்பால்
பிறந்திடு மானந் தன்னை விடுவரோ பெரிய ராேனார்
சிறந்திடும் இரண்டு நாளைச் செல்வத்தை விரும்பி யானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை சூரனென் றொருபேர் பெற்றேன்."
—கந்த. பானு. வதை. 27.

" மானமழிந்து வாழ்வதினும் மரணமடைவது உத்தமம்." —பழ

" மானமழியில் உயிர்காவலா?" —ஷை

" மானம் பெரிதா? பிராணன் பெரிதா?" —ஷை

முதுமொழிவெண்பாக்கள் :

" மானூர் துகிலுரிய மன்றிருந்த தென்னவந்து
சேனு பதியார் தினகரா — ஆனல்." —தினகர. 101.

" ஈசனையாள் வாராம்வந் தென்னையாள் வாவென்று
காசினியில் மாண்டார் கலிக்காமர் — பேசின்." —திருத். 41.

969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (௯)

உரைப்பகுதி:

பரிமே:— மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் - தன்மயிர்த் திரளின் ஒருமயிர் நீங்கினும் உயிர்வாழாத கவரிமாவை ஒப்பார், மானம் வரின் உயிர் நீப்பர் - உயிர் நீங்கத் தான் மானமே எய்தும் எல்லைவரின், அதனைத் தாங்காது இறப்பர்.

இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. உயிரும் மானமும் உடனில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரைநீத்து எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தை எய்துவர் என்பதாம். உவமை அவர்க்கு அஃது இயல்பு என்பது விளக்கி நின்றது.

மணக்:— ஒருமயிர்நீங்கின் உயிர்வாழாத கவரிமாவைப் போன்ற மானமுடையார், மான்ம் அழியவரின் உயிர்விடுவர் எ - று.

பரிப்:— மேல் சாவவேண்டும் என்றார்: அது செய்யல் ஆகுமோ என்றாற்கு மானம் உடையார் சாவர் என்றது.

பரிதி:— ஒருமயிர் சிக்கினால் பிராணனைவிடும் கவரிமான்போல, மானம்வந்தால் பிராணனையும் விடுவர் நல்லோர் எ - று.

காளிங்:— தனக்கு அலங்காரம் ஆகிய மயிர்க்கற்றையின் ஒரு மயிர் போகின் மானித்துப் பின் உயிர்வாழாது அம்மயிர் துவக்கு உண்ட இடத்து நின்று வற்றிவிடூஉம் கவரி மா அன்ன கடப்பாடு உடையார் தம் குடிமையின் சிறிது நீங்கி மானிப்பது ஓர் மானம் வந்துறின் அப்பொழுதே உயிர் துறப்பர் எ - று.

மேற்கோள்பகுதி:

நச்:— மானக்கவரி: 'மயிர்நீப்பின் வாழாக் கவரி' ஆகுபெயர். (சீவக 2120)

ஒப்புமைப்பகுதி:

"வான்மயிர் துடக்கின் தானுயிர் வாழாப்
பெருந்தகைக் கவரி." —பெருங். 1: 35: 231 - 2.

"மானம் நோக்கின் கவரிமான் அனையநீரார்." —கம்ப. மந்திர. 7.

"வருந்தலின் மானமா அனைய மாட்சியர்." —சை. உருக்காட்டு. 19.

"மானம் நோக்கின் கவரிமானனைய நீரார்." —சை. மந்திரப். 8.

"...... மொய்ம்பார் மானம் கெடவூழ் வந்து
உருக்கு மெனில்சா மரைமானை உன்னல் ஏம கண்டனே."
—விநா. அரசி. 144.

"ஊனமே யான ஊனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்தும்ஒண் பூணும்
மானமே புரப்ப தவனிமேல் எவர்க்கும்
வரிசையும் தோற்றமும் மரபும்
ஞானமே யான திருவடி யுடையாய்
ஞாலமுள் ளளவும்நிற் றலினால்
ஈனமே உயிருக் கியற்கைஆ தலினால்
என்றனன் வீமனுக் கிளையோன்." —வில்லி. பழம். 18.

"மானமும் உயிரும் ஒருங்குநில் லாத வழிஉயிர் தன்னையே விடுத்துத்
தானுறு பொருளாய் மானமே கொளும்உன் தந்தைதன்
செவிப்படில் என்னும்
பானுவும் மதியும் இயங்குறும் அளவும் பழிஇது வழிவழி வராதோ
யான்உனை வருந்தி ஈன்றதும் இதற்கோ என்செய்தாய் பாவிஎன்
றிசைப்பாள்." —பிரபு. பிரபுதேவர். 77.

முதுமொழிவெண்பாக்கள்:

"அச்சுவத்தா மாப்பட்டான் என்ன அமர்துறந்தான்
துச்சில் துரோணன் என்பான் சோமேசா - நச்சு." —சோமேசர். 79.

"அன்றெரிவை வேந்தன் அரிவைதனக் காயமர்க்குச்
சென்றுயிரை ஈந்தான் சிவசிவா - துன்றும்." —சிவசிவ. 97.

குறிப்பு:

மயிரை மானத்திற்கு உவமை கூறியது இறப்ப இழிந்த ஆனந்த வுவமை யன்றோ எனின் மானிற்கு மயிர்மீது அன்பு இன்றியமையாததாக இருத்தல்போல இவர்க்கு மானத்தின்மீது ஆர்வம் வேண்டும் என்பது குறிக்கோள்; ஆதலால்' ஆர்வம் என்ற உயர்வு பற்றி வந்ததேயாம். நாயனையார் கேண்மை கெழீஇக்கொளல் வேண்டும், என்பதைக்குணம்பற்றிக் கொள்வதல்லது நாய்ப்பிறப்புப்பற்றி இழிவு கூறுவதில்லையே என்க.

—தொகுப்பாசிரியர்,

970. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு. (௧௦)

உரைப்பகுதி:

பரிமே:— இளி வரின் வாழாத மானம் உடையார் ஒளி - தமக்கோர் இழிவுவந்துழிப் பொறுத்து உயிர்வாழாது அதனை நீத்த மானமுடையாரது புகழ்வடிவினை, தொழுது ஏத்தும் உலகு - எஞ்ஞான்றும் தொழுது துதியாநிற்பர் உலகத்தார்.

*"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான ஊர்தி - எய்து" வராகலின், துறக்கச்செலவு சொல்லவேண்டாவாயிற்று. இவை நான்கு பாட்டானும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— இளிவரவு உண்டானால், உயிர் வாழாத மானமுடையாரது புகழைத் தொழுது துதிக்கும் உலகு எ - று.

பரிப்:— மேல் சாவார் என்றதனால் பயன் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.

பரிதி:— ஒருமானஈனம் வந்தால் உயிர்விடுவார் புகழை உலகத்தோர் ஏத்துவர் எ - று.

காளிங்:— ....இவரது பெருமை விட்டு விளங்கும் தோற்றம் குறிக்கொண்டு உள்ளத்தால் புகழ்ந்து உரைப்பர் உலகத்தோர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"செல்வப் பெரும்புனல் மருங்கற வைகலும்
நல்கூர் கட்டழல் நலிந்துகை யறுப்ப
மானம் வீடல் அஞ்சித் தானம்
தளராக் கொள்கையொடு சால்பகத் தடக்கிக்
கன்னி காமம் போல உள்ள
இன்மை இயையா இடுக்கணாளர்." —பெருங். 4 : 2 : 20 - 25

*புறம். 27.

"கூனொடு வெதிரே பங்கு குருடுபேர் ஊமை யானோர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டழியு மம்மா
மானம தழிந்து தொல்லை வலியிழந் துலகில் வைகும்
ஏனையர் வசையின் மாற்றம் எழுமையும் அகல்வ துண்டே."

—கந்த. பானு. வதை. 24.

குறள்வைப்புமுறை

பரிமே:— இன்றி, சீரினும், பெருக்கத்து, தலையின், குன்றின், புகழின்றால், ஒட்டார்பின், மருந்தோ, மயிர்நீப்பின், இளிவரின்.

மணக்:— இன்றி, பெருக்கத்து, சீரினும், தலையின், குன்றின், புகழின்றால், ஒட்டார்பின், மருந்தோ, மயிர்நீப்பின், இளிவரின்.

பரிதி:— இன்றி, குன்றின், தலையின், சீரினும், மருந்தோ, மயிர்நீப்பின், இளிவரின், ஒட்டார்பின், புகழின்றால், பெருக்கத்து.

காளிங்:— இன்றி, பெருக்கத்து, மருந்தோ, ஒட்டார்பின், தலையின், சீரினும், மயிர்நீப்பின், இளிவரின், புகழின்றேல், குன்றின்.

98. பெருமை.

தொகுப்புரை:

[ஊக்கத்தோடு வாழ்தல் ஒருவர்க்கு ஒளியாம். அதனையிழந்து வாழ்தல் இழிவாம். எல்லாவுயிர்களும் பிறப்பால் ஒருதன்மையன. ஆயினும் தொழிலின் சிறப்பியல்புகளால் ஒவ்வா. சிறியோர் மேலேயிருந்தாலும் அவர்கள் மேலோராகார். பெரியோர் கீழேயிருந்தாலும் கீழோராகார். மன ஒருமைப்பாட்டை உடைய குலமகளைப் போலத் தன்னைத்தான் காத்துக்கொள்வதிலேயே பெருமை இருக்கிறது. பெருமையுடையவர்கள், அருமையான காரியங்களைச் செய்யமுடியாத காலத்தும் முறைதவறாது வகையறிந்து செய்துமுடிப்பார்கள். பெரியவர்களை இயல்பறிந்து பேணுவம் என்னும் கருத்து, சிறியோர் மனத்து உண்டாகாது. சிறப்பு, தகுதி, யில்லாதவரிடத்திற் சேருமாயின் செருக்கை மிக உண்டாக்கும். பெரியோர் என்றும் பணிவர். சிறியோர் என்றும் தன்னிலையின் தருக்குவர். செருக்கவேண்டிய காலத்திலும் செருக்கின்றியிருத்தலே பெருமைக்கேற்ற குணம். செருக்கவேண்டாத விடத்துச் செருக்கியிருத்தல் சிறுமைக்கேற்ற குணம். பிறருடைய குற்றத்தை மறைத்துக் குணத்தையே பேசுபவர் பெரியவர்; குணத்தை மறைத்துக் குற்றமே உரைப்பவர் சிறியவர்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர் குற்றம் கூறாமை என்று இவை முதலிய நற்குணங்களால் பெரியாரது தன்மை. நிலையினும் மேன்மேலுயர்த்தற் பயத்தவாய இவை உளவாவது நிலையின் தாழாமையுள்வழியாகலின், இது மானத்தின் பின் வைக்கப் பட்டது.

மணக்:— பெருமையாவது மேன்மை. அஃதாவது சிறியார் செய்வன செய்யாமை. அது பின்பு காணப்படும்.

பரிப்:— இது மானமுடையார்க்கு உளதாவது ஒன்றாகலின் அதன்பின் கூறப்பட்டது. அன்றியும் குடிப்பிறந்தார்க்கு நற்குணம் எனினும் அமையும். இவ்வுரை மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும்: குணங்கள் பலவும் சேரக் கூறுகின்றாராகலின் அதன் பின் கூறப்பட்டது.

971. ஒளிஒருவற் குள்ள வெறுக்கை இளிஒருவற்(கு)
அஃதிறந்து வாழ்தும் எனல். (க)

உரைப்பகுதி :

பரிமே:— ஒருவற்கு ஒளி உள்ள வெறுக்கை - ஒருவனுக்கு ஒளியாவது பிறரால் செயற்கரிய செய்வேம் என்று கருதும் ஊக்கமிகுதி, ஒருவற்கு இளி அஃது இறந்து வாழ்தும் எனல் - ஒருவனுக்கு மாசாவது அச்செயலை ஒழிந்து உயிர்வாழக்கடவேம் என்று கருதுதல்.

ஒளி தான் உளனாயகாலத்து மிக்குத் தோன்றுதலுடைமை. *"'ஒளிநிறான் ஓங்கு புகழ் செய்யான்' என்றார் பிறரும். மேலும் செயற்கரியசெய்வார் பெரியர் என்றாராயினும், ஈண்டு அவை அளவிறந்த ஒப்புரவு ஈகை முதலியவாம். அவற்றினாய பெருமையை அதன்காரணத்தின் மேலிட்டு உள்ளவெறுக்கை என்றும், அதுதன்னையே அதன்காரியமாகிய ஒளியாக்கியும் கூறினார். இவ்வாறு இதன் எதிர்மறைக்கண்ணும் ஒக்கும். இதனான் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— ஒருவனுக்கு மனப்பெருமை புகழாம்; அதனை நீக்கி வாழுமென்று பிறர் சொல்லுதல் ஒருவனுக்கு இளிவாமாதலான் எ - று.

இது பெருமையாவது நிறையுடைமை என்று கூறிற்று.

பரிதி:— புகழாவது தருமம்; அது இல்லையாயின் அபகீர்த்தி பெறுவார் எ - று.

காளிங்:— தமது உள்ளம் என்றும் பெருமைக்கண் சேறலே, ஒருவர்க்கு 'இவர் பெரியர்' என்று பேர்விளங்கும்தோற்றமாவது; அதனால் அஃது ஒழிந்து உயிர் வாழ்தும் என்று கருதுதல் தமக்குப் பெரிதும் இளிவரவாம் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஒளிதாய காலத்து மிகுந்து தோன்றுதல். "ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்" (நாலடி. 9.) என்றார்.

*நாலடி. 9.

ஒப்புமைப்பகுதி:

" ஐது குடியில் பிறந்தருநூல் ஆய்ந்து செல்வத் துயர்ந்ததனால்
எய்தல் அரிது பெருமையஃது எய்தும் கொடைஒப் புரவாதி
செய்தற் கரிய செய்துபிறர் செயிர்கூ றாமல் தருக்காமல்
உய்தி நெறியில் பிறழாமல் ஒழுகு வார்க்குள் ளதிமைந்தா."
—விநா. அரசி. 145.

குறிப்பு:

உள்ள வெறுக்கை - ஊக்கம் மிகுதியென்பர் பரிமேலழகர். மனப்பெருமை என்பர் பரிப்பெருமாள், காளிங்கர்; பரிமேலழகர் எல்லாராலும் இலேசாக முடிக்கத் தக்க வினைகளை முடித்தல், ஊக்கத்தானும் ஆதலின் அதன் மிகுதி வேண்டாமையின் செயற்கரிய செய்வேம் என்ற உரை மிகப்பொருளாழமுடையது. அறத்துப்பாலில் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்றது நீத்தார்க்கு; ஈண்டு அரசர்க்கு. ஆண்டு யாராலும் வெல்லுதற்கரிய புலனடக்கம் கூறியது; ஈண்டு வெற்றி கூறியது. இக் கருத்தையே பின்னரும் 'பெருமையுடையவர் அருமையுடைய செயல் ஆற்றுவார்' என விளக்குவது காண்க.

—தொகுப்பாசிரியர்.

972. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும் - எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமே எனினும், சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான் - பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா, அவை செய்யும் தொழில்களது வேறுபாட்டான்.

வேறுபாடு நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், இரண்டு மல்லவாயினவுமாய அளவிறந்த பாகுபாடுகள். வினைவயத்தான் பஞ்சபூதபரிணாமமாகிய யாக்கையைப் பொருந்திநின்று அதன்பயன் அனுபவித்தல் எல்லாவருணத்தார்க்கும் ஒத்தலின் பிறப்பொக்கும் என்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற்பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலின் சிறப்பு ஒவ்வா என்றும் கூறினார்.

மணக்:— எல்லா உயிர்க்கும் பிறப்பால் ஒரு வேறுபாடில்லை; ஆயினும் தான்செய் தொழிலினது ஏற்றச் சுருக்கத்தினலே பெருமை ஒவ்வாது எ - று.

எனவே இது பெருமையாவது குலத்தினல் அறியப்படாது என்பதூஉம் அதற்குக் காரணமும் கூறிற்று.

பரிதி:— மனிதர் எல்லோரும் சனனத்தால் ஒப்பர்; ஆசாரத்தினலே நற்குலத்தராவர் எ - று.

நற்குலத்தராவர் என்றதால் இழிதொழிலாலே இழிகுலமாவர் என்பதாம்.

காளிங்:— மக்கள் ஆகிய அனைவர்க்கும் பிறப்பின்கண் ஒரு வேற்றுமை இல்லை. அம்மக்கட்குச் சிறப்பு ஒவ்வாது என்பது என்னையோ எனின், இயல்பு நீங்கிய இழிவு தொழில் ஒருவர்க்கு உளதாயின் இவர் சாலச் சிறியர் என்றும் தமக்கு இயல்பு ஆகிய பேரொழுக்கத்தின்கண் பிழையாது ஒழுகின் இவர் சாலப் பெரியார் என்றும் இங்ஙனம் வழங்கி வருதலால் யாவர்க்கும் சிறப்பு ஒவ்வாது என்பதனைத் தெரிந்துகொள்ளப் படும் எ று.

சிறப்பு என்பது பெருமை.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பஞ்சபூத பரிணமமாகிய ஆக்கையை என்றதனல், ஒன்ருென்ருதல் பரிணமம்.

மேற்கோள்பகுதி:

இளம்:—குடிமையாவது அந்தணர் அரசர் முதலிய அக்குலத்தின் உள்ளாரெல்லாம் சிறப்பாக ஒவ்வாமையின் அச்சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடிவரவு. குடிவரவைக் குடிமை என்ருர். 'பிறப்பொக்கும்......... வேற்றுமையான்' எனப் பிறரும் குலத்தின்கண்ணே சிறப்பு என்பது ஒன்று உண்டென்று கூறிஞராகலின். (தொல். பொருள். 91.)

ஒப்புமைப்பகுதி:

"இனைய தாதலின் எக்குலத்து யாவர்க்கும்
வினையினல் வரும் மேன்மையும் கீழ்மையும்." —கம்ப. வாலிவதை. 115.

முதுமொழிவெண்பாக்கள்:

"உத்தியினுல் எல்லாரும் ஒக்குமென ஒண்ணுதே
சித்தசனே கோவைத் தினகரா - வைத்த." —தினகர. 102.

குறிப்பு :

தொழில் என்பதற்குப் பரிமேலழகர் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுவதாகிய தொழிற் பாகுபாடு என்பர். காளிங்கர் ஒழுக்கமென்பர். தொழில் வாழ்விற்கு இன்றியமையாததாய், உலகநடைக்குத் தேவையாய் இருப்பது. அதனுள் ஏற்றத்தாழ்வு இல்லை. தோட்டியும் தொண்டைமானும் ஒரு தன்மையரே. ஆனுலும் அவரவர்கள் அந்தந்தத் தொழில்களை ஆற்றுகின்ற காலத்து ஒழுக்கத்தோடும் அஃது இன்றியும் ஆற்றுகின்ற முறையாலேயே வேறுபாடு விளைகின்றதென்பதை விளக்கிய வாறு. காளிங்கர் கருத்தும் இதுவாதல் காண்க.

மேல், 'பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்' என்றதும் ஈண்டு இணைத்துக் கருதற்குரியது.

—தொகுப்பாசிரியர்.

973. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். (௩)

உரைப்பகுதி:

பரிமே:— மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர் - செயற்கரிய செய்தலாது சிறியராயினர், உயர்ந்த அமளி முதலியவற்றின் மிசை இருந்தாராயினும், பெரியராகார்; கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லார் - அவைசெய்து பெரியராயினர், தாழ்ந்த வறுநிலத்து இருந்தா ராயினும், சிறியராகார்.

மேலிருத்தல் கீழிருத்தல்களால் செல்வநல்குரவுகளும், மேல் கீழ்களால் பெருமை சிறுமைகளும், கருதப்பட்டன. இவை இரண்டு பாட்டானும் முறையே குடிமை மாத்திரத்தானும் செல்வமாத்திரத்தானும் அஃது உளதாகாமை கூறப்பட்டது.

மணக்:— மேலான இடத்திருந்தாலும், மேன்மையில்லாதார் மேன்மக்களாகார்; கீழான இடத்திருந்தாலும், கீழ்மையில்லாதார் கீழ்மக்களாகார்.

இடம் என்பது செல்வத்தினுல் இருக்குமிடம்.

பரிப்:— இது செல்வத்தினால் பெரியாரையும் பெரியார் என்று கொள்ளப்படாது என்றது.

பரிதி:— நற்குலத்தார் அல்லாதார் மேலிருந்தும் கீழ்மையாவர். நற்குலத்தார் கீழிருந்தும் மேன்மையாவர்.

காளிங்:— மனையும் மாடும் பொருளும் பூமியும் முதலியவற்றான் மேலாயினாரும் தம் குலமும் ஒழுக்கமும் குணமும் ஞானமும் முதலியவற்றான் மேம்பாடு உடையர் அல்லாதார் யாவர்? அவர் எஞ்ஞான்றும் சாலச் சிறியரே: இனி மற்று அம் மனையும் மாடும் முதலியவற்றால் கீழ்ப்பட்டிருந்தும் அக்குலமும் ஒழுக்கமும் முதலியவற்றால் சிறிதும் கீழ்மைப்பாடு உடையர் அல்லாதார் யாவர்? மற்று அவர் அஞ்ஞான்றும் கீழ் அல்லர்: எனவே அவரே சாலப் பெருமையர் என்பது பொருளாயிற்று எ - று.

மேற்கோள்பகுதி :

சங்கர:— 'கீழின் முன் வன்மை விகற்பமும் ஆகும்:' இச்சூத்திரத்துரையில் கீழ்மை என்னும் பண்பொடு புணர்தல் பதவியலுள் போந்தமையின் 'கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்' என்றாற்போலக் கீழ் என்பது பண்பாகுபெயராய் இத்தொடர் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம் என்க' என்பர். (நன். 226.)

முதுமொழிவெண்பாக்கள்:

" சங்கரன்போய் நின்றளவில் சங்கப் பலகையின்மேல்
அங்கிருந்தான் நக்கீரன் ஆயினும்என் - எங்கணும்போய்."
—முதுமொழி. 145.

" கும்பமுனி யானகுடன் சர்ப்பஎன்றே குண்டலியாய்
மொய்ம்பிழந்து வீழ்ந்தான் முருகேசா - உம்பரினும்." —முருகேசர். 98

974. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— ஒருமை மகளிரே போல - கவராத மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண்டு ஒழுகுமாறு போல, பெருமையும் தன்னைத் தான் கொண்டு ஒழுகின் உண்டு - பெருமைக்குணனும், ஒருவன் நிறையின்வழுவாமல் தன்னைத் தான் காத்துக்கொண்டொழுகுவானாயின், அவன்கண் உண்டாம்.

பொருளின் தொழில் உவமையினும் வந்தது. கற்புண்டாதல் தோன்றநின்றமையின், உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் மனமொழி மெய்களை ஒடுக்கி ஒப்புரவு முதலிய செய்துபோதல். இதனால் அஃது உளதாமாறு கூறப்பட்டது.

பரிப்:— தன்னைப் பிறர் விரும்பும் காலத்தினும், தன் உள்ளம் பிறரை விரும்பும் காலத்தினும் வேண்டியவாறு ஒழுகாத கற்புடைய மகளிரைப்போலப் பாதுகாத்து ஒருவன் ஒழுகுவனாயின் பெருமையுண்டாம்; அல்லது இல்லையாம் எ - று.

இது பெருமையாவது நிறை உடைமை என்று கூறப்பட்டது.

பரிதி.— குலமகள் தன்கற்புநிலையில் நிற்றல்போல, பெருமையும் தன்னிலையில் நிற்கில் பெருமை பெறுமாம் எ - று.

காளிங்:— பிற மதில்காவலும் மக்கள்காவலும் அன்றித் தம் மனக்காவல் ஆகிய நெஞ்சு ஒருமைப்பாட்டால் கொண்டானைப் பிழையாத மகளிரைப் போலக் குடிப்பிறந்தோனது பெருமையும் அக்குடிப் பிறப்பிற் பிழையாவண்ணம் தன்னைத் தானே அமைத்துக்கொண்டு ஒழுகின் உண்டு எ - று.

இனி மற்று இங்ஙனம் தாம் தம்மைப் பிழைவழிச் செல்லாது அமைத்துக்கொண்டு ஒழுகுதலை ஆளும் ஆட்சி சான்றாண்மைக்கு ஒரு தோற்றுவாய் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண்டொழுகுமாறு என்று உரைத்ததனால் பொருளின் தொழில் உவமையினும் வந்தது.

ஒப்புமைப்பகுதி:

"தன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் - நிலையினும்
மேன்மே லுயர்த்து நிற்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்." —நாலடி. 248.

"பிடுபெற நில்." —ஆத்தி. 80

குறிப்பு:

கீழ், 'இருமனப்பெண்டிரும்' என்றதனால், இங்கே 'ஒருமை மகளிர்' என்றது குலமகளிரை. தற்காத்துத் தற்கொண்டாற் பேணுதல் இவர்கள் இயல்பாக வாழ்க்கைத் துணைநலத்திற் கூறிவைத்தாராகலின், அவர்களைத் தற்காத்தொழுகும் பெரியோருக்கு உவமையாக உரைத்தார். ஒழுகின் என்ற செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் ஒழுகுதற்கு அருமை தோன்றநின்றது.

—தொகுப்பாசிரியர்.

975. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— பெருமை உடையவர் - அவ்வாற்றான் பெருமையுடையராயினார், அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றுவார் - தாம் வறியராய வழியும் பிறரால் செய்தற்கரியவாய தம்செயல்களை விடாது அவைசெய்யு நெறியால் கடைபோகச்செய்தலை வல்லராவர்.

வறியராயவழியும் என்பது, முன்செய்து போந்தமை தோன்றப் பெருமையுடையவர் என்றதனானும், ஆற்றுவார் என்றதனானும் பெற்றாம். இதனால் அதனையுடையார் செய்தி கூறப்பட்டது.

மணக்:— பெருமையுடையவர் நெறியினானே செய்யவல்லர் ஆவர் செய்தற்கு அருமையுடைய செயல்களை எ - று.

இது செய்தற்கு அரியசெய்வார் பெரியர் என்றது.

பரிதி:— ஒருவராலும் செய்தற்கரிய செய்வார் பெரியோர்; செய்ய மாட்டார் சிறியவர் எ - று.

காளிங்:— தம் குடிமையால் பெருமை உடையவர் சால வல்லவர்: யாதினை எனின், நூல் நெறிப்பொருள் பலவற்றினும் வைத்துப் பலராலும் செய்தற்கு அருமை உடையவற்றைச் செய்து கோடல் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்." —நாலடி. 152.

"சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனில் தாழ்வரோ தாழார் - அறனல்ல
எண்மைய வாயினும் கைவிட் டரிதெனினும்
ஒண்மையில் தீர்ந்தொழுக லார்." —நீதிநெறி. 70.

முதுமொழிவெண்பாக்கள்:

"நல்லூழி நான்குமனு நாரியுடன் நண்ணவரி
செல்வமக வானுன் சிவசிவா - ஒல்லும்." —சிவசிவ. 98.

"மண்பரவு சக்கரத்தை மாலெடுப்ப வீட்டுமனுர்
எண்புகழாக் கொண்டார் இரங்கேசா - பண்பால்." —இரங். 98.

976. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னும் நோக்கு. (சு)

உரைப்பகுதி:

பரிமே:— பெரியாரைப் பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு - அப்பெற்றியராய பெரியாரை வழிபட்டு அவரியல்பினை யாம் கோடும் என்னும் கருத்து, சிறியார் உணர்ச்சியுள் இல்லை - மற்றைச் சிறியராயினார் மனத்தின்கண் உளதாகாது.

குடிமை, செல்வம், கல்வி என்று இவற்றது உண்மைமாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவை நமக்கியல்பு என்று அமைந்திருப்பாரை வழிபட்டு அஃதுடையராதல் கூடாது என்பதாம்.

மணக்:— சிறுமையுடையார் உணர்வின்கண் இல்லை, பெருமையுடையாரைப் போற்றித் துணையாகக் கொள்வேம் என்னும் கருத்து.

இது பெரியாரைப் பெறுதலும் பெருமை என்று கூறிற்று

பரிதி:— சிறியார்களிடத்து இல்லை; பெரியாரைப்பேணிக்கொள்ள வேணும் என்ற பெருமை எ - று.

காளிங்:— சிறியவர் உணரும் 'உணர்ச்சியுள் இல்லை: யாது எனின், பெரியோரைப் பொருள் எனக் கருதி நமக்கு இது வேண்டும் என்று விரும்பிக் கைக்கொள்வோம் என்னும் விசாரம் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நோக்கு - கருத்து.

முதுமொழிவெண்பாக்கள்:

" தண்டி யடிகளிரு தாளிணைபே ணாதழிந்தார்
தொண்டராம் பேய்ச்சமணர் சோமேசா - மிண்டும்."—சோமேசர். 98.

குறிப்பு:

இக்குறள் எதிர்மறைமுகத்தால், பெரியோர்களைப் பேணுதலே பெருமைக்கு இயல்பு என்பதை வற்புறுத்தியவாறு.

—தொகுப்பாசிரியர்.

977. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்பும்தான்
சீரல் லவர்கண் படின். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— சிறப்புத் தானும் - தனக்கு ஒக்கும் பெரியாரிடத்து அமைந்திருத்தலைச் செய்வதாய சிறப்புத்தானும், சீர் அல்லவர்கண் படின் - தனக்கு ஒவ்வாத சிறியாரிடத்துப் படுமாயின், இறப்பே புரிந்த தொழிற்றாம் - அதனை ஒழிந்து தருக்கின்கண்ணே மிக்க செயலை உடைத்தாம்.

தருக்கினை மிகச்செய்யும் என்பதாயிற்று. சிறப்பு - குடிமை, செல்வம், கல்விகளினாய மிகுதி. இவை இரண்டு பாட்டானும் அஃதிலார் செய்தி கூறப்பட்டது.

மணக்:— செல்வமானது தனக்கு நிகரில்லாதார்மாட்டே நிற்குமாயின், நிதியை இறப்பாரிடத்தே பொருந்தின தொழிலை உடைத்தாம் எ - று.

சீரல்லவர் - பெரியரல்லவர்.

பரிதி:— இறப்பதற்கு இடமாகிய சிறப்பாகிய சிறியோர் செய்த சிறப்பும் சிறுமையல்லது பெருமையல்ல எ - று.

காளிங்:— ஒருவர்க்குச் செல்வச் சிறப்பு உளதாயின் அதுவும் பெருமைக்குக் காரணம் அன்றே? அங்ஙனம் சிறந்த செல்வச் சிறப்பும் சீர் அல்லாதவர்மாட்டதாமாயின் மற்று அதுதானே முறையின் நீங்கிய மிகையே புரிந்த தொழிலினை உடைத்து ஆகும் அவர்க்கு எ - று.

978\. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— *பெருமை என்றும் பணியும் - பெருமையுடையார் அச்சிறப்புஉண்டாயஞான்றும் தருக்கின்றி அமைந்தொழுகுவர்; சிறுமை (என்றும்) தன்னை வியந்து அணியும் - மற்றைச் சிறுமையுடையார் அஃது இல்லாதஞான்றும் தம்மை வியந்து புனையாநிற்பர்.*

பொருளின் தொழில்கள் பண்பின்மேல் ஏற்றப்பட்டன. இஃது அற்றமறைக்கும் பெருமை என்புழியும் ஒக்கும். என்றும் என்பது பின்னும் வந்து இயைந்தது. ஆம் என்பன இரண்டும் அசை. புனைதல் பிறரின் தமக்கோர் மிகுதியை ஏற்றிக்கோடல். இதற்கு உயர்ந்தார் தாழ்வார் தாழ்ந்தார் உயர்வார் இஃது ஒரு விரோதம் இருந்தவாறு என் என உலகியலை வியந்து கூறிற்றாக்குவாரும் உளர்.

மணக்:— *பெருமை எக்காலத்தும் பிறரைத் தாழ்ந்தொழுகும்; சிறுமை தன்னைப் பெருக்க நினைத்து அலங்கரிக்கும் எ - று.*

இது பெருமையாவது பணிந்தொழுகுதல் என்று கூறிற்று.

பரிப்:— *செல்வமும் கல்வியும் தமக்கு உளதாகுங் காலத்துத் தாம் பணிந்தொழுகுவர் எந்நாளும் பெருமைக்குணம் உடையார்; சிறுமைக் குணம் உடையார் அவை உளதாங் காலந்தொடங்கித் தம்மை வியந்து கொண்டு அணிவர் எ - று.*

பரிதி:— *மரபிற்பெரியார் செல்வம் பெற்றால் எல்லாரையும் பணியும்; சிறியார் செல்வம் பெற்றால் தன்னை வியந்துரைக்கும் எ - று.*

காலிங்:— *உலகத்து என்றும் யாவர்க்கும் தண்ணளிகொண்டு தாழ்ந்து ஒழுகுவதாம் பெருமை: இனிச் சிறுமை தன்னைத் தானே மதித்துச் சாலத் தன் திறம் அலங்கரித்து ஒழுகும் எ - று.*

உரைவிளக்கப்பகுதி :

நுண் :— *ஆம் - இரண்டும் அசை. "குறைக்குமர்ம் கூன்கத்தி கொண்டு" என்பதும் அது.*

மேற்கோள்பகுதி:

நச்:— ஆம் என்ற இடைச்சொல் அசைநிலையாய் வந்ததற்குப் 'பணியுமாம்' என்பது மேற்கோள். (தொல். சொல். 298.)

மயிலை;— ஷை (நன். 440.)

சங்கர:— ஷை (நன். 441.)

சிவஞான:— போல் - போலும் என்றுரைக்க. செய்யும் என்னும் முற்று தன்மையில் செல்லாமையின் ஆம் என்பதனை உடைமையொடு கூட்டுக. 'பணியுமாம் என்றும் பெருமை' என்புழிப்போல அசைச்சொல் எனினும் அமையும்.'' (சிவஞான. சூ. 2. ஆதி. 4.)

முதுமொழிவெண்பாக்கள்:

"நாவலர்வெள் ளானை நடத்தஉப மன்னியர்போல்
ஆவலுடன் கண்டுபணிந் தார்களோ - தேவர்." —திருத். 96.

குறிப்பு:

பெருமை சிறுமை என்பன அதனை உடையார்மேல் நின்றன. பரிமேலழகர் கூறிய வேற்றுரை இந்நால்வருரையுமல்லாததாயிருத்தலை அறிக.

—தொகுப்பாசிரியர்.

979. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். (௯)

உரைப்பகுதி:

பரிமே:— பெருமை பெருமிதம் இன்மை - பெருமைக்குணமாவது காரணம் உண்டாயவழியும் அஃது இயல்பாதல் நோக்கித் தருக்கின்றி இருத்தல்; சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல் - சிறுமைக்குணமாவது அஃது இல்வழியும் அதனை ஏற்றிக்கொண்டு தருக்கின் முடிவின்கண்ணே நின்று விடுதல்.

அளவிறந் தருக்குதல் என்பதாயிற்று. விடும் என்று பாடம் ஓதுவாரும் *உளர்; முற்றுத்தொடரும் எழுவாய்த்தொடரும் தம்முள் இயையாமையின், அது பாடமன்மை உணர்க.

மணக்:— பெருமையாவது செருக்கின்மை; சிறுமை செருக்கினை மேற்கொண்டொழுகுமாதலான் எ - று:

மேல், குலத்தினாலும் செல்வத்தினாலும் பெரியாரைப் பெரியார் என்று கொள்ளப்படாது என்றார்; இனிப் பெருமை இலக்கணம் கூறுவார், முற்படச் செருக்கின்மை பெருமை என்று கூறினார்.

பரிதி:— எல்லாரிடத்தும் தாழ்ச்சியான சொல் பெருமை கொடுக்கும்; பெருமையானசொல் சிறுமை கொடுக்கும் எ - று.

காளிங்:— பெரியோர்க்குத் தம் பெருமையாவது தம் குறிப்பான் ஒரு பெருந்தன்மை பாவியாமை: மற்றுச்சிறுமையாவது தம் சிறுமைக்குப் பெரிதும் கூசி மற்று அது மறைத்தற்காகப் பிற பெருந்தன்மை மேல் கொண்டு விடும் எ - று.

எனவே பெரியோர் பெருமையைத் தம்மேல் ஏறட்டுக்கொண்டு தாமும் பெரியோராகப் பாவித்து நடப்பர் ஒரு பயன் இல்லை ஆயினும் என்னை பாபம் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப." —முதுமொழிக். 2 - 6.

"ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப - தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு." —நீதிநெறி. 17.

குறிப்பு:

'பணியுமாம்' என்றகுறள், வாக்கால் வெளிப்படும் செருக்கையுணர்த்திற்று. இது மெய்யால் வெளிப்படும் செருக்கையுணர்த்திற்று.

—தொகுப்பாசிரியர்.

---

* இது காளிங்கர் பாடம்.

980. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
*குற்றமே கூறி விடும். (௯௦)

உரைப்பகுதி :

பரிமே:— பெருமை அற்றம் மறைக்கும் - பெருமை உடையார் பிறர்மானத்தையே கூறி அவமானத்தை மறையாநிற்பர்; சிறுமை குற்றமே கூறிவிடும் - மற்றைச் சிறுமையுடையார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவர்.

மறைத்தலும் கூறலும் ஏனையிடத்தும் இயைந்தன. அற்றம்; ஆகுபெயர். தான் என்பது அசை. இவை மூன்று பாட்டானும் இருவர் செயலும் ஒருங்கு கூறப்பட்டன.

மணக்:— பெருமை பிறருடைய குறையை மறைத்துச் சொல்லும்; சிறுமை அவர்க்குள்ள நன்மை சொல்லுதலைத் தவிர்த்துக் குற்றத்தையே சொல்லிவிடும் எ - று.

இது குற்றம் கூறாமை பெருமை என்று கூறிற்று.

பரிதி:— பெரியரானோர் சிறியோர்செய்த குற்றத்தைமறைப்பர், சிறியோர் பலர்செய்த குற்றத்தைத் தூற்றுவர் எ - று.

காளிங்:— சிறுமையானது என்றும் தான் செய்யும் நெறி அற்றங்களை அடக்கிக்கொண்டு ஒழுகும்; மற்றுப் பெருமையானது தான் அதனைக் குற்றமாகக் கொண்டுவிடும். எனவே அதனை ஒருபொழுதும் தன்கண் அடக்க நிலை இல்லை என்பது பொருளாயிற்று எ - று.

இவ்வாறு அன்றி,

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்

என்பது பாடமாயின், தன்கண் ஓர் நெறி அற்றமாகிய குற்றம் வந்து உளதாம் ஆயின் அதனை அப்பொழுதே மாய்த்துவிடும் பெருமையானது: மற்று இனிச் சிறுமைதான் தன் நட்பின் இனிய கிளையாகக்கொண்டு ஒழுகும் எ - று.

---

*"அற்றமறைக்கும் சிறுமை பெருமைதான், குற்றமாக் கொண்டு விடும்" என்பது காளிங்கர் பாடம்.

இன்னும் பிறவாறு பாடம் ஓதுவாரும் உளர் எனின் அதற்கு ஏற்குமாறு அறிந்து உரைக்க.

ஒப்புமைப்பகுதி:

" மூரிநர சிங்க முனையரையர் மாதவருள்
சீரியதூர்த் தற்கிரட்டி செய்தாராம் - பூரியினை." —திருத். 56.

குறிப்பு:

சிறியோர் குற்றம் கூறுவது பிறர் பெருமையை மறைத்துத் தன்பெருமையை உயர்த்திக்கொள்ள. இதனால் பிறர் குற்றம் கூறுவான் உரையால் அவனைச் சிறியன் என்று அறிக என உபாயம் அறிவித்தவாறு.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— ஒளியொருவற்கு, பிறப்பொக்கும், மேலிருந்தும், ஒருமை, பெருமையுடையவர், சிறியார், இறப்பே, பணியுமாம், பெருமைபெருமிதம், அற்றம்.

மணக்:— பிறப்பொக்கும், மேலிருந்து. இறப்பே, பெருமைபெருமிதம், பணியுமாம், அற்றம், ஒளியொருவற்கு, ஒருமை, சிறியார், பெருமையுடையவர்.

பரிதி:— பணியுமாம், பெருமையுடையவர், மேலிருந்தும், சிறியார், இறப்பே, அற்றம், ஒருமை, பெருமைபெருமிதம், ஒளியொருவற்கு, பிறப்பொக்கும்.

காளிங்:— பணியுமாம், பிறப்பொக்கும், அற்றம், இறப்பே, மேலிருந்து, பெருமைபெருமிதம், சிறியார் பெருமையுடையவர், ஒளியொருவற்கு, ஒருமை.

99. சான்றாண்மை.

தொகுப்புரை:

[எல்லாக் குணங்களும் நிறைந்து அக்குணங்களையாள்பவர்க்கு நல்லன வற்றைச் செய்தலே இயல்பாம். குண அழகே அழகு. ஏனையன அழகாகா. அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை இவ்வைந்துமே, சால்புக் கோட்டைக் குத் தக்க தூண்கள். தவமாவது கொல்லாமை. சால்பாவது பிறர் தீமையைச் சொல்லாமை. வினைமுடிக்கும் பெரியோர் வேண்டிய துணையைத் தாழ்ந்து தேடிக் கொள்வார்கள்; அதுவே பகையையொழிக்கும் படையாம். சால்புக்கு அளவு, தகுதி யில்லாதவனிடத்தும் தோல்வியைக் கொள்ளுதல். நமக்குத் துன்பம் செய்தவர் களுக்கு இன்பம் செய்யாவிடத்துச் சால்பால் பயனென்ன? சால்பு இருக்குமானல் ஒருவனுக்கு வறுமைகூட இழிவு தருவதாகாது. சான்றாண்மைக் கடலிற்குக் கரையாயிருக்கும் பெரியோர்கள் காலம் திரிந்தாலும் தாம் திரியார். சான்றோர்கள் தம் தன்மை குறைவார்களாயின், நிலமும் சுமையைத் தாங்காது அழியும்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது பலகுணங்களானும் நிறைந்து அவற்றை ஆடல்தன்மை. பலகுணங்களானும் என்பது சாலுதல்தொழிலால் பெறப்படுதலின், அவற்றை என்பது வருவிக்கப்பட்டது. பெருமையுள் அடங்காத குணங்கள் பலவற்றையும் தொகுத்துக்கொண்டு நிற்றலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

மணக்:— சான்றாண்மையாவது நற்குணங்கள் பலவற்றானும் அமைந்தார் இலக்கணம் கூறுதல். இது பெரும்பான்மையும் அறத்தினால் தலைமனி செய்தொழுகுவாரை நோக்கிற்று.

பரிதி:— சான்றாண்மையாவது குலவொழுக்க நெறியிலே நிற்க வேண்டும் எ - று.

981. கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. (க)

உரைப்பகுதி:

பரிமே:— கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு - நமக்குத்தகுவது இது என்று அறிந்து சான்றாண்மையை மேற்கொண்டு

ஒழுகுவார்க்கு, நல்லவை எல்லாம் கடன் என்ப - நல்லனவாய குணங்க ளெல்லாம் இயல்பாயிருக்கும் என்று சொல்லுவர் நூலோர்.

சில குணங்கள் இலவாயவழியும் உள்ளன செய்துகொண்டன வாயவழியும் சான்றாண்மை என்னும் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ்வேதுப்பெயர்பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவர் என்பதாம்.

மணக்:— நமக்குத் தகுவது இதுவென்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு, நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பா யிருக்கும் என்று சொல்லுவர் நூலோர் எ - று.

பரிப்:— உலகு இயற்கை அறிந்து சான்றாண்மையை மேலிட்டுக் கொள்ளும் அவர்களுக்கு நல்லவாயின எல்லாம் இயல்பு என்று சொல்லுவர் அறிவோர் எ - று.

இது மேற் கூறியவாறே அன்றி நற்குணங்கள் எல்லாம் வேண்டும் என்றது.

பரிதி:— பூலோகத்திலே வழங்குகின்ற நன்மையெல்லாம் உண்மையறிந்த நன்மையோர் செய்த ஒழுக்கம் எ - று.

காளிங்:— நமக்குக் கடன் இஃது என்று இருந்து சான்றாண் மையைக் கைவிடாது தம்மாட்டுக் கைக்கொண்டு ஒழுகுமவர் யாவர்? மற்று அவர்க்கு இச்சான்றாண்மை அடியாக மற்றும் இதுபோலும் நல்லவை எல்லாம் கைக்கொண்டு ஒழுகுதல் கடன் என்று சொல்லுப யாவரும் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"உலகர்க்குத் தந்தை ஒருத்திக்குத் தாயாய்ப்
பலவும் உபகரித்த பண்பின் - புலவர்." —முதுமொழி. 146.

"பன்றிக் குருளைக்குப் பன்றியாய்க் கண்ணுதலும்
சென்று முலைகொடுக்கும் செய்தியால் - என்றும்." —ஷை 147.

குறிப்பு:

சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு என்றதில், மேற்கொள்ளுதல் புதிதாக அடைதல் அன்று; உள்ளதன் விளக்கம் காணுதல்; என்னை? நல்லவையெல்லாம் கடன் என்றாராதலின். நல்ல குணங்கள் அவர்க்கு இயல்பு என்பது பெற்றும். ஆதலால்

அக்குணங்களால் நிறைந்து அதனை ஆளும் தன்மை இயற்கையாதலின், மேற்கொள் பவர்க்கு என்றதில் உள்ள மேற்கொள்ளுதல் புதிதாக அடைதல் அன்று; என்றும் அமைந்த குணங்களை ஏற்ற ஏற்ற காலத்து வெளிப்படுத்துதல் என்பதை விளக்கிய வாறு.

—தொகுப்பாசிரியர்.

982. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று. (௨)

உரைப்பகுதி :

பரிமே:— சான்றோர் நலன் குணநலமே - சான்றோர் நலமாவது குணங்களானாய நலமே; பிற நலம் எந்நலத்தும் உள்ளது அன்று - அஃதொழிந்த உறுப்புக்களானாய நலம் ஒருநலத்தினும் உள்ளதன்று.

அகநலத்தை முன்னே பிரித்தமையின் ஏனைப் புறநலத்தைப் பிறநலம் என்றும், அது குடிப்பிறப்பும் கல்வியும் முதலாக நூலோரெடுத்த நலங்களுள் புகுதாமையின் எந்நலத்துள்ளதூஉம் அன்று என்றும் கூறினார், இவை இரண்டு பாட்டானும் சால்பிற்கு ஏற்ற குணங்கள் பொதுவகையான் கூறப்பட்டன.

மணக்:— சான்றோர்க்கு நலமாவது குணநல்லராகுதல்; குண நலம். பிற நலமாகிய எல்லா நலத்தினும் உள்ளதொரு நலமன்று எ - று.

இது குணநலம் சால்பிற்கு அழகு என்றது.

பரிதி:— குணநலம் சான்றோர்க்குப் பொறுமை; பிறநலம் கல்வி, ஞானம், பெருமை எல்லாம் ஒன்றாகச் சொல்லப்படாது எ - று.

காளிங்:— சான்றோர் நலம் யாதோ எனின், தமது உள்ளத்து அமைவு உடையர் என்னும் இந்நலமே ஆகலான், இவ்வமைவுதான் வேறு யாவை சில நன்மையினும் உள்ளது ஒன்று அன்று; எனவே எல்லா நன்மையினும் இவர்க்குச் சிறந்தது அதுவே என்பது பொருள் எ - று.

குணம் என்பது உள்ளத்து அமைவுடைமை.

குறிப்பு:

குஞ்சியழகு முதலாகக் கூறப்பட்டன அன்றி, குணத்தால் விளையும் அழகே சான்றோர்க்கு அழகு என்பதாம். குணமெனப்படுவது எல்லாரானும் கொள்ளப்படுவ தாய், ஒருசேர இன்பம் பயப்பதாய் உள்ள பண்பு. அதனை வரையறுத்து இத் துணைய என்று கூற இயலாமையின் பிரிநிலையேகாரம் கொடுத்துக் கூறினார்.

—தொகுப்பாசிரியர்.

983. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால் பூன்றிய தூண். (ந)

உரைப்பகுதி :

பரிமே:— அன்பு - சுற்றத்தார்மேலேயன்றிப் பிறர்மேலும் உளதாய அன்பும், நாண் - பழிபாவங்களின் நாணலும், ஒப்புரவு - யாவர் மாட்டும் ஒப்புரவு செய்தலும், கண்ணோட்டம் - பழையார்மேல் கண்ணோடலும், வாய்மை - எவ்விடத்தும் மெய்ம்மைகூறலும் என, சால்பு ஊன்றிய தூண் ஐந்து - சால்பு என்னும் பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்து.

எண்ணொடு முன்னவற்றோடும் கூடிற்று. இக்குணங்கள் இல்வழிச் சால்பு நிலைபெறாமையின், இவற்றைத் தூண் என்றார். ஏகதேசவுருவகம்.

மணக்:— அன்புடைமையும், பழிநாணுதலும், ஒப்புரவுடைமையும், கண்ணோட்டமும், மெய்யுரையும் என்று சொல்லப்பட்ட ஐந்தும் சால்பினைத் தாங்கும் தூண் எ - று.

இஃது இவை ஐந்தும் சால்பிற்கு அங்கம் என்றது.

பரிதி:— அன்புடைமை, நாணுடைமை, ஒப்புரவு, கண்ணோட்டம், சத்தியவாய்மை இந்த ஐந்து காரியமும் திண்மையான குற்றத்தைத் தாங்கிய தூண் எ - று.

காளிங்:— அன்பு முதலாக வாய்மையோடு எடுத்து எண்ணித் தொகுத்த ஐந்தும் சான்றோரது சால்பு தளராமல் ஊன்றி நிற்கின்ற தூண்; எனவே ஒருவர் சால்பின் நன்மையாவது இவையனைத்தும் இனிது ஒழுக என்பது பொருளாயிற்று எ - று.

இனி மற்று இக்குணம் உடையோர்க்கே மக்கட் பண்பு ஆகிய மரபு உள்ளது பிறர் மக்கள் உருபினரேனும் மக்கட் பண்பு ஏதும் இலார் என்று இங்ஙனம் இம்மரபு தெரிந்து உணர்த்தல் வேண்டி மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— எண்ணொடு முன்னவற்றோடும் கூட்டுக.

ஒப்புமைப்பகுதி:

" அன்பொப் புரவு கண்ணோட்டம் அழியா வாய்மை நாணுதி
இன்பம் பெருக்கு நற்குணங்கள் எல்லாம் நிறைந்த சான்றோர்கள்
துன்புற் றவர்க்கும் இனியனவே சூழ்வர் துணையின் வினைமுடிப்பர்
அன்பில் தளரார் நட்டார்க்கும் அடங்கித் தோற்றல் காணுமே."
—விநா. அரசி. 146.

குறிப்பு:

அறத்துப்பாலில், பரிமேலழகர் அன்பிற்குக் கூறிய 'தொடர்புடையார்கண் காதலுடையனாதல்' என்ற குறிப்பும், அருளுக்குத் 'தொடர்புபற்றாது இயல்பாக எல்லார் மேலும் செல்வதாகிய கருணை' என்ற குறிப்பும் ஈண்டு அன்பு 'சுற்றத்தார் மேலேயன்றிப் பிறர்மேலும் உளதாயஅன்பு' என்ற குறிப்பும் எண்ணி ஆய்தற்குரியன.
—தொகுப்பாசிரியர்.

984. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— நோன்மை கொல்லா நலத்தது - பிற அறங்களும் வேண்டுமாயினும் தவம் ஓருயிரையும் கொல்லாத அறத்தின் கண்ணதாம்; சால்பு பிறர் தீமை சொல்லா நலத்தது - அதுபோலப் பிறகுணங்களும் வேண்டுமாயினும் சால்பு பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின் கண்ணதாம்.

நலம் என்னும் ஆகுபெயர்ப்பொருள் இரண்டனையும் தலைமை தோன்ற, இவ்விரண்டற்கும் அதிகாரமாக்கிக் கூறினார். தவத்திற்குக் கொல்லா அறம் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர் குற்றம் சொல்லாக்குணம் சிறந்தது என்பதாம்.

மணக்:— தவத்துக்கு உறுப்பான சீலங்கள் பல உண்டாயினும், கொல்லாத நலத்தையுடையது தவம்; அதுபோலச் சான்றாண்மைக்கு உறுப்பான நற்குணங்கள் பல உண்டாயினும், பிறர் பழியைச் சொல்லாத நலத்தையுடையது சால்பு எ - று.

பரிப்:— மேற் கூறிய சால்பிற்கு இலக்கணம் கூறுவார் முற்படப் புறஞ்சொல்லாமை எல்லாக் குணத்தினும் இன்றியமையாதாக வேண்டும் என்று கூறினார்.

பரிதி:— கொல்லாமையான விரதத்திலும் பெரியது இல்லை. அதினும் பெரியது தனக்கு ஒருவன் செய்த குற்றத்தைச் சொல்லாதிருப்பது எ - று.

காளிங்:— யாதானும் ஒன்றினையும் தான் கொல்லாமையாகிய விரதம் கொண்ட இந்த நலத்தின்கண்ணதே நோன்பின் நன்மையாவது, மற்று இதுபோலத் தம்மாட்டு ஆயினும் பிறர் செய்தது ஓர் தீங்கினை இவர் இது செய்தனர் என்று எடுத்து உரையாத நன்மனக் கூறு உடையது யாது மற்று அதன்கண்ணதே சால்பு உடைமையும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நலம் - முன்னது அறம்; பின்னது குணம்.

மேற்கோள்பகுதி :

பெருந்:— வெண்பாவை ஓசையூட்டுதற்கு மேற்கோள். (வீர. 114.)

யா - வி:— இது 'எதுகைக்கும் இனமோனைக்கும் ஒத்துவந்த தாயினும் எதுகை என்று வழங்கப்படும்' என்பர். (சூ. 53.)

அலகிட்டு ஓசையூட்டுதலுக்கு மேற்கோள். (சூ. 57.)

ஒழுகிசைச் செப்பலோசைக்கு மேற்கோள். (சூ. ௸)

குறிப்பு :

'உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்றார் கீழ். ஈண்டு 'கொல்லா நலத்தது நோன்மை' என்றார். இவை இயைத்து இன்புறுதற்குரியன.

—தொகுப்பாசிரியர்.

985. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— ஆற்றுவார் ஆற்றல் பணிதல் - ஒருகருமத்தைச் செய்து முடிப்பாரது ஆற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல், சான்றோர் மாற்றாரை மாற்றும் படை அது - இனிச் சால்புடையார் தம்பகைவரைப் பகைமை ஒழிக்கும் கருவியும் அது.

ஆற்றல் அது வல்லராந்தன்மை. இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. சால்பிற்கு ஏற்ற பணிதற்குணத்து சிறப்புக் கூறுவார், ஏனையதும் உடன் கூறினார்.

பரிப்:— பெரியாரது பெருமையாவது எல்லார்க்கும் தாழ்ந்து ஒழுகுதல்; அதுவே சான்றவர் மாறுபட்டவரை வெல்லும் கருவி எ - று.

இது சான்றவர்க்கு வலியாவது தாழ்ந்து ஒழுகுதல் என்றது.

பரிதி:— நல்லோர்க்குத் தொழிலாவது பெரியோர் தாழ்ந்தோர் என்னாமல் யாவரையும் இதஞ்செய்து கூட்டிக்கொள்வது; அதுவே மாற்றாரை வெட்டும் ஆயுதம் எ - று.

காளிங்:— ஐம்புலன்களின் வேகத்தை ஆற்றுவாரது ஆற்றலாவது யாதோ எனின், தாம் யாவர் மாட்டும் பணிவு உடையர் ஆதல்: மற்று அது அச்சான்றோர் தம்மொடு மாறுபடும் பகைவரை எதிர் ஆற்றும் கருவி எ - று.

986. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— சால்பிற்குக் கட்டளை யாது எனின் - சால்பாகிய பொன்னின் அளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாது எனின், தோல்வி துலை அல்லார்கண்ணும் கொளல் - அது தம்மின் உயர்ந்தார்மாட்டுக் கொள்ளும் தோல்வியை இழிந்தார்மாட்டும் கோடல்.

துலை-ஒப்பு. எச்சஉம்மையான் இருதிறத்தார்கண்ணும் வேண்டுதல் பெற்றாம். கொள்ளுதல் - வெல்லும் ஆற்றலுடையராயிருந்தே ஏற்றுக் கொள்ளுதல். இழிந்தானை வெல்லுதல் கருதித் தம்மோடு ஒப்பித்துக் கொள்ளாது தோல்வியான் அவரின் உயர்வராயின், அதனால் சால்பளவு அறியப்படும் என்பதாம்.

பரிப்:— சால்பிற்கு அளவு யாது எனின், தோல்வியைத் தனக்கு நிகர் அல்லாதார் மாட்டும் கொள்ளுதல் எ - று.

இஃது எல்லார்க்கும் இனிமை செய்ய வேண்டும் என்றது.

பரிதி:— நல்லோர் என்கிற குணத்தை நிறுக்கிற கட்டளை யாது எனின் தமக்கு நிகர் இல்லாதாராயினும் அவர்க்குத் தாழ்ச்சி சொல்லி நடப்பது எ - று.

காலிங்:— சான்றோர் சால்பிற்கு உறுதிப்பாடாவது யாதோ எனின், தம்மொடு ஒப்பச் சீர்தூக்கும் துலைமை இல்லார்மாட்டும் தம் தோல்விகொண்டு ஒழுகுதல் எ - று.

மேற்கோள்பகுதி:

காரி:— துலை என்னும் உவமஉருபு முன்னோர் கூறிய உவம உருபுத்தொகைச் சூத்திரங்களுள் இல்லையாகவும் இலக்கியங்களில் எடுத்தாண்டதற்கு மேற்கோள். (மாற. 113.)

முதுமொழிவெண்பாக்கள் :

“ தானுக வெல்லாதான் தன்னுதல்வி பூதியைக்கண்டு
ஏனுதி நாதர் இகலிழந்தார் - ஆனுதல்.” —திருத். 10.

987. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் - தமக்கு இன்னாதவற்றைச் செய்தார்க்கும் சால்புடையார் இனியவற்றைச் செய்யாராயின், சால்பு என்ன பயத்தது - அச்சால்பு வேறு என்ன பயனை உடைத்து.

சிறப்பும்மை அவர் இன்னாசெய்தற்கு இடனாதல் விளக்கிநின்றது. ஓகாரம் அசை. வினா எதிர்மறைப்பொருட்டு. தாமும் இன்னா செய்வராயின், சால்பால் ஒருபயனும் இல்லை என்பதாம். இவை ஐந்து பாட்டானும் சிறப்புவகையால் கூறப்பட்டது.

பரிப்:— தமக்கு இன்னாத செய்தவர்கட்கும் இனியவற்றைச் செய்யாத காலத்துச் சால்புடைமையால் பயன் யாதோ? எ - று.

இஃது இன்னாதார்க்கும் இனியவை செய்யவேண்டும் என்றது.

பரிதி:— தமக்கு ஒருவர் பொல்லாங்கு செய்தால் தான் அவர்க்கு நல்லகாரியம் செய்யாதபோது சான்றாண்மையால் என்னபயன் எ - று.

காளிங்:— இன்னாங்கு செய்து ஒழுகுவார்க்கும் தாம் எப்பொழுதும் இனியவையே செய்யாத இடத்து மற்று என்னை பயன் உடையதோ? உலகத்துச் சான்றோர் தம் சால்புடைமை எ - று.

ஒப்புமைப்பகுதி:

" நீர்த்தகவு இல்லார் நிரம்பாமைத் தந்நலியின்
கூர்த்தவரைத் தாம்நலிதல் கோளன்றால் - சான்றவர்க்குப்
பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கவ்வின்
பேர்த்துநாய் கவ்வினார் இல்." —பழ. நா.

" நல்லினம் சாரல் நயனுணர்தல் பல்லாற்றான்
நல்லினம் ஓம்பல் பொறையாளல் - ஒல்லும்வாய்
இன்னார்க் கினிய புரிதல் நெறிநிற்றல்
நல்நாப்பண் உய்ப்பதோர் ஆறு." —இன். 38.

முதுமொழிவெண்பாக்கள்:

" தாரு வனமுனிவர் தம்பிழைநோக் காதருளே
சேரநடம் செய்தான் சிவசிவா - ஒருமவர்." —சிவசிவ. 99.

" புத்தனெறி கற்கும் புராரி பதமளித்தான்
இத்தரணி போற்றும் இரங்கேசா - மெத்தவே." —இரங். 99.

" வன்மைச் சுயோதனற்கும் வானோர் சிறைமீட்டான்
தொன்மை நெறித்தருமன் சோமேசா - பன்முறையும்." —சோமேசர். 99.

988. இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - சால்பு என்று சொல்லப்படும் வலி உண்டாகப்பெறின், ஒருவற்கு இன்மை இளிவு அன்று - ஒருவனுக்கு நல்குரவு இளிவாகாது.

தளராமை நாட்டுதலின், வலியாயிற்று. இன்மையான் வருவதனை இன்மைதானாக உபசரித்துக் கூறினார். சால்புடையார் நல்கூர்ந்தவழியும் மேம்படுதலுடையர் என்பதாம்.

மணக்:— ஒருவனுக்குச் சால்பாகியகிலை உண்டாகப் பெறின் பொருளின்மை இளிவாகாது எ - று.

இஃது அமைதியுடையராதல் பெறுதற்கு அரிது என்றது.

பரிதி.— மிடி ஒருவர்க்குக் குற்றமன்று; அது முன்னை வினைப்பயன். செல்வமாவது யாவரையும் வணங்குதலால் இன்சொல்லினால் கூடிநடப்பதாவது எ - று.

காளிங்:— ஒருவரை எளிமைப் படுத்துமது வறுமை; ஆயினும் அவ்வறுமையும் ஒருவர்க்கு இளிவரவு அன்று: தம்மாட்டுச் சால்பு என்று நூல்கள் எடுத்து உரைக்கும் திட்பம் உளதாகப்பெறின் எ - று.

989. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார். (௯)

உரைப்பகுதி:

பரிமே:— சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார் - சால்புடைமையாகிய கடற்குக் கரை என்று சொல்லப்படுவார், ஊழி பெயரினும் தாம் பெயரார் - ஏனைக் கடலும் கரையுள் நில்லாமல் காலந்திரிந்தாலும் தாம் திரியார்.

சான்றாண்மையது பெருமைதோன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத் தாங்கிக்கொண்டுநிற்றலின் அஃது உடையாரைக் கரையாக்கியும் கூறினார்; * "பெருங்கடற் காழி அனையன் மாதோ" என்றார் பிறரும். ஏகதேசவுருவகம்.

பரிப்:— சான்றாண்மைக்கு ஒரு கடல் என்று பிறரால் சொல்லப் படுபவர்கள், காலம் தனது தன்மை குலையினும் தாம் நின்ற நிலை குலையார் எ - று.

பரிதி:— ஊழிக்காலம் வந்தாலும் நிலைபெயரார். சான்றாண்மை என்னும் சமுத்திரம் பெற்றவர் எ - று.

காளிங்:— அயன் ஊழியாகிய கற்பகாலம் பெயரும் காலத்து அவன் படைப்பு ஆகிய உலகு போந்து அழியும் அன்றே: அவ்வாறு

---

*புறம். 330.

ஊழி பெயரினும் தாம் தமது சான்றாண்மையின் பெயரார்: யாவர் எனின் இவர் சான்றாண்மைக்கு ஒரு தனிச்சாகரம் என்று பல நூலினும் எடுத்து உரைக்கப்படும் பண்பினர் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஊழி - காலம். ஆழி - கரை. "பெருங்கடற் காழி அனையன் மாதோ" (புறம். 330) என்றார் பிறரும் என்க. மன் ஒழியிசைக்கண் வந்தது.

ஒப்புமைப்பகுதி:

" இம்மூ வுலகில் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன்றும் முற்ற அறிதலால் - தம்மின்
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல்." —பு. வெ. 167.

" உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையின் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று." —நாலடி. 141.

" ஒற்கந்தாம் உற்ற விடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல் - வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்
புல்மேயா தாகும் புலி." —பழ. நா

" நல்லா ரொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் - பல்பொறிய
செங்கட் புலியேறு அறப்பசித்தும் தின்னுவாம்
பைங்கண் புனத்தபைங் கூழ்." —நீதிநெறி. 761.

முதுமொழிவெண்பாக்கள்:

" தக்கதொண்டை நன்னாடு சான்றோ ருடைத்தெனும்சொல்
திக்கறிய வந்தாய் தினகரா - ஒக்குமே." —தினகர. 103.

" இறையருள்சேர் தென்னன் இருங்கடலும் ஆழி
பிறழ நிலைநிறுத்தும் பெயரால் - கடல்பிறழ." —முதுமொழி. 148.

" தொக்கிடும்பை கௌசிகனால் சூழ்ந்தும்அரிச் சந்திரன்சொல்
முக்கியமாக் காத்தான் முருகேசா - அக்கணமே." —முருகேசர். 99.

குறிப்பு:

சான்றாண்மைக்கு ஆழியெனப்படுவார் என்பதற்குச் சான்றாண்மைக்குக் கடலெனப்படுவார் என உருவகித்தலும் உண்டு. கடல் இறைவன் ஆணையின்வண்ணம் என்றும் கரைகடவாது நிற்கும். நீரூழிக் காலத்து நிலைமீறும். சான்றோர் அங்ஙனம் பெயரார் என உரைச் சிறப்புக் காணலும் உண்டு. பரிமேலழகர் சான்றாண்மையைக் கடலாக்கி ஆழி என்பதற்குக் கரை எனப் பொருள்கொண்டு காலம் திரியினும் தாம் திரியார் என்பர். காளிங்கர் சான்றாண்மைக்கு ஒரு தனிச்சாகரம் என்று உரைக்கப்படும் பண்பினர் என உரைகாண்பர். இதுவும் முன்னர்க் கூறியதனை வற்புறுத்தல் காண்க.

—தொகுப்பாசிரியர்

990. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
*தாங்காது மன்னோ பொறை. (௯௰)

உரைப்பகுதி :

பரிமே:— சான்றவர் சான்றாண்மை குன்றின் - பல குணங்களானும் நிறைந்தவர் தம் தன்மை குன்றுவாராயின், இருநிலந்தான் பொறை தாங்காது - மற்றை இருநிலந்தானும் தன் பொறையைத் தாங்காதாய் முடியும்.

தானும் என்னும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அவர்க்கு அது குன்றாமையும் அதற்கு அது தாங்கலும் இயல்பாகலான், அவை எஞ்ஞான்றும் உளவாகா என்பது தோன்றநின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் அசை. இதற்கு இரு நிலம் பொறை தாங்குவது சான்றவர் துணையாகவருதலான் அதுவும் அது தாங்கலாற்றாது என்று உரைப்பாரும் உளர். இவை மூன்று பாட்டானும் அவற்றான் நிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது.

பரிப்:— சான்றோர் தமது தன்மை குறைவர் ஆயின் பெரிய நிலமானது உயிர் முதலாகிய பாரத்தைத் தாங்குதல் கழியும் எ - று.

அவர்களும் தானுமாய்ப் பொறுக்கின்றதனைத் தனிப் பொறுக்கல் ஆகாது என்று ஆயிற்று, மேல் ஊழி பெயரினும் சான்றோர் நிலை குலையார் என்றார்: இது சான்றோர் நிலை குலையின் ஊழிபெயரும் என்றது.

* 'தாங்கல' காளிங்கர் பாடம்.

பரிதி:— சான்றவர் நீதிமார்க்கத்தில் நடவாதபோது பெருமை பெற்ற பூமி கவிழ்க்கும் அல்லது பொறை பொறுக்காது எ - று.

பழைய:— நல்லோரைத் தாங்குகிறோம் என்றதனால் பூமி ஏழுகடல் ஏழுமலை ஏழுதீவு முதலான பாரம் தாங்குவது அல்லது பூமி பாரந்தாங்காது.

காளிங்:— சான்றவர் தமது சான்றாண்மை சிறிது குன்றின், இப்பெருநிலம் தான் தாங்குதல் உடைய அல்ல பாரம்: எனவே இவர் சிலரின்றி அனைவரும் பாவியராயினராயின் ஆற்றவல்லாது இப்பூமி என்பது பொருள் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே." —புறம், 187 ; 3 - 4.

குறள்வைப்புமுறை

பரிமே:— கடனென்ப, குணநலம், அன்புநாண், கொல்லா, ஆற்றுவார், சால்பிற்கு, இன்னாசெய், இன்மை, ஊழி, சான்றவர்.

மணக்:— இன்மை, கொல்லா, அன்புநாண், குணநலம், ஆற்றுவார், கடனென்ப, சால்பிற்கு, இன்னாசெய், ஊழி, சான்றவர்.

பரிதி:— சான்றவர், கடனென்ப, கொல்லா, இன்னாசெய், ஆற்றுவார், சால்பிற்கு, குணநலம், இன்மை, ஊழி, அன்புநாண்.

காளிங்:— சான்றவர், ஊழி, இன்னாசெய், குணநலம், ஆற்றுவார், சால்பிற்கு, இன்மை, கடனென்ப, கொல்லா, அன்புநாண்.

100. பண்புடைமை.

தொகுப்புரை :

[யாரிடத்திலும் காட்சிக்கு எளியனாயிருப்பதால், பண்பாட்டை ஒருவன் அடைதல் மிக எளிது. அன்புடைமையும் உயர்குடிப்பிறப்பும், ஆகிய இரண்டுமே பண்புடைமைக்குரிய வழிகளாம். உறுப்புக்கள் ஒத்திருப்பதால் மட்டும் ஒருவன் நன்மகனாய்விடமுடியாது. செறிந்த குணங்கள் ஒத்திருத்தலாலேயே நன்மகனாக முடியும். நடுவு நிலைமையோடு அறத்தை விரும்பிப் பிறர்க்குப் பயன்படுவானது பண்பையே உலகம் பாராட்டும். தன்னையிகழ்தல் ஒருவனுக்கு விளையாட்டிலும் துன்பம் தருவது. ஆதலால் பிறர் பெருமையையுணர்வார் பகைவரிடத்தும் பண்பே பாராட்டுவர். பண்பு உணர்வார் இருப்பதால் உலகம் இருக்கிறது. இல்லையாயின் உலகியல் மண்ணாய்ப்போகும். நன்மக்கட்குரிய பண்பில்லாதவர்கள் அரம் போன்று கூர்மையான அறிவுடையவர்களாயினும், மரத்தினைப்போல் கூர்மையின்றி மழுங்குவர். நட்புச் செய்யாது பகைமையே செய்பவர்களிடத்தும் பண்பாடறிந்து நடந்துகொள்ளாமை தவறும். கலந்து பழகமாட்டாதவர்களுக்கு உலகம் பகலினும் இருளிற்கிடப்பதுபோலாம். பண்பறியாதவன் பெற்ற செல்வம் நல்லாவின்பால் கலத்தின் தீமையால் திரிந்ததுபோலாம்.]

அதிகாரப்பொருள் :

பரிமே:— அஃதாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்தொத்து ஒழுகுதல்; *"பண்பு எனப்படுவது பாடறிந் தொழுகல்" என்றார் பிறரும். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

பரிப்:— பண்புடைமையாவது யாவர்மாட்டும் அவரோடு ஒத்த அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும், பகுத்து உண்டலும், பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை. இது பெரும்பான்மையும் பொருளினால் தலையளி செய்வாரை நோக்கிற்று ஆதலான் பின் கூறப்பட்டது.

---

* கலி. நெய்தல். 16.

991. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (க)

உரைப்பகுதி :

பரிமே:— யார்மாட்டும் எண்பதத்தால் - யாவர்மாட்டும் எளிய செவ்வியராதலால், பண்புடைமை என்னும் வழக்கு எய்தல் எளிது என்ப - அரிதாய பண்புடைமை என்னும் நன்னெறியினை எய்துதல் எளிது என்று சொல்லுவர் நூலோர்.

குணங்களான் நிறைந்து செவ்வி எளியருமாயக்கால் பண்புடைமை தானே உளதாமாகலின், எண்பதத்தால் எய்தல் எளிதென்றும், அஃது உலகத்தையெல்லாம் வசிகரித்தற் பயத்ததாகலின் அதனைத் தொல்லோர் சென்ற நன்னெறியாக்கியும், அதனை எளிதின் எய்துதற்கு இது நூலோரோதிய உபாயம் என்பார் அவர்மேல் வைத்தும் கூறினார்.

பரிப்:— யாவர்மாட்டும் எளிய காலத்தை உடையவன் எய்துதல் எளிது என்று சொல்லுவர்; பண்புடைமை என்று வழங்கப்படுகின்ற இதனை எ - று.

எளிய காலம் ஆவது - எல்லாரும் தத்தம் குறை சொல்லுதற்கு எளிய செவ்வி. அஃது உடையார்க்குப் பண்பு உண்டாம் என்றது. இது பெரும்பான்மையும் அரசரை நோக்கிற்று. மேற்கூறிய வகையேயன்றி இதனானும் பண்பு உண்டாம் என்று கூறப்பட்டது.

பரிதி:— பண்புடைமை என்பது சரீரத்தை மாய்க்கவேண்டாம்; பொருட் சேதப் படவேண்டாம்; பொறுமையையும் சொல்லினாலே தேடலாம் எ - று.

காளிங்:— போகச் சிறப்பினான் எண்ணத் தக்க சுவர்க்க பதத்தின்கண் சென்று எய்துதல் மிகவும் எளிது: என்னை எனின், கீழ்ச் சொன்ன முறையானே தமக்கு இனியோரும் இன்னாதோரும் ஆகிய யார் மாட்டும் தனக்கு அடுத்த பண்புடைமை என்னும் இம்முறை முற்றிய இடத்து எ - று.

இனி மற்று இங்ஙனம் கூறிய பண்பு இல்லாதான் செல்வம் கொண்டு ஒரு பயன் தனக்கு இல்லாமையின் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி :

" ஆன்ற குடியன் பெண்பதம்நல் லறநீ திகளின் வழுவாமை
சான்ற மக்கட் பண்பாகும் தன்னை யுடையார் நகையானும்
ஆன்று மிகழார் பகைஇடித்து மதியார் அவர்தம் நற்குணமே
ஏன்ற உலகம் பாராட்டும் எல்லாப் பயனும் அவர்மாட்டாம்."

—விநா. அரசி. 147:

குறிப்பு:

அரசன் பண்புடையானவதற்கு, காட்சிக்கெளியனாக இருத்தலொன்றே உபாயம் என்பது.

—தொகுப்பாசிரியர்.

992. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் - பிறர்மேல் அன்புடையனாதலும் உலகத்தோடமைந்த குடியின்கண் பிறத்தலுமாகிய இவ்விரண்டும், பண்புடைமை என்னும் வழக்கு - ஒருவனுக்குப் பண்புடைமை என்று உலகத்தார் சொல்லும் நன்னெறி.

அமைதல் - ஒத்துவருதல். குடிப்பிறத்தல் என்றது பிறந்தார் செயலை. தனித்தவழி ஆகாது இரண்டுங்கூடியவழியே ஆவது என்பது தோன்ற மூற்றும்மை கொடுத்தார். காரணங்கள் காரியமாக உபசரிக்கப்பட்டன. இவை இரண்டு பாட்டானும் பண்புடையராதற்காரணம் கூறப்பட்டது.

பரிப்:— யாவர்மாட்டும் அன்புடைமையும் அமைந்த குடியின்கண் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்று உலகத்தாரால் வழங்கப்படுகின்றன எ - று.

அன்பு உடையனாகப் பிறர் வருத்தத்திற்குப் பரிதலும், கலந்து ஒழுகுதலும், கொடுத்தலும் முதலாயின உளவாம். குடிப்பிறப்பினானே பழிப்படுவ செய்யாமையும் புறங்கூறாமையும் முதலாயின உளவாம்: ஆதலான் இவ்விரண்டினையும் உடைமை பண்புடைமை என்று கூறப்பட்டது.

பரிதி:— அன்புடைமை, குடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்பு டைமை எ - று.

காளிங்:— யாவர்மாட்டும் பரிவுடைமை, நெறி அமைந்த தம் குடிப்பிறப்பு என்னும் இவை இரண்டும் ஒருவர்க்கு உளது ஆயின் பண்புடைமை என்னும் முறைமை ஆம் எ - று.

குறிப்பு:

அன்பும் குடிப்பிறப்பும் தாமாக வலிந்து மேற்கொள்ளத் தகாதனவாய் இயற்கையே அமையவேண்டுதலின் பண்புடைமையாயின. தூதில் 'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம் பண்புடைமை தூதுரைப்பான் பண்பு' என்றார். ஆண்டுத் தூதற்குக் கூறியது. ஈண்டு அரசற்குக் கூறியது. அக்குறளில் இயற்கைப் பண்போடு, வேந்தன்விரும்ப நடந்துகொள்ளும் செயற்கைப்பண்பும் தூதற்கு அமைய வேண்டும் என்றவாறு. இக்குறளில் இவ்விரண்டுமே பண்புடைமை என வேந்தற்கு வரையறுக்கப்பெற்றது இவரே வேந்தராகலின் - வேற்று வேந்து அவாவுந் தன்மை இவர்க்கின்றாகலின்.

—தொகுப்பாசிரியர்.

993. உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. (௩)

உரைப்பகுதி:

பரிமே:— உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று - செறியத் தகாத உடம்பாலொத்தல் ஒருவனுக்கு நன்மக்களோடு ஒப்பாகாமையின் அது பொருந்துவதன்று, ஒப்பதாம் ஒப்பு வெறுத்தக்க பண்பு ஒத்தல் - இனிப் பொருந்துவதாய ஒப்பாவது செறியத்தக்க பண்பாலொத்தல்.

வடநூலார் அங்கம் என்றமையின், உறுப்பு என்றார். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது உயிரின் வேறாய் நிலையுதலில்லா உடம்பொத்தல் அன்று, வேறன்றி நிலையுதலுடைய பண்பொத்தலாகலான், அப்பெற்றித்தாய அவர் பண்பினையுடையனாக என்பதாம்.

பரிப்:— மக்கள் ஒப்பாவது உறுப்பு ஒத்தல் அன்று; செறியத் தக்க குணங்களை ஒத்தல். அதனை ஒப்பதே ஒப்பாவது எ - று.

செறியத்தக்க குணங்கள் உள ஆதலின் செறியத்தக்க குணம் என்றார். பண்பு இல்லாதார் மக்கள் அல்லர் என்றது.

பரிதி:— மெய் வாய் கண் மூக்குச் செவி உண்டு உறுப்பினல் குறைவில்லை என்பது நன்றல்ல. மக்கட்பண்பு உள்ளதே நன்று எ - று.

காளிங்:— மெய், வாய், கை, கால், கண், மூக்கு, செவி முதலிய ஒத்தல் மக்கள் ஆதற்கு ஒப்பு அன்று: மற்று யாதோ ஒப்பு எனின், ஒருவர்க்குப் பெருமை பொருள் எனத்தக்க பண்பு ஒத்தல் யாது? மற்று அது அகத்து உறுப்பாகிய நெறிக்குறிப்பு அன்றே; மற்று அதனைச் சிலரொடு சிலர் ஒப்பதே ஒப்பாவது எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— வெறுத்தக்க - செறியத்தக்க. உறுப்பு - உடம்பு. வடநூலார் அங்கம் என்றமையின் என்க.

குறிப்பு:

'சிறப்பும் உறப்பும், வெறிப்பும் செறிவே' என்பது தொல்காப்பியமாதலின் வெறுத்தக்க என்பது செறியத்தக்க எனப் பொருள் காணப்பெற்றது பரிமேலழகரால்.

—தொகுப்பாசிரியர்

994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. (ச)

உரைப்பகுதி :

பரிமே:— நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு - நீதியையும் அறத்தையும் விரும்புதலால் பிறர்க்கும் தமக்கும் பயன்படுதலுடையாரது பண்பினை, உலகு பாராட்டும் - உலகத்தார் கொண்டாடாநிற்பர்.

புரிந்த என்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொருட்டு. நயனொடு நன்றி புரிதலும் பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமையின், அதனைப் பாராட்டும் என்றார்.

பரிப்:— பிறரால் விரும்பப்படுதலோடே கூட நன்னெறியின் கண்ணே பொருந்தின பொருள் உடையாரது குணத்தினை உலகம் கொண்டாடும் எ - று.

இவை எல்லாரும் புகழ்வர் என்றது.

பரிதி:— நயனொடு நன்றிபுரிந்த பயன்உள்ளபேர் கொண்ட ஒழுக்கத்தைப் பாராட்டும் உலகம் எ - று.

காளிங்:— ஒழுக்கத்துடனே நல்லறமும் தங்கியவழி இருமைப் பயனும் உளது அன்றே! அதனால் இப்பயன் உடையார் பண்பினையே கொண்டாடும் இவ்வுலகு; எனவே உலகின் உள்ளோர் யாவரும் கொண் டாடுவர் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஆசகனு நின்குணத்தை அன்புடனேம் பத்தாறு
தேசமுங்கொண் டாடும் தினகரா - பேசில்." —தினகர. 104.

"முப்புரங்கள் கொன்றமரன் மூவர்க் கருளியதை
இப்பொழுது தானும்உல கேத்துமே - செப்பின்." —முதுமொழி. 149.

995. நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— இகழ்ச்சி நகையுள்ளும் இன்னாது - தன்னை இகழ்தல் ஒருவற்கு விளையாட்டின்கண்ணும் இன்னாது; பாடு அறிவார்மாட்டுப் பகையுள்ளும் பண்பு உள - ஆகலான் பிறர் பாடறிந்து ஒழுகுவார்மாட்டுப் பகைமை உள்வழியும் அஃது உளதாகாது இனியவாய பண்புகளே உளவாவன.

பாடறிவார் எனவே அவ்இன்னாமை அறிதலும் பெற்றாம். அதனை அறிந்தவர் பின் அது செய்யார் இனியவே செய்வார் என்பது கருத்து. இதற்குப் பிறரெல்லாம் இரண்டு தொடரும் தம்முளியையாமல் உரைப் பாரும் இன்னாது என்னும் சொற்குப் பிறவாது என்றுஉரைப்பாருமாயினர்.

பரிப்:— அறிவார்மாட்டு நகையாடுதலின் கண்ணும் இகழ்ச்சி தோற்றும் ஆயின் இன்னாது ஆம்: பகை ஆகும் இடத்துப் பண்பு தோற்றும் ஆயின் பெருமை உளது ஆம் எ - று.

எனவே அறியாதார்மாட்டு இவை இரண்டும் இல்லையாம் என்ற வாறு ஆயிற்று. இகழ்ச்சி என்றது பண்பின்மை: இஃது அறிவுடையார் மாட்டு ஒருதலையாகக் கொண்டு ஒழுகவேண்டும் என்றது.

பரிதி:— ஒருவரை இகழ்ந்து பேசினல் பலரும் சிரிக்கப்படும்; பகைவருள்ளும் பண்புடைமையானுர் பெருமையைப் பாராட்டும் உலகம் எ - று.

காளிங்:— தாம் சிலரோடு இளமைகொண்டு நகையாடும் இடத்தும் இகழ்ந்து உரை கூறி நகையாடும் இகழ்ச்சிப்பாடு இன்னுது: அதுவும் இன்றி இனி ஒருவரோடு பகை பூணுங்காலும் யாவர்மாட்டும் தாம் இனியராய் விடுதல் யாவர்மாட்டு உளது ஆவது எனின், தாம் செய்யத் தகுவதாகிய நெறிப்பாடு அறிந்து ஒழுகுவார்மாட்டே உளவாம் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"கோதாட்டொழி." ஆத்தி. 42.

முதுமொழிவெண்பாக்கள்:

"துன்பமுறும் தங்கைஎனச் சொல்லி உதிட்டிரனுர்
இன்பமுற்ருர் அன்ருே இரங்கேசா - அன்பில்." —இரங். 100.

குறிப்பு:

பரிப்பெருமாள் காளிங்கர் கருத்துக்கள் விளங்கவில்லை. பரிமேலழகர், இகழ்தல் விளையாட்டினும் துன்பந்தருவது ஆதலால் பிறர் பெருமையறிவாரிடத்துப் பகையுள்ளும் பண்பாடே உளவாம் என்பர். பிறருடைய பெருமையை அறிவார்க்கு ஒருவன் நட்பாயிருந்து விளையாட்டாக இகழின் துன்பந்தரும், பகையாயிருந்தும் பண்பாவன உரைப்பின் இன்பந்தரும் எனவும் சிலர் உரை காண்பர்.

—தொகுப்பாசிரியர்.

996. பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். (சா)

உரைப்பகுதி:

பரிமே;— பண்பு உடையார்ப் பட்டு உலகம் உண்டு - பண்புடையார்கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றும் உண்டாய் வாராநின்றது; இன்றேல் அது மண்புக்கு மாய்வது - ஆண்டுப்படுதல் இல்லையாயின், அது மண்ணின்கண் புக்கு மாய்ந்துபோவதாம்.

பட என்பது திரிந்துநின்றது. உலகு ஆகுபெயர். மற்றைப் பண்பிலார் சார்பன்மையின் ஓர் சார்புமின்றி மண்ணின்கண்புக்கு மாயுமது வேண்டாவாயிற்று என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. இவை நான்கு பாட்டானும் அதனை உடையாரது உயர்ச்சி கூறப்பட்டது.

பரிப்:— பண்பு உடையாரைத் தோற்றி உலகமாகிய பலவகை உயிரும் உண்டாயிற்று: அத்தோற்றம் இல்லையாளுல் அவ்வுயிர்கள் எல்லாம் மண்ணின்கண் புக்கு மாய்வது நிலை எ - று.

இது பண்பு உடையார் பிறத்தலானே உலகநடை தப்பாமல் வருகின்றது என்றது.

பரிதி:— பண்புடைமையாலே உலகம் என்றும், பெரியோர் என்றும் பெயராயிற்று, அது இல்லையாகில் மண்ணில்மாய்வது நன்று எ - று.

காளிங்:— மக்கட்பண்பு உண்டாகிய மரபு உடையாளரைப் பெற்று உண்டாயிற்று ஒழுக்கம் என்று மறைநூலும் பிறவும் வகுத்து உரைக்கின்ற அனைத்தொழுக்கத்திற்கும் காரணமாகிய அம்மக்கட் பண்பு என்பது ஈண்டு இல்லையாயின் பிறந்தார்யாவரும் பெரும்பாவிகளே ஆனர் ஆதலால் அந்தப் பூமிக்கும் பெரும்பாரமேயாகும் இதனைத் தரிக்க மாட்டாது எ - று.

ஒப்புமைப்பகுதி:

“உண்டால் அம்மஇவ் உலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே” —புறம். 182.

முதுமொழிவெண்பாக்கள்:

“ஓவாச் சிவசமயம் ஓங்கியதே நால்வரால்
மூவா முதலே முருகேசா — தாவாத” —முருகேசர். 100

997. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். °(எ)

உரைப்பகுதி:

பரிமே:— மக்கட்பண்பு இல்லாதவர் - நன்மக்கட்கே உரிய பண்பில்லாதவர், அரம்போலும் கூர்மையரேனும் - அரத்தின் கூர்மைபோலும் கூர்மையை உடையாரேயாயினும், மரம் போல்வர்-ஓரறிவிற்றாய மரத்தினை ஒப்பர்.

அரம் ஆகுபெயர். ஓரறிவு ஊற்றினை அறிதல். உவமை இரண்டனுள், முன்னது தான் மடிவின்றித் தன்னையுற்ற பொருள்களை மடிவித்தலாகிய தொழில்பற்றி வந்தது; ஏனையது விசேட அறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. அவ்விசேட அறிவிற்குப் பயனாய மக்கட்பண்பு இன்மையின், அதுதானும் இல்லை என்பதாயிற்று.

பரிப்:— அரத்தை ஒத்த கூர்மையை உடையராயினும் மக்கட் பண்பு இல்லாத மாந்தர் மரத்தை ஒப்பர் எ - று.

அரம்போலும் தனக்கு உள்ள கூர்மை பிறர்மாட்டு மடியாமையும் தான் பிறரைக கூரியர் ஆக்குதலும் ஆம். இஃது உணர்வு உடையார் ஆயினும் உணர்வு இல்லாத மரத்தை ஒப்பர் என்றது; என்னை உணர்வால் பயன் இன்மையின்.

பரிதி:— கல்வியின் கூர்மை அரம்போல ஆனாலும் மறம்போல்வர் மக்கட் பண்புடையரல்லாதவர். எ -று.

காளிங்:— அரம்போலும் யாதானும் ஒரு பொருளை வகுத்து உள்புக்கு அறியும் அறிவின் கூர்மையை உடையராயினும் யாதும் அறியாத திண்ணிய உருபினதாகிய மரம் அனையர்; யார் எனின் மக்கள் வடிவினராய் வைத்தும் அம்மக்கட் பண்பாகிய மரபு இல்லாதவர்கள் எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

“ பார்தட் பகைமுயலைப் பற்றுதலான் என்றுமதி
தேர்ந்துமதை நீக்கான் சிவசிவா - கூர்ந்த.” —சிவசிவ. 100.

998. நண்பாற்று ராகி நயம்இல செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை (அ)

உரைப்பகுதி :

பரிமே:— நண்பு ஆற்றாராகி நயம் இல செய்வார்க்கும் - தம்மொடு நட்பினைச் செய்யாது பகைமையைச் செய்தொழுகுவார்மாட்டும், பண்பு ஆற்றாராதல் கடை - தாம் பண்புடையராய் ஒழுகாமை அறிவுடையார்க்கு இழுக்காம்.

நயம் - ஈரம். சிறப்பும்மை அவர் பண்பாற்றாமைக்கு இடனுதல் தோன்றநின்றது. அதனைச் செய்யின் தாமும் அவர்தன்மையராவர் என்பார் கடை என்றார்.

பரிப்:— நண்பு செய்யமாட்டாராய் விருப்பம் இல்லாதவற்றைச் செய்வார்க்கும் குணமாயின செய்யாராதல் குணம் உடையார்க்கு இழிவு எ - று.

குணம் செய்யாமை இன்னா செய்தல் ஆம். ஆதலால் பிறர் வருத்தத்திற்குப் பரியாமையால் வரும் குற்றம் கூறிற்று.

பரிதி:— சிநேக மற்று பொல்லாப்பே செய்தாராயினும் அவர்களுக்கு நல்லதே செய்யாதான் கடைசி எ - று.

காளிங்:— உலகத்து மக்கட் பண்பு உடையோர் தம்மொடு நட்புச் செய்தற்கு ஒல்லாருமாகி ஒழுக்கக்கேடே செய்து ஒழுகுவார்க்கும் தாம் தமக்கு இயல்பாகிய மரபினைச் செய்யாராதல் சாலக் கடை. எனவே ஈண்டும் தம் பண்பினர் ஆதலே தலை என்பது பொருள் ஆயிற்று எ - று.

999. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— நகல் வல்லர் அல்லார்க்கு - பண்பின்மையான் ஒருவரோடும் கலந்து உள்மகிழ்தல்மாட்டாதார்க்கு, மாயிரு ஞாலம் பகலும் இருட்பால் பட்டன்று - மிகவும் பெரிய ஞாலம் இருளில்லாத பகற்பொழுதினும் இருளின்கண் கிடந்ததாம்.

எல்லாரோடும் கலந்தறியப் பெருமையின் பண்பு இல்லார்க்கு உலகியல் தெரியாது என்பார், உலகம் இருளின்கட்பட்டது என்றார். பாழ்பட்டன்றிருள் என்று பாடம் ஓதி, இருள் நீங்கிற்றன்று என்று உரைப்பாரும் உளர்.

பரிப்:— எல்லாரோடும் கூடி இருந்து நகுதலைச் செய்யமாட்டா தார்க்குப் பெரிய உலகம் பகற்பொழுதும் இருளின்பாற் பட்டது எ - று

எனவே இவனும் அறியான்: அறிவிப்பாரும் இல்லை என்றவா றாயிற்று. இது கலந்து ஒழுகாமையால் வரும் குற்றம் கூறிற்று.

பரிதி:— தீவினைப்பயன் வந்தால் சிரித்து இதற்கெல்லாம் நான் கலங்கேன் என்று சொல்லமாட்டாதார்க்குப் பகலும் இருளாகத் தோன்றும் எ - று.

காளிங்:— யாவர்மாட்டும் கன்றிச் சேறல் மரபு அன்று என்று கருதி எஞ்ஞான்றும் இனிது ஒழுகுதல் மாட்டாதார் யாவர்? மற்று அவர் தமக்கு மிகவும் பெரிய உலகமானது பகலுங்கூட இருளின்பாற் பட்டது ஆம்: எனவே மக்கட் பண்பு இல்லாதவர்க்கு இவ்வுலக நீதி யாதும் தெரியாது இருண்டே கிடக்கும் என்பது பொருள் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மாயிரு ஞாலம் - மிக்வும் பெரிய ஞாலம்.

குறிப்பு:

உலகியலாவது பலரோடு கலந்து பழகுதலே. அஃது இலார்க்குப் பகலும் இருளாய் அறிவைமயக்கி நிற்கும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

1000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
*கலந்தீமை யால்திரிந் தற்று. (௧0)

உரைப்பகுதி:

பரிமே:— பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம் - பண்பில் லாதவன் முன்னை நல்வினையான் எய்திய பெரிய செல்வம் அக்குற்றத்தால்

* 'கைதீமை' பரிதியார் பாடம்.

ஒருவற்கும் பயன்படாது கெடுதல், நன் பால் கலந்தீமையால் திரிந்தற்று - நல்ல ஆன்பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெட்டாற்போலும்.

கலத்தீமை என்பது மெலிந்துநின்றது. தொழிலுவமமாகலின் பொருளின்கண் ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது. படைக்கும் ஆற்றல் இலனுதல் தோன்றப் பெற்ற என்றும், எல்லாப்பயனுங்கோடற்கு ஏற்ற இடனுடைமைதோன்றப் பெருஞ்செல்வம் என்றும் கூறினர். அச்செல்வமும் பயன்படாது என்ற இதனன் வருகின்ற அதிகாரப்பொருண்மையும் தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்கு பாட்டானும் அஃது இல்லாரது இழிவு கூறப்பட்டது:

பரிப்:— குணம் இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம் நல்ல பால் கலத்தின் தீமையால் கெட்டாற்போலத் தனக்கும் பிறர்க்கும் இன்பம் பயவாது கெடும் எ - று.

இது பகுத்து உண்ணுமையால் வரும் குற்றம் கூறிற்று.

பரிதி:— பண்பில்லாதான் செல்வம் கனம்பெறப் பெற்றாலும் கெடும். அது எப்படியென்னில் பலர் கையில் பொல்லாங்கினலே பால் கெட்டாற்போல எ - று.

காளிங்:— உலகத்துப் பண்பு கேடன் ஆனவன் பெற்றது ஓர் பெருஞ் செல்வமானது எத்தன்மைத்தோ எனின், மூங்கிரைப் பாலினும் நன்பால் ஆவது ஆன்பால் அன்றே? மற்று அதுதான் ஒரு கலத்தினது குற்றத்தினல் தன் உருபு திரிந்த அத்தன்மைத்து: எனவே இவன் ஈட்டிய பொருளும் யாதும் ஒரு நன்மை இன்றிக் கெட்டுவிடும் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— கலந்தீமை - செல்வந்தகைத்து என்பது போலும். செல்வம் அக்குற்றத்தால் ஒருவர்க்கும் பயன்படாது, கெடுதல் என்று உரைத்துத் தொழிலுவமையாதலின் பொருள்களின்கண் ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது என்றார்.

முதுமொழிவெண்பாக்கள் :

"உன்பணிக்கென் றோதிநல்காச் செல்வம் உததியுறத்
துன்பமுற்றார் நால்வணிகர் சோமேசா - அன்புமிகும்."

—சோமேசர். 100.

குறிப்பு :

செல்வம் பால். பண்பிலான் கலம். கலத்தின் தீமையால், உணவும் மருந்தும் ஆகும் பால் திரிந்து விஷமானாற்போல செல்வமும் இவன் சேர்க்கையால் தீமையே செய்யும் என்பதாம். செம்பின்கலத்தில் பால் வையார் என்றதும் இப்பொருட்டு.

தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— எண்பதம், அன்புடைமை, உறுப்பு, நயனொடு, நகை, பண்புடையார், அரம்போலும், நண்பாற்றார், நகல்வல்லர், பண்பிலான்.

மணக்:— ... ...

பரிதி:— பண்புடையார், அன்புடைமை, நகை, நயனொடு, நண்பாற்றார், பண்பிலான், அரம்போலும், உறுப்பு, நகல்வல்லர், எண்பதம்.

காளிங்:— பண்புடையார், அரம்போலும், நயனொடு, நண்பாற்றார், நகல்வல்லர், உறுப்பு, பண்பிலான், அன்புடைமை, நகை, எண்பதம்.

101. நன்றியில்செல்வம்.

தொகுப்புரை:

[வீடு நிறையப் பொருளைத் தேடிவைத்தும் உண்ணாதவன் இறந்தவனே! அவன் செய்வது ஒன்றும் இல்லை. எல்லாம் பொருளால் முடிந்துவிடும் என்று ஒருவற்கும் உதவாமல் சேர்த்துவைக்கும் உலோபிக்குப் பேய்ப்பிறப்பேயுளதாம். பணம் சேர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு புகழை விரும்பாதவர்கள்பிறப்பு நிலத்திற்குச் சுமை. ஒருவராலும் விரும்பப்பெறாதவன் எச்சம் என்று எதனை எண்ணுமோ! பிறர்க்குக் கொடுக்காமலும், தான் அனுபவிக்காமலும் இருப்பவன் செல்வம் கோடிகோடியாக அடுக்கிவைத்திருந்தாலும் ஆவது என்ன? தானும் அனுபவியாமல், பிறருக்கும் கொடுக்காமல் இருப்பவன், செல்வத்திற்கே ஒரு நோய் போல்வான். வறியர்க்கு ஈயாதான் பெருஞ்செல்வம் அழகான பருவப்பெண் வாழா வெட்டியாய் இருந்ததுபோலாம். பலரால் விரும்பப்படாதவன் பெருஞ்செல்வ மானது நடுவூருள் நச்சுமரம் பழுத்ததுபோலாம். சுற்றத்தையும் வெறுத்து, அன்பு செய்யாது, தன்னையும் மிகவருத்தி, வறியார்க்கீதலாகிய அறத்தையும் செய்யாமல் சேர்த்த பொருளால் பயனடைவார் வேறு சிலர். புகழ்பெற்ற செல்வர்களின் சிறிய வறுமை மேகம் வறண்டதுபோலாம்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது ஈட்டியார்க்கும் பிறர்க்கும் பயன்படுதல் இல்லாத செல்வத்தினது இயல்பு. உடையானது குற்றம் செல்வத்தின்மேல் ஏற்றப்பட்டது. அதிகாரமுறைமை மேல் தோற்றுவாய் செய்தவதனால் பெறும்.

மணக்:— நன்றியில்செல்வமாவது அறத்தையும் இன்பத்தையும் பயவாத செல்வத்தின் இயல்பு கூறுதல். இது பண்பிலாதார்க்கு உளதாவ தொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— நன்றியில் செல்வமாவது தானும் புசியான் பிறருக்கும் ஈயான் செல்வம் நிலையில்லை எ - று.

1001. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில். (க)

உரைப்பகுதி :

பரிமே:— வாய் சான்ற பெரும்பொருள் வைத்தான் அஃது உண்ணான் - தன் மனையகலமெல்லாம் நிறைதற்கு ஏதுவாய பெரும்பொருளை ஈட்டிவைத்து உலோபத்தால் அதனை உண்ணாதவன், செத்தான் செயக் கிடந்தது இல் - உளனாயினும் செத்தானாம், அதன்கண் அவனால் செயக் கிடந்ததோர் உரிமை இன்மையான்.

வைத்தான் என்பது முற்றெச்சம். உண்ணுதல் அதனான் ஐம் புலன்களையும் நுகர்தல். வாய்சான்ற பெரும்பொருளை வைத்தான் ஒருவன் அதனை உண்ணாது செத்தவழி அதன்கண் அவனால் செயக்கிடந்ததோர் உரிமை இல்லையாகலான், வையாது பெற்றபொழுதே நுகர்க என்று உரைப்பினும் அமையும். இதற்குச் செத்தான் என்பது எச்சம். இதனால் ஈட்டியானுக்குப் பயன்படலின்மை கூறப்பட்டது.

மணக்:— இடம் நிறைந்த பெரும்பொருளை ஈட்டிவைத்தா னொருவன் அதனை நுகரானாயின், செத்தான்; அவன் பின்பு செய்யக் கிடந்தது யாதும் இல்லை எ - று

இஃது ஈட்டினானாயினும் தான் ஒருபயனும் பெறான் என்றது.

பரிதி:— அறஞ்செய்யான்; தான் உண்ணான்; புதைத்து வைத்துச் செத்தான் அதில் என்னபயன்? தான் உள்ளபோதே தன்மம் செய்து உண்ணக்கடவன் எ - று.

காளிங்:— வாய்ப்பு அமைந்த பெரும்பொருள் ஈட்டி வைத்தான் யாவன்? அவன் அதுகொண்டு அனுபவியானாகில், அவன் செத்தவனே என்பதனால் அவன் வேறு நடைப்பிணமே: என் எனின் பிணமும் தான் அறிந்து ஒன்று செய்யப்படுவது ஓர் செய்தி இல்லை; இவனும் அன்னன் ஆகலான் இவன் தன் குறிப்பினால் ஒரு செய்தி செயக் கிடந்தது இல்லை எ - று.

மேற்கோள்பகுதி:

யா - வி::— இயற்சீரும் உரிச்சீரும் விரவிவந்த குறள் வெண் பாவிற்கு மேற்கோள்: (சூ. 15.)

இயற்சீர்நின்று இயற்சீரொடு விகற்பித்துவந்த சிறப்புடை இயற்சீர் வெண்டளைக்கு மேற்கோள். (சூ. 18 உரை.)

ஒப்புமைப்பகுதி:

"கொடுத்தலும் துய்த்தலும் தேற்றா விடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் இல்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் துய்க்கப் படும்." —நாலடி. 274.

"வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம் - தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப அதுஅன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம்." —பழ. நா.

"படரும் பிறப்பிற்கொன் றியார் பொருளைத்
தொடரும்தம் பற்றினால் வைத்திறப் பாரே
அடரும் பொழுதின்கண் இட்டுக் குடரொழிய
மீவேலி போக்கு பவர்." —ஷை.

"வைத்தப் பொருளைத் தான்நுகரான் வழங்கான் இருந்தும் செத்தானே
செத்த பின்னர் என்செய்வான் தீயார் கொள்வர் ஈட்டுதலான்
மெத்தம் வருத்த மேயன்றி வேறொன் றில்லை யாதலினால்
பொத்தும் வெறுக்கை நன்றியுறல் புசித்து வழங்க லேயாகும்."
—விநா. அரசி. 148.

குறிப்பு:

வாய் - இடம் என்பர் பரிமேலழகர். வாய்ப்பு என்பர் காளிங்கர். இறந்தானது கருவி கரணங்கள் செயலற்றுப்போதலின் அவனும் உண்ணானும் ஒப்பு என்றார். பரிப்பெருமாள் நுகராது பொருளைத் தேடிவைத்து இறந்தவன் அப்பொருளைக்கொண்டு செத்தபின்பு செய்யக்கிடந்தது என்ன என்பர். இதனையே உரைப்பினும் அமையுமென வேறு உரையாக உரைத்தார் பரிமேலழகர்.

—தொகுப்பாசிரியர்.

1002. பொருளானாம் எல்லாமென் றீயா திவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— பொருளான் எல்லாம் ஆம் என்று - பொருளொன்றும் உண்டாக அதனால் எல்லாம் உண்டாம் என்றறிந்து அதனை ஈட்டி, ஈயாது இவறும் மருளான் - பின் பிறர்க்கு ஈயாது பற்றுள்ளஞ்செய்யும் மயக்கத்தாலே, மாணாப் பிறப்பு ஆம் - ஒருவனுக்கு நிறைதலில்லாத பேய்ப் பிறப்பு உண்டாம்.

இருமையினும் எய்தும் இன்பங்கள் பலவும் அடங்க எல்லாம் என்றும், ஈட்டுதற்கு முன்னுண்டாய அறிவு பின் மயங்குதலின் மருள் என்றும், பொருளுண்டாயிருக்கப் பிறர்பசி கண்டிருந்த தீவினைபற்றி உணவுகள் உளவாயிருக்கப் பசித்துவருந்தும் பிறப்பு உளதாம் என்றும் கூறினார்.

மணக்:— பொருளினாலே எல்லாச்சிறப்பும் எய்தலாம் என்று பிறர்க்கு யாதொன்றும் ஈயாது உலோபம் செய்கின்ற மயக்கத்தினாலே மாட்சிமையில்லாத பிறப்பு உண்டாம் எ - று.

இது தீக்கதியுள் உய்க்கும் என்றது.

பரிதி:— பொருளினாலே தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் எல்லாம்; இதன்றியில் ஈயாத குணத்தினாலே பிறப்பு உண்டாம் எ - று.

காளிங்:— நாம் படைத்த பொருளானே உள ஆம் நமக்கு எல்லாநன்மையும் என்று இங்ஙனம் கருதிப் பிறர்க்கு ஈயாது உலோபிக்கும் அதி மருட்சியானே உளதாம்மாட்சி இல்லாத பிறப்பு; எனவே இதனான் நரக யோனியும் திருக்கும் பிறவும் ஆகிய கடையான பிறப்பு உளதாம் இவர் ஈட்டிய பொருள் வெறும் பாவப் படைப்பு ஆகலான் எ - று.

மேற்கோள்பகுதி:

தெய்வச்:— இவறு என்பது லோபம் குறித்துவந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 391.)

குறிப்பு:

எல்லாம் என்றது - அறனீனும் இன்பமும் ஈனும் என உணர்த்தப்பெற்ற எல்லாவற்றையும்.

—தொகுப்பாசிரியர்.

1003. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. (ங.)

உரைப்பகுதி :

பரிமே:— ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர் தோற்றம் யாம் பிறரின் மிக ஈட்டுதும் என்று பொருளினது ஈட்டல் மாத்திரத்தையே விரும்பி அதன்பயனாய புகழை விரும்பாத மக்களது பிறப்பு, நிலக்குப் பொறை - நிலத்திற்குப் பாரமாம் அத்துணையே.

இசை இருமைக்கும் உறுதியாய அறமாகலின் ஈகையான் அதனையே வேண்டல் செய்யாது ஈட்டல் துன்பத்தையும் காத்தல் துன்பத்தையும் வேண்டிய அறிவின்மைபற்றி, நிலக்குப்பொறை என்றார். பிறப்பு என்றது அதற்குரிய உடம்பினை.

மணக்:— பொருளீட்டுதலை விரும்பிப் புகழை விரும்பாத மாந்தர், தாம் பிறந்த நிலத்துக்குப் பாரமாவர் எ - று.

இஃது இவர் பிறப்பதினும் பிறவாமை நன்று என்றது.

பரிதி:— கீர்த்தியும் தானமும் கிருபையும் இல்லாதவர் நிலத்திற்குப் பாரம் எ - று.

காளிங்:— இங்ஙனம் பொருள் ஈட்டம் காரணமாக உலோபித்துப் புண்ணியதானம் புகழினை விரும்பாத மக்கட் பெரும் பாவியரானவர் இவ்விடத்து வந்து உதிக்கின்றது எல்லாம் இப்பூமிக்கு ஒரு பாரமாம் இத்துணை எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தோற்றம் - பிறப்பதற்குரிய உடம்பு.

முதுமொழிவெண்பாக்கள்:

"மாழ்கினிதி நல்காநால் வாணிகர்மாண் டார்கடலுள்
மூழ்கினிதி யோடு முருகேசா - வாழ்வுமிக." —முருகேசர். 101.

குறிப்பு:

ஈட்டம் இவறி - ஈட்டுதல் ஒன்றே குறியாகக்கொண்டு உலோபித்து. 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை' என்றாராதலின் ஈயாத இவறுதல் இசை வேண்டாமைக்குக் காரணமாயிற்று. இசை இருமைக்கும் உதவுவது. இதனை 'நிலவரை நீள்புகழாற்றின் புலவரைப் புத்தேளுலகு போற்றாது' என்பதனாலும் அறியலாம்.

—தொகுப்பாசிரியர்.

1004. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன். (௪)

உரைப்பகுதி:

பரிமே:— ஒருவரால் நச்சப்படாதவன் - ஒருபொருளும் ஈந்து அறியாமையின் ஒருவராலும் நச்சப்படுதல் இல்லாதவன், எச்சம் என்று என் எண்ணுங்கொல் - தான் இறந்தவழி ஈண்டு ஒழிந்து நிற்பதாக யாதனைக் கருதுமோ.

ஈண்டு ஒழிந்து நிற்கும் புகழ் ஈவான்மேலன்றி நில்லாமையின் அவனுக்கு அதனோடு யாதும் இயைபு இல்லை என்பார், என் எண்ணும் கொல்லோ என்றார். ஓகாரம் அசை. இவை மூன்று பாட்டானும் பிறர்க்குப் பயன்படலின்மை கூறப்பட்டது.

மணக்:— ஒருவராலும் நச்சப்படாத செல்வம் உடையவன், தனக்குப் பின்பு நிற்பதென்று யாதினை எண்ணுமோ? எ - று.

இது புகழில்லையாம் என்றது.

பரிதி:— எச்சம் என்று எண்ணவும் வேண்டுமோ? ஒருவருக்கும் கொடாத பாவியை எ - று.

காளிங்:— இங்ஙனம் யாவராலும் யாதும் ஒன்றும் நச்சப் படாதவனிடத்துக் குலமும் உருபும் குணமும் ஒழுக்கமும் புதல்வரும் பொருளும் பூமியும் என்னும் எவ்வெச்சமும் இவனிடத்து இவை எல்லாம் உளவேனும் ஒன்றும் உளது என்று கருதார் உலகத்தோர் ஒரு பயன் இல்லாமையினன் எ - று.

குலம், உருபு, குணம், ஒழுக்கம், புதல்வர், பொருள், பூமி என்னும் எச்சத்தினுள்ளும் இவன்கண் உள்ளதாம் எச்சம் இது என்று என் எண்ணுங்கொலலோ இவ்வுலகம்: எனவே யாது ஒன்றும் உளதாக எண்ணாது என்பது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நச்சப்படாதவன் - விரும்பப்படாதவன்.

குறிப்பு :

எச்சம் - ஒருவன் இறந்தபிறகும் ஒழிந்துநிற்பதாய புகழ் என்பர் பரிமேலழகர். குலம் முதலாகிய எச்சம் என்பர் காளிங்கர்.

—தொகுப்பாசிரியர்.

1005. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினும் இல். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு - பிறர்க்கு ஈவதும் தாம் நுகர்வதுமாய இரண்டு செய்கையும் உடையரல்லாதார்க்கு, அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - பலவாக அடுக்கிய கோடிபொருள் உண்டாயினும் ஒன்றும் இல்லை.

இன்பத்தினும் அறம் சிறந்தமையின், கொடுத்தல் தொழில் முற்கூறப்பட்டது. அடுக்கியகோடி என்றது ஈண்டு எண்ணப்படும் பொருள் மேல் நின்றது. ஒன்றுமில்லார்போலப் பயனிரண்டும் இழத்தலின், இல் என்றார்.

மணக்:— பிறர்க்குக் கொடுத்தலும் தாம் நுகர்தலும் இல்லாதார்க்குப் பலகோடி பொருள் உண்டாயினும் அவை இன்மையோடு ஒக்கும் எ - று.

பரிப்:— இது நல்கூர்ந்தாரோடு ஒப்பர் என்றது.

பரிதி:— தானும் உண்டு தன்மமும் செய்யாதவன் திரவியம் கோடி உண்டாயினும் இல்லை எ - று.

காளிங்:— ஒருவர் பொருள் பெற்றதனால் பயன் யாதோ எனின் நாள்தோறும் பிறர்க்கு உபகரித்தலும் தாம் உண்டு இன்பம் உறுதலும் அன்றோ? அதனால் அவை இரண்டும் இல்லாத அரும்பாவிக்கு அளவு இறந்த கோடி பொருள் உண்டு ஆயினும் யாதும் இல்லை என்பதே துணிபு எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அடுக்கியகோடி என்பது எண்ணப்படும் பொருள் மேல் நின்றது. "ஐந்தவித்தான் ஆற்ற" லும் (26) அது.

முதுமொழிவெண்பாக்கள்:

"செல்வ மிகப்படைத்தும் தியாகபோ கங்களில்லார்
செல்வமென்ன செல்வம் தினகரா - செல்வம்." —தினகர. 105.

குறிப்பு:

செல்வத்துப்பயனே ஈதல் ஆதலின் கொடுப்பது இல்லாதார்க்கும் இழந்தானென்று எண்ணப்படுமாதலின் தான் துய்ப்பது இல்லாதார்க்கும் கோடி இருந்தும் பயன் இல்லை என்றார். ஈத்துவக்கும் இன்பம் தாம் துய்க்கும் இன்பத்தைவிடச் சிறந்ததாகலின் "சிறப்புடைப்பொருளை முந்துறக் கிளத்தல்" என்ற தந்திர உத்தி பற்றி முற்கூறப்பட்டது. கொடுப்பது பிறர்நலம் பேணுதல். துய்ப்பது தன்னலம் பேணுதல். கொடையும் பிறவிக்குணமாதலின் ஈயாதான் என்னாது ஈதல் இயல்பிலாதான் என்றார். ஏதந் தருவதாகிய நோயை ஏதம் என்றது காரியவாகுபெயர்.

—தொகுப்பாசிரியர்.

1006. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்(று)
ஈதல் இயல்பிலா தான். (சு)

உரைப்பகுதி :

பரிமே:— தான் துவ்வான் தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பு இலாதான் - தான் நுகரானாய் அதன்மேலும் தகுதியுடையார்க்கு அவர் வேண்டியதொன்றை ஈதலியற்கை இலனாயினான், பெரும் செல்வம் ஏதம் - இரண்டும் செய்தற்கு இடனுடைத்தாய செல்வத்திற்கு ஒரு நோய்.

தகுதி - தானம் கோடற்கு ஏற்புடைமை. ஏதம் ஆகுபெயர். நுகரப் படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழிற்குரியதனை அன்றாக்கினமையின்,

நோய் என்றார். ஈதலியல்பு இலாதானது பெருஞ்செல்வம் அவனுக்கு ஈட்டல் காத்தல் முதலியவற்றால் துன்பமேயாம் என்று உரைப்பாரும் உளர். இவை இரண்டு பாட்டானும் அவ்விருமையும் உடன் கூறப்பட்டன.

மணக்:— தானும் துவ்வாது பிறர்க்கும் ஒன்று ஈயாத இயல்பினையுடையான் பெற்ற பெருஞ்செல்வம் குற்றமுடைத்து எ - று.

பரிதி:— தானும் புசியான் தக்கார்க்கு ஒன்றும் ஈயான்செல்வமன்றோ பெருந்துயரம் உறுவது எ - று.

காலிங்:— தானும் உண்ணாகித் தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பும் இல்லாதானிடத்து உள்ள பெருஞ் செல்வமானது பெரும் பாவத் திரள் என்பது பொருள் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"ஈட்டலும் துன்பம்மற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம் - காத்தல்
குறைபடில் துன்பம் கெடில்துன்பம் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்." —நாலடி. 280.

குறிப்பு:

பயன்படக்கூடியதொன்றைப் பயன்படுத்தாது ஒழிதலே நோயாதல்போல, தனக்கும் பிறர்க்கும் பயன்படுத்தக்கூடிய செல்வத்தைப் பயன்படுத்தாமை அதற்கு நோயாயிற்று. ஏதம் என்பதற்குத் துன்பம் என்பர் பரிமேலழகர். குற்றம் என்பர் பரிப்பெருமாள்.

—தொகுப்பாசிரியர்.

1007. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் - ஒரு பொருளும் இலராயினார்க்கு அவர் வேண்டியதொன்றனைக் கொடாதானது செல்வம் கொன்னே கழிதல், மிக நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று - பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றாளொருத்தி கொடுப்பார் இன்மையின் கொழுநன் இன்றித் தமியளாய் மூத்ததன்மைத்து.

நலம் வடிவின் நன்மையும் குணத்தின் நன்மையும் இரண்டும் ஒருங்கு பெறுதல் அரிதாகலின், பெற்றாள் என்றார். கொடுப்பாரும் கொளுநனுமேயன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியோடு உவமை கூறினமையின், தானும் ஏற்பானுமேயன்றிச் செல்வமும் பயனிழந்து கழியும் என்பதாயிற்று.

மணக்:— பொருளற்றார்க்கு யாதானும் ஒன்றைக் கொடாதவனுடைய செல்வம், மிக்க அழகினைப் பெற்றாளொருத்தி தமியளாய் மூதிர்ந்தாற்போலும் எ - று.

இது செல்வந்தானும் ஒருபயன் பெறாது என்றது.

பரிப்:— தமியள் மூத்தல் - தன்னைப் பிறர்க்கு ஈவார் இன்றித் தமியளாகி மூத்தல்.

பரிதி:— செல்வம் தேடிவைத்து அறஞ்செய்யாதவன் என்போலும் எனின், மிகவும் உருவ நலம்பெற்றவள் தனியேஇருந்து மூத்தற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— தம்மாட்டு ஒன்று அற்றார் ஆகிய வறியோர்க்கு ஒன்று உதவாதான் பெற்ற பெருஞ்செல்வமானது மிகநலம் பெற்றாள் கணவனொடு கலந்து இன்புறுதற்கு விதி இலளாகித் தானே தனியளாய் மூத்து இருந்த அத்தன்மைத்து: எனவே செல்வம் இருந்தும் இருந்திலன் என்பது பொருளாயிற்று எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— கொடுப்பாரும் கொள்வாரும் இன்றிக் குமரி இருத்தல் காண்க.

முதுமொழிவெண்பாக்கள்:

"எங்களிறை அன்பருக்கொன் றீயாமை யாற்பிறந்து
பங்கப் படத்துணிந்த பாதிவிருத் - தங்கிஎனும்."

—முதுமொழி. 150.

"செப்பும் இருநிதிகள் சேர்ந்தும் குபேரனுக்கு
எப்பொருளால் என்னும் இரங்கேசா - கைப்பொருள்."

—இரங். 101.

குறிப்பு:

மிகநலம் மிகுநலம் என்ற இரண்டு பாடம் உண்டு. அவற்றுள் உறுந் தோறும் உறுந்தோறும் ஒருகாலைக் கொருகால் மிகுவதாகிய நலத்தைக் கணவனோடு உறுமலே தமியளாய்க் கழிப்பாளை ஈயாதான் செல்வத்திற்கு ஒப்பித்தலின் வினைத் தொகையாகிய மிகுநலம் என்ற பாடமே பொருளாழம் உடையது.

—தொகுப்பாசிரியர்.

1008. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— நச்சப்படாதவன் செல்வம் - வறியார்க்கு அணியனு யிருந்தும் ஒன்றும் கொடாமையின் அவரான் நச்சப்படாதவன் செல்வம் எய்துதல், ஊர் நடுவுள் நச்சுமரம் பழுத்தற்று - ஊரிடை நிற்பதோர் நச்சு மரம் பழுத்தாற்போலும்.

நடுவூர் என்பது பின்முன்னுகத் தொக்க ஆரும் வேற்றுமைத் தொகை. அண்மையுடைமைகளான் பயனில்லை என்பதாம்.

மணக்:— பிறரால் ஆசைப்படாதவனது செல்வம், ஊர் நடுவுள் பழுத்து நிற்பதொரு நச்சுமரம் பழுத்ததன்மைத்து எ - று.

இது நச்சுமரப்பழம், தமது ஆசையாலே தின்பாருண்டாயின், அவரைக் கொல்லும் என்றது.

பரிதி:— பிறர் நச்சப்படாதவன் செல்வம் நடுவூரில் எட்டிமரம் பழுத்ததற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— தன்மாட்டு வந்து எமக்கு இது வேண்டும் என்று யாவராலும் விரும்பப்படாத அரும்பாவி பெற்ற பெருந்திருவானது எத்தன்மைத்தோ எனின், ஊர் நடுவாகிய மன்றினுள் ஒரு மரம்பழுத்தால் மற்று அஃது யாவர்க்கும் பொது அன்றே: அங்ஙனம் பொதுப்பட நுகர் தற்கு உரிய மன்றினுள் நச்சு மரமாகிய காஞ்சிரை பெரிதும் பழுத்து நின்ற அத்தன்மைத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நடுவூர் - முன்பின்னுகத் தொக்கதொகை.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— பொருத்தமில் புணர்ச்சிக்கு மேற்கோள் காட்டி. 'ஊர் நடுவுள்' என்று உருபுபொருந்தலே முறை என்பர். (இ. கொ. 108.)

ஒப்புமைப்பகுதி:

" அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வம்
கருதும் கடப்பாட்ட தன்று." —நாலடி. 261.

முதுமொழிவெண்பாக்கள்:

" கல்வில் லுடையார் கருணைபெற மாட்டாது
வல்வினையின் பட்டழுந்தும் வாதாவி - வில்வலன்போல்."
—முதுமொழி. 151.

" நல்விசயன் கண்ணன்வர நன்மைபுரி யாமறையோன்
செல்வம்இருந் தென்னும் சிவசிவா - தொல்லுலகில்." —சிவசிவ. 101.

குறிப்பு:

அணுகுதற்கு எளியதாய் இருந்தும் நன்றாகப் பழுத்து இருந்தும் நச்சுமரம் பயன்படாமை மாத்திரமேயன்றி, தவறியுண்டாற்குக் கேடும் விளைத்தல்போல நச்சப் படாதான் செல்வம் ஆம் என்றதன் பொருளை நன்கு விளக்கியவாறு.

—தொகுப்பாசிரியர்.

1009. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— அன்பு ஒரீஇ - ஒருவன் கொடாமைப்பொருட்டுச் சுற்றத்தார் நட்டார்கண் அன்பு செய்தலை ஒழிந்து, தன் செற்று - வேண்டுவன நுகராது தன்னைச்செறுத்து, அறம் நோக்காது - வறியார்க்கு ஈதல் முதலிய அறத்தை நினைப்பதும் செய்யாது, ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர் - ஈட்டிய ஒள்ளிய பொருளைக் கொண்டுபோய்ப் பயன்பெறுவார் பிறர்.

பயனுய அறனும் இன்பமும் செய்துகொள்ளாதானுக்குப் பொருளால் உள்ளது ஈட்டல் துன்பமே என்பது தோன்ற ஈட்டிய என்றும், அவ்வழியினுள்ளார்க்கும் உதவாது என்பது தோன்றப் பிறர் என்றும் கூறினர்.

மணக்:— பொருள் தேடுங்கால் பிறர்மாட்டு அன்பு செய்தலையும் நீக்கி, அது தேடினுகிய தன்னைக் காத்தலும் இன்றி, அறத்தையும் செய்யாது தொகுத்த ஒள்ளிய பொருளைக் கொள்வார் பிறர் எ - று.

பரிப்:— இது நன்றியில் செல்வம் ஆவது இத்தன்மையது என்பதூஉம், அது பிறர் கொள்வர் என்பதூஉம் கூறிற்று. பிறர் என்றது தன் வழியில் உள்ளார் அல்லாதாரை.

பரிதி:— அன்பு நெறியைவிட்டுத் தன்மநெறியைவிட்டுத் தேடிய பொருள் தனக்காகாது பிறர்க்காம் எ - று.

காளிங்:— ஒருவன் தானும் உண்டு இனிது வாழாது தன்னையும் செறுத்து மற்றும் வறியார்மாட்டு ஓர் இரக்கம் இன்றி அதனுல் அறனையும் செய்யக் கருதாது தான் தொகுத்து வைத்த ஒள்ளிய பொருள் இனிக் கைக்கொள்வார் பிறர்: எனவே தான் தன் பயன் இழந்தான் என்பது பொருள் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்." —கொன்றை. 4.

குறிப்பு:

தேனீயைப்போல இழத்தலின் இங்ஙனம் கூறினர்.

—தொகுப்பாசிரியர்.

1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. (கo)

உரைப்பகுதி:

பரிமே:— சீர் உடைச் செல்வர் சிறு துனி - புகழுடைத்தாய செல்வத்தினை உடையவரது நிற்குங்காலம் சிறிதாய வறுமை, மாரி வறங்கூர்ந்தனையது உடைத்து - உலகத்தையெல்லாம் நிலைநிறுத்தும் மேகம் வறுமை மிக்காற்போல்வதோர் இயல்பினை உடைத்து.

துனி - வெறுப்பு; அதனைச் செய்தலான் துனி எனப்பட்டது. யாவர்க்கும் பயன்பட்டார் அதனுன் வறியராயவழியும் அவ்வறுமை கடிதின் நீங்குதலின் பின்பும் செல்வராய்ப் பயன்படுவர் என்பது உவமையால் பெறப்பட்டது; படவே, நன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன் படாது என்பதாயிற்று. இதற்குச் சீருடைச்செல்வர் இரவலரோடு வெறுக் கும்நிலையில் வெறுப்பு மாரிவறங் கூர்ந்தனைய தன்மையை உடைத்து என அதிகாரத்தோடு பொருந்தாமை மேலும் ஓர் பொருள் தொடர்பு படாமல் உரைப்பாரும் உளர். இவை நான்கு பாட்டானும் அச்செல்வத்தது குற்றம் கூறப்பட்டது.

மணக்:— சீருடைய செல்வர் சிறுதுனியால் ஈயாதொழிதல், மாரி பெய்யாமை மிக்காற்போலும் எ - று.

மேற்கூறிய நன்றியில்செல்வமுடையாரன்றி நற்செல்வம் உடை யாரும் பிறர்க்கு ஈயாராயின், மழை பெய்யாதாயின் உலகம் துன்பமுறு மாறு போல அவர் துன்பமுறுவர் என்றது.

பரிதி:— சிறியார் பெரியோரிடத்திலிருந்து கொடுத்து பிரதாபிக் கிறது செல்வம் பொல்லாதான் கையிலேயிருந்து மிடைப்படுவது எதுக்கு ஒக்கும் மழைபெய்யாமல் உலகம் பார்ப்பதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— அருளும் அன்பும் குறியும் முதலிய சீர்மைப்பாட்டினை உடைய செல்வர் பிறர்மாட்டுத் தம்மால் யாவரும் வெறுத்தக்க சிறு துனி ஆகிய வறுமைவரின், அஃது எனைத்தோ எனின், உலகு இன்புறுதற்கு உரித்தாகிய மழை வறம் கூர்ந்தாற்போல அதனை உடைத்து: எனவே பின்னும் பின்னும் தடக்கு உளவழி எல்லாம் பிறர்க்கு உபகரித்தலே அவர்க்குக் கடன் எ - று.

உலகத்துச் சீர்மை உடையோர் தாம் பிறர்க்குச் செய்வன செய்தற்கு இயையாக்கால் பெரிதும் நாணுவார்: ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— வறங்கூர்தல் - வறுமைமிகுதல்.

முதுமொழிவெண்பாக்கள்

" எல்லாம் மறையலர்க்கீந் தேவறியன் போலானுன்
சொல்லாருங் கீர்த்திராகுச் சோமேசா - நல்லதே." —சோமேசர். 101.

குறள்வைப்புமுறை

பரிமே:— வைத்தான், பொருளானும், ஈட்டம், எச்சம். கொடுப்பதூஉம், ஏதம், அற்றூர்க்கு, நச்சப்படாதவன், அன்பொரீஇ, சீருடை.

மணக்:— அன்பொரீஇ, ஈட்டம், வைத்தான், அற்றூர்க்கு, நச்சப் படாதவன், எச்சம், பொருளானும், கொடுப்பதூஉம், சீருடை, ஏதம்.

பரிதி:— அன்பொரீஇ, வைத்தான், அற்றூர்க்கு, கொடுப்பதூஉம், ஈட்டம், பொருளானும், எச்சம், ஏதம், நச்சப்படாதவன், சீருடை.

காளிங்:— அன்பொரீஇ, ஈட்டம், நச்சப்படாதவன், எச்சம், ஏதம், பொருளானும், கொடுப்பதூஉம், அற்றூர்க்கு, வைத்தான்வாய், சீருடை.

102. நாணுடைமை.

தொகுப்புரை :

[இழிந்த காரியங்களைச் செய்யும்போது நாணுதலே நன்மக்கள் நாணம். ஏனைய நாணம் பெண்கள் நாணமே. உணவும் உடையும் பிறவும் எல்லார்க்கும்பொது. நாணமே நன்மக்கட்குச் சிறப்பு. உயிர் உடம்பைப் பற்றி நிற்பது. சால்புடைமை நாணைப்பற்றி நிற்பது. நன்மக்களுக்கு நாணமே அணியாம். அவையொழிந்த பெருமித நடை உலகோர்க்குப் பெரிய பிணிபோல்வதாம். தனக்கும் பிறருக்கும்வரும் பழிக்கு நாணுபவர்களே நாணத்திற்கு உறைவிடம் என்னும் உலகு. உயர்ந்தோர் நாணத்தையே வேலியாகக்கொள்வார்கள். உலகத்தை வேலியாகக்கொள்ளார். நாணத்திற்காக உயிரை விட்டாலும் விடுவரேயன்றி உயிருக்காக நாணத்தை விடார். பிறர் நாணும் காரியங்களுக்குத் தான் நாணானாயின் அவனைவிட்டு அறக்கடவுள்நாணிநீங்கும். ஒழுக்கம் தவறுமாயின் குடிப்பிறப்புமட்டும் அழியும். வெட்கமில்லாமை எல்லா நலங்களையும் அழிக்கும். வெட்கமில்லாதவன் வாழ்வு மரப்பாவை கயிற்றால் உயிர் உள்ளதாக நடிப்பதுபோலாம்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— மேற்சொல்லிய சால்பு பண்பு முதலிய குணங்களான் உயர்ந்தோர் தமக்கு ஒவ்வாத கருமங்களின் நாணுதல் உடையராந்தன்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— நாணுடைமையாவது அறம் பொருள் இன்பங்களில் பிறர் பழியாமல் ஒழுகுதல். இது பண்புடைமையின் பின் கூறற்பாலது; பண்பு இன்மையும் சேரச்சொல்ல வேண்டுதலின் பண்பின்மையாகிய நன்றியில் செல்வத்தைக்கூறி அதன்பின் கூறப்பட்டது.

பரிதி:— நாணுடைமையாவது நீதியல்லாதது கண்டால் நாணுதல் எ - று.

1011. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. (க)

உரைப்பகுதி :

பரிமே:— நாணுக் கருமத்தால் நாணுதல் - நன்மக்கள் நாணாவது இழிந்த கருமம் காரணமாக நாணுதல்; பிற திருநுதல் நல்லவர் நாணு - அஃதன்றி மனமொழிமெய்களது ஒடுக்கத்தான் வருவனவோ எனின், அவை அவரளவல்ல அழகிய நுதலினையுடைய குலமகளிர் நாண்கள்.

பிற குலமகளிர்நாண் என்றதனுன் ஏனையது நன்மக்கள்நாண் என்பதூம், நாணுதல் என்றதனுல் கருமத்ததிழ்வும் பெற்ரும். திருநுதல் நல்லவர் என்பது புகழ்ச்சிக்குறிப்பு. ஏதுப்பன்மைபற்றிப் பிற என்ருர். இனி அற்றமறைத்தல் முதலியன பொதுமகளிர் நாணேடு ஒக்கும் என்று உரைப்பாரும் உளர்; அவர்க்கு நாண் கேடுபயக்கும் என விலக்கப்பட்டமையானும், அவர்பெயரால் கூறப்படாமையானும் அஃது உரையன்மை அறிக. இதனுன் நாணினது இலக்கணம் கூறப்பட்டது.

மணக்:— தாம் செய்யும் வினையினுலே நாணுதல் நாணமாம்; அஃதல்லாத நாணம் அழகிய நுதலினுலே நல்லாராகிய கணிகையர் நாணத்தோடு ஒக்கும் எ - று.

மேற்கூறிய நாணம் எத்தன்மைத்து என்ருர்க்கு, இது கூறப்பட்டது.

பரிதி:— மனத்து ஒன்றும் நினையாமல் கருமப்படியே நாணுதல் அல்லாது நாணுதல் குலமகளைக் கண்டு பொதுமகள் நாணுதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— என்றும் தான் தீயகருமம் காரணமாக நாணுதலே நாணுவது: மற்று ஏனைய எல்லாம் மகளிர் நாணும் நாணும்: எங்ஙனம் எனில், ஆண் மகன் ஆகியும் தகுவதற்கு ஒதுங்கின் அவனேடு பெண்ணேடு வாசி இல்லை என்பர் பலரும்: அதனுல் அதற்கு நாணுதல் ஆண்மைப்பாடு என்பது பொருள் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— திருநுதல் நல்லவர் என்பது புகழ்ச்சிக் குறிப்பு. திருநுதல் - அழகியநுதல்.

ஒப்புமைப்பகுதி :

“இழிந்த தொழிலின் நாணுவதே எய்தற் கரிய நாணென்பர்
ஒழிந்த மனவாக் குடலொடுக்கம் ஒளிவாழ் நுதலார் நாணேயாம்.”
—விநா. அகசி. 149.

குறிப்பு:

ஆடவர் நாணத்திற்கும், குலமகள் நாணத்திற்கும் வேற்றுமை விளக்கிய வாறு. கணிகையர் நாணத்தோடு ஒக்கும் என்பர் மணக்குடவர் பரிப்பெருமாள் இருவரும். மானமுறும் வேசையரும் ஈனமுறுவார் ஆதலின் பொதுமகள் நாணுவள்

என்பது பொருந்தாதென்று காரணங்காட்டி மறுப்பர் பரிமேலழகர். காரியத்தோடு நாணுதலே நாணம்; காரியமின்றி நாணுதல் பொதுமகள் நாணம்போலப் போலி நாணமாம் என்பது பரிப்பெருமாள் கருத்துப்போலும். பொதுமகளிரும் காரியக்கேடு உறுந்துணையும் நாணத்தைக் கொள்ளாது தனது மகண்மையைக்காட்டி ஆடவரை வசீகரிக்க நாணத்தைப் படையாகப் பயன்படுத்துவர் என்பது ஆய்க.

—தொகுப்பாசிரியர்.

1012. ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறு அல்ல - ஊணும் உடையும் அவை ஒழிந்தனவும் மக்களுயிர்க்கு எல்லாம் பொது; மாந்தர் சிறப்பு நாணுடைமை - நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே, அவையல்ல.

ஒழிந்தன - உறக்கமும் அச்சமும் காமமும். சிறப்பு - அவ்வுயிர்களின் வேறுபாடு. அச்சம் என்று பாடம் ஓதுவாரும் * உளர்.

மணக்:— உணவும் உடையும் ஒழிந்தனவும் புன்மக்களெல்லார்க்கும் வேண்டும்; தலைமக்களுக்கு விசேடமாக வேண்டுவது நாணுடைமை எ - று.

இது நாணம் வேண்டும் என்றது.

பரிதி:— தேவர்கதி மக்கள்கதி விலங்கின்கதி பட்சிகதி இவையெல்லாம் நவதாதுவினால் எடுத்த சரீரம்; அதில் மானிடர் விசேஷம்; அது எப்படி என்றால் நாணம் என்னும் மனப்பயம் உண்டாகில் எ - று.

காளிங்:— உணவின் உடையது அச்சம் உலகத்து உயிர்கட்கு எல்லாம் வேறுபாடு உடைய அல்ல: எனவே உணவின் குறைபாட்டுக்கு அஞ்சுவது ஓர் அச்சம் எவ்வுயிர்க்கும் ஒக்கும்: மற்று யாதோ மக்கள் வேற்றுமை எனின் தமது முறைமைக் குறைபாட்டிற்கு உள் அஞ்சி நாணுவது ஓர் நாணம் உடைமையே மக்கட் பிறந்தார்க்குச் சிறந்தது.

---

* காளிங்கர் பாடம்.

ஒப்புமைப்பகுதி :

" கழிந்து விடநாண் மண்கோடல் கருதார் நலமெல் லாம்வளர்ப்பார்
அழிந்து நாண்மற் றுயிர்வாழார் ஆவி யழிந்து நாணுள்வார்."

—விநா. அரசி. 149.

முதுமொழிவெண்பாக்கள் :

" இறையருளும் தென்னவன்பால் இந்திரன் வந்தன்று
குறைபடலும் நாணியது கூறின் - முறையன்றோ.' '—முதுமொழி. 152.

1013. *ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்*
நன்மை குறித்தது சால்பு. (ங)

உரைப்பகுதி :

பரிமே:— *உயிரெல்லாம் ஊனைக் குறித்த - எல்லா உயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனைவிடா; சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது - அதுபோலச் சால்பு நாண் என்னும் நன்மைக் குணத்தைத் தனக்கு நிலைக்களனாக்கொண்டு அதனைவிடாது.*

*உடம்பு என்பது சாதியொருமை. நன்மை: ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயன் எய்தாதவாறுபோலச் சால்பு நாணோடு கூடியல்லது பயன் எய்தாது என்பதாம். ஊனைக்குறித்த என்று பாடம் *ஓதுவாரும் உளர்.*

மணக்:— *பலவகை உயிரும் மேற்கூறிய எல்லாவற்றினும் உண்டியைக் கருதிற்று; அதுபோல, சால்பு நாணமாகிய நன்மையைக் கருதிற்று எ - று.*

இது சான்றோர்க்கு நற்குணங்கள் பலவும் வேண்டுமாயினும், இஃது இன்றியமையாது என்றது.

பரிதி:— *காயத்தை இடங்கொண்டு இருக்கும் உயிர்போலே நாண் என்னும் நன்மையைக் குறித்திருக்கும் சால்பு எ - று.*

காளிங்:— *தத்தம் உடம்பை வளர்த்தற்பொருட்டு ஊனை நத்தி வாழும் உயிர் அவை: அதுபோல மக்கட் பிறப்புத் தன்னிலும் உணர்வு*

**காளிங்கர் பாடம்.*

இலராகிய மக்கள் எல்லாம் ஒழுகுப: இனி அவ்வாறு அன்றி மற்றுத் தம் முறைமைக்கு ஒரு குறை வருதலை நாணுவது ஓர் நாண் என்று உரைக்கப் படும் நன்மையை வளர்த்தலைக் குறித்து ஒழுகுவர் உலகத்துச் சால்புடை மக்கள் எ - று.

1014. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்*கஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— சான்றோர்க்கு நாணுடைமை அணி அன்றோ - சான்றோர்க்கு நாணுடைமை ஆபரணமாம்; அஃது இன்றேல் பீடு நடை பிணி அன்றோ - அவ்வாபரணம் இல்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம்.

அழகுசெய்தலின் அணி என்றும், பொறுத்தற்கு அருமையின் பிணி என்றும் கூறினார். ஓகார இடைச்சொற்கள் எதிர்மறைக்கண் வந்தன. இவை மூன்றுபாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— சான்றோர்க்கு நாணுடைமையாவது அழகன்றோ? அஃது இல்லையாயின், பெரியநடை நோயன்றோ? எ - று.

இது சான்றோர்க்கு அழகாவது நாணுடைமை என்றது.

பரிதி:— நாணுடமையன்றோ மனிதர்க்கு ஆபரணம்; இந்த ஆபரணம் இல்லாதபோது பிணியன்றோ மதயானைபோல ரிஷபம்போல நடக்கிறநடை எ - று.

காளிங்:— நாண் உடைமை ஆகின்ற இது சான்றோர்க்கு அணிகலம் போல்வது ஓர் அலங்காரப் பண்பிற்று; அதனால் அஃது ஒருவர்க்கு இல் எனின் அவர் நடிக்கும் பெருமையும் ஒழுக்கமும் பெருந் துயரை விளைக்கும் பிணியாம் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அன்றோ என்பது இரண்டும் இடைச்சொல்; ஓகாரம் எதிர்மறைக்கண் வந்தது.

---

*'கஃதிலரேல்' காளிங்கர் பாடம்.

1015 பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்(கு)
உறைபதி என்னும் உலகு. (௫)

உரைப்பகுதி

பரிமே:— பிறர் பழியும் தம்பழியும் நாணுவார் - பிறர்க்கு வரும் பழியையும் தமக்குவரும் பழியையும் ஒப்பமதித்து நாணுவாரை, உலகு நாணுக்கு உறைபதி என்னும் - உலகத்தார் நாணுக்கு உறைவிடம் என்று சொல்லுவர்.

ஒப்பமதித்தல் - அதுவும் தமக்கு வந்ததாகவே கருதுதல். கருத்துடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வர் என்பதாம். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— பிறர்க்குவரும் பழியையும் தமக்குவரும் பழியைப் போல அஞ்சி நாணுபவர்களை நாணுக்கு இருப்பிடம் என்று சொல்லுவர் உலகத்தார் எ - று.

இது தம்பழிக்கு அஞ்சி நாணுதலேயன்றிப் பிறர் பழிக்கும் அஞ்சி நாணவேண்டும் என்றது.

பரிதி:— தன்குற்றமும் பிறர்குற்றமும் கண்டு நாணுவர் அன்றோ நாணமிருக்கின்ற மாளிகை எ - று.

காளிங்:— பிறர்மாட்டு ஒரு பழிகாணினும் தான் பெரிதும் கூசித் தன்மாட்டு ஒரு பழி உறினும் தான் பெரிதும் நாணிக் கழிவான் யாவன்? மற்று அவனை நாணுக்கு எல்லாம் நன்று ஆக உறையும் ஆசு என்று எடுத்து உரைப்பர் உலகத்தோர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரில் சிறல்லர் - முன்னைத்தம்
ஊழ்வலி உன்னிப் பழிநாணி உள்ளுடைவார்
தீய செயினும் சில." —நீதிநெறி. 76.

குறிப்பு:

இளிவரவு என்னும் சுவை, பழித்தான்கண் காணப்படினும் பிறன் கண் காணப்படினும் தனக்கு எய்துமாதலின் நாணுக்கு உறைபதி என்றார்.
—தொகுப்பாசிரியர்.

1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். (சு)

உரைப்பகுதி :

பரிமே:— மேலாயவர் - உயர்ந்தவர், வேலி நாண் கொள்ளாது - தமக்கு ஏமமாக நாணினைக் கொள்வதன்றி, வியன் ஞாலம் பேணலர் - அகன்ற ஞாலத்தைக்கொள்ள விரும்பார்.

பழிபாவங்கள் புகுதாமல் காத்தலின், வேலி என்றார். நாணும் ஞாலமும் தம்முள் மாறாயவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவைபுகுதும் நெறியாய ஞாலத்தினைக் கொள்ள விரும்பார் என்பதாம். மன்னும் ஓவும் அசை. நாணாகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பார் என்று உரைப்பாரும் உளர்.

பரிப்:— நாண் ஆகிய வேலியை அமைத்துக் கொள்வார்கள் அல்லது பெரிய உலகத்தினைப் பெறுதற்கு விரும்பார்கள் மேன்மக்கள் எ - று.

இது நாணம் அழிய வரும் பொருள் கொள்ளார் என்றது. இது பொருளினும் நாணம் சிறந்தது என்றது.

பரிதி:— நாணம் என்னும் வேலியிட்டு நீதியை நடத்தாதபோது பூமியில் பெரியோர்கள் எப்படி உளங்கொள்ளப் பெற்றார்கள் எ - று.

காளிங்:— தமது மேன்மைக்கு வரம்பாகிய நாணினை வேலி யாகக் கொள்ளாது மற்று இப்பரந்த ஞாலம் முழுதும் பேரினும் நாணம் இழப்பவரினும் வியன் ஞாலம் விரும்பலர் மேலாயவர் எ - று.

இனி மற்று இவ்வாறு நாணுச் சிறப்பு உடையம் என மக்கள் தாம் பிறந்த குடி முழுதும் பேணுதல் செய்யும் கூறுபாட்டினை உடையர் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை யதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள் :

"அந்தணற்கீந் தில்லினொடு நாணத்தனல்மூழ் கத்துணிந்தான்
முந்துபத்தி ராயு முருகேசா - நந்தலிலா."
—முருகேசர். 102.

1017. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர். (எ)

உரைப்பகுதி:

பரிமே:— நாண் ஆள்பவர் - நாணினது சிறப்பு அறிந்து அதனை விடாது ஒழுகுவார். நாணால் உயிரைத் துறப்பர் - அந்நாணும் உயிரும் தம்முள் மாறாயவழி நாண் சிதையாமற்பொருட்டு உயிரை நீப்பர்; உயிர்ப் பொருட்டு நாண் துறவார் - உயிர் சிதையாமற்பொருட்டு நாணினை நீக்கார்.

உயிரினும் நாண் சிறந்தது என்பதாம். இவை இரண்டு பாட்டானும் அவர்செயல் கூறப்பட்டது.

மணக்:— நாணுடைமைப்பொருட்டாக உயிரைத் துறப்பார்; உயிர்ப்பொருட்டாக நாணைத் துறவார், நாணம் வேண்டுபவர் எ - று.

இது நாண் உயிரினும் சிறந்தது என்றது.

பரிதி:— நல்லோர்க்கு ஒருபிழை வந்தகாலத்தில் உயிர் துறப்பர் அல்லது நாண் துறவார் எ - று.

காளிங்:— தமக்கு ஒருவாற்றான் ஒரு நாணக் கேடும் உளது ஆயின் அது காரணமாகத் தம் உயிரினையும் துறப்பது அல்லது உயிர் பேணுதல் பொருட்டாக நாணத்தை விடுத்து ஒன்றனை இயற்றார்: யார் எனின் நாணுதல் அறிந்து எப்பொழுதும் ஆண்டு வருகின்ற அறிவினர் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"நாணில் வாழ்க்கை பசித்தலில் துவ்வாது." —முதுமொழிக். 4 : 3.

முதுமொழிவெண்பாக்கள்:

"தக்கார்க் குயிரினுநாண் தக்கதன்றோ தண்தமிழெண்
திக்காரும் கோவைத் தினகரா - புக்கோடி." —தினகர. 106.

"புண்ணோ டுயிர்வாழ நாணியுயிர் போக்கினன்
துண்ணெனவே வாலிமுனம் சோமேசா - எண்ணியிடில்."
—சோமேசர். 102.

"வாவி புகுந்த வலம்புரித்தா ரோனுயிரை
ஈவனென மீண்டான் இரங்கேசா - பூவுலகில்." —இரங். 102.

1018. பிறர்நாணத் தக்கது தானுணா னாயின்
அறநாணத் தக்க துடைத்து. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— பிறர் நாணத்தக்கது தான் நாணானாயின் - கேட்டாரும் கண்டாரும் நாணத்தக்க பழியை ஒருவன் தான் நாணாது செய்யுமாயின், அறம் நாணத்தக்கது உடைத்து - அந்நாணாமை அவனை அறம் விட்டு நீங்கத்தக்க குற்றத்தினையுடைத்து.

தான் எனச் செய்வானைப் பிரிக்கின்றாராகலின், பிறர் என்றார். நாணோடு இயைபில்லாதானை அறஞ்சாராது என்பதாம்.

மணக்:— உயர்ந்தார் பலரும் நாணத்தகுவதொன்றனைத் தான் நாணாது செய்வனாயின், அவனை அறம் நாணியடையாது ஒழியும் தகுதி உடைத்தாம் எ - று.

இது நாணமில்லாதாரை அறம் சாராது என்றது.

பரிதி:— பிறர்கண்டு நாணத்தக்க ஒழுக்கத்திலே நடவாதபோது அவன்பால் அறம் என்னும் தர்மம் நாணிவாராது எ - று.

காளிங்:— தான் செய்த குற்றங்களைச் சான்றோர் கண்டு நாணி அஞ்சுமா போலத் தான் நாணான் ஆயின், தன்னை அறம் நாணத் தக்கது உடைத்து: எனவே அறம் முதலாகிய நாற்பெரும் பொருளுள் அறம் என்னும் பெரும் பொருளும் தன்னை அணுகா எ - று.

1019. குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாணின்மை நின்றக் கடை. (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— கொள்கை பிழைப்பின் குலம் சுடும் - ஒருவனுக்கு ஒழுக்கம் பிழைக்குமாயின் அப்பிழைப்பு அவன் குடிப்பிறப்பொன்றனையும் கெடுக்கும், நாணின்மை நின்றக்கடை நலம் சுடும் - ஒருவன்மாட்டு நாணின்மை நின்றவழி அந்நிலை அவன்நலம் யாவற்றையும் கெடுக்கும்.

நிற்றல் ஒருபொழுதும் நீங்காமை. நலம் சாதியொருமையாகலின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனம், என்று இவற்றான் வந்தன எல்லாம் கொள்ளப்படும். ஒழுக்க அழிவினும் நாணழிவு இறப்பத் தீது என்பதாம்.

மணக்:— ஒழுக்கம் தப்புமாயின், அத் தப்புதல் குலத்தினைச் சுடும்; அதுபோல, நாணின்மை நிற்குமாயின், தமது நலத்தினைச் சுடும் எ - று.

இது நலம் இல்லையாம் என்றது.

பரிதி:— குலங்கெடும் ஆக்கங்கெடும் பெருமைகெடும் நாணமில்லாக் கடை எ - று.

காளிங்:— தம் குலப் பண்பினைச் சுட்டுவிடும் அக்குலத்துக்கு ஏற்ற கோட்பாட்டைத் தாம் பிழைப்பர் ஆயின்; அதுபோல எல்லா நன்மையும் சுட்டு விடும் ஒருவர் உள்ளத்து நாணம் இல்லாமை நின்ற இடத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கொள்கை - ஒழுக்கம். இருவழியும் சுடுதல் - கெடுத்தல். ஒழுக்கம் வழுவினும் நாணழிபு இறப்பத் தீது என்பதாம்.

குறிப்பு:

"ஒழுக்கமுடைமை குடிமை" என்றாராதலின் ஒழுக்கம் கெடின் குடிமை அழிவதொன்றே உளதாம் கேடு. நாணின்மையால் நலமெல்லாம் அழியும் என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

1020. நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று. (௧௦)

உரைப்பகுதி :

பரிமே:—அகத்து நாண் இல்லார் இயக்கம் - தம் மனத்தின்கண் நாண் இல்லாத மக்கள் உயிருடையார்போன்று இயங்குகின்ற இயக்கம், மரப்பாவை நாணால் உயிர் மருட்டியற்று - மரத்தால் செய்த பாவை இயந்திரக் கயிற்றினைய தன் இயக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினால் போலும்.

கருவியே கருத்தாவாயிற்று. நாண் இல்லாத மக்களியக்கம் நாணுடைய பாவையியக்கம்போல்வது அல்லது உயிரியக்கம் அன்று என்பதாம். இவை மூன்று பாட்டானும் நாணில்லாரது இழிவு கூறப் பட்டது.

மணக்:— மனத்தின்கண் நாணமில்லாதார் இயங்குதல், மரப் பாவை கயிற்றினாலே இயங்கி உயிருள்ளதுபோல மயக்குமதனை ஒக்கும் எ - று.

இது நாணமில்லாதார் மக்களல்லர் என்றது.

பரிதி:— நாணமில்லாதவன் நட்பு எப்படி என்றால் மரப்பாவை கயிற்றினாலே விழிமருட்டி ஆடுதற்கு ஒக்கும் எ - று.

காலிங்:— தமக்குத் தகுவதனைச் செய்யாமைக்கும், தகாததனைச் செய்கைக்கும் நாணுவது அன்றே ஒருவர்க்கு நாணமாவது: மற்று அது தம் உள்ளத்து இல்லாதார் உளர்போல இயங்கித் திரிகின்ற இயக்கம் எத்தன்மைத்தோ எனின், மரத்தினான் மக்களைப்போலும் வடிவு பாவித்த பாவையானது ஊடு சென்று இயக்கும் கயிற்று வலியான் உயிருடை உருபு என்று தன்னையும் பிறர் மதிக்குமாறு அவர் மதியினை மருட்டிய அத்தன் மைத்து: எனவே இவரும் ஊழ்வலியினால் ஒரு மக்கள் உருபுபோல இயங்கித் திரியும் இத்துணை யல்லது அகத்து ஓர் உணர்வு இன்று என்பது பொருள் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மரப்பாவை நாணால் உயிர்மருட்டியற்று என்பது கருவியே கருத்தாவாயிற்று. "ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே." (தொல் - சொல். 1.) என்பதற்கும் நச்சினார்க்கினியர் இவ்வாறு உரைத்தார் என்க.

முதுமொழிவெண்பாக்கள்:

"சாரும் பதியிலராய்த் தாருவன மாதர்தமைச்
சேரஇறை சென்றான் சிவசிவா - பாரின்மிசை." —சிவசிவ. 102.

குறிப்பு:

நாண் - வெட்கம், கயிறு. நாணில்லார் நடப்பு பாவையாட்டம்போலும் என்பவர் பாவையும் கூட நாணாலே (கயிறு) ஆடுகிறது இவன் அதனையும் இழந்து ஆடுகிறான் என்ற நயம் அமையக்கூறியிருத்தல் காண்க.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— கருமத்தால், ஊணுடை, ஊனை, அணியன்றோ, பிறர்பழி, நாண்வேலி, நாணால், பிறர்நாணத், குலம்சுடும், நாணகத்து.

மணக்:— ஊணுடை, ஊனை, நாணால், அணியன்றோ, பிறர்நாணத், குலம்சுடும், நாணகத்து, நாண்வேலி, கருமத்தால், பிறர்பழி.

பரிதி:— ஊணுடை, ஊனை, அணியன்றோ, நாணகத்து, கருமத்தால், பிறர்பழி, குலம்சுடும், நாணால், பிறர்நாணத், நாண்வேலி,

காலிங்:— ஊணுடை, ஊனை, பிறர்நாணத், கருமத்தால், நாணகத்து, அணியன்றோ, பிறர்பழி, நாணால், குலம்சுடும், நாண்வேலி.

103. குடிசெயல்வகை.

தொகுப்புரை:

[மேற்கொண்ட காரியத்தை முடிக்காமல் விட்டுவிடேன் என்னும் பெருமையைக் காட்டிலும் சிறந்த பெருமையில்லை. முயற்சியும், அறிவுமாகிய இரண்டோடு கூடிய இடையறாக் காரியத்தால் ஒருவன் குடியுயரும். தான் பிறந்த குடியை உயர்த்துவேன் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் வரிந்து கட்டிக்கொண்டு உதவிசெய்யும். தன்குடிக்கேற்ற வினையைத் தாமதியாமல் செய்வார்கட்கு வினையின் பயன் முயற்சிக்காமலே தானே முடிவுறும். குற்றமில்லாமல் குடியை உயர்த்தி வாழ்பவனை உலகமே சுற்றமாகக்கொள்ளும். நல்ல ஆளுந் தன்மையாவது தான்பிறந்த குடியை ஆளுந் தன்மையதாக்கிக் கொள்வது. போரைத்தாங்குவது வீரர்கடமையானாற்போல குடியைத் தாங்குதல் குடிசெய்வான்மேலதாம். குடிசெய்பவர்கள் காலத்தைக் கருதக்கூடாது. மானத்தை எண்ணிச் சோம்பியிருப்பாராயின் குடிகெடும். குடும்பம் குற்றமே பொருந்தாதவண்ணம் பாதுகாப்பானது உடம்பு துன்பத்திற்கு உறைவிடமோ? முட்டுக்கொடுத்துத்தாங்கக்கூடிய நல்ல ஆளில்லாத குடியாகிய மரம் துன்பமாகிய கோடரி வெட்ட விழுந்துவிடும்.]

அதிகாரப்பொருள் :

பரிமே:— அஃதாவது ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்தலின் திறம். இது தாழ்வின்கண் நாணுதலுடையார்க்கு உளதாவதாகலின் நாணுடைமையின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— குடிசெயல் வகையாவது குடியோம்புதல் வேண்டும் என்று கூறுதல். இது நாணமுடையார் செயலாதலின், அதன்பின் கூறப்பட்டது.

1021. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில். (க)

உரைப்பகுதி :

பரிமே:— கருமம் செயக் கைதூவேன் என்னும் பெருமையின் - தன்குடி செய்தற்பொருட்டுத் தொடங்கிய கருமம்முடியாமையின் எண்ணிய கருமம் செய்தற்கு யான் கையொழியேன் என்னும் ஆள்வினைப் பெருமை போல, ஒருவன் பீடு உடையது இல் - ஒருவனுக்கு மேம்பாடு உடைய பெருமை பிறிதில்லை.

குடிசெய்தற்கு என்பது அதிகாரத்தான் வந்தது. பலவகைத்தாய கருமச்செயலான் செல்வமும் புகழும் எய்திக் குடி உயருமாகலின், பீடுடையது இல் என்றார். குடிசெய்தற் கருமமே நடத்தலால், தன் கருமஞ்செய்ய என்றும், பிறர்கருமஞ் செய்ய என்றும் உரைப்பாரும் உளர்; தன்கருமமும் அதுவேயாகலானும், பிறரேவல் செய்தல் தலைமை அன்மை யானும், அவை உரையன்மை அறிக.

மணக்:— ஒருவன் கை கருமஞ்செய்தலினாலே உண்ணேன் என்று சொல்லுகின்ற பெருமைபோலப் பெருமையுடையது பிறிது இல்லை எ - று.

பரிப்:— மேல் எப்பொழுதும் இடைவிடாமல் வினை செய்ய வேண்டும் என்றார்; அது பெரியோரால் செய்யல் ஆகுமோ என்றார்க்கு இதனின் மிகுத்தது ஓர் பெருமை இல்லை என்றது.

பரிதி:— என் உறவின் முறையார் கிளைபெருத்து வாழ, நான் அவர்களுக்குக் கொடாமல்இருக்க என்னும் பெருமையில் பெருமை இல்லை எ - று.

காளிங்:— ஒருவன் தன் குடிகளாம்படி எப்பொழுதும் அதற்கு ஏற்ற கருமம் செய்யவேண்டிப் பிறிது ஒன்றிற்கு அக்கை உதவேன் என்னும் இப்பெருமை போலப் பெருமையுடையது பிறிது இல்லை எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— கைதூவாமை - கையொழியாமை.

மேற்கோள்பகுதி:

இளம்:— இருமூன்று மரபின் ஏனோர் பக்கம்: இரு மூன்றில் வேளாளர்க்குரிய உழவு ஒழிந்த தொழிலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 74.)

ஒப்புமைப்பகுதி:

" எடுத்த கருமம் முற்றுமை எய்தின் முடிக்தே விடுவல்எனத்
தொடுத்த முயற்சி அறிவிரண்டில் தோலா துயர்வார் குடிசெய்வார்."
—விநா. அரசி. 150.

முதுமொழிவெண்பாக்கள்:

" சத்துருவை மாய்த்தான் பராசரன்தன் சந்ததியை
முத்திபதத் துய்த்தே முருகேசா - மெத்தில்" —முருகேசர். 103.

1022. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையான் நீளும் குடி. (உ)

உரைப்பகுதி :

பரிமே:— ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையான் - முயற்சியும் நிறைந்த அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினையும் உடைய இடையறாத கருமச்செயலால், குடி நீளும் - ஒருவன் குடி உயரும்.

நிறைதல் - இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி நிரம்புதல். ஆள்வினை மடிபுகுதாமற்பொருட்டு. ஆன்ற அறிவு உயர்தற்கு ஏற்ற செயல்களும் அவை முடிக்குந்திறமும் பிழையாமல் எண்ணுதற்பொருட்டு. இவை இரண்டு பாட்டானும் அச்செயற்குக் காரணம் கூறப்பட்டது.

மணக்:— முயற்சியும் நிரம்பின அறிவும் என்று சொல்லப் பட்ட இரண்டினாலும், வளருகின்ற வினையினாலும் குடி உயரும் எ - று.

பரிப்:— இஃது ஒரு வினையைச் செய்யுங்கால் நல்லதும் தீயதும் அறிய வேண்டுதலின் அறிவு வேண்டுமென்று கூறப்பட்டது. வளருகின்ற வினையாவது ஒரு வினையைச் செய்து முடித்தால் அவ்வளவிலே நின்று அமையாது பின்னும் ஒரு வினையைத் தொடங்குதல். மேல் குடி ஓம்ப வேண்டும் என்றார்: அஃது ஓம்பும் ஆறு என்னை என்றார்க்கு இது கூறப் பட்டது.

பரிதி:— உத்தியோகமும் அறிவுடைமையும் இந்த இரண்டு குணத்தினால் குடி தழைக்கும் எ - று.

காளிங்:— குடிசெயல்வகைக்கு வேண்டும் ஆண்மைத் தொழிலும் அதற்கு அமைந்த அறிவு உடைமையும் என உரைத்த இரண்டினது நெடுமுயற்சியால் நெடிது வாழும் தன் குடிமுழுதும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

" அடுத்த பருவம் குறித்துமடி யாக்கி மானம் கருதுவார்
கெடுத்தல் புரிந்தார் ஆதலினால் கிளைக் குடிஊன் றலின்மைந்தா."

—விநா. அரசி. 150

1023. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— குடி செய்வல் என்னும் ஒருவற்கு - என் குடியினை உயரச்செய்யக் கடவேன் என்றுகொண்டு அதற்கு ஏற்ற கருமங்களில் முயலும் ஒருவனுக்கு, தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும் - தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும்.

முயற்சியை அதன் காரணத்தால் கூறினார். தற்றுதல் - இறுக உடுத்தல். முன்னடப்பார்செயல் நியதிமேல் ஏற்றப்பட்டது.

மணக்:— குடியை ஓம்புவன் என்று கருதி முயலுமவனுக்குத் தெய்வம் மடிதற்றுக்கொண்டு தான் முற்பட்டு முயலும் எ - று.

மடிதற்றல் - தொழில் செய்வார் ஆடையை இறுக உடுத்தல்.

பரிப்:— மடி தற்றுதல் - தொழில் செய்வார் ஆடை உடுப்பது ஓர் திறன். மேல் சுற்றத்தார் நல்வினை இலர் ஆயின் ஓம்பும் ஆறு என்னை என்றார்க்குத் தெய்வம் அருள் செய்யும் என்று கூறப்பட்டது. இத்துணையும் குடி ஓம்புதல் வேண்டும் என்று கூறிற்று.

பரிதி:— தன்குடியைப் பரிபாலனம் பண்ணவேணும் என்பானுக்கு இல், தெய்வம் பிரியமாகி வேண்டின வரங்கொடுத்து ரட்சிக்கும் எ - று.

காளிங்:— தம் குடி தளராமல் பேணுதலைச் செய்வல் என்னும் அவ்வொப்பிறந்தோர்க்குத் தெய்வந்தானே மடியானதனைத் தாறு அறக் களைந்து மற்று அவன் உஞற்றின்கண் தான் வந்து முன் நிற்றலைச் செய்யும் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— மடிதற்றுதல் - ஆடையை இறுக உடுத்தல். முன் நடப்பார் செயல் நியதிமேல் ஏற்றப்பட்டது. ஊழினுள் ஒருபொருட் கிளவிக்குள் அடங்க நியதிமேல் ஏற்றப்பட்டது காண்க.

முதுமொழிவெண்பாக்கள் :

"பாணன் குடியுயரப் பண்டரனும் கூடல்வரு
பாணனெனச் சாதாரி பாடுதலால் - நாளும்." —முதுமொழி. 153.

1024. சூழாமல் தானே முடிவெய்தும் தன்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு. (௪)

உரைப்பகுதி:

பரிமே;— தம் குடியைத் தாழாது உஞற்றுபவர்க்கு - தம் குடிக்காம் வினையை விரைந்து முயல்வார்க்கு, சூழாமல் தானே முடிவெய்தும் - அவ்வினை முடிக்குந்திறம் அவர் சூழவேண்டாமல் தானே முடிவு எய்தும்.

குடி ஆகுபெயர். தெய்வம் முந்துறுதலான் பயன்கூறியவாறு. இவை இரண்டு பாட்டானும் அதற்குத் தெய்வம் துணையாதல் கூறப்பட்டது.

மணக்:— தம் குடியைத் தாழச்செய்யாதே உயரச்செய்யக் கருதுவார்க்கு அவ்வுயர்ச்சி எண்ணாமல் தானே முடிவுபெறும் எ - று.

கருதினவளவிலே அவரது நல்வினை தானே முடிக்கும்; இவர் தம்கண் அதனை மேற்கோடல் வேண்டுவது என்றவாறு.

பரிதி:— தன்குடி தழைக்கவேண்டும் என்று உத்தியோகம் பண்ணுவார்க்குத் தெய்வம் தானே நினைத்தகாரியம் தந்து முடிக்கும் எ - று.

காளிங்:— வருந்தித் தாம் ஒன்று சிந்திக்க வேண்டாமல் தானே வந்து முடிவுபெறும்: யாதோ எனின், தம் குடிசெயல்வகையை இதற்கு ஒரு குறைவரல் ஆகாது என்று நாளும் விரைந்து இயற்றும் அவர்க்கு அக்குடிசெயல்வகை எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— அவரால் என்று சுட்டி உரைபோக்கியது, முன் நடப்பாரை.

குறிப்பு :

தாழாது - தாமதியாது என்பர் பரிமேலழகர். குடியைத்தாழாது - குடிப் பெருமையில் தாழாது என்னுமாம். தானே முடிவெய்தும் என்றது முயற்சிவேண்டுவதின்று என்பதன்று, பெருமுயற்சி வேண்டா அளவே அமையுமென்பது.

—தொகுப்பாசிரியர்.

1025. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— குற்றம் இலனாய்க் குடி செய்து வாழ்வானை - குற்றமாயின செய்யாது தன் குடியை உயரச்செய்து ஒழுகுவானை, சுற்றமாச் சுற்றும் உலகு - அவனுக்குச் சுற்றமாகவேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார்.

குற்றமாயின அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பயன் எய்தல் நோக்கி யாவருஞ்சென்று சார்வர் என்பதாம்.

மணக்:— குற்றப்பட ஒழுகுதல் இலனாய்த் தன்குடியை ஓம்பி வாழுமவனை, உலகத்தாரெல்லாரும் தமக்கு உற்ற சுற்றமாக நினைத்துச் சூழ்ந்துவருவர் எ - று.

பரிதி:— குற்றத்தை நீக்கிக் குடியை ஆக்கிச் செய்வானைச் சுற்றமாகச் சுற்றும் உலகம் எ - று.

காளிங்:— பிறர் இவன் குடி ஓம்பாக் குணம் இலன் என்று உரைக்கும் குற்றம் இலன் ஆய், மற்று என்றும் குடி வாழ்தலைச் செய்து வாழ்வானையே சுற்றமாகச் சூழ்ந்து வாழும் இவ்வுலகு; எனவே தன் குடி தாங்கலே அன்றித் தன்னை அடைந்தோர் அனைவரும் தாங்கும் தன்மையவன் என்பது பொருள் எ - று.

இங்ஙனம் குடிசெயல் வகை கூறி வாழ்வினையில் ஒரு பக்கமே உழவு ஆம் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள்:

"வந்துனைஎல் லாரும் வணங்குமது கண்டுசிலர்
சிந்தனைசெய் தென்ன தினகரா - தந்தைசொல்லால்." —தினகா. 107.

குறிப்பு:

குற்றங்கள், பொறிகளைத் தவறுனவழி பசனுதத விளைவன ஆதலின் அங்ஙனம் செய்யாது குடியுயர்த்துவார்க்கு உலகமே சுற்றமாகச் சூழும் என்பதாம்.
—தொகுப்பாசிரியர்.

1026. நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல். (௬)

உரைப்பகுதி:

பரிமே:— ஒருவற்கு நல்லாண்மை என்பது - ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று உயர்த்துச் சொல்லப்படுவது, தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல் - தான் பிறந்த குடியினை ஆளுந் தன்மையைத் தனக்கு உளதாக்கிக்கோடல்.

போர்த்தொழிலின் நீக்குதற்கு நல்லாண்மை என விசேடித்தார். குடியினையாளுந்தன்மை குடியிலுள்ளாரை உயரச்செய்து தன்வழிப்படுத்தல். அதனைச்செய்துகோடல் நல்லாண்மையாமாறு வருகின்ற பாட்டால் பெறப்படும்.

மணக்:— ஒருவனுக்கு மிக்க ஆண்மை என்று சொல்லப்படுவது தான் பிறந்த குடியை ஆளுதலுடைமையை மனத்தின்கண் பெருக்கிக் கோடல் எ - று.

ஆளுதலுடைமை - குடியோம்புதலை எப்பொழுதுஞ் சிந்தித்தல்; எனவே, இது குடியோம்புதல் வேண்டும் என்றது.

பரிதி:— நல்ல சேவகன் என்று பேர்பெறுவது, தான்பிறந்த குடியை இரட்சிப்பது எ - று.

காளிங்:— நல் ஆண்மைப்பாடு என்று சிறப்பித்து உரைக்கப் படுவது ஒருவனுக்கு யாதோ எனின், தான் பிறந்த குடியினைத் தளரா நெறியினை ஆண்டு ஒழுகும் மாட்சிமையை நாளும் அழியாமல் ஆக்கிக் கொண்டு ஒழுகுதல் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"துய்ய பகீரதனும் தொல்லரசர் அல்லலறச்
செய்தவம்என் சொல்வாம் சிவசிவா - வையமதில்." —சிவசிவ. 103.

"அன்னை அடிமைக் கழுதுகொணர்ந் தெள்ளனுடன்
இன்னல் துடைத்தான் இரங்கேசா - உன்னுங்கால்." —இரங். 103

1027. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— அமரகத்து வன்கண்ணர்போல - களத்தின்கண் சென்றார் பலராயினும் போர்தாங்குதல் வன்கண்ணர்மேலதானாற்போல, தமரகத்தும் பொறை ஆற்றுவார் மேற்றே - குடியின்கண் பிறந்தார் பலராயினும் அதன் பாரம் பொறுத்தல் அது வல்லார்மேலதாம்.

பொருட்கு ஒக்க வேண்டும் சொற்கள் உவமைக்கண் வருவிக்கப் பட்டன. நன்கு மதிக்கப்படுவார் அவரே என்பதாம். இவை மூன்று பாட்டானும் அது செய்வார் எய்தும் சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— போர்க்களத்துச் செல்வர் பலருளராயினும் போர் தாங்கல் வன்கண்ணர்மாட்டே உளதானாற்போல, ஒருகுடியிற் பிறந்தார் பலருளராயினும் குடியோம்பல்வல்லவர்கண்ணதே குடியாகிய பாரத்தைப் பொறுத்தல் எ - று.

பரிப்:— இஃது ஒரு குடிப்பிறந்தார் பலர் உளர் ஆயினும் அவருள் மூத்தவருக்குக் கடனே எல்லார்க்கும் கடனே என்று ஐயுற்றார்க்குக் கூறப் பட்டது.

பரிதி:— சமர்பூமியிலே, மாற்றானை வெல்வார் போலத் தம் உற்றார்மேல் வருகிறதுன்பங்களைச் செயித்து, அழிகிற குடியைத் தாங்கு வார்க்கன்றோ, பெருமை உண்டாயது எ - று.

காளிங்:— 'ஆர்த்தார் எல்லாம் போருக்கு உரியர் அல்லர்' என்னும் பழமொழி வழக்கினால் அமர் இடத்து அஞ்சாது நின்று எறிந்து ஆசு அழியாமல் தாங்கும் தறுகண்ணாளரைப்போலத் தமர் இடத்தும் ஒன்று உற்ற இடத்துத் தள்ளாமல் பற்றித் தாங்கவல்லவர் யாவர்: மற்று அவர்மேலதேயாகும் குடிப்பாரம் அனைத்தும் எ - று.

குறிப்பு:

போர்ப் பொறுப்பு சேனாபதியாய்த் தாங்கி நடத்துபவன் மேலுள்ளது போல, குடியாட்சிப் பொறுப்பு குடியை ஆள்பவர்மேலதாகும் என்பது.

—தொகுப்பாசிரியர்.

1028. குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— மடி செய்து மானம் கருதக் கெடும் - தம்குடியினை உயரச் செய்வார் அச்செயலையே நோக்காது காலத்தைநோக்கி மடியினைச் செய்துகொண்டு மானத்தையும் கருதுவாராயின் குடிகெடும்; குடி செய்வார்க்குப் பருவம் இல்லை - ஆகலான் அவர்க்குக் காலநியதி இல்லை.

காலத்தைநோக்கி மடிசெய்தல் வெயில் மழை பனி என்பன உடைமைநோக்கிப் பின்னர்ச் செய்தும் என்று ஒழிந்திருத்தல். மானங் கருதுதல் - இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறுவேன் யானோ என்று உட்கோடல். மேல் 'இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும்பொழுது'' என்றது உட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோ என்று கருதினும் அது கருதற்க என்று மறுத்தவாறு.

மணக்:— குடியோம்புவார்க்குப் பருவம் இல்லை; தம் குடும்பத்தின் குறையை நினைத்து மடிசெய்து அதனை உயர்த்துவதனால் உளதாகும் குற்றத்தை நினைக்கக் குடிகெடும் ஆதலான் எ - று.

இது குடிசெய்வார் இன்பநுகர்ச்சியை விரும்பார் என்றது.

பரிப்:— மேல் துன்பத்திற்குக் கொள்கலமாகவேண்டும் என்றார்: அவ்வாறு துன்பு உற்று ஒழுகுதல் ஆகுமோ என்றார்க்குக் குடி செய்வார் இன்ப நுகர்ச்சியை விரும்பார் என்று கூறப்பட்டது.

பரிதி:— தன்குடி தழைக்க வேண்டும் என்று விசாரிப்பார்க்குப் பருவமில்லை; மடித்த புத்தியும், மானமும் உண்டாகில் தன்குடிமை கெடும் எ - று.

காளிங்:— இவ்வுலகத்துப் பயிர் செய்வார்க்குப் பருவம் வேண்டினாற்போலக் குடிசெய்வார்க்கு ஒரு பருவம் பார்த்து இருக்க வேண்டுவது இல்லை: எனவே எஞ்ஞான்றும் இனிய பருவம் என இதனை இங்ஙனம் பெற்று வைத்து இயற்றுது மடிப்பதும் செய்து மற்று இக்குடி தாங்குதற்கு யான் இக்கருமம் செய்வது என்னை என்று மானிக்கும் மானம் தான் கருதவே கெட்டு விடும் அக்குடி எ - று.

குறிப்பு:

மழை வெயில் முதலிய காலநிலைகள் குடிசெய்பவருக்கு இல்லை.

—தொகுப்பாசிரியர்.

1029. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. (௯)

உரைப்பகுதி :

பரிமே:— குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு - மூவகைத் துன்பமும் உறற்பாலதாய தன் குடியை அவை உறாமல் காக்க முயல்வானது உடம்பு, இடும்பைக்கே கொள்கலம் கொல் - அம்முயற்சித் துன்பத்திற்கே கொள்கலமாம் அத்துணையோ, அஃது ஒழிந்து இன்பத்திற்கு ஆதலில்லையோ.

"† உறைப்பெயல் ஒலைபோல மறைக்குவன் பெரும நின் குறித்து வருவேலே" என்புழியும் மறைத்தல் இப்பொருட்டாயிற்று. என்குடி முழுதும் இன்புற்றுயரவே நான் இருமையும் எய்துதலான் இம்மெய்வருத்த மாத்திரம் எனக்கு நன்றென்று முயலும் அறிவுடையான் அஃதொரு ஞான்றும் ஒழியாமைநோக்கி, இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ என்றார். இது குறிப்புமொழி. இவை இரண்டு பாட்டானும் அவர் அது செய்யும் இயல்பு கூறப்பட்டது.

மணக்:— சுற்றத்தார்மாட்டு உளதாகிய குறையை மறைக்கக் கருதுவான் உடம்பு துன்பத்திற்குக் கொள்கலமாம் எ - று.

பரிப்:— மேல் ஒழியாது கருமம் செய்தல் பெருமை என்றார்: அது துன்பம் ஆக்கும் என்றார்க்குத் துன்பத்திற்கு நாணல் ஆகாது: அதனால் புகழாதலாம என்று கூறப்பட்டது.

பரிதி:— தன்குடியையும் குலத்தையும் இரட்சிப்பான் குடும்பத்தின் குற்றம்மறைப்பவன் துன்பத்திற்கெல்லாம் இருப்பிடம் எ - று.

காளிங்:— தன் குடியாகிய குடும்பத்தை வந்து உற்ற குற்றத்தை மாய்த்துப் பாதுகாப்பவனது உடம்பானது எஞ்ஞான்றும் வருத்தத்திற்கே கொள்கலம் கொல்லோ: எனவே தம் குடி தாங்குதல்பொருட்டு வருந்துகின்றவனே ஆண் மகன் ஆவான் என்று அவனை வியந்து உரைத்தல் கருத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மறைத்தல் - காத்தல்.

---

† புறம். 290.

1030. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி. (௩௦)

உரைப்பகுதி :

பரிமே:— இடுக்கண் கால் கொன்றிட வீழும் - துன்பமாகிய நவியம் புகுந்து தன்முதலை வெட்டிச்சாய்க்க ஒருபற்றின்றி வீழாநிற்கும், அடுத்து ஊன்றும் நல்லாள் இலாத குடி - அக்காலத்துப் பற்றுவன கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய மரம்.

முதல் அதன் வழிக்குரியார். வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன்படுதலும் அல்லாவழிக் கெடுதலும் உடைமையின், மரமாக்கினார்; "* தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன, ஓங்குகுல நையவத னுட்பிறந்த வீரர், தாங்கல் கடன்" என்றார் பிறரும். இது குறிப்புருவகம். இதனான் அவரில்லாத குடிக்கு உளதாம் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— இடும்பையாகிய நவியம் அடுத்துத் தனது வேரை வெட்டுதலானே வீழும்; பக்கத்திலே அடுத்து ஊன்றுகின்ற முட்டுக்கோல் போலத் தாங்கவல்ல நல்ல ஆண்மக்கள் இல்லாத குடியாகிய மரம் எ - று.

இது குடியோம்புவாரில்லாக்கால் அக்குடி கெடும் என்று கூறிற்று.

பரிதி:— துன்பம் சற்றே தோற்றினமாத்திரத்திலே கெடும்' குடியைத் தாங்குகின்ற பலவான் பிறவாத குடி எ - று.

காளிங்:— வந்து உற்ற இடுக்கணானது முன் நின்ற நிலையை அழித்திட வீழ்ந்து அறும்: யாது எனின் அவ்விடுக்கண் வந்த இடத்துத் தளராமல் முகம் வைத்து உறுதி செய்யும் நல் ஆண்மகன் இல்லாத குடியானது எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

" மற்றீருத ராட்டிரன்சந் தானமெலாம் மாய்ந்ததே
சுற்றுநீர்த் தென்குளத்தூர்ச் சோமேசா - பற்றும்." —சோமேசர். 103.

* சீவக. 498.

குறள்வைப்புமுறை

பரிமே:— *கருமம், ஆள்வினை, குடிசெய்வல், சூழாமல், குற்றம், நல்லாண்மை, அமரகத்து, குடிசெய்வார்க்கு, இடும்பைக்கே, இடுக்கண்.*

மணக்:— *நல்லாண்மை, ஆள்வினை, கருமம், இடும்பைக்கே, குடிசெய்வார்க்கு, சூழாமல், குடிசெய்வல், குற்றம், இடுக்கண், அமரகத்து.*

பரிதி:— *குடிசெய்வல், சூழாமல், அமரகத்து, நல்லாண்மை, கருமம், குடிசெய்வார்க்கு, குற்றம், இடும்பைக்கே, இடுக்கண், ஆள்வினை.*

காளிங்:— *குடிசெய்வல், இடுக்கண், இடும்பைக்கே, அமரகத்து, நல்லாண்மை, கருமம், குடிசெய்வார்க்கு, சூழாது, ஆள்வினை, குற்றம்.*

104. உழவு.

தொகுப்புரை:

[எந்தத் தொழிலைச் செய்து உழன்றாலும் ஏரின்வழியிலே உலகம் உள்ளது. ஆதலால் வருந்தினாலும் உழவுத்தொழிலே தொழில். வேறு தொழில்கள் செய்வார்கள் யாவரையும் தாங்குதலால் உழுபவர்கள் உலகத்திற்கு ஆணிபோல் வார். உழுது உண்டு வாழ்பவர்களே சுதந்திர வாழ்வுடையார்கள். மற்றவர்கள் அடிமைகள். நெற்கதிர் உடையராய உழவர்கள் பல மன்னர்களைத் தம் மன்னர் அடிக்கீழ்ப்படுத்துவர். உழுது உண்டு வாழ்பவர்கள் யாசிக்கமாட்டார்கள். தம்மை யாசித்தார்களுக்கு உணவளிப்பர். உழவர் கைமடங்கினால் இவ்வுலகத்துத் துறவிகட்கும் நிலையில்லை. ஒருபலப்புழுதி கால்பல நிறையாகக் காய விடுவாராயின் நிலத்திற்கு எருவே யிடவேண்டாம். தானே விளையும். உழுதலைக்காட்டிலும் எருவிடுதல் நல்லது. களைபிடுங்கி நீர்ப்பாய்ச்சுதலினும் நீர்மோட்டை போகாவாறு காத்தல் நல்லது. உழவன் நிலத்தைத் தினஞ்சென்று பாராமலிருந்துவிடின் மனை யாளைப்போல நிலமும் ஊடிவிடும். நாம் வறியர் என்று சோம்பியிருப்பாரைக் கண்டால் நிலப்பெண் ஏளனம் செய்வாள்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும் பான்மை வேளாளர்க்கும் உரித்தாய உழுதல் தொழில். செய்விக்குங்கால் ஏனையோர்க்கும் உரித்து. இது, மேல் குடியுயர்தற்கு ஏது என்ற ஆள் வினைவகையாகலின், குடிசெயல்வகையின் பின் வைக்கப்பட்டது.

மணக்:— உழவாவது உழவின் திறனும் அதனால் வரும் பயனும் கூறுதல்.

பரிப்:— இது குடி செய்வார்க்கு இன்றியமையாமையின் அதன் பின் கூறப்பட்டது.

உழவு, தொழில், வரைவு, வாணிகம், சிற்பம், வித்தை என்று சொல்லப்பட்ட அறுவகைத் தொழிலும் குடி செய்வார்க்கு வேண்டும் அன்றோ? அவை எல்லாவற்றின் இயல்பும் கூறாதார், உழவு ஒன்றும் கூறியது எற்றுக்கு எனின், அவற்றுள் கல்வி பொருள்தரும் என்பது முன்பே கூறப்பட்டது. தொழிலாவது ஒருவன் ஏவல் செய்தல். அரசர் ஏவலால் அமைச்சர் செய்யும் தொழில் அமைச்சியலுள் கூறப்பட்டது.

ஏனையோர் செய்யும் தொழிலும் வரைவு வாணிகமும் சிற்பமும் மேலே அதிகாரத்தில் 'ஆள் வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி' என்றதனாலே சொன்னாராம்: என்னை? அவை எல்லாம் முயற்சியானும் அறிவானும் வருதலின்; ஆயின் உழவும் அதனுள் அடங்காதோ எனின் அடங்கும்: அஃது ஈண்டுத் தொழிலை நோக்கிக் கூறப்பட்டது அன்று. முயன்று பொருள் ஈட்டினார் எல்லாரும் குடி ஓம்புங்கால், தானியத்தால் ஓம்ப வேண்டுதலின் அதனை உண்டாக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

1031. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை, (க)

உரைப்பகுதி:

பரிமே:— சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் - உழுதலான் வரும் மெய்வருத்தம் நோக்கிப் பிறதொழில்களைச் செய்து திரிந்தும், முடிவில் ஏருடையார் வழியதாயிற்று உலகம்; அதனால் உழந்தும் தலை உழவே - ஆதலான் எல்லாவருத்தமுற்றும், தலையாய தொழில் உழவே.

ஏர் ஆகுபெயர். பிறதொழில்களான் பொருள் எய்தியவழியும் உணவின்பொருட்டு உழுவார்கண் செல்லவேண்டுதலின் சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் என்றும், வருத்தமிலவேனும் பிறதொழில்கள் கடை என்பது போதர உழந்தும் உழவே தலை என்றும் கூறினார். இதனால் உழவினது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— உழவு ஒழிந்த எல்லா நெறிகளிலும் சுழன்று திரிந்தாலும், ஏருடையவர் வழியே வருவர் உலகத்தார்; ஆதலான், வருந்தியும் உழுதலே தலைமையுடையது எ - று.

இஃது உழவு வேண்டும் என்றது.

பரிதி:— பூமியைப் பிரதட்சணம்பண்ணின தர்மமும், உழவுசெய்து கொடுத்த தர்மத்திற்கு நிகரில்லை எ - று.

காளிங்:— கடல் ஓடியும் மலை ஏறியும் காடு மண்டியும் நாடு பரந்தும் ஓடித்திரிதலே அன்றியும் உண்பான் பொருட்டு இதனைப் பிற பிற முயன்று அலம் வந்தும் அதனால் ஒருபயனும் இல்லை: ஆதலால் ஏர் கொண்டு வாழ்வார் தமது வழிச்சேறலே பயன் உள்ள வாழ்வாம் மற்று:

அது எங்ஙனம் எனில் உழுகைப் பொருட்டாக உழு கருவிக்குக் காடு புக்கு மரம் தடிதலும் கனவிய கொழுவும் அதற்கு ஏற்ற பல கருவியும், வன்புலம் மென்புல வடிவத்தியற்றலும், படைக்கால் அமைத்தலும் முதலிய பலவகைப் பயிர்வளம் முற்றிய அவை அனைத்தும் உழுந்தும் உழவு இயற்றலே தலைமைப்பாடு ஆவது எ - று.

மேற்கோள்பகுதி:

இளம்:— இருமூன்றுமரபின் ஏனோர் பக்கம்: இரு மூன்றில் வேளாளர்க்குரிய உழவின் சிறப்புக்கு மேற்கோள். (தொல். பொருள். 74.)

ஒப்புமைப்பகுதி:

"உழுவித் திருவர் இருவர்உழு வித்து முழுதும் உணலாகும்
உழுதுண் பவரே தமக்குரியர் உபகா ரியர்என் பார்அவரே."
—விநா. அரசி. 151

1032. உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்று(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து. (உ)

உரைப்பகுதி:

பரிமே:— அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து - அவ்வுழுதலைச் செய்யமாட்டாது பிறதொழில்கள்மேற் செல்வார் யாவரையும் தாங்குதலால், உழுவார் உலகத்தார்க்கு ஆணி - அதுவல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர்.

"‡காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு" என்றாற்போல உழுவார் என்றது உழுவிப்பார்மேலும் செல்லும். உலகத்தார் என்றது ஈண்டு இவரையொழிந்தாரை. கலங்காமல் நிறுத்தற்கண் ஆணிபோறலின் ஆணி என்றார். பொறுத்தலான் என்பது திரிந்துநின்றது. ஏகதேசவுருவகம். அஃதாற்றார் தொழுவாரே எல்லாம் பொறுத்து என்று பாடம் ஓதி, அதுமாட்டாதார் புரப்பார்செய்யும் பரிபவமெல்லாம் பொறுத்து அவரைத் தொழுவாரேயாவர் என்று உரைப்பாரும் உளர்*.

‡பட்டினப்பாலை. 283. *காளிங்கர்.

மணக்:— உலகத்தாராகிய தேரினுக்கு அச்சாணிபோல்வார் உழுவாரே; அதனைச் செய்யாதாரே பிறர்பெருமிதத்தினால் செய்வன வெல்லாம் பொறுத்துத் தொழுது நிற்பார் எ - று.

இஃது உழுவார் தம்மையும் அரசரையும் பெரியராக்குதலன்றி உலகத்தையும் தாங்குவர் என்பதாம்.

பரிதி:— உழவுத்தொழில் அன்றோ உலகம் அசையாமல் தாங்கு கிற ஆணி. உழவு இல்லாதார் தொழுது, வயிறு வளர்ப்பவர் எ - று.

காளிங்:— உழுது விளைத்துக் குடிமை செய்வார் யாவர்? மற்று அவரே உலகின் கட்டளை குலையாமைக்கு ஓர் அச்சு ஆணி ஆவர்: அதனால் மற்று அதின் முயலாதார் யாவரும் பிறரை வழிபட்டுத் தாழ்ந்து ஒழுகு வாரே: உணவு காரணமாக அவர் செய்வன எல்லாம் பொறுத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தொழுவார் - உழுதலல்லாத தொழில் செய்வார். "காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு" (பட்டினப்) என்றாற்போல, உழுவார் என்பது உழுவிப்பார் மேலும் சென்றது.

ஒப்புமைப்பகுதி:

"தொழுதுண் பவரே பிறர்க்குரியார் தொழின்முற் றுழந்தும் உழவினர்பால்
முழுதும் அடுப்ப வேண்டுதலின் முதன்மைத் துழவென் றறிமைந்தா."

—விநா. அரசி. 151.

முதுமொழிவெண்பாக்கள் :

"வன்பா ரதத்தலங்கை வைத்தார்க் கெதிரில்லை
என்பா ரதனால் இரங்கேசா - முன்பார்."

—இரங். 104.

குறிப்பு :

உலகம் தேர். அதற்கு இன்றியமையாத அச்சாணி உழுவன் என்றவாறு. ஏகதேச உருவகம்.

—தொகுப்பாசிரியர்.

1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்* மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் - யாவரும் உண்ணும்வகை உழுதலைச்செய்து அதனால் தாமும் உண்டு வாழ்கின்றாரே தமக்கு உரியராய் வாழ்கின்றவர்; மற்றெல்லாம் தொழுது உண்டு பின் செல்பவர் - மற்றையாரெல்லாம் பிறரைத்தொழுது அதனால் தாமும் உண்டு அவரைப் பின்செல்கின்றவர்.

மற்று என்பது வழக்குப்பற்றி வந்தது. தாமும் மக்கட்பிறப்பின ராய்வைத்துப் பிறரைத்தொழுது அவர் சிலகொடுப்பத் தம்முயிர் ஓம்பி அவர்பின் செல்வார் தமக்குரியரல்லர் என்பது கருத்து.

மணக்:— உலகின்கண் வாழ்வாராவார் உழுதுண்டு வாழ்பவரே; மற்று வாழ்கின்றாரெல்லோரும் பிறரைத் தொழுது உண்டு அவரேவல் செய்கின்றவர் எ - று.

இது செல்வமாவது உழவினால் வரும் செல்வம் என்றது.

பரிதி:— உழுது உண்டு, ஏற்றவர்க்கு இட்டு வாழ்வதே வாழ்வு. மற்றது தொழுது, வணக்கம்செய்து, வயிறுவளர்ப்பது எ - று.

காளிங்:— அரசரும் அன்னரோ எனில் அவரும் இவர் இடு பொருளை நத்திடும் இயல்பு அல்லது, தாம் அவர்க்கு இடுவது இல்லை; ஆதலால், உழுது உண்டு வாழ்கின்றாரே வாழ்கின்றார் என்று சொல்லப் படுவார்: மற்றையர் அனைவரும் பிறர் ஏவல்செய்து தொழுது உண்டு பின் செல்கின்றனர் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— மற்றெல்லாம் என்பதற்கு மற்றையாரெல்லாரும் என்று உரைத்து, மற்று என்பது வழக்குப்பற்றி வந்தது என்றார் "சிற்றின்பம் வெஃகி" (173) என்பதில் மற்றை மற்று என வந்தது என்றார். ஈண்டு உயர்திணையாய் மற்றையார் மற்று என வந்தது என்றார்.

---

* "மற்றல்லாதார்" காளிங்கர் பாடம்.

மேற்கோள்பகுதி :

நச்:— இருமூன்று மரபின் ஏனோர்பக்கம் என்பதில் வாணிகர்க்கும் வேளாளர்க்கும் உரிய உழவுத்தொழில் சிறப்புக்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

அடியார்:— வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை; "வீழ்குடி - உழவின்மேல் விரும்பும் குடி; காணியாளர்; யாவரும் விரும்புங்குடி என்றுமாம். "உழுதுண்டு.............செல்பவர்" என்பதனுற்கொள்க." (சிலப். இந்திர. 43.)

ஒப்புமைப்பகுதி:

"நெற்பயிர் விளை." —ஆத்தி. 72.

"தொழூதூண் சுவையின் உழுதூண் இனிது." —கொன்றை. 46.

"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு." —நல்வழி. 12.

குறிப்பு:

உழவுவாழ்வே சுதந்திர வாழ்வு. ஏனைய வாழ்வு அடிமை வாழ்வு என்பதாம்.
—தொகுப்பாசிரியர்.

1034. பலகுடை நீழலும் § தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். (ச)

உரைப்பகுதி :

பரிமே:— அலகு உடை நீழலவர் - உழுதல் தொழிலான் நெல் விளை உடையராய தண்ணளியுடையோர், பலகுடை நீழலும் தம் குடைக்கீழ்க் காண்பர் - பலவேந்தர் குடைநிழலதாய மண்முழுதினையும் தம் அரசன் குடைக்கீழே காண்பர்.

அலகு கதிர்; அஃது ஈண்டு ஆகுபெயராய் நெல்மேலதாயிற்று. உடைய என்பது குறைந்துநின்றது. நீழல்போறலின், நீழல் எனப்பட்டது. நீழலவர் என்றது இரப்போர்க்கெல்லாம் ஈதல் நோக்கி. ஒற்றுமைபற்றித்

§ "தம் கொடைக்கீழ்" காளிங்கர் பாடம்.

தம் குடை என்றார். குடைநீழல் என்பதூஉம் ஆகுபெயர்; [1]"ஊன்று சால் மருங்கின் ஈன்றதன் பயனே" என்றதனால் தம் அரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பார் என்றதாம்; [2]"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப் போர்" என்றார் பிறரும்.

மணக்:— பலஅரசர் குடைநிழலும் தம் அரசர் குடைநிழற்கீழே வரக்காண்பர், குடையில்லா நிழலையுடையவர் எ - று.

குடையில்லா நிழலாவது பைங்கூழ் நிழல். இது தாம் வாழ்தலே யன்றித் தம்அரசனையும் வாழ்விப்பர் என்றது.

அலகுடைய நீழல் - கதிர்களையுடைய நெற்பயிரின் நிழல்.

பரிதி:— அரசர் பலகுடைநீழலும் தம் குடைநீழலிலே காண்பர்; அலகுடைநீழலாய உழவினால் எ - று.

காளிங்:— கொற்றக் குடைமுதல் ஆகிய அளவு இறந்த குடை நிழற்கீழ் வாழ்வாரையும் அவர் அவர்க்குத் தாம் கொடுக்கும் கொடை வழி வருதலை நாளும் நாளும் கொண்டு ஒழுகுபவர்: இவ்வுலகு இயல்பு உடையார் யார் எனின் தமக்கு உழவைத்தரும் கலப்பைத் தண் நிழலினை உடையவர் எ - று.

அலகு என்பது கலப்பை.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— முன்னது நீழல், நிழலதாய மண்; பின்னது நீழல், தண்ணளி; அது செங்கோல்போல நிழல்போறலின் நிழல் எனப்பட்டது. அலகு - நெற்கதிர். தம் குடை - தம் அரசன் குடை.

ஒப்புமைப்பகுதி :

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்." —சிலப். 10 : 149 - 50.

"சீரைத் தேடின் ஏரைத் தேடு." —கொன்றை. 29.

"மேழிச் செல்வம் கோழை படாது." ஷை 77.

---

[1] புறம். 35. [2] சிலப். நாடுகாண். 149.

மூதுமொழிவெண்பாக்கள்:

"தென்னாட் டுழவர் இறைகொண்டு கண்ணுதலும்
அந்நாட் டிருந்துலகம் ஆளுதலால் - தன்னேர்." —முதுமொழி. 154.

1035. இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— கைசெய்து ஊண் மாலையவர் இரவார் - தம் கையால் உழுது உண்டலை இயல்பாக உடையார் பிறரைத் தாம் இரவார்; இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர் - தம்மை இரப்பார்க்கு அவர் வேண்டியது ஒன்றனைக் கரவாது கொடுப்பர்.

செய்து என்பதற்கு உழுதலை என வருவிக்க. கைசெய்தூண் மாலையவர் என்பது ஒருஞான்றும் அழிவில்லாத செல்வமுடையர் என்னும் ஏதுவை உட்கொண்டு நின்றது.

மணக்:— பிறரை இரவார்; தம்மை இரப்பார்க்குக் கரத்தல் இன்றி யாதொன்றாயினும் ஈவர்; கையாலே உழவுத் தொழிலைச் செய்து உண்ணும் இயல்பினையுடையார் எ - று.

பரிப்:— உழவினால் பயன் கூறுவார் முற்பட, இல்லறம் செய்வது இவர்கண்ணது என்று கூறினார்.

பரிதி:— தாங்கள் ஓரிடத்திலும் இரவார்; இரப்பவர்க்கும் கரவாது கொடுப்பார்; ஆதலால் உழவே நன்று எ - று.

காளிங்:— பிறர்மாட்டுத் தாம் ஒன்று இரப்பதும் செய்யார்: தம்மாட்டு இரப்போர்க்கு உள்ளது ஒன்று ஈவதும் செய்வர்: யாவர்? மற்று அவர் தமது கைக்கொண்டு இனிய தொழில் செய்யும் இடத்தும் கரவார்; தம்மாட்டு இரப்போர்க்கு ஒன்று ஈயும் இடத்தும் கரவார்; மற்று இவ்வாழ்வினைத் தமக்கு இயல்பாக உடையவர் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மாலை - இயல்பு.

மேற்கோள்பகுதி:

இளம்:— இருமூன்று மரபின் ஏனோர் பக்கம்: இருமூன்றில் வேளாளர்க்குரிய விருந்தோம்பல் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 74.)

ஒப்புமைப்பகுதி:

"கைவினை கரவேல்." —ஆத்தி. 40.

முதுமொழிவெண்பாக்கள்:

"இன்னலொறுக்கத் தும்முழவை ஏற்றலினீ சற்கமுது
முன்னமைத்தார் மாறர் முருகேசா - உன்னில் —முருகேசர். 104.

குறிப்பு:

தன்முயற்சியற்றவனே இரப்பானாதலின் உழுவார்கள் இரவார்; இரவாமை மட்டுமேயன்றிக் கரவாது ஈயவும் செய்வர் என்று உழவரின் சிறப்பு விளக்கியது.

—தொகுப்பாசிரியர்.

1036. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. (சா)

உரைப்பகுதி:

பரிமே:— உழவினார் கை மடங்கின் - உழுதலை உடையார்கை அதனைச்செய்யாது மடங்குமாயின், விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு நிலை இல்லை - யாவரும் விழையும் உணவும் யாம் துறந்தோம் ‑ன்பார்க்கு அவ்வறத்தின்கண் நிற்றலும் உளவாகா.

உம்மை இறுதிக்கண்ணும் வந்து இயைந்தது. உணவின் மையால், தாம் உண்டலும் இல்லறம் செய்தலும் யாவர்க்கும் இல்லை யாயின. அவர் உறுப்புமாத்திரமாய கை வாளா இருப்பின் உலகத்து இம்மை மறுமை வீடு என்னும் பயன்கள் நிகழா என்பதாம். ஒன்றனை மனத்தால் விழைதலும் ஒழிந்தேமென்பார்க்கு என உரைப்பாரும் உளர். இவை ஐந்து பாட்டானும் அதனைச் செய்வாரது சிறப்புக் கூறப்பட்டது.

மணக்:— உழவை யுடையவர் அத்தொழிலைச் செய்யாது கைம் மடங்குவராயின், யாதொரு பொருளின்கண்ணும் விரும்புவதனையும் விட்டேம் என்பார்க்கு அந்நிலையின்கண் நிற்றல் இல்லை எ - று.

எனவே, துறவறத்தின்கண் நிற்பாரை நிறுத்துதல் உழவர் கண்ணது என்றது.

பரிதி:— உழவினால் உழவுதொழில் விட்டாராகில் ஆசையை விட்டோம் என்பார்க்கு நிலை இல்லை எ - று.

காளிங்:— உழவு தொழிலினர் தமது ஒழுக்கம் ஆகிய குடிமை செய்வார் ஈண்டு உரைத்த பெரியோரைப் போலத் தாமும் இவ்வொழுக்கம் தணிவர் ஆயின், இப்பெரியோர்க்கும் அந்நிலைமை இல்லையாம்; என்ப தனால் அவர்க்கும் அவ்வுடல் முடியுமளவும் உண்ணுமை நிலை பெறுதல் அரிது எ - று.

கை என்பது ஒழுக்கம்: விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கும் என்றது விரும்பத் தகுவது விட்டொழிந்தோம் என்போர்களுக்கும் என்றது.

முதுமொழிவெண்பாக்கள்

"வேள்வித் தொழிற்கும் உழுதொழில்முன் வேண்டுமால்
சூழிசூழ் தென்குளத்தூர்ச் சோமேசா - வாழும்." —சோமேசர். 104.

1037. தொடிப்புழுதி *கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். (எ)

உரைப்பகுதி :

பரிமே:— தொடிப்புழுதி கஃசா உணக்கின் - ஒரு நிலத்தினை உழுதவன் ஒருபலப்புழுதி கஃசாம்வண்ணம் அதனைக் காயவிடுவனாயின், பிடித்து எருவும் வேண்டாது சாலப் படும் - அதன்கண் செய்த பயிர் ஒரு பிடியின்கண் அடங்கிய எருவும் இடவேண்டாமல் பணைத்து விளையும்.

பிடித்து பிடியின்கண்ணது. பிடித்த என்பதன் விகாரம் என் பாரும் உளர். வேண்டாமல், சான்று என்பன திரிந்துநின்றன.

*'கைசா' காளிங்கர்பாடம்.

மணக்:— ஒரு பலப்புழுதியைக் கஃசாக உணக்குவனாயின், ஒரு கையாற் பிடித்த எருவும் இடவேண்டாமல் அமைந்துவிளையும் எ - று.

மேற்கூறிய உழவு செய்யுந்திறன் கூறுவார் மூற்படப் புழுதி உணக்கவேண்டும் என்றார்.

பரிதி:— கையில் அரைக்கழஞ்சு பொடி உதிர உழுவானாகில் பிடி எருவும் வேண்டாம் தானே விளையும் எ - று.

காளிங்:— முன்னம் தான் நீர் பதம் கொண்டு உழுத ஈரப் புழுதி எண் கழஞ்சும் இருகழஞ்சாகக் கீழ்ப்புழுதி கிளர்ந்து மேற்பட்டு உணங்குமாறு பின்னும் பின்னும் பெயர்த்து இனிது உணக்கப்பெறின், பிடித்து ஒரு பிடி எருவும்கூட வேண்டாவாறு அங்ஙனம் உழுது காய்ந்த புழுதிச் சுவடுதானே தன் வேர் ஊறுசுவையாக மிகவும் விளையும் எ - று.

தொடி என்பது ஒரு பலம் என்றது. கஃசா என்பது கால் பலம் மாக என்றது. சாலப்படும் என்பது மிகவும் விளையும் என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கஃசு - காற்பலம். பிடித்து - பிடியின் கண்ணது; பிடித்தது என்பதன் விகாரம் ஆம்.

குறிப்பு:

கோடை யுழவு, உழுது மண்ணைக்கிளறி, ஒருபல எடையுள்ள புழுதியைக் காற்பல டையினதாகக் காயவைத்தால் புழுதியே எருவாகும். ஆதலால், வேறு எருவிட வேண்டாம் என்றது. காளிங்கர் உரையின்வண்ணம் தொடி எண்கழஞ்சு கொண்ட அளவை என்பதும் அதன் காற்பகுதி அதாவது இருகழஞ்சு எடை கொண்டது கஃசு என்பதும் உணரக்கிடக்கின்றன.

—தொகுப்பாசிரியர்.

1038. ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— ஏரினும் எரு இடுதல் நன்று - அப்பயிர்க்கு அவ்வுழுத லினும் எருப்பெய்தல் நன்று; கட்டபின் அதன் காப்பு நீரினும் நன்று - இவ்விரண்டும் செய்து களைகட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீர்கால் யாத்தலினும் நன்று.

ஏர் ஆகுபெயர். காத்தல் பட்டி முதலியவற்றான் அழிவெய்தாமல் காத்தல். உழுதல், எருப்பெய்தல், களைகட்டல், நீர்கால்யாத்தல், காத்தல் என்று இம்முறையவாய இவ்வைந்தும் வேண்டும் என்பதாம்.

மணக்:— உழுகின்றதினும் நன்றாம் எருவிடுதல்; களை கட்ட பின்பு நீர்விடுதலினும் நன்றாம் அதனை அழியாமற் காத்தல் எ - று.

இது பலகால் உழவேண்டும் என்பதூஉம், எருவிடவேண்டும் என்பதூஉம், களைபறிக்க வேண்டும் என்பதூஉம், பசுப்புகுதாமல் காக்க வேண்டும் என்பதூஉம் கூறிற்று.

பரிதி:— உழவினும் எருக்கட்டு நன்று; அதினும் தண்ணீர் கட்டுதல் நன்று; அதனினும் வேலி இடுதல் நன்று எ - று.

காளிங்:— கூறிய புழுதி உழவாயினும் சேற்று உழவாயினும் உழுசால் எப்பற்றும் ஒழியாமல் செல்லும் ஏர் மிகுதியினும் மிக நன்று: மற்று அதனினும் நன்று அந்த நிலத்திற்கு ஏற்ற எருக் கொணர்ந்து இடுதல்: இனி, அதனினும் நன்று ஆண்டு எழு பைங்கூழ் அருகு எழு களை கட்டல்: அங்ஙனம் களைதவிர் நன்மையே அன்றிப் பின்னும் சால நன்று நீர் முறை பிழையாமை நீர் பெய்தல்: மற்று அதனினும் சால நன்று அங்ஙனம் சிறந்த பயிர் பயன் பழுதுபடாமல் முன்னுறக்கொண்டே கடிந்து காப்பது ஓர் காப்பு எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கட்டபின் - களைகட்டால். "களைகட் டதனொடு நேர்" (550) என்பதும் காண்க.

முதுமொழிவெண்பாக்கள்:

"வள்ளிபுனம் காத்திருந்த வாறேது வான்பயிர்செய்
தெள்ளிமையா லன்றோ சிவசிவா - உள்ளுமிடத்(து) —சிவசிவ. 104.

குறிப்பு:

ஏருழுதல் பயிர் வேரூன்றிக் கிளைக்கமட்டும் ஏதுவாம். எருவிடுதல் தழைக்க ஏதுவாம். களைபிடுங்குதல் பயிருக்குள்ள உணவைத்திருடியுண்டு வளரும் பயன்தாராத கோரை முதலிய பகைகளை ஒழித்தற்காம். நீர்பாய்ச்சுதல் பயிர்வாடாமல் வளர்வதற்காம். பாய்ச்சிய நீரைக் காத்தல் இந்த வயலிலுள்ள நீர் அடுத்த

வயல்களிலோ அல்லது வாய்க்காலிலோ மோட்டைபோகுமானால் எருமுதலிய இடுசாரத்தையும் பூசாரத்தையும் கொண்டுபோய்விடுமாதலின் அங்ஙனம் போகாமற் காத்தற்காம்.

—தொகுப்பாசிரியர்.

1039. செல்லான் கிழவன் இருப்பின் *நிலம்புலந்(து)
இல்லாளின் ஊடி விடும். (க)

உரைப்பகுதி:

பரிமே:— கிழவன் செல்லான் இருப்பின் - அந்நிலத்திற்கு உரியவன் அதன்கண் நாடோறும் சென்று பார்த்து அடுத்தன செய்யாது மடிந்திருக்குமாயின், நிலம் இல்லாளின் புலந்து ஊடிவிடும் - அஃது அவன் இல்லாள்போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின் அவனோடு ஊடிவிடும்.

செல்லுதல் ஆகுபெயர். பிறரை ஏவியிராது தானே சேறல் வேண்டும் என்பது போதரக் கிழவன் என்றார். தன்கட்சென்று வேண்டுவன செய்யாது வேறிடத்திருந்தவழி மனையாள் ஊடுமாறுபோல என்றது அவன் போகம் இழத்தல் நோக்கி. இவை மூன்று பாட்டானும் அதுசெய்யுமாறு கூறப்பட்டது.

மணக்:— நிலத்திற்கு உரியவன் நாடோறும் அந்நிலத்தின்பால் செல்லாது மனையகத்திருப்பானாயின், அது தான் செல்லாமையால் புலந்த இல்லாளைப்போலப் புலந்துவிடும் எ - று.

பரிப்:— இது நாள்தோறும் சென்று பார்க்க வேண்டும் என்பதூஉம், பாராக்கால் பயன் குன்றும் என்பதூஉம் கூறிற்று. இவை மூன்றினானும் உழும் திறன் கூறிற்று.

பரிதி:— வயல்தலைக்குச் செல்லாமல் இருப்பின் வயல் என்னும் பெண் வாடும்; குலமகள் தன்கணவனைக் காணாமல் வாடுமாப்போல எ - று.

காளிங்:— தன் நிலக் கிழத்தியைப் பயிர் முகத்துத் தான் சென்று பல நாளும் விழி ஓட்டிப்பாரானாகில், அந்நிலமடந்தை அவனை

---

*'நிலமடந்தை புல்லாள் புரள விடும்' காளிங்கர் பாடம்.

என்றும் மேவாளாகித் தனக்கு அலங்காரம் ஆகிய பயிர்க்கோலம் அழிந்து தன்னோடு பொருந்தி வாழாளாகிப் புலந்து இவன் வாழ்க்கையைப் புரள விடும் எ - று.

நிலம் புலந்து இல்லாளை ஊடிவிடும் என்பாரும் உளர். கற்புடை மகளிரை ஊடி விடும் என்பது பொருள் அல்ல. கிழவன் என்றது அந்நிலத்துக்கு உரியன் என்றது.

இனி மற்று இங்ஙனம் உழுத் குடிசெய்து இனிது வாழ்வார்க்கும் அதனை அவ்வாறு இயற்றாது இகழ்ந்து இருப்பின், இல்வாழ்க்கை புரளும் என்பதனால் வறுமை வந்து எய்தும் குறிப்பு உணர்த்தியமையான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

ஒப்புமைப்பகுதி:

"அகனில வேறு பாட்டின் இயல்செவ்வி யறிந்து மள்ளர்
தகவினை முயற்சி செய்யக் காமறால் சாற்று நான்கு
வகைநலார் பண்பு செவ்வி அறிந்துசேர் மைந்தர்க் கின்பம்
மிகவிளை போகம் போன்று விளைந்தன பைங்கூழ் எல்லாம்."

—திருவிளை. திருநாட்டு. 26.

"பூமி விரும்பு." —ஆத்தி. 82.

"மாடு மேய்க்காமல் கெட்டது
பயிர் பார்க்காமல் கெட்டது." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"மைபார்த்த புன்பயிர்க்கும் வான்பயிர்க்கும் போய்ப்பலகால்
செய்பார்க்க வேண்டும் தினகரா - மெய்பார்த்துச்." —தினகர. 108

குறிப்பு:

'உடையான் காற்றுப்படாத பயிர் ஒருமுழம் கட்டை' என்பது பழமொழி. இல்லாள் ஊடின் தலைவன் தற்போது போகமிழப்பான். நிலமும் விளைவு குன்றும். இல்லாள் ஊடல்நீங்கின் போகமிகுமாறு போல நிலம் விளைவிப்பின் ஒருக்காலும் சேர்த்து விளையாது; இழந்தபோகம் இழந்ததுதான்.

—தொகுப்பாசிரியர்.

1040. இலமென் றசைஇ *இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். (௪0)

உரைப்பகுதி :

பரிமே:— இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின் - யாம் வறியேம் என்று சொல்லி மடிந்திருப்பாரைக் கண்டால், நிலம் என்னும் நல்லாள் நகும் - நிலமகள் என்று உயர்த்துச்சொல்லப்படுகின்ற நல்லாள் தன்னுள்ளே நகாநிற்கும்.

உழுதல் முதலிய செய்வார் யாவர்க்கும் செல்வம் கொடுத்து வருகின்றவாறுபற்றி நல்லாள் என்றும், அதுகண்டு வைத்தும் அது செய்யாது வறுமையுறுகின்ற பேதைமைபற்றி நகும் என்றும் கூறினார். இரப்பாரை என்று பாடம் ஓதுவாரும் உளர். இதனான் அதுசெய்யாத வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. வருகின்ற அதிகார முறைமைக்குக் காரணமும் இது.

மணக்:— பொருளிலோம் என்று சோம்பி இரப்பாரைக் கண்டால், நிலமாகிய நல்லாள் இகழ்ந்து நகும் எ - று.

இது நிலம் மடியில்லாதார்க்கு வேண்டியது கொடுக்கும் என்றது.

†பரிதி:— ... .

காளிங்:— வறுமையால் கால் தளர்ந்து ஒருவர்பால் சென்று பெரிதும் இல்லா ஆளரோம் என்று இங்ஙனம் தம் நாவினால் இளி வந்த சொல்லி இரப்பாரைக் காணும் அளவில் நில மடந்தை என்னும் இத் தூயவள் நகுவள்: எனவே தாம் வேண்டுவ விளைத்துக் கொண்டு இனிது இவர் அலவுறுவதே என்று இவர்க்கு இரங்கிச் சிரிக்கும் என்பது பொருள் எ - று.

---

*'இரப்பாரை' காளிங்கர் பாடம்.

†இவர் உரை கிடைக்கவில்லை,

மேற்கோள்பகுதி:

மயிலை:— உருவக இலக்கணம் விளங்க நில்லாமல் அதனிடத்து மயங்கி நின்றதற்கு மேற்கோள். (நன். 409.)

சங்கர:— ஷை (நன். 410.)

குறள்வைப்புமுறை

பரிமே:— சுழன்றும், உழுவார், உழுதுண்டு, பலகுடை, இரவார், உழவினார், தொடிப்புழுதி, ஏரினும், செல்லான், இலமென்று.

மணக்:— சுழன்றும், தொடிப்புழுதி, ஏரினும், செல்லான், இரவார், உழவினார், உழுதுண்டு, பலகுடை, உழுவார், இலமென்று,

பரிதி:— உழுவார், உழுதுண்டு, இரவார், பலகுடை, உழவினார், சுழன்றும், செல்லான், தொடிப்புழுதி, ஏரினும், இலமென்று.

காளிங்:— உழுவார், சுழன்றும், உழுதுண்டு, உழவினார், இரவார், இலமென்று, தொடிப்புழுதி, ஏரினும், பலகுடை, செல்லான்.

105. நல்குரவு.

தொகுப்புரை :

வறுமையைப் போலத் துன்பந்தருவது வறுமையே; பிறிதொன்றும் இல்லை. வறுமையென்னு மாபாவி ஒருவனுக்கு இம்மை மறுமை இன்பங்களைக்கெடுக்கும். வறுமையென்னும்பேராசை குடிப்பிறப்பையும் அதற்கேற்றசொல்லையும் ஒருங்கே கெடுக்கும். வறுமை குடிப்பிறந்தாரிடத்தும் இழிவான சொல்லையுண்டாக்கும். வறுமைத் துன்பத்திலிருந்தே எல்லாத் துன்பங்களும் விளைகின்றன. உயர்ந்த நூலை நன்கு ஆராய்ந்து நன்றாகச் சொன்னாலும், வறியவர் சொற்கள் பொருளற்றதாகும். அறத்தொடு பொருந்தாமையான் விளைந்த வறுமையையுடையவனைப் பெற்றதாயும் பிறன்போல நோக்குவள். நேற்றுக் கொன்றாற்போல வருந்திய வறுமை இன்றும் என்பால் வந்து விடுமோ? தீயில் தூங்கலாம் வறுமையில் உறக்கம் வாராது. வறியர் உடற்பற்றையும் விடக்கடவர்; அங்ஙனம் விடாதவர் உப்புக்கும், காடிக்கும் கூற்றாவர்.]

அதிகாரப்பொருள் :

பரிமே:— அஃதாவது நுகரப்படுவன யாவும் இல்லாமை.

மணக்:— நல்குரவாவது பொருளில்லாதார்க்கு உளதாகும் குற்றம் கூறுதல். இஃது உழவில்லாதார்க்கு உளதாவ தொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

1041. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. (க)

உரைப்பகுதி :

பரிமே:— இன்மையின் இன்னாதது யாது எனின் - ஒருவனுக்கு வறுமைபோல இன்னாதது யாது என்று வினவின், இன்மையின் இன்னாதது இன்மையே - வறுமைபோல இன்னாதது வறுமையே, பிறிதில்லை.

இன்னாதது துன்பஞ்செய்வது. ஒப்பது இல்லை எனவே மிக்கது இன்மை சொல்ல வேண்டாவாயிற்று.

மணக்:— நல்குரவுபோல இன்னாதது யாது எனின், நல்குரவு போல இன்னாதது தானே எ - று.

இது தன்னை யொத்த இன்னாதது பிறிதில்லை என்றது.

பரிதி:— இன்மையாகிய பொல்லாப்புக்குள்ளும் பொல்லாப்பு யாது எனில், மிடியே எ - று.

காளிங்:— ஒருவர்க்கு இல்லாமையிற் காட்டினும் பொல்லாதது யாதோ எனின் இல்லாமையின் பொல்லாதது பின்னும் அவ்வில்லாமையே; பிறிது ஒன்றும் இல்லை: இதனைப் பற்ற இன்னுங்கு உடையது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"வறுமை போல இன்னாது வறுமை யன்றி வேறில்லை
மறுவின் மொழிகள் சோர்வுபடும்." —விநா. அரசி. 152.

"எற்றுள்ளும் இன்மையின் இன்னாத தில்லை." —நான்மணிக் 30.

குறிப்பு:

'இன்மையின் இன்னாதது' என்புழி இன்மை என்பது காரண ஆகுபெயராய் வறுமையான் விளைந்த துன்பத்தை யுணர்த்திற்றாகக்கொண்டு துன்பத்துள் துன்பம் யாதெனின் வறுமையிற்சிறந்த வறுமையே இன்னாதது என்பாரும் உளர். பரிமேலழகர் வறுமையைப் போல இன்னாதது வறுமையே என இயைபின்மையணியாகக் கொள்வர். இல்லாமையின் பொல்லாதது இல்லாமையே என எல்லைப்பொருளாக உரை காண்பர் காளிங்கர்.

—தொகுப்பாசிரியர்.

1042. இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி * வரும். (உ)

உரைப்பகுதி

பரிமே:— இன்மை என ஒருபாவி - வறுமை என்று சொல்லப் படுவதொரு பாவி, மறுமையும் இம்மையும் இன்றி வரும் - ஒருவனுழை வருங்கால் அவனுக்கு மறுமை இன்பமும் இம்மை இன்பமும் இல்லையாக வரும்.

* "விடும்" மணக்குடவர் பாடம்.

இன்மை என ஒருபாவி என்பதற்கு மேல் † "அழுக்காறெனை ஒரு பாவி" என்புழி உரைத்தாங்கு உரைக்க. மறுமை இம்மை என்பன ஆகுபெயர். ஈயாமையானும் துவ்வாமையானும் அவை இலவாயின. இன்றிவிடும் என்று பாடமோதிப் பாவியால் என விரித்துரைப்பாரும் உளர்.

மணக்:— நல்குரவு என்று கூறப்படுகின்ற நிகரில்லாத பாவத்தை யுடையவன், இம்மையின்கண்ணும் மறுமையின்கண்ணும் நுகர்ச்சி இன்றி விடும் எ - று.

தன்மம் பண்ணுமையால், மறுமையின்கண்ணும் நுகர்ச்சியில்லாமை ஆயிற்று. இது நல்குரவு துன்பமாக்கும் என்றது.

பரிதி:— இல்லாமை என்னும் தீய பாவி வந்தால் இம்மையிலும் மறுமையிலும் துன்பம் தரும் எ - று.

காளிங்:— இல்லாமை என்று எடுத்து உரைக்கப்பட்ட இணை இறந்த பாவி யாதொருவர் மாட்டு வரும்பொழுதே இம்மை ஆக்கமும் மறுமை ஆக்கமும் என்பன யாவும் இன்றித் தானே வந்து கைக்கொண்டு நிற்கும் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"இல்லோன் இன்பம் காமுற்றாங்கு." —குறுந். 120

முதுமொழிவெண்பாக்கள்:

"ஆலவா யண்ணல்தொழும் பைத்தருமி நீங்கலுற்க
மூலமாத் தேர்ந்தான் முருகேசா - ஞாலமிசை." —முருகேசர். 105.

குறிப்பு :

இன்மை ஒரு பண்பு. இதனைப் பண்பியாகப் பாவி என்றது உபசாரம். மறுமை இம்மை என்பன இடவாகுபெயராய் அவ்விரண்டிலும் நுகரப்படும் இன்பங்களைக் காட்டின. இன்மை இயற்கையன்றி முயற்றின்மையான் வருவது எனக் கீழ் ஆள்வினையுடைமையில் அறிவித்தாராதலின் வரும் என்றார்.

—தொகுப்பாசிரியர்.

† குறள். 168.

1043. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குர வென்னும் நசை. (ங)

உரைப்பகுதி:

பரிமே:— நல்குரவு என்னும் நசை - நல்குரவு என்று சொல்லப் படும் ஆசை, தொல்வரவும் தோலும் தொகையாகக் கெடுக்கும் - தன்னால் பற்றப்பட்டாருடைய பழைய குடிவரவினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒருங்கே கெடுக்கும்.

நசை இல்வழி நல்குரவும் இல்லையாகலின் நல்குரவையே நசை யாக்கி, அஃது அக்குடியில் தொல்லோர்க்கு இல்லாத இழிதொழில்களையும் இளிவந்த சொற்களையும் உளவாக்கலான் அவ்விரண்டனையும் ஒருங்கு கெடுக்கும் என்றார்: *"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்" என்றார் பிறரும். தோலாவது "இழுமென் மொழியால் விழுமியது நுவறல்" என்றார் தொல்காப்பியனாரும். இதற்கு உடம்பு என்று உரைப்பாரும் உளர்; அஃது அதற்குப் பெயராயினும் உடம்பு கெடுக்கும் என்றற்கோர் பொருட்சிறப்பு இல்லாமை அறிக.

மணக்:— தொன்றுதொட்டு வருகின்ற குடிப்பிறப்பினையும் வடிவழகினையும் ஒருங்கு கெடுக்கும், நல்குரவு என்று சொல்லப்படுகின்ற ஆசைப்பாடு எ - று.

நல்குரவு ஆசையைப் பண்ணுதலினால், ஆசையாயிற்று. தோல் - ஆகுபெயர். இது குலத்தினையும் அழகினையும் கெடுக்கும் என்றது.

பரிதி:— பெருமையும் சரீரமும் கெடுக்கும் நல்குரவு எ - று.

காளிங்:— தமக்கு அனாதி முதலாக வருகின்ற குடி வரலாற்று ஒழுக்கத்தையும் தமது வலியினையும் எல்லாம் ஒக்கக் கெடுக்கும் யாதோ எனின் நல்குரவு என்று சொல்லப்படுகின்ற பிறர்மாட்டு ஒன்றை நச்சுதல் என்னும் புல்லிமையாகிய நசை உரு எ - று.

தொல் வரவு என்பது தொன்றுதொட்டு வருகின்ற குடி வரலாறு. தோல் என்பது வலி.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தோலாவது "இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்" (தொல் - பொருள். செய். 551) என்றார் தொல்காப்பியனாரும்.

---

* மணிமேகலை - பாத்திரம். 76.

ஒப்புமைப்பகுதி:

"நகையில் பெரியதோர் நல்குரவு இல்லை." —முதுமொழிக். 6 : 7.

"பிறந்த குலமாயும் பேராண்மை மாயும்
சிறந்ததங் கல்வியும் மாயும் - கறங்கருவி
கன்மேல் கழூஉம் கணமலை நன்னாட
இன்மை தழுவப்பட் டார்க்கு." —நாலடி. 285.

"குருட்டாயன் நீள்கானம் கோடல் சிவணத்
தெருட்டாயம் காலத்தால் சேரான் - பொருட்டாகான்
நல்லறமும் பேணும் நாசம் இவர்த்தானும்
பொல்லாங் குறைவிடனும் புல்." —இன். 15.

"நல்குர வடைந்த நகைசால் ஆடவர்." —பெருங். 5 : 6 : 53.

குறிப்பு:

தொல்வரவு - புறாவுக்காகத் தன் தசையீந்த குடி, கன்றின் கொலைக்காகத் தன்மகனைத் தேர்க்கீழ்க் கிடத்திய குடி என்றாற்போலப் பழம்பெருமை படைத்து வருகின்ற குடிப்பிறப்பு. தோல் - அந்தக் குடிக்கேற்ற ஆழமும் அமைதியும் ஆட்சித் திறமும் அமைந்த விழுமிய சொல். இது பரிமேலழகர் கருத்து. தோல் ஆகுபெயரால் உடல் எனக்கொண்டார் காளிங்கர். உடல் கெடுதல் தவத்தானும் விரதத்தானும் கூட நிகழ்வதாய்ச் சிறப்பினுள் ஒன்றாகக் கருதவும் கூடும் ஆதலின் உடல் கெடுதல் சிறந்தபொருளன்று எனக் காட்டிய பரிமேலழகர் கருத்து சிறந்தமை தெளிக.

—தொகுப்பாசிரியர்.

1044. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும். (ச)

உரைப்பகுதி:

பரிமே:— இற்பிறந்தார் கண்ணேயும் - இளிவந்த சொல்பிறவாத குடிப்பிறந்தார்மாட்டேயும், இளிவந்த சொல்பிறக்கும் சோர்வு இன்மை தரும் - அது பிறத்தற்கு ஏதுவாகிய சோர்வினை நல்குரவு உண்டாக்கும்.

சிறப்பும்மை அவர்மாட்டு அது பிறவாமை தோன்றநின்றது. இளிவந்தசொல் - இளிவருதற்கு ஏதுவாகிய சொல். அஃதாவது எமக்கு

ஈயவேண்டும் என்றல். சோர்வு தாம் உறுகின்ற துன்பமிகுதிபற்றி ஒரோவழித் தம்பிறப்பினை மறந்து அது சொல்லுவதாக நினைத்தல்.

மணக்:— நல்குரவு, குடிப்பிறந்தார்மாட்டேயும் இளிவரவான சொற்கள் பிறக்கும் சோர்வினை உண்டாக்கும் எ - று.

பரிப்:— இது குடிப்பழி உண்டாக்கும் என்றது.

*பரிதி:— ... ...

காளிங்:— குடிப் பிறந்தார்மாட்டேயும் வறுமை வந்த இடத்து மற்று அஃது யாது செய்யுமோ? எனில் அவரது நன்கு தெரிந்து உரைக்கும் நாவுக்கும் பெரிதும் இளி வந்த சொல் பிறப்பது ஆகிய உரைச் சோர்வு பாட்டினைக் கொடுக்கும். அது அன்றி மற்றும் இரப்புரை வந்து விழும் எ - று.

குறிப்பு:

இற்பிறந்தார்க்கு வரும் இன்மை வயிற்றுக்கில்லாமை அன்று. 'வழங்குவதுள் வீழ்தல்' என (955) விதித்தார் ஆகலின் இற்பிறந்தார்கண்ணேயும் என்ற உயர்வுசிறப்பும்மை இளிவந்த சொற்பிறவாமை தோன்ற நின்றது என்றார் பரிமேலழகர். சோர்வு - மறதி.

—தொகுப்பாசிரியர்.

1045. நல்குர வென்னும்இடும்பையுள் பல்குறைத்
துன்பங்கள் சென்று படும். (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— நல்குரவு என்னும் இடும்பையுள் - நல்குரவு என்று சொல்லப்படும் துன்பம் ஒன்றனுள்ளே, பல் துன்பங்கள் சென்றுபடும் - பல துன்பங்களும் வந்து விளையும்.

குறை - இசைநிறை. செலவு விரைவின்கண் வந்தது. துன்பமும் தானும் உடனே நிகழ்தலின் நல்குரவைத் துன்பமாக்கியும், அத்துன்ப மடியாகச் செல்வர்கடைநோக்கிச் சேறல் துன்பமும், அவரைக் காண்டல்

*இவர் உரை கிடைக்கவில்லை.

துன்பமும், கண்டால் மறுத்துழி நிகழுந்துன்பமும், மருவழியும் அவர் கொடுத்தது வாங்கல் துன்பமும், அது கொடுவந்து நுகர்வன கூட்டில் துன்பமும் முதலாயின நாடோறும் வேறுவேறாக வருதலின் எல்லாத் துன்பங்களும் உளவாம் என்றும் கூறினார். இவை ஐந்து பாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப்பட்டது.

மணக்:— வறுமை எனப்படும் இடும்பையுள் பலவாகிய வன்மை உடைய துன்பங்கள் வந்து சோர்வுபடும் எ - று.

இது துன்பங்கள் சென்றுளவாம் என்றது. பல்குரைத் துன்பம் - இரப்பார்க்கு உரைக்கத் துன்பம்.

பரிப்:— நல்குரவாகிய துன்பத்தின் உள்ளே பல துன்பங்களும் சென்று தோற்றும் எ - று.

பரிதி:— மிடியன் என்கிற விதனத்தினாலே, பலபல துன்பம் உண்டாகும் எ - று.

காளிங்:— வறுமை என்று சொல்லப்படுகின்ற இத்துன்பத்தின் கண்ணே மற்றும் பல தன்மையாகிய துயரம் ஆவது தான் இனிது உண்ணப்பெறாத துயரமும், தன் சுற்றம் ஓம்பப்பெறாத துயரமும், சான்றோர்க்கு உதவப்பெறாத துயரமும், வருவிருந்து ஓம்பப்பெறாத துயரமும் பிறவும் சென்று சேரும்; எனவே வறுமைத்துயர் உற்றோன் மற்று உறாத் துயர் ஒன்றும் இல்லை. எல்லாத் துயரும் உறுவன் என்பது பொருள் எ-று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— குரை - இசைநிறை. செலவு - விரைவின்கண் வந்தது.

மேற்கோள்பகுதி:

இளம்:— குரை என்னும் இடைச்சொல் அசைநிலைப்பொருளில் வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 267.)

சேனா:— ஷை (தொல். சொல். 272.)

தெய்வச்:— ஷை (தொல். சொல். 267.)

நச்:— ஷை (தொல். சொல். 274.)

ஒப்புமைப்பகுதி

''மெய்வலியும் செல்நிலையும் வாழ்நாளும் தூஒழுக்கும்
மெய்யா அளிக்கும் வெறுக்கைஇலார் - வையத்துப்
பல்கிளையும் வாடப் பணையணைத்தோள் சேய்திரங்க
ஒல்குயிர்நீத் தாரும் நரகு.'' —இன். 14.

குறிப்பு:

படும் என்பதற்கு உண்டாம், அழியும் என இருபொருளும் உளவாதலின் வறுமைத்துன்பத்திற்குள் எவ்வகைத் துன்பங்கள் பலவும் சென்று அழிந் தில்லையாம். வறுமைக் கொடுமையின்முன் ஏனைய துன்பங்களின் கொடுமை சூரியன் மின்மினிபோல் மாயும் எனவுமாம்.

—தொகுப்பாசிரியர்.

1046. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (சு)

உரைப்பகுதி:

பரிமே:— நற்பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும் - மெய்ந் நூற்பொருளைத் தெளிய அறிந்து சொன்னாராயினும், நல்கூர்ந்தார் சொற் பொருள் சோர்வு படும் - நல்கூர்ந்தார் சொல்லும் சொல் பொருளின்மை யைத் தலைப்படும்.

பொருளின்மையைத் தலைப்படுதலாவது யாம் இவர் சொல்லியன விரும்பிக் கேட்குமாயின் கண்ணோடி இவர் உறுகின்ற குறை முடிக்க வேண்டும் என்றஞ்சி யாவரும் கேளாமையின் பயனில் சொல்லாய் முடிதல். கல்வியும் பயன்படாது என்பதாம்.

மணக்:— நல்ல பொருளினை மிகவும் ஆராய்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார் சொல்லும் பொருள், சோர்வு படும் எ - று.

ஏற்றுக்கொள்வார் இல்லை என்றவாறாயிற்று. இது கல்வி கெடும்; சுற்றத்தாரும் கைவிடுவர் என்பது.

பரிதி:— நல்லகாரியங்களை நன்றாகச் சொன்னாலும் மிடியார் சொல் சோர்வுபடும் எ - று.

காளிங்:— மிக நன்று ஆகிய பொருளினைத் தமது நல்ல அறிவினால் நன்கு தெரிந்து சொல்லினும் அச் சொல்லுகின்றவர் வறியோர் ஆயின், அங்ஙனம் சொல்லுகின்றவர் சொற்பொருள் செவி ஏற்றுக் கொள்ளாது உக்குவிடும் கைப்பொருள் உடையாரிடத்து எ - று.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— படுசொல்வந்தே வேறுபொருள் படும் என்பதற்கு மேற்கோள். (இ. கொ. 78.)

ஒப்புமைப்பகுதி:

"நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉம்
கல்லாரே யாயினும் செல்வர்வாய்ச் சொல்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்." —நாலடி. 115.

"இல்லார் வாய்ச் சொல்லின் நயம் இன்னா." —இன்னா. 29.

"எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையும் சீர்பா டிலவாம்." —நீதிநெறி. 10.

"வறுமையில் கல்விபோலப் புலப்படா மருங்குல்."
—திருவிளை. நாடா. அவதா. 58.

"நூலுறு கல்வியை நனித்து நாடியே
வாலறி வெய்திய வரத்தி னோர்களும்
மேலுறு திருவொடும்மேவு றார்எனின்
ஞாலமங் கவர்தமை நவையுள் வைக்குமால்." —கந்த. மாயையுப. 11.

"ஏழைச் சொல் அம்பலம் ஏறாது." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"வெல்லுங்காண் செல்வரிட்ட வேடமவர் வார்த்தையிலே
செல்லுங்காண் கோவைத் தினகரா - சொல்லுங்கால்." —தினகர. 109.

"நற்றருமன் வெற்றியினை நாடி விராடனெதிர்
சொற்றமொழி சோர்ந்ததே சோமேசா - கற்றறிவால்."
—சோமேசர். 105.

குறிப்பு:

நற்பொருளை, நன்குணர்ந்து நன்கு சொலினும், என நன்கு என்பதைப் பின்னரும் கூட்டிப் பொருள்காணல் சிறப்புடைத்து. நன்கு சொல்லுதல் - கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்ச் செலச்சொல்லுதல். வறுமை பொருளுயர்வையும், சொல் வன்மையையும் பிறருள்ளங் கொள்ளாதவாறு செய்யும் என்பதாம். 'அஞ்சாறு படைத்தவன்பேச்சு ஆகாப் பேச்சானாலும் அழகான பேச்சு' என்பது பழமொழி.

—தொகுப்பாசிரியர்.

1047. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும் (எ)

உரைப்பகுதி:

பரிமே:— அறம் சாரா நல்குரவு - அறத்தோடு இயைபு இல்லாத நல்குரவு உடையான், ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப்படும் - தன்னை ஈன்றதாயானும் பிறனைக் கருதுமாறுபோலக் கருதி நோக்கப்படும்.

அறத்தோடு கூடாமை காரணகாரியங்களுள் ஒன்றுமியையாமை. நல்குரவு ஆகுபெயர். சிறப்பும்மை அவளது இயற்கை யன்புடைமை விளக்கி நின்றது. கொள்வதின்றுதலேயன்றிக் கொடுப்பது உண்டாதலும் உடைமையின் அதுநோக்கிச் சுற்றத்தார் யாவருந் துறப்பர் என்பதாம்.

பரிப்:— அறத்தைப் பொருந்தாத நல்குரவாளன், தன்னைப் பெற்ற தாயாயினும் ஏதிலாரைப்போல நோக்கப்படுவான் எ - று.

அறம் சாரா நல்குரவாவது பொருளும் இன்பமும் சிந்தித்து நல்கூர்தல். இது சுற்றத்தாரும் கைவிடுவர் என்றது.

பரிதி:— மிடி வந்தால் தன்மம் சாராது. பெற்ற தாயாகிலும் பிறர்போல பாராமுகம் பண்ணுவாள் எ - று.

காளிங்:— பிறர்க்கு உதவியாகிய அறத்தோடு தனக்கு ஓர் இயைபு இல்லாத நல்குரவு ஆகின்ற இது பின்னும் யாது செய்யுமோ எனில்; மற்று நல்கூர்ந்தானைப் பெற்ற தாயானும் உட்படப் பிறன் ஒருவனைப் போலக் காணப்படும்: எனவே இவனால் என்னை? இனி இதுவும் யாம் முன்செய்த பாவத்தில் ஒன்று என்று இகழப்படும் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நல்குரவினையுடையான் என்று உரைத்ததால் ஆகு பெயர் என்றார் என்க.

ஒப்புமைப்பகுதி:

"கல்லோங் குயர்வரைமேல் காந்தள் மலராக்கால்
செல்லாவாம் செம்பொறி வண்டினம் - கொல்லைக்
கலாஅற் கிளிகடியும் கானக நாட
இலாஅஅற் கில்லைத் தமர்." —நாலடி. 283.

"ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம் - நீத்தருவி
தாழா உயர்சிறப்பின் தண்குன்ற நன்னாட
வாழாதார்க் கில்லைத் தமர்." ௸ 290.

"பெண்டிரும் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினின் அஃகுப
வெண்டறை கின்று வெறுக்கை இலாயின்
மண்டினர் போலர்தம் மக்களும் ஒட்டார்." —வளை,

"........எல்லாத் துயரும் உடனாகும்
பிறனின் நோக்கும் ஈன்றாளும் பிள்ளாய் அதுவங் கிடின் இறத்தல்."
—விநா. அரசி. 152.

"   —இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற்று ஈன்றெடுத்தாய் வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்." —நல்வழி. 34.

"கெட்டார்க்கு உற்றார் கிளையினும் இல்லை." —பழ.

முதுமொழிவெண்பாக்கள்:

"மாமணியால் காசிபன்போய் மன்விடந்தீ ரான்வறுமைத்
தீமையினான் மீண்டான் சிவசிவா - வாழுன்." —சிவசிவ. 105.

"காவலனும் பாஞ்சாலன் கண்டு துரோணனைநீர்
ஏவரென்றான் அன்றோ இரங்கேசா - தாவில்." —இரங். 105.

குறிப்பு:

தாய்மை எந்த இழிவையும் கருதாது மகன்மை பாராட்டும் பண்பினது. ஆதலின் வறுமை காரணமாகத் தாய் வெறுத்தால் தாய்மையிலிருந்து நழுவினளாவள். ஈன்றெடுத்ததாய் வேண்டாள் என்ற பொதுவார்த்தை அவ்வளவில் அமைந்திருக்க முடியாது என்பதைத் திருவுளங்கொண்ட வள்ளுவர் அறஞ்சாரா நல்குரவு என அடை கொடுத்து விளக்கியது அறிந்தின்புறற்குரியது. வறுமை மடிமையானும், ஆய்அண் டிரனைபோலக் கைப்பொருள் அறவழியில் அளித்தலானும், கள்ளுங்கவறும் கணிகையும் முதலியவைகளை மேற்கோடலானும் எய்தப்பெறும். அவற்றுள் மடிமையான் வரும் வறுமை தாயால் அருவருக்கப்படும் அளவினதாய்த் திருந்தும் தன்மையது. அறவழியில் ஈகையால் வந்த வறுமை அழகாக அணிவாரானும் போற்றப்பெறுவது. ஏனையதே தாயானும் தொடர்பிலாதான்போல நோக்கப்படும் அளவு வெறுக்கப் படுவது என்பார் 'அறஞ்சாரா நல்குரவு' என்றார். இதனை 'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச், சான்றோர் முகத்துக் களி' என்பது வலியுறுத்தல் காண்க.

பரிமேலழகர் அறத்தொடு இயைபில்லாதவறுமை என்றும், இயைபில்லாமை யாவது வறுமையாளர் அறஞ்செய்ய முடியாமையின் அறத்திற்குக் காரணமாயும், அறஞ்செய்யாதார்க்குப் பொருள் வாராமையின் காரியமாயும் இருப்பதாகிய தொடர் பில்லாமை என்றும் கூறுவர். பானையில் இல்லாதவழி அகப்பையில் வாராமை தானே யமைந்ததாதல் போல இதுவும் இயல்பாயே அமைந்தமையின் அறஞ்சாரா நல்குரவு என்றல் பொருந்துமோ ஆய்க.

—தொகுப்பாசிரியர்.

1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு. (அ)

உரைப்பகுதி :

பரிமே:— நெருநலும் கொன்றதுபோலும் நிரப்பு - நெருநற்றும் கொன்றதுபோன்று எனக்கு இன்னாதவற்றைச்செய்த நல்குரவு, இன்றும் வருவதுகொல் - இன்றும் என்பால் வரக்கடவதோ, வந்தால் இனி யாது செய்வேன்.

அவ்வின்னாதனவாவன மேற் சொல்லிய துன்பங்கள். நெருநல் மிக வருந்தித் தன்வயிறு நிறைத்தானொருவன் கூற்று.

மணக்:— இன்றும் வரும்போலும்; நெருநலும் என்னைக் கொன்றதுபோலுற்ற நிரப்பிடும்பை எ - று.

இது நாடோறும் அச்ச முறுத்தும் என்று கூறிற்று.

பரிதி:— நேற்று மிடியாக்கின மிடி இன்றும் வரும் என்று விதனப்படுவார் எ - று.

காளிங்:— இன்றும் என்னை வந்து ஒறுப்பது கொல்லோ? நெருநலும் வந்து கொன்றதுபோல உயிரையும் உடலையும் செறுத்தும் ஒறுத்தும் அடர்த்தும் வருகின்ற வறுமைத் தொழில் எ - று.

இனி மற்று இவ்வாறு வறுமை கூர்ந்தவர்க்கு இரவுத் தொழில் அல்லது பிறிது தொழில் இன்மையான் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

1049. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது. (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் - மந்திர மருந்துகளான் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்து உறங்கலுமாம்: நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது - நிரப்புவந்துழி யாதொன்றானும் உறக்கமில்லை.

நெருப்பினும் நிரப்புக்கொடிது என்றவாறாயிற்று. இதுவும் அவன் கூற்று. இவை நான்கு பாட்டானும் நல்கூர்ந்தார்க்கு உளதாம் குற்றம் கூறப்பட்டது.

மணக்:— நெருப்பினுள்ளே கிடந்து உறங்குதலும் ஆகும்; நிரப்பிடும்பையுள் உறங்குதல் யாதொரு முகத்தினானும் அரிது எ - று.

இஃது உறங்கவொட்டாது என்றது.

பரிதி:— நெருப்பினுள்ளும் நித்திரை செய்யலாம் அக்கினித் தம்பம் பண்ணி; மிடி வருத்தத்திலே நித்திரைவாராது எ - று.

காளிங்:— யாதானும் ஒருவாற்றான் நெருப்பினுள் கிடந்து கண்துஞ்சலும் இனிதாய் இருக்கும்: எனினும் அங்ஙனம் புற நெருப்பு அன்றி அகம் சுடும் வெவ்வழலாகிய வறுமைத் தீயினுள் அது தணிக்கும் மருந்து பிறிது இன்மையான் யாதானும் ஒருவாற்றானும் கண்துஞ்சல் வறியோர்க்கு அரிது எ - று.

1050. துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. (௫௰)

உரைப்பகுதி :

பரிமே:— துப்புரவு இல்லார் துவரத் துறவாமை - நுகரப்படும் பொருள்களில்லாதார் தம்மால் செயற்பாலது முற்றத் துறத்தலேயாகவும் அது செய்யாதொழிதல், உப்பிற்கும் காடிக்கும் கூற்று - பிறர் இல்லின் உளவாய உப்பிற்கும் காடிக்கும் கூற்றாம்.

மானமழியாமையின் செயற்பாலது அதுவேயாயிற்று. முற்றத் துறத்தல் சுற்றந்தானே விட்டமையின் ஒருவாற்றான் துறந்தாராயினார் நின்ற தம் உடம்பினையும் துறத்தல். அது செய்யாது கொண்டிருத்தல் இரண்டனையும் ஆளப்பண்ணுதலின், அதனை அவற்றிற்குக் கூற்று என்றார். இனி முற்றத்துறத்தலாவது துப்புரவு இல்லாமையின் ஒருவாற்றால் துறந்தாராயினார் பின் அவற்றை மனத்தால் துறவாமை என்று உரைப்பாரும் உளர். இதனான் அஃது உளதாயவழிச் செய்வது கூறப்பட்டது.

மணக்:— நுகரும்பொருள் இல்லாதார் அப்பொருளின்மேற் பற்றறத் துறவாது வருந்துதல், உப்பிற்கும் காடிக்கும் கேடாக வேண்டி எ - று.

துறப்பாராயின், நன்று என்றவாறாயிற்று. நல்கூர்ந்தார்க்குத் துன்ப முறுதலன்றி, இன்ப நுகரும் நெறி உளவோ என்றார்க்கு, இது துறப்பாராயின், இன்பம் உறலாம் என்று கூறிற்று.

பரிதி:— மிடியினாலே துயரப்படுவார் மூன்றுவகை ஆசையைத் துறவாமல் இருப்பது, உப்புக்கும் காடிக்கும் கூற்று எ - று.

காளிங்:— தமக்கு உணவுக்கு உரம் ஆகிய கைப்பொருள் இல்லாதார் முதிரத் துறவாமை முன்னம் தாம் யாவர்மாட்டும் இனிது ஒழுகும் இனிமைக்கும் தமது நடுவு நிலைமைக்கும் ஒரு கூற்று; எனவே அஃது இவற்றைக் கொல்லும் என்பது பொருள் எ - று.

இதில் உப்பு என்பது இனிமை. காடி என்பது நடுவு நிலைமை. அஃதாவது சிறு மக்கள் பலர் கண் புதைத்து நகையாடும் இடத்து அவருள் ஒருவனை இவன் காடிச்சால் என்று நடு இருத்துவர். நடுநிலை ஆக வழக்கு என்பது அறிக. துப்புரவு இல்லாதார் என்பது உண்டிக்கு உரம் ஆகிய கைப்பொருள் இல்லாதார் என்றது. துவரத் துறவாமை என்றது முற்றத் துறவாமை.

முதுமொழிவெண்பாக்கள் :

"மூலலிங்க பூசை முயன்றபயன் வருமுன்னே
சீல முடையவிப சித்தெனவே - ஞாலத்தில்." —முதுமொழி. 155.

குறிப்பு:

மக்களுக்குள்ள இருவகைப் பற்றுள் என்பெண்டு என்மகன் என்னும் புறப் பற்று வறுமை காரணமாக வழிவிலகிச் சென்றதாதலின், என் உடல் யான் என்கிற அகப்பற்றையும் விடுக என்பது வற்புறுத்தியவாறு.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— இன்மையின், இன்மையென, தொல்வரவும், இற்பிறந்தார், நல்குரவு, நற்பொருள், அறஞ்சாரா, இன்றும், நெருப்பினுள், துப்புரவு.

மணக்:— இன்மையின், இன்மையென, தொல்வரவும், நற்பொருள், நல்குரவு, நெருப்பினுள், இன்றும், இற்பிறந்தார், துப்புரவு, அறஞ்சாரா.

பரிதி:— நற்பொருள், தொல்வரவும், அறஞ்சாரா, நல்குரவு, நெருப் பினுள், இன்மையின், துப்புரவு, இன்மையென, இன்றும், இற்பிறந்தார்.

காளிங்:— நற்பொருள், இற்பிறந்தார், நல்குரவு, நெருப்பினுள்; துப்புரவு, தொல்வரவும், அறஞ்சாரா, இன்மையின், இன்மையென, இன்றும்.

106. இரவு.

தொகுப்புரை:

[வறியார்கள் வள்ளல்களைக்கண்டால் இரக்க. வள்ளன்மையுடையார் மறைப்பராயின் அது அவர்கள் பழியாகும், இரப்பார் பழியன்று. இரந்த பொருள் வருந்தாமல் வந்து சேருமாயின் இறுதிவந்த எல்லைகண் இரப்பது ஒருவற்கு இன்பமாம். மறைக்காத மனமுடைய வள்ளல்களிடம் இரப்பதும் ஓரழகானகாரியம். மறைத்தலைக் கனவிலும் கருதாத உபகாரிகளிடம் யாசித்தலும் ஈதல்போல இன்பம் பயப்பதாம். மறையாமல் அளிப்பவர்கள் உலகத்தில் இருப்பதாலேயே இரவலர் ஏதும் சொல்லாமல், குறிப்பால், தெரிந்துகொள்ள முன்னின்று யாசித்தலை மேற்கொள்கிறார்கள். உள்ளதைக் கரந்துவைக்கும் நோய் இல்லாத வள்ளல்களைக் கண்டால் இரவலனது வறுமைத்துன்பம் அடியோடு அகலும். இரவலரைக்கண்டவுடன் இகழாது ஈவாரைக் காணின் இரவலர் மனம் உள்ளுக்குள் மகிழும். இரப்பார் இல்லையாயின் இவ்வுலகத் துள்ளார் இயக்கம் மரப்பாவை இயக்கம் போலும். இரத்தலை விரும்பும் இரவலர் இல்லையாயின் ஈவார்க்குப் புகழ்முதலிய எடுப்பு ஏது? இரவலன் இரந்தபொருள் கிட்டவில்லையானாலும் சினத்தல் கூடாது. அதற்குத் தன்வறுமையே தனக்குச்சாட்சி.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— இனி மானம் தீரா இரவு இரவாமையோடு ஒத்தலின், அதனானும் வீடெய்தற்பயத்ததாய உடம்பு ஓம்பப்படும் என்னும் அறநூல் வழக்குப்பற்றி மேல் எய்திய துவரத்துறத்தல் விலக்குதற்பொருட்டு இரவு கூறுகின்றார். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— இரவாவது பிறர்மாட்டுச்சென்று இரந்து கோடல். இது நல்கூர்ந்தார் செயலாதலின், அதன்பின் கூறப்பட்டது.

1051. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று. (க)

உரைப்பகுதி:

பரிமே:— இரத்தக்கார்க் காணின் இரக்க - நல்கூர்ந்தார் இரத்தற்கு ஏற்புடையாரைக் காணில், அவர்மாட்டு இரக்க; கரப்பின் அவர்பழி தம்பழி அன்று - இரந்தால் அவர் கரந்தாராயின் அவர்க்குப் பழியாவதல்லது தமக்குப் பழியாகாமையான்.

இரவு என்னும் முதனிலைத்தொழிற்பெயரது இறுதிக்கண் நான்கனுருபு விகாரத்தால் தொக்கது. இரத்தற்கு ஏற்புடையராவார், உரையாமை முன்னுணரும் ஒண்மை உடையராய் மாற்றாது ஈவார். அவர் உலகத்து அரியராகலின் காணின் என்றும், அவர்மாட்டு இரந்தார்க்கு இரவான்வரும் இழிவின்மையின் இரக்க என்றும், அவர் ஈதலில் குறை காட்டாமையின் கரப்பின் என்றும், காட்டுவராயின் அப்பழி தூவெள் ளறுவைக்கண் மாசுபோல அவர்கண் கடிதுசேறலின் அவர்பழி என்றும், ஏற்பிலார்மாட்டு இரவன்மையின் தம்பழியன்று என்றும் கூறினர்.

மணக்:— தமக்கு இல்லாதவிடத்து இரக்கத்தக்காரைக் காணின், இரந்துகொள்க; அவர் இல்லை என்பாராயின், அஃது அவர்க்குப் பழியாம்; தமக்குப் பழியாகாது எ - று.

இது கூறுகின்ற இரத்தல் எல்லார்மாட்டும் செய்யலாகாது என்பதூஉம், தக்கார்மாட்டு இரத்தல் ஆம் என்பதூஉம் கூறிற்று.

பரிதி:— தாதாவானவனைத் தேகி என்று கேட்க நாஸ்தி என்றால் அவர்பேரில் குற்றம்; தம்மிடத்தில் குற்றமில்லை எ - று.

காளிங்:— இங்ஙனம் வறியோர்மாட்டு இரக்கம் உடையாரைக் கண்ட இடத்துத் தாம் ஒன்று இரக்கவேண்டின் இரந்துகொள்க: மற்று அவர் கரக்க நினைப்பின் அஃது அவர் பழியாம்: இத்துணை அல்லது வேறு தம்பழி என்பது ஒன்று அன்று எ - று,

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— இரத்தக்கார் - இரத்தற்கு ஏற்புடையார் என்று உரைத்து, இரவு என்னும் முதனிலைத்தொழிற்பெயர் இறுதிக்கண் நான்கனுருபு விகாரத்தால் தொக்கது என்றார் என்க. "உள்ளப்படுவன" (87) என்னும் கோவையாருள் "உரைத்தக்கவர்" என்பதும் அது.

ஒப்புமைப்பகுதி :

"தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்பர்எனப் பட்டார்க்கு
உற்ற குறையை உரைப்பதாம் - தெற்ற
அறையார் அணிவளையாய் தீர்தல் உறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய்."

—பழ. நா.

"புரந்தாடு மையர் திருவெங்கை வாணர் பொருப்பில்நின்ற
வரந்தாழ் அயில்கண் மடமா திரத்தக்கர் ஆதலினால்
இரந்தாய் குவமிவர் தந்தன நாமின் றினியநெஞ்சே
கரந்தால் நமக்குப் பழியுள தாயின் கழறுகவே." —திருவெங்கை. 6.

"இயல்வது கரவேல்." —ஆத்தி. 3.

குறிப்பு:

பின் "கேளாக் குறையே குறை" என இரவலன் கவல ஏதுவாமாகலின் இரத்தல் தம்பழியன்று என்றார்.

—தொகுப்பாசிரியர்.

1052. இன்பம் ஒருவற் கிரத்தல் *இரந்தவை
துன்பம் உறாஅ வரின். (உ)

உரைப்பகுதி:

பரிமே:— ஒருவற்கு இரத்தல் இன்பம் - ஒருவற்கு இரத்தல் தானும் இன்பத்திற்கு ஏதுவாம், இரந்தவை துன்பம் உறா வரின் - இரந்தபொருள்கள் ஈவாரது உணர்வுடைமையான் தான் துன்புறாமல் வருமாயின்.

இன்பம் ஆகுபெயர். உறாமல் என்பது கடைக்குறைந்து நின்றது. துன்பம் சாதியொருமைப்பெயர். அவையாவன ஈவார்கண் காலமும் இடனும் அறிந்துசேறலும், அவர் குறிப்பறிதலும், அவரைத்தம் வயத்தராக்கலும், அவர் மனநெகிழ்வன நாடிச்சொலலும் முதலிய வற்றான் வருவனவும், மறுத்துழி வருவனவுமாம். அவையுறாமல் வருதலாவது அவர் முன்னுணர்ந்து ஈயக்கோடல். இரந்தவர் துன்பமுறாவரின் என்று பாடம் ஓதி, இரக்கப்பட்டவர் பொருளின்மை முதலியவற்றால் துன்புறாது எதிர்வந்து ஈவராயின் என்று உரைப்பாரும் உளர். இவை இரண்டு பாட்டானும் நல்குரவான் உயிர் நீங்குமெல்லைக்கண் இளிவில்லா இரவு விலக்கப்படாது என்பது கூறப்பட்டது.

மணக்:— இரத்தல் ஒருவர்க்கு இன்பமாம்; இரக்கப்பட்ட பொருள்கள்தான் வருத்தமுறாதவகை எய்துமாயின் எ - று.

இது வேண்டிய பொருள் பெறின், துன்பமாகாது என்றது.

---

*"இரந்தவர்" காளிங்கர் பாடம்.

பரிப்:— இவை மூன்றினானும் இரவு தீது என்பாரை மறுத்த வாறாயிற்று.

பரிதி:— தேகி என்பார்க்கு மகிழ்ச்சி எய்தும்; தாதாவிடத்திலே தயவுண்டாகில் எ - று.

காளிங்:— பின் எஞ்ஞான்றும் இரப்பு என்னும் துன்பம் உறார் ஆயின், ஒருவர்பால் சென்று ஒருவர் இரத்தல் பெரிதும் துன்பமே அன்றே. அதுவும் ஒருவர்க்கு இன்பம் தரும். எப்பொழுது எனில் அங்ஙனம் ஒருவர்மாட்டு இரந்தவர் பின்பு எஞ்ஞான்றும் ஒரு வறுமைத் துயர் உறாவாறு வாய்ப்பப் பெற்றுவருவாராயின் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— உறாமல் என்பது, உறா எனக் கடைக்குறையாயிற்று. துன்பம்: சாதிப்பெயர்.

முதுமொழிவெண்பாக்கள்:

"ஒக்கலைவிட் டிக்களத்தை ஓகையினி யற்பகையார்
முக்கணனுக் கீந்தார் முருகேசா - மிக்குவரும்." —முருகேசர். 106.

குறிப்பு:

'இரவின் இளிவந்ததில்' என்றார் ஈண்டு 'இரத்தல் இன்பம்' என்பது இயையுமோ எனின், இறுதிவந்த எல்லை என, இன்றியமையாக்காலமும் 'இரந்தவை துன்பமுறாவரின்' என இரக்கப்படுவார் எளிவந்த கருணையும் கூடியவழி இயையும் என்றது.

—தொகுப்பாசிரியர்.

1053. கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்னின்(று)
இரப்புமோர் ஏஎர் உடைத்து. (௩)

உரைப்பகுதி :

பரிமே:— கரப்பிலா நெஞ்சின் கடன் அறிவார் முன் நின்று இரப்பும் - கரத்தலில்லா நெஞ்சினையுடைய மானமறிவார்முன்னர் நின்று அவர்மாட்டு ஒன்று இரத்தலும், ஓர் ஏர் உடைத்து - நல்கூர்ந்தார்க்கு ஓர் அழகுடைத்து.

*"சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு" என்றதனால் அவர்க்கு அது கடன் எனப்பட்டது. அதனை யறிதல் - சொல்லுதலுற்று உரைக்கலாகாமைக்கு ஏதுவாய அதன் இயல்பினை அறிதல். அவ்வறிவுடையார்க்கு முன்னிற்றல் மாத்திரமே அமைதலின் முன்னின்று என்றும், சொல்லுதலான்வரும் சிறுமை எய்தாமையின் ஓர் ஏருடைத்து என்றும் கூறினார். உம்மை அதன் இழிபு விளக்கிநின்றது.

மணக்:— கரப்பிலாத நெஞ்சினை யுடைய ஒப்புரவறிவார் முன்பே நின்று, இரத்தலும் ஓர் அழகுடைத்து எ - று.

இஃது ஒப்புரவறிவார்மாட்டு இரத்தலாம் என்றது.

பரிப்:— ஏர் - யாமும் இவ்வாறு செய்யவேண்டும் என்று கருதுதல்.

பரிதி:— நாஸ்தி என்னும் சொல் அறியாதார் உலகம் செய்யும் முறைமை அறிவாரிடத்திலே தேகி என்பதும் பெருமை உடைத்து எ - று.

காளிங்:— இரவலர்க்கு என்றும் இலரென்பது இலருமாய் நெஞ்சினால் ஈதல் கடப்பாட்டின் பயனும் அறிவார் யாவர்? மற்று அவர் முன் நின்று பிறர் ஒன்று இரக்கும் இரப்புத்தானும் இங்கு ஓர் அழகு உடைத்து எ - று.

ஒப்புமைப்பகுதி:

"தொடுத்துங் கொள்ளாது அமையலென் அடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே." —புறம். 164 : 10 - 14.

1054. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு. (௪)

உரைப்பகுதி:

பரிமே:— கரத்தல் கனவிலும் தேற்றாதார்மாட்டு இரத்தலும் - தமக்கு உள்ளது கரத்தலைக் கனவின்கண்ணும் அறியாதார்மாட்டுச் சென்று ஒன்றனை இரத்தலும், ஈதலே போலும் - வறியார்க்கு ஈதலே போலும்.

*குறள். 963.

உம்மை ஈண்டும் அவ்வாறுநின்றது. தான் புகழ்பயவாதாயினும் முன்னுளதாய புகழ் கெட வாராமையின்; ஈதலேபோலும் என்றார். ஏகாரம் ஈற்றசை.

மணக்:— கரத்தலைக் கனவின்கண்ணும் அறியாதார்மாட்டு, இரந்து சேறலும் கொடுப்பதனோடு ஒக்கும் எ - று.

பரிப்:— ஈதல் போலும் என்றது இரந்தேம் என்று சிறுமை உறுதல் இன்றி உயர்ந்தாரைப் போலப் பெருமிதத்தர் ஆவர் என்றது. மேல் இகழாது ஈவார்மாட்டு இரக்கம் ஆம் என்றார். அவர் மூவகையர் ஆதலின் முற்பட உதவுவர்மாட்டு இரக்கல் ஆம் என்று கூறப்பட்டது. கரத்தல் கனவிலும் தேறுதார் என்றமையால் உதவுவார் என்று கொள்ளப்படும்.

பரிதி:— தேகி என்பது நல்லதே; அது எதனால் என்னில் பொல்லாரிடத்தில் கேளாது இருப்பாராகில் எ - று.

காளிங்:— இரத்தலும் ஈதலே போலும் இனிமையை உடைத்து: அஃது எவ்விடத்து எனில், இல்லை என்னும் சொல்லினைக் கனவிலும் அறியாதவர் இடத்து; எனவே இரவு பகல் என்னும் பொழுது வரைவு இன்றி எப்பொழுதும் பிறர்மாட்டு இரக்கம் உடைய இயல்பினரிடத்து எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஏகாரம் - ஈற்றசை.

மேற்கோள்பகுதி:

சிவஞான:— "காட்டிய கண்ணே தனைக்காணு" காட்டிய என்பது தன்வினைப்பொருள்பட நின்றது. "தேற்றுதார்மாட்டு" என்புழிப்போல. (சிவஞான. சூ. 9. அதி. 2.)

முதுமொழிவெண்பாக்கள்

"இன்றிரப்ப தாகா திரந்தாலும் முன்னிடத்தில்
சென்றிரப்ப தேற்றம் தினகரா - ஒன்றை." —தினகர. 110.

"ஈசர் இரந்தாலும் ஈந்தாரோ டொத்துயர்ந்தார்
நேச ரிடத்திருந்து நிற்றலால் - பேசின்." —முதுமொழி. 156.

" தருமகுண மாவலிபால் தானமெனச் சேர்ந்தான்
திருமகி ணன்றான் சிவசிவா - பரிவின்." —சிவசிவ. 106.

" அங்கியும்பர் கோன்கா வருந்தமினோ தர்ச்சுனன்பால்
இங்கிதமாப் பெற்றான் இரங்கேசா - மங்கா." —இரங். 106.

குறிப்பு:

கரத்தல் கனவிலும் தேற்றாதார் இரத்தலில்லாத நாளை இன்பநாளாக எண்ணாராதலின், இரப்பார் இரந்து ஈவார்க்கு இன்பம் விளைக்கும் ஈகையைச் செய்கின்றார்கள் ஆதலின் இரத்தலும் ஈதலுலே போலும் என்றார்.
—தொகுப்பாசிரியர்.

1055. கரப்பிலார் வையகத் துண்மையான் *கண்ணின்(று)
இரப்பவர் மேற்கொள் வது. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— கண்ணின்று இரப்பவர் மேற்கொள்வது - சொல்லுதல்மாட்டாது முன்னிற்றல் மாத்திரத்தான் இரப்பார் உயிரோம்பற் பொருட்டு அதனை மேற்கொண்டு போதுகின்றது, கரப்பிலார் வையகத்து உண்மையான் - அவர்க்கு உள்ளது கரவாது கொடுப்பார் சிலர் உலகத்து உளராய தன்மையானே, பிறிதொன்றான் அன்று.

அவரில்லையாயின், மானநீக்கமாட்டாமையின் உயிர் நீப்பர் என்பதாம்.

மணக்:— ஒருவன் முன்னே நின்று இரத்தலை இரப்பார் மேற்கொள்வது கரப்பிலாதார் உலகத்து உண்டாதலானே; மற்றொன்றாலன்று, எ - று.

மேல் கரவாதார்மாட்டு இரக்க என்றார்; உலகத்தில் அவரைப் பெறுதல் அரிது என்பதற்கு, இது கூறினர்.

பரிதி:— தேகி என்றால் நாஸ்தி என்னாதபேர் பூமியில் இருக்கையினாலே இரப்போர் பெரியவர் எ - று.

காளிங்:— ஏற்பவர்க்கு இங்ஙனம் இல்லை என்பது இல்லா அன்புடையாளரும் இவ்வுலகத்துச் சிலர் உளர் ஆகலான், இது காரணமாக இவ்விரவு தொழிலைத் தம்பால் என்றும் மேற்கொள்வது எ - று.

---

* 'கண்ணின்' காளிங்கர் பாடம்.

1056. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் *ஒருங்கு கெடும். (சீர்)

உரைப்பகுதி :

பரிமே:— கரப்பிடும்பை இல்லாரைக் காணின் - உள்ளது கரத்தலாகிய நோயில்லாரைக் கண்டால், நிரப்பிடும்பை எல்லாம் ஒருங்கு கெடும் - மானம்விடாது இரப்பார்க்கு நிரப்பான்வரும் துன்பங்களெல்லாம் சேரக்கெடும்.

கரத்தல் ஒருவற்கு வேண்டுவதொன்று அன்மையின் அதனை நோய் என்றும், அஃது இல்லாத இரக்கத்தக்காரைக் கண்டபொழுதே அவர் கழியுவகையராவராகலின் எல்லாம் ஒருங்கு கெடும் என்றும் கூறினார். இடும்பை ஆகுபெயர். முழுதும் கெடும் என்று பாடம் ஓதி, எஞ்சாமல் கெடும் என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— கரப்பிடும்பை இல்லாதாரைக் காண்பாராயின், நிரப்பினான் ஆகிய இடும்பை யெல்லாம் ஒருங்கு கெடும் எ - று.

பரிப்:— கரப்பும் இடும்பையும் இல்லாதாரைக் காண்பராயின் நிரப்பினான் ஆகிய இடும்பையெல்லாம் ஒருங்கு கெடும் எ - று.

பரிதி:— நாஸ்தி என்னுமல் கொடுக்கும் பெரியோரைக் கண்ட அளவில் தன் மிடி கெடும் எ - று.

காளிங்:— தம்பால் வந்து இரப்பார்க்குத் தாம் இல்லை என்னும் இவ்விடும்பை இல்லாதார் யாவரும் அவரைக்கண்ட இடத்துப் பிறர் இரப்பு என்கின்ற இடும்பையானது எல்லாம் ஒன்று ஒழியாமையே கெட்டு விடும்: எனவே இரக்கம் உடைய செல்வச் சிறப்பினர் ஈயுங் காலத்தும் பிறர் மாட்டுச் சென்று இனி ஒரு குறைகூறி இரக்க வேண்டாதவாறு ஈவாரும் உலகத்து உளர் எ - று.

குறிப்பு:

ஆயுட்காலமுழுதும் பிறர்மாட்டுச் சென்று இரக்கவேண்டாமையின் இடும்பை ஒருங்குகெடும் என்பர் காளிங்கர். கரப்பிடும்பையை உம்மைத் தொகையாகக்கொண்டு மறைத்தலும் துன்பமும் எனப்பொருள் காண்பர் பரிப்பெருமாள். கரத்தலாகிய நோய் என்பர் பரிமேலழகர்.

—தொகுப்பாசிரியர்.

* 'முழுதும்' காளிங்கர் பாடம்.

1057. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின் - தம்மை அவமதித்து இழிவு சொல்லாது பொருள்கொடுப்பாரைக் கண்டால், உள்ளம் மகிழ்ந்து உள்ளுள் உவப்பது உடைத்து - அவ்விரப்பாரது உள்ளம் மகிழ்ந்து உள்ளுள்ளே உவக்கும் தன்மை உடைத்து.

இகழ்ந்தெள்ளாது எனவே, நன்குமதித்தலும் இனியவைகூறலும் பெறுதும். நிரப்பிடும்பை கெடுதலளவேயன்றி ஐம்புலன்களானும் பேரின்பம் எய்தினுராகக் கருதலான், உள்ளுளுவப்பதுடைத்து என்றுர். இவை ஐந்துபாட்டானும் அவ்விரத்தக்காரது இயல்பு கூறப்பட்டது.

மணக்:— இரப்பாரைக் கண்டால் உதாசனித்தலும் இன்றி, அவர் சொன்ன மாற்றத்தை இகழ்ந்துரைத்தலும் செய்யாது, வேண்டப் பட்டதனைக் கொடுப்பாரைக் காணில், இரந்து சென்றவர் மனம் மகிழ்ந்துநின்று உள்ளுள்ளே இன்புறுந் தன்மையுடைத்து எ - று.

பரிப்:— மேல் இரக்கத் தக்கார் ஆவார் எத்தன்மையார் என்றுர்க்கு இது கூறப்பட்டது.

பரிதி:— கேளாது கொடுப்பவரிடத்திலே தேகி என்பது மிடி கெட்டுச் சந்தோஷமாகும் எ - று.

காளிங்:— தம்மாட்டு ஒருவர் இரந்து வந்த இடத்துத் தாம் அவரை அனுதரித்து அவமதி பண்ணுது அகம்மகிழ்ந்து ஈவாரைக் காணப் பெறின், அவ்விரப்போர் உள்ளம் பெரிதும் மகிழ்ந்து மற்று அவர் உபகார வளத்தை உள்ளுதொறும் உள்ளுதொறும் சால உள்ளுள்ளே உவப்பதனை உடைத்து எ - று.

ஒப்புமைப்பகுதி :

"எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது." —இனியவை. 30.

"நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தார் என்ஞான்றும்
தம்மாலாம் ஆக்கம் இலரென்று - தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமும்
தெருண்ட அறிவி னவர்." —நாலடி. 301

முதுமொழிவெண்பாக்கள்:

"கஞ்சாறர் சோபனப்பெண் கூந்தல் கடிதளிக்கத்
துஞ்சு மகிழ்ச்சிகொண்டாய் சோமேசா - நெஞ்சின்."
—சோமேசர். 106.

"மயற்பகையுள் ளுள்ளுவப்ப மாதவர்க்கில் லாளை
இயற்பகைஇ கழ்ந்தெள்ளா ரீந்தார் - செயற்பால்" —திருத். 3.

குறிப்பு:

இகழ்தல் - அவமதித்தல்; இது செயற்கண்ணது. எள்ளுதல் - இழிசொல் கூறுதல்; இது சொற்கண்ணது. மேல் 'இரத்தக்கார்' என்றதன் இலக்கணம் உணர்த்தியவாறு.

—தொ குப்பாசிரியர்.

1058. இரப்பாரை இல்லாயின் *ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. (அ)

உரைப்பகுதி:

பரிமே:— இரப்பார் இல்லாயின் - வறுமையுற்று இரப்பார் இல்லையாயின், ஈர்ங்கண்மா ஞாலம் - குளிர்ந்த இடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார் செலவு வரவுகள், மரப்பாவை சென்று வந்தற்று - உயிரில்லாத மரப்பாவை இயந்திரக்கயிற்றால் சென்று வந்தாற்போலும்.

ஐகாரம் அசைநிலை. ஞாலம் என்னும் ஆகுபெயர்ப்பொருட்கு உவமையோடு ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளார் என்றது அவரை ஒழிந்தாரை. அவர்க்கு ஈதலைச்செய்து புகழும் புண்ணியமும் எய்தாமையின், உயிருடையரல்லர் என்பதாம்; "ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்" என்றார் பிறரும். இத்தொடையின்பம் நோக்காது இரப்பவரில்லாயின் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

மணக்:— குளிர்ந்த இடத்தையுடைய பெரிய உலகம் இரக்கு மவர்களை உடைத்தல்லவாயின், உள்ள மக்களது இயக்கம் மரப்பாவை சென்றுவந்து இயங்கினாற்போலும் எ - று.

இஃது இரத்தலும் ஈதலும் உலகியல்பாதலான், இரத்தல் இழிவு என்று கொள்ளப்படாது என்றது.

* 'ஈன்கண் மா ஞாலம்' காளிங்கர் பாடம்.

பரிதி:— தேகி என்பார் இல்லாத நாட்டின், தாதாக்கள் மரப்பாவைவிளையாடுதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— இனிது இடம் உடைத்தாகிய பெரிய உலகமானது இரப்போரை இலதாயின், இனிது அறம் இயற்றும் இயல்பு உடையோர் யாரையும் இலது இவ்வுலகு என்பதாம்: அதனால் மற்று ஈண்டு வாழும் மக்கள் உருபு அனைத்தும் மரத்தினால் மக்கள் உருவாக இயற்றிய மரப் பாவையானது போயும் வந்தும் திரிகின்ற அத்தன்மைத்து; எனவே இருமைப் பெறுதியும் அறியா உருபினவாம் என்பது பொருளாயிற்று எ - று.

ஈன்கண் மாஞாலம் என்பது இடம் மிகவும் பெரிய உலகம் என்பது.

ஒப்புமைப்பகுதி:

"புலவர், இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்றென்று - உரைப்பாவில்
வைதலை அஞ்சி வளத்தார் இரப்பவர்தாம்
எய்தலை நோக்கி இருந்துதவ................" —நெஞ்சு. 197 - 198.

"குறிப்பி னுணர்ந்து மொழியாமுன் கொடுப்பார் முன்னின் றிரந்துயிரைத்
துறப்ப தின்றிச் சிலர்வாழ்வர் தூய்மை மானம் கெடாமையினால்
இறப்ப உயர்ந்த கொடைமையரே எனினும் இரப்பார் இல்லாக்கால்
சிறப்பென் பெறுவர் அவரானே சிறப்பர் கரவா தவர்மைந்தா."
—விநா. அரசி. 153.

குறிப்பு:

மரப்பாவை நாணால் உயிருள்ளதுபோல மருட்டி இயங்கினும் இன்பத் துன்ப உணர்ச்சியில்லாததுபோல, இரப்பார் இல்லாத உலகவர் இரப்பார் முகத்திற் றேக்கும் துன்பத்தைக்கண்டு தாம் இன்புறுதலும் இலராதலின் மரப்பாவை சென்று வந்தற்று என்றார்.
—தொகுப்பாசிரியர்.

1059. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை. (கூ)

உரைப்பகுதி:

பரிமே:—இரந்துகோள் மேவார் இலாஅக்கடை - அவர்பால் சென்று ஒன்றனை இரந்துகோடலை விரும்புவார் இல்வழி, ஈவார்கண் தோற்றம் என் உண்டாம் - கொடுப்பார்மாட்டு என்னபுகழுண்டாம்! யாதும் இல்லை.

தோற்றம் ஆகுபெயர். மேவுவார் என்பது விகாரமாயிற்று. கொடுத்தல்வன்மை வெளிப்படாமையின், அதனாற்புகழெய்தார் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் உலகிற்கு இரப்பார் வேண்டும் என்பது கூறப்பட்டது.

மணக்:— இரந்து கோடலைப் பொருந்துவார் இல்லாதவிடத்து ஈயக் கருதியிருப்பார்மாட்டுப் புகழ் யாதான் உண்டாம் எ - று.

இஃது இரப்பாரில்லாராயின் புகழுடையார் இலராவர்; ஆதலால் இரவு பழிக்கப்படாது என்றது.

பரிப்:— இரந்துகோடல் இழிபு அல்ல ஆயினும் பழிக்கப்படும் என்றார்க்குப் பழிக்கப்படுமாயின், உலகத்து இரப்பர் இல்லையாம்: அவர் இல்லாராகப் புகழுடையார் இலராம்: ஆதலால் பழிக்கப்படாது என்று கூறப்பட்டது.

பரிதி:— கொடுப்பார்க்கு என்ன பெருமை உண்டு? தேகி என்று கேட்பாரில்லாத இடத்து எ - று.

காளிங்:— ஈவார்மாட்டு என் உளது ஆம்? யாவர்மாட்டும் தம் பெயர் தோன்ற நிற்பது ஓர் தோற்றம் தம்பால் சிலர் தம்மைப் பெருமை கூறி இரந்துகொள்ளும் தொழிலைப் பொருந்துவார் ஆகிய அறிஞர் இவ்வுலகத்து இல்லாக்கால் எ - று.

மேவார் என்பது பொருந்துவார் என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மேவுவார் என்பது, செய்யுட்டொடை காரணவிகார மாயிற்று.

குறிப்பு:

ஈவார் பொருள்கொடுப்பவர், இரப்பார் புகழ் விளைப்பவர் என்பதாம். இரப்பார் விருப்பத்தினளவாகப் புகழ் விளைதலின் இரந்துகொள்ளாதார் என்னாது இரந்துகோள்மேவார் என்றார். மேவுதல் - விரும்புதல்.

—தொகுப்பாசிரியர்.

1060. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி. (கo)

உரைப்பகுதி :

பரிமே:— இரப்பான் வெகுளாமை வேண்டும் - ஈவானுக்குப் பொருள் உதவாவழி இவன் எனக்குஈகின்றிலன் என்று அவனை இரப்பான் வெகுளாதொழிதல்வேண்டும்; நிரப்பிடும்பை தானேயும் கரிசாலும் - அது வேண்டியபொழுது உதவாது என்பதற்கு வேறு சான்று வேண்டா, நிரப்பாகிய தன்னிடும்பை தானேயும் சான்றாதல் அமையும்.

யாவர்க்கும் தேடவேண்டுதலும் நிலையின்மையும் முதலிய பிற சான்றும் உண்டு என்பதுபட நின்றமையின் உம்மை எச்சவும்மை. தனக்கேயன்றி மற்றை இரந்தார்க்கும் அற்றைக்கன்று பொருள் கடைக் கூட்டற்கு அவனுறும் துன்பத்தைத் தனக்கேயாக வைத்துத் தானுறுந் துன்பம் தான் அறிந்து வெகுளற்க என்பதாம். இதனால் அவர்க்கு இன்றியமையாததோர் இயல்பு கூறப்பட்டது.

மணக்:— ஒருவனை இரந்தால் அவன் ஈந்திலன் என்று தான் வெகுளாதொழிதல் வேண்டும்; பொருளரிது என்பதற்குத் தன்னுடைய நிரப்பிடும்பை தானேயும் அமையும் சான்று எ - று.

இஃது இரப்பார்க்கு வேண்டியதோர் இயல்பு கூறிற்று.

பரிப்:— வெகுளாமைக்குக் காரணம் பிறிது கூறவேண்டா என்றது.

பரிதி:— கொடுப்பவருடன் ஏற்பவன் கோபிப்பானல்லன்; திரவியத்தின் அருமை மிடியவற்குத் தெரியும். அதற்கு .... சாட்சி எ - று.

காளிங்:— இரப்பு என்னும் இளிவுநோய் கொண்டவன் யாவன்; அவன் பின்னும் ஒருவரோடு வெகுளாமை வேண்டும்: என்னை காரணம் எனில், முன்னும் பிறர்மாட்டு இரந்து வெகுளி கொலை முதலிய கொடுவினை செய்து தனக்கு இக்குற்றம் புகுந்ததனால் தான் இக்காலத்து அனுபவிக்கின்ற இரப்பு என்னும் பேர் இடும்பை தானேயும் அமையும் இதற்குச் சான்று எ - று.

இனி மற்று இரப்பு என்பது இக்குற்றம் எல்லாம் உடைத்து ஆகலான் இது பெரிதும் அஞ்சத்தகுவது ஒன்று என்பதனுன் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— வெகுளாமை - வெகுளாதொழிதல் வேண்டும்; என்பது பல்லோர் படர்க்கையல்லாத விதிபற்றிச் செய்யுமென்னும் முற்றாக்கினர் என்க.

ஒப்புமைப்பகுதி:

"பிச்சைபுக் குண்பான் பிளிறுமை முன்னினிதே.' —இனியவை. 40.

குறிப்பு:

வறுமை கரியாவது பொருளின்மையால் நாம் வாடிக்கேட்கும் நிலையிலிருப் பதை எண்ணிப்பார்த்து. தான் தேடிய யருமை யறிந்து அவன் ஈயாதிருக்கிறான் என்று உள்ளங்கொள்ள வெகுளத் தோன்றுது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— இரக்க, இன்பம், கரப்பிலா, இரத்தலும், கரப்பிலார், கரப்பிடும்பை, இகழ்ந்து, இரப்பாரை, ஈவார்கண், இரப்பான்.

மணக்:— இரக்க, ஈவார்கண், இன்பம், இரப்பாரை, இகழ்ந்து, இரத்தலும், கரப்பிடும்பை, கரப்பிலா, கரப்பிலார், இரப்பான்.

பரிதி:— இரக்க, கரப்பிலார், இரத்தலும், கரப்பிலா, இகழ்ந்து, கரப்பிடும்பை, ஈவார்கண், இரப்பாரை, இன்பம், இரப்பான்.

காளிங்:— இரக்க, இரத்தலும், கரப்பிடும்பை, இன்பம், கரப்பிலார், இகழ்ந்து, கரப்பிலா, ஈவார்கண், இரப்பாரை, இரப்பான்.

107. இரவச்சம்.

தொகுப்புரை :

[ஒளியாது உவகையோடுகொடுக்கும் கண்ணனையவள்ளல்களிடத்தும் இரவா திருத்தல் கோடிமடங்கு நல்லது. இவன் இரந்து உயிர்வாழக் கடவன் என எழுதிய பிரமன் எங்கும் அலைந்து அலைந்து அழிவானாக: வறுமைத் துன்பத்தை இரந்தே தொலைப்போம் என்னும் கொடுமையின் வலியதொன்றில்லை. ஒருவேளை உணவிற்கும் வழியின்றி வறுமை அடைந்தாலும் இரவாமையே சால்பாம். புல்லரிசிக்கஞ்சியானாலும் தன்னுழைப்பால் பெற்றதை உண்டலே சிறந்தது. பசுவுக்குத் தண்ணீராயினும் இரந்துபெறுதலைப்போல நாவிற்கு இழிவுதரும் செயல் வேறொன்றும் இல்லை. இரப்பவர்களிடம் யானொன்று இரக்கின்றேன்; தயவுசெய்து ஒளிப்பவர்களிடம் இரக்காதீர்கள் என்று, வறுமைக்கடலைக் கடக்க இரத்தலென்னும் பாதுகாப்பற்ற தோணி. ஒளித்துவைத்தல் என்னும் பாறைதாக்கப் பிளந்துவிடும். இரத்தலை எண்ண உள்ளம் உருகும். இரக்கப்பட்டானது கரவை எண்ண உருகுதலோடு அமையாது அழிந்தே போகும். இல்லையென்ற சொல்லைக் கேட்டவுடனே அழியும்உயிர் உள்ளதை ஒளிப்பவர்க்குமட்டும் எங்கே ஒளிக்குமோ !]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது மானந்தீரவரும் *இரவிற்கு அஞ்சுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— இரவச்சமாவது இரத்தலைத் தவிரவேண்டும் என்று கூறுதல். மேல் நல்கூர்ந்தார் ஈவார்மாட்டே இரத்தல் அமையும் என்று பொதுப்படக் கூறினாராயினும், மேலாயினார்க்கு அது தகுதியன்று என்பது குறித்து இவ்வதிகாரம் கூறப்பட்டது. மேலதனோடு இயைபும் இது.

1061. கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும். (க)

உரைப்பகுதி :

பரிமே:— கரவாது உவந்து ஈயும் கண் அன்னார் கண்ணும் இரவாமை - தமக்குள்ளது கரவாது இவர் வரப்பெற்றேம் என்று உண் மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார்மாட்டும் இரவாதே ஒருவன் வறுமை கூர்தல், கோடி உறும் - இரந்து செல்வம் எய்தலின் கோடிமடங்கு நன்று.

---

*'இரவினை அஞ்சுதல்' எனவும் பாடம்.

நல்குரவு மறைக்கப்படாத நட்டார்மாட்டும் ஆகாது என்பதுபட நின்றமையின், உம்மை உயர்வு சிறப்பின்கண் வந்தது. அவ்விரவான் மானம் தீராது என்னும் துணையல்லது அதற்கு மிகுதி கூடாமையின், வல்லதோர் முயற்சியான் உயிரோம்பலே நல்லது என்பது கருத்து.

பரிப்:— இல்லை என்னாது மனம் மகிழ்ந்து கொடுக்கும் கண் போல்வார்மாட்டும் ஒருபொருளை இரந்து செல்லாமை இரந்து பெற்ற பொருளினும் கோடி மடங்கு மிகுதி உடைத்து எ - று.

இஃது ஈவார்மாட்டும் இரக்கல் ஆகாது என்றது.

பரிதி:— ஈனக்குணம் பண்ணுமல் கொடுக்கிற தாதாவல்லாதாரிடத்திலே கேளாதிருப்பது கோடிதனம் பெறும் எ - று.

காளிங்:— தாம் கருதிச் சென்றது ஒன்றைக் கரத்தல் இல்லாத செறிந்த அன்பினை உடையராகிய கண்போலும் கேளிர்மாட்டும் ஒன்று இரத்தல் என்பது பெரிதும் இளிவரவு அன்றே: அதனால் அது செய்யாமை தானே கோடி பொருளினைப் பெறும் எ - று.

அல்லது காவாதுவந்தீயும் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

ஒப்புமைப்பகுதி:

“காவாத திண்ணன்பிற் கண்ணனன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு.” —நாலடி. 305.

“மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவர்க்கு
உறுமா றியைவ கொடுத்தல்—வறுமையால்
ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி உறும்.” —ஷை 95.

“கண்ணிற் சிறந்தார் தம்மிடத்தும் காழ்த்த மானம் கெடநாவால்
பண்ணற் குரிய அறங்குறித்தும் படர்ந்தொன் றிரவார் பெருமையினல்”
—விநா. அரசி. 154.

முதுமொழிவெண்பாக்கள்:

“ஒன்றுதவ வேட முடன்சரா சந்தன்முனம்
சென்றிரந்தார் மன்னர் சிவசிவா - என்றும்.” —சிவசிவ. 107.

1062. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் - இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன்கண் வாழ்வார்க்கு முயன்று உயிர்வாழ்தலை யன்றி இரந்தும் உயிர்வாழ்தலை வேண்டி விதித்தானாயின், பரந்து கெடுக - அக்கொடியோன் தானும் அவரைப்போன்று எங்கும் அலமந்து கெடுவானாக.

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும், அதற்கு வேண்டுவதாய உண்டியும், அதற்கு ஏதுவாய செய்தொழிலும் பழவினை வயத்தான் கருவொடு கலந்தவன்றே அவன் கற்பிக்குமன்றே. அவற்றுள் சில உயிர்க்கு இரத்தலையும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தானாயின் அத்தீவினையால் தானும் அத்துன்பமுறல் வேண்டும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் அவ்விரவின் கொடுமை கூறப்பட்டது.

மணக்:— தப்புரவு இல்லாக்கால் இறந்துபடாதே பிறர்மாட்டு இரந்து கொண்டும் உயிர்வாழ்தல் வேண்டுமாயின், உலக நடையை இவ்வாறாகக் கற்பித்த முதல்வன் மிகக் கெடுவானாக வேண்டும் எ - று.

இஃது இரக்குமதனின், இறத்தல் அமையும் என்றது.

பரிப்:— இவை மூன்றினானும் இரவினால் வரும் குற்றம் கூறப் பட்டது.

பரிதி:— இரந்து உயிர்வாழச்சென்றுகேட்ட இடத்திலும் இல்லை என்பது....................பிரமன் திரிந்து கெடுக எ - று.

காளிங்:— குடிப்பண்பினர்க்குத் தமக்கு ஒன்று இரத்தல் இளிவரவு என்று ஒழியாது புறத்து ஈவாரைத் தேடி எங்கும் பரந்து சிறிது இரந்துகொண்டும் தமது உயிர் வாழ வேண்டுவது ஆயின், இவ்வுலகினைப் படைத்தோன் தான் உயிர்வாழாது பரந்து கெட்டு விடுக; என்பதனால் உலகத்துச் சிலரை உயர்ந்தோராகப் படைக்கும் விதாதா ஆகியும் பின்னும் அவர்கள் இயல்பாவதாயின் அவரும் இழந்தோரே ஆகலின் பெரிதும் வஞ்சனை உடைத்து இவன் படைப்பு எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— "நாளுத் தகடேபோல்" (நாலடி - 266) என்பதுபோலத் திட்டுதல் காண்க.

ஒப்புமைப்பகுதி:

"தனியொருவனுக்கு இங்கு உணவிலை எனின்
சகத்தினை அழித்திடுவோம்" —பாரதியார்.

முதுமொழிவெண்பாக்கள்:

"என்றியம்பி னார்மொழியால் போனும் இறையாயும்
சென்றிரந்து நிற்கும் சிவன்றானும் - அன்றே." —முதுமொழி. 157.

"ஒருவர் செயவேண்டா உலகியல்பாம் என்னும்
அருகர்பிறர் கோள்சிதைக்கு மாற்றல் - வருவ(து) —ஷை 158.

1063. இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். (ங)

உரைப்பகுதி:

பரிமே:— இன்மை இடும்பை இரந்து தீர்வாம் என்னும் வன்மையின் - வறுமையான் வருந்துன்பத்தை முயன்று நீக்கக்கடவேம் என்று கருதாது இரந்து நீக்கக்கடவேம் என்று கருதும் வன்மைபோல, வன்பாட்டது இல் - வலிமைப்பாடுடையது பிறிதில்லை.

நெறியாய முயற்சி நிற்க நெறியல்லாத இரவால் தீர்க்கக்கருதுதலின், வன்மையாயிற்று. வன்பாடு முருட்டுத்தன்மை; அஃதாவது ஓராதுசெய்துநிற்றல். இதனான் வறுமை தீர்தற்கு நெறி இரவன்று என்பது கூறப்பட்டது.

மணக்:— வறுமையாலுற்ற துன்பத்தைப் பிறர்மாட்டு இரந்து பெற்ற பொருளினாலே தீர்ப்பேம் என்று கருதுகின்ற வன்மைபோல, வன்பாயிருப்பது பிறிது இல்லை எ - று.

இஃது இரந்தாலும் நல்குரவு தீராது என்றது.

பரிதி:— மலையை எடுத்து மயிரிற்கட்டலும் கடுகில் எழுகடலை அடக்கலும் ஆகிய அவை அருமையல்ல; தன்மிடியை இரந்துதீர்ப்பேன் என்பது அருமை எ - று.

காலிங்:— ' வறுமை என்கின்ற வல்லிடும்பையைப் பிறர்பால் சென்று இரந்துகொண்டு தீர்க்கக் கடவோம் யாம் என்று கருதும் இவ்வன் கண்மையைக் காட்டில் வன்மைப் பாடு உடையது பிறிது யாது ஒன்றும் இல்லை குடிப்பிறந்தோர்க்கு எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

" துன்பகல்வோம் என்று துருபதன்பால் ஏற்றயர்ந்தான்
முன்பு துரோணன் முருகேசா - இன்பமிக." —முருகேசர். 107.

குறிப்பு :

இரவு இத்துணையளவு மானத்தையழிக்கிறது என்பதை அறிந்திருந்தும் அதனை மேற்கொள்ளுகின்றார்கள் ஆதலின் அவ்விரவு வலிமையிற்சிறந்த வலிமையாயிற்று.

—தொகுப்பாசிரியர்.

1064. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு. (ச)

உரைப்பகுதி :

பரிமே:— இடம் இல்லாக்காலும் இரவு ஒல்லாச் சால்பு - நுகர வேண்டுவன இன்றி நல்கூர்ந்த வழியும் பிறர்பால் சென்றிரத்தலை உடம்படாத அமைதி, இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே - எல்லா உலகமும் ஒருங்கு இயைந்தாலும் கொள்ளாத பெருமை உடைத்து.

அவ்விரத்தலைச் சால்பு விலக்குமாகலின், இரவொல்லாமை அதன்மேல்ஏற்றப்பட்டது. இதனான் அந்நெறியல்லதனைச் சால்புடையார் செய்யார் என்பது கூறப்பட்டது.

மணக்:— தம் சுற்றத்தளவு உணவுக்கு வருவாய் இல்லாக் காலத்தினும் பிறரை இரத்தற்கு இசையாத சால்பு, அகன்ற உலக மெல்லாம் கொள்ளாத பெருமையே உடைத்து எ - று.

இஃது இரவாதார் பெரியர் என்றது.

*பரிதி:— பூமி இடம்போதாதே மிடியார்க்குத்தனம் தேடுவோம் என்று உழலும் காலுக்கு எ - று.

காளிங்:— உலகு இடம் எங்கும் சென்று பூரித்தும் பின்னும் புறம் போகும் தன்மையும் உடைத்தே: யாதோ எனின்? தமக்கு ஒன்றிற்கும் ஒரு திறவு இல்லாத இடத்தும் இரந்து கோடல் இல்லாமை என்கிற இந்தப் பெரிய சால்பு உடைமை எ - று.

ஒப்புமைப்பகுதி:

"உரவோர் என்கை இரவா திருத்தல்." —கொன்றை. 85.

குறிப்பு:

இடம் என்பது உணவு முதலிய நுகர்ச்சிக்கு வேண்டிய வழிகள். இரவாத சால்பு, உலகம் பெரிதாயினும் அதனையும் விஞ்சிநிற்கும் பெருமையையுடையது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

1065. தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்த(து)
உண்ணலின் ஊங்கினிய தில் (ரு)

உரைப்பகுதி:

பரிமே:— தாள் தந்தது தெண்ணீர் அடுபுற்கையாயினும் - நெறியாய முயற்சி கொடுவந்து தந்தது தெளிந்த நீர்போலும் அடுபுற்கையே யாயினும், உண்ணலின் ஊங்கு இனியது இல் - அதனை உண்டற்குமேல் இனியதில்லை.

தாள்தந்த கூழ் செறிவின்றித் தெண்ணீர் போன்றதாயினும் இழிவாய இரவான் வந்ததன்றித் தம்முடைமையாகலின், அமிழ்தத்தோடு ஒக்கும் என்பதாம். இதனால் நெறியினான் ஆயது சிறிதேனும் அதுசெய்யும் இன்பம் பெரிது என்பது கூறப்பட்டது.

மணக்:— மோரினும் காடியினும் அடப்பெறாது தெளிந்த நீரினாலே அடப்பட்ட புற்கையாயினும், தனது தாளாண்மையால்வந்ததனை உண்ணுதலின் மிக இனிதாயிருப்பது பிறிது இல்லை எ - று.

* இவ்வுரை முற்றுப்பெறவில்லை போலும்.

பரிப்:— இரந்துகொண்டு அக்காரம் பாலோடு அயிறலின் புற்கை அயிறல் இனிது என்றது.

பரிதி:— நல்லதண்ணீரிலே சமைத்த புற்கையாயினும் தம் முயற்சியிலே வந்ததுபோதும் எ - று.

காளிங்:— அடுபுற்கை தன்னினும் பசைபடு புற்கை அன்றி வெறுந் தெளிநீர்ப்புற்கை ஆயினும் அது தமது தாளாண்மையால் தரப்பட்டது ஆயின் அதனைத் தாம் உண்டு இன்புறுதலின் மேற்பட்ட இனிமை உடையது யாதும் இல்லை எனவே பிறர்பால் சென்று இரந்து பெறுவது அமுதமே ஆயினும் இனிது அன்று என்பது பொருள் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தெண்ணீர் - தெளிந்தநீர்.

ஒப்புமைப்பகுதி:

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர் - கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்." —நாலடி. 200.

"எண்ணிற் சிறந்தார் முயற்சியினால் ஏலா உப்பில் வறும்புற்கை
உண்ணற் கமைந்த தமைத்ததெனை உவப்பர் ஏம கண்டனே."
—விநா. அரசி. 154.

குறிப்பு:

புற்கையாயினும் என்ற உம்மை இழிவு சிறப்பு. உணவு நீரின்றிச் சமையாதாயினும் நீரடுபுற்கை என்றது நீர் மிகுதியாக புல்லரிசிச்சோறு சிறிதாகக் கரைந்த நிலை நோக்கி. —தொகுப்பாசிரியர்.

1066. ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்(கு)
இரவின் இளிவந்த தில். (சு)

உரைப்பகுதி:

பரிமே:— ஆவிற்கு நீர் என்று இரப்பினும் - தண்ணீர்பெறாது இறக்கும் நிலைமைத்தாயதோர் ஆவினைக் கண்டு அறம்நோக்கி இதற்குத் தண்ணீர்தரல்வேண்டும் என்றறிந்து சொல்லுங்காலும், இரவின் நாவிற்கு இளிவந்தது இல் - அவ்விரவுபோல ஒருவன் நாவிற்கு இளிவந்தது பிறிதில்லை.

ஆ காத்தோம்பல் பேரறமாகலின் ஆவிற்கு என்றும், பொருள் கொடுத்துக் கொள்ளவேண்டாத எண்மைத்தாகலின் நீர் என்றும், இரக்கின்றானுக்கு இளிவு அச்சொல்லளவே யாகலின் நாவிற்கு என்றும், அதுதான் எல்லா இளிவினும் மேற்படுதலின் இளிவந்ததில் என்றும் கூறினார். இதனான் அறனும் முயன்று செய்வதல்லது இரந்து செய்யற்க என்பது கூறப்பட்டது.

மணக்:— இப் பசுவிற்குத் தண்ணீர் தருமின் என்று பிறரை இரப்பினும், நாவினுக்கு இரத்தல்போல இளிவரவு தருவது பிறிது இல்லை எ - று.

இஃது அறத்திற்காக இரத்தலும் ஆகாது என்றது.

பரிப்:— இவை மூன்றினாலும் இரத்தலைத் தவிர வேண்டும் என்று கூறப்பட்டது.

பரிதி:— பசுவிற்குத் தண்ணீர் தாருங்கோள் என்று கேட்பினும் இரப்பதுபோல் ஈனம் இல்லை எ - று.

காளிங்:— தமக்கும் தம் கிளைக்கும் இரத்தல் இன்றி ஒரு பசுவிற்கு இத்துணை நீர்வேண்டும் என்று பிறர்பால் சென்று இரப்பது தகுமேயும் அன்றே? மற்று அதுசொல்லி இரப்பினும் அதுவும் அவ்விரவினுட் படுதலின், குடிமரபாளர் தமது நாவிற்கு இரத்தலின் மேற்பட்ட இளிவரவு உடையது பிறிது ஒன்றும் இல்லை எ - று.

இனி மற்று இரப்பு முதல் ஆகிய இளிவு தொழிற்குச் சாகாமை குடிக்கு இழிபு ஆகிய கயமையாம் ஆதலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அறனும் முயன்று செய்வதல்லது, இரந்து செய்யற்க என்பது இதனான் கூறப்பட்டது என்க.

ஒப்புமைப்பகுதி:

"இரத்தலின் ஊங்கு இளிவரல் இல்லை" —முதுமொழிக். 6: 9.

"ஏற்ப திகழ்ச்சி." ஆத்தி. 8.

முதுமொழிவெண்பாக்கள்:

"எண்ணெயிரப் பஞ்சியுட லேவருத்தித் தீபமிட்டார்
துண்ணெனன் கணம்புல்லர் சோமேசா - கண்ணியிடில்."
—சோமேசர். 107.

"ஏகினவர்க் கில்லை எனும்சொல்லின் இன்னாதே
தேகிஎன்னும் சொல்லும் தினகரா - தாகமுறும்."
—தினகர. 111.

"சென்று பலிபக்கல் செங்கைவிரித் தேற்றல்பழு
தென்றுகுன்றி நின்றாய் இரங்கேசா - நன்றிதரும்."
—இரங். 107.

குறிப்பு:

தனக்கு வேண்டும் என்றிரத்தல் மட்டும் இழிவன்று; பிறர்க்கு என்று இரத்தலும் அங்ஙனமே என்றவாறு. பசுவிற்கு ஓர் வாயுறை அளித்தல் பெரும்புண்ணியம் என்கின்றது திருமந்திரம். அங்ஙனமிருக்கப் பசு நீரின்றி இறக்குந்தறுவாயிலிருக்கும் போது அந்நீரை இரந்து பெறுநிலை நேருமாயின் அதுவும் இழிவே என்று விளக்கியவாறு. நீர், காற்று, ஆகாயம் முதலியன இறைவன் அளித்த இலவசப்பொருள்கள். அதனையிரத்தலும் இழிவே என வற்புறுத்தப்பெற்றது.
—தொகுப்பாசிரியர்.

1067. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று. (எ)

உரைப்பகுதி:

பரிமே:— இரப்பாரை எல்லாம் இரப்பின் - இரப்பாரையெல்லாம் யான் இரவா நின்றேன், இரப்பின் கரப்பார் இரவன்மின் என்று - யாது சொல்லி எனின், நுமக்கு இரக்க வேண்டுமாயின் தமக்கு உள்ளது கரப்பாரை இரவாதொழிமின் என்று சொல்லி.

இரண்டாவது விகாரத்தால் தொக்கது. இவ்விளிவந்த செயலான் ஊட்டியவழியும் உடம்பு நில்லாதாகலின் இது வேண்டா என்பது தோன்ற இரப்பன் என்றார். இதனான் மானந்தீரவரும் இரவு விலக்கப்பட்டது.

மணக்:— பிறர்மாட்டு இரந்து செல்வார் எல்லாரையும் யானிரந்து கொள்ளா நின்றேன்; இரக்குமிடத்து இல்லை என்பவர்மாட்டு ஒரு பொருளை இரந்து சொல்லன்மின் என்று சொல்லி எ - று.

இரந்து சொல்லாமை இரந்து பெற்ற பொருளினும் கோடிமடங்கு மிகுதியுடைத்து என்றவாறு. இஃது ஈவார்மாட்டும் இரத்தலாகாது என்றது.

பரிதி:— ....வேண்டுவன இரப்போரை இல்லை என்போரைக் கேளாமல் இருக்க என்று இரப்போரை வேண்டிக் கொள்வேன் எ - று.

காளிங்:— பிறர்பால் காணுது சென்று இரப்பாரை எல்லாம் யானும் ஒன்று இரப்பல்; அஃது யாதோ எனின் அங்ஙனம் இரந்து உயிர் வாழக் கருதுகின்ற அவ்விரப்பான்கண்ணும் அது கொண்டு உயிர்நிலை பெறுது பின்னும் கரப்பார்கண் அவ்விளிவரவு ஆகிய இரத்தலைச் செய் யன்மின் எனவே: இந்த எளிமைபட்டும் இரக்க வேண்டின் இரவாது இரத்தல் இனிது என்பது பொருள் எ - று.

ஒப்புமைப்பகுதி:

"மான அருங்கலம் நீக்கி இரவென்னும்
ஈன விளிவினால் வாழ்வேன்மன் - ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும் உறுதிசேர் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கும் எனின்." —நாலடி., 40.

குறிப்பு:

உள்ளவனிடம் இரப்பதைக்காட்டிலும் இரவலனிடமே இரப்பது இழிவு ஆயினும் அதனை ஆசிரியர் மேற்கொள்ளுகின்றார்; இரவலர் மாட்டுவைத்த கருணையால்.

—தொகுப்பாசிரியர்.

1068. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். (அ)

உரைப்பகுதி:

பரிமே:— இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி - இவ்வறுமை என்னும் கடலை இதனால் கடத்தும் என்று கருதி ஒருவன் ஏறிய இரவு என்னும் சேமமற்ற தோணி, கரவு என்னும் பார் தாக்கப் பக்குவிடும் - அதன்கண் ஓடுங்கால் கரத்தல் என்னும் வன்னிலத்தோடு தாக்குமாயின் பிளந்துபோம்.

முயற்சியான் கடப்பதனை இரவால் கடக்கலுற்றான் அதன் கரை காணாமையின் ஏமாப்பில் தோணி என்றார். ஏமாப்பின்மை தோணிமேல் ஏற்றப்பட்டது. அது கடத்தற்கு ஏற்ற தன்மையானும், நிலம் அறியாது செலுத்தியவழி உடைதலானும், அதன்கண் ஏறற்க என்பதாம். இஃது அவயவவுருவகம்.

மணக்:— ஒருவன் வறுமையாகிய கடலை நீந்திக் கடக்க அமைத்துக்கொண்ட இரத்தலாகிய அரணில்லாத தோணி, இரக்கப் பட்டார்மாட்டுக் கரத்தலாகிய கல்லோடே தாக்க இறந்துவிடும் எ - று.

இஃது நல்குரவு தீராமைக்குக் காரணம் கூறிற்று.

பரிப்:— இவை இரண்டினாலும் இரவினால் பயன் இன்மை கூறப் பட்டது.

பரிதி:— இரவு என்னும் ஏமாப்பில் தோணி இல்லை என்னும் பார் தாக்க உடையும் எ - று.

காளிங்:— இரவு என்று யாவராலும் இழித்து உரைக்கப் படுகின்ற இந்தச் சேமச் செறிவு இன்றிப் பெரிதும் நொய்தாகிய தோணி, ஒருவர் ‘ இல்லை போ ’ என்னும் மிக்க பார் தாக்கவே உடைந்து விடும்; எனவே வறுமைக்கடல் நீந்துவதற்கு இரப்பு என்பது ஓர் கைத் தோணி என்று கருதுவது தம் அறியாமை எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஏமாப்பில் தோணி - காவலற்ற தோணி. பார் - வன்னிலம். முருகாற்றுப்படையுள் “பார்முது பனிக்கடல்” என்பதும் அது. பரிபாட்டுள் “பார் துகள்பட” என்பதும் அது. அதனை இக்காலத்தார் சில்லந்தட்டிற்று என்பர். இஃது அவயவ உருவகம்.

ஒப்புமைப்பகுதி:

“ இளையவது கரத்தலின் கொடுமை இல்லை.” —முதுமொழிக். 6; 5.

1069. இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். (கூ)

உரைப்பகுதி:

பரிமே:— இரவு உள்ள உள்ளம் உருகும் - உடையார்முன் இல்லார்சென்று இரந்துநிற்றலின் கொடுமையை நினைந்தால் எம் உள்ளம்

கரைந்து உருகாநிற்கும்; கரவு உள்ள உள்ளதூஉம் இன்றிக்கெடும் - இனி அந்நிலையைக்கண்டு வைத்தவர் இல்லை என்றலின் கொடுமையை நினைந்தால் அவ்வுருகுமளவுதானும் இன்றிப் பொன்றிவிடும்.

*"இரவினை, உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ, கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு." என்றார் பிறரும். இரவினும் கரவு கொடிது என்பதாம். இதற்குப் பிறரெல்லாம் இரக்கின்றவருள்ளம் உருகும் என்று உரைத்தார்.

மணக்:— இரப்பு என்று நினைக்க உள்ளம் கரையும்; இரக்கப் பட்டவர் கரக்குமதனை நினைக்க, கரைந்து நின்ற உள்ளமும் மாய்ந்து கெடும் எ - று.

இஃது இரப்பார்க்கு ஆக்கமில்லை என்றது.

பரிதி:— தேகி என்பார்க்கு உள்ளம் உருகிப்போம்; இல்லை என்று கரப்பவர்க்கு நெஞ்சு எப்படி உருகுமோ அப்படி எ - று.

காளிங்:— அறிவு உடையோர்க்கு இரவு என்பது தம் குடிமைக்கு ஒருவடு என்று இங்ஙனம் கருதுப அன்றே? அதனால் அவ்வின்னா இரவினை உள்ளவே தமது உள்ளம சால்பு உடைமையும் இனி நாம் ஒருவர் பால் இரந்து சென்றால், அவர் இல்லை போ என்றதனையும் தாம் உள்ளவே பின்னைப் பண்டு உள்ளதூஉம் இன்றிக் கெடும் எ - று.

குறிப்பு:

இரவு உள்ள உணர்ச்சியோடுகூடிய உயிர் நின்று உருகும். அவன் கரப்பானாயின் அதுவும் அழியும் என்பதாம். —தொகுப்பாசிரியர்.

1070. கரப்பவர்க் கியாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர். (௭0)

உரைப்பகுதி :

பரிமே:— சொல்லாட இரப்பவர் உயிர்போம் - கரப்பார் இல்லை என்று சொல்லாடிய துணையானே இரப்பார்க்கு உயிர்போகா நின்றது; கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல் - இனிச் சொல்லாடுகின்ற அவர் தமக்கு உயிர் பின்னும் நிற்றலான் அப்பொழுது எப்புரையுள் புக்கு ஒளித்து நிற்கும்!

* நாலடி. 305.

உயிர்போகலாவது இனி யாம் என்செய்தும் என்று இரங்கிச் செயலற்றுநிற்றல்; *"அங்கிலையே, மாயானே மாற்றிவிடின்" என்றார் பிறரும். கேட்டாரைக் கொல்லவற்றாய சொல் சொல்வாரைக்கோறல் சொல்லவேண்டாவாயினும் அது காண்கின்றிலம் இஃது என்னே என்பதாம். வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவாராய கேளிர்கட்கும் அதனைச் சொல்லாட உயிர்போம். ஆனபின் மறைக்கப்படுவாராய பிறர்க்குச் சொல்லாடியக்கால் போகாது எங்கே ஒளித்து நிற்கும் இரண்டானும் போமே அன்றே என இரவஞ்சினான் ஒருவன் கூற்றாக்கி உரைப்பாரும் உளர். இவை மூன்று பாட்டானும் அவ்விரவின் குற்றமும கரவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன.

மணக்:— எமக்கு யாதும் இல்லை; சிறிது ஈயவேண்டும் என்று சொல்லுவார்க்கு, குறித்தவர்கள் இல்லை என்று சொன்ன அளவிலே அவர் உயிர்போய்ப் பிணம்போல நிற்பார்; பொருள் உடையராய் வைத்து அவர் சொன்ன இல்லை என்னுஞ் சொல்லையே சொல்லி ஈயாதார்க்கு உயிர் எவ்விடத்து ஒளித்து நிற்கின்றதோ எ - று.

இது பிணத்தை ஒப்பர் என்றது.

பரிதி:— நாஸ்தி என்பார்க்கு எப்படியோ தெரியாது. இரப்பவர்க்குத் தேகி என்று கேட்க உயிர்விடும் எ - று.

காளிங்:— அவர் போல் அன்றித் தாம் கைப்பொருள் உடையர் ஆகியும் கரப்பவராகிய கடுவினையாளர்க்கு அவர் உயிர் அவரது உடலில் யாங்குக் கரந்து நிற்குமோதான்? இது அறிகின்றிலோம்: இது சால வியப்புடைத்து; எனவே இரப்பவர் உயர்குடிமரபினோர்க்கு அவ்விரவு என்னும் உரையாடவே உக்கு விடும் எ - று.

குறள்வைப்புமுறை.

பரிமே:—" கரவாது, இரந்தும், இன்மை, இடமெல்லாம், தெண்ணீர், ஆவிற்கு, இரப்பன், இரவென்னும், இரவுள்ள, கரப்பவர்க்கு.

மணக்:— இரப்பன், ஆவிற்கு, இன்மை, இரவென்னும், இரவுள்ள, கரப்பவர்க்கு, கரவாது, இரந்தும், தெண்ணீர், இடமெல்லாம்.

பரிதி:— கரவாது, இடமெல்லாம், தெண்ணீர், ஆவிற்கு, இன்மை, கரப்பவர்க்கு, இரவுள்ள, இரவென்னும், இரந்தும், இரப்பன்.

காளிங்:— கரவாது, இடமெல்லாம், இரவென்னும், இரவுள்ள, இரந்தும், கரப்பவர்க்கு, தெண்ணீர், இன்மை, இரப்பன், ஆவிற்கு.

---

* நாலடி. 308.

108. கயமை.

தொகுப்புரை :

[கயவர் உறுப்புக்களால் மக்களைப்போல இருப்பார்கள். அவர்களுக்கு ஒப்பானபொருளை எந்தப்பிரிவினும் யாம் கண்டதேயில்லை, மனத்தில் கவலையேயில்லாமையால் நல்லனவறியும் பெரியோர்களைக்காட்டினும் கயவர்கள் நன்மையுடையவர்கள். கயவர்கள் விரும்பியபடியெல்லாம் செய்வதால் தேவர்களை ஒப்பர். அடங்காப் பிடாரியாக நடப்பவன் ஒருவனைக் காணின் தானும் அவனைமிஞ்சி அவ்வாறே நடப்பான் கயவன். கீழ்மக்கள் ஒரொருகால் சீலத்துடன் ஒழுகுகின்றார்கள் என்றால் அதற்குக்காரணம் துன்பம்வரும் என்ற அச்சமே. அதனையும் கடந்து ஒழுக்கமுடையராயின் அதற்குப் பொருள்காரணமாகும். இரகசியங்களை எல்லார்க்கும் அறிவிப்பதால் கீழோர்கள் தம்பட்டத்திற்கு ஒப்பாவார்கள். கன்னத்தில் அறைபவனுக்கன்றி இரப்பவர்களுக்கு ஈரக்கையைக்கூட உதறமாட்டார்கள். பெரியோர், இரவலன் சொல்லிக் கொண்டால் போதும் உதவுவர், நசுக்கச் சாறுதரும் கரும்பைப்போலக் கொல்லப் பயன்படுவர் கயவர். சிலர் நன்றாக உண்பதையும் உடுப்பதையும் கண்டால் பொறாமையால் அவர்மீது ஏதாவது அடாப்பழி சுமத்துவன் கயவன். ஏதாவது ஒரு சிறிய துன்பம்வந்தாலும் அதனைப்பொறுக்கும் ஆற்றலில்லாது தன்னையே விற்றுவிடுவார்கள் கயவர்கள்.]

அதிகாரப்பொருள்:

பரிமே:— அஃதாவது மேல் அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும் சிறப்பு வகையான் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினால் யாவர்க்கும் எய்தவைத்தமையின் ஆண்டுக் குறிப்பால் கூறியனவும் ஈண்டு ஒழிபியலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்கள் யாவும் இலராய கீழோரது தன்மை. அதனால் இஃது எல்லாவற்றிற்கும் பின் வைக்கப் பட்டது.

மணக்:— கயமையாவது இழிகுணத்தாராகிய மாந்தரியல்பு கூறுதல். இவர் மேற்கூறப்பட்ட எல்லாரினும் இழிந்தாராதலின், இது பின் கூறப்பட்டது.

1071. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில். (க)

உரைப்பகுதி:

பரிமே:— மக்களே போல்வர் கயவர் - வடிவான் முழுதும் மக்களை ஒப்பர் கயவர்; அவர் அன்ன ஒப்பாரி யாம் கண்டது இல் - அவர் மக்களை ஒத்தாற்போன்ற ஒப்பு வேறு இரண்டு சாதிக்கண் யாம் கண்டதில்லை.

முழுதுமொத்தல் தேற்றேகாரத்தால் பெற்றும். அவர் என்றது அவர் மாட்டு உளதாய ஒப்புமையை. மக்கட் சாதிக்கும் கயச்சாதிக்கும் வடிவு ஒத்தலின் குணங்களது உண்மையின்மைகளானல்லது வேற்றுமை அறியப்படாது என்பதாம். இதனுன் கயவரது குற்றமிகுதி கூறப்பட்டது.

மணக்:— மக்களையொப்பவர் கயவர், அம்மக்களை யொக்குமாறு போல ஒப்பது ஒன்றனோடு மற்றொன்று உவமை கூறப்படுமவற்றில் யாங் கண்டறிவது இல்லை எ - று.

உறுப்பொத்துக் குணம் ஒவ்வாமையால், கயவர் மக்களல்லர் ஆயினர்.

பரிப்:— இது குணம் இலர் என்றது.

பரிதி:— பொல்லாதவரும் நல்லவர்போல இருப்பர்; குணத்தினல் கயவர் என்று காணப்படும் எ - று.

காளிங்:— கை கால் முதலிய புறத்து உறுப்பு எல்லாம் கண்ட இடத்து விலங்கு ஒத்தல் அன்றி மக்கள் ஒப்பு உடையார் இக்கயவரும்; ஆனல் மற்று அம்மக்கள் பண்பு உடையோர் தமது பண்பு ஒப்புமை சிறிதும் அக்கயவர்பால் யாம் கண்டது இல்லை; இது என்ன வியப்போ எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஒப்பாரி - ஒப்பு. அவர் என்றது, அவர்மாட்டு உள தாகிய ஒப்புரிமையை. ஒப்புமையை அன்ன ஒப்பாரி எனக் கூட்டுக. "வடிக்கண் இவை வஞ்சி" (32) என்னும் கோவையாருள், "அம்பலம்போல் படிச்சந்தமும் இதுவே" என்பதும் அது.

மேற்கோள்பகுதி:

பேரா:— வேறுபடவந்த உவமத்தோற்றத்திற்கு மேற்கோள் காட்டி, ஒவ்வாப் பொருளை ஒப்புமைகொண்டது என்னை? மக்களைக்கயவர் ஒவ்வார் என்னும் கருத்தினன் மக்கள் போல்வர் கயவர் என்றமையின் அதுவும் வேறுபடவந்த உவமமாயிற்று என்பர். (தொல் பொருள். 307.)

குறிப்பு:

"உறுப்பொத்தல் மக்களொப்பன்று" என்றார் ஆதலின் கயவர்கள் உறுப்பான் மக்களை ஒப்பர்; பண்பால் ஒவ்வாமையின் அவரைப்போல ஒப்பாரைக் கண்டதில்லை என்றார். அவரன்ன யாங்கண்டதில் - அவர் ஒப்பார் யாம் கண்டதில் என இயைத்து மக்கட்பண்பில் திரிந்த கயவரைப்போல மாக்கள் பண்பில் திரிந்த விலங்கொன்றும் இல்லாமையால் அன்ன கண்டதில் என்றார். அன்ன என்பது அன்னவையாகிய மக்கள் ஒழிந்த பிற உயிர்களை உணர்த்திற்று அஃறிணைப் பலவின் பால் படர்க்கைப்பெயர். இவரையொழிந்த ஏனையோர்க்குப் பண்பமைதலின் இவர்கட்கு ஒத்தவர்கள் இவர்களே என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

1072. நன்றறி வாரின் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவலம் இலர். (உ)

உரைப்பகுதி :

பரிமே:— நன்று அறிவாரின் கயவர் திரு உடையர் - தமக்கு உறுதியாவன அறிவாரின் அவை அறியாத கீழ்மக்கள் நன்மையுடையர், நெஞ்சத்து அவலம் இலர் - அவர்போல அவைகாரணமாகத் தம் நெஞ்சத்தின்கண் கவலை இலராகலான்.

நன்று என்பது சாதியொருமை. உறுதிகளாவன இம்மை மறுமை வீடுகட்கு உரியவாய புகழறஞானங்கள். இவற்றை அறிவார் இவை செய்யாநின்றே மிகச்செயப் பெறுகின்றிலேம் என்றும், செய்கின்ற இவை தமக்கு இடையூறு வருங்கொல் என்றும், இவற்றின் மறுதலையாய பழி பாவம் அறியாமை என்பனவற்றுள் யாதுவிளையுமோ என்றும், இவ்வாற்றான் கவலை எய்துவர்; கயவர் அப்புகழ் முதலிய ஒழித்துப் பழிமுதலிய செய்யாநின்றும் யாதும் கவலையுடையரல்லராகலான் திருவுடையர் எனக் குறிப்பால் இகழ்ந்தவாறு. இதனான் பழி முதலியவற்றிற்கு அஞ்சார் என்பது கூறப்பட்டது.

மணக்:— நன்மையறிவாரினும் கயவர் திருவுடையர்; இம்மை மறுமைக்கு உறுதியாயின செய்யப்பெறுகின்றிலோம் என்னும் கவற்சி நெஞ்சின்கண் உறுதலிலராதலான் எ - று.

இது அறம் அறியார் என்றது.

பரிதி:— நன்றறிவாரில் கயவர் திருவுடையார்; அது எப்படி என்றால் மனத்திலே அவசியம் இல்லை எ - று.

காலிங்:— நன்னெறி அறியும் சான்றோரினும் கயவர் சால நலம் பெரிது உடையர்; தமது உள்ளத்து யாதும் ஓர் இடர் இலார்; எங்ஙனம் எனில், நன்னெறி ஆகிய கல்வியும், அறிவும், ஆசாரமும், குலமும், தருமமும், தவமும், பிறவும் குறைபடாமல் கொண்டு மேற்படவேண்டும் என்றும், குறைபடும் ஆயின் குடிமைக்கு அது வடு என்றும், இங்ஙனம் நெஞ்சம் அஞ்சி அவலிக்கும் அவலம் எஞ்ஞான்றும் இலர் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— திரு - நன்மை. திருவுடையார் எனக்குறிப்பால் இகழ்ந்தவாறாயிற்று.

மேற்கோள்பகுதி:

நச்:— புளிமா என்னும் நேரீற்றியற்சீர் நிரையசைச் சீரோடு தளைப்பட்டு வந்ததற்கு மேற்கோள். (தொல். பொருள். செய். 74)

பெருந்:— வெண்பாவை ஓசையூட்டுதற்குமேற்கோள். (வீர. 114)

யா. வி:— இலர் என நிரையசை ஓரசைச்சீர் இக்குறளில் வந்துள்ளது என்பர். (சூ. 14.)

இது வருக்கமோனைக்கும் மெல்லின எதுகைக்கும் ஒத்துவந்ததாயினும் எதுகை என்று வழங்கப்படும் என்பர். (சூ. 53.)

முதுமொழிவெண்பாக்கள்:

"தேனிருந்த சொல்லாளைத் தேர்வேந்தர் காணவுடை
ஏனுரிந்தான் மேனாள் இரங்கேசா — ஆனதனால்." —இரங். 108.

1073. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான். (௩)

உரைப்பகுதி :

பரிமே:— தேவர் அனையர் கயவர் - தேவரும் கயவரும் ஒரு தன்மையர், அவரும் தாம் மேவன செய்து ஒழுகலான் - அஃது யாதனுன் எனின், தேவரைப்போன்று தம்மை நியமிப்பாரின்றிக் கயவரும் தாம் விரும்புவனவற்றைச் செய்தொழுகலான்.

உயர்ச்சியும் இழிவுமாகிய தம் காரணவேறுபாடு குறிப்பால் தோன்ற நின்றமையின், இது புகழ்வார்போன்று பழித்தவாருயிற்று. இதனுல் விலக்கற்பாடின்றி வேண்டிய செய்வர் என்பது கூறப்பட்டது.

மணக்:— கயவர் தேவரை யொப்பர்; அத்தேவரும் இக்கயவரைப் போலத் தாம் வேண்டியன செய்தொழுகுவாராதலான் எ - று.

இது கயவர் வேண்டியன செய்வார் என்றது.

பரிதி:— தேவர்க்கு நிகர் கயவர் அது எப்படி என்னில், தெய்வமும் பத்தி பண்ணுவார்க்கு நன்மைதரும்; அல்லாதார்க்குத்தீமைதரும். அதுபோல, கயவரும் தமக்கு இதஞ்செய்வார்களுக்கு இதமும் அகிதஞ் செய்வார்களுக்கு அகிதமும் செய்வர் எ - று.

பழைய:— தேவர்க்கு நிகராவர் கயவர்; அது எப்படியென்ருல் தெய்வத்திற்கு மேலானது இல்லை. தாம் போனது வழியானதால் கயவரும் அப்படி எ - று.

காளிங்:— குடிமை என்னும் பண்பு உடைய மக்களைக் கயவர் ஒவ்வார் ஆதலான், மற்று யாரை ஒப்பாரோ? எனில், ஈசன் முதல் ஆம் தேவரை ஒப்பர் கயவர்; என்னை காரணம் என்னின் அவரும் பிறரால் இடித்துரை பெற்று அஞ்சி நடத்தல் இன்றித் தாம் வேண்டுவன செய்யும் தகுதியார் ஆதலால் அவர் போல் மற்று இக்கயவரும் இருபெருங்குரவரும் சான்ரோரும் பிறரும் தம்மின் பெரியோர் என்று அஞ்சிக்கை இன்றி அவர் இடித்துரைக்கும் இடத்து இடித்துரை கைக்கொண்டு ஒழுகும் இயல்பினர் அன்றித் தாம் வேண்டியன செய்து ஒழுகலான் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மேவன - விரும்புவன. புகழ்வார்போன்று பழித்தலும் காண்க.

ஒப்புமைப்பகுதி:

"குரும்பி தேரிய முதையலூர்ப் படப்பையும்
குன்றின்எண் குகள்செல்ல
இரும்பு லாரிய புனம்வயல் கொல்லையான்
ஈன்றகன் றுகள்செல்ல
அரும்பு மூசிய குறுஞ்சுனை கற்சுனை
யாவிவண் டுகள்செல்ல
வரம்பி லார்இமை யார்இபன் முறைதெரி
வயினெனக் கலப்போர்சார்." —தணிகை. திருநாட்டுப். 166.

1074. அகப்பட்டி யாவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். (௪)

உரைப்பகுதி:

பரிமே:— கீழ் - கீழாயினான், அகப்பட்டி ஆவாரைக் காணின் - தன்னின் சுருங்கிய பட்டியாயொழுகுவாரைக் கண்டானாயின், அவரின் மிகப்பட்டுச் செம்மாக்கும் - அவ்வொழுக்கத்தின்கண் அவரின் தான் மேம்பட்டு அதனால்தன் மிகுதிகாட்டி இறுமாக்கும்.

அகப்பட்டி அகமாகியபட்டி. பட்டிபோன்று வேண்டியவாறே ஒழுகலின், பட்டி என்றார்: "நோதக்க செய்யும் சிறுபட்டி*" என்றார் பிறரும். இதனால் அவர் மேம்படுமாறு கூறப்பட்டது.

மணக்:— மனையகத்திருந்து பொறிலிலராகிய பெண்டிரைக் காணின், அவரினும் மிகப்பொறிலிலராயவரைப் பெற்றேம் என்று இறுமாப்பர் கயவர் எ - று.

இது நிறையிலர் என்றது.

பரிதி:— துர்ச்சனமான பேரைக் கண்டால் அவர்களுடனே கூடிக்கொண்டு நல்லோரைக் கெடுப்பார்கள் எ - று.

---

* கலி, குறிஞ்சி. 15.

காளிங்:— மனையினின்றும் புறப்பட்டால் பட்டிபுக்குப் பயிர் அழிக்கும் பட்டி மாட்டினை ஒத்தார் சிலரைத் தான்காணின், இதற்கு 'இவரினும் பெரியேன் ஆக வேண்டும் யான்' என்று மற்று அவரது பட்டிமையினும் மிகப்பட்டு இறுமாக்கும் கீழ் ஆனது; எனவே தானும் நெறிகெட ஒழுகும்; பிற நெறிகேடரைக் காணினும் நமக்குத் துணையும் உண்டு என்று பெரிதும் இறுமாக்கும் கீழ் என்பது பொருள். அகப்பட்டி என்பது மனையுள் வாழும் பட்டிமாடு என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— செம்மாத்தல் - இறுமாத்தல்.

குறிப்பு:

ஒழுக்கமும், அதனை அவாவும் நிலையும் ஆகிய இரண்டனுள் ஒழுக்கம் அச்சத்தாலும், ஒழுக்கத்தை அவாவுநிலை பொருள் விருப்பத்தாலும் கீழ்களுக்கு உளவாகின்றன என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

1075. அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— கீழ்களது ஆசாரம் அச்சமே - கயவரதாய ஆசாரம் கண்டது உண்டாயின் அதற்குக் காரணம் அரசனன் ஏதம் வரும் என்று அஞ்சும் அச்சமே, எச்சம் அவா உண்டேல் சிறிது உண்டாம் - அஃதொழிந்தால், தம்மால் அவாவப்படும் பொருள் அதனல் உண்டாமாயின் சிறிது உண்டாம்.

ஆசாரத்தின் காரணத்தை ஆசாரம் என்றும், அவாவப்படுவதனை அவா என்றும் கூறினர். எச்சத்தின்கண் என்னும் ஏழாவது இறுதிக் கண் தொக்கது. பெரும்பான்மை அச்சம், சிறுபான்மை பொருட்பேறு இவ்விரண்டானுமன்றி இயல்பாக உண்டாகாது என்பதாம், வேண்டிய செய்தலே இயல்பு; ஆசாரஞ்செய்தல் இயல்பன்று என்பது இதனல் கூறப்பட்டது.

மணக்:— கயவர் ஆசாரமுடையராதற்குக் காரணம் அச்சமே; அஃதொழிய, ஒருபொருள்மேல் ஆசையுடையராயின், அது காரணமாகவும் சிறிது ஒழுக்கம் உண்டாம் எ - று.

இஃது இயல்பான் ஒழுக்கம் இலர் என்றது

பரிதி:— கயவர்க்குப்பயம் உண்டாகில் வணங்குவர்; பிரயோசனம் உண்டாகிலும் வணங்குவர் எ - று.

காளிங்:— கீழ்கள் ஆகியவரது ஆசாரம் அவர்க்கு இயல்பின் உளதாவது அன்று; மற்று என்னை எனின், பிறர் தம்மைச் செறுத்தும் சிறைசெய்தும் நெருக்கின் என்னை என்று இங்ஙனம் அஞ்சும் அச்சமே அதற்குக் காரணம்; அஃது ஒழிந்த இடத்தும் உண்டு எனின் அவர்சில செய்வர் எமக்கு என்னும் அவா உளது ஆயின் அது பெறும் வழிஉள வாயின் சிறிதும் அவ்வாசாரம் உண்டாகவும் கூடும்; எனவே கயவர்க்கு ஆசாரம் இயல்பு அல்ல என்றும் உண்டு எனின் அது கள்ளம் என்றும் பொருள் ஆயிற்று எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஆசாரம் - ஒழுக்கம். அது வடசொல்.

மேற்கோள்பகுதி:

நச்:— வினை எஞ்சு கிளவியும் வேறுபல் குறிய என்பதனால் பெறப்படும் எனக்கூறி ஏலும் என்பது இதன் குறிப்பு என்பர். (தொல். சொல். 230.)

மயிலை:— வான்பாக்கு இன வினைஎச்சம்; இன்ன என்றதனால் 'அவாவுண்டேல் உண்டாம்' என்றற்றொடக்கத்தனவும் இவ்வாய்பாடு களிலே அடக்கிக்கொள்க என்பர். (நன். 342.)

ஒப்புமைப்பகுதி :

"பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம்." —கொன்றை 64.

1076. அறைபறை யன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். (சா)

உரைப்பகுதி:

பரிமே:— தாம் கேட்ட மறை உய்த்துப் பிறர்க்கு உரைக்கலான் - தாம் கேட்ட மறைகளை இடந்தோறும் தாங்கிக்கொண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலான், கயவர் அறை பறை அன்னர் - கயவர் அறையப்படும் பறையினை ஒப்பர்.

மறை - வெளிப்படின் குற்றம்விளையும் என்று பிறரை மறைத்து ஒருவன் சொல்லிய சொல். பிறர்- அம்மறைத்தற்குரியார். உய்த்து என்றார் அவர்க்கு அது பெரும்பாரமாதல் நோக்கி. பறை ஒருவன் கையால் தன்னை அறிவித்தசொன்றனை இடந்தோறுங் கொண்டுசென்று யாவரையும் அறிவிக்குமாகலான், இது தொழிலுவமம். இதனால் அவரது செறிவின்மை கூறப்பட்டது.

மணக்:— கயவர் அறையும் பறைபோல்வர்; தாம்கேட்ட மறைகளைப் பிறர்க்குக் கொண்டு சென்று அறிவித்தலான் எ - று.

இஃது அடக்கமிலர் என்றது.

பரிதி:— இரகசியமான விஷயத்தை எங்கும் உரைத்தலால் அறைபறைக்கு ஒப்பர் கயவர் எ - று.

காளிங்:— ஒருவன் தான் வாய்க்கொண்டு ஒக்கடித்து உணர்ந்த தாளப் பகுதியைப் பிறர்க்கு அவ்வாறு உரைவழி புலப்படாமைக் குறிக்கொண்டு தன் கைகொண்டு அதன்கண் உற வைத்த இடத்து, மற்று அஃது அதனை யாவர்க்கும் புலப்படச் சாற்றும் பறைக் கருவியை ஒப்பர், என் எனில், ஒருவர் தம்மை நம்பி மறையை ஓம்பு என்று உரைப்ப, மற்று அந்த மறையினை அடக்கல் ஆற்றாது அப்பொழுதே பிறர்க்குச் சென்று செவிக்குச் செல்லுமாறு அதனை விளக்கச் செலவு படுத்து உரைக்கும் தீமை உடையார் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— மறை - வெளிப்படின் குற்றம் விளையும் என்று, பிறரை மறைத்து, ஒருவன் சொல்லிய சொல்.

மேற்கோள்பகுதி :

பெருந்:— பழித்தலுவமைக்கு மேற்கோள். (வீர. 158.)

ஒப்புமைப்பகுதி:

"புயலமை கூந்தல் பொலங்தொடீஇ சான்றோர்
கயவர்க்கு உரையார் மறை."

—பழ. நா.

"பெருமலை நாட பிறரறிய லாகா
அருமறையை ஆன்றோரே காப்பர் - அருமறையை
நெஞ்சில் சிறியார்க்கு உரைத்தல் பனையின்மேல்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று." —பழ. நா.

" அறைபறை யனைய ரோர் அருமறைக்காவரோ தான்."
—கம்ப உண்டாட்டு. 56.

முதுமொழிவெண்பாக்கள்:

" மணலமுதா மாறு மனையாட்குக் கூறிப்
பானருடீர் மாமறையோர் பண்பின் - நவலும்." —முதுமொழி. 159.

1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு. (எ)

உரைப்பகுதி :

பரிமே:— கயவர் கொடிறு உடைக்கும் கூன் கையர் அல்லா தவர்க்கு - கயவர் தம் கதுப்பினை நெரிப்பதாக வளைந்த கையினை உடைய ரல்லாதார்க்கு: ஈர்ங்கை விதிரார் - தாம் உண்டு பூசிய கையைத் தெறித்தல் வேண்டும் என்று இரந்தாலும் தெறியார்.

வளைந்த கை - முறுக்கிய கை. மெலிவார்க்கு யாதுங்கொடார், நலிவார்க்கு எல்லாம் கொடுப்பர் என்பதாம்.

மணக்:— தம்கதுப்பினை ஒடிக்கும் வளைந்தகையினை உடைய ரல்லாதார்க்கு, ஈரக்கையையும் தெறியார் கயவர் எ - று.

ஈரக்கை - கழுவினகை. இஃது இரப்பார்க்குக் கொடார் என்றது.

பரிதி:— ஈசிறகை விதிர்த்துக் கொள்ளார் கயவர்; கொறடாலே அடிப்பவர்க்குக் கொடுப்பர் எ - று.

காளிங்:— பிறர் தம்பால் இரந்து கொள்ளும் இடத்து ஈரக்கை விதிர்த்தலும் இலர் கயவர் ஆனவர்; கொடிறுபோல இடுக்கிப் பிடித்து உடம்பை உடைக்கும் திறமையால் கூறிய கையினை உடையோர் அல்லாத குணம் உடையவர்க்கு, எ - று.

ஒப்புமைப்பகுதி :

"மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்போல்
கைவிதிர்த் தஞ்சப் படும்." —நீதிநெறி. 73.

"அழுக்கற் றெவர்க்கும் வடுக்காண்பர் அச்சம் ஆசை யாலன்றி
ஒழுக்கம் புரியார் மறைபிறர்பால் உய்த்து மொழிவார் தம்போல
விழுக்குக் கேதம் கவலார்முன் ஏற்ற மாகிச் செம்மாப்பார்
மழுக்கு ளார்க்கே பயன்படுவார் வறிதும் வறியார்க் கிடார்கயவர்."
—விநா. அரசி. 155.

"பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார் - மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தான்." —நல்வழி. 18.

"பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையிலே
போடுவார்க் கீவர் பொருள்."

"இட்டக் கடைத்தரார் ஈண்டும் பலிமரீஇப்
பட்ட வழங்காத பான்மையார் - நட்ட
சுரிகையாற் கானும் சுலாக்கோலாற் கானும்
சொரிவதாம் ஆபோல் சுரந்து." —அறநெறி. 183.

குறிப்பு:

ஈரக்கையை உதறின் ஒட்டிய நீர் பிறர்க்கு உதவிவிடுமோ என்ற எண்ணத்தால் உதறார் என்றதாம். "எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவன்" என்ற பழமொழியும் சிந்தித்தற்குரியது.

—தொகுப்பாசிரியர்.

1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். (அ)

உரைப்பகுதி :

பரிமே:— *சொல்லப் பயன்படுவர் சான்றோர் - மெலியார் சென்று தம்குறையைச் சொல்லிய துணையானே இரங்கிப் பயன்படுவர் மேலாயினர்; கீழ் கரும்புபோல் கொல்லப்பயன்படும் - மற்றைக் கீழாயினர் கரும்புபோல வலியார் நைய நெருக்கியவழிப் பயன்படுவர்.*

பயன்படுதல் உள்ளதுகொடுத்தல். கீழாயினாரது இழிவுதோன்ற, மேலாயினாரையும் உடனே கூறினார் இவை இரண்டு பாட்டானும் அவர் கொடுக்குமாறு கூறப்பட்டது.

மணக்:— பிறர் தம்குறையைச் சொல்ல அதற்கு இரங்கிப் பயன் படுவர் மேன்மக்கள்; அவ்வாறன்றி, கரும்பு பயன்படுமாறுபோலத் தம்மை நெருக்கினால் பயன்படுவர் கீழ்மக்கள் எ - று.

இஃது ஒறுப்பார்க்குக் கொடுப்பர் என்றது.

பரிதி:— வார்த்தை சொன்னமாத்திரத்திலே பயன்படுவர் நல்லோர்; கரும்புபோலத் தண்டிக்கப் பயன்படுவர் கீழோர் எ - று.

காலிங்:— ஒருவர் வந்து தம் குறைசொல்ல அமையும்; மற்று இவ்வளவிலே பயன்படுவர் சால்பினை உடையோர். இனி மற்று இவ்வாறு அன்றித் தறித்தும் நெரித்தும் அடர்த்தும் சாறுகொள்ளும் கரும்புபோலப் பெரிதும் கொல்லக் கொல்லப் பயன்படுவர் அத்துணைக் கீழான கயவர் எ - று.

ஒப்புமைப்பகுதி :

“ தளிர்மேலே நிற்பினும் தட்டாமல் செல்லா
உளிநீரர் மாதோ கயவர் - அளிநீரார்க்கு
என்னானும் செய்யார் எனைத்தானும் செய்பவே
இன்னாங்கு செய்வார்ப் பெறின்.” —நாலடி. 355.

“ துச்சனரைப் பொன்னைத் துடியைத் துரகதத்தை
அச்சமறமுன்நிற்கும் ஆயிழையை - நச்சரவைக்
கண்டித்த எள்ளைக் கரும்பை இளநீரைத்
தண்டித்தார்க் கல்லோ சயம்.

முதுமொழிவெண்பாக்கள்:

“ ஓயாப் பரிவும் உபசார மும்கொடையும்
தீயார்க்கொன் றூது தினகரா - வாயாரச்.” —தினகர. 112.

“வாரிவழி தாரா வருணன் அடைக்கலமாய்ச்
சேரவழி செய்தான் சிவசிவா - ஆருமிதம்.” —சிவசிவ. 108.

"வஞ்சநலன் வாமதே வற்குதவான் வாசியைச்சேய்
மூஞ்சியபின் ஈந்தான் முருகேசா - வெஞ்சலின்றிச்." —முருகேசர். 103.

1079. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ். (கூ)

உரைப்பகுதி :

பரிமே:— உடுப்பதூஉம் உண்பதூஉம் கீழ்காணின் - பிறர் செல்வத்தால் பட்டும் துகிலும் உடுத்தலையும் பாலோடு அடிசில் உண்டலையும் கீழாயினன் காணுமாயின், பிறர்மேல் வடுக்காண வற்றாகும் - அவற்றைப் பொறாது அவர்மாட்டு வடுவில்லையாகவும் உண்டாக்க வல்லனாம்.

உடுப்பது உண்பது என்பன ஈண்டு அவ்வத்தொழின்மேல் நின்றன: அவற்றால் பூண்டல் ஊர்தல் முதலிய பிறதொழில்களும் கொள்ளப்படும். அவற்றைக்கண்ட துணையானே பொறாமை எய்தலின் காணின் என்றும், கேட்டார் இது கூடுமென்றியையப்படைத்தல் அரிது ஆகலின் வற்றாகும் என்றும் கூறினர். இதனான் பிறர் செல்வம் பொறாமை கூறப்பட்டது.

மணக்:— பிறர் உடுப்பதனையும் உண்பதனையும் காண்பாராயின், அவர்மாட்டு உள்ள குற்றங்களை ஆராயவல்லராவர் கயவர் எ - று.

இஃது அழுக்காறுடையார் என்றது.

பரிதி:— உடுப்பதும் உண்பதும் கண்டால் அவர்க்கு ஒரு குற்றம் விசாரிப்பர் கீழோர் எ - று.

காளிங்:— முன் நின்ற நிலையினும் மேற்பட உடுக்கும் ஆடையும் உண்ணும் சோறும் சிறிது மிகுதக் காணின் மற்று அப்பொழுதே பிறரைக் கெடுப்பது ஓர் வடுக்காண வற்றாகும் கீழ் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— அழுக்காற்றில் "உடுப்பதூஉம் உண்பதூஉம் (166) என்பதுபோலச் செயப்படுபொருண்மேல் நில்லாது ஈண்டுத் தொழில் மேல் நின்றது என்க.

ஒப்புமைப்பகுதி:

"கீழ்மை அகற்று." —ஆத்தி. 35.

"சிட்டர் தமக் கில்லாத தீங்குரைப்பர் பொல்லாத
துட்டர் தமக் குள்ள தொழில்." —சிவபோ. 125.

1080. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து. (கo)

உரைப்பகுதி :

பரிமே:— கயவர் ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர் - கயவர் தம்மை யாதானும் ஒரு துன்பமுற்றக்கால் அதுவே பற்றுக் கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற்றற்குரியர்; எற்றிற்கு உரியர் - அதுவன்றி வேறு எத்தொழிற்குரியர் ?

உணவின்மையாகப் பிறிதாக ஒன்றுவந்து உற்ற துணையான் என்பது தோன்ற ஒன்றுற்றக்கால் என்றும், கொள்கின்றார் தம் கயமை யறிந்து வேண்டா என்றற்கு முன்னே விற்றுநிற்றலின் விரைந்து என்றும் கூறினார். ஒரு தொழிற்கும் உரியரல்லர் என்பது குறிப்பெச்சம். இதனால் தாம் பிறர்க்கு அடிமையாய் நிற்பர் என்பது.

மணக்:— கயவர் யாதினுக்கு வல்லர் எனின், தமக்கு ஒரு துன்ப முற்றால் விரைந்து தம்மை விற்க வல்லர் எ - று.

இது நிலையிலர் என்றது.

பரிதி:— எதற்கு உரியார் கயவர் என்றால், தனக்கு ஒரு தண்டனை வந்தால் விற்றுக்கொள்ள உரியர் எ - று.

காளிங்:— கயவராய் உள்ளார் வந்து மருவினால் ஒருவர்க்கு இடுக்கண் வந்து உற்ற இடத்து மற்று அதுவே பட்டடையாக உயிர்க்கு ஈறு, பொருட்கு இறுதி வருமாறு விரைந்து எற்றுதற்கு உரியார்; அஃது இயையாது எனின் உற்ற இடத்து உதவாது விரைந்து நீங்குதற்கு உரியார்; ஆதலால் எவ்வாற்றானும் கயவரோடு குடிப்பண்பு உடையோர் மருவாது ஒழிக என்பது பொருளாயிற்று எ - று.

எற்றிற்கு என்பது எற்றுதற்கு என்பது; விற்றற்கு என்பது வேறுபட்டு நீங்குதற்கு என்றது. வீற்றற்கு எனற்பாலது விற்றற்கு எனக் குறுகி நின்றது.

உரைவிளக்கப்பகுதி

நுண்:— ஒரு தொழிற்கும் உரியர் அல்லர் என்பது குறிப்பெச்சம்.

குறிப்பு:

பொறுக்கும் ஆற்றலின்மையால் விற்றற்கு உரியர் என்றார். விற்றலாவது சிறிய தேவைக்காகத் தன்னையே அடிமையாக்கிக்கொள்ளுதல்.

—தொகுப்பாசிரியர்.

குறள்வைப்புமுறை

பரிமே:— மக்களே, நன்றறி, தேவர், அகப்பட்டி, அச்சமே, அறைபறை, ஈர்ங்கை, சொல்ல, உடுப்பதூஉம், எற்றிற்கு.

மணக்:— மக்களே, தேவர், நன்றறி, அச்சமே, அகப்பட்டி, அறைபறை, உடுப்பதூஉம், ஈர்ங்கை சொல்ல, எற்றிற்கு.

பரிதி:— மக்களே, தேவர், நன்றறி, அறைபறை, ஈர்ங்கை, சொல்ல, அச்சமே, அகப்பட்டி, உடுப்பதூஉம, எற்றிற்கு.

காளிங்:— மக்களே, தேவர், அச்சமே, ஈர்ங்கை, சொல்ல, உடுப்பதூஉம், அகப்பட்டி, நன்றறி, அறைபறை, எற்றிற்கு.

பொருட்பால் உரைவளம் முற்றிற்று.

திருக்குறள் முதற்குறிப்பகராதி

பொருட்பால்

[எண் - பக்கஎண்.]

அகடாரார் 852
அகப்பட்டி 1051
அகலாது 504
அங்கணத்து 545
அச்சமுடை 258
அச்சமே 1052
அஞ்சாமைஈகை 8
அஞ்சாமையல்லால் 200
அஞ்சும் 754
அஞ்சுவது 91
அடற்றகை 620
அடுக்கிய 880
அடுக்கிவரி 400
அடுத்தது 526
அணியன்றோ 968
அந்தணர் 274
அமரகத்தாற் 688
அமரகத்துவன் 983
அமைந்தாங்கு 164
அரங்கின்றி 46
அரம்பொருத 784
அரம்போலும் 944
அரியகற்று 212
அரியவற்றுள் 116
அரியவென்று 262
அருஞ்செவ்வி 311
அருமறை 731
அருமையுடைத் 379
அருவினை 178
அருளொன்றும் 602
அருளொடும் 599
அல்லற்பட்டு 296
அவையறிந்து 533
அவையறியார் 536
அழக்கொண்ட 451
அழச்சொல்லி 663
அழிவதூஉம் 144
அழிவந்த 678

அழிவின்றறை 614
அழிவினவை 650
அளவளா 243
அளவறிந்து 172
அற்றதறிந்து 865
அற்றமறைக்கும் 921
அற்றமறைத்தலோ 730
அற்றார்க்கொன்று 957
அற்றாரை 217
அற்றால் 863
அற்றேமென் 401
அறஞ்சாரா 1013
அறம்பொருள் 208
அறவினையும் 815
அறனறிந்தான் 415
அறனறிந்து 113
அறனிழுக்கா 11
அறனீனும் 598
அறிகொன்று 419
அறிந்தாற்றி 231
அறிவற்றம் [illegible]1
அறிவிலார்தாம் 727
அறிவிலான் 726
அறிவின்மை 724
அறிவுடையார் ஆவ 90
அறிவுடையார் எல் 93
அறிவுரு 491
அறைபறை 1053
அன்பறிவாரா 488
அன்பறிவு 229
அன்பிலன் 752
அன்பின்விழை 819
அன்புடைமை - இவ் 938
அன்புடைமை - வேந் 487
அன்புநாண் 926
அன்பொரீஇ 960
ஆக்கம் அதர் 355
ஆக்கம் இழந்தேம் 353

ஆக்கம்கருதி 146
ஆக்கமும் 427
ஆகாறளை 171
ஆங்கமை 575
ஆபயன் 303
ஆய்ந்தாய்ந்து 659
ஆயுமறிவினர் 827
ஆவிற்கு 1039
ஆள்வினை 978
ஆற்றாரும் 194
ஆற்றின் அள - ஈக 169
ஆற்றின் அள - கற்க 553
ஆற்றினிலை 540
ஆற்றின்வருந் 153
ஆற்றுபவர் 578
ஆற்றுவார் - இக 791
ஆற்றுவார் - பணி 928
இகலானும் 748
இகலிற்கு 746
இகலின் 744
இகலெதிர் 743
இகலென்ப 739
இகலென்னும் 741
இகல்காணான் 747
இகழ்ச்சியின் 265
இகழ்ந்தெள்ளா 1027
இடமெல்லாம் 1037
இடிக்கும் 122
இடிப்பாரை 123
இடிபுரிந்து 372
இடுக்கண்கால் 986
இடுக்கண்படி 444
இடுக்கண்வருங் 395
இடும்பைக்கிடும் 398
இடும்பைக்கே 995
இடைதெரிந்து 535
இணரூழ்த்தும் 437
இதனையிதனால் 234

இமையாரின் 811
இயல்புளி 278
இயற்றலும் 14
இரக்க 1019
இரத்தலும் 1023
இரந்தும் 1035
இரப்பன் 1041
இரப்பாரை 1028
இரப்பான் 1031
இரவார் 995
இரவுள்ள 1042
இரவென்னு 1042
இருபுனலும் 571
இருமனம் 829
இல்லாரை 594
இல்லாள்கண் 808
இல்லாளை 810
இலக்கம் 402
இலமென் 1002
இவறலும் 98
இழத்தொறூஉம் 857
இழிவறிந்து 867
இழுக்கல் 70
இழுக்காமை 261
இழைத்த 638
இளிவரின் 906
இளைதாக 772
இளையர் இன 514
இற்பிறந்தார்கண்ண 876
இற்பிறந்தார்கண் 1008
இறந்தமை 803
இறந்தவெகுளி 255
இறப்பே 917
இறுதிபயப் 501
இறைகடியன் 310
இறைகாக்கும் 281
இன்சொலால் 18
இன்பத்துள் - பயக் 742
இன்பத்துள் - விழை 405
இன்பம் ஒரு 1021
இன்பம் - இடும் 403
இன்பம் - வினை 384
இன்மை யிடும்பை 1036
இன்மையின் இன்னாத 1004
இன்மையின் இன்னாது 300
இன்மையென 1005
இன்மையொரு 931
இன்றியமை 892
இன்றும் 1015
இன்னாசெய் 930
இன்னாமை 406
இனத்தாற்றி 315
இனம்போன்று 699
இனையரிவர் 655
ஈட்டம் 953
ஈர்ங்கை 1055
ஈவார்கண் 1029
ஈன்றாள்பசி 447
ஈன்றாள்முகத் 834
உட்கப்படா 832
உட்பகை 779
உடம்பாடு 787
உடுக்கை 652
உடுப்பதூஉம் 1058
உடைசெல்வம் 856
உடைத்தம் 163
உடையர் எனப் 351
உடையார்முன் 35
உண்ணற்க 834
உணர்வது 543
உயர்வகலம் 581
உயிர்ப்ப 775
உரம் ஒருவர் 363
உருவு கண்டு 463
உருளாயம் 849
உலகத்தார் 737
உலகந்தழீஇய 87
உலைவிடத்து 611
உவப்ப 33
உழவினார் 996
உழுதுண்டு 992
உழுவார் 990
உழைப்பிரிந்து 252
உள்ளமிலா 360
உள்ளமுடை 352
உள்ளற்க 666
உள்ளிய 267
உள்ளுவது 558
உள்ளொற்றி 840
உளபோல் 325
உளரென்னு 54
உளரெனினு 560
உளவரை 173
உற்றநோய் 114
உற்றவன் 872
உற்றானளவும் 871
உறன்முறை 781
உறின்நட் 685
உறினுயிர் 637
உறுப்பமை 610
உறுப்பொத்தல் 939
உறுபசியும் 568
உறுபொருளும் 600
உறுவது 686
உறைசிறி 484
ஊக்கம் 182
ஊணுடை 966
ஊதியம் 665
ஊழிபெயரினும் 932
ஊழையும் 391
ஊறொரால் 456
ஊனைக் 967
எச்சமென் 954
எட்பக 786
எண்என் 29
எண்சேர்ந்த 816
எண்ணித் 152
எண்ணிய 462
எண்ணியார் 196
எண்பதத்தால் 937
எண்பதத்தான் 282
எண்பொருள 85
எதிரதா 92
எப்பொருள் 85
எப்பொருளும் 510
எய்தற்கரி 187
எரியால் 798
எல்லாப்பொரு 585
எல்லார்க்கும் 337

எல்லைக்கண்	677
எவ்வது	88
எள்ளாத	156
எற்றிற்குரி	1059
எற்றென்று	445
என்பும்	442
என்னைமுன்	625
எனைத்தானும்	72
எனைத்திட்பம்	469
எனைத்தும்	695
எனைமாட்சி	590
எனைவகை	230
ஏதம்	956
ஏதிலார்	719
ஏந்திய	802
ஏமுற்ற	766
ஏரினும்	998
ஏவவும்	733
ஐயப்படா	521
ஒட்டார்	960
ஒண்பொருள்	606
ஒருமைக்கண்	40
ஒருமைச்	716
ஒருமை மகளிர்	913
ஒல்லுங்கரு	693
ஒல்லும்வாய்	473
ஒல்வதறிவ	162
ஒலித்தக்கால்	612
ஒழுக்கமும்	877
ஒளியார்	537
ஒளியொருவற்	909
ஒற்றினான்	338
ஒற்றுமுறை	335
ஒற்றொற்றி	345
ஒற்றொற்று	347
ஒறுத்தாற்று	330
ஒன்றாமை	782
ஒன்றெய்தி	848
ஓஒதல்	443
ஓதியுணர்	715
ஓர்ந்து	270
கடலோடா	199
கடனறிந்து	496
கடனென்ப	923
கடாஅவுரு	341
கடிதோச்சி	307
கடிந்தகடிந்	449
கடுஞ்சொல்	312
கடுமொழி	314
கடைக்கொட்க	458
கண்ணிற்	326
கண்ணுடைய	31
கண்ணோட்டத்	322
கண்ணோட்டமில்	328
கண்ணோட்டமென்	321
கரப்பவர்	1044
கரப்பிடும்பை	1026
கரப்பிலாநெஞ்	1022
கரப்பிலார்	1025
கரவாது	1033
கருமம்சிதை	329
கருமஞ்செய	976
கருமத்தால்	964
கருவியும்	409
கல்லாஒரு	53
கல்லாதான்ஒட்பம்	51
கல்லாதான்சொல்	48
கல்லாதவரும்	50
கல்லாதவரின்	559
கல்லாதமேற்	729
கல்லார்ப்	318
கல்லான்	760
கலங்காது	467
கவறும்	851
கழாஅக்கால்	722
கள்ளுண்ணா	844
களித்தறி	841
களித்தானை	842
கற்ககசடற	26
கற்றறிந்தார்	541
கற்றார்முன்	551
கற்றாருள்	549
கற்றிலன்	96
கற்றுக்கண்	494
கனவினும்	694
காக்கை	248
காட்சிக்	16
காணாச்சின	757
காணாதான்	734
காதலகாதல்	109
காதன்மை	218
காலம்கருதி	181
காலாழ்	204
கானமுயல்	627
குடிசெய்வல்	979
குடிசெய்வார்	984
குடிதழீஇ	277
குடிப்பிறந்தார்	885
குடிப்பிறந்துகுற்	211
குடிப்பிறந்துதன்	662
குடிபுறம்	284
குடிமடிந்து	368
குடியாண்மை	375
குடியென்னும்	365
குணநலம்	925
குணநாடி	214
குணனிலன்	759
குணனும்	660
குலஞ்சுடும்	972
குற்றமிலனாய்	981
குற்றமே	101
குறித்தது	524
குறிப்பறிந்து	511
குறிப்பிற்	522
குறிப்பின்	525
குன்றன்னார்	801
குன்றினனை	897
குன்றேறி	604
கூழும்	295
கூற்றத்தை	795
கூற்றுடன்று	616
கூறாமை	520
கெடல்வேண்	794
கெடாஅ	680
கெடுங்காலை	667
கேட்டார்	428
கேட்டினும்	664
கேட்பினும்	75
கேடறியா	570

கேடில் 43
கேளிழுக்கம் 679
கையறியா 837
கைவேல் 630
கொக்கொக்க 188
கொடுத்தலும் 246
கொடுத்தும் 758
கொடுப்பதூஉம் 955
கொடையளி 22
கொல்லா 927
கொலைமேற் 290
கொலையில் 286
கொளப்பட் 516
கொளற்கரி 583
சலத்தால் 452
சலம்பற்றி 884
சால்பிற்கு 929
சான்றவர் 934
சிதைவிடத் 359
சிற்றினம் 129
சிறப்பறிய 348
சிறியார் 916
சிறுகாப்பின் 582
சிறுபடை 202
சிறுமைபல 850
சிறுமையும் 622
சிறைநலனும் 203
சீரிடம் 698
சீரினும் 894
சீருடைச் 961
சுழலும் 635
சுழன்றும் 989
சுற்றத்தால் 244
சூழ்ச்சி 471
சூழ்வார் 119
சூழாமல் 980
செப்பின் 783
செய்க 605
செய்தக்க 150
செய்தேமஞ் 689
செய்வானை 233
செய்வினை 479
செயற்கரி 642
செயற்கை 418
செயற்பால 105
செருக்கும் 96
செருவந்த 316
செல்லான் 1000
செல்வத்துள் 65
செவிக்குண 66
செவிகைப்ப 20
செவிச்சொல் 508
செவியிற் 78
செவியுண 67
செறுநரை 185
செறுவார் 759
சென்றவிடத் 82
சொல்லப் 1056
சொல்லுக 431
சொல்லுதல் 459
சொல்வணக் 705
சொலல்வல் 434
ஞாலம் 179
தக்காங்கு 306
தக்கார் 121
தந்நலம் 825
தம்மில்பெரி 118
தமராகி 251
தலையினிழிந்த 896
தள்ளா 563
தன்குற்றம் 103
தன்றுணை 768
தாமின்புறு 42
தார்தாங்கி 618
தாளாண்மைஎன் 382
தாளாண்மையில் 383
திறனறிந்து 430
தினைத்துணை 100
தீயளவன்றி 868
துஞ்சினார் 838
துணைநலம் 441
துப்புரவு 1017
துளியின்மை 299
துறந்தார் 343
துன்பம் 468
தூங்காமை 10
தூங்குக 472
தூய்மை 498
தெண்ணீரடு 1038
தெய்வத்தான் 389
தெரிதலும் 414
தெரிந்தவினை 145
தெளிவில் 148
தேரான்பிறனை 219
தேரான்றெளி 222
தேவரனை 1050
தேறற்க 220
தேறினும் 769
தொகச்சொல் 493
தொட்டனை 37
தொடங்கற்க 192
தொடிப்புழுதி 997
தொல்வரவும் 1007
தொழுதகை 706
நகல்வல்ல 945
நகுதல் 646
நகையீகை 879
நகையுள்ளும் 941
நகைவகை 691
நச்சப்படா 959
நட்டார்குறை 814
நட்டார்க்கு 483
நட்டார்போல் 704
நட்பிற்குறுப்பு 672
நட்பிற்குவீற் 654
நண்பாற்று 945
நயனொடு 940
நல்குரவு 1009
நல்லாண்மை 982
நல்லார்கண் 57
நல்வினைத் 140
நலத்தின் 887
நலம்வேண் 889
நவிறொறு 645
நற்பொருள் 1011
நன்மையும் 226
நன்றறிவா 1048
நன்றாற்றல் 155
நன்றென்ற 539

நாடாது 657
நாடென்ப 574
நாடொறும் 293
நாடோறும் 237
நாண்வேலி 970
நாணகத் 973
நாணாமை 713
நாணாலுயி 971
நாணென்னு 836
நாநலம் 425
நிலத்தியல் 130
நிலத்திற் 888
நிலைமக்கள் 623
நிழனீரு 776
நிறைநீர 643
நிறைநெஞ்சம் 826
நீங்கான் 755
நுண்ணிய 531
நுண்மாண் 55
நுணங்கிய 76
நுனிக்கொம் 168
நூலாருள் 490
நெடுநீர் 370
நெடும்புனலுள் 197
நெருப்பினுள் 1016
நோய்நாடி 869
நோவற்க 770
பகல்கருதி 740
பகல்வெல்லும் 175
பகைநட்பாக் 767
பகைநட்பாம் 710
பகைமையும் 530
பகையகத்துப் 556
பகையகத்துச் 550
பகையென்னும் 763
படியுடை 371
படைகுடி 4
பண்ணென் 323
பண்பிலான் 946
பண்புடையார் 942
பணியுமாம் 918
பயன்றூக் 820
பரியது 361
பருகுவார் 684
பருவத்தோ 177
பல்குழு 569
பல்லவை 558
பல்லார் 125
பலகுடை 993
பலசொல்ல 436
பலநல்ல 700
பழகியசெல்வ 854
பழகியநட் 673
பழைமை 671
பழிமலை 448
பழுதெண் 422
பழைய 517
பற்றற்ற 240
பற்றுள்ள 106
பிணியின்மை 572
பிரித்தலும் 412
பிழைத்துணர்ந் 74
பிறப்பொக்கும் 910
பிறர்நாண 972
பிறர்பழியும் 969
பீலிபெய் 166
புகழ்ந்தவை 264
புகழின்றால் 899
புணர்ச்சி 647
புரந்தார் 639
புல்லவையுள் 544
பெண்ணேவல் 812
பெயக்கண்டு 332
பெரிதினிது 721
பெரியாரை 792
பெருக்கத்து 895
பெருங்கொடை 247
பெரும்பொருள் 564
பெருமைக்கு 215
பெருமைபெருமித 919
பெருமையுடை 915
பேணாது 807
பேதைபெருங் 690
பேதைமையு 713
பேதைமையெ 712
பேதைமையோ 675
பேராண்மை 629
பொச்சாப்பார் 257
பொச்சாப்புக் 256
பொதுநலத்தார் 824
பொதுநோக்கான் 249
பொய்படும் 718
பொருட்பெண் 821
பொருட்பொரு 822
பொருளல்ல 592
பொருளானா 952
பொருளென் 596
பொருள்கருவி 475
பொருள்கெடு 855
பொள்ளென 183
பொறியின்மை 388
பொறையொரு 566
போற்றின் 507
மக்களே 1057
மடிமடி 367
மடிமை 374
மடியிலா 376
மடியுளாள் 387
மடியை 366
மடுத்தவாய் 398
மண்ணோடு 327
மணிநீரும் 579
மதிநுட்ப 416
மயிர்நீப்பின் 904
மருந்தென 862
மருந்தோ 901
மருவுக 669
மறமானம் 617
மறைந்தவை 344
மன்னர்க்கு 298
மன்னர்விழைப 505
மனத்தானா 132
மனத்தின் 703
மனத்துள 133
மனந்தூய் 134
மனந்தூயா 135
மனநலத் 139
மனநலம் 136
மனநலம்நன்கு 138

மனமாணு 780
மனையாளை 809
மனைவிழை 806
மாறுபாடு 866
மிகச்செய்து 708
மிகன்மேவல் 745
மிகினும் 861
முகத்தின் இனிய 701
முகத்தின்முது 527
முகநக 649
முகநோக்கி 528
முடிவும் 477
முதலிலார் 124
முயற்சி 386
முரண்சேர் 193
முற்றாற்றி 587
முற்றியும் 586
முறைகோடி 301
முறைசெய்து 19
முறைப்பட 423
முன்னுற 260
முனைமுகத் 588
மேலிருந்து 912
மேற்பிறந்தார் 59
மையல் 720
யாண்டுச் 797
யாதானு 38
வகைமாண்ட 800
வகையறச் 149
வகையறிந்துவல் 771
வகையறிந்து தன் 548
வருமுன் 101
வரைவிலா 828
வலியார்க் 751
வழங்குவ 881
வழிநோக்கா 755
வன்கண் 410
வாரிபெருக்கி 227
வாள்போல் 778
வாளொடென் 555
வானோக்கி 272
விடுமாற்ற 499
வியவற்க 108
விருப்பறா 241
விரைந்து 435
வில்லேர் 764
விலங்கொடு 61
விழித்தகண் 633
விழுப்புண் 634
விழைதகையா 746
விழையார் 681
வினைக்கண் வினைகெட 381
வினைக்கண் வினையு 236
வினைக்குரி 235
வினைசெய் 340
வினைத்திட் 455
வினைபகை 474
வினையான் 480
வினைவலி 160
வீறெய்தி 460
வெண்மை 728
வெருவந்த 308
வெள்ளத்-இடும்பை 396
வெள்ளத்-மலர் 356
வேட்பத் 433
வேட்பன 512
வேண்டற்க 846
வேலன்று 279
வேலொடு 291
வைத்தான் 950

திருக்குறள் சொல் அகராதி

பொருட்பால்

[எண் - குறள் எண்]

அ- சுட்டு 411, 423, 475, 489, 641, 645, 677, 695, 838
அஃதிலார் 572
அஃது 414, 427, 459, 476, 556, 575, 591, 600, 621, 943, 971, 1001, 1014, 1032
அகடு 936
அகத்தது 702
அகத்தார் 745
அகத்து 694, 717, 723, 727, 814, 824, 877, 1020
அகப்பட்டி 1074
அகம் 708, 786, 830
அகலம் 743
அகலாக்கடை 478
அகலாது 691
அங்கணம் 720
அச்சம் 501, 534, 1075
அச்சு 475, 667
அசாவாமை 611
அசைஇ 1040
அசைவு 594
அஞ்சப்படும் 824
அஞ்சல் 428
அஞ்சற்க 882
அஞ்சா 225, 500, 761, 762, 778
அஞ்சாதவர் 723
அஞ்சாது 585
அஞ்சாமை 382, 428, 497
அஞ்சான் 647, 686
அஞ்சி 680, 730, 741, 863, 869, 883
அஞ்சுக 882
அஞ்சுபவர் 464, 726, 906
அஞ்சும் 45, 727, 904, 905
அஞ்சுவது 428
அஞ்சுவார் 729
அஞ்சுவான் 905
அடங்கா 834
அடல் 768, 893
அடி 544, 610
அடிமை 608
அடு 1065
அடுக்கி 625
அடுக்கிய 525, 954, 1005
அடுங்காலை 799
அடுத்த 450, 817
அடுத்தது 706
அடுத்து 621, 867
அடுத்தூன்று 1030
அடுப 493
அடும் 495, 500
அடுமுரண் 567
அடையாவாம் 939
அணங்கு 918
அணி 701, 1014
அணிகலம் 575
அணிநிழல் 742
அணியுமாம் 978
அணியென்ப 738
அணுகாது 691
அத்து 426, 526, 548, 555, 595, 598, 622, 758
அதற்கு 391, 518, 802
அதன் 490, 773, 1038
அதன்கண் 472
அதனால் 642, 1031
அதனில் 759
அதனின் 644
அதனை 495, 517, 621, 859, 871
அதனோடு 550
அதர் 594
அதி 636
அதிர 429
அது 452, 477, 533, 536, 570, 596, 901, 948, 985, 996
அதுநோக்கி 528
அதுபோல் 781
அதுவே 764
அதுஉம் 546
அந்தணர் 543
அந்நிலையே 967
அப்பால் 950
அம் 720
அம்பின் 597
அம்பினில் 772
அமர் 814
அமரகத்து 1027
அமிழ்து 720
அமைச்சு 381, 631, 632, 633, 634
அமைந்த 635, 900
அமைந்தக்கண்ணும் 606
அமைந்து 474, 761
அமையா 803, 961
அமையாதவர் 825
அமையார் 906
அமையும் 708
அமைவர் 580
அமைவிலன் 863
அமைவு 740, 743
அரங்கு 401

அரசர் 381
அரசு 381, 385, 554
அரண் 381, 421, 492, 534, 741, 750
அரம் 567, 888, 997
அரிதாய் 745
அரிது 414, 499, 606, 647, 693, 762, 823, 843, 886, 1049
அரிதே 443, 503
அரிய 489, 503, 537, 664, 781
அரியது 489, 747
அரியர் 723
அரியவற்றுள் 443
அரியவை 693
அருஞ்செவ்வி 565
அருட்பொருள் 914
அருந்தியது 942
அருப்பு 522
அரும் 732
அருமறை 847
அருமை 611, 743
அருள் 938
அருளென்னும் 757
அருளொடும் 755
அருவினை 483
அல்ல 400, 466, 700, 944, 962, 1012
அல்லதன்கண் 832
அல்லது 491, 570, 751, 795 951
அல்லர் 880, 973, 976
அல்லல் 460, 555, 626, 787, 936, 938
அல்லவர் 973
அல்லவரை 751
அல்லவை 384, 551
அல்லற்கண் 798
அல்லன் 386
அல்லாதவர்க்கு 1077
அல்லார் 419, 720, 822, 973
அல்லார்க்கு 726, 918, 999
அல்லால் 406, 497, 515, 762
அல்லாவார் 593
அலகுடை 1034
அலகை 850
அலை 551
அலைக்கும் 736
அவ்வது 426
அவர் 410, 417, 447, 469, 506, 653, 712, 721, 807, 977, 1016, 1051, 1071
அவர்க்கும் 492, 775
அவரவர் 469
அவரின் 1074
அவருள் 1073
அவரை 748
அவலம் 1072
அவற்றின் 875
அவன் 684 727.
அவன்கண் 517
அவனின் 526
அவனை 518, 547, 647, 958
அவா 1075
அவாம் 681
அவாய் 643
அவாவின்மை 513
அவி 413
அவித்து 694
அவியின் 420
அவை 400, 658, 659, 711, 713, 719, 723, 725, 727, 729
அவைநீக்கி 787
அவையுள் 719
அழ 659
அழச்சொல்லி 795
அழிக்கல் 421
அழிக்கும் 934
அழித்து 775
அழிந்து 498
அழிப்பது 644
அழிய 968
அழியும் 603
அழிவது 461
அழிவதூஉம் 461
அழிவந்த 807
அழிவின் 787
அழிவின்கண் 782, 787
அழிவின்று 764
அழிவு 625
அழுத 828
அழுதகண்ணீர் 555
அழுந்தும 835
அளக்கும் 710
அளந்தான் 610
அளப்பதோர் 796
அளவளாவு 523
அளவறியான் 474
அளவினால் 574
அளவு 474, 477, 478, 479, 725, 848, 943, 947, 949
அளறு 835, 919
அளி 390, 557
அளிக்க 387
அற்ற 649, 654, 699, 956, 980
அற்றக்கண்ணும் 521
அற்றது 942, 944
அற்றம் 421, 431, 846
அற்றார் 503, 646, 998
அற்றாரை 506
அற்றார்க்கு 1007
அற்றால் 720, 758, 838, 943
அற்று 401, 402, 407, 415, 452, 660, 718, 890, 913, 929 931, 1000, 1020, 1058
அற்றே 716
அற்றேம் 626
அற 391, 465, 717

அறத்திற்கும் 543
அறம் 501, 1018, 1019, 1047
அறவினையும் 909
அறன் 384, 441, 635, 644, 754
அறா 522
அறார் 807
அறி 638
அறிகல்லாதவர் 427
அறிதல் 582, 632
அறிதொழிலோர் 560
அறிந்த 721
அறிந்தக்கடை 637
அறிந்தவை 587
அறிந்தார் 397, 717
அறிந்தான் 635
அறிந்து 427, 441 472, 469, 477. 483, 493, 494, 515, 635, 637, 644, 645, 687, 696, 711, 721, 725, 729, 754, 767, 793, 878, 943, 944, 946, 981
அறிய 590
அறியா 736, 836
அறியார் 473, 507, 713
அறியார்க்கு 877
அறியாமை 440, 925
அறியான் 474, 638, 863
அறியேன் 928
அறிவறிந்து 618
அறிவார் 427, 428, 995 1053
அறிவாரின் 1072
அறிவான் 677, 701
அறிவிலார் 849
அறிவிலான் 847, 869
அறிவினவர் 857, 914, 915 918
அறிவினார்க்கு 429
அறிவு 382, 396, 404 421, to 427, 430, 441, 454, 507, 513, 622, 682, 684, 842, 847
அறிவுடையார் 463, 816
அறிவும் 1022
அறுக்கும் 753. 759, 814
அறுப்பார் 798
அறைபடுத்து 747
அறைபறை 1076
அறைபோகாது 764
அன்பிலன் 862
அன்பின் 807, 911
அன்பீன் 757
அன்பு 513, 681, 682, 807, 983, 1019
அன்புடைமை 992
அன்பொடும் 755
அன்றி 437, 947
அன்று 438, 546, 549, 618, 641, 784, 825, 871, 988, 1051
அன்றே 555
அன்றோ 1014
அன்ன 527, 655, 889, 1071
அன்னர் 1076
அன்னார் 667. 814, 898, 969, 1061
அன்னான் 624
அனைத்து 387, 394, 396, 409, 416, 828,
அனைய 595, 622 965
அனையர் 406, 410, 650, 964, 1073
அனையாரும் 965
அனைவரையும் 584
ஆ 429, 433, 443, 444, 451, 507, 590, 634
ஆஅதும் 653
ஆக்க 793
ஆக்கத்தின் 657
ஆக்கம் 457; 492, 522, 527, 544, 562, 593, 642, 651, 758, 858, 859, 902, 992
ஆக்கி 678
ஆக்கும் 616
ஆக 424, 434, 445, 666, 951,
ஆகா 421, 456
ஆகாத 537
ஆகாது 619
ஆகாறு 478
ஆகி 461. 586 587, 732, 744, 745
ஆகிய 730, 817
ஆகிவிடும் 476
ஆகு 478
ஆகுதல் 683, 823
ஆகும் 436, 452, 454, 456, 459, 590, 630, 1049
ஆங்கு 474, 534 584, 666, 676, 740, 803
ஆங்கே 487, 566, 788, 928
ஆசற்றார் 503
ஆசாரம் 1075
ஆசு 503
ஆடவர் 1003
ஆடி 401
ஆண்மை 480, 609, 663
ஆணி 667
ஆணுடை 907
ஆதல் 419, 714, 990
ஆதலே 600
ஆதியாய் 543
ஆம் 390. 414, 433, 449, 453, 492, 643, 488, 664, 685, 686, 690, 785, 830, 858, 889, 932, 1002
ஆய் 446
ஆய்தொடியார் 911
ஆய்ந்தவர் 662
ஆய்ந்தாய்ந்து 792

ஆய்ந்து 517, 795
ஆயம் 933, 939
ஆயின் 404, 409, 414; 458, 478, 563, 566, 656, 1018
ஆயினும் 458, 478, 599, 889, 900, 961, 1065,
ஆயும் 914
ஆர்க்கும் 482
ஆர 837
ஆராய்ந்து 586, 682, 684, 711,
ஆராய்வான் 512
ஆரார் 936
ஆல் 387, 397, 418, 452, 514, 525, 537, 548, 588, 731, 757, 817, 827, 840, 923, 966, 993, 1004, 1017
ஆவது 427, 461.
ஆவதூஉம் 461
ஆவாரை 1074
ஆவிற்கு 1066
ஆழ் 500
ஆழி 989
ஆழும் 919
ஆள் 500
ஆள்க 589
ஆள்பவர் 1017
ஆள்பவர்க்கு 383, 791
ஆள்வாரை 447
ஆள்வினை 632
ஆள்வினையும் 1022
ஆளப்படும் 511
ஆளும் 860
ஆற்ற 732
ஆற்றல் 469, 765, 891, 985
ஆற்றுக்கடை 469
ஆற்றுதார் 894
ஆற்றுதான் 1007
ஆற்றுது 555, 1032
ஆற்றுர் 493, 908
ஆற்றுராகி 998
ஆற்றுரும் 493
ஆற்றி 493, 515, 568, 669, 748, 975
ஆற்றின் 468, 477, 525, 716, 725
ஆற்று 798, 814
ஆற்றும் 579, 835
ஆற்றுபவர் 741, 893
ஆற்றுவார் 891, 894, 975, 985, 1027
ஆறு 381, 465, 478, 662, 932, 943
ஆறுய்த்து 787
ஆன் 416
ஆன்ற 416, 694, 862, 992, 909
ஆன்றுர் 413
ஆன்று 635
இ 382, 383, 387, 392, 513, 578, 662, 684, 688, 738
இகந்த 567
இகவா 869
இகவாமை 779
இகல் 481, 647, 851, 852, 853, 854, 855, 857, 859
இகலிற்கு 858
இகலின் 856
இகழ்ச்சி 995
இகழ்ச்சியின் 539
இகழ்ந்தார்க்கு 538
இகழ்ந்து 1057
இகழ்வார் 966
இகழாமை 891, 953
இகழார் 698
இசை 1003
இசைவேண்டி 777
இட்டிது 478
இடத்தால் 422, 497
இடத்தான் 484
இடத்து 490, 746, 736, 806, 968
இடம் 491, 675, 687, 1064
இடர்ப்பாடு 624
இடன் 493, 494
இடனுடையார்க்கு 910
இடிக்கும் 447
இடித்தல் 784
இடித்து 795
இடிப்பாரை 448
இடிபுரிந்து 607
இடு 552
இடுக்கண் 621, 624, 625, 654, 788, 1030,
இடும்பை 508, 510, 622, 623, 627, 628, 1056, 1060, 1062
இடும்பைக்கே 1029
இடும்பையுள் 1045
இடை 663, 712, 899
இடைக்கண் 473
இடையூறு 676
இணர் 650
இதனுல் 517
இதனை 517
இம் 952
இமைப்பின் 775
இமையாரின் 906
இயக்கம் 1020
இயல்பு 382, 452, 628, 903, 951, 1006
இயல்புளி 545
இயல்வது 734
இயற்கை 637
இயற்றல் 385
இயற்றியார்க்கு 760
இயைந்த 576
இயைந்தக்கால் 489
இயைந்து 576
இயைபு 573
இயையின் 522
இரக்க 1051
இரங்கி 535

இரங்குவ 655
இரண்டால் 875
இரண்டின் 662, 674, 1022
இரண்டு 393, 402, 455
இரண்டும் 392, 992
இரத்தக்கார் 1051
இரத்தல் 1052
இரத்தலும் 1054
இரந்தவை 1052
இரந்து 1059, 1062
இரந்தும் 973
இரப்பவர் 1058, 1070
இரப்பார்க்கு 1035
இரப்பாரை 1058, 1067
இரப்பன் 1067
இரப்பான் 1060
இரப்பின் 1067
இரப்பினும் 1066
இரப்பும் 1053
இரவன்மின் 1067
இரவாமை 1061
இரவார் 1035
இரவின் 1066
இரவு 552, 1064, 1068, 1069
இரீஇ 660
இருக்க 409
இருட்டறை 915
இருந்து 530 617
இருப்பர் 485, 804
இருப்பாளை 1040
இருப்பின் 1039
இருபுனலும் 737
இருமனம் 920
இருள் 675, 753
இல் 400, 446, 460, 472, 526, 536, 538, 577, 583, 621, 713 729, 759, 770, 834, 839, 850, 871, 909, 910, 934, 951, 1001, 1005, 1021, 1063, 1065, 1066, 1068, 1071
இல்லது 425, 735, 750
இல்லதே 587
இல்லவர் 537, 917
இல்லா 853
இல்லாக்காலும் 1064
இல்லாகி 479, 935
இல்லாண்மை 1026
இல்லாத 412, 448, 573, 574, 740, 945, 997
இல்லாதாள் 402
இல்லாதான் 523, 614
இல்லாயின் 769, 1058
இல்லார் 395, 431, 591, 600, 730, 1005, 1020, 1050
இல்லார்கண் 750
இல்லாரை 752, 1056
இல்லாள் 903, 906
இல்லாளின் 1039
இல்லாளை 905
இல்லான் 407
இல்லெனினும் 768
இல்லை 429, 449, 456, 460, 533, 534, 537, 570, 710, 751, 842, 945, 951, 976
இல 696, 697, 956
இலக்கம் 627
இலங்கு 410
இலதனை 464
இலது 586
இலம் 1040
இலர் 409, 430, 499, 506, 778, 954, 1072
இலரே 728
இலவர் 607
இலவர்க்கு 604
இலன் 414, 566, 628, 629, 647, 864
இலனும் 868
இலனாய் 868, 1025
இலா 594, 610, 919
இலாத 1030
இலாதவர் 598, 640, 890
இலாதான் 1006
இலார் 427, 430, 449
இலாளன் 904
இலான் 448 617, 625, 842, 1000
இலானும் 448
இவ் 992
இவ்வுலகு 571
இவர் 790
இவறன் 432
இவறன்மை 438
இவறி 1003
இவறியார் 935
இவறியான் 437
இவறும் 1002
இவன் 517
இவை 581
இழக்கும் 463, 554 932
இழத்தொறூம் 940
இழந்தவன் 788
இழந்தேம் 593
இழப்பர் 494
இழப்பின் 659
இழப்பினும் 812
இழிந்த 964
இழிவு 941
இழுக்கம் 809
இழுக்கல் 415
இழுக்கா 384
இழுக்காது 384
இழுக்காமை 536
இழுக்கார் 952
இழுக்கியான் 535
இழுக்கு 467, 716, 893, 911
இழைத்து 417, 530
இழைக்கது 779
இளி 970 971, 1066
இளிவந்த 654, 1044
இளிவு 464, 958
இளைதாக 879

இறந்த 432, 531
இறந்து 476, 586, 900, 971
இறப்பே 977
இறல் 885
இறுதி 476, 690
இறும் 475
இறுவரை 488
இறை 388, 541, 547, 564, 733
இறைக்கு 432, 436
இறைவர்க்கு 690, 733
இறைவன் 778
இன் 408, 420 569
இன்சொல் 387, 525, 911 953
இன்துணை 875
இன்பத்துள் 629, 854
இன்பம் 501. 615, 628, 629, 630, 669, 738, 854, 869, 946, 1052
இன்பமும் 754
இன்பு 999
இன்மை 503, 557, 577, 616, 618, 645, 738, 841. 903, 958, 979, 988, 1019, 1044, 1062
இன்மையின் 558, 1041,
இன்மையும் 1042
இன்மையுள் 841
இன்மையென 1042
இன்மையே 1041
இன்றி 401, 539, 566, 620, 947, 967, 1042. 1069
இன்றியமையாத 682,
இன்று 755. 904, 966,
இன்றும் 1048
இன்றே 740
இன்றேல் 556, 573, 575, 996, 1014
இன்னம் 790
இன்னா 565, 824, 852, 857, 881, 894, 987
இன்னாச்சொல் 564
இன்னாத 860, 881
இன்னாது 408. 558, 819, 923, 995
இன்னாதது 1041
இன்னாமை 630
இன்னாவாம் 881
இன்னான் 453
இன்னும் 793
இனத்தன் 446
இனத்தான் 453
இனத்தின் 460
இனத்து 452, 454, 568
இனந்தூய்மை 455
இனந்தூயார் 456
இனநலம் 457, 458, 459
இனம் 456, 457, 458, 459 822 884
இனம்போன்று 822
இனமுறையர் 698
இனன் 868
இனிது 648, 772, 811, 839. 856, 865
இனிய 824
இனியது 1065
இனியவே 987
இனையர் 698, 790
ஈக 477
ஈகலான் 863
ஈகை 382, 953
ஈட்டம் 1003
ஈட்டல் 385
ஈட்டிய 1009
ஈண்டிய 417
ஈத்து 387
ஈதல் 842, 1000
ஈதலே 1054
ஈய 412
ஈயாது 1002
ஈயும் 1061
ஈர்ங்கண் 1058
ஈர்ங்கை 1077
ஈவர் 1035
ஈவார் 1059
ஈவாரை 1057
ஈன்ற 1047
ஈன்றாள் 656, 923
ஈனும் 754
உக்க 720
உகாஅமை 585
உஞற்று 604, 607
உஞற்றுபவர் 620
உஞற்றுபவர்க்கு 1024
உட்க 921
உட்பகை 735, 883, 884, 885. 887, 889
உடம்பாடு 890
உடம்பு 627, 943, 1029
உடற்றுபவர் 818
உடன்மூவர் 589
உடன்று 765
உடனுறைந்து 890
உடுக்கை 788
உடுப்பதூஉம் 1079
உடை 389, 415, 473. 939, 1012
உடைக்கும் 1077
உடைத்தாய் 746
உடைத்து 398, 458, 459, 565, 578, 624, 667, 770, 780, 868, 907, 925, 1010, 1018, 1053, 1057
உடைமை 558 592, 641, 681, 688, 838, 960. 1012, 1014
உடைய 975
உடையது 384, 591, 742, 746, 1021
உடையம் 844
உடையர் 393, 458 591, 1072
உடையவர் 975
உடையரேனும் 430

உடையரோ 591, 606, 728, 970
உடையார் 395, 404, 413, 415, 427, 430, 441, 526, 593
உடையார்க்கு 534, 636
உடையாளன் 874
உடையான் 381, 390, 486, 502, 513 594, 622, 684
உண்க 922, 943
உண்டதன் 930
உண்டாக 758, 988
உண்டாம் 876 1059, 1075
உண்டாயினும் 1005
உண்டி 945
உண்டு 469, 571, 757, 796, 850, 932, 974 996, 1033
உண்டேல் 1075
உண்டோ 707
உண்ணற்க 922
உண்ணுன் 1001
உண்ணின் 945, 947
உண்ணும் 527, 930
உண்பதூஉம் 1079
உண்பவர் 926
உண்மை 572
உண்மையான் 571, 1055
உணக்கின் 1037
உணர்க 805
உணர்ச்சி 453, 785
உணர்ச்சியுள் 976
உணர்ந்து 417, 616, 712, 1046
உணர்ந்தும் 834
உணர்வது 718
உணர்வார் 703, 708, 709 716
உணர்வான் 702
உணர்வு 420
உணர 650
உணரப்படும் 575, 826
உணரா 420
உணராமை 589
உணராவாயின் 705
உணவின் 413
உணவு 412
உணில் 922
உணின் 942
உப்பக்கம் 620
உப்பாதல் 802
உப்பிற்கும் 1050
உம் 385, 388, 390, 395, 397, 398 402, 403 404, 409, 412, 414, 416, 417, 418, 420 423 425, 431, 432 433, 438, 448 455, 457, 458, 460, 461, 471, 478, 484, 491 492, 493 499, 503 504, 509, 510 511 525, 527, 554, 567, 577, 581 582, 585, 588, 620, 626, 631, 633 634, 635, 638, 642, 644, 656, 658; 659, 669, 676, 690; 694 707, 730, 731, 734, 735, 747, 746, 748, 828, 835, 843, 845, 848, 852, 856, 876, 920, 931, 935, 937, 951, 952, 954, 962
உய்க்கின் 440
உய்க்கும் 943
உய்த்து 987, 1076,
உய்ப்பது 422
உய்யார் 846, 900, 966
உய்வு 896
உயர்ந்து 957
உயர்வு 595, 596, 743, 963
உயற்பாலது 437
உயிர் 501, 557, 778, 940, 969, 1013, 1020, 1070
உயிர்க்கு 392, 457, 476, 945
உயிர்க்கும் 851 972, 1012
உயிர்ப்ப 763, 890
உயிர்ப்பொருட்டு 1017
உயிரச்சம் 501
உயிரார் 777
உயிரை 1017
உரம் 600, 888
உரவோர் 597
உரிமை 518, 578
உரியர் 1080
உரியனுக 518
உருகும் 1069
உருவு 585, 667, 684
உருள் 667, 933
உரை 581
உரைக்கும் 564, 709, 743, 912
உரைக்கலான் 1076
உரைத்தும 834
உரைப்பான் 681, 687, 689
உரைப்பார்க்கு 682
உரையாதார் 950
உல்குபொருள் 156
உலகு 387, 389, 399, 470, 520, 544, 578, 612, 670, 841, 874, 884, 970, 1014, 1025
உலகம் 425, 426, 598, 991, 1031
உலகத்தார் 850
உலகத்தார்க்கு 1032
உலகத்து 533, 637
உலகத்தோடு 426
உலகியல் 572
உலகெல்லாம் 542
உலைவிடத்து 762, 883
உலைவு 620

உவகை 432, 531
உவந்து 842, 1061
உவப்ப 394
உவப்பது 1057
உவப்பின் 707
உவரி 763
உழத்தொறூஉம் 940
உழந்தும் 1031
உழப்பதாம் 787
உழப்பர் 936
உழப்பிக்கும் 936
உழவர் 872, 892
உழவினார் 1036
உழவு 1031
உழி 415
உழுது 1033
உழுவார் 1032
உழை 530, 594, 950
உழைப்பிரிந்து 530
உழையிருந்தான் 638
உள் 411, 421, 487, 495, 677, 680, 828, 832, 927, 955
உள்ள 394, 622, 971, 1069
உள்ளத்தின் 622
உள்ளது 572, 889
உள்ளதூஉம் 641, 982
உள்ளப்படும் 665
உள்ளப்பெறின் 540
உள்ளம் 438, 592, 595, 598, 677, 798, 799, 1057, 1069
உள்ளல் 596
உள்ளவெறுக்கை 600
உள்ளற்க 798
உள்ளான்கொல் 930
உள்ளியது 540
உள்ளினும் 799
உள்ளுக 539
உள்ளும் 715
உள்ளுவது 596
உள்ளுள் 1057
உள்ளோர் 927
உள 479, 480, 483, 521, 527, 619, 636, 995
உளது 454
உளபோல் 574
உளபோல 479
உளர் 406, 730, 880
உளராகார் 896
உளவரை 480
உளவோ 483
உளான் 617
உளி 545
உற்ற 442, 624, 625, 887, 888
உற்றக்கடை 837
உற்றக்கால் 1080
உற்றது 708
உற்றபின் 662
உற்றவன் 950
உற்றவை 512
உற்றான் 949
உற 399, 669
உறல் 885
உறுஅமை 442
உறின் 778, 812
உறு 498
உறுதல் 628, 629
உறுதி 638, 690, 796
உறுப்பினுள் 703, 705
உறுப்பு 704, 737, 761, 802, 993
உறுபகை 744
உறுபசி 734
உறுபடையான் 498
உறுபொருள் 756
உறும் 639, 816, 817, 1061
உறுவது 399, 813
உறை 499, 559, 561, 680
உறைபதி 1015
உறைநிலத்தோடு 449
உறைவது 426
உன்னும் 469
ஊக்கம் 382, 486, 498, 591, 593, 594, 744, 858
ஊக்கத்தின் 473
ஊக்கார் 463
ஊக்கி 473
ஊக்கின் 476
ஊக்கும் 855
ஊங்கு 460, 644, 1065
ஊடிவிடும் 1039
ஊண் 939, 968, 1012, 1035
ஊதியம் 449, 461, 797, 831
ஊர்ந்து 979
ஊர்வது 621
ஊர 601
ஊராண்மை 773
ஊராம் 397
ஊருள் 1008
ஊழ் 620
ஊழ்த்து 650
ஊழி 989
ஊற்று 414
ஊற்றுக்கோல் 415
ஊறு 662, 665, 761, 762
ஊறுபாடு 945
ஊறும் 396
ஊன் 1013
ஊன்றிய 983
ஊன்றும் 597, 615, 784
எ 439, 491, 428
எஃகு 759, 773
எச்சம் 456, 674, 1004, 1012, 1075
எஞ்சாது 690,
எஞ்சாமை 382, 497
என்னான்றும் 439, 582, 701, 864, 870, 886, 903, 905, 910, 921, 926, 927

எடுத்து 776
எண் 392, 910, 991
எண்ணப்பட 922
எண்ணப்படுவது 438
எண்ணம் 494
எண்ணாத 568
எண்ணி 467, 470, 497, 530, 666, 675, 687, 699
எண்ணிய 666, 753, 941
எண்ணியார் 494, 666
எண்ணும் 639, 1004
எண்ணுவம 467
எண்பதம் 548
எண்பொருள் 760
எண்பொருள 424
எதிர் 765, 855, 858
எதிரது 429
எந்நலத்து 982
எப்பால் 533
எப்பொருள் 695
எம் 635, 697
எமக்கு 790
எய்த 516, 772
எய்தல் 540, 606, 671, 904, 991
எய்தலின் 815
எய்தற்கு 489
எய்தாமை 815
எய்தார் 598, 901
எய்தி 665, 670, 749, 932
எய்திய 657, 740
எய்தும் 610, 676, 1024
எரி 435
எரியால் 896
எருவிடுதல் 1038
எருவும் 1037
எல்லா 457, 746, 851, 972
எல்லாம் 411, 430, 443, 444, 507, 547, 582, 596, 610, 624, 651, 659, 661, 673, 761, 776, 832, 860, 891, 981, 1002, 1012, 1013 1032, 1033, 1056, 1064, 1067
எல்லார்க்கும் 582
எல்லாரும் 752
எல்லைக்கண் 806
எலிப்பகை 763
எவ்வது 426
எவ்வம் 853
எவ்வினையும் 491
எவன் 574, 803
எழில் 407
எழுத்து 392
எழுதல் 465
எழுவது 639
எழுமை 398, 835
எழுமையும் 538
எழுவாரை 1032
எள் 889
எள்ளற்க 491
எள்ளாத 470
எள்ளாது 1057
எள்ளாமை 667
எள்ளும் 607
எள்ளுவர் 752
எள்ளுவாரை 829
எளிதாம் 745
எளிது 540, 864, 991
எளிய 664
எளியர் 723
எளியன் 386, 863
எற்று 663
எற்றிற்கு 1080
எற்று 438 557, 655
எறிக 562
எறிதற்கு 821
எறிந்தும் 747
எறிய 775
என் 397, 420, 430, 436, 726, 812, 862, 923, 966, 1004, 1059
என்க 581
என்செயினும் 586
என்ப 392, 483, 617, 736, 739, 851, 918, 953, 981, 991
என்பது 467, 661, 773, 831, 850, 997, 928, 1026.
என்பர் 662
என்பவர் 393
என்பவன் 856
என்பார் 956
என்பார்க்கு 1036
என்பான் 628, 850
என்றது 552
என்று 388, 515, 517, 564, 593, 611, 626, 627, 655, 674, 698, 699, 743, 805, 939, 950, 1004, 1040, 1066, 1067
என்றும் 536, 652, 978
என்றவற்று 715
என்ன 705, 987
என்னும் 406, 438, 464, 571, 598, 601, 613, 641, 653, 753. 757, 844, 851, 853, 854, 860, 871, 897, 924, 936, 976, 988, 991, 992, 1013, 1015, 1021, 1023, 1040, 1045, 1062, 1068
என்னை 771
என 487, 630, 700, 722, 766, 942, 1022
எனப்படுதல் 967
எனப்படும் 453
எனப்படுவது 591, 801
எனப்படுவார் 989
எனல் 971
எனில் 789, 986
எனின் 546, 638, 730, 831, 844, 1041

எனினும் 489, 619, 770
எனைத்திட்பம் 670
எனைத்து 416, 825
எனைத்தும் 820
எனைமாட்சி 750
எனைவகை 514
ஏ 395, 408, 415, 418, 434, 447, 450, 489, 502, 527, 613
ஏக்கற்று 395
ஏத்தும் 970
ஏதப்பாடு 464
ஏதம் 831, 835, 884, 1006
ஏதில் 913
ஏதில 440
ஏதிலார் 440, 837
ஏதிலான் 862
ஏதின்மை 876
ஏந்தல் 772
ஏந்திய 899
ஏமம் 738, 766, 815
ஏமரா 448
ஏமாப்பு 398, 458, 459, 868, 1068
ஏமார்த்தல் 660
ஏமுற்றவர் 893
ஏர் 872, 1053
ஏர்ப்பின்னது 1053
ஏரினும் 1038
ஏல் 386, 655
ஏவ 848
ஏவல் 515, 907, 909
ஏழை 873
ஏற்றல் 861
ஏற்று 716
ஏறி 758
ஏறினர் 476
ஏறு 381
ஏனை 392, 410, 505, 704, 760
ஏனும் 997
ஐந்து 738, 939, 983
ஐந்துடன் 632
ஐயப்பாடாதது 702
ஐயப்படும் 958
ஐயப்பாடு 587
ஐயம் 845
ஐயுறவு 510
ஒக்க 490
ஒட்டல் 499
ஒட்டி 629
ஒட்பம் 404, 425
ஒட்டார் 826, 967
ஒட்டார்சொல் 826
ஒட்டாமை 629
ஒடு 410, 585, 652, 675, 704, 726.
ஒடுக்கம் 486
ஒடுங்கும 828
ஒண்பொருள் 760, 1009.
ஒண்மை 844
ஒத்தல் 993
ஒத்தாங்கு 561
ஒப்ப 702
ஒப்பதாம் 993
ஒப்பது 536, 621
ஒப்பர் 413, 730
ஒப்பாரி 1071
ஒப்பு 993
ஒப்புரவாண்மை 480
ஒப்பிலார் 800, 812
ஒரார் 658, 695
ஒரால் 662
ஒரீஇ 422, 797, 830, 1009
ஒருங்கு 554, 610, 733, 760, 951, 1056
ஒருதலை 634
ஒருபாவி 1042
ஒருமை 378, 835, 974
ஒருவந்தம் 563, 593
ஒருவரான் 1004
ஒருவற்கு 398, 400, 414, 454, 600, 797, 971, 988, 1023, 1024, 1052
ஒருவன் 397, 405, 609, 661, 871, 875, 838, 967, 1021
ஒருவுக 800
ஒருவுதல் 652
ஒரூஉம் 872
ஒல்காமை 662
ஒல்கார் 697
ஒல்லாக்கால் 573
ஒல்வது 472
ஒல்லா 1064
ஒல்லாது 559, 870
ஒல்லானை 870
ஒல்லும் 673, 789, 878
ஒல்லை 563, 564 826
ஒலித்தக்கால் 763.
ஒழுக்கம் 415, 952
ஒழுக 446, 698 855
ஒழுகல் 482, 524, 602, 694, 845.
ஒழுகலான் 445, 1073
ஒழுகான் 474
ஒழுகின் 892, 974
ஒழுகுதல் 444
ஒழுகுபவர் 908
ஒழுகும 551, 563, 603, 874 907.
ஒழுகுவார் 691, 876, 921
ஒள்வாள் 727
ஒள்ளியர் 714
ஒள்ளியவர் 487
ஒளி 390, 556, 653, 870, 921, 939, 970, 971
ஒளிக்கும் 1070
ஒளித்ததூஉம் 928
ஒளியார் 714
ஒளியோடு 698
ஒவ்வா 972
ஒற்கத்தின் 414
ஒற்றி 583, 588, 927
ஒற்றின்கண் 590
ஒற்றினால் 588
ஒற்றினன் 583

ஒற்று 584, 585, 586, 587, 589
ஒறுக்கிற்பவர் 779
ஒறுத்தல் 550
ஒறுத்து 579
ஒறுப்பது 561
ஒன்றல் 886
ஒன்றாமை 886
ஒன்றியார் 886
ஒன்றீத்தும் 800
ஒன்று 438, 758, 831, 839, 875, 932, 934, 1006, 1007, 1035, 1080
ஒன்றும் 825, 833
ஒன்றுற்றக்கால் 773
ஒன்றோ 805, 836
ஒன்னார் 630, 756, 827, 828
ஒன்னார்க்கு 608
ஓ 483
ஓஒதல் 653
ஓச்சி 562
ஓச்சும் 544, 545
ஓட்டன்றோ 775
ஓடா 496
ஓடு 410, 413, 426, 632, 636, 730 962, 983
ஓடும் 496
ஓதி 834
ஓம்பல் 390, 612, 642, 820
ஓம்பா 861
ஓம்பி 549
ஓம்புக 506, 861
ஓம்புதல் 626
ஓம்பும் 968
ஓர் 426, 465, 639, 645, 848, 932, 1053
ஓர்ந்து 541
ஓரனையர் 704
ஓவாப்பிணி 734
ஓவாது 933
கஃசு 1037
கசடற 845
கசடு 391 717
கட்டளை 505, 986
கடல் 496
கடன் 638, 687, 802, 981, 1053
கடாஅ 585
கடிதல் 549
கடிது 562
கடிந்த 658
கடிந்து 658, 668
கடியன் 564
கடு 567
கடுகி 564
கடுங்கோல் 530
கடுத்தது 706
கடுத்தபின் 693
கடும் 386, 566
கடை 663, 803, 908, 964, 1019, 1059
கடைத்தும் 823
கடைமுறை 792
கடையர் 395
கடையென்ப 729
கண் 392 393, 398, 408, 445, 500, 503, 510, 566, 573, 574, 581, 585, 608, 613, 686, 705, 709, 780, 810, 827, 927, 946, 950, 951, 957, 958, 977, 1055, 1059, 1061
கண்ட 491, 668
கண்டது 1071
கண்டவாறு 849
கண்டன்னது 565
கண்டானாம் 849
கண்டு 387, 399, 667, 758
கண்ணஞ்சா 500
கண்ணல்லது 710
கண்ணிலர் 577
கண்ணிற்கு 575
கண்ணின் 709
கண்ணீர் 828
கண்ணுடையர் 577
கண்ணும் 514, 670, 740, 750, 955, 986, 1061
கண்ணேயும் 1044
கண்ணோட்டம் 571, 572, 573, 574, 575, 577, 983
கண்ணோட 578
கண்ணோடாதவர் 576
கண்ணோடாது 541
கண்ணோடி 579
கண்ணோடு 576
கண்பாடு 1049
கணத்தர் 720
கந்து 507
கயவர் 1071, 1072, 1073, 1076, 1077, 1080
கயிறு 482
கரத்தல் 1054
கரப்பிலா 1053, 1055
கரப்பின் 1051
கரப்பு 1038, 1056
கரவு 1068, 1069
கரவா 527
கரவாது 1035
கரி 1060
கருத 1028
கருதி 463 484, 485, 687, 852, 949
கரும்பு 1078
கருமத்தால் 1011
கருமம் 467, 505, 578, 818, 1021
கருவி 421, 482, 633, 675
கரைந்து 527
கல் 505
கல்நின்றவர் 771
கல்லா 405
கல்லாத 345

கல்லாதவர் 393, 395, 403
406, 729,
கல்லாதவாறு 397
கல்லாதார் 409
கல்லாதான் 402, 404
கல்லாமா 814
கல்லார் 408, 570, 986
கல்லான் 870
கல்வி 383, 398, 400, 684
717, 939
கலக்கம் 627
கலங்காது 485, 668
கலத்துள் 660
கலம் 1000
கலன் 605
கவரிமா 969
கவறு 920, 935
கவிகை 389
கழகம் 935, 937
கழல் 777
கழா 350
கழி 657
கழிபெரும் 571, 866
கழிபேர் 946
கழிய 404
கள் 920, 921, 922, 924,
926, 927, 930
கள்வர் 813
களர் 406
களரின் 500
களம் 730
களி 923
களித்தானை 929, 930
களித்து 838, 928
களிறு 500, 597, 774
களைகட்டல் 550
களையுநர் 879
களைவதாம் 788
கற்க 391, 725
கற்பவை 391
கற்ற 398, 722, 724,
727, 730, 823
கற்றது 650
கற்றபின் 391
கற்றார் 395, 403, 409,
410, 722, 724
கற்றாருள் 722
கற்றான் 949
கற்று 396, 399, 414,
503, 632, 686, 717,
729
கற்றும் 728
கற்றோர் 393
கனவு 819, 1054
காக்க 434, 883
காக்கும் 421, 429, 442,
547
காக்கை 481, 527
காட்சிக்கு 386
காட்சியவர் 654, 699
காட்டி 454
காடு 966
காட்டுதல் 929
காட்டும் 706, 959
காட்டுவான் 849
காடி 1050
காடு 742
காத்த 385
காத்தல் 385, 632
காத்து 642
காதல் 440, 921
காதலிக்கும் 940
காதற்று 940
காதன்மை 507, 832
காண்கின் 436
காண்பது 423, 424
காண்பர் 620, 1034
காண்பான் 656
காணு 866
காணுதான் 849
காணார் 857
காணான் 849, 859
காணின் 488, 881, 1040,
1051, 1056, 1057,
1074, 1079
காணும் 859
காணுங்கால் 710, 930
காப்ப 818
காப்பவர்க்கு 1070
காப்பார் 1067
காப்பாற்று 388
காப்பு 744, 781
காமக்கலன் 605
காமத்தான் 866
காமம் 605
காமுற்று 402
காமுறுவர் 399
காய்தல் 858
காய்ந்து 855
காய்வார் 691
காயின் 707
காரிகை 571, 777
காரணத்தின் 530
காரணம் 929
கால் 496, 500, 840, 959,
1030
கால்வலர் 496
காலத்தோடு 516
காலத்தால் 686
காலம் 483, 484, 485, 487
631, 675, 696, 830
காலமும் 949
காலாழ்களர் 500
காலை 937
காவலன் 560
காவாதான் 435
காவிர்து 535
காவான் 560
காழ்த்த 879
காழ்ப்ப 760
கானம் 772
கிடந்தது 446, 583, 1001
கிடந்தமை 959
கிழக்கு 488
கிழமை 785, 801
கிழவன் 1039
கிளவா 715
கிளைஞர் 796

கீழ் 389, 409, 973, 1034 1074, 1078, 1079
கீழ்களது 1075
கீழ்ந்திட 801
கீழ்நீர் 929
கீழ்ப்படின் 558
குடி 390, 609
குத்து 490
குடங்கர் 890
குடி 381, 502, 542, 544, 549, 554, 601, 603, 604, 632, 887, 888, 952, 953, 954, 957, 992, 1022, 1023, 1028, 1030
குடிசெய்து 1025
குடிப்பிறத்தல் 791
குடும்பத்தை 1029
குடிமை 608
குடியாக 602
குடியாண்மை 609
குடியை 602
குடியொடு 898
குணநலம் 982
குணம் 504, 868
குணனும் 793
குலம்சுடும் 1019
குலத்தால் 959
குலத்தின் 958
குலம் 956, 960
குளவளா 523
குழவி 757
குழாத்துள் 840
குளித்தானை 929
குற்றத்தார்க்கு 924
குற்றத்தின் 502
குற்றம் 433, 434, 436, 504, 549, 604, 609, 846, 868, 957, 1025, 1029
குற்றமும் 793
குற்றமே 980
குறித்த 1013
குறித்தது 704, 1013
குறித்தமை 827
குறிப்பின் 703, 705
குறிப்பு 696, 701, 703, 705
குறுகுதல் 820
குறும்பு 735
குறை 680, 908
குறைந்தது 707
குறையினும் 941
குன்ற 898, 961, 965
குன்றல் 811
குன்றா 601, 736, 793
குன்றாவிளக்கம் 601
குன்றின் 965 990
குன்று 758, 898
குன்றும் 560
குன்றுவ 954, 965
கூகை 481
கூடாதே 887
கூடி 394, 765
கூடினும் 887
கூம்பல் 425
கூம்பும் 490
கூர்ங்கோட்டது 599
கூர்மையர் 997
கூரியது 759
கூழ் 381, 554. 745
கூற்றம் 894
கூற்று 765, 1050
கூறல் 638.
கூறாமை 701, 704
கூறில் 933
கூறிவிடும் 980
கூன்கை 1077
கெட்ட 736
கெட்டாரை 539
கெட்டான் 967
கெடல் 612, 856, 893
கெடுங்காலை 799
கெடுக்கும் 435, 447, 937, 1043
கெடுத்து 938
கெடுநீரார் 605
கெடுப்பார் 448
கெடும் 437, 448, 466, 477, 479, 480, 548, 553 563, 566, 569, 601, 609, 614, 622, 766, 899, 1028, 1056, 1069
கெடின் 854
கெழீஇ 820
கெழு 700, 802, 804, 809
கேட்க 414, 416, 587, 695
கேட்கும் 648
கேட்ட 1076
கேட்டார் 643
கேட்டால் 732
கேட்டினும் 796
கேட்பர் 607
கேட்பின் 418, 423, 697
கேடு 400, 478, 700, 736, 791, 858, 859, 899
கேடும் 642
கேண்மை 441, 519, 709, 782, 792. 797, 799, 800, 807, 809, 811, 812, 818, 822, 829
கேணி 396
கேள்போல் 882
கேள்வி 413, 417, 418
கேள்வியர் 419
கேளா 418, 809
கேளாது 804, 893
கேளாரும் 643
கேளிர் 615
கை 567, 727, 828, 832, 879, 925, 928
கைகூடும் 484
கைசெய்து 1035
கைத்து 593
கைதூவேன் 1021
கைப்ப 389

கைபோல 788
கைமடங்கின் 1036
கையர் 1077
கையால் 894
கையாறு 627
கையும் 935
கையுள்ளும் 828
கையொன்று 838
கைவிடல் 450
கைவிடுவார் 799
கைவேல் 774
கொக்கு 490. 545
கொட்க 663
கொட்கின் 663
கொட்பின்றி 789
கொடிது 551
கொடியாளை 550
கொடிறு 1077
கொடுத்தல் 525, 725
கொடுத்து 928
கொடுத்தும் 703, 794, 867
கொடுப்பதூஉம் 1005
கொடை 390
கொண்ட 659, 745
கொண்டு 831, 874, 921, 974
கொம்பர் 476
கொல் 735, 827, 932
கொல்க 879
கொல்லா 984
கொல்லோ 1004, 1029, 1048, 1076
கொலை 551
கொலையில் 550
கொள்க 875
கொள்கலம் 1029
கொள்கை 1019
கொள்கையர் 899
கொள்பவர்க்கு 981
கொள்பவன் 873
கொள்வர் 433, 680
கொள்வார் 704, 813, 1009
கொள்வேம் 976
கொள்ளற்க 798, 827, 872
கொள்ளா 1064
கொள்ளாத 699
கொள்ளாதாம் 627
கொள்ளாதான் 792
கொள்ளாது 470, 1016
கொள்ளார் 404
கொள்ளினும் 872
கொள 583
கொளப்பட்டேம் 699
கொளல் 401, 441, 442, 443, 445, 504, 530, 558 633, 677, 702, 703, 714, 720, 724, 794, 795, 867. 928
கொளலின் 450
கொளற்கு 745
கொளின் 630, 836, 939
கொற்றம் 583
கொன்றது 1048
கொன்றாங்கு 532
கொன்றிட 1030
கொன்று 638
கோட்டி 401, 720
கோடல் 678
கோடாது 520, 546
கோடாமை 520
கோடி 554, 559, 639. 816, 817, 954, 1005, 1061
கோடு 523
கோல் 542, 543, 544, 545, 546, 554, 558, 710, 796
கோலொடு 552
கோள் 646, 662 1059
சலத்தால் 660
சலம் 956
சா 829
சாக்காடு 780
சாகாடு 475
சாகில் 780
சாம் 397
சாம்துயரம் 792
சாய்பவர் 927
சாய 749
சார்பு 449
சார்புடையார் 900
சார 815, 1047
சால்பிற்கு 986
சால்பு 956, 983, 984, 987, 988, 1013, 1064
சால 475, 770
சாலப்படும் 1037
சாலும் 1060
சாவார் 723
சாவாரை 779
சான்றவர் 990
சான்றாண்மை 981, 990
சான்றோர் 656, 657, 802, 840, 923, 982, 985, 1078
சான்றோர்க்கு 458, 1014
சான்றோரால் 922
சிதைக்கலாதார் 880
சிதையாமல் 578
சிதைவிடத்து 597
சில 649
சிற்றினம் 451
சிறந்த 531
சிறந்தான் 515
சிறந்து 900
சிறப்பின 961
சிறப்பு 580, 630, 752, 972, 977, 1012
சிறிது 412, 1075
சிறிய 963
சிறியவர் 815
சிறியார் 680, 976
சிறு 498 744, 870
சிறுகும் 568
சிறுகுவ 798

சிறுதுனி 1010
சிறுபடையான் 498
சிறுமை 431, 451, 934, 978, 979
சிறுமைக்கும் 505
சிறுமைத்தே 889
சிறுமைதான் 769
சிறுமையும் 769
சினை 499, 569
சினத்தாற்றி 568
சினத்தான் 866
சினப 431
சீர் 499, 778, 934, 962, 1010
சீர்த்த 490
சீர்தூக்கும் 813
சீரல்லவர் 977
சீரார் 900
சீரிடம் 821
சீறின் 568
சுடப்படினும் 876
சுடும் 799
சுமக்க 488
சுருக்கத்து 963
சுவை 420
சுழன்றும் 1031
சுற்றத்தார் 521
சுற்றத்தால் 524
சுற்றப்படும் 525
சுற்றம் 451, 522, 525, 529, 584
சுற்றமா 1025
சுற்றும் 1025
சூதர் 932
சூது 931, 934, 936, 938, 940
சூழ்ச்சி 671
சூழ்ந்து 445, 451, 461, 640
சூழ்வார் 445
சூழாது 465, 554
சூழாமல் 1024
செங்கோல் 390
செங்கோன்மை 556
செத்தார் 926
செத்தான் 1001
செப்பம் 951
செப்பு 887
செம்மல் 880
செம்மாக்கும் 1074
செய் 463, 466, 663, 972
செய்க 512, 669, 759, 893, 907
செய்கலான் 848
செய்கவினை 512
செய்கிற்பாற்கு 515
செய்கை 631
செய்தக்க 466
செய்தல் 843, 959
செய்தற்கு 489
செய்தார்க்கு 658, 987
செய்து 388, 551, 563, 660, 803, 815, 829, 934, 1028, 1077
செய்யல் 655, 656
செய்யற்க 590
செய்யா 553, 558, 569, 987
செய்யாது 437, 538
செய்யாமை 466, 655, 852
செய்யார் 654, 699, 956
செய்யான் 865
செய்யின் 559, 590, 807
செய்யும் 554, 577, 631, 672, 700, 735, 751, 803, 847, 941
செய்வதே 541
செய்வர் 640, 752
செய்வல் 1022
செய்வார் 909, 998, 1028
செய்வான் 516, 655, 677, 758, 867
செய்வினை 455, 463, 653, 677
செய 446, 1001, 1021
செயக்கெடும் 466
செயல் 437, 461, 470, 471, 489, 516, 518, 637, 634, 668, 673, 675, 676, 677, 832, 835, 894, 905, 948, 949, 975
செயலின் 679
செயற்கு 781
செயற்கை 637
செயற்பால 672
செயிர்ப்பவர் 880
செயின் 483, 494, 547, 804, 805, 809, 852, 881, 965
செரு 569
செருக்கி 916
செருக்கு 431, 598, 613, 756, 844, 860, 878
செல் 498
செல்க 684
செல்பவர் 1033
செல்லா 769
செல்லாதது 472
செல்லான் 1039
செல்லிடம் 498
செல்லும் 594, 673
செல்வச்செவிலி 757
செல்வத்துள் 411
செல்வது 767
செல்வம் 400, 411, 437, 524, 555, 565, 566, 738, 937, 939, 1006, 1007, 1008
செல்வர் 731, 1010
செல்வனை 752
செல்வார்க்கு 472
செல்வான் 950
செல 422, 424, 686, 719, 721, 724, 738, 730
செவி 389, 411, 413, 418, 694

செவிக்கு 412
செவிலி 757
செற்றூர் 466
செறப்பட்டவர் 895
செறிவு 684
செறின் 897, 900
செறினும் 778
செறுநர் 759
செறுநகை 488
செறுபகை 734
செறுவார் 421, 843, 869
சென்ற 442
சென்று 753, 896, 966, 967, 1045, 1058
சேண் 869
சேர்ந்த 492, 694, 910
சேர்ந்து 492
சேர்வது 731
சேராது 734
சேரின் 498
சொரிந்தற்று 718
சொல் 387, 489, 402, 405, 415, 453, 589, 607, 653, 645, 646, 694, 717, 827, 872, 959, 1046, 1078
சொல்லல் 634, 647, 649, 696, 713
சொல்லற்க 719
சொல்லா 697, 984
சொல்லாட 1070
சொல்லாடார் 818
சொல்லாதவர் 728
சொல்லாதார் 730
சொல்லாது 403
சொல்லார் 417
சொல்லால் 635
சொல்லி 424, 646, 685, 686, 697, 724
சொல்லின் 642, 711, 712, 713, 721
சொல்லினல் 825
சொல்லினும் 826, 1046
சொல்லுக 644, 695, 711, 712
சொல்லுதல் 648, 664
சொல்லும் 532
சொல்லுவார் 719, 722
சொல்லை 644, 645, 664
சொல்வன்மை 682
சொல்வேறு 819
சோர்வு 405, 531, 586, 642, 647, 930, 1044, 1046
சோர 818
சோரும் 847
ஞாலம் 485, 557, 648, 999, 1058
ஞான்று 635, 697
தக்க 466
தக்கது 663, 686, 780, 1018
தக்காங்கு 561
தக்கார் 446, 731, 897
தக்கார்க்கு 1006
தக 391
தகர் 486
தகை 643, 897, 916
தகைத்து 486
தகைத்தே 1064
தகைமை 405, 447, 613, 700, 802, 803, 809, 874, 968
தகைய 418
தகையால் 768, 804
தகையும் 768
தங்கி 472
தங்கிற்று 613, 874
தங்கின் 608
தங்குடி 1024
தங்குடை 1034
தங்குதல் 671
தங்கும் 389
தஞ்சம் 863
தண்டம் 567
தண்பதம் 548
தணிக்கும் 948
தத்தம் 505
தந்த 588, 1065
தந்நலம் 916
தம் 473, 539, 584, 720, 829, 1015
தம்பழி 1051
தம்மின் 444
தம்மை 843
தம்மொடு 470
தம்வயின் 846
தம்வலி 473
தமர் 443, 444, 837, 881
தமரகத்து 1027
தமராகி 529
தமரின் 814
தமியள் 1007
தமியனாய் 873
தாற்கு 859
தரு 739
தருக்கி 935
தரும் 416, 457, 492, 507, 508, 510, 522, 611, 619, 651, 658, 663, 700, 785, 792, 845, 853, 884, 885, 892, 1044
தருவது 546, 839, 934
தரூஉம் 434, 651
தலை 394, 411, 444, 488, 579, 657, 687, 736, 761, 810, 814, 852, 891, 955, 1031
தலைச்செல்லா 561
தலைப்பெய்து 405
தலைமக்கள் 770
தலையின் 964
தலைவந்த 767
தவம் 842
தவல் 853, 856
தவறு 469
தழீஇ 544, 913
தழீஇயது 425

தள்ளா 731
தள்ளாமை 596
தள்ளினும் 596
தளர்ந்து 716
தற்செய்து 878
தற்செற்று 1009
தற்போற்றுபவர் 741
தறுகண் 773
தன் 387, 436, 529, 608 615, 619, 630, 814, 838, 875, 878, 883
தன்கண் 794
தன்கை 758
தன்நாளை 776
தன்மை 767
தன்மையவர் 855
தன்வழி 471
தன்னினும் 603
தன்னை 439, 474, 974, 978
தனக்கு 747
தாஅயது 610
தாக்க 1068
தாக்கற்கு 486
தாக்குறின் 599
தாங்காது 990
தாங்கி 733, 767
தாம் 399, 539, 540, 646, 724, 843, 989, 1076
தாமரையினுள் 617
தாயானும் 1047
தார் 767
தாவில் 853
தாழ்ச்சி 671
தாழ்ந்த 903
தாழ்விலா 731
தாழாது 620, 1024
தாள் 617, 1065
தாளாண்மை 613, 614
தான் 387, 398, 424, 446, 707, 792, 834, 835, 849, 862, 875, 1006, 1018, 1023, 1026
தானே 548, 847, 1024
தானையும் 1060
தானை 767, 768, 770
திண்ணியர் 666
திண்மை 743
திரிந்து 452
திரு 408, 519, 568, 920, 1072
திருவினை 482, 615
திறப்பாடு 640
திறம் 501
திறன் 441, 635, 644, 754
தினை 433
தீ 469, 991, 947
தீங்கு 827
தீத்துரீஇ 929
தீதின்றி 764
தீது 422, 531, 671
தீமை 984, 1000
தீமைத்து 450
தீமையும் 511
தீயினத்தின் 460
தீயெச்சம் 674
தீர்ந்தன்று 612
தீர்ந்தாரின் 612
தீர்ப்பான் 950
தீர்வாம் 1062
தீர 675
தீரா 508, 510
தீராமை 482
துஞ்சவும் 1049
துஞ்சினார் 926
துடைத்து 615
துணிந்த 467
துணிந்தபின் 467
துணிவு 533, 669, 671, 688
துணிவுடைமை 383
துணை 397, 414, 433, 460, 471, 497, 635, 651, 875
துணைமை 688
துணையாரை 447
துணையிலன் 862
துணைவலி 471
துப்பு 862
துப்புரவு 1050
துய்க்க 944
துய்ப்பதூஉம் 1005
துயில் 605
துலை 986
துவ்வான் 862, 1001
துவர 944, 1050
துவராமை 1050
துளக்கு 699
துளங்காது 668
துளி 557
துறந்தார் 529, 586
துறப்பர் 1017
துறவார் 806, 1017
துன்பங்கள் 1045
துன்பத்துள் 629, 864
துன்பம் 615, 628, 629, 699, 854, 940, 1052
துன்னி 494
துனி 769
தூக்கம் 668
தூக்காத 480
தூக்கி 471, 912
தூங்கல் 672
தூங்காது 672
தூங்காமை 383
தூங்கி 672
தூங்குக 672
தூண் 615, 983
தூண்டில் 931
தூது 681, 682, 685, 686, 690
தூய்மை 455, 688, 711, 721
தூயார்க்கு 456
தூவாத 685
தூறு 435
தெய்வத்தான் 619
தெய்வத்தோடு 702

தெய்வம் 1023
தெரிதல் 634, 717
தெரிந்து 501, 712
தெரியா 583
தெரியுங்கால் 503
தெவ் 639
தெவ்விர் 771
தெள்நீர் 1065
தெளிந்தான் 508, 510
தெளிவு 464, 502, 510, 513
தெற்றென்க 581
தெறுபொருள் 756
தெறும் 674, 883
தேய்க்கும் 555, 567
தேய்த்து 753
தேயும் 888
தேர் 496
தேர்க்கு 667
தேர்ச்சி 635
தேர்ந்தபின் 509
தேர்ந்து 441, 541, 634
தேராது 509
தேரான் 508, 510
தேவர் 1033
தேற்றம் 513, 766
தேற்றாதவர் 626, 449
தேற்றாதார் 1054
தேற்றுதல் 693
தேறப்படும் 501
தேறல் 828
தேறற்க 509
தேறற்பாற்று 825
தேறா 876
தேறான் 848, 876
தேறிய 514
தேறின் 876
தேறுக 509
தேறுதல் 506, 507
தேறும் 509
தொக்க 589
தொகு 685
தொகை 711, 721
தொகையாக 1043
தொட்டு 396
தொடங்கற்க 491
தொடங்கார் 464
தொடர் 450
தொடர்பு 783, 806, 819, 820, 882
தொடரார் 695
தொடி 1037
தொல் 1043
தொல்படை 762
தொலைக்கண் 806
தொல்வரவு 1043
தொலைவிடத்து 762
தொலைவு 806
தொழில் 394, 428, 549, 582, 648, 833, 972, 977
தொழுத 828
தொழுது 970, 1033
தோட்க 418
தோணி 1068
தோய்வர் 917
தோயார் 914, 915, 916
தோல்வி 986
தோலும் 1043
தோள் 906, 916, 917
தோற்றம் 1003, 1059
தோன்று 479
தோன்றின் 884, 895, 958
நக 685, 786, 829
நகச்செய்து 829
நகப்படுவர் 927
நகல் 860, 999
நகா 824
நகுக 621
நகுதல் 784
நகும் 744, 1040
நகை 817, 953
நகையும் 694
நகையுள்ளும் 995
நகையேயும் 871
நச்ச 1004, 1008
நச்சு 1008
நசை 1043
நஞ்சு 580, 926
நட்டல் 784
நட்டலில் 791
நட்டார் 804, 805, 809, 826, 908
நட்டார்க்கு 679
நட்டு 812, 830
நட்பது 186
நட்பன்று 786
நட்பா 874
நட்பாம் 830
நட்பிற்கு 789, 802
நட்பின் 781, 791, 816, 817
நட்பினுள் 829
நட்பு 381, 782, 785, 786, 787, 788, 790, 791, 793, 794, 795, 798, 800, 801, 803, 821, 830
நட்பும் 813
நடு 1008
நடுக்கு 654
நடுகல் 680
நடை 712, 1014
நண்பு 998
நணித்து 856
நயமில 998
நயவற்க 439
நயன் 912
நயனொடு 994
நரி 500
நல் 460, 719
நல்குரவு 651, 1043, 1045, 1047
நல்கூர்ந்தார் 1046
நல்ல 679, 823, 905
நல்லர் 403, 823
நல்லவர் 1011
நல்லவை 416, 728, 826, 981

நல்லாண்மை 1076
நல்லார் 408, 450, 720, 823, 905
நல்லாருள் 903
நல்லாள் 764, 924, 1030, 1040
நல்வினம் 460
நலஞ்சுடும் 1019
நலத்தது 984
நலத்தின் 459 958
நலம் 407, 457, 468, 511, 641, 651 960
நலன் 499, 641, 982
நவில்தொறும் 783
நள்ளா 912
நற்பால் 659
நற்பொருள் 1049
நன்கு 458, 513, 534, 712, 719, 728, 1046
நன்பால் 1000
நன்மை 712, 1013
நன்மையும் 511
நன்றால் 1038
நன்றாற்றல் 469
நன்றி 432, 652, 685, 994
நன்றின் 422
நன்று 404, 456, 469, 655, 715 815, 908, 932, 967, 1038, 1072
நன்றே 673, 715
நன்னயம் 860
நன்னுதலாள் 908
நனி 403
நனைகவுள் 678
நாகம் 763
நாகரிகம் 580
நாட்ட 545
நாட்டில் 726
நாட்டிற்கு 737, 738
நாட 739
நாடல்ல 739
நாடா 739
நாடாது 791
நாடாம் 397
நாடாமை 833
நாடி 504, 511, 516, 553, 561, 948
நாடிய 518
நாடு 553, 731 to 739, 740
நாடொறும் 553
நாடோறும் 520
நாண் 502 928, 960, 983, 1012, 1013, 1014, 1016, 1017, 1019, 1020
நாண 1018
நாணுக 902
நாணுமை 833
நாணுர் 506
நாணுல் 1017, 1020
நாணுன் 1018
நாணு 1011
நாணுக்கு 1015
நாணுத்தரும் 902, 903
நாணுதல் 1011
நாணும் 951, 952
நாணுவார் 433, 1015
நாணுவானை 794
நாநலம் 641
நார் 958
நாரின்மை 833
நாவாய் 496
நாவிற்கு 1066
நாளிழுக்கம் 809
நாற்கூறு 950
நாறுமலர் 650
நான்கின் 501
நான்கு 390, 766
நான்கும் 382, 513, 605, 953
நிகழ்பவை 582
நிச்சநிரப்பு 532
நிரந்தவர் 821
நிரந்து 648
நிரப்பினுள் 1044
நிரப்பு 1048, 1056, 1060
நிரம்பிய 401
நில்லன்மின் 771
நில்லாது 592
நிலக்கு 570, 572, 1003
நிலத்தில் 959
நிலத்து 413, 452, 496, 898
நிலத்தோடு 499
நிலம் 386, 1039, 1040
நிலன் 383
நிலை 449, 489, 716, 789, 966, 1036
நிலைக்கு 745
நிலைமக்கள் 770
நிலையின் 964
நிழல் 881
நிற்க 391 708
நிற்கும் 544 765, 946
நிற்பவை 636
நிறை 917
நிறைந்தற்று 523
நிறைநீர 782
நின்ற 698, 1019
நின்றது 543
நின்றார் 806
நின்றான் 552
நின்று 468, 998, 1053, 1055
நினைப்பானை 519
நினையுங்கால் 674
நீக்கப்பட்டார் 920
நீக்கி 384, 436, 442, 685
நீக்கின் 853
நீங்கா 383
நீங்காமை 562
நீங்கான் 864
நீங்கி 502
நீங்கிவிடும் 592
நீங்கின் 495
நீங்கும் 519
நீட்டி 796

நீடின்றி 566
நீடு 566
நீப்பர் 969
நீப்பின் 969
நீர் 452, 523, 660, 718, 881, 1066.
நீர்த்து 431, 777
நீர்மல்க 780
நீரது 745
நீரவர் 782
நீரார் 527
நீரும் 881
நீழலவர் 1034
நீழலும் 1034
நீள்வினை 1022
நீளும் 1022
நுட்ப 636
நுண் 407, 424
நுண்ணவை 726
நுண்ணியம் 710
நுணங்கிய 419
நுழை 407
நுனி 476
நூல் 401, 410, 440, 560, 636, 727, 743
நூல்நயம் 783
நூல்வல்லவன் 683
நூலாருள் 683
நூலும் 581
நூலொடு 726
நூலோர் 941
நூலோர்க்கு 533
நூற்கும் 543
நூறு 932
நெஞ்சத்து 786, 910, 928 1072
நெஞ்சம் 706, 917
நெஞ்சில் 917
நெஞ்சு 842
நெடிது 562, 943
நெடுந்தேர் 496
நெடுநீர் 605
நெடும் 495, 496, 566
நெடும்புனல் 495
நெருநல் 1048
நெருப்பினுள் 1049
நெறி 477
நேர் 550, 813
நேர்வது 733
நேரன்மை 984
நேரா 821
நொந்தது 877
நோக்க 1047
நோக்காது 1009
நோக்கான் 865
நோக்கி 542, 673, 701, 708
நோக்கின் 528
நோக்கு 976
நோய் 429, 442, 848, 851, 853 941, 946, 947, 948
நோவற்க 977
பக்கத்துள் 639
பக்கு 1068
பகடு 624
பகல் 481, 851, 852
பகவு 889
பகான் 876
பகை 434, 450, 674, 723, 727, 830, 861, 867, 871, to 875
பகைக்கு 863
பகைமை 709
பகையின் 883
பகையுள்ளும் 995
பகைவர் 817, 869, 877, 878, 882
பகைவரை 465, 882
பசி 656
பசித்து 944
பசிப்பர் 837
பசுமண் 660
பட்ட 408, 878
பட்டடை 821
பட்டன்று 999
பட்டார் 819, 936
பட்டு 555, 597, 996
படாத 418
படாதநாள் 776
படாதவர் 623
படாதவன் 1004, 1008
படார் 921
படிவத்தார் 586
படின் 977
படினும் 654
படுத்து 512
படுதல் 967
படுப்பது 465
படுப்பதூஉம் 460
படுப்பர் 623
படுப 810
படுபயனும் 676
படுபவே 626
படும் 405, 412, 468, 698 933, 947, 1041, 1078
படுவர் 722, 1078
படுவார் 989
படை 381, 555, 764, 765, 768, 769, 828, 985
படைக்கு 766
படையான் 498
பண் 573
பண்டம் 475
பண்பில் 955
பண்பிலன் 868
பண்பிலார் 811
பண்பின் 810, 912
பண்பின்மை 851
பண்பினர் 579
பண்பு 386, 469, 681, 689, 688, 700, 871, 874, 912, 928, 993, 994, 995, 996, 997, 1000
பண்புடைமை 991, 992
பண்புடையாளர் 783
பண்பும் 937

பூண்பே 579
பணிதல் 963, 985
பணிந்து 680
பணியுமாம் 978
பணிவு 960
பத்து 450, 817
பதத்தால் 991
பயக்கும் 461, 659, 669, 854
பயத்ததோ 987
பயத்தலோ 705
பயப்பது 685, 690
பயப்பின் 690
பயம் 728, 740
பயவா 406, 439, 652
பயன் 524, 560, 606, 912, 994, 1078
பயன்கோடல் 646
பயில்தொறும் 783
பரியது 599
பரியும் 502, 862
பருகுவார் 811
பருவத்து 490
பருவம் 1028
பல்குரை 1045
பல்குழு 735
பல்லவை 728
பல்லார் 450 873
பல 649 823, 934
பலகுடை 1034
பலநல்ல 823
பலர் 468, 473, 514, 528, 771
பலவாயின் 868
பலவும் 492, 522, 884, 885
பழகிய 803, 937
பழகுதல் 786
பழங்குடி 955
பழமை 521, 801
பழி 433, 506, 618, 657, 794, 865, 1015, 1051
பழிக்கும் 651
பழிப்பார் 820
பழுத்தற்று 1008
பழுது 639
பழையம் 700, 810
பள்ளி 850
பளிங்கு 706
பற்றற்கு 747
பற்று 852
பற்றார்க்கு 865
பற்றி 956
பற்றியார் 748
பற்று 438, 506, 521, 606 748
பறியா 774
பனை 433
பாடற்கு 573
பாடிலர் 906
பாடு 409, 995
பாடுபெறும் 768
பாத்தி 465
பாத்தியுள் 718
பாம்பு 890
பார் 1068
பார்த்து 487, 686
பாராட்டு 794
பாராட்டுதல் 521
பாரிக்கும 851
பாரிப்பார் 916
பால் 422
பால 437
பாவை 407
பாழ் 735
பாற்றன்று 515
பாற்று 826, 829
பிடித்து 944, 1037
பிணப 913
பிணி 738, 949, 1014
பிணிக்கும் 570, 643
பிரித்தல் 633
பிரிதல் 394, 955
பிரிந்தார் 633
பிரியாதார் 810
பிரிவின்கண் 839
பிழைத்தது 779
பிழைத்தவேல் 772
பிழைத்து 417, 896
பிழைப்பர் 921
பிழைப்பின் 1019
பிற 661, 710, 909, 917, 1011
பிறக்கும் 1044
பிறத்தல் 992
பிறந்த 603
பிறந்தார் 409, 951, 952, 954, 957
பிறந்து 409, 502
பிறகலம் 982
பிறப்பு 972 1002
பிறர் 424, 436, 646, 984, 1009, 1015, 1018
பிறர்க்கு 834, 1076
பிறர்மேல் 1079
பிறன் 1047
பிறனை 508
பிறிது 645, 842, 847
பிறைமதி 782
பின் 436 440, 467, 491, 780, 895 967, 1033
பின்னீர 782
பின்றை 518
பீடு 968, 1014 1021
பீலி 475
பீழிக்கும் 843
பீழை 658, 839, 843
புக்கு 835
புகல் 840
புகழ் 457, 652, 966
புகழ்ந்தவை 538
புகழ்மை 533
புகழை 532
புகின் 937
புகுத்திவிடும் 608, 616
புண் 393 575
புணர்ச்சி 785, 887
புணர்வர் 917
புத்தேள் 966

புதை 597
புரந்தார் 780
புரளவிடல் 755
புரிந்த 511, 977 994
புரிந்து 541 607
புரையிலா 919
புல் 719
புல்லல் 829
புல்லறிவு 846
புல்லார் 755
புலந்து 1039
புலம் 407
புலவர் 394
புலி 599
புழுதி 1037
புற்கை 1065
புறங்காத்து 549
புறங்கொடுக்குப 924
புறப்படுத்தான 590
புறம 487
புறமே 933
புன்கேண்மை 815
புன்னலம் 914, 915, 916
புனல் 495
புணை 407, 836
புணையினும் 790
பூணும் 836
பூரியர்கள் 719
பெட்டக்கது 732
பெட்டாங்கு 908
பெண் 402, 909, 910
பெண்ணே 907
பெண்விழைவார் 902
பெய் 475
பெய்து 660
பெயக்கண்டும் 580
பெயரார் 989
பெயரினும் 989
பெயல் 559
பெயனும் 545
பெயின் 475
பெரிது 839, 947
பெரியதோர் 902
பெரியார் 444, 680, 694, 896
பெரியாரால் 892
பெரியாரை 443, 892, 976
பெருக்கம் 431
பெருக்கத்து 963
பெருக்கி 512
பெருகலின் 811
பெருகும் 604
பெருங்கிழமை 805
பெருங்கெழீஇ 816
பெருங்கொடை 526
பெருஞ்செல்வம் 1000
பெரும் 565, 667, 837, 924, 968
பெருமபொருள் 732
பெருமிதம் 431 979
பெருமிறை 847
பெருமை 416, 451, 611 907, 975 978, 979, 980,
பெற்ற 524, 1000
பெற்றம் 626
பெற்றாள் 1007
பெற்றான் 943
பெற்றியார 442
பெறின் 403, 648, 666, 680, 708, 709, 838, 869, 954, 988
பெறினும் 812
பெறுவது 813
பெறுவான் 842
பேய் 565
பேடி 614, 727
பேணப்படும் 867
பேணலர் 1016
பேணு 924
பேணுது 892, 902
பேணுமை 833, 866
பேணி 442, 443, 633, 917, 976
பேதை 603, 816, 833, 835, 836, 837, 838, 840
பேதைமை 417, 428, 507, 805, 831, 832, 910
பேதையார் 782, 797, 834, 839
பேதையில் 834
பேராண்மை 773, 892, 962
பேரிடத்தது 744
பேரும் 486
பொச்சாந்தும் 719
பொச்சாப்பார் 533
பொச்சாப்பு 532, 534
பொச்சாவா 537
பொத்துப்படும் 468
பொதுநலத்தார் 915
பொதுநோக்கான் 528
பொய் 938
பொய்படும் 836
பொய்ம்மை 913
பொய்யா 753
பொருட்டு 725, 784
பொருட்பெண்டிர் 913
பொருத்தல் 633
பொருத 888
பொருதகர் 486
பொருது 888
பொருள் 423, 424, 434, 477, 501, 509, 583, 592, 644, 660, 675, 741, 751, 753, 754, 755, 756, 757, 870, 911, 914, 928 933, 938, 1001 1046
பொருளாக 751
பொருளான் 1002
பொருளும் 746, 909
பொருளை 588, 695, 759,
பொழுது 481
பொள்ளென 487
பொறி 618
பொறுக்கும் 389
பொறுத்து 579 1032

பொறை 570, 572. 733, 990, 1003, 1027
பொன் 487
பொன்போல 888
பொன்றாமை 886
போக்கி 114
போக 831
போகாறு 478
போகு 478
போம் 659, 848
போமளவும் 1070
போய் 933
போர் 767
போல் 395, 706, 826, 887, 940, 946, 957
போல்க 691
பொல்வர் 997, 1071
போல 435, 454, 479, 614, 674, 822, 974, 1027, 1047
போலினும் 811
போலும் 783, 1048, 1054
போழ்தில் 930
போழ்து 412, 639
போற்றல் 693
போற்றலுள் 891
போற்றார்கண் 493
போற்றி 477. 493, 537, 588, 942
போற்றின் 693
போற்றினும் 468
போற்றுவார் 891
மக்கட்கு 388
மக்கள் 410, 600, 993, 997
மக்களே 1071
மகளிர் 822, 912, 918
மகளிரே 974
மகிழ்ச்சியில் 531, 539
மகிழ்ந்து 1057
மடி 601, 603, 604, 605, 606, 607, 609, 610, 617, 1028
மடிக்கொண்டு 603
மடிதற்று 1023
மடிந்து 604
மடிமை 608
மடியா 602
மடியாண்மை 609
மடியை 601
மடுத்த 624
மண் 407, 742, 883
மண்புக்கு 996
மண்ணோடு 576
மணல் 396
மணிநீர் 742
மதலை 449
மதி 636, 957
மதிநலம் 915
மதிப்பின் 898
மந்திரி 639
மயிர் 964, 969
மரத்தனையர் 576
மரப்பாவை 1020. 1058
மரம் 576, 600, 997, 1008
மருங்கு 526
மருட்டி 1020
மருந்து 942, 950
மருந்தோ 968
மருவுக 800
மருளான் 1002
மலர் 650
மலர்தல் 425
மலர்நீட்டம் 595
மலை 742
மலைந்து 657
மலையும் 737
மற்று 459, 490, 591, 596, 655, 661: 695, 773, 802, 905. 923, 966, 968, 1033
மற்றும் 540, 588
மற்றை 400
மறப்பர் 560
மறம் 766
மறவர் 778
மறவி 605
மறன் 384
மறு 957
மறுத்து 945
மறுமை 459, 904
மறுமையும் 1042
மறை 590, 695, 1076
மறைக்கும் 980
மறைத்தலோ 846
மறைந்தவை 587
மறைப்பான் 1029
மறையா 846
மன் 457, 540, 819, 996
மன்ற 649, 867, 880
மன்றில் 820
மன்னர் 692
மன்னர்க்கு 556
மன்னரால் 692
மன்னவன் 388, 445, 542, 543, 545, 546, 548, 553, 558, 559, 581, 583, 610
மன்னன் 386, 448, 520, 544
மன்னாவாம் 556
மன்னிய 692
மன்னுதல் 556
மன்னுயிர் 457
மன்னோ 990, 1016
மனத்தான் 453
மனத்தின் 825, 826
மனத்து 454
மனந்தூய்மை 455
மனந்தூயார் 456
மனநலம் 457, 458, 459
மனம் 457, 458, 459, 822, 823, 884
மனை 820, 901
மனையாளை 904
மா 1058
மாக்கள் 420

மாசற்றார் 800
மாசு 601, 646, 649, 656
மாட்சி 646
மாட்டு 991, 995
மாட்டும் 1054
மாடு 400
மாண் 407, 606
மாண்ட 604, 607, 897, 915
மாண்டது 631, 632, 749
மாண்டார் 665
மாண்பயன் 961
மாண்பு 901
மாண 883
மாணு 432, 884, 1002
மாணுர்க்கு 823
மாணுத 867
மாணிழையார் 919
மாத்திரையர் 406
மாந்தர் 499, 514, 964, 1012
மாந்தர்க்கு 396, 452, 453
மாந்தர்தம் 595
மாநிலம் 526, 544
மாய்ந்து 601
மாய்வது 996
மாய்வர் 898
மாய 918
மாயிரு 999
மாயும் 878
மாரி 1010
மாலையவர் 1035
மாழ்கும் 653
மாளுநீர் 701
மாற்ற 609
மாற்றம் 689, 725
மாற்றலர் 749
மாற்றார் 868, 985
மாற்றான் 471
மாற்றும் 985
மாறு 861, 944
மாறுபாடு 945
மானம் 384, 432, 969, 970, 1028
மிக்க 504, 724
மிக்காருள் 724
மிக 820
மிகச்செய்து 829
மிகநலம் 1007
மிகப்பட்டு 1074
மிகல் 855, 856, 857, 859
மிகலூக்கின் 858
மிகினும் 941
மிகுத்து 475
மிகுதிக்கண் 784
மிகும் 928
மிகை 504
மீக்கூறும் 386
மீன் 931
முகத்த 500
முகத்தாள் 565
முகத்தின் 707, 824
முகத்து 393, 574, 923
முகத்தேயும் 923
முகடி 617, 936
முகம் 706, 708, 786, 830
முட்டாமல் 547
முடிக்கும் 517
முடிந்தால் 658
முடியார் 908
முடிவிலவே 640
முடிவு 671, 676, 1024
முண்மரம் 879
முதல் 449, 463, 948
முதலா 941
முதலை 495
முதுக்குறைந்த 707
முதுவருள் 715
முந்து 603, 715
முந்துறும் 707, 1023
முயக்கம் 913
முயக்கு 918
முயற்சி 611, 616, 619
முயற்றின்மை 616
முரண் 492
முரிந்தார் 473
முரிந்து 899
முலை 402
முற்றுது 747
முற்றி 676, 748
முற்றியும் 747
முற்று 491, 748
முறை 388, 508, 541, 547, 548, 553, 558, 559, 677
முறைசெய்யா 548,
முறைப்பட 640
முறையான் 885
முன் 395, 403, 442, 714, 718, 720, 1053
முன்னின்று 771
முன்னர் 435, 716
முன்னுற 535
முனைமுகத்து 749
மூத்த 441
மூத்தற்று 1007
மூடப்பட்டார் 936
மூவர் 589
மூன்றின் 688
மூன்று 682 684, 941
மூன்றும் 383, 952,
மெய் 423, 619, 925
மெய்ப்பொருள் 857
மெய்வேல் 774
மெல்ல 562
மெலியார்மேல் 861
மென்றோள் 919
மென்மை 877
மேக 861
மேல் 409, 627, 973
மேல்வரினும் 765
மேல்வருங்கால் 733
மேலா 1016
மேவல் 857
மேவற்க 877
மேவன 1073
மேவார் 1059

மேற்கொண்டார் 551
மேற்கொண்டு 551, 845.
மேற்கொள்பவர் 713
மேற்கொள்வது 1088
மேற்சென்று 784
மேற்றே 1027
மைந்து 539
மையல் 838
மொய்ம்பு 492
மொழி 567
மொழிவது 643
யா 636, 641
யாக்கை 942
யாங்கணும் 864
யாங்கு 1070
யாண்டு 585, 895
யாத்தற்று 678
யாதானும் 397
யாது 703 ,831, 833 854,
986, 1041
யாதும் 801, 842,
யாதெனில் 801
யாதொன்றும் 1049
யாப்பு 777
யாம் 790, 854, 1071
யார் 423, 447 991
யார்க்கும் 618, 664, 647,
693, 864, 960
யார்மாட்டும் 536, 541
யாரே 779, 855
யானை 509
யாவுள 781
யானை 599, 678, 772
யானைப்போர் 758
யானையால் 678
வகுத்தல் 385, 713
வகை 465, 721, 878, 897
953
வகைமை 709
வகையர் 817
வஞ்சனை 824
வட்டு 401
வடு 502, 549, 689, 1079
வண்ணத்தால் 561
வண்ணம் 664, 714
வண்மை 1062
வணக்கம் 827
வணங்கிய 419
வந்த 569, 609, 754, 966
வந்தது 1066
வந்தானை 530
வயிற்றுக்கு 412
வரிசையா 528
வரின் 433, 669, 969, 970
வரினும் 625
வருங்கால் 621, 830, 859
வருத்த 619
வருத்தம் 468
வருதல் 642
வருந்தா 468
வருப 961
வருபவன் 774
வருபுனல் 737
வரும் 435, 455, 529,
1042
வருவது 429, 1048
வரை 480
வரைவு 919
வல் 496, 582
வல்லது 385, 585, 633
634, 845
வல்லதூஉம் 713
வல்லர் 999
வல்லரண் 739
வல்லவை 721
வல்லன் 647
வல்லார் 648, 717, 795
வல்லாரை 855
வல்லார்க்கு 387
வல்லானை 446
வல்லே 480
வலி 471, 473
வலியார்க்கு 861
வழக்கறிய 795
வழக்கு 991, 992
வழங்கு 477
வழங்குவ 955
வழி 461, 508, 846, 865
வழிச்செலவு 766
வழிபயக்கும் 461
வழிமுறை 508
வழிவந்த 764, 807
வழியுரைப்பான் 688
வழுக்காமை 536
வழுக்கினுள் 776
வளம் 480, 736, 739
வள்ளியம் 598
வளத்தன 739
வளம்படுத்து 512
வளர்வது 718
வளவரை 480
வளி 941
வற்றுகும் 1079
வற்று 587
வறங்கூர்ந்து 1010
வறுமை 408, 934
வறுமையும் 769
வன்கண் 632, 689, 762,
764, 775
வன்கண்ணர் 726, 1021
வன்பாட்டது 1063
வன்மையுள் 444
வாய் 415, 420, 423,
424, 624, 673, 789,
948, 959
வாய்சான்ற 1001
வாய்சோரா 689
வாய்சோரார் 721
வாய்ந்த 737
வாய்ப்ப 948
வாய்ப்பன் 865
வாய்மை 688, 952, 953,
983
வாயினர் 419
வாரா 755
வாரி 512
வாழ்க்கை 435, 479, 523,
856, 890, 897 968
வாழ்தல் 967

வாழ்தும் 956, 971
வாழ்வார் 528, 1033
வாழா 969
வாழாத 970
வாழாதான் 479
வாழினும் 906
வாழும் 392, 542, 557
வாள் 726
வாள்போல் 882
வாளாண்மை 614
வான் 542
வான்சுதை 714
வான்பொருள் 897
வானம் 559
விசும்பு 957
விட்டக்கால் 695
விட்டேம் 1036
விடல் 517, 697, 797.818, 830, 831, 876, 912, 961, 979
விடா 422
விடினும் 876
விடு 689
விடுக 928
விடும் 451, 498, 1068
விதிரார் 1077
வியந்தான் 474, 978
வியவற்க 439
வியன்ஞாலம் 1016
வியன்புலம் 716
விரித்து 650
விருப்பு 522
விரைந்து 474, 648, 1080
வில் 827, 872
விலங்கு 410
விழித்தகண் 775
விழு 400
விழுங்கி 931
விழுப்புண் 776
விழுமம் 663
விழைதகையால் 804
விழைப 692
விழைய 810
விழையாதான் 629
விழையாமை 692
விழையார் 810, 911
விழையான் 615, 618
விழையும் 631, 911
விழைவதூஉம் 1036
விழைவார் 901
விழைவான் 615
விளக்கம் 601, 753, 853
விளங்கும் 717, 957
விளித்தற்று 894
வினையுள் 731
வினையுளும் 545
வினைவது 732
வினைவு 738
விற்றற்கு 1080
விறல் 594
வினை 439, 456, 461, 471, 491, 512, 515, 516, 612, 615, 651, 652, 656, 669, 672, 678, 697, 758, 901
வினைக்கண் 519, 612, 66
வினைக்கரிய 781
வினைக்கு 518, 684
வினைக்குறை 612
வினைசெய்வார் 584
வினைசெய்வான் 520
வினைத்திட்பம் 661, 665, 670
வினைதான் 515
வினைமாட்சி 750
வினைமுகத்து 479
வினைமேல் 836
வினையால் 678
வினையாண்மை 904
வினையுடையான் 519
வினையும் 909
வினையுரைப்பான் 683
வினைவகை 574
வினைவலி 471
வினைவேறு 819
வீடில்லை 791
வீழ்ந்த 955
வீழும் 1030
வீற்றிருக்கை 789
வீறு 665, 749, 904
வெகுளாமை 1060
வெகுளி 531, 526, 864
வெகுளும் 870
வெங்கோலன் 563
வெண்மை 844
வெந்து 895
வெய்து 569
வெருவந்த 563
வெருவந்து 569
வெரூஉம் 599
வெல்படை 761
வெல்லல் 647
வெல்லும் 481, 495, 645, 769
வெல்வது 748
வெள்ளம் 595, 622
வெளியார் 714
வெளிறு 503
வெறுக்கை 761, 971
வெறுத்தக்க 993
வெறுப்பு 696
வென்றது 931
வென்றி 546, 683
வென்றிடின் 931
வேட்ப 643, 646, 697
வேண்டற்க 931
வேண்டற்பாற்றன்று 871
வேண்டா 497, 777, 785, 901, 1003
வேண்டாதார் 584, 922
வேண்டாது 670, 1037
வேண்டாரை 670
வேண்டாவாம் 942
வேண்டி 804
வேண்டில் 893
வேண்டின் 893, 960
வேண்டிய 651
வேண்டு 962
வேண்டுக 960

வேண்டுபவர் 562, 580, 602, 962
வேண்டும் 470, 481, 611, 652, 653, 667, 794, 867, 960, 963, 1060
வேந்தர் 381, 390, 481, 689, 691
வேந்தன் 389, 528, 530, 549, 557, 564, 567, 568, 569, 582, 665, 756, 761
வேந்தனும் 899
வேந்து 550, 551, 561, 681, 735, 740, 895, 899
வேர்ப்பர் 487
வேரார் 487
வேல் 500, 546, 775, 1016
வேலாண் 500
வேலாருள் 683
வேலொடு 552
வேளாண்மை 613, 614
வேற்றுமை 972
வேறுக 519
வேறுகும் 514
வேறு 600, 704, 926, 1012
வேறுபடும் 822
வை 435
வைக்கப்படும் 388, 850
வைக்கும் 776
வைத்தற்று 840
வைத்தான் 1001
வையகம் 547, 701, 1
வையத்து 850
வையாது 841

அறத்துப்பாலைப் பற்றியன:

The Dharmapuram Adhinam has included propagation of Tamil literature by means of valuable publications of ancient books on morals, ethics and religion in its scheme of religious emancipation of the land. The present publication surpasses many of its predecessors in size, beauty and value.

No other book in Tamil has attracted greater attention of scholars than the Kural of Valluvar. It is reputed to have possessed ten commentaries of which only a few are available at present. The vast amount of literature that has grown round the work in the shape of Kural Venbas such as Somesar Muthumozhi Venba, Siva Siva Venba and the like, the very many translations of the texts in various Indian and foreign languages and the extraordinary influence which it had in later Tamil literature warrant the preparation of a variorum edition of the work of a comprehensive and thorough nature. Any labour in that line will be amply rewarded. It is happy to find that the present publication is a beginning towards that end. It gives in one volume the commentaries of Parimelazhagar, Manakkudavar, Parithiyar and Kalingar. The available other commentaries are clubbed under one comprehensive heading 'Old Commentaries' Among modern commentators Kavirajapandithar is referred to in footnotes.

The learned editor has added explanatory notes on the above commentaries elaborating the grammatical hints shown in them, has given extracts from other works in Tamil where Kural thought and word are handled and has shown parallel quotations from other literary works. Thus much help has been attempted to be given to the reader who desires to have a full grasp of the great master's thought and to do research work in the work. Introductory chapters on the life of the author and commentators are written and an attempt has been made to analyse under various heads the cultural topics mentioned in the work. An index is added arranging difficult words occurring in the text; it would have been more useful if items had also been added to the list.

—The Hindu, 31—12—50.

One book which can bring together writers and readers is Tirukkural. Fortunately many books are published on Valluvar's couplets. Hardly a month passes without a publication on the ethics of this great work. Of all the editions that have been brought out Tirukkural-Uraivalam, containing the Arathupal with the ten ancient commentaries, is the most magnificent. Sri-la-Sri Subramanya Deshikar the Chief of Dharmapuram Mutt, has done an immense service to Tamil literature by bringing together all that is said by scholars on the couplets.

—The Indian, P. E. N. 1—1—51.

......தருமபுர ஆதீன கர்த்தர்கள் பல்லாண்டுகளாகத் தமிழ்மொழி, கல்வி, சமயம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக அரும்பணிகள் ஆற்றிவருகின்றனர். அரியநூல்கள் பலவற்றை நல்லதாளில் அழகாகப் பதிப்பித்து வெளியிட்டிருப்பதன்மூலம் அவர்கள் செய்துள்ள சேவையைத் தமிழ்ப் பெருமக்கள் பாராட்டாமலிருக்க முடியாது. சமீபத்தில் அவர்கள் வெளியிட்ட திருவாசகப் பதிப்பை நாம் ஏற்கனவே இப்பகுதியில் பாராட்டி எழுதியிருந்ததை வாசகர் அறிவர். இப்போது வெளிவந்துள்ள திருக்குறள் - உரைவளம் என்னும் அழகிய நூலும் அவர்களின் சேவையைப் பெருமைப்படுத்துகிறது என்று துணிந்துகூறலாம்......

—சுதேசமித்திரன், 28—11—50.

......முக்கியமாகப் பத்துஉரையாசிரியர்கள் குறளில் முழுகவனத்தையும் செலுத்தியிருக்கிறார்கள். பதிப்பாசிரியர்நால்வர் உரையை ஒன்றன்பின் ஒன்றாகத் தொகுத்திருப்பதனால் பல்வேறு நூல்களையும் புரட்டிப் பார்க்கும் சிரமமில்லாமல் குறள்களின்கருத்துக்களை எளிதில் உணர்வதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும். மேலும் ஆராய்ச்சிக் குறிப்புகள், நூலில் எடுத்தாளப்பட்டுள்ள நூலின்பெயர்கள், திருக்குறள் முதற்குறிப்புஅகராதி, சொல் அகராதி முதலியவையும் காணப்படுகின்றன. இப்புத்தகம் பெரிய அளவில் (Royal size) பருமனான எழுத்துக்களில் வாசிப்பதற்கு உற்சாகம் ஏற்படும்வகையில் அச்சிடப்பட்டுள்ளது. மேலட்டையில் திருவள்ளுவரின் படம் அழகாகப்பொறிக்கப்பட்டிருக்கிறது. நேர்த்தியாக பைண்டுசெய்யப் பட்டுள்ளது. எல்லா அம்சங்களிலும் சிறந்தவெளியீடாக விளங்குகிறது. தருமபுர ஆதீனம் இங்ஙனம் செய்துவரும் தமிழ்ப்பணி மிகவும் பாராட்டத் தக்கது.........

—தினமணி, 3—12—50.

......இதுவரை திருக்குறளின் எத்தனையோபதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. எல்லாவற்றிலும் இதுமிகமிகமேன்மையானபதிப்பு. உயர்ந்த காகிதத்தில் வெகு அழகாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல; திருக்குறள் நல்லமுறையில் ஆராய்ச்சி செய்யப்பட்டு ஆங்காங்கு மற்றும் பல நூல்களிலிருந்து மேற்கோளும் தரப்பட்டிருக்கிறது. எல்லா அம்சங்களிலும் பூரணத்துவம்பெற்ற இப்பதிப்பு வெளியீடு தமிழுக்குச் செய்யப் பட்டுள்ள சிறந்தசேவை என்பதில் சந்தேகமில்லை...... —தினசரி, 19—3—51.

......தருமபுர ஆதீனத்தார் தமிழுக்கும், சைவத்திற்கும் செய்துவரும் அரியதொண்டு அனைவரும் அறிந்ததே! அவர்கள் அவ்வப்பொழுது வெளியிட்டுவரும் அரியநூல்கள், தமிழ்ப்பிரியர்களுக்கு இன்பம் அளித்து வருகின்றன. இப்பொழுது தீபாவளி பண்டிகைக்கென்று ஒரு இனிய

பிரசாதமென திருவள்ளுவதேவ நாயனாரின் வாழ்க்கைச் சாணையில் ஒளி தீட்டப்பெற்ற அறிவு மணிகளான "திருக்குறளை" அற்புதமாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இந்தவெளியீட்டில், திருக்குறளிலுள்ள அறத்துப் பாலுக்குப் பல அறிஞர்கள், பெரியார்கள் எழுதியுள்ள உரைகளையெல்லாம் ஒன்றுதிரட்டி, ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படும்படியாக எழுதியிருக்கிறார்....... —நாரதர், 8—11—50.

......மடாலயங்கள் எவ்வளவு நல்ல தொண்டுபுரிந்து வந்திருக்கின்றன என்பதற்கு ஓர் அருமையான அத்தாட்சி இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. "திருக்குறள்-உரைவளம்" என்னும் நூல் கண்ணைக் கவரும் தோற்றத்துடன் தமிழன்பர்களுக்கு அரும்பெரும் விருந்தாக வெளிவந்திருக்கிறது. வெளியிட்டவர்கள் தருமபுர ஆதீன மடாலயத்தார். இந்த நூலின் அட்டையே சிந்தனைக்குஓர் அரியவிருந்தாக அமைந்திருக்கிறது.......

—கல்கி, 17—12—50.

......பழைய இலக்கியங்களிலே தமிழின் 'கதி' என்று சொல்லத் தக்க இரண்டில்ஒன்று திருக்குறள்என்பதை அறியாதவர் யார்? இத்தகைய திருக்குறள் - அறத்துப்பாலுக்கு உரைவளம் உதவி இன்றைய தமிழ் வளத்திற்குப் பேருதவி புரிந்திருக்கும் தருமபுர ஆதீனத்தாருக்குத் தமிழ் மக்கள் பெரிதும் கடன்பட்டிருக்கிறார்கள். இந்நூலுக்கு இப்புதிய பதிப்பு, தருமபுர ஆதீனகர்த்தரின் 'பிறந்தநாள் அணிவிழா மலரா'க மலர்ச்சி பெற்றிருப்பதுடன், தமிழகம் கொண்டாடிவரும் மறுமலர்ச்சித் திருவிழாவுக்கே ஓர் அணிமலராகவும் மணம் தருவதாகும். தருமபுர ஆதீனத் தலைவரின் வண்மைக்கு ஒருங்கே சான்றாக ஒளிர்கின்றது இப்பெருந் தமிழ்ப்பணி....... —ஆனந்தவிகடன், 26—11—50.

......பரிமேலழகர் முதலிய பழைய உரையாசிரியர்களின் உரை, ஒப்புமைப்பகுதி, மேற்கோள் விளக்கம், குறிப்புகள் ஆகியவற்றோடு இப் பதிப்பு அழகாகப் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறது. பலகாலமாக ஆராய்ந்து தொகுத்த உழைப்பும், ஆழ்ந்து பயின்ற பயிற்சியும், பலநூல்களைப்படித்து நோக்கிய புலமையும் சேர்ந்தாலன்றி இத்தகைய பதிப்பை வெளியிட இயலாது....... —கலைமகள், விக்ருதி, பங்குனி.

........இப்பெரியநூல் வெகுசுத்தமாக அச்சிடப்பட்டிருக்கிறது. புத்தகத்தின் முகப்பு அட்டை பல வண்ணங்களுடனும் வள்ளுவர் திரு உருவத்துடனும் கண்கவர் வனப்புடன் திகழ்கிறது.........

—சீர்திருத்தம், சித்திரை.